

போராட்டம்

ரா.பாஞ்.தேசிகன்

ஒரு நள்ளிரவில் இரண்டு சேனைத் தலைவர்கள் நிலவு தோய்ந்த விக்கிரமபுரத்துக் கோட்டைச் சுவர்மீது சிந்தனையில் ஆழ்ந்து நிற்கிறார்கள்.

"செருக்களத்தில் நம்முடைய ரத்தம் சிந்தினால் என்ன? கொட்டினால் என்ன? அரசர் நம்மைக் கவனிக்கிறாரா? மார்த்தாண்டரே, கவிதை, கதை, ஓவியம், சிற்பம், ஆடல் பாடல் - இன்னும் என்ன என்ன கலைகள் உண்டோ, கூத்துக்கள் உண்டோ எல்லாம் முழுங்க ஆரம்பித்துவிட்டன நம் விக்கிரமபுரத்தில். கலைக் கள்ளை மாந்திக்

களிக்கிறார் வேந்தர். புதிய புதிய நறவைச் சிருஷ்டித்துத் தர ஒரு கவியும் அவருக்கு உயிர்த் தோழராக வந்துவிட்டார். தோள் வலிமை கொண்டு இந்த நாட்டிலே அமைதியை நாட்டினேம். இந்த அஸ்திவாரத்தின் மீது எழுந்திருக்கின்றன கலைகள். அந்த அஸ்திவாரத்தின் மூலத்தை மறந்துவிட்டார் அவர். அதை நினைக்கும் காலம் வந்துவிட்டது.''

''ஆமாம், அது உண்மைதான், கருணாகரரே. கவி மதுர மிச்ரர் இங்கே வந்தது முதற் கொண்டு ராணுவ விஷயம் ஒன்று இருக்கிறது என்பதை அவர் முற்றும் மறந்துவிட்டார். புத்தக சாலைகளைப் பெருக்குவதிலும், ஓவியக் கூடங்களை அமைப்பதிலும், நர்த்தன அரங்குகளை நிர்மாணம் செய்வதிலும், கான மண்டபங்களைக் கவின் பெற எழுப்புவதிலும் அவர் பொழுது போகின்றது. கலை நுகர்ச்சி அதிகமானால், நம்முடைய ஜன சமூகத்தில் வீரக்கனல் அவிந்துவிடும் என்ற உண்மை நம் மன்னர் விஜயபாலருக்குத் தெரியவில்லையே!''

''தெரியவில்லையா? தெரிந்துதான் அவர் இப்படி நடக்கிறார். அவருடைய பேச்சும் விசித்திரமாய் இருக்கிறது. இதற்குக் காரணம் கவி மதுரமிச்ரரின் மாய உபதேசந்தான். ஒரு நாள் சபையில் என்ன சொன்னார், தெரியுமா?''

''தெரியவில்லை. அந்தச் சமயம் வெளி நாட்டு அலுவல்களைக் கவனிக்க நான் மண்டலபுரம் சென்றிருந்தேன்.''

''' எங்களுடைய நாட்டின் வீரம், காதல், அழகு, கலை, நாங்கள் காணும் லக்ஷ்யம், நாங்கள் போற்றும் உண்மைத் தியானம், தவம். தியாகம் முதலிய குணங்கள் எல்லாம் தங்களைப் போன்ற கவிகளின் கனவுகளிலிருந்து தோன்றியவை அல்லவா?' என்று மதுரமிச்ரரைப் பார்த்து நம் பூபதி கூறினார். மதுரமிச்சர் அதை ஆமோதிப்பது போலப் புன்முறுவல் செய்தார். நம்முடைய வீரமும் அவர் கற்பனை உலகிலிருந்து சிதறினதாம். நீங்கள்தாம் சொல்லுங்கள்: இது பைத்தியத்தின் முதற் சின்னமா, இல்லையா?''

''அதைப் பற்றிச் சந்தேகப் படுகிறீர்களா?'' என்றார் மார்த்தாண்டர்.

''இந்த நள்ளிரவில் நமக்குத் தூக்கம் வரவில்லை; சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்கிறோம். தாய் விழித்திருக்கத் தொட்டிற் குழந்தை போல் நம் நாடு படுத்து உறங்கிக்கொண்டிருக்கிறது. இந்த அமைதியை, இந்த இன்பக் கனவைக் குலைக்கக் கோலாஹலன் தோன்றிவிட்டான். அநேக நாடுகள் மின்னற் பொழுதில் அவன் வலிக்கு இரையாகி விட்டன. நம் நாட்டின் தலையில் என்ன எழுதியிருக்கிறதோ!''

''இதற்கு ஜாதகம் பார்க்க வேண்டுமா? கலைதான் நாட்டின் வீரத்தை மெல்ல மெல்ல அரித்துவிட்டதே. நாம் கண்ணீர் விட்டுக் காத்த நாடு கோலாஹலன் போர் முரசின் முழக்கத்திலேயே அதிர்ந்து விழுந்து சுக்கு நூறாய்விடும். பகைவன் படையின் கடல் இரைச்சல் தூரத்தில் கேட்கு முன்னே நம் அரசரின் உயிர்த் தோழர் மதுரமிச்சர் நழுவிவிடுவார். அதையும் நாம் பார்க்கப் போகிறோம். அப்பொழுதாவது நம்மை மன்னர் நினைப்பாரா?'' என்று மொழிந்தார் மார்த்தாண்டர்.

''நம் நிருபர் நம்மை நினைத்தால் நினைக்கட்டும், நினைக்காமற் போனால் போகட்டும். நாம் பணி செய்து கிடப்போம். ஆண்டவன் அருள் யாதோ? அறிந்திலோம்.''

''நம் தோள் வலிமையை முதலில் நோக்கி ஆண்டவன் அருள் ஒளியைப் பிறகு நாடுவோம்.''

* * *

கோலாஹலனுடைய ஆஷாட நாட்டின் தலைநகரமான அம்பலபுரியில் வெற்றி முழக்கம் சதா கேட்கிறது. தெருத் தெருவாய்ச் சென்று அவ்வூர் அரசனின் ஆற்றலைப் பற்றிப் பேசுகிறார்கள், அவன் புகழ் பரப்புவோர்கள்.

''முன் எப்படி இருந்தது ஆஷாட நாடு?'' என்று ஒருவர் ஆரம்பிப்பார்.

''அதைப்பற்றி உலகத்தாருக்குத் தெரியாதே; இருள் அடைந்து கிடந்தது.''

''இப்பொழுது?''

''இப்பொழுதா? - மலைமேல் தீபம்போல அதன் பிரதாபம் எங்கும் தெரிகிறது. அதன் கொடி பறக்காத நாடு இல்லை.''

''இது யாருடைய ஆற்றலினால்?''

''கோலாஹல வீர மார்த்தாண்ட பூபதியின் ஆற்றல்தான்.''

''மஹாராஜா கோலாஹல வீர மார்த்தாண்டருக்கு ஜே, ஜே!'' என்ற குரல் கடல் ஒலி போலக் கிளம்பி ஓயும்.

இந்தக் கோஷ மத்தியில் ஜயக் குரல் மெல்ல எழாமல் இல்லை.

''கோயில்களெல்லாம் குதிரை லாயங்களாக ஆகிவிட்டனவே! இது அறமா?'' என்று ஒருவர் வாய்புதைத்துக் கேட்பார்.

''தர்மம், தர்மம் என்று பார்த்து அதோகதி அடைந்துவிட்டோம். நம் முடைய கண்களில் ஒளி உண்டா? நடையில் மிடுக்கு உண்டா? நம் பேச்சில் வீரம் உண்டா? பக்தி, பக்தி என்று சொல்லிச் சக்தி போய்விட்டதே! நம்மை மனிதராக்கித் தலை நிமிரச் செய்தாரே அரசர் கோலாஹலர். அவருக்கு நாம் நன்றி கூற வேண்டாமா?'' என்று மற்றொருவர் பதில் அளிப்பார்.

''இது எத்தனை நாளைக்கு நிற்கும்? கலைகள் போய்விட்டன. கலா மண்டபங்கள் போர்க்கருவிகள் வைக்கும் பாவு பண்டாரங்களாய் மாறிவிட்டன. புத்தகசாலைகளைக்

கொளுத்திவிட்டாரே. வில்லும் வேலும் வாளுமா நீடித்த வெற்றியை அளிக்கும்?"

"வாளின் மகிமை இப்பொழுது விளங்க வில்லையா? எத்தனை நாடுகள் வீழ்ந்துவிட்டன! இவ்விஷயம் உங்களுக்குத் தெரிய வில்லையா? வாளுக்கும் வேலுக்குந்தான் கோயில். புத்தக வைக்கோல் மேய்ந்தது போதும்; புராணக் குப்பைகளைக் கிளறினது போதும்."

"ஏதோ, வெற்றி வெறியில் பேசுகின்றீர்கள். எனக்கு என்னவோ இதெல்லாம் ஏழு நான் கூத்தாய் முடியும்போல இருக்கிறது."

"வாள் உதவியே வேண்டாம் என்கிறீர்களா?"

"வேண்டாம் என்று நான் சொல்லவில்லையே. வில் அரக்கரை வாளால் வீழ்த்துவதும் அன்பு எனக் கொள்ளும் விரதமுள்ளவன் நான். ஆனால் மண்ணாசையினால் போர்க்களமே உண்டு தீங்கிழையாத பிற நாடுகளைப் புடைப்பது உண்மை வீரர்க்கு அழகு அல்லவே என்றுதான் நான் சொல்லுகிறேன். விக்கிரமபுரத்தின்மீது படையெடுத்து அதை ஜயித்துவிடலாம் என்று நம் அரசர் கருதுகிறார். கலை வளர்ச்சியில் அந்நாட்டு வீரம் மறைந்துவிட்டது என்று நினைப்பது தவறு. கவி மதுரமிச்சர் பாடிய வீரம் செறிந்த பாட்டு ஓர் இளந் தொண்டர் படையின் உள்ளத்தில் தியாகக் கனலை மூட்டிவிட்டது என்று தெரியவருகிறது. கவிக்குக்கூட இவ்விஷயம் தெரியுமோ, என்னவோ. ஆவேசத்தில் பொறி கிதறுகிறது. அது எங்கேயோ விழுந்து கனிந்துகொண்டிருக்கிறது."

"இது எப்படி உங்களுக்குத் தெரிய வந்தது? நம் நாட்டிற்கும் எட்டியிருக்கிறதே."

"அதைப்பற்றி என்னைக் கேளாதீர்கள். ஆனால் அவர் அருளிய பாட்டுக்கூட எனக்குத் தெரியும்."

"அது என்ன?"

"அரக்கரை அழிப்பதே அன்பெனக்
கொள்வீர்
இரக்கமு மஃதே இரக்கமு மஃதே
எழுவீர் எழுவீர் எழுபகை மாய்க்கவே."

"என்ன பாட்டுப் பாடி என்ன? கோலாஹலன் படைக்கு முன் சூறைக்காற்றில் அகப்பட்ட பதரைப் போலப் பறக்கப்போகிறது பார் அவர் சேனை."

"எனக்கு என்னவோ நம்பிக்கை இல்லை."

* * *

விக்கிரமபுரத்து எல்லைப்புறத்தில் உள்ள ஒரு சோலைக்கருகே நிலாத் துயிலும் ஒரு மூதுமணற்குன்றின் மீது மதுரமிச்சர் வீற்றிருக்கிறார். எண்ணங்களுக்கு மேல் எண்ணங்கள் மோதி வருகின்றன.

'கோலாஹலனின் பராக்கிரமம் காட்டுத் தீயைப் போல எங்கும் பரவி வருகின்றதே; நம் நாட்டை அழித்துவிடுமோ?' என்ற எண்ணம் வரும்.

'நாட்டின் உடல் அழிந்தால் என்ன? அதன் ஆத்மாவை அழிக்க முடியுமோ? ஒரு வருக்கும் தெரியாமல் பூமிக்கு அடியில் ஒரு பெரிய கூடத்தை அமைத்து அதில் இந் நாட்டுக் கலைச் செல்வத்தை மறைத்து வைத்திருக்கிறேன். நாடு அழிந்தாலும், மேக படலத்தைக் கிழித்து வரும் வெய்யோன் விரிகதிரே போல், புதைந்து கிடக்கும் கலைக் களஞ்சியத்தின் பெருமை எங்கும் ஒரு காலத்தில் பரவும்' என்ற இந்த எண்ணம் அந்த எண்ணத்தைத் துரத்தும்.

'போர் வந்தால் நான் இங்கே இந்த நாட்டில் தேசத் தொண்டில் மடிவதா? அல்லது இருபது வருஷகாலமாய் என் ரத்தத்தைப் பிழிந்து எழுதி வருகிற மஹாகாவியத்தை முடிக்க விந்திய பர்வதத்தை நோக்கிப் போவதா? அதுவும் ஒரு தொண்டுதானே? அதைப்பற்றி இப்பொழுது யோசனை என்ன? அப்பொழுது உள் ஒளி தோன்றும்; உள் ஒலி ஒன்று கேட்கும். ஆண்டவன் கட்டளைப்படி நடப்பேன்.'

* * *

கோலாஹலன் சபை கூட்டியிருக்கிறான். அமைச்சர்கள் அவனருகே தங்கள் தங்களுக்கு உரிய ஆசனங்களில் அமர்ந்திருக்கிறார்கள். கணத்திற்கொரு கணம் வெற்றிச் செய்து வந்துகொண்டே இருக்கிறது. ஒவ்வொரு செய்தியும் ஒரு தனிக் களிப் பொளியை அவன் கண்களில் எழுப்புகிறது.

"அவந்திபுரம் விழாது என்றீர்களே; இதோ பாருங்கள், விழுந்துவிட்டது என்ற செய்தி வந்திருக்கிறது. விக்கிரமபுரத்துக்கு இறுதிக் கடிதம் அனுப்பினேன். அதற்கு இது வரையில் பதில் வரவில்லை. நானே தினம் போருக்குச் செல்லலாம் என்று நினைக்கிறேன்" என்று சபையோர்களை நோக்குகிறான் அரசன்.

அந்தச் சபையில் ஒரு விருத்தர் எழுந்திருக்கிறார். "அரசே, கிடைத்த நாடுகளை நழுவவிடாமல் பாதுகாத்தோமானால் அதுவே போதும். விக்கிரமபுரத்தின் மீது படையெடுத்துச் சென்றால் யாதாகுமோ தெரிந்திலேன். அந்த நாட்டின் பலாபலத்தை அறியாமல் போரில் இறங்குவது தக்கதன்று. கலை வளர்ச்சியினால் அதன் வீரம் குன்றிப் போய்விட்டது என்று கருதாதீர்கள். கலைகளே உள்ளே துயின்று கொண்டிருக்கிற பெரிய சக்திகளைத் தட்டி எழுப்பிவிடலாம். ஓரிடத்தில் தோல்வியுற்றால் பிடிபட்ட நாடுகளில் அவ்வப்போனது போலக் காணப்படும் சீற்றத் தீ மறுபடியும் எழுந்துவிடும். ரத்தத்தை ஆறுகப் பெருகவிட்டுப் பிடித்த நாடுகள் எல்லாம் கையை விட்டு அகன்றுவிடும்."

கோலாஹலன் தீ எழ நோக்குகிறான்.

"விக்கிரமபுரத்து மன்னனுக்கு உட்கையாக இருக்கின்றீர்களா? அறிவில்லாத இந்தக் கிழவனைச் சிறையில் வையுங்கள்" என்ற கட்டளை எழுகிறது.

'ராஜ சேவையில் தலை நரைத்துவிட்டது; பல் எல்லாம் உதிர்ந்துவிட்டன. அதற்குப் பரிசு சிறைதானா? நான் போகிறேன். சுதந்தர ஒளி எங்கே வீசுகிறது? நாட்டில் இல்லை. நாடுதான் ஒரு பெருஞ் சிறையாகி விட்டதே! சிறையில் என் சிந்தையைச் சிறை செய்ய முடியுமோ?' என்ற எண்ணங்கள் மனத்தில் குவிந்தெழ அந்தக் கிழவர் சபையை விட்டு அகலுகிறார். அந்த அமைச்சர் வாய் கயப்புற வார்த்தைகளை வழங்கினால் என்ன? நீண்ட கரகோஷ மத்தியில் அரசனுடைய கருத்தே ஆமோதிக்கப்படுகிறது.

"போருக்கு நானையே எழுவீர்" என்று அரசன் கட்டளையிடுகிறான். விக்கிரமபுரத்தில் எங்கே பார்த்தாலும் ஒரே பரபரப்பு. மேல் விளைவு யாதாகுமோ என்ற கவலையில் ஆழ்கின்றனர் நாட்டு மக்கள். ஆனால் வாலிபர் தொண்டர் படையில் உத்சாகம் நிமிர்ந்து நிற்கிறது.

விக்கிரமபுரத்து அரசன் தன் சேனைத்தலைவர்கள் கருணாகரன், மார்த்தாண்டர் இவர்களை அழைத்துப் போருக்கு வேண்டிய உபாயங்களைத் தேடுகிறான்.

"நம்முடைய கவி மதுரமிச்சர் எங்கே?" என்று அரசன் வினவுகிறான்.

"அப்பொழுதே நாம் பேசிக் கொள்ளவில்லையா?" என்று மெதுவாகச் சொல்லுகிறார் கருணாகரர்.

"என்ன பேசிக்கொண்டிருந்தீர்கள்?"

"அதைச் சொல்ல அஞ்சுகின்றோம். தங்கள் மனம் நோகுமே என்ற எண்ணம் எங்களைத் தடுக்கிறது" என்று மார்த்தாண்டர் கூறுகிறார்.

"உள்ளதை மொழியுங்கள்."

"போருக்குப் பயந்து முதலில் ஓடுகிறவர் மதுரமிச்சர் என்று எங்களுக்குள் பேசிக் கொண்டோம்."

'அப்படிப் பயந்து ஓடக் கூடியவரா அவர்?' என்ற எண்ணம் அரசன் மனத்தில் பாய்கிறது. "எங்கே போயிருப்பார்? புத்தகக் கோசங்களைக் காக்கிறவரை அழைத்து வாருங்கள்."

அவர் அங்கே வருகிறார்.

"மதுரமிச்சரைப்பற்றி உமக்குத் தெரியுமா?"

"நேற்றிரவு புத்தகசாலைக்கு வந்து ஏதோ ஒன்றை எடுத்துச் சென்றார். காலையில் வரவில்லை."

'எங்கேயாவது ஓடிவிட்டாரா? அவர் ஒரு கோழையா? கோழை உள்ளத்திலிருந்து வீர மொழிகள் எழுமோ? ஏதோ ஒரு நோக்கத்தோடுதான் அவர் வெளியேறியிருக்கவேண்டும்.' இது மாதிரி அலைமோதி வருகின்ற எண்ண வெள்ளத்திற்கு அணை போட்டுவிட்டுச் சேனாதிபதிகளைப் பார்த்து, "சேனைகளை அணிவகுத்து நில்லுங்கள்" என்று உத்தரவு இடுகிறான்.

"அரசே, அதற்கு வேண்டிய எல்லாம் செய்தாகிவிட்டது" என்று சொல்லித் தலைவர்கள் செல்லுகிறார்கள்.

* * *

விந்திய சைலத்தை நோக்கி ஓர் உருவம் சென்றுகொண்டே இருக்கிறது.

"இந்த ஆபத்தான வேளையில் - இந்த நெருக்கடியான நேரத்தில் – என் நாட்டை விட்டு ஓடி வருகிறேனே. அதற்குத் துரோகம் செய்கிறேனா? நான் ஒரு பேடியா? இல்லை. உயிரை விடுகிறது மட்டுந்தானா தியாகம்? உயிரைக் காப்பாற்றுகிறதனால், பெரிய தியாகம் செய்கிறேன். என்னுடைய பிதற்றுகிறது மனமே.—இல்லையே. உயிரைத் தியாகம் செய்து எழுகின்ற புகழை இழக்கின்றேனே! அது ஒரு தியாகம் அல்லவா? உயிரைக் காப்பாற்றுகின்றேன், இலக்கியத் தொண்டின் ஆசையினால். அவரவர் தமக்குத் தகுந்த சேவையைச் செய்கிறார்கள். நாட்டின் ஒரு பெரிய லக்ஷ்யத்தை நிறைவேற்றுவதற்காக உயிரை வைத்திருக்கிறேன். பேடி என்று என்னை உலகம் அழைக்கும் பழியைச் சுமக்கின்றேன்.' எந்தச் சேவை தாழ்வு, எந்தச் சேவை மேல் அன்புதமுவப்பெற்றாரு, என்ற சொல் மதுரமிச்சர் மனத்தில் ஒலிக்கிறது. அவ்வொலி இன்பத்திலே சாந்தி பிறக்கிறது. இருளும் அகன்றுவிடுகிறது. வெள்ளென்று கீழ் வானம் வெளுக்க ஆரம்பிக்கின்றது. இருட் பிழம்பு போலக் கிடக்கிற விந்திய மலையும் உருக்காட்டுகிறது. மலர்போல அலர்ந்து வரும் காலை வனப்பை அள்ளிக் குடித்து நிற்கிறார் கவிஞர்.

விந்தியமலைப் பிராந்தத்தில் ஓர் அமைதி நிலவுகிறது. ஆனால் விக்கிரமபுரத்தில் போர் முரசு கொட்டுகிறது. போர்க் கருவிகள் காலை வெயிலில் மின்னுகின்றன. தாவும் புரவிகளின் குளம்புச் சப்தம், காயம் பட்டவர்களின் ஓலம், அதிர்ந்து ஓடும் ரதத்தின் மணிகளின் கிண்கிணி ஓசை, கணக்கில்லாத காலாட் படையின் அடி அரவம், வாளொடு வாள் மோதும் அமலி, அம்பு மழையின் இடையறாத ஒலி - எல்லாம் கலந்து விண்ணைக் கிழிக்கின்றன.

வெற்றி வெள்ளம் ஒரு கணம் ஒரு பக்கம் ஓடுகிறது. மறு கணம் இன்னொரு பக்கம் பாய்கிறது. கருணகரரும் மார்த்தாண்டரும் தங்கள் தங்கள் படைகளை உத்ஸாகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எந்தக் கட்சி தோல்வியுறும் என்று முடிவாகச் சொல்லுவதற்கில்லை. திடீரென்று ஒரு பெருங் கோஷம் எழுகிறது.

"அரக்கரை அழிப்பதே அன்பெனக்
கொள்வீர்
இரக்கமு மஃதே இரக்கமு மஃதே
எழுவீர் எழுவீர் எழுபகை மாய்க்கவே"

என்று பார் அதிரப் பாடிக்கொண்டு வீரா வேசத்தோடு வாலிபர் படையோர் நடுவே புகுந்துவிடவே கோலாஹலனுடைய படை திகைத்து நின்றுவிடுகிறது. அவனுடைய கொடி தேர்த் தட்டிலிருந்து அறுந்து கீழே விழுந்தவுடன், படை ஓட்டம் பிடிக்கிறது. இந்தச் செய்தி எங்கும் பரவுகிறது. எங்கே பார்த்தாலும் ஒரே உள் நாட்டுக் கலகந் தான். அல்லக்குமேல் அல்ல என எழும் இன்னற் கடலுக்குக் கரை காணுது கோலா ஹலன் நிற்கிறான். அவன் செவ்யில் கணக் கிலாத துன்ப ஓலிகள் விழுகின்றன. அவன் முன் அநேக கோர உருவங்கள், பல்வேறு சின்னங்களோடு தலை விரித்து ஆடுகின்றன. கொட்டின குருதி வெள்ளம் கடலையும் சிவக் கச் செய்கிறது. திகைப்பும் ஏமாற்றமும் மாறி மாறி வருகின்றன. சிதறின ஆசை களும், கலைந்த கனவுகளும், இடிந்த மனக் கோட்டைகளும் அவனைச் சூழ்ந்து நிற்கின் றன. ஒளி போய் இருள் திரண்டு அவன் நாட்டின்மீது மேகம் போலச் சூழ்ந்துவிடு கிறது. அவ்விருளில் திசை தெரியாது தத் தளித்து ஆடுகிறது ஒரு சோக நிழல்.

* * *

விக்கிரமபுரத்து அரசன் விஜயபாலன் அரியாசனத்துமீது வீற்றிருக்கிறார். கருணா கரரும் மார்த்தாண்டரும் பக்கத்தில் அமர்ந் திருக்கிறார்கள். அடைந்த வெற்றியைக் கொண்டாட ஒரு நிமிர்ந்த கூட்டம் கூடி யிருக்கிறது. இவ்வளவு கொண்டாட்டத் திற்கு இடையே வேந்தனுடைய மனத்தில் அமைதி இல்லை. இன்பக் கோயிலிலும் சோக உருவம் நடமாடத்தான் செய்கிறது. ஏதோ ஒரு குறை அவர் மனத்தைச் சாம்பச் செய்கிறது. தன் உயிர்த் தோழர் கவி மதுரமிச்சரர் சபையை அலங்கரிக்க வில்லை. கவலை படர்ந்த முகத்தோடு வீற் றிருக்கும் மன்னன் மூன் மதுரமிச்சர் வரு கிறார். பலவித உணர்ச்சிகள் நிருபன் உள் ளத்தில் எழுகின்றன.

"இந்நூல்தான் என்னை நாட்டை விட்டு வெளியேறும்படி செய்தது. மன்னித்தருள வேண்டும், அரசே!" என்று மதுரமிச்சர் வணங்குகிறார். விஜயபாலன் அந்நூலை உற்று நோக்குகிறான்.

"நல்லதே செய்தீர். எந்த நாட்டை இழந் தாலும் இதை இழப்பேனே? நாட்டுச் சிற் பங்கள், ஓவியங்கள், புத்தகக் கோசங்கள், எல்லாம் எங்கே இருக்கின்றன?"

"அரசே, ஆறு மாத காலமாக ஒருவருக் கும் தெரியாமல் பூமிக்குள் ஒரு மண்டபம் அமைத்து அவைகளை அதில் வைத்திருக் கிறேன்."

"இந்தப் பாட்டைப் பாடினது தாங்கள் தானா?"

சற்று மௌனமாக இருந்து, "எதற்காகக் கேட்கிறீர்கள்?" என்று வினவுகிறார்.

"இந்தப் பாட்டைப் பாடி ஓர் இளைஞர் தொண்டர் படை நம் நாட்டைக் காப்பாற்றி விட்டது. நீர் இந்தப் பாட்டைப் பாடி வைக் காது போனால்...."

"நான் பாடினேனா? - இந்த நாளில் இல் லாது போனால், இன்னொரு நாளில் மூலம் இசைத்திருப்பான் அந்த முரளீதரன்."

"கருணாகர மார்த்தாண்ட சேனாபதி களே, நாட்டின் உடலைக் காப்பாற்றின உங் களுக்குப் பரிசுகள் இதோ" என்று கபால வடிவமைந்த மாணிக்கக் கல் பதித்த காஞ் சன மாலைகளை அவர்களுக்கு அளிக்கிறார். "அதன் ஆவியைக் காப்பாற்றின கவி மதுர மிச்சரே, உமக்குப் பரிசு நீர் உவக்கின்ற மலர் மாலை" என்று நீட்டுகிறார் அரசன்.

மதுரமிச்சர் அதை அணிந்துகொண்டு ஆண்டவன் திருவருளை நினைந்து ஆழ்ந்த சிந் தனையில் மூழ்கிவிடுகிறார்.

சபை கலைகிறது.

கருணாகரரும் மார்த்தாண்டரும் வியப் பிலே ஒன்றும் தோன்றாமல் நிற்கிறார்கள்.

'இன்னமுமா தெரியவில்லை?' என்ற எண்ணம் அவர்கள் மனத்தகத்தே பாய் கிறது.

'போதுமானது'

காலம் சென்ற மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் ஒலேடையாகப் பேசுவதில் வல்லவர்கள். அவர்கள் பேசிக்கொண்டு வரும்போதே இரண்டு பொருள் தொனிக்கும்படி சில தொடர்கள் இருக்கும்.

ஒரு நாள் ராமநாதபுரம் ராஜாவுடன் அவர் கள் இலக்கிய சம்பந்தமாகப் பேசிக்கொண் டே இருந்தார்கள். நேரம் போனதே தெரியவில்லை. பேச்சு ஒரு கட்டத்தை அடைந்தபோது ராஜா கடிகாரத்தைப் பார்த்தார். அதிகாழிகை ஆனது தெரிந்து, "நெடுநேரம் ஆகிவிட்டது" என்றார்.

உடனே ஐயரவர்கள், "போதுமானது" என்று சொல்லி விடை பெற்றுக்கொண் டார்கள். நேரம் ஆயிற்று, பேசினது போதுமானது என்ற இரண்டு பொருளும் அதில் தொனித்தன.

அன்னத்தின் அகம்பாவம்

வி. துரைசாமி

வானெங்கும் பறந்து சென்று வையகம் எங்கும் சுற்றிக்
கானங்கள் பாடிப் பாடிக் கண்டம்வற் றியதோர் வண்டு
தேனெங்கும் நிறைந்த சோலை தென்றென எதிரில் தோன்ற
ஆனந்தம் பொங்க உள்ளே நுழைந்ததங் கமுதம் உண்ண.

வரிச்சிற கசைத்து மெல்ல வட்டமிட் டுழலும் வண்டு
பரிச்சயம் இல்லாச் சோலை தன்னிலே பாண்மி முற்றி
விரிச்சுதல் இதழும் காதம் வீசிடும் மணமும் வாய்ந்து
சிரிச்சதோற் றத்தி லங்கும் செண்பகத் தமர்ந்த தம்மா!

காய்ந்தெலும் பான மாடு கம்பங்கொல் லையிலே உண்ணப்
பாய்ந்ததாம் எனவே வண்டு பனிமலர் மதுவ ருந்தி
வாய்ந்திடும் இளைப்புத் தீர வனசமா மலரைத் தேடிப்
பாய்ந்திட ஆங்கோர் அன்னம் பள்ளிகொண் டிருக்கக் கண்டே.

அருகினிற் பரந்து சென்றே அன்னத்தை விளித்தே, "ஐயா!
மருவியிம் மலரில் தூங்கி இளைப்பினை மாற்ற வந்தேன்.
அருள்புரிந் தெனக்கும் கொஞ்சம் இடமளித் தாள்வீர்!" என்றே
சுருதியின் இசைந்த சொல்லால் சுரும்புதான் பணிவாய்ச் சொல்ல.

பால்நில வெறிக்கும் வெண்மைப் பனிச்சிற கன்னம் செம்மைக்
கால்கொடு நிமிர்ந்து நின்று கடைக்கண்ணுல் வண்டை நோக்கி
"மால்கொண்டு நின்ருய்! இங்கு மதுவீண அருந்தி வந்தாய்!
கோல்கொண்டு விரட்டு முன்பு கும்பிட்டே ஓடு வாயே!"

என்றுசொற் றிடலும் அந்த எழில்மது கரமும் கூறும்
"நன்றுசொற் றனை! இம் மாற்றம்! நளினமா மலராம் இல்லம்
உன்றனக் குரிய தென்றே உன்னிண போலும்! அவ்வா
றன்றித் யார்க்கும் சொந்தம் என்பதை அறிவாய்! ஐயா!"

என்னலும் அன்னம் கூறும்: எக்களிப் புடனே, "வண்டே!
என்னேயும் மதியா திங்கே எதிர்த்துநீ பேச வந்தாய்!
என்னஆ ணவமு னக்கே? எம்போல்வா ரோடு நீயும்
துன்னியிம் மலரில் மேவத் துணிதல்எத் தகைய தம்மா!

மூழுமதி நிலவு போலும் மூசுவெண் ணிறத்தோம் யாங்கள்
விழுமிய சிறப்பால் மிக்கு விளங்கிடும் குளமும் யாவும்
பழுதிலா தெங்க ளுக்காப் படைத்தனன் இறைவன்! எம்மைத்
தொழுதுசெல் லுதலே நீதி!" என்றது துணைக்கால் அன்னம்.

அன்றியும் வண்டை நோக்கி, "அக்கினிக் கபிஷே கித்த
குன்றிய நிறத்தாய்! நீஎம் கூடவந் திருத்தல் ஒவ்வாது"
என்றலும் மதுக ரத்திற் கிணையிலாக் கோபம் பொங்க
துன்றிய சிறக சைத்துக் குதித்தது சுகந்தப் பூவில்.

"எத்தகை அகம்பா வத்தால் இப்மொழி புகன்ருய்? உன்றன்
சித்தம்இத் தகைய தாயின் சிக்கிரம் அழிதல் திண்ணம்!
வித்தக மாந்தர்க் குள்ளும் இவ்வெண்ணம் விளங்கும் போது
புத்தயில் லாத நின்னைப் பழித்திடல் புகழோ அம்மா!

இனியும்நீ இவ்வா றெண்ணி இருத்தலே ழிப்பாய்" என்றே
கனிரஸ மென்னும் தன்மைக் காந்தாரம் இசைத்து மெல்ல
வனசமா மலரை நீங்கி வான்சிற கசைத்து வானில்
மனசின்வே கத்தை மிஞ்சிப் பறந்ததவ் வண்டு மாதோ.



ஆடலும் பாடலும்

சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார்

மாவடித்துறை வைத்தியநாதையர் பெரிய சங்கீத வித்துவான். தற்போது விருத்தாப்பியம். தொழிலிலிருந்து நான்கு வருஷங்கள் ஆயின. அவர் சம்பந்தி சேஷாசலையர் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்.

"என்ன ஐயர்வாள்? இந்த வருஷம் கச்சேரிகள் எப்படி?"

"அதைப்பற்றிக் கேட்க வேண்டுமா? பிரமாதமாகத்தான் இருந்தன" என்றார் வைத்தியநாதையர்.

"சங்கீதக் கலையைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன? முன் நாட்களைவிட இப்போது ரொம்ப அபிவிருத்தி என்பது என் அபிப்பிராயம்" என்றார் சேஷாசலையர்.

"ஆடலும் பாடலும் தொழில்களாகப் போய்விட்டிருக்கின்றன; வியாபாரச் சரக்காகிப் போய்விட்டிருக்கின்றன என்று சொன்னாலும் மிகையாகாது" என்றார் வைத்தியநாதையர்.

"அதனால் என்ன கெடுதல்? நல்லது தானே?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"தொழில் முறையும் வியாபாரப் போட்டியும் பொருள்களைச் சிறப்புறச் செய்யும் என்பதில் சந்தேகம் இல்லை. நல்ல முறையில் நல்ல பண்டங்களை ஆக்கி விற்பனையில் முதன்மை பெற வேண்டும் என்கிற இடைவிடாத போட்டியினால் நல்ல அபிவிருத்தி உண்டாகும். அவ்வாறு ஆக்கப்பட்ட பண்டத்தை ருசித்து அநுபவித்த மக்களும் அநுபவத் திறமை அடைவார்கள். இக்காரணத்தினால் ஆடலும் பாடலும் தற்காலத்தில் நல்ல வளர்ச்சி பெற்றிருக்கின்றன. பொது மக்களும் அவற்றை அநுபவிப்பதில் தீவிர ஆர்வம் கொண்டிருக்கிறார்கள்."

"ரொம்பச் சரியாகச் சொல்லுகிறீர்கள். அதுவே என் அபிப்பிராயம்" என்றார் சேஷாசலையர்.

மாவடித்துறை ஐயர்வாள் தலை அசைத்துத் தடுத்தார்.

"இவை எல்லாம் உண்மையே. ஆயினும் இந்த நிலைமை உள்ளத்திற்குத் திருப்தி தரவில்லையே! கலையின் தன்மைக்கும் விலை முறைக்கும் ஏதோ முரண்பாடு இருப்பதாகவே தோன்றுகிறது. கலையைத் தொழிலாகச் செய்து ஆடலையும் பாடலையும் விற்பனைச் சரக்குகளாகவே வழங்க விட்டுவிட்டால் கலைகள் கெட்டுப்போகும் என்று பயமாக இருக்கிறது. கெட்டுப் போனாலும் கெட்டுப் போனதை நாம் அறியவும் மாட்டோம். கெட்டுப் போனதையே அழகு என்றும் மேலானது என்றும் நினைப்போம். இது தீமையிலும் தீமை."

"உங்கள் அபிப்பிராயம் விளங்கவில்லை. என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்கள்?" என்று கேட்டார் சேஷாசலையர்.

வைத்தியநாதையர்: "சொல்லுகிறேன் கேளுங்கள். ஆடலையும் பாடலையும் கச்சேரிகளிலிருந்து வீடுகளுக்குக் கொண்டு வரவேண்டும். இந்தக் கலைகளுக்கு முக்கிய மான காப்பு குடும்ப வாழ்க்கை. குடும்பங்களிலிருந்து வெளிப்படுத்தப்பட்டுப் பாடலும் ஆடலும் தற்போது வனவாசம் செய்

இன்றன என்றே சொல்லலாம். கோவில்களிலும் வீடுகளிலும் இடம் பெற்று நிலைத்தால்தான் ஆடலும் பாடலும் நாட்டின் பண்பாட்டில் சோந்த பொருளாகும். கச்சேரிகளில் மட்டும் நடந்துவந்தால் அது சிலருடைய பண்டமாற்றுச் சரக்காகுமே தவிர நாட்டின் செல்வமாகாது. பாடக் கற்ற தாய், தன் குழந்தைகளுக்குப் பாடக் கற்றுக்கொடுக்க வேண்டும். ஆடலும் பாடலும் வீட்டில் பயன் பெற்று, குடும்ப மகிழ்ச்சியாக உருவெடுத்துப் பொங்க வேண்டும். இதுவே கலையின் உண்மைப் போக்காகும். பொதுக் கச்சேரிகள் வேண்டாம் என்பதல்ல. அவற்றினோடு திருப்தியடையலாகாது என்பதுதான். ஹோட்டல்கள் இந்தபோதிலும் குடும்பச் சமையல் நடைபெற வேண்டும் அல்லவா? அதுபோல'' என்றார்.

''வீட்டில் கோணலுங் குறுக்குமாகப் பாடுவதில் என்ன விசேஷம்? வித்துவான்கள் கச்சேரி நடத்தி நல்ல சுத்தமாகப் பாடுவதைக் கேட்பதில் என்ன தீமை? நீங்கள் சொல்லுவது புதிதாக இருக்கிறதே?'' என்றார் சேஷாசலையர்.

''நீங்கள் கல்வி முறையைப்பற்றி ரொம்பத் தெரிந்தவர்கள். எனக்குத் தோன்றுவதைச் சொல்லுகிறேன்'' என்றார் கிழவர்.

''நீங்கள் இப்படிச் சொன்னால் எனக்குச் சங்கோசமாகிறது. உங்கள் அநுபவம் என்ன? ஞானம் என்ன? நாங்கள் குழந்தைகள். நான்கு தலைமுறை வித்துவான்களின் குடும்பம் அல்லவா உங்களுடையது?'' என்றார் சேஷாசலையர்.

வைத்தியநாதையர் பொடி டப்பியைத் திறந்து சம்பந்தியிடம் நீட்டினார்.

''எழுத்தறிவு நன்றாக நாட்டில் பரவினால் சிறு குழந்தைகளின் முதல் படிப்பு வீட்டிலேயே நடந்துவிடும். பிறகுதான் பள்ளிக்கூடம் போக வேண்டியதாகும். இந்த நிலைமை ஏற்பட்டால் அதுதான் நாட்டில் எழுத்தறிவு பரவியதற்கு அடையாளமாகும். தாய் தகப்பன்மார்களுக்கு எழுத்தறிவு இல்லாத வரையில் குழந்தைகளை முதல் படிப்புக்கே பள்ளிக்கூடம் அனுப்பவேண்டி நேர்கிறது. எழுத்தறிவு வளர்ந்து நன்றாகப் பரவின பிறகு வீடுகளும் குடும்பங்களுமே பள்ளிக்கூடங்களாகிவிடும். அதற்குத் தகுந்தவாறு படிப்பு முறைகளும் மாறுபடும். பொருள்களையொட்டியும் விஷயங்களையொட்டியும் ஆரம்பக் கல்விப் பயிற்சி நடக்கும். அதுதான் சரியான முறையும் ஆகும்.''

''மேதாவி என்றால் நீங்கள்தாம்'' என்றார் சேஷாசலையர்.

''ஏன் இப்படிச் சொல்லுகிறீர்கள்? என்ன நான் புதிதாகச் சொல்லிவிட்டேன்?'' என்றார் வைத்தியநாதையர்.

''நூதனமாகக் கல்வி இலாகாவில் தாங்கள் சொல்லுகிறபடியே இப்போது திட்டங்கள் போட ஏற்பாடு செய்துவருகிறார்கள். அவர்கள் கஷ்டப்பட்டுப் புதிதாகக் கண்ட தத்துவத்தை நீங்கள் வெகு சுலபமாகக் கண்டு சொல்லுகிறீர்களே என்றுதான் ஆச்சரியப்பட்டேன்'' என்றார் சேஷாசலையர்.

''கூட்டம் கூட்டமாகக் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களில் அடைத்து எழுத்தும் கணக்கும் சொல்லித் தருவது அவ்வளவு சரியான பயிற்சிமுறை ஆகாது என்று எனக்குத் தோன்றுகிறது. அவ்வாறே ஆட லும் பாடலும். குடும்பத்திலேயே வளர்ச்சி பெற்றால் ஆடல் பாடல் பயிற்சிமுறை இயற்கை முறையை அநுசரித்து வரும். சிரமமின்றி ஒருவரைக் கண்டு ஒருவர் பயிலுவார்கள். தானாகவே வருவதுபோலவும் தோன்றும். சிறு குழந்தை தமிழை எவ்வாறு கற்கிறது? இலக்கண முறைப்படி எழுத்தியலும் பதவியலும் படிப்படியாகக் கற்றுப் புணரியல் விதிகள், வேற்றுமை உருபுகள் ஆகியவற்றைப்பற்றி ஆராய்ந்து தமிழ் பேசக் கற்றுக்கொள்வதாக இருந்தால் குழந்தைகளின் பாடு எவ்வாறாகும்! தாயினிடம் தமிழ் பேசக் கற்றுக்கொண்டுவிட்ட பிறகு அல்லவோ தமிழர்கள் இலக்கண விதிகளைக் கற்கின்றார்கள், உருப் போடுகின்றார்கள்? மொழிகளைக் கூட்டிச் சொல்லவும் அதற்கு வேண்டிய எழுத்துக்களைச் சரியாக உச்சரிக்கவும் குழந்தைகள் கற்றுக் கொள்ளுவதற்குத் தாயினிடம் படிப்பது போதுமானால், ஆடல் பாடல் விஷயத்திலும் அவ்வாறே என்பதில் சந்தேகம் வேண்டியதில்லை.''

''தாங்கள் சொல்லுவது ரொம்ப சரி. பிறந்த குழந்தையை நெடுங்கணக்குப் பயின்றபின்பே பேசப் பழக்குவது என்றால் உருப்பட்டு வருமா? பேசுவதை விடப் பாடுவதும் ஆடுவதும் கடினமானவை அல்ல; எளியனவே யாகும். தேக தருமம் ஆராய்ச்சிக்காரர்களுக்கு இது தெரியும். ஓரளவு பறவைகள் ஆடுகின்றன, பாடுகின்றன. மனிதனுடைய தனிப்பெரும் பேறு மொழியும் பேச்சும். அதன் பயிற்சி வீட்டில் தாயின் மடியில் அல்லவோ முற்றும் முடிவு பெறுகிறது? பள்ளிக்கூடத்தில் அல்ல. ஆடலும் பாடலுங்கூட

அவ்வாறே வீட்டில் முடிவு பெறலாம் என்பது சரியே" என்றூர் சேஷாசலையர்.

"இப்படிப் பயின்ற ஆடல் பாடலே நாட்டின் செல்வமாகும். தாய் தகப்பன் மாரிடமிருந்து குழந்தைகள் பாடக் கற்க வேண்டும். பேச்சுக்கு எழுத்தைப்போல் பாட்டுக்கு ஸ்வரங்கள். மொழியைக் கற்ற பின் மொழியின் எழுத்துக்களைப் பிரித்துக் கூட்டலாம். ஸ்வரங்களும் பாட்டைக் கற்றபின்பு ஆராய வேண்டிய விஷயம்."

"எழுத்துப் பயிற்சி முறை தற்போது ஓரளவு சீர்திருத்தம் அடைந்திருக்கிறது. அதாவது பேசுவது முந்தியும் எழுத்தாகப் பிரிப்பது பிந்தியும் நடைபெறுகின்றன. குழந்தைப் பருவக் கல்வித் திட்டத்தில் இது பல நாட்கள் கழிந்தபின் நடை பெற்ற சீர்திருத்தம்."

"ஆடல் பாடற்பயிற்சி முறையும் இவ் வாறே சீர்திருத்தம் அடைய வேண்டும். தற்போது தலைகீழாக நடைபெறுகிறது. இலக்கணம் முந்தியும் பொருள் பிந்தியு மாகச் சொல்லித் தருவது தவறான முறை. முதலில் பாட்டுக்களைப் பயிலச் செய்து விடவேண்டும். பிறகே இலக்கணத்தில் இறங்க வேண்டும்."

"இவ்வாறு செய்தால் பயிற்சி கெட்டுப் போகாதோ? ஸ்வரங்கள் அசுத்தமாகப் பழகிவிடாதோ?" என்றூர் சேஷாசலையர்.

"ஒரு நாளும் கெடாது. பாட்டைப் பாடும்போது மனசில் உருவெடுக்கும் உணர்ச்சி அல்லவோ ஸ்வரத்தைக் கிளப்புகிறது? ஸ்வரம் படியாதவன்கூடச் சரியான ஸ்வரத்தைத் தானாகவே பிடிப்பான். பாவமே ஸ்வரத்திற்கும் தாளத்திற்கும் மூலமாகும். இதைப்பற்றிப் பயமே வேண்டியதில்லை. இவ்வாறு செய்தால் பயிற்சி கெட்டுப் போகும் என்று பயப்படுவது தவறு. குழந்தை நன்றாகப் பேசக் கற்ற பின்னரே அது எழுத்தும் இலக்கணமும் கற்கிறது என்பதை ஆழ்ந்து ஆராய்ந்தால் இந்தப் பயம் நீங்கும்" என்றூர் வைத்தியநாதையர்.

"மொத்தத்தில் நீங்கள் சொல்லுவது, ஆடலும் பாடலும் குடும்பங்களில் தாராளமாக நடைபெற வேண்டும். அப்போது பயிற்சிமுறையில் சீர்திருத்தமும் நாம் சொல்லாமலே நடைபெறும் என்கிறீர்."

"இது என்னுடைய அபிப்பிராயம்" என்றூர் மாவடித்துறை ஐயர்வாள்.

காவதம்-யோசனை

கடிப்பிடு கன்முரசம் காதத்தோர் கேட்பர்
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்
அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்றோர்
கொடுத்தார் எனப்படும் சொல்.

இந்த நாலடிச்செய்யுள் முரசொலி ஒரு காதத்துக்கும், இடியொலி ஒரு யோசனைக்கும் கேட்குமென்று கூறுகிறது. 4 காதம் ஒரு யோசனை யாதலால் இடி முழக்கம் $8\frac{8}{9}$ மைலுக்கும் முரசொலி $2\frac{2}{9}$ மைலுக்கும் கேட்கும் எனறுயிற்று.

குரோசம், காதம், யோசனை ஆகிய அளவைகளும் வேறுபடவழங்கின. சென்னையில் எட்டுப் படி ஒரு மரக்கால்; புதுக்கோட்டையில் 2 படி ஒரு மரக்கால்; திருநெல்வேலியில் $5\frac{1}{2}$ படி ஒரு மரக்கால். அப்படியே பணமும் இரண்டணு, இரண்டரையணு, 3 அணுவாக நம் தமிழ்நாட்டில் ஒரோரிடத்தில் ஒவ்வொரு வகையாய் வழங்குகிறது.

அவைபோல $7\frac{1}{2}$ நாழிகை வழி அதாவது 6 அடி உயரமுள்ள ஆள் 3 மணிப் பொழுதில் நடக்கும் 10 மைல் ஒரு காதம் என்பர். சைன நூலோர் கொள்கையின்படி 4 காதம் ஒரு யோசனை அதாவது 40 மைல் என்பர்.

பாஸ்கராசாரியார் லீலாவதியில் வேறூர் அளவைக் கூறுகிறார். அதன் தமிழ் மொழி பெயர்ப்பாவது:

அங்குல மறுநான் காகு
மதுகரம் காமோர் நான்கு
தங்குதல் தனுவென் றாகும்
தனுவிரன் டாயிரந் தண்டம்
இங்குறு தண்ட மான
ஈராயிரம் குரோசத் தெல்லை
பங்கமில் குரோசம் நான்கோர்
யோசனைப் பால் தாமே.

இதில் 24 அங்குலம் (விரற்கிடை) = 1 கை முழம்
4 கை முழம் = 1 தனு (ஆளுயரம்)
2 தனு = 1 தண்டம் (கோல்)
2000 தண்டம் = 1 குரோசம்
4 குரோசம் = 1 யோசனை

என்று கூறப்படுகிறது. இந்தக் கணக்கிலுள்ள கோல் இரண்டாள் உயரம். குரோசம் $4\frac{4}{9}$ மைல். காதம் கூறப்படவில்லை. அதற்குமாறாக $16\frac{16}{9}$ மைல் ஒரு யோசனை என்று தெரியவருகிறது.

5 அடி 4 அங்குல உயர ஆள் அல்லது கோலைக் கொண்டு கணக்கிட்ட அள்வு இது. $5\frac{1}{2}$ அடி, ஆறடி ஆட்களைக் கொண்டு கணக்கிட்டால், இன்னும் வேறுபாடுகளைக் காணலாம். $5\frac{1}{2}$ அடி ஆளுக்கு ஒரு யோசனை $16\frac{8}{9}$ மைல். ஆறடி உயர ஆளுக்கு ஒரு யோசனை $18\frac{2}{11}$ மைல்.

—ஆதிநாத பிள்ளை.

ஜோதி வனம்

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

தமிழகம் தெய்வதேசம். இது மட்டுமா? வீர தேசமுமாம். சிற்றூரையும் சரி, பேரூரையும் சரி, உற்று நோக்கின் தெய்வத்தன்மை துலங்கும்; வீரமணம் வீசும். பாழ்நிலங்களும் அப்படியே. மைதானங்களும் அப்படித்தான்.

ராமநாதபுரம் சீமையிலே காளையார் கோவில் என்பது ஓர் ஊர். ஆதிகாலத்தில் அதன் பெயர் கானப்பேர். இடைக்காலத்தில் ஜோதிவனம். இப்போதோ காளையார் கோவில். அழியாக் கோட்டை, அசையாக் கோட்டை என்பார்கள். ஆயிரம் ஆண்டுக்கு மேலாக அங்கே அத்தகைய கோட்டை ஒன்று இருந்தது. கோட்டையைச் சுற்றிக் காட்டரணும் உண்டு. இப்போதோ கோட்டையும் இல்லை; கானரணும் இல்லை.

காட்டரண் குலவிய காலத்தில், ரங்கநாதப் பெருமாள் அங்கே சரண் புகுந்தார். பிள்ளைலோகாசாரியாரும் அடைக்கலம் புகுந்தார். அம் மூர்த்தியைத் துரத்திவந்த முகம்மதியச் சேனை அந்த அரணைக் கண்டதும் அஞ்சி ஓடியது; இமயம் முதல் குமரி வரையில் கொடிதூக்கிக் கொக்கரித்த மலிக் காபூரும் மருண்டோடினான். அப்பால், பிள்ளைலோகாசாரியார் அங்கிருந்தே பரமபதம் சென்றார்.

ஆதிகாலத்திலே, ராமநாதபுரம் சீமையின் பெரும்பாகம், புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்தின் தென்பாகம் இரண்டும் சேர்ந்து கானநாடு எனப்படும். அதற்குக் காளையார்கோவிலே நடுநாயகமான இடம். கதிரவன் கிரணமும் புக முடியாத வண்ணம் ஓங்கி உயர்ந்து தழைத்துச் செழித்துப் பூத்துக் காய்த்த மரங்கள் கொண்டது அந்தத் தலம். அந்நாளில் அதன் ராஜதானியே கானப்பேர். அதனை ஆண்டு வந்த அரசன் பெயர் வேங்கைமார்பன். மார்பகலத்திலும் மனவுறுதியிலும் மட்டுமன்று; வீரத்திலும் அவன் வேங்கை போன்றவனே.

மதிலரண், அகழரண், கானரண், படையரண், பராக்கிரம அரண் கொண்டு விளங்கவே, வேங்கைமார்பனை வெல்வார் எவரும் இல்லாது போயினர். வணங்காமுடி மன்னவன் என்றே அவன் பெருமையாகப் பேசப் பெற்றான். புலவர்களும் அவனைப் போற்றிப் புகழ்ந்தனர். அது கண்டு அவனுக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. எனக்கு எதிர் எவர் என்று அவன் இறுமாப்புக் கொண்டு நின்றான். கான்படு பொருளுக்கு அந்தக் கானப்பேரே ஓர் உறைவிடம். அப் பொருள் வேண்டுவார் அவனை அண்டியே பெறுதல் வேண்டும். அவன் நாட்டில் பூமகள் புன்முறுவல் பூத்து நின்றாள்.

செல்வச் சிறப்பும் வீரச் செருக்கும் தலை மிஞ்சிவிட்டன. வர்த்தகரையும் பிறரையும் வேங்கைமார்பன் வெகு லேசாக நடத்திவந்தான். அச்சமயம், பாண்டிவள நாட்டின் பேரரசன் உக்கிரப் பெருவழுதி. இவன் கடைச் சங்கம் வளர்த்த பாண்டியரில் ஒருவன்; திருக்குறள் அரங்கேறிய சபைக்குத் தலைவன்; திருக்குறளுக்குப் பாமலர் சொரிந்தவன்; அகநானூறு எனும் நூல் தொகுப்பித்தவன்; ஔவையார், ஐயூர் மூலங்கிழார் இவர்களால் பாடப் பெற்றவன். இவனிடம் சென்று, வேங்கைமார்பனது மிடுக்கைக் கூறிப் பலரும் குறையிரந்தனர்.

பேரரசன் என்ற முறையில் உக்கிரப் பெருவழுதி முகாந்தரம் கேட்டு அனுப்பினான் வேங்கைமார்பனை. அக் குறுநில மன்னன் விடை கொடுக்கவில்லை. உடனே உக்கிரப் பெருவழுதி உருத்தெழாமல், பொறுமையே பூண்டு நின்றான். அப்பால், திருக்குறள் அரங்கேற்று வைபவம் நடந்தது. அதற்கும் வேங்கைமார்பன் விஜயம்

செய்யவில்லை. பாண்டிமக்களில் சிலர் அந்தக் கானப்பேரில் அல்லல்பட நேர்ந்தது. அப்போதும் கானப்பேரான் அன்னவருக்கு ஆதரவும் ஆறுதலும் அளியாமல் வாளா இருந்தான். இனி எத்தீனை நாள் பொறுப்பதென்று உக்கிரப் பெருவழுதி போருக்கு எழலானான்.

"ஆழ்ந்து பரந்த அகழியும், வானை அளக்கும் மதிலும், வாளுழவரும், வேங்கை வீரமும் உள்ளன. வெளியே காட்டரணும் வெகு தூரம் விரிந்து பரந்துள்ளது. இன்னளவும் எவருக்கும் மூடி தாழ்த்தோமில்லை. மீனவனுக்கா மூடி சாய்ப்போம்?" என்று இறுமாந்து கிடந்தான் அவ்வேங்கை மார்பன். பாண்டியனே, பூண்ட பெயரினுக்கேற்ப உக்கிரம் ஒரு பக்கம் பொங்க, உணர்ச்சி ஒரு பக்கம் துடிக்கப் போர்க் கோலத்துடன் விரைந்து சென்றான் கானப்பேர் நோக்கி. பாண்டியப் படைஞரும் படபடப்புடன் போயினர்.

வீரமும் கர்வமும் ஒருங்கே அவிய, ஆவி துறந்தான் வேங்கைமார்பன். பழுக்கக் காய்ந்த இரும்புண்ட நீரினையும் ஒருகால் மீட்கலாம், கானப்பேரைக் கைவசம் செய்தல் இயலாது எனவே எல்லாரும் எண்ணியிருந்தனர். அத்தகைய கோட்டையை அழியாது கைப்பற்றினன் வழுதியர்கோன். ஆதலின், "கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி" என அனைவரும் அவனைப் போற்றினர். புலவரோ பாமாலை சூட்டினர். பெருமக்களோ உச்சிமீது கொண்டு கொண்டாடினர். அன்று முதல், கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என்னும் பெயரே பிரபலம் ஆயிற்று. தமிழ் நூல்களும் அவ்வாறே அவனைப் பேசிவருகின்றன. கடைச்சங்க காலத்தது அந்தச் சம்பவம்.

செட்டிமார் நாட்டிலே காளுடுகாத்தான் பிரபல நகரங்களில் ஒன்று. கான நாடு காத்தான் என்பதே ஆதிப் பெயர். கானப்பேரை ராஜதானியாகக் கொண்ட கான நாட்டினுக்கு அங்கே காவற்படை ஒன்று நின்றிருந்தது. அன்னியர் எவரையும் அந்த நாட்டினுள் புகவிடாமல் காத்துநின்ற காவலனது பெயரைக் கொண்டு, அந்த நகரம் காளுடுகாத்தான் என்று வழங்கி வருகின்றது.

பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையில், கானப்பேரின் வளமையும் பெருமையும் குன்றவில்லை. பத்துப் பதினோராம் நூற்றாண்டுகளிலே ராஜராஜன், ராஜேந்திரன் என்னும் சோழர்கள் உதிக்கின்றனர். எட்டுத் திக்கிலும் வெற்றிக்கொடி நாட்டுகின்றனர். தென்னிந்தியா முழுவதிலும் தனியரசு கொள்ளுகின்றனர். பாண்டியர் அந்தச் சோழருக்கு உட்பட்டே நடக்க நேருகின்றது. அங்ஙனம் பாண்டியர் வலிகுன்றிக் கிடந்த காலையிலே (கி. பி. 1170), பாண்டி நாட்டில் அரசுக்காகப் போர் மூளுகிறது. பராக்கிரம பாண்டியனுக்கு எதிராகக் குலசேகர பாண்டியன் கிளம்பு

கிறான். முன்னவனுக்கு இலங்கை வேந்தன் துணைசெய்கிறான். பின்னவனுக்கோ சோழர் பக்கபலமாகின்றனர்.

இலங்கை வீரர் பாண்டி நாட்டில் புகுந்து பரிபவம் இழைக்கின்றனர். பற்பல நகரங்கள் அவர்களுக்கு அடிப்படுகின்றன. இலங்கைத் தளவாய் லங்காபுரதண்டநாதன், ஜகத்விஜயன் இருவரும் கானப்பேர் வரையில் வந்து அதனை வசம் செய்கின்றனர். அந்த இடமே அவர்களின் படைகளுக்கு மூலஸ்தானமாகிறது. பொன்னமராவதி, திருப்பத்தூர், புதுக் கோட்டை, மான வீர மதுரை (மானு மதுரை), மதுராபுரி முதலிய இடங்கள் அவர்களுக்கு அடிபணிகின்றன. இதற்குள் பராக்கிரம பாண்டியன் பரலோகம் போய்விடுகிறான். உடனே வீரபாண்டியனுக்கு மதுரையில் முடி கவித்து, இலங்கைத் தளவாய் வெற்றியுடன் திரும்புகிறான். திரும்புகையில், இரண்டு துறைமுகங்கள் நீக்கு இரையாகின்றன. அப்போது கானப்பேரே அவர்களுக்குத் தாரகமான தலம்.

பதினாலாம் நூற்றாண்டின் துவக்கத்தில், டில்லி சுல்தானுக விளங்கியவன் அலாவுதீன் கில்ஜி என்பவன். குமரிபுனை வரையில் கொடி தூக்கவேண்டும் என்று அவன் விரும்பினான். அவ்வளவுதான் தாமதம். அவன் படைத்தலைவனான மலிக் காபூர் என்பான் ஒரு பெரும்படையுடன் புறப்பட்டான். கல்லுளிமங்கன் போன வழி காடுமேடெல்லாம் தவிடுபொடி என்பர். காபூரின் சேனை சென்ற இடமெல்லாம் ஒரே தவிடுபொடிதான். வேந்தரும் வீரரும் வெட்டுண்டு வீழ்கின்றனர். ஆலயங்களும் மடங்களும் தகர்கின்றன. ஆலயத்தின் நகைகளும் மாந்தரின் உடைமைகளும் பறிபோகின்றன. எங்கும் கொள்ளையும் கொலையும் தாண்டவம் ஆடுகின்றன.

அச்சமயத்திலே, பாண்டி நாட்டில் பட்டத்துக்காக மைந்தர் இருவர் மாறுபடுகின்றனர். மூத்தவன் சுந்தர பாண்டியன் என்பான் டில்லி சுல்தானைத் துணைவேண்டுகிறான். பாண்டிக்குப் போகும்படி மலிக் காபூருக்கு ஆணை பிறக்கிறது. அழைப்புக்கு இணங்கிய ஆணை கிட்டியதும், காபூர் பேரானந்தம் எய்துகிறான். தமிழகத்திலே புகுந்து, ஒருவண்ணமலைப் பக்கத்தில் வல்லாள வேந்தனைக் கொன்று குவிக்கிறான். ஸ்ரீரங்கத்துக்கு அப்பால் வடமேற்கே ஐந்து மைல் தூரத்தில் கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள கண்ணனூர்க் கொப்பம் என்னும் இடத்தில் டில்லிச் சேனை பாடி வீடு கொள்ளுகிறது.

அப்போது, ஸ்ரீரங்கநாதனுக்கு ஓர் உற்சவம். உற்சவ விக்கிரகத்தைக் கொள்ளிடத்துக்குக் கொண்டு சென்று, அங்கே மண்டபப்படி நடத்தி நின்றனர் மக்கள். "கண்ணனூருக்கு வந்துவிட்டான் காபூர்; வழியிலுள்ள ஆலயங்களையும் அகிரகாரங்களையும் தரைமட்டமாக்குகிறான்" என்று சிலர் ஓடிவந்து உரைத்தனர். வேதாந்த தேசிகருக்கும் பிள்ளைலோகாசாரியாருக்கும் என்ன செய்வதென்று தோன்றவில்லை. "இருப்பதா, எங்கேயாவது ஓடுவதா என்று ஆண்டவனிடம் சீட்டுப் போட்டுப் பார்க்கலாம்" என அவ்விருவருக்கும் ஒருவன் யோசனை கூறினான்.

உடனே பெருமாள் சந்நிதியில் திருவுளச்சீட்டுப் போட்டனர். ஓடிவிடுதலே உத்தமம் என்று உத்தரவு கிடைத்தது.

பிள்ளைலோகாசாரியாரும் பிறரும் ரங்கநாத விக்கிரகத்தையும் நாச்சியாரையும் தூக்கிக்கொண்டு ஓட்டம் பிடித்தனர். வேதாந்த தேசிகரோ ஸ்ரீபாஷ்யத்துக்குச் சுதர்சனபட்டர் எழுதிய சுருதப்பிரகாசிகா என்னும் ஓலைச் சுவடியையும் தம்முடைய இரு குமாரர்களையும் எடுத்துக்கொண்டு, மைசூரிலுள்ள மேலக்கோட்டையை நோக்கி ஓடினார். அரங்கநாதனது மூலஸ்தானத்துக்கு ஆபத்து நேரக்கூடாதென்று கருதினார் சுதர்சன பட்டர். உடனே கர்ப்பக்கிருகத்தைச் சுற்றி நான்கு பக்கமும் சுவர் எழுப்பினார். இதற்குள் காபூர் புகுந்துவிட்டான் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தினுள். அப்பொழுது நடந்த அட்டகாசத்தை என்னென்று சொல்லுவது!

உற்சவம் காண வந்திருந்த மக்களில் பலரும் ஸ்ரீரங்கம் புகுந்து, கோபுரவாயில் களைத் தாழிட்டுக்கொண்டனர். மலிக் காபூர் கனகளிப்புடன் அந்நகரை அணுகினான்; கோபுர வாயில்களைத் தகர்த்து எறிந்தான்; படைஞரை நகர மக்கள் மீது ஏவிவிட்டான். யமபடர்களேபோல் படைஞர் தெருத் தெருவாகச் சென்றனர்; கண்ணில் கண்ட மக்களை எல்லாம் வாளுக்கு இரையாக்கினர். வீடுகளில் புகுந்து நகைநட்டுக்களைக் கொள்ளையாடினர். அப்படைஞரில் சிலரோ, ரங்கநாத ஆலயத்தை நோக்கிப் போயினர்; மண்டபங்களையும் மடைப்பள்ளிகளையும் இடித்துத் தள்ளினர்; கையில் கிடைத்த பொருள்கள் அனைத்தையும் சுருட்டிக் கொண்டனர். சுற்றிலும் சுவர் எழுப்பி

யிருந்ததனால், கர்ப்பக்கிருகம் மட்டும் இடிபடாமல் தப்பியது.

ரங்கநாத மூர்த்தியுடன் சென்ற பிள்ளை லோகாசாரியார் நேரே திருக்கோட்டியூர் சென்றார். அங்கிருந்து ஜோதிவனத்தை நோக்கினர். அடர்ந்து இருண்ட அக் காட்டினுள் அடைக்கலம் புகுந்து, ஆண்ட வனைக் காக்கலாம் என்பதே அவர் கருத்து. இரவிலே சிறிது தூரம் சென்றதும், கள்வர் தோன்றி, விக்கிரகத்தின் மேலுயர்ந்த ஆபரணங்களையும் உடைகளையும் பறித்துக்கொண்டனர். விக்கிரகமாவது தப்பியதே என்று மகிழ்ந்த பிள்ளைலோகாசாரியார் விரைந்து சென்றார். ஜோதிவனம் சேர்ந்ததும் அவருக்கு நிம்மதி பிறந்தது. ஆங்கிருந்த சிறிய பெருமாள் கோயிலொன்றில் ரங்கநாதரையும் நாச்சியாரையும் பத்திரமாக அமர்த்தினர்.

இதற்குள், காபூரின் படைகள் அந்த ஜோதிவனத்தை நெருங்கின. மரங்களின் அடர்த்தியையும் சௌமையையும் கண்டதும், அவர்களுக்கு ஆச்சரியமும் அச்சமும் மேலிட்டன. சூரியகாந்தியும் நுழைய இயலாத அடவியில் புகுந்து பார்க்கலாமெனச் சிலர் முனைந்தனர். உடனே மிகப் பெரிய வண்டுகள் கும்பலாக வந்து, அவ்வீரரின் முகத்தில் கொட்டின; கரடிகளும் புலிகளும் புதர்களிலிருந்து பேரிடி முழக்கம் செய்தன. முட்செடிகளும் கொடிகளும் அவர்களின் பாதங்களைச் சுற்றி வளைந்து துன்பமிழைத்தன. என் செய்வர் அப் படைஞர்! வீதியின்றிப் பின்னடைந்தனர். அத்தருணத்தில், காபூர் அங்கே வந்து சேர்ந்தான்! தன் படைஞரின் பரிபவம் உணர்ந்தான்; கானகத்தின் அடர்த்தியைக் கண்கொண்டு நோக்கினன்; கதிகலங்கினன்: உள்ளே புகுந்து யாது பயன்? மதுரையை நோக்கிப் போகலாம் என்று தீர்மானித்தான்.

கானகத்தினூடே பதுங்கியிருந்த லோகாசாரியரும் பிறரும் யாது விளையுமோ என்று ஊடுக்கமுற்றுக் கிடந்தனர். சின்னஞ் சென்றதும் முகம்மதியப் படைஞர் திரும்பிவிட்டதை அன்னார் அறிந்தனர். லோகாசாரியார் ஆறுதல் அடைந்தார். ஆனந்தபாஷ்பமும் சொரிந்தார். ரங்கநாதனைக் காப்பாற்றினோம் என்னும் களிப்பினில் கண் மூடினர். அவருடன் இருந்தவர்களோ விக்கிரகத்தைச் சுமந்துகொண்டு, திருமாலிருஞ்சோலை, மலையாளம் முதலிய இடங்களுக்குச் சென்றனர். முடிவிலே திருப்பதியில் சேர்த்துக் காத்துவந்தனர். ஆண்டுகள் பல சென்றதும், விஜயநகர தளகர்த்தன், கோபண்ண என்னும் வேதியன், ஸ்ரீரங்கத்தில் இருந்த முகம்மதியரை வென்று, திருப்பதியிலிருந்து விக்கிரகத்தை வருவித்து ஸ்ரீரங்கத்தில் சேர்த்துச் சிறப்புப் பல செய்தான்.

காளையார் கோவிலைச் சுற்றிக் காத தூரம் அடர்ந்திருந்த ஜோதிமரங்கள் அப்பால் யாது காரணமோ தெரியவில்லை, மறைந்துபோயின. பதினெட்டாம் நூற்றாண்டினிலே கும்பினியாரின் காலத்தில் பாண்டி நாட்டுப் பாளையப்பட்டுக்களின் கலகம் பிரமாதமாக நடைபெற்றது. கும்பினியாரின் துருப்புக்களும் ஆர்க்காட்டு நவாபின் வீரர்களும் பாளையப்பட்டுக்களின் கையில் சிக்கிச் சீரழிந்தனர். அப்போது சின்ன மருது என்னும் சிறந்த வீரன் காளையார் கோயிலைக் கைக்கொண்டான். கொண்டதும், ஆங்கிருந்த அற்புதமான சிவாலயத்தை அழகுபெறப் புதுப்பித்து அபிஷேக ஆராதனைகள் நடத்தினான். சிறிது நாட்களுக்குமுன், தனவைசியர் ஒருவர் அந்தக் கோயிலுக்குக் கும்பாபிஷேகம் நடத்திக் களித்தார்.

சிறந்த பேரரணும், பல சிற்றரண்களும் கொண்டு குலவிய கானப்பேர் இடைநாளிலே ஜோதிவனம் எனத் திகழ்ந்து, சரித்திரப் பிரசித்தி வாய்ந்து, இப்போது காளையார்கோயில் என ஒரு சிற்றூராகத் திகழ்கிறது.

சட்டை

"தம்பீ, அங்கரக்கா போட்டுக்கிட்டு வா" என்று கொங்கு நாட்டில் பேசுவதைக் கேட்டால் 'அங்கரக்கா' என்பது புரியாமல் இருக்கும் சில பேருக்கு, 'சட்டையைத்தான் அங்கரக்கா என்று சொல்லுகிறார்கள். அது எதோ தனித் தமிழ்ப்பதம் போல ஒலிக்கிறது. அங்கரக்ஷா (அங்கத்துக்குப் பாதுகாப்பு) என்ற வடசொல்லின் திரிபு அது. அங்கி என்றும் சட்டையைச் சொல்வது யாவருக்கும் தெரியும். பழங்காலத்தில் சட்டையை "மெய்புதை கருவி" என்று சொல்லி வந்தார்கள். பழைய தமிழ் இலக்கியத்தில் இதைக் காணலாம். 'அங்கரக்கா' என்ற பதம் இதே அர்த்தத்தில் வட இந்திய மொழிகளிலும் வழங்கி வருகிறது.

பவணந்தி முனிவரின் காலம்

ராவ்ஸாகேப் எஸ். வையாபுரிப்பிள்ளை

பவணந்தி முனிவர் இன்னார் என்று தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் அவசியம் இல்லை. பள்ளிமாணவர்கள் அனைவரும் அவரது நன்னூலைக் கற்றவர்களே. தமிழ் அறிஞர்கள் அனைவரும் தமிழ் மொழியின் நுட்பங்களைத் தெளிதற் பொருட்டு அவரது சிறந்த இலக்கண நூலை ஓதியுணர்ந்தவர்களே. முனிவர் இயற்றிய நூலின் பெருமை இன்றும் சிறந்து விளங்குகிறது; என்றும் அங்ஙனம் விளங்குமென்றே தோன்றுகிறது. 'இலக்கணப் பிசாசுகள்' மட்டும் கற்கும் நூல் என்று இதனைக் கொள்ளுதல் கூடாது. தமது தாய் மொழியாகிய தமிழை அறிந்துகொள்ள விரும்பும் ஒவ்வொருவரும் இதனைக் கற்றுவருகிறார்கள்; கற்கவேண்டுவதும் அவசியமே.

பண்டைக் காலத் தமிழின் இயல்பை உணர்த்துவது தொல்காப்பியம் என்ற பேரிலக்கணம். இடைக்காலத் தமிழின் இயல்பை உணர்த்துவது பவணந்தியார் இயற்றிய நன்னூல். இவ் இயல்பு பெரும்பாலும் தற்காலத் தமிழுக்கும் ஒத்ததாகவே உள்ளது. ஆதலால் பவணந்தியார் தமிழ் வளர்ச்சிச் சரித்திரத்தில் ஒரு முக்கியமான எல்லையிலே நின்று தமிழ் மொழியை ஆராய்ந்து அதன் இயல்புகளை வரையறுத்திருக்கின்றனர். இவ்வெல்லையைக் காலமுறையிற் கணக்கிட்டு நாம் அறியவேண்டுவது மிக அவசியமாகும்.

நன்னூலின் பாயிரத்திலே,

இகலற நூறி யிருநில முழுவதும்
தனதெனக் கோலித் தன்மத வரணங்
திசைதொறும் நிறுவிய திறலுறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கரிகர் வண்கைத்
திருந்திய செங்கோற் சய கங்கன்
அருங்கலை விநோதன் அமரா பரணன்
மொழிந்தன ஞக மூன்ஞர் தூவின்
வழியே நன் னூற் பெயரின் வருத்தனன்
பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னரு நிறப்பிற் பவணக்கி
என்னும் நாமத் திருந்தவத் தோனே.

என்று கூறப்பட்டுள்ளது. இதனால் பவணந்தி முனிவரை நன்னூல் இயற்றும்படி ஆணையிடுவித்தவன் சயகங்கன் என்ற அரசன் என்பதும் இவனுக்கு அமராபரணன் என்ற சிறப்புப் பெயர் உண்டென்பதும் விளங்கும். இச்சயகங்கன் மூன்றும் குலோத்துங்கனது காலத்தவன் என்பது து. அ. கோபிநாதராயரவர்களால் எடுத்துக் காட்டப்பட்டது. டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களும் தமது மயிலைநாதருரைப் பதிப்பில் இதனைக் குறித்திருக்கிறார்கள். எனவே, சயகங்கன் கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தவனென்பது நன்னூற் சிறப்புப் பாயிரத்தை நோக்கினால் இவனைச் சிற்றரசனென்று கொள்ள இடம் இல்லை ஆனால், இவன் சிற்றரசனே என்பது 'ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு மூப்பத்து நாலாவது: அமராபரண சயகங்கன் நம்பிராட்டியான அரியபிள்ளை திருவல்லமுடையநாயனார்க்கு வைத்த சந்திவிளக்கு ஒன்றும்.....' என வரும் சாஸனத்தால் அறியலாம். குலோத்துங்கனது ஆட்சியாண்டில் சயகங்கன் தேவி சந்திவிளக்கு வைத்தாள் என்றலால் இது ஐயத்திற் கிடனின்றித் தெளிவாய் அறியக் கிடக்கிறது. டாக்டர் சாமிநாதையரவர்களும் மூன்றும் குலோத்துங்கனுடைய ஆட்சிக்கு அடங்கியொழுகிய ஓர் அரசன் என இவனைக் குறித்துள்ளார்கள். குலோத்துங்கனது மகனாகிய மூன்றும் ராஜராஜனைச் சிறையிடுவித்த கோப்பெருஞ்சிங்கனுக்குக் கீழடங்கிய சிற்றரசனாகவும் இச்சயகங்கன் இருந்தனன். இது சமீபத்தில் வெளிவந்துள்ள ஒரு சாஸனத்தால் புலனாகிறது.

இச்சாஸனம் வருமாறு :

1. ஸ்வஸ்ரீ சகலபுவநச் சக்கரவர்த்திகள் கோ [ப்] பெருஞ்

2. சிங்கதேவர் [க்] கு யாண்டு [மெ] - வது ஸ்ரீமற் குவளாலபுரபரமே

3. ஸ்வரன் கங்ககுலோற்பவன் காவேரி வல்லவன் நஞ்சி -

4. கி [ரி] நாத [ன்] சயகங்க [ர்] [ஓ] லை மருதம் பா [க்] கத்து ஊரவர் க -

5. ண்டு வீடை தந் [த] தாவது தங்கள் ஊர் தேவதான திருவிடையாட்ட

6. ஸ்ரீ பண்டாரபாதிக்கு அந்தராயப் பாதி உள்பட ஊரடங்[கி]ல் நன்சை புன்சை

7. கடமையும் ஸ்ரீ பண்டாரப்பாதி உள்பட வெட்டி தனியாள் சிறுபாடி-

8. காவல் கண்காணி எடுத்துக் கொட்டி அரிமுக்கை கணக்[க] மிகுதி உள்-

9. பட்ட பல நெல்லாயங்களும் வெட்டிப் புடவை முதற்தரங் காத்திகை கா

10. சுவகை ந[த்த]காசு முள்ள[டி] இனவரி ஏரிமீன் பாட்டம் ஆசுவிகள் பேர்க்[க]டமை

11. உள்ளிட்ட பல காசு கடமையும் அச்சுத்தறி பறைத்தறி சாலியத்தறி உள்ளிட்ட த-

12. றிக்க[ட]மை வெலிப்பயறு தரப்படி அ[ரி]சி தூ[ணி] நிலத்திறப்[பு]க் கடமை செக்குகடமை

13. பேர்க்கடமை இருந்து பரிமாறுவார் பேர்க்கடமையும் செட்டிகள் வாணியர்

14. பேர்க்கடமையும் வால்மஞ்சாடிக் கடமையும் பா[லி]க்கப் பாட்டமும் பழங்கு-

15. டி நீ[க்]கி புதுக்குடியாய் ஏறிக் கொண்ட மன்றாடிகள் பேர்க்கடமையும் பொ-

16. ன்வரி வேண்டுகோள் நல்லெருது [ந]ற்கிடா காணிக்கை காத்திகைப் பச்சை

17. பு[ட]வை மாடையும் ம[ற்]றும் நாம் கொ[ள்ளு]ம் எப்பேற்ப[ட்]ட அனைத்துவரி-

18. களும் உள்பட இவ்வூர் நாற்பாற் கெல்லைக்கும் உள்பட்ட மேல்நோக்கி[ய]

19. மரமும் கீழ்நோக்கிய கிணறும் உட்பட பதினேழாவது சித்திரைமாதம்

20. முதல் சோளேந்திர சிங்கமுடைய நாயனார்த் திருநாளு[க்]கு வேண்டுவன

21. [வ]துக்கு வெட்டும் அமராபரணரான சீயகங்கன் வீட்டேன்.....

(S. I. I. Vol. xii. 202)

இங்கே குறிக்கப்பட்ட அரசன் முதலாம் கோப்பெருஞ்சிங்கன் என்று சிலர் சாஸனப் பரிசோதகர்கள் கூறுகிறார்கள். இவனது இறுதியாண்டு கி.பி. 1243. இவன் காலத்தும் சீயகங்கன் சிற்றரசனாயிருந்தானுதலால் சீயகங்கன் காலம் 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி (சுமார் கி.பி. 1200-1250) என்று கொள்ளலாம். ஆகவே, இக்காலப் பகுதியில் பவணந்தி முனிவர் தமது நன்னூலை இயற்றினார் என்று துணியலாம்.

இவரது ஊர் 'சனகை' என்று மேலைச் சிறப்புப்பாயிரம் அறிவிக்கின்றது. இவ்வூர் சனநாதபுரம் என்று மயிலைநாதர் தம் உரையில் விளக்குவதாகப் பதிப்பிக்கப் பட்டுள்ளது. சனநாதபுரம் சனகை என மருவிற்று என்று கொள்ளல் பொருத்தமின்று. பாடபேதமாகச் 'சனகாபுரம்' தரப்பட்டுள்ளது. இது 'சனகை' என மருவிற்று என்றல் பொருத்தமுடையதாம். எனவே, உரையில் 'சனகாபுரம்' என்பதனை மேற்கொண்டு, 'சனநாதபுரம்' என்பதனைப் பாட பேதமாகக் கொள்ளுதல் வேண்டும்.

உஷா தேவி

ரிக்வேதத்தில் உள்ள சில ரிக்குகள்

[கி. சந்திரசேகரன் தொகுத்தவை]

ஹே உஷா தேவீ, உன்னைச் சார்ந்தவர்களிடையே அதிக ஆடைகளைக்கூட அணிந்துகொள்ளாமல் நீ முதலில் உலவி வருகிறாய். பிறகு யௌவனத்தின் வனப்புடன், வேண்டியதைக் கொடுக்க வல்லவனும், உலகையே தன் ஒளியின் வசமாக்குகிறவனும், ஆசையின் இருப்பிடமும் ஆன சூரியனைக் கண்டு அணுகுகிறாய். [அஷ்டகம் 2, வர்க்கம் 1, ஸூக்தம் 6, ரிக்கு 10.]

காதலன் முன்னிலையில் நீ எழில் தங்கிய அங்கங்களைப் பெற்று, முகத்தில் புன்னகையும் இதழ்களில் பற்களின் ஒளியும் தவழ, எல்லா அங்கங்களையும் சேர்மை ப்படுத்திக் கொண்டு தோற்றம் அளிக்கின்றாய் அல்லவா?

ஹே தேவி! தாய் அன்போடு நன்கு நீராட்டி அலங்கரித்த மணமகள் ஒருத்தி எவ்வாறு யாவருடைய மனத்தையும் கவரும் அழகைப் பெற்று விளங்குவாளோ அப்படி நீ வெளிப்படுகிறாய்.

இவ்வுலகை மறைக்கும் இருளை மங்களகரமான உன் சோபையினால் உலகை நெருங்கவொட்டாமல் என்றும் செய்தருள்வாயாக! சென்ற நாட்களிலே பாராததும் இனி வருங் காலத்தில் திகழ முடியாததுமான அழகுடனே இன்று காட்சி அளிப்பாயாக! [அஷ்டகம் 2, வர்க்கம் 1, ஸூக்தம் 6, ரிக்கு 11.]

காய்கறித் தோட்டம்

கே. கணபதி கயர்

இப்பொழுது உணவுப்பொருள்கள் விலை ஏறி நிற்கின்றன. சத்துள்ள காய்கறிகள் கிடைப்பது அருமையாக உள்ளது. நமக்கு ஒரு சாண் நிலம் இருந்தாலும் போதும், அதில் ஏதேனும் ஒன்றைப் பயிர் செய்யலாம். நிறைய இடம் இருக்கிறவர்கள் பல இனுசுகளை விளக்கலாம். தோட்டம் போடுதல் பிரம்மவித்தை அல்ல. எவரும் அனுசரிக்கத் தக்க எளிய முறைகள் பல இருக்கின்றன. இங்கே எட்டு விதமான காய்கறிவகையைப் பயிர் செய்யும் விதம் விளக்கப்பெற்றுள்ளன. இவை எல்லோராலும் மேற்கொள்ளக் கூடியவைகளே.

தோட்டம் போடுவதற்கு முதலில் நிலத்தைச் சரிப்படுத்தவேண்டும். தரையை ஈரமாக்கி நன்றுகக் கொத்தவேண்டும். மண் கட்டிகளை உடைக்கவேண்டும். புல் முதலிய வற்றின் வேர்கள் காணப்பட்டால் ஒன்று விடாமல் பிடுங்கி எறிந்துவிடல் அவசியம்.

அடுத்தபடி மக்கிய சாண எருவையும் தழை எருவையும் கொத்திய மண்ணோடு சேர்த்து ஒன்றுகும்படி பல தடவை கிளறி விடுக.

பசுஞ்சாணமும் எருமைச் சாணமும் குழியில் ஒரு மாதமாவது மக்கினால் நல்ல எருவாகும். தொழுவத்தில் உள்ள மேல் மண்ணும் உயர்ந்த எருவே. ஆட்டுப்புழுக்கை எல்லா உரங்களிலும் மேலானது. அதனை மக்கச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை; அப்பொழுதே உபயோகித்துக் கொள்ளலாம். பலவிதமான தழைகளைக் குழியில் போட்டு மூன்று மாதம் மூடிவைத்திருந்தால் அவை மக்கிக் கறுப்பாகிவிடும். இந்த மண் தழை உரம் அல்லது மக்கு எனப்படும். இது உயர்ந்த வகை எருவாகும். இந்த எருவகைகளில் ஒன்றையோ பலவற்றையோதான் மண்ணோடு கலக்கவேண்டும்.

காய்கறிச் செடிகள் களிமண் நிலத்தில் நன்றுக வளர்ந்து பலன் தராமாட்டா. களி அதிகமாக இருக்கும் நிலத்தில் தாராளமாக மணலைச் சேர்த்துவிட்டால் மண் சரியாகி விடும். மணல் பூமியாக இருந்தால் களி மண்ணையேனும் தொழு எருவையேனும் சேர்க்க வேண்டும். அப்பொழுது மண்ணின் வாசி சரியாகிவிடும்.

நிலம் தயார் ஆனதும் பாத்தி கட்ட வேண்டும். செடிக்குச் செடி இடைவெளி தூரம் எவ்வளவோ, அவ்வளவு அகலம் வைத்து நெடுகப் பாத்தியை அமைக்க வேண்டும். பாத்திக்கு இருபுறமும் மண்ணால் கரை போட்டுவிடுக. இந்தப் பாத்தி ஒரு வரிசை எனப்படும். இடவசதியைப் பொறுத்து இம்மாதிரி பல வரிசைகளை உண்டு பண்ணிக் கொள்ளுக.

நடவுவிஷயமாக நாம் கவனிக்கவேண்டுவன யாவை என்றால், சில செடிகள் ஓர் இடத்தில் நாற்று விடப்பெற்றுப் பிறகு பாத்திகளில் நடுவதற்கு யோக்கியமாகும். கத்திரி, தக்காளி, மிளகாய் இவை நட்ட இடத்திலேயே பலன் தருவதில்லை. அதனால் நாற்று நடவு இவைகளுக்கு இன்றியமையாதது. வெண்டை நாற்றைப் பிடுங்கி வேறிடத்தில் நட்டால் அது வளர்ந்து பலன் தராது. புடல், பாகல், முள்ளங்கி, வெங்காயம் இவைகள் வெண்டையைப் போன்றவை.

நாற்று விடும் இடம் நல்ல சத்துள்ள மண்ணாக இருக்கவேண்டும். அதில் மணலின் கலப்பு அதிகமாக இல்லையானால் செடிகள் நன்றுக வளரமாட்டா. வெளியிடங்களில் நாற்று விட்டால் எலி, பறவைகள், புழு, பூச்சிகள் விதைகளையோ முளைகளையோ தின்றுவிடுவதும் உண்டு. வாய் அகன்றதும் அடியில் ஓட்டைகள் உடையதுமான மரத்தட்டில் மணலையும் எருவையும் போட்டு விதைகளை நடுவது நல்லது. எல்லோருக்கும் மரத்தட்டுகளில் நடுவது சாத்தியமன்று. அதனால் எலி முதலியவை தின்னுத இடத்தில் நாற்று விடுதல் போதும். நாற்றுப்பாத்தியில் விதைகளை மிகவும் நெருக்கமாக நட வேண்டும். செடி நன்கு தழை விட்டு வந்தும் நாற்றுக்களைப் பேர்த்தெடுத்து முன்னமே தயாராக உள்ள பாத்திகளுக்கு எடுத்துச் சென்று நட்டுவிடுக. நட்டதும் சிறிது ஜலம் தெளித்துப் பாத்தியை ஈரமாக இருக்கும்படிச் செய்யவேண்டும். நாற்று நட்டதும்



கத்திரி

விதையை நாற்று விட்டு 4 தழை விட்டதும் செடியைப் பாத்திகளுக்கு மாற்றுக. இடைவெளி செடிக்குச் செடி 1½ அடி.; வரிசைக்கு வரிசை 2 அடி. ஏந்த மாதமும் நட லாம்; காருக்கும் கத்திரிக்கும் காலமில்லை, அதிக நீரை விரும் புவது. ஈரப் பாத்தியை 10 நாளுக்கு ஒரு முறை கொத்திவிடவேண்டும். ஆடியிலும் தையிலும் விதைக் கலாம்.



வெண்டை.

விதையைஒர் அங்குல ஆழத் தில் புதைக்க. இடை வெளி செடிக்குச் செடி 2 அடி: வரிசைக்கு வரிசை 4 அடி. ஆவணி முதல் கார்த்திகை முடிய நடவுக்கு ஏற்ற கால மாயினும் வறட்சிக் காலம் ஒழிய எப்பொழுதும் நட லாம். இலை அதிகமாஞல் பலன் மட்டு; ஆகவே முதிர்ந்த இலைகளை அப்பொழு தப்பொழுது கிள்ளிவிடுக.



தக்காளி

நடவு கத்திரியைப் போல். ஆடி முதல் தை முடிய எம்மாத மும் நடலாம். 3 மாதத் தில் பலனளிப்பு. செடிக்கு அருகில் மாறுகளை நட்டு அவற்றில் இவை களைக் கட்டிவைத்தால் பலன் அதிகமாகும். நீர் அதிகம் கூடாது; நல்ல வடிகால் முறை அவசியம். செடிக்குச் செடி: 2 அடி. வரிசைக்கு வரிசை: 2 அடி.





முள்ளங்கி

சால் செய்து சால்மேடுகளில் நெருக்கமாக விதைக்க மேலாக விதைக்க. 2 இலை தோன்றி யதும் செடிக்குச் செடி 3 அங் குல இடைவெளி விட்டு வேண் டாத செடிகளைக் களைந்துவிடுக. ஈரம் எப்பொழுதும் அவசியம். அதிக வெயில் பகை. பஞ்சுனி சித்திரையிலும் ஆவணி முதல் தை வரையும் எந்த மாதமும் நடலாம். ஒரு மாதத்தில் முளங்கு அறு வடைக்குத் தயார்.





மிளகாய்

நடவு கத்திரியைப்போல். இடைவெளி செடிக்குச் செடி 18 அங்குலம் : வரிசைக்கு வரிசை 2 அடி இருக்க வேண்டும். எந்த மாதமும் பயிராகுமாயினும் பங்குனி சித்திரை வைகாசி மாத நடவுஞல்தான் மிகுந்த பலன் கிடைக்கும். விதை தெளித்து முளைத்த பிறகு நாற்றுப் பிடுங்கி நட வேண்டும்.

வெங்காயம்

விதைகளையேனும் சிறு வெங்காயங்களையேனும் மிகவும் நெருக்கமாக நடுக. ஆவணி முதல் கார்த்திகைக்குள் விதைப்பு. 80 முதல் 120 நாளில் அறுவடைக்குத் தயார். இலை மஞ்சளாகிவிடுவதே அறிகுறி. தோண்டி எடுப்பதற்கு 10 நாள் முன் ஜலம் பாய்ச்சுவதை நிறுத்திவிடுக. ஊன்றும் அகலம்: 4 அங்குலம். வரிசை இடைவெளி: 12 அங்குலம்.





பாகல்

பாத்தியில் 1½ அங்குல ஆழத்தில் 4 விதை நட்டு 2 இலே விட்டு வந்ததும் நல்ல வளர்ச்சியுள்ள 2 செடிகளை வைத்துக்கொண்டு மீதியை அழித்து விடுக. பாத்தியில் மாறுகளை நட்டுக் கொடியைப் பந்தலில் ஏற்றுக. ஆடி முதல் தைவரை சிறந்த காலம். ஆனலும் எந்த மாதமும் நடலாம். மூன்று மாதப் பயிர்.

அவரை

ஆடிமாதம் விதை நடுவதற்கு ஏற்ற காலம். விதைக்கு விதை ஆறு அங்குல அகலமும் வரிசைக்கு வரிசை ஓர் அடி அகலமும் இடம் விட்டு ஊன்ற வேண்டும். தேர்ந்த விதைகளாகப் பொறுக்கி எடுத்துக்குழியில் ஊன்றவேண்டும்

பாத்தியில் வெயில் பட்டால் இளஞ்செடிகள் துவண்டு போகும். அதனால் மாலை நேரத்தில் நாற்று நடுக. இரண்டு நாள் பாத்திகளுக்கு நிழல் கொடுப்பது நல்லது.

பாத்திகள் தயாரிப்பில் சால் செய்வது ஒரு முறை. கலப்பையால் நிலத்தை உழும் போது பள்ளமும் மேடும் உண்டாகின்றன அல்லவா? இந்தப் பள்ளங்கள் சால் எனப்படும். இவ்வித மேடுபள்ளங்களை நாம் கையினாலோ மண்வெட்டியினாலோ செய்வதே சால் செய்தல் எனப்படும். முள்ளங்கியை இந்தச் சால் மேடுகளில் நட்டால் அதற்கு நீர் அதிகமாகக் கிடைப்பதோடு வேர் நன்றாக உள்ளே செல்ல மண் நெகிழ்ச்சி உடையதாகும். அதனால் கிழங்கு பெரியதாக வளர்ச்சி அடையும்.

செடிகள் வளரும்போதே அவற்றின் விரோதிகளும் தோன்றிவருவது இயல்பு. களைச் செடிகள், புழு பூச்சிகள், ஆடுமாடுகள், பூஷாணநோய் இவைகளே தாவரங்களின் விரோதிகள். 'களை எடாதவன் வீணாவு எடான்'. பாத்தியில் நாம் வைத்துள்ள செடி தவிர வேறு எது முளைத்தாலும் அதனை முளையிலேயே களைந்துவிட வேண்டும். சில பூச்சிகள் பாத்தி மண்ணிற் புதைந்திருந்து இரவில் வெளிவந்து செடியை அரித்துவிடுவது உண்டு. நீர் வார்த்தவுடன் பாத்தியைக் கொத்திவிடுவதனால் மேல்மண் கீழே போயும் கீழ்மண் மேலே வந்தும் பூச்சிகளும் அவற்றின் முட்டைகளும் குஞ்சுகளும் பாத்திகளில் இடம் கொள்ளாமல் மடிந்து விடும். வாரம் ஒரு முறையேனும் கொத்தி விடுக. கத்திரிக்கு இந்தக் கொத்து மிகவும் அவசியம்; 'கத்திரிக்குக் கொத்து, கக்கரிக்குப் பந்தல்' என்பது பழமொழி. சில பூச்சிகள் இலை இடுக்குகளில் மறைந்திருக்கும். அவைகளைக் கையினால் பொறுக்கிச் சேர்த்து அழித்துவிடுவது நல்லது. பாத்தியிலும் செடியின்மேலும் நுண்மையான சுண்ணாம்புத் தூளைத் தெளித்து வைத்தால் பூச்சிகள் அண்டமாட்டா. இரவு நேரங்களில் அதிக நீர் பாத்தியிலும் செடியின்மேலும் பட்டிருக்குமானால் பூஷாண நோய் வருதல் கூடும். பூஷாணம் பிடித்த செடிகளை உடனுக்குடன் பிடுங்கி எரித்துவிடுக. பூஷாணம் மிகக் கொடிய ஒட்டு நோய்.

தோட்டம் போடுவதற்கு விதைகளைத் தேடிப்பிடிப்பது முக்கியமாகும். ஒவ்வொரு காயிலும் பல வகை உண்டு. அந்த வகைகளில் ஒவ்வொன்றே சிறந்தது. எந்த ராசி சிறந்ததோ அந்த ராசி விதைகளையே நாம் நாட வேண்டும். விதைகளையும் நாற்றுச் செடிகளையும் இக்காலத்தில் பலர் வியாபாரம் செய்கிறார்கள். கூடிய வரையில் அவர்கள் சாஸ்திர முறையில் அவைகளைத் தயாரிக்கிறார்கள், அவற்றை அவர்களிடம் வாங்குவது நலம். ஒரு முறையாக நாம் தோட்டம் போட்டுவிட்டால் அடுத்த தடவை தோட்டம் போடுவதற்கு விதைகளை நாமே தயாரித்துக்கொள்ள வேண்டும். சிறந்த விதைகளைப் பெறுவதற்கு இந்த முறையே சிறந்தது. நல்ல வளர்ச்சியுள்ள செடியில் முதல் தடவை இரண்டாம் தடவை காய்க்கும் காய்களைப் பறித்த பிறகு மூன்றும் முறையில் தோன்றுவனவற்றில் சில வற்றைப் பறிக்காமல் செடியிலேயே பழுக்கவிட வேண்டும். பழுத்த பின் அவற்றை விதைப்புக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். இளஞ்செடிகளின் விதைகள் விதைப்புக்கு ஏற்றவை அல்ல.

வெண்டை விதைகளைக் காயோடு காயவைத்து அப்படியே சேமித்து வைக்கலாம். கத்திரி, தக்காளி, பாகல், புடல், மிளகாய் விதைகளை எடுத்தவுடன் ஜலம் விட்டு நன்றாக அலம்பி ஈரம் போக வெயிலில் உலர்த்தியபின் துணியில் முடித்தோ டப்பாக்களில் அடைத்தோ ஈரம் படாமல் விதைகளைக் காப்பாற்றி வைக்கவேண்டும். கந்தகத் தூளோடு கலந்து சேமித்துவைத்திருந்தால் விதைகள் செடியாக வளரும்போது புழுப் பிடிப்பதில்லை; வேறு நோய்களும் அவற்றை அணுகுவதில்லை.

சில பருவங்களே சில செடிகளுக்கு ஏற்றவையாகும். என்றாலும் அவரை முதலிய இரண்டொரு ஜாதியைத் தவிர மற்றவற்றை எந்த மாதத்திலும் விளைக்கக்கூடும். வெயில் காலத்தில் வளராதவைகளை வெயில் படாமலும் அதிகமாக ஜலம் பாய்ச்சியும் வளர்க்கலாம். மழைக்காலத்தில் வளராதவைகளைக் குதிரை லத்தியை எருவாக இட்டும் ஜலம் பாத்தியில் தங்காமல் நல்ல வடிகாலை அமைத்தும் வளர்த்தல் எளிதாகும்.

நமக்கு வருஷம் முழுவதும் காய்கள் கிடைக்கும்படி, பருவம் அறிந்து, அந்த அந்தப் பருவத்தில் வளரக்கூடியவைகளை உற்பத்தி செய்துகொள்வது நல்லது.

முன்னே உள்ள காய்கறிப் படங்களையும் அதன் அதன் கீழுள்ள விவரங்களையும் காண்க.

காய்கறிகளின் பெயர்கள்

கூறித்து உண்ணுவதனால் கறி என்று சொல்லி வோம்; கரி என்பது பிழை. பாத்தியில் வளர்வதால் அறைக்கீரை என்ற பெயர் வந்தது; அறை என்பது பாத்திக்குப் பெயர். புடலங்காயைப் பழங்காலத்தில் புடோலங்காய் என்று வழங்கி வந்தார்கள். கத்திரிக்காய்க்குப் பழங்காலத்தில் வழுதுணங்காய் என்று பெயர்.

முன்காலத்தில் மிளகாய் இங்நாட்டிற்கு வர வில்லை. மிளகுதான் இருந்தது. மிளகைப் போன்ற காரமுடைய காயாதலின் மிளகுகாய் என்று சொல்லத் தொடங்கினர்கள்; அதுவே மிளகாய் ஆயிற்று. மிளகாய் தென் அமெரிக்காவில் உள்ள சிலி (Chilli) என்ற நாட்டிலிருந்து வந்தது. அதனால்தான் அதை ஆங்கிலத்தில் 'சிலி' என்றே வழங்குகிறார்கள்.

தூது

சி. தேசிகவிநாயகம் பிள்ளை

பல்லவி

நல்ல சகுனம் நோக்கிச் செல்லடி—சென்று
நான்படும்பா டவர்க்குச் சொல்லடி



அநுபல்லவி

அலைவ் அகற்றி என்பாக்
கானந்தம் அருள்வோசர்
தில்லைப் பதிநடேசர்
திருவுள்ளம் அறியீர் (நல்ல)

சரணம்

வண்ண மலர்களெதும்
வாசம் தருவதில்லை
பண்ணில் இனிமை இல்லை
பாலிற் சுவையும் இல்லை
கண்ணில் உறக்கமில்லை
கருத்தோர் நிலையில்லை
எண்ணி அளப்பதேனே
எல்லாம் அறிவாயோடி
புண்ணியம் உண்டடி
பொற்றொடி யேஇன்று (நல்ல)

ரங்கபோயன்

பெ. கூரன்

பகலவன் விழுந்துவிட்டான். மேற்கு வானில் ரத்தக் கறை போன்று அங்கும் இங்கும் செம்மை ஒளித் தண்டங்கள் காணுகின்றன. இருள் பல வேறு வடிவங்களில் பூமியில் அமர்ந்திருப்பது போலத் தோன்றுகின்றன மரங்கள். ஈரளெல்லாம் உழைத்த கூலிக்காரர்கள் சலிப்பினுல் தளர் நடை நடந்துவருகிறார்கள்.

ஆனுல் ரங்கபோயன் மட்டும் தெம்மாங்கு பாடிக்கொண்டு பாதை முழுவதுமே போதா தென்று சொல்லும்படியாகப் பெரிய ஆர்ப்பாட்டத்துடன் வந்துகொண்டிருக்கிறான்.

வேளைவரும் என்றுசொல்லி
விடியுமட்டும் காத்திருந்தேன்
ஊசியிட்டு வந்தவனை
உள்ளுக்குவா என்றளே
தான னன்ன னென னன்ன
தன்ன னன னென னன்ன!

என்று அவன் பாடுகிறான்.

தூரத்திலே இரண்டு பேர் இந்தப் பாட்டைக் கேட்டுக்கொண்டே வந்தார்கள்.

ஒருவன்: யாரது ரங்கபோயனு இந்தக் குசாலாய்ப் பாடறது?

மற்றவன்: பின்னே அவன் இல்லாமே யாரு? பண்ணைக்காரர் வீட்டுக்குப் பக்கத்தில் வந்துங்கூட வேறு யாரு இப்படிப் பாடுவா?

"ரங்கபோயன்னு பண்ணைக்காரர் ஒண்ணும் பேசமாட்டார். வேலை சரியாப் பண்ணுத போனுலும் அவனை அவர் கண்டிக்கிறதே இல்லை."

"அவர் என்னத்துக்குக் கண்டிக்கிறார்? அதெல்லாம் இப்போ ஒண்ணும் கண்டிக்க மாட்டார். கொஞ்ச நாள் போய் எல்லாம் சப்பிட்டுப் போனுல் அப்புறம் தெரியும். இப்படி எத்தனையோ பார்த்ததுதானே?"

"அதைப்பத்தி நமக்கு என்ன? எப்படியோ போகட்டும். நாம் பேசினதாகப் பண்ணைக்காரர் காதிலே விழுந்தால் வீண் பொல்லாப்பு வரும். அத்தத் தொல்லையெல்லாம் நமக்கு என்னத்துக்கு?"

"அது சரி, நமக்கென்ன? எவனு எக்கேடு கெட்டோ போகிறன்.... ஆனுல் இந்த ரங்கபோயன் கல்யாணம் பண்ணிக்கிறதற்கு முந்தி எவ்வளவு ஒழுங்காக இருந்தான்!"

"ஆமாம், கல் கட்டிடம் கட்டறதுக்கு இத்தப் பக்கத்திலேயே அவனைப்போல ஆள் கிடையாது. சின்ன வயசிலேயே ரொம்ப யூகமாய் எல்லாம் பண்ணுவான்."

"இப்போ? எல்லாம் அத்தப் பிள்ளையைக் கட்டிக்கிட்டதிலிருந்து போச்சு."

"அவளையே கட்டிக்க வேணும்னு காத்துக் கிட்டிருந்தானுமே?"

"அப்படித்தான் சொல்லுறுங்கோ. ஆனுல் கலியாணமாகி அஞ்சாறு மாசந்தான் சரியா இருந்தான். அப்புறம் என்னமோ எல்லாம் மாறிப் போச்சு. குடிச்சு வேறு பழகிக்கிட்டான்."

"பண்ணைக்காரரே குடிக்கப் பணம் கொடுக்கிறார்."

"ஆமாம்; அதோடே குடியிருக்கிறதுக்கும் அவர் தோட்டத்துச் சாளையிலேயே ஒரு வீடு குடுத்திருக்கிறாரம்."

"அந்த வீடு இவனைப்போலே எத்தனை பேரைப் பார்த்திருக்கிறதோ? பாக்கலாம், இவன் தான் அங்கே எத்தனை நாளைக்கு இருக்கிறனுன்னு!"

"ஏன் தம்பி, அந்தப் புள்ளை எப்படி?"

"அதென்னமோ யார் கண்டா? இந்தப் பண்ணைக்காரர் சும்மா சாளை வீட்டைக் கொடுப்பாரா? அவர் இருக்கிறவரைக்கும்.."

"சரி சரி; நமக்கென்ன? யாரோ எக்கேடுமோ போகட்டும். ஊருக்குள்ளே வந்தாச்சு; இனி இதெல்லாம் பேசப்படாது. நம்ம கையும் காலும் சுகமா இருக்கிற வரைக்கும் கூலிசெய்து அரைக் கஞ்சி குடிச்சுக்கிட்டிருக்கலாம். நமக்கு ஊர்வம்பெல்லாம் என்னத்துக்கு?"

இம்மாதிரி அவர்கள் பேசிக்கொண்டு போய் விட்டார்கள்.

ரங்கபோயன் சாலைக்கு வந்து சேர்ந்தான். அதே சமயத்தில் பண்ணைக்காரர் வேலைப்பகவுண்டரும் அங்கு வந்தார். "என்ன ரங்கபோயரு, உன்னைச் சாயங்காலத்திலிருந்து காணவே இல்லே. எங்கே போனாய்?"

"சும்மா அப்படியே போனேனுங்க. சேமாய்ப் பேரச்சு."

"அதுதான் கண்ணில் தட்டுப்படவே இல்லே. கள்ளுத்தண்ணிக்குப் பணங் கிணம் கேக்க வருவாயின்னு பரதீதேன்" என்று அவர் மடியில் இருந்த சில்லறையை எடுத்தார்.

ரங்கபோயன் அசட்டையாக அவர் கொடுத்ததை வாங்கிக்கொண்டு மறுபடியும் புறப்பட்டான். பழைய தெம்மாங்கே அவன் வாயிலிருந்து கிளம்பியது. வெகுதூரம் அவன் போன பிறகும் கூட அவன் குரல் இருவில் மிதந்து வந்து கொண்டிருந்தது. அதில் யாராலும் வருணிக்க முடியாத ஒரு விதச் சோகம் கனிந்து எங்கும் பரவியது.

ரங்கபோயன் அன்றிரவு திரும்பி வீடு வந்து சேரவில்லை. சேர வேண்டும் என்று அவனுக்குப் பெரியதொரு விருப்பமும் இருந்ததாகத் தெரியவில்லை. கள்ளுக்கடையைவிட்டு இரண்டு காடு தாண்டியிருப்பான். அதற்குள் போதை மீறிக்கொண்டது. அப்படியே பாதையருகில் இருந்த ஒரு புளிய மரத்தடியில் படுத்துவிட்டான்.

காலையில் வெயில் உறைக்கவே ரங்கபோயன் எழுந்து உட்கார்ந்தான். அவனுக்கு முதலில் எல்லாம் ஒரே குழப்பமாக இருந்தது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக எல்லாம் விளங்க ஆரம்பித்தது. ஆனால் அவனுக்கு எதுவும் விளங்கவேண்டும் என்று ஆசையே இல்லை. அவனையும் மீறி விஷயங்கள் மனக்கண்முன்பு தோன்றி மறைந்துகொண்டிருந்தன.

மனத்தை இந்தக் காட்சிகளினின்றும் மீட்க அவன் முயன்றான். ஒரு கொட்டாவி வாயைப் பிளந்துகொண்டு வந்தது. மடிப் பையை எடுத்து அவிழ்த்துப் பார்த்தான். இன்னும் கொஞ்சம் சில்லறை பாக்கி இருந்தது. அதைக் கொண்டு தன் நினைவுகளை எல்லாம் மறந்துவிடவேண்டும் என்று கடையை நோக்கிப் போகலானான்.

அவனுக்கு இன்று பழைய ஆசைகளெல்லாம் இல்லை. பெரிய கல்வேலைக்காரனாக வேண்டும், மேஸ்திரியாக வேண்டும், குத்தகையாகப் பேசிப் பெரிய பெரிய வீடுகள் கட்டிப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணங்களெல்லாம் மறைந்து விட்டன. சின்னம்மாளைக் கல்யாணம் செய்து கொண்டு இப்படி வாழவேண்டும் அப்படி வாழ வேண்டும் என்று கண்ட கனவுகள் எல்லாம்

கல்யாணமாகி ஆறு மாதங்களிலேயே சொறுங்கி விட்டன. எப்படியோ நாளைக் கடத்த வேண்டியது என்பதுதான் இப்போது அவனுடைய முடிவு. பண்ணைக்காரர் எப்படியும் பணம் கொடுக்கிறார். அவர் பண்ணையிலேயே ஏதாவது இரண்டு வேலை செய்துகொண்டிருந்தால் மாதம் இருபது வள்ளம் கூலியும் கிடைக்கிறது.

சின்னம்மாளிடம் ரங்கபோயனுக்கு அன்பு இல்லையா என்று கேட்கலாம். அவளையே கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று ஐந்து வருஷங்கள் பிடிவாதமாக நின்றவனுக்கு மனைவாழ்க்கை ஆரம்பித்து ஆறு மாதங்களில் அன்பு மறைந்து போகுமா ? அப்படி மறைவது இயல்பாகத் தோன்றவில்லை. இளமையின் உணர்ச்சிகளெல்லாம் கொழுந்துவிட்டுக்கொண்டிருக்கும் பருவத்தில் அவன் இப்படி மாறியதைக் கண்டு பலர் அவனிடம் இரக்கம் கொண்டார்கள்.

ரங்கபோயன் தனது நிலைமையை நினைத்து உள்ளம் புழுங்குவான். ஆனால் அதைத் தன்னால் மாற்ற முடியும் என்ற நம்பிக்கை அவனுக்குச் சிறிதும் இல்லை. ஒவ்வொரு சமயம், "நானேதான் இந்த நிலைமைக்கு வரக் காரணமாக இருந்திருப்பேனு ? குடிப் பழக்கத்தினாலே நான் அவனை அன்பாக நடத்தவில்லைபோல் இருக்கிறது. குடி வெறியோடு கிடக்கும் புருஷனிடத்தில் என்ன சுகம் கிடைக்க முடியும்? .. நான் எதற்காக இப்படிக் குடித்துப் பழகிக்கொண்டேன்? இதற்கும் பண்ணைக்காரரேதான் காரணம். அவர் என்னைக் குடிக்கும்படி செய்தாராவிட்டால் நான் இந்தப் பாழும் கள்ளைத் தொட்டிருக்கவே மாட்டேன். அவர் மனத்தில் சூது வைத்துக் கொண்டேதான் இப்படிப் பண்ணியிருக்கிறார்" என்று நீள நினைப்பான். பிறகு, "அதை எல்லாம் நினைத்து என்ன ஆகப்போகிறது? பேசாமல் காலத்தைத் தள்ள வேண்டியதுதான். இந்த ஊரிலே அவர் வைத்ததுதான் சட்டம்" என்று தனது உதவியற்ற நிலையை நினைந்து பெருமூச்சு விடுவான்.

இப்படியே காலம் நழுவிக் கொண்டிருந்தது. ரங்கபோயன் மனைவியிடத்தில் உள்ளுக்குள்ளே மிகவும் பற்றுதலோடு இருந்தான். இருந்தும் வாழ்க்கையில் அவனுக்குப் பற்றுதல் கிடையாது. சின்னம்மாளைத் தன் உள்ளச் சிப்பியில் உதித்தெழுகின்ற முத்துப்போல வைத்திருக்க அவன் ஆவல் கொண்டிருந்தான். ஆனால் இன்று அவன் உள்ளம் பறவை பறந்து போய்விட்ட கூட்டைப் போல் இருந்தது.

"நான் இருந்து யாருக்கு லாபம்.."

ரங்கபோயனுடைய வாழ்க்கை இப்படியே கழிந்து போயிருக்கும். ஆனால் அதை முற்றும் மாற்றும்படியாக ஒரு சம்பவம் எதிர் பாராத விதத்தில் நடந்தது. பண்ணைக்காரர் வேலைப்பக் கவுண்டரை யாரோ அவர் தோட்டத்துச் சாளைக்கு அருகிலேயே குத்திக் கொன்று விட்டார்கள். ஊரெல்லாம் இதே பேச்சாக இருந்தது.

புதுப்பாளையம் ஒரு சின்ன ஊர். அதில் வேலைப்பக் கவுண்டர்தாம் பெரிய தனவந்தர். அவர் வாழ்ந்த காலத்தைந்து வருஷங்களில் அவர் பேச்சைத் தட்டி நடந்தவர் அந்த ஊரிலே இல்லை. அவர் சொன்னது வேதவாக்கு. அதை முதலில் ஒருவராலும் நம்பவே முடியவில்லை. பிறகு கொலை செய்தது நிச்சயமாகத் தெரிந்துவிடவே சிலர் யார் செய்திருப்பார் என்று பலவிதமாகக் காதுக்குக் காது பேசிக்கொண்டார்கள். ஒரு சிலருக்கு அவர் கொலையுண்டதில் உள்ளுக்குள்ளே மகிழ்ச்சி இல்லாமல் இல்லை.

இந்தச் சம்பவம் நடந்த அன்று மாலையில்தான் வேலப்பக் கவுண்டர் எங்கேயோ போய்விட்டுத் தமது குதிரை வண்டியில் திரும்பி வந்தார். அவர் நேராகத் தோட்டத்திற்கு வந்து வண்டியை விட்டு இறங்கி மாடுகளை எல்லாம் பார்வையிட்டு விட்டு வீட்டுக்குத் திரும்பினர். அப்பொழுது தொழுவத்தில் குதிரை வண்டி ஓட்டும் நாச்சியப்பனைத் தவிர வேறு யாரும் இல்லை. மற்ற வேலைக்காரர்கள் எல்லாரும் இருட்டுவதற்கு முன்பே அன்று போய்விட்டார்கள். இரவு காவலுக்கு வருபவர்கள் அதற்குள் வந்து சேரவில்லை. சாளையில் ரங்கபோயனும் அவன் மனைவியும் இருந்திருக்கிறார்கள்.

இந்தவிஷயங்கள் எல்லாம் போலீஸ் விசாரணையில் தெரிந்தன. நாச்சியப்பனையும் ரங்கபோயனையும் அல்லது வேறு ஆண்கள் யாரும் அந்தச் சமயத்தில் தோட்டத்தில் இல்லை என்று நிச்சயமாய்த் தெரியவே. அவர்கள் இரண்டுபேர் மேலும் சந்தேகம் ஏற்பட்டது. மேலும் வேலப்பக் கவுண்டருக்கு விரோதி என்று வெளிப்படையாக யாருமே இல்லை. இது சந்தேகத்தை அதிகப்படுத்தியது. அதனால் அவ்விருவரையும் போலீசார் கைது செய்து கொண்டு போனார்கள்.

போலீசார் தங்களுக்குத் தெரிந்த எல்லா முறைகளையும் உபயோகப் படுத்தியும் நாச்சியப்பனும் ரங்கபோயனும் தங்களுக்கு அது சம்பந்தமாக ஒன்றுமே தெரியாதென்று மறுத்துவிட்டார்கள். போலீசார் அவர்களைப் பாதுகாவலில் வைத்தார்கள்.

நியாய ஸ்தலத்தில் இந்தக் கொலை சம்பந்தமான விசாரணை

ஆரம்பிப்பதற்கு முன்பு ஒரு நாள் இந்தக் காவற் கைதிகள் இருவருக்கும் தனிமையில் சில வார்த்தைகள் பேசிக்கொள்ளச் சந்தர்ப்பம் தற்செயலாகக் கிடைத்தது.

ரங்கபோயன் நாச்சியப்பனைப் பார்த்து, "யார் கொலை பண்ணியிருப்பார்கள்?" என்று ரகசியமாகக் கேட்டான்.

"உனக்கு இன்னும் தெரியாதா? நான்தான்" என்றான் நாச்சியப்பன்.

ரங்கபோயன் திடுக்கிட்டுப் போனான். "என்ன நீயா? எதற்காகப் பண்ணினாய்?"

"எதற்காகவா? பண்ணைக்காரன் என் வீட்டிலும் தனது கைவரிசையைக் காட்டப் பார்த்தான். அவனுக்கு என் சங்கதி தெரியாது போச்சு."

ரங்கபோயனுக்கு அப்பொழுது நாச்சியப்பன் மேல் ஒரு தனி அன்பு பிறந்தது. "பின்னே நீ செய்யவே இல்லை என்று போலீசாரிடம் சாதித்தாயே?"

"ஆமாம்; பின்னே செய்தேன் என்று சொல்லுவதா? எனக்குத் தூக்கு மாத்தில் போய்த் தொங்க வேணும் என்று இப்போ ஆசை இல்லை."

"இத்தனை வருசமா நீயுந்தானே பண்ணைக்காரருக்கு இந்த விஷயத்திலெல்லாம் உடந்தையாய் இருந்தாய்?"

"ஆமாம், அதுக்குத்தான் கடைசியிலே தீட்டின மரத்திலேயே பதம் பார்க்க வந்திருக்கிறான். அதெல்லாம் எங்சிட்ட நடக்குமா?"

இதற்கு மேலே தொடர்ந்து பேச அவர்களுக்குச் சமயம் வாய்க்கவில்லை.

விசாரணை நாள் வந்தது.

நாச்சியப்பன் வாக்குமூலம் கொடுத்தான்:

"பண்ணைக்காரர் வண்டியை வீட்டு இறங்கியதும் மாடு கன்றுகளைப் பார்ப்பதற்காக வழக்கம்போல் போய்விட்டார். நான் குதிரையைக் கொண்டு போய்க் கட்டி, அதற்குக் கொள்ளு வைத்தேன். அது தின்றபிறகு கொஞ்சம் அருகம்புல் போட்டு விட்டு நேராக என் வீட்டிற்குக் குறுக்குத் தடத்தின் வழியாகப் போய்விட்டேன். பண்ணைக்காரர் முன்னாலேயே போயிருப்பார். இருட்டாக இருந்ததால் அது எனக்கு நிச்சயமாகத் தெரியாது.... நான் அவரிடம் பத்து வருஷங்களாகக் குதிரை வண்டி ஓட்டிக்கொண்டிருக்கிறேன். அவரிடம் எனக்கு ஒரு மன வருத்தமும் கிடையாது. நாலு மாதத்திற்கு முன்புதான் எனக்குக் கல்யாணம் நடந்தது. அதற்குக் கூட அவர் செலவுக்கென்று ஐம்பது ரூபாய் கொடுத்தார்."

நாச்சியப்பன் பேசும்பொழுது அவன் குரலில் ஒருவிதமான குழப்பமும் எற்படவில்லை. தடுமாற்றமே இல்லாது களங்கமற்றவன்போல் மேற்கண்டவாறு கூறினான்.

அடுத்தபடியாக ரங்கபோயனை விசாரித்தார்கள். அவனும் அழுத்தம் திருத்தமாகவே பதில் சொன்னான். ஆனால் அவன் அதிகம் பேசவில்லை.

"நான்தான் பண்ணைக்காரரைக் கொலை செய்தேன்" என்றுதான் சொன்னான்.

அவ்வளவுதான் அவன் பேச்சு. யாரும் இதை எதிர்பார்க்கவே இல்லை. நீதிபதி, போலீஸ் இன்ஸ்பெக்டர் முதலியவர்கள் கொஞ்சநேரம் திகைத்துப் போனார்கள். நாச்சியப்பன் அப்படியே ஸ்தம்பித்துவிட்டான். இரண்டு நிமிஷம் எங்கும் ஒரே நிச்சப்தம். பிறகு குறுக்கு விசாரணை நடந்தது.

"எதற்காகக் கொலை செய்தாய்?"

"நான் குடிப்பதற்காகப் பணம் கேட்டேன். என்றைக்கும் கேட்டவுடன் கொடுப்பார். அன்றைக்கு இல்லை என்றார். எனக்குக் கோபம் வந்தது. கையில் வைத்திருந்த குத்தீட்டியால் குத்திவிட்டேன்."

* * *

நாச்சியப்பன் விடுதலை செய்யப்பட்டான். ரங்கபோயனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அவன் அதை அமைதியாக ஏற்றுக் கொண்டான். தண்டனையை நிறைவேற்று வதற்கு முன்பு அவன் நாச்சியப்பனை ஒரு முறை பார்க்கவேண்டும் என்று தனது விருப்பத்தைத் தெரிவித்தான். அதற்கு அனுமதி கிடைத்தது.

"நீ எதற்காக இந்தக் குற்றத்தை ஏற்றுக் கொண்டாய்?"

"உன்மீது எந்த விதத்திலும் குற்றம் ருஜு வாகாமல் இருப்பதற்காகத்தான்."

"அதனால் உனக்கு என்ன பிரயோஜனம்?"

"நீ இந்த உலகத்தில் இருந்தால் பண்ணைக்காரர் போன்ற மனிதர்கள் கொஞ்சம் அடங்கியிருப்பார்கள். நான் இருந்து யாருக்கு லாபம்? கம்மைத்தான் இந்த நியாயஸ்தலங்கள் தண்டிக்குமே ஒழிய அவர்களை ஒன்றும் செய்யாது. அதனால் நீ இருப்பது நான் இருப்பதைவிட நல்லது. உனக்கு இருக்கிற தைரியம் எனக்கு இல்லை."

"உன்னை விடவா நான் தைரியசாலி? செய்யாத குற்றத்தைச் செய்ததாக ஏற்றுக்கொண்டு சாகப்போகிற உனக்கு நான் எந்த மூலை?"

"சரி சரி, அதைப்பற்றி இப்போ பேசவேண்டியதில்லை. நீ இப்பொழுதுதான் கல்யாணம் பண்ணிக்கொண்டிருக்கிறாய். நீயும் உன் பெண்டாட்டியும் எவ்வளவு பிரியமாய் இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். நீங்கள் சுகமாக இருக்கவேணும்."

"நீயும் உன் வீட்டுக்காரியும் அப்படிப் பிரியமாகத்தானே இருந்தீர்கள்?"

ரங்கபோயன் மௌனம் சாதித்தான்.

காங்கீரஸ் அபிமானம்

டாக்டர் தி. சே. சௌ. ராஜன்

முன்கோபம் உணர்ச்சியின் மிகுதியால் உண்டாவதா? ஒரு சமயம் அப்படி இருக்கலாம் என்று தோன்றுகிறது. எனக்கு முன் கோபம் அதிகம். உலகத்தில் ஒரு சம்பவம் நேரிட்டால் சிலர் அதன் காரணமாக அதிக மனவேதனை அடைகிறார்கள். மற்றும் சில ருக்கு அதனால் யாதோர் உணர்ச்சியும் உண்டாகிறதில்லை. சில பயங்கரமான, கொடூரமான நிகழ்ச்சிகள்கூட அவர்கள் மனத்தை வாட்டுவதில்லை. ஏதாகிலும் ஒரு காரணத்தால் கோபம் பொங்கி எழும் பொழுது வாயில் வந்ததை உளறிக் கொட்டி விடுவேன். அதன் காரணமாகப் பிறகு மனத்தில் ஏற்படும் வாட்டமும் துன்பமும் அளவிட முடியா. ஏன் அப்படிப் பேசினேம், அதனால் என்ன பலன் கிடைத்தது என்று யோசனை செய்யும் பொழுது, கோபித்தது பிசகு என்று எனக்குத் தோன்றும். ஆனால் இந்த அறிவு மறுமுறை கோபம் வரும்பொழுது மனத்தில் இருப்பதில்லை. முன்போலவே உளறிக்கொட்டி விடுவேன். இது இயல்பா கர்ம பலனா என்பது எனக்குத் தெரியாது. ஆயுள் முழுவதும் முயன்றும் முன்கோபத்தை முற்றும் அடக்க என்னால் முடியவில்லை.

ஜனரல் டையர் என்னும் ஓர் ஆங்கில வெறியன், நிரபராதியான ஆண் பெண் குழந்தைகள் அடங்கிய ஒரு கூட்டத்தின் மேல் எச்சரிக்கைகூடச் செய்யாமல் ஒரு சதுக்கத்தில் அடைபட்டிருக்கும் பொழுது பஞ்சாபிலுள்ள அமிர்தஸரஸில் 1919-ஆம் வருஷம் சுட்டுக் கொலை செய்துவிட்டான். இந்தக் கோரக் கொலை செய்த குற்றவாளி மற்ற எந்த நாட்டிலும் உயிருடன் தப்பியிருக்கமாட்டான். ஆனால் நம் நாட்டிலோ, விசாரணை செய்த நீதிபதிகள் அது யோசனைக் குறைவான ஒரு செய்கை என்று சொன்னார்களே தவிர, வேறு ஒரு குற்றமும் சாட்டவில்லை. இங்கிலாந்தில் இருக்கும் பார்லிமெண்ட் சபை அங்கத்தினர்கள் கூடி இந்தக் கொலைகாரனுக்குக் தல் வைத்து இழைத்த பட்டாக்கத்தி ஒன்று, அவனுடைய தீரச் செயலுக்காக வெகுமதி அளித்துக் கொண்டாடினார்கள்.

இந்தக் கோரக் கொலை புரிந்த இடத்திற்குப் பக்கத்திலுள்ள ஒரு தெருவில் நம் மக்கள் மனிதனைப் போல நடந்து செல்லக் கூடாதெனவும், கைகால்களை ஊன்றிக் கொண்டு, வயிற்றினால் நகர்ந்து செல்ல வேண்டும் எனவும் அதிகாரிகள் ஓர் உத்தரவு பிறப்பித்தார்கள். அதிகாரத்திற்கு அஞ்சி நடக்கவேண்டும் என்ற கற்பனையை நம் மனத்தில் புகட்டுவதற்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மூளை கெட்டு, அதிகாரப் பித்துப் பிடித்த ஓர் உத்தியோகஸ்தன் இந்த உத்தரவைப் பிறப்பித்தான். ஆனால் அதற்கும் கீழ்ப்படிந்து வயிற்றினால் நகர்ந்து சென்ற மனிதர்களை நாம் என்னவென்று சொல்வது! ஆங்கில அரசாங்கத்தின் இந்திய சேனையில் பெரும்பாலோர் பஞ்சாபிகள். இந்த யுத்த சேவையினால் அந்த மாகாணத்திற்கு ஒரு தனிச்சலுகை அரசாங்கத்தினிடம் உண்டு. யுத்தகளத்தில் உயிரைத் துறக்கத் துணிந்தவர்கள் அடங்கிய மாகாணத்தில்தான் உத்தரவிற்குப் பயந்து, வயிற்றினால் நகரும் மனிதர்களும் இருந்தார்கள். பஞ்சாபிகளின் தீரத்தை எப்படி மதிப்பிடுவதென எனக்கு விளங்கவில்லை!

இந்தக் கோர நிகழ்ச்சிகளைப்பற்றி விசாரித்த இந்தியக் கமிஷன் அறிக்கையைப் படித்தவுடன் என் மனம் படாத பாடு பட்டது. வெகு நாட்களுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. இதற்கு நிவர்த்தி தேடும் முறையில் மனம் அல்லல்பட்டது. வலிமை இழந்து, ஆயுதங்களை பறிக்கப்பட்டு, அடிமை வாழ்வில் ஆனந்தமுற்று இருக்கும் கூட்டத்தாருக்கு இந்தக் கதி ஏற்படுவதுதான் உலக இயல்பா? அநீதியை அடக்க உலகத்தில் வேறு முறை கிடையாதா? இதுவே எனது எண்ணம. அந்தக் காலத்தில் காந்திஜி சத்தியாக்கிரக இயக்கத்தின் நெறியையும் தத்துவத்தையும் சக்தியையும் உலகத்திற்கும், முக்கியமாக ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்கும் ஒப்பற்ற ஒரு முறை எனப் பறை சாற்றினார். அதைக் கேட்டு என் மனம் சற்று ஆறுதல் அடைந்தது. ஏப்ரல் மாதம் ஆரும் தேதி இந்திய சகாப்தத்தில் மறக்க முடியாத ஒரு சுப தினம். அன்று சத்தியாக்கிரக உதயம். "அஹிம்சா பரமோ தர்ம:" என்று சொல்லும் அன்பு நெறி புதிய ஊக்கம் பெற்ற திருநாள். உறங்கிக் கனவு கண்டுகொண்டிருக்கும் மக்களைத்

தட்டி எழுப்பிய உணர்ச்சி தோன்றிய நாள். ஜடப்பொருளெனத் தோன்றிய கல் கம்பத்தில் அடி விழுந்தவுடன் நரசிங்கம் பீறிக் கிளம்பி அரிஜியின் வயிற்றைக் கிழித்து, ரத்தத்தை உறிஞ்சி உலகபாரத்தை நீக்கியது போன்றது. உபவாசம், வேலை நிறுத்தம், கடை அடைப்பு, ஊர்வலம், பொதுக் கூட்டங்கள் அன்றைத்தினம் நாடெங்கும் நடந்தன. சில இடங்களில் கூட்டம் நியதியை மறந்து, உண்மையைப் புறக்கணித்து வெறியின் மிகுதியால் கொடுஞ்செயலும் செய்தது. ஆனால் இந்தச் சம்பவம் ஓர் இடத்தில்தான் நடந்தது. எனினும் அஹிம்சா முறைக்கு ஒரு மாசு என்பதில் சந்தேகம் இல்லை.

அன்றைத்தினம் முதல் நாட்டின் விடுதலைக்குத் தியாகம் அவசியம் என்ற உணர்ச்சி என் உள்ளத்தில் உதித்தது. காங்கிரஸ் இயக்கம் உல்லாசப் பிரயாணம் அல்ல. புண்ணிய நதிகளில் புனிதஸ்நானம் செய்யும் சுற்றுலாவும் அல்ல. உண்டு களிக்கும் கூட்டம் அல்ல. இருப்பதா இறப்பதா என்ற போராட்டத்தின் அறிகுறி. பிரசங்கம், அதன் பெருமை, அதில் மகிழ்ச்சி, இவை அன்று முதல் குறைய ஆரம்பமாயின. வேலைத் திட்டம் வகுக்கவும், அத்திட்டப்படி நடந்தேறிய வேலைகளைச் சீர்தூக்கிப் பார்க்கவும், அதன்பேரில புதிய திட்டங்கள் வகுக்கவும், அதற்கு வேண்டிய சக்தியைத் திரட்டவும் காங்கிரஸ் ஏற்பாடு செய்தது. அரசியல் விடுதலை என்பது ஆண் பெண் இருவகுப்பாருக்கும், இந்நாட்டில் அடிமை வாழ்வில் ஈடுபட்டுக் கிடக்கும் எல்லா மதத்தினருக்கும் பொருத்தமான வேலை என்ற உணர்ச்சி வலுவடைந்தது. வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்கு எனக்கும் என்னைச் சார்ந்தவர்களுக்கும் தொழில் மூலம் உழைக்கவேண்டிய நேரம் போக, மற்ற நேரங்கள் நாட்டுப் பணிக்குச் சேரவேண்டுமென நினைத்தேன். அந்த எண்ணப்படி உழைக்கவும் தொடங்கினேன். நாளடைவில் காங்கிரஸ் வேலையில் அதிகப் பற்று உண்டாகித் தொழில் நேரத்தில் பெரும் பாகத்தை விட்டுவிடவும் என்னை அறியாமலே நேர்ந்தது.

1919-ஆம் வருஷத்தில் காங்கிரஸ் பஞ்சாபில் அமிர்தஸரஸ் நகரத்தில் நடந்தது. ஜலியான்வாலா சவுக்கத்தில் படுகொலை நடந்த புண்ணிய க்ஷேத்திரத்தில் ஹிந்து, முஸ்லிம், சீக்கிய சமூகத்தினர் ஒருங்கே கூடித் தியாகத்தில் ஈடுபட்டு, உயிர் துறந்த இடம். இந்த யாத்திரை என்னால் செய்ய முடியாமல் போய்விட்டது. ரணவைத்தியம் செய்வதில் நற்பெயரும், அதற்கு ஏற்ற பொருளும் எனக்கு ஏராளமாகக் கிடைத்தன. ஆனால் தொழிலில் ஆபத்து இல்லாமல் இல்லை. சஸ்திர சிகிச்சை செய்யும் ரணவைத்தியனுக்கு ஓரளவு ஆபத்து எப்பொழுதும் உண்டு. பெயர்போன அநேக ரணவைத்தியர்கள் உயிரை இழக்கவும் நேர்ந்திருக்கிறது. ஒரு நோயாளிக்குச் சஸ்திர சிகிச்சை செய்யும் பொழுது என்னை அறியாமல் ரணத்தை மூடித் தைக்கும் ஊசி எனது விரலில் பாய, அதன் மூலம் விஷக் கிருமிகள் எனது ரத்தத்தில் ஏறி, நான் சுடு நோய்க்கு உள்ளாகி, இருமுறை காலஞ்சென்ற டாகடர் நெடுங்காடி அவர்களால் ஆபரேஷன் செய்யப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேல் உயிருக்கு மன் முடும்படி ஏற்பட்டுவிட்டது. அதனல் அமிர்தஸரஸ் காங்கிரஸுக்குப் போகமுடியவில்லை. அதன் நடவடிக்கைகளைப் பத்திரிகை மூலம் படித்து அறிந்து ஒருவாறு எனது வேட்கையைத் தீர்த்துக்கொண்டேன்.

கல்கத்தா காங்கிரஸ், நாகபுரி காங்கிரஸ், கிலாபத் கிளர்ச்சி, சுயராஜ்யத் தீர்மானம், ஒத்துழையாமை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டிருந்தன. மனம் தொழிலில் ஈடுபடவில்லை. அடிக்கடி பல ஊர்களுக்குச் செல்வதும், கட்டைவண்டிகளில் கைராட்டையை வைத்துக்கொண்டு கிராமம் கிராமமாக, இரவுபகலாகப் பிரயாணம் செய்வதும், நிர்மாணத் திட்டங்களை விளக்கிக் காட்டுவதும், ஆங்காங்கே காங்கிரஸ் சபைகள் நிறுவுவதும், தமிழ்நாட்டின் மூலை முடுக்குகள் எல்லாம் சுற்றித் திரிவதுமாக இந்த வேலைகளிலேயே காலம் கழிந்து வந்தது. பணவருவாய் நின்றதைப் பற்றிய கவலையே இல்லை. என்னை நம்பி இருப்போரைப் பற்றியும் கவலை கொள்ளவில்லை. தொழிலைப் பற்றிய சிந்தனையே இல்லை. மனத்தில் அடக்க முடியாத ஓர் ஆர்வம்: கூப்பு என்பதே தெரியவில்லை. சுற்றித் திரிவதில் அளவில்லாத மகிழ்ச்சி. வெறி பிடித்தவனைப்போலவே உலக மறந்து, "ஒரே வருஷத்தில் சுயராஜ்யம்" என்ற வேகம் என்னைத் தூக்கிச் சென்றது. பல நண்பர்களும், சுற்றத்தார்களும் எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்றே நினைத்தார்கள். "பயனற்ற வேலையில் பித்துப் பிடித்து விட்டது" என்பது அவர்கள் முடிவு.

ஆனல் இம்மாதிரிப் பைத்தியம் பிடித்தவர்கள் தமிழ்நாட்டில் அநேகர் அப்பொழுது இருந்தார்கள். ராஜாஜி, ஈ. வே. ராமசாமி நாயக்கர், வைத்தியர் வரதராஜுலு நாயுடு, மௌலவி சையத்மூர்த்துசாஹிபு முதலிய பலர் என்னைப்போலவே அலைந்து திரிந்துகொண்டிருந்தார்கள். இந்தப் பைத்தியக்காரர்களின் பேச்சைக் கேட்கவும், இவர்களை வரவேற்கவும் ஆயிரக்கணக்கான மக்கள் ஆங்காங்கே கூடினர்கள். இந்தப் புதுமைப் பித்தர்களைத் தமிழ்நாடு கொண்டாடியது. எங்கள் பைத்தியம் எங்களுடன் சேர்ந்து வேலை செய்தவர்கள் எல்லோருக்கும் பிடித்துவிட்டது. தமிழ்நாடு முழுவதும் ஒரே கிளர்ச்சிமயமாக இருந்தது.

கதர் உடுத்துவதில் ஒரு மகிழ்ச்சி உண்டா

யிற்று. அது முரட்டுத் துணி. வெகு நயமான மெல்லிய உடைகளைத் தரித்தவர்களாகிய நாங்கள், எவ்வளவு பெருமையுடன் நான்கு முழத் துண்டுகளையும், பருத்தி விதை நீங்காத அரைக் கைச் சொக்காய்களையும அணிந்துகொண்டோம்! அவை உடம்பில் உறுத்துவனவாகவே தோன்றவில்லை. ஒரு கோடி காங்கிரஸ் அங்கத்தினர்கள் சேர்க்க வேண்டும். நிலகர் சுயராஜ்ய நிதிக்கு ஒரு கோடி ரூபாய் சேர்க்கவேண்டும். ஒரு கோடி கைராட்டைகள் ஓட வேண்டும். இவ்வளவும் சில மாதங்களில், அடுத்த காங்கிரஸ் கூடப்படுதற்குள், முடித்துக் கணக்குக் கொடுக்கவேண்டும். காங்கிரஸ் வேலையைத் தானதர்மமாக, பெரிய மனிதர் வேலையாக நடத்த முடியவில்லை. நாலணாச் சந்தாவில் ஒரு பகுதி, நிலகர் சுயராஜ்ய நிதியில் ஒரு பகுதி இவைகளைக் கொண்டு சொற்பச் சமபளத்தில் காங்கிரஸ் ஊழியர்களை வைக்க வேண்டியிருந்தது. அவர்களுக்குத் தகுந்த பயிற்சி கொடுத்து, பிரசாரகர்களாகச் செய்து கிராமந்தோறும் அனுப்பினோம். பள்ளி மாணவர்களைப் படிப்பை நிறுத்திவிட்டுத் தேசத் தொண்டில் ஈடுபடும்படி அழைத்தோம். பெரும்பான்மையோர் பள்ளியை விட்டு வெளிவர முடியவில்லை. படிப்பைவிட்டு வெளிவந்தவர்களுக்கு ராட்டைப் பயிற்சி, நூல் நூற்றல், துணி நெய்தல், பொதுக் கூட்டங்களில் பேசும் திறமை முதலியவைகளுக்காக ஒரு பயிற்சிச் சாலை நிறுவி, அதில் பத்து மாணவர்களைச் சேர்த்துச் சமையல் முதல் சகல வேலைகளும் அவர்களே செய்துகொள்ளப் பயிற்சி அளித்தேன். இவ்வளவும் எனது செலவிலே நடந்தது. பணம் செலவழிந்ததில் உத்சாகம் ஏற்பட்டது.

அந்த வேகத்தில் உழைத்தவர்களில் அநேகர் மகத்தான தியாகங்களுக்கு உட்பட்டு இன்றும் மிகவும் கஷ்டமான தேசத்தொண்டிலும் சிறையிலும் வாடிக்கொண்டும், நிர்மாண வேலைகளில் தங்களது ஆயுள் நாட்களைச் செலவிட்டுக்கொண்டும் வருகிறார்கள். ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டவும், எளியோரை அடக்கி ஆளவும் நடக்கும் யுத்தம் என்று சொல்லப்படும் கோரக் கொலைகளுக்கு லக்ஷக்கணக்கான மக்கள் பலியிடப்படும்பொழுது, நமது நாட்டின் விடுதலைக்குத் தேசத் தொண்டில் தமது நாட்களைச் செலவிடக்கூடிய மக்கள் எவ்வளவு பேர் தேவை என்பதை நாம் ஒருவாறு ஊகிக்க முடியும். சுதந்தரம் ஒருவர் கொடுத்து ஒருவர் வாங்கிக்கொள்ளும் பொருள் அல்ல. நாமே சம்பாதித்துக் காப்பாற்றவேண்டிய பெரும்சக்தி. அதைத் திரட்டுவதற்கு வேண்டிய பலத்தை நாம் சேமித்தாலொழியச் சுயராஜ்யம் நிலைக்காது. நாட்டின் விடுதலைக்குத் தியாகம் அவசியம். வெறும் பேச்சும், கக்ஷிகளும் போதா. சுயநலப்பற்றுக் குறைந்து பொது நன்மை உணர்ச்சி அதிகரிக்கவேண்டும். அந்நிய ஆட்சியில் சுயநலம் வளரும். அது வளர்ச்சி பெறுவதற்கான முறைகளும் சாதனங்களும் ஏராளமாகச் சுலபத்தில் கிடைக்கும். அடிமை வாழ்வில் துன்புறும் நாடுகளில் ஒவ்வோர் அரசியல் அமைப்பும் பொது மக்களின் சக்தியின் வேர்களை அறுத்துவிடும்படியே இருக்கும்.

நம் நாட்டுக் கிராமங்களில் சமுதாய வாழ்வு நிலை குலைந்துவிட்டது. கிராமப் பொறுப்பு தனி மனிதனிடத்தில் ஒப்படைக்கப்பட்டது. அதிகாரிகளுக்கு வரி வசூலிப்பதில் தங்குதடை இல்லாமல், சமுதாயம், கோர்ட்டு இவைகளின் ஆதிக்கத்திற்கு உள்ளாகாமல், அதிகாரிக்கு மேல் அதிகாரியின் பரம்பரையில் அரசாங்கம் நடைபெற்றுவருவதால், கிராமங்களில் பொது ஜன வாழ்க்கை, ஊழியம், பொறுப்பு எல்லாம் மறைந்துவிட்டன. கிராம நலம் என்பது கிராமத்தார் ஒவ்வொருவருடைய பொறுப்பும் ஆகும் என்ற உணர்ச்சி மறைந்துபோய், எல்லாவற்றிற்கும் கிராம முனிசீப், கணக்கன் இவர்களை எதிர்பார்க்க வேண்டி வந்தது. கிராம வசூல், அதிகாரிகள் விரும்பியபடி நடத்திவந்தால் மற்ற வைகளுக்குக் கேட்பார் இல்லாமற் போய்விட்டது. இதன் பயனுகச் சமுதாய உணர்ச்சி மறைந்துபோய், அகப்பட்டமட்டில் அவனவன் தன் யுக்திக்கும் நிலைமைக்கும் தகுந்தவாறு சுயநலத்தை விருத்தி செய்வதே முக்கிய தர்மமாக மாறிவிட்டது. மேலும் அக்கிரமம் செய்பவர்களும், காலப் போக்கு, கலிகாலம் என்று சொல்லிக் கொண்டே இறுகுணம் பெருகி, அதிகாரத்திற்குப் பயப்படும் அடிமைகளாகி விட்டார்கள். ஊரில் பெரிய மனிதன் யார் என்றால் அதிகாரிகளிடத்துச் செல்வாக்கு உள்ளவன் என்ற வழக்கம் பரவிற்று. அந்த அதிகாரியின் செல்வாக்கைப் பெறுவதில் போட்டியும் பொறுமையும் அதிகரித்து, நாடு கேவலப்பட்டிருக்கிற உணர்ச்சியே மறந்துபோய்விட்டது.

கிராமந்தோறும் பிரசாரம் செய்யும் பொழுது இந்தச் சில்லறைத் தேவதைகளாகிற கிராம அதிகாரிகளின சக்தி ஒருவாறு எங்களுக்குத் தெரியவந்தது. தண்டோரா மூலம் ஒரு பொதுக்கூட்டம் போடவேண்டும் என்றால், கிராம அதிகாரியின் தயவு வேண்டும். பல இடங்களில் கிராம அதிகாரிகள் விரோதமாக இல்லாவிட்டாலும், நாளைத் தினம் கூட்டம் கூடின விபரம் தாசில்தாருக்கோ அல்லது போலீஸ் "ஏட்டுக்கோ" தெரியவந்தால் தம் வேலையின் கதி என்ன ஆகும் என்பதில் திகிலடைந்து, தம்மால் இயன்ற அளவு கூட்டம் நடக்காமல் இருப்பதற்கு முயற்சி செய்வது வழக்கம். கிராமக் காங்கிரஸ் கமிட்டிகள் நிறுவுவதில்

பல கஷ்டங்கள் ஏற்பட்டன. ஒரு நாள் திருச்சி ஜில்லா ஜமீன் உடையார்பாளையத்தில் சாயங்காலம் ஏழு மணிக்குக் கூட்டம் போடுவதாக ஏற்பாடு செய்யக் கடிதம் எழுதியிடடு, அங்கே போய்ச் சேர்ந்தோம். கூட்டம் போடுவதற்குத் தண்டோரா போட முனிஸிப்தார் சம்மதிக்கவில்லை எனவும், ஜமீன்தார் உத்தரவு வேண்டும் எனவும் எங்கள் ஊழியர் தெரிவித்தார். இந்த உத்தரவுகள் சம்பாதிப்பது சுலபமான வேலை அல்ல முனிசிபாதரைக் கண்டாலும், ஜமீன்தாரைக் காண முடியாது. எனினும் கூட்டத்திற்குப் பொது மக்கள் வர ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்களா என்பதைத் தெரிந்துகொள்வதற்காக வீடுவீடாகச் சென்று விசாரித்தோம். எல்லோரும் வருவதற்குச் சம்மதப்பட்டார்கள். இரவு பத்து மணிக்கு அவ்வூர்க் கோயிலுக்கு முன்பாக உள்ள மைதானத்தில் கூட்டம் ஆரம்பமாயிற்று. ஒன்றிரண்டு அரிகேன் ராந்தல்களைக் கொண்டு, ஓர் ஓட்டை மேஜையையும், ஒடிந்த நாற்காலியையும் வைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தோம். சுமார் இரண்டாயிரம் ஜனங்களுக்கு மேலாகக் கூடியிருந்தனர் சிறிது நேரத்திற்குப் பிறகு, "கூட்டம் அங்கு நடத்தக்கூடாதென்று ஜமீன்தார் அவர்கள் உத்தரவு போட்டிருக்கிறார்கள்" என்று ஒருவர் ஆக்ஷேபித்தார். "நீர் யார்?" என்று கேட்டதற்கு, "நான் கோயில் மணியகாரர்" என்றார். "நீங்கள் கூடியிருக்கும் இடம் கோவிலைச் சேர்ந்தது. ஜமீன்தார் உத்தரவின்றி இங்கே கூடக் கூடாது" என்றவுடன், "கூட்டத்தைக் கலைக்க முடியாது. கூட்டம் கூட்டக்கூடாது என்பதாக எழுத்து மூலம் ஜமீன்தாரிடமிருந்து உத்தரவு வாங்கிவாரும்" என்று பதில் சொல்லிவிட்டுப் பிரசங்கத்தை மேற்கொண்டு நடத்தினோம். உத்தரவு வாங்கப் போன பேர்வழி திரும்பவே இல்லை. கடுநிசிக்குக் கூட்டம் வெகு உற்சாகத்துடன் முடிவடைந்தது. அன்றுமுதல் காங்கிரஸ் கமிட்டி நிறுவப்பட்டு இன்றும் நன்கு நடைபெற்றுவருகிறது.

உடையார்பாளையம் ஜமீன்தார் வம்சம் வெகு புராதனமானது. பழைய காலத்துப் பழக்க வழக்கங்களில் தோய்ந்துகிடப்பவர்கள். அவர்களுக்கு, "ஸம்ஸ்தானாதிபதி" என்ற பட்டப் பெயர் உண்டு. வரி வசூலிப்பதில் தீரர்கள். பக்கத்திலுள்ள ஸர்க்கார் நிலங்களுக்கு ஒரு ரூபாய் தீர்வை என்றால் இவர்களுடைய ஜமீன் நிலங்களுக்கு ஆறு அல்லது எட்டு ரூபாய்க்குக் குறைவான தீர்வை இராது. வரி கொடுக்க மாட்டாமல் அநேக நிலங்கள் தரிசாக இருக்கும். அப்படிச் சாகுபடி செய்யப்பட்டாலும் தீர்வை பாக்கியாகவே இருக்கும். ஜமீன் தீர்வை சம்பந்தமான விவகாரங்களைத் தீர்ப்பதற்கே அந்த டிவிஷன் டிப்டி கலெக்டருக்கு வேலை சரியாக இருக்கும். அரசாங்கத்தினிடத்தும், அதன் அதிகாரிகளிடத்தும் பக்தி பூண்டு, அவர்களைத் திருப்தி செய்விப்பது ஜமீன்தார் அவர்களுடைய குலதர்மம். உடையார்பாளையம் ஜமீன் என்பது பிற்போக்கான நிகழ்ச்சிகளுக்கு உதாரணமாகச் சொல்வது இந்த ஜில்லாவில் வழக்கம். ஜமீன்தார்களுக்கு ஆங்கிலம் தெரியாது. தெரியாமல் இருப்பதற்காகவே தற்காப்புச் செய்துகொள்ளும் குடும்பத்தினர். நவீன நாகரிகம் என்பது அந்தப் பிரதேசத்தில் காலடி வைக்க முடியாது. அதிகாரிகள் வந்தால் சோடசோபசாரம் நடக்கும். யானை, மேளம், தாளம், விருந்துகள் எல்லாம் நடக்கும். ஜமீன்தார்கள் ஏழைக் குடிகளைக் கறந்து பிழிவதில் வெகு சமர்த்தர்கள். பழைய ஜமீன்தார்கள் தங்கள் பொருளைக் காப்பாற்றுவதற்காக, இரவு முழுதும் கச்சேரி நடத்திப் பகலில் தூங்குவார்கள் என்ற கதைகள் சொல்வது உண்டு. ஜமீன்தாரை நேரில் கண்டு பேசுவது அதிகாரிகளல்லாத மற்றவர்களுக்கு முடியாது. குடிகளும் ஜமீன்தாரைப் பார்க்க முடியாது. ஜமீன் அரண்மனை வாசலில் போலிப் போலீஸ்காரன் போன்று உடையுடன் காவலாளிகள் காத்திருப்பார்கள். ஜமீன்தாரைப் பார்க்கவும் பேசவும் முடியாமல் இருப்பதால் குடிகளுக்கு ஜமீன்தார் மேல் வெகு ஆத்திரம். ஜமீன்தாருக்குக் குடிகளிடத்தில் வந்து பேசுவதற்கோ பயம். அநேகமாய் அரண்மனையிலேயே அடைபட்டுக் கிடப்பார். தகுந்த பந்தோபஸ்தின்றி வெளிக்கிளம்ப மாட்டார்.

காங்கிரஸ் ஸ்தாபனம் நிறுவியதும் குடிகள் இந்த ஸ்தாபனத்தின் மூலமாகத் தங்களுக்கு இருக்கும் குறைகளைத் திருச்சிக் கலெக்டர் அவர்களுக்கும் வேறு அதிகாரிகளுக்கும் தெரிவித்தார்கள். அவதிப்படும் மக்களுக்கு ஒருவாறு நீதி வழங்க இடம் இருக்கிறதா என்று புரிஸிலனை செய்ய ஏற்பாடு செய்து, ஜமீன்தாரிடம் எடுத்துச் சொல்லி அவரைக் கொண்டே சீர்திருத்தம் செய்யக் கலெக்டர் முயன்றார். கடைசியாகச் சில நண்பர்களின் உதவியைக் கொண்டு ஜமீன்தாரைப் பாக்கி இருக்கும் நிலவரி நிலுவைகளை வசூல் செய்யவும், குளம், கால்வாய், ஏரி முதலியவைகளைச் செப்பம் செய்வதற்கும் ஏற்பாடு செய்வதாகவும் ஒப்புக்கொண்டு, ஜமீன் குடிகளும் ஜமீன்தாரும் சேர்ந்து ஒரு மகாநாடு உடையார்பாளையத்திற்கு ஐந்து மைலுக்கு அப்பாலுள்ள ஜயங்கொண்ட சோழபுரத்தில் நடத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. அந்த மகாநாட்டிற்குக் காங்கிரஸ் சார்பாக நானும் ஜமீன்தாருடைய வக்கீல் காலம் சென்ற ஸ்ரீ. டி. தேசிகாசாரியாரும், போலீஸ் ஜில்லா லாரிண்டெண்டெண்டும் வரவேண்டும் என்று அழைக்கப்பட்டோம்.

போலீஸ் ஸுபரிண்டெண்டெண்டும் காலஞ் சென்ற அம்மு ஸாகேப் அவர்களின் பாதுகாப்பில் உடையார்பாளையத்திலிருந்து ஜயங்கொண்டம் வந்து சேர்ந்தார். கர்நாடக வழக்கம் மாறுத சரிகை அங்கி, தலையில் கலவிழைத்த சொர்ணக் கிரீடம், கையில் படடுக் கைக்குட்டை, அலங்கரித்த உடைவாள் இவைகளுடன் ஜமீன்தார் காட்சி அளித்தார்.

மகாநாட்டில் தம் திவாணக் கொண்டு தாம் தாராள மனத்துடன் செய்ய இருக்கும் வரிவராவைப்பற்றியும், மற்றும் பல நன்மைகளைப்பற்றியும் எடுத்துரைக்கும் படி சொன்னர். குடிகள் ஐயாயிரம் பெயர்களுக்கு அதிகமாகவே கூடியிருந்தார்கள். திவானின் பிரசங்கம் முடிந்தது. வக்கீல் தேசிகாசாரியாரும் பேசினர். கலெக்டரும் பேசினர். முடிவில் கூட்டத்தில் ஒருவர் எழுந்திருந்து, ஜமீன்தார் அளிக்க இருக்கும் வஜா பெரும் மோசம் என்னூர். தம்மால் வசூலிக்க முடியாத தொகையை வஜா செய்வதில் என்ன பெருமை இருக்கிறது என்று கேட்டார். இனி நன்மை செய்வதாகச் சொல்லியிருக்கும் பிரச்னையைப்பற்றி இப்பொழுது எவ்விதம் திருப்தி அடைவது? ஜமீன்தார் பேச்சு கேட்டவர்களுக்கு உற்சாகம் கொடுக்கவில்லை.

எனினும் கூட்டம் கலைய ஆரம்பமாகும் சமயம் அம்மு ஸாகேப் கூட்டத்தின் மத்தியில் சென்றபொழுது கூட்டத்தில் யாரோ ஒருவன், "இந்த ஜமீன்தாரைச் சும்மா விடக் கூடாது. ஒரு நாளும் வெளிவர மாட்டாதவன் இன்று இங்கு இருக்கிறான். இவனை விடக்கூடாது" என்று சொல்லியதாக அவர் காதில் விழுந்ததாக எண்ணித் தமது கையில் இருக்கும் ரிவால்வரைக் கொண்டு கூட்டத்தின் மத்தியில் சுடுவதற்கு எத்தனம் செய்தார். அவர் முயற்சியைக் கண்ட போலீஸ் ஸப்இன்ஸ்பெக்டர் தாமும் தம்மிடம் இருந்த துப்பாக்கியை எடுத்துக்கொண்டு கலைந்து கொண்டிருக்கும் கூட்டத்தில் புகுந்து தள்ளி அடிக்க ஆரம்பித்தார். இந்தக் களேபரத்தில் நாங்களும் கலெக்டருமாகப் போலீஸ் அதிகாரிகளைக் கட்டிப் பிடித்துக் கூட்டத்தை விட்டு வெளியே இழுத்துவந்தோம். "ஜமீன்தார் வெளியே கூட்டத்திற்கு வரமாட்டேன் என்று சொல்லியவரை நான் பாதுகாப்பு அளிப்பதாக உறுதி கூறிக் கூட்டி வந்திருக்க, இந்த மடப் பயல்கள் அவரைத் தாக்க எண்ணினர்கள். அவர்களைச் சும்மா விடுவதா?" என்று அம்மு ஸாகேப் பதறினர். எனினும் அவரைச் சமாதானப்படுத்திப் பக்கத்தில் இருக்கும் சந்தைப் பேட்டைக்கு நாங்கள் அழைத்துச் சென்று சமாதானப் படுத்தினோம். ஜமீன்தாரும் உயிர் பிழைத்தோம் என்று அம்மு ஸாகேப்பின் பாதுகாப்பில் காரில் ஏறி உடையார்பாளையம் அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தார்.

ஜமீன்தார் தர்பார் இவ்வளவு கோலாகலத்துடன் முடிவு பெற்றது. அன்றைத் தினம் கொலைகள் நடக்காமல் ஏழைக் குடியானவர்களைச் சமாதானப்படுத்தி ஊருக்கு அனுப்புவது எங்களுக்குப் பெரும்பாடாகி விட்டது. எனினும் காங்கிரஸின் பால் ஏழைகளுக்கு ஓர் அபிமானம் பிறந்தது. அது இன்றைக்கும் அழியாமல் இருந்து வருகிறது.

காலாகாலம்

ஒரு பொருளோடு மற்றொரு பொருளை ஒப்பு நோக்குகையில் ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்வது வழக்கம். அப்படி ஆராயும்போது பேதமும் அபேதமும் தெரியவரும். பேதம் அபேதம் என்ற இரண்டு சொற்களும் வடமொழியில் பேதாபேதம் என்று இணைந்து வரும். 'பேதாபேதம் ஆராய்வது' என்னும் ஒப்பு நோக்குதல் என்ற கருத்தோடு சொல்வதாகவே கொள்ளுகிறோம். இப்படியே குணகுணம் என்பதம் வரும்.

குழந்தைக்குச் சரியான வேளையில் உணவு ஊட்டவேண்டும் என்பதைச் சொல்ல வருபவர்கள், "காலாகாலத்திலே சோறு போட்டால்தானே குழந்தை சௌக்கியமாக இருக்கும்?" என்று கூறுகிறார்கள். ஆனால் 'காலாகாலம்' என்ற தொடர் அவர்கள் கருத்துக்கு விரோதமான பொருளைத் தருகிறது. காலத்திலும் அகாலத்திலும் சோறு போடுவதை அவர் ஆதரித்தால் அப்படிச் சொல்லலாம். அகாலத்தில் போடுவதைத்தான் அவர்கள் ஆக்ஷேபிக்கிறார்களே! 'கால காலத்தில்' என்று சொன்னால் அவர்கள் கருத்துக்கு ஏற்றதாக இருக்கும்.

இந்த ஆகாரம் (ஆ என்ற எழுத்து) இன்னும் சில வேண்டாத இடங்களில் வருகின்றது. 'வேளா வேளைகளில்', 'தேசா தேசங்களில்' என்பன இந்த வகையைச் சேர்ந்தனவே. மாதத்தோறும் என்பதை 'மாதாமாதம்' என்று எழுதவது பிழை. 'மாதம் மாதம்' என்று எழுதலாம். 'வருஷா வருஷம்' என்பதை வருஷம் வருஷம் என்று எழுதலாம்.

'சின்ன பின்னம்' என்பதில் சின்னம், அபின்னம் என்ற இரண்டு சொற்கள் இருக்கின்றன. சின்னம் இருந்தால் அபின்னம் இருக்கமுடியாது. 'மலடி மகன்' என்பதுபோல அத்தொடர் நிற்கிறது. 'சின்னபின்னம்' என்பதே சரியான பிரயோகம்.

நித்யாவின் காதல்

புரசு பாலகிருஷ்ணன்

ஒருநாள் காலை நித்யா, அட்வகேட் அனந்த ராமையரின் பதினேந்து வயசுப் புதல்வி, இருள் பிரிவதற்கு முன்பு எழுந்துவிட்டாள். அன்று அவ்வளவு சீக்கிரமாய் எழுந்தது அவளுக்கே அச்சரியமாக இருந்தது. ஏனெனில் அவள் அதற்கு முந்திய இரவு வெகுநேரம் கண் விழித்திருந்தாள். அவளுடைய தகப்பனார் அன்றிரவு அவளுடைய தாய்க்குக் காளிதாஸனின் சாகுந்தல நாடகத்தைப் படித்து விளக்கிக்கொண்டிருந்தார். நித்யாவுக்கு ஏற்கனவே சாகுந்தலத்தின் கதை தெரியும்; அம்மாவிடம் ஒரு வரகசு புஸ்தகத்தில் படித்திருந்தாள். ஆகவே சென்ற சில இரவுகள் அப்பா கோர்ட்டிலிருந்து திரும்பி வந்து, போஜனத்திற்குப் பிறகு அம்மாவிற்கு அந்த நாடகத்தைப் படித்துக் காட்டியபொழுது, அவளும் மறைந்துகொண்டு, பக்கத்து அறையிலிருந்து அதைக் கேட்பாள். இவ்விதம் நாடகத்தின் சிற்சில பகுதிகளை மாத்திரம் அவளால் கேட்க முடிந்தது. என்றாலும் அவளுக்குக் கதை ஏற்கனவே தெரியுமானதால், அக்கதையில் அங்கங்கே கேட்டதை அவள் மிகவும் ரஸித்தாள். அவள் முன்பு படித்திருந்த கதை மிகவும் சுருக்கமாய் இருந்தது. அப்பா அம்மாவிற்குப் படித்து விளக்கிக்கொண்டிருந்த நாடகமோ விவரமாய் இருந்ததுடன், துஷ்யந்தனும் சகுந்தலையும் பேசிய சிற்சில சந்தர்ப்பங்களில், ஒரு நூதனமான மர்மமான, ஆனந்தக் கிளர்ச்சியைக் கிளப்புவதாக இருந்தது.

சென்ற இரவு அவள் தைரியமாய் அப்பா அம்மா படித்துக்கொண்டிருந்த அறைக்கே சென்று அந்த நாடகத்தைக் கேட்கத் தொடங்கினாள். சிறிது நேரம் கேட்பதற்குள் பத்து மணி அடித்தது. அப்பா அவளை நேமாகிலிட்டது என்று படுக்கச் சொல்லும்படி கூறினார். "கொஞ்ச நேரம் கழிச்சுப் போய்விடுகிறேன், அப்பா. எனக்கு இன்னும் தூக்கம் வரவில்லை" என்று அவள் மேலும் அங்கேயே கதை கேட்டுக் கொண்டிருந்தாள். ஐந்து நிமிஷங்கள் கழிந்த பிறகு அப்பா மறுபடியும், "நித்யா, உடனே மாடிக்குப் படுத்துக்கப் போ. ரொம்ப நாழி யாச்சு" என்று சிறிது கண்டிப்பான குரலில் கூறினார். "இதோ போய்விடுகிறேன், அப்பா" என்று சொல்லிவிட்டு, நித்யா ஒரு நிமிஷம் இருப்புக்கொள்ளாமல், அவ்வறையிலேயே தயங்கினாள். அதற்குள் அம்மா, "போனால் போறது. இன்னும் அஞ்சு நிமிஷம் கழிச்சுப் படுத்துக்கப் போ" என்றாள். அவ்விதமே ஐந்து நிமிஷங்கள் கழிந்தபிறகு, அப்பா அம்மா இருவருமாய் அவளை மாடிக்குப் படுத்துக்கொள்ள அனுப்பி விட்டனர்.

நித்யாவிற்கு உண்மையிலேயே தூக்கம் வரவில்லை. கதை கேட்டதை விட்டுவிட மனமில்லாமல், அப்பா அம்மாவிடம் ஒன்றும் சொல்லவும் முடியாமல், பக்கத்து அறையில் இருந்த மாடிப் படிகள் வழியாகவறிச் சென்றாள். அங்கு இருட்டில் மாடியின் கடைசிப் படியில் உட்கார்ந்து கொண்டு, மிகவும் உஷாராய், அங்கிருந்து கேட்க முடிந்ததைக் கேட்டாள். சிறிது நேரம் சென்றதும் அவளுக்குத் தூக்கம் வரத் தொடங்கிற்று. ஆயினும் சிரமப்பட்டுக் கண் விழித்துக்கொண்டு, மேலும் கேட்டுக்கொண்டிருந்தாள். கடைசியில் அப்பா படிப்பு அறையின் விளக்கை அணைத்த சமயத்தில், சரேலென்று எழுந்து, சப்தம் செய்யாமல் இருட்டில் பூனைபோல் தன் படுக்கைக்கு ஓடிச் சென்று, அதில் படுத்துக்கொண்டு அப்பா அம்மா பார்க்க முடியாமல் முகத்தைச் சுவரின் பக்கம் திருப்பிக்கொண்டு, தூங்குவதாய்ப் பாவனை செய்தாள். பாவனைத் தூக்கத்திலிருந்து சீக்கிரமே உண்மைத் தூக்கத்தில் ஆழ்ந்தாள். ஆனால் தூக்கத்திலும் வெகு நேரம் அவள், விழித்துக் கொண்டு பார்ப்பதுபோலவே, அவ்வளவு தெளிவாய்ப் பல காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள்...சகுந்தலை, துஷ்யந்தன்...மீன்காரன் செய்யும் பெரிய வண்டுகள்.. திக் திக் என்ற பயத்தில் பதறிக்கொண்டு உயிருக்காக ஓடும் மான்கள்... உறுமும் சிங்கக் குட்டிகள்...இன்னும் பல காட்சிகள்...பிறகு அனைத் தூக்கத்திலிருந்து அதிகாலையிலேயே விழித்துக்கொண்டுவிட்டாள். அது எப்படி? என்றும் அவள் இவ்வளவு சீக்கிரமாய் எழுந்ததில்லையே!

இவ்வாறு நினைத்துக்கொண்டு அவள் மாடிப்படி இறங்கி வந்தாள். வீட்டு வாசலில் கோலக்காரி ஜலம் தெளித்துக்கொண்டிருந்ததைப் பார்த்தாள். தான் இரவில் கண்ட கனவுக் காட்சிகளை நினைத்துக்கொண்டே நித்யா எதிரான அறைக்குச் சென்று பல் தேய்த்து முகம் கழுவி, முகத்தைத்

துடைத்தக்கொண்டு வாசற்பக்கம் வந்தபொழுது அங்கு வேலைக்காரி, கையில் மொக்குமாப் பாத்திரத்துடன், தோட்டத்தின் பின் புறத்திலிருந்து வருவதைக் கண்டாள்.

"என்னம்மா, இவ்வளவு சீக்கிரம் எழுந்திட்டியே! அம்மாகூட எழுந்திருக்கல்லே!" என்று அவளே விசாரித்தாள் வேலைக்காரி.

நித்தியாவிற்கு அன்று சீக்கிரம் எழுந்ததிலிருந்து, எக்காரணத்தினாலேயோ குதூகலமாய் இருந்தது. வேலைக்காரி அப்படிக் கேட்டதற்கு அவள் பதிலளிக்காமல், திருப்தியுடன் சிரித்துக்கொண்டாள். பிறகு, "மொக்குமாவை எங்கிட்டே கொடு. நான் இன்னிக்குக் கோலம் போடறேன்" என்று வேலைக்காரியிடமிருந்து பாத்திரத்தை வாங்கிக்கொண்டாள்.

அதிகாலையில் எழுந்தது வீண் போகாமல், சுறு சுறுப்பாய்க் கோலமிடுவது நல்லது என்று அவளுக்குத் தோன்றிற்று. அவளுக்கு எப்பொழுதும் கோலமிடுவதற்குப் பிடிக்கும். வேலைக்காரி, தானே குறைகிற வேலை குறையட்டுமே என்று அவளிடம் ஆக்ஷேபம் செய்யாமல் பாத்திரத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றதும், நித்தியா கோலமிடத் தொடங்கினாள்.

அப்பொழுது ஆகாசம் வெளிச்சமாகவும் இல்லை, இருட்டாகவும் இல்லை; உருவங்களைச் சித்திர நிழல்கள்போல் காண்பிக்கும் நிலையில் இருந்தது.

நித்தியாவின் விரல்களிலிருந்து மாவானது கோல உருவங்களில் தரையில் படிந்துகொண்டிருந்தது. சில விநாடிகளில் விரல்களின் சலனம் குறைவுபட்டது. எனெனில் நித்தியாவின் மனம் மேலும் மேலும் சாகுந்தலக் கதையைத் தொடர்ந்து சென்றது. கல்ல வேளையாய்த் தானும் சகுந்தலையைப் போல் அழகானவள் என்று அவளுக்கு ஒரு விநாடி தோன்றிற்று. ஆமாம், தான் அழகு என்று அவளுக்கு நன்றாய்த் தெரியும். அதனுடன் சந்தேகத்திற்கு இடமில்லாத சில விஷயங்களும் நன்றாய்த் தெரியும். அவைகள் தங்கள் சுபாவத்தை மறைவில்லாமல் வெளிக் காட்டிக் கொண்டு நின்றன. அப்படிப் பளிச்சென்று அவைகளில் ஒரு தனி அழகுணர்ச்சி, ஒரு வசீகாம்யை, ஒரு கவிதைக் கவர்ச்சி, தென்பட்டது. உதாரணமாக, மர்லினீ நீரத்தில் சகுந்தலை தன் இரு ஒநேகிதிகளுடன் செடி கொடிகளுக்கு ஜலம் விடும் காட்சி: அது ஒரு கவிதைக் காட்சி தான்; அதில் சந்தேகம் இல்லை. எவ்வளவு இருந்தாலும் ஒருத்தி நந்தவனத்தில் செடி கொடிகளுக்கு ஜலம் விடுவதோ, புஷ்பங்களைப் பறிப்பதோ, மிகவும் அழகு பொருந்திய, உல்லாசமான, கவிதை ரஸம் நிரம்பிய காட்சியாய்த்தான் இருக்கும்...ஏன், தன்னைப்போல் ஒருத்தி அதிகாலையில் எழுந்து, வீட்டு வாசலில் ஜலம் தெளித்துக் கோலமிடுவதும் அத்தகைய காட்சிதான்... ஆமாம், கற்பனை செய்து பார்த்தால், அது எவ்வளவு கவிதை நிறைந்த சூழ்நிலை!... அதிகாலை; சுற்றிலும் மங்கலான வெளிச்சம்; வீட்டின் வாசலில் கோலம் வரையும் ஒரு பெண்...தோட்டத்தில் செடிகளுக்கு ஜலம் விடுவதுபோல் இதுவும் ஓர் அழகான காட்சி தான். அதில் சந்தேகம் இல்லை...தோட்டத்தில் சகுந்தலை செடி கொடிகளுக்கு ஜலம் விடுகையில் துஷ்யந்தன் அங்கு வருகிறான்...அவன் ஓர் அரசன். அழகும் வீரமும் வாய்ந்தவன்....சகுந்தலையைத் தொந்தரவு செய்யும் ஒரு வண்டை விரட்டுகிறான்; பிறகு அவளிடம் பேசத் தொடங்குகிறான்...அவளுடன் பேச ஆரம்பிப்பதற்கு எவ்வளவு அழகான சந்தர்ப்பம்!...இவ்விஷயங்கள் எல்லாவற்றிலுமே எப்படி ஒரு மாடர சக்தி நிறைந்து நின்றது?...துஷ்யந்தன் சகுந்தலையை மறைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்ததை நித்தியா

கற்பனை செய்துகொண்ட பொழுது அதைப் போல மற்றொரு காட்சியையும் கற்பனை செய்து கொண்டு பார்த்தாள்...அந்த அமைதியான இருள் கலந்த வெளிச்சத்தில் ஓர் இளைஞன்... அழகு பொருந்தியவன்...தன்னையும் தாரத்தி விருந்து எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டிருக் கிறான்...மந்தார வெளிச்சத்தின் பாதி மறைவில், 'கேட்'டிற்கு அப்பாலிருந்து ஒளித்துகொண்டு, ரகசியமாய்த் தன்னை ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருக்கிறான்...அவனுக்குத் தன் மீது காதல்...ஆமாம், காதல்..இப்படி எண்ணிப் பார்ப்பதிலேயே எவ்வளவு ஆனந்தம் இருந்தது! இந்தச் சூழ்நிலையிலும் சித்திரத்திலும் எவ்வளவு மனோரம்யமான மாயச் சக்தி, கவிதைக் கிளர்ச்சி இருந்தது! நித்தியாவின் மனம் இறகடிக்கும் பறவை போல் லேசாய், சந்தோஷம் நிரம்பி இருந்தது. அவள் முகத்தில் ஒரு புன்சிரிப் புத் தோன்றிற்று.

கோலம்வரைந்துகொண்டிருந்த நித்தியா மெது வாய்த் தன்னைச் சுற்றி ஒரு முறை பார்த்துக் கொண்டாள். ஒருவரும் கேட்டின் அருகில் இல்லை. எங்கேயும் இல்லை.

"என்ன வேடிக்கை! ஒருத்தரும் இருக்க முடியாதுன்னு எனக்குத் தெரியும்!...தெரிஞ் சுண்டும் பார்த்தேனே!...இங்கே எப்படி யார வது இருக்க முடியும்?..

"நல்ல வேடிக்கை!...அதெப்படி அந்த மாதிரி பார்த்தேன்?...நல்ல வேடிக்கை!..."

நித்தியாவுக்கு மற்படியும் சிரிப்பு வந்தது. கையி லிருந்து மொக்கு மாவை அப்படியே வாசற் படியில் தூணின் அருகில் வைத்துவிட்டு வீட் டிற்குள் சென்றாள். பங்கள அறையில் முந்திய இரவு அப்பா உட்கார்ந்திருந்த நாற்காலியில் உட் கார்ந்துகொண்டு, முழங்கைகளை மேஜைமேல் ஊன்றிக்கொண்டு, முகத்தைக் குடங்கைகளில் தாங்கிக்கொண்டு அமர்ந்தாள். மறுபடியும் தூக் கம் வந்தது...அவள்முன் மேஜையின்மேல் சென்ற இரவு அப்பா அம்மா படித்துக்கொண் டிருந்த சாகுந்தல புஸ்தகம் இருந்தது. தூக்கம் கண்களைச் சுழற்றியபோதிலும், மெதுவாய் அந்தப் புஸ்தகத்தைப் புரட்டினாள். அவளுக்கு ஸம்ஸ் கிருதம் தெரியாது. ஆனால் அந்தப் புஸ்தகத் தில் சில வர்ணப் படங்கள் இருந்தன. பாதி திறந்த கண்களுடன் நித்தியா அவைகளைப் பார்த் தாள். அவைகளுக்குள் முகப்புப்படம்தான் மிக வும் அழகாய் இருந்தது. மற்றப் படங்கள் எல்லா வற்றையும் பார்த்துவிட்டு, நித்தியா அதை மறு படியும் ஆராய்ந்து பார்த்தாள். அதில் மாலினீ நீரத்தின் இயற்கைச் சூழ்நிலையில் காதல் நோய்ப் பட்ட சகுந்தலை, துஷ்யந்தனுக்குத் தாமரை இலையில் கடிதம் எழுதுவது சித்திரிக்கப்பட்டிருந்த தது. தன் இடது கையால் தலையைத் தாங்கிக் கொண்டு, புல்லுத் தரையில் சாய்ந்திருந்த சகுந் தலையின் கவிழ்ந்த முகத்திலும் சித்தாகுலம் தென் பட்டது. அனேகமாய் அனைத்தையும் மறந்து துஷ்யந்தனுக்குக் காதற் கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள். இந்தக் காட்சி மூடுபனிக்கு அப்பால் தென்படுவதுபோல நித்தியாவின் முன் விரிந்தது. தூக்க மயக்கத்தில் அவள் தலை படக் என்று மேஜைமேல் சாய்ந்தது. அதனுடன் காதற் கடிதக் காட்சி மறைந்தது. அதற்குப் பதில் பல எண்ணங்கள் அவள் மனத் தில் குவிந்தெழுந்தன. அவ்வளவு அன்பு நிறைந்த மாசற்ற சகுந்தலை, கடைசியில் சபையில் துஷ் யந்தனால் நிராகரிக்கப்பட்டாள். — பாவம்! என்ன பரிதாபம்!...அவளைச் சபித்தாரே துர்வாஸர், அவர் என்ன, ஒரு ரிஷியா? முன்கோபி! ஒரு ரிஷிக்கு இவ்வளவு கோபம் ஆகுமா? அப்படி என்ன பெரிய அபராதம் செய்துவிட்டாள் சகுந் தலை? தான் நம்பிய துஷ்யந்தனிடம் அவளால் வெறுமையும் அவமானமும் துக்கமும் அடைந்த அவளுக்கு ராஜசபையில் எப்படி இருந்திருக்கும்?

பிறகு எப்படியோ நித்தியாவிற்கு முன்பு அந்த இளைஞன், துஷ்யந்தனை மறைத்துக்கொண்டு தோன்றி, காட்சியைக் கலைத்துவிட்டான்....

அதிகாலையின் மந்தார வெளிச்சத்தில் அவளை ரகசியமாய் உற்று நோக்கிய இளைஞன்தான் அவன். அதனுடன் துஷ்யந்தன் முதலியவர்கள் மறைந்துவிட்டனர். அந்த இளைஞன் மாத்திரம் அவளைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு நின்றான். அவனும் அவளைக் கை விட்டுவிட்டால், அவள் என்ன செய்வாள்? அம்மம்மா! அப்படி நேர்ந்து விட்டால், அவளால் என்ன செய்ய முடியும்? அவன் நல்லவன்தான். ஆனாலும் அவன் அவ ளைத் திரஸ்கரித்துவிட்டால்?...சகுந்தலைகூடத் துஷ்யந்த ராஜனால் ஏமாற்றப்பட்டாளே! தூ திருஷ்டத்தின் உணர்ச்சி நித்தியாவின் மனத் தைக் கவ்வுகிறது. அவள் விம்முகிறாள். ஆனால் விம்மல் வாயிலிருந்து வெளியேறவில்லை...

ஆனால், தான் என் அழவேண்டும்? கடைசி யில் துஷ்யந்தன் சகுந்தலையை அங்கீகரித்து விட்டானே! அவளையும் அவள் பிள்ளை பரதனை யும் அவன் மரீச ரிஷியின் ஆசிரமத்தில் கண் டான். அங்கே பரதன் கையில் பூண்டிருந்த ரக்ஷையை அவனும் அவன் பெற்றோர்களும் தவிர மற்றவர்கள் தொட முடியாது; தொட்டால், அது பாம்பாய் மாறி, அவர்களைக் கடித்துவிடும். ஆகவே துஷ்யந்தன் பரதனைத் தன் பிள்ளை என்று எளிதில் கண்டுகொள்ளச் சாதகமாயிற்று...ஆனால் அதெல்லாம் சகுந்தலையின் காலத்தில்தான் நடக்கக்கூடியது. இந்தக் காலத்திலோ அம்மாதிரி அற்புதமான ரக்ஷை எங்கு உண்டு?...நித்தியாவின் தொண்டையைத் துக்கம் வந்து அடைத்தது.

உண்மையில் பரதனைப் பார்த்தவுடனேயே துஷ்யந்தனுக்கு மனத்தில் உண்மையின் நிச்சயம் ஏற்பட்டிருக்கும். ஆமாம், அதற்கு ஓர் அற்புத

ரகை தேவையில்லை. ரகை இல்லாமலேயே தஷ்யந்தனும் சகுந்தலையும் ஒருவரை ஒருவர் கண்டுகொண்டிருப்பார்கள்; அதில் சந்தேகம் இல்லை.

ஆனல்...ஆனல்... நித்தியாவிற்குத் திடீரென்று தாகம் பொங்கி வருகிறது. மார்பின் மேல் ஓர் இரும்புப் பாறை உருளுவது போன்ற உணர்ச்சி. அவளால் மூச்சு விட முடியவில்லை...ரகை தேவையில்லைதான். ஆனல் அவர்களுடைய பிள்ளை பரதன்தானே அவர்கள் இருவரும் திரும்பிச் சேருவதற்குக் காரணமாக இருந்தான்! கல்ல வேளையாய்ச் சகுந்தலைக்குத் தஷ்யந்தன் அவளை மறுப்பதற்கு முன்பு ஒரு குழந்தை தோன்றிவிட்டது!...அந்த இளைஞன் தன்னை விட்டுப் போவதற்கு முன்பு, தனக்கும் ஒரு குழந்தை பிறக்கவேண்டுமே!...அப்படிப் பிறக்காமலிருந்தால்? அப்பொழுது தன்னல் என்ன செய்ய முடியும்? அவள் ஓர் அநாதையாய்த் தானே போய்விடுவாள்?...அவளுக்கு அழுகை தொண்டையிலிருந்து பீரிட்டு வந்தால்தான் நிம்மதியாய் இருக்கும்போல் தோன்றுகிறது. ஆனல் தொண்டையிலிருந்து ஒரு சப்தமும் கிளம்பவில்லை... மேலும் அவளுக்குத் தோன்றுகிறது: தனக்கு ஒரு குழந்தை பிறந்து, தன்னை அவன் மறுபடியும் சந்திப்பதற்கு முன்பு, அது இறந்துவிட்டதோ?... இந்த எண்ணத்தை அவளால் சிறிதும் சகிக்க முடியவில்லை. அதனுடன், அதுவரையில் அவளுடைய தொண்டையைக் கிளறிக்கொண்டு, வெளியில் வராமல் இருந்த குரல் வெளிக் கிளம்பிற்று.

"ஆ...ஆ...ஆ...ம்...ம்...ம்..." என்று மனுஷ பாஷை என்று சொல்லக் கூடாத ஒரு சப்தம் பீரிட்டுக்கொண்டு வந்தது. பிறகு "அம்மா!..." என்று உச்ச ஸ்தாயியில் அலறப்பட்ட வார்த்தையில் முடிந்தது.

"என்னடி, நித்தியா! என்ன, என்ன?" என்று கூவிக்கொண்டு, அம்மா மாடிப்படிகளில் ஓட்டமாய் இறங்கிவந்தாள்.

தன் அலறலும் அம்மாவின் உரத்த பதிலும் நித்தியாவை கன்ருய் எழுப்பிவிட்டன. தலையை மேஜையிலிருந்து தூக்கியபொழுது புறக் கழுத்து அதுவரையில் கோணலாய்ச் சாய்க்கப்பட்டிருந்த தால் வலித்தது. அவளுடைய மேஜையைக்கட்டை அழுத்தியிருந்ததனுல் சகுந்தலையின் காதற் கடிதப் படம் கசங்கியிருந்தது.

அதற்குள் அம்மா அந்த அறைக்குள் வந்துவிட்டாள்.

"எண்டி இப்படிக் கத்தினே?" என்று அவளை விசாரித்தாள்.

"ஒண்ணுமில்லே" என்று சொல்லிவிட்டு, அசட்டுச் சிரிப்புச் சிரித்தாள் நித்தியா.

"கத்திட்டு, கன்னு இப்பே சிரிக்கிறே!" என்ருள் அம்மா; "கன்னு இருக்கு! இவ்வளவு சீக்கிரமா எதுக்காக எழுந்து வந்தே? ராத்திரி கழிச்சுப் படுத்தனுட்டு, இவ்வளவு சீக்கிரமா எதுக்காக இங்கே வந்து 'சேர்'லே உட்கார்ந்துண்டே? இங்கே தூங்கறதை கன்னுப் படுக்கையிலே தூங்கிட்டு வரக் கூடாது? கல்ல பெண்ணடி! கன்னு இருக்கு! கேத்திக்கு, 'படுத்துக்கப் போ, படுத்துக்கப் போ'ன்னு அடிச்சுண்டும், முழிச்சுண்டிருந்தே; இன்னிக்குக் காத்தாலே எழுந்து கத்தறே! இப்படிப் பண்ணினு, உடம்பு என்னத்துக்கு ஆகும்? இனிமே ராத்திரி ஒன்பதரை மணிக்குப் படுத்துக்கப் போகாதே இரு; என்ன செய்யறேன், பார்!"

அதனுடன் அம்மா கொல்லைப்புறம் சென்ருள். நித்தியா மேஜையின்மேல் திறந்து கிடந்த புஸ்தகத்தை மூடி வைத்துவிட்டு, கண்களைக் கசக்கிக் கொண்டு, சாற்காலியிலிருந்து எழுந்தாள்.

எல்லாம் கனவுதான்! நித்தியாவின் முகத்தில் ஒரு புன்சிரிப்பு மலர்ந்தது. அவள் வாசற்பக்கம் சென்ருள். செல்லும்பொழுது, அவளுக்குப் பின் வருமாறு தோன்றிற்று: "கன்னு ஸைப்பனம் கண்டேன்!...தத்துப் பித்தான்னு!...கதையில் முக்கியமானது மோதிரத்தானே?...மோதிரத்தைப் பார்த்தவுடனேயே தஷ்யந்தனுக்கு எல்லாம் நினைவு வந்துடறதே. அவன் சகுந்தலையைச் சேருவதற்குப் பரதன், ரகை ஒன்றும் அவசியமாய் இல்லையே...அத்தனையும் பைத்தியக்காரத்தனம்! எல்லாவற்றையும் விட முக்கியமான மோதிரத்தை மறந்துவிட்டேன்!..."

அவள் முகத்தில் புன்சிரிப்பு நீண்டது. வாசற் படியைத் தாண்டி, வராந்தாத் தூணில் சாய்ந்து கொண்டு நின்ருள். இன்னும் மனம் அரைத்தூக்கக் கிளர்ச்சியைப் பற்றிக்கொண்டே இருந்தது. "ஸைப்பனத்தில் மோதிரத்தின் ஞாபகம் இருந்திருந்தால்—'நான் மோதிரத்தைத் தொலைக்கவே மாட்டேன். ரொம்ப ஜாக்கிரதையாய் வச்சுண்டு இருப்பேன்' என்று எண்ணிக்கொண்டு இருக்கலாம்" என்று நினைத்துக்கொண்டாள். அவள் உதடுகளிலிருந்து ஒரு மெல்லிய சிரிப்பு வெளிவந்தது.

அச்சமயம் தோட்டத்தின் பின்புறத்திலிருந்து வேலைக்காரி அங்கு வந்து சேர்ந்தாள்.

"என்னம்மா! கோலம் போடறேன்னு என் கையிலேந்து மாவை வாங்கிண்டே; அப்புறம் அப்படியே போயிட்டாயே! கல்ல வேலை செஞ்சே? அம்மா வந்து என்னைத் திட்டறதுக்கா? மொக்கு மா எங்கே?" என்று முணுமுணுத்தாள்.

"இரு, பொன்னி, நானே போட்டுடறேன்... முழுக்கச் சரியாய்ப் போட்டுடறேன். நீ போ" என்று நித்தியா வாசற்படியில் இருந்த மொக்கு மாப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கோலம் போடத் தொடங்கினுள்.

'அஹிம்சைத் தேன்' என்று கேட்டிருக்கிறீர்களா? பழைய காலத்தில் நம்முடைய பெரியவர்கள் "அஹிம்சா பரமோ தர்ம:!" என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனால் தேனீ அவர்கள் உபயோகித்ததனால் எவ்வளவோ தேனீக்களின் கொலைக்கு வழி செய்தார்கள். அவர்கள் 'ஹிம்சைத் தேனீ' உபயோகப்படுத்தினார்கள். விஞ்ஞான சாஸ்திரத்தினால் எவ்வளவோ ஹிம்சை நேர்வது உண்மை. ஆனால் இதோ ஹிம்சையை மாற்றி அஹிம்சையைப் புகுத்துவதற்கும் அந்த விஞ்ஞானமே காரணமாக இருக்கிறது. தேன் ஈக்களைக் கொலை செய்யாமல் பசுவினிடம் பாலைக் கறப்பதுபோலத் தேனடையிலிருந்து தேனை எடுப்பதற்கு இப்போது வழி கண்டுபிடித்திருக்கிறார்கள். உலகம் முழுதும் தேன்கூட்டைப் பாதுகாத்துத் தேன் எடுப்பது ஒரு தொழிலாகிவிட்டது.

தேன் ஈ மிகவும் சுறுசுறுப்பான பிராணி. விஞ்ஞானப் பிரம்மாக்கள் தேனீக்களில் புதிய புதிய வகைகளைச் சிருஷ்டி செய்து இன்னும் அதிகமாக உழைக்கச் செய்கிறார்கள். அதிகத் தேனைத் தொகுக்கும் ஆற்றலுள்ள தேனீக்களை உண்டாக்கியிருக்கிறார்கள். தேனீக்களின் ஆரோக்கியம் வளப்படுவதற்கு வழியைக் கண்டுபிடித்து இயற்கையிலே அவைகளுக்கு நேரும் பகைகளினின்றும் பாதுகாத்துக்கொள்ளும் ஆற்றல் உடையனவாகச் செய்து தேன்கூடுகளைப் பாதுகாக்கும் வழிகளையும் ஆராய்ச்சி வன்மையால் உண்டாக்கியிருக்கிறார்கள். இயற்கையும் விஞ்ஞானிகளின் செயற்கையறிவும் சேர்ந்து வீனாத்திருக்கும் காரியங்களிற் சில மகா அற்புதமானவை. இன்னும் இந்த அபிவிருத்தி மேலும் மேலும் பெருகிக்கொண்டே போகும்.

தேனீயை வளர்க்கும் தொழில் யுத்தத்திற்கு அவசியமான தொழில் என்பது பல பேருக்குத் தெரியாது. யுத்தத்திற்குப் போகும் வெடிகளுக்குப் புறப் பூச்சாகத் தேன்மெழுகு உபயோகப்படுகிறது.

யுத்தத்திற்குப் பிறகு இந்தத் தொழிலின் பிரயோசனம் சிறிதும் குறையப்போவதில்லை. நம்முடைய உணவுப் பொருள்களின் விஷயத்தில் தேன் வண்டின் உதவி எப்படியெல்லாம் வேண்டியிருக்கிறது தெரியுமா? தேனைச் சேகரித்துத் தருகிறதே, அது ஒன்று மாத்திரம் அல்ல, அது நமக்குச் செய்யும் உதவி. தமிழ் இலக்கியங்களில் வண்டுகளைப்பற்றி எவ்வளவோ செய்திகள் வருகின்றன. "தாது ஊதி அளி மூலும்" என்று ஒரு புலவர் பாடுகிறார். மலர்களில் உள்ள மகரந்தப் பொடியை ஊதி வண்டுகள் நீங்காமல் செய்கின்றனவாம். வண்டு தேனைச் சேகரிப்பதோடு தாதை ஊதும் தொழிலையும் செய்கிறது. தன் கால்களால் தாதைக் கிண்டி வீணாயாகிறது. ஒரு மலரிலே ஊதிவிட்டு வேறொரு மலருக்குச் செல்லும்போது அதன் காலிலுள்ள பூந்தாதும் அதனுடன் போகிறது. இரண்டாவது மலரில் அந்தத் தாது படிந்தவுடன் அந்த மலர் கருத்தரித்துக் காயாகிக் கனிகிறது. காற்றும் வண்டும் மலரினத்தில் இந்தக் கருவூட்டும் வேலையைச் செய்கின்றன. வண்டின் தொண்டு இத்தனையில் மிகச் சிறந்தது.

குடியானவர்கள் பயிரிடும் பயிர்களில் ஐம்பதுக்கு மேற்பட்ட பயிர்கள் வண்டின் தாதுதம் கைங்கரியத்தினால் பயனைப் பெறுகின்றன. வண்டு தாதுதாவிட்டால் பலவகை ஆப்பிள் பழங்களும் வேறு பல பழங்களும் தோன்றவே வழியில்லாமற் போய்விடும். இந்த உண்மையை உணர்ந்த தோட்டக்காரர்கள் தங்கள் பழத்தோட்டங்களிலும் பூங்காவிலும் வயல்களிலும் மலரும் பருவம் வரும்போது வண்டினங்களைக் கூட்டுடன் கொண்டுவந்து அமைக்கும் தந்திரத்தைச் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

வண்டு பூந்தாதை உண்ணும். மலரிலிருந்து எடுத்துக் கொண்டுவந்து அடையில் உள்ள தன் குழந்தைகளுக்கு ஊட்டும். அப்பூந்தாதில் சிறந்த ஜீவ சத்தும் லோக சத்தும் அடங்கியிருக்கின்றன, முக்கியமான சில மருத்துவ உபயோகங்

கூட அந்தத் தாதினுல் உண்டு. அமெரிக்காவில் தேன் வண்டாராய்ச்சியை வரையறையோடு செய்துவருகிறார்கள். அந்த நாட்டில் பல தேன் கூடுகள் அமைந்த சிறு சிறு தேன் வண்டு விடுதிகள் உண்டு. இப்படி உள்ள 50 லக்ஷம் விடுதிகளிலே ஒரு வருஷத்தில் வண்டுக் குடிகள் 35 கோடி பவுண்டு எடையுள்ள பூந்தாதைச் சேகரிக்கின்றன; இது அந்த நாட்டில் ஒரு வருஷத்தில் எடுக்கும் தேனைப்போலக் கிட்டத்தட்ட இரட்டிப்பு. இதற்கெல்லாம் அந்நாட்டில் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

தேன் வண்டுகளால் மனித சமுதாயத்தின் சௌகரியமும், ஆரோக்கியமும், வளப்பமும் பெருகுவதனுலும், அவை மிகவும் சுவாரஸ்யமான பிராணிகளாக இருப்பதனுலும் விஞ்ஞானிகள் மிகவும் சிரத்தை எடுத்துக்கொண்டு அவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். தேன் வண்டுகளில் அடிப்படியான இன வேறுபாடுகள் உண்டு. உருவ அளவு, நிறம், புள்ளி, நாக்கின் நீளம், தேன் பையின் அளவு முதலியவற்றில் அந்த வேறுபாட்டைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். எறக்குறைய நூறு வருஷகாலமாக மனிதன் வண்டினங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்துவருகிறான். அதிகமாகத் தேனை வீளைவிக்கும் ஆற்றல் வண்டுகளுக்கு எப்படி ஏற்படும் என்று அறியவும், தேர்ந்தெடுத்த ராணி வண்டுகளோடு பொறுக்கி எடுத்த ஆண் வண்டுகளை இணைய விட்டுத் திறமான வண்டினங்களை உண்டுபண்ணவும் முயன்றுவருகிறான்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் விவசாய இலாகாவைச் சார்ந்த பூச்சி ஆராய்ச்சிக்காரர்களும், விவசாயச் சோதனைக் கூடத்தினரும் இன்னும் சிறந்த சாஸ்திரீதியில் இவ்வகை ஆராய்ச்சிகளைச் செய்ய முயன்று வருகிறார்கள். ஊழியக்கார வண்டுகளின் நாக்கு நீளம், தேன் பையின் அளவு, அவ்வண்டுகளின் கனம், அவைகள் எடுத்துவரும் தேனின் அளவு என்பவற்றை நன்கு அளந்து அறிதலே அந்த ஆராய்ச்சியாகும். சோதனைக்காக வைத்திருக்கும் வண்டு விடுதிகளில் உண்டாகும் தேன் வீளைவோடு இந்த அளவுகளை ஒப்பு நோக்கி, அறிஞர்கள் சாஸ்திர ரீதியாக வண்டுகளின் உடலியல் புகளுக்கும் அவை தாது ஊதுவதற்கும் தேன் சேகரிப்பதற்கும் உள்ள சம்பந்தத்தை ஆய்ந்து தீர்மானிக்கிறார்கள்.

இந்த ஆராய்ச்சியினுல், வண்டினது நாக்கின் நீளம் மிகவும் முக்கியமானதென்று தெரிகிறது. ஒரு மலரில் வண்டுக்கு எட்ட முடியாத ஆழத்தில் தேன் இருந்தால் வண்டு அம்மலரை ஊதாது. இதனுல் குறிப்பிட்ட அத்தச் செடியினம் விருத்தியடைய வழியில்லாமற் போய்விடும்.

அமெரிக்க விஞ்ஞானிகள் அதிகச் சுறுசுறுப்பும் உழைப்பும் நோய்களை எதிர்க்கும் ஆற்றலும் உள்ள வண்டினங்களைத் தோற்றுவிக்கும் விஷயத்தில் அதிகக் கவனத்தைச் செலுத்திவருகிறார்கள். கொட்டாமல் இருக்கும் தேனீயைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று உலகம் முழுவதும் உள்ள தேனீப் பண்ணையினர் தேடி வருகிறார்கள். ஆனல் கொட்டாத தேனீக்கள் தேன் வீளைப்பதில் சிறந்தனவாக இல்லை என்ற தெரிய வருகிறது. அதனுல் பூச்சி ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகள் கொட்டாத தேனீக்களை உற்பத்தி செய்வதனுல் லாபம் ஒன்றும் இல்லை என்றும், அது உபயோகமில்லாத முயற்சியாக முடியும் என்றும் கருதுகிறார்கள்.

ஐரோப்பாவில் தேனீ வளர்ப்பவர்கள் கல்வ தும்பிகளை உண்டாக்க நூறு வருஷத்துக்கு முன்பு ஒரு வழியைப் பின்பற்றினர்கள். சிறந்த ராணி ஈயையும் சிறந்த ஆண்வண்டையும் தேர்ந்தெடுத்து மலைப்பிரதேசத்தில் தனியான இடத்துக்குக் கொண்டுபோனர்கள். ராணி வண்டு தாழ்ந்த இனத்தோடு இணை சேர்க்கூடாது என்பதற்காகவே இப்படிச் செய்தார்கள். சமீபகாலம் வரையில் இந்த முறையே இருந்துவந்தது.

இந்தமாதிரி தேர்ந்தெடுத்து இணை சேர்ப்பதனுல் உண்மையில் அச்சரியமான பலன் வீளைந்தது. அமெரிக்காவில் நடத்திய சோதனைகளில் உயர்ந்த இனவண்டுகள் ஒவ்வொரு விடுதியிலும் அவற்றிற்கு வேண்டிய அளவுக்குமேல் 250 பவுண்ட் வரையில் தேனை உற்பத்தி செய்தன. ஆனல் தாழ்ந்த இனம் உள்ள இடத்திலேர குளிர்காலம் முழுவதும் அவற்றிற்கு உதவுவதற்கே போதிய தேன் இல்லாமற் போயிற்று.

தேன் வண்டுகளுக்கு வரும் நோய்களினின்றும் அவற்றைப் பாதுகாக்கும் விஷயத்திலும் விஞ்ஞான ஆராய்ச்சி இன்னும் சிறந்த பயனை அளித்திருக்கிறது. மூன்று விதமான நோய்கள் முக்கியமானவை. நூற்றக்கணக்கான மைல் பரப்புள்ள இடங்களிலுள்ள தேனீ விடுதிகளிலுள்ள வண்டுகள் அனைத்தையும் சில பருவகாலங்களில் அழித்துவிடும் அழிவுச் சக்தி இந்த நோய்களுக்கு உண்டு. இவ்வகை நோய் ஒன்றால் 1934-35-ஆம் வருஷங்களில் அமெரிக்காவில் வர்மாண்ட் என்ற பகுதியில் தேனீத்தொழில் அடியோடு நாசமாகிவிட்டது. 1936-ஆம் வருஷத்தில் மிடில்பரி என்ற இடத்திலுள்ள சார்லஸ் ம்ராஸ் என்ற தேனீப் பண்ணைக்காரர் தாம் வைத்திருக்கும் தேனீ விடுதிகளில் ஒன்று இந்த வியாதியை எதிர்த்துப் போராடும் ஆற்றல் படைத்திருக்கும் அதிசயத்தைக் கண்டார். அவர் அங்கிருந்து முட்டையிடும் ராணி ஈயை எடுத்துச் சோதனைச் சாலைக்கு அனுப்பினர். இப்போது அந்த ராணியின் ஏழாவது தலைமுறையில் வந்த வண்டுகள் வியாதியை எதிர்த்துப்

போரிட்டு வெற்றி பெற்றுள்ளன. நோய்க்கிருமிகள் மனிதன் கண்ணுக்குப் புலப்படுவதற்கு முன்னரே அவற்றைக் கண்டுபிடித்துவிடும் ஆற்றல் அவ்வண்டுகளுக்கு இருக்கிறதென்று தோற்றுகிறது.

1926-ஆம் வருஷம் ஆல்பிரட் என்ற இடத்தில் டாக்டர் லாயிட் ஆர் வாட்சன் என்ற விஞ்ஞானி ராணி ஈயைச் செயற்கை முறையில் புஷ்டிப்படுத்தினர். இதனால் வம்ச அபிவிருத்தியைத் திட்டப்படுத்த முடிந்தது. பூச்சி ஆராய்ச்சிக்காரர்கள் அந்த முறையை மேற்கொண்டு மேலும் புதிய முயற்சிகளைக் கண்டுபிடித்தார்கள்.

ஒரு விஷயத்தில் பதினேந்து வருஷகாலமாக விஞ்ஞானிகளுக்கு ஒரு பெரிய சிக்கல் இருந்து வந்தது. செயற்கையாக ஜீனை சேர்க்கப்பட்ட ராணியினுல் உண்டாகும் சந்ததி போதிய அளவில் இல்லை. சொற்பமாக இருந்ததனுல் அவை இறந்துவிட்டால் அபிவிருத்தி இல்லாமல் போய்விடுகிறது. செயற்கை இணைப்பில் ராணி ஈக்கள் அதிகமான முட்டைகளை இடுவதில்லை. இதுதான் இந்த எண்ணிக்கைக் குறைவுக்குக் காரணம்.

அப்பால் 1940-ஆம் ஆண்டில் வளந்தகாலத்தில் அமெரிக்க விஞ்ஞானிகள் சேர்ந்து, ராணி ஈ தன் வாழ்க்கைக் காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை இணை சேரக்கூடும் என்ற உண்மையைக் கண்டுபிடித்தார்கள். நூறு வருஷங்களாகச் செய்துவந்த விஞ்ஞான ஆராய்ச்சியினுல் அறிந்த செய்தியை இந்த உண்மை பொய்யாக்கியது. ஆட்டோ மேகன்ஸன், வில்லியம் ராபர்ட்ஸ் என்ற இரண்டு விஞ்ஞானிகள், ''செயற்கை முறையால் ராணி ஈயைப் பலமுறை இணைசேரும்படி என் செய்யக்கூடாது?'' என்று யோசித்தனர். சோதனை செய்யலாயினர். அந்த மாதிரி முறையில் ராணி ஈ பல முறை இணை சேர்ந்து இட்ட முட்டைகளிலிருந்து ஒரு பலமான ஈ விடுதியை அமைக்கப் போதுமான ஈக்கள் உற்பத்தியாயின. சென்ற சோதனைக் காலத்தில் ராபர்ட்ஸின் முயற்சியால் ஒரு சோதனைக் கூடத்தில் முதல் முதலாக இந்தச் செயற்கை முறையால் இணை சேர்த்ததன் பயனுகப் பல தேனீ விடுதிகள் அமைக்கப்பட்டன. பழைய முறையினுல் ஒரு வருஷத்தில் ஒரே ஒரு சந்ததியைத்தான் உண்டாக்க முடிந்தது. புது முறையோ பத்துத் தடவை ஈ வரிசைகளை உண்டாக்க உதவுகிறது.

தேன் வண்டின் ஈக்கை அளப்பதற்கு, சிறு துவாரங்களையுடைய தேன் நிறைந்த ஜாடிகளைத் தேன் கூட்டில் வைக்கிறார்கள். தேன் வண்டுகள் துவாரத்தின் வழியே ஈக்கைச் செலுத்தித் தேனைக் குடிக்கின்றன. எவ்வளவு தூரம் எட்டுமோ அதுவரையில் உள்ள தேனைக் குடித்து விடுகின்றன. கடைசியில் மிஞ்சி இருக்கும் தேனைக் கொண்டு அந்தக் கூட்டில் அதிக நீளமான ஈக்கை உடைய வண்டின் ஈக்கு நீளத்தைத் தெரிந்துகொள்கிறார்கள். தனி வண்டின் ஈக்கு நீளத்தை அளப்பதற்கும் இத்தகைய முறையையே அனுசரிக்கிறார்கள். மிக இளைய ஈப் புழுக்கள் உயர்ந்த உணவை உண்டு ராணி ஈக்கள் ஆகின்றன. இத்தகைய உணவை வேலைக்கார ஈக்கள் ராணிக்குரிய கண்ணறைக்குத் தான் விடாமல் அளிக்கின்றன. இதை அறிந்த தேனீப் பண்ணைக்காரர்கள் செயற்கை ராணிக் கண்ணறைகளை அமைத்து வேலைக்கார ஈக்களை மாற்றி அந்த உணவை ஊட்டச் செய்கிறார்கள். இதனுல் அதனுள் இருக்கும் குஞ்சுகள் ராணி ஈக்களாகின்றன.

இயற்கையில் ஒரு கூட்டில் ராணி ஈ ஒன்று முட்டையிலிருந்து வெளிவந்தாலும் மற்ற ராணிக் கண்ணறைகளை எல்லாம் அழித்துவிடும். அதையால் அதிகமான ராணிகளை உண்டாக்க வேண்டுமானுல் அவற்றைத் தனித்தனி அறைகளில் ஒன்றுக்கு ஒன்று சம்பந்தம் இல்லாமல் வைக்க வேண்டும். உணவு கொண்டுவரும் வேலைக்கார ஈ நுழையும்படியும், ராணி ஈ வெளியில் போக முடியாதபடியும் அந்த அறை அமைய வேண்டும்.

திட்டத்தோடு வேலை நடக்கும் பண்ணைகளில் ஒவ்வோர் ராணியையும் தனித்தனியே தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இதற்காகக் கரித்தை வட்டமாகக் கத்தரித்து அதில் தனி நிறமும் இலக்கமும் அமைத்து நடுவில் துவாரம் செய்து ஈயின் முதுகில் ஒட்டிவிடுவார்கள்.

ராணி ஈயின் சிறகை கறுக்கிவிடுவார்கள்; அது தன் அறையை விட்டுக் கண்ட இடங்களுக்குப் போகாமல் இருப்பதற்காக இப்படிச் செய்கிறார்கள். ராணி ஈக்கள் அடிக்கடி கொட்டுவதில்லை. அதனுல் அதனிடம் பழகுவது சிறிது சுலபமானது. வேலைக்கார ஈயோ கடுமையானது. ஒரு முறை கொட்டிவிட்டால் அதன் கொடுக்கு உபயோகமற்றதாகி விடுகிறது; அது உடனே இறந்துவிடும்.

பூந்தாதைச் சேகரிக்கத் தேன் கூட்டின் வாயிலில் ஐந்து வலைகளை வைக்கிறார்கள். அவற்றின் வழியே வேலைக்கார ஈக்கள் செல்லும் போது கால்கள் உராய்வதனுல் அவற்றிலுள்ள பூந்தாது வலைகளில் தங்கிவிடுகிறது. இவ்வாறு தொகுத்ததைக் கொண்டு தேனீ விடுதிகளில் உள்ள ஈக்களுக்கு வரையறையுடன் உணவளிக்க முடிகிறது.

[உஸோவி - ஆல்பிரேட் ஹெச் ஸின்க்ஸ் எழுதிய கட்டுரையைத் தழுவியது.]

கமகப் பேச்சுக்கள்

'கொனஷ்டை'

'அவள்' எழுதுகிறாள்: "நாதா! ஒரு விண்ணப்பம் செய்கிறேன். அங்கே, நீங்கள் இருக்கிற இடத்திற்கே நானும் வந்திருந்து, சில காலம் கழித்தால் நலமாயிருக்கும். இச் சமயம் இந்த ஊர் வசிப்பதற்கு யோக்கியமில்லை. இங்கே சந்திரனுடைய கிரணங்கள் கூடத் தகிக்கின்றன." இவ்விதம் ஒரு ஸ்திரீயின் விஷயத்திற்குப் பங்கம் செய்யாமலே தன்னுடைய விரகதாபத்தைச் சாதுர்யமாய்த் தெரிவிக்கிறாள்.[1]

அதற்கு 'அவர்' பதில் எழுதுகிறார்: "ஹே ப்ரியே! நீ அவ்விதம் எண்ணக்கூடாது. சந்திரனுடைய கிரணமல்ல உன்னைத் தகிப்பது. உன்னைவிட்டுப் பிரிந்திருப்பதால் என்னுடைய ஹிருதயம் சதா கொதித்துக் கொண்டே இருக்கிறது. என் ஹிருதயத்திலே நீ எப்பொழுதும் வசிப்பதால், அத்தத்தியே உன்னைத் தவிக்கச் செய்கிறது" என்று.[2] அதாவது, 'நான் எப்பொழுதும் உன் ஞாபகமாகவே இருக்கிறேன். உன்னைக் காட்டிலும் அதிகமாகவே நான் கஷ்டப்படுகிறேன்' என்று அவர் சொல்லுகிறார்.

இவ்விதம் ஒரு புருஷனுடைய காதலின் காணிக்கை யதார்த்தத்தில் கிடைக்கக்கூடுமென்றால், அதற்காக, 'போனால் போகட்டும்' என்று தங்களுடைய கையிலிருந்து இரண்டொரு விரல்களை இழுப்பதற்கும் சில ஸ்திரீகள் இணங்கலாம். அது இல்லை என்றாலும், இம்மாதிரி ஒரு கடிதம் கிடைப்பதற்காகவே, சுவல்ப காலம் 'அவரை' விட்டுப் பிரிந்திருக்க 'அவள்' சம்மதிக்கலாம்.

ஆனால் ஒன்று: இவ்விதம் பதில் கிடைக்க வேண்டுமென்றால், முதலில், 'அவள்' எழுதிய மாதிரி எழுதக்கூடிய மனோபாவமும் இருக்க வேண்டும் அல்லவா? அது இல்லாமல், பதில் கிடைப்பதற்கு ஆசைப்படுவது மாத்திரம் போதாது. ஒருவேளை எழுதத் தெரியாமல் இருக்கலாம். முன் காலத்தில் ஸ்திரீகள் பெரும்பாலும் எழுதக் கற்றவர்கள் அல்ல. என்றாலும், எண்ணத்தைக் கமகத்துடன் வெளிப்படுத்தும் சாமர்த்தியம் இருந்ததாகத் தெரிகிறது. அது போதுமே, பிற்காலத்தில் அதை அறிய வரும் நம்முடைய கிருதஞ்ஞதையை வசப்படுத்த?

இம்மாதிரியான ஒரு ஸ்திரீ தன்னுடைய தோழியிடம் பிரலாபிக்கிறாள்: "பிரிந்திருக்கும் நாதனை ஸ்வப்னத்தில் காணும் யுவதியைப் பாக்கியசாலி என்றே சொல்லவேண்டும். (இதென்ன விபரீதம்! வியோக அவஸ்தையை விரும்புகிற மாதிரி பேசுகிறாளே என்று நாம் எண்ணுவோம். ஆனால் அவள் மேலும் சொல்லுகிறாள்:) அந்தப் பாக்கியம் எனக்கு இல்லையே! நாதன் என்னை விட்டுப் போகும்பொழுது பாழும் நித்திரையும் கட்டோடே போய்விடுகிறதே!"[3]

பக்தி ரசத்துடன் இவ்விதக் கமகப்பேச்சு கலந்திருப்பதைக் காணும்பொழுது நமக்கு இருமடங்கு ஆனந்தம் உண்டாகிறது: "ஹே கிருஷ்ணா! வெண்ணெயைத் திருடிவிட்டாய்! தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ள எங்கே ஓடி ஒளிந்துகொள்ளலாம் என்று அல்லவா ஆலோசிக்கிறாய்? என் மனத்தில் ஒளிந்துகொள்ளேன். அதைவிட இருள் சூழ்ந்த இடம் உனக்கு எங்கே கிடைக்கப் போகிறது?" என்று ஒருவர் கேட்கிறார். பக்தியின் விஷயம் இதைக்காட்டிலும் அழகாய் வெளிப்பட்டிருக்கிறதோ என்று நாம் சந்தேகிக்கலாம்.

மற்றொரு பக்தர், ஒரு கோப ஸ்திரீயின் வாயால் இந்தப் பேச்சை வரச் செய்கிறார்: "என் கைகளிலிருந்து நீ பலாத்காரமாய்த் தப்பித்துக்கொண்டு போய்விட்டாய் என்

---

1. விशतिरेषा मम जीवबन्धो
   तत्रैव नेया दिवसाः कियन्तः ।
   संप्रत्ययोग्यस्थितिरेष देशः
   करा हिमांशोरपि तापयन्ति ॥

2. नैतत् प्रिये चेतसि शङ्कनीयं
   करा हिमांशोरपि तापयन्ति ।
   वियोगतप्तं हृदयं मदीयं
   तत्र स्थिता त्वं परितापितासि ॥

3. स्वप्ने पश्यन्ति या नाथं
   धन्यास्ताः सखि योषितः ।
   अस्माकं तु गते नाथे
   गता निद्राथ वैरिणी ॥

4. क्षीरसारमपहृत्य शङ्कया
   स्वीकृतं यदि पलायनं त्वया ।
   मानसे मम नितान्तमानसे
   नन्दनन्दन कथं न लीयसे ॥

பதில் என்ன ஆச்சரியம், கிருஷ்ணா! ஆனால் என் ஹிருதயத்தை விட்டு நீ வெளிக்கிளம்பு! அப்பொழுது உன்னுடைய பௌருஷத்தை நான் ஒப்புக்கொள்கிறேன்." [5] ஒரு க்ஷண நேரம் அந்த யுவதியின் ஸ்தானத்தில் நாம் இருப்பதாக வைத்துக்கொண்டு எண்ணிப் பார்த்தால், அவளுடைய காதல், சோகம், பக்தி மூன்றும் சேர்ந்த இந்தக் கலவை நம்மைத் திணறச் செய்துவிடுகிறது.

அம்மாணியாடக் கற்றுக்கொண்டவர்கள் தங்கள் சாமர்த்தியத்தினால் மூன்று கோல்களுக்கு மேலே விழாமல் ஆகாயத்திலே கூத்தாடச் செய்யலாம். அதே மாதிரியில், வாக்சாதுரியத்தையும் ஒருவர் சம்பாதித்துவிடலாம். ஆனால் அந்தச் சாமர்த்தியம் வேறு. ஹிருதயத்தில் அநுபவித்து அந்த மனோபாவத்தை அழகாய் வெளிப்படுத்துவது வேறு.

கோதண்டபாணியான ரகுவீரர் அம்மாணி விளையாடுகிறவர் அல்ல. அவர் சீதையைக் குறித்துப் பிரலாபிக்கிறார்: "மூன்று நாட்களில் நான் கழுத்தில் ஒரு மாலையைக் கூட அணியமாட்டேன். 'இது என்னதிற்கு ஒன்று குறுக்கே வந்து எங்களைப் பிரியச் செய்கிற மாதிரி?' என்று எண்ணுவேன். அப்படி நினைத்தவனுக்கு இப்படி நேர்ந்திருக்கிறதே! இப்பொழுது சீதைக்கும் எனக்கும் மத்தியில் எத்தனை பர்வதங்கள், எத்தனை நதிகள்! ஐயோ!" என்று ஏங்குகிறார். [6]

அம்மாணியாடுவதிலும் மற்றக் காரியங்களில் மாதிரி, மனிதருக்கு மனிதர் வித்தியாசம் உண்டு. சிலருடைய சக்தியெல்லாம், மரப்பந்துகள் மூன்றை ஆகாயத்தில் சுற்ற வைப்பதில் மாத்திரமே. வேறு சிலர், ஒரு நாற்காலி, ஒரு பீங்கான் தட்டு, ஒரு தீப்பந்தம் இவற்றையும் சேர்த்துக் கீழே விழாமல் வானத்தில் சுழல வைக்கிறார்கள். நம்முடைய கவிகளிலும் இம்மாதிரியே. ஒரு பிச்சைக்காரன் சங்கு ஊதிக்கொண்டு போகிறான். அதைப் பார்க்கும் பதினாயிரம் ஜனங்களில் ஒன்பதினாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேர்கள் என்ன சொல்லுவார்கள்? 'ஒரு பிச்சைக்காரன் சங்கு ஊதிக்கொண்டு போகிறான்' என்று மாத்திரமே. பாக்கியுள்ள ஒருவனுக்கு மட்டும் இதைக் குறித்து ஒரு சாதுரியவாக்கியத்தைத் தொடுத்துவிடத் தெரிகிறது. "இந்தச் சங்கைப் பாருங்கள்! இது பிறந்த இடமோ சமுத்திரம். எல்லா ஐசுவரியத்திற்கும் இடமாய் இருப்பதால் ரத்நாகரம் என்ற பெயர் வாய்ந்த சமுத்திரம். ஆகையால் மகாலக்ஷ்மி இதனுடைய சொந்தச் சகோதரி. அப்படி இருக்க, இதனுடைய தொழிலோ யாசகத்திற்காக ரோதனம் செய்வது. எல்லாம் விதியின் செயல்." [7]

"இதில் என்ன ஆச்சரியம்?" என்று கேட்கிறார் மற்றொரு கவி. "போயும் போயும் ஒரு சங்கு படுகிற கஷ்டந்தானா உமக்குப் பிரமாதமாய்த் தோன்றுகிறது! பரமசிவனுடைய கதியை நினைத்தீரா? தேவாசுரர்கள் சமுத்திரத்தைக் கடைந்த பொழுது பரமசிவனும் அங்கே இருந்தார். மகாவிஷ்ணுவும் கூட நின்றார். இவருக்கு லக்ஷ்மி கிடைக்க, அவருக்கு விஷந்தானே கிடைத்தது? எல்லாருக்கும் மேலேதான், விதி என்பது ஒன்று இருக்கிறது" என்று தர்க்கிக்கிறார். [8]

"விதியை நிந்திப்பானேன்?" என்று அவருடைய சிநேகிதர் கேட்கிறார். சோப்பு, நெக்டை, கிரீம் முதலியவற்றைக் காணுத அந்த நாட்களில்கூட, இவர் உள்ளத்துக்குள்ளே ஓர் அலங்காரப் பிரியர். இவருடைய புத்திமதி இது: "யோக்கியதைக்கு உடை பிரதானம். நீங்கள் சற்றுக் கவலையுங்கள். சமுத்திர ராஜன் பார்த்தான். பீதாம்பரத்தை அணிந்துகொண்டு விஷ்ணு நின்றார். அவருக்குத் தன்னுடைய பெண் லக்ஷ்மியைக் கொடுத்தான். அடுத்தாற்போல் தோலை இழுத்துப் போர்த்துக்கொண்டு நின்றவருக்கு விஷத்தைக் கொடுத்தான். எவர்பேரில் குற்றம் என்று நாமே தெரிந்துகொள்ளவேண்டியது." [9]

---

5. हस्तमक्षिप्य यातोऽसि
बलात् कृष्ण किमद्भुतम् ।
हृदयाद्यदि निर्यासि
पौरुषं गणयामि ते ॥

6. हारो नारोपितः कण्ठे
मया विश्लेषभीरुणा ।
इदानीमन्तरे जाताः
पर्वताः सरितो द्रुमाः ॥

7. पिता रत्नाकरो यस्य लक्ष्म्यर्यस्य सहोदरी ।
शङ्खो रोदिति भिक्षार्थी फलं भाग्यानुसारतः ॥

8. दैवं फलति सर्वत्र
न विद्या न च पौरुषम् ।
समुद्रमन्थनाल्लेभे
हरिर्लक्ष्मीं हरो विषम् ॥

9. किं वाससा तत्र विचारणीयं
वासः प्रधानं खलु योग्यतायाः ।
पीतांबरं वीक्ष्य ददौ स्वकन्यां
चर्माम्बरं वीक्ष्य विषं समुद्रः ॥

இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு சிவ பக்தருக்கு, இம்மாதிரி நியாயம் பேசப் பார்ப்பது சுத்தமாய்ப் பிடிக்கவில்லை. தவிர, அவர் ஸ்திரீ மூலமாக மிகுந்த துக்கத்தை அநுபவித்தவர் போலும். "விஷம் லக்ஷ்மி, விஷம் லக்ஷ்மி என்று சுலபமாய்ப் பேசிவிடு கிறீர்களே! வாஸ்தவத்தில் எது விஷம் என்று நீங்கள் கண்டீர்களா? பலனைப் பார்த்து அல்லவா குணத்தைக் குறிப்பிட வேண்டும்? காலகூடத்தைச் சாப்பிட்டுவிட்டுப் பரமசிவன் விடாமல் கண் விழித்துக் கொண்டிருக்கிறார். மகாவிஷ்ணுவோ, லக்ஷ்மியைத்தொட்டுக்கொண்டிருக்கிறார் என்று தான் பிரஸ்தாபம். இருந்தாலும் திருப்பாற் கடலின்மேல் ஒரே நித்திரையாய் மயங்கிக் கிடக்கிறார். ஆகையால், வாஸ்தவத்தில், ஸ்திரீகள்தாம் நஞ்சு" என்று அவர் விளம்பரம் செய்கிறார்.[10]

இந்த ஸ்திரீ த்வேஷியின் தீர்ப்பைக் காளிதாஸர் ஒப்புக்கொள்ளவில்லை. அவர் சகல விஷயமும் தெரிந்தவர். சிருஷ்டியில் சரி பாதியை ஒரேயடியாக விஷமென்று பகுப்பதை ஒப்புக்கொள்ளுவாரா? அவரும் சிவ பக்தர். பரமசிவனுடன் பார்வதி வீற்றிருப்பதை மறந்துவிடமாட்டார். பெயரே காளிதாஸர். அவருடைய எளிய நடையில் நிதானமாகச் சொல்லுகிறார்: "ஒரு ஸாரம், ஓர் இனிமை என்பது இல்லாமற் போனாலும், பெயருக்கு ஸம்ஸாரம் என்று சொல்லப்படும் இந்த வாழ்க்கையில் ஸாரத்தின் ஓர் உருவம் என்று சொல்ல வேண்டியது ஸ்திரீயை. இதை மனத்தில் வைத்துக் கொண்டு அல்லவோ, பரமசிவன் தன்னுடைய தேகத்தில் பாதியைப் பார்வதிக்கு இருப்பிடமாகக் கொடுத்துவிட்டு, அர்த்த நாரீசுவரராக விளங்குகிறார்!"[11]

"சபாஷ்!" என்கிறார் மற்றொரு கவி. காளிதாஸன் சொல்லுவதில் ஏதாவது தப்பு இருக்குமா? "ஆனால் இதில் ஒரு வேடிக்கையைப் பாருங்கள். வில்லும் கையுமாக எத்தனையோ சூரர்கள் இருக்கிறார்கள். ஓர் அம்பை விட்டு எந்த வஸ்துவையும் இரண்டாய்ப் பிளந்து தள்ளக்கூடியவர்கள். ஆனால் மன்மதன் ஒருவனுக்கே இந்தச் சக்தி இருக்கிறது: ஓர் அம்பை எய்து இருவரை ஒன்றாக்கிவிடுகிறான், பாருங்கள்!"[12]

இவ்வளவு கமகத்துடன் பேசுகிறவருக்கு வெகுமானமாக, மன்மதன் அவர் விஷயத்தில் இரட்டிப்புச் சிரத்தை வைத்து, பொருத்தமான குறிப்பைப் பொறுக்கி அம்பை எய்திருப்பான் என்று நம்புவோம்.

10. हालाहलो नैव विषं विषं रमा
जनाः परं व्यत्ययमत्र मन्वते ।
निपीय जागर्ति सुखेन तं शिवः
स्पृशन्निमां मुह्यति निद्रया हरिः ॥

11. असारभूते संसारे
सारभूता नितंबिनी ।
इति संचिन्त्य वै शंभु-
रर्धांङ्गे पार्वतीं दधौ ॥

12. एकं वस्तु द्विधा कर्तुं
बहवः सन्ति धन्विनः ।
धन्वी स मार एवैको
द्वयोरैक्यं करोति यः ॥

பித்தலாட்டம்

புதிதாக யாராவது சென்னைக்கு வந்து பிராட்வே கடைகளைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தால், அவருக்கு முன்னால் ஒரு நாடகம் நடக்கும். ஒருவன் தங்கக் கைக்கெடியாரம் போலத் தோற்றும் ஒன்றையோ, தங்கப் பொத்தானையோ வைத்துக்கொண்டு விலை கூறிக்கொண்டிருப்பான். வேறு ஒருவன் வருவான். அவனிடம் விலை பேசுவதைப்போல நடிப்பான். பேரம் நடைபெறும். விற்பனை செய்பவன் திடீரென்று புதிய மனிதரிடம், "பாருங்க ஐயா, இந்த மனிசன் ஆசையை. அசல் தங்கம். ஒரு ரூபாய்க்குக் கேக்கறான்" என்று சொல்லுவான். அவருக்குக் கொஞ்சம் சபலம் தட்டும். அவனும் சாதுர்யமாகப் பேசி ஒன்றேகால் ரூபாய்க்கு அந்தச் சங்கிலியோடு கூடிய பொத்தானை அவர் தலையில் கட்டிவிட்டுப் போய்விடுவான். அவன் போன மறுநிமிஷமே அது தங்கமல்ல என்று தெரிந்துவிடும்.

"என்ன **பித்தலாட்டம்**! பட்டணம் **பித்தலாட்டம்**" என்ற அவர் தம் கிராமத்துக்குப் போய் எல்லோரிடமும் சொல்லிச் சொல்லிக் குமுறுவார்.

பித்தலாட்டம் என்ற வார்த்தை இப்போது எமாற்றுகிற காரியங்களுக்கெல்லாம் பொதுவாக வழங்குகிறது. முதல் முதலில் பித்தளையைத் தங்கமாகக் காட்டி மோசம் செய்யும் வஞ்சகச் செயலுக்குத் தான் அந்தப் பேர் வந்திருக்கவேண்டும். பித்தளையை ஆடகம் போலக் காட்டும் வஞ்சனையைப் 'பித்தளையாடகம்' என்று சொல்ல, அது மருவிப் பித்தலாட்டம் என்று வந்துவிட்டது. ஆடகம் என்பது தங்கத்துக்குப் பெயர்.

மூன்று பார்வைகள்

பி. வி. சுப்பிரமணியன்

1. ஸ்ரீமதி கமலா ராமமூர்த்தி

பிரபஞ்சம் அது? உள்ளத்தை உருக்கும் அந்த அற்புத ராகத்துக்கு மோஹனம் என்று பெயர் வைக்காமல், வேறு எதற்கோ போய் அந்தப் பெயரை என்னத்திற்காக வைத்திருக்கிறார்கள் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. தென்றல் தழுவும் மாங்கனிலிருந்து வர்ணப்புஷ்பங்கள் உதிர்வதைப்போல் சாரீரத்திலிருந்து சப்தத்துளிகள் உதிர்ந்து உள்ளத்தை ரமிக்கச் செய்கின்றன. மாலையின் மயக்கத்தில் கலகல என்று பாடிச் செல்லும் பட்சி ஜாலங்களின் கீதத்தைப்போல், அவரி அமிர்ததாரையாகப் பொழிகிறதைக் கண்டு எல்லரும் அவர் முகத்தையே ஆடாமல் அசையாமல் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். எனக்குத்தான் அப்படித் தோன்றுகிறதா? என் அன்பின் கனிவால் - என் கணவர் பாடுகிறார் என்ற ஆசை தோய்ந்த பெருமிதத்தினால் - அவருடைய கச்சேரி நன்றாக இருக்கிறது என்று நினைக்கிறேனா?

அப்படியானால் அவர்கள் எல்லோரும் என் கல்லாய்ச் சமைந்து போய் உட்கார்ந்திருக்கிறார்கள்? அதை நினைக்கிறபோதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. கல்ல வேளை! அவரைக் கல்யாணம் செய்துகொண்டபோது நான் என்ன என்ன எல்லாம் எண்ணினேன்! நாலுபேருக்குப் பாட்டுச் சொல்லிக்கொடுத்துப் பிழைக்கிறவரோடு சேர்ந்து நானும் காலத்தை ஓட்டித் தொலையவேண்டும் என்று தயர நினைவுதான் அப்போது எனக்குத் தோன்றிற்று. அது தப்பான அபிப்பிராயத்தான். நான் அதிருஷ்டம் செய்திருக்கிறேன் என்பதில் சந்தேகம் இல்லை.

ஒவ்வொரு சமயத்தில் அவர் பாடுகிறபொழுது திடீர் என்று புன்னகை அவர் முகத்தில் விரிந்து மலர்கிறது. என்ன அவ்வளவு சந்தோஷம் என்று கேட்கிறேன்! அடுத்தாற்போல் உட்கார்ந்து அவருடைய தம்பியே பிடில் வாசிக்கிறார் என்ற அத்தனை மகிழ்ச்சி? என்னதான் சொன்னாலும் அவர் பாட்டு அவர் பாட்டுத்தான். எப்படியும் அது தூக்கித்தான் நிற்கிறது. அவருடைய சகோதரர் என்பதனால் உண்மையை நான் இல்லை என்று சொல்ல முடியுமா? அதுவும் எனக்கு நானே எப்படி எமாற்றிக்கொள்ள முடியும்? பிடில் வாசிப்பவர் கொஞ்சம் பாடகருடன் ஒத்து வாசிக்கப் பழகவேண்டும். அது இல்லாவிட்டால் என்ன பிரயோஜனம்?

கல்ல வேளையாகப் பேரயிற்று! பக்க வாத்தியம் அப்படியா வாசிக்கிறது? பிடில்காரர் தாளத்தையே கவனிக்கவேண்டியதில்லை என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்போல இருக்கிறது. பாட்டைத் தொடங்குவதைப்போல் அவர் நைஸாகத் தம்பிக்கு எடுத்துத் தந்திராவிட்டால், அவருடைய தம்பியின் பிடில் வாசிப்பைப்பற்றிச் சபையில் இருக்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்? "பாடகர் நன்றாகத்தான் பாடுகிறார். அவருடைய தம்பி

பிடில் வரிக்கிறதுதான் அவ்வளவு ரஸிக்கும்படி இல்லை" என்று எண்ணமாட்டார்களா?

வைதேகி என்ன எண்ணுகிறாள்? அவளுடைய புருஷன் பிடில் வரிப்பதைப்பற்றி அவள் என்ன நினைக்கிறாள் என்பதைக் கேட்கவேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது. ஒரு வேளை அவர் சரியாக வரிக்கவில்லை என்பதனால் அவளுக்கு வருத்தமாக இருக்கலாம். அப்படி இருக்கும்போது நான் வேறு கேட்டு வைத்தால் அவள் என்ன நினைத்துக்கொள்ளுவாளோ? அப்படியும் அவர் ஒன்றும் மோசமில்லை. அவர் பாட்டுக்கு யார் பக்கவாத்தியம் வரித்தாலும் கச்சேரி ரொம்ப நன்றாகத்தான் அமைகிறது!

அது யாராது - வைதேகிக்குப் பக்கத்தில்? அவள் என்னத்திற்காக என் கணவரை அப்படி விழுங்கிவிடுவதைப்போலப் பார்க்கிறாள்? வேறு ஒரு புருஷனை அப்படி எல்லாம் பார்க்கலாமா என்று அவரவர்களுக்காகத் தெரியவேண்டும். அவளுக்காகவாவது இனிமேல் அவரைப் பாட வேண்டாம் என்று சொல்லி விடலாம் போல இருக்கிறது. அழகுதான்!

2. வைதேகி வேங்கடராமன்

பைரவி ராகத்தை வரித்தால் பிடிலில் வரிக்க வேண்டும்; அப்படி இல்லாவிட்டால் சிவ சிவா என்று கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். அதன் மூழுக் கம்பீரமும் அந்த வாத்தியத்தில் கேட்பதைப்போல வேறு எதிலும் கேட்க முடிகிறதில்லை. ராகங்களுக்குத் தனித்தனி வடிவங்கள் உண்டு என்று என் கணவர் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். அதை அவருடைய கையாலேயே இன்றைக்குத்தான் சிருஷ்டிப்பதைப் பார்க்கிறேன். பைரவி தேவதை புனிதாபரணங்கள் பூண்டு அழகுபெற நடந்து வருவதைப் போன்ற பிரமை அல்லவா உண்டாகிறது! மற்றவர்கள் அதைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று கேட்கலாமா?

ஒருவேளை அவர்கள் எல்லோரும், "அடியம்மா! உன் அகத்துக்காரர் பிடில் வாசிக்கிறார் என்று பிரமாதப் பெருமைப்படுகிறாயாக்கும்!" என்று கேலி செய்தால் என்ன செய்கிறது? எனக்கு என்னவோ மாதிரி இருக்கிறதடி அம்மா. நான் அவர்களை எல்லாம் எதுவும் கேட்கப்போகிறதில்லை. எதற்காகக் கேட்கவேண்டும்? மகுடியைக் கேட்ட பாம்புபோல் சபையேதான் அசைவற்று உட்கார்ந்து கேட்கிறதே! சித்பி மாதிரி, அப்படிச் சப்த அலைகளிலிருந்து ராக உருவத்தைச் செதுக்கி எடுக்க மகத்தான கைத்திறன் வேண்டும்.

எனக்குக்கூட ஞாபகம் வருகிறது. அன்று ஒரு நாள் அவர் பிடில் வாசித்துக்கொண்டிருந்தார். அவருடைய சிநேகிதர், "போய்வாட்டுமா, வெங்கிட்டு?" என்று சொல்லிக்கொண்டு போன பிறகு நான் போய் எதிரில் நின்றேன். வாசித்துக் கொண்டிருந்த பிடிலை அவர் நிறுத்தவில்லை. தொடர்ந்து ஆனந்தமாக வாசித்தார். 'ஹோ' என்று வீசியடிக்கும் புயலின் கோர ஸ்பர்சமும், ஆழத்தை மறைத்துச் செல்லும் பயங்கரச் சுழல்களும் என்மீது விழுந்து மோதின.

"வைதேகி" என்று அவர் கூப்பிட்ட பிறகுதான் என் புதிய அநுபவத்திலிருந்து விழித்துக் கொண்டு, "என்?" என்று கேட்டேன்.

"என்ன, அப்படியே நின்றுவிட்டாய்! எப்படி இருக்கிறது நீ கேட்டது?" என்றார்.

ஊழிக்காலப் பிரளயத்தைப் போன்ற நீர்வீழ்ச்சியின் நடுவில், உயிர்க்காட்டிலும் அருமையான ஏதோ ஒன்றைப் போட்டுவிட்டுத் தேடி அலையும் மனிதனின் தீன ஓலம் கேட்கிறது. தீரன் வ. வே. சு. ஐயரின் நினைவு வருகிறது. அவருடைய பெண்ணின் தயர முடிவு தோன்றுகிறது" என்று சொன்னேன்.

அவர் முகத்தில் சிரிப்பின் ரேகை தென்பட்டது. "அப்படியாஞல் என் எண்ணம் நிறைவேறிவிட்டது. அதையேதான் நானும் என் மனத்தில் வைத்துக்கொண்டு வாசித்தேன்" என்று கூறினர்.

அதைப் போன்ற அநுபவம் அவருடைய அண்ணன் பாடும்போதுகூட எனக்கு உண்டான தில்லை. அவரே அடிக்கடி, "அண்ணு ராம மூர்த்தி பாடுகிறமாதிரி வாசிக்கவேண்டும்" என்று சொல்வார். எனக்கு என்னவோ அது சரி என்று தோன்றவில்லை. தம்பி வாசிக்கிறதைப் போல அவருடைய தமையன் பாடினால் போதும். அதோ பைரவியில் பிடிலின் உயிர்வுதான் என் காதில் ஒலிக்கிறது.

என் கணவருடைய தமையன் ஆயிற்றே என்று, நான் என்னிடமிருந்தே உண்மைக்குத் திரை போட முடியுமா? அவர் பிடில் எப்படியும் பாட்டைவிட ஒரு பிடி உயர்வகத்தான் இருக்

கிறது. பாடகர் எவ்வளவுதான் ஏழு அடுக்கு மாளிகைகள் கட்டினால் என்ன ? செங்கல் மேல் செங்கலாக அவர் வைத்துக்கொண்டே செல்லும் போது, அதற்குச் சிமிண்ட் பூசி நிறைவுறச் செய்வது பக்கவாத்தியந்தானே !

3. ஸ்ரீ கணபதிராம சாஸ்திரிகள்

அப்-பா! ஒரு வழியாக மலை ஏறி வந்துவிட்டேன். என் ஆசை பூர்த்தி அடைந்துவிட்டது. என் கனவு பலித்துவிட்டது. என்னுடைய வாழ்க்கையில் சிறிது தூரம் மூன்று செல்லுவதற்குக்கூட எவ்வளவு சிரமப்பட்டிருக்கிறேன், தெரியுமா? ஒர் அடி ஏறினால் மூன்று அடி சறுக்கி விழுந்திருக்கிறேன். என் சுற்றத்தவர்களாம்! நான் அடித்துத் தலை குப்புற விழுவதைப் பார்க்க அவர்களுக்குத்தான் எவ்வளவு ஆனந்தம்! அவர்களுக்கு எல்லாம் இப்போது ரொம்பத் தக்க மாக இருக்கும். என் குழந்தைகள் செய்கிற கச்சேரியை அவர்கள் பார்க்காமல் இருந்து விடுவதே நல்லது. பாடுகிறதை அவர்கள் கேட்காமல் இருக்கிறவரையில் க்ஷேமம். எல்லாவற்றையும் விடத் திருஷ்டிதோஷம் மகா பொல்லாதது. எங்கேயாவது என் குழந்தைகள் சௌக்கியமாக இருக்கட்டும்," பகவானே. என் தர்ப்பாக்கிய நினைவுகூட அவர்களுக்கு வேண்டாம்.

பைரவி ராகத்தை நானும் கிட்டத்தட்ட ஐம்பது வருஷமாகக் கேட்டு வந்திருக்கிறேன். இவர்கள் பாடுவதைப்போல் கவர்ச்சி தோன்ற யாரும் பாடியதில்லை. ராமமூர்த்தியின் குரலில் இப்பொழுது ஒருவிதக் கணிப்பும், ஜிலுஜிலுப்பும் ஏற்பட்டுவருகின்றன. அவன் பாடுகிற பொழுது என்னுடைய கடந்த காட்சிகளின் கவ்ட நினைவும், எதிர்கால உலகமும் மறைந்துவிடுகின்றன. நிர்மலமான வானவெளியில் சிறகடித்துப் பறந்து திரியும் அற்புத நிகழ்கால அநுபவம் தோன்றுகிறது. மிகப் பெரிய வித்துவான்கள் என்று சொல்லிக்கொண்டு திரிகிறவர்கள்கூடப் பைரவியைப் பாட ஆரம்பித்துவிட்டால், "ஆமாம், எல்லாம் ஒரு மாதிரிதான் இருக்கிறது. அவர் மட்டும் என்ன விசேஷமாக அதில் பாடிவிட்டார்?" என்ற அலுப்புத்தான் தட்டுகிறது. ஆனால் ராமமூர்த்தியின் பாட்டில் அதைக் காணவில்லை. எல்லாம் புதிது புதிதாக இருக்கிறது.

கர்க்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்கிற கதையாக எனக்கு ஒரு வேளை அதை மதிப்பிடுவதற்கு உரிமை கிடையாதோ, என்னவோ. எதற்காக அதனுடைய தாரதம்யங்களைப்பற்றி ஆலோசனை செய்கிறேன்? எதாவது பத்திரிகைகளுக்கு விமரிசனம் எழுதுகிறேனா? அவனிடம் இருக்கும் குற்றம் குறைகளைக் கண்டுபிடித்தால் அவனிடமே சொல்லித் திருத்தலாம் அல்லவா? அதற்கு அவன் இடம் வைத்துக்கொண்டால்தானே? கற்பனை என்கிறது அவன் பாட்டில்தான் முதல் முதலாகத் தலை நீட்டுவதைப் பார்க்கிறேன். மற்றவர்கள் எல்லாரும் கீறல் விழுந்த கிராமபோன் ரிகார்டு மாதிரி, பாடினதையே திருப்பித் திருப்பிப் பாடிக் கழுத்தை அறுத்துவிடுகிறார்கள்.

ஆஹா! வேங்கடராமன் அந்த இடத்தில் எவ்வளவு நன்றாக வரைத்தவிட்டான்! ரொம்பக் கஷ்டமான பிடியை மிகவும் அநாயாசமாகப் பிடித்துக் காட்டிவிட்டான். ஒரு பிடி என்ன? பைரவி ராகம் முழுவதுமே அபூர்வப் பிடிகளைச் சாதகம் செய்வதைப்போல் சாதகம் செய்தால்தான் சரியாக வரிக்க வருகிறது. வாத்தியத்தில் வாசிக்க அதைப் போன்ற கஷ்ட ராகம் வேறு இல்லை. அதை எவ்வளவு நன்றாக ஆழ்ந்த ஞானத்தின் அற்புத சோபையும் மேதையின் லாகவ வனப்பும் தோன்றப் பிடிலில் வாசிக்கிறான். ராமமூர்த்தி எவ்வளவு அழகாகப் பாடுகிறானே, அவ்வளவு அழகாக வேங்கடராமன் பிடில் வாசிக்கிறான். அவர்கள் இருவருக்குள் ஏற்றத் தாழ்வு என்பதே இல்லை. அவர்கள் இருவர் சங்கீதத்திலும் ஒரே ஹிருதயபாவம் தெரிகிறது. அவர்கள் உணர்ச்சிகள் வித்தியாசமின்றிப் பின்னி நிற்பதை என் மனத்தில் உணருகிறேன். அவர்கள் இரண்டு பேர் அல்ல; ஒருவரே என் ஜன்ம பொருத்தவரையில்.

ஏமாற்றமும் எண்ணச் சிதைவும்

வி. ஜி. ஸ்ரீநிவாஸன்

ஒரு பச்சைக் கிளி, அதனுடைய மூக்கு செக்கச் செவேலென்று, செதுக்கி விட்ட பவளத்துணுக்கு மெருகு கொடுக்கப்பட்டது போலப் பொலிவுற்று விளங்கியது.

கிளி மரக்கிளையில் அமர்ந்திருந்தது. கிளியின் உடற்பச்சை மரத்தின் இலைப் பச்சையில் ஐக்யமாகிவிட்டது. பச்சையின் நடுவே தனித்துத் தெளிவாகத் தெரிவது கிளியின் மூக்குச் சிவப்பே! கிளி ஏதோ எண்ணமிட்ட வண்ணம் இருந்திருக்க வேண்டும். இல்லாவிடில், ஆடாமல அசையாமல் 'சுகப் பிரம்ம ரிஷி' போல அமர்ந்திருப்பானேன்? ஒருவேளை, தனக்குப் பிடித்த உணவு தன்னிடம் பறந்து வந்துவிடும் என்ற எண்ணமோ?

பச்சையின் நடுவே தனித்துத் துலங்கிய சிவப்பு ஒரு பலாச மலர் போலத்தான் காட்சி கொடுத்திருக்கவேண்டும், அந்த வண்டுக்கு. மலருக்கு மலர் பறந்து சென்று, அவற்றின் புகழ்பாடி, தேனுண்டு மயங்கித் திரியும் அந்த வண்டு, கிளியின் சிவந்த மூக்கைப்பலாசமலராகக்கொண்டதில் என்ன பிழை இருக்கிறது? 'நல்ல மலர், பெரிய மலர், நிறையத் தேன் உண்ணலாம்' என்று எண்ணி, தான் அனுமானித்த அந்த மலரை நோக்கிப் பறந்துகொண்டிருந்தது வண்டு!

நாவற்பழம் பருத்துப் பழுத்திருந்தால் எப்படி இருக்கும்? அப்படித்தான் தோற்றியது அந்தக் கார் வண்டும். அது சிற கடித்துப் பறந்து வந்த அழகையும், மேனிக் கறுப்பையும் உன்னும்போது நாவற்பழத்திற்குத்தான் சிறகு முளைத்து விட்டதோ என்று தோற்றும். அப்படித்தான் அந்தக் கிளி நினைத்தது.

வண்டு நெருங்கியது பலாச மலரிடம். நெருங்கி வந்த நாவற் பழத்தை உண்ண அலகைப் பிளந்தது கிளியும். ஆகா! இரண்டிற்கும் எப்படிப்பட்ட ஏமாற்றம்!

கிளியின் மூக்கைப் பலாச மலரெனக் கொண்ட வண்டு ஏமாந்தது. கார் வண்டை நாவற் பழம் என்று நினைந்த பசுங்கிளியும் சிந்தை அயர்ந்தது.

* * *

மாலை நேரம். செங்கதிர்த் தேவனின் மாணிக்கச் செழுங் கதிர்கள் விண்ணை நோக்கிச் சாய்ந்துகொண்டிருந்தன.

கொங்கு தேர்ந்துகொண்டிருந்த அந்த வண்டு தனது 'கடையைக் கட்டி' யிருக்கலாம்! இருந்தாலும், ஆசை யாரை விட்டது? அந்தச் செந்தாமரை மலரைக் கண்டுவிட்டது.

ஏராளமான தேன்; சுவை நிரம்பிய தேன். பருகப் பருக ஆவல் நீரவில்லை. மெல்ல மெல்ல அந்தச் செம்மலர், இதழ் இதழாகக் குவித்து, கதிரவனுக்கு அந்தி வணக்கம் செலுத்திக்கொண்டிருப்பதைத் தேராது கணமூடித்தனமாக இருந்து விட்டது வண்டு. காலம் கடந்ததுகூடத் தெரியவில்லை. அவ்வளவு ஸ்வாரஸ்யம் குடிப்பதிலே! பூவின் இதழ்கள் தன்னை நெருக்கவும் விழித்துக்கொண்டது குடி வெறியிலிருந்து. எங்கும் இருள். மலர் மூடிவிட்டது. வண்டு சிறைப்பட்டது.

இருந்தாலும் என்ன? நாளை விடியாமலேயா போய்விடப் போகிறது? நாளை என்பதும் உண்டு; அதற்கு விடிவும் உண்டு. காலைக் கதிரவனின் கனகக் கதிர்கள் தீண்டிய மாத்திரத்திலேயே, தாமரை இதழ் விரிக்கும், மலர்ச்சி பெறும், மகிழ்வுடன் கதிரவனை வணங்கி வரவேற்கும். அப்போது தப்பிப் போய்விடலாமே! இப்படி நினைத்து அந்தச் சிறு வண்டு மனத்தைத் தேற்றிக்கொண்டது.

இதோ, சற்று நேரத்தில் பூலோகம் ஸ்வர்ண லோகமாகிவிடும்! வெண் சாம்பல் போன்று முன்னெளி மட்டும் படர்ந்திருக்கிறது. சற்று நேரத்தில் விடுதலை கிட்டும் அந்த வண்டுக்கு.

அப்படித்தான் வண்டு நினைத்தது. ஆனால், அப்பொழுது ஒரு மதம் பிடித்த யானை, அந்தத் தாமரைக் குளத்திற்குள் வேகமாக இறங்கியது. மூரட்டுத்தனமாக நீரைக் குடைந்து கலக்கியது. தாமரை மலர்களை, இலையுடனும் வேருடனும் கனைந்து கரைமீது எறிந்தது.

அப்படித் தரை மேல் எறிந்த மலர்களுள் ஒன்றில்தான், பாவம், சிறு வண்டு சிறைப்பட்டுக் கிடந்தது! அதற்கு விடுதலை.....?

[இவை] வடமொழிப் பாக்களின் கருத்தின் விரிவு. இப்படிக் கவிதைச் சுவையும், கற்பனைச் செறிவும், சொல்லழகும், பொருளழகும் கொண்ட பாக்கள் வடமொழியில் பல உள்ளன.]

வீடு கதைகள்

1

முள்ளு முள்ளுக்குள்ளே
மூந்திரித் தோப்புக்குள்ளே
வைக்கோற் புல்லுக்குள்ளே
வயிரமணி கண்டெடுத்தேன்.

2

முத்துக் கிருஷ்ணனைக் கூப்பிடுங்கள்
முதுகு நரம்பை உரியுங்கள்
பச்சை வெண்ணெயைத் தடவுங்கள்
பாங்கான உள்ளில் அடையுங்கள்.

3

சன்னல் பின்னல் கயிறு
சாதி லிங்கக் கயிறு
எண்ணெய் படாத கயிறு
இது என்ன ?

4

ஆழக் குழி வெட்டி அதிலே ஒரு
முட்டையிட்டு
அண்ணாந்து பார்த்தால்
தொண்ணூறு முட்டை.

5

காலிருக்கிறது நடக்க முடியவில்லை
தூம் தளக்கா தும்
கையிருக்கிறது சாப்பிட முடியவில்லை
தூம் தளக்கா தும்
வாயிருக்கிறது பேச முடியவில்லை
தூம் தளக்கா தும்
உடம்பு இருக்கிறது மூச்சு விடவில்லை
தூம் தளக்கா தும்!

6

நாலு மூலைப் பெட்டி
நந்த வனப் பெட்டி
ஓடும் குதிரைக் குட்டி.

7

சேலம் சிவப்பு
செவ்வாய்ப்பேட்டை கறுப்பு
உடைத்தால் பருப்பு
தின்றால் கசப்பு.

8

அக்கரைக்கும் இக்கரைக்கும்
கால் நாட்டி
அழகான் சங்கிலி மேல் பூட்டி
வெள்ளிச் சங்கிலி வடம்பிடித்து
வீச நாழிகையில் தேரோட்டி.

9

சுற்றிச்சுற்றி வருமாம் புடலம்பூ
சூதாடி வருமாம் புடலம்பூ
கச்சேரி செல்லுமாம் புடலம்பூ
கரணம் அடிக்குமாம் புடலம்பூ
டங்கென்று பேசுமாம் புடலம்பூ
காய்கறி அல்லவாம் புடலம்பூ.

10

மொட்டை மாடு உட்கார்ந்திருக்குது
மூக்கணுங் கயிறு மேய்ந்து வருகுது.

11

எங்கள் தம்பி சூள்ளத் தம்பி
பந்த டிப்பான் பயற டிப்பான்
நூறு பேரை நுறுங் கடிப்பான்.

12

ஒரு பொரி பொரித்தால்
ஊரெல்லாம் பொரி.

13

கறுப்புச் சட்டைக்காரன்
காவலுக்குக் கெட்டிக்காரன்.

[கி. வா. ஜ. சேகரித்தவை.]

விடை - 50-ஆம் பக்கம் பார்க்க.

பலூன் காரன்

கி.ரா.

அவனுடைய மனம் கனவும் அல்லாத, நினைவும் அல்லாத ஒரு விசித்திர நிலையில் இருந்தது.

உண்மையில் கனவுக்கும் நினைவுக்கும் என்ன வித்தியாசம்? ஒரு யுகத்தில் நிகழக் கூடிய சம்பவங்களை ஒரு விநாடி கனவில் அநுபவிக்கிறோம். ஒருவர் ஆயுளில் நடப் பதெல்லாம் இந்த உலகத்தின் ஆயுட் காலத்தில் ஒரு கண நேரந்தானே! இதில் மெய் என்பதும் பொய் என்பதும் கிடை யாது.

இந்தப் பதினைந்து நாளும் பதினைந்து யுகமாகத் தோன்றியிருக்கிறது. இப்படி ஒரு வாழ்க்கை, சுத்த சூன்யமான அநுபவம் அவனுக்குக் கிட்டப் போகிறது என்று அவன் எண்ணிப் பார்த்திருக்கிறானா?

இல்லை; இந்தப் பதி னைந்து நாட்களும், அவன் சம்பந்தப்பட்ட வரையில், நடக்கவே இல்லை. அப்படியே நின்றிருக்கின்றன. அப் பொழுது, ஒன்றுமே நடக்கவில்லையா?...ஒன் றுமே நடக்கவில்லையானால் அவன் இப்படி உட் கார்ந்திருப்பானேன்?

இல்லை. பெரிய விப ரீதம் நடந்திருக்கிறது. அவன் மனத்திற்கு அது தெரிகிறது. மனத்தி டையே பெரிய பளவு. தாங்க முடியாத சுமை. அவனுடைய வாழ்வின் ஒளி போய்விட்டது. அவனுடைய சந்தோ ஷம் மறைந்துவிட்டது. ஓர் உயிர், ஒரு சின்னஞ் சிறு உயிர் போய்விட்டதனால் அவனுடைய சந்தோ ஷம் பாதிக்கப்படுவானேன்? அந்தச் சந்தோஷம் எவ்வளவு அற்பமானது. அதை எண்ணி இப்படி ஏங்குவானேன்?

அவன் ஏங்குவது தான் இழந்துவிட்ட சந்தோஷத்தைக் குறித்து அல்ல. ஏனெ னில், சின்னஞ்சிறு குழந்தை பெரியதாய் வளர்ந்துவிட்டால் அதைக்குறித்து யாரா வது வருந்துகிறார்களா? பின், சாவைக் குறித்தா துக்கம்?

நம் கண் எதிரே எத்தனையோ பேர் தினசரி இறந்து மடிகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் துக்கம் கொண்டாடும் மனிதன் எங்கு இருக் கிறான்?

அவன் ஏங்கி வருந் தியது சாவைக் குறித்து அல்ல; வாழ்வைக் குறித்துத்தான். அந்தச் சின்னஞ்சிறு குழந்தை இறந்துவிட்ட வாழ் வைக் குறித்துத்தான்... அப்படியே இருந்தா லும், அந்தக் குழந்தை இறந்துவிட்ட வாழ்க் கை உன்னதமானது என்று எப்படித் தெரி யும்? அதுவும் வளர்ந்து பெரியதாகி, இப்படியே அவனைப் போல் ஒரு குழந்தைக்குத் தந்தை யாகி, அதை இறந்து விட்டு, அவனைப் போ லவே தவிக்குமோ என் னவோ, யார் கண்டது?

ஜகந்நாதனின் மனம் குழம்பியது.

பதினைந்து நாளாக அவன் நடைப் பிண மாகவே இருக்கிறான். ஆகாரம் உண்டானே

இல்லையோ தெரியாது. சரீரத்தின் உணர்ச்சிகளே அவனுக்குச் சிறிதும் இல்லை. தனியான மானஸ உலகில் சஞ்சரித்தான்.

அந்த உலகத்தின் சட்டதிட்டங்களுக்கு ஒரு வரம்பும் இல்லை. அவனுடைய செயல் இன்றியே, எண்ண அலைகளின் மோதல்களினூல் மேலும் மேலும் இழுத்துச் செல்லப்பட்டான்.

அதே ஜன்னலுக்கு அருகில், அதே நாற்காலியில், பதினேந்து இரவுகளும் பதினேந்து பகல்களும் அப்படியே உட்கார்ந்திருந்தான்.

பதினேந்து தினங்கள்! அவனுடைய உயிரான ராஜா, அவனுடைய உயிருக்கு உயிர், அவனை விட்டுப் பிரிந்து பதினேந்து தினங்களாகிவிட்டன.

உண்மையில் ராஜா அவனை விட்டுப் பிரிந்துவிட்டானு? இல்லவே இல்லை. இந்தப் பதினேந்து தினங்களும் அவனுக்கு அருகிலேயே, மிக அருகிலேயேதான் இருந்திருக்கிறான். ஒரு விநாடிகூட அவனுடைய நினைப்பின்றிக் கழியவில்லையே? பிரிந்துவிட்டதாக எப்படிச் சொல்ல முடியும்?

எதைப் பார்த்தாலும் அதில் ராஜாவின் உருவந்தான் தெரிகிறது. யாரைப் பார்த்தாலும் அவனுடைய நினைவுதான் மனத்தில் எழுகிறது.

சாரதா அவனை வந்து சாப்பிடும்படி கெஞ்சினாள். அவளுடைய வீங்கிய முகத்தில் என்ன கண்டான்? ராஜா. ஒளியற்றுச் சிவந்த அவள் விழிகள் அவனுக்கு எதை நினைப்பூட்டின? ராஜாவின் கொஞ்சும் கிளிமுகத்தைத்தான்.

இன்னும் யார் யாரோ, உறவினர், நண்பர்கள் வந்தார்கள், அவனுக்குச் சமாதானம் சொல்ல. அவர்கள் யாரும் வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. ஆனாலும், அவர்களுடைய சலனமற்ற, கவிழ்ந்த முகங்கள் அந்த ஒரே நினைவைத்தான் கூட்டிக் காட்டின.

ராஜா!

அந்த ஒரே நினைவு; ஒரே சிந்தனை. அவனுடைய ஜீவன் முழுவதும், அந்த நினைவுதான் வியாபித்திருந்தது. நிஜத்தில் நடப்பதைவிட நினைவில் நடப்பதுதானே உண்மை?

"தா - ர - ல - ல ல - தா-ர-ல-ல-தா—"

தூரத்திலிருந்து கேட்ட அந்தச் சத்தம் அவன் உடலைக் குலுக்கிற்று. அவனுடைய சிந்தனையின் கடிவாளத்தைச் சுண்டி விட்டது போல இருந்தது.

ஆம், அவன்தான். பலூன்காரன் தெருக்கோடியில் வரும்போதே அவனுடைய ஊதல் சத்தம் தெரியும். உடனே, அந்தச் சத்தம் கேட்கு முன்னே வீட்டில் ஒரு பரபரப்பு ஏற்படும். எங்கு இருந்தாலும் ராஜா ஓடி வந்துவிடுவான்.

"அப்பா! ஊ! ஊ! அப்பா!" என்று ஜகந்நாதனைத் துணியைப் பிடித்து இழுப்பான்.

சேர்ந்தாற் போல நான்கு பலூன்களை வாங்கிக் கொடுப்பான் ஜகந்நாதன். ஆனால் அந்தப் பலூன்காரன் தெருவின் மறுகோடிக்குப் போய்விட்டுத் திரும்பி வருவதற்குள் நான்கும் தீர்ந்துவிடும்.

மறுபடியும், "அப்பா! ஊ! ஊ! அப்பா!" தான். மறுபடியும் நான்கு. அந்தப் பலூன்காரனும் வெகு நேரம் அந்த வட்டாரத்தை விட்டு அசையவே மாட்டான். சாரதா கூட அடிக்கடி, "இப்படி ஒரு நாளைக்கு நூறு பலூன் வாங்கி உடைத்தால் சம்பாதிக்கிற பணம் அதற்குத்தான் சரியாக இருக்கும்" என்று கோபித்துக்கொள்வாள்.

ஆனால் ஜகந்நாதன் யார் சொன்னாலும் லக்ஷ்யம் செய்யமாட்டான். இன்னும் நாறு தடவை அவன் திரும்பி வந்தாலும் சலிக்காமல் வாங்கித் தருவான். ராஜாவுக்கு இல்லாத பணம் வேறு யாருக்கு?

அப்படித்தான் ஒரு சமயம், ராஜாவுக்குக் கடுமையான ஜுரம். குழந்தை நினைவு இன்றிக் கிடக்கிறது. நான்கு நாட்களாக ஜகந்நாதன் உத்தியோகத்துக்கும் போகவில்லை. குழந்தையின் அருகிலேயே உட்கார்ந்திருந்தான்.

சாயங்கால சமயம். குழந்தை "அப்பா!" என்றது. அதன் கண்விழிகள் பளபள வென்று ஜொலித்தன.

"என்னடா தங்கம்?"

"அப்பா! ஊ! ஊ!" என்றது குழந்தை. அவன் குழந்தை தன்னைவின்றிப் பிதற்றுகிறது என்று எண்ணி, "நாளைக்கு வாங்கித் தருகிறேனடா தங்கம். உனக்கு ஊவா தேவலையாகட்டும்" என்றான்.

ஆனால் மறு நிமிஷமே, "தா-ர-ல-ல" என்ற ஊதல் சத்தம் கேட்டது.

குழந்தையின் அறிவு அவனைப் பிரமிக்கச் செய்தது. உடனே எழுந்து ஓடிப் போய், தெருக்கோடியிலேயே பலூன் காரனை நிறுத்தி, அவனிடம் உள்ள அவ்வளவு பலூன்களையும் வாங்கிவந்துவிட்டான்.

அன்று, பலூன்காரன் தெருவின் மறு கோடிக்கு வராமலே வீடு திரும்பிவிட்டான்.

"தார-ல-ல-லா!"

சத்தம் சமீபித்துக் கேட்டது. அவனுடைய உடல் பதறியது!

"அப்பா! ஊ! ஊ!" என்ற குரல் கேட்கும் என்று எண்ணித் திரும்பினான். என்ன ஏமாற்றம்!

"இதையாவது குடியுங்கள்!" என்று கையில் காபி டம்ளருடன் சாரதா நின்றாள்.

அதைப் பளிச்சென்று வாங்கி வீசி எறிந்தான். மளமளவென்று ஆவேசம் வந்தவனைப்போல - வெளியில் ஓடினான். சாரதா திகைத்துப் போய் நின்றாள்.

பலூன்காரன் ஊதிக்கொண்டே மெதுவாய் வந்துகொண்டிருந்தான். அவனுடைய கழியில் கட்டப்பட்டிருந்த பல வர்ணப் பலூன்கள் படபடவென்று அடித்துக்கொண்டிருந்தன; விடுதலையை விரும்பித் தவிக்கும் ஜீவன்களைப்போல.

அழுக்கேறிய ஆடைகளும், பறந்த தலையும், சுரந்த மூகமுமாகப் பைத்தியக் கோலத்தில் ஓடிவந்த ஜகந்நாதனைக் கண்டதும் பலூன்காரன் நின்றான்.

"அப்படியே என்ன விலை?"

"எல்லாங்களா?" பலூன்காரன் ஆச்சரியத்துடன் விழித்தான்.

"அத்தனையும் என்ன விலை?"

"ஒண்ணரை ரூபாய்!"

"இந்தா!"

அவன் கையில் ஓர் ஐந்து ரூபாய் நோட்டைத் திணித்தான்.

பலூன்காரன் வாங்கிக்கொண்டு சில்லறையை எண்ணுவதற்குள், அவனுடைய கைக் கழியைப் பற்றி இழுத்தான். அவ்வளவு பலூன்களும் கொத்தோடு கீழே விழுந்தன. வெறி பிடித்தவனைப் போல அவற்றின்மேல் ஏறி ஏறி மிதித்தான். "படார்" "படார்" என்ற சத்தத்துடன் ஒவ்வொரு பலூனும் வெடித்து விடுதலை அடைந்தது.

அந்த விபரீதக் காட்சியைக் கண்டு தெருவில் நடமாடுவோர் நின்று திகைத்தனர்.

சில்லறையுடன் திரும்பிய பலூன்காரன் பிரமித்து நின்றான். அதற்குள் ஜகந்நாதனுடைய உருவம் தூரத்தில் மறைந்து விட்டது.

அன்று வீடு திரும்பிய பலூன்காரனுடைய மனத்தில் அமைதி இல்லை.

'பதட்டம்'

"பதட்டமாகப் பேசுகிறதனால் வரும் லாபம் என்ன?"

பதட்டம் என்ற சொல் எதிலிருந்து வந்தது, யோசித்துப் பாருங்கள். மேலே உள்ள வாக்கியத்தை வேறு விதமாகச் சொல்லிப் பார்க்கலாம். "பதறிக்கொண்டு பேசுகிறதனால் வரும் லாபம் என்ன?" என்று சொல்லலாம்; "பதறுவதனால் என்ன லாபம்?" என்று சுருக்கமாகச் சொல்லலாம். பின்னுலே சொன்ன இரண்டு வாக்கியங்களிலும் 'பதறு' என்ற சொல் வருகிறது. அதுவே பதறுதல், பதறுவது என்று தொழிற் பெயராக வரும். பதறுதல் என்ற அர்த்தத்திலேதான் 'பதட்டம்' என்பதை உபயோகிக்கிறோம். அது 'பதற்றம்' என்று இருப்பதுதான் சரி. ஏமாறு என்பது தொழிற் பெயராக வந்தால் ஏமாற்றம் என்றுதானே வருகிறது? ஏமாட்டம் என்று சொல்வதில்லையே! மாறு என்பது மாற்றம் என்று வருவதும் அத்தகையதே.

மந்திரப் பற்கள்

மாதையன்

ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். அவனுக்குப் பற்களே இல்லை. அதனால் அவன் யாருடனும் அதிகமாகப் பேசுவ தில்லை. அப்படிப் பேசினாலும் பொய்தான் பேசுவான். ஒரு நாள் அரசன் தன்னு டைய அறையில் ஆழ்ந்த யோசனையுடன் உட்கார்ந்திருந்தான். 'பல் இல்லாத ராஜா' என்று தன்னை மற்றவர்கள் கேலி செய்வதாக மந்திரி ரகசியமாகச் சொன் னதை நினைத்தபோது அரசன் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. கண்ணீரைத் துடைத்துக்கொண்டே அவன் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான்.

ஜன்னலருகில் இருந்த ஒரு மரக்கிளையில் காகம் வாயில் முறுக்குடன் உட்கார்ந் திருந்தது. அதைப் பார்த்ததும் அரசன், "எனக்கும் பற்கள் இருந்தால் நானும் முறுக்குச் சாப்பிடுவேனே!" என்று வாய் விட்டுச் சொல்லி வருத்தப் பட்டான்.

இதைக்கேட்ட காகம் வாயில் இருந்த முறுக் கை மரக்கிளையில் வைத்துவிட்டு அரச னைப் பார்த்து, "உங் களுக்குப் பற்கள் வேண்டுமா, அரசே!" என்றது. அரசன் சந்தோஷத்துடன் குதித்தெழுந்து, "ஆமாம்!" என்றான். உடனே காகம் பறந்து சென்று சற்று நேரத் தில் திரும்பிவந்து ஒரு பல்லை அரசனிடம் கொடுத்தது. அரசன் அதை வாங்கிக் கொண்டு, "ஒரு பல் இருந்து என்ன பிர யோஜனம்? மூப்பத் திரண்டு பற்கள் வேண்டுமே" என் றான். காகமும் அதன்படியே கொண்டு வந்து கொடுத்து, "அரசே! இவை மந்திர சக்தி வாய்ந்த பற்கள். இவற்றை வைத் துக்கொண் டிருப்பவர்கள் பொய் பேசக் கூடாது" என்று சொல்லிற்று. அரசனும் பொய் பேசுவதில்லை என்று காகத்தினிடம் சொல்லிவிட்டு நிலைக்கண்ணாடி முன் சென்று பற்களை அழகு பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தச் சமயம் உள்ளே வந்த அரசி ஆச்சரியத்துடன், "ஏது பற்கள்?" என்று கேட்டாள். அரசன் கர்வத் துடன், "தெரியாதா உனக்கு! இவ்வளவு நாட்களாக நான் வேண்டுமென்றே என் பற்களை மந்திர சக்தியால் மறைத்து வந் தேன். இன்று..." என்று மேலும் சொல்ல வந்தவன் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டு வாயை மூடிக்கொண்டுவிட்டான். அப்படி வாயை மூடிக்கொண் டிருந்தும் ஒரு பல் உதட் டைத் தள்ளிக் கொண்டு முன்னால் தெரிந்தது. அரசன் பொய் சொன்னதால் மந்திர சக்தி வாய்ந்த அந்தப் பற்களில் ஒன்று வளர்ந்து முன்னால் நீட்டிக் கொண்டு நின்றது. மறுபடியும் அரசன் பொய் பேசின பொழுது இன்னொரு பல் வளர்ந்து உதட் டைத் தள்ளிக் கொண்டு வந்தது. அரசி அதைப் பார்த்துச் சிரித்துக் கொண் டே தன் அறைக்குப் போய்விட்டாள். அர சனுக்கு மிகவும்



பயமாய்ப் போய்விட்டது. ராக்ஷஸனைப் போல இரண்டு பற்கள் நீட்டிக்கொண்டிருந்தால் வெட்கமாக இராதா?

'பற்கள் இல்லாமலிருந்தாலே தேவலையே!' என்றுகூட எண்ணினான். அந்தக் காகத்தின்மீது அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். காகம் மரக்கிளையில் உட்கார்ந்திருந்தது. "என்னை ஏமாற்றிய உன்னை லேசில் விடமாட்டேன். முட்டாள் காகமே!" என்று சொன்னான்.

காகம் அரசனைப் பார்த்து, "அரசே! என்மீது என்ன குற்றம்? நான்தான் பொய் பேசக்கூடாது என்று சொன்னேனே. அதன்படி நீங்கள் நடந்து கொண்டீர்களா?" என்று கேட்டது. அப்பொழுதுதான் அரசனுக்குத் தன் தவறு தெரிந்தது. "இனிமேல் நிச்சயமாகப் பொய் பேசமாட்டேன். எப்படியாவது இந்தப் பற்களைச் சரிப்படுத்து" என்று கேட்டுக்கொண்டான். காகம் அந்தப் பற்களை எல்லாம் வாங்கிக் கொண்டு வேறு பற்களைக் கொடுத்தது.

வெகு நேரமாகியும் அரசன் வெளியே வராமல் இருக்கவே, அரசி மறுபடியும் அரசன் இருந்த அறைக்குள் சென்றாள். நீட்டிக் கொண்டிருந்த பற்கள் இப்பொழுது இல்லாமலிருக்கவே ஆச்சரியப்பட்டு, "அதற்குள் எப்படி உங்களுடைய பற்கள் சரியாகிவிட்டன? உங்களுடைய மந்திர சக்தியின் மகிமையா?" என்றாள்.

அரசன் பெருமை தாங்காமல், "ஆமாம், உன்னுடைய பற்களைக்கூட நீட்டிவிட என்னால் முடியும். செய்யட்டுமா?" என்றான். ராணி குபீரென்று சிரித்து, "ஐயோ, இதென்ன உங்களுடைய பற்களில் ஒன்று உள்ளே போய்விட்டதே! இனிமேல் உங்களைப் பொக்கை வாய் ராஜா என்று சொல்லுவார்கள்" என்று சொன்னாள். அரசன் திடுக்கிட்டுக் கண்ணாடியில் பார்த்தான். அரசி சொன்னபடி ஒரு பல் உள்ளே போய்விட்டிருந்தது.

அரசன் சமாளித்துக்கொண்டு, "இதென்ன பிரமாதம்! இப்பொழுது நினைத்தால் நான் இதைச் சரிப்படுத்திக் கொள்ள மாட்டேனா?" என்றான் பெருமையாக. மறுபடியும் அரசன் பொய் சொன்னதால் இன்னொரு பல்லும் உள்ளே போய்விட்டது. ராணி இடியிடியென்று சிரித்தாள். காகம் சொன்னது அப்போதுதான் அவன் நினைவிற்கு வந்தது. மிகவும் வருத்தத்துடன், 'இனிமேல் சத்தியமாகப் பொய் பேசமாட்டேன்" என்று சபதம் செய்து அரசியிடம் எல்லா விஷயங்களையும் உள்ளபடியே சொன்னான். அவன் உண்மை சொன்னதால் பழையபடி அந்தப் பற்கள் வந்தன. அது முதல் அவன் பொய் பேசுவதையே விட்டுவிட்டான். மந்திரப் பற்களும் அப்படியே இருந்தன.

45-ஆம் பக்கத்திலுள்ள விடுகதைகளுக்கு விடை: 1 பனம் பழம், 2. தாம்பூலம், 3. பாம்பு, 4. தென்னைமரம், 5, மரப்பாச்சி, 6. அம்மி, 7. குன்றிமணி, 8. செவ்வாண்டி, 9. சுரைப், 10. பூசணிக்காய், 11 சருகுவி, 12. விளக்கு, 13. பூட்டு.

கூலிமகள் அன்பர்கள் யாவருக்கும் "பொங்கலோ பொங்கல்!" என்று பொங்கல் வாழ்த்துக் கூறுகிறோம். சம்பிரதாயத்தை அநுசரித்துப் பண்டிகைகளும் திருவிழாவும் வந்துபோகின்றனவே ஒழிய உண்மையிலே பண்டிகையில் உத்ஸாகம் இல்லை; திருவிழாவில் களியாட்டம் இல்லை. தினந்தோறும் வயிறு நிரம்பச் சாப்பிடுவதற்குப் போதுமான அரிசி கிடைத்து அதைப் பொங்கித் தின்றாலே பெரும் பொங்கல் என்ற துரதிருஷ்டம் இந்த நாட்டிற்கு வந்திருக்கிறது. பசியும் பிணியும் போய் வசியும் வளனும் சுரக்க வேண்டுமென்று வாழ்த்துவது இந்த நாட்டுப் பழக்கம். இப்போதோ பசியும் பிணியும் சுரந்துகொண்டிருக்கின்றன. 'பட்டினி கிடந்து செத்தவன் இல்லை' என்ற பழமொழி வழங்கின நாட்டில் தினந்தோறும் பத்திரிகைகள் பட்டினிச் சாவைத் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், மனமாரக் கலம் நிறையப் பொங்கல் வைப்பது எங்கே? பொங்கலிடப் பொருள் எங்கே? நெல் நிலத்தின் வளத்துக்கு அறிகுறி. கரும்பும் நிலவளத்துக்கு அடையாளம். வெல்லம் தொழில் முயற்சியின் விளைவு. மஞ்சள் மங்கலச் சின்னம். பால் நிறைவின் குறியீடு. நெல்லும் கரும்பும், வெல்லமும் பருப்பும், மஞ்சளும் இஞ்சியும், பாலும் பழமும் விளைந்து மலிந்து வந்தால் பொங்கல் பொங்கும். அவற்றோடு உள்ளத்திலே ஆனந்தம் பொங்கி வந்தால்தான் உண்மையான பொங்கல் ஆகும்.

இப்போது அந்த லக்ஷ்யப் பொங்கல் இல்லை. ஆனாலும் அடிப்படையாக வந்த சம்பிரதாயம் இருக்கிறது. அதை நினைக்கும்போது பொங்கி வருவது இன்பம் அல்ல; துன்பந்தான். ஆனாலும் மனிதன் வாழப் பிறந்தவன்; சாகப் பிறக்கவில்லை. நடக்கப் பிறந்தவன்; படுத்துக் கிடக்கப் பிறக்கவில்லை. முயற்சிதான் மனிதனது உயிருக்கும் உயிர் ஊட்டுகிறது. அந்த முயற்சிக்கு வழிகாட்டியாக இருப்பது நம்பிக்கை. ஒரு மூட்டை அரிசி கடையிலிருந்து வாங்கிப் போகும்போது, அது தீருகிறவரையில் நிச்சயமாக உயிர் வாழ்வோம் என்ற நம்பிக்கை அவன் உள்ளத்தே மறைந்துகிடக்கிறது. காலை வேகமாக வீசி நடக்கும்போது, பள்ளத்திலே வைக்கமாட்டோம், மேட்டிலே இடற மாட்டோம் என்ற நம்பிக்கைதான் அந்தக் கால் வீச்சுக்கு வலிமை கொடுக்கிறது. இந்த நம்பிக்கை இல்லாவிட்டால் மனிதன் மரத்தைப் போலத்தான் இருக்க வேண்டும்.

அதே நம்பிக்கை விளக்கைப் பின்னும் தூண்டிவிடுவோம். எதிர்காலத்தில் நம்முடைய லக்ஷ்யக் கனவுகள் கைகூடும் என்று நம்பி இன்று முதலே அஸ்திவாரம் போடுவோம். வசியும் வளனும் சுரக்கப் போகும் அந்தப் பொங்கலை வரவேற்கும் ஆற்றலை இனறு முதல் சேகரித்துக்கொள்வோம். அந்த முயற்சிக்கு இன்றைப் பொங்கல் துணைசெய்யட்டும். உள்ளத்தில் உவகைக் கடல் பொங்காவிட்டாலும் நம்பிக்கை உதயமாகட்டும். அதோ, நிச்சயமாக வரப்போகிறதே, அந்த நிறைவான பொங்கலுக்கு இன்று முதலே வழி வகுப்போம். "பொங்கலோ பொங்கல்!" என்ற முழக்கம் இந்த முதல் தொண்டுக்கு உரிய உத்ஸாக கோஷமாகட்டும்!

பொங்கல் இதழ்: வழக்கம்போல இந்த இதழ் பொங்கல் மலராக வெளிவந்திருக்க வேண்டும். தமிழ் நாட்டில் 'பொங்கல் மலரை' மலரச்செய்யும் வழக்கம் கலிமகளிடம் முதலில் தோன்றியது. நிறமும் நறு

மணமும் பொருந்தி வாசகர்களின் சிந்தையையும் உள்ளத்தையும் குதூகலிக்கச் செய்து, ஆத்மானந்தத்தைப் பொங்கச் செய்துவந்தது 'பொங்கல் மலர்'. எனவே அன்பர்கள் எவ்வளவோ ஆவலாக இந்த வருஷமும் பொங்கல் மலரை எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள். காரியாலயத்துக்கு வரும் நூற்றுக்கணக்கான கடிதங்களால் அவர்களுடைய ஆர்வம் நன்றாகத் தெரிகிறது. எல்லோரிடமும் இம்முறை மன்னிப்புக் கேட்டுக்கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை. காகிதக் கட்டுப்பாட்டின் நெருக்கடியில் மலர் மலர இடம் இல்லாமற் போயிற்று.

ஆனாலும் இது பொங்கல் இதழாக மலர்கின்றது. வழக்கமாகப் பொங்கல் மலரைத் தங்கள் கட்டுரைகளால் அலங்கரிக்கும் பெரியார்கள் இவ்விதழிலும் எழுதியிருக்கிறார்கள். ஸ்ரீமான்கள ராஜாஜி, தேசிக விநாயகம் பிள்ளை, ராவ் ஸாகேப் வையாபுரிப் பிள்ளை, ரா. ஸ்ரீ. தேசிகன், எம். எஸ். சுப்பிரமணிய ஐயர், டாக்டர் ராஜன், 'கொனஷ்டை', புரசு பாலகிருஷ்ணன் முதலியவர்களுடைய கதைகளும் கட்டுரைகளும் கவிதையும் இவ்விதழில் மணக்கின்றன. இருக்கிற பக்கங்களே மணமும் மலர்ச்சியும் உடையனவாகச் செய்ய முயன்றிருக்கிறோம்.

இனி வரும் இதழ்களில் புதிய தூறை களைக் காணலாம். அடுத்த இதழ் முதல் புதிய தொடர்கதை ஆரம்பமாகும்.

அதிகப் பிரதிகள் வேண்டும் என்றும், அவற்றை அனுப்பாமைக்குக் குறை கூறியும், பல ஏஜண்டுகள் கடிதம் எழுதிய வண்ணமாக இருக்கிறார்கள். அன்பர்களுக்கு வேண்டிய பிரதிகளை அளிக்க முடியாமல் இருப்பது ஒரு பெரிய குறை. தாங்கள் வாங்கும் பதிரிகையைப் பிறருக்கும் கொடுத்துப் படிக்கச் செய்து இலக்கிய இன்பத்தைப் பகிர்ந்துகொண்டால் ஓரளவு இந்தக் குறையைப் போக்கிக்கொள்ளலாம்.

கு. ப. ரா. குடும்பப் பாதுகாப்பு நிதி:

கு. ப. ரா. வின் குடும்பப் பாதுகாப்பு நிதிக்கு ரூ. 5000-ஆவது சேர்க்கலாம் என்று நினைத்தோம். நினைத்தபடி சேரவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. நிதிக்கு உதவ விரும்புகிறவர்கள் ஜனவரி மாதக் கடைசிக்குள் தம்மால் இயன்ற தொகையை அனுப்ப வேண்டுகிறோம். இலங்கை நண்பர்கள் கு. ப. ரா. விஷயத்தில் கொண்ட பற்றை யாவரும் பாராட்ட வேண்டும். அங்குள்ள அன்பர்களில் சிலர் தனித்தனியே தொகுத்து அனுப்பிய தொகை மொத்தம் ரூ. 914-8-0.

சென்ற மாதம் அறிவித்த பிறகு கிடைத்த தொகை விவரம் வருமாறு :

	ரூ.	அ.
அல்லயன்ஸ் கம்பெனி, ஸ்ரீ வி. குப்புஸ்வாமி ஐயர் ...	275	0
ஓர் அபிமானி	250	0
கொழும்பு ஸ்ரீ சோ. சிவபாத சுந்தரம் மூலம்	200	0
ஈழகேசரி அதிபர் ஸ்ரீ நா. பொன்னையா மூலம் ...	134	0
கொழும்பு ஸ்ரீ ஸிந்து ராயன் மூலம்	107	8
சுதேசமித்திரன் ஆசிரியர் ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் ...	100	0
வட்டகொடை எஸ். நடராஜன் மூலம்	50	0
அறுப்புக்கோட்டை ஸ்ரீ செல்லம் பிள்ளை மூலம் ...	27	8
ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் ...	25	0
கா. ஸ்ரீ. ஸ்ரீ. ...	15	0
ஸ்ரீ ரா. ஸ்ரீ. தேசிகன் ...	10	0
ஸ்ரீ எம். பி. சோமசுந்தரம், திருச்சி ரேடியோ ...	10	0
பூனு ஸ்ரீ கே. எஸ். ராமகிருஷ்ணன்	10	0
அலகாபாத் ஸ்ரீ பி. வேங்கட ராமன்...	10	0
10 ரூபாய்க்குக் குறைந்த தொகை வரவு மொத்தம் ...	39	0
முன் அறிவித்தபடி வரவு...	2410	2
மொத்தம் வரவு ..	3673	2

சென்ற இதழ் அறிவிப்பில் 'ஸ்ரீ ஏ. கே. ராமசந்தரன், மாடர்ன் தியேடர்ஸ், சேலம் ரூ. 50' என்ற தொகை மாடர்ன் தியேடர்ஸ் சொந்தக்காரர் ஸ்ரீ சுந்தரம் அவர்களிடமிருந்து பெற்றது. ஸ்ரீ. பி. ஆர். நடராஜ் அனுப்பிய ரூ. 10-ம் பெங்களூர், கஸ்தூர்பா தமிழ் நூல் நிலையத்தினர் உதவியது.

ஆசிரியர்

கிற்றுடி

கா. ஸ்ரீ. ஸ்ரீ.

பத்மநாபன்

1

அந்தச் சிறுமி என் குவிந்த கண்களை அப்படி ஏன் பார்க்கிறாள்? அந்தக் கண்ணிலே என்ன அத்தனை அழகு இருக்கிறது, எனக்குத் தெரியாதபடி? தாமரைப் பூவைக் கண்டு சொக்கிப்போகும் கவி மாதிரி நிற்கிறாளே! கண்ணிலே குறும்பு நடமாட, அவள் சட்டென்று குனிகிறாள். எனக்கு இன்பமயமான ஓர் உணர்ச்சி. அந்த க்ஷணத்திலே என் கண் விழித்துக் கொண்டது. சட்! இந்தக் கண்ணை என்ன செய்வது?

மலர மலரப் பார்க்கிறேன். அந்த மாயக்காரி தென்பட்டால்தானே? இதே மேக வர்ணப் பாவாடை; மயிற்கழுத்தைப் போல நீல நிற ஜாக்கெட் - இவளை முன்பு எங்கோ பார்த்திருக்கிறேன். எங்கே என்பது ஞாபகத்துக்கு வரவில்லையே!

பலபலவென்று பொழுது விடிந்து, பொன்மயமான சூரிய கிரணங்கள் என் கண்களிலே விசிக்கொண்டிருந்தன. எழுந்து படுக்கையைச் சுற்றி வைத்தேன். இன்று என் பருவத்திலேயே ஏதோ மாறுதல் உண்டாவதுபோலத் தோற்றுகிறது. தோள்களிலே புதிய பலம்; மனத்திலே புதிய தெம்பு; அறிவிலே புதிய மலர்ச்சி; என்றும் இல்லாத ஆனந்தம். இதற்குக் காரணம் என்ன?

குழாயடியில் பல் தேய்க்கும்போது, ஒரு மாதமாகக் கடிதமே போடாத என் தங்கையின் ஞாபகம் வந்தது. இவ்வளவு சீக்கிரத்திலா அவள் என்னை மறக்க முடியும்? போன வருஷந்தான் அவளுக்குக் கல்யாணம் நடந்தது. கல்யாணத்திலே அப்பா இட்ட வேலைகளை எல்லாம் எவ்வளவு சுறுசுறுப்பாகச் செய்தேன்! ஆனால் நெஞ்சின் ஒரு மூலையில், 'பதினைந்து வருஷமாக மனம் கலந்து பழகிய தங்கையை விட்டுப் பிரியவேண்டும்' என்ற எண்ணம் குறுகுறுத்துக் கொண்டே இருந்தது. கல்யாணம் முடிந்ததும், "நாட்டுப்பெண் சில நாளைக்கு எங்களோடு இருக்கட்டும்; பிறகு நானே கொண்டு வந்து விடுகிறேன்" என்றார் கோமளத்தின் பெரிய மைத்துனர். அவர்தாம் சம்பந்தி ஸ்தானத்திலே இருந்தவர். அப்பாவும் அவளை அனுப்பச் சம்மதித்தார். அன்று காலையில் வெகு நேரம் வரையில் தூங்கிக் கொண்டிருந்ததால், அவளை எழுப்ப வேண்டும்

என்று மாடிக்குப் போனேன். எழுப்ப வில்லை; நின்று, அவளைப் பார்த்துக்கொண்டு இருந்தேன். இனி இந்த முகத்தை, இத்தனை நாளும் போல, நினைக்கிறபோதெல்லாம் காண முடியாது என்று எண்ணியபோது, என் கண்ணில் நீர் ததும்பியது. அந்தக் கண்ணீரில் இரண்டு மூன்று சூடான துளிகள் கன்னத்தில் விழுந்ததுமே அவள் திடுக்கென்று விழித்துக்கொண்டாள்.

"ஏன் அழுகிறீர், அண்ணு?" என்று கேட்டாள்.

அவளை விடப் பெரியவனுக இருந்து அழுவது எனக்கு வெட்கமாகத் தோன்றியது. ஆயினும் துயரம் மனத்துக்குள்ளேயே குமுறியது. "உனக்கு என்ன வந்தது அதைப் பற்றி?" என்றேன் வெளிப்படையாக.

"தெரியும் எனக்கு. நான் சாயங்காலம் ஊருக்குப் போகிறேன் என்றுதானே வருத்தம்?" என்ருள் நேரிடையாக.

நான் பதில் சொல்லவில்லை. முகம் என்னைக் காட்டிக் கொடுத்தது.

"கல்யாணமானுல் எல்லாப் பெண்களுந் தாம் புக்ககம் போகிறார்கள். இதிலே என்ன அதிசயம்? நானுக்கு நீயும் வேலைக்காக வெளியூருக்குப் போகலாம். பைத்தியம் மாதிரி இதற்கெல்லாமா அழுவது? அடிக்கடி உனக்குக் கடிதம் எழுதுகிறேன். கவலைப்படாதே" என்று அவள் சொன்னதும், எனக்குச் சிறிது ஆறுதல் உண்டாயிற்று.

ஊரிலிருந்து திரும்பி வந்தபின் அவளிடம் அதிகமாக அன்பு கொண்டாடினேன். ஆனல், அது எத்தனை நாள்! இரண்டு மூன்று மாதங்களுக்கெல்லாம் அப்பா அவளைத் திருச்சியிலே கொண்டுவிட்டார். அவள் கணவருக்கு ரெயில்வேயில் ஆடிட் ஆபீசில் உத்தியோகம். நல்ல சுபாவம். அப்படிப்பட்ட மாப்பிள்ளை கிடைத்ததைப்பற்றி அம்மாவுக்குப் பரம சந்தோஷம். ஆனல், என் மட்டும் கோமளத்தோடு அன்பாகவும் சண்டையிட்டும் பழகிய அந்த நாட்கள் பொய்யாக மறைந்தன. அவை இனி வருமா?

சமையலறைக்குப் போனதும், அம்மா காபி கொடுத்தாள். மூன்று வருஷமாக நோயாளியாக இருந்தவள், இப்போது ஏழெட்டு நாளாகத்தான் எழுந்து நடமாடிக் கொண்டு, காபி போடும் நிலைக்கு வந்திருக்கிருள்.

'பேஷ்! இன்றைக் காபியிலே ஜீவனைத் தூண்டும் எதோ ஒரு சக்தி இருக்கிறது!' என்று நினைக்கும்படி, அது அபூர்வ மணம் வீசியது.

என்னுடைய ஆனந்தத்திலே, அம்மாவின் சோர்ந்த முகத்தைப் பார்க்கப்பிடிக்கவில்லை. எப்படியாவது அவளுக்கு மகிழ்ச்சி வரச் செய்தால் நல்லது என்று தோன்றிற்று.

"அம்மா, நான் ஒரு ஜோஸ்யம் சொல்லட்டுமா?" என்றேன் உத்ஸாகத்தோடு.

"இன்ருேடு உனக்குப் பரீக்ஷை முடிகிறது என்ற குதூகலம்; அதைத்தானே சொல்லப் போகிறீர்?"

"ஊஹூம்!"

"பின்னே என்ன?"

"இன்றைக்குக் கோமளத்தினிடமிருந்து கடிதம் வரப்போகிறது."

மனசின் மூலையிலே பதுங்கியிருக்கும் ஆவல் நிறைவேறப் போவதைப் பிறர் வெளியிட்டால், மனிதர்களுக்கு எப்போதும் உல்லாசந்தான். என் பேச்சைக் கேட்டதும் அம்மாவின் வாடிய வதனத்தில் இளநகை அரும்பியது. சுருக்கங்கள் விழுந்த அவளது நெற்றியில், நீரலைகளிலே மிதந்து ஒளி வீசும் கர்ப்பூரத் தழலைப்போலே, குங்குமப்பொட்டு மிகவும் பிரகாசமாகத் தெரிந்தது. "பார்க்கலாம், உன் ஜோஸ்யத்தை!" என்ருள் முறுவலோடு.

"நோயாளியான உடம்பிலே ஏன் வீணுக்குக் கவலைப்படுகிறீர்? கடுதாசி இன்று இல்லாவிட்டால் நாளைக்குத் தானுக வருகிறது" என்ருர், அரிசியைக் களைந்துகொண்டிருந்த அப்பா.

"தானுக எப்படி வந்து குதிக்கும், அவள் எழுதாமலே? இவருக்குத்தான் என்ன கல் நெஞ்சுடா அப்பா! — என் உடம்புக்கு என்ன? அது எப்போதுந்தான் இருக்கிறது!" அம்மாவுக்கு மறுபடி சோர்வு தட்ட ஆரம்பித்தது. அப்பா பேசினுலே இப்படித்தான்! "இனிமேல் உனக்கு உடம்புக்கே வராது அம்மா! நான் சொன்னேன் என்று பார்!" என்றேன்.

"கண் வேண்டாம் என்ரு சொல்லுவான் குருடன்? ஒரு நாளைக்கு நாமும் நாலு மனுஷ்யர்களோடு சேராமல் இப்படியேயா இருக்கப்போகிறோம்?"

"மூப்பது வருஷம் வாழ்ந்தவரும் இல்லை; மூப்பது வருஷம் கெட்டவரும் இல்லை"- அப்பாவின் குரல். வாழ்க்கையிலே சோதனைகளில் எழுந்து எழுந்தவருக்குப் பழைய வசனங்களைத் தவிர வேறு என்ன பிடிக்கும்?

* * * *

சாயங்காலம் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பும்பொழுது நான் மிகவும் சந்தோஷமாக இருந்தேன்; காரணம், என் ஜோஸ்யம் பலித்திருந்ததுதான்.

அம்மா வாசல் திண்ணையில் உட்கார்ந்து பக்கத்து வீட்டு மாமியோடு பேசிக்கொண்டிருந்தாள். "கோமளத்தினிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது, அம்மா. க்ஷேமம் எழுதியிருக்கிருள். அப்பாவின் பள்ளிக்கூடத்து விலாசத்துக்கு வந்திருக்கிறது" என்று சொல்லியவாறே உள்ளே போனேன்.

அம்மாவும் பின் தொடர்ந்தாள். சந்தோஷத்தினுல் அவள் முகத்தில் ஒரு கனி தோன்றியது. "அப்பா வரட்டும்; பதில் எழுதச் சொல்லுகிறேன். மாசத்துக்கு

இரண்டு கடிதமாவது போடக்கூடாதோ, இந்தப் பெண்? கடுதாசி வராவிட்டால் இந்த மனசுதான் எப்படித் தவியாகத் தவிக்கிறது?" என்றுள்.

காலலம்பி, சட்டையை மாற்றிக்கொண்டு வெளியே போகப் புறப்பட்டேன். "இந்தாடா. பலகாரமும் காபியும் வைத்திருக்கிறேன். அதைச் சாப்பிட்டுவிட்டுப் போ" என்றுள் அம்மா.

"உனக்கு ஏன் அம்மா இந்தக் கஷ்டம்? ஏதாவது வேலை செய்து நாலேக்கு மறுபடி படுத்துக்கொள்ளவா?"

"நீதானே சொன்னாய், இன்று காலையில்: இனிமேல் எனக்கு உடம்புக்கு வராது என்று? உனக்குச் செய்யாமல் நான் வேறு யாருக்கு வேலை செய்வேன்?" என்றுள். அந்தக் குரலில் எவ்வளவு கனிவு!

பலகாரம் சாப்பிட்டதும், புறப்பட்டேன். "பத்து!" என்று அம்மா மறுபடி கூப்பிட்டாள்.

"இதோ ஒரு கார்டு வந்திருக்கிறது. இதைப் படித்துச் சொல்லு" என்றுள்.

அது சென்னையிலுள்ள என் அத்திம்பேரிடமிருந்து வந்திருந்தது. விடுமுறையில் நான் அங்கே வரவேண்டும் என்று அத்தை விரும்பியதாக எழுதியிருந்தார். "ஆமாம்; உன் அழகான அத்தை ஒவ்வொரு வருஷமுந்தான் கூப்பிடுகிறுள். அங்கே போகாமல்தான் இப்போது குறையாகக் கிடக்கிறது. அடிநாளில் அவள் என்னைப் படுத்திவைத்த பாட்டுக்கு, எனக்கு அவள் முகதரிசனங்கூட வேண்டாம். எனக்கு வீட்டுவேலைகளை எல்லாம் தானே சொல்லிக்கொடுத்து, இந்தக் குடும்பத்தைத் தன் பணத்தினுலேதான் முன்னுக்குக் கொண்டுவந்ததாக அவள் எண்ணம்! தான் வாயைத் திறந்து ஒன்றும் பெருமை பேசிக் கொள்ளமாட்டாள்; ஆனுல் ஊரார் அவளைப் பிற்றிக்கொள்ளும்படி ஏதாவது செய்துவிட்டுப் போய்விடுவாள். அடே அப்பா! அவள் தான் என்ன ராங்கிக்காரி!..." அம்மாவின் இந்தப் புராணம் ஆரம்பித்துவிட்டால் ஓயாது. நான் அதை முழுவதும் கேட்காமலே என்னுடைய நண்பன் ஒருவன் வீட்டுக்குக் கிளம்பினேன்.

சிறு வயசிலிருந்தே எனக்கு இலக்கியத்திலே பற்று. கடுமையான உஷ்ணத்துக்குப் பிரசித்தமான இந்தக் காஞ்சிபுரத்தில் ஒவ்வொரு கோடை விடுமுறையிலும் என் நண்பர்களின் துணைகொண்டு, 'நவநிதி' என்ற கையெழுத்துப் பத்திரிகையின் மலர் ஒன்றை நான் தயாரிப்பது வழக்கம். மிகச் சிறந்த பத்திரிகாசிரியர்கள் அதைப் போற்றியிருந்தனர்.

"நாலேயிலிருந்தே அடுத்த மலருக்கான வேலைகளைத் தொடங்க வேண்டியதுதான்" என்று நண்பனிடம் சொன்னேன்.

"கட்டாயம் செய்வோம். வருஷம் முழுவதும் படிப்பிலே உழைத்தபிறகு, காவியச் சுவையோடு இம்மாதிரியான மலரைக் கொண்டுவருவது ஆனந்தமான வேலைதான்" என்றுன் அவன்.

"இந்த விடுமுறையோடு நாம் இந்த ஊரை விட்டே போக நேரும். ஆதலால், இவ்வருஷத்து மலரை இலக்கிய சிகரமாக நிர்மிக்க வேண்டும்" என்றேன்.

சிருஷ்டிக்கப்போகும் மலரைப்பற்றி வெகு நேரம் பேசிவிட்டு, நான் வீடு திரும்பினேன்.

* * * *

இரவு சாப்பாடு முடிந்து நான் படுக்கப் போகும் சமயம், அப்பா என்னைக் கூப்பிட்டார். "நாலைக் காலையே நீ சென்னைக்குப் புறப்பட வேண்டும்" என்றார்.

அப்பா ஒரு விஷயத்தைத் தீர்மானித்துவிட்டால், அது குரங்குப் பிடிதான். அதிலும், அவர் உதடுகளை அழுத்திக்கொண்டு சொன்னுர் என்றுல், அதை மாற்றவே மாட்டார் என்று அர்த்தம்.

ஆயினும் நான் சிறிது தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, "இன்னும் பத்துப் பன்னிரண்டு நாள் கழித்துப் போகிறேனே, அப்பா! அதற்குள் இந்த மலரும் தயாராகும்" என்றேன்.

"சொன்னதைக் கேளுடா. மலரை எல்லாம் அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். போய்ப் படுத்துத் தூங்கு. விடிகாலே நான் எழுப்பியவுடனே புறப்பட ஆயத்தமாக இருக்கவேண்டும்" என்றுர்.

நான் அம்மாவைத் தயங்கித் தயங்கிப் பார்த்தேன். அவள் இடைமறித்தாள்: "இப்போது எதற்காக அவனைப் பட்டணத்துக்கு அனுப்பவேண்டும்? நானும் எல்லாம் யோசனை செய்து வைத்திருக்கிறேன். இன்னும் ஒரு மாதம் இங்கே இருப்போம். எனக்கும் உடம்பு குணமாகிக்கொண்டு வருகிறது. நீங்களும் அங்கேயே வேறு பள்ளிக்கூடத்தில் வேலை பார்த்துக்கொள்ளுங்கள். எல்லாருமாகப் பட்டணம் போய்விடுவோம். என்ன பிரமாதம் செலவழிந்துவிடப் போ

கிறது? உபகாரச் சம்பளம் என்னவோ அவனுக்கு ஏற்கனவே கிடைக்கிறது. நான் அந்த வீட்டில் அவனை விட மாட்டேன்" என்று படபடவென்று பேசினாள்.

ஆனால், அப்பாவின் அந்தக் கூரிய பார்வையைக் கண்டதும் அம்மா அடங்கிப் போனாள்.

"உங்கள் பெண்டுகள் சமாசாரத்தை எல்லாம் இங்கே கொண்டுவராதே. நம் குடும்பத்திலே எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள் அவள்! நமக்கு நன்மையாக அவள் எது செய்தாலும் அது உனக்கு விபரீதமாகப் படுகிறது. அதற்கு நான் என்ன செய்ய? என்னதான் இருந்தாலும், நாத்தனாரிடத்திலே இத்தனை துவேஷம் பாராட்டுகிற மனுஷியை நான் கண்டதில்லை. — அடே பத்து, நீ போய்த் தூங்கு. அவள் பேச்சை எல்லாம் கேட்காதே. அத்திம்பேருக்கு ஒரு கடிதம் கொடுக்கிறேன். அவரிடம் அதைக் கொண்டுபோய்க் கொடு. எந்தச் சமயத்தில் என்ன செய்யவேண்டும் என்பதெல்லாம் எனக்குத் தெரியும்" என்று உறுமினார்.

"ஆகா! எல்லாம் தெரியும்; ஒன்றும் தெரியாது! இன்றைக்குத்தான் இந்த வீட்டுக்கு வந்திருக்கிறேன், பார்க்க!" என்று முணுமுணுத்துக்கொண்டே அம்மா உள்ளே போய்விட்டாள்.

நான் படுக்கச் சென்றேன். ஆனால் தூக்கம் வரவில்லை.

அப்பாவின் போக்கே தனி. இத்தனை நாள் பழகியும் எனக்கு அது புரியவில்லை. அவர் மிகவும் கண்டிப்பான சுபாவம் உள்ளவர். வாழ்க்கையில் கசப்பான அநுபவங்கள் அவர் முகத்திலே கடுமையை உண்டாக்கியிருந்தன. தூக்கி வைத்துப் பேசுவதையோ காரணமின்றி நிந்திப்பதையோ அவர் பொறுத்துக்கொள்ள மாட்டார். அவருடைய உள்ளம் மிகவும் ஆழ்ந்தது; எந்தக் கருத்தையும் எளிதில் வெளியிட மாட்டார்.

எவ்வளவு கஷ்டமான வாழ்க்கை! அம்மாவோ நோயாளி. மூன்று வருஷத்துக்கு முன்னால் ஒரு குறைப் பிரசவம் ஆனதுமுதல், 'தினகண்டம் தீர்க்காயுசுதான்'! எவ்வித மோ நாளை இழுத்துத் தள்ளிக்கொண்டே வருகிறாள், அவளுக்குச் சுச்ருஷைகள் முதல் சமையல்வரையில் வீட்டிலே அல்லும் பகலும் ஓயாத உழைப்பு. பள்ளிக்கூடத்திலே பிள்ளைகளை மேய்க்கும் வேலை. மிகவும் பொறுமையாகவும் நிதானமாகவும் வேலைகளைச் செய்வார். அம்மாவிடம் பய்யமாகவே நடந்துகொள்வார். முறிந்துபோன அவளது வாழ்க்கையில் வேறு என்ன செல்வம் இருக்க முடியும்? கணவன் தன் கைக்குள் இருப்பதே இந்த நிலையில் அவளுக்குப் பெருத்த வரம். ஆனால், அப்பா தீர்மானமாக ஒரு விஷயத்தைச் சொன்னால் அதை யாரும் எதிர்த்துப் பேசக்கூடாது. எதிர்த்தால் அது பின்னும் தீவிரமாகிவிடும். தமது விஷயத்திலே இன்னொருவர் பிரவேசிப்பது அவருக்குப் பிடிக்காது. இம்மாதிரியான சமயங்களில் அம்மா அவருக்குப் பணிந்து நடந்துகொள்வாள்.

ஏழைமையின் நிழல்கூட என்மேல் படாமல் அவர் காக்க முயன்றார். அழகிய காட்சிகளிலும் புத்தகங்களிலும் படங்களிலும் என் மனத்தை ரமிக்கச் செய்தார். வீட்டிலோ பள்ளியிலோ தமக்காக என்னிடம் ஒருபோதும் வேலை வாங்கமாட்டார். தப்பித் தவறி அம்மாவுக்கு நான் ஏதாவது பணிவிடை செய்தால், "அதற்குத்தான் நான் இருக்கிறேனே. நீ போய்ப் படி; வீணாயாடு; காற்றடிக்க எங்காவது இந்தச் சாயங்கால வேளையில் உலாவிவிட்டு வா" என்பார்.

ஒவ்வொரு விடுமுறையின் போதும் அத்தையினிடமிருந்து என்னை வரச்சொல்லிக் கடிதம் வருவது வழக்கந்தான். இதற்கு முன்பு விடுமுறைகளிலே அப்பா அடிக்கடி தமது சொந்த வேலையாகச் சென்னைக்குப் போய்வருவார். அம்மாவுக்குத் துணையாக நான் இங்கேயே இருக்கவேண்டியிருக்கும். இந்த விடுமுறையில் மட்டும் கடிதம் வந்த அன்றே அவர் என்னைச் சென்னைக்கு அனுப்புவானேன்? காலேஜ் படிப்புக்கு என்னை அத்தை வீட்டிலேயே விட வேண்டும் என்று அவர் எண்ணியிருக்கலாம். அதற்கு நான் முன்னதாக அவர்கள் வீட்டிலே பழகிக்கொள்வது நல்லது என்று நினைத்திருக்கலாம். ஆனால் அதற்காக உடனே இத்தனை அவசரமாக அனுப்பவேண்டிய அவசியம் என்ன? எவ்வளவோ யோசித்தும் அந்த விஷயம் எனக்கு விளங்கவில்லை. இந்தச் சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தவன், எப்போது கண்ணயர்ந்தேனோ, எனக்கே தெரியாது.

2

மறுநாள் காலையில் நான் அப்பாவினிடமிருந்து கடிதத்தை வாங்கிக்கொண்டு ஓட்டமாக ஓடி ரெயில் ஏறுவதற்கும் வண்டி புறப்படுவதற்கும் சரியாக இருந்தது. இரவு வெகு நேரம் விழித்திருந்து மறுபடி அதிகாலையில் எழுந்ததனால் தூக்கம் கண்ணைச் சுழற்றியது. வண்டி போகும் வேகத்தில் உட்கார்ந்த இடத்திலேயே கண் அயர்ந்தேன். ஏதாவது ஒரு ஸ்டேஷனில் வண்டி வந்து நிற்கும்போது திடுக்கிட்டு விழித்துக் கொள்வேன்; வண்டி நகர்ந்ததும் மீண்டும் தூக்கம்.

பழைய சீவரம் தாண்டியது. விழிப்பும் தூக்கமும் அல்லாத அந்தத் தெளிவற்ற மனநிலையில், ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பு

நடந்த சம்பவம் லேசாக, இங்குமங்குமாக, என் ஞாபகத்துக்கு வந்தது.

அப்பா ஓர் உறவினர்வீட்டுக் கல்யாணத்துக்கு என்னை அழைத்துப்போயிருந்தார். அங்கேதான் முதல் முதலில் அந்தச் சிறுமியைப் பார்த்தேன். "உன் அத்தை பெண் பங்கஜம் இவள்தான்" என்று அப்பா அவளைப்பற்றிச் சொன்னார்.

அன்று பிற்பகலில் நாங்கள் யாவரும் பக்கத்து வீட்டுத் திண்ணையருகில் கண்ணாமூச்சி விளையாடிக்கொண்டிருந்தோம். அந்த ஒரு நாளில் அவள் பல பேரைச் சிநேகம் செய்துகொண்டாள். பக்கத்துவீட்டு ஜயம் அவளுக்குத் தோழியாகியிருந்தாள்.

அந்த வழியே போன கிழவர் ஒருவர், சற்று நின்று, திண்ணையிலிருந்து குதித்துக் கும்மாளம் அடிக்கும் பங்கஜத்தைப் பார்த்து, "ஏய் குழந்தை, இப்படிக் குதித்தால் எங்கேயாவது கால் கை சுளுக்கிக் கொள்ளும். டேய், உன்னையுங்கூடத்தான்; அப்புறம் ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டி இருக்கும்!" என்று அதட்டினார். அவரைப் பார்த்தால், 'இப்படிக் குதித்து விளையாடும் பருவம் நமக்கு இல்லையே!' என்று ஏங்கி வருத்தப்படுபவர்போல இருந்தது; ஆனல் மேலுக்கு எங்களிடம் அநுதாபம் காட்டினர்.

"இந்தப் பெரியவர்களே இப்படித்தான். மிரட்டுவது அவர்கள் வேலை" என்றேன், கிழவர் மறைந்ததும்.

"நீ பெரியவளானதும் என்னவாக இருக்கப் போகிறாய்?" என்று பங்கஜம் ஜயாவைக் கேட்டாள்.

"நான் அப்போது வக்கீலாக இருப்பேன். துஷ்டத்தனம் செய்யும் குழந்தைகளுக்காகப் பரிந்து சண்டை போடுவேன்" என்று ஜயா பதில் சொன்னாள். உடனே என்னைப் பார்த்து, "நீ என்னவாக இருப்பாய்?" என்று கேட்டாள்.

நான் ஒன்றும் யோசிக்கவே இல்லை. சட்டென்று, "நான் வாத்தியாராக இருப்பேன். விஷமம் செய்யும் குழந்தைகளைப் பிரம்பால் அடிப்பேன்" என்றேன்.

"அடியம்மா! எனக்கு வாத்தியார் என்றாலே பிடிக்காது. ஒரு நாளைக்காவது விஷமம் செய்யாமல் இருந்தால் எனக்குத் தலை வெடித்துப் போகும்!" என்று தலையை அசைத்து அபிநயம் செய்துகொண்டே சொன்னாள் பங்கஜம். எனக்குச் சிரிப்பாக வந்தது.

அதற்குள் யாரோ அவளை அத்திம்பேர் கூப்பிடுவதாகச் சொன்னதால், அவள் என்ன ஆக விரும்பினாள் என்று கேட்க முடியவில்லை.

அன்று சாயங்காலம் பாட்டுக் கச்சேரி நடந்துகொண்டிருந்தது. பந்தலுக்குள் வரவேரும் போவோருமாக இருந்தனர். நான் பந்தலுக்கு வெளியே நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தேன். "பத்து, உனக்கு நன்றாகக் காற்றுடி விடத் தெரியுமா?" என்று பங்கஜம் அங்கே வந்து கேட்டாள்.

"ஓ! நன்றாகத் தெரியுமே!" என்று சொல்லி, அவளோடு ஓடினேன்.

நாங்கள் ஜயத்தின் வீட்டு மொட்டை மாடிக்குப் போனோம். ஜயத்தின் கையில் இருந்த காற்றுடியைப் பங்கஜம் என்னிடம் வாங்கிக் கொடுத்து, "அதோ பறக்கிறது பார், ஒரு காற்றுடி! அதற்கு மேலே நீ இந்தப் பச்சைக் காற்றுடியைப் பறக்கவிட வேண்டும்" என்றாள்.

பச்சைக் காற்றுடி மெல்ல மெல்ல மேலே பறந்தது; சிறிது நேரத்தில் நீல ஆகாயத்திலே ஒட்டிக்கொண்டு, காற்றலைகளில் மிதக்க ஆரம்பித்தது. சூரிய வெளிச்சத்தில் பளபளத்த அதன் வர்ணம் மனத்தை மயக்கியது. உயரத்தில் பறந்துகொண்டிருந்த தன் காற்றுடியை இதனோடு மோதவிட விரும்பினாள், நாலைந்து வீடு தள்ளி நின்றிருந்த ஒரு பையன்.

நான் காற்றுடியைச் சிறிது சாய்த்தாற்போலக் கீழே இழுத்தேன். அது கிர்ரென்று சுழன்றுகொண்டே வந்து, மறுபடி மேலே பறக்கலாயிற்று. மற்றொரு காற்றுடி கிழிந்து போயிருந்தது.

அதைக் கண்ட ஜயாவும் பங்கஜமும் கலகலவென்று நகைத்துக் கைகொட்டிக் குதித்தார்கள்.

"என் காற்றுடி பெரிய வீரன்!" என்று ஜயா பெருமை பேசிக்கொண்டாள்.

"நீ வாத்தியாராவது எனக்குப் பிடிக்கவில்லை. காற்றுடி விடுவதுதான் பிடித்திருக்கிறது" என்று கூறி, பங்கஜம் என்னைப் பெருமிதத்தோடு பார்த்தாள்.

மறுநாள் நான் அப்பாவோடு ஊருக்குத் திரும்பினேன். இந்தச் சம்பவம் நாளடைவில் மறந்துபோயிற்று.

மாம்பலம் ஸ்டேஷனில் வண்டி வந்து நின்றது. நான் இறங்கி, அப்பா கொடுத்த விலாசத்தை வைத்துக்கொண்டு, தியாகராய நகரில் அத்தையின் பங்களாவைத் தேடிச் சென்றேன்.

வாசலில் பங்கஜம் நின்றிருந்தாள். என்னைக் கண்டதும், "வா, பத்து, வா!" என்று ஆனந்தமாக வரவேற்றாள். நான் அவளை ஓரளவு மறந்திருந்த போதிலும், அவளுக்கு எவ்வளவு உறுதியான ஞாபகம்! "அம்மா, இதோ யார் வந்திருக்கிறார்கள், பார்!" என்று கூவிக்கொண்டே மாடிக்கு ஓடினாள்.

அத்தை மாடியிலிருந்து இறங்கி வாசல் தாழ்வாரத்துக்கு வந்தாள்.

"இப்போதாவது வழி தெரிந்ததாப்பா உனக்கு? ஊரிலே எல்லாரும் சௌக்கியமா?" என்று க்ஷேமம் விசாரித்தாள்.

அப்பா கடிதம் கொடுத்து அனுப்பிய தக வலைச் சொன்னேன். அத்திம்பேர் ஆபீசுக்குப் போய்விட்டிருந்தார். அத்தை அந்தக் கடிதத்தை வாங்கிக்கொண்டாள்.

"சரி, ஸ்நான அறைக்குப் போய் முதலில் குளித்துவிட்டு வா. எல்லாரும் ஒன்றாகச் சாப்பிடப் போவோம்" என்றாள்.

நான் ஸ்நானம் செய்து வந்ததும், யாவரும் சாப்பிட உட்கார்ந்தோம். பங்களாவையும் அதைச் சுற்றியுள்ள தோட்டத்தையும் பார்த்து வியந்தவாறே உட்கார்ந்தேன். பங்கஜம் குறும்புப் பார்வையால் என்னை அடிக்கடி பார்த்துக்கொண்டு இருந்தாள். சமையற்காரன் பரிமாறினான். 'என்ன இருந்தாலும் அப்பாவின் சமையல் ருசி இதற்கு வராது' என்று நினைத்தேன். அதே சமயத்தில் அத்தை, "ரசம் என்றால், அண்ணா சமைத்துச் சாப்பிட வேண்டும்" என்றாள். அவளுக்கு எப்படித் தெரியுமோ, இதெல்லாம்!

"சிறிது நேரம் இளைப்பாறு. சாயங்காலமாக அத்திம்பேர் வந்ததும் நான் எல்லாம் சொல்லுகிறேன்" என்றாள் அத்தை.

பங்கஜம் என்னை மாடிக்கு அழைத்துப் போனாள். விசாலமான ஹாலில் குளுகுளு என்று ரத்தினக் கம்பளம் விரித்திருந்தது. அலைகளிலே நடப்பதுபோல இருந்தது எனக்கு. எங்கே பார்த்தாலும் அலங்காரப் பொருள்கள்; அழகிய படங்கள்; அலமாரிகள் நிறையப் புத்தகங்கள். இது வரையில் பார்த்திராத ஓர் உலகத்துக்கு நான் வந்திருந்தேன்.

வெற்றிலை பாக்குப் போட்டுக்கொண்டு அத்தையும் மாடிக்கு வந்தாள். அப்பா அம்மாவைப்பற்றியும் கோமளத்தைப்பற்றியும் விரிவாக விசாரித்தாள். பிறகு நான் கொட்டாவி விடுவதைக் கண்டு, "ஈவிடி காலியில் எழுந்து வந்திருப்பாய். சற்று நேரம் நிம்மதியாய்த் தூங்கு" என்றாள்.

அந்த இலவம் பஞ்சு மெத்தையிலே, ஸ்பிரிங் கட்டில் தாய்போலத் தாலாட்ட, கண்ணயர்ந்ததுதான் எனக்குத் தெரியும். பிற்பகலில் அத்தை வந்து காபி சாப்பிட எழுப்பியபோது, கனவுப்புத் தீர்ந்து விழித்துக்கொண்டேன்.

சாயங்காலம் அத்திம்பேர் ஆபீசிலிருந்து வந்ததும் அத்தை அப்பாவின் கடிதத்தை அவரிடம் கொடுத்தாள். அவர் அதைப் படித்ததும், ஏதோ பேச வாயெடுத்தார். பிறகு சிறிது யோசனை செய்தார். அதில் அடங்கியுள்ள சமாசாரம் இப்போது தெரிந்துபோகும் என்று நினைக்கலானேன்.

(தொடரும்)

சின்னதும் பெரியதும்

இடையின ரகரம், வல்லின றகரம் என்று சொல்வது தமிழில் வழக்கம். இப்போது பள்ளிக்கூடத்து வாத்தியார்கள் கூட, "சின்ன ர, பெரிய ற" என்று சொல்லுகிறார்கள். வல்லின றகரம் உச்சரிப்பதற்கும் கவனித்து எழுதுவதற்கும் இந்தக் காலத்தில் சற்றுச் சிரமமாக இருப்பதால் 'பெரிய ற' ஆகிவிட்டது.

இந்தச் சின்னதும் பெரியதும் வரும் வார்த்தைகள் பலருக்கு மயக்கத்தை உண்டுபண்ணுகின்றன.

"இதை நிறைவேற்ற வேண்டியது என் பொறுப்பு" — பொறுப்பு என்பதற்குப் பதிலாகப் பொருப்பு என்று எழுதுவது பிழை. பொறுப்பு என்பதற்கு, பொறுக்கும் பாரம் அல்லது கடமை என்பது பொருள்.

"வண்டி வரும் தறுவாயில் நான் வந்து காத்திருக்கிறேன்." — தறுவாய் என்பதுதான் திருத்தமான உருவம்; தருவாய் என்பது பிழை. தருணம் என்ற வடமொழிச் சொல் ஒன்று இருப்பதால் இந்த மயக்கம் அதிகமாகிறது. தறுவாய்-தற்றவாய்; குறிப்பிட்ட துண்டான நேரம்.

"கறுப்பு நிறம்" என்பதுதான் சரியான சொல்; கருப்பு என்பது பிழை; கருமை என்று வேறொரு சொல் இருப்பதால் இந்த மயக்கம் அதிகமாகிவிடுகிறது.

அருவருப்பு என்பதை அருவெறுப்பு என்றோ அறுவெறுப்பு என்றோ எழுதுவது பிழை.

நாலாதிசை

"நாலாபக்கமும் பார்த்தான்", "நாலா திசைகளிலும் தேடினான்" என்று சிலர் எழுதுகிறார்கள். நாலு பக்கமும், நாலு திசைகளிலும் என்று எழுதுவதுதான் சரி. வடமொழியில் பலவகையான என்ற பொருளில் நானா என்ற சொல் ஒன்று உண்டு. நானாவிதம் என்று வருகிற தல்லவா? எல்லாப் பக்கங்களிலும் பார்த்தான் என்ற அர்த்தத்தில் நானா திசைகளிலும் பார்த்தான் என்று எழுதத் தொடங்கி அது நாலா என்று மாறிவிட்டது; அல்லது நானா என்ற சொல்லின் ஞாபகம் நாலு என்பதை நாலா ஆக்கிவிட்டது.



முதற் பூ

ஜோதி

1

பதியம் வைத்துப் பாடுபட்டுப்
பச்சைக் கொழுந்து விடக்கண்டு
நிதியம் பெற்ற பேறெனவே
நினைந்தோம் ; குண்டு மல்லிகைதான்
புதிய அரும்பு விட்டொருநாள்
பூக்கும் என்று காத்திருந்தோம் ;
முதிய இலையை உருவிவிட்டோம் ;
மொட்டுக் காண வில்லையரோ !

2

ஒருநாள் என்றன் காதலிதான்
ஓட்ட மாக ஓடிவந்தாள் ;
திருநாள் வரப்போ கின்றதென்றே
சிரித்துக் கூவிக் குதுகலித்தாள் ;
வருமோ என்று காத்திருக்கும்
மல்லி கைப்பூ மலருமென்றே
திருவாய் மலர்ந்தாள் ; எனக்குமனம்
சிறிதே மலர்ந்துள் உவந்ததுவே.

3

"எங்கே எங்கே பார்த்திடுவோம் !"
என்றே அவளோத் தொடர்ந்தோடி
அங்கே சென்றேன் ; ஆச்சரியம் !
அரும்பு கட்டி ஒருகொத்து
எம்கா தலுக்கோர் உருவென்ன
இலங்கக் கண்டேன் ; முதற்பூவை
இங்கார் பறிப்ப தென்னுமொரு
விவாதம் எமக்குள் எழுந்ததுவால்.

4

"நான்முன் பறிப்பேன் மோந்திடுவேன்"
என்றாள் அவள் ; நான் கைமறித்தே,
"ஏன்முன் இந்த ஆத்திரம் ? நான்
எல்லாப் பொருட்குந் தலைவனன்றோ ?
சான்றோர் கணவன் உயர்வெனவே
சாற்று வதைநீ கேட்டிலையோ ?
தேன்முன் ஒத்த மொழியாய் ! நீ
சிறிதே எண்ணிப் பார்" என்றேன்.



5

"இந்தப் பூமி தனிலாண்கள்
எல்லாப் பொருட்கும் உரியரென்ப
தந்தக் காலம் ; மகளிரெலாம்
அடிமை என்றல் பழையகதை ;
எந்தப் பொருளும் யாவர்க்கும்
உரிய தென்ப தேயின்று
மூந்தப் பரவும் உண்மை; இதை
மூற்றும் மறுத்தல் கூடுமோ ?"

6

என்றாள் ; மேலே வளர்ப்பதனால்
ஏதும் பயனின் றென்றெண்ணி
"நன்றாய் நின்றன் விருப்பம்போல்
செய்வாய்" என்று நவின்றனன்யான்.
"இன்றே நீங்கள் பெண்ணுரிமைக்
கிசையும் உள்ளம் கொண்டீர்கள் ;
நன்றே ! நன்றே !" என்றுரைத்து
நகைத்தாள் பெண்டிர் வலியென்னே !

7

கோடி கொடுத்த தன்மைபோல்
குண்டு மல்லி கைக்கொடியில்
நாடி நின்ற பூவொன்று
மலர்ந்த தென்று நாமறிந்தோம்.
ஓடி யாங்கள் இருவோரும்
உற்றோம் அங்கே ; காதலியோ
பாடி மகிழ்ந்தாள் ; ஆடிநின்றாள் ;
பறித்தா ளல்லள் அம்மலரை.

8

"பறிக்க மனசு பொருந்தவில்லை ;
பறித்து நீங்கள் கொள்க "என்றாள்.
குறித்த படியே அவள்பறிக்கக்
கூசு கின்றாள் எனஅறிந்தேன்.
தெறித்த மொழியில் அவளொடன்று
கலகம் செய்து சிணுங்கியயான்
நெறித்த புருவத் தொடுநின்றேன் ;
நெஞ்சு பறிக்கத் துணியவில்லை.

9

நாங்கள் வளர்த்த மல்லிகையாம்
நங்கை பூவால் நகைகொண்டாள் ;
ஏங்கி இருந்த நாங்கள்அந்த
எழிலார் நகைகண் டின்புற்றோம் ;
தாங்கு மலரைப் பறித்துவிடல்,
தழைத்த கொடியின் அழகழித்துத்
தீங்கு செய்வ தாமென்றே
திகைத்தோம்;பறித்தல்விடுத்தோமே!



டாக்டர் தி. சே. செள. ராஜன்

"இளவரசர் இந்தியா விஜயம்" இரண்டு தலைமுறையாக நமது நாட்டில் நடக்கும் ஒரு வைபவம். 1858-ஆம் வரு நடந்த சிப்பாய்க் கலகம் என்று சொல்லப்பட்ட சுதந்தரப் போராட்டம் தோல்வியுற்று ஆங்கிலக் கம்பெனிக்காரர் ஆட்சி முடிவடைந்தது. சீமையிலிருந்து வியாபாரம் செய்ய வந்த கம்பெனிக்காரர்கள் வராளமான சலுகைகளையும், வரவேற்புகளையும் இந்திய சமஸ்தானங்களிலிருந்து பெற்று உபசரிக்கப் பட்டார்கள். நாளடைவில் அவர்களே அறியாமலே நமது நாட்டின் பெரும் பாகம் அவர்கள் கைக்கு வந்துவிட்டது. அவர்கள் செய்த சூழ்ச்சிகளுக்கு அளவில்லை. சீமையில் இருந்த அரசாங்கம் அவர்களுக்கு உதவியும் பலமும் அளித்தது. கடைசியாக ஆங்கில ராணியார் இந்தியாவுக்கு மகாராணி ஆனார்கள். அதன் பிறகு ஆங்கில சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இந்திய அமைந்துவிட்டது. ஆட்சிபுரிந்த விக்டோரியா ராணியாரின் புருஷரும், பிறகு அவர் குமாரராகிய இளவரசரும், அவர் பேராகிய இளவரசரும் நமது நாட்டிற்கு ஒரு தரம் வந்து போவது வழக்கமாயிற்று. இது பழையகாலத்து மன்னர் ஆட்சியின் மிகுதியான ஒரு சின்னம். தாங்கள் ஆள இருக்கும் நாட்டைத் தாங்கள் பட்டம் கட்டிக்கொண்டு சக்கரவர்த்தியாகச் சிங்காதனம் ஏறுவதற்கு முன்பே வந்து குடிகளுக்குக் காட்சியளித்துப்போவது முறை. அவர்கள் வந்து போவதால் நாட்டிற்கும் மக்களுக்கும் யாதொரு லாபமும் இல்லை. பணச்செலவும் ஆடம்பரங்களும் பதவி பட்டம் பெறுபவர்களுக்கு உல்லாசத்தை அளிக்கலாம். மக்களிடத்துப் பணம் வசூலித்து வரவேற்புகள் நடக்கும். மக்கள் அழைப்பின் பேரில் இளவரசர்கள் வருவது இல்லை.

நாம் கோரியவை எல்லாம் அரசியலில் நமக்குக் கிட்டாமல் புறக்கணிக்கப்பட்டதால் இளவரசரை வரவேற்பதில் நாம் கலந்துகொள்ளக்கூடாது என்று காங்கிரஸ் 1921-ஆம் வருஷத்தில் தீர்மானித்தது. "இளவரசர் மேல் நமக்கு யாதொரு கோபமும் இல்லை. ஆனால் நமது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டு, உல்லங்கனம் செய்யப்பட்டதால், நமது மனத்தில் இருக்கும் வருத்தத்தினால் வரவேற்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக்கூடாது" என்பது தீர்மானம். காங்கிரஸ் தீர்மானம் மக்களின் மனத்தைக் கவர்ந்தது. பம்பாயிலும், சென்னையிலும் அவரிச்சை முறைக்கும், காங்கிரஸ் தீர்மானத்திற்கும் விரோதமாக மக்கள் நடந்துகொண்டார்கள். அதிகாரிகளும் குழப்பத்தை அடக்கும் முறையில் தப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். பம்பாயில் ஐம்பத்து மூவர் இறந்தனர். நானூறு பேர்களுக்கு மேலே காயமடைந்தார்கள். காந்திஜி கூட்டத்தில் சென்று அமைதி உண்டுபண்ண முயன்றார். மக்களின் ஒழுங்கினத்திற்காக அவர் ஐந்து நாட்கள் உபவாசம் இருந்து தமது தியாகத்தை ஒருவாறு சமாளித்துக்கொண்டார்.

தமிழ் மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைமைக் காரியாலயம் அக்காலத்தில் திருச்சியில் இருந்தது. சென்னையிலுள்ள ஜில்லாக் கமிட்டியின் தலைவர்கள் இளவரசர் பகிஷ்காரத்தில் ஊக்கம் காட்டவில்லை. எனினும் தொழிலாளர் சமூகம் ஒருமுகமாகக் காங்கிரஸ் தீர்மானத்தை ஆதரித்தது. அதற்கு வேண்டிய பிரசாரம், அமைதி நிலவவேண்டிய முயற்சி எல்லாம் செய்வதற்காக ஒரு வாரம் நான் சென்னையில் தமிழ் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி என்கிற முறையில் தங்கியிருந்து வேலை செய்தேன். அப்பொழுது சென்னையில் ஜஸ்டிஸ் கட்சி ஆதிக்கம் பெற்றிருந்தது. அன்றைத்தினம் கடை அடைப்புச் செய்யவேண்டும் என்று நாங்கள் முயன்றோம். அதிகாரிகளும், ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களும் கடைகளை மூடக்கூடாது என்று பாடுபட்டார்கள். கொத்தவால்சாவடி மார்க்கெட்டை மூட வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை. அதற்காக நானும், கல்யாணசுந்தர முதலியாரும், சிங்காரவேலுச் செட்டியாரும், சாமி வேங்கடாசலம் செட்டியாரைக் கண்டோம். எங்களுக்கு அன்று அவர் சொல்லியதை நான் இன்றும் மறக்கவில்லை. "நாங்கள் கடை அடைப்புச் செய்வதில்லை என்று தீர்மானித்துவிட்டோம். கொத்தவால்சாவடி திறந்திதான் இருக்கும். நீங்கள் அதற்கு எதிராக முயற்சி செய்வது பலிக்காது" என்று அவர் சொல்லிவிட்டார். "சரி

கனைத்தினம் பார்க்கலாம்" என்று சொல்லித் திரும்பிவிட்டோம். அன்றிரவு கவர்னர் பிரபுவே மார்க்கெட்டிற்குச் சென்று கடை மூடக்கூடாது என்று சொன்னதாகக் கேள்விப்பட்டோம்.

மறுநாள் காலையில் இளவரசர் சென்னைத் துறைமுகத்தில் இறங்கினர். வரவேற்பு, பந்தோபஸ்து முதலியவை ஆடம்பரமாகவே செய்யப்பட்டிருந்தன. வழியின் இரு புறங்களிலும் பொதுமக்கள் உட்காருவதற்குக் 'காலரி' போடப்பட்டுச் சிறு கட்டணம் கொடுப்பவர்களுக்கு இடம் அளிக்க ஏற்பாடுகள் நடந்திருந்தன. ஆனால் கூட்டம் அதிகம் கூடவில்லை. கூடின சிலரும் பணம் கொடுத்து உட்காரப் பிரியப்படவில்லை. இளவரசர் குழுவினர் வலம் வருவதற்குச் சிறிதுநேரம் வரையில் காத்திருந்து விட்டு, கண்டிராக்டர்கள் அங்கு இருப்பவர்களை வலுவில் அழைத்துக் கட்டணம் கொடாமலே உட்காரும்படி வேண்டினர்கள். அப்படியும் காலி பெஞ்சுகள் அதிகமாகக் காணப்பட்டன. உடனே பைத்தியக்கார ஆஸ்பத்திரி, ஜெனரல் ஆஸ்பத்திரி முதலிய இடங்களிலுள்ள, நடக்கக் கூடியவர்களை எல்லாம் கொணர்ந்து காலி ஸ்தானங்களை நிரப்பிவிட்டார்கள்.

"அஹிம்சா முறையைக் கைப்பற்ற வேண்டும். இளவரசர் வரவேற்பில் கலந்துகொள்ளப் பிரியம் இருப்பவர்களைக் கட்டாயப் படுத்தித் தடுக்கக்கூடாது" என்று பன்முறை பிரசங்கங்களிலும், துண்டுப் பிரசுரங்களிலும் விளம்பரம் செய்திருந்தோம். கலவரம் ஏற்படும்போல இருந்தால் அந்த இடத்தில் 'ஹர்த்தால்' நடத்தக் கூடாது என்று காந்திஜி தெளிவாகச் சொல்லியிருந்தார். கட்டுக்கு மீறிக் கலவரம் ஏற்பட்டால் அதற்குப் பொறுப்பாளி "இளவரசர் பகிஷ்காரக் கமிட்டியார்" என்றும், பொதுக் கூட்டங்களில் முதல் நாள் இரவு வரையில் ஓயாது சொல்லி வந்தோம். இளவரசர் சென்னையில் இறங்கிய தினம் ஆலைகளுக்கும், பள்ளிக்கூடங்கள் முதலிய எல்லாப் பொது ஸ்தாபனங்களுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டது. வேலைக்குப் போக வேண்டிய அவசியம் இல்லாதபடியால் ஜனங்கள் கூட்டம் கூட்டமாகப் பல தெருக்களிலும் வந்து யார் யார் வரவேற்பு வேடிக்கை பார்க்கப்போகிறார்கள் என்று பரர்ப்பதற்காகக் கூடிவிட்டார்கள். நான் அன்று காலையில் சூளை, புரசைபாக்கம், பிரம்பூர் முதலிய இடங்களுக்குச் சென்றேன். தெருவெல்லாம் ஏகக் கூட்டம். வரவேற்பிற்குப் போகிறவர்கள், போகவேண்டியவர்கள் இவர்களை எல்லாம் ஜனங்கள் கேலி செய்துகொண்டிருந்தார்கள். பயந்தவர்கள் சிலர் சீமந்தகொண்டு செல்லாமல் வீடு திரும்பிவிட்டார்கள். மற்றவர்கள், வண்டியிலோ, டிராம் காரிலோ ஏறிச் சென்றார்கள். நான் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது கூட்டத்தில் ஒருவர், ஒரு கோலை எடுத்துக் கொண்டு, டிராம் காரின் மேற்புறத்தில் இணைக்கப்பட்டிருக்கும் கம்பியை இழுத்து டிராமை நிறுத்திவிட்டார். உடனே சாலு பக்கங்களிலிருந்தும் கல் வீசப்பட்டது. டிராம் வண்டியின் கண்ணாடிகள் உடைந்து தெறித்துவிட்டன. டிராம் ஓட வில்லை. அதில் ஏறி இருந்தவர்கள் திடுக்கிட்டு இறங்கிவிட்டார்கள். டிராம் ஓட்டியும், கண்டக்டரும் வண்டியை அப்படியே தெருவில் நிறுத்திவிட்டு ஓடிவிட்டார்கள். கமிட்டி அங்கத்தினர்கள் ஒருவராகிலும் அங்கே காணப்படவில்லை.

உடனே அங்கே கூடியிருப்பவர்களை அக்கிரமம் செய்யாதிருக்கும்படி வேண்டிக்கொண்டேன். உடனே கூட்டம் கலைய ஆரம்பித்தது. அங்கிருந்து கால்டையராகவே மவுண்ட் ரோடு சென்ற வெல்லிங்க்டன் சினிமாவை நெருங்கும்பொழுது அங்கே எல்லாம் ஒரே களேபரமாக இருந்தது. எங்கே பார்த்தாலும் சிப்பாய்களும், போலீஸ்காரர்களும், மூடுபீரங்கி வண்டிகளுமாக இருந்தன. சினிமாக் கட்டிடத்தில் ஜன்னல், கதவுகள், கண்ணாடிகள் எல்லாம் உடைபட்டு இறைந்து கிடந்தன. விசாரித்ததில் சினிமாவின் சொந்தக்காரர் அந்தக் கட்டிடத்தின் மேல்மெத்தையிலிருந்து தம் கைத்துப்பாக்கியால் கூட்டத்தைச் சுட்டதாகவும் அதன் காரணமாகக் கூட்டத்தில் இருந்த ஒரு முஸ்லிம் இறந்துவிட்டதாகவும், அதன்பேரில் கோபமூண்ட கூட்டம் சினிமாவில் புகுந்து அட்டூழியம் செய்ததாகவும் கேள்விப்பட்டேன். அன்று முழுவதும் சென்னைத் தெருவிலெல்லாம் கூட்டம்.

வரவேற்புக்காகக் கட்டியிருந்த வளைவுகள், அலங்காரங்கள் எல்லாம் சின்னபின்னமாக்கப்பட்டு, சில இடங்களில் நெருப்பில் இடப்பட்டு எரிந்துகொண்டிருந்தன. நல்ல வேளையாக அன்றைத்தினம் சென்னைப் போலீஸ் அதிகாரிகள், இந்த அமளியில் தலையிட்டுக்கொள்ளாமல் வெகு பொறுமையுடன் இருந்தார்கள். அப்படி இருந்திராவிட்டால் பலர் உயிரிழக்க நேரிட்டிருக்கும். அன்றைத்தினம் கடைகளும், கொத்தவால்சாவடியும் இதுவரையில் பார்த்திராவண்ணம் அடைபட்டுக் கிடந்தன. அன்றிரவு சென்னையில் நான் கண்ட காட்சிகளையும், கூட்டத்தின் போக்கையும் பற்றி மகாத்மாஜிக்கு நீண்ட அறிக்கை எழுதிவிட்டு மன வருத்தத்துடன் படுக்கச் சென்றேன். அந்த வார "யங் இந்தியா"வில் சென்னைநிகழ்ச்சிகளைப்பற்றி வருந்திக் காந்திஜி ஒரு தலையங்கம் எழுதி மக்களைக் கண்டித்திருந்தார். அதில் என் கடிதவிவரங்களில் முக்கியமான பாகத்தையும் வெளியிட்டிருந்தார். அதைக் கண்டதும் சென்னையில் வெகு நண்பர்களுக்கு என்மேல் கோபம். பொது வாழ்வில் உண்மை எவ்விதம் வேலை செய்கிறது என்பதை ஒருவாறு இதனின்றும் அறிந்துகொண்டேன்.

காங்கிரஸ் ஒத்துழையாமைத் திட்டம் விரிவாக நடைபெற்றுவந்தது. காங்கிரஸ் அங்கத்தினர்கள் சேர்ப்பது, தலைகர் ஸ்வராஜ்ய நிதி திரட்டு

வது, கள்ளுக்கடைகளே மறியல் செய்வது, கள் குடிப்பவர்களைக் குடியை ஒழிக்கும்படி வேண்டுவது முதலிய வேலைகளில் காங்கிரஸ் தொண்டர்கள் ஈடுபட்டார்கள். முக்கியமாகக் கள்ளுக்கடை மறியலில் பொதுமக்களின் மனம் ஈடுபட்டது. குடிப்பவர்கள் வெட்கத்தினாலோ அல்லது பயத்தினாலோ குடிக்க முன்வரவில்லை. கள்ளுக்கடை வியாபாரம் நடைபெறவில்லை. கள்ளுக்கடை முதலாளிகள் தங்களுக்குக் குத்தகைக்குக் கொடுத்த சர்க்கார் உத்தியோகஸ்தரிடத்தில் முறையிட்டார்கள். சர்க்காருக்குக் கட்டவேண்டிய பணம் கட்டமுடியாது. வியாபாரம் நடக்கவில்லை. காங்கிரஸ் தொண்டர்களின் மறியல் நின்றால் ஒழியச் சர்க்கார் வருமானம் சரிவரக் கிடைக்காது. சரியான வருவாய் இல்லாமல் அதிகாரவர்க்கம் அமல் நடத்த முடியாது. தொண்டர்களோ சட்ட விரோதமாக நடந்து தண்டனைக்கு ஆளாகும் முறையில் மறியல் செய்யவில்லை. கள்ளுக்கடை ஏலம் எடுத்து விற்பனை செய்யும் முதலாளிகளில் ஒரு கூட்டம் என்னைக் கண்டு தங்கள் கஷ்டத்தைத் தெரிவித்தார்கள். காங்கிரஸ் சபைக்கு உருவான ஒரு தொகை நன்கொடை அளிப்பதாகவும் உறுதி கூறினார்கள். எப்படியாகிலும் கள்ளுக்கடை மறியல் நிறுத்தப்படவேண்டும் என்பது அவர்களது கோரிக்கை. "கள்ளுக்கடைக்காரர்களுக்காக மறியலை நிறுத்துவதா? மக்களிடம் குடிப் பழக்கத்தை நிறுத்த வேண்டும் என்பது காங்கிரஸ் தீர்மானம். அது நியாயமான முறையில் நடைபெற உழைக்க வேண்டியது எங்கள் கடமை. மறியலைத் தவிர வேறு முறையில் திவிரமான பிரசாரமோ, தடையோ சட்ட உதவியின்றிச் செய்ய முடியவில்லை. ஆகையால் மறியலை நிறுத்த முடியாது" எனச் சொல்லிவிட்டேன். போகும்போழுது கள்ளுக்கடைக்காரர்களில் ஒருவர் மட்டும் எனக்கு எச்சரிக்கை செய்துவிட்டுப் போனார். "நீங்கள் எல்லோரும் கல்ல பதவியிலிருந்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருக்கிறீர்கள். வீணை அதிகாரிகளின் கோபத்திற்கும், அதன்பின் நேரிடும் பலவிதமான தொல்லைகளுக்கும் ஆளாக வேண்டாம் என்று தங்களுக்குச் சொல்லிவிட வேண்டியது என் கடமை. பிறகு உங்கள் இஷ்டம்" என்பது அவர் உபதேசம்.

கள்ளுக்கடைக்காரர்களின் எச்சரிக்கை வீண் போகவில்லை. மறியல் செய்த ஒரு கள்ளுக்கடையை ஒரு ஈசல் இரவு யாரோ நெருப்பிட்டுக் கொளுத்திவிட்டார்கள். கடை எரிந்து போயிற்று. இதை யார் செய்தார்கள் என்பதைப் போலீஸ்காரர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. மறியல் செய்தவர்களே காரணம் என்ற முடிவிற்கு அதிகாரிகள் வந்துவிட்டார்கள். சத்தியாக்கிரக முறைப்படி நெருப்பிட்ட பழி காங்கிரஸைச் சார்ந்தது. அதன் நிர்வாகஸ்தர்களுக்கு மறியல் நடத்துவதற்குப் போதுமான அளவு பொதுமக்களின் நன்மதிப்புக் கிடையாது என்று சொல்லக்கூடும். சத்தியாக்கிரகத் தத்துவத்திற்கு மூல புருஷரான காந்திஜியின் அபிப்பிராயம் இதுதான். எந்த இடத்தில் சத்தியாக்கிரக இயக்கம் நடந்தாலும், அங்கே பொதுமக்களிடம் ஒழுங்கு, நியாய உணர்ச்சி, அமைதி, சகிக்கும் தன்மை இவைகள் இல்லாவிட்டால் பொதுஜன சத்தியாக்கிரகம் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் அதற்குச் சத்தியாக்கிரகிகளே பொறுப்பாளிகள் என்பது அவரது கொள்கை. இதை ஒட்டியே பல தடவைகளில் சத்தியாக்கிரகத்தை நிறுத்தியும், அச்சமயம் நடந்திருக்கும் கொடுமைகளுக்குப் பிராயச்சித்தமாகத் தாம் பல தடவைகளில் பட்டினி கிடந்தும், உயிருக்கு மன்றாடும் நிலையிலும் இருந்திருக்கிறார். தனிப்பட்ட ஒவ்வோர் ஆணும் பெண்ணும் ஒரு சமூகத்தில் தேவையான அளவு பொறுமையோடு தாண்டப்பட்ட பொழுதிலும் தன் ஆத்திரத்தை அடக்கி நடக்க முடியுமா என்பது வேறு கேள்வி. சத்தியாக்கிரகி அஹிம்சா முறையில் தனது எதிர்ப்பைப் புலப்படுத்துவானுகில், தன்னைச் சுற்றிலும் அமைதி நிலவவேண்டிய பராமும் அவனைச் சார்ந்தது. தன் உயிரைக் கொடுத்தாகிலும் அந்தக் குழப்பத்தை அவன் தடுக்கவேண்டும். யுத்தகளத்திலுள்ள போர்வீரனைப் போலவே தனது உயிரை அஹிம்சா முறையில் தியாகத்திற்கென அர்ப்பணம் செய்துவிடவேண்டும். இந்த மனப்பான்மையும் சாதனையும் இல்லாவிட்டால் மனிதன் சத்தியாக்கிரகி என்று சொல்லிக்கொள்ள முடியாது. ஆகையால் கள்ளுக்கடைக்கு நெருப்பு வைத்துக் கொளுத்திய பொறுப்பு திருச்சியில் எங்களைச் சார்ந்ததுதான்.

மறியலை நிறுத்திவிட்டோம். குடிப்பவர்களும் தங்கு தடையின்றி இவ்வளவு நாட்கள் குடிக்காமல் இருந்ததையும் சேர்த்துக் கள்ளுக்கடைப் பானைகளைக் காலி செய்தார்கள். ஆனால் எங்கள் தொண்டர்களுக்குத் தாங்கள் செய்த வேலை பயனற்றதாகிவிட்டது என்ற மனஸ்தாபம் உண்டாயிற்று. கோபம் ஒரு புறம்; வெறுப்பு மற்றொரு புறம். "எவனே நெருப்பு வைத்து விட்டுப் போனால் அதற்கு நாம் எவ்விதம் பொறுப்பாளியாக முடியும்?" என்று வாதாடினார்கள். சத்தியாக்கிரக தர்மத்தின் தத்துவம் அவர்களால் அறிய முடியவில்லை. முடிந்தாலும் பின்பற்றுவது அசாத்தியமாகத் தோன்றியது. நிர்வாகிகளான எங்களுக்கும் அவர்களது ஊக்கத்தையும், தியாக உணர்ச்சியையும் தடுக்க முடியவில்லை. மறுபடியும் ஒரு பொதுக்கூட்டம் போட்டுக் குறிப்பிட்ட ஒரு தேதியில் மறியல் தொடங்க வேண்டும் என்று தீர்மானித்தோம். கள்ளுக்கடைகளுக்கு எவ்விதமான தீங்கும் ஏற்படாவண்ணம் தகுந்த பிரசாரமும் பாதகாப்பும் செய்ய முயன்றோம்.

அந்தச் சமயம் காங்கிரஸ் பிரசாரம் செய்யும் பொருட்டுக் கும்பகோணம் சென்றிருந்தோம். திருச்சி போலீஸ் அதிகாரிகளால் எங்களைப் "பொதுஜன அமைதியைக் குலைப்பவர்கள்" என்கிற கூட்டத்தின் கீழ் ஒரு வருஷத்திற்கு நன்னடத்தை ஜாமீன் கொடுக்கும்படியான சட்டத்தின் கீழ்ச் சிறையில் வைப்பதற்கான வாரண்டு பிறப்பிக்கப்பட்டது. வாரண்டை எடுத்துக்கொண்டு கும்பகோணம் வந்த போலீஸ் அதிகாரிகள், ராஜமான கூட்டத்தின் மத்தியில் எங்களைச் சிறைப்படுத்த முற்படாமல் இரவு கும்பகோணத்திலிருந்து புறப்பட்டுத் திருச்சி வரும் ரெயிலில் சுமார் பதினொரு மணிக்கு, சுந்தரப் பெருமாள் கோயில் ஸ்டேஷன் தாண்டியபிறகு என்னையும் என் நண்பர் டாக்டர் சாஸ்திரியாரையும் கைது செய்தார்கள். அன்றிரவே திருச்சி சென்டிரல் ஜெயிலில் இரண்டு மணிக்கு அடைக்கப்பட்டோம்.

அன்றுவரையில் சிறைக்கூடம் என்பது எப்படி இருக்கும் என்பதை அறியாத எனக்குப் பெரிய அதிர்ச்சி உண்டாயிற்று. சிறைவாசல் கதவு திறக்கப்பட்டு உள்ளே நுழைந்தவுடன் இதுவரையில் பாராத ஒரு புதிய உலகத்தில் புகுந்த உணர்ச்சி ஏற்பட்டது. ஜெயிலருடைய சோதனைகள், பெயர் பதிவு முதலியவை அந்த நேரத்திலும் முறைப்படி நடந்தன. எங்களைச் சிறைக்கு அழைத்து வரும் செய்தி கடுங்காவலுக்கு அப்புறம் கிடைத்தமையால் விடியும் வரையில் சிறையில் சமையல் செய்வதற்குக் கொண்டுபோகப்பட்ட வர்கள் இருந்த அறையில் நாங்கள் அடைக்கப் பட்டோம். அறையில் மூத்திர நாற்றம் சகிக்க முடியவில்லை. திடீரென்று சிறைப்பட்ட அதிர்ச்சி, விடியற்காலை நேரத்தில் மூத்திர அறையில் அடைக்கப்பட்டது, பிறகு என்னை அந்நேரத்தில் பார்க்கவந்த சிறைத் தலைமை அதிகாரியின் கண்காணிப்பு - இவைகளை எல்லாம் அநுபவித்தபிறகு உறக்கம் எங்கிருந்து வரும்? விடியும்வரையில் ஒரு கிழிந்த கயிற்றுப்பாயில் உட்கார்ந்தேபொழுது போக்கினேன்.

சிறைச்சாலைத் தலைமை அதிகாரி என் நண்பர். அவர் ஆங்கிலேயர். அவருடைய ஆங்கில மனைவியார் நோயுற்றிருந்த காலத்து, ரணசிகிச்சை செய்ய என்னை அழைத்தார். என்னுல் இயன்ற உதவியைச் செய்ததில் அந்தக் குடும்பத்தாரின் நட்பு எனக்குக் கிடைத்தது. ஆனல் அன்றைத் தினம் என்னைக் காணவந்தபொழுது அவர் கடந்து கொண்டது திகைப்பை உண்டாக்கியது. மனம் நொந்து அலுத்திருந்த நான் அவர் வந்தவுடன் அந்த வேளையில் அவருக்குத் தகுந்த மரியாதை செய்யவில்லை. உட்கார்ந்திருந்தபடியே அவருடன் பேசினேன். அதனுல் அவருக்கு என்னிடம் அருவருப்பு உண்டாயிற்றோ இல்லையோ என்று சொல்ல முடியாது. "மூத்திர நாற்றம் சகிக்க முடியவில்லையே!" என்று நான் கேட்டதற்கு, "இன்றிரவு நான் வேறு இடம் பார்க்கமுடியாது. விடிந்தவுடன் ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். மறுநாள் காலையில் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டோம். அச் சமயம் கூட்டம் கூட்டமாகக் கைதிகள் எங்களைத் தூரத்தில் நின்று அதிசயப் பார்வையுடன் பார்த்து விட்டு வேலைக்குச் சென்றார்கள்.

அந்தக் காலத்தில் வகுப்புவாரி ஏற்றத் தாழ்வு இல்லை. எல்லோரும் கஞ்சித் தொட்டியிலும் களிமொத்தையிலும் பங்கு போடவேண்டிய காலம். எங்களுக்கென்று தயாரித்த கஞ்சியைக் குடாகக் கொண்டுவந்து கொடுத்தார்கள். ஒரு வாய் உட்கொண்டேன். மறுவாய் விழுங்க மனம் இல்லை. ஆயுள் முழுவதும் கஞ்சியே காணுத எங்களுக்கு இந்த ஜெயில் கஞ்சி முதல் முதலாகக் குடிக்கமுடியாமல் போனது ஆச்சரியம் அல்ல. நாளொன்றுக்குச் சட்டப்படி ஒன்றரை அணு பெறுமான ஆகாரந்தான் எங்களுக்குக் கிடைத்தது. அதிகப்படி பெறவேண்டுமாஞல் நோயுற்று ஜெயில் டாக்டர் அத்தாட்சி பெற்று, சிறு பாலோ அல்லது ரொட்டியோ பெறலாம். இந்த உணவிஞல் முதல் இரண்டு வாரத்திற் கெல்லாம் எனக்குச் சீதபேதி கண்டுவிட்டது. ஆகாரத்தை மாற்றிப் பால் கஞ்சி குடித்ததும் நின்றுவிட்டது.

விசாரணை ஜெயிலிலேயே நடந்தது. நன்னடத்தைக்கு ஜாமீன் கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் ஒரு வருஷம் வெறுங்காவல் தண்டனை. விசாரணையில் நான் கலந்துகொள்ள வில்லை. ராஜமான பொய்ச் சாட்சிகளைப் போலீஸ்காரர்கள் தயாரித்திருந்தார்கள். என்னைப் பற்றிய சொந்த விவரங்கள் தாக்கல் செய்த பொழுது, போலீஸ் சாட்சிகளின் வாக்குமூலம் முற்றும் தவருக இருந்ததால் அதை மட்டும் மாற்றிவிடும்படி கோர்ட்டாருக்குச் சொன்னேன். அந்தத் திருத்தத்தைச் செய்துகொண்டார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு சென்னைச் சட்ட சபையில் திருச்சி சட்டசபைப் பிரதிநிதியும், ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவருமான தங்க வேலுப்பிள்ளை ஒரு கேள்வி கேட்டிருந்தார். "திருச்சி மத்திய சிறையில் இருக்கும் டாக்டர் ராஜனுக்கும் அந்த ஜெயில் தலைமை அதிகாரிக்கும் வெகு நாட்களாக நட்பு உண்டு என்கிற விஷயம் கவர்மெண்டாருக்குத் தெரியுமா? அப்படியானுல் அந்தச் சிறையில் டாக்டர் ராஜனை வைத்திருப்பது உசிதமா?" என்பதுதான் கேள்வி. பதில் என்ன கிடைத்தது என்பது எனக்குத் தெரியாது. சிறைப்பட்ட ஒரு மாதத்திற்குள் நானும் டாக்டர் சாமிநாத சாஸ்திரியும் கோயம்புத்தூர் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டோம்.

விஷ ஜுரப் போர்

ஐரோப்பாவில் உலகத்தில் மடியும் ஜனங்கள் அதிகம். எத்தனையோ விதமான ஜுரங்கள் மனித ஜாதியை அரித்துவருகின்றன. அவற்றை ஆராய்ந்து பரிகாரம் தேடும் முயற்சியில் மனித சமுதாயத்தின் சிறந்த தொண்டர்களாகிய டாக்டர்கள் பலர் ஈடுபட்டிருக்கின்றனர். அமெரிக்க ஐக்கிய சமஸ்தானத்தில் ஹமில்டன் என்ற இடத்தில் ஜுர நோய்களைப் பற்றிய ஆராய்ச்சி மிகை பெறும் சோதனைச்சாலை ஒன்று இருக்கிறது. புள்ளி ஜுரம் என்று வழங்கும் ஒருவகை மலை ஜுரத்துக்கும் டைபஸ் என்ற விஷஜுரத்துக்கும் உரிய மருந்துகளை அவ்விடத்தில் நாறுபேருக்கு மேற்பட்ட ஆடவரும் பெண்டிரும் உண்டாக்கி வருகிறார்கள். அமெரிக்க ஐக்கிய சமஸ்தானத்தின் சுகாதாரப் பகுதியைச் சார்ந்த தேசிய சுகாதார ஆராய்ச்சி நிலயத் (National Institute of Health) தின் கீழே இது. மலைப்புள்ளி ஜுரம் (Rocky Mountain spotted fever) என்னும் நோயை ஒழிக்க மூன்று சில முயற்சிகள் நடந்தன. அதன் விளைவாக இந்த ஆராய்ச்சி நிலயம் நிறுவப் பெற்றது. 1941-ஆம் வருஷம் இந்த நிலயத்தில் அந்த வியாதிக்கு ஒரு மருந்து கண்டுபிடிக்கப் பட்டது.

டாக்டர் ரால்ப் ஆர். பார்க்கர் என்பவர் புள்ளி ஜுரத்தின் ஆராய்ச்சியில் புகுந்த பழைய தொண்டர்களில் ஒருவர். அவருடைய மேற்பார்வையின் கீழ் இந்தச் சோதனை நிலயம் மிகுதியான குத்து மருந்தை உண்டாக்கிப் படையிலுள்ளவர்களுக்கு அனுப்பிவருகிறது. மருந்துகளை உற்பத்திசெய்யும் விஷயத்தில் இந்த நிலயத்தில் டாக்டர் ஹோவர்டு டேலர் ரிக்கெட்ஸ் என்பவரே எல்லாரைக் காட்டிலும் சிறந்த தொண்டைப் புரிக்திருக்கிறார்.

மலைப்புள்ளி ஜுரமானது பல தினங்களில் டைபஸ் என்ற விஷஜுரத்தைப் போன்றது. ஜலதோஷம், ஜுரம், தலைவலி, மூட்டுக்களில்வலி முதலிய அறிகுறிகள் இந்த ஜுரத்திற்கு ஏற்படும். ஜுரம் வந்த மூன்றும் நான் மணிக்கட்டிலும் பிறகு கணுக்காலிலும், அப்பால் முதுகிலும் தோலில் எரிச்சல் கண்டு பிற்பாடு எங்கும் பரவும். ஐக்கிய அமெரிக்காவின் வடமேற்குப் பகுதிகளில் ஒவ்வொரு வருஷமும் 250 முதல் 500 பேர்கள் வரையில் இந்த நோய்க்கு ஆளாகிறார்கள். ஏழு வருஷத்திற்கு ஒரு தடவை மிக அதிகமாக இந்த ஜுரம் பரவுகிறதாம்.

இந்தப் புள்ளி ஜுரம் பல வருஷங்களாக விளங்காத மர்மமாக இருந்தது. அதற்கு அப்புறம் 1906-ஆம் வருஷத்தில் தேக அசௌக்கியம் காரணமாக டாக்டர் ரிக்கட்ஸ், மாண்ட்டானு என்ற பகுதியில் உள்ள பிட்டர் ரூட் பள்ளத்தாக்குக்கு ஓய்வெடுத்துக்கொள்ளப் போயிருந்தார். ஐக்கிய நாடுகள் முழுவதும் வருஷந்தோறும் 125 உயிர்கள் இந்த நோய்க்கு இரையாகிவந்தன. குழப்பத்தைக் கொடுத்துவந்த இந்தப் புள்ளி ஜுரத்தைப்பற்றி ஆராய அந்த டாக்டருக்கு அப்போது சந்தர்ப்பம் கிடைத்தது. பிட்டர் ரூட் பள்ளத்தாக்கு இந்த ஜுரம் பரவியுள்ள பிரதேசத்தின் நடு மையத்தில் இருந்தது.

சிலவகை உண்ணிகளால் இந்த ஜுரம் பரவுகிறது. மிருகங்களும் இந்த நோய்க்கு ஆளாகின்றன. இந்த வியாதி பிடித்த மிருகங்களிலிருந்து அவ்வுண்ணிகள் ஆரோக்கியமான வேறு மிருகங்களுக்கும் நோயை ஒட்டச் செய்கின்றன. இதைச் செய்திகளை டாக்டர் ரிக்கட்ஸ் அறிந்தார். சோதனை செய்யப் புகுந்தார். குறுமூயல்களிடத்தும், குரங்குகளிடத்தும் மருந்துப் பிரயோகம் செய்து பார்த்தார். நாய்கள், குதிரைகள், மாடுகள் ஆகியவற்றின்மேல் இருந்த உண்ணிகளை வகிர்தெடுத்துத் தொகுத்தார். அந்தப் பிரதேசத்தில் இருந்த பால் குடிக்கும் பிராணிகள் இந்த வியாதியைத் தாங்கின்றன; பலவகையான எலிகளுக்கு விசைவில் இந்த நோய் தொத்தும் என்று தெரியவந்தது. புள்ளி ஜுரமானது நோய் அணுக்களையுடைய உண்ணிகள் கடிப்பதனால்தான் மனிதர்களுக்குப் பரவுகின்றது என்பதை டாக்டர் ரிக்கட்ஸ் முடிவாகத் தெரிந்துகொண்டார்.

விஷ ஜுரம் பற்றிய மனித ரத்தத்திலிருந்து நீளமான நூண்புழுவை டாக்டர் ரிக்கட்ஸ் பிரித்து எடுத்தார். இக்கக் கிருமி உண்ணிகளிடத்திலும் அவற்றின் முட்டையிலும் உண்டு. இந்த நூண் புழுவின் சக்தி இடத்திற்கு ஏற்றபடி வேறுபடுகின்றது. நோயாளிகளில் நூற்றுக்கு ஐந்து முதல் 95 பேர் வரையில் மரிக்கும் அளவுக்கு அந்த வேறுபாடு இருக்கிறது.

மலை ஜுரத்தைப்பற்றிய மர்மத்தைத் தெரிந்துகொண்ட பிறகு டாக்டர் ரிக்கட்ஸ் தம் கவனத்தை 'டைபஸ்' என்ற விஷஜுரத்தின் பால் திருப்பினார். தாம் உண்ணிகளைக்கொண்டு ஆராய்ந்த அவ்விஷயத்திலும் பயன்படும் என்று நம்பினார். நீளமான நூண் கிருமியே அந்த இரண்டு வகை ஜுரத்துக்கும் மூல காரணம். வேறு சில வகைகளிலும் இரு நோய்களும் ஒப்புமை உடையன. இந்த ஆராய்ச்சியினிடையே 1910-ஆம் வருஷத்தில் ரிக்கட்ஸ் மெக்ஸிகோவில் டைபஸ் ஜுரத்துக்குப் பலியா

னர். அவருக்குப் பிறகு பேரலண்டு தேசத்தினரான வரன் புரோவஸக் என்பவரும் இந்த ஆராய்ச்சியிலே புகுந்து டைபஸ் ஜுரத்தால் மாண்டார். இந்த இரண்டு பேரும் மனித சமுதாயத்தின் நன்மையின் பொருட்டு உயிரிழந்த மகாதியாகிகளின் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். டைபஸ், புள்ளி ஜுரம் முதலிய நோய்களுக்குக் காரணமான நுண்புழுவுக்கு அவ்விரண்டு டாக்டர்களின் ஞாபகமாக ரிக்கட்ஸியா புரோவஸ்கி (rickettsiae - prowazeki) என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது 'ரிக்கட்ஸியா' என்றே பெரும்பாலும் வழங்கிவருகிறார்கள்.

டாக்டர் ராஸ்கோராய்ஸ்பென்ஸர் என்பவரும் டாக்டர் சார்ல்ஸ் ஆர். பார்க்கர் என்பவரும் இத்துறையில் ஆராய்ச்சி செய்தவர்களில் அடுத்தபடியாகத் தலைமை வகிப்பவர்கள். 1922-ஆம் வருஷம் பிட்டர் ரூட் பள்ளத்தாக்குக்குப் புள்ளி ஜுரத்தோடு போர் தொடுப்பதற்காக ஸ்பென்ஸரை அனுப்பினார்கள். மாண்ட்டானு மாகாணத்தில் உள்ள ஹாமில்டனில் அவர் டாக்டர் பார்க்கரையும் துணையாகக் கொண்டார். பார்க்கர் மாகாண அரசாங்கத்தில் பூச்சி ஆராய்ச்சியாளராக இருந்தார். இந்த இரண்டு அறிஞர்களும் சேர்ந்து சுகாதாரத்துக்கு வெளியே ஒரு சோதனைக்கூடத்தை நிறுவிக்கொண்டார்கள். பள்ளத்தாக்கிலுள்ள புல்லிலிருந்து உண்ணிகளை எடுத்துத் தொகுத்துக் குறுமூயல்களின் உடம்பிலே புகுத்தினார்கள். அதனால் அவற்றிற்கு ஒன்றும் பாதகம் நேராதது கண்டு ஆச்சரியம் உண்டாயிற்று. பிறகு பிராணிகளின் உடம்பிலிருந்து உண்ணிகளைத் தொகுத்தார்கள். அவற்றைக் குறு மூயல்களின் உடலிற் புகுத்தினவுடன் ஜுரம் உண்டாகி அவை இறந்தன. நிரம்ப ரத்தத்தை உண்டு பருத்திருக்கும் உண்ணிகளே மிகவும் அபாயகரமானவை என்றும், மற்றவை அத்தகையன அல்லவென்றும் அவர்கள் கடைசியில் அறிந்தனர்.

ஸ்பென்ஸர் சோதனைக் கூடத்தில் இந்த உண்ணிகளிலுள்ள விஷத்தைப் பிரித்து ஓரிடத்தில் தொகுத்து வைத்தார். ஓர் உண்ணியிலே காணப்படும் விஷவேகம் 3000 குறுமூயல்களை அழிக்கும் ஆற்றலுள்ளது என்பதை அவர் தெரிந்துகொண்டார்.

இவ்வாறு தொகுத்த உண்ணிகளை வைத்துக் கொண்டு தடை மருந்தைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் அவ்விரண்டு டாக்டர்களும் முனைந்தனர். அதிகமாக உண்ணிகளைத் தொகுத்து, கார் பரலிக் அமிலத்தில் ஊறச் செய்து பிறகு குறு மூயல்களின் உடலுக்குள் செலுத்தினர். அவை புள்ளி ஜுரத்தால் பற்றப்படாத நிலையை அடைந்தன. இவ்வாறு கண்டுபிடித்த தடை மருந்தை 1924-ஆம் வருஷம் மே மாதம் 19-ஆம் தேதி ஸ்பென்ஸர் தம் உடம்பிலேயே குத்திச் செலுத்திக்கொண்டார். பிறகு மற்றவர்களிடத்தும் இந்தக் குத்து மருந்தைச் செலுத்தினார். மனித தேகத்தில் இந்த மருந்தைப் பிரயோகம் செய்த போது அதன் பயன் பூரணமானதாக இருக்க வில்லை. குத்துமருந்து ஒரு பருவகாலத்துக்கு மாத்திரம் நோய் வராமல் தடுக்கும் ஆற்றலுடையதாக இருந்தது; செலுத்தப்பட்டவரிடத்திலும் ஜுரம் வராமல் தடுக்க முடியவில்லை. ஆனால் மருந்து குத்தியும் யாருக்காவது ஜுரம் வந்தால் அவருக்கு அதன் கடுமை அதிகமாக இருப்பதில்லை.

இத்தப் புள்ளி ஜுர ஆராய்ச்சியில் டாக்டர் ஸ்பென்ஸர் 1928-ஆம் வருஷம் வரையில் ஈடுபட்டிருந்தார். சில காலம் அவர் ஆராய்ச்சி வாஷிங்டன் நகரில் நடைபெற்றது. 1927, ஜூலையில் அவர் மாண்ட்டானு மாகாணத்துச் சுகாதார உத்தியோகஸ்தர் சங்கத் தலைவரானார். இப்போது ஐக்கிய அமெரிக்காவின் பொது ஜன சுகாதார இலாகாவில் 'காஷனல் கான்ஸர் யூனிட்' என்னும் புற்றுநோய் ஆராய்ச்சிப் பகுதிக்குத் தலைவராக விளங்குகிறார்.

பார்க்கர் 1928-ஆம் வருஷத்தில் புள்ளி ஜுரச் சோதனைக் கூடத்தின் தலைவர் ஆனார். அந்தச் சோதனைக் கூடம் 1931-ஆம் ஆண்டில் தேசிய சுகாதார ஆராய்ச்சி நிலயத்தில (National Institute of Health) ஒரு பகுதியாக இணைக்கப்பட்டது. இப்போது யுத்த சம்பந்தமான சில வேலைகளைத் தவிர அந்தச் சோதனைக்கூடத்தில் பெரும்பாலும் 'ரிக்கட்ஸியா' என்ற நோய்க் கிருமியினால் விளையும் நோய்களைப்பற்றியும், அவற்றைப் போக்க உதவும் குத்துமருந்தைப் பற்றியும் தீவிரமான ஆராய்ச்சி நடந்துவருகிறது. உலகம் முழுவதும் ஜன சமுதாயத்தை அழிக்கப் பரவிவரும் பலவகையான ஜுரநோய்களைப் பற்றிய ஆராய்ச்சிகளும் இங்கே நடந்துவருகின்றன.

ஸ்பென்ஸரும் பார்க்கரும் கண்டறிந்த குத்து மருந்தை இப்போது பெரிய அளவில் உற்பத்தி செய்துவருகிறார்கள். 1925-ஆம் வருஷத்தில் ஒரு தடவைக்கு உபயோகிக்கப் போதுமான மருந்துக்கு உற்பத்திக் கிரயம் 20 டாலர் ஆயிற்று. 1940-ஆம் வருஷத்தில் இந்தச் சோதனைக் கூடத்தில் வருஷந்தோறும் 130,000 பேர்களுக்கு வேண்டிய குத்து மருந்தை உண்டாக்க முடிந்தது. ஒரு தடவை உபயோகமாகும் மருந்தின் அடக்க விலை 75 ஸெண்டாகக் குறைந்துவிட்டது.

இந்தக் கூடத்தில் தொண்டு புரிபவர்களுள் ஒருவராகிய டாக்டர் ஹெரால் காக்ஸ் என்பவரே உற்பத்திச் செலவைக் குறைப்பதில் சுவனம் செலுத்தியவர். வளமான கோழிமுட்டைகளில் ரிக்கட்ஸியாவைப் பற்றச்செய்து அதன் மூலமாக மிகுதியாகவும் வேகமாகவும் குறைந்த செலவிலும் குத்து மருந்தை உற்பத்தி செய்யும் வழி

யைக் கண்டுபிடித்தார். இப்படிப் பற்றப்பட்ட மூட்டைகளின் மஞ்சள் கருவை உலர்த்தி அதிலுள்ள நுண்கிருமிகளைக் கார்பாலிக் அமிலத்திலும் பார்மாலினிலும் ஊறவைத்துக் கொன்று குத்து மருந்தைச் சேகரித்தார். ஒரு மூட்டையிலிருந்து 20 தடவை உபயோகிக்கும் மருந்தைப் பெற முடிந்தது.

இந்த மூட்டைக்கரு முறையைக் கொண்டே 1938-ஆம் வருஷத்தில் இந்தச் சோதனைக் கூடத்தில் டைபஸ் என்ற விஷ ஜுரத்துக்குரிய குத்து மருந்தை உண்டாக்கத் தொடங்கினர்கள். அடுத்த வருஷம் அந்த மருந்தைச் சிறிய அளவில் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பினர்கள். இப்பொழுது அதிகமான அளவில் அந்த மருந்து அமெரிக்க மாகாணங்களுக்கும் பிற நாடுகளுக்கும் செல்லுகின்றது.

மேலே சொன்ன குத்து மருந்து புள்ளி ஜுரம் வராமல் தடுக்கும் மருந்தாகத்தான் உபயோகமாயிற்று. ஆயினும் 1941-ஆம் வருஷம் வரையில் ஜுரம் வந்தபிறகு பரிகாரத்துக்கு உரியதாக எந்தக் குறிப்பிட்ட மருந்தும் வரவில்லை. அந்த வருஷத்தில் டாக்டர் நார்மன் டாப்பிங், சோதனைக் கூடத்தில் முயல்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்து ஒரு மருந்தைக் கண்டுபிடித்தார். புள்ளி ஜுரத்தைச் செயற்கை முறையால் தம் உடம்பில் ஏற்றுப் பிறகு தாமே அந்த மருந்தை ஊசியால் குத்திக்கொண்டு நோயினின்றும் நீங்கிச் சௌக்கியம் அடைந்தார். இப்போது இந்த மருந்து மிகுதியாகப் பயன்படுகிறது. 1943-இல் அந்த மருத்துவத் தொண்டருக்கு, பெயிலி கே. அவ்பார்ட் என்பவர் பெயரால் வழங்கப் பெறும் பரிசு கிடைத்தது.

வேறு பல விஞ்ஞானிகளும் இந்த ஆராய்ச்சியில் உழைத்திருக்கிறார்கள். டாக்டர் தாமஸ் பி. மாக்ளிண்டிக் என்பவர் பிட்டர் ரூட் பள்ளத்தாக்கில் இந்த ஜுரத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். ஒரு நாள் திடீரென்று அவருக்கே ஜுரம் வந்துவிட்டது. உடனே வாஷிங்டனில் இருந்த தம் மனைவியைப் பார்க்கச் சென்றார். வீட்டை அடைந்த சில மணி நேரங்களில் அவர் உயிர் துறந்தார்.

புள்ளி ஜுரச் சோதனைக் கூடத்தில் இன்னும் ஆராய்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. நாளுக்கு நாள் புதிய புதிய உண்மைகள் புலனுகின்றன. தேவாசுரயுத்தத்தைப்போல அக்கூடத்திலுள்ள ஆராய்ச்சித் தொண்டர்கள் நோய்களோடு போராடி வெற்றி பெறுகிறார்கள்.

[உசோவியைத் தழுவியது.]

'கண்ணுவி'

"ஐயோ! பார்க்கச் சகிக்கவில்லையே! கண்றவியாய் இருக்கிறதே!" என்ற உள்ளம் கசிந்து இரங்கிக் கூறும் வார்த்தைகள் நம் காதில் பல தடவை விழுகின்றன. வேறு சந்தர்ப்பங்களிலும் பார்க்கச் சகிக்காத காட்சிகளைக் "கண்ணுவி" என்ற பெயரால் வழங்குகிறோம்.

அந்த வார்த்தைக்கு என்ன பொருள்? எப்படி வந்தது? அந்த உருவம் சரியா? இரக்கத்தை உண்டாக்கும் காட்சியைப் பார்க்கும்போது "என் பார்த்தோம்?" என்று தோன்றுகிறது. அந்தக் காட்சியினுல் கண்ணுக்கு ஏதோ புண் சேர்ந்துவிட்டது போல இருக்கிறது. கண்களை அந்தக் காட்சியின் கொடுமை அரத்தைக்கொண்டு அராவுவது போல இருக்கிறது. கண்ணை அராவும் காட்சி ஆதலால் 'கண் அராவி' என்று சொன்னார்கள் பழங்காலத்தில். ஆகவே "கண்ணாவி" என்று எழுதுவதுதான் பொருத்தமாகும். "கண்ணுவி" என்று வல்லின நகரத்தோடு எழுதுவதைப் பார்த்தால் 'கண்ணாரவி'யாகத்தான் இருக்கிறது.

குழந்தையின் பாஷை

குழந்தைகளுக்கு முதல் முதலில் தெரிகிற வார்த்தைகள் கொச்சையானவை. ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு பாஷை இருந்தாலும் குழந்தை உலகத்துக்கே பொதுவான பாஷையும் ஒன்று இருக்கிறது.

தமிழ்க் குழந்தைகள் முதலில் பேசப் பழகும் வார்த்தைகளில் 'ச்சி' என்ற மூடி வள்ளவை பல. சோற்றைச் சோச்சி என்றும், பாலைப் பாச்சி என்றும், தயிரைத் தச்சி என்றும், மோரை மோச்சி என்றும் குழந்தை உலகில் வழங்குவது வழக்கமாகி விட்டது. 'பூச்சி' என்ற சொல் குழந்தை உலகத்திலிருந்து பெரியவர்கள் உலகத்திற்கு வந்திருக்கும் என்று தோன்றுகிறது.

சுவரமியைச் சில வீடுகளில் குழந்தைகள் 'உம்மாச்சி' என்று சொல்லுகின்றன. உமாமகேசுவரர் என்ற சொல் அப்படி வந்ததாகத் தெரிகிறது. அப்பிச்சி, அங்கிச்சி, தங்கச்சி, அக்கைச்சி என்ற கிரந்தத்தை உடைய வார்த்தைகளும் குழந்தைப் பாஷையைச் சேர்ந்தவையே.

ஆசிரியர் குறிப்பு

புதிய தொடர்கதை: இந்த இதழில் முதல் பக்கத்திலே "காற்றுடி" பறக்கத் தொடங்கியிருக்கிறது. அன்பர்கள் பலர், "அடுத்த தொடர்கதை என்ன? என்ன?" என்று ஆவலாகக் கேட்கலானார்கள். வழக்கம் போலப் பொங்கல் மலர் வெளியிட இயலாவிட்டாலும் மாசி இதழிலிருந்து தொடர் கதையைத் தொடங்கும் வழக்கத்தை மாத்திரம் நாம் விடவில்லை.

கா. ஸ்ரீ. ஸ்ரீ. 'கலிமகள்' அன்பர்களுக்குப் புதியவர் அல்லர். ஹிந்தி, மராத்தி நாவல்கள் பல அவரால் மொழிபெயர்க்கப் பெற்றிருக்கின்றன. காண்டேகரைத் தமிழ் நாட்டுக்கு அறிமுகப்படுத்தியவர் அவர். அவரை இரண்டு மூன்று பாஷைகளில் எழுத்தாளர் என்று சொல்ல வேண்டும். அவர் தமிழில் சொந்தமாக எழுதிய நாவல் "காற்றுடி". இப்படிச் சொல்லாவிட்டால் "காற்றுடி"யும் காண்டேகருடைய நாவல் என்று அன்பர்கள் நினைத்து விடக்கூடும். கதையின் போக்கும் அழகும் கா. ஸ்ரீ. ஸ்ரீ. யின் திறமையை நன்கு விளக்குகின்றன. நீங்களே பார்க்கப் போகிறீர்களே!

புதுமைப் பெண்: 'தமிழில் சிறுகதைகள் அதிகமாகிவிட்டன. கட்டுரை இல்லை' என்று குறையுறுபவர்கள் இன்னும் இருக்கிறார்கள. சில மாதங்களாகச் சென்னையில் நடந்துவரும் 'இலக்கிய நண்பர்கள்' கூட்டங்களில் இந்தச் செய்தி பல தடவைகளில் காதில் பட்டது. கலிமகளில் மாதந்தோறும் பல துறைகளிலும் கட்டுரைகள் வெளியாவதை அன்பர்கள் அறிவார்கள். கட்டுரை வரிசைகள் சிலவற்றைக் கலிமகள் தொடங்கிப் பல அறிஞர்களின் சுவையுள்ள கட்டுரைகளை வெளியிட்டு வந்ததும் அவர்களுக்குத் தெரியும். இப்போது "புதுமைப் பெண்" என்ற புதிய கட்டுரை மாலையை ஆரம்பித்திருக்கிறோம். அதில் வரும் கட்டுரைகளைப்பற்றிய அபிப்பிராயங்களைத் தாராளமாக அன்பர்கள் எழுதி அனுப்பலாம்.

கு. ப. ரா. குடும்பப் பாதுகாப்பு நிதி: இந்த நிதியை ஒருவாறு பூர்த்தி செய்து உரியவர்களிடம் சேர்ப்பித்து விடலாம் என்று எண்ணியிருந்தோம். அன்பர்கள் பலர் ரூ. 5000-ஆவது சேர்த்தால்தான் நன்றாக இருக்கும் என்று வற்புறுத்தினார்கள். தமிழ்நாட்டார் இந்த நல்ல நோக்கத்தை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையால் அவர்கள் விருப்பப்படியே மீட்டும் இந்த வேண்டுகோளை விடுக்கத் தொடங்கினோம். 5000 ரூபாய் தமிழ் நாட்டாருக்குப் பெரிதல்ல. தமிழன்பு நிறைந்த செல்வர் ஒருவர் மனம் வைத்தாலே போதும். கு. ப. ரா. வின் குடும்பத்தார் தமிழ்நாட்டாரின் ஆதரவுக்கு உரியவர்கள் என்றும், காலஞ்சென்ற கு. ப. ரா. வின் எழுத்தை ரஸிக்கும் ஒவ்வொரு தமிழரும் இந்த நிதிக்குத் தங்கள் தங்களால் இயன்ற பகுதியை வழங்கவேண்டும் என்றும் மீட்டும் சொல்ல வேண்டுமா? உதவி புரிவதை விரைவாகச் செய்தால் நலமாக இருக்கும். இதுவரையில் சேர்ந்த தொகைக்கு விவரம்:

	ரூ.	அ.
சக்தி காரியாலயம் ...	150	0
ஸ்ரீ கி. எஸ். செல்லப்பா மூலம்	42	0
உறையூர் சேஷாத்திரி ஐயங்கார் மெமோரியல் ஸ்கூல், ஆசிரியர் சங்கம்	25	0
மயிலாப்பூர் ஸ்ரீமதி ஏ. எஸ். மீனாட்சி மூலம் ...	20	0
ஸ்ரீ எம். ஜே. ராமலிங்கம் ...	20	0
உறையூர் சே. ஐ. மெமோரியல் ஸ்கூல், மாணவர் சங்கம் ...	15	0
கி. ரா. ...	15	0
கும்பகோணம் வாணி நிலயம் மூலம் ...	14	0
ஸ்ரீ கி. ரா. மூலம் ...	13	0
இளைஞன் காரியாலயம், கோவை மூலம் ...	10	8
ஸ்ரீ திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார் ...	10	0
ஸ்ரீமதி ஹரிணி ...	10	0
ஸ்ரீ நா. அண்ணாமலை, தமிழ்ப் பண்ணை ...	10	0
ஸ்ரீமதி ஜயம்மாள் மாதவாச்சாரி, திருச்சி ...	10	0
ஸ்ரீ டி. என். சேதுராமன், கலிமகள் ஏஜெண்டு, திருச்சி ...	10	0
ஸ்ரீ வி. கிருஷ்ண மூர்த்தி, ஹவிலியன் ...	10	0
ஸ்ரீ ஹிரண்யராவ், கரூர் மூலம் ...	10	0
ரூ. 10-க்குக் குறைந்த தொகை வரவு மொத்தம் ...	33	8
முன் அறிவித்தபடி ...	3673	2
	4101	2

ஆசிரியர்

தீர்மானம்

ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாசன்

"மத்தியான்னம் நளினி அழைக்க வந்திருந்தாள்."

"எதற்கு?"

"அவள் தமக்கைக்கு நாலுக்கு வளைகாப்பாம்."

"ஊம்."

"விமலாவுக்கு இது ஏழாவது மாதமாம்."

"....."

அதன் பிறகு பேச்சு வார்த்தை நின்றுவிட்டது. இருவர் உள்ளமும் ஒரே விதமாகக் கொந்தளித்தன. தங்கள் அருமைப் புதல்விக்கு மூன்று வருஷங்களுக்கு முன்பு நடக்க இருந்த வளைகாப்புக் கல்யாணத்தை நினைந்து இருவரும் மனமுருகினர். பார்வதியின் கண்கள் உள்ளக் கொந்தளிப்பைத் தாங்காமல் கண்ணீரைக் கக்கின. அதைக் காணச் சகியாமல் ஐயர் ஊஞ்சலிலிருந்து இறங்கி மாடிக்குச் சென்றுவிட்டார்.

ஆமாம், எந்தத் தாய்க்குத்தான் அந்தச் சமயம் துயரம் ஏற்படாது? ஏன், பொறுமை கூட ஏற்படுவதும் உண்டு. தன் கண்ணனை குழந்தை ஏழுமாதக் கர்ப்பிணி - வளைகாப்பு நாளைக் கழித்து மறுநாள் என்னும்போது திடீரென்று நோய் கண்டு உயிர் நீத்தாள். அவள் செத்து மூன்று வருஷம் ஆகவில்லை. அதற்குள்ளாக அவள் கணவனின் இளையாளுக்குத் தடபுடலாக வளைகாப்புக் கொண்டாடுகிறார்கள் என்றால் அந்த அன்னையின் மனம் புழுங்காமல் இருப்பது சாத்தியமா?

"நீங்கள் கட்டாயம் வரணும். கார்த்தாலே ஒன்பது மணிக்கெல்லாம் வளையடுக்குவதற்கு முகூர்த்தம். முகூர்த்தத்திற்கு, சாப்பிடுவதற்கு, சாயந்தரம் ஆரத்திக்கு எல்லாத்திற்கும் வரணுமாக்கும்! அம்மா உங்களைக் கட்டாயம் வரச்சொல்லி நூறு தடவை சொல்லிவிட்டு வரச்சொன்னாள். அத்திம்பேரும் ஸ்பெஷலாய் உங்களை அழைத்துவிட்டு வரச் சொன்னார்" என்று நளினி பன்னிப் பன்னி அழைத்தாள்.

"அதற்கு என்னடியம்மா. கட்டாயம் வரேன்னு அம்மாவண்டை சொல்லு" என்று பார்வதி அவளிடம் ஒப்புக்குச் சொன்னாளே தவிர, அவள் மனம் போவதற்குக் கொஞ்சமும் சம்மதிக்கவில்லை. நளினியின் அழைப்பு அவள் உள்ளத்தில் புதைந்து புகைந்து கொண்டிருந்த துயரத் தழலைக் கிளறிவிட்டது போலப் பரிணமித்தது. நளினியை ஒருவாறு அனுப்பிவிட்டு வாசற்கதவைத் தாழ்ப்பாளிட்டு வந்து உட்கார்ந்தவள் தீராத வேதனையில் ஆழ்ந்தாள்.

பார்வதிக்கு இரண்டு ஆண் குழந்தைகளுக்குப் பிறகு வெகு நாள் கழித்துப் பிறந்த தவப்புதல்வி நிர்மலா. நிர்மலாவைத்தான் அவள் எவ்வளவு செல்வமாகச் சீராட்டி வளர்த்தாள்! நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் செழுசெழுவென்று வெகு அழகுடன் வளர்ந்து வந்த கண்மணி நிர்மலாவை அவள் பெற்றோர்கள் அண்டை அயலில் கொடுக்க மனமின்றி ஐயரின் தமக்கை மகன், அதாவது நிர்மலாவின் அத்தானுக்கே கொடுத்து வெகு விமரிசையாகக் கல்யாணம் செய்தனர். பெண் என்றால் அவளைப்போன்ற கட்டழகி, அவளைப்போன்ற சகுணவதி, உலகில் பிறந்ததும் இல்லை, இனிப் பிறக்கப்போவதும் இல்லை. மாப்பிள்ளை சிவராமன் வெகு புத்திசாலி; யோக்கியனுங்கூட. பி.ஏ., பி.எல். தேர்ச்சி பெற்று அதே ஊரில் தொழில் நடத்திவந்தான். அதில் சீக்கிரத்திலேயே வெற்றியும் அடைந்தான். பார்வதியின் புதல்வர்கள் இருவரும் ஐ.ஸி.எஸ். ஒருவன் மத்திய மாகாணத்திலும், மற்றொருவன் விந்து பிராந்தியத்திலும் உத்தியோகம் பார்த்து வந்ததால், பெண்ணும் மாப்பிள்ளையுமாவது உள்ளூரிலேயே வசிப்பதால் அந்தத் தம்பதிகளுக்குப் பெரும் மகிழ்ச்சி. இவர்கள் களிப்பைக் காணச் சகிக்கவில்லை போலும் தெய்வத்திற்கு!

நிர்மலா கர்ப்பிணி என்ற செய்தியைச் செவியுற்று அவள் பெற்றோர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவு உண்டோ? மூன்றும் மாதமே நல்ல நாள் பார்த்துப் பெண்ணைப் புக்ககத்திலிருந்து தங்கள் அகத்திற்கு அழைத்து வந்தனர். பார்வதி பெண்ணுக்கு விதவிதமான மசக்கைப் பக்ஷணங்களைத் தன் கையாலேயே தயாரித்துக் கொடுத்து உபசரிப்பாள். நாளுக்கு ஒரு விதம் பெண்ணை அலங்கரித்து அழகு பார்ப்பாள். நிர்மலா விரும்பும் பண்டங்களையும், நகை நட்டுகளையும் வாங்கிக்கொடுத்து அவளை மகிழ்விப்பாள். நாட்கள் கழிந்து ஏழாம் மாதமும் தொடங்கியது. செல்வப் புதல்விக்கு வெகு விமரிசையாக வளைகாப்புக் கொண்டாட வேண்டித் தடபுடலாக ஏற்பாடுகள் நடைபெற்றன. நிர்மலாவின் மூத்த மைமன் ராஜன் எழுநூறு ரூபாய் விலையில் நீலக்கற்

கள் பதித்த வகையல்கள் ஒரு ஜதையும், இளைய சகோதரன் தியாகு எண்ணூற்றைம்பது ரூபாய் விலையில் பச்சைக் கற்கள் பதித்த வகையல் ஒரு ஜதையும் நிர்மலாவுக்குப் பரிசாக அனுப்பினர்கள். பார்வதி ஆயிரம் ரூபாயில் ஒரு ஜதை நல்முத்து வகையல்கள் செய்வித்தாள்.

வகைகாப்புக்காக அழைப்புப் பத்திரம் கிடைத்த உறவினர்கள் அனைவரும் இரண்டு நாள் முன்னதாகவே நாகரத்தினமையர் அகத்தில் வந்து குழுமினர். நாளை நின்று வகைகாப்பு என்றால் இன்றே நிர்மலாவின் மதனிமார்கள் இருவரும் ஊர் அழைக்கப் புறப்பட்டுவிட்டார்கள்.

இரண்டு நாட்களாகவே நிர்மலாவின் கன்னங்கள் கொஞ்சம் அதைச்சாற்போல இருந்தன. ஆனால் அதை யாரும் கூர்ந்து கவனிக்காததால் படுமோசமாகிவிட்டது. அன்று பகற் பொழுது அவள் ஏதோ அலுவலாக வாசற்புறம் சென்றவள் தலை சுழன்று தடாலென்று விழுந்து விட்டாள். அந்த அதிர்ச்சியைச் செவியுற்ற வீட்டில் இருந்த அனைவரும் நாலுபுறத்திலிருந்து ஓடோடியும் வந்தனர். ஐயரின் ஆபீஸிற்கும் ஆஸ்பத்திரிக்கும் டெலிபோன் செய்திகள் பறந்தன. லேடி டாக்டர் பத்மசுந்தரமும், ஸீனியர் ஸர்ஜன் டாக்டர் செல்லபதிராவும் வந்து பலமான சிகித்ஸை செய்தும் பலன் இல்லை. போன பிரக்ஞை திரும்பவே இல்லை. அதன் காரணமாக நோயாளியைப் பிரஸவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லவேண்டி வந்தது. ஆனாலுங் கூட டாக்டர்கள் செய்த எண்ணிறந்த சிகித்ஸைகளையும் ஏமாற்றிவிட்டு அதற்கு அடுத்த நாள் விடிகாலையே நிர்மலா உயிர் நீத்தாள்.

நாகரத்தினமையரின் குடும்பத்துக்கு ஏற்பட்ட துயரத்தை விவரிப்பது அசாத்தியம். வகைகாப்புக்கு நிர்மலாவுக்கு ஒதி வைப்பதற்கென்று 190 ரூபாய்க்கு வாங்கிவந்த 'டிஷ்யூ' புடைவையும் ரவிக்கையும் இன்னும் பிரிக்கப்படாமல் பார்வதியின் பீரோவின் அடித் தட்டில் துயிலுற்றிருந்தன.

இத்தப் பரிதாப சம்பவம் முழுவதும் தற்சமயம் பார்வதியின் மனக்கண் முன்பு சினிமாப் படம்போலத் தோன்றி மறைந்தன. உள்ளத்திலிருந்துகொழுந்து விட்டு எரியும் துயர ஜ்வாலையைச் சகியாமல் ஒரு மூச்சு அழுது தீர்த்தாள் பார்வதி. அதன் பிறகே அவள் இருதய பளு சற்றுக் குறைந்ததுபோல ஆயிற்று.

மறுநாள் நடக்கப்போகும் வகைகாப்புக்குப் போகக்கூடாதென்று அவள் மனத்தினுள் ஒரு கக்ஷி கூறியது. மற்றொரு கக்ஷி; 'நாம்தாம் கொடுத்துவைக்காத பாவி. நம் குழந்தை பிழைத்திருந்தால் விமலாவின் கருவில் வளரும் குழந்தை நம் குழந்தை வயிற்றில்தானே பிறந்திருக்கும்? இதேன், இந்த மனம் இப்படி வித்தியாசம் பாராட்ட வேண்டும்? ஏதோ, எல்லோரையும் போல நாமும் போய்விட்டு வருகிறது. இல்லாவிட்டால் அக்கா (அவள் நாத்தனார்) என்ன நீயும் பார்!" என்று மற்றொரு கக்ஷி சொல்லுகிறது. ஆனால் மாதர்களுக்கு இயல்பான பொறுமைத் தீ அவளை லேசில் விட்டு விடுமா? 'நம்ம குழந்தை சுகப்படவேண்டிய இடத்தில் இந்தச் சிறுக்கி வந்து சுக போகம் அனுபவிக்கிறாளே!' என்ற வயிற்றெரிச்சல் ஒரு புறம். இந்த உள்ளக் கிளர்ச்சியில் அவள் எவ்வித முடிவுக்கும் வரமாட்டாமல் பரிதவித்தாள். இவ்வாறு அன்று பிற்பகல் முழுவதும் அவதிப்பட்டாள் பார்வதி. இந்த வயிற் றெரிச்சலைக் கணவனிடம் சொல்லக்கூடாதென்று முதலில் யோசித்தாள். ஆனால் மாலைப்பொழுது கணவர் கச்சேரியிலிருந்து திரும்பி வந்ததும், அவருக்குக் காபி டிபன் கொடுத்த பிறகு மெதுவாக அவளையும் மீறி அந்தச் செய்தி அவள் வாய்மூலம் வெடித்துவிட்டது. இதைச் செவியுற்ற ஐயரின் மனமும் கலங்காமல் போகவில்லை.

பார்வதிக்கு அன்றிரவு முழுவதும் தூக்கமே இல்லை. அவள் படுக்கையில் அமைதியின்றிப் புரண்டாள். அவள் உள்ளக் கிளர்ச்சி இருதயத்தில் நிம்மதியின்றிப் புரண்டு கொடுத்தது.

* * * *

விடிந்துவிட்டது. மணி ஒன்பதும் அடித்தது. பரிசுத்தமாக நீராடி ஜரிகைப் புடைவை

உடுத்து, நெற்றியில் பளிச்சென்று குங்குமப் பொட்டுத் துலங்க, பார்வதி அம்மாள் பூஜையில் ஈடுபட்டாள். பூஜை முடிந்ததும் கையில் ஒரு வெள்ளித் தாம்பாளத்துடன் ஐயரின் ஆபீஸ் அறையில் நுழைந்தாள்.

"என்ன பார்வதி, எங்கே புறப்பட்டாய்?"

"விமலாவின் வகீகாப்புக்குத்தான்."

"என்ன, என்ன? நிஜமாகவா? சற்று முன்கூட நான் கேட்டதற்குப் போகப்போகிறதில்லே என்றாயே?"

"என்னவோ போங்கள். இப்பொழுது போவதென்று தீர்மானித்துவிட்டேன். சுப்பனுக்கு (சமையற்காரன்) எல்லாம் சொல்லி இருக்கேன். குளிக்க ஜலம் மாத்திரம் வெது வெதுவென்று இறைத்துவிடுவான். உங்களுக்கு ஜலதோஷம் பிடிச்சிருக்கே. கூடு பார்த்துக் குளியுங்கள். நான் போய் வரட்டுமா?"

"ஆகா, போய்விட்டு வாயேன். நீ போகாவிட்டால் அக்கா என்ன நினைச்சுப்பாளோ என்று எனக்கு உள்ளூறப் பயந்தான். ஆனல் உன்னைப் போகும்படி கட்டாயப் படுத்தவும் எனக்கு இஷ்டம் இல்லே."

"என்னவோ போங்கள். முதலில் சற்று வெறுப்புத் தட்டிற்று. இரவெல்லாம் ஆற அமர யோசிச்சுப் பார்த்தேன். நம்ம தலை விதி இப்படி இருக்கச்சே, இந்தக் குழந்தை மீது பொருமைப்படுவதில் என்ன பயன் என்று இப்போ தோணித்து. இவளாவது சுகமாப் பெத்துப் பிழைக்கட்டும், பாவம்!"

"அடி, அசடே, இரவு முழுவதுமா கண் விழித்தாய்? அதுதான் கண் இப்படிக் கலங்கி இருக்கு!" என்று மனைவியின் கன்னத்தைச் செல்லமாகத் திருகிவிட்டு, "இதென்ன, தாம்பாளம் நிறையப் பழமும் புஷ்பமும்?" என்று கொஞ்சலாக வினவினர்.

"விமலாவுக்கு நெற்றிக்கு இட வேண்டாமா?"

"இதேது, இவ்வளவு நல்ல புடவை!"

"நம்ம நிர்மலாவின் வகீகாப்புக்கென்று வாங்கிவைத்தேனே; அந்த 'டிஷ்யூ' புடவைதான். இப்போ விமலா வயிற்றில் பிறக்கப்போவதும் ஒருவகையில் நமக்குப் பேரக் குழந்தைதானே? என்னவோ அவளாவது சுகமாய்ப் பெத்துக் குழந்தையும் கையுமாய்ச் சௌக்கியமாக இருக்கட்டும். குழந்தைக்கு நெற்றிக்கி இட்டுப் புடவை ரவிக்கை ஒதி வைத்து, ஆசீர்வதித்துவிட்டு வருகிறேன்."

"அதுதான் நல்ல பெண்ணுக்கு அடையாளம். சரி, போய் வா. நாழிகை ஆகிறது. இந்த வகீகாப்பையாவது கண் குளிரப் பார்த்துவிட்டு வா" என்றார் ஐயர். இருவரும் கண நேரம் ஒருவிதமான உணர்ச்சி மேலீட்டால் வெதும்பினர்.

பாரதமாதா கோயில்

நம்முடைய நாட்டில் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய பொருளுக்குத் தெய்வத் தன்மை அளித்துப் பாராட்டுவதென்பது வழக்கமாகிவிட்டது. கல்வி, செல்வம், வீரம், சோம்பல் - முதலியவற்றையும் தெய்வமாக்கிப் புராணம் செய்திருக்கிறார்கள் இந்த நாட்டார்.

இந்திய நாட்டையே தெய்வமாகக் கொண்டாடும் காலம் இது. தேசிய உணர்ச்சியினல் வந்த விகீவுகளுள் ஒன்று இது. பாரதமாதாவுக்கு அழகிய உருவத்தை ஓவியர்கள் சமைத்திருக்கிறார்கள். அத்தேவியின் திருவுருவத்தைப் பளிங்கினலும் பிறபொருளாலும் சிற்பிகள் அமைத்திருக்கின்றனர். பாரதமாதாவைத் தெய்வமாக வழிபடும்போது அப்பிராட்டிக்குக் கோயில் அமைவது நியாயந்தானே? சேலம் ஜில்லாவில் பாப்பாரப்பட்டி என்ற ஊரில் பாரதமாதா திருக்கோயில் எழுப்பவேண்டுமென்ற எண்ணம் காலஞ் சென்ற சுப்பிரமணிய சிவாவுக்கு உண்டாயிற்று. அஸ்திவாரம் போட்டார். கோயில் மாத்திரம் எழும்பவில்லே.

இந்த எண்ணம் வேறு எங்கேயோ உருவாக வேண்டியிருந்தது. காசியில் மிகப் பெரிய கோயில் ஒன்று சிவப்பிரலாத குப்தர் என்னும் தொண்டரின் முயற்சியால் பாரத தேவிக்கு அமைந்தது. மகாத்மா காந்தியடிகள் அதைத் திறந்து வைத்தார். தேசபக்தர்களுடைய மதிப்புக்குரிய அக்கோயில் இன்று எம்மதத்தினருக்கும் பொதுவாக விளங்குகிறது.

பாரதமாதாவுக்குக் கோயில் காசியில் அமைந்தது அதிசயம் அல்ல. அத்தலம் பாரததேவியின் அரசிருக்கை நகரமென்று தீர்க்க தரிசனத்தால் பாரதியார் பாடியிருக்கிறார். அது பெரிய ஆச்சரியம்.

பாரதமாதா திருத்தசாங்கத்தில் பாரத தேவி வாழும் நகரம் காசி என்று கவிஞர் சொல்லுகிறார்:

இன்மழலைப் பைங்கிளியே,
எங்கள் உயிரானுளே
நன்மையுற வாழும்
நகர்எதுகொல்?—சின்மயமே
நானென் றறிந்த
நனிபெரியோர்க் கின்னமுது
தானென்ற காசித் தலம்.

அசென்சன் தீவு



கே.ஸி. வீரராகவ ஐயர்

மகா யுத்தம் நடக்கும் இந்தக் காலத்தில் தரையில் இருந்தவர்கள் பாயில் இருக்கிறார்கள்; பாயில் இருந்தவர்கள் தரையில் கிடக்கிறார்கள்; இந்தச் சம்பவத்துக்குத் தினசரி நமக்கு ருசுக்கள் கிடைக்கின்றன. சில இடங்களுக்கும் இந்த மாதிரி ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. வெறும் காடாக இருந்த சாச்சி என்ற ஊர் இப்பொழுது ஜேம்ஷெட்பூர் என்ற டாடா நகரம் ஆகிவிட்டது! காடுகளும் மலைகளும் ஏரோப்பிளேன் இறங்கிப் பறக்கும் ஏரோ டிரோம் என்ற துறைமுகங்கள் ஆகிவருகின்றன.

அசென்சன் தீவு தென் அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஆபிரிக்காவுக்கும் தென் அமெரிக்காவுக்கும் இடையில் உள்ளது; ஒரு சிறிய தீவு; மலை உள்ளது; அதுவும் எரிமலை; கடும் பாறை; 3000 அடி உயரம் உள்ளது; ஏகாந்தமான இடம்; மனித சஞ்சாரமற்றது; பழங்காலக் குடிகள்கூட இல்லாத இடம்; சென்ற நூற்றாண்டில் சண்டையில் தோற்றுக் கைதியான நெப்போலியன் என்ற போர்வீரனை எந்த இடத்தில் பாதுகாப்பில் வைக்கலாம் என்று ஐயித்த வீரர்கள் சிந்தித்தபொழுது, இந்தத் தீவுக்கே அவனை அனுப்பலாம் என்று யோசித்தார்களாம்; ஆனால் அது தனியான இடம் என்றும், பக்கத்தில் 700 மைலுக்குள் வேறு பிரதேசம் இல்லை என்றும், அப்படிப்பட்ட மலை நாட்டில் நெப்போலியனைப் போன்ற வீரனைச் சிறை வைப்பது தர்மமன்று என்றும் நினைத்து அதற்குத் தென்கிழக்கே 760 மைலுக்கு அப்பாலுள்ள செண்ட் ஹெலினா என்ற தீவுக்கு அனுப்பினார்கள். இப்படி மனித நாற்றம் அறியாத அசென்சன் தீவு சென்ற இரண்டு மூன்று வருஷங்களில் ஓர் உன்னத நிலையை அடைந்துள்ளது.

அசென்சன் தீவு 7 மைல் நீளமும் 5 மைல் அகலமும் உள்ளது. சுமார் 34 சதுர மைல் பரப்புள்ளது. அது முதலில் போர்ச்சுகீஸ் தேசத்து மாலுமிகளால் 1501-இல் கண்டுபிடிக்கப்பட்டது. 300 வருஷங்களாக அதில் வசித்தவர் இல்லை; 1815-இல் அது பிரிட்டிஷார் ஆதிக்கத்துக்கு வந்தது. தந்தி அடிப்பதற்குச் சாதகமான (கேபில்) கம்பியை நாட்டுவதற்கு அதை ஒரு தக்க ஸ்தலமாக ஏற்படுத்தினர். அதில் ஜார்ஜ் டவுன் என்ற ஒரு சிறு துறைமுகத்தை உண்டாக்கினர். சாதாரணமாக வருஷத்துக்கு ஒரு தடவையோ இரண்டு தடவையோ சாமான் ஏற்றிச் செல்லும் கப்பல்கள் அங்கு இறங்கிச் செல்லும். சுமார் 75 பிரிட்டிஷ் மக்களே அங்கு வசித்தார்கள். அதில் எட்டு ஸ்திரீகளுக்கு அதிகம் இருந்ததில்லையாம். போர்த்துகேயர்கள் அதில் அசென்சன் தினத்தன்று இறங்கினார்கள்; அதனால் அதற்கு அசென்சன் தீவு என்று பெயரிட்டார்கள். அசென்சன் என்பது ஒரு கிறிஸ்தவப் பண்டிகைத்தினம்; கிறிஸ்துநாதர் புத்தியிர் பெற்று நாற்பது நாள் கழித்து இந்த உலகிலிருந்து மறைந்த தினம்; ஈஸ்டர் பண்டிகையிலிருந்து நாற்பதாவது நாள்.

இந்த நாளில் அசென்சன் அதிருஷ்டம் அடைந்தது. சென்ற இரண்டு மூன்று வருஷங்களில் அது அமெரிக்கர் மயமாகி விட்டது. தென் அமெரிக்காவிலிருந்து ஆபிரிக்காவுக்கு ஏரோப்பிளேனில் பறப்பவர்கள் இடையே தங்கும் துறைமுகமாகி விட்டது. "ஐயோ! ஒரு காக்காய்கூட அங்கு வந்து உட்கார்ந்தால், அதன் கால் ஒடிந்துபோகுமே" என்று ஒருவன் முன்பு அசென்சன் பூமியின் இயற்கையை வர்ணித்தானும். அதில் ஏரோப்பிளேன்கள் இப்பொழுது தினம் இறங்கிச் செல்லுகின்றன. இதன் விஷயமாக எழுதி, பிரஸ்தாபிக்கக் கூடாது என்று சர்க்கார் சட்டம் இருந்தது; இப்பொழுது அது நீங்கியது.

தென் அமெரிக்காவின் பிரேஸில் தேசத்து நேட்டால் துறைமுகத்துக்கும் அசென்சனுக்கும் 1448 மைல் உண்டு. அசென்சனுக்கும் ஆபிரிக்கா தங்கக் காலனியிலுள்ள அக்ரா என்ற துறைமுகத்துக்கும்

1362 மைல் உண்டு. ஆக இந்த 2810 மைலையும் கடல் கடந்து ஏரோப்பிளேனில் ஆபீஸர்கள் போயிருக்கிறார்கள். ஆனல் அதில் சிரமம் ஜாஸ்தி. எஞ்சின் பெரிதாக இருக்கவேண்டும்; கடப்பதற்கு வேண்டிய பெட்ரோலைச் சேகரித்துவைக்கவேண்டும்; மாலுமிகள் மிகவும் சாமர்த்தியசாலிகளாக இருக்கவேண்டும். செல்லும் பிரயாணி களுக்கு ஆகார வசதிகள் முதலியன கொடுக்கவேண்டும். இப்பொழுதோ அக் ராவிலிருந்து அசென்சனுக்கு (1362 மைல்) 6 மணி 20 நிமிஷங்களில் பறந்து ஒரு பத் திரிகை நிருபர், ஜான் கந்தர் வந்தாராம்; பிறகு அசென்சனிலிருந்து நேட்டாலுக்கு இன்னொரு 6½ மணி நேரத்தில் வந்து விட்டாராம்.

இங்கு ஏரோப்பிளேன்களுக்கு ரன்வே (பறக்கும் முன் ஓடும் சாலை) கட்டவே முடியாது என்றூர்களாம் பிரிட்டிஷ் எஞ்சி னியர்கள்; ஆனல் அதை அமெரிக்க எஞ்சி னியர்கள் 91 நாளில் வெகு உறுதியாக அமைத்துவிட்டார்களாம். இப்பொழுது ஐயோவா, காரலினு என்ற நாடு களிலிருந்து ஆயிரக்கணக்கான அமெரிக் கர்கள் அங்கு இருக்கிறூர்கள். அவர்கள் கொச்சை மொழி எங்கும் கேட்கிறதாம்.

அதிலுள்ள ரன்வே 7000 அடி நீளம் உள்ளது. அதன் நடுவில் ஒரு மேடு இருக்கி றது. அதை எந்த வெடிமருந்தினலும் தகர்க்க முடியவில்லை. டைனமைட், டி. என். டி. என்ற ரசாயனச் சரக்குகள் பிரயோசனப்படவில்லை. அது கடலோர மாக 3000 அடி உயரத்தில் உள்ளது. பிளேன் ஓட்டிகளுக்கு அது வெகு தூரத்தி லிருந்தே தென்படும். அவர்களுக்குச் சரி யான வழி காட்டுவதற்காகக் கப்பல்களும் அங்கே கடலில் உள்ளன. அங்கு உள்ள துருப்புகளுக்கும் ஆபீஸர்களுக்கும் இடை விடாமல் சாமான்கள் வந்துகொண்டே இருக்கின்றன. அங்கே சாப்பிட நல்ல ஜலம் கிடையாது. ரசாயனிகள் சமுத்திர ஜலத்தி லிருந்து நல்ல ஜலத்தைப் பிரித்து உதவுகி றூர்கள். அங்கே பயிர் பச்சையே இல்லை. அழகான டென் என்ற ஒருவகை வாத்து கள் ஆயிரக்கணக்காய்க் கிடைக்கின்றன. ஆனல் அவை சாப்பிட உபயோகமற் றவை. அவற்றின் முட்டைகள் வெகு ருசி யாக இருக்கின்றன.

அமெரிக்கர்கள் தங்கள் ஆதிக்கத்தைப் பெருக்குவதற்கு ஏரோப்பிளேன்கள் அவ சியம். ஏரோப்பிளேன்கள் நியூ யார்க்கி லிருந்து மியாமி, நேட்டால், அக்ரா, கெய்ரோ, டெஹரான் வழிகளாக இந்தியாவுக்கும், சீனுவுக்கும், பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கும் பறந்து செல்வதற்கு அசென்சன் தீவு ஒரு முக்கிய சாதனமாக இருக்கிறது. ஒரு சீன ஆபீஸர், "ஆஹா, கடவுள் அந்த அசென் சன் தீவை அந்த இடத்தில் பதித்தபோது, நேசநாடுகளுக்கு எத்தகைய உதவி அவர் புரிந்தார் என்று தெரியுமோ என்னவோ!" என்று வியந்தாராம்! அசென்சன் தீவில் போல நமது இந்தியாவிலும் பல ஏரோ டிரோம்கள் புதிதாக மூளைத்துத் தழைத்து ஓங்கிவருகின்றன.



அமெரிக்க ஆபிரிக்க ஏரோப்பிளேன் வீதி



கண்ணிழந்த பல்லி

விஜயஸ்ரீ

எனக்குக் கற்பனையே ஓடவில்லை. கனவுச் சுழலில் ஓட மறுத்தது மனம். திரும்பவும் திரும்பவும் குழந்தைகள் விளையாட்டிலேயே கவனம் சென்றது.

நான் உட்கார்ந்திருந்த நாற்காலியைச் சுற்றி ஐந்தாறு குழந்தைகள். சிமிட்டித் தரையில் இருந்த அழுக்கைச் சிறிதும் பாழாக்காமல் தன் துணியில் ஏற்றிக் கொண்டு அட்டகாசம் செய்துகொண்டிருந்தாள் என் தங்கை. அவளைச் சுற்றிப் பிளந்த வாயுடன் சில சிறுமிகள் இருந்தனர். சோழியினுல் வீடு கட்டும் வாண்டுப் பயல்கள் வேறு. கலகலவென்ற நகைப்பும், யாழினும் இனிய மழலையும் என் செவிகளிலே அமிருத வர்ஷத்தைப் பொழிந்தவாறு இருந்தன.

அவர்களைப்பற்றி எழுதலாமா? சே சே வேண்டாம்; ஆயிரம் கதைகள் அந்தப் பாணியில் வந்திருக்கின்றன. நான் இப் பொழுது எழுதுவது அமரத்துவம் பொருந்தியதாக இருக்க வேண்டுமே!

ஏதோ கதைக்கு விஷயம் அகப்படும் போல இருக்கையில், என் தங்கை, "அண்ணு, அண்ணு! இதோ பாரேன்" என்று கூச்சலிட்டாள். என் 'உயரிய' கற்பனைச் செல்வம் சிதைந்தது. "அடசட்" என்று சொல்லிக்கொண்டே திரும்பவும் ஸ்வப்ன உலகில் ஸஞ்சரிக்க யத்தனித்தேன். "இதோ பாரேன்; பார்த்தால் நீ கட்டாயம் சிரிப்பே" என்று என் தங்கை பயமுறுத்தினுள். பார்த்தால் தவிர விடுதலே கிடையாதுபோலத் தோன்றவே நாற்காலியில் இருந்த வண்ணமாக அவள் எதைக் காண்பிக்கிறுள் என்று பார்த்தேன்.

சிமிட்டித் தரையில் பல்லி ஒன்று வந்துகொண்டிருந்தது. அது சிறுவர் சிறுமியரின் விளையாட்டுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துவிட்டது. தங்கள் பொம்மை வீடுகளையும் மரப் பாச்சிகளையும் விட்டுவிட்டு அவர்கள் தரையில் ஊர்ந்து வரும் பல்லியைக் கவனிப்பதில் ஈடுபட்டிருந்தனர்.

பல்லி தரையில் வரக் காரணம் என்ன? பூச்சி பொட்டு எதையாவது துரத்திக் கொண்டு வந்திருக்கலாமோ? இரை தேட வந்திருக்குமானுல் சிறுவர்களைக் கண்டவுடன் பயந்து சுவரில் அபயம் அடைந்திருக்க வேண்டுமே!..... அதுதான் இல்லை. சிறுவர் கூட்டத்தின் மத்தியிலேயே வெகு தைரியமாய் வந்துகொண்டிருந்தது அந்தப் பல்லி.

அந்த வேடிக்கையைக் காண நாற்காலியை விட்டு, தரையில் அமர்ந்தேன். பல்லி வந்துகொண்டிருந்த பாதையில் ஒரு தட்டுத் தட்டினேன். அது பயப்படுவதாகவே காணவில்லை; மேலும் வந்து கொண்டே இருந்தது. என் ஆச்சரியம் கரை கடந்து போயிற்று.

என்ன வேடிக்கை! அதோ, நாற்காலியின் கால் ஒன்றின் மேல் பல்லி மோதிக் கொண்டுவிட்டது. 'ஹோ' என்று சிரித்தனர் குழந்தைகள். "ரொம்ப வேடிக்கையாய் இல்லே ராஜம்?" என்று தன் மதனியைக் கிள்ளினுள் தங்கை.

மனம் ஆராய்ச்சியில் சென்றுவிட்டது. ஏன் அந்தப் பல்லி அவ்வாறு முட்டிக் கொள்ள வேண்டும்?

குனிந்து பல்லியின் உடலமைப்பைக் கவனித்தேன். விநோதம்! அதற்குக் கண்களே இல்லை. கண்கள் இருக்க வேண்டிய இடத்தில் சதை வளர்ந்திருந்தது.

குருட்டுப் பல்லி, கண்ணிழந்த பல்லி, கற்பனைச் சவாரி, வேடிக்கையான சம்பவம். கதையின் பிறப்பு. உயரிய நோக்கங்கள். புகழ் ஏணி - என் எண்ணம் இவ்வாறுதான் பறந்தது.

"டீகமலா! அது குருட்டுப் பல்லிடி. அதனுலேதான் எங்கே கண்டாலும் முட்டிண்டு சர்க்கஸ் செய்யறது" என்று என் ஆராய்ச்சியின் முடிவு அறிவிக்கப்பட்டது. உடனே கரகோஷம். "நீ ரொம்ப வேடிக்கைக்காரண்டா; கோமாளி" என்று என் தங்கை சொல்லி வாய் ஓய வில்லை: அவளுடைய இடது பாதத்தில் அந்தப் பல்லி ஏறப் பார்த்தது. கீச்சென்று கத்தி, தன் காலை வேகமாக இழுத்தாள் அவள். இழுத்த வேகத்தில் பல்லி மேலே கிளம்பி, சுவரில் அடிபட்டு, கீழே விழுந்தது. "நல்ல தமாஷ்" என்று குழந்தைகள் ஆரவாரித்தன.

நடந்ததை அறிந்த என் தாய், சமையற் கட்டிலிருந்து வேகமாய் வெளிவந்தாள்.

"பல்லி இடது பாதத்திலா ஏறிற்று?" என்று கேட்டாள். "ஆமம்மா" என் மூன் தங்கை.

மறுபடியும் தாய் கூடத்தை விட்டு மறைந்தாள். திரும்பவும் தோன்றினபோது அவளுடைய கையில் ஒரு பஞ்சாங்கம் இருந்தது. அவளுடைய கண்கள் அதன் கடைசிப் பக்கத்தைத் துருவிப் பார்த்துக் கொண்டு இருந்தன.

"என்ன போட்டிருக்கு பலன்?" என்று நான் கேட்டேன்.

"இடது பாதம் - துக்கம்" என்று படித்தாள் தாய்.

"ஆமாம், ரொம்பத் துக்கந்தானம்மா அவளுக்கு. துக்க மிகுதியால் சிரிப்பை அவளாலே நிறுத்தவே முடியவில்லே. பாருங்கோ" என்றாள் ராஜம். சிறுவர் சிரித்தனர். பலத்த சப்தம். ஆனல் அடுத்த விநாடி பல்லியைப் பற்றிய வேடிக்கைப் பேச்சு சட்டென நின்றது.

வாசல் பக்கத்திலிருந்து, "அம்மா!" என்ற தீனக் குரல் எழுந்தது. நடுக்கத்துடன் கூடியிருந்த அந்தக் குரல் நிச்சப்தத்தைச் சிருஷ்டித்தது. "லொட்..... லொட்" என்ற சப்தம். பழைய மூங்கில் கம்பொன்றை ஊன்றிக்கொண்டு, தொண்டு கிழவன் ஒருவன் வீட்டெதிரே நின்றான். தடி பிடித்திராத கை ஒரு சிறுமியின் தோளைப் பிடிப்புக்காகப் பற்றியிருந்தது.

"அம்மா! கண்ணில்லாத கபோதிம்மா" என்ற பரிதாபக் குரல் எழுந்தது. எங்கள் உள்ளங்களில் எல்லாம் ஈட்டி எனப் பாய்ந்தது. ஈரேழு உலகங்களிலும் பிரதிபலிக்குமோ அந்தச் சோகக் குரல் என்ற ஐயம் உண்டாயிற்று.

ஆம்; பிச்சைக்காரனுக்கு இரண்டு கண்களும் இல்லை. அதற்குப் பதில் மூடப்பட்ட இமைகள். அவனுடைய பரிதாபத்தின் ஆழத்தை அறிய விரும்பும் பாதாளக் கரண்டிபோலக் குழி விழுந்து கிடந்தது, கண் இருக்க வேண்டிய இடம்.

கிழவனுக்குத் துணையாய் வந்த சிறுமி கத்த ஆரம்பித்துவிட்டாள்.

"சோறு கண்ணுலே பாத்து ரெண்டு நாளாவுதம்மா. சோறு போடும்மா. மகராசியா இருப்பேம்மா." அவளுடைய குரலிலும் ஏக்கம்.

ஐயோ பாவம்! தள்ளாத வயசில் ஏனே இது? ஏனே இது? கண்ணிழந்து பிச்சையெடுக்க வேண்டி இருக்கிறது. சமூகக் கடலில் ஒதுக்கப்பட்டு ஓடிந்து நொறுங்கிய மனிததேகம் தள்ளாடியது.

என் தங்கையைப் பார்த்தேன். அவளுடைய கண்ணில் கண்ணீர் துளித்திருந்தது. நான் பார்த்துவிட்டதை அறிந்த அவள் கண்ணீரை அடக்க முயன்றாள்; முடிய வில்லை. மளமளவென்று பெருகிவிட்டது.

"அசடு! ஏன் அழறே?" என்று கேட்டேன். வாசலைச் சுட்டிக் காண்பித்தாள்; ஆம், அந்தப் பிச்சைக்காரனைத்தான் காண்பித்தாள்.

"என்ன?" என்று கேட்டேன்.

"அவன் பாவம்!" என்ற அநுதாபக் குரல் அவளிடமிருந்து எழுந்தது.

"ஐயோ, பாவம்!" என்று சொன்னுள். காரணம் என்ன? அவனது அந்தகத் தன்மை! ஆனல் கண்ணிழந்த அந்தப் பல்லியைக் கண்டு அவள் என்ன செய்தாள்? பரிகாசம்! வேடிக்கை!!

பிச்சைக்காரனுக்குப் போட அரிசி கொண்டுவர அவள் உள்ளே ஓடினுள். பேனுவைப் பிடித்துவிட்டது என் கை!

கே.எஸ். ஜம்புநாதன்

பீடிகை

உணவிலே பல்வேறு ருசிகளைக் கண்டவர்கள் தென்னிந்தியர்கள்; அதுவும் குறிப்பாகத் தமிழர்கள்தாம். தமிழர்கள் உணவிலே சுகாதாரத் திட்டமும் வைத்திய முறையும் இருக்கின்றன. கிடைக்கும் பொருள்களைக்கொண்டு, தேங்காயைச் சேர்த்து ருசியுள்ள ஆகாரம் தயாரிக்கும் பெருமை மலையாளிகளைச் சேர்ந்தது. இனிமையான பக்குவங்களைச் செய்வதிலே பிரசித்தி பெற்றவர்கள் மங்களூர் ஆசாமிகள். மற்றவர்கள் மட்டம் என்று இதனால் சொல்லவில்லை. குறிப்பிட்ட சாதனங்களில் பல்வேறு ருசியும் பக்குவமும் கொடுக்கக்கூடிய உணவுகளைத் தென்னிந்தியர்கள்தாம் தயாரிக்கிறார்கள். ஆனால் அவர்களால் புதியதை ஏற்றுக்கொள்ள முடிந்தும், நிரந்தரமாகத் தங்கள் உணவுப் பட்டியலில் சேர்த்துக்கொள்ள முடியாமல் சில உணவுகள் உண்டு. உதாரணமாக, தமிழ்நாட்டிலே சப்பாத்தியும் ரொட்டியும் சாப்பிடும் மோகம் அதிகரித்தது. யுத்தம் ஆரம்பித்ததும் கோதுமை சரிவரக் கிடைக்காததால் அதை அநேகர் விட நேர்ந்தது. ஆனால் அதற்குப் பதிலாகக் கம்பும் சோளமும் உபயோகித்துக் கொள்ளக் கூடாதா என்றால், அவை அநேகருக்குக் கௌரவக் குறைவான ஆகாரமாகத் தோற்றுகின்றன. உண்மையிலே அரிசியைவிடச் சத்தான ஆகாரம் கம்பும் சோளமும். அதைப் பக்குவப்படுத்தி உண்டால் மிகவும் ருசியாக இருப்பதுடன் உடம்புக்கும் வலுவைத் தருகிறது. தேசீயச் சிக்கன முறையில் பார்த்தாலுங்கூட அது ஓரளவு அரிசிப் பஞ்சத்தை நிவர்த்தி செய்யும். சோளத்திலே விடமின் சத்துக்கள் குறைவு. சோளத்தை மாத்திரமே பிரதான உணவாகக் கொண்டால் சில சர்மநோய்கள் உண்டாகும். பிற உணவுகளுடன் சேர்த்து உண்டால் அது மிகவும் சத்தான ஆகாரமாகும்.

விடமின் வேண்டும்

அமெரிக்காவிலே விவசாயிகளுக்கு வேண்டிய சௌகரியங்களைக் கவனிக்கத் தனிப்பட்ட சங்கங்களும் சர்க்காரும் உண்டு. அது சுதந்தர நாடு. அங்கேகூட விவசாயி பூர்ண பயன் அடைவதில்லை என்று ஒரு கூக்குரல் உண்டு. ஆனால் அங்கு விவசாயி, தனது யுக்தியும் வசதியும் இடம் தருவதற்கேற்ப, தனக்குக் கிடைக்கும் வசதிகளைப் பூரணமாக உபயோகித்துக்கொள்கிறான். உதாரணமாக, அவன் பயிரிடும் உருளைக்கிழங்கு சரிவரப் பலன் தருவதில்லை; அல்லது சேமித்து வைக்கும்பொழுது அழுகிவிடுகிறது என்று வைத்துக்கொள்வோம். அவன் உடனே சர்க்கார் விவசாய இலாகாவிடமோ, அல்லது தனிப்பட்ட விஞ்ஞானசாலையிலோ தன் குறைகளைத் தெரிவித்துவிடுவதுடன், ஓர் ஏகராவில் இரட்டிப்புப் பலனும், அழுகிப்போகாத கிழங்கும் கொடுக்கக்கூடிய விதைக் கிழங்குகள் தயாரித்துக் கொடுக்கக் கேட்பான். மற்றொருவன் தனது உருளைக்கிழங்கில் ருசி அதிகம் இருக்கும்படி மாறுதல் கேட்பான். விஞ்ஞானிகள் அவ்வாறே செய்து தருவார்கள். இந்தியாவிலே விஞ்ஞானிகள் ஆராய்ச்சிசாலையில் விடமின் சத்து நிறைந்து, அதிக ராசி தரும் சோளம் எனக்குத் தயாரித்துக் கொடுங்கள் என்று கேட்கவேண்டும். அவனுடைய திடசித்தத்தையும் உத்ஸாகத்தையும் வியந்து விஞ்ஞானி அப்படியே செய்து தருவான். இது என்ன செப்பிடுவித்தையா? இல்லை. பயிரிடும் முறையிலும், எருவிடும் முறையிலும் ஒரு குறிப்பிட்ட மாறுதல் செய்தால், கிடைக்கும் பலனிலும் மாறுதல் ஏற்படும்.

சோளம் மிகவும் உயர்ந்த ஆகாரம். அதில் புஷ்டி தரும் சத்து இருக்கிறது. அதில் விட மின் சத்துக்களும் சேர்த்துவிட்டால் மிகவும் ஆரோக்கியமான உணவு ஆகிவிடும். மற்றத் தானியங்கள் இருக்கும்பொழுது சோளத்தைப் பற்றி நாம் கவலைப்படுவானேன்? வட இந்தியாவில் சோளமும், தென்னிந்தியாவில் கம்பு, கேழ்வரகு, சோளமும், மலையாளத்தில் மரவள்ளிக் கிழங்கும் ஏழைமக்களின் (விவசாயிகளின்) முக்கிய உணவாகின்றன. அதாவது தேசத்தில் சுமார் 70% பங்கு விவசாயிகள் ஒருவேளை ஆகாரமாவது இவற்றில் ஒன்றை உட்கொள்கிறார்கள். கோடிக்கணக்கான வர்களின் பிரதான உணவைப்பற்றி இது நாள் வரையில் சர்க்காரோ அல்லது அதை உண்ணும் மக்களோ கவனித்துப் பார்த்ததில்லை. யுத்தம் ஆரம்பித்த பின்பு, கோதுமைப் பஞ்சம் ஏற்பட்ட பிறகே சோளத்தைப்பற்றியும், கம்பு, கேழ்வரகு பற்றியும் சர்க்காருக்கு ஞாபகம் வந்தது. உடனே அவர்கள், "உங்கள் உணவிலே பாஜராவைச் (கம்பு) சேர்த்துக்கொள்ளுங்கள். ஜ்வார் (சோளம்) சாப்பிடுங்கள். புஷ்டி தரும் இவற்றைச் சாப்பிட்டு அரிசி நெருக்கடியைச் சமாளியுங்கள்" என்று பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்கள். அவற்றின் சிலாக்கியத்தைப் புகழ்ந்தார்கள். மக்களும் தங்களுக்குப் போதுமான இதர உணவுப் பொருள்கள் கிடைக்காததால் அதைக் கேட்டுக்கொண்டார்கள். நடுத்தர வகுப்பாரும் வேறு வழியின்றி அந்தத் தானியங்கள் என்ன என்று கண்விழித்துப் பார்க்க ஆரம்பித்தனர். வெறும் பிரசாரத்துடன் நிற்காமல், இந்தத் தானிய உற்பத்தியிலும் கவனம் செலுத்தியிருந்தால் சர்க்கார், விவசாய உலகத்திற்கு ஒரு நிரந்தர உபகாரம் செய்திருப்பார்கள். ஆனால் அதை அவர்கள் செய்யவில்லை. இந்தத் தானியங்களிலே நன்மையுடன் சில தீமைக் குணங்களும் உண்டு. அவற்றை நீக்கிப் புது "விதைமுதல்" (Strains) தயாரித்திருந்தால் அது சிறந்த தேசியச் சொத்தாகும். ஏகாதிபத்திய நலன்களிலேயே திருஷ்டியுள்ள சர்க்காருக்கு இவற்றில் எப்படி மனம் ஓடும்? விவசாய ஆராய்ச்சிகள், தொடிப் பொழுதில் செய்யக்கூடிய செப்பிடு வித்தைகள் அல்ல. ஆனால் தீவிரமாக ஊழைத்தால் இரண்டு மூன்று வருஷங்களில் முடித்து விடலாம். சோளத்தையும் கரும்பையும் விட்டுவிட்டுப் புன்செய்யிலே வீணாயும் கரும்பையும், 'பூஞ்சாண' நோயை எதிர்த்து வளரும் கரும்பையும் உற்பத்தி செய்த இந்திய விஞ்ஞானிகளுக்கு, விடமின் சத்துக்களை அதிகரித்து, இதர தீமைச் சத்துக்களைக் குறைத்து வீரியக்கூடிய ஒரு சோளத் தினுசை உற்பத்தி செய்ய முடியாதா? முடியும். மனம் வேண்டும். தேச மக்களின் நலத்தை எண்ணவேண்டும்.

ரகம்

சோளத்திலே அநேக விதம் உண்டு. சாதாரணமாக முத்துச் சோளம், மக்காச் சோளம், காக்காய்ச் சோளம் என்ற மூன்று தினுசுகளே அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. முத்துச் சோளம் பச்சையாகவே உண்பதற்காக ஆங்காங்கே கொஞ்சம் பயிரிடப்படுகிறது. மற்றவையே அதிகமாகப் பயிரிடப்படுகின்றன.

சோளம் புன்செய்ப் பயிர். சில இடங்களிலே ஜலம் இறைத்துச் சோளம் பயிரிடுகிறார்கள். அநேக இடங்களில், மாடுகளுக்குத் தீவனத்திற்காகச் சோளம் பயிரிடப்படுகிறது. ஏகரா ஒன்றிற்குச் சுமார் 400 ராத்தல் பலன் கிடைக்கிறது. சோளம் பயிரிட ஏற்படும் செலவு மிகவும் குறைவுதான். அதன் பலன், சரியாகக் கவனித்தால் இப்பொழுது கிடைப்பதைவிட இரட்டிப்பு ஏற்படும்படிச் செய்யலாம். விவசாய நுணுக்கங்களை அதிகம் விவரியாமல் நாம் இதன் ஏனைய அம்சங்களைக் கவனிப்போம்.

சரித்திரம்

சோளம் நம் நாட்டுச் சரக்கு அல்ல. அது அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. சாதாரண ஏழை சாப்பிடும் ரொட்டியிலிருந்து பணக்காரர்கள் சாப்பிடும் 'பாதுஷா' வரையில் சோளம் சம்பந்தப்பட்டிருக்கிறது என்றால் ஆச்சரியமாகவே இருக்கும். இன்று ஹோட்டல்களிலும் நாகரிக மக்கள் வீட்டிலும் மைதா மாவு இல்லாமல் ஒருவேளை உணவுகூடத் தயாரிப்பதில்லை. சில ஜில்லாக்களில் மைதா மாவை மரிக்கன் மாவு, அமெரிக்கன் மாவு என்று சொல்வார்கள். இந்த மைதா மாவில் பெரும் பகுதி சோளமாவுதான். அமெரிக்காவிலிருந்து இறக்குமதியானதால் அந்தப் பெயர் கிடைத்தது போலும்! சோளத்தை வீட்டில் குத்தி அரைத்து உபயோகிக்கிறான் ஏழை விவசாயி. மிஷினில் அரைத்துக் கலப்படத்துடன் கடையில் விற்கப்படுகிறது மைதா மாவு. அதை வாங்கிச் சந்தோஷமடைகிறான் பணக்காரன். மைதா மாவு பலவேறு உருவங்களில் சர்க்கரையுடன் சேர்ந்து மனிதனின் வயிற்றில் ஜீக்கியமாவது எல்லாருக்கும் தெரியும். ஹோட்டல் பக்ஷணங்களை உண்டு அநேக வியாதிகளை நாகரிக மக்கள் ஒப்பந்தம் செய்துகொள்வதும் எல்லோருக்கும் தெரியும். குறிப்பாக இந்த மைதா மாவில் இருக்கும் விடமின் சத்துக்களும் கொடாமல் பின்னும் கொஞ்சம் அதிகம் விடமின் சத்து இருந்தால் ஓரளவு நோய்களைக் கண்டிக்க முடியும். தவிர, சமையல் பக்குவத்தில் பல வேறு சத்துக்கள் கெட்டு வெறும் ருசியை மட்டும் பெறுகின்றன. இவ்வளவு பிரசித்தி

பெற்ற சோளம் முதல் முதலில் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு வந்து, அங்கிருந்து இந்தியாவுக்கு வந்தது.

அமெரிக்காவிலே பூர்விகக் குடிகள் சோளத்தைக் கடவுளின் பிரசாதமாகவே எண்ணி வணங்கிவந்தார்கள். புனிதமான இடங்களில் சோளத்தைப் பயிரிடுவார்கள். ஹிந்து சமூகத்திலே துளசிச்செடிக்கு எவ்வளவு மரியாதை செய்துவருகிறார்களோ அவ்வளவு மரியாதை சோளத்திற்கு அங்கே கிடைத்தது. தென் அமெரிக்காவிலே சோளம் பயிரிட நீர்ப்பாசன வசதி செய்யப்பட்டது. அங்குள்ள ஒரு நகரத்திலே (Temple of Maize at Cuzco) சோள தேவதைக்குக் கோயில் கட்டியிருக்கிறார்கள். அந்தக் கோயிலிலே ஆளுயரத்துக்குத் தங்கத்தாலான சோளக் கதிரும் செடியும் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன.

"ஆண்டவன் இந்த உலகைச் சிருஷ்டித்து விட்டு ஜீவராசிகளையும் படைத்தான். கடைசியாக இவற்றைக் கட்டியாள மனிதவர்க்கத்தைப் படைத்தான். எப்படித் தெரியுமா? மண்ணைப் பிசைந்து செய்தான்; உருவாகவில்லை. வேறு என்ன என்னவோ முயற்சிகள் செய்தான். கடைசியாக, சோளத்தைக் கசக்கி மாவாக்கிப் பிடித்தான். மனுஷ்யப் பிரகிருதி தோன்றிற்று. உடனே அவனுக்கு, அவனைப் படைத்த சோளத்தைக் காட்டி வணங்கச் செய்தான் ஆண்டவன்." இது அமெரிக்கப் பூர்விகக் குடிகள் நம்பும் புராணம். சோளத்தைத் தம் தாயாகவே இன்றும் எண்ணிவருகின்றார்கள் அமெரிக்கச் சிவப்பு இந்தியர்கள். மனிதவர்க்கத்தைப் பஞ்சம், பசி, பிணி இவற்றினின்றும் காப்பாற்ற ஏற்பட்ட தேவதை என்றே அந்த மக்கள் எண்ணுகிறார்கள்.

முதல்முதலில் ஸ்பானியர்கள் ஐரோப்பாவுக்குச் சோளத்தைக் கொண்டுவந்தார்கள். இங்கிருந்து உலகின் மற்றப் பாகங்களுக்குச் சோளம் பரவியது. இன்று உலகிலே அமெரிக்காவும், ஆசியாவும், ஐரோப்பாவுமே அதிகமாகச் சோளம் உற்பத்தி செய்கின்றன. மார்க்கெட்டைக் கட்டியாளும் திறமை அமெரிக்காவிடம் இருக்கிறது. புன்செய்த் தானியங்களை (Millets) ஆசியா அதிகமாக உற்பத்தி செய்தாலுங்கூடச் சோளத்தை மாத்திரம் அதிகமாக உற்பத்தி செய்வது அமெரிக்காதான். உலக உற்பத்தியிலே முக்கால் பங்கு அமெரிக்காவில் உற்பத்தியாகிறது. ஐரோப்பாவிலே ருமேனியாவும் ருஷ்யாவும் உற்பத்தி செய்கின்றன. ஆனால் உலக மார்க்கெட்டிலே தங்கள் சரக்கை விற்பவை ஐக்கிய அமெரிக்கா, அர்ஜென்டைன், ருமேனியா ஆகிய மூன்று நாடுகள்தாம். உலக தானிய உற்பத்தியிலே சோளம் எங்கோ ஒரு மூலையில் நிற்கிறது. அதாவது 7% தான். அரிசியும் கோதுமையுமே அதிக உற்பத்தி. பிரதான உணவாகச் சோளத்தைப் பாவிக்காவிட்டாலும், அது தினசரி ஆகாரத்தில் ஓர் அம்சமாக உலக மக்களில் ஒவ்வொருவரது உணவிலும் பங்கு வகிக்கிறது.

பயிரிடுதல்

சோளம் பயிரிடுவதில் திருப்திகரமான முறை இந்தியாவிலேயே மேற்கொள்ளப்படவில்லை. பனியிலேயே விளைந்துவிடும் வட இந்தியாவில்கூட, உழவனின் ஊக்கக் குறைவினால் பேர்தும்மான ராசி கிடைப்பதில்லை. தென்னாட்டிலோ சோளத்தைவிட இதர தானியங்களுக்குத்தான் மதிப்பு அதிகம். சமீபகாலமாக வியாபாரப் பொருள்களான கரும்பு, மணிலா, பருத்தி முதலியவற்றில் அதிக விலை கிடைக்கவே மக்களின் ஊக்கம் அவற்றின்பால் திரும்பிவிட்டனவே தவிர, உணவுத் தானியங்கள் மீது செல்லவில்லை. பயிரிடுவது எப்படி என்பது தனி விஷயம். அது விவசாயிகளுக்கு மாத்திரமே உதவியாக இருக்கும். மார்க்கெட்டில் புதிதாக ஒரு தேவை ஏற்பட்டால் உற்பத்தி செய்பவன் உடனே அதில் கவனம் செலுத்தி உற்பத்தி செய்கிறான். அதற்கு முக்கியமான காரணம் பிரசாரம். தேவை என்பது புத்திசாலியின் மூளையில் தோன்றும் வஸ்து. உபயோகமில்லாத பொருள்களைக் கூடத் தனது புத்திவன்மையால் மக்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அவர்களை மயங்கச் செய்து, மார்க்கெட்டில் விளம்பரம் செய்து, மக்களை அதன் அடிமையாக்கிவிடுகிறான். அதனால் அவன் லாபம் அடைகிறான் என்பது வேறு பிரச்னை.

சோளம் மிகவும் உயர்ந்த உணவுப் பொருள் என்றும், அதன் உபயோகங்களைப் பற்றியும் ஒருவன் சரியானபடி விளம்பரப்படுத்திவிட்டால், வியாபாரிகள் உடனே கவனிப்பார்கள். மக்கள் ஆகாரத்திற்குச் சோளம் வேண்டும் என்பார்கள். டாக்டர்கள் நோயாளிகளுக்குச் "சோளக் கஞ்சி" கொடுக்கச் சொல்வார்கள். கைத்தொழில் முதலாளிகள் டப்பியில் அடைத்த சோளம், சோளப்பொரி, சோளமாவு என்று மார்க்கெட்டை நிரப்பி விடுவதுடன், "சோள கிளிசரைன் - கூந்தல் டானிக்", "சோளம் மால்ட்", "சோளம் எக்ஸ்ட்ராக்ட் இஞ்ஜெக்ஷன்" என்று ஏராளமாகச் செய்துவிடுவார்கள். சோளத்திற்குக் கியாதியும் கிராக்கியும் வந்துவிடும். வேறு விதியின்றி விவசாயியும் சோளம் பயிரிட்டால் இரண்டு காசு வரும் என்று பயிரிட முற்படுவான். அப்பொழுதுதான் எப்படிப் பயிரிட்டால் அதிக ராசி கிடைக்கும் என்று எண்ணுவான். அப்பொழுது யோசனை சொல்லிக்கொடுக்க அவனுக்கு ஆயிரம் மந்திரிகள் வந்துவிடுவார்கள். ஏன், வெள்ளையனே போன்ற விவசாய இலாகா ஓடிவந்து கைகொடுக்காமலா

போய்விடும்? ஆகவே நாம் விவசாய ஆராய்ச்சியை விடுத்து மேலே போவோம்.

ஆசியாவில்தான் சோளம் உணவாக மட்டும் உட்கொள்ளப்படுகிறது. ஐரோப்பா வி லும் அமெரிக்காவிலும் பல வேறு முறை யில் சோளம் மனித சமூகத்துக்குப் பயன் படுகிறது. அமெரிக்கப் பத்திரிகை ஒன்று தந்துள்ள உபயோகங்களிலிருந்து ஒரு குறிப்பைக் கீழே கொடுக்கிறோம் :

"சென்ற யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்பு மிருகங்களுக்கு ஆகாரமாக மட்டும் சோளம் உபயோகப்பட்டுவந்தது. எங்கோ சில ஏழை மக்கள் இதை உணவாகக் கொண்டு வந்தனர். இதில் கொழுப்பு அதி கரிக்கும் சத்து இருப்பதால் முக்கியமாகப் பன்றிகளுக்குக் கொடுக்கப்பட்டுவந்தது. சோளத்தின் பசுந்தாள் குதிரைகளுக்கு உணவாயிற்று. ஆனால் விஞ்ஞான ஆராய்ச் சியின் பயனாகச் சோளத்தின் சரித்திரத் திலே பெரும் மாறுதல் ஏற்பட்டுவிட்டது.

"சோளம் சிறுநீர் பிரிக்கும் சக்தி வாய்ந் தது. அதனுடன் இருதய வேகத்தையும் அதிகமாக்குகிறது (Diuretic and Cardaic Stimulant). அதனால் வைத்தியர்கள் இதைப் பெரிதும் விரும்புகிறார்கள். சோளத் தட் டையில் சிறிதளவு சர்க்கரை இருப்பதால், ஷர்பத், பிராண்டி இவை தயாரிக்க உபயோ கப்படுகிறது. உலர்ந்த தட்டையோ காகிதம் செய்யவும், பலகைகள் செய்யவும், பாதரக்ஷைகள் செய்யவும் உபயோகமாகி றது. சோளத் தட்டையில் இருக்கும் 'நெட் டி'யிலிருந்து 'ஸெல்லுலாயிடு'ம் 'லினோலிய' மும் தயாரிக்கப்படுகின்றன.

"சோளக் கொண்டையிலிருந்து எடுக்கப் படும் எண்ணெயினால், ஸோப், கிளிசரைன், வண்ணங்கள், வார்னிஷ் முதலிய பல்வேறு பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன.

"உலக உற்பத்தியிலே சுமார் பத்து லக்ஷம் டன்கள் சோளம் 'குளூகோஸ்' தயாரிக்கச் செலவிடப்படுகிறது. சுமார் ஐந்து லக்ஷம் டன்கள் சாராய வகைக்கும், 4 லக்ஷம் டன் கள் 'மால்ட்' என்ற மாவு உணவு தயாரிக் கவும் உபயோகமாகிறது. எண்ணெய், குளூ கோஸ் முதலியவை எடுத்தது போக எஞ்சி யுள்ள கஞ்சி மாவிலிருந்து (Starch) முகம் பூசப் பௌடர்களும், இதர அலங்காரத் திரவியங்களும் ஜனனமாகின்றன."

சோளத்திலே கொழுப்புச் சத்து அதிகம் இருக்கிறது. பால் மாடுகளுக்கும், கோழி, பன்றி முதலியவற்றிற்கும் இதைச் சிறந்த ஆகாரமாகக் கொடுக்கலாம். தானியமாகக் கொடுப்பதைவிடப் பசுந்தாள் மாடுகளுக் குப் புஷ்டியான ஆகாரமாகிறது.

சோள ரொட்டி சிறந்த ஆகாரம். மலி வானதுங்கூட. தனியாக ரொட்டி செய்து சாப்பிடுவதைவிட, கோதுமை, பச்சைப் பயறு இவற்றுடன் கலந்து ரொட்டி செய் தால் புஷ்டியான ஆகாரம் ஆகிவிடும். சோளத்தில் விடமின் சத்துக்கள் மிகவும் குறைவு. அதனால் தனியாகச் சோளத்தையே சாப்பிடும் மக்களுக்குச் சர்ம வியாதிகள் ஏற்படும். வட இந்தியாவில் சகஜமாகச் சோளத்தைக் கோதுமை, கடலை அல்லது பச்சைப்பயறுடன் கலந்தே உபயோகிக்கி றார்கள்.

காலம் மாறுகிறது. நாமும் நமது தேவை களைத் திருத்தி அமைத்துக்கொள்ள வேண் டும். சந்தர்ப்பத்திற்கேற்ப நம்முடைய பழக்க வழக்கங்களைச் சிறிது தளர்த்திக் கொள்ள வேண்டும். அதற்காக நம சால்பு களை இழந்துவிடவேண்டும் என்பதில்லை. இந்திய உணவு மிகவும் பூரண சத்துள்ளது தான். ஆயினும் பல மாறுதல்களும் அவ சியமே.

பணத்தட்டு

மாம்பழக் கவிச்சிங்க நாவலர் என்ற புலவர் ஒருவர் பழனியில் இருந் தார். அவர் அந்தகர். ஒரு சமயம் இராமநாதபுரம் சேதுபதியினிடம் சென் றிருந்தபொழுது புலவருடைய திறமையைக் கண்டு சந்தோஷித்த மன்னர் கடைசியில் ஒரு வெள்ளித் தட்டில் ரூபாய்களை வைத்துக் கவிஞ ருக்கு அளித்தார். தட்டிலுள்ள பொருளை எடுத்துக்கொண்ட புலவர் சாதுர்யமாக, "பணத்தட்டு இங் கேயா? அங்கேயா?" என்று கேட் டார். சேதுபதி அவர் சாதுர்யத்தை உணர்ந்து, "அங்கேயே இருக்கட்டும்" என்று சொல்லி அதையும் அளித்து விட்டார்.

வஜ்ரகரூர்

இந்தியாவில்தான் மிகப் பழங்கால முதற்கொண்டு வைரங்கள் போற்றப் பெற்றுவருகின்றன. பிறகுதான் உல கத்திலுள்ள மற்ற நாடுகள் அவற்றின் அருமையை உணர்ந்தன. பிரேஸில் தேசத்தில் முதல் முதலில் 1728-ஆம் வருஷத்தில்தான் வைரம் கண்டுபிடிக் கப் பெற்றது.

அனந்தபுரி தாலுகாவில் குண்டக் கல்லுக்கும் உரவகொண்டாவுக்கும் இடையே வஜ்ரகரூர் என்று ஒரூர் இருக்கிறது. அங்கே வைரங்கள் அகப் படுகின்றனவாம். பழங்காலத்தில் அங்கே வைரங்கள் கிடைத்தமையால் தான் அவ்வூருக்கு வஜ்ரகரூர் என்ற பெயர் வந்திருக்கவேண்டும்.

வடபெண்ணையாறு ஓடும் பிரதேசங் களில் வைரங்கள் கிடைக்கின்றன வாம்.

ரேணுகா

வேங்கட லக்ஷ்மி

1

பிரம்மபுத்திரா நதிக்கரையில் பனிவரைச் சாரலில் அமைந்திருந்த தபோவனம் இயற்கையன்னையின் எழில் சம்பூர்ணமாய் நிறையப்பெற்றுக் கண்ணுக்கும் மனத்துக்கும் சாந்தி அளிப்பதாய் விளங்கியது. தூரத்தே காணப்பட்ட ஹிமாலயத்தின் வெண்பனி தோய்ந்த சிகரங்கள் பரமசிவனின் தூபூத்த திருமேனிபோலத் தோற்றம் அளித்தன.

மனத்தை மயக்கும் இளவேனிலின் சௌந்தர்ய சோபை அவ்வழகிய தபோவனத்தின் மூலை முடுக்குகளி லெல்லாம் பரவிநின்றது. அங்கு வசித்த தபஸ்விகளின் பூஜைக்குரிய நறுமலர்கள் நாலுபுறமும் புஷ்பித்து மண்டிக்கிடந்தன. அவற்றின் சுறுமணத்தை ஏந்திவந்த மலய மாருதம் விருக்ஷங்களின் கிளைகளை மெல்ல மெல்ல அசைத்துச் சென்றது. அருணோதயமாகும் வேளை. ஆசிரமங்களில் ரிஷிபத்தினிகள் கிருக கிருத்தியங்களில் ஈடுபெட்டிருந்தனர். வேதோச்சாடன ஒலியுடன் ஹோமப்புகையும் மேலே எழும்பிக்கொண்டிருந்தது.

நீலவிசும்பின் கீழ்த்திசையில் பருதியின் வருகையை அறிவித்தது செவ்வானம். விதம் விதமான வர்ணரேகாவிசித்திரங்கள் கதிரவனின் வருகைக்குக் கட்டியம் கூறின. விருக்ஷங்களின் கிளைகளில் பக்ஷிஜாதிகள் உதயத்தின் ஜாலகீதம் இசைத்தன.

பவித்திரமான பிரம்மபுத்திரையில் ஸ்நானம் செய்து, இடுப்பில் ஏந்திய மட்குடங்களின் தீர்த்தத்துடன் ஆசிரமங்களை நோக்கி வந்துகொண்டிருந்தனர் இரண்டு இளங்கன்னியர்.

அவர்கள் உடுத்திருந்த மாவுரிகளிலிருந்தும் ஈரமான கூந்தலிலிருந்தும் நீர்த்திவலைகள் சொட்டிக்கொண்டிருந்தன. இருவருக்கும் சுமார் பதினெட்டு வயசு இருக்கும். இளமைக்கு உரிய குதூகலமும் உத்ஸாகமும் அவர்களிடம் நிரம்பி இருந்தன.

சாரிணி, ஞானதேவ முனிவரின் புத்திரி. மற்றவள் பெயர் ரேணுகா. தபஸ்வி சோமகாதரின் மகள் அவள். இரு பெண்களும் ஒரு கொம்பில் பூத்த இரு மலர்களென ஒன்றுக வீளையாடி ஒன்றுக வளர்ந்தவர்கள்.

சாரிணி, தான் பிறந்து வளர்ந்த தபோவனத்தில் அரும்பி மலர்ந்திருந்த வசந்த புஷ்பங்களின் சோபையையும் காந்தியையும் பெற்றிருந்தாள். அழகையும், நவயௌவனத்தின் காந்தியையும் ஒருங்கே திரட்டி அவள் அங்கங்களில் பொழிந்து, அவளே அழகின் எல்லைக்கு ஓர் அடையாளமாக நிர்மித்திருந்தான் பிரம்மதேவன். வெள்ளிய தந்தத்தில் கடைந்த சிற்பம்போன்ற சௌந்தர்யமும் காட்டுக்கொடிபோன்ற தளதளப்பும் ஒன்று சேர்ந்து அவளைக் கண்கொள்ளாக் கட்டழகியாகச் செய்தன.

ரேணுகா, தன் தோழியைப்போன்ற ரூபவதி அல்ல; ஆயினும் மகாகுணவதி. சகல சாஸ்திரங்களையும் கரை கண்டவள். தேன்போன்ற மந்தரமான கண்டமூடையவள். அவள் பாட ஆரம்பித்தால், அந்த வனத்திலுள்ள பசு பக்ஷிகள் கூட மயங்கிவிடும். ஜனித்தவுடன் அவள் தன் அன்னையை இழந்தவிட்டமையால் சாரிணியின் தாயான காஞ்சனு தேவியையே தன் தாயாக மதித்திருந்தாள். அந்த அம்மணியும் ரேணுகாவைத் தன் மகளாகவே மதித்துப் போற்றிவந்தாள்.

குதூகலமாகச் சம்பாஷித்தபடியே இரு பெண் மணிகளும் சற்றுத் தூரம்வரையில் நடந்தனர்.

சட்டென்று நின்றாள் ரேணுகா.

"சாரிணி! - - அதோ பார்!"

அவள் சுட்டிக் காட்டிய திக்கை நோக்கினாள் சாரிணி.

சற்றுத் தூரத்தில் இருந்த பாரிஜாத விருக்ஷங்களுக்கு இடையிலிருந்து ஹோமப் புகை சுழன்று சுழன்று மேலெழும்பிக்கொண்டிருந்தது.

"சாரிணி! தந்தை ஹோமம் ஆரம்பித்து விட்டார்போல இருக்கிறது. நான் விரைவில் போகவேண்டும்" என்று கூறிக்கொண்டே அங்கே இருந்த குறுக்குப் பாதையில் திரும்பித் துரிதமாகச் செல்லலானாள். சில விநாடிகள் அவள் செல்வதைப் பார்த்துக்கொண்டே நின்றிருந்தாள் சாரிணி. பின்பு, ஈரம் சொட்டிய தனது ஆடையை உதறிவிட்டுக்கொண்டு ஆசிரமத்தை நோக்கி நடக்கலானாள்.

2

ஆசிரம வாசலில், செழித்து வளர்ந்திருந்த வில்வ விருக்ஷத்தின் அடியில், குவித்துவைத்தி

ருந்த ஸமித்துக்களை அடுக்கிச் சிறு கட்டுக்களாகக் கட்டிக்கொண்டிருந்தான் ஸ்ரீகாதன். அவன் கைகள்தாம் வேலை செய்துகொண்டிருந்தனவே தவிர, மனம் சிந்தனைவெளியில் பறந்து திரிந்து கொண்டிருந்தது.

ஞானதேவ முனிவரின் சிஷ்யன் அவன். வெகு அடக்கமான வாலிபன். ஞானதேவருக்கு அவனிடம் எல்லையற்ற அன்பு உண்டு. சுமார் பத்து வருஷங்களாக அவரிடமே குருகுலவாசம் செய்து கல்வி பயின்றுகொண்டிருந்தான். ரேணுகாவும், சாரிணியும் அவனுடன் சேர்ந்தே ஞானதேவரிடம் பாடம் கேட்டார்கள். ஸ்ரீகாதன் நல்ல சங்கீத ஞானமுள்ளவன். நிலா எறிக்கும் இரவுகளில் ஆசிரமத்தின் பின்புறம் இருந்த தாமரைப் பெய்கையின் கரையில் அமர்ந்து, ரேணுகாவுக்கும் சாரிணிக்கும் அற்புதமான கீதங்களைக் கற்பிப்பான். ரேணுகாவின் மதுரகண்டம் அவன் கற்பித்த கீதங்களை இசைக்கும்பொழுது ரிஷிகளும், ரிஷிபத்தினிகளும் தம்மை மறந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

ஏதேதோ சிந்தித்தபடியே உட்கார்ந்திருந்தான் ஸ்ரீகாதன். பரிசுத்தமான பிரம்மபுத்திரையில் ஸ்நானம் செய்து மந்திரங்களை ஓதிக்கொண்டே வந்துகொண்டிருந்த ரிஷிகுமாரர்கள் பலர் அவனைத் தாண்டிச் சென்றனர். ஸ்ரீகாதன் ஒன்றையும் கவனிக்கவில்லை. சற்று நேரத்தில் அவன் வேலை முடிந்தது. எழுந்துபோய்க் கோசாலையில் இருந்த பசுக்களுக்குப் புல்லைப் போட்டுவிட்டு, கட்டி வைத்திருந்த ஸமித்துக்களை எடுத்துக் கொண்டு போவதற்காக மீண்டும் மரத்தடியை நோக்கி வந்தான்.

அதே சமயத்தில் களுக்கென்று சிரிப்பின் ஒலி கேட்டுத் திரும்பிப் பார்த்தான். நீர்க்குடத்துடன் ஆசிரமத்துக்குள் நுழைந்துகொண்டிருந்த சாரிணியின் கண்கள் அவன் விழிகளைச் சந்தித்தன.

கன்னம் குழியக் குறுநகை செய்துகொண்டே உள்ளே போய்விட்டாள் இள மங்கை.

ஸ்ரீகாதன் ஒரு விநாடி பிரமித்துப்போய் நின்றான். பின்பு ஸமித்துக் கட்டுக்களை எடுத்துக் கொண்டு அவள் பின்னால் ஆசிரமத்துக்குள் போனான்.

* * *

அதே தினம் மாலை: உலகை இருள் கவியும் தருணம். துளசிமாடத்தின் அருகில் தீபமேற்றி வைத்துவிட்டு, அரும்பு வெடித்து மணம் கமழும்

பாரிஜாத விருக்ஷத்தின் அடியில் மாலை தொடுத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் ரேணுகா. அவள் வளர்த்துவந்த ரஜனி என்னும் மான்கன்று அருகே படுத்திருந்தது.

முதல் நாள் இரவு ஸ்ரீநாதன் தனக்குக் கற்பித்த அஷ்டபதியை மெல்லிய குரலில் பாடிக் கொண்டே மாலை வனைந்துகொண்டிருந்தாள் கன்னி. அவள் முகத்தில் சோகத்தின் ரேகை படர்ந்திருந்தது. கீதம் நின்றது. அவள் கையில் இருந்த மாலையும் நழுவிக் கீழே விழுந்தது.

அன்று பகல் தன் தந்தையின் மூலமாகச் சாரிணிக்கும் ஸ்ரீநாதனுக்கும் மணவினை நிச்சயமாகியிருக்கும் செய்தியை அவள் அறிந்திருந்தாள். தெருளாகவே அவள் எதிர்பார்த்திருந்ததுதான் அது; ஆயினும் அன்று ஏனே அவளுக்கு உலகமே இருண்டுவிட்டது போன்ற ஒரு பிரமை தட்டியது.

பேதை பாவம்! ஸ்ரீநாதனிடம் அவளுக்கு ஏற்பட்டிருந்த பிரியமானது, தனது பருவத்திற்கு ஏற்ப, காதலாக மாறிப் பரிணமித்தது. யௌவனத்தின் மாறுதல் ஏழை ரேணுகாவின் இருதயத்தையும் விகஸிப்பித்தது என்று ஒருவரும் சந்தேகிக்கவில்லை. ஸ்ரீநாதன் சாரிணியையே விரும்புகிறான் என்பதையும் அவள் அறிந்திருந்தாள். அவள் கருவிழிகளில் சொல்லொணாத எக்கம் தேங்கிக் கிடந்தது.

தன் அருகில் படுத்திருந்த மான்கன்றை அன்போடு தடவியபடியே, "ரஜனி, சாரிணியைப் போல என்னையும் ஒரு கட்டழகியாகப் பிரம்மா ஏன் சிருஷ்டித்திருக்கலாகாது?...அது என்னுடைய தாதிருஷ்டம் அல்லவா?...நானும் கண்கவர் கட்டழகியாக இருந்தால் ஸ்ரீநாதன் ஒருவேளை என்னை விரும்பியிருக்கலாம் அல்லவா?" என்றாள்.

ரஜனி அவளைப் பார்த்து மருள மருள விழித்தது.

ரேணுகா மீண்டும், "ரஜனி, எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. தந்தை தெற்கே தீர்த்த யாத்திரை போகும்பொழுது நானும் அவருடன் போய்விடப்போகிறேன்" என்றாள்.

மீண்டும் பாதி தொடுத்திருந்த மாலையைக் கையில் எடுத்தாள்.

அந்தச் சமயத்தில் "ரேணு!.....ரேணு!" என்று அழைக்கும் சாரிணியின் குரல் கேட்டுத் திரும்பினாள்.

நீண்ட தனது கூந்தல் காற்றில் அலைய, கையில் புஷ்பக்கூடையுடன் அவளை நோக்கி வந்துகொண்டிருந்தாள் சாரிணி. மாலைவேளையில் அற்புதமான அவள் கட்டழகு ரேணுகாவை ஒரு கணம் பிரமிக்கச் செய்தது. நீண்ட பெருமூச்சு அவள் இருதயத்தைக் கீறிக்கொண்டு வெளியே வந்தது.

"ரேணு! என்ன ஒரு மாதிரியாய் இருக்கிறாயே!" என்று கேட்டுக்கொண்டே அவளருகில் வந்து அமர்ந்தாள் சாரிணி.

"ஒன்றுமில்லையே! எப்பொழுதும் போலத்தானே இருக்கிறேன்!" என்று புன்சிரிப்புடன் பதில் அளித்தாள் ரேணுகை.

"ரேணு! என்னிடம் நீ ஒளிக்கவேண்டாம்; கொஞ்ச நாளாகவே நீ முன்போல இல்லை. உன்னுடைய கலகலப்பே போய்விட்டதே! இரவு வேளைகளில் நீ தனியாகப் பிரம்புத்திரைக் கரையில் போய் உட்கார்ந்திருப்பதைத் தந்தையார் அடிக்கடி காண்கிறாராம். நேற்று மஞ்சரிகூட என்னிடம் சொன்னாள். உனக்கு என்ன நேர்ந்து விட்டது? என்னிடம் சொல்லக்கூடாதா?"

இதைச் சொல்லிவிட்டுத் தன் தோழியை அன்போடு தழுவிக்கொண்டாள் சாரிணி.

சற்று நேரம் ஒன்றுமே பேசாமல் மௌனமாய் இருந்தாள் ரேணுகா. பிறகு ரஜனியின் முதுகைத் தடவியபடியே பேசத் தொடங்கி, "சாரு, எனக்கு ஏனோ வரவர உலகமே பிடிக்கவில்லை. தந்தையார் தீர்த்த யாத்திரை போகும்பொழுது நானும் உடன்போகலாம் என்று எண்ணியிருக்கிறேன்" என்றாள்.

திடுக்கிட்டாள் சாரிணி. ஒரு விநாடி தன் தோழியின் முகத்தை நோக்கினாள். அவள் கண்களில் நீர் நிரம்பியது.

"ரேணு! உண்மையாகவா? அல்லது வீண் யாட்டுக்குச் சொல்கிறாயா?"

"இல்லை! வீணாட்டு என்ன? தந்தையுடன் போவதாகவே நான் தீர்மானித்துவிட்டேன்!"

இதைக் கேட்ட சாரிணி ஒன்றும் பேச முடியாமல் சற்று மௌனமாக இருந்தாள்.

"சாரு! என்ன யோசிக்கிறாய்?"

வருத்தத்துடன் சிரித்தாள் அவள்.

"ரேணு! நீ போய்விட்டால் பிறகு நான் இங்கே தனியாகத்தானே இருக்கவேண்டும்? மஞ்சரியும் சில நாளில் தன் கணவனுடன் போய் விடுவாள்!"

"உனக்குத்தான் ஸ்ரீநாதன் இருக்கிறானே?"

இந்த வார்த்தைகளைக் கூறிவிட்டு, அடுத்த விநாடி தனது உதட்டைக் கடித்துக்கொண்டாள் ரேணுகா. அவளே அறியாமலே அவளுடைய நெஞ்சில் குமுறிக்கொண்டிருந்த அந்த வார்த்தைகள் வெளிவந்துவிட்டன. ஆச்சரியத்துடன் அவள் முகத்தை நோக்கினாள் சாரிணி.

தன்னுடைய குழப்பத்தை மறைப்பதற்காகச் சிரித்தபடியே, "சாரு, உன்னுடைய விவாகத்தன்றன்று இந்த மாதிரி மாலைதான் நான் உனக்காக வனையப் போகிறேன்" என்று கூறிக் கொண்டே, கீழே கிடந்த மாலையை எடுத்து அவள் கழுத்தில் இட்டாள் ரேணுகா. சாரிணியும் உடனே சிரித்தாள்.

ஆனால் அவள் மனத்தில் ஏற்பட்ட கலக்கம் மட்டும் மறையவில்லை.

3

ஞானதேவரின் ஆசிரமத்தில் சாரிணியின் விவாகத்துக்கான ஏற்பாடுகள் தாராளமாக நிறை வேறிக்கொண்டிருந்தன. காஞ்சனு தேவியும் வேண்டிய ரிஷிபத்தினிகளும் ஒய்ச்சல் ஒழிவில்லாமல் வேலை செய்துகொண்டிருந்தனர். தபோவனத்தில் இருந்த யாவரும் இந்த விவாக தினத்தை வெகு ஆவலுடனும் குதூகலத்துடனும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். விவாகதினம் நெருங்க நெருங்க, அவ்வனத்தில் இரண்டு ஆத்மாக்கள் மட்டும் தம் மனத்தில் அமைதியற்றுத் தவித்துக் கொண்டிருந்தன. ஒன்று ஸ்ரீநாதன்; இன்னொன்று ரேணுகா.

ஏதோ குற்றம் செய்துவிட்டதுபோன்ற ஒரு பிரமை ஸ்ரீநாதனின் மனத்தை அடிக்கடி வதைத்துக்கொண்டிருந்தது. சில தினங்களாகவே ரேணுகா தன்னிடம் சரியாகப் பேசாததை அவன் கவனித்திருந்தான். ஞானதேவரிடம் பாடம் கேட்பதற்கும் இப்பொழுதெல்லாம் அவள் வருவதில்லை. இரண்டொரு தினம் ஸ்ரீநாதனே அவளைப் போய்க் கூப்பிட்ட பொழுது, ரேணுகா அவனை ஏறெடுத்தும் பாராமல் தனக்கு உடல் நிலை சரியில்லை என்று கூறி அனுப்பிவிட்டாள்.

ஒரு தினம் பகல்: ஸ்ரீநாதன் ஆசிரமத்துக்கு வெளியே புஷ்பச்செடிகளுக்குப் பாத்தி கட்டிக் கொண்டிருந்தான். அப்பொழுது ரேணுகா கையில் இருந்த ஒரு மட்கலயத்துடன், காஞ்சனு தேவியிடம் சிறிது பசுநெய் கேட்டு வாங்கிப் போவதற்காக ஆசிரமத்துக்கு வந்தாள். அவளைக் கண்ட ஸ்ரீநாதன் புன்சிரிப்புடன், "ரேணுகா! நீ நேற்று என் பாடம் கேட்க வரவில்லை?" என்று கேட்டான்.

"ஆசிரமத்தில் வேலை இருந்தது" என்று வெடுக்கெனப் பதில் கூறிவிட்டு உள்ளே நுழைந்தாள் அவள்.

இம்மாதிரியான பதிலைச் சற்றும் எதிர்பாராத ஸ்ரீநாதன் ஒரு கணம் ஸ்தம்பித்துப்போனான்.

அவள் நெய்கலயத்துடன் திரும்பிப் போகும் பொழுது கற்சிலைபோல அவள் போவதையே நோக்கிக்கொண்டிருந்தான்.

விவாகத்துக்கு இன்னும் சில தினங்களே இருந்தன. அன்று அமாவாசை. மேலே ஸஹஸ்ர கிர மணிகள் பூண்ட ஆகாயம். சலசலவென்று அரித்துக்கொண்டு ஓடிய பிரம்மபுத்திரையின் ஜலத்தில் தன் கால்களைத் தொங்கவிட்ட படியே நதிக்கரையில் உட்கார்ந்திருந்தாள் ரேணுகை. பக்கத்தில் இருந்த சிறு கற்களைப் பொறுக்கி ஜலத்தில் எறிந்தபடியே அவைகளால் உண்டாகும் சிறு சுழல்களையும் குமிழ்களையும் நோக்கிக்கொண்டு இருந்தாள். ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தவள் திடீரென்று தனது துயரத்தை அடக்க முடியாமல் தேம்பித் தேம்பி அழலானாள். நெடுநேரமாக அவள் நெஞ்சை அழுத்தி வந்த துயரச்சுமை அன்று கண்ணீர்வெள்ளமாக வெடித்துப் பொங்கி வந்தது.

காலுபுறமும் மலர்ந்திருந்த நறுமலர்களின் மணமும், சலசலவென்று ஓடிய நதியின் இன்னிசையும், மெல்லென வீசிய தென்றலும் அந்தப் பேதையின் நெஞ்சில் இன்னதென்று விவரிக்க இயலாத உணர்ச்சிகளை எழுப்பிவிட்டன.

பசுக்கூட்டத்திலிருந்து தவறிக் காட்டுக்குள் ஓடிவிட்ட ஒரு கன்றைத் தேடிக்கொண்டு அந்தப் பக்கமாக வந்துகொண்டிருந்தான் ஸ்ரீநாதன். காற்றில் மிதந்துவந்த அழுகைக் குரல் அவனைத் திகைக்கச் செய்தது. சட்டென்று அந்தப் பக்கம் நோக்கி விரைந்து சென்றான். தன் பின்னே ஆள் வரும் அரவம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து நின்றாள் ரேணுகா அவள் உடல் பயத்தினால் நடுங்கியது.

"யாரது? ரேணுகா! நீயா? அற்றங்கரையில் இந்த நேரத்தில் தனியாக என்ன செய்கிறாய்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் ஸ்ரீநாதன். கீலை குனிந்து அவன் எதிரே மௌனமாக நின்றாள் பாலிகை.

"உறக்கம் வரவில்லை; அதனால் இங்கே சற்று உட்காரலாம் என்று வந்தேன்" என்றாள் சற்றுப் பொறுத்து. உணர்ச்சி மிகுதியால் அவள் குரல் தழுதழுத்தது. ஸ்ரீநாதனின் வியப்பு மேலும் பெருகியது.

சற்றுப் பொறுத்து, "இரவு நெடுநேரமாகிவிட்டதே! ஆசிரமத்துக்குத் திரும்பிப் போகவேண்டாமா?" என்று கேட்டான்.

"ஆம்; இதோ போகிறேன்" என்று கூறிவிட்டு ஆசிரமத்தை நோக்கி விரைவாகச் செல்ல ஆரம்பித்தாள்.

ஸ்ரீநாதனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. "தானும் ஆசிரமம் வரையில் துணையாக வரட்டுமா?" என்று கேட்க எண்ணினான்.

ஆனால் அவன் கேட்க வாயெடுக்கு முன்னரே ரேணுகா இருளில் மறைந்துவிட்டாள்.

4

சாரிணி ஸ்ரீநாதனின் விவாகம் சுபமாக நிறைவேறியது. ரேணுகா விவாக காரியங்களில் தானும் மூக்கியமான பங்கெடுத்துக்கொண்டாள். அவளுடைய மலர்ந்த முகமும் இனிய வார்த்தைகளும் அவளுடைய மனத்தில் கொந்தளித்த போராட்டத்தையும் புயலையும் ஒருவரும் அறியவொட்டாமல் மறைத்துவிட்டன.

ஸ்ரீகாதனுக்கு அவளுடைய போக்கே விநித்திராக இருந்தது. ஆற்றங்கரையில் அவள் தனியாக அழுதுகொண்டிருந்ததைக் கண்டபொழுது உண்டான கலக்கம் அவனை அப்பொழுதும் விடவில்லை. அவளை இரண்டொரு கடவை தனியாகச் சந்தித்தபொழுது அதைக் குறித்துக் கேட்க எண்ணினான். ஆனால் அதற்குப் பேதமான தைரியம் வராமையினால் பேசாமல் இருந்துவிட்டான். ஆனால் அவன் மனத்தை மட்டும் அடிக்கடி ஏதோ ஒன்று உறுத்திக் கொண்டிருந்தது.

விவாகமான எட்டாவது தினம்: பூர்ணசந்திரன் நிஷ்களங்கமான ஆகாயத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்தான். வசந்தத்தின் பரிபூர்ண சோபை அந்த வனம் முழுவதும் நிரம்பியிருந்தது. ஞானதேவரின் ஆசிரமத்துக்குப் பின்புறம் மல்லிகைப் புதரடியில் புல்லுத்தரையின்மீது படுத்திருந்தான் ஸ்ரீகாதன். அவனருகே உட்கார்ந்திருந்தாள் சாரிணி. புத்தம் புதிய குந்தபுஷ்பம் போன்ற அவளழகைத் தன் கண்களால் பருகிய படியே தன்னை மறந்திருந்தான் ஸ்ரீகாதன். அவ்விருவருடைய மனத்திலும் அன்று பரிபூர்ணமான இன்பம் நிரம்பிக்கிடந்தது.

அதைக் கலைப்பதற்காகத்தானே, என்னவோ, தூரத்திலிருந்து காற்று வாக்கில் மிதந்துவந்து அவர்கள் செவிகளில் அழுதம் பொழிந்தது ஒரு மதுர கண்டத்தின் இனிய நாதம்.

சட்டென்று எழுந்து உட்கார்ந்தான் ஸ்ரீகாதன்.

"சாரு! ரேணுகாவின் குரல் அல்லவா அது?"

"ஆம். வேறு யாரால் இவ்வளவு இனிமையாகக் கானம் செய்ய முடியும்? தேன் பொழியும் கண்டம் அவளுடையது அல்லவா?" என்றாள் சாரிணி.

தன் தோழியின் பெருமை தன்னுடையதாகவே தோற்றியது அவளுக்கு. கானம் முடியும் வரையில் இருவரும் மௌனமாக இருந்தார்கள்.

"ரேணு இன்றைத்தினம் ஆசிரமத்துக்கு வந்திருந்தாள். ஈரைத்தினம் தன்தை சோமநாதருடன் அவளும் தீர்த்தயாத்திரை போகிறாளாம். என்னிடம் விடை பெற்றுக்கொள்ள வந்திருந்தாள்" என்றாள் சாரிணி.

"அப்படியா? இவ்வளவு சீக்கிரமாகவா போகிறார்கள்?" என்று கேட்டான் ஸ்ரீகாதன்.

"ஆமாம். ரேணு போய்விட்டால் எனக்கு இந்த வனமே வெறிச்சென்று போய்விடும். மஞ்சரியும் சில தினங்களில் தன் கணவனுடன் போய்விடுவாள். அப்புறம்....."

"நீயும் சானும் மட்டிலுந்தான் இங்கு இருப்போம்" என்று சகைத்தான் ஸ்ரீகாதன்.

சாரிணியும் உடன் சகைத்தாள். ஆயினும் மறு தினம் ரேணுகா போய்விடுவாள் என்று எண்ணும்பொழுது அவள் இருதயத்தில் ஒரு பாரம் தோன்றியது. அவள் விழிகளில் நீர் திரையிட்டது.

ஸ்ரீகாதன் அவள் காத்தைப் பற்றி, "சாரு, என்ன யோசிக்கிறாய்?" என்றான்.

"ஒன்றும் இல்லை" என்று அவள் அவனுடைய அணைப்பில் தன்னை மறந்தாள்.

* * *

மறுதினம் காலை: அருணோதயமாய் எட்டு நாழிகை இருக்கும். காஞ்சனதேவி ஆசிரமத்துக்குள் ஏதோ வேலையாக இருந்தாள். ரேணுகா உள்ளே நுழைந்தாள்.

"அம்மணி, நான் விடைபெற்றுப் போக வந்திருக்கிறேன்" என்று கூறி அவளை நமஸ்கரித்தாள்.

"குழந்தாய்! எவ்வளவோ தடுத்தும் கேட்காமல் நீ இவ்வாறு பிரயாணப்பட்டுவிட்டாய். சுகமாகப் போய் வா. ஈசனருள் உன்னைக் காக்கட்டும்" என்று ஆசீர்வதித்துக் கண்ணீருடன் விடையளித்தாள் காஞ்சனதேவி. ரேணுகாவின் விழிகளும் நனைந்தன.

வெளியே போக எண்ணியவள் சட்டென்று திரும்பி, "அம்மணி, சாரிணி எங்கே?" என்று கேட்டாள்.

"ஸ்ரீகாதன் பசுக்கூட்டத்துடன் சென்றிருக்கிறான். சாரிணியும் உடன்சென்றாள்" என்று பதிலளித்தாள் காஞ்சனதேவி.

இவ்வார்த்தைகள் ஏழை ரேணுகாவின் மனத்தை ஒரு கணம் வாட்டின. சட்டென்று சமாளித்துக்கொண்டு, "நான் போய்வருகிறேன். அவளிடம் கூறுங்கள்" எனறு கூறிவிட்டு ஆசிரமத்தை விட்டு வெளியே போய்விட்டாள்.

* * *

காலைக்காத்தின் ஓட்டம் தபோவனத்தில் எண்ணிறந்த மாறுதல்களை உண்டாக்கியது. ஏழு வருஷங்கள் ஓடிவிட்டன. ஞானதேவரும் காஞ்சனதேவியும் ஒருவர்பின் ஒருவராகப் பாம பதம் அடைந்தனர். ரிஷிபுத்திரர்கள் பலர் வேறு வனங்களைத் தேடிச் சென்றனர்.

மாரி காலத்தின் ஆரம்பம். இடைவிடாது பெய்த மழையினால் பிரம்மபுத்திரையின் ஜலம் செங்குருதிபோலக் கலங்கிப் பயங்கரமாய்ச் சுழலிட்டு ஓடியது. வானத்தில் கருமுகிற் கூட்டங்கள் நிலைநின்றிருந்தன. அந்தி மயங்கும் வேளையே ஆகியிருந்த போதிலும் தபோவனத்தில் சிக்கிரமே இருள் சூழ்ந்துவிட்டது.

சாரிணி, ஞானதேவர் பூஜித்துவந்த விக்கிரகங்களுக்கு எதிரே தீபமேற்றி வைத்துவிட்டுப் புஷ்பம் சாத்திக்கொண்டிருந்தாள்.

கோசாலையிலிருந்து பால் குடத்துடன் ஆசிரமத்தை நோக்கி வந்தான் ஸ்ரீகாதன்.

"சாரிணி!" என்று அழைக்கும் குரல் கேட்டுச் சட்டென்று வெளியே வந்தாள் அவள்.

"அதோ பார்!"

அவன் சுட்டிக் காட்டிய திக்கை நோக்கினாள்.

தூரத்தே மினுக்கு மினுக்கென்று தீபவெளிச்சம் தென்பட்டது. ஆம். சந்தேகம் இல்லை. தபஸ்வி சோமநாதரின் ஆசிரமத்தில்தான் அந்த வெளிச்சம் தென்பட்டது.

சாரிணியின் உடல் ஒரு குலுங்கு குலுங்கியது.

"ரேணுவும் தந்தை சோமநாதரும் வந்துவிட்டார்கள் போல இருக்கிறது" என்றாள்.

"போய்ப் பார்ப்போமா?" என்றான் ஸ்ரீநாதன்.

இருவரும் அவ்விருளில் தீபவெளிச்சம் கண்ட திக்கை நோக்கிச் செல்லலானார்கள். சாரிணியின் கரத்தில் ஒரு மண்கலயம் நிரம்பப் பசும்பால் இருந்தது.

சோமநாதரின் ஆசிரமத்தில் ஒரு மான் தோலை விரித்துப் படுத்திருந்தாள் ரேணுகா. அவள் தலைமாட்டில் ஒரு மண் அகல் மினுக்கு மினுக்கென்று எரிந்துகொண்டிருந்தது.

இளைத்துப்போய் ஒரே எலும்புக்கூடாக இருந்த தன் தோழியைக் கண்டதும் அவளைக் கட்டிக் கொண்டு ஹோ என்று அழுதுவிட்டாள் சாரிணி. ஸ்ரீநாதன் ஸ்தம்பித்துப்போய்ச் சற்றுத் தூரத்தில் உட்கார்ந்துவிட்டான்.

"சாரு, ஸ்ரீநாதா!" என்றாள் ரேணுகா.

குழி விழுந்த அவள் கண்களில் ஒரு பிரகாசம் மிதந்தது.

தான் கொண்டுவந்திருந்த பாலைச் சிறிது பருகச்செய்தாள் சாரிணி.

"ஸ்ரீநாதா" என்று மீண்டும் மெல்ல உச்சரித்தாள் ரேணுகா.

அவளை அருகில் வருமாறு சைகை செய்தாள் சாரிணி. அவன் வந்ததும் அவனுடைய கரத்தைப் பற்றிக்கொண்டாள் பேதை ரேணுகா.

"தந்தை இறந்துவிட்டார்.....நான்...மட்டும் இறப்பதற்கு உன்னிடமே வந்துவிட்டேன்!... ஸ்ரீநாதா...என்னை மன்னிப்பாய்...சாரு, ஸ்ரீநாதன்...உனக்கே உரியவன்..." அவள் குரல் நின்றுவிட்டது. சாரிணி தேம்பி அழலானாள். ஸ்ரீநாதனின் விழிகள் நீரைச் சொரியலாயின.

இரவு நடுநிசிவரையில் தன் தோழியின் உயிர் ற்ற சடலத்தின்மீது சாய்ந்து அழுதுகொண்டிருந்தாள் சாரிணி. அதற்குமேல் ரேணுகாவின் உடலைக் கொடிகளாலும் தழைகளாலும் மூடி வைத்துவிட்டு இருவரும் ஆசிரமத்தைக் திரும்பலானார்கள். ஸ்ரீநாதனின் தோளில் சாய்ந்த படியே நீர் பெருகும் விழிகளுடன் கல்லிலும் முள்ளிலும் தட்டித் தடுமாறி நடந்தாள் சாரிணி. அவளை அணைத்துப் பிடித்தபடியே ஸ்ரீநாதன் வழியறிந்து சென்றான் ஸ்ரீநாதன்.

"சாரு, ஸ்ரீநாதன் உனக்கே உரியவன்" என்று ரேணுகா கூறிய கடைசி வார்த்தைகள் அவர்கள் செவிகளில் மீண்டும்மீண்டும் ஒலித்தன.

சுட்டு

தமிழில் அ, இ, உ என்ற மூன்று எழுத்தும் சுட்டிக்காட்ட உபயோகப்படுகின்றன. அ என்பது தூரத்தில் உள்ள பொருளைச் சுட்ட வருவதால் அதைச் சேய்மைச் சுட்டு என்று சொல்லுவார்கள். அவன், அந்த மனிதன் என்று சுட்டிக் காட்டுகிறோம் அல்லவா? இகரம் அருகில் உள்ள பொருளைச் சுட்ட வருதலால் அண்மைச் சுட்டு என்ற பெயரைப் பெற்றது: இவள், இந்த வீடு. உகரம் இடையிலுள்ள பொருளையும் மேலுள்ள பொருளையும் புறத்தே உள்ள பொருளையும் சுட்ட வரும். இது தமிழ்நாட்டில் வழக்கத்தில் இல்லை. யாழ்ப்பாணத்துக்காரர் உகரச் சுட்டைப் பேசும்போது வழங்குவது உண்டு. மேலே உள்ள தேவலோகத்தை "உம்பருலகு" என்று இலக்கியம் வழங்குகிறது. அங்கே, மேல் உள்ளதைச் சுட்ட உகரம் வந்தது.

"அவன் அன்றி ஓரணுவும் அசையாது" என்பதில் அவன் என்பது கடவுளைக் குறிக்கும். இந்தச் சுட்டு உலகமெல்லாம் அறிந்த பொருளைச் சுட்டுகிறது. "அந்தச் சூரியனுக்கு முன்னால் பனி நிற்குமா?" என்று பேசுகையில் வரும் சுட்டும் அத்தகையதுதான். இந்தச் சுட்டை உலகறி சுட்டு என்று சொல்வார்கள்.

"அந்தக் காலத்தில் காங்கள் கல்லைக் கடித்த ஜீரணம் செய்துகொள்வோம்" என்று தாத்தா பெருமூச்செறிகிறார். அந்தக் காலம் என்று சுட்டப்படும் காலம் எது? பழங்காலத்தை அவர் சுட்டிக் கூறுகிறார். "அன்று ராமர் பட்ட துன்பத்தை யார் படுவார்கள்?" என்பதும் அத்தகையதுதான். இவற்றைப் பண்டறி சுட்டு என்பார்கள்.

ஒரு மனிதர் தம் மனைவியை இழந்து விட்டார். வீடெல்லாம் அலங்கோலமாகி விட்டது. "அவள் இருந்தால் இப்படி ஆகுமா?" என்று வாய்விட்டுப் பொருமுகிறார். அவள் யார்? அவர் உள்ளத்திலே தோற்றுகிற உருவத்தை உடையவள் அவள். புதிய மனிதர் யாராவது வந்தால் அவள் என்பது யாரைச் சுட்டுகிற தென்று தெரிந்துகொள்ள முடியாது. அது அவர் மனத்துக்குத் தெரியும். இதை நெஞ்சறி சுட்டு என்று சொல்வார்கள்.

'குமுதினி'

"புதுமைப் பெண் எப்படி இருப்பாள்?" என்று என்னைக் கேட்டால், "தெரியாது" என்று சுலபமாய்ச் சொல்லிவிடுவேன். ஆனால் கலீமகள் ஆசிரியர் அவ்விதம் கேட்காமல், "வருங்காலத்துப் பெண் எப்படி இருந்தால் நலம்? ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை இருக்கவேண்டுமா?" என்று விதவிதமாய்க் கேட்டிருக்கிறார். என்னை வலுச் சண்டைக்கு இழுக்கிறார். ஏனெனில் நான் ஒரு பெண்வாதி. எப்போதும் பெண்களிடம் எனக்குப் பக்ஷபாதம். என்னை இவ்விதக் கேள்வியைக் கேட்டால் வெறும் வாயை மெல்லுபவளுக்கு அவல் அகப்பட்டமாதிரித்தான்.

புதுமைப்பெண் எப்படி இருந்தால் நலம்?

விவேகியாய் இருந்தால் நலம். நல்ல நெஞ்சம் படைத்தவளாய் இருந்தால் நலம். கோழைத்தனம் இல்லாமல் தைரியத்துடனும் திடசித்தத்துடனும் இருந்தால் நலம். அழகாய் இருந்தால் நலம். மிருதுவாகவும் சாமர்த்தியத்துடனும் பேசினால் நலம். குழந்தைகளை நன்முக வளர்த்தால் நலம். புருஷர்களை அவர்களுடைய ஸ்தானத்தில் இருக்கச் செய்தால் நலம். ஏன், நீதிநெறி முழுவதும் பின்பற்றினால் நலம் என்று சொல்லலாம்.

"வருங்காலத்தில் பெண்ணுலகம் எப்படி இருந்தால் சமூதாயத்திற்கு நன்மை உண்டாகும்?" — இந்தக் கேள்வியைக் கேட்பது சுலபம். விடையளிப்பது அவ்வளவு சுலபமன்று. ஒவ்வொரு வரும் ஒவ்வொரு விதமாக விடை அளிக்க இடம் இருக்கிறது. "இவ் விஷயத்தைப் பற்றிச் சிந்தித்து உங்கள் எண்ணங்களைத் தொகுத்து எழுதித்தரவேண்டும்" என்று சிலரை வேண்டிக்கொண்டோம். 'புதுமைப் பெண்' என்ற கட்டுரை வரிசையாக அவை வெளியாகும். முதல் முதலாக ஸ்ரீமதி குமுதினி தம் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். 'எப்போதும் பெண்களிடம் பக்ஷபாதம்' உள்ள ஸ்ரீமதி குமுதினியின் கட்டுரையைப் பெண்ணுலகத்தில் ஒரு பெரும் பகுதியாருடைய அபிப்பிராயமாகவே கொள்ளலாம். சிந்திப்பதற்குரிய பல அநுபவபூர்வமான விஷயங்கள் இதில் இருக்கின்றன.

மேலும் மாறுபட்ட அபிப்பிராயங்கள் அடுத்து வெளிவரும். ப - ர்.

அவளை எவ்விதம் சிருஷ்டிப்பது?

இப்போது இருக்கும் பெண் அம்மாதிரி ஏன் இல்லை, என்ன என்ன விஷயங்களில் அவளுக்குத் தடை இருக்கிறது என்பவற்றை ஆராய்வோம்.

முதலாவது விவேகம். விவேகக் குறைவினால்தான் ஆண்களும் பெண்களும் சமமா என்று சிலர் கேட்கின்றனர். சம உரிமை அளிப்பதா என்று கேட்கலாம். ஆனால் சமமா என்று கேட்பதில் அர்த்தம் இல்லை.

ஆண் ஒரு வகுப்பினர். சில குணங்களுடன் பிறக்கிறவர். பெண் ஒருவகுப்பினர். அவரும் சில குணங்களுடன் பிறக்கிறவர். இவ்விரு திறத்தாரும் ஒருவருக்கொருவர் பூர்த்தி செய்கிறவர்கள். ஆண்களுக்குச் சிலவிதச் சக்தி அதிகம் இருக்கிறது. பெண்களுக்கு வேறுவிதச் சக்தி இருக்கிறது. ஆகையால் ஒருவரைவிட ஒருவர் மேலான வரா, கீழ்ப்பட்டவரா என்ற கேள்விக்கு இடம் இல்லை. இருவருக்கும் சம உரிமை

தான் கொடுக்க வேண்டும் என்பது என் னுடைய அபிப்பிராயம்.

பெற்றோர் தம் பிள்ளையை எவ்விதம் படிக்க வைத்து, விவாகம் செய்வித்து, சொத்து கொடுக்கின்றனரோ அதே விதம் பெண்ணிற்கும் கல்வி கற்றுக்கொடுத்து, கல்யாணம் செய்து வைத்து, சொத்தும் கொடுக்கவேண்டும். ஒருவருடைய சொத் தில் அவருடைய பிள்ளை, பெண் இருவருக் கும் சம உரிமை வேண்டும்.

நம் தற்காலப் பழக்கங்களில் இதற்கு ஆக்ஷேபமான சில அம்சங்கள் இருக்கின் றன. பெண்களின் கல்யாண விஷயத் தில் பிள்ளைகளை விட அதிகச் செலவு பெற்றோர்களுக்கு ஏற்படுகிறது. அவ்விதம் செலவு செய்த பின்பும் சொத்து வேறு கொடுப்பதென்றால் பிள்ளையின் பாகத்தை விடப் பெண்ணின் பாகம் அதிகமாகிவிடும். ஆகையால் சொத்துள்ள பெற்றோர்கள் கல் யாண சமயங்களில் செலவு செய்வதைக் குறைத்துக்கொள்ள வேண்டும். சட்டப்படி பெண்ணிற்கும் சொத்து வரும் என்று ஏற் பட்டுவிட்டால் சம்பந்திகளும் இவ்விதக் குறைந்த செலவைப்பற்றி ஆக்ஷேபிக்க மாட்டார்கள்.

பெண்கள் கையில் மிகுதியான சொத்தும் அதிகாரமும் இருந்தால் அதைச் சரிவர வகிக்க அவர்களுக்குத் திறமை இராது என்ற கொள்கை ஒன்று நம்மிடை வெகு காலமாக இருந்துவருகிறது. அது ஓர் அம்சத்தில் உண்மையே. அதற்குக் காரணம் அவ்விதச் சொத்தை ஆள்வதற்கென்று ஒரு பெண்ணும் பழக்கப்படுகிறதில்லை. பிள் ளைக்குச் சொத்துக் கொடுக்கும் தகப்பனர் சிறுவயசிலிருந்தே சரிவரச் செலவு செய் யும் பொறுப்பை அவனுக்கு உணர்த்துகி றார். அதே விதம் பெண்களுக்கும் போதித் தால் சொத்தின் பாரத்தை அவர்களும் சரி யாக வகிப்பார்கள். அதாவது வகிக்கும் விதத்தில் அவர்களுக்கும் புருஷர்களுக்கும் அதிக வித்தியாசம் இராது. புருஷர்களில் வீண் விரயம் செய்பவரின் எண்ணிக்கையை விடப் பெண்களில் வீண்விரயம் செய் பவரின் எண்ணிக்கை அதிகம் இராது.

தம் பெண்ணிற்குத் தாம் எவ்விதச் சொத்தும் கொடுக்கப் போகிறதில்லை என்று அறிந்த பெற்றோர் அவளுக்கு ஏதா கிலும் ஒரு தொழிற் கல்வி படிப்பிக்க வேண்டும். இதற்கும் விவாகத்திற்கும் எவ் விதமான சம்பந்தமும் இல்லை. ஆனால் ஒரு தொழிலைச் செய்து தனது வாழ்க்கையை நடத்திக் கொள்ளும் சக்தி தனக்கு இருக் கிறது என்ற பலம் ஒவ்வொரு பெண் ணிற்கும் வேண்டும். தெய்வகதியால் விவாகம் ஆகாமலோ, இளமை வைதவ்யம் ஏற்பட்டோ இருக்க நேரிட்டால் தன்னை ஒரு நல்ல தொழிலின் மூலம் காப்பாற்றிக் கொள்ளும் திறமை அந்தப் பெண்ணிற்கு இருக்க வேண்டும். இவ்விதம் திறமை பெற்ற பெண்களுக்குச் சமூகத்தில் நல்ல வேலை கிடைக்க வேண்டும். அதற்குச் சட்டம் இடம் அளிக்கவேண்டும்.

"பெண்களுக்குப் புத்தியே கிடையாது. அவர்கள் சுதந்தரத்திற்கு லாயக்கே அல்ல" என்ற வார்த்தையை நான் இளம் வயசு முதல் கேட்டு வருகிறேன். நான் நெருங்கிப் பழகும் புருஷர்கள் பெண்களுக்குச் சுதந் தரம் அளிக்கக் கூடாது என்ற கொள்கைகள் உடையவர்கள். பெண்களைப் பற்றின பரி காச வார்த்தைகளைக் கேட்டு என்னுடைய மனம் எவ்வளவோ புண்பட்டிருக்கிறது. இந்தக் கட்டுரை என்னுடைய மனத்தில் உண்டாகும் வெறும் ஆசையை மாத்திரம் கொண்டு எழுதினதல்ல. எதிர்க் கட்சி யினர் சொல்லும் காரணங்களை ஆராயாம லும் எழுதினதல்ல.

ஓர் அம்மாளை ஒரு கேள்வி கேட்டார்கள். அதற்கு அவர் வேறொரு பதில் சொன்னார். உடனே என்னுடைய பக்கத்தில் இருந்த புரு ஷர் ஒருவர், "பார்த்தயோல்லியோ! பெண் கள் காரியமே இப்படித்தான்" என்று என் னுடைய காதில் முணுமுணுத்தார். இன் னும் பல சமயம், "பார்த்தயோல்லியோ! பெண்களே இப்படித்தான்" என்ற வார்த் தையை நான் கேட்டிருக்கிறேன். ஒவ் வொரு சமயமும் அவ்விதம் கூறப்பட்ட பெண்மணி தவறு செய்ய நேரிட்டதன் காரணத்தை ஆராய்வேன். மூன்று காரண ங்களினால்தான் இவ்விதத் தவறுகள் ஏற் படுகின்றன: (1) படிப்புக் குறைவு, (2) உலக அநுபவக் குறைவு, (3) உணர்ச்சியின் வேகம் - இம்மூன்று காரணங்களினாலேயே புருஷர்களைவிடப் பெண்கள் அதிகத் தவறு செய்ய நேரிடுகிறது. நான் உதாரணமாகக் கூறிய அம்மாளைப் போலவே கேட்ட கேள்விக்கு வேறு பதில் சொல்லும் புருஷர் களை எனக்குத் தெரியும். அதைக் கொண்டு புருஷர்களே இப்படித்தான் என்று என் னால் நினைக்க முடியாது. நினைப்பதாகச் சொல்வதற்கும் வெட்கமாக இருக்கும். வீட்டிற்குள் செல்வமாக வளர்க்கப்பட்ட பெண்ணையும், ஒரு தொழில் செய்து முன் னுக்கு வரவேண்டுமென்று சிறுவயசு முதல் பழக்கப்பட்டு வெளியில் பல ருடன் போட்டியிட்டுத் திறமை பெற்றிருக்கும் புருஷரையும் ஒப்பிட்டுப் பார்த்துவிட்டுப் பெண்களைக் கேலி செய்வது பேடித்தனம். புதுமைப்பெண் இதைப் பொறுத்திருக்க மாட்டாள். பெண்களிடம் தற்காலம் சில குறைகள் இருப்பதை ஒப்புக்கொண்டு அதை நிவர்த்திக்க வழி தேடுவாள். அவை களை மாற்ற முடியாது என்று ஒப்புக் கொள்ள மாட்டாள்.

விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலம் அதிக விஷயங்களை நிபுணர்கள் கண்டுகொண்டே இருக்கின்றனர். எல்லா விஞ்ஞான அறிவி

லும் மேன்மையானது மனஸ்தத்துவமும் தேகதத்துவமுமே. மனஸ்தத்துவ அறிஞர்கள் பெண்களும் ஆண்களும் சமமா என்று பேசுவதே இல்லை. ஏதோ ஓர் அணுவிலும் சிறிய ஜெனி (Gene) என்ற வஸ்துவினால் மனிதரின் ஆகருதி, வர்ணம், மூக்கு, காதுகளின் அமைப்பு ஆகியவை ஏற்படுகின்றன. அதேவிதம் குணங்களும் அநேகமாய் ஏற்படுகின்றன. "அப்பாவின் மூக்கு", "அப்பாவின் கண்" என்று தகப்பனரின் சாயலைக் கொண்டு பிறக்கும் பெண் தகப்பனுரைப் போன்ற வேறு சில குணங்களையும் பெற்றுத் தைரியமுள்ளவளாக இருக்கலாம். அவ்விதமானவள் தொழில் செய்யச் சென்றாலும் வெற்றி அடைவாள்; வீட்டைப் பராமரித்தாலும் நன்முகச் செய்வாள்; அதிகாரத்தில் பிரியமுள்ளவளாக இருந்து குடும்பத்து லகாமைத் தன்னுடைய கையில் பிடித்துக்கொள்வாள். சாதுவாய்ப் பிறந்த பெண்மை அதிகாரப் பதவியில் உட்கார வைத்தாலும் அவள் பயந்து பயந்து நுகத்தடியைத் தூக்கித் தன்னுடைய கழுத்தில் தானே வைத்துக்கொள்வாள். புருஷர்களில் பெண்மைக் குணம் படைத்தவர்கள் இல்லையா? இவைகளெல்லாம் எல்லோரும் அறிந்தனவே. ஆகையால் பெண்களுக்குச் சம உரிமை கொடுக்கக்கூடாது என்று சொல்வது நியாயம் அல்ல.

"உன்னைத் தெரிந்துகொள்" என்று ஞானிகள் வற்புறுத்துகிறார்கள். ஒவ்வொரு பெண்ணும் தன்னுடைய இயற்கையையும் தன்னுடைய சக்தியையும் சக்திக் குறைவையும் நன்கு அறிய முயலவேண்டும். நூறு ஆண்களுக்கும் நூறு பெண்களுக்கும் இருக்கும் புத்தியைக் கணக்கிட்டால் அநேகமாய் இரண்டும் ஒரே அளவாக இருக்கும். ஆனால் நூறு ஆண்களுக்கும் நூறு பெண்களுக்கும் இருக்கும் உணர்ச்சியைக் கணக்கிட்டால் ஆண்களைப்போல இரு மடங்கு பெண்களுக்கு இருக்கும். இந்த உணர்ச்சியின் வேகமானது பெண்களைத் தமது அநுபவ அறிவைக் கொண்டு வேலை செய்ய விடாமல் உணர்ச்சியின் இஷ்டப்படியே வேலை செய்யுமாறு தூண்டிவிடுகிறது. மனஸ்தத்துவ சாஸ்திரம் படித்தால் தம் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தப் பெண்கள் அறிவார்கள். ஒரு தொழில் செய்து, பலருடன் கூடப் பழகித் தனது ஜீவனத்தைப் பெறவேண்டும் என்று இருந்தால் நிர்ப்பந்தத்தினால் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தக் கற்பாள். ஞானம் எவ்விதம் ஏற்பட்டால் என்ன? எங்கள் வீட்டில் குழந்தையை வைத்துக்கொள்வதற்கென்று ஏற்படுத்தப்பட்ட ஒரு சிறு குட்டி மூன்று மாதமாக இருக்கிறது. நிதானமாகவும் சொல்வதைக் கவனித்தும் வேலை செய்கிறது. ஒரு நாளாகிலும் யோசியாமல் ஒரு வார்த்தை சொல்வதில்லை. வேலை செய்ய வில்லை என்று பல முறை நான் அதை அதட்டிப் பேசி இருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அது, "எனக்கு முன்னடி தெரியாது, அம்மா. இனிமேல் செய்கிறேன்" என்று சாந்தமாகவும் பயம் இல்லாத மரியாதையுடனும் விடை கூறும். அதைக் கேட்டபின் நான் என்னுடைய கோபத்தை எண்ணி வெட்கமுறுவேன். நம் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியும். அதைச் செய்து கொள்ளக் கற்றவளே விவேகி. அவளே புதுமைப் பெண்.

"தவருக உபயோகிக்கப்பட்ட உணர்ச்சிகள் நாசத்தையே விளைவிக்கின்றன. உணர்ச்சியினால் ஆளப்பட்டால் பெண்கள் அடிமைகளாகத்தான் இருக்கவேண்டும்" என்று காந்தியடிகள் ஒரு முறை கூறினர்.

உணர்ச்சியினால் தூண்டப்பட்டு ஒரு காரியத்தைச் செய்வது சுலப வழி. புத்தியை உபயோகித்துச் செய்வது கஷ்ட வழி. இந்தக் கஷ்ட வழியையே பின்பற்றும்படி சிறு வயசு முதல் பழக்கப்பட்ட பெண்கள் ஒரு நாளும் அடிமையாக இருக்க வேண்டிய அவசியம் இராது.

விவேகத்தைப் பெற்ற பெண்ணிற்கு நான் கூறின இதர குணங்களும் தாமாகவே ஏற்படும்.

"நல்லவனுக இருப்பவன் விவேகியாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் விவேகி நல்லவனுகத்தான் இருப்பான்" என்பது ஒரு பழமொழி. பெண்கள் இயற்கையாக இளகின மனசு உடையவர்கள். அந்த மனசுடன் புத்தியும் கலந்தால் நலமேதான் ஏற்படும். புதுமைப் பெண் அவ்விதம் புத்தியைக் கலந்துகொள்ளாமல் இருக்க மாட்டாள். நல்ல மனசு என்ற காரணத்தினால் குழந்தைகளின் தவறுகளைக் கண்டிக்காமல் அவர்களை அசடாகவும் பிடிவாதமாகவும் வளர்க்கவோ மோசக்காரர் பேச்சை நம்பித் தர்மத்திற்கு அளிக்கிறோம் என்று கண்டவர் கேட்டவர்களுக்குப் பொருளை அளித்தோ ஏமாறமாட்டாள். அப்படி ஏமாந்து போகும் புருஷர்களும் இருக்கிறார்கள் என்பதனால் மனச் சாந்தி பெற முயலமாட்டாள்.

நமது கால் அல்லது கையைக் கட்டிப் போட்டு வைத்திருந்தால் அது பலவீனமடைந்து நாளடைவில் தனது சக்தியை இழந்துவிடுகிறது. பிறகு அதை உபயோகிக்க முயன்றுவிட்டு, "சட், இதற்குச் சக்தியே இல்லையே!" என்று கூறுவது சரி அல்ல. ஒரு மனிதனை அடக்கியே வைத்திருந்தால் அவனுக்குச் சுதந்தரமாக நடந்து கொள்ளும் சக்தி இருப்பதில்லை. பிற்பாடு சுதந்தரம் கொடுத்தால் அதை எவ்விதம் உபயோகிப்பது என்பது தெரியவில்லை. எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணியின் கதி இவ்விதமாயிற்று.

அவளை அவளுடைய கணவன் துன்புறுத்தினன். அவளுடைய நண்பர்கள் அவளை,

"நீ ஏன் இதைப் பொறுத்துக்கொள்கிறாய்? கோழையா? அடிமையா?" என்று கேட்டு, தைரியம் அளித்துக் கணவனை விட்டுப் பிரியுமாறு செய்தனர். அவள் சுதந்தரமாக வாழ ஆரம்பித்தாள். துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு மனசிற்குள் குமுறுவது மடமை. எப்போது கணவனைத் திருத்த முடியவில்லையோ அப்போது அவனை விட்டுப் பிரிவது நல்லது. கோழையாக இருப்பதைவிட இது மேன்மைதான். ஆனால்..... ஆனால்.... சுதந்தரத்தை அவளுக்குச் சரியாக உபயோகிக்கத் தெரியவில்லை. தவறினாள். "பார்த்தாயா! பெண்களே இப்படித்தான்" என்று சொல்பவர்கள் மிகச் சந்தோஷத்துடன் அவ்வார்த்தையைச் சொல்லலானார்கள்.

ஏன்? புருஷர்களும் இப்படி இல்லையா? அவள் தவறினதற்கு ஒரு புருஷனும் உடந்தையாக இருக்கவில்லையா?

ஆகையால் கோழைத்தனம் இல்லாமல் இருந்தால் மாத்திரம் போதாது; திடசித்தமும் வேண்டும். சபலம் கூடாது. சபலத்தைக் குறைப்பதற்கு வழி உள்ளே அடைத்துப் போட்டிருப்பதல்ல. தூய்மை என்பது ஒருவரின் மனத்திலிருந்து உண்டாகவேண்டும். வெளியில் இருப்போரின் நிர்ப்பந்தத்தினால் அல்ல. தனது ஜீவனோபாயத்தை சேர்மையாகத் தேடும் திறமை பெற்றவளாகவும், தனது சொத்தைச் சரியாக ஆளத் தெரிந்தவளாகவும் பழக்கப்பட்ட பெண்மணி அதே சமயம் திடசித்தத்தையும் பெற்றவளாக இருப்பாள். சுலபமாய்ப் பிசகிவிட மாட்டாள். ஆகையால் இவ்விதம் பிசகும் பெண்களின் பாதுகாப்பிற்காக எல்லாப் பெண்களையும் சுதந்தரமற்று வீட்டிற்குள் அடைத்து வைத்திருக்க வேண்டும் என்று எவராகிலும் சொன்னால் அந்த நியாயம் புருஷர்களையும் பாதிக்கிறது என்றே சொல்லலாம்.

தொழில்களில் ஈடுபட்ட பெண்கள் தம் குழந்தைகளை எவ்விதம் சரிவர வளர்ப்பது என்று கேட்கலாம். எல்லாப் பெண்களும் தொழிலிற்குப் போகவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அவ்விதம் போக விரும்புகிறவர்கள் போவதற்கு அனுகூலமான வசதிகள் வேண்டும் என்றே நான் சொன்னேன். தொழிலில் ஈடுபட்ட தாய்மார்கள் தாங்களே தம் குழந்தைகளுக்குத் தக்க ஏற்பாடிற்கு முயற்சி செய்வார்கள். மேல்நாடுகளில் இருப்பதுபோன்ற முறையோ அல்லது இன்னும் நல்ல முறையோ ஏற்படும்.

சுருங்கச் சொன்னால்—

ஆண் பெண் இருவரும் ஒருவருக்கொருவர் பூர்த்தி செய்கிறவர். ஒருவரின் துணை மற்றொருவருக்கு வேண்டும்.

இருவருக்கும் சம உரிமை வேண்டும். சம உரிமை என்றால் கணவன் சம்பாதிக்கப் புறப்பட்டால் மனைவியும் புறப்படவேண்டும் என்பதல்ல. சொத்து உரிமை, வோட்டு உரிமை, தனது சமூகத்தின் நலத்திற்காக உழைக்கும் உரிமை ஆகியவைகளே.

பெண்மைக் குணம் கொண்ட ஆண்களும் ஆண்மைக் குணம் கொண்ட பெண்களும் இருக்கிறார்கள். ஆகையால் இவர் இதைத்தான் செய்யலாம், அவர் அதைத்தான் செய்யலாம் என்று கோடு இழுக்க இயலாது. ஒரு சமூகத்தில் இருக்கும் பெண்ணே ஆணே தத்தம் சக்திக்குத் தகுந்தவாறு தனது வாழ்க்கையை நடத்திக்கொள்ள உரிமை வேண்டும். ஒரு பெண்மணி டாக்டராகவோ உபாத்தியாயராகவோ, சமூகத்தின் நலத்திற்காக உழைத்து, பிரம்மசரியம் பூண்டு தனது காலத்தைக் கழிக்க விரும்பினால் அதற்குத் தடை அவளுக்கு இருக்கக் கூடாது. ஓர் இளம் விதவை தனியாகக் காலம் கழிக்க விரும்பாமல் மறு மணம் செய்துகொண்டால் அதற்கு ஆக்ஷேபம் இருக்கக்கூடாது. புருஷர்களுக்குத் தத்தம் வாழ்க்கை விஷயத்தில் இருக்கும் உரிமை பெண்களுக்கும் வேண்டும்.

பெண்களுக்குத் தங்கள் உணர்ச்சிகளைச் சரிவரப் பயன் படுத்திக்கொள்ள வழி கொடுப்பதான கல்வி கற்பிக்கப்பட வேண்டும்.

நல்லது. இதெல்லாம் புதுமைப் பெண்ணிற்கு எவ்விதம் கிடைக்கும்? எனக்கு அதுபுற்றிச் சிறிதும் கவலையே இல்லை. அவள் தற்சமயம் நமது சமூகத்தின் கர்ப்பத்தில் இருக்கிறாள். கட்டாயம் பிறக்கப் போகிறாள். தனது சொந்த முயற்சியினால்தான் பிறக்க வேண்டும். காந்தியடிகள் கூறியமாதிரி ஒவ்வொருவரும் தமது விடுதலையைத் தமது கைக்குள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். புதுமைப் பெண்ணும் முயற்சி செய்தாளானால் வெளிவந்து விடலாம்.

குரக்குவலி

கைகாலில் பலம் இல்லாதபோது சில சமயங்களில் நரம்புகள் இழுத்துக் கொள்ளும். அமுக்கிப் பிடித்துச் சூடு வரத் தேய்த்து உபசாரம் பண்ணினால் நீங்கும். இந்த நரம்பிழுப்பைப் பேச்சில் "கொறக்குளி" என்று சொல்லுகிறோம். அது 'குரக்குவலி' என்பதன் விகாரம். குரங்கைப் போலக் கையும் காலும் விறைத்துக்கொண்டு இழுப்பதனால் அந்தப் பெயர் வந்தது. குரங்கு-வலி என்ற இரண்டும் சேர்ந்து குரக்குவலி என்று வருவது இலக்கண மரபு.

ஜே. பி. மாணிக்கம் — பே. நா. அப்புஸ்வாமி

சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னால் கிரேக்க நாட்டில் வாழ்ந்துவந்த அரிஸ்ட்டாட்டில் என்பவர் பிரபஞ்சத்தின் மூலாதாரங்களாயுள்ள மூலப் பொருள்கள் நான்கே நான்குதான் என்று கூறிவந்தார். காற்று, நீர், நிலம், நெருப்பு என்பவைதாம் அவர் மூலப்பொருள்கள் என்று கருதியவை. அவர் கூறியது உண்மை அல்ல என்று இக்காலத்து விஞ்ஞானிகள் சொல்லிவிட்டார்கள். ஆயினும் காற்று, தண்ணீர், நிலம், சூரிய ஒளி ஆகிய நான்குமே மக்களை இப்போதுள்ள நிலையில் அமர்த்த உதவிய மூலாதாரங்கள் என்று சொல்லலாம்.

தன்னுடைய ஆயுள் முழுவதும் மனிதன் ஒவ்வொரு க்ஷணமும் காற்றைச் சுவாசித்து வாழ்கிறான். ஒவ்வொரு நிமிஷமும் காற்றின் அவசியம் அவனுக்குத் தோன்றிக்கொண்டே இருக்கிறது. காற்றின்றி ஒரு நிமிஷத்துக்கு மேல் வாழ்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மனிதனுடைய உடலிலே பெரும் பகுதியாக உள்ளது தண்ணீர். தண்ணீரின்றி அவன் ஒரு வாரத்துக்கு மேல் வாழ்வது கஷ்டம். மனிதனுக்கு வேண்டிய உணவை அளிப்பது நிலம். உணவுதான் மனித உடலைப் போஷித்து வருவது. ஒரு மாதத்துக்கு மேல் உணவின்றி இருப்பது மிகவும் கஷ்டம். காற்றின் அருமையை ஒரு நிமிஷத்திலும், நீரின் அருமையை ஒரு வாரத்திலும், நிலத்தின் அருமையை ஒரு மாதத்திலும் ஒரு மனிதன் உணர்கிறான். இம் மூன்றால் உண்டாகும் பயன்களும், அவை இல்லாவிட்டால் உண்டாகும் துன்பங்களும் நமக்கு எளிதில் புலனாகின்றன. ஆனால் சூரிய வெளிச்சத்தால் ஏற்படும் பயனை இவ்வளவு எளிதாக நிரூபிக்க முடியாது. சூரிய வெளிச்சம் இல்லாவிட்டால் ஏற்படக்கூடிய கஷ்டத்தையும் இத்தனை எளிதாகத் தெரிந்துகொள்ள முடியாது. ஆயினும் சூரிய வெளிச்சம் உடலுக்கு மிகவும் அவசியமானது என்பது யாவராலும் மறுக்க முடியாத உண்மையே.

சூரிய கிரணங்கள்

சூரிய ஒளியினால் மனிதனுக்கு உண்டாகும் நன்மைகள் இன்று நேற்றுத் தொடங்கியவை அல்ல. மனிதன் பூமியில் தோன்றிய காலம் முதற்கொண்டே சூரிய வெளிச்சத்திலே அவன் உலாவிவந்திருக்கிறான். அநாதி காலமாக, சூரிய கிரணங்கள் மனித உடலில் உறைத்து அதற்குப் பலவிதமான நன்மைகளைச் செய்துவந்திருக்கின்றன. மனித உடலுக்குச் சூரிய கிரணங்களால் உண்டாகும் நன்மைகள் நீண்டகாலம் வரையில் அதற்குப் பயன்படுமாறு மனித உடலுள் சேமிக்கப்பட்டு அடங்கிக்கிடக்கவேண்டும் என்று தோன்றுகிறது. வெயிலில் உலாவி வாழ்ந்துவந்த மனிதன் அவ்வகையான ஆரோக்கிய வாழ்க்கையைக் கைவிட்டு வீடு கட்டி நிழலிலும் மறைவிலும் வாழத் தொடங்கிய காரணத்தால், அவனுடைய ஆரோக்கிய நிலையும் ஆயுளுமே பாதிக்கப்பட்டிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

ஆராய்ந்து பார்க்கும்போது, உயர்தர இனத்தைச் சேர்ந்த மனிதனுடைய உடலும் அற்பமாய்த் தோன்றும் பொருள்களால் அமைக்கப்பட்டது என்பது தெரியவருகிறது. மனித உடலின் அமைப்புக்கு அடிப்படையான பொருள்கள் யாவும் நிலத்திலும், காற்றிலும், வானிலுமிருந்து கிடைத்து வருகின்றன. பூமியிலிருந்து தாது உப்புக்கள் கிடைக்கின்றன. காற்றிலிருந்து கார்பன், நைட்ரஜன், கார்பன் டை ஆக்ஸைடு என்னும் பொருள்கள் கிடைக்கின்றன. சூரிய லிவிருந்து சிவப்புக்குப் புறம்பான கிரணங்களும், பன்னிறப்பட்டையில் தோன்றும் பல்நிறமுள்ள கிரணங்களும், ஊதாவுக்குப் புறம்பான கிரணங்களும் வீசுகின்றன. நிலம், காற்று, வான் ஆகிய இம்மூன்று இடங்களிலிருந்தும் கிடைக்கும் பொருள்களோடு நீரும் சேர்ந்துவிட்டால் உயிர் தோன்றுகிறது என்று சொல்லலாம். சூரியனிடத்திலிருந்து தெறித்துப் பிறந்தது பூமி என்று வான சாஸ்திர விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். அதைப்போலவே உயிர்நூல் வித்தன்னர்களும் பூமியில் வாழும் உயிர்கள் யாவும் தம்முடைய பிறப்புக்கும், வளர்ச்சிக்கும், வாழ்வுக்கும், நேராகவேனும் மறைமுகமாகவேனும், சூரிய வெளிச்சத்திற்கே கடன்பட்டிருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். பழங்காலத்து மக்கள் அனைவரும் சூரியனையே பர தெய்வமாக

வணங்கிவந்தார்கள். தாங்கள் யாவரும் சூரியனுக்கு மிகவும் கடன்பட்டிருப்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள் என்பதற்கு இந்தச் சூரிய வழிபாடு ஓர் அறிகுறியாகும். நாகரிக ஏணியிலே மகோன்னதமான படியில் இருப்பவர்களாகத் தங்களைத் தாமே கருதிவரும் மக்கள் சமூகங்களிற்கூட - அவர்களுடைய மத சம்பந்தமான ஆராதனைகளிலே - விளக்கின் ஒளியானது மிகவும் முக்கியமான அம்சமாகக் கொண்டாடப் படுவது கவனிக்கத்தக்கது. இவ்வகையான விளக்கின் ஒளியானது பகலொளியாய் விளங்கும் சூரியனுடைய ஒளியின் பிரதிநிதியாகவே பாவிக்கப்பட்டு வருகிறது.

தாவரங்கள் வெயிலில் செழித்து வளருகின்றன. வெயிலற்ற இடத்தில் அவை இருக்குமானால், அவை வெயிலை நோக்கித் தம்முடைய கிளைகளையும் இலைகளையும் வீசி, வெயிற்புறமாக வளர முயல்கின்றன. முற்றும் வெயிலே இல்லாத இடங்களில் தாவரங்கள் நேராக முளைப்பதில்லை. முளைத்தாலும் வெகு சீக்கிரம் பட்டுப் போகின்றன.

சூரிய கிரணங்களால் இன்னும் ஓர் உபயோகமும் உண்டு. பூமியில் காணப்படும் பாக்டீரியாக்களில் பல அநேக வகையான நோய்களை விளைவிக்கும் இயல்பை உடையன. அவற்றுக்குச் சூரிய கிரணங்கள்தாம் தீராப் பகையாய் இருக்கின்றன. நோய் வித்துக்களாகும் பாக்டீரியாக்களைச் சூரிய கிரணம் அழித்து வருவதால்தான் மனித இனமானது பூமியிலே தங்கி உயிர் வாழ முடிகிறது.

பதினெட்டாம் நூற்றாண்டிலே சூரிய கிரணமானது தோலின் மீதுள்ள ஆறாப்புண்களை ஆற்றுவதற்கு மேலை நாடுகளில் உபயோகப்படுத்தப்பட்டது. நாளடைவில் சூரிய கிரணங்களால் உடலுக்கு ஏற்படும் வேறு சில நன்மைகளும் தெரியவந்தன. ஆதலால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலே பாண்டுரோகம், ரத்தமின்மை, எலும்புகள் வளராமை, கண் நோய், தோலிலும் எலும்புப் பொருத்துக்களிலும் எலும்புகள் கிரந்திகள் முதலியவற்றிலும் காணப்படும் க்ஷயரோகம் முதலிய அநேக வியாதிகளைச் சூரிய வெளிச்சத்தின் உதவியால் பரிகரிக்கலாம் என்று தெரிந்து கொண்டார்கள். ஐரோப்பாவிலுள்ள ஸ்விட்ஸர்லாந்து நாட்டிலே ஆல்ப்ஸ் மலைச்சாரிவிலே மிகவும் பிரசித்திபெற்ற க்ஷயரோக ஆஸ்பத்திரி ஒன்று இருக்கிறது. அந்த ஆஸ்பத்திரிக் கட்டிடத்திலே நோயாளிகளின் படுக்கைகளெல்லாம் நன்றாகச் சூரிய கிரணம் படக்கூடிய தாழ்வாரத்தில் அமைக்கப் பட்டிருக்கின்றன. நமது நாட்டிலும் பெருந்துறை, மதனப்பள்ளி முதலிய இடங்களில் கட்டிய கட்டிடங்களிலும் இவ்வாறே சூரிய வெளிச்சத்தை நன்றாகப் பயன்படுத்தி வருகிறார்கள்.

திருநாராயணபுரம் என்னும் மேலக்கோடி ஸ்ரீவைஷ்ணவ யதிபதி மடத்தின் நியமனத்தால், 'உடையவர் நியமனப்படி' என்ற பழைய நூல் வெளியாகியிருக்கிறது. கிருமிகண்டன் என்ற சோழமன்னனுக்குப் பயந்து, யதிராஜர் வெள்ளுடை தரித்து, திருவரங்கத்தினின்று யதகிரியைச் சென்றடைந்ததையும், அங்கே யதிபதி மடம் ஏன்ற மடத்தை ஸ்தாபித்ததையும், ஸ்ரீபாஷ்யம் இயற்றியதையும், அந்நாட்டிலுள்ள பதமாசலத்திற்குச் சென்று பௌத்தரை வாதிலே வென்றதையும், மாளுவராயன் மகளிடம் இருந்த செல்வப்பிள்ளை என்னும் உத்ஸவ விக்கிரகத்தைப் பெற்றுவந்து மீண்டும் யதகிரியிலே செல்வராயசெல்வப்பெண்டாட்டி என்னும் உபயநாச்சியாரோடு பிரதிஷ்டை செய்ததையும், ஜைனஜன அந்நாட்டு மன்னனை வைஷ்ணவனுக்கி விஷ்ணுவர்த்தனன் என்று சிறப்புறச் செய்ததையும், பன்னிரண்டு வருஷம் உடையவர் திருநாரணனுக்குக் கைங்கர்யங்களைச் செய்துகொண்டு யதகிரியில் இருந்தபின் ஸ்ரீரங்கத்திற்குப் புறப்பட்டதையும் சுருங்கக் கூறுகிறது. புறப்படுமுன் தமது விக்கிரகமொன்றை வார்த்து அர்ச்சையாக மடத்திலே பிரதிஷ்டை செய்து, நாராயணஜீயர் என்னும் யோகியை அந்த விக்கிரகத்தைப் பூஜித்துக் கொண்டு அம்மடத்திற்கு அதிபதியாக இருக்கும்படி செய்தார். திருநாராணபுரத்திலே தாம் செய்துகொண்டு வந்த கைங்கர்யங்களை 52 ஊழியங்களாக வகுத்து, அந்த ஜீயருக்கும் இன்னும் கைங்கர்யபரர்களான ஆறு பேர்களுக்கும் அவற்றைப் பிரித்துக் கொடுத்து, அவற்றை ஒழுங்காக நடத்திவருமாறு நியமனம் செய்தார். பிறகு அத் திருநாராண யோகியை யதிராசர், "திருநாராணபுரத்திற்கு மேற்கிலே கல்யாணியின் மேல் கரையில் கிருதிக்கிலேயுள்ள சென்கோயில் விசாரணையையும் தப்பின்றிப் புரியவேண்டும்" என்று நியமித்தார். மலைக்கு மேற்கேயுள்ள ஐந்தூர்களின் வருமானத்தினின்றும் சென்கோயிலில் உற்சவங்களை நடத்தவேண்டுமென்றும் விஷ்ணுவர்த்தனன் கொடுத்த பணத்தில் ஒரு பாதியைச் சென்கோயில் திருப்பணியிலும் செலவிடவேண்டுமென்றும் நியமித்தார். மேலும் சென்கோயிலே திருப்பணி செய்பவர்கள் குடியிருப்பதற்கு அந்தக் கோயிலின் வடமேற்கிலே தொடங்கி, தெற்கிலும் மேற்கிலுமாக இரண்டு வீதிகளில் வீடுகளைக் கட்டிக்கொடுத்துச் சென கைங்கர்யம் நிரந்தரமாக நடக்கும்படி செய்தார். கோயிலை வலம் வருவதற்காக நான்கு வீதிகளை அமைத்தார். இந்த வகையாகச் சென்கோயில் திருப்பணிகளையும் விஷ்ணுகோயில் திருப்பணிகளோடு ஒக்க நடக்கும்படி செய்தருளினார் ராமானுஜாசாரியார் என்று இச்சிறு நூல் கூறி முடிக்கிறது.

— 'காமகோடி'

அச்சின் அவதாரம்

டி. கே. வேங்கடராமன்

அந்தச் செடிகள் பார்ப்பதற்கு மிக மனோகரமானவை. அவைகளில் உண்டாகும் அலங்கார புஷ்பங்களோ அபரிமித வாசனை உள்ளவை. ஆனால், கொரேவிஷம் நிறைந்தவை. யதேச்சாதிகாரம் என்ற செடிகளும், பிரகிருதியிலுள்ள தாவரங்களைப்போல், தமக்கேற்ற மண் விசேஷம், ஷ்தோஷ்ண நிலைமை முதலியன பொருந்திய தேசங்களிலேயே ஜனிக்கின்றன.

ஈவின சர்வாதிகார தத்துவம் முதலில் இதாலியிலே பிறந்தது. 19-ஆம் நூற்றாண்டில், பல தேசங்களாகப் பிரிபட்டுக் கிடந்த இதாலி ஒற்றுமை அடைந்தது. அதன் அரசாங்கமும் ஜனநாயக முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டது. ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனப் பிரதிநிதி சபைக்குச் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டது. அரசனது மந்திரி சபை அதற்கு உட்பட்டது. ஆனால், எல்லா விதத அரசியல் முறைகளிலும் ஜனநாயக முறையே மிகக் கஷ்டமானது. இதாலியர்களுக்கு அதில் பயிற்சியும் இல்லை. ஆகையால் அரசாங்கத்தில் ஊழல்கள் அதிகரித்தன. சட்ட சபையில் கட்சிகள் மலிந்தன. அவைகளினின்று பொறுக்கப்பட்ட மந்திரி சபைகளும் பல மற்று அடிக்கடி மாறுபாடும் வீழ்ச்சியும் அடைந்தன. லஞ்சப்பேயும் சுயநலப் பைசாசமும் தாண்டவமாடின. இவைகளால் சீர்குலைந்த அரசாங்க நிர்வாகம் எப்படி இருக்கும் ? தென் இதாலியில் பயங்கரமாய்ப் பரவிவந்த வழிப்பறிக் கொள்ளைக்கார ரகசியச் சங்கங்களை அடக்கக்கூட அதிகார வர்க்கத்தாருக்குத் திறமை இல்லை. ஜனங்களின் வாழ்க்கை நிலை (Standard of life) மிகவும் மோசமாய் இருந்தது. கல்வி அபிவிருத்தியில் இதாலி மிகவும் கீழ் ஸ்தானம் வகித்தது. பல பேர் ஜனநாயக முறையில் நம்பிக்கை இழந்தனர்.

இதாலியின் பொருளாதார நிலையும் கேவலமாகிக்கொண்டு வந்தது. பிரான்ஸ் தேசத்தை விட இதாலியில் விவசாயத்திற்குரிய நிலம் குறைவு. ஆனால், பிரான்ஸைவிட ஜனத்தொகை அதிகம். ஜன சங்கியையும் வருஷவாரி அதிகம் பெருகிக்கொண்டு வந்தது. உணவுப் பொருள்கள் குறைவாகவும் ஜனத்தொகை அதிகமாகவும் ஏற்பட, ஏராளமான இதாலியர் வெளி நாடுகளுக்குக் குடியேற ஆரம்பித்தார்கள். முக்கியமாக, அமெரிக்காவில் ஐக்கிய நாடுகளுக்கே ஜீவனத்திற்காக இதாலியர் சென்றனர். தங்கள் நாட்டில் இவ்விதம் இதாலிய மக்களின் வருகையால் தங்கள் நாகரிகத்துக்கு ஊறு உண்டாகும் என்று அஞ்சிய அமெரிக்க சர்க்கார் இதாலியர் வருகையைக் கட்டுப்படுத்த ஆரம்பித்தனர். இதாலியர் தங்களுடைய குடியேற்ற நாடுகளுக்கே செல்லலாமென்றாலோ, இதாலிக்குச் சொந்தமான குடியேற்ற நாடுகள் ஆபிரிக்காவிலேயே இருந்தன. அவைகளில் முக்கால் பங்கு பாலைவனப் பிரதேசம். வளம் பொருந்திய நிலப்பகுதிகளை எல்லாம் மற்ற வல்லரசுகள் முன்பே கவர்ந்து கொண்டன என்று பல இதாலியர் ஆத்திரம் கொண்டனர்.

1914-18-இல் நடந்த ஐரோப்பிய மகாயுத்தத்தில் இதாலியானது ஜர்மனி, ஆஸ்திரியா என்ற இரண்டு தேசங்களுடனும் இணைப்புக் கொண்டிருந்தாலும், அவைகளுடன் சேராது முதலில் நடுநிலைமை வகித்துப் பின் ஜர்மனிக்கு எதிராக இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா முதலியவைகளின் கட்சியில் சேர்ந்தகொண்டது. இதற்கு முக்கியக் காரணம்: இதாலியர் பெரு வாரியாக வசிக்கும் இதாலிக்கு வடக்கேயுள்ள சில பிரதேசங்கள் ஆஸ்திரியா தேசத்திடம் இருந்தன. இதாலியர் இந்தப் பிரதேசங்களை 'மீட்கப்படாதவை' (Irredenta) என்று சொல்லிவந்தார்கள். அவைகளைத் திரும்பிப் பெற விரும்பினர். 1915-ஆம் வருஷம் நேசக் கட்சியாருடன் ஒரு ரகசிய ஒப்பந்தத்தில், இதாலிக்கு இப் பிரதேசங்கள் தவிர இதாலிக்கு மேற்கேயுள்ள இஸ்ட்ரியா பிரதேசத்தையும் டால்மெஷியா பிரதேசத்தில் ஒரு பாகத்தையும் கொடுத்துவிடுவதாக வாக்களிக்கப்பட்டது. இதாலியும் நேசக்கட்சியாருடன் ஜர்மனிக்கு விரோதமாகச் சண்டையில் சேர்ந்தது. இந்த ஒப்பந்தம் செய்யுங்கால், அமெரிக்கா சண்டையில் சேரவில்லை. இதன் பின்பே ஜர்மனிக்கு விரோதமாக அதுவும் போரில் கலந்து கொண்டது. போர் முடிந்த பின், சமாதான மகாநாடு கூடுகையில், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் வில்ஸன் என்பவர் இதாலியுடன் செய்து கொண்ட ரகசிய ஒப்பந்தத்தை ஏற்க மறுத்து விட்டார். இதாலிக்குக் கிடைத்தவை, 'மீட்கப்படாத' பிரதேசங்கள் மட்டுமே. போரில் தாம் கலந்து சிரமப்பட்டதற்குத் தகுந்த பிரதிபலன் இல்லை என்று பல இதாலியர் அதிருப்தி உற்றனர். வஞ்சிக்கப்பட்டதாகப் பலர் கருதினர். இந்த நிலைமையே, முஸோலினி என்னும் சர்வாதிகாரி உதயமாகக் காரணமாயிற்று.

முஸோலினி 1883-ஆம் வருஷம் ஒரு கொல்லனுக்கு மகனாகப் பிறந்தார். இளமையிலேயே

முரட்டுச் சுபாவமும் அடங்காமையும் அவரிடம் குடிகொண்டிருந்தன. தந்தை தீவிர சமதர்மவாதி. பிள்ளையும் தந்தையின் கொள்கையையே அனுசரித்தார். அவருக்கு ஓர் உபாத்தியாயர் வேலை கிடைத்தது. ஆனால், அவர் கொள்கை காரணமாகச் சீட்டுக் கொடுத்துவிட்டார்கள். பிறகு, ஸ்விட்ஜர்லாந்து தேசம் சென்று அங்கே பல தொழில்களில் ஈடுபட்டார். ஒரு சமயம் கொத்து வேலையும்செய்தார். அத்தேசச் சர்க்காரும் அந்தத் தீவிர சமதர்மவாதியைத் தேசப்பிரஷ்டம் செய்தனர். மூஸோலினி இதாலிக்குத் திரும்பி, 1912-இலிருந்து 1914-ஆம் வருஷம்வரையில் சமதர்மப் பிரசாரம் செய்துவந்தார். இந்நிலையில், 1914-ஆம் வருஷம் ஐரோப்பிய யுத்தம் ஆரம்பமானதும், மூஸோலினிக்கு யுத்தத்தை இதாலியின் அனுகூலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற ஆவேசம் ஏற்பட்டது. தேசிய உணர்ச்சிக்குமுன் சமதர்ம உணர்ச்சி குன்ற ஆரம்பித்தது. இதாலி சண்டையில் நேசக்கட்யொருடன் சேரவேண்டும் என்று அவர் செய்துவந்த பிரசாரம் இதாலிய சமதர்மக் கட்சிக்கும் பிடிக்கவில்லை. மூஸோலினி இப்பிளவுக்குப் பயப்படவில்லை. தாம் இதுவரை கொண்டிருந்த "அலாண்டி" என்னும் பிரபல சமதர்மப் பத்திரிகையின் ஆசிரியர் பதவியை உதறி எறிந்துவிட்டு, 1914-இல் புதிதாக "பொபரோலோ இதாலியர" என்னும் வேறு பத்திரிகையைத் தொடங்கினர். இவருக்கும் சமதர்மக் கட்சிக்கும் வேற்றுமை அதிகப்பட்டது. அதே வருஷம் சமதர்மக் கட்சியினின்று தூரத்தப்பட்டார்.

இதாலி சண்டையில் சேர்ந்ததும், மூஸோலினி மனமகிழ்ந்து ராணுவத்திலும் சேவை செய்தார். இதாலியைப் பழைய ரோமர் ராஜ்யம் இருந்த உன்னத நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஆர்வம் நாளுக்கு நாள் பலப்பட்டது. 1915-ஆம் வருஷம் அவர் பாசிஸ்ட் கட்சியைச் சிருஷ்டித்தார். அதன் அங்கத்தினர் இதாலிக்காக ஜீவித்தல் அல்லது மரித்தல் என்று சங்கற்பம் செய்துகொண்டனர். பழைய ரோம அரசாங்க சின்னமான குச்சிகளிடையில் கட்டப்பட்ட கோடரி (Fasces) இக்கட்சியின் சின்னம் ஆயிற்று. பழைய ரோமரின் சலாமே இக்கட்சியின் சலாம். அங்கத்தினர் கறுப்புச் சட்டை அணியவேண்டும். கட்சித் தலைவரை, "இல்ட் யுசே" என்று அழைத்தார்கள். கட்சிக் கூட்டங்களில் அங்கத்தினர் உணர்ச்சியை எழுப்ப, பாண்டு வாத்தியம் பலவித மெட்டுகளை எழுப்பும்.

1919-ஆம் வருஷம், இதாலி மிகவும் சீர்கேடான நிலைமை அடைத்தது. தீவிரப் பொதுவுடைமைக் கட்சியார் எங்கும் ஆர்ப்பாட்டம் செய்தனர். தொழிற்சாலைகளைக் கைப்பற்றினர். கலவரம் பரவியது. அரசாங்கத்தார் சமாதானத்தை நிலைநிறுத்த முடியாமல் தவித்தனர். சொத்து ரிமை கொண்டவர்களிடையே அரசாங்கத்திடம் மிக அதிதாம் ஏற்பட்டது. இச்சமயம் (1922-ஆம் வருஷம்) மூஸோலினி தேசத்தைக் காக்கும் அவதார புருஷனென்று பறைசாற்றிக்கொண்டு, தம் பாசிஸ்ட் படையினரை அணிவகுத்துத் திரட்டி, ரோமாபுரியை நோக்கிச் சென்றார். அரசாங்கம் எளிதில் அவர் கையில் சிக்கியது. விக்டர் எம்மானூயல் அரசர் அவருக்குப் பிரதம மந்திரிப் பதவி அளித்தார். மற்றக் கட்சியினர் பணிந்தனர். தீவிரப் பொதுவுடைமைக்காரர்கூடக் கப்பட்டனர்.

மூஸோலினியின் ஆட்சியை இரு பாகங்களாகப் பிரிக்கலாம். 1922 முதல் 1925 வரை, அவருடைய சர்வாதிகாரம் முழுவதும் ஏற்பட்டதாகச் சொல்ல முடியாது. அவருடைய மந்திரி சபையில் மற்றக் கட்சித் தலைவர்களும் இருந்தனர். சட்ட சபையில் எதிர்க் கட்சியினர் என்றும்போல இருந்தனர். ஆனால், அரசியல் முறைமாறுபடுவதற்குரிய சில அடையாளங்கள் தோன்றின. மூஸோலினி, பிரதம மந்திரி பதவி தவிர, இன்னும் சில இலாகாக்களைத் தம் கையில் வைத்துக்கொண்டார். ஜனப் பிரதிநிதி சபை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் சர்க்காருக்குத் தன் இஷ்டப்படி செய்யும் முழு அதிகாரத்தைக் கொடுத்தது. மூஸோலினியும் எதிர்க்கட்சிகள்மீது அதிகாரம்செலுத்த ஆரம்பித்தார். 1924-ஆம் வருஷம், மாடியாடி என்னும் பிரபலர் பாசிஸ்ட் கட்சியின் தூண்டுதலால் கொலை செய்யப்பட்டார்.

1925-ஆம் வருஷம், அரசியலில் சர்வாதிகாரம் புக ஆரம்பித்தது. ஜனப் பிரதிநிதி சபை தன் அதிகாரத்தை இழந்து வெறும் ஆலோசனை சபையாக மாற்றப்பட்டது. பிரதம மந்திரி இனிமேல் அதற்குக் கீழ்ப்படிந்தவர் அல்ல. அரசர் ஒருவரிடந்தான் அவருக்கு இனிமேல் பொறுப்பு. 1926-ஆம் வருஷம், மற்றக் கட்சிகள் கலைக்கப்பட்டன. இனிப் பாசிஸ்ட் கட்சி ஒன்றுதான் சட்டப்படி இருக்கலாம். பிரதம மந்திரி அரசாங்கத் தலைவர் (Copo del Governo) என்னும் பட்டம் பெற்றார். முக்கால்வாசி இலாகாக்கள் அவர் கைவசம் வந்தன. பிறகு, ஸ்தல சுயராட்சி சபைகளின் தலைமேல் கை வைத்தார். அந்தச் சபைகள் மூடப்பட்டன. அவைகளின் அதிகாரம், சர்க்காரால் நியமிக்கப்பட்ட "பொடஸ்டா" என்னும் அதிகாரிகளுக்கு மாற்றப்பட்டது. பிரஜாவுரிமைகளான பத்திரிகைச் சுதந்தரம், பேச்சுச் சுதந்தரம் முதலியன மறையலாயின. தொழிலாளர் சங்கங்கள் மூடப்பட்டன. இனிமேல், தொழிலாளிகளும் முதலாளிகளும் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது. 1928-இல், ஒரு புதுமுறைப் பொருளாதார ஏற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. முதலாளிகளும் தொழிலாளிகளும் தொழில் முறைப்படி சங்கங்களில் சேரவேண்டும். இந்தச் சங்கங்கள் (Syndicates) இவை ஸ்தா

பனங்களிலிருந்து ஆரம்பித்துத் தேசிய ஸ்தாபனங்களாகத் தேசம் முழுவதும் நிறுவப்பட்டன. ஒவ்வொரு தொழிலிலும், முதலாளிகளுக்கும் பாட்டாளிகளுக்கும் உள்ள சச்சரவுகளைத் தீர்க்கத் தனிச் சபைகள் நியமிக்கப்பட்டன. இதே விதம், மூலவேலை செய்பவர்கள் சங்கங்களும் ஏற்பட்டன. முதலில் இத் தேசிய ஸ்தாபனங்கள் 13 தொழில் முறையாகவும், பின் 22 தொழில் முறையாகவும் ஸ்தாபிக்கப்பட்டன. ஸ்தாபன மந்திரி (Ministry of Corporations) என்பவர் இவைகளை மேற்பார்வை இடுவார்.

இவ்விதம், இதாலி தொழில் ஸ்தாபன முறை அரசாங்கமாக (Corporative State) மாற்றப் பட்டது. அதே சமயம், பாசிஸ்ட் கட்சியின் தேசிய மஹா சபை (Fascist Grand Council) அரசாங்கத்தில் முக்கியமான பதவி வகிக்க ஆரம்பித்தது. மந்திரிகளைப் பொறுக்கல், தலைவருக்கு ஆலோசனைகூறல் முதலிய அதிகாரத்தைச் சட்டரீதியாக அது பெற்றது. மந்திரி சபை, பாசிஸ்ட் கட்சியை மட்டும் கொண்ட சட்ட சபை, பாசிஸ்ட் கட்சி இம் மூன்றுக்கும் இந்தப் பாசிஸ்ட் மஹா சபை நடநாயகமாக இருத்தலையால், அதை அரசாங்கத் திட்டத்தின் அச்சு என்றே கூறலாம். ஆனால், இந்த மஹாசபையுட்பட யாவும் முஸோலினியின் கருவிகள் என்பதை மறக்கக்கூடாது.

1934-ஆம் வருஷம் சட்ட சபை மாற்றி அமைக்கப்பட்டது. பாசிஸ்ட் மஹாசபை சில அங்கத்தினர்களைப் பிரேரேபிக்கும். தேசியத் தொழில் ஸ்தாபனங்கள் சில அங்கத்தினர்களைப் பிரேரேபிக்கும். இந்த நியமனங்கள் ஜனங்களுக்குச் சமர்ப்பிக்கப்படும். ஆனால், "வோட்" செய்பவர் பாசிஸ்டுகளாய் இருக்கவேண்டும். அவர்களும் "இஷ்டம்" "இஷ்டமில்லை" என்றதான் "வோட்" செய்யலாமே தவிர, ஒன்றும் பிரேரேபிக்க முடியாது. இந்த வெளி வேஷத்தைக் கலைத்துப் பார்த்தால், முஸோலினிக்குத் தானம் போடும் சிலரே சட்டசபை அங்கத்தினர் ஆக முடியும் என்று கூறுமல் விளங்கும்.

வெளிநாட்டு நடவடிக்கைகளில், முஸோலினி தேசிய உணர்ச்சியையும் பேச்சில் காரத்தையும் காட்டிய போதிலும், முதலில் கரியத்தில் அவ்வளவு தீவிரமாக இல்லை. பொதுவாக, சர்வதேசங்களுடன் ஒத்துழைத்தார். ஜர்மனியில் ஹிட்லர் அதிகாரம் ஏற்பட்டதும், ஜர்மனி, பிரான்ஸ், இதாலி, பிரிட்டன் என்னும் தேசங்கள் சமரானமாய் இருக்கவேண்டும் என்னும் ஒப்பந்தத்தை ஏற்படுத்த உதவினர். 1935-இல், பிரான்ஸ் ஹிட்லர் கரியங்களால் பயமடைந்ததும், பிரான்ஸுடன் ஓர் உதவி ஒப்பந்தம் செய்தார். ஹிட்லர் இன்னும் தீவிரமான நடவடிக்கைகள் எடுத்ததும், மற்ற அரசுகளுடன் ஜர்மனிக்கு விரோதமாக ஸ்ட்ரஸா என்னும் இடத்தில் ஒப்பந்தம் செய்தனர். ஆனால், 1935-ஆம வருஷம், முஸோலினி அபிவீனியாவை விழுங்க எண்ணம் கொண்டார். ஜப்பான் ஏற்கனவே சர்வதேச சங்கக் கட்டுப்பாட்டை மீறி மஞ்சூரியாவை ஆக்கிரமித்தது. ஜப்பான் நிர்ப்பயமாகச் செய்ததைத் தாமும் செய்யலாம் என்று முஸோலினி கருதினர். அபிவீனியாவின் சார்பாகச் சர்வதேச சங்கம் தீர்ப்புக் கூறி, இதாலிக்கு விரோதமாகப் பொருளாதாரத்தைப் பாதிக்கும் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டது. இருந்தாலும், சர்வதேச சங்கத்திலுள்ள வல்லரசுகள் இதாலிமீது தீவிரமாக ஆயுதப் பிரயோகம் செய்வதில் தயங்கின. அபிவீனியா கபளீகரம் ஆயிற்று. முஸோலினிக்கும் மற்றச் சர்வாதிகாரிகளுக்கும் தாம் ஏது வேண்டுமோலுலும் செய்யலாம் என்று தைரியம் பிறந்தது. இதாலி, ஜர்மனியுடன் நெருங்கிய உறவு கொண்டது. 1936-ஆம் வருஷம், இதாலி, ஜர்மனி, ஜப்பான் மூன்றும் பரஸ்பர ஒப்பந்தம் செய்துகொண்டன. "அச்சு" அவதாரமாயிற்று.

பேத்தலும் பிதற்றலும்

சில வார்த்தைகள் தோன்றும் பொழுது ஒரு வகையாக வழங்குகின்றன. நாளடைவில் அவை உருவம் தேய்ந்து வேறு சொல்லைப் போல நிற்கின்றன. மூல வார்த்தைகளோடு இந்த மாறிய உருவத்தையுடைய வார்த்தைகளும் தனித் தனியாக வழங்கிவருகின்றன.

பிதற்றல் என்ற வார்த்தையில் உள்ள இரண்டு றகரங்களும் பேச்சு வழக்கில் தகரங்களாகி மாறின. காற்றைக் காத்து என்றும், ஊற்றை ஊத்து என்றும் பேச்சு வழக்கில் வழங்குகிறோம். அப்படியே பிதற்றல் பிதத்தல் ஆயிற்று. இகரம் எகரமாகப் பேச்சில் மாறும். இலையை எலை என்று சொல்கிறோம் அல்லவா? அந்த முறையில் பிதத்தல் பெதத்தல் ஆகி அது பின்னும் உருவ வேறுபாடு அடைந்து 'பேத்தல்' என்று நின்றது. பிதற்றல் என்பதே பேத்தல் என்று மாறியதை உணராதவர்கள், "இதென்ன பேத்தலும் பிதற்றலும்?" என்று எழுதத் தொடங்கினர்கள். இப்போது பேத்தல், பிதற்றல் என்று இரண்டு சொற்கள் தனித்தனியே வழக்கில் வந்துவிட்டன.

சபலம்

_ஆர்வி_

"நான் யார்?"

"என் கடமை என்ன?"

"எனக்கு எதற்கு இந்த வீண் பரசமெல்லாம்?"

இந்தக் கேள்விகளெல்லாம் வேதாந்தப் புஸ்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவையல்ல; வேணுவின் வயிலிருந்து வெளிவந்த வார்த்தைகளே இவை.

மறுபடியும் மறுபடியும் இந்த மூன்று கேள்விகளையே திருப்பித் திருப்பிக் கேட்டுக்கொண்டிருந்தான் அவன்.

சொல்லப்போனால் முதல் கேள்விக்கு, "நீ ஒரு மடையன்" என்றும், இரண்டாவது கேள்விக்கு, "கேள்வி கேட்டுக்கொண்டிருப்பதுதான் உன் கடமை" என்றும், மூன்றும் கேள்விக்கு, "யாரைக் கேட்கிறாய்?" என்றும் நாம் பளிச்சுப் பளிச் சென்று பதிலளித்துவிடலாம்.

ஆனால், அந்தக் கேள்விகளை அவன் நம்மைப் பார்த்துக் கேட்டால் அல்லவா நாம் அப்படி வெளுத்து வாங்குவதற்கு? அவன் அந்தக் கேள்விகளைத் தன்னையே கேட்டுக்கொண்டிருந்தான். ஆகவே நாம் பதில் சொல்லவேண்டிய அரிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பது இப்பொழுதாவது தெரிந்ததா?

தெரியாவிட்டால் பாவமயில்லை; இதோ அடுத்த சந்தர்ப்பம் வந்துவிட்டது.

"நீ யார்?"

"உனக்கு வேறு ஒருவருமே இல்லையா?"

"உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?"

ஆமாம்; ஆமாம். இந்தக் கேள்விகளுக்கும் நாம் பதில் அளிக்க முடியாதுதான்!

யாரைப் பார்த்து அந்தக் கேள்விகளைக் கேட்கிறான் என்பதும் நமக்குத் தெரியாது அல்லவா? ஆகவால் இந்தச் சந்தர்ப்பத்தையும் நழுவ விட்டுப் பேசாமல் இருப்போம். வேறொரு சந்தர்ப்பம் வராமலேயா போய்விடப்போகிறது? அப்பொழுது பளார் பளார் என்று கன்னத்தில் அறைவதுபோல் பதில் சொல்லுவோம்.

தனக்குத் தானே பேசிக்கொண்டதுமல்லாமல் தன் மனக்கண்ணில் தோன்றிய உமாவிடமும் அவ்விதம் கேட்டுக்கொண்டிருந்தான் வேணு.

அவன் மனக்கண்ணில் தோன்றிய உமா இவன் வருவான் வருவான் என்று அங்கே அந்தக் குடிசையில் காத்துக்கொண்டிருக்கவில்லை.

* * *

உமா என்ற அந்தப் பெண் மூக்கும் முழியுமாய், அழகிய உருவமும் இளமைப் பருவமுமாய் இருந்தாள். வயசு இருபதுக்குள்தான் இருக்கும். உடுத்திருந்த ஆடையைத் தவிர அவள் பிறந்த மேனி என்றுதான் சொல்லவேண்டும். அழகுக்கு அழகு செய்ய ஆபரணங்கள் இல்லாமலிருந்தாள் என்றதான் அதற்கு அர்த்தம். அவளைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கும். பார்க்காமல் இருந்தால் எக்கமரியும் இருக்கும். மறுபடியும் மறுபடியும் பார்க்கவேண்டும் என்று தோன்றும்; அத்தனை அழகு. அவ்வளவு வசீகரம்! இல்லாவிட்டால் வேணு அந்த அழகில் தன் இருதயத்தைக் கொள்ளை கொடுத்திருப்பானா?

ஆமாம்; தன் கருத்தையே பறி கொடுத்துவிட்டான் அவன். வாழ்க்கையைக் கைகழுவி விட்டு ஒரு பந்தமும் வேண்டாம் என்று தேசத் தொண்டு செய்யப்போவதாய் ஒரு கிராமத்தின் கோடியில் அழகான இடம் ஒன்றில் அவன் ஆசிரமத்தைக் கட்டிக்கொண்டிருந்தான். ஆசிரமத்தின் அந்த ஏகாந்த வாழ்க்கை அவனுக்கு முதல் முதலில் மிகவும் பிடித்திருந்தது. ஆனால் நாளாக நாளாக அவன் தன் பணியில் அலுப்புத் தோன்றுவதைச் சிறுகச் சிறுக உணர்ந்தான்.

இந்தப் பாழ்த பூப்பிரதேசத்தில் கண்காணாத ஒரு கோடியில் தன்னுடைய ஏகாந்த வாசத்தை நிலைநிறுத்தும் இந்த ஆசிரமத்தின்மூலம் என்ன காரியம் சாதித்துவிட முடியும் என்று அவனுக்கே சம்சயமாக இருந்தது. ஆனாலும் நாட்கள் ஓடிக் கொண்டே இருந்தன. பக்கத்தில் ஓடும் சிற்றோடையில் உதயகாலத்தில் ஸ்நானம் செய்துவிட்டு மூக்கைப் பிடித்துக்கொண்டுவிடுவான். எப்பொழுது அவனுக்காகப் போதும் என்று தோன்றுகிறதோ அப்பொழுது எழுந்திருப்பான். பெரிய தபஸ்விகள்போல, காயோ கனியோ பெரிய தபஸ்விகள்போல, காயோ கனியோ கிழங்கோ கொஞ்சம் எடுத்து உண்பான். அருகில் உள்ள தோட்டத்தில் தன் வேலையைக் களைப்பு ஏற்படும் வரை செய்து முடிப்பான்.

மலையில் உல்லாசமாய் மிலையடிவாரத்தைச் சுற்றிவிட்டு ஒரு மரநிழலில் உட்கார்ந்து ஆத்ம விசாரம் செய்வான். இதற்கும் ஒரு கால வரையறை இல்லை. பின்னர் ஆசிரமத்தினுள் நுழைந்து கம்பங் கூழோ, அரிசிக் கஞ்சியோ சிறிது உட்கொண்டுவிட்டுத் தூயிலில் ஆழ்ந்துவிடுவான்.

ஆசிரம வாழ்க்கையில் ஒரு சாசுவத நிலை எற்படும்வரையில் அவனுக்குத் தொழியமளிக்கக் கையில் சொற்பத் தொகை இருந்தது. அந்த ஆசிரமத்துக்கு அருகிலுள்ள கிராமக் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கவும், சுற்றிலும் பருத்தி, நெல் முதலானவை சாகுபடி செய்து வேண்டியதைச் சேகரித்துக்கொள்ளவும் அவன் திட்டம் வகுத்திருந்தான். ஆனால் என்ன செய்தும் அவன் திட்டம் நிறைவேறும் தறுவாயில் இல்லை. இந்தச் சமயத்தில்தான் அவன் வாழ்க்கையே அடியோடு மாறிவிடும்போல ஆகிவிட்டது.

* * *

ஸ்நானம் செய்துவிட்டு ஜபம் செய்துகொண்டிருக்கையில் ஏதோ காலடிச் சப்தம் கேட்டது. எதாவது ஆடு மாடாக இருக்கலாம் என்று எண்ணி அவன் கண்களைத் திறக்கவில்லை. சற்று நேரம் கழித்து, "இந்த ஆசிரமவாசி தாங்கள்தானு?" என்று இனிமையே உருக்கொண்டு வந்தது போல ஒரு கேள்வி வந்தது.

வேணு அப்படியே திடுக்கிட்டுப்போனான். பேசியது பெண்ணின் குரல் என்பதை உணர்ந்ததும் அவன் உடலே ஒரு கணம் கிடுகிடென ஆடியது. ஆயினும் தன்னைத் தேற்றிக்கொண்டு அடித்த விஷயை எதிர்நோக்கி இருந்தான்.

விசுவாமித்திரன் தவத்தில் மேனகை இப்படித்தான் குறுக்கிட்டாளோ என்றகூடத் தோன்றியது அவனுக்கு. அந்தக் குரல், அஹா, அதுதான் என் இவ்வளவு இனிமையாய் இருக்க வேண்டும்? வாழ்வில் உள்ள இனிமை அனைத்தும் தோற்றுவிக்கும் மாயக்குரலா என்ன அது?

'இருக்கட்டும்; கண்களைத் திறக்கவேண்டாம்' என்று அவன் ஜபத்தில் மறுபடியும் ஆழ்ந்தான்.

'பேசியவர் யார், பெண்தானே? இங்கே அவள் என் வந்தாள்? நான் இந்திரபதவியைக் குறித்துத் தவம் செய்யவில்லையே. பின்னே வேறு யார்தாம் இங்கு வரப்போகிறார்கள்?'

அவன் தியானம் கலைந்தது. ஆனாலும் கண்களைத் திறக்கவே இல்லை. அவன் அந்த இனிமைக் குரலின் அடுத்த கேள்வியை எனே எதிர்பார்த்திருந்தான்.

கால் நாழிகை ஆகிவிட்டது. அவன் ஜபம் பூர்த்தியானபாடாக இல்லை; ஜபம் செய்ய முடியவும் இல்லைதான்! எதிரே பேச்சு மூச்சைக் காணவில்லை.

'மேனகை மனமோகன ரூட்டியம் புரிந்து ராஜரிஷியின் தவத்தை நிலைதடுமாறச் செய்தாள் என்று கேள்வியாயிற்றே. அப்படிப்பட்ட ரூட்டிய ஆரம்பத்துக்கு முன் இப்படித்தான் அமைதி எதாவது நிலவியிருந்ததோ? சீ! நான் விசுவாமித்திரனு, என்ன? கண்களைத் திறப்போமா?'

ஆயினும் அவன் கண்களை இறுக மூடிக் கொண்டுதான் இருந்தான். கால் நாழிகை அரை நாழிகை ஆயிற்று; ஒரு நாழிகையும் ஆகிவிட்டது.

'ஹீ, அந்தக் குரல் வெறும் மனப்பிரமைதான்! நம் மனசு சபலம் கொள்ளத்தான் இத்தப் பல வீனம்!'

ஆசிரம வாழ்க்கையை அவன் மேற்கொள்ளுகையில் அவனுக்கு இப்படிப் பெண்களே வெறுக்கும் பிரச்னையே எழவில்லை. இப்பொழுதோ அதுவும் சேர்ந்ததுதானே என்ற எண்ணம் தலை தூக்கலாயிற்று.

அந்தக் குரலும் அதன் இனிமையும் வெறும் பிரமைதான் என்று தோன்றியவுடனே, 'இன்றைய ஜபம் இத்துடன் போதும்' என்று தேறியவனுய்க் கண்களைத் திறந்து எதிரே சுற்று முற்றும் பார்த்தான்.

'அடே, இதென்ன ஆச்சரியம்! இவள்தான் அந்த மேனகையா? ரூட்டியமே ஆடாமல் ஆலே மயக்க இது ஒரு புது வழியா?' என்றெல்லாம் எண்ணியது அவன் மனம். எனென்றால் அமைதியே உருவாகக் கீழ்ப்பாறைபருகில் இருந்த செடி நிழலில் ஒரு பெண் அழகே வடிவாக உட்கார்ந்திருந்தாள். அவன் கண்களைத் திறப்பதைக் கண்ட அவள் மெதுவாக, பணிவாக, அழகாக எழுந்திருந்தாள்.

சாதாரண வேணுவாக இருந்த அவன் மனம் உண்மையில் இப்பொழுது ஒரு தபயோகி என்று தன்னே எண்ணிக்கொண்டது போல அவன் வெறித்சிட்ட கண்கள்மூலம் உலகைப் பார்த்தது.

அந்தப் புது யோகியின் பார்வையில் ஒளி வீசுவதுபோல ஒரு பிரமை! இருவருக்குந்தான்!

"நமஸ்காரம்" என்று அவள் மெல்ல நடந்து வந்து கைகூப்பி வணங்கினுள்.

காய் கனி உணவால் சற்று உடல் வெளுத்துப் போய் மெலிந்திருந்த வேணு பதிலுக்கு, "நமஸ்காரம்" என்ருன்.

தபயோகி செய்யும் ஆசீர்வாதம் அவன் வாயிலிருந்து வெளிப்படவில்லை. ஆகவே அவள் ஆச்சரியத்தால் மென்று விழுங்கினுள்.

"நான் அபலை; என்னை ரக்ஷிக்க வேண்டும்" என்ருள் அவள், மிகவும் தீனமான குரலில்.

வேணுவின் ஆவல் பின்னும் அதிகமாயிற்று.

"அம்மா, நீ யார்?" என்ருன் கடையாக.

"நான் அநாதை. என்னைத் தாங்கள்தாம் ஆதரிக்கவேண்டும்."

"இது ஆசிரமமாயிற்றே.. இங்கு உனக்கு.."

"எனக்கு நிறைய வேலை இருக்கும். ஆசிரமத்தின் வளர்ச்சிக்கு இந்த ஏழைக்கு ஊழியம் செய்யும் பாக்கியம் கிடைக்கலாகாதா?"

அந்தத் தவயோகியார் கண்களைச் சிறிதே மூடினார். பிறகு சற்றே திறந்தார். ஆமாம், அவ்வளவு உருக்கமாக இருந்தன அவள் வார்த்தைகள்.

"சரியம்மா. எனக்கு ஆகேபம் ஒன்றும் இல்லை. நீ போய் உன் வேலையைத் தேர்ந்தெடுத்துக் கொள்" என்றான்.

அக்கினிப் பரீகை செய்துதான் பார்க்கலாமே என்று ஓர் அபூர்வ யோசனை உதயமாகிவிட்டது. எதிரே வணக்கமே உருவாய் நின்ற அந்தக் கரிகையின் வதனம் இந்த வார்த்தைகளால் அழகாக மலர்ந்தது. சிறங்குனிந்து வணங்கிவிட்டு அவள் ஆசிரமத்தை நோக்கி நகாலானாள்.

"அது சரி..உன் பெயர்..?"

"உமா."

"ஓ! சரி; நீ போகலாம்."

வெகு நேரம் கழித்து வேணு உள்ளே சென்று பார்த்தபோது உமா வெறுமே நின்றுகொண்டிருந்தாள். ஆசிரமம் சுத்தமாக இருந்தது. அதில் இருந்தவை எல்லாம் ஒழுங்காக மாற்றி வைக்கப் பட்டிருந்தன.

"உங்களுக்கு ஆகாரம்?" என்றாள் அவள்.

"ஓ! அது அவசியம் இல்லை. உனக்கு வேண்டுமானால் அங்கே பழங்கள் இருக்குமே, அவற்றை எடுத்துக்கொள். அவசியமானால் அந்தக் கோணியில் சமையலுக்கு வேண்டியவைகளை வாங்கி வைத்திருக்கிறேன். அவற்றையும் எடுத்துக்கொள்ளலாம்" என்றான் அவன். அவன் பேசியது அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

"அப்படியானால் நீங்கள் சாப்பிடுவதே இல்லையா?"

"ஓ! சாப்பிடாமல் முடியுமா? கூழ்தான் சாப்பிடப் பழகிவருகிறேன்."

"எனக்கும் அதுவே போதும்."

"இல்லை, நீ ஆகாரம் செய்துகொள். கூழ் என்றால் பழக்கமாக வேண்டாமா?"

அவள் மௌனமாக இருந்தாள். அவன் சுற்றியுள்ள தோட்டத்தை நோக்கி நடந்தான். பிறகு சற்று நேரத்துக்கெல்லாம் திரும்பிவந்து, "உன் பெயர் என்ன என்று சொன்னாய்?" என்று கேட்டான்.

"உமா."

"ஓ! அதுதான் கேட்டேன்..சரி..சரி.." உமா இப்பொழுது லேசாகச் சிரித்துக் கொண்டாள்.

'இவர் தேசத்தொண்டர் மட்டுமல்ல; பெரிய தவசி போலவும் இருக்கிறது!' என்று தனக்குள் எண்ணிக்கொண்டாள்.



வேணு பிறகு அவளைக் கவனிக்கவில்லை.

அன்று தோட்டத்தில் வேலையும் வெகு சீக்கிரமாய் முடிந்துவிட்டது. தன் போக்கில் அவன் மலையடிவாரத்தில் உள்ள காட்டில் கூடக்க ஆரம்பித்துவிட்டான். மனம் அலைவதற்கு ஒரு நிலையில் இல்லை. ஆசிரமத்துக்கு வந்த பெண் அவன் மனசில் பெரிய மாறுதல் உண்டாகும்படி செய்துவிட்டாள். திடீரென்று ஒரு யோசனை உண்டாயிற்று. மறுபடியும் அவன் ஆசிரமத்துக்குத் திரும்பிவந்தான். இப்போது அங்கே உமா மட்டும் இல்லை. இன்னும் இரண்டு சிறுவர்கள் வேறு அவள் பக்கத்தில் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

"உமா, இவர்களெல்லாம் யார்?"

"நம் ஆசிரமத்தில் இனி இவர்களும் இருக்க லாமா என்று கேட்கவே அழைத்துவந்தேன். ஆசிரமம் குருகுலமாக வேண்டாமா?"

"ஓ! ஆச்சரியந்தான்! இவர்கள் யாரென்று சொல்லவில்லையே!"

"பக்கத்து ஊர்க் குழந்தைகள். நான் இப்பொழுது போய் அழைத்து வந்தேன்."

வேணு நிகைத்தான்.

"என் மாமாவின் குழந்தைகள்தாம்; பயப் படவேண்டாம்" என்றாள் அவள் மறுபடியும்.

"அப்படியானால் சரி" என்று மட்டும் சொல்லிவிட்டு மலைப் பிரார்த்தனைக்கு ஆயத்த மானான் அவன்.

உமா குழந்தைகளுக்குக் கூழ் வார்த்தாள்.

* * *

மப்பும் மந்தாரமும் அஸ்தமன வேளையை விரைவில் அந்தகாரத்தில் ஆழ்த்தின.

வேணுவின் பிரார்த்தனை எப்பொழுதும் போல நிச்சிந்தையாக நடைபெற்றது என்று சொல்ல முடியாது. அழகும் அமைதியும் இளமையின் செழிப்பில் மயங்கித் தவழும் அந்த மங்கையின் மீது கணத்துக்கு ஒரு கூடவை தன் பார்வையை ஓட்டினான். மனம் கெஞ்ச அவள் தெய்வப் பக்கத்தில் அமர்ந்தபடி பிரார்த்தனையில் ஆழ்ந்திருந்தாள். வேணுவின் பிரார்த்தனையில் அவளுக்கும் கூப்பிய கரங்களுடன் பங்கு இருந்தது.

ஆனால் அவனுடைய தியானத்தில் ஏதோ சிறு மாறுதல் மட்டும் இருக்கவேண்டும் என்பதை அவள் ஊகித்துக்கொண்டாள்.

அதற்குத் தகுந்தாற் போலவே திடீரென்று அவன் எழுந்தான். கூப்பிய கரங்கள் தளர்ச்சி அடைந்தன.

"உமா!" என்றான்.

"ஸ்வாமி!"

"நீ இங்கிருந்து போய்விட முடியாதா? உனக்கு வேறு ஒருவருமே இல்லையா?" என்றான்.

உமா நிகைப்படைத்தாள். அவன் மனச்சலனம் அவளுக்கு வெகுநேரம் கழித்துத்தான் தெளி வாகத் தெரிந்தது. அவள் குரல் தழுதழுத்தது.

"வேறு எனக்குப் புகலில்லை, ஸ்வாமி. தங்கள் மனம் பலவீனமடைவதாக இருந்தால் நான் போவ தைத் தவிர வேறு வழி இல்லை."

"எங்கே போவாய்?"

"எங்கே சாசுவதமான அமைதி கிடைக்குமோ, எங்கே என்னைத் தயங்காமல் ஏற்றுக் கொள்ளும் இடம் கிடைக்குமோ, அங்கே..ஆஹா..அது என் கடைசி முயற்சியாகத்தான் இருக்கும்."

வேணுவுக்குச் 'சொரேர்' என்றது. அவள் தன் பிராணத் தியாகத்தைப்பற்றிப் பேசுகிறாள் என் பது உடனே அவனுக்குப் புரிந்துவிட்டது.

"உமா, என்னை மன்னித்துக்கொள். நான் உன்னை இனி எங்கும் போகச் சொல்லமாட்டேன். ஆமாம், நீ இங்கு...."

"என்னைப்பற்றிக் கவலை இல்லை. நான் ஆசி ரமத்துக்கு வேண்டியதை தூல் நூற்று, பாய் முடைந்து பக்கத்து ஊரில் கொண்டு விற்றுச் சம்பாதித்துவிடுவேன். உங்களுக்கு அந்தக் கவலை என்னத்திற்கு ஸ்வாமி?"

வேணு மெல்லச் சிரித்துக்கொண்டான். வான வீதியில் பளிச்சிட்ட மின்னல் ஒன்று அவன் முகத்தில் தோன்றும் உவகையை வெளிப் படுத்தியது.

மனிதர்கள் துக்கத்தில் சிக்குண்டால் மட்டும் அழுகிறார்கள்; பக்தத்தில் சிக்குறும்போது உண் டாகும் உணர்ச்சிதான் அந்த மெல்லிய புன்ன கையா?

தென்றல் கனத்தது. மந்தாரம் விஸ்தாரமாகப் பரவியது.

மலையடிவாரத்தில் மழை வருவதற்குக் கணக்கா, போதா? சடசடவெனப் பொழிந்தது மேகம். வெகு நேரம் சென்றபின் குழந்தைகள் உறங்க ஆரம்பித்தன. உமா அவைகளின் பக்கத்தில் தலைப்பை விரித்துப்போட்டுப் படுத்திருந்தாள்.

வேணுவுக்குச் சற்றும் நித்திரையே இல்லை. மனம் சுழன்றது. நிந்தனை வலை பிரிந்தது: 'ஆஹா, இது என்ன ஆச்சரியம்; அழகுள்ள பெண் - அபலை - என்னுடன் தனியாக இந்த ஆசிரமத்தில் தங்க இசைந்தது! அப்படி என்ன கஷ்டம் இவளுக்கு? வாழ்வில் சுகங்கி மலர்ச்சி யைத் தேடும் மென்மலரா இவள்! பின்னே யார்தாம் சம்மதிப்பார்கள் இந்த உலகத்தில் இப் படி ஒருத்தியைத் தன் வழியே போகவிட?'

இவ்விதம் காரணமின்றி அவன் மனம் அலைத் தெழுந்தது.

பிறகு மெல்லிய குரலில், "உமா!" என்று அழைத்தான். அவன் குரல் அவன் காதுக்கே எட்டியதோ என்னவோ? அவனுக்கே ஆச்சரி யம் உண்டாகும் விதத்தில் அவள் உடனே எழுந் திருந்து, "ஸ்வாமி!" என்றாள்.

வேணுவுக்குச் சற்று லஜ்ஜையாக இருந்தது. அர்த்த ராத்திரியில் அணங்கு ஒருத்தியைக் காரணம் இல்லாமல் அழைப்பதென்றால்? இருப்பினும் சமாளித்துக்கொண்டான்.

"குழந்தைகளுக்குச் சாரல் அடிக்குமே; நன்றாகப் போர்த்திவிட்டால் நல்லது" என்றான்.

உமா அவ்விதமே செய்துவிட்டு மறுபடியும் படுத்துக்கொண்டாள். அவளைப் பற்றி முழு விவரமும் அப்போதே தெரிந்து கொண்டுவிட எண்ணிய வேணுவுக்கு என்ன பேசுவது என்றே புரியவில்லை.

"உனக்குத் தூக்கமே வரவில்லையா, உமா?"

அவள், "ஊஹூம்" என்றாள். தூக்கம் வருகிறது என்றும் அர்த்தம் செய்துகொள்ளலாம், வரவில்லை என்றும் அர்த்தம் கொள்ளலாம் அத்தத் தொனியிலிருந்து.

மேலே பேச ஒன்றும் இல்லாததால் அவன் புரண்டு மறுபக்கம் பார்த்துப் படுத்துக்கொண்டான். நித்திரை வரும்வரையில் நியானத்தில் ஈடுபட மனத்தை வீண் பிரயாசையுடன் மூடுக்கிக்கொண்டிருந்தான். மனக்கொதிப்பினால் அவன் தூயில் கொள்ளாமல் தவித்தான். நேரம் போய்க்கொண்டிருந்தது.

மறுபடியும் தன் நினைவு இன்றியே திடீரென்று வேணு உமாவை அழைத்தான்.

அந்த உமா தூங்குவதே இல்லைபோல, "ஸ்வாமி" என்று பதில் குரல் கொடுத்தாள்.

"வந்து.. குழந்தைகளுக்குப் போர்த்தினாயா, உமா?"

திருப்பித் திருப்பி அந்தக் குழந்தைகளைச் சாக்கிட்டுத்தான் அவனுக்குப் பேச வந்தது.

"ஆயிற்று."

"ஆமாம் உமா, அவர்கள் யார் என்ற விவரம் ஒன்றுமே சொல்லவில்லையே நீ?"

அவன் எடுத்துக்கொண்ட விஷயம் வளரும் என்று அவனுக்குத் தெரியும்; கேள்விமேல் கேள்வியாகக் கேட்க நேரும் என்பதும் தெரியும்; அதற்கு அந்த நேரம் நிசி ஏற்ற சமயமல்ல என்பதையும் அவன் அறிந்தவன்தான். ஆனால் அந்தக் கேள்வியை மட்டும் அவனால் கேட்காமல் ஏனோ இருக்க முடியவில்லை.

"என் மாமாவின் பிள்ளைகள் என்றேனே ஸ்வாமி.. அவர்கள் தாயில்லாதவர்கள்" என்றாள் அவள்.

"ஓ.. அப்படியானால் உன் மாமா....?..."

உமாவின் தரப்பிலிருந்து அதன்பிறகு பதிலே வரவில்லை. மௌனம் அந்தக் கேள்வியின் முடிவிலிருந்து நிலவியிருந்தது. ஆம்; உமா மௌனமாய்த்தான் இருந்தாள்.

எதிர்பார்த்ததற்கு மாறுகச் சம்பாஷணை முடிவடைந்ததும் அவன் வேதனை பன்மடங்கு அதிகமாயிற்று. மனவேதனை உடலை உலுக்கி அப்படியும் இப்படியுமாகப் புரட்டித் தள்ளியது அவனை.

* * *

கருக்கலில் இயற்கையில் ஓர் அமைதி. கீழ் வானில் களங்கமற்ற ஒரு பிரகாசம்.

ஆனால் வேணு என் இன்னும் எழுந்து வரவில்லை?

உமாவுக்குச் சற்று என்னவோ போல இருந்தது. அவன் அருகில் மெள்ள வந்தாள்.

"ஸ்வாமி" என்று அழைத்தாள்.

பதில் இல்லை.

"ஸ்வாமி, ஸ்வாமி!"

ஊஹூம்.

"பொழுது விடிந்துவிட்டதே, ஸ்வாமி!"

"....."

அவளுக்கு ஏனோ பயமாக இருந்தது. மெதுவாகக் குனிந்து உடம்பைத் தொட்டுப் பார்த்தாள். திடுக்கிட்டு உடனேயே கையை எடுத்துவிட்டாள். அவன் உடல் நெருப்பாய்த் தகித்துக் கொண்டிருந்தது.

அவள் கண்களில் பொலபொலவென்று நீர் சுரக்கலாயிற்று. குழந்தைகள் விஷயம் புரியாமல் சுற்றமுற்றம் போய்வந்தார்கள்.

வேணு பிரக்ஞை தவறிக் கிடந்தான். அவளுக்கு மேலே என்ன செய்வதென்றே புரியவில்லை.

ஆயினும் சற்று நேரத்தில் தெளிவு கொண்டு அடுப்பைப் பற்ற வைத்துச் சட்டியில் வெந்நீர் கொதிக்க வைத்தாள். தண்ணீர் காய்வதற்குள் அவள் மனம் சொல்லொணாத தவிப்பை அடைந்தது: இரவு முழுவதும் அவனும் தூயிலின்றி இருந்திருக்கிறான். வேணுவின் பேச்சுக்குப் பயம் காரணமா, பற்றுதல் காரணமா என்பதே அவளுக்கு ஓயாத அலைப்பாக இருந்தது. அவனுடைய ஜுரத்திற்கு அந்த இரண்டில் ஒன்றுதான் காரணமாக இருக்கவேண்டும் என்று நினைத்தபோது அவளுக்கு என்னவோ வேதனையாக இருந்தது. சகிக்க முடியாத தக்கம் அவள் இருதயத்தை அழுத்தியது.

ஆரோக்கியத்தை விட்டு, அவனை விட்டுத் தான் போய்விடலாம். அப்படி எங்கேதான் போவது? ஆனாலும் இவ்வளவு அசௌகரியமாயிருக்கும் போது விட்டுப்போவதுதான் நியாயமா என்ன?

உமாவுக்கு மறுபடியும் வேணுவின் மேல் சொல்ல முடியாத பாசம் சுரந்தது. வேணுவின் அந்த இனிய குரல்: 'உமா.'

'ஆஹா! தேசத்தொண்டு செய்ய ஓடிவந்தவருக்குத் தேனினும் இனிய குரலா?'

* * *

"உமா" என்று ஓர் அதட்டல் சப்தம் திடீரென்று வெளியிலிருந்து வந்தது, கோரமாய்.

(அடுத்த இதழில் முடியும்)



பீங்கான்

பார்த்தசாரதி ஐயங்கார்

1

மண்ணம், தட்டு, விளக்கு மூடி, எலெக்டிரிக் சாமான்கள் முதலியவை பீங்கானால் செய்யப்படும். சட்டிபானை போல இதுவும் மண்தான். ஜாடி செய்வதும் மண்ணால்தான். கண்ணுடியும் மண்ணுலேயே செய்யப்படுகிறது. மண்ணுக்குத் தக்கபடி, செய்யும் முறைக்குத் தக்கபடி, இந்தச் சாமான்கள் உருவத்திலும் பேரிலும் வித்தியாசப்படுகின்றன. சிவப்பாக அல்லது கறுப்பாக இருந்தால் சட்டிபானை, பழுப்பாயிருந்தால் ஜாடி, வெளுப்பாயிருந்தால் பீங்கான், பிரதிபலிக்கும் தன்மை இருந்தால் கண்ணுடி. மேற்கண்ட சாமான்களுக்கு இன்ன நிறந்தான் என்ற வரையறை இல்லை.

பீங்கான் என்ற சொல்லும் அதனால் குறிக்கப்படும் பொருளும், அதன் உபயோகமும் நம்முடைய பழைய தமிழ் நூலிலிருந்து கூடத் தெரிகின்றன. தேசாந்தரங்களிலுள்ள வஸ்துக்களும் பாஷாந்தரங்களிலுள்ள பேச்சுக்களும் இக்காலத்தில் நிமிஷத்துக்கு நிமிஷம் புதிது புதிதாக நமக்குத் தெரிவதில் யாதொரு விசேஷமும் இல்லை. நாகரிகம் ஓங்கி வளருவதாக நினைக்கப்படும் இக்காலத்திலுள்ள பீங்கான் பண்டைக் காலத்தில் நம்முடைய தமிழ் நாட்டில் வழங்கப்பட்டது நம்முடைய தமிழ் நூலிலிருந்தே தெரிவதுதான் நமக்கு விசேஷம்.

நம்மாழ்வாருடைய திருவாய்மொழிக்கு வியாக்கியானம் இட்டருளின நம்பிள்ளை, பீங்கான் என்ற சொல்லை உபயோகித்திருக்கிறார். இவர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் இருந்தவர். இவருக்கு முன்னும் பின்னும் இருந்த யாருடைய தமிழ் நூலிலும் இந்த வார்த்தை காணவில்லை. இது வேறு எங்கேயுமே இல்லை என்று நாம் ஒரே அடியாகச் சாதிப்பது நம்முடைய சிறிய ஆராய்ச்சியால் அல்ல. தமிழுக்குப் பெரிய அகராதியான யுனிவர்ஸிடி தமிழ் லெக்ஸிகனில்கூடப் பீங்கான் என்னும் வார்த்தை நம்பிள்ளையினுடைய ஈட்டிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறதேயன்றி வேறு நூலிலிருந்து அல்ல. லெக்ஸிகனில் இந்த வார்த்தைக்கு வேறு தமிழ் நூல் காட்டப்படாததால் இது வேறு எதிலுமே இல்லை என்று சொல்லலாம். வேறு நூலில் இல்லாதது அந்த நூல்காரர்களுக்கு இந்தப் பதத்தை உபயோகிக்க ஸந்தர்ப்பம் வாய்க்காததாலேயன்றி, இது தெரியாததால் அல்ல. இது எல்லாருக்கும் தெரிந்ததாக இருந்தாலும் இதை எழுதினவர் நம்பிள்ளை ஒருவரே.

பீங்கான் என்பது பர்ஷியன் வார்த்தையாகத் தமிழ் லெக்ஸிகனில் குறிப்பிட்டிருக்கிறது. இதற்கு ஆங்கிலத்தில் போர்ஸிலெயின் என்று பெயர். இந்த வஸ்துவைப் பற்றின எல்லா விஷயத்தையும் என்ஸைக்ளோபீடியாவில் விவரமாகக் காணலாம். பர்ஸி வார்த்தையான பீங்கான் நம்பிள்ளை காலத்தில் ஸர்வ ஸாதாரணமாகத் தமிழ்நாட்டில் கலந்திருந்தது.

நம்மாழ்வாருடைய திருவாய் மொழி ஏழாம் பத்து, இரண்டாம் திருவாய்மொழியில் முதற் பாட்டான "கங்குலும் பகலும்" என்பதில், 'இருநிலம் கைதுழாவிருக்கும்' என்னும் இடத்துக்கு வியாக்கியானம் செய்யும்போது, "மஹாப்ருதிவி ஒரு பீங்கானுக்குட்பட்ட சந்தநபங்கம் பட்டது படாநின்றது" என்றார் நம்பிள்ளை.

2

கங்குலும் பகலும் கண்துயில் அறியாள்;
கண்ணீர் கைகளால் இறைக்கும்
சங்குசக் கரங்க ளென்றுகை கூப்பும்;
தாமரைக் கண்ணென்றே தளரும்;
எங்ஙனே தரிக்கே னுன்னைவிட் டென்னும்;
இருநிலம் கைதுழா விருக்கும்
செங்கயல் பாய்நீர்த் திருவரங் கத்தாய்!
இவள்திறத் தென்செய்கின் றாயே.

பெருமாளைக் காதலித்து மோகித்துக் கிடக்கும் ஒரு தலைவியின் மோகத்தை அவளுடைய தாய் பெருமாளுக்கு அறிவிப்பதாக ஆழ்வார் பாடுகிறார்.

இவள் இராப்பகலாய்த் தூக்கமற்றிருக்கிறாள். தூக்கம் வந்தாலும் அதைக் கண்ணீர் தடுக்கிறது. கண்ணிரைக் கையால் இறைத்துத் துடைத்துப் பார்க்கும்போது எதிரில் தோன்றும் உன்னைச் சங்குசக்கரங்களோடு காண விரும்பி, முழுவதும் சொல்ல மாட்டாமல் கைகூப்புகிறாள். அப்போது கண்ட உன் கண்ணழகைப் பேசத் தொடங்கி, பேசமாட்டாமல் தவிக்கிறாள். வேறொன்றும் போது போக்கித் தளர்ச்சியை மாற்ற முடியாமல் 'உன்னை விட்டு எப்படித் தரிப்பேன்?' என்கிறாள். இத்தனை

பாடுபட்டும் நீ வராததால் கண்ணீர் விழுந்து சேறான பூமியைக் கையாலே துழாவி, அதற்குச் சக்தியற்று வீழ்ந்திருக்கிறாள். இப்படிப் படுகிற இவள் விஷயமாகத் திருவரங்க நாயகனே! நீ என்ன செய்யப் போகிறாய்? - என்பது இப்பாட்டுக்குப் பொருள்.

இருநிலம் கைதுழாவிருக்கும்:— இருநிலம் - மஹாப்ருதிவியை, கை-கையாலே, துழா-துழாவி, இருக்கும்-அதுக்கும் சக்தியற்றவளாய் நிர்வ்யாபாரையாய் இருக்கும்.

இவள் அறிவழித்து மண்ணைப் பிசையும்போது பூமி பட்ட பாடு இன்ன விதமென்று நாம் அறியும் படி.

மஹாப்ருதிவி ஒரு பீங்கானுக்குட்பட்ட சந்தன பங்கம் பட்டதுபடாதின்றது

என்கிறார் நம்பிள்ளை. பீங்கான் கிண்ணியில் சந்தன பில்லையை ஊறவைத்துப் பிசையுமாப்போலே அவள் மண்ணைப் பிசைந்தாள். சந்தனத்தைப் பிசைவது மண்ணைப் பிசைந்ததற்குத் திருஷ்டாந்தம்.

3

இந்த வாக்கியத்தால் பீங்கான் என்ற வார்த்தையும், பீங்கான் கிண்ணத்தில் சந்தனம் கரைப்பதும் 12-ஆம் நூற்றாண்டில் வழக்கில் இருந்தன என்று தெரிகிறது.

பித்தளையும் வெள்ளியும் இருக்க, பீங்கானில் சந்தனம் கரைப்பதில் ஒரு சௌகரியம் உண்டு.

பித்தளையில் கரைத்த சந்தனம் உடனே செலவாகாமல் மிஞ்சினால், பித்தளைக் களிம்பு சந்தனத்தைக் கெடுத்துவிடும். சந்தனக் கிண்ணம் என்றே பேரிட்டுவைத்தாலும், சாப்பாட்டுக்கு அதிகமாக உபயோகப்படும் வெள்ளியில் சந்தனம் கரைத்தால், சந்தனத்தின் வாசனை சாப்பாட்டு ருசியைக் கெடுத்து விடும். மூக்குக்கு ஆவதெல்லாம் நாக்குக்கு ஆகாதே! பீங்கான் கிண்ணத்தில் சந்தனம் கரைத்து மிஞ்சினாலும் அதிலேயே இருக்கலாம். பீங்கான், கண்ணுடி, ஜாடி - இவைகளுக்கு வஸ்துவைக் கெடுக்கும் களிம்பு, பாசம் முதலிய பாத்திரதோஷம் இல்லை. பீங்கான் கிண்ணத்தைச் சாப்பாட்டுக்கு உபயோகித்தால் அது உடையக்கூடுமாகையால், அதைச் சாப்பாட்டுக்கு உபயோகிக்கவாவது அதில் கரைத்த சந்தனத்தின் வாசனை சாப்பாட்டு ருசியைக் கெடுக்கவாவது அவகாசம் இல்லை.

பீங்கானுக்குட்பட்ட சந்தனபங்கம்—என்பது அப்போது அரைத்த ஈரச்சந்தனமல்ல. அப்போது அரைத்த பச்சைச் சந்தனம் முக்கியமாகப் பூஜைக்கே உபயோகப்படும். அதற்கென்றே கோயில்களில் வெள்ளி வட்டில்கள் உண்டு. பூஜைக்கும் பீங்கான் கிண்ணம் கூடாது. கோயில் சாந்து என்பது பெரு மாள் சந்தனமல்ல. கோயில் சாந்து என்றால் மாளிகைச் சாந்து. அதாவது, அரண்மனைச் சாந்து. கோயில் என்பது இங்கே அரண்மனை.

அப்போது அரைத்த ஈரச்சந்தனமாகில், சந்தநபங்கம் பட்டது, படாதின்றது என்று இப்பாடு படவேண்டாம். நசுக்கிக் கசக்கிப் பிசைந்து படும் பாடெல்லாம் வாசனைச் சரக்குக் கூட்டி அரைத்து, தட்டி, உலர்த்தி எடுத்த சந்தன வில்லைக்கே வேண்டுவது. இப்படிப்பட்ட வில்லைச் சந்தனம் பூஜைக்கோ, வந்தவர்களுக்கோ உபசரிக்கவோ தேவையில்லை.

வெள்ளியைவிட விசேஷ வேலைப்பாடு வாய்ந்ததாய், பலர் கைக்குப் போகவும் இடம் மாறி வைக்கவும் அவசியமில்லாமல், இருவர் கையிலேயும் ஏற்பட்ட இடத்திலேயும் இருக்கக்கூடியது பள்ளியறைப் பீங்கான் கிண்ணம் ஒன்றே.

இத்தனை பொருளும் 'பீங்கானுக்குட்பட்ட சந்தநபங்கம் பட்டபாடு' என்ற வாக்கியத்துக்குப் பொருந்தும்.

நம்பிள்ளையினிடத்திலேயே ஆழ்வார்களின் அருளிச்செயல் முதலான எல்லாச் சாஸ்திரங்களையும் கற்ற பெரியவாச்சான் பிள்ளை திருவாய்மொழிக்குச் செய்த வியாக்கியானத்தில் "இருநிலம் கைதுழாவிருக்கும்" என்னும் இடத்துக்கு, "பாஜநத்துக்கு உட்பட்ட சந்தந பங்கம் போலேயாயிற்று இவள் கைக்கே படுகிறது" என்றார். பொதுவாகப் பாத்திரத்தைச் சொல்லும் பாஜநம் என்ற சொல்லைப் பிரயோகித்தாரேயன்றி, பீங்கானைச் சொல்லவில்லை. அந்தப் பெரிய வாச்சான் பிள்ளையோடு கூடவே நம்பிள்ளையினிடத்திலேயே எல்லாம் கற்ற வடக்குத் திருவீதிப்பிள்ளை நம்பிள்ளையினுடைய திருவாய்மொழி உபந்யாஸத்தை அன்றுடம் ஒன்று விடாமல் எழுதிவந்த ஈட்டில் மாத்திரம் பீங்கான் என்னும் சொல் காண்கிறது.

திவ்யப் பிரபந்த வியாக்கியானங்களுள் ஆசார்யனுடைய நூலிலுள்ள சில சொற்கள் சிஷ்யனுடைய நூலில் இல்லை. சிஷ்யனுடைய நூலிலுள்ள சில சொற்கள் ஆசார்யனிடம் இல்லை.

'மஹாப்ருதிவி ஒரு பீங்கானுக்குட்பட்ட' என்னும் வாக்கியம் பிற்காலத்தில் யாராலேயோ சேர்க்கப்பட்டதென்றும் சொல்லமுடியாது. ஈட்டுக்கு வியாக்கியானங்களான அடையவளந்தான் அரும்பதம், ஜீயர் அரும்பதங்களில் இந்த மஹாப்ருதிவி என்ற தலைப்புக் காண்கிறது.

பகரத்தின்மேல் இகரத்தை நீட்டாமல் குறுக்கி, யகரத்தையும் சேர்த்து, பீய்ங்கான் என்றும் சொல்லுகிறோம். ஆனால் இங்கே பீங்கான் என்றே எழுதியிருக்கிறது.

திவ்யப் பிரபந்த வியாக்கியானக் கடலில் வேறு தமிழ்நூலில் இல்லாத பல தமிழ்ச் சொற்கள் இவ்வாறே நிறைந்திருக்கின்றன.

வீடு கதைகள்

14

ஜாடி மேலே குரங்கு.

15

டாக்கு டீக்கு என்னுமாம் குதிரை
தண்ணீரைக் கண்டால் தவிக்குமாம்
குதிரை.

16

ஆயிரம் தச்சர் கூடி
அழகான மண்டபங் கட்டி
ஒருவன் கண் பட்டு
உடைந்ததாம் மண்டபம்.

17

வட்ட வட்டச் சிங்கண்ணு
வால் இல்லாத சிங்கண்ணு
என்னை வந்து எழுப்பண்ணு.

18

போவான் வருவான் திம்மப்பன்
ஒருகாலில் நிற்பான் திம்மப்பன்.

19

பச்சைப்பச் சென்றிருக்கும்
பாகற்காய் அல்ல
பக்கத்தில் முள்ளிருக்கும்
பலாக்காயும் அல்ல
உள்ளே வெளுத்திருக்கும்
தேங்காயும் அல்ல
உருக்கினால் நெய் ஒழுகும்
வெண்ணெயும் அல்ல.

20

பட்டை பட்டை நீக்கிப்
பதினாறு பட்டை நீக்கி
முத்துப் பட்டை நீக்கி
மூன்னே வாராள் சீமாட்டி.

21

பந்தற் காலு நாலு
பவழக் காலு நாலு
வெள்ளித் தடி இரண்டு
வெண்சாமரம் ஒன்று.

22

ஓ ஓ உயர்ந்த மரம்
உருவினால் பிடி காணாது.

23

நான் இழுக்க நீ இழுக்க
நட்டுச் சப்பரம் கட்டி இழுக்க
நாய் குலைக்க வள்ளென்ன
நாகப்பட்டணம் க்றீச்சென்ன.

24

கத்திபோல் இலை இருக்கும்
கவரிமான் பூப்பூக்கும்
தின்னப் பழம் பழுக்கும்
தின்னுத காய் காய்க்கும்.

25

ஏணிமேலே கோணி
கோணிமேலே குழாய்
குழாய்மேலே குண்டு
குண்டுமேலே புல்.

26

அள்ளுவான் கிள்ளமாட்டான்.

27

தடுக்குப் போட்டேன்
எடுக்க முடியவில்லை.

28

செம்பு நிறையக் கெம்பு.

(கி. வா. ஜ. தொகுத்தவை.)

[விடைகள்: 104-ஆம் பக்கம் பார்க்க.]

பொம்மனும் திம்மனும்

எஸ். சங்கரன்

வெகு காலத்திற்கு முன்னால் பொம்மன் திம்மன் என்று இரண்டு ஏழைக் குடியானவர்கள் வசித்து வந்தார்கள். இருவரும் அண்ணன் தம்பிகள். பொம்மனுக்கு விவாகமாகி இருந்தது. ஆனால், அவன் மனைவி, திம்மனை எப்பொழுதும் வெறுத்துவந்தாள்.

விதை விதைக்கும் காலம் வந்தது. திம்மனிடம் ஒரு விதைகூட இல்லை. ஆகவே அண்ணன் வீட்டுக்குச் சென்று கொஞ்சம் விதைகளைக் கடன் கொடுக்கும்படி கேட்டான். பொம்மன் அவ்வாறே திம்மனுக்குச் சிறிது தானியம் கொடுக்கும்படி தன் மனைவியிடம் கூறினான். பொம்மன் மனைவி, அவற்றை நன்றாக வேகவைத்துத் திம்மனிடம் கொடுத்தாள்.

வேகவைத்ததனால் விதைகளிலுள்ள ஸத்துக்களெல்லாம் போய்விட்டன. ஆனால் ஒரே ஒரு விதை மட்டும், சட்டியின் ஓரத்தில் ஒட்டிக் கொண்டிருந்ததனால் சத்துடன் இருந்தது. அதுமட்டும் முளைத்தது. திம்மன் அந்த ஒரு கதிரைச் சிரத்தையுடன் தண்ணீர் வார்த்து வளர்த்து வந்தான். வர வர அது பெரிதாக வளர்ந்து கொண்டே வந்து, அறுவடைக் காலமானதும் ஒரு பெரிய மரமாய்விட்டது. அதன் உச்சியில் மிகப் பெரிய ஒரு மணி மட்டும் உருண்டு திரண்டுகாய்த் திருந்தது. அதன் கதுப்புகள் மாங்கொட்டையைவிடப் பெரியனவாக இருந்தன.

திம்மன், கோடாலியினால் கிளையை வெட்டி மணியைக் கீழே விழச் செய்தான். உடனே எங்கிருந்தோ ஒரு பறவை வந்து அந்த மணியைக் கொத்திக்கொண்டு போய் விட்டது.

அதன் பின்னால் திம்மன் போய்க் கொண்டே இருந்தான். வெகுதூரம் பறந்துசென்று, கடைசியில் அந்தப் பறவை ஸமுத்திரக்கரையை அடைந்து ஒரு பாறையின் மேல் உட்கார்ந்தது. பிறகு அது திம்மனைப் பார்த்து, "திம்மா, வருத்தப்படாதே. இது ஒரு மணி மட்டுந்தான். இந்த ஸமுத்திரத்திற்கப்பால் தங்கத் தீவு ஒன்று இருக்கிறது. அங்கே உன்னைக் கூட்டிக்கொண்டு செல்கிறேன். உனக்கு வேண்டிய தங்கக்கட்டிகளை எடுத்துக் கொண்டு நீ ஒரு பெரிய பணக்காரனாகலாம்" என்றது.

ஆகவே திம்மன் அதன் முதுகில் ஏறிக்கொண்டான். ஸமுத்திரத்தின் அலைகளின் இரைச்சலும், ஆகாயத்தில் மின்னல், இடி இவைகளின் வெளிச்சமும் திம்மனை மிகவும் பயப்படுத்தி விட்டன. அவன் கண்களை இறுக மூடிக் கொண்டுவிட்டான். கடைசியில் பறவை அவனை ஒரு தீவில் இறக்கிவிட்டது. எங்கே பார்த்தாலும் தங்கக் கட்டிகளும் வெள்ளிக் கட்டிகளும் இறைந்து கிடந்தன. திம்மன் அவைகளில் சிலவற்றைத் தன் வேஷ்டியில் முடிந்து கொண்டான்.

"போதுமா?" என்றது பறவை.

"போதும்" என்று திம்மன் தலையை ஆட்டினான்.

பறவை சந்தோஷத்துடன், "அதுதான் நல்லது. திருப்தியைக் காட்டிலும் உயர்ந்தது ஒன்றுமே இல்லை" என்று கூறி அவனை மறுபடியும் அவன் வீட்டில் இறக்கிவிட்டது. திம்மன் தங்கக் கட்டிகளை விற்றுப் பெரிய பணக்காரனானான்.

பொம்மனுக்குத் தன் தம்பிமேல் மிகவும் கோபம் ஏற்பட்டது. தான் ஏழையாக இருக்கும்பொழுது அவன் மட்டும் திருப்தியுடனும் சந்தோஷத்துடனும் இருப்பது பிடிக்கவில்லை. "இவ்வளவு செல்வத்தையும் நீ எங்கே இருந்தோ திருடினாய்" என்று குற்றம் சாட்டினான். ஆனால் திம்மன் அவனைச் சமாதானப்படுத்தி, நடந்த விஷயங்களை விளக்கமாகக் கூறினான்.

இதைக் கேள்விப்பட்ட பொம்மன் மனைவி, "பணக்காரனாவது இவ்வளவு லேசான காரியமானால், நானும் உனக்கு ஒரு வீதையைத் தவிர மற்றவைகளை வேகவைத்துத் தருகிறேன். அதைப் பயிரிட்டு, அந்தப் பறவையுடன் நீயும் போய்த் தங்கக்கட்டிகளைக் கொண்டு வா" என்றாள்.

திம்மனுக்கு நேர்ந்தது போலவே பொம்மன் மனையையும் பறவை தூக்கிக்கொண்டு போயிற்று. பொம்மனும் அதன் உதவியால் தங்கத்தீவை அடைந்தான். எங்கே பார்த்தாலும் சிதறிக்கிடந்த தங்கக்கட்டிகளையும் வெள்ளிக்கட்டிகளையும் கண்டதும், அவ்வளவையும் எடுத்துக்கொண்டு போய்விடவேண்டும் என்று தோன்றிற்று பொம்மனுக்கு. கொஞ்ச நாழிகை கழித்து, "போதுமா?" என்று கேட்டது பறவை.

"இன்னும் கொஞ்சம் பொறு" என்று பொறுக்கிக்கொண்டே இருந்தான் பொம்மன்.

மீண்டும் சிறிது நேரம் கழித்துப் பறவை, "உனக்குத் தேவையான அளவு எடுத்துக்கொண்டாகிவிட்டது. இனிமேல் உன்னால் தூக்க முடியாது" என்றது.

பொம்மனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. இன்னும் சிறிது நேரம் கழித்து, "கொஞ்ச நாழிகைக்குள் சூரியன் உதயமாகிவிடுவான். அந்த உஷ்ணத்தைத் தாங்க உன்னால் முடியாது. வீணாக வெந்து சாம்பலாகிவிடுவாய். இப்பொழுதாவது திருப்தியுடன் திரும்பு" என்றது பறவை.

பொம்மனுக்கு மனம் வரவில்லை. மறுபடியும் சில கட்டிகளைத் தூக்க முயற்சி செய்துகொண்டிருந்தான். கடலின் அடிவானத்தில் செக்கச்செவேலென்று சூரியன் உதித்தான். பறவை சமுத்திரத்தில் பறந்து சென்று, தன் சிறகுகளினால் தண்ணீரை மேலே தெளித்து உஷ்ணத்தைத் தணித்துக்கொண்டது. பேராசை பிடித்த பொம்மன் வெப்பத்தில் கருகிச் சாம்பலாய்ப் போனான்.

[சீனநாட்டில் வழங்கும் கதையைத் தழுவியது.]

விடுகதைகளுக்கு விடை: 14. முந்திரிப் பழம், 15. செருப்பு, 16. தேன் கூடு. 17. மூட்டைப்பூச்சி, 18. கதவு, 19. ஆமனக்கு, 20. வாழைப்பூ, 21. பசுமாடு, 22. புகை, 23. தயிர் கடைதல், 24. வேம்பு, 25. மனிதன், 26. தண்ணீர், 27. கோலம், 28. மாதுளம்பழம்.

கலைமகள்
ஸ்தாபிதம் 1932.

தூக்கம்

கு. நா. சுப்ரமண்யம்

நான் போனபோது சுவாமிநாதன் கைகளைப் பின் கட்டாகக் கட்டிக் கொண்டு முன் கூடத்தில் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தார். அங்கே வெளிச்சம் அதிகம் இல்லாததால் எனக்கு அவர் முகம் சரியாகத் தெரியவில்லை. அவர் முகத்தை நான் பார்த்திருந்தேனானால் நிச்சயமாக நான் போன விஷயத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்திருக்க மாட்டேன்.

சற்றுப் பதற்றமாகவே, "ஏன் ஸார்? போயிருந்தேளா? அவர் அகப்பட்டாரா? நான் சொன்ன காரியத்தைப்பற்றிக் கேட்

டீர்களா?'' என்று கேட்டேன்.

''யாரு? துரையா? துரை ஊரில் இல்லே. நேற்றும் போனேன். இன்று அல்லது நாளைக்குத்தான் வருவான் என்று சொன்னார்கள். இன்று பூராவும் எனக்கு வேறு வேலையாகப் போய்விட்டது. உங்கள் விஷயத்தைக் கவனிக்க ஒழியவில்லே. நாளைக்குப் பார்த்து ஏற்பாடு செய்கிறேன். தவிரவும் அன்று நீங்கள் சொன்ன மாதிரியிருந்து அப்படி ஒன்றும் அவசரம் அல்ல என்று நினைத்தேன்'' என்றார் சுவாமிநாதன்.

சாதாரணமாக எவ்வளவு சின்ன விஷயமானாலுங்கூட வெகு உத்ஸாகத்துடன் பேசும் சுவாமிநாதனு இன்று இப்படிப் பேசியவர் என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது. கேட்ட விஷயத்தில் வேறு விஷயத்தைப் புகவிடாமல்கூட அவரால் பேச முடிகிறதே! ஆச்சரியந்தான்! நேரடியாகப் பதில் சொல்லி, ''போய்விட்டு வாருங்களேன்'' என்கிற தோரணையில் அவர் பேசியதைக் கேட்டு நான் பிரமித்துப்போனேன். ஆனால், ''போய்விட்டு வா'' என்று சொன்னாலுங்கூட, ''போய்விட்டு வரவா?'', ''போய்விட்டு வரவா?'' என்று கேட்டுக்கொண்டு பேசுவதற்கு உட்காருகிற சுபாவம் படைத்த ஆசாமி அல்லவா நான்?

''ஏன் ஸார்? இன்று உங்களுக்கு ஏதாவது உடம்பு சரியாக இல்லேயா? என்னவோ போல இருக்கிறீர்களே!'' என்றேன்.

''என் உடம்புக்கு ஒன்றுமில்லே. என் பயலுக்குத்தான் உடம்பு சரியாக இல்லே. வயிறு சரியாக இல்லே. கஞ்சி மருந்து எதுவுமே வயிற்றிலே தங்கமாட்டேன் என்கிறது. நேற்று ராத்திரி முதல் அவஸ்தைப் படுகிறான்'' என்றார் சுவாமிநாதன்.

சுவாமிநாதனுடைய பழக்க வழக்கங்கள் ஒன்றிரண்டு எனக்குத் தெரியும். நான் சொன்னேன்: ''இருந்தாலும் இரண்டு வயசு சரியாக நிரம்பாத குழந்தையைத் தூக்கிக்கொண்டு போய் நீங்க ஹோட்டல்லே வடை வாங்கித் தரது பிசகுதான் ஸார். நம்மைப்போலப் பெரியவாளுக்குக்கூட, சில சமயம் ஹோட்டல் சாமான் ஒத்துக்க மாட்டேன் என்கிறது. குழந்தைக்கு எப்படி ஒத்துக்கும்! ஒண்ணும் பிசகாயிராது—சாப்பிட்டது ஏதாவது ஜீரணமாகாமல் இருக்கும். அவ்வளவுதான். நாளைக்குத் தானே சரியாய்ப் போய்விடும்.''

''ஆமாம், ஆமாம், நீங்க சொல்றது சரிதான். அழருனேன்னு நான் ஏதாவது வாங்கித் தரேன்; என் தம்பி வேறு ஏதாவது வாங்கித் தரான்; அவள் வேறே கொடுத்து விடுகிறாள்! எல்லாமாகச் சேர்ந்து குழந்தையைப் படுத்தறது!'' என்றார் சுவாமிநாதன்.

இப்பொழுதுதான் சற்றே வெளிச்சமாக இருந்த இடத்துக்கு நகர்ந்து வந்தார் சுவாமிநாதன். அவர் முகத்தைக் கண்ட நான் திடுக்கிட்டுப் போனேன். அதில்தான் என்ன கவலையும் ஏக்கமும் படர்ந்திருந்தன! ஏன் இப்படி?

என் மனசில் இருந்த கேள்வியை ஊகித்து அறிந்துகொண்டவர் போல அவர் பதில் அளித்தார்: ''ஏற்கனவே ஒரு தரம் பட்டாச்சோ இல்லேயோ. இப்போ பயமாயிருக்கு...தவிரவும் நேற்று ராத்திரி பூராவும் தூக்கமே இல்லே.''

நான் தைரியம் சொன்னேன்: ''என்ன ஸார் இப்படிப் பயப்படறேள்? தானே நாளைக்குச் சரியாகப் போயிடும். நீங்கள் பயப்படறபடி எல்லாம் ஒன்றும் நடந்து விடாது. கவலைப்படாதீர்கள். மனுஷன்னு பிறந்தவனைக் கடவுள் சோதிக்கத்தான் சோதிக்கிறார். ஆனால் எப்பவும் சோதித்துக் கொண்டே இருப்பாரா என்ன?'' என்றேன்.

நான் கூறியதாலெல்லாம் தைரியம் வந்து விடவில்லை அவருக்கு. அவர் சிந்தனையை எங்கேயோ பறி கொடுத்துவிட்டு நான் சொன்ன வார்த்தைகளைக் காதில்கூட வாங்காமல் உட்கார்ந்திருந்தார்.

அவர் மூன்று நான்கு வருஷங்களுக்கு முன் இரண்டு வயசுப் பையன் ஒருவனைப் பறி கொடுத்தவர் என்று நான் கேள்விப் பட்டதுண்டு. அவர் அப்போது எவ்வளவு கஷ்டப்பட்டார் என்றும், அவருக்கு ஆறுதல் சொல்லி மனசை மாற்ற யாராலும் முடியவில்லை என்றும் பிறகு கேள்விப் பட்டேன்.

''சுத்தக் கோழையாக இருக்கிறேளே, ஸார்! கொஞ்சம் தெம்பா இருக்க வேண்டாமோ? குழந்தைகளுக்குச் சதா சர்வதா உடம்பைப் படுத்திக்கொண்டுதான் இருக்கும்'' என்று சொன்னேன் மேலும்.

அவர் வேறு எங்கேயோ ஞாபகமாக, ''உம்'' என்றார். பிறகு ஒரு விநாடி கழித்து, ''தம்பி டாக்டரிடம் குழந்தையைக் காட்ட எடுத்துக்கொண்டு போயிருக்கிறான். போய் ஒரு மணி ஆச்சு. வந்துவிடுவான் இப்போ'' என்றார்.

''இந்தப் பணியிலேயா?'' என்று நான் கேட்டுக்கொண்டிருக்கும் போதே அவர் தம்பி வெங்கிட்டு வந்துவிட்டான். அவன் தன்னுடன் குழந்தையைக் கொண்டு வரவில்லை.

அண்ணு பதற்றப்படுவாரே, விஷயத்தை உடனே சொல்ல வேண்டுமே என்று அவனுக்குக் கவலை வேண்டாமோ? கவலை இருந்தாலும் அண்ணுவைக் கொஞ்சம் அலக்ஷ்யம் செய்கிற மாதிரித்தான் இருக்கட்டுமே என்று எண்ணினானோ?

''எப்ப ஸார் வந்தேள்?'' என்று என்னைச் சாவகாசமாக விசாரிக்கத் தொடங்கினான்.

சுவாமிநாதன் குறுக்கிட்டார்: ''அவர் இப்பத்தான் வந்தார். டாக்டர் என்ன சொன்னார்? குழந்தையை ஆஸ்பத்திரியிலேயே

விட்டுவிட்டு வந்துவிட்டாயா?" என்று கேட்டார்.

அப்படியும் வெங்கிட்டு நேரடியாகப் பதில் சொல்லவில்லை; "ராத்திரி ஆஸ்பத்திரியிலே இருக்கட்டும் என்னூர் டாக்டர். சாப்பிட்டுவிட்டு என்னை ஆஸ்பத்திரியில் வந்து படுத்துக்கொள்ளச் சொன்னார்" என்றான்.

"குழந்தை உடம்புக்கு என்னவாம்? டாக்டர் என்ன சொன்னார்?"

"ஒன்றும் கவலைப்படவேண்டாம், காலையில் சரியாகப் போய்விடும், மருந்து கொடுக்கிறேன் என்று சொன்னார். அவ்வளவு தான்" என்றான் வெங்கிட்டு.

"சாப்பிட்டுவிட்டு நானும் வரேன், ஆஸ்பத்திரிக்கு" என்றார் சுவாமிநாதன்.

"நீ வர வேண்டாம்னு சொல்லச் சொன்னார் டாக்டர். நீயும் தூங்காமல் குழந்தையையும் தூங்கவிட மாட்டாய் என்று சொன்னார்" என்றான் தம்பி.

அவன் சொன்னது என்னவோ வாஸ்தவந்தான் என்று எனக்குப் பட்டது. ஆனால் அதற்காக இந்தக் குரலில், இத்தகைய பாவத்துடன் அவன் சொல்லியிருக்க வேண்டியதில்லை அதை என்று எண்ணினேன் நான்.

அண்ணுவும தம்பியும் சாப்பிட எழுந்தார்கள். நானும் கிளம்பினேன். "என் விஷயம் ஒன்றும் அப்படி அவசரமானதல்ல. நாளைக்குக் காலையிலே வறேன். கவலைப்படாதீர்கள்! பயப்படறதுக்கு ஒண்ணுமில்லை" என்றேன்.

"பயம் என்ன ஸார்? அதெல்லாம் ஒண்ணும் இல்லை! முதல் சம்பவத்துக்குப் பிறகு எல்லாம் பழக்கமாகிவிட்டது, ஸார். என் மனசே கல்லாயிடுத்தே!" என்றார் சுவாமிநாதன்.

நான் மாடிப்படி இறங்கிப் போகையில் சுவாமிநாதனின் மனைவி, "என்னவோ, வறவா போறவாகிட்டெல்லாம் அசட்டுப் பிசட்டுன்னு பேசிண்டிருக்கேளே! பொமமனுட்டிகள், என்னைப் போன்றவா, பயப்படுவா—நீங்க சமாதானம் சொல்ல வேண்டியிருக்கும்! அதற்குப் பதில் நீங்க பயப்படறேள். நான் சமாதானம் சொல்ல வேண்டியிருக்கே!" என்று சொல்லிக்கொண்டிருப்பது என் காதில் விழுந்தது.

அதற்குள் படி இறங்கி வெளியேறிவிட்டேன். சுவாமிநாதன் என்ன பதில் சொன்னார் என்பது என் காதில் விழவில்லை.

வீடு போய்ச் சேர்ந்ததும் எனக்கு என்னவோபோல் இருந்தது. ஒரு வேலையும் ஓடவில்லை. சாப்பிட்டுவிட்டு, 'சுவாமிநாதனைப் போன்ற அறிவாளிகள்கூட இப்படி எல்லாம் காரணம் இல்லாமல் பயப்படுகிறார்களே, இதற்கு ஆதாரம் என்ன?' என்று சிந்தித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். பயத்துக்குக் காரணம் எதுவும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் கடவுளின் சித்தம் என்று ஒன்று உண்டென்று ஒப்புக் கொள்ளுகிறவர்கள் அந்தச் சித்தம் எப்படி இருக்குமோ என்னவோ, ஏதோ என்று பயப்படுவதிலே அர்த்தம் கொஞ்சம் உண்டு என்றுதான் எனக்குத் தோன்றிற்று. "ஆசையால் பாசம் ஏற்படுகிறது; பாசத்தால் பயம் ஏற்படுகிறது" என்று புத்ததேவன் சொல்லியிருப்பது எவ்வளவு பொருத்தமான விஷயம் என்று சிந்தித்தேன். ஒரு சிறு குழந்தையிடம் அளவற்ற பாசம் வைத்துவிடுகிறோம். அது வளர்ந்து பெரியவனானபின் இப்படி, அப்படி என்றெல்லாம் திட்டம் போடுகிறோம். குழந்தை வளர்ந்து பெரியவனானபின்பு அநேகமாகத் தகப்பனின் திட்டங்களை எல்லாம் கவிழ்த்துவிடத்தான் போகிறது. அப்படி இருந்தும் திட்டம் போடுவதை நிறுத்துவதே இல்லை தகப்பன். குழந்தைக்கு உடம்பு சரியாக இல்லாத போதெல்லாம், 'இப்படி எல்லாம் நான் திட்டம் போட்டது தவறோ! அது கடவுளுக்குச் சவால் கூறுகிற மாதிரி ஆகிவிட்டதோ' என்று எண்ணித் தகப்பனின் மனம் துணுக்குறுகிறது. 'சோதித்தா விடுவார் கடவுள்? சோதிக்கமாட்டார்' என்று மாறி மாறி மனசில் தோன்றிப் பயத்தையும் தெம்பையும் ஊட்டுகின்றது; அதே விசாடியில் மூழ்கிய சம்பவம் ஒன்று ஞாபகம் வருகிறது. அவ்வளவுதான்; மனிதன் தெளிவாகச் சிந்தனை செய்யும் சக்தியை இழந்து விடுகிறோம்.

நான் நினைத்தேன்: வெங்கிட்டு சாப்பிட்டு விட்டு, அண்ணுவுக்கு ஆறுதல் அளிக்கக் கூடிய வார்த்தை ஒன்றுகூடச் சொல்லாமல் டாக்டருடைய நர்ஸிங் ஹோமுக்குக் கிளம்பி விடுவான். சுவாமிநாதனும் அவனுடன் போய்க் குழந்தையைப் பார்த்துவிட்டு வந்தாலும் வருவார்; ஆனால் இரவு வீடு திரும்பி விடுவார். டாக்டர் போ என்று வற்புறுத்துவார். தவிரவும் வீட்டில் அவர் மனைவிக்கு யாரும் துணை இல்லை. திரும்பி வந்து படுக்கையை விரிப்பார், படுப்பார். படுக்கை கொள்ளாது; தூக்கம் வராது; எழுந்து கைகளைப் பின் கட்டாகக் கட்டிக்கொண்டு முன் கூடத்தில் உலாத்துவார். ஈஸி சேரில் சிறிது நேரம் சாய்வார். படிக்கலாமா என்றும் தோன்றும். விளக்கைப் போட்டு ஒரு புஸ்தகத்தை எடுத்துப் பிரிப்பார்; ஆனால் படிப்பு ஓடாது. இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் தூங்கிக்கொண்டிருக்கும் மனைவி விழித்துக்கொண்டு, "என்ன படிப்பு, அர்த்த ராத்திரிக்கு? விளக்கு கண்ணைக் குத்தறது! படுத்துக்கோங்கன்னா!" என்பாள். 'எனக்கு மட்டும் தூக்கம் வரவில்லையே! குழந்தையின் தாயாகிய அவளுக்கு மட்டும் எப்படித் தூக்கம் வருகிறது?' என்று ஆச்சரியத்துடன் சிந்தித்தபடியே விளக்கை அணைத்துவிட்டு, சுவாமிநாதன் மீண்டும் ஈஸிசேரில் அமர்வார். மீண்டும் மீண்டும் முதல் குழந்

தையையும் இந்தக் குழந்தையையும் பற்றிச் சிந்திக்கிறாள், உருத் தெரியாத சிந்தனைகள் பல எழுந்து அவர் உள்ளத்தில் குமுறும். முதல் நாள் தாம் அதை ஹோட்டலுக்கு அழைத்துப்போய் வடை வாங்கிக் கொடுத்தது தவறு என்று எண்ணுவார். ஆனால் அடுத்த விநாடியே கடவுள் சித்தம் அதுவானால் தாம் வேறு என்னதான் செய்திருக்க முடியும் என்றும் எண்ணுவார். கோழி கூவும். கிழக்கு வெளுத்துவிடும்!

குழந்தையின் தாய் எப்படியோ நிம்மதியாகத் தூங்கிவிடுகிறாள். இந்த விஷயத்தில் பெண்களே அறிவாளிகள் என்றுதான் சொல்லவேண்டும். அவர்களுக்குக் கற்பனை குறைவு; நம்பிக்கை அதிகம். எந்தக் கஷ்டமும் வருவதற்கு முன் அவர்கள் மனசை அவ்வளவாகப் பாதிப்பதில்லை.

இப்படி எல்லாம் என்ன என்னவோ சிந்தித்துக்கொண்டே நான் பத்தரை மணிக்கெல்லாம் தூங்கிவிட்டேன்.

காலையில் எழுந்திருக்கும்போது மணி எட்டு. அவசர அவசரமாக முகத்தைக் கழுவிக்கொண்டு காபி சாப்பிட்டுவிட்டு, சுவாமிநாதனின் வீட்டை நோக்கிக் கிளம்பினேன்.

சுவாமிநாதன் முன் கூடத்தில் கைகளைப் பின் கட்டாகக் கட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டிருந்தார்.

"ராத்திரி பூரா நீங்க தூங்கவே இல்லை போலிருக்கே!" என்று கேட்டுக்கொண்டே நான் அவர் எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்தேன்.

"ஆமாம் ஸார், மனசை எவ்வளவோ திடப்படுத்திப் பார்த்துக்கொண்டும் தூக்கம் வர மறுத்துவிட்டது. படுக்கிறதும், ஈஸிசேரில் சாயறதும், பித்துப் பிடித்தவன் மாதிரி உலாத்துவதுமாக இப்படியே இரவைக் கழித்துவிட்டேன். ஆச்சு, எட்டரை ஆகிறதே! வெங்கிட்டு வந்துவிடுவான்" என்றார் சுவாமிநாதன்.

"நீங்க இருந்தாலும் இப்படிக் கோழை மனசாக இருக்கக்கூடாது, ஸார்! ஆச்சு! இதோ வெங்கிட்டு வந்துவிடுவான், குழந்தையையும் எடுத்துண்டு" என்றேன்.

சுவாமிநாதன் பதில் சொல்லவில்லை.

நான் மேலும் சொன்னேன்: "போனிலே வேணுமானால் கூப்பிட்டுக் கேட்கலாமே! உடம்பு சரியாகப் போயிருக்கும்! ஆனால் உங்க கவலையால் உங்களுக்குத்தான் உடம்புக்கு வந்துவிடும் போலிருக்கு!"

"போன்லே கேட்க வேண்டாம்னு பார்த்தேன். அவனுகச் சொல்லப்படாதோ? போன்லே சொல்லாதவன், கவலைப்படுவானேன்னு மணி ஒன்பதரைச்சே, வரக்கூடாதோ? என்ன தம்பி ஸார்!" என்று சுவாமிநாதன் சொல்லிக்கொண்டிருக்கும்போது தெருத் திருப்பம் திரும்பி வெங்கிட்டு வந்துகொண்டிருப்பது தெரிந்தது. அவன் மட்டுந்தான் வந்துகொண்டிருந்தான். அவன் கையில் குழந்தையைக் காணோம் என்று கவனித்த நான் திடுக்கிட்டேன். சுவாமிநாதன் என்ன எண்ணினாரோ என்று அறியவேண்டி நான் திரும்பிப் பார்த்தேன்.

அவர் ஒரே பாய்ச்சலில் பாய்ந்து தெருவில் ஓடித் தம் தம்பியை விசாரிக்கப் போவார் என்று எதிர்பார்த்த நான் ஏமாந்து போனேன். மூலையில் கிடந்த ஈஸிசேரை இழுத்து என் எதிரில் கொண்டு வந்து போட்டுக்கொண்டு அதில் சாய்ந்து கொண்டார் சுவாமிநாதன்.

இதற்குள் தெருவோடு போய்க்கொண்டிருந்த யாருடனோ வம்பளப்பதற்குத் தாமதித்துவிட்டான் வெங்கிட்டு. சுவாமிநாதன் தம் தம்பியை மனசுக்குள் திட்டினாரோ என்னவோ? ஆனால் அவர் வாய்விட்டு ஒன்றும் சொல்லவில்லை. எது வந்தாலும் வரட்டும், அநுபவிக்கத் தயார் என்று சொல்பவர் போல ஓர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார், கண்களை மூடிக்கொண்டார்.

அரைப் பர்லாங்குக்கு அப்பால் தெருவில் யாருடனோ நின்று உத்சாகமாகப் பேசிக் கொண்டிருந்த வெங்கிட்டுவையும், ஈஸிசேரில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டிருந்த சுவாமிநாதனையும் நான் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தேன். என்ன சொல்வது, என்ன செய்வது என்று எனக்கு ஒன்றுமே தெரியவில்லை.

திடீரென்று சுவாமிநாதனின் தலை ஒரு புறமாகச் சாய்ந்தது. அடுத்த விநாடி அவர் குறட்டை விடும் சப்தம் கேட்டது.

வெங்கிட்டு தடதடவென்று மாடிப் படியில் ஏறி வந்துகொண்டிருந்தான். சுவாமிநாதனின் மனைவி மாடிப்படியண்டை போய், "சப்தம் செய்யாமல் வாயேண்டா! தூங்கிண்டிருக்கிறார் அவர்" என்று குசுகுசுவென்று வெங்கிட்டுவை எச்சரித்தாள்.

குழந்தையைப் பற்றி அவள் ஒன்றும் விசாரிக்கவில்லை. ஆனால் அவள் விசாரிக்கு முன் வெங்கிட்டு, "மணி டாக்டர் ஆத்துக் குழந்தைகளோடே விளையாடிக்கொண்டிருக்கிறான். உடம்பெல்லாம் சரியாப் போச்சு. டாக்டர் தம் காரில் மத்தியானம் அழைத்துக் கொண்டுவந்து விடுவதாகச் சொன்னார்" என்று மெதுவாகச் சொன்னது என் காதிலும் விழுந்தது.

விடுகதைகளுக்கு விடை: 29. யானை, 30. தேங்காய், 31. கட்டில், 32. வயிறு, 33. நாய், 34. வாழைப்பூ, 35. பொரி, 36. விளக்கு, 37. எலிகள், 38. சவுக்கு மரம், 39. உளுந்து, 40. வானம், 41. பரிசல், 42. இமை, 43. மூக்கு, 44. வறட்டி, 45. மிளகாய், 46. மழை, 47. புளி, 48. ஆமணக்குச் செடி.

ஆசிரியர் குறிப்பு

ஒரு காரியத்தை மனிதன் செய்யத் தொடங்குகிறான். அந்தக் காரியத்தை ஏழு பேர் பாராட்டினால் அவனுக்கு அதிக உத்ஸாகம் உண்டாவது இயற்கைதானே? கலைமகளில் புதிய புதிய அம்சங்களை அவ்வப்போது சேர்த்து வருகிறோம். சில சமயங்களில் "இந்தப் பகுதி வாசகர்களுடைய உள்ளத்திற்கு உவப்பாக இருக்குமோ, இராதோ" என்று எண்ணித் தயங்கும்போது அன்பர்கள் "சபாஷ்!" போட்டு எங்கள் முயற்சியை ஆதரிக்க முன்வருகிறீர்கள்.

ஒருவருடைய குற்றத்தை எடுத்துக்காட்டுவது குற்றமுடையவருக்கும் சரி, அதைச் சொல்பவனுக்கும் சரி ஹிதமானதென்று சொல்ல முடியாது. இந்தக் காலத்தில் பள்ளிக்கூட மாணக்கர்கள் முதல் எழுத்தாளர்கள் வரையில் எழுதும் தமிழில் எத்தனையோ பிழைகள் மலிந்திருக்கின்றன. அச்சிட்ட புஸ்தகங்களில் அச்சுப்பிழைகளும் சொற்பிழைகளும் இருக்கின்றன. 'தூரைத்தனத்தீருடைய அங்கீகாரம்' பெற்ற பாட புஸ்தகங்களில் கூட இத்தகைய பிழைகள் காணப்படுகின்றன. ஆங்கிலத்தில் இந்தப் பிழைகள் வராதபடி எழுத்தாளர்கள் மிக்க கவனத்தைச் செலுத்துகின்றனர். சாமானிய விளம்பரமானாலும் அது திருத்தமாக இருக்கிறது. தமிழிலோ, சேர்விசோதம். தமிழ் விளம்பரங்கள் வியாபாரப் பண்டத்தை விளம்பரப்படுத்துவதைவிடத் தமிழனின் அறியாமையை விளம்பரப்படுத்துகின்றன. "வெண்ணை காய்ஜின நெய்", "அசுத்தம் செய்கிறவர்களைத் தண்டிக்கப்படும்", "பிரமணுள் காபி கிளப்" - முதலிய விளம்பரங்கள் தமிழ்மொழியைக் கேலி செய்யவில்லையா?

பிழை இல்லாமல் எழுதப் பழகுவதற்குமுன் பிழையைப் பிழை என்று உணரவேண்டும். அதனால் நம்மில் பலர் எழுதும்போது செய்யும் பிழைகளையும் அவற்றின் சரியான உருவத்தையும் புலப்படுத்தும் சிறு சிறு குறிப்புக்களைச் சில மாதங்களாகக் கலைமகளில் வெளியிட்டுவருகிறோம். அவற்றைக் கண்டு பலர் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் எங்கள் நன்றி. வார்த்தை சொல்லும் கதைகளையும், வார்த்தைகளின் விசித்திரங்களையும், சரியான உருவங்களையும் தொடர்ந்து வெளியிட்டுக்கொண்டுவருவோம்.

புதுதாரகத் தொடங்கிய "புதுமைப் பெண்" இரண்டாவது கட்டுரை இதில் வந்திருக்கிறது. அடுத்த அறிவிலும் தொண்டிலும் சிறந்த பெண்மணிகள் பலர் எழுதுவார்கள்.

கு.ப.ரா. நிதி: கு.ப.ரா. நம்மைப் பிரிந்து ஒரு வருஷம் ஆகப்போகிறது. ஏப்ரல் மாதம் அவருடைய ஆப்திக தினம் வருகிறது. அதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பே நிதியை ஒரு வாறு பூர்த்தி செய்தால் நலமாக இருக்கும். எனவே இதற்கு உதவ விரும்பும் நண்பர்கள் உடனே தங்கள் பங்கை அனுப்பவேண்டுகிறோம்.

வரவு விவரம்:	ரூ.	அ.
ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள்	50	0
ஸ்ரீ எம். மாணிக்கம், கொழும்பு	10	0
ரூ. 10-க்குக் குறைவான தொகைகள்	13	4
	73	4
முன் அறிவித்தபடி	4101	2
ஆக மொத்தம்	4174	6

கவிஞர் ராமலிங்கம் பிள்ளைக்கு உதவிநிதி: 'கத்தி யின்றி ரத்த மின்றி'ப் போர் செய்யும் வீர ராகிய காந்தியடிகளின் தத்துவத்தை நன்கு விளக்கும் பாடல்களையும், தேசத் தொண்டு புரியும் இளைஞர்களுக்கு ஆவேசம் உண்டாக்கும் கீதங்களையும் இசைத்துப் புகழ்பெற்ற கவிஞர் ஸ்ரீ ரமக்கல் ராமலிங்கம் பிள்ளையவர்களுக்கு ஒரு பண முடிப்பு உதவ வேண்டியும் அவரியத்தை வற்புறுத்தி ராஜாஜி முதலிய பெரியோர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். கவிஞர்களைப் பல வகையிலும் போற்றிப் பாராட்டுவது மனித சமுதாயத்தின் கடமை. தமிழர்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் தங்கள் நன்றியறிவைப் புலப்படுத்த முன் வரவேண்டும். பண முடிப்புக்கு உதவி புரிய விரும்புவோர், "திரு. வை. கோவிந்தன், சக்தி காரியாலயம், ராயப்பேட்டை" என்ற விலாசத்திற்குத் தொகைகளை அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

ஆசிரியர்

புன்னகைப் பூ

புத்தனேரி ரா. சுப்பிரமணியன்

மலைச் சாரலிலே - புள்ளி
மானினம் வாழ்கின்ற
மாமரச் சோலையிலே - மந்த
மாருதம் வீசுதம்மா !

சோலையி னூடாகச் - சுழி
சுற்றிடுங் கால்வாயில்
நீலக் கருமுகில்போல் - நீர்
நிரம்பிச் செல்லுதம்மா !

வெள்ளிபோல் மீனினங்கள் - நீரில்
வேடிக்கை செய்வதுபோல்
துள்ளியே ஆடுமம்மா - அலைகள்
தோன்றி அழியுமம்மா !

நீரில் விளையாடிக் - கையால்
நீந்தி அலைதள்ளிச்
சிரிய பண்பினிலே - முருகன்
சிந்தை குளிர்ந்தனனே.

கண்படு தூரத்திலே - எழிற்
கட்டழகு ஒருத்தி,
தண்புனல் நீராடக் - குடம்
தாங்கி வருவதைப்பார் !

இடது கையதனல் - குடம்
இடுப்பினி லேஇடுக்கி
நடைபயில் வாள்போலக் - கைவீசி
நங்கை நடந்தனளே !



கன்னியைத் தூரத்திலே - முருகன்
கண்டு களிகொண்டான் ;
மின்னல் கொடிவள்ளி - அழகு
மேனிக் குகந்தவளே !

வள்ளியைக் கண்டவுடன் - நீரில்
மறைந்து மூழ்கினனே :
கள்ளத் தனமுடையான் - முருகன்
காட்சிக் கெழில்மாரன்.

தண்ணீர்க் கரையோரம் - அணுகித்
தாழ்ந்து குடமிறக்கிக்
கண்ணழகி நீரில் - முளரிக்
கால்களை வைத்தவுடன் ;

"ஐயோ! எனதுகாலை - அரவம்
தீண்டிய " தென்றரற்றிக்
கையை உதறினளாய்க் - குனிந்து
காலைப் பிடிக்கையிலே ;

கட்டழ கன்முகத்தே - கை
பட்டதைத் தானுணர்ந்தாள் !
சட்டென் றவள்கையை - முருகன்
தாங்கிப் பிடித்தனனே !

மேனியில் வள்ளியின்கை - அணைத்து
மெள்ள வெளிவந்தான்
கானக் குறமகளின் - அழகுக்
கண்ணெடு பேசினன்ரூன்.

வள்ளி கலங்கினளே - முருகன்
மங்கையின் தோள்பிடித்தான் ;
உள்ளத் துணர்ச்சியினல் - அவர்கள்
உவகை கொண்டனரே.

"பாம்பென எண்ணினையோ ! - வள்ளி! நீ
பதறித் துள்ளினையோ ?
பாம்பல்ல ! நானேதான் - அதைப்போல்
பாவனை செய்தேனடி !"

புன்னகைப் பூவிரண்டு - அங்கே
பூப்பன கண்டேனம்மா !
என்ன மகிழ்ச்சியம்மா ! - அவர்கள்
சின்ன விளையாட்டில் !

நாமகரணம்

'கிண்டல்'

அந்தத் தோட்டத்தில் தனியாகக் காய்கறி களையும் பயிரிட்டிருந்தார்கள். எஜமானர் உருளைக்கிழங்குப் பிரியர். ஆகவே அந்தச் சாக்கும் அந்தத் தோட்டத்தில் விளைந்தது என்று சொல்லவேண்டுமா என்ன?

அந்த அழகான நிலப்பரப்பில் பூமி தேவியின் மடிக்குள் ஆழ்ந்து புதைந்துவந்த உருளைக் கிழங்கு ஒன்றுக்குத் திடீரென்று கற்பனைத் திறமை பீரிட்டெழுந்தது. தன்னுடன் அந்தப் பிருதிவி மஞ்சத்தில் படுத்து வளரும் மற்ற உருளைக்கிழங்குகளின் மேல் ஒரு முறை தன் திருஷ்டியை வீசியது. அதற்கு அருவருப்பும் சிரிப்பும் அடக்க முடியாமல் வந்தன. "சே! என்ன விகாரமான ரூபங்கள்! ஒன்றுவது அழகாக இருக்கவேண்டாமோ!" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டது. "இந்த மூண்டங்களில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே அதன் ஸ்வரூபலக்ஷணத்துக்கு ஏற்றபடி பெயர் வைத்து அழைத்தால் - பொருத்தமான பெயர்களைத் தேர்ந்தெடுத்து அளித்தால் - வேடிக்கையாக இருக்குமே!" என்ற அபூர்வமான யோசனை அதன் மூளையில் உதித்தது. "யார் பெயர் வைப்பது? நாமேதான் அந்தக் கைங்காரியத்தை ஏற்றுக்கொள்வோமே" என்று தீர்மானம் செய்ததோ இல்லையோ அதன் மனோதர்மம் வேலை செய்ய ஆரம்பித்தது. ஒன்றன்பின் ஒன்றாக எவ்வளவு பெருத்தமான பெயர்கள் அதற்குத் தோன்றின. தெரியுமா? "அதோ அதைக் கூழாங்கல்லன் என்று கூப்பிடலாம். இதை இரட்டை மண்டை என்று சொல்லலாம். இதற்குக் கழக்கோடி என்று நாமகரணம் செய்யலாம்" என்ற நாம ஆராய்ச்சியில் ஈடுபட்டுவிட்டது. குண்டுமணி, மிளகு, கடுகு, முழுமுண்டம், அம்மை வடு - என்று இப்படி அது தன் சகோதரர்களுக்கு இடும் நாமகரணம் அடுக்கிக்கொண்டே போயிற்று. பிறகு அந்தப் பெயர்களை வரிசைச் சொல்லி அந்தக் கிழங்குகளை அழைத்தது. அப் பொழுதெல்லாம் அதற்கு உண்டான உத்ஸாகத்தையும் சிரிப்பையும் பார்க்கவேண்டுமே! பாவம்! அந்தக் கிழங்குகள் மௌனமாக இருந்தன. அவைகளுக்குப் பேச முடியுமோ இல்லையோ, பெயர் வைத்த கிழங்கிற்கே தெரியாது.

அடுத்தபடி அதன் மூளையில் மற்றொரு விஷயம் உதயமாயிற்று. "மற்றச் சகோதரர்களுக்கெல்லாம் அவர்கள் லக்ஷணத்துக்கு ஏற்ற பொருத்தமான பெயரைவைத்து அழைக்கிறோமே! நமக்கு ஏற்ற பெயர் ஒன்றும் தோன்றமாட்டேன் என்கிறதே. கேட்டாலே காதில் ஜில்லென்று விழும்படியாகவும் சுலபமாகவும் ஒரு பெயர் நமக்கு இருக்க வேண்டும்" - இந்தச் சிந்தனையில் ஆழ்ந்து அது யோசித்து யோசித்துப் பார்த்தது. அநேகமாகச் சமாதி நிலையிலே ஆழ்ந்திருந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

'சதக்!' என்ற சத்தம் கேட்டதும் அது விழித்துக்கொண்டது; மண் வெட்டியினால் மண்ணை வெட்டும் சத்தம். அதன் கற்பனை விரிந்தது. "அலங்கார மாளிகையில் நம்மை எதிர்பார்த்து எவ்வளவு பேர் காத்திருப்பார்கள். நம்மை எடுத்துப் பேரம் வெந்நீரில் நீந்தச் செய்து நம்முடைய விகாரமான தோலை நீக்கிவிட்டு அற்புதமான மசால் வகைகளைச் சேர்த்துப் பொடிமாஸ் செய்து....." - விட்டகுறை தொட்டகுறையோ என்னவோ, அதற்கு இந்தக் காட்சி அகக்கண்ணின் முன்னே விரிந்தது.

பூமியிலிருந்து தோண்டி எடுத்து மற்றச் சகோதரர்களுடன் அதையும் கொண்டுபோய் தன்முகத் தண்ணீரில் அலசிச் சமையலறைக்கு எடுத்துச் சென்றார்கள். பரிசாரகன் எல்லாவற்றையும் கொதிக்கும் தண்ணீரில் வேகவைத்து எடுத்தான். ஒவ்வொன்றாக எடுத்துக் கத்தியால் சுரண்டிவிட்டுத் தோலை உரித்தான். கடைசியில் கற்பனைக் களஞ்சியமான கிழங்கை எடுத்தான். எடுக்கும் போதே விரல் அமுந்தியது; கொளக்கென்று இருந்தது. மோந்து பார்த்தான். "ஹே, அவிசல்!" என்று சொல்லி ஜன்னல் வழியாகத் தூர எறிந்தான்.

"என்னடா கேலிக்கூத்து! எனக்குத் தக்க பெயரை மண்டையைக் குடைந்து கொண்டு யோசித்து யோசித்துப் பார்த்தேன். தெரியவில்லை. இந்த மடையன் முதல் முதலாக - அதுவே முடிவாகவும் - இந்தப் பழிப் பெயரை வைத்தானே! பாவி" என்று புழுங்கி ஜலமாக வடித்து மண்ணோடு மண்ணாக மடிந்தது.

சிறைமாற்ற நாடகம்

டாக்டர் தி. சே. சௌ. ராஜன்

ஜீவராசிகளைச் சிறைப்படுத்துவது இயற்கைக்கு விரோதம். அவை அவைகளுடைய சிருஷ்டி தர்மத்திற்கு ஏற்றவாறு உயிர் வாழ்ந்து, சந்ததிகளை வளர்த்துக் கடமையைச் செலுத்தி, துக்கத்தைக் குறைத்து, மகிழ்ச்சியைப் பெருக்கிக் காலம் கடத்துவது முறை. இதுதான் சுதந்தரம். சுதந்தரத்தில் பிறந்து வளரவேண்டிய மனிதனைக் குற்றத்திற்காகச் சிறைப்படுத்தித் தண்டனை என்று கூறுவது இயற்கைக்கு விரோதம். இதனால் குற்றம் குறையவில்லை. கொலை களவு குறையவில்லை. தீமை ஒடுங்கவில்லை. பயத்தினாலும் கொடுமையாலும் நற்குணங்கள் வளரமாட்டா. தீமைக்கு மாற்றுத் தீமை அல்ல; நன்மையே தீமையைக் குறைக்கும். கொடுமையால் நன்மை உண்டாகாது. சிறை என்பது, நாகரிக உலகத்தில் மக்களுக்கு வழங்கப்படும் ஒரு பெரும் கொடுமை. இதை நாள்தோறும் நமது சமூகவாழ்வில் நன்றாகக் காணலாம். பல தடவை சிறைப்பட்டதன் பயனாக இந்த உண்மையை நான் நன்கு அறிந்துகொண்டேன்.

மக்களைக் கள் குடிக்கக்கூடாதென்று சொல்லியது என் குற்றமென ஒரு வருஷத்திற்கு நன்னடக்கை ஜாமீன் கேட்டார்கள் அதிகாரிகள். நான் அதற்கு உடன்படாத தனால் ஒரு வருஷம் சிறையில் அடைக்கப்பட்டேன்.

சிறை உலகத்தின் போக்கும் வாழ்வும் விநோதமானவை. திருடியவனைத் தண்டித்துப் பிறகு திருடாமல் இருப்பதற்காகச் சிறையில் அடைக்கிறார்கள். ஆனால் சிறையில் திருடத் தெரியாதவன்கூடத் திருடக் கற்றுக்கொண்டுவிடுகிறான். சோம்பேறித்தனத்திற்கு உறைவிடம் சிறைச்சாலைகள். மனிதனை யந்திரம்போல நடத்த மட்டிலும் முறை வகுக்கப்பட்டிருக்கிறது. குறித்த நேரத்தில் உணவு, உறக்கம், வேலை உண்டு. ஆனால் மனிதனது வாழ்வு இவைகளோடு முடிந்து விடுகிறதில்லை. தனி மனிதனின் துர்நடத்தைகளுக்கும் கொடுஞ் செயல்களுக்கும் அவன் மட்டிலும் குற்றவாளி என நினைப்பது தவறு. சமூகமும் அரசாங்கமும் ஒருவாறு குற்றவாளிகள். ஆனால் சட்டம் தனிக் குற்றவாளிகளைத் தண்டித்துப் பெரும் சமூகக் குற்றவாளிகளை விலக்கி விடுகிறது. ஆகையால் குற்றம் குறைவதில்லை. பலவிதமாகக் காலத்திற்கு ஏற்றபடி மாறி மாறிப் பல ரூபங்களில் குற்றம் தலையெடுத்தாடுகிறது. இதற்கு மக்களைக் காட்டிலும் ஆட்சி முறை முக்கிய காரணம்.

நான் எனது முதல் சிறைவாசத்தில்பெற்ற அநுபவங்கள் இதற்குச் சான்று. கைதிகளில் உயர்வு தாழ்வு இல்லை. அந்தக் காலத்தில் ஏ வகுப்பு, பி வகுப்பு, சி வகுப்பு இல்லை. குற்றம் இன்னதென்று தெரியாமலே விசாரணை, கோர்ட்டு, வக்கீல்கள் என்னும் தொல்லைகள் இல்லாமலே சிறையிடப்பட்டவர்களும் இல்லை. "என்ன கேசுலே வந்திருக்கிறாய்?" என்றுதான் பழங் கைதிகள் முதல் முதலில் சிறையில் குசலப்பிரச்னம் செய்வார்கள். "என்ன அடிதடியா? கொலைக் கேசா? அல்லது பொம்பளை சங்கதியா?" என்றுதான் கேட்பார்கள். "கள்ளுக் குடிக்காதே என்று சொன்னால் கூடவா தண்டனை? சும்மா பொய் சொல்லாதே" என்று கண்ணைச் சிமிட்டிக்கொண்டு நகையாடுவான் அக்காலத்துக் கைதி. சிறைக்கூடச் சட்டங்களின் படி நாங்களும் அவர்களும் ஒரே கைதிதான்.

'கமான்' என்ற ஒரு பதம் சிறையுலகத்தில் வழங்குகிறது. நான் புரட்டிய அகராதிகளில் இந்தப் பதம் காணப்படவில்லை. கைதிகளில் ஒருவரையோ அல்லது பலரையோ ஒரு சிறையினின்று மற்றொரு சிறைக்கு மாற்றினால் அதைக் 'கமான்' என்று சொல்லுகிறார்கள். 'கமான்' போகிறது, 'கமான்' வருகிறது என்றால் ஜெயில் உலகத்தில் சில கைதிகள் மாற்றப்படுகிறார்கள் என்பது பொருள். எப்பொழுது மாற்றுகிறார்கள்; ஏன் மாற்றுகிறார்கள், எதற்காக மாற்றுகிறார்கள்?-இந்த விஷயங்களெல்லாம் கைதிக்குத் தெரியாதவை. திருச்சி சிறையில் மூன்று வாரம் கழிந்த பிறகு ஒரு நாள் இரவு பத்து மணிக்கு நான் உறங்கிக்கொண்டிருக்கும்பொழுது என் அறைக் கதவைத் திறந்து என்னை எழுப்பி, "உன் சாமான்களை எடுத்துக்கொள். உன்னை வேறு சிறைக்கு அனுப்ப உத்தரவு வந்திருக்கிறது" என்றார்கள். "எந்த ஊர்ச்சிறைக்கு?" என்று நான் கேட்டதற்கு அது தங்களுக்குத் தெரியாதென்று சொல்லி, ஐந்து நிமிஷத்திற்குள் தயாராகவேண்டும் என்னவே, நான் புறப்பட்டேன். சிறைக்கோட்டை வாயிலில் இரண்டு மோட்டார் லாரிகள் நின்றுகொண்டு இருந்தன. லாரி நிறைய ஆயுதம் தாங்கிய ரிசர்வ் போலீஸ் படையினர். அவர்களுக்கு மத்தி

யில் எனக்கு ஒரு சிறிய இடம் தரப்பட்டது. என் புத்தகங்கள், படுக்கை முதலியவை மற்றொரு லாரியில் ஏற்றப்பட்டன.

திருச்சி ஜங்ஷன் ஸ்டேஷனுக்குக் கொண்டு வரப்பட்டேன். எனக்கு முன்பு மூன்று ஜோடி ஆயுதம் தரித்த போலீஸ்காரர்கள் நடந்து சென்றார்கள். நடுவில் நானும் ஓர் ஆங்கிலப் போலீஸ் இன்ஸ்பெக்டரும் சென்றோம். எங்களுக்குப் பின்பு மூன்று ஜோடிப் போலீஸ்காரர்களும் தொடர்ந்துவர, பிளாட்பாரத்திற்குச் சென்றோம். எனக்குச் சிரிப்பு ஒரு புறம், வெறுப்பு மற்றொரு புறம். போலீஸ் தடபுடல்களால் ரெயில் ஏறக் காத்திருக்கும் ஜனங்கள் எங்களை வேடிக்கை பார்ப்பதற்காகச் சுற்றிக்கொண்டார்கள். அவர்களைத் துரத்திக் கொண்டிருக்க இன்னும் சில ரெயில்வே போலீஸ்காரர்கள் கூடினார்கள்.

ஐம்பத்து நான்கு பெயர்கள் உட்கார வேண்டிய ஒரு மூன்றாம் வகுப்பு வண்டி காலி செய்யப்பட்டது. அதில் ஏறியிருந்த பிரயாணிகளை வேறு வண்டிகளில் துரத்தி அடைத்தார்கள். கைதிகளாகிய நாங்கள் இருவரும் போலீஸ் படையினர் பன்னிருவரும் இதில் ஏறினோம். காலி செய்யப்பட்ட இரு பலகைகளில் நானும் டாக்டர் சாஸ்திரியாரும் உட்கார்ந்தோம். ஒடும் ரெயிலில் நாங்கள் தாவிக் குதித்துத் தப்பி ஓடிவிடாமல் பார்த்துக்கொள்ளவும், பிளாட்பாரத்தில் இருப்பவர்கள் எங்களைக் கண்டு பேசாமலிருப்பதற்காகவும் இரண்டு போலீஸ்காரர்கள் கதவுகளுக்குப் பக்கத்திலுள்ள ஜன்னல்களின் ஓரமாக ஆயுதத்தோடு உட்கார்ந்துகொண்டார்கள். பாக்கி இருக்கும் பத்துப் பேர் வழிகளும் ஐரோப்பிய ஸார்ஜெண்டும் சாவகாசமாய்த் தங்களுடைய ஜேணங்களைக் களைந்து, சுமையை நீக்கிவிட்டு, துப்பாக்கிக் கட்டைகளை வெகு ஜாக்கிரதையாகப் பல கைகளில் உறங்கவிட்டுக் கொட்டாவி விட்டுக்கொண்டிருந்தார்கள். இந்த ஆர்ப் பாட்டத்தைப் பார்க்க ரெயில் புறப்படும் வரையில் ஜனங்கள் எங்கள் வண்டியைச் சுற்றிலும் துரத்தப்பட்டபோதிலும், ஓடுவதும் திரும்புவதுமாகவே இருந்தார்கள்.

எங்களைக் கோயம்புத்தூர்ச் சிறைக்குக் கொண்டு போகிறார்கள் என்று திருச்சி ஸ்டேஷனில் தெரிந்துகொண்டோம். இந்த மாற்று தலால் சர்க்காருக்கு எவ்வளவு செலவு என்பதைக் கணக்குப் பார்த்தால் அரசாங்க முறையின் மதியீனம் ஒருவாறு புலப்படும். ஐம்பத்து நான்கு பேர்கள் பிரயாணம் செய்யும் ஒரு வண்டிக்குக் கோயம்புத்தூர் போகும் வரையில் வாடகை கணக்குப் பார்த்தால் சுமார் இருநூற்றெழுபது ரூபாய் ஆகிறது. பதின்மூன்று பெயர்கள் திரும்பிவரும் செலவு வேறு இருக்கிறது. அவர்களில் ஒருவரான ஸார்ஜெண்ட் இரண்டாம் வகுப்பில்தான் பிரயாணம் செய்வார். பிறகு எல்லோருக்கும் இரண்டு நாட்களுக்குப் படி தனியே உண்டு. இவற்றையெல்லாம் கணக்குப் பார்த்தால் சுமார் ஐந்நூறு ரூபாய்க்குக் குறைவு இருக்காது. எல்லாம், ஜாமீன் கொடுக்க மறுத்து, வேண்டுமென்று சிறைக்குச் சென்ற எங்கள் இருவரையும் திருச்சியிலிருந்து கோயம்புத்தூர் கடத்துவதற்காக ஏற்பட்ட செலவு! நாங்கள் தப்பி ஓடாமல் கோயம்புத்தூர்ச் சிறைக்குக் கொண்டுபோகப்பட்ட பெருமையும் பொறுப்பும் போலீசாரைச் சேர்ந்தன. இந்த முட்டாள் தனமான நாடகத்தைக் கண்டு நகைத்து ரஸிக்கும் உரிமை எங்களைச் சேர்ந்தது.

ஈரோட் ஸ்டேஷனில் ரெயில் மாறவேண்டும். அதற்கு இரண்டு வண்டிகள் உண்டு. முதலில் போகும் வண்டி நாங்கள் வந்து அரை மணி நேரத்திற்கெல்லாம் புறப்படுவது. மற்றொன்று அதற்கு இரண்டு மணி நேரம் கழிந்து புறப்படுவது. விடியற்கால நேர மாகையால், கைகால் கழுவிப் பல் துலக்கிக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு புறப்பட நினைத்தேன். ரெயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் ஓடும் வாய்க்காலுக்குச் சென்று அவற்றைத் தீர்த்துக் கொண்டேன். காபி பலகாரங்கள் சாப்பிட்டு இரண்டாம் ரெயிலில் போவதென்று முடிவு செய்தேன். அதற்கு ஸார்ஜெண்டும் உடன் பட்டார்.

நாங்கள் ஈரோட்டில் இறங்கியதும், போலீஸ் படையினரின் படாடோபங்களைக் கண்ட பிரயாணிகள் கோயம்புத்தூருக்கு முதல் ரெயிலில் போய்ச் சேர்ந்து, அங்கே நாங்கள் கைதிகளாகக் கொண்டு வரப்படும் செய்தியைப் பரப்பி விட்டார்கள். இரண்டாவது ரெயிலில் நாங்கள் போய் இறங்கினதும் கோயம்புத்தூர் ஸ்டேஷனில் பெருங் கூட்டம் சேர்ந்துவிட்டது. சிற்றுண்டிகளுடனும், மாலைகளுடனும் பத்திரிகை நிருபர்களும், அரசியல் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களும் குறைவில்லாமல் சேர்ந்து விட்டார்கள். போலீஸ்காரர்கள் பாடு கஷ்டமாகி விட்டது. போலீஸ் ஸார்ஜெண்டுக்கும் எங்களுக்கும், தடுத்தும் கேளாமல், வந்திருந்தவர்கள் மாலையைப் போட்டார்கள். மற்றப் போலீஸ்காரர்களுக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. நாங்கள் அவ்வூர்ப் பிரமுகர் ஒருவர் கொணர்ந்த இரண்டு மோட்டார் வண்டிகளில் ஏறிக்கொண்டு சிறைக்கூடம் போய்ச் சேர்ந்தோம். வழக்கம் போல் பரிசோதனைகள் நடந்தன. போலீஸாரிடமிருந்து சிறை அதிகாரிகள் வசம் கைதிகள் மாற்றம் முதலிய சடங்குகள் முறையே நடந்து நாங்களும் சிறை புகுந்தோம். போலீஸ் கூட்டமும் திருச்சி திரும்பியது.

இந்தப் பிரயாணத்தில் போலீஸாரின் கூட்டத்தைத் தவிர வேறு விநோதம் ஒன்றும் இல்லை. ஆனால் கோயம்புத்தூர் பிளாட்பாரத்தில் இருந்த பத்திரிகை நிருபர் நாங்கள் அழைத்து வரப்பட்ட வைபவத்தையும், வரவேற்கப்பட்டதையும், பூமாலைகள் வழங்கியதையும், சிற்றுண்டி கொடுக்கப்பட்டதையும் பற்றிச் சென்னைப் பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்ப அவை விரிவாகப் பிரசுரமாயின. இந்த விவரம் பத்திரிகைகளில் வெளியானதும், சென்னை அரசாங்கத்திற்குப் பேரதிர்ச்சி உண்டாயிற்று. தங்களுடைய சிறை ஆட்சி நிலைகுலைந்துவிட்டதாகவே அவர்கள் கருதினர்கள். கேவலம் கைதிகளாகிய எங்கள் பேரில் சீற்றம் கொள்ள இடம் இல்லை. 'நம்முடைய கைதியைப் பொது மக்கள் வரவேற்றுக் கொண்டாடுவதா? இதற்கு ஆட்சி முறை இடம் கொடுப்பதா? மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மதிப்பு இனி என்ன ஆகும்?' என்று நினைத்து, போலீஸ் அதிகாரியாக எங்களை நடத்திச் சென்ற ஆங்கிலோ ஸார்ஜெண்ட் பேரில் ஒழுங்கு முறை தவறிய குற்றத்திற்காக விசாரணை நடத்தினர்கள். கறுப்புச் சிங்கங்களாகிய நம் போலீஸ் படையினர் தங்களுக்கு இதன் பொறுப்பு ஒன்றும் கிடையாதெனவும், எல்லாம் ஸார்ஜெண்ட் துரையின் பொறுப்பில் நடந்தது எனவும் கூறிவிட்டார்கள். பாவம், ஸார்ஜெண்ட் அகப்பட்டுக்கொண்டார்! திருச்சியிலேயே வெகு நாட்களாக உத்தியோகம் செய்தவராகையால் அவர் எனக்கு நண்பர். பிள்ளை குட்டிக்காரர்; பெரிய சம்சாரி. அவருடைய மக்களுக்கு என்னுல் இயன்ற வைத்திய உதவி செய்திருந்ததை அவர் மறக்கவில்லை. எனினும் அவருடைய பிழைப்புக்கு ஆபத்து வந்துவிட்டது. விசாரணை முடிந்தது; அவர் வேலை போய்விடாமல் தப்பித்துக் கொண்டார். ஒருவேளை அவருடைய நிறம் அவரைக் காப்பாற்றியது போலும்!

எனது தண்டனைக் காலம் முடிந்து நான் திருச்சிக்குத் திரும்பியதும் அவர் என்னைக் கண்டு தாம்பட்ட கஷ்டத்தை மிகவும் உருக்கமாக என்னிடம் உரைத்தார். இந்தச் சிறிய முறைத் தவறுதலால் சென்னை அரசாங்கம் நிலைகுலைந்துவிடவில்லை. அவர்கள் ஏகாதிபத்தியம் அணுவளவேனும் குறைவில்லாமல், கள்ளுக் கடைகளும், குடிகாரர்களும் அமோகமாகச் செழிப்படைந்து விளங்கினர்கள். சென்னை மாகாணத்தில் அந்த வருஷம் சுமார் நானூறு பேர்களுக்கு மேலாக என்னைப்போலச் சிறை சென்று வதங்கி வாடினர்கள்.

கையாடுதல்

"நீங்கள் இப்போது எந்த நூலைக் கையாடிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார் வந்தவர்.

"அந்தக் காரியத்தை நான் செய்வதில்லையே!" என்று திடுக்கிட்ட பாவனையுடன் பதில் வந்தது.

வந்தவர் அந்தப் பதிலைப் புரிந்துகொள்ளவில்லை. "அப்படியானால், தாங்கள் இப்போது எந்த நூலையும் ஆராய்ச்சி செய்யவில்லையா?" என்று மீட்டும் கேட்டார்.

"ஆராய்ச்சி செய்கிறேன். பல நூல்களைப் பார்த்துவருகிறேன். நீங்கள் கையாடுவதுண்டா என்று கேட்டீர்கள். கையாடும் தொழில் என்னிடம் ஏது? கையாடுவதென்றால் திருடுவதென்றல்லவா பொருள்?" என்றார் பெரியவர்.

அப்பொழுதுதான் வந்தவருக்கு, கையாடுதல் என்ற சொல்லை, பழகுதல், பயன்படுத்தல் என்ற பொருளில் உபயோகிக்கக் கூடாதென்பது தெரியவந்தது. பெரியவர் வேறு யாரும் இல்லை; மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களே.

ஆங்கிலத்தில் வழங்கும் Handle என்னும் சொல்லின் நினைவிலே வந்தது கையாடுதல் என்னும் புதுப் பிரயோகம்.

'வெங்கட்ரமன்'

தமிழ் நாட்டில் சுப்பிரமணியன் என்ற பெயரும் வேங்கடராமன் என்ற பெயரும் அதிகமாக வழங்குகின்றன. சுப்பிரமணியன் என்ற நாமத்தை அதிகமாகச் சிதைப்பதில்லை. ஆனால் மற்றொன்றையோ எத்தனையோ வகையில் சிதைத்துக் கூலைத்து உருவமே தெரியாமல் ஆக்கிவிடுகிறார்கள். வெங்கடராமன், வெங்கிட்டராமன், வெங்கட்ரமன், வெங்கிரோமன் - இப்படி அந்தப் பெயர் அடைந்துள்ள கோணல் உருவங்கள் பல. திருவேங்கடம் என்னும் திருப்பதியில் எழுந்தருளியுள்ள பெருமாள் திருநாமம் அது. வேங்கடத்தில் கோயில் கொண்டுள்ள ராமன் என்பது அதன் பொருள். ஆகையால் 'வேங்கடராமன்' என்று வழங்குவதே முறை. வேங்கடம் என்பதுதான் மலையின் பெயர்; வெங்கடம் அல்ல. வேங்கடத்தின் தலையெழுத்தைக் குறுக்கி ராமனது தலையெழுத்தை வல்லினமாக்கி வேறு சிதைவையும் புகுத்தி 'வெங்கட்ரமன்' என்று எழுதுவதை இக்காலில் பார்க்கிறோம்.



மாகி கவி

கரிச்சான் குஞ்சு

மழைக் காலத்து மேகம் வெறும் பிரயாணம் செய்யாது. காளிதாஸன், தான் தூது அனுப்பிய மேகத்தை அங்காங்கே மழை பெய்து கொண்டுதான் போகச் சொல்கிறான். போஜ ராஜனிடமிருந்து மடிநிறைய வாங்கிக்கொண்டு செல்லும் கவிபத்தினியும் வழி நெடுக கொடுத்துக்கொண்டே வந்தாள். முடிவில் வெறும் மடியைத்தான் உதறும்படி நேரும் என்பதை அவள் நினைத்துப் பார்க்கவே இல்லை. பஞ்சகாலத்து வறுமை கூட்டம் கூட்டமாய்ப் பின்தொடர்ந்து வரும்போது, பொற்காசுகளை அப்படியே யாருக்கும் கொடுக்காமல் கொண்டுபோய்ச் சேர்க்க, மாககவியின் மனைவியாலா முடியும்?

அவர்கள் குடும்பத்தில் தானம் நடந்து வந்த விதமே அலாதி; அதிவிசித்திரமானது. வாங்கு கிறவர்கள் பிறர் என்ற நினைப்பே போய், பல வருஷங்கள் ஆகிவிட்டன. பங்காளிகள் போலத்தான் அநுபவித்துவந்தார்கள். இது மாககவியின் பிதா ஏற்படுத்தி வைத்த சம்பந்தம். அவர்களிடம் குபேரச் செல்வம் குவிந்திருந்ததோடு தெய்வ வரம் பெற்றவை போல அந்தக் குடும்பத்து நிலங்கள் எல்லாம் மற்ற நிலங்களை விட நான்கைந்து மடங்கு அதிகமாகவே விளைந்து வந்தன. தம் மகன் விஷயமாய்ச் சோதிடர்களை அவர் கலந்தாலும் கலந்தார்; நாட்டுக்கே பொது வாக்கியதுபோலச் செய்துவிட்டார் அவர் தம் செல்வத்தை.

"அந்தியகாலத்தில் உன் மகன் மிக்க வறுமையடைந்து, மஹாரோகம் ஒன்று வருத்த, அதனாலேயே இறப்பான்" என்றுரைத்தார் ஒரு சோதிடர். இவர் யுக்தியராய் யோசித்தார். பரிஹாரம் சொல்லும் பனையேடுகளைத் தருவித் தருவிப் பார்த்துக் கண்டுபிடித்தார் ஒரு பரிஹாரத்தை. 'நிரஹதோஷம்; தீர்த்துவிடுகிறேன் பார்' என்றார். வேதம் சொல்லுகின்ற மனிதப் பிராயம் நூறு; முப்பத்தாறுயிரம் நாட்கள்; இவ்வளவுதானே? அவ்வளவு பேர் பிராம்மணர்கள், அவ்வளவு கலசங்கள், பெரிய அளவில் தக்ஷிணைகள், ஹோமம், பூஜை என்ன என்னவோ அவ்வளவும் நடத்தித் திட்டம் போட்டார். நடத்தினார். 'இனி நம் புத்திரனுக்கு ஒரு பயமும் இல்லை' என்று நிம்மதியாய்த்தான் போய்ச் சேர்ந்தார் அவர். ஆனால் இங்கு, இந்த மஹாதானத்தால் சுவை கண்டவர்கள், இந்த ஊரையும் மறக்கவில்லை; இந்த வீட்டையும் சுற்றாமல் இல்லை.

மாக கவியின் கைக்கு அதிகாரம் வந்தது. எந்த விதத்திலும் தர்மம் குறையக்கூடாது என்றார். அதிகமாகவும் ஆயிற்று. ஆரம்பத்திலிருந்தே தம் வாழ்க்கையைத் தேவகந்தர்வ வாழ்க்கையாய்ச் செய்துகொண்டிருந்தவர் அவர். வெகு காலம் கடக்கவும் நடந்தது அது. பெரும் பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. கணவனும் மனைவியும் சேர்ந்து கொண்டு இரண்டு கையாலும் கொடுக்க ஆரம்பித்தார்கள்; அதன் விளைவுதான் இன்று..

அரசன்போல - அரசனுக்காவது சில சட்ட திட்டங்கள் இருக்கலாம் - அரசனைவிடச் சிறப்பாய் வாழ்ந்தவர் மாக கவி. அவர் தாராககத்தின் மதிற்புறத்தில் வந்து தங்கியிருந்துகொண்டு பத்தினியை அனுப்பினார்; "அக்ஷரலக்ஷம் கொடுக்கும் போஜனைக் கண்டு வா" என்று, காணிக்கையாக அனுப்பியிருந்தார் பெரிய காவியமொன்றை. 'சிசுபாலவதம்' என்ற அந்தக் காவியத்தை, அளவாலும், கவிதையாலும், உள்ளுறையாலும் எந்த விதத்திலும் பெரிய அந்த மஹாகாவியத்தை மூழுவதும் படிக்க நேரம் எது? எட்டை நடுவில் பிரித்துப் பார்த்தான்: சூரியோதய வர்ணனைக் கட்டம். கவியின் சுய சரித்திரம் சுருக்கி உரைக்கப்பட்டதுபோல இருந்தது ஒரு சுலோகம். "அல்லி குவிகிறது; கமலம் மலர்கிறது; பறவை ஒன்றுக்குப் பகல் வந்துவிட்டதே என்ற பயம்; மற்றொன்று 'ஆகா! பகல்! பகல்!' என்று கும்மாளம் போடுகிறது. காட்டை விட்டு ஓடும் எனன் போலப் போய் மறைந்துகொண்டிருக்கிறான் சந்திரன்; தோற்றத்திலேயே தன் மூழுப் பிரபாவத்தையும் காட்டி எழுகிறான் ரவி; அடேயப்பா! ஊழின் போக்கே மிகவும் விசித்திரம்!"

கவிதையை மற்றுமொரு முறை படித்து அதுபவிக்க முடியவில்லை அரசனுக்கு. சுபிக்ஷத்திற்கு எடுத்தக் காட்டாக இருந்த தாராககங்கூடப் பஞ்சத்தைக் கண்டதனுல் கலங்கியிருந்தான் அவன். "இதைக் கொண்டு செல்லுங்கள். இதோ வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே, கவிபத்தினியின் பிரித்த மடியில் கொட்டினான் ஒரு பெரும் தொகையை. யோசித்தான். இப்பொழுது என்ன செய்யவேண்டும் என்ற தீர்மானந்தான் போஜனுக்கு வேண்டியது; ஆனல் அவ்வளவு எளிதில் கிடைப்பதாயில்லை அது. படித்த கவிதையின் சில வார்த்தைகளை மூனகிற்ற வரப். இந்தக் காலத்திலும் அவனுடைய இருதயம் ரஸனையை விடவில்லை.

பக்கத்திலுள்ள புலவர்களுக்குப் பங்காளிக் காய்ச்சல் கண்டதோ என்னவோ, அரசனைத் தேற்றி முடிவு சொல்லாமல், "மாகர் காவியம் செய்திருக்கிறார? அவருக்கு ஏன் இந்தப் பிழைப்பு? கர்ப்ப ஸ்ரீமான்; ராஜஜீவனம் நடத்தியவர். தம் மூழுச் செல்வத்தையும் ஏழை எளியவர்களுக்கே கொடுத்துக்கொண்டிருந்தவர். தவிர, பஞ்சம் வெளித்தோற்றத்தில்தான். அவர் ஊரில் பஞ்சம் என்பதனுல் வருந்துவாரே இல்லை என்று தேற்றுதான் ராஜசபையில் பிரஸ்தாபம் வந்தது. அவராவது, போஜனிடம், அதுவும் பரிசு பெற, காவியத்தை அனுப்ப வருவது! நடுவில் ஒரு வார்த்தையைப் பார்த்து விட்டுப் போஜனுக்கு இந்தப் பிரயம் பிடிக்க வாவது!" என்று ஏதோ சித்தித்துப் பேசிக்கொண்டார்கள்.

"ஏராளமான சம்மானத் திரவியங்களோடு வந்து சேருங்கள்" என்று மந்திரிகளிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினன் போஜன்.

'நகரத்திற்கு வெளியில் எங்கே தங்கியிருப்பார் கவி? மரத்தடியிலா? வெறும் தரையிலா? நடந்துவந்த களைப்புத் தீர்ந்தது என்று சொல்வாரோ? ஏதோ உணவு கிடைத்தது என்று ஏதாவது சொல்வாரோ? நான் அவர் சொல்லும் அந்த வார்த்தைகளைப் பொறுப்பேனு?' என்று அவன் இருதயம் கற்பனை செய்துகொண்டு தவித்தது. பதறிக்கொண்டே உட்கார்ந்திருந்தான் அவன் ரதத்தில். பக்கத்தில் இருந்தவர் ஒரு புலவர்; பதறும் அரசனைப் பரிவுடன் பார்த்துக்கொண்டிருந்தார். ஆனல் நல்ல வேளையாய், அவருக்குக் கவிதை ஒன்றும் பிறக்கவில்லை. மதில் சீக்கிரம் வந்துவிடாதா என்று மூன்புறம் தன் உடலை நீட்டிக்கொண்டு மிரண்டுகொண்டிருந்தான் அரசன். ரதம் ஓடிக்கொண்டிருந்தபோதே நகர்வ தாய் நினைத்துக்கொண்டிருந்தான். இப்பொழுது ரதமே கொஞ்சம் மெதுவாய்ச் சென்றது. பக்க வாட்டில் திரும்பினன். "பாதேவதை அவள் தந்தாள்; தர்மதேவதை, மஹாலக்ஷ்மிபோல, அவள், அதுபோல் இதுபோல்" என்று அவள் சென்ற வழியைக் காட்டிக் காட்டிப் பார்த்துப் பார்த்துப் பரவசமாய்க்கொண்டிருந்த வறியவர் கூட்டந்தான் காரணம், ரதத்தின் தாமதத்திற்கு. 'அவள் யார்? கவிபத்தினிதானே? இப்படித் தெரிந்திருந்தால் இன்னும் கொஞ்சம் கொடுத்திருக்கலாமே' என்று நினைத்துக்கொண்டான் போஜன்.

"இந்தத் தடவை என் முறை; எப்பொழுது அழைக்கலாம், எப்படி உபசரிக்கலாம் என்று திட்டம் போட்டுக்கொண்டிருந்தேன். என்ன ஆருமோ தெரியவில்லையே! இது என் முறை, இது என் முறை" என்று மறுபடியும் அலட்டிக் கொண்டான் அரசன். மிகவும் நிர்ப்பந்தமாய்ப் போய்விட்டதோ என்னவோ, புலவரும் விசாரித்தார்: "உங்கள் முறையோ? அப்படியென்ருல்?"

இது வெறும் மேகம், நம் பிராணப்பிரியைக்குச் செய்தி சொல்லுமோ என்று யோசிக்கவில்லையாம், பூமிக்கு வந்துவிட்ட யக்ஷனுடைய விரகம். அரசன் புலவரிடம் சொன்னன்:

"வெகுகாலப் பிரயாசைக்குப் பிறகு, என் விருந்தாளியாய்த் தங்கியிருக்க, அதுவும் இரண்டு தினங்களுக்கு இசைந்தார் அந்த மகாகவி மாகர். பதிலுக்கு என்னை அழைத்தார். நான் அவர் வீட்டில் தங்கி வந்தேன். இப்படிச் சில தடவை பரிமாறிக்கொண்டோம். சமீபத்தில் இரண்டு வருஷங்களுக்கு முன் அவர் வீட்டுக்கு நான் சென்றிருந்தபொழுது, மிகவும் பிரமாதப்படுத்தி விட்டார். பிரமித்துப் போய்விட்டேன். ஆஹா ஹா..."

புலவருக்குப் பொருமி அரித்ததுபோலும். அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு ஆரம்பித்தார்: "தாங்கள், மஹா மஹா, ராஜாதிராஜ, ராஜ மார்த்தாண்ட...இப்பேர்க்கொத்த, தங்களைக் கூடக் கவி மாகர் ஆச்சரியப்படுத்துவதாவது! அதுவும் அதிதியுபசாரத்தில்..ஹ் ஹ் ஹ..."

ஒரு சின்னப் பூமி கண்டத்தையே கிரிபுவன மாக்கிக்கொண்டு, மஹாராவையும் ராஜாராவையும் அடுக்கி அளக்கும் அவரை நினைத்துத்தானோ, எப்படியோ, சிரித்துக்கொண்டே சொன்னான் போஜன்: "வெறும் ஆஸ்தானகவி அல்ல, ஸ்வாமி! குபேர லக்ஷ்மீபதி அவர். கேளும், வசந்தத்தில் இங்கு என் விருந்தாளியாய் வந்திருந்த அவரை, பிரகிருதியன்னையை வசந்ததேவன் எவற்றால் அலங்காரம் செய்கிறானோ, அவற்றால் எல்லாம் உபசரித்தேன். ரஸித்துத்தான் வசித்தார். ஊருக்குக் கிளம்பும்போது 'எப்படி?' என்று விசாரித்தேன். மிகவும் சாதாரணமாய்ச் சொன்னார், சௌக்கியமாய் இருந்ததென்று; என்ன தான் செய்தால் இவரிடமிருந்து பரிபூர்ண திருப்தி அடைந்த பாவனையை எதிர்பார்க்கலாம் என்று யோசித்தேன். ஒன்றுமே புரியவில்லை!"

புலவர் இடைமறித்தார், தம் சிருங்கார ரஸ வல்லமையை ராஜா மறந்துவிடப்போகிறாரே என்ற நினைத்துவர்போல: "ஏகபத்தினி விரதம் உண்டோ, கவி மட்டும் அல்ல என்றதாங்கள் கருதும் அந்த மாகருக்கு?"

இதனால் இருந்த கொஞ்சம் ஆறுதலும் போய் விட்டது அரசன் முகத்தில். சுமை இறங்கும் என்று நினைத்தவன் மாதிரி, வியப்பும் கவலையும், சேர்கமும் திருப்தியும், ஊக்கமும் அலுப்புமுமாகப் பல பாவங்களுடன் சொல்ல ஆரம்பித்தான்: "நான் அங்கே போயிருந்த பொழுது கல்ல பனிக் காலம். மார்கழிப்பனியில் நனைந்த வழியில்தான் சென்றேன். உடல் குளிர்ந்தது. உள்ளத்தில் கூட இருந்தது. நினைத்துக்கொண்டே இருந்தேன், மாகர் செய்யப்போகும் உபசாரங்களைப் பற்றி. இறங்கி வீட்டிற்குள் சென்றேன். சூரிய தரிசனம் செய்துகொண்டு உப்பரிகைக்குப் போகும்வரையில்தான் ஹேமந்த ருதுவின் நினைவு இருந்தது. அவர் சேகரித்து வைத்திருந்த அரிய காவியங்களையும் ஓவியங்களையும் பார்க்கும் போதெல்லாம் கோடையின் ஆரம்ப சுகங்களை உணர ஆரம்பித்தேன். மத்தியான்னம் போஜனம் செய்யும்போது மூன்றாம் கோடையில்தான் இருந்தேன். பதார்த்தங்கள் எல்லாம், பூமிதேவி கோடைக்காலத்தில் அளிப்பவை. இதையும் தவிர, வேறு தேசப் பொருள்கள் பல சுவைத்தேன். இத்தக் கோடைக்கால சுகத்தை இரண்டு நாள் அநுபவித்துக்கொண்டே இருந்துவிட்டு, மூன்றும் நாள் விடிகையில், சங்கீதத்தால் பிரபாத மங்களம் தெரிவிக்கப்பட்டதைக் கேட்டுத்தான் உணர்ந்தேன், 'நாம் நல்ல பனிக்காலத்தில்தான் இருக்கிறோம்' என்று. அந்த ஆச்சரியத்தில் முழுகி, 'சுகம் என்பது இதுதானா? இயற்கையாய் அந்த அந்த ருதுவுக்குத் தகுந்தபடி அநுபவிப்பதுதான் சுகத்தை நெருங்குவது. ஆனால், தேசகாலவர்த்தமானங்களை மாற்றிவிட்டிருப்பதுதான் பரமசுகம். சுகம் என்பதே நம் பிரயத்தனத்தால் அரியதொன்றைச் சாதித்து அநுபவிப்பதுதானே...?' இவ்விதம் சுகாநுபவத்தை ஆராய்ந்துகொண்டே இருந்தேன். இதைவிட உயர்வாய் அவரை உபசரிக்கவேண்டும் நம் அரண்மனையில்; அதற்கு இப்போதிருந்தே ஏற்பாடு செய்யவேண்டும் என்று நினைத்துக் கொண்டு, அந்த நினைவில் சிரித்துக்கொண்டேன்.

"'என்ன? தேசகாலங்களின் ஞாபகம் புதுதாய் வந்ததில் சிரிப்பா?...அல்லது இந்தச் சுக மொன்றும் தங்களுக்குப் புதிதில்லை என்ற சிரிப்பா?' என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்தார் கவி. பதில் ஒன்றும் சொல்லத் தெரியாமல் இருந்துவிட்டு, திடீரென்று, 'சரி, நான் ஊருக்குக் கிளம்பலாமா?' என்று கேட்டேன். கவி மறுபடியும் சிரித்துக்கொண்டு, 'அலுத்துவிட்டதா அதற்குள்? அப்படியானால் வசந்தத்தில் கோள சுகத்தை அநுபவிக்கலாமே கொஞ்ச நாள்' என்றார். பிடிவாதமாய்க் கிளம்பினேன். அன்றையிலிருந்து யோசித்துக்கொண்டே இருந்தேன், அவரை அழைக்க. ஆனால் நாட்டில் எற்பட்ட பஞ்சத்தால் நிறுத்தவேண்டியதாயிற்று யோசனையை...அதற்குள் என்ன ஆயிருக்கும்? அவர் ஏன் கிளம்பிவந்தார்?" வெகுசோம் பேசிவிட்டதுபோல நினைத்து மௌனமானான் அரசன்.

புலவருக்கு இந்தப் பேச்சு முழுவதும் மனத்தில் பிடிபடவில்லை. உபசீடிகை, பிரசீடிகை, பீடிகை, அவையடக்கம், ஆரம்பம் என்று இந்த முறையில் சென்று, 'அது இருக்கே, அதாவது என்னவென்று கேட்டால்' என்று தொடங்கிப் பேனைப் பெருமாளாக்கும் அவர் முறைக்கு, இது முதல் வாக்கியம் முடிந்ததுபோலத்தான் இருந்தது. ஏற இறங்கப் பார்த்தார் அவர் அரசனை. இறங்கியே ஓடிவிடுபவன்போல இறங்கும் இடத்தில் நின்றுகொண்டிருந்தான் அரசன்.

அரத்தில் அஜானுபரகுவர் மாத்தில் சிறிது சரய்ந்துகொண்டு, ஒரு மஹாபுருஷர் நின்றிருக்கார். உத்தரீயம் இருக்கவில்லை என்பது தவிர ஆடையில் அவலமொன்றும் தோன்றவில்லை. அவரைச் சுற்றிலும் ஒரு சிறு கூட்டம், கத்தல் தூணியும் பரட்டைத் தலையுமாய்ச் சுற்றிக்கொண்டிருந்தது.

சித்திரகூடத்தை ராமனது நினைவு வந்தது போஜனுக்கு. ஜலத்திரை கண்களை மறைத்தது. சடாரென்று துடைத்துக்கொண்டு கூர்ந்து பார்த்தான்.

பசும் பொற்பாவை போன்ற அந்தப் பெண், அரசனிடம் காவியத்தைக் கொண்டுவந்த கவிபத்தினி, கால்கடையாய் வந்தவள், வழியில் அள்ளி அள்ளிக் கொடுத்துக்கொண்டு வந்ததால் ஏற்பட்ட தாமதம் வேறு, அப்பொழுதுதான் அந்த இடத்தை நெருங்கிக்கொண்டிருந்தாள். அவளே வந்து அங்கும் சுற்றிக்கொண்டிருக்கு ஏதோ கொடுத்துவிட்டுத் தன் கணவனுக்கு எதிரில் வந்து தலைப்பை உதறினாள். ஒரு காசு தெறித்தோடியதை எடுக்கப் பலர் குனிந்தார்கள். அரசன் வரும் பக்கம் கையை நீட்டிச் சைகை செய்துவிட்டு, "ராஜா வருவார் இதோ. அவர் கொடுத்த பெரும் தொகை இருந்த மடிதான் இது" என்று உரைத்துக் கெஞ்சும் விழிகளைக் கணவரின் தோய்ந்த விழிகளில் புதைத்தாள் கவிபத்தினி. சோர்ந்திருந்த கவியின் முகம் கொஞ்சம் மலர்ந்தது. "என் கரலைப் பார்" என்று சொல்லிக்கொண்டே உட்காரப் போன அவர் தடுமாறினார்.

பாய்ந்தான் போஜன் ஹாஹாகாரத்தோடு. தன் தோளில் சாய்த்துக்கொண்டான். தன் உத்தரீயத்தை எடுத்து அவர்மேல் போர்த்தினான். உட்காரவேணும் என்று கவி ஜாடை செய்ய, போஜன் அவரை மெதுவாய் அணைத்துக் கொண்டே உட்கார்ந்து, மடியில் கவியை இருத்தி அவர் தலையைத் தன் மார்பில் சாத்திக் கொண்டான். மெதுவாய் அரசன் முகத்தைப் பார்த்தார் கவி. அவர் கண்கள் வேகமாய்ச் சுழல முடியாமல் சோர்ந்து நிதானமாய்ப் புரண்டு புரண்டு பார்த்தன.

"தங்களை இந்த நிலையில் உபசரிக்கலாமென்று கனவு கண்டால்கூட என்னுள் உயிர் வாழ முடியாதே, மகாகவியே !...என்..." அரசன் பேச்சு இடையில் நின்றது.

"நடப்பதை எல்லாம் முன்கூட்டியே தெரிந்துகொள்வதென்றால்....." வார்த்தை முடியவில்லை. அரசன் தோளைத் தழுவிக் கொண்டிருந்த தம் கையைக் குதிகால் அருகே நீட்டினார் கவி. குனிந்து பார்த்த கவிபத்தினி நிமிர்ந்து போஜனைப் பார்த்தபோது அவள் முகம் முழுவதும் கண்ணீரிருந்தது. மஹாரோகம் தன் முழு வைபவத்துடன் பிரஸன்னமாகியிருந்தது அந்த இடத்தில். சோதிடருடைய வார்த்தையின் நினைவு கவிபத்தினியைப் பிரமிக்கச் செய்திருந்த அளவு, அவள் சரீரம் முழுவதையும் மாக்க அடித்திருந்தது.

"நெயவன வைத்திய விசாரதர்கள் இருக்கிறார்கள் என் சபையில். தாங்கள் ஸுவர்ணபாதம் தாங்கலாம். தங்களையும் அதையும் சேர்த்து நான் தாங்குகிறேன். சிறிதும் கவலைப்படாதீர்கள்" என்று கம்பீரமாய்த் திட உறுதியுடன்தான் சொன்னான் போஜன். ஆனால், மாக கவி அதைக் கேட்டுத் தைரியம் கொண்டு உள்ளம் குளிரவில்லை. அவர் உடல்தான் குளிர்ந்து கிடந்தது.

உருவகப்படுத்தல்

"அவன் என்ன என்னவோ எண்ணிக்கொண்டிருந்தான். சிந்தனை அலைகள் நில்லை கொள்ளாமல் சிதறி மோதின. எப்படி ஆரம்பிப்பது, எப்படிக் கொண்டு போவது, எப்படி முடிப்பது என்று தெரியாமல் தத்தளித்தான். கடைசியில் ஒரு நிலைக்கு வந்தது அவன் எண்ணக் கோவை. எல்லாவற்றையும் சேர்த்து உருவகப்படுத்தலாம் என்ற நம்பிக்கை உண்டாயிற்று. தொடங்கிவிட்டான் எழுத."

ஒருவன் தன் எண்ணங்களுக்கு உருவம் கொடுத்து எழுதத் தொடங்கினான் என்று எழுத வந்த எழுத்தாளர் 'உருவகப்படுத்தல்' என்ற தொடரை உபயோகிக்கிறார். இது பிழை. உருவகம் என்பது ஓர் அலங்காரம். ஒரு பொருளை அதற்குச் சமானமான மற்றொரு பொருளாகவே வைத்துச் சொல்வது அது. 'அஞ்ஞானமாகிய இருளை அறிவாகிய சூரியன் போக்குகிறான்' என்பதில் அந்த அலங்காரம் அமைந்திருக்கிறது. அஞ்ஞானத்தை இருளாகவும் அறிவைச் சூரியனாகவும் உருவகப்படுத்திச் சொல்லுகிறது இந்த வாக்கியம்.

முன்னே சொன்னதோ இந்த மாதிரி உருவகப்படுத்தியது அல்ல; உருவம் இல்லாமல் பிறழ்ந்து நிதறியவற்றிற்கு ஓர் உருவத்தை அளிப்பது அது. அதை உருவம் அளித்தல், உருவாக்குதல், உருப்படுத்தல் என்ற தொடர்களால் குறிக்கலாம். "உருப்படுமா?" என்று நாம் கேட்கும் கேள்வி அத்தகைய பொருளை உடையதுதான்.

எனவே, "எல்லாவற்றையும் சேர்த்து உருப்படுத்தலாம் என்ற நம்பிக்கை உண்டாயிற்று" என்று எழுதுவதே பொருத்தமாக இருக்கும்.

சிங்கவேள் குன்றம்

எம். ராதாகிருஷ்ண பிள்ளை, சென்னை மேயர்

திருமங்கையாழ்வார் வட இந்தியாவில் நெடுந்தூரம் யாத்திரை செய்தவர். விண்ணை இடிக்கும் தலை வாய்ந்த இமயமலையில் உள்ள பத்ரி, பிரிதி முதலிய திருப்பதிகளுக்கு நேரில் சென்று பாடியவர். இலங்கைக்கும் ஆழ்வார் சென்று வந்தார் என்பது ஆராய்ச்சி புலப்படுத்தும் உண்மையாகும். அவர் வட இந்தியாவிற்குச் சென்ற வழியில் கண்டு பாடிய திருப்பதிகளுள் சிங்கவேள் குன்றம் என்பது ஒன்றாகும். அது பாடல் பெற்ற திருமால் திருப்பதிகளுள் ஒன்று. அதனை அப்பெயரால் அறிவார் இப்போது மிகச் சிலரே. அது இப்போது அகோபிலம் என்றே வழங்குகின்றது.

என் நண்பர் ஒருவர் சிறந்த வைணவர். திருப்பதிகள்தோறும் சென்று திருமாலைக் கண்டு உருகும் பேறு பெற்றவர். பத்ரீ நாராயணத்துக்கும் சென்று வந்தவர். ஆனால், அகோபிலம் சென்று சேவிப்பது மிகவும் கடினம் என்று தெரிவித்தார். அப்போது அதனை அருமை என்று நான் எண்ணவில்லை. பத்ரீநாராயணம் வரையில் சென்று சேவித்தவருக்குக் கடப்பை ஜில்லாவிலுள்ள ஒரு திருப்பதிக்குச் செல்வது எப்படி அருமையாகும் என்றே எண்ணினேன். உண்மையைப் பிறகு உணர்ந்தேன்.

கடப்பை ஜில்லாவில் உள்ள நந்தியால் ஸ்டேஷனிலிருந்து இருபத்தாறு மைல் பஸ் மூலமாகச் சென்றால் ஆர்லகட்டா என்னும் இடத்தை அடையலாம். அங்கிருந்து அகோபிலத்திற்கு மாட்டுவண்டியில் போய்ச் சேரலாம். திருவிழாக் காலத்தில் அகோபிலத்திற்கே நேராகப் பஸ் போக்குவரத்து உண்டு. சிவராத்திரி கழிந்த மறுவாரத்தில் இங்கே சிறப்பான விழா நடைபெறும். அப்போது திரளான மக்கள் செல்லுவார்கள். அரசாங்கத்தார் அத்திருவிழாக் காலத்தில் வருவோருக்கு வேண்டிய வசதிகள் செய்து உதவுகின்றார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் நான் என் நண்பருடன் சென்றிருந்தேன். மாலிவேலியில் ஆர்லகட்டாவில் எங்கள் நண்பர் ஒருவர் வீட்டிலிருந்து அகோபிலம் புறப்பட்டோம். பஸ் ஏறினோம். பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ள அகோபிலம் போய்ச் சேர இரண்டரை மணிநேரம் ஆயிற்று. வழியெல்லாம் குண்டுக் கற்கள்; வழியடைக்கும் கற்கள். சில இடங்களில் பஸ் நின்றது; கற்களை அப்புறப்படுத்திய பிறகுதான் பஸ் செல்ல இசைந்தது. வழி நெடுகப் புதர்கள்; இடையிடையே மரங்கள்; ஆனல் தழைத்த மரங்கள் அல்ல. கதிரவன் வெம்மையால் கருகிய மரங்கள். இடையே சில இடங்களில் பாதை மணற்பாங்காகவும் இருந்தது. பஸ் படும் பாடு எங்கள் கண்ணை உறுத்திற்று. பஸ்காரர் வேண்டுகோளின்படி இறங்கினோம். மணற்பாதையைக் கடந்தும் ஏறினோம். மேற் அகோபிலம் சென்று சேர்ந்தோம். சென்ற வேளை இருண்ட நேரம். ஊர் ஒன்றும் தென்படவில்லை. நான்கு ஐந்து குடிசைகள் கண்ணில் பட்டன. லோகல் போர்டார் திருவிழாவை முன்னிட்டு வருவோருக்கு அமைத்த சிறிய தட்டி விடுதிகளைக் கண்டோம். அன்றிரவை ஒரு விடுதியில் கழித்தோம். விடியற்காலையில் எழுந்து வெளியே சென்றோம். தண்ணீர் வேண்டுமானல் நெடுந்தொலைவு செல்ல வேண்டும் என்று அறிந்தோம். வேலையாள் மூலமாக வந்து சேர்ந்த தண்ணீரைக் கண்டோம். பல் தேய்த்தோம்.

கோயிலைச் சுற்றி அமைக்கப்பட்ட விடுதிகளில் ஏறக்குறைய 1500 மக்கள் இருந்தனர். லோகல் போர்டார் ஏற்பாட்டின்படி ஒரு வைத்தியரும் வந்திருந்தார். லாரிகள் மூலமாகக் குடிதண்ணீர் வந்திருந்தது. இந்த ஏற்பாடுகளுக்கு ஈடாக அகோபில மடத்தாரிடமிருந்து லோகல் போர்டார் பணம் வசூல் செய்தல் வழக்கமாம்.

அகோபில மடம் வடகலையாரைச் சேர்ந்த பெரிய மடம். இந்த மடம் இப்போது திருவரங்கத்தில் உள்ளது. இதற்கு நிரம்பிய செல்வம் உண்டு; நன்செய் புன்செய் நிலம் மிகுதி. ஆனல் கோவில் கட்டிடமோ மிகச் சிறியது. சந்நிதிப் பகுதியில் பழுது பார்க்கவேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. மடத்தார் இதன்பொருட்டுப் போதிய அளவு செலவிடுவதாகத் தோன்றவில்லை. கோயிலின் நிலை இது என்றாலும் அதன் பெருமையையும் பழமையையும் நினைக்க நெஞ்சம் உருகுகின்றது.

திருமங்கை மன்னனல் மங்களாசாலனம் செய்யப்பெற்றுள்ள இந்தக் கோயிலைப்பற்றிச் சற்று விரிவாக அறிதல் நலம். நரசிம்மப் பெருமானின் ஒன்பது மூர்த்தங்களும் அகோபில மலைகளைச் சுற்றி எழுந்தருளியிருப்பதால், இத்திருப்பதியை நவநரசிம்மம் என்பர். கீழ் அகோபிலத்தில் லக்ஷ்மி நரசிம்மசுவாமியின் சந்நிதி அமைந்துள்ளது. பெருமாள் வீற்றிருந்த திருக்கோலமாகக் கிழக்கு நோக்கிய திருமுகமண்டலத்தோடு எழுந்தருளியுள்ளார். நல்ல மலைத் தொடர்ச்சியின் அடிவாரத்தில் இது உள்

ளது. சந்நிதியின் முன்புறத்தில் சிற்பத் திறன் பொலிந்த பெருந்தூண்கள் நிற்கின்றன. இவை கர்ப்பக்கிருகத்தின் முன் மண்டபம் கட்டும் நோக்கத்துடன் நிறுத்தப்பட்டிருக்கவேண்டும். வேலேப்பாடுகள் விஜயநகர மன்னர் காலம் என்று அறிவுறுத்துகின்றன. முகம்மதியர் படையெடுக்க, விஜயநகர மன்னர் வீழ்ச்சியுற, எடுத்த வேலே குறையாகவே நின்றுவிட்டது போலும்! சந்நிதியைச் சுற்றிலும் பெரிய மண்டபங்கள் உள்ளன; ஆனல் சீர்குலேந்த நிலேயில் உள்ளன. கோயில் எதிரே கடை வீதிகளின் இருபுறத்திலும் பெரு மண்டபங்கள் பாழடைந்து கிடக்கின்றன. மலேயைச் சுற்றி வாழும் மலேச்சாதியார் செஞ்சு எனப் படுவர். அவர்கள் குலப் பெண்ணே நரசிம்மப் பெருமாள் சிறை எடுத்ததாகச் சொல்லிக்கொள்கின்றனர்.

சுற்றிலும் காடுகள் உள்ளன. அவற்றில் உள்ள கொடிய விலங்குகள் மக்களுக்குத் தொல்லே விளேப்பன. திருவிழாக் காலங்களில் மக்களேக் காக்கத் துப்பாக்கியுடன் இரவு முழுவதும் ஆட்கள் காவல் செய்து வருகிறார்கள்.

திருமங்கையாழ்வார் சிங்கவேள்குன்றத்தைக் கண்டது 1200 ஆண்டுகளுக்கு முன்பு. ஆழ்வார் தாம் கண்ட காட்சியை ஓவியமாக்கிப் பாடித் திகழவைத்துள்ளார். அந்தப் பாடலேப் பாடும் போதெல்லாம் அந்தத் திருப்பதி நம் கண்முன் வந்து நிற்கின்றது. அதனே நேரில் காணும் பேறு எனக்குக் கிடைத்தது. நேரில் கண்ட காட்சி ஆழ்வார் பாட்டோவியத்திற்கே என்னே மீண்டும் மீண்டும் ஈர்த்துச் செல்கின்றது. நிழற்படத்திற்கும் உண்மைக் காட்சிக்கும் உள்ள உறவும் அதுதானே?

"ஓய்ந்த மாவும் உடைந்த குன்றும்
அன்றியும் நின்றழலால்
தேய்ந்த வேயும் அல்ல(து) இல்லாச்
சிங்கவேள் குன்றம்"

(பெரிய திருமொழி 1-7-3)

என்று ஆழ்வார் பாடியருளினர். உடைந்த குன்றுகள் அல்லவா எங்கும் பரந்து பெரிய குண்டுக் கற்களாக உருவெடுத்துள்ளன? அங்கு மரங்களோ குறைவு; அவற்றில் கவையும் கொம்பும் உண்டாயினும் இலேயும் தளிரும் இல்லே. ஆதலின் காடாய்க் காண்பன மூங்கிற் புதர்களே. அவையும் கதிரவன் காலும் "அழலால் தேய்ந்த வேய்"களே. வனவிலங்குகள் இரை தேடித் தேடித் திரிந்து அலேந்து ஓய்கின்றன. அவை ஆழ்வார் கண்ணிற்குப் புலனுயிருக்கவேண்டும். ஆதலின் "ஓய்ந்த மா" எனக் குறித்தார். இவை பாலே நிலத்தின் இயல்பு என்பது தமிழிலக்கியம் தெளிவிக்கும் உண்மை.

இத்தகைய மூங்கிற் புதரில் ஒளிந்து நின்ற புலிகளே ஆழ்வார் பாட்டில் காண்கிறோம். யானேகள் இங்கும் அங்கும் திரியும் காட்டில், அவற்றின் அடிச்சுவடுகளேப் பார்த்தறிந்து, அவை அந்த வழியே வரும் என்று எதிர்பார்த்துப் புலிகள் ஒளிந்துகொண்டிருக்குமாம்.

"கொிந்த வேயின் முழையுள் நின்று
நீள்நெறி வாய்உழுவை
திரிந்த ஆனைச் சுவடு பார்க்கும்
சிங்கவேள் குன்றமே"

(பெரிய திருமொழி 1-7-6)

நண்பகலின் வெப்பத்தைச் சொல்லல் இயலாது. 'கவ்வும் நாயும் கழுகும் உச்சிப் போதொடு கால் சுழன்று' (1-7-4) வருந்தும் என்கிறார் ஆழ்வார். எரியும் செந்தீயில் கால்வைத்து நிற்க முடியுமோ? பிணம் தின்னும் நாயும் கழுகுங்கூட நிலத்தின் வெப்பத்தைத் தாங்கமாட்டாமல் கால் சுழன்று தடுமாறுமாம். நிலத்தின் வெம்மையைச் சூறைக்காற்று மொண்டு வான் வழியாக வீசி எறியுமாம். "நின்ற செந்தீ மொண்டு சூறை நீள் விசும்பூடு இரிய" (1-7-5) என்கிறார். மூங்கில் ஒன்றோடொன்று உராய்ந்து பற்றிப் பறக்கும் தீ விண்ணேச் செங்நிறமாக்கும். "கல்லதர் வேய்ங்கழை போய், தேய்த்த தீயால் விண் சிவக்கும்." (1-7-8)

நிலம், வளம் திரிந்து வாட்டுவதுபோலவே நிலத்தில் வாழும் மக்களும் வழியில் செல்வோரை அறம் திரிந்து வாட்டுவர். வாணிகம் செய்வோர் கூட்டமாகச் சென்றபோதிலும் வேடர்களால் அல்லல் படுவர்.

"மலேத்த செல்சரத்து எறிந்த பூசல்
வன்துடி வய்கடுப்ப,
லேக்கை வேடர் தெழிப்ப ரூத
சிங்கவேள் குன்றமே"

(பெரிய திருமொழி 1-7-2)

என்னும் பகுதி வழியில் போவார் படும் இடர்ப்பாடுகளேயும் வேடர்கள் ஆரவாரத்தையும் எடுத்துரைக்கின்றது. இவற்றின் இடையே இடையறுமல் கேட்கும் சிள்வீடு ஒலியையும் ஆழ்வார் குறித்தருளுகிறார்.

நான்கு நாள் அங்கே தங்கியிருந்த நான் ஆழ்வார் அநுபவங்களின் உண்மையைத் தெளிந்தேன்.

"தெய்வம் அல்லால் செல்ல ஒண்ணாச்
சிங்கவேள் குன்றமே"

"சென்று காண்டற் கரிய கோயில்
சிங்கவேள் குன்றமே"

"இனத்தனேயும் செல்ல ஒண்ணாச்
சிங்கவேள் குன்றமே"

(1-7-4,5,7)

என்னும் அடிகள் எவ்வளவு உண்மை என்பது ஒருமுறையேனும் அகோபிலம் சென்று வந்தவர்களுக்கு விளங்கும்.

சுபலம்

-ஆர்வி-

(சென்ற இதழ் 99-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உமாவை ஒரு சாண் உயரத்துக்குத் தூக்கி வாரிப்போட்டது. அவள் திரும்பிப் பாராமலேயே திடுக்கிட்டாள். குரல் அவளுடைய குடிகார மாமாவுடையது என்று அவளுக்குத் தெரியாதா, என்ன?

"உமா.....ஏ களுதே!"

உமா அச்சத்துடன் எழுந்தாள். குழந்தைகள் மூலைக்கு ஒன்றாய்ப் பேய்ப் பதுங்கின.

"தறிதலே நாயே, வீட்டை விட்டு ஓடும் வரைக்கும் வத்துட்டியா?"

உமா தலை குனிந்துகொண்டிருந்தாள். அவனிடம் பேசுவது வீண் என்று அவளுக்குத் தோன்றியிருக்க வேண்டும்.

"களுதே, நீ ஓடிவந்ததோடே அல்லாமே என் கொளந்தைகளையுமா கொண்டாந்துட்டே! சரி; ஈட வெளியே.....உம்.....ஈடக்கிறியா களுத் தைப் பிடிச்சுத் தள்ளட்டுமா!"

"இந்த வெக்கீர்த் தண்ணியைக் கொடுத் தட்டு..."

"அட ஓ, வெக்கங்கெட்டவளே! ராப் பூரா வும் தங்கினதமல்லாமெ வெக்கீர்த் தண்ணி வேறே போட்டுவச்சுட்டியாக்கும். சரிதான். கல்ல யோக்கியதைதான்! உங்கப்பன் இதற்குத் தான் படிப்புச் சொல்லிக் கொடுத்தானு உனக்கு?"

"மாமா...!"

"மாமனுமாச்சு, மருமவனுமாச்சு! கிளம்பு, களுதே!"

அவனுடைய இரும்புக் கை அவள் தோள் பக்கம் நெருங்கியது.

உமா வெருண்டாள். "ஓ, எட்டவே நில்லு. நான்தான் இதோ வர்றேனே, உன் குடிகாக் கையரல் அடியும் உதையும் வாங்குவதற்கு. அதுக் குள்ளே கையை நீட்டுறயாக்கும் ஒத்தே" என்றாள் உமா, என்றுமில்லாத ஆங்காரத்துடன். குழந்தைகள் அவள் பின்காலைக் கட்டியவாறே அவளைப் பின்தொடர்ந்தன.

* * *

வேணுவுக்குப் பிரக்ஞை வந்தபோது முதலில் அவன் வாயில் வந்த வார்த்தை, "உமா" என்பதுதான்.

அப்பொழுதும், "ஸ்வாமி" என்று குரல் கொடுத்தபடி முன்வந்து நின்றாள் உமா.

"கொஞ்சம் தண்ணீர்" என்றான் அவன்.

"இதோ" என்றாள் அவள்.

சற்று ஆசுவாசம் உண்டான பின்னர், "உன் கைகள் ஏன் இப்படி நடுங்குகின்றன? உமா, என் உடல் நிலையைக் கண்டு பயந்துவிட்டாயா?" என்றான் அவன்.

நாணத்தால் சற்று முகம் சிவக்க அவள் சிரிப்பை லேசாக மறைத்துக்கொண்டு, "இல் லையே ஸ்வாமி" என்றாள், காரணம் இல்லாதது போல.

"என்னவோ தெரியவில்லை. இருந்தாற் போலிருந்து இப்படி உடம்புக்கு வந்துவிட்டது, உமா!"

"அதிகமாய்ப் பேசாதீர்கள். உடம்புக்கு ஆகாது" என்றாள் அவள், சுற்று முற்றும் பார்த்த படி.

வேணுவும் ஒரு முறை சுற்று முற்றும் பார்த் தான். காலைக் கதிரவனின் ஒளி அக்குடிசை எங்கும் பரவியிருந்தது.

"ஆமாம். குழந்தைகள் எங்கே?" என்றான் அவன்.

உமா என்ன சொல்வதென்று அறியாமல் திகைத்தாள்.

"நேற்று.... என் மாமா..."

"நேற்று? உன் மாமா வந்திருந்தாரா, என்ன?"

"ஆம் ஸ்வாமி....நேற்றுத்தான் என் மாமா வந்திருந்தார். நீங்கள் நேற்று, அப்படியானால் எழுந்திருக்கவே இல்லையா?"

உமாவுக்கு விஷயம் ஒருவாறு சமாதான மாக இருந்தது.

வேணு நேற்று முழுவதும் தன் ஞாபகமின் றியே கிடந்திருக்கிறான் என்பதும், தான் வீட் டில் இல்லாமல் மாமாவுடன் போனதும், பிறகு அன்று காலையில் மாமா வீட்டைவிட்டு வெளியில் போனதும் ஆசிரமத்துக்கு வந்துவிட்டதும் அவ னுக்குத் தெரியவில்லை என்பது அவளுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது.

"அப்படியானால் நடுவில் ஒரு நாள் பிரக்ஞை யின்றிக் கழித்திருக்கிறேனா?" என்று ஆச்சரியத் துடன் சொல்லிக்கொண்டான் வேணு.

பிறகு ஒருவாறு காலைக் கடன்களை முடித்துக் கொள்ளச் செய்து அவனுக்கு வேண்டியதைக் கொடுக்கலானாள்.

ஆகாரம் செய்யும்போது, "ஆமாம்; குழந்தைகள் இனி இங்கேதான் இருக்கப் போகிறார்கள் என்றாயே, உமா; அதற்குள் என் அவர்களை அனுப்பிவிட்டாய்? குருகுலம் ஆரம்பத்திலேயே முடிந்துவிட்டதா என்ன?" என்று சற்று வேடிக்கையாக, சிரிக்கச் சாத்தியமில்லாமல் புன்சிரிப்புடன் கேட்டான் வேணு.

உமாவின் முகம் சுண்டியது. கணநேரத்தில் கண்கள் கலங்கின. அவளது முகத்தையே இடையறாது நோக்கிய வேணு திடுக்கிட்டு, "என்ன உமா, விஷயம் என்ன?" என்றான்.

அவள் கண்களில் நீர் துளும்பலாயிற்று.

"ஸ்வாமி...என் தர்ப்பாக்கியம்.. 'நீ இங்கிருந்து போய்விட முடியாதா?' என்று கேட்டீர்களல்லவா? ஆமாம்; நானும் போகத்தான் வேண்டும்..."

இப்படிச் சொல்லும்போதே என்ன செய்தும் அவளால் மீறிக்கொண்டு வரும் அழுகையை அடக்க முடியவே இல்லை. தொண்டையை உலுக்கிக்கொண்டு தேம்பிவிட்டாள்.

வேணுவுக்கு உடலே பதறிற்று.

அவன் கவலை வேறு விதமாகத்தான் இருந்தது. தன் உடல் நிலைக்கு உண்மைக் காரணம் என்ன என்பதைத் தெரிந்துகொண்டதனால்தான் அவள் அவ்விதம் கூறுகிறாளோ என்றெல்லாம் அவன் எண்ணி வெட்கினான். வார்த்தைகள் உருப்படாமல் தடுமாறின.

"உமா! என் மனத்தை நானே சந்தேகித்து அல்லவா அன்று தெரியாமல் கேட்டுவிட்டேன் அவ்விதம்? இதற்கு நீ இப்படி அசட்டுத்தனமாய் அழலாமா? என்னை மன்னித்துக்கொள் உமா! இனி நீ எங்கும் போக வேண்டியதில்லை... ஆமாம், நிச்சயமான வார்த்தைதான் இது" என்றான்.

"மனம் எண்ணுவதுபோல எனக்கு வேறு மார்க்கமில்லையே...ஸ்வாமி! உங்களை இந்த நிலையில் தனியே விட்டுவிட்டு நான் எப்படிப் போவேன்!"

"உன்னை யார் போகச் சொல்லுகிறார்கள், உமா?"

"என் விதி."

"மனத்தின் பேதைமைக்கு விதி காரணமாகுமா, உமா?"

"ஐயோ, நீங்கள் ஏன் என் வழியில் அன்று எதிர்ப்பட்டீர்கள்? இந்த அபவாதமாவது இல்லாமல் போயிருப்பேன் அல்லவா?"

வேணுவுக்கு இரண்டாம் முறையாக உடலெல்லாம் கிடுகிடுத்தது.

"என்ன சொல்கிறாய் உமா, நீ?" என்று கூச்சலிட்டான்.

உமாவின் அழுகை நின்றது. விஷயத்தைச் சொல்லாமல் வேணுவைத் திடுக்கிட்டுப் போகச் செய்துவிட்டதை உணர்ந்தாள். தன் வழியில் எதிர்ப்பட்டது அவன் குற்றமல்ல; அபவாதம் ஏற்பட்டது அவன் பிரக்ஞையினால் அல்ல. அதற்கும் அவனுக்கும் சம்பந்தமே இல்லை.

உமாவின் மனம் சாதாரண நிலைக்கு இறங்கியது.

"ஸ்வாமி...தெரியாமல் தங்கள் மனத்தை நோகச் செய்துவிட்டேன். நான் சொன்னது தங்கள் சம்பந்தப்பட்டதல்ல...என் செய்கையின் வீணாவு அது...உத்தரவு கொடுங்கள்!"

வேணு தீவிரமாகச் சிந்தித்தான். பிறகு மெதுவாக, அழுத்தம் திருத்தமாக, "உமா, என் உத்தரவுக்காக நீ உண்மையில் காத்திருந்தால் அது உனக்குக் கிடைக்காது. நீ இதை விட்டுப் போகக் கூடாது! அன்று இரவு என் மனம் சபலித்து விட்டது வாஸ்தவந்தான். ஆனால் இவ்வளவு தூரம் வந்துவிட்டபிறகு என் நிலைமையைத் தெளிவாகச் சொல்லிவிடுகிறேன். இனி அவ்

விதம் நேரும்படி ஒரு நாளும் நான் இடம் கொடுக்கமாட்டேன். இதை நீ நம்பலாம். இதை அநுபவத்தில் நீ தெரிந்துகொள்ளவரவது இங்கே தங்கித்தான் ஆகவேண்டும். என் மேல் தப்பான அபிப்பிராயத்துடன் உன் வழியில் போகவிட என் உள்ளம் ஒப்பாது.''

உமாவின் உதடுகள் இதைக் கேட்கும்போது துடித்தன. எதையோ மனத்திலிருந்து பிட்டு வைத்துவிட அவள் உதடுகள் விரும்பின என்பதை அவன் உணரவில்லை.

''ஸ்வாமி...ஸ்வாமி!'' என்று மார்பை அழுத்திப் பிடித்துக்கொண்டு அவள் நாத் தழுதழுக்க விம்மினாள்.

வேணுவின் கண்கள் வெறியேறின. தயையை இருதயத்திலிருந்து ஒட்டிவிட விரும்பினான் அவன்.

''ஸ்வாமி...பெண்ணின் இருதயத்திலிருந்து ... இல்லை, இல்லை ... வாயிலிருந்து நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்கள், ஸ்வாமி? இதோ...அதையும் சொல்லிவிடுகிறேன்...ஆமாம்...உங்களை விட்டு நான் எப்படிப் பிரிந்திருப்பேன் என்றுதான் புலம்புகிறேன்...ஸ்வாமி!''

நிலை குத்திப் போய் நின்ற வேணுவின் கண்கள், இந்த வார்த்தைகளைச் செவியுற்றதும் கபகப வென்று கண்ணீரைக் கக்கின.

''உமா!''

''ஸ்வாமி!''

''என்னதான் சொல்ல வந்தாய், நீ?''

''உங்களை விட்டு நான் போகக் கூடாது என்றால்..நீங்களும் இங்கு இருக்க முடியாது என்பதைத்தான்..''

''என்ன?''

''நாம் வேறு இடத்துக்கு—கண்காணாத இடத்துக்குப் போய்விட வேண்டும்.''

''தெளிவாகச் சொல், உமா: என் அப்படி?''

இனிமேல் தன்னைப்பற்றிச் சொல்லிக்கொள்ளாமல் இருப்பது சரியல்ல என்று அவளுக்குத் தோன்றிவிட்டது.

''ஸ்வாமி, நான் என் கதையைச் சொல்லிவிடுகிறேன். கேளுங்கள்'' என்றாள்.

அந்தத் தர்ப்பலமான நிலையிலும் வேணு அவளைப்பற்றி அறிந்துகொள்ள வெகு துடிதுடிப்புடையவனானான்.

''ஸ்வாமி, நாம் அப்படிச் செய்யவில்லை என்றால் இன்றைக்கு ஆறாம் நாள் என் கழுத்தில் பரசக்கியிறை எறிவிடும். ஆமாம், தாலிக்கயிற்றைத்தான் சொல்கிறேன். அந்தப் பாசக் கயிற்றை மாட்டும் யமன் வேறு யாரும் இல்லை. நேற்றுப் பிரக்ஞையற்றுக் கிடந்த உங்களிடமிருந்து என்னை இழுத்துக்கொண்டு போனானே அந்த மாமன்தான்!

''ஸ்வாமி, எனக்குப் பெற்றோர்கள் இல்லை. வேறு உறவினரும் இல்லை. இரண்டு வருஷங்களாய் என் மாமாவின் வீடுதான் எனக்குக் கதியாக இருந்தது. எனக்கென்று என் பெற்றோர்கள் ஒன்றும் வைக்கவில்லை. என் மாமியையும் என் தாதிருஷ்டம்தான் விழுங்கிவிட்டது போலும். என் மாமாவோ பெரிய குடிகாரர். தூங்கும் நேரம் போகப் போதையில் இருப்பார்; போதையில் இருக்கும் நேரம் போகத் தூங்குவார். அந்த இரண்டு குழந்தைகளைப் பார்க்கும்போதுதான் எனக்குப் பரிதாபமாய் இருக்கிறது. வாழ்க்கையையே குடியினுல் வெறுப்பதற்குக் கற்றுக் கொண்டிருக்கும் அவருக்கு எப்படி அவர்களையும் என்னையும் கண்டால் பிடிக்கும்? ஊரார் சிரிக்க நியாய அநியாயமின்றி எங்களைக் காரணமில்லாமல் அடிப்பார், திட்டுவார். என் வாழ்வு அவ்வளவு அவலமாக இருந்தது. அன்று அவருக்கு நல்ல குடி வெறி. பகலெல்லாம் எங்கோ கிடந்து பாண்டு விட்டு மாலையில் வீட்டுக்கு வந்ததும் என்னை அழைத்துச் சாதம் போடச் சொன்னார். காலை முதல் நானும் குழந்தைகளும் சுத்தப் பட்டினி. வீட்டில் ஒன்றும் இல்லை. நால் நாற்று வைத்திருந்ததையும் பக்கத்து டவுனில் விற்று நன்றாய்க் குடித்துவிட்டிருந்தார். என்ன செய்வது?

'''அடி அவ்வளவுக்கு ஆயிட்டுதா? பொறு. எட்டே நாளு! அண்டைவூட்டுக்காரன் சொன்னபிலே செய்யாட்டி உன்னை வழிக்குக் கொண்டுவர முடியாது. பொறுத்துக்க. நாப்பது குழியை இன்னிக்கே வீலைபேசித் தேதி வெச்சுடறேன்' என்று சொல்லிவிட்டு வெளியே போனார். எனக்கு ஒரு விதத்தில் சந்தோஷமாகவே இருந்தது; இத்தக் குடிகாரன் முகத்தில் விழிக்காமல் புருஷன் வீட்டுக்குப் போய்விடலாம் என்று. ஆனால் நான் நினைத்தது எவ்வளவு விபரீதமாக இருந்தது! தேதி எல்லாம் குறிப்பிட்டுப் பார்த்தது யாருக்கென்றால் என் மாமாவுக்கேதான் என்பது பிறகுதான் தெரிய வந்தது. என் தலைவிதிக்கு எல்லை இல்லை. பிராணனை விடுவதைத் தவிர வேறு வழி எனக்குப் புரியவில்லை. எவனுவது மூன் வந்து என்னை ஏற்றுக்கொள்வான் என்ற தைரியம் எனக்கு இருந்தாலும் நான் உயிர் வைத்துக்கொண்டிருக்க மாட்டேன். அதுதான் இல்லையே!

''நடு நிசி. குழந்தைகள் பட்டினியால் சோர்ந்து மயங்கிக் கிடந்தன. மனம் தாளாமல் கால்கள் போனபடி நடந்தேன். உயிரைச் சுலபமாக மாய்த்துக்கொள்ளும் ஓர் இடம் எனக்குத் தேவையாக இருந்தது. கடைசியாக இந்த மலையடிவாரத்துக்கு வந்தேன். அருணோதயமாகி விட்டது. அதற்குள் கால்கள் தள்ளாடின. கண்கள் இறுத்தன. மலைச் சரிவை மெதுவாகத் தாண்டி இந்தப் பக்கம் வந்தபோது ஏனோ என் மனத்தில் உத்சாகம் இளைத்தெழுந்தது. ஒரு

மேடையில் மெதுவாக உட்கார்ந்து சாய்ந்து கொண்டேன். தூரத்தில் இந்த ஆசிரமம் தெரிந்தது. எங்கும் தென்பட்ட காட்சிகள் என் உயிரைப் பலியிட்டுக்கொள்ளும் எண்ணத்தைக் கேலி செய்தன..என் மனம் லேசாக மாறி வந்தது. ஆசிரமத்தை ஒரு தடவை சுற்றிப் பார்த்துவிட்டு வந்தேன். அதன் பிறகு தாங்கள் அழகு வடிவத்துடன் அமர்ந்து தியானிப்பதைக் கண்டேன்... 'உயிரை விடுவது பெரிதல்ல; அதைவிட உத்தமமான தொண்டு செய்து பிழைக்க முடியாதா?' என்று உங்கள் தோற்றம் சொல்லிக்கொண்டிருந்தது. அந்த நிலையில் எந்தக் குரூர சக்தியையும் எதிர்க்க முடியும் என்ற நம்பிக்கை எப்படியோ உதயமாயிற்று. ஆனால் அந்த நம்பிக்கை எவ்வளவு வலுவற்றது என்பது நேற்று அந்தக் குடிகாரன் என்னைத் தேடி வந்தபோது வெளியாயிற்று. உங்கள் முன்னிலையில் விபரீதம் நேரிட்டுவிடுமோ எனக் காரணமின்றி அவரைப் பின்பற்றிச் சென்றேன். நாற்பது குழி நிலம் விற்றுகிவிட்டது. விவாகச் சடங்குக்கு வற்பாடு நடந்துகொண்டிருந்தது. மேலும் சாமான்கள் வாங்கப் பக்கத் தூருக்குச் சென்றுள்ள சமயம், நான் இன்று இங்கு வந்துவிட்டேன். நான் எதை எண்ணி ஊரைத் துறந்து வந்துவிட்டேனோ அதை நிறைவேற்ற இரண்டு வழிகளே இருக்கின்றன. ஒன்று உயிரை விடுவது; மற்றொன்று கண் காணுமல் போய்விடுவது.....ஸ்வாமி! தங்கள் யோசனை எதுவோ, அதைத் தயவு செய்து சீக்கிரமே சொல்லிவிடுங்கள்'' என்று உமா தன் கதையைச் சொல்லி முடித்தாள்.

அந்த அபலையின் இந்தச் சோகக் கதை வேணுவை மிகவும் கலக்கிவிட்டது. வெகு நேரம் பேசாமல் இருந்தான். பிறகு, ''உமா.....நான் என்ன சொல்லட்டும் ... 'மனத்தின் பேதைமைக்கு விதி காரணமாகுமா?' என்றேனே; யாருக்குப் பேதைமை தெரியுமா? வாழ்க்கையைக் கடைசல் பிடித்து வாழ நிச்சயித்து வந்தவன் நான்...எனக்கு அவகாசம் கொடு...நான் உன்னுடன் வந்துவிடுவது என்பது எப்படிச் சாத்தியமாகும்?'' என்றான்.

''ஸ்வாமி! அவகாசம் கொடுப்பதென்றால் என் அழிவுக்குப் பிரயத்தனப்பட வேண்டும் என்றுதான் அர்த்தம் என்பது தங்களுக்குத் தெளிவாகவில்லையா?''

அவள் குரல் மிகவும் தீனமாக இருந்தது.

''ஆமாம்; உமா! அது எனக்குப் புரிகிறது... இரு...என்னைச் சிறிது சிந்திக்க விடு...ஆமாம்; ஆமாம்; நான் சிந்திக்கத்தான் வேண்டும்...''

அவன் தன் மனத்தைக் கல்லாக்கிக்கொண்டு வெளியே நடக்கலானான்.

மனோவேகத்துக்குத் தகுந்த உடல் வலிமை இல்லை. ஆயினும் அவன் தடுமாறிக்கொண்டே வழக்கமாகப் பிரார்த்தனை செய்யும் இடத்தை அடைந்தான்.

வெகு நேரம் அவ்விடத்தில் அசையாமல் உட்கார்ந்திருந்தான். அன்றுபோலவே இன்றும் அவன் மனம் ஒரு நிலையில் அடங்கவில்லை. அவன் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து ஓடோ பார்த்தான். அவள் அன்று உட்கார்ந்திருந்த அந்த மேடை தெரிந்தது. கவனம் மாறிற்று.

''ஸ்வாமி'' என்ற அந்த இனிய குரல் மறுபடியும் காதில் விழுவதுபோலத் தோன்றிற்று.

ஆஹா, அந்தத் தீங்குரலின் இனிமை எப்படி அவன் இருதயத்தைக் கவர்ந்துவிட்டது!

'இனிமைக்கு இருதயத்தைக் கவரும் சக்தி இருந்தால் அவள் மாமாவிடம் அதன் சக்தி எங்கே போயிற்று? விந்தைதான் இது!...

'ஒரு கணத்தில் என் வாழ்க்கையையே மாற்றி விட்ட மாயக் குரல் அவள் மாமாவிடம் மட்டும் ஏன் செல்லவில்லை?

'அபலையிடம் பொருந்தி நிற்கும் அந்த இனிமை என் மனத்தைச் சபலிக்கவிட்டதென்றால் அது இனிமையின் சக்தியினாலா? அல்லது அபலையின் எளிமையினாலா?'

இதற்கெல்லாம் அவன் மனம் வீணாக அர்த்தம் கண்டுபிடிக்குமுன், ''ஸ்வாமி!'' என்று ஆசை மத்திலிருந்து உமா ஒங்கிய குரலுடன் அழைப்பது கேட்டது.

''ஸ்வாமி! ஸ்வாமி!''

ஊஹூம். அசையவில்லை அவன்.

''நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? நான்..... என்னை....ஐயோ....என் மாமா....போய்வருகிறேன்...'' என்று விட்டு விட்டு உமா சத்தமிட்டுக் கூவினாள்.

வேணு தன் மனம் எழுப்பிய கேள்வியிலேயே லயித்துவிட்டான். அரைகுறையாகக் காதில் விழுந்த உமாவின் வார்த்தைகளுக்கு அவன் மனம் அர்த்தம் கொள்ளவே இல்லை. வார்த்தைகள் காரணமின்றி, அர்த்தமின்றி உபயோகிக்கப்படுவதாக அவன் ஞாபகம். ஆகவே பேசாமல் இருந்தான்.

அரை நாழிகை ஆயிற்று.

கவனம் சூழ்ந்தது. உமாவின் அந்த வார்த்தைகளை மறுபடி அவன் தன் நினைவுக்குக் கொணர்ந்தான்.

''நான்....என்னை....மாமா....ஐயோ....போய் வருகிறேன்...''

'இதற்கு என்ன அர்த்தம்? அப்படியானால் உமா என்ன ஆனாள்? நான் எவ்வளவு மடத்தனமாய்ப் பேசாமல் இருந்துவிட்டேன்!'

''உமா!''

மலைச்சரிவில் போய் மோதிய சப்த அலைகள் 'உமா' என்று அழைத்த அவன் குரலையே பழித்துக் காட்டின.

* * *

வேணுவின் முன் இரண்டு பிரச்னைகள் இருந்தன. ஒன்று உமாவை ஏற்பது. மற்றொன்று அவளை மறப்பது. ஏற்பது என்றால் ஆசிரம வாழ்க்கைக்கு மூற்றுப்புள்ளி இடவேண்டும். மறப்பது என்றால் ஆசிரமத்தை நிலைநிறுத்தலாம். ஆனால், கட்டுக்கு அடங்காமல் மீறிப் போய்விட்ட மனத்தை நிலைநிறுத்த முடியுமா?

வேணுவுக்குக் காலையிலிருந்து காரணம் இல்லாமல் இருப்பே கொள்ளவில்லை. காலையிலிருந்து என்ன? அந்தச் சில நாட்களாகவே அப்படித்தான் இருந்தது அவனுக்கு.

அன்று பிரார்த்தனை செய்யும் இடத்திலிருந்து ஆசிரமத்துக்குப் போய்ப் பார்த்தபோது அவன் உள்ளமே வெறித்துப் போய்விட்டது. சர்வ மங்களமாகக் காட்சியளித்த அந்த ஆசிரமக் குடில், செம்மண் காவியிட்ட அதன் அழகிய வாயில் புறம் யாவும், எங்கும் சூனியமாய்த்தான் அவன் கண்களுக்குத் தென்பட்டன. உமா அங்கே இல்லை. அவளது அபயக்குரலைக் கேட்டும் எழுந்து உடனே வந்திராத அவன் தன்னையே, தன் சிந்தனையையே, நிந்தித்துக்கொண்டான்.

எதிரே உமா நிற்பதுபோல் வாயை விட்டு, "எங்கே போய்விட்டாய்?" என்றுகூட அலறினான். அதைக் கேட்பார் யார்? அமைதியின் அந்த அடக்கம் - அந்த மௌனம் - அவனுக்கு அச்சத்தையே எழுப்பியது. அபசகுனத்தையே பிரதிபலித்தது.

உள்ளம் நிலைக்காது பதறினான். உடல் தளராது அங்குமிங்குமாக ஓடினான். ஒன்றிலும் சிந்தையில்லாது கதறினான்.

"பெண்ணின் இருதயத்திலிருந்து நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்கள், ஸ்வாமி! தங்களை நான் எப்படிப் பிரித்திருப்பேன் என்றுதான் புலம்புகிறேன்" என்ற அந்த வாக்கியம் அவனை ஆட்டி வைத்துவிட்டது. ஆசிரமத்தை விட்டு மலைக்கு மேலே ஓடினான்.

வான வெளியைப் பார்த்தான். நிர்மலமான ஆகாயம் அவன் சிந்தையைத் தட்டிக்கொடுத்தது. நிமிர்ந்துகொண்டான். "உமா! போ—என் மனத்தை விட்டு! நீ அன்று வருவதற்கு முதல் நாள் நான் எவ்வளவு நிம்மதியாக இருந்தேன்! மனம் எவ்வளவு தெளிவாக இருந்தது! எங்கே அந்த நிம்மதி? என் மனசை விட்டுத் தொலைந்து விடு. உன்னை எண்ணியா இந்த ஆசிரமத்தை நான் நிர்மாணித்தேன்? நான் அப்படி நிர்மாணிக்கையில் உன்னுடைய சேவையையா நான் எதிர் பார்த்தேன்? இல்லை:. இல்லவே.."

இவ்விதமெல்லாம் கதற வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது.

குயில் ஒன்று கூவிற்று. பேடை ஒன்று பதில் கொடுத்தது.

அவன் மனம் பயம் கொண்டது.

"உமா! இன்னும் சற்றைக்கெல்லாம் உன் கழுத்தில் மாங்கல்யம் ஏறிவிடும். அப்புறம் நீ யார்?"

* * *

வேணுவின் கேள்விகள் இந்த இடத்தில் தான் ஆரம்பமாயின:

"நான் யார்?

"என் கடமை என்ன?

"எனக்கு எதற்கு இந்த வீண்பாசமெல்லாம்?"

இவ்விதம் அவன் திருப்பித் திருப்பிக் கேட்டது இது எத்தனையோ ஆயிரம் முறையாகிவிட்டது.

கடைசியாக இப்படிக் கேட்கும்போது அவன் ஆசிரமத்திலிருந்து கிராமத்திற்குச் செல்லும் வழியில் பாதி தூரம் வந்துவிட்டிருந்தான்.

திடீரென்று நின்றான். மெய்ம்மறந்து உமாவைக் காப்பாற்றும் முயற்சிக்காக ஓடிவந்தது அவனுக்குப் புலனாயிற்று.

இது எத்தனை அசட்டுத்தனமாகும்? அவன் எவ்விதம் அவளைக் காப்பாற்றுவது - அதாவது கல்யாண பந்தத்திலிருந்துதான் - சாத்தியமாகும்?

திடீரென நின்றான். கால்கள் திரும்ப எத்தனித்தன.

"நீ யார்?"

"உனக்கு வேறு யாரும் இல்லையா?"

"உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?"

இவ்விதம் கேட்க ஆரம்பித்துவிட்டான். சித்தம் கலங்கியவனைப்போல. கடைசித் தடவையாகக் கேட்கும்போது அவன் ஆசிரமத்தையே நெருங்கிவிட்டான்.

எற்கனவே நொந்திருந்த சரீரம் தாங்கமாட்டாமல் இரைப்பு எடுத்தது.

இரைக்க இரைக்க ஓடிவந்தான்.

ஆசிரமத்தின் வாசல் வந்ததுந்தான் நின்றான்.

"அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டான். தொப்பென்று உட்கார்ந்தான். கண்களை இறக மூடிவிட்டது அசதியின் மிகுதி.

* * *

"ஸ்வாமி!"

வெகு தொலைவிலிருந்துதான் அந்தச் சப்தம் வந்தது. ஆயினும் அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்தான் வேணு.

'ஆமாம், குரல் எங்கிருந்து வருகிறது?'

சுற்று முற்றும் பார்த்தான்.

அந்திப்போதின் செக்கர் வானம் உலகமே பற்றி எரிவதுபோலச் செம்மையைக் காட்டியது. மலையின் பின்புறம் இறங்கிவிட்ட ஆதவன் அந்த ஓர் உருவத்தை மலையுச்சியில் கட்டத்தான் தயங்கி நின்றுகொண்டிருந்தானு?

"ஸ்வாமி!"

"உமா!"

வேணு சுயபலத்தால் அவ்வளவு எளிதில் அந்த மலையுச்சியை நெருங்கிவிட்டிருக்க முடியாது. அவனுள் ஊக்கிய ஒரு சக்திதான் - அந்தக் குரலின் இனிய சக்திதானே என்னவோ - அப்படி வாரிக்கொண்டே போயிற்று அவனை.

"நில், உமா!" என்று கூச்சலிட்டான்.

"ஸ்வாமி! எல்லாம் முடிந்துவிட்டது. கழுத்தில் கயிறு எறிவிட்டது. அதுதான் அதோ என்னை இழுக்கிறது! ஆமாம்...தாங்கள் 'நில்' என்று சொல்லி அதை இழுத்து நிறுத்திவிட முடியாது. ஸ்வாமி...உங்கள் ஆசிரமம்! உங்கள் தொண்டு...ஹஹ்ஹஹ்ஹா..."

அவ்வளவுதான்! வேணு திகைத்து ஓரடிகூட முன்வைக்காமல் நின்றுவிட்டான். அவன் வாய் அடைத்துப்போய்விட்டது. கண்கள் உமாவின் உடல் மலைச்சரிவில் நிதையும் காட்சியை இடைவிடாது நோக்கின. நிணமும் சதையும் குருதியும் வேறுபட்டன.

வெகு நேரம் அந்த நிலையிலேயே நின்றான் வேணு.

எத்தனை நேரம் நின்றானோ?

அவன் வாய் கடைசியாகக் கீழ்க்கண்டவாறு முணுமுணுத்தது; அலறியது:

"உங்களை விட்டு நான் போகக்கூடாது என்றால் நான் வேறிடத்துக்கு, கண் காணாத இடத்துக்குப் போய் விடவேண்டும்..."

"உமா! சரியான வார்த்தைதான் சொன்னாய். ஆமாம்...நானும் இதோ, இப்பொழுதே வந்துவிட்டேன்...பயப்படாதே...!"

* * *

கடைசியாக நான் பளிச்சுப் பளிச்சென்று பதில் சொல்லுவதற்கு இருந்த சந்தர்ப்பமும் போய்விட்டது!

முற்றும்

உரைகல்

இலக்கியச் சுவையை அநுபவிக்கும் முறைகள் பல. ஒரு குறிப்பிட்ட நூலிலே ஆழ்ந்து அதன் சொற்பொருள் இன்பங்களை நுகர்வது ஒரு வகை. பிற நூல்களோடு ஒப்பிட்டு அதனால் கிடைக்கும் வேறுபாட்டின்பத்தை உணர்வது ஒரு வகை. இந்த முறையில் கம்ப ராமாயணத்தையும் கந்த புராணத்தையும் ஒப்புநோக்கி அவற்றின் சுவையை வெளியிடும் நூல் வேலும் வில்லும் என்பது. ஸ்ரீ ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் இதனை எழுதியிருக்கிறார். (அல்லயன்ஸ் கம்பெனி; விலை ரூ. 1.) நூலுக்குத் தோற்றுவாயாக முருகன் பெருமை என்ற கட்டுரை அமைந்திருக்கிறது. முருகன் பெருமையைப் புலப்படுத்தும் கவிகளை அதன் பின்னர்ச் சேர்த்திருக்கிறார். 'கம்பரும் கச்சியப்பரும்' என்ற கட்டுரை அவ்விரு புலவரும் வில்லுக்கு நாயகனுகிய ராமன் கதையிலும் வேலுக்கு இறைவனுகிய முருகன் கதையிலும் தம் கவித்திறத்தை எப்படிக் காட்டியிருக்கிறார்கள் என்பதை ஒப்புமைச் சுவைபட வெளியிடுகின்றது. இலக்கியச் சுவையை இன்னவாறு நுகரவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்பவர்கள் இந்த நூலைப் பன்முறை படிக்கவேண்டும்.

சில காலமாகத் தமிழில் ரவீந்திரரின் நூல்கள் ஒன்றன்பின் ஒன்றுக வெளியாகிவருவது தமிழ் நாட்டார் பெருமைப்படுவதற்குரிய செய்தி. மொழிபெயர்ப்பு என்றாலே முகங்கோணுபவர்கள், சிறந்த அறிஞர்களுடைய நூல்கள் தமிழில் வரவரத் தமிழருக்கு உணர்ச்சியும், நாமும் முயலவேண்டும் என்னும் ஊக்கமும் உண்டாவதை மறைக்க முடியாது. கலைமகள் காரியாலயத்தார் தொடர்ச்சியாக டாகூரின் நூல்களை வெளியிட்டுவருவதை அன்பர்கள் அறிவார்கள். 'சிதைந்த கூடு' என்ற நெடுங்கதை ஒன்றை மங்கள நூலகத்தார் வெளியிட்டிருக்கிறார்கள். (நுங்கம்பாக்கம், சென்னை; விலை ரூ. 1-8-0.) ஸ்ரீ த. நா. குமாரஸ்வாமி டாகூர் எழுதிய மூல வங்காளியிலிருந்து அழகிய தமிழ் நடையில் மொழிபெயர்த்திருக்கிறார். மனிதனுடைய உணர்ச்சியை உருவடையதாக்கிக் கதையை நிகழச் செய்வது மகாகவி டாகூரின் பேராற்றல். அதனை இதிலும் காண்கிறோம். நாகசுர வாத்தியத்தில் ஒருவர் நடத்தும் ராக சஞ்சாரத்தில் சில சமயங்களில் இன்ன ராகமென்று தெரியவண்ணம் நெடுநேரம் பிரமிக்க வைப்பதைப்போலக் கதலுக்கும் நடப்புக்கும் வேறுபாடு தெரியாதபடி மதனியையும் மைத்துனனையும் சித்திரிக்கிறார். இந்த உணர்ச்சி சஞ்சாரத்தில், படிப்பவர்களுக்கு ஒரு விதமான தனி இன்பம் - இன்னதென்ற முடிவு தெரியாதபோது, தெரியவேண்டும் என்ற வேகத்தில் ஏற்படும் இன்பம் - உண்டாகிறது.

செயற்கைக் கொயினை

"ராமு"

கொயினுவின் பிறப்பிடம் தென் அமெரிக்கா. அந்தக் கண்டத்திலுள்ள பெரு என்னும் நாடு சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன் ஸ்பானியர் வசம் இருந்தது. அங்கே கவர்னராக இருந்தவர் பெயர் லிங்கன். அவர் மனைவி நோய் ஜுரத்தால் பீடிக்கப்பட்டிருக்கையில் ஒரு மரத்தின் பட்டையிலிருந்து தயாரித்த கஷாயத்தினுல் குணமடைந்தாளாம். இது காரணமாகத்தான் அத்தருச் சிங்கோனு என்ற பெயர் வந்ததாம். பெரிய மனிதர்களின் நோயை நிவர்த்திக்கும் எந்த மருந்தும் பிரபலமாகிவிடுவது இயற்கை அல்லவா? இது தவிர ஒரு கிறிஸ்துவப் பாதிரி இதே மாதிரி தென் அமெரிக்காவில் ஜுரமாய்க் கிடக்கையில் சுதேசி ஒருவன் இந்தப் பட்டையின் உதவியால் அவரை நோய்வாயிலிருந்து மீட்ட தாகச் சொல்வர். அவர்களுக்கு வந்த ஜுரம் மலேரியாவாகத் தான் இருந்திருக்க வேண்டும். இதன் பிறகு பாதிரிகள் இந்தப் பட்டையின் மகிமையை ஐரோப்பாவில் பரப்பினர். ஒரு காலத்தில் இதற்குப் பாதிரிப்பட்டை என்ற பெயரே வழங்கிவந்தது.

ராபர்ட் உட்வேர்ட்

பெருவைச் சுற்றியுள்ள பெரும் காடுகளில் அங்குமிங்கும் வளர்ந்திருந்தது இந்த மரம். ஒரு நூற்றாண்டுக்கு முன் டச்சு அரசாங்கத்தார் நூறு மரங்களுக்கு மேலாக அங்கிருந்து கொணர்ந்து ஜாவாவில் பயிரிட்டனர். சிங்கோனுவிற்கென்றே ஏற்பட்ட இடம்போல அங்கு இந்த விருக்ஷம் ஏராளமாக உற்பத்தியாயிற்று. அல்ஜீரியா, இலங்கை முதலிய இடங்களில் இப்படிப்பட்ட முயற்சி பலிதமாகவில்லை. ஆகவே சிங்கோனு வளர்ப்பதில் ஜாவாவிற்கு ஏகபோக உரிமை என்றே சொல்லலாம்.

மலேரியாவுக்கு மனிதன் இதுவரை தயாரித்திருக்கும் வைரி கொயினு ஒன்றுதான். இதற்குப் பதிலாக வந்திருக்கும் அடப்ரின் (atabrin) முதலிய மருந்துகள் எதுவும் இதற்கு ஈடாக வில்லை. கொயினுவின் கசப்பிலேயே ஒரு சக்தி இருக்கிறது. அதனுல் உமிழ்நீர் அதிகமாகிறது; ஜாடராக்கினி ஊறுகிறது. இரைப்பையில் ரத்த ஓட்டம் விருத்தியாகி ஜீரணசக்தி அதிகரிக்கிறது. ஆனுல் சில சமயங்களில் கொயினுவால் கூட இந்தக் கொடும் ஜுரத்தைக் கண்டிக்க முடிவதில்லை. ரத்தத்தில் கலந்த மலேரியாக் கிருமி மேலும் கோடிக்கணக்கான கிருமிகளை உற்பத்தி செய்கிறது. இவை ஜனிக்கும் காலத்தில்தான் ஜுரம் வேகமாக அடிக்கும். அப்பொழுது கொயினு தன் சக்தியை இழந்துவிடுகிறது என்று தோன்றுகிறது. வெளியில் ஜுரம் அடிக்கும் வேளையில் கொயினுவைக் கொடுக்காததற்கு இதுதான் காரணம். மலேரியாவையன்றி மற்ற ஜுரங்களுங்கூடக் கொயினு ஓரளவு கண்டிக்கும்.

இருந்தாலும் இம் மருந்தினுல் உடலுக்குக் கெடுதலும் ஏற்படுகிறது. இதை ருசித்துச் சாப்பிடுவதால் அநேகருக்குக் காது செவிடாகிவிடுகிறது. சங்கீத ஞானம் உள்ளவர்களுக்கு ஒரு ரீங்காரம் கேட்பதும் உண்டு. முதல் தடவை கொயினுவை உட்கொண்டவுடனேயே சிலருக்கு இந்தக் கோளாறுகள் தோன்றுகின்றன.

எண்பத்தெட்டு வருஷங்களுக்கு முன்னிருந்தே மேல்நாட்டு விஞ்ஞானிகள் கொயினுவை ரசாயன முறையில் தயாரிக்க முயன்று வந்திருக்கின்றனர். போன வருஷம் ஏப்ரல் மாதந்தான் இந்த முயற்சி வெற்றிகரமாக முடிந்தது. இதற்குப் பெறுபாளிகள் ராபர்ட் உட்வேர்ட் (Robert Woodward), வில்லியம் டோயரிங் (William Doering) என்ற இரண்டு இளம் அமெரிக்க விஞ்ஞானிகளும், எட்வின் லாண்டு (Edwin Land) என்ற கண்ணுடிக் கம்பெனி முதலாளியும். முதலாமவருக்கு வயசு 29; இரண்டாமவருக்கு 24.

லாண்டு கம்பெனியாரின் ஒருவகைக் கண்ணுடியைச் செய்யும் முறையில் கொயினு உபயோகிக்க வேண்டிய அவசியம் இருந்தது. 1931-ஆம் வருஷம் ஜப்பான் மஞ்சூரியாவில் புகுந்த பொழுதே கொயினுப் பஞ்சம் நிச்சயம் என்பதை இந்த முதலாளி ஊகித்து, உட்வேர்டின் உதவியினுல் கொயினு இல்லாமலே மாற்றப்பொருள்களைக் கொண்டு அந்தக் கண்ணுடியைத் தயாரிக்க ஆரம்பித்தார். ஆனுல் அந்த விஞ்ஞானிக்கு என்னவோ ரசாயன முறையிலேயே கொயினுவைத் தயாரிக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. லாண்டுக்கு அப்பொழுது கொயினு அவசியமில்லாத போய்விட்டபோதிலும் உட்வேர்டுக்கு அவருடைய

ஆர்வத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டிய வசதி களை அளித்தார். இதுபோன்று நம் நாட்டில் விஞ் ஞானிகளுக்கு ஆதரவு கிடைப்பது அருமை.

யுத்தத்தில் தாராளமாக உபயோகிக்கப்படும் ஓர் அபாய வெடி மருந்துக்கு (T. N. T.) அடிப் படையான டோலுவால் (toluol) என்னும் வஸ்து, மோட்டார் சைகிள்களில்கூட முன்பு கார்பைட் (carbide) விளக்கில் எரிக்கப்பட்டு வந்த அவிடலீன் (acetylene) என்னும் வாயு, என்னும் இரண்டையும் நிலக்கரியிலிருந்தே உண் டாக்கலாம். இவற்றின் சேர்க்கைப் பொருள் ஒன்று, 7-ஹைட்ராக்லிஐஸோக்விஞ்லைன் (7-hydroxyisoquinoline) என்பது. இதைக் கொயினைாக மாற்ற இந்த விஞ்ஞானிகள் முயன் றனர். இதற்கும் கொயினுவுக்குமுள்ள சம்பந் தத்தைச் சிறிது விவரமாகக் கவனிப்போம்.

அநேக செங்கல்கள் கொண்டது ஒரு வீடு. பல கணிதங்களால் ஆனது ஒரு புஸ்தகம். இதே மாதிரி எந்தச் சிறு பொருளும் எண்ணற்ற அணுக் களின் சேர்க்கையால் ஆனது. தங் கம், வெள்ளி போன்ற வஸ்துக் களில் இந்த அணுக்களெல்லாம் ஒரே மாதிரி இருக்கும். உப்பு, படிக்காரம், தண்ணீர் போன்ற பதார்த்தங்களில் இரண்டு மூன்று விதமான அணுக்கள் சேர்ந்திருக் கும். இந்த அணுக்களே எத்தனை சக்தி வாய்ந்த சூக்ஷ்மதரிசினியினு லும் காண முடியாது. உதாரணமாக, 1500,000,000,000,000,000,000 தங்க அணுக்கள் சேர்ந்தாலும் ஒரு குன்றுமணி எடைத் தங்கங்கூட ஆகாது.

வில்லியம் டோயரிங்

ஒவ்வொரு பரமாணுவிலும் இருக்கும் எழுத்துக் கள் சிலவே. ஆனல் அந்த எழுத்துக்களைக் கொண்டு கணக்கற்ற வார்த்தைகளே உண்டாக்க லாம். நமது பாஷையிலாவது இருநூறு எழுத்துக் களுக்கு மேல் இருக்கின்றன. உலகத்தில் இது வரை தெரிந்த அணுக்களோ 92 வகைதான். இவற்றின் விதவிதமான சேர்க்கையினுல் உண் டானவையே பிரபஞ்சத்திலுள்ள சகல வஸ்துக் களும். உதாரணமாக, 'சமாதானம்' என்ற வார்த் தையை எடுத்துக்கொள்வோம். 'தா' வை நீக்கி விட்டால் 'சமரனம்' என்ற வேறு வார்த்தை ஆகி றது. 'ச்'வை அழித்துவிட்டால் 'மாதானம்' என்ற ஊரின் பெயராகிறது. இதுபோல 'தானம்', 'மானம்' என்றெல்லாம் வரலாம். எழுத்துக்களே வெளியில் எடுக்காமலேகூட மாறுதல்கள் ஏற்பட லாம். 'சகரம்' என்பதை 'நகரம்' எனவும் 'பாதர சம்' என்பதை, 'பாதசரம்' எனவும் அமைக்கலாம்.

மற்றொரு விதமான உதாரணங்கூட நாம் எடுத் துக்கொள்ளலாம். கிராமங்களில் தென்னை குரும்பையையும் ஈர்க்குச்சியையும் வைத்துக் கொண்டு சப்பரம்போலும், வீடுபோலும், பெட்டி போலும் விதவிதமாகச் செய்து விளையாடுவார்கள். அதே ஈர்க்குச்சிகள்தாம், அதே குரும்பைகள் தாம். ஆனல் அமைப்புதான் வெவ்வேறு விதம். இந்த விஞ்ஞானிகள் செய்த பரிசோதனையும் இது போன்ற ஒரு விளையாட்டு. வாயில் நுழையாத பெயருள்ள மேற்சொன்ன வஸ்துவின் அணுக் களும் கொயினுவில் உள்ள அணுக்களும் ஒரே மாதிரிதான். அமைப்பு மாத்திரம் வித்தியாசம். இவர்களின் லக்ஷ்யம் அமைப்பை மாற்றுவதே. எழுத்துக்களின் அமைப்பு மாறினுல் வார்த்தை யின் அர்த்தமும் மாறுவதுபோல அணுக்களின் அமைப்புக்கேற்ப வஸ்துவின் குணதிசயங்களும் மாறுபடும். ஆனல் ஒரு வார்த்தையை இன் னென்றுக மாற்றுவது மாதிரி அத்தனை சுலபமாக ஒரு வஸ்துவை வேறு வஸ்துவாக மாற்றிவிட முடியாதே!

1943-இல் தொடங்கியது இவர்கள் போராட் டம். ஒரு வருஷகாலம் விடா முயற்சியின் பலனுக, ஆரம்பித்த வஸ்துவிலிருந்து க்வினேடாக்வீன் (quinotoxine) என்ற பொரு ளைத் தயாரித்தார்கள். இதிலிருந்து கொயினுவை அடையும் முறை முன்னமேயே தெரியும். ஆகவே இன்று நிலக்கரிப் பொருள்களி லிருந்தே கொயினுவைத் தயா ரிக்கும் ரகசியம் கிட்டிவிட்டது.

வழி தெரிந்துவிட்டதேயொழிய இதனுல் உடனே கொயினுப் பஞ்சம் தீர்ந்துவிடும் என்பதில்லை. இந்த முறையில் ஒரு கொயினு மாத்திரை செய்ய ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழிக்கவேண்டும். இருந்தாலும் நாளடை வில் இதை உபயோகித்து அபரிமிதமாகவும் சாலமாகவும் கொயினு தயாரிக்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. இப்பொழுதேகூட எத்தனையோ மூதலாளிகளும் மற்றவரும் இந்த முறையைப் பயன்படுத்த முயன்றுகொண்டிருக் கிறார்கள்.

யுத்தத்திற்கு முன்பே வருஷந்தோறும் மலேரி யாவால் மாய்ந்தவர்கள் சராசரி மூப்பது லக்ஷம். யுத்தம் ஆரம்பித்த பிறகு இந்த எண்ணிக்கை பின்னும் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. இதுவரை அடங்கியிருந்த பிரதேசங்களில்கூட மலேரியா கட்டுமீறிப் பரவிவிடும் என்பது சுகாதார நிபுணர்களின் கூனை. இந்த நெருக் கடியில் கொயினுப் பஞ்சமும் சேர்ந்து ஜனங்கள் அவஸ்தைப் படும் சமயத்தில் இந்த கவீன முறை கண்டுபிடிக்கப்பட்டது நன்மை யாயிற்று.



கி. ஸ்ரீ. ஸ்ரீ.

(சென்ற இதழ் 58-ஆம் பக்கத் தொடர்ச்சி)

[**பத்மநாபன்** : வயசு 17. பள்ளிக்கூடப் படிப்பை முடித்து வெளிவந்திருக்கிறான். அவனுடைய **அப்பா** : உபரத்தியாயர். 50 வயசு. கம்பீரமான தோற்றம். கண்டிப்பான சுபாவம். பத்மநாபனை அத்தை வீட்டுக்கு அனுப்புகிறார். அப்போது, **அம்மா** : அவனைத் தடுக்கப் பார்த்தும் பயன் இல்லை. அவன் தங்கை, **கோமளம்** : சுறுசுறுப்பானவள். கலங்காத அறிவு, இளகிய மனம். அவன் புறப்படுமுன்பு அவள் கடிதம் வருகிறது. சென்னைக்குப் போனதும், **அத்தை** : பத்மநாபனை வரவேற்று, அவன் கொணர்ந்த கடிதத்தை, பாங்க் மானேஜிங் டைரெக்டரான கணவனிடம் கொடுக்கிறாள்.]

அத்திம்பேர் மறுபடி ஒரு தரம் அந்தக் கடிதத்தை மேலாகப் பார்த்து விட்டு, "அதெல்லாம் பரவாயில்லே. ஒன்றும் கவலைப்படவேண்டாம் என்று எழுதிவிடு" என்று அத்தையிடம் சொன்னார். பிறகு காபியை அருந்திக்கொண்டே என் புறமாகத் திரும்பி, பரிவு கலந்த குரலில், "பத்து, இனிமேல் நீ இங்கே இருந்து படிக்கவேண்டும்; தெரிகிறதா?" என்றார்.

நான் சரி என்று தலையசைத்தேன்.

சற்று நேரத்துக்கெல்லாம் அவர் காரிலே வெளியே போய்விட்டார். "என்ன அத்தை, அத்திம்பேர் சதா வெளியிலேயே சுற்றிக் கொண்டிருப்பாரோ? வீட்டிலே தங்கமாட்டார் போல இருக்கிறதே!" என்று கேட்டேன்.

"ஆமாண்டா; அவருக்கு ஓய்ச்சல் ஒழிவு ஏது? காலே ஒன்பது மணிக்குப் போனால் ராத்திரி ஒன்பது மணிக்குத்தான் வீடு திரும்புவார். பாங்கி வேலைகளையும் ஷேர் மார்க்கெட் விவரங்களையும் பார்த்துக்கொள்வதற்கே அவருக்குப் பொழுது கிடைப்பதில்லே. வீட்டுவிஷயங்களை அவர் எங்கிருந்து கவனிக்க முடியும்? அதெல்லாம் நான்தான் பார்த்துக்கொள்கிறேன்" என்றாள் அத்தை.

அத்திம்பேர் சொன்னதிலிருந்து, என் மேற்படிப்பு விஷயமாகவே அப்பா எழுதியிருக்க வேண்டும் என்று தோன்றிற்று. நான் அத்தை வீட்டில் தங்கியிருந்து, அவர்களுடைய பழக்க வழக்கங்களோடு முன்னதாகவே ஒத்துப்போவது நல்லது என்று எண்ணி அவர் என்னை அனுப்பியிருக்க வேண்டும். ஆனால், அத்திம்பேர் அந்தக் கடிதத்தைப் படித்ததும் ஏன் சிறிது நேரம் யோசித்தார்? அவருக்கு என்னை வைத்துக் கொள்ளப் பிரியம் இல்லையா? அப்படி இராது. அவர் என்னிடம் மிகவும் அன்போடு பேசினாரே. கடிதத்தில் வேறு விஷயம் இருக்கும். 'அது என்ன?' என்று என் மனம் கேட்டுக்கொண்டே இருந்தது. அத்தையைக் கேட்டால் சொல்லியிருப்பாள். ஆனால் அவளிடம், "அப்பா என்னை எதற்காக இங்கே அனுப்பியிருக்கிறார், அத்தை?" என்று கேட்பது?

மறுநாள் ஞாயிற்றுக்கிழமையாக இருந்தும், அத்திம்பேர் ஒன்பது மணிக்கே சாப்பிட்டு வெளியே போனார். நாங்கள் சாப்பிடும்போதுதான், சமையலிலே ருசியைக் கூடக் கவனிக்காமல் அவர் சாப்பிட்டிருக்கிறார் என்பது தெரியவந்தது.

"ரசத்தில் உப்பே இல்லே, அத்தை!" என்று அந்த ஆராய்ச்சியை முதலில் வெளியிட்டவன் நான்தான்.

பங்கஜம் கேலிச் சிரிப்போடு, "மாமாவின் சமையலைப் பற்றி அம்மா நேற்றுப் பிற்றிக்கொண்டாளோ இல்லையோ? அதற்குப் பலன் இது. சமையற்கார மாமாவும் தம் சாமர்த்தியத்தைக் காட்டியிருக்கிறார்" என்றாள். அந்த நிலையில், அவள் முகத்தில் என்னைத் தூண்டும் விசுகரம் இருந்தது. என் சங்கோசம் கொடிப் பொழுதில் பறந்தது. அவளுக்குச் சூடான பதில் கொடுக்க நினைத்து, "இதிலே என்ன சாமர்த்தியம் வேண்டியிருக்கிறது?" என்றேன்.

"உப்பு இல்லாத ரசம் பண்ணுவது ஒரு தனிக் கலை; தெரியுமா உனக்கு?" என்று அவள் சவால் விடுத்தாள்.

சமையற்கார மாமா உப்பைப் பொடி செய்து கொண்டு வந்து போட்டார். அப்போது அவள் என் கண்களைக் கூர்ந்து பார்த்தாள். எனக்குக் கூச்சமாகப் போயிற்று. அவளை என்ன செய்வது? 'சில்விஷம்' அவள் ஜன்மத்தில் பிறந்தது!

அத்தை தெய்வபக்தி உள்ளவள். தினந்தோறும் மாலையில் கோயில்களுக்குப் போகும்போது, என்னையும் பங்கஜத்தையும் கூடவே அழைத்துச் செல்வாள். தன் சிநேகிதிகளிடம் நான் அங்கே படிக்க வரப் போவதாகச் சொல்லிக்கொண்டாள். என்னைக் கொண்டு அவள் தன் பிள்ளையில்லாக் குறையைத் தீர்த்துக்கொள்ள விரும்பினாள் என்று தோற்றியது. சில சமயம் தன் பெண்ணைவிட அன்பாக என்னிடம் நடந்து கொள்ளலானாள். என் இலையில் தனியாகத் தயிர் ஊற்றுவாள். பிற்பகலில் காபியோடு பழங்கள் கொடுப்பாள். பங்கஜம் சாயங்காலம் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தும் மறுபடி பழத்திலே பங்கு கிடைக்கும்.

"நீ வந்து நாலைந்து நாளாகிறது; எண்ணெய் தேய்த்துக்கொள்ளவே இல்லையே?

சூடு மண்டைக்கு ஏறிவிடாதோ?" என்றுள் ஒரு நாள். அப்பாவின் பராமரிப்பில் நான் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறைதான் எண்ணெய் தேய்த்துக்கொள்வது வழக்கம். என் அசட்டையைக் கண்டு அத்தை கோபித்துக்கொண்டு, "நன்றாக இருக்கிறது பிள்ளை வளர்க்கிற சவரணை!" என்று கூறி, தானே எண்ணெயைக் கொண்டுவந்து என் தலையில் தேய்த்துவிட்டாள்.

சென்னையில் எழும்பூர், மியூசியம், லெண்டிரல், துறைமுகம், கடைவீதிகள் - பல இடங்களைப் பார்த்தேன். நான் வந்து ஒரு வாரம் ஆகியிருந்தது. ஞாயிறன்று மாலையில் கடற்கரைக்குப் போவதாகத் திட்டம் போட்டிருந்தோம். அன்று அத்தையின் தோழி ஒருத்தி அவளைத் தன் வீட்டுக்கு அழைத்திருந்தமையால், அவள் வர முடியவில்லை. தான் தோழியின் வீட்டிலே காரிலிருந்து இறங்கிக்கொண்டு, என்னையும் பங்கஜத்தையும் கடற்கரைக்குப் போய்வரச் சொன்னாள்.

கார் மெரினாவில் நின்றது. டிரைவர் யாரையோ எதிர்பார்த்தவன் போலக் காலடிப் பாதையில் நின்றான். "நீங்க போயி கரையிலே குந்துங்க. நானு இப்போ உங்க பின்னுடியே வந்துடறேன். தண்ணீலே மட்டும் போகாதீங்க; அம்மா என்னைச் சும்மா விடமாட்டாங்க!" என்றான்.

'நீ வராததால் ஒன்றும் முழுகிப் போய் விடாது' என்று சொல்பவள் போலப் பங்கஜம் அவனைப் பார்த்தாள். நாங்கள் இருவரும் அலையருகே கரையில் போய் உட்கார்ந்தோம்.

முதல் முதலாகக் கடலைப் பார்க்கும் போது எனக்கு அதன் நன்மைகள் நினைவுக்கு வரவில்லை. 'கடலிலே ரத்தினங்கள் இருக்கின்றன; பெரிய பூகண்டங்களை ஒன்று சேர்த்துக் கப்பற் பிரயாணத்துக்கு வசதியாக இருக்கிறது; மழை பொழிவித்துப் பூமியைக் குளிரச் செய்கிறது; சென்னையைப் போன்ற பெரிய நகரங்களுக்கு ஏராளமாக நல்ல காற்றை அளிக்கிறது...' என்ற எண்ணங்களெல்லாம் என் மனத்தில் உதிக்கவில்லை. 'இராப்பகல் ஓயாமல் கர்ஜித்துக்கொண்டே இருக்கும் இந்தக் கடல் எத்தனை பிரம்மாண்டமான கப்பல்களுக்கெல்லாம் தன்னுள்ளே ஜலசமாதி அளித்திருக்கிறது! அகாதமான, பரந்த இந்த ஜலராசியின் முன்பு மனிதன் ஒரு நீர்த்திவலையைப் போன்றவன்! தன்னையே நம்பிக்கட்டுமரங்களில் சென்று மீன் பிடித்துவந்து பிழைக்கும் எத்தனை வலைஞர்களை இது விழுங்கியிருக்கிறதோ! ஊருக்கெல்லாம் உப்பீடும் இந்தக் கடலுக்கு நன்றி என்றகுணம் உண்டா? "ஓடி வா, ஓடி வா, உள்ளே அடக்கிக்கொள்கிறேன்!" என்று சொல்வது போல அல்லவா இதன் ஒவ்வொரு பேரலையும் உருண்டு புரண்டுகொண்டு ஓடிவருகிறது? கரையிலே கூடியிருக்கும் இத்தனை ஜனங்களையும் கட்டிக் கவிந்துகொள்ள இது ஆத்திரம் கொண்டிருக்கிறது. என்றுவது ஒரு நாள் இதன் பிரளயத்திலேதான் இந்தப் பூமி மூழ்கிவிடப்போகிறது' என்று சிந்திக்கலானேன்.

"என்ன பத்து, பெருத்த யோசனையிலே ஆழ்ந்துவிட்டாய்? அலைகளிலே போய்ச் சிறிது நேரம் நிற்கலாம், வாயேன்" என்று சொல்லிக்கொண்டே பங்கஜம் துள்ளி எழுந்து நின்றாள்.

'இந்தப் பொல்லாத பெண்ணோடு வந்ததே ஆபத்துத்தான். அத்தை நம்மோடு வராமற் போனாளே!' என்று நினைத்தேன்.

"நீ வேண்டுமானால் போய்வா. சாதாரணமான குளங்களிலும் கிணறுகளிலுந்தான் எனக்கு நீந்தத் தெரியும். இந்தக் கடலிலே என் சக்தியைச் சோதிக்கும் தைரியம் எனக்கு இல்லை" என்றேன்.

"பூ! இவ்வளவு பயங்கொள்ளியா நீ? காற்றுடி விடத்தான் உனக்குத் தெரியுமாக்கும்! சரி, நான் உன்னைப் பிடித்துக்கொள்கிறேன், வா!" என்று சொல்லிக்கொண்டே அவள் என் கையை இழுத்தாள்.

இனிமேல் அவளோடு போகாமல் இருப்பது அவமானம் என்று நினைத்தேன். அலைகளிலே போய் நின்றேன். குழந்தையைக் குளிப்பாட்டும் தாயின் கரங்களைப்போல என் காலிலே ஜல்லென்று நீரை இரைத்துவிட்டு அலைகள் திரும்பின. அவற்றினிடையே, அதிலும் பங்கஜம் அருகிலே நிற்க, குதிப்பது எனக்கு வேடிக்கையாக இருந்தது. அலைகள் கூச்சலிட்டுக்கொண்டு கரைக்கு வரும்போது பங்கஜம் தத்திக் குதிப்பாள். அவை திரும்பும்போது கால்களை மணலிலே ஊன்றி வைத்துக்கொள்வாள். நானும் அவளைப் பார்த்து அப்படியே செய்தேன்.

ஆனால், கடற்கரையில் அந்த இடம் சாய்வாக இருந்ததனால் ஒவ்வொரு கணமும் எனக்குப் பயமாகவே இருந்தது. எந்த நிமிஷத்தில் அலை ஓடிவந்து என்னை விழுங்கிவிடுமோ என்ற எண்ணம் வலுத்தது. அடபாவமே! நான் அப்படி எண்ணியதற்கும் திடீரென்று மிகப் பெரிய அலை ஒன்று வருவதற்கும் சரியாகவா இருக்கவேண்டும்! என் மூழங்காலைத் தொட்டுக்கொண்டு அது சுமார் பதினைந்து அடித்தூரம் கரைக்குச் சென்றது. அதை அடுத்து மற்றோர் அலை வந்துகொண்டிருந்தது. நான் முன்னால் பார்க்கிறேன்: அஸ்தமிக்கும் கதிர்களிலே தளதளக்கும் ஓரே நீலநீர்ப் பரப்பு; பின்னால், வெள்ளையாக நுரைத்துச் சென்ற பேரலை; இரு புறமும் ஜலம், ஜலம்! பங்கஜம் கால்களை ஊன்றி வைத்துக்கொண்டிருந்தாள்; ஆனால் என்னால் அப்படிச் செய்ய முடியவில்லை. என் கால்கள் வெட

வெடவென்று நடுங்கலாயின. என் உடல் முழுவதும் வெலவெலத்தது. கண்ணை மூடிக் கொண்டேன்.

நான் மெல்ல மெல்ல அலையிலே போகிறேன்; கடலில் மிதக்கிறேன். மூச்சை ஆனமட்டும் அழுத்திப் பிடித்துக்கொண்டிருக்கிறேன்; ஆயினும் உடல் தத்தளிக்கிறது, மூச்சுத் திணறுகிறது. 'லபக், லபக்' என்று உப்புத் தண்ணீர் உள்ளே சென்றது. 'பங்கஜம், பங்கஜம்!' என்று கூவ விரும்புகிறேன். ஆனால் வாயிலிருந்து வார்த்தை எழும்பவில்லை. நான் தண்ணீருக்குள்ளே, அலைகளின் கீழே, கடலின் அடித்தலத்துக்கு மெதுவாய்ப் போய்க்கொண்டிருக்கிறேன்.

"டேபத்து, நேராக நில்லுடா!" என்ற குரலைக் கேட்டுக் கண் விழித்துப் பார்த்தேன். பங்கஜத்தின் மென்மையான, கொழுகொழுப்பான கரங்கள் என்னைப் பிணைத்துக் கொண்டிருப்பதை உணர்ந்தேன். அப்போதுதான் அந்தப் பெரிய அலை திரும்பிக்கொண்டு இருந்தது. ஏழெட்டு ஸெகண்டுகள் ஆகியிருக்கும்; அதற்குள்ளே என் மனம் எத்தனை தூரம் தாவியிருக்கிறது!

நேர்ந்தது பயங்கரமான துர்விபத்துத்தான். ஆனால் பங்கஜம் அதைப் பொருட்படுத்தவில்லை. தன்னை அறியாமலே அவள் என்னைக் காத்திருக்கிறாள்.

கரையிலே இருந்த ஜனங்களையோ அவர்களின் பரிகாசங்களையோ நான் கவனிக்கவில்லை. தப்பித்துக்கொண்டதில் சந்தோஷம்; பங்கஜத்தின் சாகசத்தைக் கண்டு வியப்பு. கால்கள் தள்ளாட, கரையில் ஒரு பக்கமாகப் போய் உட்கார்ந்தேன். பங்கஜம் என்னைத் தொடர்ந்தாள்.

அலை எங்கள் இருவர் உடைகளையும் அடிப்பாகத்தில் நனைத்திருந்தது. "பார்த்தாயா பங்கஜம்! அலைகளிலே போகவேண்டாம் என்று முன்னமே சொன்னேன் அல்லவா?"

"அதனால் என்ன? இனிமேல் உனக்கு அந்தப் பயம் இராது."

"ஆமாம்; நீ எப்போதும் பக்கத்திலே இருந்தால்!"

நான் சொன்ன அந்தப் பதிலை அவள் கவனித்ததாகத் தெரியவில்லை. எழுந்து நின்று, கடலைப் பார்த்தவண்ணம் காற்றிலே உடைகளை உலரவைத்துக்கொள்ள ஆரம்பித்தாள்.

நான் சிறிது நேரம் பேசாமல் உட்கார்ந்திருந்தேன். மனம் சிறிது நிலைப்பட்டதும் எழுந்தேன். உடைகள் உலராயின.



ஆனால் என் நெஞ்சம் மேன்மேலும் பொங்கிக்கொண்டே இருந்தது.

அந்த மாலை மயக்கத்திலே கண்ட அவளுடைய உருவத்தை நான் என்றுமே மறக்க முடியாது. வானத்தில் தோன்றிய வர்ண விஸ்தாரங்கள் அனைத்தும் அவளிடத்தில் இருந்தன. ரத்தினபரணங்கள் பூண்ட கடல் மங்கையாக அவள் எனக்குத் தோற்றினாள். அப்போது அவள் அணிந்திருந்த அந்தக் கத்திரிப்பூ நிறப் பாவாடையும், அதன் ஓரத்தில் கருநீலப் பட்டிலே வளைவாகப் பொன் நாகங்கள்போல ஓடிய ஜரிகைக் கோடுகளும், ஜகஜகவென்று ஜிகினு வேலைப்பாடு அமைந்த கறுப்பு வெல்வெட்டு ஜாக்கெட்டும், காற்றலைகளிலே மிதந்து அலைந்த



அந்தக் கிளிப்பச்சை 'பார்டர்' கொண்ட எலுமிச்சை மஞ்சளான மெல்லிய பட்டு மேலாக்கும் - எல்லாம் தத்ரூபமாக ஞாபகம் இருக்கின்றன. அவள் கணைகளிலே தெய்வீக ஒளி வீசியது.

என் உள்ளத்திலிருந்து நன்றியறிவு ததும்பிக்கொண்டிருந்தது. "பங்கஜம், இன்று நீ என்னைக் காப்பாற்றினாய்" என்றேன்.

அவள் ஆச்சரியமுற்றவள்போல என்னைப் பார்த்து, "ஊம்! அப்படியா?" என்றாள்.

அவள் வேடிக்கை செய்வது எனக்குப் பிடிக்கவில்லை. சிறிது கோபத்தோடு முகத்தைத் திருப்பிக்கொண்டு, "உனக்கு எல்லாம் விளையாட்டுத்தான் போ!" என்றேன்.

அவள் சட்டென்று என் கண்ணெதிரே முகத்தைக் கோணிக்கொண்டு, "எங்கே, இப்படி என்னைப் பார்! நான் அப்படி என்ன செய்தேன்? நீ விழப்போனாய், பிடித்துக்கொண்டேன்; அவ்வளவுதானே?" என்றாள்.

"இளங்கன்று பயமறியாது என்கிறார்களே, சரியாகத்தான் இருக்கிறது" என்றேன் கம்பீரமாக.

"ஆமாம், நான் இளங்கன்று; நீ உலக அநுபவங்கள் நிறைந்த தொண்டு கிழவன்!" - பங்கஜம் கூறி முடிப்பதற்குள்ளே டிரைவர் எங்களைத் தேடிக்கொண்டு வந்தான்.

"எம்மாம் நேரங்க? ஒரு கடன்காரங்கிட்டே பேசிக்கினுருந்தேன்.—காரை எடுத்திட்டு ஐயா கிட்டே போவணுமே?" என்றாள்.

"யாரால் இவ்வளவு நேரம்? நீ முன்பே காரைக்கு வருவதாகச் சொன்னாயே?" என்று பங்கஜத்தின் அதட்டலைக் கேட்டதும், அவன் வாயை மூடுவதாக அபிநயம் செய்தான்.

நாங்கள் வீடு திரும்பும்போது மணி எட்டு ஆகியிருந்தது. அத்திம்பேர் வந்திருந்தார். "ஐயா உன்னைக் கோபிக்க மாட்டாரா?" என்று டிரைவரைக் கேட்டேன். "அவரு வேறு யாரு காரிலேயாவது, இல்லாட்டி பஸ்ஸிலேயாவது வந்துட்டிருப்பாரு. அவராலே எனக்குத் தொந்தரவே கிடையாதுங்க" என்றான்.

உள்ளே போனதும், அப்பா வந்திருப்பதாகத் தெரிந்தது. சாயங்காலம் பஸ்ஸிலே வந்திருப்பார். ஒரு வாரத்துக்கு முன் என்னை அனுப்பியவர், இப்போது தாமே ஏன் ஓடி வரவேண்டும்?

அவரைப் பார்க்க நான் கூடத்துக்குப் போனேன். அத்திம்பேரும் அவரும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"உங்கள் கடிதத்தைப் பார்த்தவுடனே பணத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டேன்" என்றார் அத்திம்பேர்.

"உங்களுக்குச் சௌகரியமாக இருக்க வேண்டுமே என்றுதான் ஒரு வாரம்

முன்னமே பையனை அனுப்பினேன்'' என்று சொல்லிக்கொண்டே இருந்த அப்பா, என்னைப் பார்த்ததும், ''இவன் எப்படி இருக்கிறான்?'' என்று கேட்டார்.

அத்திம்பேர் சிரித்துக்கொண்டே, ''இனிமேல் இவன் எங்கள் வீட்டுப் பிள்ளை. பையன் சௌக்கியமாக இருக்கிறான் என்று கேளுங்கள்'' என்றார்.

''காலையில் என்னோடு அவனையும் அழைத்துப் போகலாம் என்று நினைக்கிறேன். காலேஜ் திறக்கும்போது வரட்டுமே. அது வரையில் அவன் அம்மாவுக்கு மனசுக்கு ஆறுதலாக இருக்கும்'' என்றார் அப்பா.

இதைக் கேட்டுக்கொண்டே பக்கத்து அறையிலிருந்து வந்த அத்தை, ''அவன் இங்கே இருக்கட்டுமே. நடுவில் ஏதுக்குப் போய் வரவேண்டும்? நான் அவனைப் பார்த்துக்கொள்ள மாட்டேனா?'' என்பதற்குள், ''எனக்கு நீ சொல்லவேண்டுமா அதெல்லாம்? நீ வேறு, நான் வேறா? காலேஜில் சேர்ந்ததும் அவன் அடிக்கடி அங்கே வர முடியாது. அவனுடைய அம்மாவுக்காகத்தான் இப்போது அவனை அழைத்துப்போக விரும்புகிறேன்'' என்று அப்பா குறுக்கிட்டார்.

''நானும் எத்தனையோ நாளாக உன்னிடம் சொல்லுகிறேன், அண்ணா! ஊரில் எங்கள் நிலத்தை எல்லாம் எவனோ மூன்றும் மனுஷன் பாழ்படுத்திக்கொண்டிருக்கிறான். நீயும் மதனியுமாக அங்கே இருந்து பார்த்துக்கொண்டால், எங்களுக்கு எவ்வளவோ உபகாரமாக இருக்கும்.''

''நேற்றுக்கூட ஊரிலிருந்து அந்த மனுஷனைப்பற்றிப் புகார் வந்திருக்கிறது'' என்று அத்திம்பேர் குறைப்பட்டுக்கொண்டார்.

''என்னவோ, எனக்கு இந்த வாத்தியார் வேலை பிடித்துப்போய்விட்டது. அவளுக்கு இப்போது உடம்பு சொஸ்தமாகிக்கொண்டு வருகிறது. ஆச்சு; அநேகமாக அடுத்த வருஷத்தோடு இந்த வேலையை விட்டுவிட்டு, நில விஷயத்திலே கவனத்தைச் செலுத்தலாம் என்று நினைக்கிறேன்.''

''நீ எப்போதும் இப்படியே சொல்லிக்கொண்டிருக்கிறாய், அண்ணா! ஹூம்!'' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே அத்தை உள்ளே போனாள்.

அப்பா எதற்காகப் பணம் வாங்குகிறார் என்பது தெரியவில்லை. ஒருவேளை கோமளத்துக்கு ஏதாவது நகைகள் செய்கிறார்களோ என்னவோ! அப்பப்பா! இந்தப் பெண்களுக்குத்தான் என்ன நகை ஆசை!

மறுநாள் காலையில் அப்பா என்னை அழைத்துக்கொண்டு புறப்பட்டார். 'சீக்கிரமே சந்திப்போம்' என்ற கருத்தோடு, பங்கஜம் என்னைப் பார்த்தாள். அவளை விட்டுப் புறப்படும்போது என் மனம் என்னவோ செய்தது.

3

அப்பாவோடு நான் வீட்டுக்குள் நுழைந்த போது, கோமளம் வந்திருப்பதைக் கண்டேன். நாங்கள் வருவதற்குச் சற்று நேரம் முன்புதான் அவளும் வந்திருந்தாள். அவளைப் பார்த்ததும் அப்பாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''நீ தனியாகவா வந்தாய்?'' என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

''தனியே என்ன? திருச்சியில் அவர் எக்ஸ்பிரஸில் ரெயிலேற்றிவிட்டார். செங்கற்பட்டுவரையில் எனக்குத் தெரிந்த சிநேகிதி ஒருத்தி துணையாக வந்தாள்'' என்றாள்.

''நன்றாக இருக்கிறது நீ வந்த லக்ஷணம்! நான்தான் உன் கடிதம் வந்தவுடனே ஏற்பாடுகள் எல்லாம் செய்துகொண்டிருக்கிறேனே! அதற்குள்ளே ஓடி வருவானேன்?''

''நீங்கள் சீக்கிரமாகப் பிரயத்தனம் செய்கிறீர்களோ இல்லியோ என்று நினைத்தேன். நேரில் வந்தால் உடனே வேலையை முடித்துக்கொண்டு போகலாம் என்று எண்ணி, அவரை ரெயிலேற்றிவிடச் சொன்னேன்.''

''பணம் என்ன, இங்கே காய்த்துத் தொங்குகிறதா, உடனே பறித்துக் கொடுத்துவிட? இத்தனை அவசரமாக வருவானேன்? எல்லாம் சிறுபிள்ளைத்தனம்!''

பள்ளிக்கூடத்துக்கு நேரமானபடியால் அப்பா ஸ்நான அறைக்குக் குளிக்கச் சென்றார். அவசர அவசரமாகச் சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடம் போய்விட்டார்.

அவர் பின்னாலேயே நாங்களும் குளித்துச் சாப்பிட உட்கார்ந்தோம். அப்போதுதான் நான் கோமளத்தோடு விரிவாகப் பேச முடிந்தது.

''அப்பா அத்தையிடமிருந்து பணம் வாங்கி வந்திருக்கிறாரே; உனக்கு நகை செய்வதற்கா இவ்வளவு வேகம்?'' என்று கேட்டேன்.

என் அறியாமையைக் கண்டு அவள் மனசுக்குள்ளேயே சிரித்தாள். ஏதாவது ஒரு ரகசியத்தை வைத்துக்கொண்டு அதை ஒளித்து வைப்பதிலேதான் மனிதவாழ்க்கை ஆனந்தப்படுகிறதுபோலும்!

''உங்கள் அத்தை ரூபாய் கொடுப்பாள் என்றே நான் நினைக்கவில்லை. ஏதோ நீங்கள் போன வேளை; நல்ல சமயம்!'' என்றாள் அம்மா, ஆழ்ந்த கருத்தோடு.

''அம்மா, அத்தையைப்பற்றி நீ இப்படி நினைப்பதெல்லாம் சுத்தத் தப்பு. அவள் எவ்வளவு அன்பாக இருக்கிறாள் தெரியுமா, நம்மிடம்?'' என்று என்னையும் அறியாமல் சடக்கென்று சொல்லிவிட்டேன்.

''நம்மிடம் என்ன, உன்னிடம் என்று சொல்லு'' என்று திருத்தினாள் அம்மா.

''நம்மிடந்தான். அன்றைக்கு அப்பாவும் அதைத்தானே சொன்னார்?'' என்று நான் சொல்வதற்குள், ''அண்ணாவுக்கு அங்கே

உபசாரம் பலமாக நடந்திருக்கும், அம்மா!" என்று கோமளம் பரிகாசமாகப் பேசினாள்.

"ஏன் நடக்காது? இவனே அங்கேயே வைத்துக்கொள்வதற்காக எல்லாத் தந்திரங்களும் செய்திருப்பான். இல்லாவிட்டால், இத்தனே லேசிலே பணத்தால் உதவுகிற இடமா அது?" என்ருள் அம்மா. அப்படிச் சொன்னுளே தவிர, சமயத்தில் பணம் கிடைத்ததே என்ற நன்றி அவள் கண்களில் லேசாகத் தென்பட்டது.

"அண்ணு அங்கேதான் இருந்து படிக்கட்டுமே; உனக்கு என்ன கஷ்டமாக இருக்கிறது?" என்ருள் கோமளம்.

"நன்ருகச் சொன்னுய்! கொடிக்குக் காய் கனமா என்ன? அவனுேடு இருப்பதை விட வேறு எனக்கு என்னடி பிரபஞ்சம் இருக்கிறது?" என்ருள் அம்மா.

சாப்பாடு ஆனதும் அவள் இளைப்பாறப் போனுள். நானும் கோமளமும் வெகு நேரம் பேசினேம். அவள் வந்த வரலாற்றைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

எந்த ஒற்றுமையான குடும்பத்திலும் பாகப் பிரிவினேயின்போது தகராறு உண்டாவது மிகவும் சகஜம். கோமளத்தின் குடும்பத்தில் அண்ணன் தம்பிகள் தத்தம் பாகத்தைப் பிரித்துக்கொண்டார்கள். சொத்துக்குமேல் கடன் இருந்தது. கோமளத்தின் கணவர் பங்குக்கு இரண்டாயிரம் ரூபாய் கடன் வந்தது. அந்தக் கடனே உடனே தீர்க்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. என்ன செய்வது என்று அவர் யோசித்தார்.

"இந்தக் கடனே ஒருவிதமாகத் தீர்த்தாலொழிய, உங்கள் சம்பளத்தைக் கொண்டு நாம் திருச்சியில் தனிக் குடித்தனம் இருக்க முடியாதே" என்று கோமளம் அவரிடம் சொன்னுள்.

"ஊரிலே ஒவ்வொருத்தனுக்கும் தலைக்கு மேலே கடன் இருக்கத்தான் இருக்கிறது. அதற்காக அவனவன் குடும்பத்தை நடுத்தெருவிலே விட்டுவிடுகிருனு என்ன? ரொம்பச் சமர்த்தாகத்தான் பேசுகிறுய்!" என்று அவர் பதில் சொன்னுர்.

"நான் எதற்கும் அப்பாவுக்கு எழுதுகிறேன். அவர் அத்தையிடம் கடன் வாங்கிக் கொடுத்தால் இப்போதைக்கு நமக்குத் தொந்தரவு இராது. அவர் கேட்டால் அத்தை இல்லை என்று சொல்ல மாட்டாள்" என்று சமாதானம் கூறி, அவள் அப்பாவுக்கு முதலில் கடிதம் எழுதினுள். அவர் உடனே அதற்கு ஏற்ற ஏற்பாடு செய்தார். பணம் கைக்கு வராமல் அவளுக்கு எழுதக் கூடாது என்று சும்மா இருந்தார்.

ஆனுல் அவளால் பொறுத்திருக்க முடியவில்லே. எங்கே விரைவில் பணம் வராமற் போகுமோ என்று சந்தேகப்பட்டாள். தானே நேரில் வருவதுதான் சரி என்று தீர்மானித்துவிட்டாள். அவள் கணவருக்கும் அது சரி என்று பட்டது. ஆனுல் அவளைத் தனியே அனுப்ப அவருக்குச் சம்மதம் இல்லே. ஆபீசிலோ லீவு கிடைப்பதாக இல்லே.

"அங்கே அவர் நிலேமை எப்படி இருக்கிறதோ? நீ அத்தனே உறுதியாக எழுதிய பின்பு அவர் ரூபாய் அனுப்பாமல் இருக்க மாட்டார்" என்று அவர் சொல்லியும் அவள் கேட்கவில்லே. தன்னே ரெயிலேற்றி விட்டு மறுவேலே பார்க்கச் சொன்னுள்.

"அவர் எவ்வளவோ நல்லவராக இருக்கிருரே உன் கல் மனசுக்கு? அவரை இப்படித்தான் நீ ஆட்டி வைப்பது வழக்கமோ?" என்று பரிதாபத்தோடு கேட்டேன்.

"எனக்கா கல்நெஞ்சு? என் பெயரே கோமளமாச்சே! அவருக்கு மிகவும் கோழை மனசு. என்னே ரெயிலேற்றி விட்டதும் அவர் அழுத அழுகை; போகாமல் நின்றுவிடுவோமா என்றுகூட எனக்குத் தோன்றிற்று. 'இதோ, போகிற வேகத்திலேயே திரும்பி வந்துவிடுகிறேன்' என்று சமாதானம் சொன்ன பின்பும் அரை மனசோடு என்னே ரெயிலில் உட்காரவிட்டார். வண்டி மறையும் வரையில் என்னையே பார்த்துக்கொண்டிருந்தார். என்ன செய்வது அண்ணு, எல்லாம் பணக்கொடுமை!" என்று சொல்லும் போது அவள் கண்ணிலே நீர் துளும்பலாயிற்று.

நான் விஷயத்தை மாற்ற எண்ணி, "உண்மையிலே நீ கோமளந்தான். அவரும் உன்னேக் கோமளமாகத்தான் வைத்துக்கொள்கிறுர் என்று சொல்லு!" என்றேன்.

"இந்தப் பரிகாசம் மட்டும் உனக்கு ஜன்மத்திலும் போகாது" என்று கூறியவாறே அவள் புன்னகை புரிந்தாள். வெட்கத்தினுல் அவள் கன்னங்கள் சிவந்தன.

"என் பலவந்தத்தினுல் அனுப்பிவிட்டாரே தவிர, அவருக்கு அங்கே பொழுது போகாது; வேலேயும் ஓடாது. ஒருகால் லீவு வாங்கிக்கொண்டு இங்கே வந்தாலும் வந்து விடுவார்; அல்லது, 'பணம் கிடைக்காவிட்டால் போகட்டும். உடனே வந்துவிடு'

என்று தந்தி கொடுத்தாலும் கொடுப்பார். அவ்வளவு இளகிய மனசு அவருக்கு'' என்றாள்.

''ஆமாம், அங்கே போனபிறகு அந்த அன்புதான் உனக்குப் பெரிசாகத் தெரியும். நாங்கள் எல்லாரும் உனக்கு மனுஷர்களாகவே தோன்றவில்லையே?'' என்று பொய்யாக மிரட்டிக்கொண்டே, ஒரு தாக்கம் போடப் போய்விட்டேன்.

சாயந்தரம் அப்பா பள்ளிக்கூடத்திலிருந்து வந்து சிரமபரிகாரம் செய்துகொண்டதும், ''அப்பா, பணந்தான் கிடைத்து விட்டதே. என்னை அவரிடம் கொண்டுபோய் விட்டு விடுங்கள். அங்கே அவர் சோற்றுக்கு அலைந்துகொண்டிருப்பார்!'' என்று ஆரம்பித்தாள் கோமளம்.

''நன்றாக இருக்கிறது, நீ சொல்வது! வந்த காரியம் என்ன, போகிற காரியம் என்ன? அதற்கென்று வந்தவள் நாலு நாளாவது இருந்துவிட்டுப் போகவேண்டாமோ? ஏதோ எதிர்வீட்டிலே இருந்து கொண்டு அடிக்கடி வந்து போகிறவள் மாதிரி பேசுகிறாயே?'' என்று அம்மா அன்போடு கடிந்துகொண்டாள்.

''வந்த காரியம் ஆயிற்று; இனிமேல் புறப்படுகிற காரியத்தைத்தானே கவனிக்க வேண்டும்?'' என்று அவள் சாதுரியமாகப் பேசினாள்.

''உன் ஆசையை நான் தடுக்கவில்லை, அம்மா! இருந்தாலும் நல்ல நாள் பார்த்துக்கொண்டு அல்லவா புறப்படவேண்டும்?'' என்று சொல்லி, அப்பா பஞ்சாங்கத்தை எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தார்.

ஐந்தாறு நாள் கழித்து ஒரு நல்ல நாள் கிடைத்தது. பள்ளிக்கூடத்திலே லீவு போட்டுவிட்டு, அன்று அவளைத் திருச்சிக்கு அழைத்துப் போகத் தீர்மானித்தார்.

திருச்சிக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் இரவு சாப்பாடு ஆனதும், கோமளம் தன் துணிமணிகளை எல்லாம் எடுத்துப் பெட்டியிலே வைத்தாள். அம்மா கொடுத்த பகணங்களை எடுத்துவைத்து மூட்டை கட்டிக் கொண்டாள். படுக்கச் சென்றபோது, அவளை மறுபடி விட்டுப் பிரியவேண்டுமே என்று எங்கள் எல்லோருக்கும் வருத்தமாக இருந்தது. ஆனால் அவள் மட்டும் அடிக்கடி, ''அவர் அங்கே தனியாக என்ன செய்கிறாரோ? வேளையிலே சாப்பிடமாட்டார்; தூங்கமாட்டார். ஹோட்டல் சாப்பாடும் ஒரு சாப்பாடா? போதாக்குறைக்கு நான் வரும்போது அவருக்கு ஜலதோஷம், கண்ணும் மூக்கும் மொண்டுகொண்டு இருந்தது'' என்று முணுமுணுத்துக்கொண்டே இருந்தாள். இங்கே இருப்பது அவளுக்கு முள்மேல் கிடப்பது போல உறுத்தியது. அதைக் கண்டு எனக்கு அவள்மேல் எரிச்சலாக வந்தது. ''அவ்வளவேன்? ஏரோப்பிளேன் ஒன்று வைத்துக்கொண்டு இப்போதே அங்கே பறந்து போய்விடு'' என்றேன், தாபத்தோடு.

''ஆகா, அதுவும் ஒரு நாளைக்கு நடக்கும், அண்ணா. நாளைக்கு நீ பெரியவனுக்குச் சம்பாதிக்க ஆரம்பித்தால், அப்புறம் எனக்கு என்ன குறைச்சல்?'' என்று புகழ்ச்சியாகப் பேசினாள்.

யாவரும் தூங்கப் போனோம்; ஆனால் யாருக்காவது தூக்கம் வந்தால்தானே? பேசாமல், தூங்குவதுபோலப் படுத்துக் கொண்டிருந்தோம். இரவு சுமார் பதினொரு மணி இருக்கும். வாசலில் ஸைக்கிள் மணி ஓசை கேட்டது. ''ஸார், தந்தி! தந்தி, ஸார்!'' என்று உரக்கக் கூவினான் தந்திச் சேவகன்.

எல்லாரும் திடுக்கிட்டு எழுந்து வந்தோம். ''நான் சொல்லவில்லையா? அவர்தாம் தந்தி அடித்திருப்பார். நாளைக்கு நல்ல நாள் என்று பஞ்சாங்கத்திலே பார்த்திருப்பார். 'பணம் இல்லாவிட்டால் போகிறது; உடனே வந்துவிடு' என்று. எழுதியிருப்பார்'' என்று உள்ளத்தில் உவகையோடு சொன்னாள் கோமளம்.

ஆனால் அப்பாவுக்குத் 'தந்தி' என்ற வார்த்தையைக் கேட்டால் எப்போதும் பயம். 'வாழ்க்கையிலே இவ்வளவு அடிபட்டவராக இருந்தும், இந்தத் தந்தியை வாங்கும் போது ஏனோ இவர் கை நடுங்குகிறதே!' என்று மனசுக்குள் சொல்லிக்கொண்டேன். தந்தியைக் கொடுத்தானதும், சேவகன் சவாரி விட்டான்.

அப்பா தந்தியை அவசர அவசரமாகப் பிரித்தார்; படித்தார்; அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டார். அவருடைய அந்த நிலையைக் கண்டதும், ''என்ன, சொல்லுங்களேன்! மாப்பிள்ளைக்கு ஏதாவது உடம்பா?'' என்று குழறியவாறே அம்மா பதறிப் போய் அழ ஆரம்பித்தாள். கோமளத்தின் முகத்தில் அசடு வழிந்தது; 'ஐயோ! என்னை என்னவோ செய்கிறதே!'' என்று கூறிக் கம்பத்தைப் பிடித்துக்கொண்டு, நின்னை மேல் உட்கார்ந்தாள்.

அவர்களுடைய பேச்சையோ செய்கையையோ கவனிக்காமலே, அப்பா திக்பிரமை பிடித்து, மற்றொரு கம்பம்போல அசைவற்று நின்றார். அவருடைய எண்ணங்கள் எங்கெங்கோ ஓடினன என்பது மட்டும் அவரது முகபாவத்திலிருந்து தெரிந்தது. தந்தி அவர் கைவிரல்களிடையே இரண்டு மடிப்பாகத் தொங்கியது. அந்த ஒரு க்ஷணம் எனக்குத் தாங்கவில்லை. என் மனம் துடித்துப் பதைபதைத்தது.

(தொடரும்)

தி. ஜ. ர.

வருங்காலப் பெண் எப்படி இருக்கவேண்டும் என்று ஸ்ரீமதி குமுதினி சென்ற மாதம் எழுதியிருந்த கட்டுரையைப் பாராட்டிப் பல அன்பர்கள் எழுதியிருக்கிறார்கள். புதுமைப் பெண் எப்படி இருந்தால் நலம் என்பதைப் பற்றிப் பெண்கள் மாத்திரம் ஈடுபடவேண்டுமென்று வரையறை இல்லை. தம் வாழ்க்கைக்கு இன்றியமையாத பெண்மணி எப்படி இருந்தால் நல்லது என்று சொல்ல ஆண்களுக்கும் உரிமை இருக்கவேண்டும். "இதுவரைக்கும் ஆண்களே அந்தச் சட்டத்தை வகுத்துப் பெண்குலத்தை அடிமைப்படுத்தி வந்தது போதாதா? இங்கே கூடவா அந்த அதிகாரம்?" என்று கேடபவர்கள் இருந்தால், "இது சட்டம் அல்ல; உள்ளக் கருத்தை வெளியிடும் கட்டுரை. இதைப் பார்த்துச் சிரிக்கவோ, மறுத்துக் கூறவோ, 'சபாஷ்' போடவோ பெண் குலத்துக்கு உரிமை உண்டு" என்ற விடையை அவர்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

தி. ஜ. ர. புதுமைப் பெண் பழமைப் பெண்ணின் புது அவதாரமாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறார். அதற்கு என்ன காரணங்கள் சொல்லுகிறார் என்பதைப் பாருங்கள். —ப - ர்.

சில விஷயங்களைப் பற்றிச் சிலர் பேசும் போது பயப்படத்தான் வேண்டியிருக்கிறது. இந்த வரிசையில் எனக்கு முன்னே முதல் கட்டுரை எழுதியவரின் நிலைமை சுலபமாகும். என் நிலைமை அப்படியல்ல. பெண்ணைப் பற்றி ஒரு பெண் நல்லதும் எழுதலாம்; கெட்டதும் எழுதலாம். ஆண் அப்படி இரண்டையும் எழுதினால் ஆபத்துத்தான். எழுதுவதற்கு முன்னால், முதலிலே, அன்று மாலே தம் வீட்டுக்குப் போவதா, எங்கேயாவது ஓட்டலில் அச்சாரம் கொடுப்பதா என்பதைத் தீர்மானித்துக் கொண்டு விட்டால்தான், காரசாரமாக எழுதலாம். இல்லையானால், 'பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா, பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா!' என்று பாடிவிட்டுப் போவதுதான் புண்ணியமாகும். அப்படியானால், நான் எந்த ஓட்டலில் அச்சாரம் கொடுத்திருக்கிறேன் என்று அறிய நண்பர்களுக்குச் சிரத்தை உண்டாகலாம். அவ்விதம் ஒன்றும் நான் செய்யவில்லை. காரணம் பயமில்லை என்பதல்ல. கட்டுரையை முடித்த பிறகு, அது அவசியந்தானா என்பதைத் தீர்மானிக்க எண்ணியிருக்கிறேன். கூடியவரையில், அகப்பட்டுக் கொள்ளாமலே எழுதத்தான் உத்தேசம்; வாள்மேல் நடப்பதுபோல் லாகவமாக எழுதவே என் ஆசை. என்றாலும், சில சமயம் நம்மையும் அறியாமலே ஏதாவது எக்கச்சக்கமான உண்மை பீறிட்டுக்கொண்டு வெளிவந்து விடுகிறதல்லவா? அம்மாதிரி நேர்ந்தால்தான் பயம். ஆண்டவனே! அது நேராதிருக்கவேண்டும்!

வாள்மேல் நடப்பதாக அல்லவா சொன்னேன்? பல வருஷங்களுக்கு முன்னே, நாகபட்டணத்தில் பார்த்த ஒரு சர்க்கஸ் காட்சி எனக்கு இங்கே ஞாபகத்துக்கு வருகிறது. அந்தச் சர்க்கஸின் எஜமானி ஒரு பெண்மணி. ஏதோ பாய் என்பது அவள் பெயர். அந்த அம்மாள் ஓர் அபூர்வமான வித்தை காட்டுவாள். அவளுடைய ஆட்கள் கூர்மையான முனைகளுடைய பல ஈட்டிகளை வரிசையாக நட்டுவைப்பார்கள். யார் வேண்டுமானாலும் அந்த முனைகளின் கூரைப் பரீட்சித்துப் பார்த்துக் கொள்ளலாம். உண்மையிலேயே ஊசி முனைபோல் கடுங்கூராயிருக்கும் அந்த முனைகள். அந்த ஈட்டிமுனைகளின் மேலே, அந்த அம்மாளைச் சிலர் அலக்காகத் தூக்கி வைப்பார்கள். அவள் புஷ்ப சயனம் புரிவதுபோல, சில நிமிஷ நேரம் அந்த ஈட்டி முனைகளில் வெகு வசீகரமாக அநாயாசமாகப் படுத்திருப்பாள். பின்பு, அவளை அவர்கள் இறக்கி விடுவார்கள். ஒரு மோகனப் புன்சிரிப்புடன் வெகு கம்பீரமாகச் சபையோருக்குச் சலாம் செய்து, கரகோஷத்தை வாங்கிக்கொண்டு, உள்ளே போய் விடுவாள். ஆட்டமும் அதோடு முடியும். இது வழக்கம்.

அன்று அம்மாள், சர்க்கஸ் அரங்கத்திலே இந்த வித்தை காட்டுவதற்காக வந்து மின்னுள். ஈட்டிப் படுக்கையில் அம்மாளைத் தூக்கி வைப்பதற்கு ஆட்கள் தங்கள் சட்டைக்

கைகளை மடக்கிக்கொண்டு தயாரானார்கள். அச்சமயம், "நில்; நில்! தூக்காதே, தூக்காதே, தூக்காதே!" என்று கூட்டத்தின் ஒரு மூலையிலிருந்து கூச்சல் கேட்டது. சர்க்கஸ் ஆட்கள் திடுக்கிட்டுவிட்டார்கள். சத்தம் வந்த திக்கை நோக்கினார்கள். கொட்டகை முழுவதுமே ஒருவிதமான பரபரப்பு உண்டாயிற்று. மறுபடியும் அந்தக் குரல் எழும்பியது: "மேல் அங்கியைக் கழற்று; கழற்று. அதன் முதுகிலே சூது இல்லியா என்று பார்க்கவேண்டும்!" என்று கணீர் எனக் கேட்டது. ஒரே ஆரவாரம். சந்தடி தானாகச் சற்று அடங்கியதும், ஏதுமே நடவாதது போல வித்தையைத் தொடர்ந்து காட்ட மீண்டும் தயாரானார்கள் சர்க்கஸ் ஆட்கள். ஒரு குரல் ஒரு திசையிலிருந்து வந்தது போகப் பல குரல்கள் பல திசைகளிலிருந்து கிளம்பின. மேல் அங்கியின் முதுகிலே உள் பக்கமாக ஏதோ இரும்புத் தகடு வைத்துத் தைத்திருப்பார்களென்பது கூட்டத்தாரின் சந்தேகம். 'ரிங் மாஸ்டர்' வந்து, என்ன என்னவோ சமாதானம் சொல்லிப் பார்த்தார். கூட்டம் கேட்கிற வழியாயில்லை; அங்கியைக் கழற்றித்தான் ஆகவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தது. கூட்டத்தின் மூர்க்கத்தைக் கண்டு அம்மாள் உள்ளே போய்விட்டாள். அந்தப் பெருங் கூட்டத்திலே பகிரங்கமாக அங்கியைக் கழற்றவாவது! எப்படியிருந்தாலும் ஒரு பெண் அல்லவா? 'பெண் என்று சொல்லி டிலோ, ஒரு பேயும் இரங்கு மென்பார்' என்று நம் மகாகவி பாரதியாரே - பட்டினத்தார் அல்ல - பாடியிருக்கிறார் அல்லவா? "ஹா! அப்படியா! ஏன் இந்த வித்தியாசத்தோனி?" என்று யாரும் சீறத் தேவையில்லை. வித்தியாசம் இயற்கையின் கொடை. ஆனல், அதற்கு ஏற்றத்தாழ்வு என்று அர்த்தம் கற்பித்துக் கொள்ளும் போதுதான் நாம் தவிக்கிறோம்.

அது போகட்டும். வருங்காலத்துப் பெண் எப்படி இருப்பாள் என்பது ஒரு கேள்வி. எப்படி இருந்தால் நலம் என்பது வேறொரு கேள்வியாகும். அது ஆருடம்; இது லக்ஷ்யம். அதுதான் நடக்கும்; இது கனவு. ஆருடம் சொல்லட்டுமா? என் கனவைக் கூறட்டுமா? உண்மையைச் சொல்லுகிறேன். ஆருடம் எனக்கு அவ்வளவாய் வராது. என் லக்ஷ்யம் வருங்காலத்திலே இல்லை. இறந்த காலத்திலேதான் இருக்கிறது. சீதை, தமயந்தி, சாவித்திரி, காரைக்கால் அம்மையார், ஆண்டாள், கண்ணகி முதலிய பெண்களே என் லக்ஷ்யப் பெண் மணிகள். வருங்காலத்துப் பெண்மணியை இன்று காணோம். அவள் சென்ற காலத்தில் இருக்கிறாள். இறந்த காலத்தில் மறைந்திருக்கும் அவளே வருங்காலத்தில் தோன்ற வேண்டிய லக்ஷ்யமாவாள். அதற்கு மனித குலம் தவங்கிடக்குமானல் தவறில்லை.

ஆனல், ஒன்று: மனித குலம் இன்ப வாழ்வு வாழவேண்டுமானல், பெண்தான் லக்ஷ்யத்தோடு உருவாகவேண்டும் என்பது தவறு; ஆணும் லக்ஷ்யத்தோடு உருவாக வேண்டும். லக்ஷ்யப் பெண்ணும், லக்ஷ்ய ஆணும் ஒருவருக்கொருவர் தகுதியுள்ளவராக இருக்கவேண்டும். இன்றுள்ள பெண் அப்படி இல்லை என்று சொல்வோமானல், இன்றுள்ள ஆணுந்தான் அப்படி இல்லை. ஆணுக்குப் பெண் அடிமையாயிருக்க லாகாது; பெண் ஆணுக்குப் பாரவிலங்காயிருக்கவும் கூடாது. பொறுப்பு ஒரு தரப்பில் மட்டும் அல்ல, இரு தரப்பிலுந்தான் இருக்கிறது. லக்ஷ்யப் பெண்ணையும், லக்ஷ்ய ஆணையும் வரவேற்க, ஆண்கள் மட்டிலுமல்ல, பெண்கள் மட்டிலுமல்ல, இருபாலாருமே உழைக்கவேண்டும்.

வருங்காலத்துப் பெண் என்னுரு, ஆயிரம் வருஷத்துக்குப் பின் வரப்போகிற அல்லது வரவேண்டிய பெண்ணைப்பற்றி நான் பேசவில்லை. ஆயிரம் வருஷத்துக்குப் பிறகு ஆகவேண்டிய காரியத்தைப் பற்றி நாம் இப்பொழுதே கவலைப்பட்டுப் பயன் இல்லை. அது அவசியமும் அல்ல. தொள்ளாயிரத்துத் தொண்ணூறாவது வருஷத்தில் வரப்போகிறவர்கள் அதைப்பற்றி நம்மைவிடத் திறமையாகக் கவனித்துக் கொள்ளுவார்கள். நாம் இன்றுள்ள நிலைமையைச் சீர்திருத்தி, அடுத்தபடியை உருவாக்கினால் போதும்.

இன்று பெண்ணின் நிலை என்ன? சமுதாயத்தில்-இந்து சமுதாயத்தில்-அவள் அந்தஸ்து என்ன? அது பழுதில்லாமல் இருக்கிறதா?-கேள்விகள் வெகு சுலபமாயிருக்கின்றன. பதில்களோ? எந்தக் கேள்விக்குமே பதில் அவ்வளவு சுலபமாயிருக்கும் வழக்கமில்லை. சப்பாத்திக் கள்ளியில் ஏன் மாம்பழம் பழுக்கவில்லை என்ற கேள்விகூட, சுலபமாய்த்தான் இருக்கிறது. ஆனல், இதற்கு ஏதாவது பதில் உண்டா? சமுதாயத்தின் குறை நிறைகள், சமுதாயத்தின் ஒவ்வோர் அணிடமும் ஒவ்வொரு பெண்ணிடமும் பிரதிபலிக்கத்தான் செய்யும். சமுதாய அமைப்பு எந்த மந்திரவாதியின் இந்திர ஜாலமும் அல்ல. அது இயற்கைச் சகதிகளும் சரித்திர சக்திகளும் சேர்ந்து கடைந்த பரிணமமாகும். அந்தச் சக்திகளை மறந்துவிட்டோ, அலக்ஷ்யம் செய்தோ, நாம் உருவான செயல் செய்யமுடியாது; பலன் காணவும் முடியாது.

புதுமைப் பெண் எப்படி இருப்பாள்? அவள், பெற்றோர் சொத்திலே பங்கு கேட்பாளா? புருஷன் சம்பளத்தில், ஆபீஸிலிருந்தே அவளுக்கு ஒரு பங்கை அனுப்புவதா, வேண்டாமா? விவாகரத்து உரிமை அவசியமா, இல்லையா? விவாக ரத்துச் செய்து கொள்ளும்போது, மூன்று குழந்தைகள் இருந்தால், ஆளுக்கு எவ்வளவு

பிரித்துக்கொள்வது? புதுமைப் பெண், 'ஸ்நோ' பூசுவாளா, மஞ்சளுக்குத் திரும்பி விடுவாளா?—இந்தப் பிரச்னைகளை யெல்லாம் பற்றிய தொல்லையை மேற்கொள்ள எனக்கு விருப்பம் இல்லை. சொத்துரிமையே தொலைந்து, குரோபாட்கின் கூறும் அராஜகம் உலகில் ஏற்பட வேண்டுமென்பதுதான் என் ஆசை. ஆனல், சொத்துரிமை இருக்கிறவரையில், அதன் உபத்திரவங்களை யெல்லாம் நாம் அநுபவித்துத்தான் ஆகவேண்டும். ஒரு மாகாணத்திலேயே இரட்டை ஆட்சி சாத்தியப்படவில்லை. ஒவ்வொரு வீட்டிலும் இரட்டையாட்சி தொடங்கிவிட வேண்டும் என்னுரல், என்னல் அந்த நிலையைக் கற்பனை செய்யவே முடியவில்லை. என்னுலும், தற்போதைய நிலையில், பல விபரீதங்களும் பரிதாபங்களும் நிகழ்கின்றன என்பது உண்மை. அவைகளுக்கு ஏற்ற பரிகாரங்களைத் தனித்தனியே காண்பது மிக்க அவசியமாகும். அவைகளை யெல்லாம் இங்கே விஸ்தரித்து, ஒரு ஸ்மிருதி கர்த்தாவாக எனக்கு இஷ்டமும் இல்லை; திறமையும் இல்லை.

"பெண்ணுகி வந்ததொரு மாயப் பிசாசு" என்று பட்டினத்தார் பாடியது கொஞ்சம் அநுசிதந்தான். ஆனல், "மானிடவர்க்கென்று பேச்சுப் படில் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே" என்று ஆண்டாள் பாடியது எந்த மூல உணர்ச்சியினுலோ, அதுவேதான் பட்டினத்தடிகள் பாட்டின் மூல உணர்ச்சியும். தம்மை வந்து சூழ முயலும் பாச வலியின் முன்னே தமது திக்கற்ற வேதனையைக் கொட்டுகிறூர் அவர். வாழ்க்கையிலே புனிதமடைய – அற்ப இச்சைகளை யெல்லாம் உதறித் தள்ளி உயர்ந்தெழ - முயலும் ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொருதிக்கும் சில சமயம் இந்த ஆவேசம் வந்துதான் தீரும். இது எதிரி மீது குற்றச் சாட்டல்ல; தன் மீதே குற்றச் சாட்டு. வெறும் உருவகப் பேச்சு; தன் மயக்கம்.

ஆணுக்குப் பெண்ணே, பெண்ணுக்கு ஆணே இழிவென்று நினைப்பதும் சொல்வதும் மூடத்தனம்; நிச்சயமான முட்டாள் தனந்தான். அதற்காக, ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள இயற்கை வேற்றுமைகளை யெல்லாம் ஒழித்துவிடுகிறேன் என்று ஒருவன் மார்தட்டிக் கிளம்புவது அதை விட அறிவீனமாகும். நவீன சயன்ஸ் ஆராய்ச்சியாளர்கள் 'ஆப்பரேஷன்' மூலம் ஆண் எலியைப் பெண்ணுகவும் பெண் எலியை ஆணுகவும் செய்திருக்கிறூர்களாம். எலிகளின் உடல் அமைப்புப் போன்றதுதானும் மனித தேக அமைப்பும். ஆகையால், கொஞ்ச காலத்தில் ஆண் பெண்ணுகவும் பெண் ஆணுகவும் மாறிவிடுவது கூடச் சாத்திய மாகலாம். என்னுலும், ஆணுருவம் இருக்கும் வரையில் ஆணுகவும், பெண்ணுருவம் இருக்கும் வரையில் பெண்ணுகவுந்தான் மனிதர் நடந்துகொள்ளவேண்டும். அந்த அந்த உடலமைப்புக்கேற்ற தனித்தனி அனுபவங்கள் உண்டு; மன உணர்ச்சிகள்உண்டு; சக்தியும் உண்டு. ஆகையால், வாழ்க்கை முறைகளிலே ஆணுக்கும் பெண்ணுக்கும் சில வேற்றுமைகள் இருந்துதான் தீரும். பெண் நாற்று நடுவாள்; ஆனல், உழுவதில்லை. பார்த்து கட்டுவாள்; ஆனல், தண்ணீர் இறைப்பதில்லை. இது இன்றும் கிராமத்திலே நிகழ்ந்துவரும் காட்சி. வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஆணும பெண்ணும் சரி சமானமாக வாழ்வது சாத்திய மல்ல என்றே எனக்குத் தோன்றுகிறது. ஆனல், வாழ்க்கையின் சுகங்களிலெல்லாம் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை இருந்தே யாகவேண்டும்; அவைகளிலே ஆணுக்கு ஒரு நியாயமும் பெண்ணுக்கு ஒரு நியாயமும் இருக்கவே கூடாது. சட்டங்கள் இயற்றும் தொழிலும் நிர்வாகத்தொழிலும் முற்றும் ஆண்கள் கையிலே இருக்குமானல் ஒன்றும் தீங்கு நேர்ந்துவிடாது; அம்மாதிரியே, கல்விபோதனைத் தொழில் பெண்களின் ஏகபோகமாக இருக்குமானல், அதிக நன்மை பயக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆண் பெண் கடமைகளை எல்லாம் உரிமைகளாக மயங்கி, அவைகளை நாம் வகுக்க முயல்வது மதியீனமாகும்.

புதுமைப் பெண் எப்படி இருக்கவேண்டும் என்று எனக்குத் தெளிவாகச் சொல்லத் தெரியவில்லை. ஆனல், எப்படி இருக்கக் கூடாதென்று மட்டில் எனக்கோர் ஆசை உண்டு. சமீபத்திலே அமெரிக்க விகடத் துணுக்கு ஒன்று படித்தேன்.

ஒருவர் மற்ருெருவரைக் கேட்டார்: "அதோ அது யார்? கிராப்புத்தலை, சுருட்டுப்புகை, அரையிலே சல்லடம் - இந்த வாலிப உருவம் என்ன ஆண, பெண்ணு? புரியவில்லையே!"

மற்றவர் சொன்னர்: "பெண்தான்! என் மகள்."

முதல் மனிதர்: "அப்படியா, ஐயா! என்னை மன்னியுங்கள். யாரோ என்று தெரியாமல் சொல்லிவிட்டேன். நீங்கள் அவளுடைய தகப்பனர் என்று அறியாமல் போனேன்."

மற்றவர்: "நான் அவளுடைய தகப்பனர் அல்ல; தாய்!"

இந்தக் கதி மேல் நாட்டில் இப்போது நிகழ்ந்து வருகிறது. பெண் மெல்ல மெல்ல அங்கே ஆணைவிட முயன்றுவருகிறுள். நம் நாட்டுப் புதுமைப் பெண் வேறே எப்படி வேண்டுமாலும் வரட்டும். இப்படி மாத்திரம் வரவேண்டாம். இந்த ஒன்று தான், பெண் தெய்வத்திடம் நான்செய்து கொள்ளும் பிரார்த்தனை யாகும்.

நாசகார நாட்சித் தலைவன்

டி. கே. வேங்கடராமன்

அச்சின் அவதாரத்துக்குப் பின், ஐரோப்பாவில் போர் அரக்கனின் வருகை தெருங்கலாயிற்று. ஸ்பானிய உள்நாட்டுப் போரில் ஜர்மனியும் இதாலியும் ரகசியமாகத் தலையிட்டுச் சர்வாதிகாரி பிராங்கோ குடியரசுக் கட்சியினரைத் தோற்கடித்து ஆதிக்கம் பெற உதவின. ஹிட்லர் தம் ஆர்ப்பாட்டங்களை ஆரம்பித்தார். 1939-ஆம் வருஷம் யுத்தம் மூண்டது. 1940-ஆம் வருஷம் முஸோலினி தம் கண்பாராகிய ஹிட்லர் பக்கம் சேர்ந்து யுத்தத்தில் கலந்துகொண்டார்.

1918-இல் ஜர்மனி யுத்தத்தில் தோற்று வீழ்ச்சி அடைந்தபின், ஜர்மன் சக்கரவர்த்தி ஓட்டம் பிடித்தார். அவருடைய கொடுங்கோல் ஆட்சியும் மறைந்தது. வெய்மார் என்னும் இடத்தில் ஓர் அரசியல் நிர்ணய சபை கூடிற்று. அதன் திட்டப்படி ஜர்மனி ஒரு குடியரசு ஆயிற்று. குடியரசுத் தலைவர் ஜனங்களால் ஏழு வருஷத்திற்கு ஒரு முறை தெரிந்தெடுக்கப்படுவார். சட்டசபை இரண்டு. "ரைக்ஸ்டாக்" என்பது ஜர்மன் மக்களின் பிரதிநிதி சபை; "ரைக்ஸ்டாட்" என்பது ஜர்மன் மாகாணங்களின் பிரதிநிதிகள் கொண்ட சபை. ஜர்மன் சான்ஸலர் என்னும் பிரதம மந்திரியும் அவர் மந்திரிசபையும் சட்ட சபைக்குக் கீழ்ப்படிந்து வேலை செய்யவேண்டும்.

இதாலியில் ஏற்பட்டதைப்போல் ஜர்மனியிலும் அதிருப்திக்குக் காரணங்கள் பல இருந்தன. ஜர்மன் குடியரசு இந்தச் சுழலில் அகப்பட்டுத் தத்தளித்தது. ஜனநாயக முறையில் அதிகம் பயிலாத சட்டசபையில் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் முளைத்தன. 1932-இல், 38 கட்சிகள் இருந்தன. இவை யாவும் சேர்ந்து அமைத்த கூட்டு மந்திரி சபைகள் தேசத்திலுள்ள பல சிக்கல்களைத் தீர்க்க வன்மையற்று விளங்கின. என்றுமே ராணுவ வகுப்பார் செல்வாக்குடன் வாழ்ந்த பிரஷ்யா என்னும் பகுதியில் உள்ளவர்கள் குடியரசுத் திட்டத்தை வெறுத்தார்கள். மூன்று ஜர்மனியில் இருந்த கட்டாய ராணுவச் சேவை மறைந்ததால், ராணுவ வகுப்பாரின் விரோதம் பின்னும் அதிகப்பட்டது. ஜர்மனி தோற்றபின் ஏற்பட்ட குடியரசு, அத்தத் தேர்வி அவமரனத்துடனே இணைக்கப் பட்டுத் தேசகௌரவத்தைப் பாழ்படுத்துவதாக மக்கள் கருதினர். இந்த அதிருப்தியை ஜர்மனி தேசதேசத்தாருடன் செய்துகொண்ட வெர்சாய் (Versailles) ஒப்பந்தம் பின்னும் தூண்டிவிட்டது. அந்த ஒப்பந்தப்படி, ஜர்மனிக்குச் சொந்தமான கிழக்குப் பிரஷ்யாவுக்கும் மேற்கிலுள்ள ஒரு பகுதி போலந்து ராஜ்யத்திற்குக் கொடுக்கப்பட்டது. ஜர்மனி கீழ்ப் பிரஷ்யாவிலிருந்து தூண்டு செய்யப்பட்டது. ஜர்மன் குடியேற்ற நாடுகள் பறிமுதல் செய்யப்பட்டன. ஜர்மனி மிகவும் கடுமையான ஆயுதப்பரிகரணத்திற்கு உட்பட்டது. தவிரவும், யுத்தத்தை ஆரம்பித்த குற்றம் தன்னுடையதே என்று வெளிப்படையாக ஜர்மனி ஒப்புக்கொள்ளவேண்டியதாயிற்று. நேசதேசத்தாருக்கு அபரிமிதமாக நஷ்ட ஈடு செய்யவும் வாக்களித்தது. இந்த உடன்படிக்கையை வெறுத்த பல ஜர்மானியர் பழிக்குப் பழி வாங்கத் தருணம் பார்த்துக்கொண்டிருந்தனர். குடியரசுச் சர்க்கார் இந்த உடன்படிக்கைப்படி நடப்பது அவர்களுக்குப் பெரிய அவமானமாகத் தோன்றியது. இந்த நிலைமையை, 1930-ஆம் வருஷம் தோன்றிய பொருளாதார நெருக்கடி முற்றவைத்தது. ஜர்மனி நஷ்ட ஈடு கொடுக்க முடியவில்லை. அதன் வருமான நிலையே தளர்ச்சி அடைந்து சாய்ந்தது. இந்த இடர்ப்பாடான சமயத்தில்தான் ஹிட்லர் தாம் ஜர்மனியின் காப்பாளர் என்று ஆசை காட்டி முன்னணிக்கு வந்தார்.

ஹிட்லர் ஜர்மானியர் அல்ல; ஆஸ்திரியா தேசத்தில் ஜனித்தவர். அவர் தந்தை சுங்க இலாகாவில் வேலை பார்த்தார். தம்மைப்போல் தம் மகனும் சர்க்கார் உத்தியோகஸ்தன் ஆகவேண்டும் என்பது அவர் எண்ணம். ஆனால், பிள்ளையும் பிதாவும் மாறுபாடான கொள்கைகளை உடையவர்களாக இருந்தமையால் ஒத்துப்போகவில்லை. ஹிட்லர் 1900-இல் லின்ஸ் என்னும் இடத்திலுள்ள நடுத்தரப்பள்ளியில் சேர்க்கப்பட்டார். வேண்டுமென்றே அழிம்பு செய்தார். சேரம் பேறியாளர். படிப்பு ஏறுமா? மேல் வகுப்புக்குத் தூக்கிப் போடவில்லை. அவருக்குப் பதினாலு வயசு ஆகையில் அவரால் ஏற்பட்ட மனக்கவலையால் அவர் தந்தையின் வாழ்நாள் முடிந்தது. தந்தையின் அதிகாரம் ஒழிந்தது. தாயோ பிள்ளையை இஷ்டப்படி விட்டுவிட்டாள். 1905-இல் ஹிட்லர் பள்ளிக்கூடப் படிப்பிற்கு ஒரு மூழுக்குப் போட்டுவிட்டு வெளியேறினர். அச்சமயம் அவரைப் பார்த்தவர்களுக்கு, உடல் வெளுத்துக் குச்சிபோல மெலிந்து நோய்வாய்ப்பட்ட வாலிபராகக் காட்சியளித்தார். அதிகமாக

ஒருவருடனும் பேசுவதில்லை. ஆனால் சில சமயம் பைசாச வெறி கொண்டவர் போலக் கூச்சலிட்டுக் கத்துவாராம்.

தாம் சித்திரக்கலையில் நிபுணர் என்று எண்ணம் கொண்ட ஹிட்லர் வியன்னா நகரடைந்து சித்திரக்கலை பயின்றார். ஆனால் அவர் எழுதிய சித்திரங்களை எல்லாம் வியன்னா கலா நிலையம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. தம்மை அலக்ஷ்யம் செய்தவர்மீது ஹிட்லர் ஆத்திரம் கொண்டது தான் அவர் கண்ட பயன். 1908-இல் அவர் தாய் தன் பிள்ளை எதற்கும் உதவாக்கரை என்று கடைசியில் அறிந்து துயர் கொண்டு மரித்தாள்.

இதன்பின் ஐந்து வருஷங்கள் ஹிட்லர் மிகப் பாடு பட்டு வருந்தினர். பரம ஏழை. உதவுவார் இல்லை. 1908-இல் அவருக்குத் தங்கக்கூட அறை இல்லாமல், பார்க்குகளில் உள்ள பெஞ்சுகளில் இரவில் தூங்குவதும் அங்கிருந்து போலீசாரால் தூரத்தப்படுவதுமான துன்பம் அனுபவித்தார். ரெயில்வே ஸ்டேஷனில் கூலிக்குப் பெட்டிகளைச் சுமந்தார். வேலைமீதே அசாத்திய வெறுப்பு. உலகத்தின் மீது மனக்கசப்பு. பணக்காரர்கள் மீது கடுமையான ஆத்திரம். முக்கியமாக, பிரபல தனிகர்களாக இருந்த யூதர்களின்மேல் சொல்லவொண்ணாத பகையுணர்ச்சி அப்பொழுதுதான் ஜனனமாயிற்று.

மனி

1912-இல் ஜர்மனிக்கு வந்தார். 1914-ஆம் வருஷ யுத்தத்தில் சேர்ந்து "கார்ப்போரல்" என்னும் பதவி அடைந்தார். ஆனால் யுத்தத்தில் காயமடைந்தார். சேனையினின்று விடுபட்டு ம்யூனிக் நகர் சேர்ந்தார். அவ்விடம் 1919-இல், ட்ரக்ஸ்லர் என்னும் ஒரு கொல்லன் தேசிய சமதர்மத் தொழிலாளிகள் கட்சி என்ற ஒரு ஸ்தாபனத்தைக் கிளப்பினான். அதில் 28 பேர்களே இருந்தார்கள். ஹிட்லர் ஏழாம் அங்கத்தினராக அதில் தம்மைப் பதிவு செய்துகொண்டார்.

ஜர்மன் குடியரசு தன்னுல் இயன்றவரையில் ஜர்மனியின் இன்னல்களைத் தீர்க்க முயன்று கொண்டிருந்தது. முக்கியமாக, ஸ்ட்ரஸ்மான் என்னும் சான்ஸலர் 1923 முதல் 1929 வரையில் பதவி வகித்து அரிய தொண்டுகள் புரிந்தார். உள்நாட்டில் சமாதானம் நிலவச் செய்தார். மற்ற ஐரோப்பிய தேசங்களுடன் சமரசமாக நடந்து வந்தார். இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய தேசங்கள் ஜர்மனியுடன் பரஸ்பரம் பேச்சு நடத்தி ஜர்மனிக்கும் பிரான்ஸுக்கும் 1919-இல் ஏற்படுத்திய எல்லையை என்றும் காப்பதாக, லோகார்னே என்னும் இடத்தில் ஒப்பந்தம் செய்துகொண்டார். யுத்தத்தின் காரணமாய் ஏற்பட்ட மனக்கசப்புகள் இனி மறையலாம் என்று எதிர்பார்த்தனர். ஆனால் 1929-இல் ஸ்ட்ரஸ்மான் மரணம் அடைந்தார். தேசத்தில் கலவரம் அதிகரித்தது.

ஹிட்லர் இது வரையில் என்ன செய்து கொண்டிருந்தார்? தம் கட்சியைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பலப்படுத்தினர். 1923-இல் ம்யூனிக் நகரில் குடியரசுக்கு விரோதமாகச் சதி செய்து சிறைவாசமும் செய்தார். அப்பொழுது தான் "மைன்காம்ப்" என்னும் தம் ஜீவிய சரித்தத்தை எழுதினர்.

அதில் தம் கொள்கைகளைப்பற்றி விரிவாக எழுதியுள்ளார். அபத்தமான கருத்துக்களை ஆராய்ச்சி என்னும் மேற்போர்வையில் மூடிப் பண்டிதர் நடையில் வெளிப்படுத்தினர். ஜர்மானிய ஜாதியார் பிறப்புரிமையால் ஹேரேஷ்டமானவராம். உலகத்தைக் காத்தல் அவர்களுக்கென்று விதிக்கப்பட்ட புனிதமான கடமையாம். இங்கிலாந்தும் ஜர்மனியும் ஒரே "ஆரியர்" இனமாதலால், ஜர்மனி இங்கிலாந்துடன் சிநேகமாக இருக்க முடியும். ஆனால், பிரான்ஸ் ஜர்மனியின் கொடிய விரோதி. தவிரவும், பிரான்ஸ் தன் குடியேற்ற நாடுகளிலுள்ள நிக்ரோவருடன் ரத்தக்கலப்பு எற்பட்டு, தன் இனத் தூய்மையை இழந்தமையால், அது ஜீவிக்கத் தகுதியற்றது. ஆரியர்களுக்கு எதிரிகளான யூதர்களோ வேறு இனம் என்பதோடுகூடப் போக்கிரிகள் அடங்கிய ரகசியச் சங்கம். ஐரோப்பிய நாகரிகத்திற்கு விரோதிகள். யூதர் பூண்டோடு அழியவேண்டும். இப்படி மனக்கோட்டை கட்டின அதிசயமான சிந்தம் 1927-இல் எழுதி முடிவுற்றது.

நாளுக்கு நாள் ஹிட்லர் கட்சி பலத்தது. "நாட்சி" என்ற சுருக்கப் பெயர் அடைந்தது. கட்சியினர் பழுப்புச் சட்டை அணியவேண்டும். கட்சியின் சின்னம் "ஸ்வஸ்திகம்" என்னும் அடையாளம். நாட்கிளர் ஹிட்லரின் சொந்த ராணுவமாகப் பழக்கப்பட்டனர். பேச்சு வன்மை நிறைந்த ஹிட்லர் ஜர்மானியரின் சுய உரிமை, தேச கௌரவம் இவைகளைப் பற்றி எங்கும் பிரசங்கம் செய்துவந்தார். எதிர்க் கட்சிகளின் பிளவுகள் அவருக்கு மிகவும் உதவியாக இருந்தன.

1930-ஆம் வருஷம் பொருளாதார நெருக்கடியினால் 'நாட்சி'க் கட்சி பின்னும் பலப்பட்டது. அவ்வருஷம் நடந்த தேர்தலில் சட்டசபையில் பன்னிரண்டிலிருந்து நூற்றேழாக 'நாட்சி' அங்கத்தினர் பெருகினர்கள். 1933-இல், மற்றும் சில கட்சிகளைத் தமக்குச் சாதகமாக உபயோகித்துக் கொண்டு ஹிட்லர் சட்டசபையின் ஆதரவைப் பெற்றார். குடியரசுத் தலைவர் ஹிண்டன்பர்க், அவருக்குச் சான்ஸலர் பதவி கொடுக்கும்படியாயிற்று. "மூன்றாவது ரெய்க்" என்று சொல்லும் ஹிட்லரின் ராஜிகம் உதயமாயிற்று. தமக்குக் கீழ்ப்படிந்த சட்டசபையில், "அரசாங்கம் ஒவ்வொரு சிறிய விஷயத்திற்கும் சட்ட சபையின் அனுமதியைக் கெஞ்சி வாங்கல் சாத்தியமில்லை" என்று ஹிட்லர் உரைத்து, அரசாங்கத்தின் இஷ்டப்படியே சட்டங்களே மாற்றவும் உண்டாக்கவும் அதிகாரம் பெற்றார். இந்த விசேஷ அதிகாரத்தால் பிரஜா உரிமைகளுக்கு ஊறுபாடு நேர்ந்தது.

1933-இல் சர்வாதிகாரம் பின்னும் நிலையுன்றியது. "நாட்சிகள்" தவிரப் பிற கட்சிகள் சட்டரீதியாக ஒழிக்கப்பட்டன. "நாட்சிகள்" பயங்காமான கொலைகளால் (Blood-purge) அடிமைகள்போல் கட்சித் தலைவருக்குப் பணியும்படியாகச் செய்யப்பட்டனர். 1934-இல், ஹிண்டன்பர்க் மரணம் அடைந்தது ஹிட்லருக்கு வெகு அதுகூலமாக முடிந்தது. ஹிட்லரே "ப்யூரர்" (Fuhrer) என்னும் பட்டம் பெற்றுக் குடியரசுத் தலைவர் ஆனர். அவரே இப்பொழுது அச்சுத் தலைவர், சான்ஸலர், 'நாட்சி'க் கட்சி அதிகாரி. இப் பொழுது, "தேசமக்களுக்கிடையில் தனித்தனி ராஜ்யங்கள் இருத்தல் கூடாது" என்ற கூறி, சமஷ்டியை ஒழித்தார். மாகாணங்கள் சுயாட்சியை இழந்து "ஸ்டாட் ஹால்டர்" என்னும் ஹிட்லரின் கவர்னர்களின் ஆட்சிக்குக் கீழ் வந்தன. இம்மாகாணப் பிரதிநிதிகள் அடங்கிய "ரைக்ஸ்டாட்" சபையும் ஒழிந்தது. 1935-இல், பயங்காமான யூதர் வேட்டை ஆரம்பமாயிற்று. வோட்டுரிமை, பிரஜாவுரிமை முதலிய சகல உரிமைகளும் பறிக்கப்பட்டன. கோமானை கொள்ளைக்கும் கொலைக்கும் யூதர் சமூகம் இலக்காயிற்று.

பயங்கர முறைகளால் எதிர்க்கட்சிகள் தொலைக்கப்பட்டபடியால் 'நாட்சி'க் கட்சியே தேசத்தின் ஒரே கட்சியாயிற்று. அந்தக் கட்சியின் கொள்கைகளையும் அமைப்பையும் அதன் தலைவர் ஹிட்லரே நிச்சயிப்பார். பலத்த கட்டுப்பாட்டிற்குள் அந்தக் கட்சி வேலை செய்தது. 1934-இல் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்கூட்ஸ்-ஸ்டேபல், (Schuts-Staffel) எஸ். எஸ். படை என்னும் பெயருடன் 'நாட்சி'க் கட்சியின் சொந்த ராணுவமாக விளங்கியது. இதிலிருந்து, 'கஸ்டாபோ' என்னும் பேரலீஸ்படை திரட்டப்பட்டு, ஹிம்லர் என்பவரின் அதிகாரத்தில் 'நாட்சி'களின் விரோதிகளை அடக்க முற்பட்டது. ரகசிய வேவுகாரர்களும் உபயோகப்படுத்தப்பட்டனர். கொலை செய்யப்படாத விரோதிகள் கூட்டமாகச் சிறையிடப்பட்டனர் (Concentration camp). இது தவிர, ஜனங்களிடை பிரசாரம் மிகவும் முக்கியமாகக் கருதப்பட்டது. அலங்காரமான ஊர்வலங்கள், பலநிறத் தீபம் ஜொலிக்கும் கண்கரட்டிகள், பல நிறப்பட்ட வாத்தியகோஷ்டிகள் முதலியன பிரசாரத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. ஜர்மானியர் கிறிஸ்தவர் ஆவதற்கு முன் வழங்கிய பழக்கங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. மே மாதம் முதல் தேதி, கொழுத்து விட்டு எரியும் தீயைச் சுற்றி ஆண்களும் பெண்களும் இசைக்கருவிகள் ஒலிக்க அதற்கேற்ப நடனம் புரிகின்றனர். இளைஞர் சங்கங்கள், ஸ்திரீகள் சங்கங்கள் முதலியவை கட்சிக்கு ஆதாரமாக இணைக்கப்படுகின்றன. யூதர்களின் பரம விரோதியான கெப்பல்ஸ் இத்தப் பிரசார முறைகளை மேற்பார்வை இடுகிறார்.

தொழிலாளிகள் சங்கங்கள் மூடப்பட்டன. வேலை நிறுத்தமும் தடைப்பட்டது. ஒவ்வொரு தொழிலுக்கும் சர்க்கார் ஒரு தலைவரை நியமித்தது. இத்தலைவரே தொழிலாளிகளின் சம்பளங்களை நிர்ணயிப்பார். ஒரே தொழிலைச் சேர்ந்த பல தொழிற்சாலைகளும் இவர் போட்ட திட்டப்படியே ஒருமித்து வேலை செய்யவேண்டும்.

ஹிட்லர் தம் சௌகரியப்படி ஒப்பந்தங்களைச் செய்வதும் அவைகளை மீறுவதும் வழக்கமாகக் கைப்பிடித்துக்கொண்டார். 1934-இல் போலந்துடன் பத்தாவருஷ சமரதான ஒப்பந்தம் செய்தார். 1939-இல் அதை நிராகரித்தார். 1935-இல் லோகார்னோ ஒப்பந்தத்தையும், வெர்சாய் உடன்படிக்கையிலுள்ள ஆயுதப் பரிகரண நிபந்தனைகளையும் என்றும் அனுசரிப்பேன் என்று வாக்களித்தார். ஆனல் ரகசியமாக ஆயுதங்களும் படைகளும் சேகரிக்கப்பட்டன. 1936-இல் பகிரங்கமாக இவைகளை நிராகரித்தார். 1936-இல் ஆஸ்திரியாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு ஆஸ்திரியாவின் சுதந்தரத்தை என்றும் ஒப்புக்கொள்வதாகப் பிரதிக்ஞை செய்தார். 1938-இல் ஆஸ்திரியாவைக் கபளீகரம் செய்தார். 1935-இல் பிரிட்டனுடன் கப்பற்படைகளின் பலத்தை நிர்ணயித்து ஓர் ஒப்பந்தம் செய்தார். 1939-இல் நிராகரித்தார். 1938-இல் செகோஸ்லோவாகியா காட்டினின்று சுடேடன் பிரதேசங்களைப் பிடுங்கிக்கொண்ட பின், "ஜர்மனிக்கு இனிமேல் ஐரோப்பிய நிலம் ஒன்றும் வேண்டாம்" என்று வாக்குறுதி கொடுத்தார். 1939-இல் எஞ்சியிருந்த செகோஸ்லோவாகியா தேசத்தை விழுங்கினர். கடைசியில், 1939-இல், போலந்து ஜர்மனி கேட்ட பிரதேசங்களைக் கொடுக்க மறுக்கவும், ஐரோப்பாவில் யுத்தம் மூண்டது.

சிதைந்த லக்ஷ்யம்

— ப.ராமமூர்த்தி —

1

பிக்ஷு பாடலிபுர எல்லையைத் தாண்டி நகரத்துக்குள் பிரவேசித்தபோது, மாலைச் சூரியன் மலைவாயில் விழ ஒரு சாதிகை நேரம் இருந்தது. நெடுந்தூரப் பிரயாணத்தினால் அவர் மிகவும் களைப்புற்றிருந்ததனால் மெதுவாகவே நடந்துகொண்டிருந்தார். அவருடைய நெற்றியில் மணி மணியாக வேர்வைத் துளிகள் உருண்டு வழிந்து கொண்டிருந்தன. அதை அவர் பொருட் படுத்தாமல் பெருமூச்சு விட்டபடியே நடந்தார்.

அவருடைய இடது புறத்திலிருந்து சுகமாக இளங்காற்று வீசியது. சம்பாநதியின் குளிர்ந்த நீர்த்தத்தில் படிந்து எழுந்து வந்த அந்தக் காற்றின் ஸ்பரிசம் பிக்ஷுவுக்கு மிகவும் இனிமை யாக இருந்தது. களைத்திருந்த உடல் களையுடன் விளங்கியது.

மெதுவாக நடந்த பிக்ஷு தமது களைப்பு முழு வதும் தீரவேண்டி இடதுபுறம் திரும்பி நதிக் கரையை அடைந்து ஒரு புல்லுத் திட்டில் அமர்ந் தார். நதியின் நீரில் மறையும் சூரியனின் மஞ்சள் கிரணங்கள் பிரதிபலித்தன. கூடு திரும்பும் பற வைகள் பல தம் இனிய குரலிசையை எழுப்பிய வாறே வானவெளியில் பறந்துகொண்டிருந்தன.

நதிக்கு அப்பால் பரந்து கிடந்த புல்லுத் தரை யும், கழுத்துமணியோசை கணகண வென்று ஒலிக்க அந்தப் பசும்புல்லை மேயும் மாடுகளின் காட்சியும் கண்ணுக்கு ரம்மியமாய் இருந்தன.

பாடலிபுரப் பெண்கள் நதியின் நீரைத் தாம் கொண்டுவந்த பாத்திரங்களில் மொண்டு இடுப் பிலும் தலையிலும் சுமந்து தமது குயிற் குரலில் வம்பளந்தபடியே நடந்து சென்றனர்.

ஆற்றை நோக்கி உட்கார்ந்த பிக்ஷு திரும்பி நகரைப் பார்த்தார். அவர் மனம் பாடலிபுரத்து மாடமாளிகைகளின் பெருந்தன்மையான தோற் றத்தில் லயித்தது. அந்தச் செவ்வான விதானத் தின் கீழ் நிமிர்ந்துநின்ற அந்த மாளிகைச் சிகரங் கள் இமயமலையின் பனிச் சிகரங்களைப் போன்ற கம்பீர்யத்துடன் விளங்கின. பிக்ஷுவின் கண் களுக்கு மௌரிய சாம்ராஜ்ய மகத நாட்டின் தலை நகர் பெரிய வியப்பை அளித்தது. தமது சொந்த ஊராகிய நாலந்தாவையும் தமது கண்ணெதிரே அரும்பெரும் வனப்புடன் நிமிர்ந்து நிற்கும் பாடலிபுரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தார். நாலந் தாவின் பெருமை இந்தப் பெருநகரின் முன் பஞ்சு போலப் பறந்தது. பிக்ஷு நகரின் வனப்பையும் நதியின் எழிலையும் கண்டு பரவசமாகிய நிலையில் ஆதவன் மறையும் வரையில் புல்லுத்திட்டி லேயே அமர்ந்திருந்தார்.

சூரியாஸ்தானம் ஆகி அரை நாழிகை ஆயிற்று. தமது நிறத்துக்குத் தக்க பரிகாரம் கிடைத்த படியால் பிக்ஷு மறுபடியும் எழுந்து சம்பாநதி யின் நீரில் தமது முகத்தையும் மொட்டைத் தலையையும் நன்றாகக் கழுவித் தம் கரவித்துணி யால் துடைத்துக்கொண்டு நகரினுள்ளே நுழைந் தார்.

இரண்டு வீதிகளைக் கடந்த அவர் விசாலமான ஒரு தெருவை அடைந்தார். அந்தத் தெருவின் மாட்சி அவரைப் பிரமிப்படையச் செய்தது. ஒவ்வொரு வீடும் ஓர் அரண்மனை மாதிரி விளங்கியது. சாளரங்களின் வழியாக மின்னிக் கொண்டிருந்த விளக்கொளி தெருவில் வந்து விழுந்தது. நிமிர்ந்து பார்த்த பிக்ஷு அந்த மாளி கைகளின் உயரத்தில் மயங்கினார்.

மெதுவாக ஒவ்வொரு வீடாகக் கடந்து சென்ற அவர் அவ்வீதிக்கே அணியாக விளங்கிய ஒரு பிரம்மாண்டமான கட்டிடத்தின் வாசலில் நின்றார். வாசலில் இருபுறமும் நீண்டு அகன்ற கருங்கல் திண்ணைகள். நடுவே இரண்டு யானை உருவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. அந்தக் கருங்கல் யானைகள் பளபளவென்று மின்னிக் கொண்டிருந்தன. பிக்ஷு ஏதோ உணர்ச்சியால் தூண்டப்பட்டவராய் வாசல் திண்ணையில் ஏறி அமர்ந்தார்.

மாளிகையின் மாடியிலிருந்து வீணை ஒலி கேட்டது. அதனுடன் கோகிலத்தொனி ஒன்று காற்றில் மிதந்து வந்தது. ஈடுகொடுவே ஜல் ஜல் என்ற சதங்கையொலியும் கேட்டது. பிக்ஷு மூச்சு விடாமல் கேட்டார். அந்த மாதிரியான இசையை அவர் நாலந்தாவில் தமது மூப்பது வருஷ வாழ்வில் கேட்டதில்லை. தேவகானம் போன்றிருந்த அந்தக் கானம் அவருடைய உள் ளத்துக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. 'புத்த புத்த புத்த' என்று போதமூர்த்தியின் நாமத் தைக் கண்ணை மூடி ஸ்மரித்தவாறே அவர் இசை யொலியை ரசிப்பதில் ஈடுபட்டிருந்தார்.

சட்டென்ற காரணம் நின்றது. பிக்ஷு நிமிர்ந்து மேலே நோக்கினார். சரீரென்று அவருடைய நெற்றியில் ஈரமான வஸ்து ஒன்று வேகமாய் வந்து தெறித்தது. தமது வலது கரத்தினால் நெற்றியைத் தடவிப் பார்த்தார். திண்ணைமேல் விழுந்து விளையாடிக்கொண்டிருந்த விளக்கொளி யில் கையை நீட்டிப் பார்த்தார். கை சிவந்திருந் தது, கொலையாளியின் கரம்போல!

பிக்ஷுவின் மனம் அருவருப்பால் துடித்தது. ஆனால் அவருடைய நெற்றியிலிருந்தும் கரத்தி லிருந்தும் பரிமளமான ஒரு வாசனை எழுந்து காற்றில் கலந்தது. இதற்குள்ளாக அவருடைய

கவனத்தை மேல் சாளரம் இழுத்தது. வெண் கலச் சிரிப்பொலி ஒன்று சாளர வழியாகப் பாய்ந் தது. பிக்ஷுவுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந் தது. தாம் பயின்ற சாந்தம் அவருக்கு அந்தச் சமயம் ஓடிவந்து உதவி செய்யவில்லை. ஆனல் வீட்டுக்குள்ளிருந்து பாதசர ஒலி மட்டும் பரபர வென்று கேட்டது. கையில் ஓர் அகலேச் சுமந்து ஒரு பெண்ணின் உருவம் வாசலே எட்டி நோக்கி யது. பிக்ஷுவைக் கண்டதும் அந்தப் பெண் விளக் கைக் கருங்கல் யானையின் தலைமேல் வைத்து விட்டு, ஓடோடியும் வந்து அவர் பாதங்களில் விழுந்தாள். பிக்ஷு சட்டென்று திண்ணையை விட்டுக் குதித்தார். அவருக்கு ஒன்றும் புரிய வில்லே. அந்த அகலின் திரியிலிருந்து கிளம்பிப் பட்ர்ந்த மங்கிய ஒளியில் பிக்ஷு அவளுடைய சௌந்தரிய ரூபத்தைக் கண்டார்.

"ஸ்வாமி, அபசாரம்; தெரியாமல் செய்துவிட் டேன். தயை புரிந்து க்ஷமிக்கவேண்டும்" என்று அவள் தன் இனிய குரலில் வேண்டினுள்.

பிக்ஷுவின் படபடப்புத் தணிந்தது. ஆனல் அவருடைய இருதயம் இப்போது படபட வென்று அடித்துக்கொண்டது. எதிர்பாராத சமயத்தில் சௌந்தரிய தேவதைபோல ஒரு மங்கை வந்து தமது காலில் விழுந்தபடியால் அவருக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

"பெண்ணே, எழுந்திரு. அறியாமல் செய்த பிழையைப் புத்தபகவான் மன்னித்துவிடுவார்" என்ருர்.

அவள் எழுந்தாள். "ஸ்வாமி, என் இல்லத் துக்குத் தங்கள் வருகை நான் செய்த பூர்வஜன்ம புண்ணியத்தால் கிடைத்தது. நான் பாக்கியசாலி. இன்றிரவு என் கிருகத்தில் தயவு செய்து பிக்ஷை ஏற்கவேண்டும்" என்ருள்.

பிக்ஷு அவளேத் தொடர்ந்து அந்த மாளிகை யின் உள்ளே சென்ருர்.

2

"அசோகன் அறிவில் சிறந்தவன் என்று சாம்ராஜ்யமே புகழ்கிறதே. அவனுடைய அறிவுத் தெளிவை அறியவேண்டியே நான் வந்தேன். என்னப்போன்ற ஓர் ஏழைப் பிக்ஷுவுக்கு அரண்மனைக்குள் புக என்ன யோக்கியதை இருக் கிறது? இந்தச் சுவடிகளும் காவித்துணியுமே! இவற்றைத் தவிர வேறு என்ன இருக்கிறது என் னிடம்?" என்று கேட்டார் பிக்ஷு.

"ஸ்வாமி, இது அறிவாளியின் பணிவு. தங்க ளுடைய அறிவுச் சுடரின் ஒளி எந்த இடத்தில் புகமாட்டாது? அரண்மனையானுல் என்ன? அழகுக்கும் அறிவுக்கும் அருகில்தான் அது இருக்கிறது. நானே மாலே என்னுடைய மூறை தடனம் இருக்கிறது, ஸ்வாமி. அந்த வியாஜத்தைக் கொண்டு நீங்களும் அரண்மனைக்குள் வரலாம். அரசனேயும் காணலாம்" என்ருள் ரஞ்சனு.

பிக்ஷுவுக்குத் தம் எண்ணம் இவ்வளவு சுலப மாகக் கைகூடுவதில் ஆனந்தம் எல்லேயில்லா மல் பொங்கிவந்தது. "என் தலேமேல் நீ தாம் பூல உச்சிஷ்டத்தை உமிழ்ந்ததுகூட எவ்வளவு நல்லதாகப் போயிற்று பார்த்தாயா?" என்ருர்.

ரஞ்சனுவின் முகம் வெட்கத்தால் சிவந்து தாழ்ந்தது. "ஸ்வாமி, தங்கள் புனிதமான பாத மலர்கள் என் இல்லத்தை மிதிக்க நான் என்ன புண்ணியம் செய்திருக்கவேண்டும்! இந்தப் பாடலி புரத்தில், எவ்வளவோ செல்வர்களும் மகான் களும் நிரம்பிக்கிடக்கும் இந்தப் பெரிய நகரத்தில், வேறு எவருக்கும் கிட்டாத பாக்கியமன்ருே எனக்குக் கிட்டியிருக்கிறது? என் மனத்தில் நான் கொண்டிருக்கும் எண்ணங்களே ஈடேற்றிவைக்கப் பகவான் தங்களுடைய ரூபத்தில் இங்கு வந்திருப் பதாகவே நான் நம்புகிறேன். ஆனல் ஆரம்பம் முதலே மகா அபசாரத்துக்கு ஆளாகிவிட்டேனே என்றுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது."

"ரஞ்சனு, தெருவோடு போகும் எழைப் பெளத்த பிக்ஷுவை யார் லக்ஷ்யம் செய்வார்கள்? அதிலும் மௌரியசாம்ராஜ்ய ஸம்ராட் அசோகனு டைய அரண்மனே நடன ராணியாகிய நீ எனக்கு இந்தப் பிக்ஷை இன்று அளிப்பது போதமூர்த்தி யின் அருள்தான். அதனல்தான் சொன்னேன்: நீ செய்த அபசாரமே நன்மையாய்ப் போயிற்று என்று."

"பாவியின் மனத்தைப் புண்படுத்த வேண் டாம், ஸ்வாமி. தங்களேப்போன்ற மகான், கேவ லம் போக சாம்ராஜ்யத்தையே மோக்ஷ சாம்ராஜ் யம் என்று நம்பி மோசம் போகும் ஒரு தாசியை லக்ஷ்யம் செய்வதென்ருல் யாருக்குப் பெருமை? நான் இந்தப் பாசவுலக பந்தத்தை உதறித் தள்ள நீங்கள் அருள் வழி காட்டவேண்டும். அரண் மனே வாழ்வும், அழகின் மயக்கும், அணியாபரண ஆசையும் எனக்குக் கசந்துவிட்டன. உலகம் உய்ய உன்னத வழிகாட்டியாகிய புத்தமார்க்கம் என் உள்ளத்தை நெடுநாளாகக் கவர்ந்துவருகி றது. அந்தப் போதமூர்த்திதான் என் மனக் கசிவைக் கண்டு தங்களே என்னிடம் அனுப்பி யிருக்கிருர்."

"ரஞ்சனு, உணர்ச்சி நாண்டும் உத்ஸாகத்தில் உலகை வெறுத்தவள்போலப் பேசுகிருயே. இது வெறும் பேதைமை. உலக பாசம் என்பது வலிவான கயிறு; அறுக்க முடியாத ஒரு பந் தம். அதை உதறித் தள்ளுவது நீ நினேப்பது போல அவ்வளவு எளிதல்ல. அதுவும் சகல போகபாக்கியங்களேயும் அடைந்த உன் னேப் போன்ற ஒரு பெண் உலகத்தைத் துறப்பது ஆகக்கூடியதா?"

"ஸ்வாமி, என் உள்ளத்தைத் தாங்கள் ஊகிக்க முடியவில்லே. நீறு பூத்த நெருப்புப்போல என் வாழ்க்கை ஆடம்பரத்தால் மறைக்கப்பட்டிருக்

கிறது. என் உண்மையான ஸ்வரூபம் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லை.''

''அது இருக்கட்டும். நான் எதையோ கேட்க, பேச்சு எங்கேயோ நழுவுகிறது. நான் அசோக னைக் காண முடியுமா? தனிமையில் அவனைக் கண்டு பேசவேண்டும். அவன் மனத்தை நான் அறியவேண்டும். உன்னைப்போலவே அவனும் பாசத்தை நீக்கியவனுய் இருக்கும் பக்ஷத்தில் என் எண்ணம் பலிக்கும். நான் எந்த நோக்கத் துடன் இந்தப் பதினேட்டு வருஷங்களாக உயிர் வைத்துக்கொண்டிருக்கிறேனோ அந்த லக்ஷ்யம் நிறைவேறிவிடும். முடியுமா அது? ராஜ்ஞி, நான் அரசனைக் காணவும் பேசவும் முடியுமா?''

''நீங்கள் கேட்பது விசித்திரமாக இருக்கிறது. யாருக்குப் பேட்டி கிடைக்காவிட்டாலும் சங்கி யாகைளுக்கு அசோகன் எளியவன்தான். அதை ஈரேழு மாலை நீங்களே அறிவீர்கள். அதற்குள்ளாக என் இத்தனை சம்சயம்?'' என்ருள் ராஜ்ஞி.

பிறகு பிக்ஷுவுக்குப் பிக்ஷை அளிக்கப்பட்டது. சந்தனமரத்தினுல் செய்யப்பட்ட விசித்திர வேலைப்பாடுகள் நிறைந்த ஆசனத்தில் அமர்ந்த பிக்ஷுவுக்குப் பழங்களும் பாலும் படைக்கப்பட் டன.

பிக்ஷு தமது பிக்ஷையை ஏற்றுச் சற்றுநேரம் கீளைப்பாறிவிட்டு மறுபடி வாசல் திண்ணையை அடைந்து தமது காவித்துணியை விரித்துப் படுத்தார். ராஜ்ஞி எவ்வளவு வேண்டியும் அவர் அவளுடைய இல்லத்தில் படுக்க மறுத்துவிட் டார்.

3

ஞானபோதகர் என்று காலந்தா நகரத்தி லேயே அக்காலத்தில் மிகவும் பிரசித்திபெற்ற பௌத்த சந்நியாசி அந்தப் பிக்ஷு. அவர் தமது பன்னிரண்டாவது வயதிலேயே ஞான ஒளி காணவேண்டி காலந்தா பௌத்த விஹாரம் ஒன்றில் ஒரு குருவை நாடிப் புத்ததேவன் போதனைகளைக் கடைப்பிடித்துத் தாய வாழ்க்கை நடத்திவந்தார்.

இளவயதிலேயே அநாதையாகித் தாயையும் தந்தையையும் இழந்த அவர் அறிவினுல் வெறுக் கப்படாமல், புத்த விஹாரத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு பிக்ஷுவாக மாறினுர். அவருடைய லக்ஷ்யம் மௌரிய அரசன் அசோகனையும் ஒரு பௌத்தனுக்கி அவனது ராஜ்யத்தைப் புத்த தர் மம் என்னும் அஸ்திவாரத்தின்மேல் நீலநாட்ட வேண்டும் என்பதே. இத்த மகாலக்ஷ்யத்தை நிறைவேற்றும் ஆசை அதிகரிக்க, அவர் முதல் முதலாகத் தமது இருபத்தெட்டாவது வயதில் புத்த விஹாரத்தினின்றும் விலகி ஊரூராய்த் திரிந்து மதப் பிரசாரத்தில் ஈடுபட்டு இரண்டு வருஷங்களுக்குப் பிறகு பாடலிபுரத்தை அடைந்து, அரண்மனைத் தாசிகளில் ஒருத்தியான ராஜ்ஞியின் வீட்டு வாசலில் படுத்துக் கிடந்தார்.

ராஜ்ஞி பரம்பரைத் தாசி. தாசி என்ருல் சாதாரணத் தாசி அல்ல. மௌரிய வம்சத்தில் அரசபரம்பரையுடன் அவளுடைய முன்னேர் வம்சமும் ஒன்றிவந்தது. அவளுடைய முன்னேர் கள் அரண்மனையில் நாட்டிய மாடுவதையே தொழிலாகக் கொண்டிருந்தாலும் கல்ல அறி வாளிகள்; பகவான்மேல் பக்தி பூண்டவர்கள். ராஜ்ஞியுக்கு அரண்மனைச் சேவகம் பிதாரார் ஜிதச் சொத்து. அவள் மாளிகையும் சுகந்தர வாழ்க்கையும் பரம்பரையாகக் கிடைத்த தீத னங்கள்.

அவள் அழகில் மிகவும் பிரபலம். பாடலிபுரத் தில் பல தனவான்கள் அவளுடைய கடைக்கண் பார்வைக்காக எவ்வளவோ வருஷங்களாகத் தவம் கிடந்தார்கள். ஆனுல் அவள் எவரையும் லக்ஷ்யம் செய்யவில்லை. சிறுவயதிலிருந்தே ஆடம்பர வாழ்வை அவள் வெறுத்துவந்தாள். வயசு வந்த தும் தன் அழகையே வெறுத்தாள். என்ருவது ஒரு நாள் ஒரு குருவை நாடி, தான் ஒரு புத்த பிக்ஷுணியாக மாறி, சொத்தையும் சுகத்தையும் உதறிவிட்டுப் போகவேண்டும் என்று சங்கல்பம் செய்துகொண்டாள்.

அவளுடைய மனேபீஷ்டம் நிறைவேறும் காலமோ என்னவோ, ஞானபோதகர் அவளுக் குக் கிடைத்தார். இதை நினைத்துப் பார்த்த ராஜ்ஞியின் உள்ளம் உவகையால் பூரித்தது.

4

மறுநாள்: ராஜ்ஞியினுல் பழக்கம் செய்து வைக்கப்பட்ட பிக்ஷுவுக்கு அசோகன் அமோக மான வரவேற்பு அளித்து அவருடன் சம்பாஷித் துக்கொண்டிருந்தான். இதற்குள் கடன ஆரம்பத் துக்குத் தக்க நேரம் வரவே அரசன் எழுந்து நாட் டியசாலையை அடைய வேண்டிப் பிக்ஷுவை அழைத்தான்.

அதற்குப் பதிலாக ஞானபோதகர், ''அரசே, தங்கள் உதாரகுணத்தையும் சீலத்தையும் கண்டு நான் மகிழ்ந்தேன். ஆனுல் போக இச்சையைத் தூண்டி மீள முடியாத பாதத்தில் இழுக்கும் இந்த நாட்டியக் காட்சியை, உலகத்தைத் தறைத்த பாச பந்தத்திலிருந்து முழுவதும் விடுதலை பெற யத் தனிக்கும் நான், காண வருவது அவ்வளவு உசித மல்லவே'' என்ருர்.

அசோகன், ''ஸ்வாமி, இவை என்ன விசித்தி மொழிகள்! உலகைத் துறந்த தங்களுக்கு கேவலம் இந்தத் தாசியின் அபிநயமா ஆகர்ஷித்துவிடும்? அப்படி உள்ளம் உடைந்து நீங்கள் எளிதில் மாயை யில் சிக்கும் நிலையில் இருப்பின், நீங்கள் இவ்வளவு காலம் துறவி நிலையை அடைய யத்தனித்தது வீண். நீங்களே மனசை அடக்க முடியாத என்

ரூல்....." என்று தன் குரலில் பரிகாசம் தொனிக்கக் கூறினான்.

"சே! அவ்வளவு கிடம் இல்லாமல் போக வில்லே. இருந்தபோதிலும்..." என்று இழுத்தார் பிக்ஷு.

"நீங்கள் பேசுவது விசித்திரமாக இருக்கிறது. சதா போக வெள்ளத்தில் நீந்திக்கொண்டிருக்கும் என்னேப்போன்ற அரசன் மாயைச் சுழல் இருக்கும் இடக்தை நன்கு அறிவான் என்பதும், உலக மறியாத ஒரு துறவி இன்ப வெள்ளத்தில் ஒரு சமயம் விழ நேர்ந்தால் அதை மீற முடியாது என்பதும் உண்மைதான். இல்லாவிட்டால் வெறும் நாட்டியக் காட்சியாலா உள்ளம் சபலிக்கும்? அதவும் பிறந்தது முதல் துறவறத்தையே விரதமாகப் பூண்டொழுகும் நீங்கள் இவ்வாறு அஞ்சுவீர்களா?" என்றான் அரசன்.

"அப்படி ஒன்றும் இல்லே, அரசே. இருந்தாலும் போதமூர்த்தியின் நன்னெறியை நாடும் போதனை செய்யும் நான், அப்பெருமானின் மொழிகளே மீறுவது தவறு அல்லவா?"

"இது வெறும் வேஷம். மனசைக் கட்ட முடியாத நீங்கள் மகாபுத்தனின் போதனேக்குள் மறையப் பார்ப்பது விசித்திரமாக அல்லவா இருக்கிறது?"

"சரி. உங்களுடைய சந்தேகத்தைத் தீர்த்து விடுகிறேன். போகலாம் வாருங்கள்!" என்று தைரியமாய்ப் புறப்பட்டார் பிக்ஷு.

கடைசியில் பிக்ஷு ஒரு மெல்லிய திரை மறைவில் அமர்ந்து நடனத்தைப் பார்ப்பது என்று தீர்மானித்து, இரைச்சலே ஒன்று நடன ரங்கத்துக்கும் பிக்ஷுவுக்கும் நடுவே கட்டப் பட்டது.

நாட்டியம் தொடங்கியது. ரஞ்சனு அன்றைத் தினம் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் ஜோதியைப் போலத் திகழ்ந்தாள். காண்பவர் உள்ளத்தைக் காட்டாற்று வெள்ளம் போலத் தன்னோடு இழுத் தாள். சுமார் இரண்டு நாழிகை நேரம் நடன அரங்கத்தில் அமர்ந்திருந்த அனேவரும் அவரவர் நிலே அறியாமல் ரஞ்சனுவின் அங்க அசைவுகளி லும் நாட்டிய முத்திரைகளின் எழிலிலும் ஈடு பட்டுக் குதூகலமே வடிவாய் விளங்கினர். அவளுடைய கந்தர்வ கானத்திலும், மேனகா ரூபத்திலும், நிருத்தியத்திலும் ஈடுபட்டிருந்த அசோகன் அவ்வப்போது பிக்ஷு வீற்றிருந்த திசையை நோக்கித் தனக்குள்ளேயே நகைத்துக் கொண்டிருந்தான்.

நாட்டிய ஆரம்பத்தில் வேதனேயுடன் புத்த நமஸ்மரனே செய்துகொண்டிருந்த பிக்ஷு, ரஞ்சனுவின் கோகிலகானமும், மயில் போன்ற அசைவும் தம்மை வசீகரிக்க, நாட்டிய முடிவின் போது தம்மையும் மறந்து தாம் இருந்த இடத்தை யும் மறந்து, "ஆஹா! அற்புதம்! அற்புதம்!" என்று ஆவாரித்துவிட்டார்.

அவருடைய குரலைக் கேட்டதும் சபையினர் எல்லாரும் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப்போய் அவரையே உற்று நோக்கினர்.

அனேவரும் தம்மைக் கவனிப்பதை உணர்ந்த பிக்ஷுவுக்குத் திடீரென்று விவரிக்க முடியாத அவமானம் உண்டாகிவிட்டது. அவர் முகம் வெளுத்தது.

அதற்குள் அரசன் அவரிடம் வந்து, "ஸ்வாமி, நிருத்தியம் எப்படி?" என்றார்.

பிக்ஷுவுக்குக் கலவரம் அதிகமாகி விட்டது. அவரால் பதில் பேச முடியவில்லே. அசோகன் குரலில் தொனித்த பரிகாசத்தை உணர்ந்தார்.

சில விநாடிகள் கழிந்ததும், "அரசே, ஆண் டிக்கு என்ன தெரியும் ஆட்டத்தின் ருசி? அப் படித் தெரிந்திதான் இருக்கலாமா? பெண்களின் முகத்தையே ஏறிட்டுப் பார்க்கக் கூடாது என்ற புத்த பகவானின் கட்டளேயை உங்கள் பேச்சி னுல் மறந்தேன். அதற்குத் தகுந்த தண்டனேயும் கையோடு கிடைத்துவிட்டது" என்றார் பிக்ஷு.

இதற்குள் ரஞ்சனு வானத்துச் சந்திரனே தன் கலைகளுடன் பூமியில் இறங்கி வருவதுபோல அரசனே அடைந்து நமஸ்கரித்து நின்றாள்.

அரசன், "ரஞ்சனு, உனது நாட்டியம் இன்று அபூர்வம்" என்றான்.

"எல்லாம் தங்கள் கிருபை. மேலும் இன்று என் குருநாதரின் ஆசீர்வாதமும் கலந்தது" என் றாள் ரஞ்சனு.

"குழந்தாய், உன் புகழ் மேலும் பெருகட்டும். உனக்கு ஸர்வமங்களமும் ஏற்படட்டும்!" என்றார் பிக்ஷு, சமயம் அறிந்து.

அன்றிரவு முதல் ஞானபோதகர் அசோ கனுடைய அரண்மனே வனத்தில் அழகிய ஒரு கட்டிடத்துக்கு அதிபதியாகிவிட்டார். அரச னுடன் மதவாதம் புரிந்து அவன் மனத்தை மாற்ற வேண்டி வந்த அவர் தமக்கு அளிக்கப் பட்ட சந்தர்ப்பத்தைப் பூரணமாக உபயோகிக்கத் தயங்கவில்லே.

நாட்டியத்துக்குப் பிறகு அரசனுடன் பாலும் பழமும் ஏற்று, அவர் சிறிது நேரம் பேசிவிட்டு, அரசனின் வேண்டுதலின் மேல் அரண்மனேயில் சிறிது காலம் தங்கச் சம்மதித்துத் தமக்கென ஒதுக்கி விடப்பட்ட விடுதியில் சுவடிகள் சமேத ராய் வந்து படுத்தார்.

அன்றைத்தினம் பௌர்ணமி. அரண்மனேக் கோபுர கிரங்களே மீறி அங்கங்கே பரப்பி வந்த சந்திர ஒளிக்கதிர்கள் பிக்ஷு அமர்ந்திருந்த பளிங்கு மேடையையும் அதைச் சுற்றி இருந்த பூஞ்செடி களேயும் மாயவர்ணங்களாக மாற்றிவிட்டன.

பிக்ஷு உற்று நோக்கினுர் வானவெளியை. நிர்மலமான ஆகாயம். அங்கங்கே சிதறிக் கிடந்த வெண்பஞ்சு மேகங்கள் மதியொளியில் மயங்கி அசைவற்றுக் கிடந்தன. அந்த மேகங்கள்

பிக்ஷுவின் மனத்திலும் விநோதமான ஓர் எண்ணத்தைக் கிளப்பின.

பிக்ஷு யோசிக்கிறார்: 'நாம் நாடிவந்த எண்ணம் நிறைவேறும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் நிர்மலமான என் மனத்தில் ஏனோ ஒரு விதமான கலக்கம் ஏற்படுகிறது. அதற்குக் காரணம்?...ஆம். அசோகன் வீரமிடுக்கில் வீரியராடுகிறான். என் கோலத்தைக் கண்டு பக்தி செலுத்தினாலும் எந்தச் சொல்லிலும் பரிகாசத் தொனி கலந்து வருகிறது. ஹிம்சை விளையாட்டில் மனத்தைச் செலுத்துகிறான்.....ஆம், அதோ.....அந்த மயிலின் குரல்.....இனம் இரண்டு ஆண் மயில்களை அவனுடைய வயிற்றுக்குப் பலி? சே! இந்தப் பாவகிருத்தியங்களை அவனு விடுவான்? ஆனால் அவனைக் கட்டுப்படுத்தான் யார்? என்னதான் அறிவாளியாயினும், ஒழுக்கசீலனுயினும் நான் யார்? ஓர் ஏழைப் பிக்ஷு! அவனே பாரததேசம் முழுவதையும் ஒரு குடைக் கீழ் ஆளும் மன்னாதிமன்னன். நமக்கு இவனுடைய பேட்டி கிடைத்ததே ஆச்சரியம். அதிலும் கேவலம் ஒரு தாசியின் மூலம்...தாசி... அவள் பெயர் ரஞ்சனு! நாட்டிய மகளானாலும் அவள் நாட்டம் நன்னெறிமேல்...இதவும் விந்தைதான்!'

திடீரென்று நிலம்பெரிலி கேட்கிறது. பிக்ஷு யோசனையை விட்டு யார் வருகிறார் என்று பார்க்கிறார்.

ரஞ்சனு!

"ஸ்வாமி, தங்களிடம் விடைபெற்றுப் போக வந்தேன். ஞானமூர்த்தியாகிய உங்கள் நயனங்கள் இந்த ஏழையின் நிருத்தியத்தில் இன்று ஈடுபட்டது என் பாக்கியம். என் நாட்டியம் தங்களை ஆகர்ஷித்ததுபோல என் பக்தியும் தங்கள் உள்ளம் உவந்து ஏற்கப்படுமானால் என் ஜன்மம் ஸபலமாகிவிடும்!" என்றாள் ரஞ்சனு.

"குழந்தாய், இந்த இரவு நேரத்தில் செடி கொடிகள் சூழ்ந்த இந்த இடத்துக்கு ஏன் தனியாக வந்தாய்? சீக்கிரம் உன் இல்லம் சேர். உனக்கு ஸர்வ மங்களமும் புத்தர்பிரான் அருளால் ஏற்படும்" என்றார் பிக்ஷு.

"ஸ்வாமி, அடியாளை அலக்ஷ்யம் செய்யாதீர்கள். அரசன் உமது முதல் சிஷ்யனையின் நான் தங்கள் முதல் சிஷ்யையாகும் பாக்கியம் பெறப் பாலிக்க வேண்டும்."

"பெண்ணே, எம் பெருமானுக்கு எவ்வாறு எல்லா உயிர்களும் சமமோ அவ்வாறே அவனடி பணியும் எனக்கும். ஆனால் பாச விலங்கை அறுத்தெறியும் முயற்சி மிகவும் கடினமானது என்பதை நீ அறிந்துகொள்."

"இந்தப் பாப ஜன்மத்தின் உள்ளத்தில் எந்த உலகபாசத்துக்கும் இனி இடம் இல்லை. பக்தியைத் தவிர....."

"உனக்கு இந்த வயசில் இவ்வளவு விரக்தி ஏற்பட்டது விசித்திரமாக இருக்கிறது."

முடிவாக ரஞ்சனு அவரிடம் விடை பெற்றுத் தன் மாளிகைக்குப் புறப்பட்டாள். சர்வாபரண பூஷிதையாய் அவள் அந்தச் சந்திர ஒளியில் நடந்து போனது ஓர் அப்ஸரஸ் மாதிரி இருந்தது.

5

திங்கள் மூன்று கழிந்தன. அசோகன் கலிங்கத்தரசன் மீது போர் தொடுத்துவிட்டான். நாடு அல்லோல கல்லோலப்பட்டது.

ஞானபோதகருடைய அஹிம்சா போதனைகளை அவன் உதறித் தள்ளினான். க்ஷத்திரியனுக்கு வீரம் பெரிதென்று அவன் நினைத்தான். பிக்ஷுவின் அறிவுரைகளை அவன் தினம் கேட்டு வந்தும், அவருடன் விவாதித்தும் பயன் இல்லாமல் போய்விட்டது.

பிக்ஷுவுக்குத் தோல்வி ஏற்பட்டாலும் அவர் சலிக்கவில்லை. அசோகன் எப்படியாவது ஒரு நாள் தமது உபதேசத்தின் உண்மைகளை உணர்வான் என்று அவர் நம்பிக்கை கொண்டார். அதற்காக அவர் சமயம் வாய்த்தபோதெல்லாம் யுத்தத்தின் கோரத்தை எடுத்து அவனுக்கு விவரித்தார். அரசன் அதற்கெல்லாம் லீலையாட்டிவிட்டுப் போர் தொடுத்ததுதான் பிக்ஷுவுக்கு வியப்பை அளித்தது.

பிக்ஷுவுக்கு இன்னும் ஒரு தோல்வி ஏற்பட்டது. அது ரஞ்சனு விஷயத்தில்.

ரஞ்சனுவின் வேண்டுகோளின் பேரில் அவர் ஏழு நாட்களுக்கு ஒரு முறை அவளுடைய இல்லத்தில் பிக்ஷை ஏற்று, அவளுக்குப் போதிக்க ஒப்புக்கொண்டார்.

ரஞ்சனு அவரைப் பரிபூர்ண பக்தியுடன் வழிபட்டு அவருடைய மொழிகளைச் செவிமேல் தாங்கி, அணியும் ஆசையும் நீக்கி, ஆண்மனை ஆடலும் அகற்றித் தனது சொத்தை வாரித் தருமத்துக்கு அளித்தாள்.

ஆனால் திடீரென்று அரசனுடைய ஆணை ஒன்று ஒரு நாள் அவளை நேர்க்குப் பயங்கரமாகச் சீறிவந்தது. 'ஞானதேவரின் நெறியையும் ஒழுக்கத்தையும் சோதனை செய்யவேண்டியது ரஞ்சனுவின் கடமை' என்று அரசன் தீர்மானித்துவிட்டான்.

ஒரு புறம் இந்தக் கட்டளை ரஞ்சனுவுக்கு இன்பத்தை அளித்தது. இந்தச் சாக்கைக்கொண்டாவது சதா குருநாதன் அருகிலே இருந்து அவருக்குச் சுச்ருஷை செய்யலாம் அல்லவா? ஆனால் அந்தக் கட்டளையின் பயங்காரமான பக்கம்? தன் அழகைப் பயன்படுத்திக் குருநாதரைச் சோதிக்க வேண்டுமாம்! என்ன துரோகம்! என்ன கொடுமை!

ரஞ்சனு இருதலைக்கொள்ளி எறும்பைப்போலத் துடித்தாள். அரசனின் கட்டளையைக் குரு

காதரிடம் தெரிவித்துவிட்டால்?...அவள் ஜீவிய ஜோதியே அணைந்துவிடும்! இதை நினைக்க அவளுக்கு இருதயமே பிளந்துவிடும்போல இருந்தது. அரசன் கலிங்கப் போருக்கு கோல் படையெடுக்கப் போகிறானும். அவன் திரும்பிப் பாடலிபுரம் வருவதற்குள் பிக்ஷுவைப்பற்றிய உண்மை வெளிப்படவேண்டும். ஆஹா! அரசனின் பரிகாசப் பேச்சு உத்தமரைப் பரிசோதிக்கும் காரியத்தில் கொண்டுவந்துவிட்டதா? 'கேடு வரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே' என்பதாலா அரசன் இந்த இழிவான பணியை ராஜனுவக்கு அளித்தான்?

ராஜனு பல விதமாக யோசித்தாள், அழுதாள், அலறினாள். ஆனால்? அரசன் ஆணை பிரதரனமா, அவள் பக்தி பிரதானமா? ஆணைதான்.

கழற்றி எறிந்த காமத்தூதான கழல்களையும், கண்ணுக்குத் தீட்டும் கரிய மையையும் மறுபடி கரத்தினுல் தீண்டினுள். சடை விழுத்த கூந்தலைச் சுருக்கி மலர்களால் அலங்கரித்தாள். பளபளவென்று பகட்டுடன் பிரகாசிக்கும் சரிகை உடை அணிந்தாள். முகத்திலே முறுவலை வரவழைத்தாள். கடையிலே களினத்தைக் கொண்டாள். செவ்விதழ் நடுவிலே மின்னல் உண்டாக்கும் பற்களைத் தெரியக் கரட்டிப் பிக்ஷுவின் விடுதியை அடைந்தாள்.

6

அலங்கார பூஷிதையாய்த் தம்மை நோக்கி வந்த ராஜனுவைக் கண்டதும் பிக்ஷுவுக்கு மயக்கம் போட்டுவிடும் போல இருந்தது.

"தோற்றுவிட்டாய் பார், ராஜனு. உலக பாசமா உன்னை விட்டு ஓடும்? பேதைக் குழந்தாய், உன் தொழிலை விடாதே. மோக சாம்ராஜ்யத்துக்குள் மோக வெறி ஊட்டும் மோகினியாகிய நீ நுழைய முடியாது. என் பக்திக்கோட்டை கட்டினுய்?" என்றார் பிக்ஷு.

ராஜனு பதில் பேசவில்லை. அவள் கண்களிலிருந்து கனற் பொறி போன்ற நீர்த்துளி கன்னத்தில் விழுந்தது. "ஆம்; தோல்விதான். யாருக் கென்று தெரியவில்லை. பிரபோ, இதோ என் கண்களைப் பாருங்கள்; என் முகத்தைப் பாருங்கள்; பாசத்தின் பாதையில் தேய்ந்த உருவமா நான்? மோகத்தைக் கொல்லவந்த மோகத் தூது நான். ஸ்வாமி, தங்களுக்கு அபசாரம்..."

"பெண்ணே, அவரவர் விதி அவரவருக்கு. பாவ மூட்டையைச் சுமக்கவேண்டி நிற்கும் இந்த அசோகன் என் சொல்லைத் தட்டினுன். மறுபடியும் போராம், கொலையாம், கொடுமையாம்!"

"அது மட்டுமா? அந்தப் போரைவிடக் கொடுமையான ஒரு விஷப்பரீக்ஷையில் அல்லவா இப்போது ஈடுபட்டிருக்கிறான்?" என்றாள், தன்னையும் மறந்த ராஜனு.

பிக்ஷுவுக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் மொழிகள் அவருக்குக் கிளிமொழிகளைப்போல இருந்தனவேயன்றி அதனுள் மறைந்துகிடந்த மாயம் அவருடைய உள்ளத்துக்கு உறைக்கவில்லை.

இதற்குள் ராஜனு அவருடைய பாதங்களில் விழுந்தாள். தன் கமல மலர்க் கரங்களால் அவருடைய திருவடிகளைப் பற்றினுள். அவள் செய்கை பிக்ஷுவுக்குப் புதுமையாக இருந்தது. அவர் பாதவழியே உடல் முழுவதும் அவளது ஸ்பரிச வேகம் பாய்ந்தது. சட்டென்று குனிந்து

அவளுடைய தோள்களைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினார். ரஞ்சனு அவருடைய ஞான ஒளி வீசும் கண்களை உற்று நோக்கினாள். மைதீட்டிய அந்த மாயக் கண்களைப் பிக்ஷுவும் நோக்கினார். அவர் உள்ளம் உலுக்கப்பட்டது. தேகம் சிலிர்த்தது. இயற்கையின் வேகம் அவருடைய இளமையைத் தூக்கிற்று. இன்பக் காற்றொன்று அவர் இள மேனியில் தவழ்ந்து சென்றது. தந்தமேனி படைத்த ரஞ்சனுவின் எழில் அவரை மயக்கியது. அவளுடைய தோள்களை அவர் இவ்வளவு நேரம் தாமே அறியாமல் பற்றி நின்றார். இப்போது - அறிந்தும் - அவர் தம் கைகளை விலக்க வில்லை.

ரஞ்சனுவின் நெஞ்சு படபடத்தது. 'ஆஹா! மோகத்தின் சக்தியை மூழுதும் அறியாத இவரா துறவி? பாசத்தைத் தொலைக்க எனக்கும் உலகத்துக்கும் வழிகாட்டும் இவருக்கு என்ன கண்கள் அவித்து விட்டனவா? இவர் பேசிய சாம்ராஜ்யம்-மோகஷ சாம்ராஜ்யம்-இதெல்லாம் ஏட்டுச் சுரைக்காய்தானு? போகத்தான் நித்தியமானதா? யோகத்தையும் மீறும் அந்தப் போகந்தான் உலகத்தில் வலிமை உடையதா? இவர் போதனை பொய்யா? இந்தக் காவித் துணியும், கட்டுச் சுவடியும், மொட்டைத்தலையும் வெறும் பகல் வேஷந்தானு? அரசன் இவரை நம்பவில்லை; பேதைப் பெண்புத்தியால் இந்தக் கள்ளனே நான் குருவென நாடினேன்.'

இவ்வாறு சிந்தித்த ரஞ்சனு தன் நம்பிக்கை நாசமானதை உணர்ந்து ஸ்தம்பித்து நின்றுவிட்டாள்.

பிக்ஷு பேசுகிறார்: "ரஞ்சனு,.....பெண்ணே, உலகபந்தம் ஓர் இன்பக்கட்டு. அதில் பிணைக்கப்பட்டிருப்பதே சுகிருதம்; அதுவும் உன்னைப் போன்ற ஒரு..."

ஆஹா, இது ஒரு சன்னியாசியின் மொழியா? என்ன விசித்திரம்? காமத்தின் சக்திக்கு எதிர்ச் சக்தி இல்லவே இல்லையோ?

"ஸ்வாமி".....சே! என்ன அறிவீனம்? திருடனை அரசன் என்று அழைப்பதா?

"இது என்ன காரியம்? கையை எடுங்கள்... நான் யார்? நீங்கள் யார்?" ரஞ்சனு தன்னை விடுவித்துக்கொண்டு விடுதியை விட்டு வெளியே செல்ல முயலுகிறாள்.

"ரஞ்சனு, ரஞ்சனு; போகாதே" என்று அவளைத் தடுத்துப் பிக்ஷு நிறுத்தினார்.

ரஞ்சனு மந்திரத்தால் கட்டுண்ட நாகம்போல அசைவற்று நின்றாள். ஆஹா, என்ன காரியம்? அவள் கரத்தை எடுத்துப் பிக்ஷு உதட்டில் வைத்து முத்தமிட்டார்.

"ரஞ்சனு!" என்ற குரல் கேட்டது. பிக்ஷுவுக்கு நிலை தெரியவில்லை. சட்டென அவள் கையை உதறினார். வந்தவர் யார்?.....அசோகன்! "ஹா ஹா ஹா ஹா" என்று பயங்கரமான வெற்றி வேகத்துடன் சிரித்தான் அசோகன். "ஸ்வாமி, நல்ல போதனை! நல்ல நடத்தை!" என்றான் மேலும்.

பிக்ஷு என்ன ஊமையா? அல்லது கல்லாகத் தான் மாறிவிட்டாரா? அவருடைய கெடுமதி அவருக்கே சமயம் கொடுத்து அவலமாக்கிவிட்டதா? அசோகன் அவர் தோளைப் பிடித்து உலுக்கினான். "ஏ திருடா! பேசு. உன் வாயைத் திறந்து போதனை செய்! உலகமும் நானும் உன் போதனைப்படி நடக்காவிட்டாலும் நடத்தையையாவது பின்பற்றுகிறோம்!"

"அரசே, அவரைத் தூற்றுகிறீர்கள். நான் தான் காரணபூதம். என்னை ஆட்டியது யார்? தங்கள் கட்டளைதானே! சேதனை..." என்று வாயெடுத்தாள் ரஞ்சனு.

"பலித்துவிட்டது" என்றான் அரசன். இது வரையில் தாழ்ந்து நின்ற பிக்ஷுவும் வாயைத் திறந்தார்.

"அசோகா, என் மதியைக் கெடுக்க நீ ஏற்படுத்திய நாடகமா இது? ஆஹா! மாயசக்தியால் மதி இழந்தேன். ஹே புத்தமூர்த்தி! இந்தப் பாவியை அழித்தவிடு, இந்த க்ஷணமே! இது வரை எந்த மாயமோகினி ரூபத்தையும் கண்டெடுத்துப் பாராத இந்தக் கண்கள் தம் நிலை கெட்டு மயங்கிப் போய்விட்டன. ஆஹா! என்ன அவமானம்! என் புத்தி என் தமோநீயதா? என் நிலைமை எதனால் நீலைக்காமல் போய்விட்டது? நாயின் வாலை நிமிர்த்த என் நான் முயன்றேன்? உன் புகழ் பெருகவேண்டித்தானே? அதை நான் சாதிக்கவில்லை; வஸ்தவந்தான். ஆனால், எதனால் நான் இந்த மோகப்படுகுழியில் தெறிகெட்டு விழுந்தேன்? என் ஆவி அகலட்டும்" என்று தம்மையே சபித்துக்கொண்ட பிக்ஷு 'படார் படார்' என்று தம் மொட்டைத் தலையில் அடித்துக்கொண்டார்.

அரசன் தடுத்துவிட்டான்.

'இவர் உண்மையில் உத்தமரா? இவரைக் கெடுத்தது என்ன பாவம்!' என்று உடனே உணர்ந்து சிந்தித்தான். ஆனால் அவன் சிந்தனையை வளர விடவில்லை பிக்ஷு. "ஹே அற்பனே, கேள். எத்தப் புத்த பகவானின் பாதாரவிந்தத்தை நான் பணிந்தவன்தானே அந்த மலர்ப் பாதம் சாக்ஷியாக நான் சொல்லும் இந்தச் சொற்களைக் கேள். உன் ராஜ்யச் செருக்கும் ஹிம்சைக் குணமும் சற்று அடங்கட்டும். ஒரு பாவமும் அறியாத என்னை நீ சோதனை செய்தாய். அந்தப் புத்தரை அதன் மூலம் அவமானம் செய்தாய். ஒரு நாள் உனக்கு நற்புத்தி வரும். அப்போது என் மொழிகள் உன் செவியில் ஒலிமிடும். கேள். அந்த நன்னாள் வரும்போது நீ என்னை நினைப்பாய். என் உபதேசம் அன்று உன் கொடிய உள்ளத்தையும் உருக்கும். என் வாழ்க்கை லக்ஷ்யத்தைச் சிதைத்த உன் பாவம், நீ செய்த

கொடுமை, உன் வாழ்க்கையின் லக்ஷ்யத்தைப் பாழாக்கட்டும். நீ எந்த முயற்சி செய்கிறாயோ அந்த முயற்சியின் பயன் கிட்டாமல் போகட்டும். புத்த பகவானே! ஹே கருணாமூர்த்தி! அஹிம்சையின் உருவமே! என்னை ஆண்டருள்'' என்று உரக்கக் கூவிவிட்டுத் திடீரென்று சோகப் பெருக்கினால் மயங்கிக் கீழே விழுந்த பிக்ஷுவை அசோகன் தாங்கிக்கொண்டான். மறுபடி அவர் எழுந்திருக்கவில்லை.

ராஜ்ஞி தலைவிரிகோலமாகத் தான் செய்த கொடுமையின் கோரம் தாங்க மாட்டாமல் விடுதியை விட்டு ஓடி மறைந்தாள். மறுபடி அவளைப் பாடலிபுரத்தில் காணவில்லை.

சோகமே உருவான அசோகன் அந்த ஞான மூர்த்தியைத் தன் திண்மையான தோள்களில் தாங்கி ஆண்மனையை நோக்கித் தன்னந்தனியே ஓடினான்.

– 7

கலிங்கப் போர் முடிந்துவிட்டது. அசோகனுடைய அசுரபலம் - ஹிம்சைவெறி - வெற்றி அடைந்தது. ஆனால் அவன் உள்ளத்தில் ஞான போதகரின் அந்திம கால மொழிகள் எப்போதும் ஒலித்தக்கொண்டிருந்தன. அவன் மனம் சாந்தி இழந்தது.

'கொலை, கொடூரம், கோர பரவ கிருத்தியங்கள் - இவற்றின் ஸ்வரூபந்தானு ஸம்ராட் அசோகன்? அவனுடைய வாழ்க்கை, சாம்ராஜ்யம், வெற்றி முழக்கம் - எல்லாம் ரத்த வெள்ளத்தில்தான் மூழ்கிக் கிடக்கவேண்டுமா? திக்விஜயம் என்றால் தர்ம விஜயத்தின் விரோதியாக வேண்டுமா?'

இவ்வாறு சிந்தித்து வேதனைப்பட்ட சக்கரவர்த்தி அசோகனின் மனம் கலிங்கப் போரில் கடந்த உயிர்க்கொலையை நினைந்து நினைந்து உருகிற்று.

'உன் வாழ்க்கை லக்ஷ்யம் பாழாகிப்போகட்டும்': இதுதான் பிக்ஷு அளித்த சாபம்.

'நான் என் தர்ம விஜயத்தை என் லக்ஷ்யமாகக் கொள்ளலாகாதா? தர்மத்தக்காக, அஹிம்ஸா தர்ம போதனைக்காக உயிரை விட்ட மகானுகிய ஞான போதகரின் மொழிகளை, உபதேசத்தை என் கைப்பிடித்து நான் முழுவதும் பரப்பக் கூடாதா? அந்த மகானைக் கொன்ற பாவம் அதன் மூலமாவது நீங்குமா?'

அசோகன் புத்த தர்மத்துக்காக வாழ்ந்து, அஹிம்ஸா தர்மத்தைத் தன் சாம்ராஜ்யத்தில் நிலைநாட்டவும் பரவச் செய்யவும் செய்த முயற்சிகள் இன்றும் கல்தூண்களாகவும், பல விதக் கல் வெட்டுக்களாகவும் நின்று அவனுடைய மனமாற்றத்தை நிரூபித்துக்கொண்டு இருக்கின்றன.

ஆனால், அவன் எந்த லக்ஷ்யத்துக்காகப் பாடுபட்டானோ அந்த லக்ஷ்யமான பௌத்த மதத்தின் சோடே அடியோடு இந்தியாவில் இல்லாமற் போன காரணம் என்ன? ஞானபோதகரின் சாபந்தானோ? யார் கண்டது?

பாதரக்ஷை

சில வார்த்தைகள் ஒரே பொருளில் இருந்தாலும் அவற்றைப் பிரயோகிக்கும் சந்தர்ப்பம் வேறு வேறாக இருக்கும். 'செருப்பு' என்ற சொல்லையே சற்றுக் கௌரவமாகச் சொல்லும்போது 'பாதரக்ஷை' என்று வடமொழித் தொடரால் வழங்குகிறோம். பாதத்துக்குப் பாதுகாப்பாக இருப்பதனால் அந்தப் பெயர் வந்தது. பழங்காலத்தில் அந்தத் தொடரைத் தமிழில் ''அடிபுதையரணம்'' என்று தமிழாக்கி வழங்கினார்கள். பாதத்தை மூடிப் பாதுகாப்பது என்பது அதன் பொருள். இப்போது சீமைக்குச் சீமை செருப்பின் பெயர்கள் வெவ்வேறாக வழங்குகின்றன. மிதியடி என்று சிலர் வழங்குவர். செட்டி காட்டில் நடையன் என்று குறிப்பார்கள். 'ஆள் தூக்கி' என்றுகூடச் சிலர் சொல்வது உண்டு.

அசௌக்கியம்

தேக அசௌக்கியமாக இருப்பவர்களை விசாரிப்பது அன்புக்கு அறிகுறி. விசாரிக்கும் போது தமிழர் வழங்கும் வார்த்தைகள் சீமைக்குச் சீமை வேறுபடுகின்றன. ''உடம்பு சேவலையா?'' என்று சிலர் கேட்கிறார்கள். 'உடம்பு செவ்வை இல்லையா?' என்பதன் சிதைவு அது. செட்டி நாட்டுக்குப் போனால், ''மூடியல்லேயா?'' என்று கேட்பார்கள். 'தேக அசௌக்கியமா?' என்பதுதான் அந்தக் கேள்விக்குப் பொருள். தஞ்சாவூர் ஜில்லாவில், ''உங்களுக்கு உடம்பாமே?'' என்று விசாரிப்பார்கள். உடம்பு என்பது தேக அசௌக்கியம் என்பதைக் குறிப்பது. ''திருமேனி பாங்கா?'' என்று வைணவர்கள் தேக சௌக்கியத்தை விசாரித்துக் கொள்கிறார்கள். 'தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு' என்று சொல்வார்கள். 'சீமை தோறும் பேச்சுநடை வேறு' என்று அதற்கு அடித்தபடி ஒரு புது மொழியை நாம் சொல்லலாம் போலும்!

அதிசய வாழை

எஸ். சங்கரன்

வெகு காலத்திற்கு முன்னால் ஓர் ஏழைக் குடியானவன் வசித்து வந்தான். அவனுக்கு இருந்த ஆஸ்தி எல்லாம் ஒரு சிறு குடிசையும் அதை அடுத்துக் கொஞ்சம் நிலமுந்தான். அந்த நிலத்தில் காய்கறிச் செடிகளைப் பயிரிட்டு அவைகளின் மூலம் கிடைத்த வருமானத்தை வைத்துக்கொண்டு அவன் ஸந்தோஷமாக, மனத் திருப்தியுடன் வாழ்ந்து வந்தான். அந்தச் சின்னஞ்சிறு தோட்டத்தில் அவனும் அவன் மனைவி மக்களும் ஸதா வேலை செய்துகொண்டிருப்பார்கள். போவோர் வருவோர் எல்லாம் அவனைப் பார்த்துப் பரிதாபப்படுவது வழக்கம். ஆனால் குடியானவனை ஒருவரையும் லக்ஷ்யம் செய்ய வில்லை. கடவுள் அவனுக்குத் தேவையானதை அளித்து வந்தார். அவரை வாயாரப் புகழ்ந்து அவன் ஆனந்தமாகக் காலம் கடத்திவந்தான்.

காய்கறிச் செடிகளுக்கிடையே சில வாழை மரங்களையும் அவன் வைத்திருந்தான். அந்த மரங்களில் பழுக்கும் பழங்கள் அதிக ருசி வாய்ந்தவையாக இருந்தன. அவைகளுக்கு ஈடாக அந்த நாட்டில் வேறு எங்கும் பழங்கள் பழுக்கவில்லை. நாலு பக்கங்களிலிருந்தும் இந்த அதிசயத்தைக் கேள்விப்பட்டு ஜனங்கள் பழத்திற்காகக் குடியானவன் குடிசையைத் தேடி வருவது வழக்கம். அவனும் சந்தோஷமாகக் கேட்டவர்களுக்கெல்லாம் இல்லை என்று சொல்லாமல் பழங்களைக் கொடுத்துவருவான். ஒருவரிடமும் ஒரு காசுகூட வாங்கமாட்டான். யாராவது கட்டாயப்படுத்திக் கொடுத்தாலும், "எனக்கு எதற்குப் பணம்? என் தேவைக்கு வேண்டியதைக் கடவுள் கொடுத்திருக்கிறார். பணத்தை வைத்துக்கொண்டு நான் என்ன செய்ய?" என்று கூறி வாங்க மறுத்துவிடுவான்.

ஒரு நாள், நானகு குதிரை பூட்டிய வண்டி ஒன்றில் ஒரு மனிதன் குடிசையின் முன்னால் வந்து இறங்கினான். அவனுடைய உடையைப் பார்த்தால் பெரிய பணக்காரன் போலத் தோன்றிற்று. பணக்காரன் குடியானவனிடம், "அடுத்த ஊர் ஜமீந்தார் நான். எனக்கு ஆயிரக் கணக்கான வேலி நிலங்கள் இருக்கின்றன. பல பல

அருமையான பழச்செடிகளைப் பயிரிட்டிருக்கிறேன். உன் மரத்தில் பழுக்கும் பழங்கள் அதிக ருசி வாய்ந்தவை என்று சொல்கிறார்கள். அதில் ஒரு மரத்தை வாங்க வந்திருக்கிறேன். விலையைப் பற்றிக் கவலை இல்லை. என்ன விலை வேண்டுமானாலும் கேள்.''

குடியானவன் சாந்தமாக, ''ஐயா, என் வாழைகளில் அபூர்வமாக ஒன்றும் இல்லை. அதற்கு இந்த இனிமையான ருசியைக் கொடுத்தவர் கடவுளே. என்னால் ஒன்றும் இல்லை'' என்று கூறிப் பணக்காரனுக்குத் தன் வாழையை விற்க மறுத்துவிட்டான். அவன் அத்துடன் விடவில்லை. ''உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள். எனக்கு ஏராளமான செல்வம் இருக்கிறது. ஒரே ஒரு மரம் மட்டுந்தான் எனக்கு வேண்டும்'' என்றான்.

''எனக்குப் பணம் தேவை இல்லை. கடவுள் எனக்கு வேண்டியதை அளித்திருக்கிறார்'' என்று சொன்னான் குடியானவன். பணக்காரனுக்கு எப்படியாவது எந்த விலை கொடுத்தாவது ஒரு வாழையைத் தன் தோட்டத்தில் பயிரிடவேண்டும் என ஆசை வேரூன்றி விட்டது.



பணத்திற்குக் குடியானவன் மயங்காமல் போகவே, ''உன்னால் விலைக்குத் தர முடியாது என்றால், சும்மாவாவது ஒரு வாழை தரமாட்டாயா?'' என்று மன்றாடினான்.

''தருவதற்கு எனக்குச் சம்மதந்தான். ஆனால் உங்கள் தோட்டத்தில் இந்த வாழை வளராது'' என்றான் குடியானவன்.

பணக்காரன் இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தவில்லை. ஒரு வாழைக் கன்றைப் பத்திரமாக எடுத்துச் சென்று நல்ல செழிப்பான பூமியில் நட்டு, கண்ணிமை காப்பதுபோலக் காத்து வளர்த்து வரலானான். ஆனால் சில நாட்களில் அந்தச் செடி வாடி வதங்கி அழிந்துவிட்டது.

பணக்காரன் மிகவும் வருத்தத்துடன் குடியானவனிடம் சென்று இன்னும் ஒரு செடி வாங்கிவந்தான். அதுவும் வளராமல் பட்டுப்போய்விட்டது. மூன்றும் தடவை குடியானவனிடம் சென்ற பொழுது, ''நான்தான் சொல்கிறேனே, இந்த வாழை உங்கள் தோட்டத்தில் ஒரு காலும் வளராது. செழித்து வளரும் இந்தப் பூமியை விட்டுப் பெயர்ந்து, உங்கள் தோட்டத்தில் நட்டு அவைகளை வீணுக்குவதனால் என்ன பிரயோஜனம்?'' என்று கூறினான் குடியானவன்.

''அப்படி உன் தோட்டத்தில் என்ன விசேஷம் இருக்கிறது? இந்தத் தோட்டத்தில் ஒரு பாகத்தை எனக்குக் கொடு. அப்பொழுதாவது இந்த வாழை வளருகிறதா பார்க்கிறேன்'' என்று, கொஞ்சம் நிலத்தைத் தனக்குத் தரும்படி கேட்டான்.

''உங்களுக்காக எந்த இடத்திலும் இந்த வாழை வளராது. பணக்காரர்களே இப்படித்தான். அவர்களுக்கு ஒரு போதும் திருப்தி கிடையாது. கிடைக்கக் கிடைக்க மேலும் ஆசைப்பட்டுக் கொண்டே இருப்பார்கள். கிடைத்ததைக் கொண்டு திருப்தியுடன் இருக்கிறவர்களுடைய தோட்டத்தில்தான் என் வாழை வளரும்'' என்றான் குடியானவன்.

பணக்காரன் சிறிது நேரம் யோசித்தான். பிறகு, ''நான் என்னிடம் இருப்பதைக் கொண்டு திருப்தியடைகிறேன் என்று வைத்துக்கொள். அப்பொழுது என் தோட்டத்தில் வளருமா?'' என்று கேட்டான்.

குடியானவனுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. ''பிரபுவே! என்னிடத்தில் இருக்கும் வஸ்துவில் உங்களுக்கு ஆசை இருக்கும் வரை, உங்களுக்குத் திருப்தி எப்படி வரும்?'' என்றான்.

பணக்காரனுக்கு அவன் சொல்வதன் மர்மம் புரிந்தது. அது முதல் குடியானவன் தோட்டத்து வாழையின் மேலுள்ள ஆசையை விட்டொழித்தான். தனக்கு இருந்த செல்வத்துடன் திருப்தியாக வாழலானான். அவன் தோட்டத்து வாழை மரங்களும் ருசியான பழங்களைக் கொடுத்தன.

வீடு கதைகள்

29

நாலுலக்கை குத்தி வர
ரெண்டு முறம் புடைத்து வர
துடுப்புத் தூரவி வரத்
துரைமக்கள் ஏறி வர.

30

குயவன் பண்ணுத பாண்டம்
வண்ணன் வெளுக்காத வெள்ளை
மழை பெய்யாத தண்ணீர்:
இது என்ன?

31

நாலு காலுண்டு – வீச வாலில்லை.

32

மஞ்சள் பெட்டி மறக்காப் பெட்டி
ஒருநாளும் திறக்காப் பெட்டி.

33

உத்தியோகம் இல்லாமல்
ஓடித் திரிகிறான் ஒருவன்.

34

அடி மலர்ந்து நுனி மலராத பூ
என்ன பூ?

35

ஒரு குதி குதித்தான் திம்மப்பன்
பல்லை இளித்தான் திம்மப்பன்!

36

கொக்கு நிற்க நிற்க -
குளம் வற்ற வற்ற

37

மக்களும் மக்களும் நாங்கள்தான்
மகராஜி மக்களும் நாங்கள்தான்
அம்மியின் மேலே கும்மி அடிக்கிற
அம்மான் மக்களும் நாங்கள்தான் [கிற
பட்டுப் புடைவைக்கு முத்திரை வைக்
பல்லு மக்களும் நாங்கள்தான்.

38

ஊசிபோல் இலை இருக்கும்
உத்திராக்ஷம்போல் காய் காய்க்கும்

39

இக்குணிப் பிள்ளைக்குத்
துக்குணி நாமம்!

40

ஊருக்கெல்லாம் ஒரே கூரை.

41

மொட்டை மரத்தில்
முந்நூறு காக்காய்.

42

நித்தம் கொட்டும், சத்தம் இல்லை.

43

இரண்டு வீட்டுக்கு ஒரே விட்டம்.

44

அஞ்சு வீரல் அமர்ந்தாடப்
பத்து வீரல் பந்தாட
சூரியனுடன் வாதாட
எமனுடன் போராட.

45

செக்கச் சிவந்திருப்பாள்
சிவப்பு ரத்னம் போலிருப்பாள்
வாலு மூளைத்திருப்பாள்
வந்திருப்பாள் சந்தையிலே.

46

ஆகாசத்துக்கும் பூமிக்கும்
ஒரே சங்கிலி.

47

ஓட்டிலே வீடு கட்டி
உள்ளே உரி கட்டி
நாட்டாருக் கெல்லாம்
நல்ல வஸ்து என்ன?

48

நெடு நெடு வென்று வளர்ந்தாண்டி
நெற்றியிலே விபூதி போட்டாண்டி
ருத்ராக்ஷ மாலை தரித்தாண்டி.

(நாகையநல்லூர் ஸ்ரீ என். மீனாக்ஷிசுந்தரம் தொகுத்தவை.)

[விடைகள்: 108-ஆம் பக்கம் பார்க்க.]

நக்ஷத்திரங்கள்

ஆர். கே. விசுவநாதன்

நிலா வெளிச்சம் இல்லாதபொழுது ஆகாயத்தைக் கவனித்தால் எண்ணற்ற நக்ஷத்திரங்கள் மினுமினுப்பதைப் பார்க்கலாம். இவைகளைச் சோதனை செய்யப் பௌதிக சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே இவற்றைப் பற்றிய திட்டமான அறிவு ஏற்பட்டது. வானத்தில் உள்ள எல்லா நக்ஷத்திரங்களையும் நாம் கண்ணால் காண முடியாது. நமது கண்ணுக்குத் தோன்றுவிடினும் சில நக்ஷத்திரங்கள் மிகப் பெரியனவாக இருப்பதைச் சோதனை வாயிலாகக் கண்டார்கள். அவை அளவு கடந்த தூரத்தில் இருப்பதால் அவற்றின் ஒளி நம்மை அடைவதற்கு வேண்டிய பிரகாசம் இல்லாமல் போவதே இதற்குக் காரணம். கண்களுக்குப் புலப்படும் நக்ஷத்திரங்கள் பல மாதிரியாகப் பிரகாசிப்பதை அறிந்தார்கள். மேலும் இவற்றின் ஒளியின் நிறமும் வேறுபடுவதைப் பார்த்தார்கள். நக்ஷத்திரங்களின் பிரகாசத்தை அளவிட்டு முதல் வகுப்பு நக்ஷத்திரங்கள் என்றும், இரண்டாவது வகுப்பு நக்ஷத்திரங்கள் என்றும், மூன்றுவது வகுப்பு நக்ஷத்திரங்கள் என்றும் அவற்றை வகைப்படுத்தியிருக்கின்றார்கள். நக்ஷத்திரங்களின் பிரகாசம், தூரம், நிறை, பருமன் முதலிய விவரங்களை எவ்வாறு அறிந்தார்கள் என்பதை இக் கட்டுரையில் கவனிப்போம். அதற்கு முன்பு அவற்றைச் சோதிப்பதற்குண்டான தூரதரிசினியைப் பற்றியும், நிறமாலை அளவியைப் பற்றியும் சிறிது கூறுவோம்.



தூரதரிசினி

வானநூல் அறிஞர்கள் உபயோகிக்கும் கருவிகளில் தூரதரிசினியே (Telescope) முக்கியமானது. இதில் இரண்டு வகை உண்டு. முதல் வகையில் உள்ள பகுதிகள் வில்லைகளாக (Lenses) இருக்கும். இவற்றில் ஒன்று நீண்ட குவிய நீளமுடைய (Focal length) குவி வில்லையின் சேர்க்கையாக இருக்கும். இதற்குப் பொருட் பகுதி (object glass) என்று பெயர். மற்றொன்று குறுகிய குவிய நீளமுள்ள குவி வில்லையின் சேர்க்கையாக இருக்கும். இதற்குக் காட்சிப் பகுதி (Eye piece) என்று பெயர். நீண்ட குவிய நீளமுள்ள பொருட் பகுதி தொலைவிலுள்ள தொரு பொருளின் சுருங்கிய படிவத்தை உண்டாக்குகிறது. இந்தப் படிவம் குறுகிய குவி நீளம் கொண்ட காட்சிப் பகுதியினால் பெருக்கப்பட்டு, பொருளின் விரிந்த படிவம் ஒன்று காட்சிப் பகுதியின வழியாகப் பார்க்கும் ஒருவனுக்குத் தோன்றுகிறது. இரண்டாவது வகைத் தூரதரிசினியில் பொருட் பகுதிக்குப் பதிலாகப் பெரியதொரு குழியாடி (Concave mirror) ஒன்றை உபயோகித்துப் படிவத்தை உண்டாக்குவது வழக்கம். சமீபகாலம் வரையில் இவ்விரண்டாவது வகைத் தூரதரிசினியையே வானநூல் அறிஞர்கள் கையாண்டுவந்தார்கள். இதற்குக் காரணம் வில்லைகளின் சில கெடுதல்களே ஆகும். வில்லைகளுக்கு உண்டான நிறப் பிறழ்ச்சி (Chromatic aberration), உருட்சிப் பழுது (Spherical aberration) முதலிய கெடுதல்களை நிவர்த்தி செய்த பொருட் பகுதியும் காட்சிப் பகுதியும் கொண்ட முதல் வகைத் தூரதரிசினிகளே தற்காலம் வானசோதனை நிலையங்களிலே உபயோகப்பட்டுவருகின்றன. இவ்வகைத் தூரதரிசினியின் பெருக்கத் திறமை (Magnifying power) பொருட் பகுதியின் குவிய நீளத்திற்கும் காட்சிப் பகுதியின் குவிய நீளத்திற்குமுள்ள தகவே (ratio) என்று சுலபமாகக் காட்டலாம். பல வேறு பெருக்கத் திறமையைப் பெறுவதற்கென்று ஒவ்வொரு தூரதரிசினியுடன் பல காட்சிப் பகுதிகள் வைக்கப் பட்டு இருக்கும். படிவத்தின் பிரகாசம் பொருட் பகுதியின் பரப்பைப் பொறுத்தது. எனவே பொருட் பகுதியின் விட்டம் அதிகமானால் படிவத்தின் பிரகாசமும் அதிகமாகும் என்று அறியலாம். மிகப் பெரிய தூரதரிசினிகளில் ஒன்று அமெரிக்க நாட்டில் காலிபோர்னியாவிலுள்ள சோதனை நிலையத்தில் இருக்

கிறது. இதன் பொருட் பகுதியின் விட்டம் நாற்பது அங்குலம் என்றும், குவிய நீளம் அறுபத்தைந்து அடி என்றும் கூறுவர்.

இனி நக்ஷத்திரங்களைச் சோதிப்பதற்கு உண்டான மற்றொரு விஞ்ஞானக் கருவியைப் பார்ப்போம். இதற்கு நிறமாலை அளவி அல்லது மானி (Spectrometer) என்று பெயர். இதன் தத்துவத்தைச் சிறிது விளக்குவோம். வெண்ணிற ஒளியை ஒரு கண்ணாடி முப்பட்டையின் (Prism) மூலம் செல்லுமாறு செய்து, அதில் பல்வேறு நிற ஒளிகள் இருப்பதை நியூட்டன் என்ற பேரறிஞர் முதல் முதலில் கண்டார். இந்த நிறங்களின் வரிசை வானவில்லில் உள்ளதைப் போல இருப்பதைக் காட்டினர். இவ் வரிசைக்கு நிறமாலை (Spectrum) என்று பெயரிட்டார். பிறகு பொருள்களெல்லாம் சூடேற்றப்பட்டால் தமக்கென்று சிறப்பான ஒளி ஒன்றை வெளியிடுவதைக் கண்டார்கள். இவ்வொளியின் நிறமாலையைச் சோதனை செய்து பொருளின் தன்மையை அறிய முடிந்தது. நக்ஷத்திரங்களின் ஒளியை நிறமாலை மணியின் மூலம் சோதனை செய்து அவற்றின் தன்மையை அறிய முதல்முதலில் முன்வந்தவர் பிரான்ஹோபர் என்ற விஞ்ஞானி ஆவர். இவர் கருவியில் சில சீர்திருத்தங்களையும் செய்தார். பின்னர் நிறமாலையைப் போட்டோத் தாளில் பதிவு செய்வதற்கும் தக்க சாதனங்கள் கருவியில் அமைக்கப்பட்டன. இவற்றின் வீரர்வாக நக்ஷத்திரங்களைப் பற்றிய பல விவரங்கள் தெரிந்தன.

நக்ஷத்திரங்களின் பிரகாசம் வேறுபடுவதற்கு அவற்றின் ஒளி தரு திறமையும், தூரமும் காரணமாய் இருக்கின்றன. ஒரு பொருளின் பிரகாசம் தூரத்தினுல் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்ற முதலில் பார்ப்போம். ஓர் ஒளி தரும் பொருளிலிருந்து பத்து அடித் தூரத்தில் ஒரு திரையை வைத்தோமானால் அதன் பரப்பில் விழும் ஒளியினுல் அத்திரையின் பிரகாசம் அமைகின்றது. இப்பொழுது திரையைப் பொருளிலிருந்து இருபது அடித் தூரத்துக்கு நகர்த்துவோம். நகர்த்தும்பொழுது திரை அதன் முதல் நிலைக்கு இணையாக இருக்குமாறு செய்யவேண்டும். முதல் நிலையில் திரையின் ஒரு குறிப்பிட்ட பரப்பின் மீது விழுந்த ஒளியே, இரண்டாவது நிலையில் அதைப் போன்று நான்கு மடங்கு கொண்ட பரப்பின்மீது விழவேண்டும் என்று சுலபமாகக் காட்டலாம். எனவே திரையின் பிரகாசம் முதலில் இருந்த பிரகாசத்தில் நான்கில் ஒரு பங்காக ஆகிவிடுகிறது. தூரம் இரண்டு மடங்காக அதிகரிக்கும்போது திரையின் பிரகாசம் நான்கில் ஒரு மடங்காகக் குறைந்துவிடுகிறது என்பதுதான் இதன் கருத்து. இதை மேற்கொண்ட விதிக்கு வருக்க மறிப்பு விதி (Inverse square law) என்று பெயர். இப்பொழுது திரையை முப்பது அடித் தூரத்துக்கு அப்பால் வைத்தால் அதன் பிரகாசம் முதல் நிலையில் இருந்த பிரகாசத்தில் ஒன்பதில் ஒரு பாகமாக இருக்கும் என்று சுலபமாக அறியலாம். இவ்விதியைக் கொண்டு நக்ஷத்திரங்களின் தூராதரத்தை அறியலாம். இதற்கு ஓர் உதாரணத்தைக் காணிப்போம். எல்லாவற்றைக் காட்டிலும் மிகவும் பிரகாசமாக இருக்கும் விரியஸ் (Sirius) நக்ஷத்திரம் பூமியிலிருந்து ஐந்து கோடி மைல் தூரத்தில் இருக்கிறது. சூரியன் பூமியிலிருந்து ஒன்பது கோடி மைல் தூரத்தில் இருக்கிறது. எனவே விரியஸ் சூரியன் இருக்கும் இடத்திலிருந்து சுமார் ஐந்தரை லக்ஷம் மடங்கு அதிகமான தூரத்தில் இருக்கிறது என்று அறியலாம். விரியஸ் இருக்கும் இடத்தில் சூரியன் இருக்குமானுல் வருக்க மறிப்பு விதியைக் கொண்டு இரண்டினுடைய பிரகாசத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். அவ்வாறு பார்க்கும்பொழுது சூரியனைவிட விரியஸ் இருபத்தேழு மடங்கு பிரகாசமாய் இருக்கவேண்டும் என்று தெரியவந்தது.

நக்ஷத்திரங்களின் ஒளி தரு திறமை அவற்றின் பருமனையும் அவை வெளியிடும் ஆற்றலையும் (Energy) பொறுத்திருக்கிறது. ஆற்றல் அதன் சூட்டைப் பொறுத்திருக்கிறது. எனவே நக்ஷத்திரங்கள் வெளியிடும் ஆற்றலை நாம் அறிவோமானுல் அவற்றின் வெப்பநிலையை நாம் ஊகிக்க முடியும். மேலும் அவற்றின் பரப்பையும் தன்மையையும் அறிய முடியும். ஓர் இரும்பு உருண்டையைப் பழுக்கக் காய்ச்சினுல் முதலில் சிவப்பாகத் தோன்றுவதைப் பார்க்கலாம். பின்னும் சூடேறவே, வெண்ணிற ஒளியை அது வெளியிடும். அவ்வப்போது நிறமாலையைப் பரிசோதித்துப் பார்த்தால் முதலில் ஆற்றல் முழுவதும் வெப்பக் கிரணங்களாகப் பரவுவதையும், பின் பல வேறு நிற ஒளிக்கிரணங்களாக மாறுவதையும் காணலாம். நக்ஷத்திரங்களின் ஒளியைப் பரிசோதித்ததில் அவற்றில் சில சிவப்பாக இருப்பதைக் கண்டார்கள். எனவே இந்த நக்ஷத்திரங்களின் சூடு குறைவானது என்று உணரலாம். இந் நக்ஷத்திரங்கள் மிகப் பெரியனவாக இருப்பதையும் அறிந்தார்கள். இவற்றிற்கு அடுத்தபடி நீலமாகத் தோன்றும் சில நடுத்தர நக்ஷத்திரங்களைக் கண்டார்கள். முன்னவற்றைவிட இவை சூடு அதிகம் வாய்ந்திருக்கவேண்டும் என்று அறியலாம். இவற்றிற்கு அடுத்தபடி வேறு வகை நக்ஷத்திரங்களைக் கண்டார்கள். அவை மிகச் சிறியனவாகக் காணப்பட்டன. ஆனுல் அவற்றில் சில சிவப்பாகத் தோன்றுவதையும் கண்டார்கள்.

ஒவ்வொரு நக்ஷத்திரத்தின் தூரத்தையும் அதன் பிரகாசத்தையும் சுலபமாக அறிந்

தார்கள். அதிலிருந்து அது வெளியிடும் மொத்த ஆற்றலைக் கணக்கிடலாம். மேலும் நிறமாலைப் பரிசோதனையிலிருந்து ஒரு சதுர அங்குலம் கொண்ட அதன் பரப்பு வெளியிடும் ஆற்றலையும் அறிந்தார்கள். இவ்விரண்டையும் கொண்டு ஒவ்வொரு நக்ஷத்திரத்தின் விட்டத்தையும் அறிய முடிந்தது. அதனை அறிய வேறு வழிகளையும் கையாண்டிருக்கிறார்கள். உதாரணமாக ஐன்ஸ்டைன் தத்துவத்தைக்கொண்டு சிறிய நக்ஷத்திரங்களின் விட்டங்களைக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

பார்வைக்கு ஒன்றுபோலத் தோன்றுகிற சில நக்ஷத்திரங்கள் உண்மையில் இரண்டு இரண்டு நக்ஷத்திரங்களாக இருப்பதை நிறமாலைச் சோதனை வாயிலாக அறிந்திருக்கிறார்கள். ஒலியைப்போல ஒளியும் அலைகளாகப் பரவுவதால் ஒவ்வொரு நிற ஒளிக்கும் ஒரு சுருதி இருக்கவேண்டும் என்று உணரலாம். இதை அடுக்கம் (Frequency) என்றும் கூறுவதுண்டு. ஒலி, ஒளி இரண்டையும் பொறுத்து, 'டாப்ளர்' என்ற விஞ்ஞானி ஓர் அதிசயத்தைக் கண்டார். அதாவது ஒலிக்கும் பொருள் நம்மை நோக்கி ஓடி வரும்போது அதன் சுருதி சற்று உயர்வாகவும், பொருள் நம்மைக் கடந்து செல்லும்போது அதன் சுருதி குறைவாகவும் கேட்பதைக் கண்டார். டாப்ளர் இதன் காரணத்தை அறிந்து, சுருதியின் ஏற்றத்தாழ்வு ஒலிக்கும் பொருள் செல்லும் வேகத்தின் மீது சார்ந்திருப்பதை எடுத்துக் காட்டினார். ஒலியைப் போல ஒளி விஷயத்திலும் இத்தகைய நிகழ்ச்சி ஏற்படுவதைக் கண்டார்கள். ஒரு நக்ஷத்திரத்தின் ஒளி நிறமாலையைச் சோதித்து அது நம்மை நோக்கியோ அல்லது அப்புறமாகவோ செல்லும் கதியைக் கணக்கிட்டார்கள். இந்த நிகழ்ச்சியைப் பயன்படுத்தி இரட்டை நக்ஷத்திரங்களைக் கண்டுபிடித்தார்கள். இத்தகைய நக்ஷத்திரங்களில் உள்ள இரண்டு நக்ஷத்திரங்களும் நெருங்கி இருப்பதனால் அவற்றிடையே உள்ள பொருட் கவர்ச்சியின் வீகவாக ஒன்றை ஒன்று சுற்றி வருகின்றது. பொருட் கவர்ச்சியினால் கிரகங்களும் நக்ஷத்திரங்களும் சுற்றும்போது ஆயதங்களில் (Ellipses) சஞ்சரிப்பதைக் கெப்லர், நியூட்டன் முதலிய விஞ்ஞானிகள் உணர்ந்தார்கள். ஆயதங்களின் வடிவம் கவரும் பொருள்களின் நிறைகளினால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது என்று பார்த்திருக்கிறார்கள். எனவே ஒன்றைச் சுற்றி மற்றொன்று ஓடி வரும் ஆயதத்தை அறிந்தால் கவரும் பொருளின் நிறையைச் சுலபமாகக் கணக்கிட்டுவிடலாம். இக்கருத்தை உபயோகித்து இரட்டை நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றின் நிறையையும் அறிந்திருக்கிறார்கள். உதாரணமாக, ஸிரியஸ் நக்ஷத்திரம் இரட்டை நக்ஷத்திரமாக இருப்பது தெரியவந்தது. இத்துடன் இருக்கும் நக்ஷத்திரம் ஸிரியஸைக்காட்டிலும் அளவில் மிகச் சிறியதாக இருப்பதை உணர்ந்தார்கள். இதன் ஒளியும் மிகக் குறைவாக இருப்பதைக் கண்டார்கள். இதை ஒளியற்ற நக்ஷத்திரம் என்றுகூடச் சொல்வது உண்டு. முன் சொன்ன கருத்தினால்தான் இவ்விரு நக்ஷத்திரங்களின் நிறைகளும் அறியப்பட்டன.

கடைசியாக நக்ஷத்திரங்களினுள் நிகழும் விசித்திரத்தைப் பற்றி 'எட்டிங்டன்' போன்ற பேரறிஞர்கள் கூறும் முடிவுகளைப் பார்ப்போம். ஒவ்வொரு நக்ஷத்திரமும் சூடு வெகுவாக உயர்ந்த நிலையில் இருப்பதால் அதன் பொருள் முழுவதும் ஆவி நிலையில் இருக்கிறது என்றும், இதனால் பொருளின் அணுக்கள் எல்லாம் அதித கதிகளுடன் அங்குமிங்கும் சஞ்சரித்துக்கொண்டிருக்க வேண்டும் என்றும் கூறுகிறார்கள். பொருட் கவர்ச்சியினால் அணுக்களெல்லாம் நக்ஷத்திரத்தின் மையத்துக்குக் கவரப்படுகின்றன. சூட்டின் வீகவாக அணுக்கள் பெற்றுள்ள ஆற்றலினால் இறுக்கம் அதிகமாகி, அணுக்களெல்லாம் மையத்தினின்று வெளியே தள்ளப்படுகின்றன. இவ்விரண்டு சக்திகளுக்கும் இடையே அணுக்கள் துகள்பட்டு நிற்கின்றன என்று கூறுகிறார்கள். மேலும் அணுக்களுடன் ஆற்றல் மிகுந்த எக்ஸ் - கிரணங்களும் தோன்றுவதை அறிந்திருக்கிறார்கள். அணுக்களும் ஆற்றல் அதிகம் வாய்ந்த கிரணங்களும் ஒன்றோடொன்று மோதிக்கொள்வதால் அணுக்களில் மாறுதல்கள் உண்டாவதை உணர்ந்தார்கள். ஒவ்வோர் அணுவிலும் மிகை மின்சுமையை ஏற்றுள்ளதொரு கருவும் அதைச் சூழ்ந்து பல மண்டலங்களிலே ஓடி வரும் மின்னுருக்களும் (Electrons) உண்டு என்பதை நாம் அறிவோம். அணுக்களை எக்ஸ்-கிரணங்கள் தாக்கும்போது மின்னுருக்கள் எல்லாம் விடுபட்டுச் சிதறி அடிக்கப்படுகின்றன என்று கூறுகிறார்கள். எனவே நக்ஷத்திரங்களினுள் அணுக்கள், மின்னுருக்கள், எக்ஸ் - கிரணங்கள் என்ற மூன்று வகைப் பொருள்களே இருக்கின்றன என்று முடிவு கட்டுகிறார்கள். எக்ஸ் - கிரணங்கள் வெகு காலம் உள்ளேயே சுழன்றுகொண்டிருந்தபின் கடைசியில் நக்ஷத்திரத்தின் மேற்பரப்பை அடையும்பொழுது ஓரளவு ஆற்றலை இழந்து நக்ஷத்திரத்திலிருந்து எக்ஸ் - கிரணங்களைக் காட்டிலும் குறைந்த ஆற்றல் வாய்ந்த ஒளிக்கிரணங்களாக விசும்பில் வியாபிக்கின்றன என்று கூறுகிறார்கள். இதன் வீகவாகவே நமக்கு நக்ஷத்திரம் ஒவ்வொன்றும் புலனாகின்றது என்று கருதுகின்றார்கள். நாளுக்கு நாள் புதிய விஷயங்கள் அறியப்பட்டு வருகின்றன. இத்தகைய ஆராய்ச்சிகளில் நம் நாட்டு விஞ்ஞானிகளான ஸாஹா, போஸ், சந்திரசேகரன் முதலியவர்களும் ஈடுபட்டுவருகிறார்கள்.

கலைமகள்
ஸ்தாபிதம். 1932.

என்ன சம்பந்தம்?

சி. சு. செல்லப்பா

கையில் பேனாப் பிடித்து எவ்வளவோ காரசாரமாகிவிட்டது. இன்று எப்படியாவது ஒரு கதை எழுதிவிடவேண்டும் என்ற நீர்மானமே எழுவிப் போய்க்கொண்டிருப்பது போல் கைப் பேனா விரல்களுக்குப் பிடிபடாமல் வழுக்கிக் கொண்டிருந்தது. வீட்டின் கலகலப்பை உதாசீனம் செய்து தனி அறையிலே கிடந்து ஜன்னலுக்கு வெளிப்புறம் பார்த்து முகத்தை உம்மென வைத்துக்கொண்டிருந்ததுதான் மிச்சம். அலுத்துப் போய், சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன். அப்போது கண்களில் விழுந்தது:

கேர் எதிர் வரிசையிலே பழைய வீடொன்று-கோழிக்குச்சின் தோரணையில். இந்த லக்ஷணத்தில் அதற்கு ஒரு மாடி அறை கூன் முதுகு போல் முன்னும் பின்னும் சரிந்துவந்து, காற்றோட்டத்திற்கும், வெளிச்சத்துக்குமாகச் சுவர் பூர்ணமாக அடைபடாமல் அரைச் சுவர் எடுத்து இடுப்பளவுக்கு மேலே கம்பி அடைப்புப் போட்டிருந்தது. அவற்றின் இரண்டு மூன்று கம்பிகளுக்கு நடுவே இருந்து அந்த முகம் வெளியே தாழ்நோக்கி வீதியைப் பார்த்துக்கொண்டிருந்தது என்னைப்போல.

அப்போது சட்டென ஞாபகத்துக்கு வந்தது: மீனு ஒரு சமயம் சிரிப்பின் நடுவே என்னிடம் கூறியிருந்தாள், "நீங்கள் மாமனார் வீட்டுக்கு வந்தீர்களானால் வேண்டிய கண்காட்சிகள் பார்க்கலாம்" என்று.

சதிபதிகளின் பேச்சுக்களில் எவ்வளவோ

இருக்கும். ஒரு சமயம் நிரம்பித் ததும்பும் இன்ப வார்த்தைகள் ஒன்றோடொன்று இணைந்திற்கும். திடீரென எங்கோ ஓர் மாற்றத்தைக் கண்டு அங்கலாய்ப்பிலே ஆழ்ந்திடும், இன்னொரு சமயம். பொருமை, கிண்டல் இவற்றிற்கும் உரிய இடங்கள் அவ்வப்போது உண்டு. இவற்றில் எதன் நடுவே இந்த வார்த்தைகள் வெளிக்கிளம்பின என்பது எனக்கு இப்போது ஞாபகம் இல்லை. ஒரு வேளை என் குணப் பிரதிபலிப்பை உணர்த்த - எதாவதொரு பல ஹீன நிலைமையில் கூறிவிட்ட இரண்டொரு வரக் கியங்களுக்குச் சூடாக - இதை இப்போது ஆராய் வானேன்?

அந்த ஞாபகம் வரவும் கண்கள் தாமாகவே அந்த வரிசையை ஆராய ஆரம்பித்தன. பிரஸ் தாப வீட்டிற்கு அடுத்து இன்னொரு குச்சு வீடு. அதற்கு மாடி இல்லை. வாசலிலே ஆரம் பித்த ஒரு குட்டித்திண்ணைக்குப் பின் எழுந்து நின்ற கதவின் ஆரம்பத்தோடு இருந்தது. நிலைக்குப்பின் இருப்பதை மறைக்கும் தோரணை யில் ஒரு கையை நிலைக்கு உயர்த்தி மறுகையால் தலைப்பின்னலைச் சேஷ்டை செய்துகொண்டிருந் தது, இன்னோர் உருவம்.

மீனு சொல்லியிருந்த கண்காட்சிகள் இவை தாம். காட்சிகளில் கண் லயிக்கவும் கையின் சொத்தை குறைந்துவிட்டது. கதையின் ஆரம்பம் நின்றுவிட்டது.

மனித மனத்துக்கு உத்ஸாகத்தைத் தூண்டி விடும் அந்திப்பொழுதின் வருகையோடு இந்த உருவங்களும் நிலைக்கு நிலை அந்த உத்ஸாகத்துக்கு சுடு கட்டும் தோரணையில் வந்து நிற்கின்றன. அந்த அந்த உத்ஸாக வேகத்துக்குத் தக்கபடி வெற்றி தோல்வி கிடைக்கிறது. தினசரி வாழ்க் கையில் இது ஓர் அம்சம்.

"ஊஹூம்! கண் வலிக்கப் போகிறது!" என்று அருகில் குரல் கேட்டதுந்தான் என் யோசனை கலைந்து திரும்பினேன். கையில் டிபன் தட்டு டன் மீனு நிலைப் படியில் நின்றகொண்டிருந் தாள்.

ஒரு திருடனைக் கண்டுபிடித்த வெற்றியை அவள் கண்கள் காட்டின. எதிர் காட்சிகளில் என் கவனம் பதிந்திருந்த நிலைமையில் வழக்க மாக எட்டி வரும்போதே சற்றுப் பலத்துக் கேட் கும் அவள் கால் சுற்றுக்களின் சப்தங்கூட என்னை இழுக்கவில்லை.

"ஒசைப்படாமல் வந்து வேவு பார்க்கிறாய்? ஆமாம், நீ சொன்ன காட்சிகள் இவைதானே?" என்ற அவளை வம்புக்கு இழுத்தேன்.

ஒரு ஸ்லேட் இழுத்துப் போட்டு தன் கையில் இருந்த சாமான்களை வைத்துக்கொண்டே, "இதோ பாருங்கள். பேச்சை மழுப்பவேண் டாம். உங்களைப்பற்றி நான் இப்போது என்ன நினைத்துக்..." என்று பேச்சை மூடிக்காமல் இழுத்தாள். அவள் உதடுகள் விஷமமாக நெளிந் தன.

"இதற்குள் ஒன்றும் நினைத்துக்கொண்டிரா விட்டால் தாராளமாக—" என்று சொல்ல வாயெ டுத்தவன் சட்டென மாற்றிக்கொண்டு, "சரி, சரி, உளறுதே...இங்கே வா. நீயும் கொஞ்சம் இந்த வேடிக்கையைப் பாரேன்" என்று அழைத்தேன்.

"ஓச்சி! போதும் இந்த அவலக்ஷணத்தை எல்லாம் பார்த்துக்கொண்டு. நான் கதை எழுது கிறவள் அல்ல" என்று முகத்தில் கசப்புக் காட் டிக்கொண்டு பேசினாள்.

"கதை எழுதாவிட்டாலும் வாசிப்பவள் நீ."

"இப்படிப்பட்ட கதைகள் எல்லாம் நான் வாசிக்கத் தயாராக இல்லை. சரி, டிபன் சாப்பிட்டு விட்டு அப்புறம் வேடிக்கை பாருங்கள்" என்றாள் மீனு.

தொடுவதற்குத் தகுதி இல்லாத ஒரு விஷயத் தைப்பற்றி நான் பிரஸ்தாபித்தது அவளுக்குச் சிறி தும் பிடிக்கவில்லை. மனித சமூகத்தின் கண்ணி யத்தைத் தரைமட்டப்படுத்தும் ஒரு வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து வரும் இவர்கள் சமூக அவலக்ஷணங்களே. மீனுவின் நினைப்புத்தான் உலகம் முழுவதும் எதிரொலித்துக்கொண்டிருக் கிறது. ஆனால் இந்த ஆண்...

என் சிந்தனை வேறு எங்கோ அலைவதைத் தடுத்து நிறுத்தி, "மீனு, இந்த அவலக்ஷணங்களின் வாழ்க்கைதான் எப்படிப் போகிறது பாரேன். இப்படி இவர்கள் பிழைப்பு நித்தம் கழியவேண்டி இருக்கிறது" என்றேன்.

"பிழைப்பு!"

மீனு கண்களை மூடிக்க விரித்து வெகு ஆத்தி ரத்தோடு சொன்னாள்: "பிழைப்பு. கல்ல பிழைப்பு! தூ! மானங்கெட்ட பிழைப்பு! இதை விட..."

"பிழைக்க வழி அவர்களுக்கு வேறு ஒன்றும் தெரியாததால்தான்..." நான் தாண்டினேன்.

"தெரியாதாவது? தேகத்திலே உள்ள திமிர்! சதைக் கொழுப்பு!" என்று மீனு மேலே அடுக்க ஆரம்பித்தாள். அருவருப்பையும் ஆத்திரத்தை யும் கொட்டும் குரல் உயர்ந்து வந்தது.

கொழுப்பு! திமிர்! வாஸ்தவமாகவே அவர்களை அந்தப் படியில் வந்து நிற்கச் செய்கிறது; வைத் தக்கொள்வோம். ஆனால்—

"மீனு, எதானலும் இருந்துவிட்டுப் போகட் டும். இவ்வித வாழ்க்கையிலும் அவர்கள் இன்பம் அடைகிறார்கள் என்று நினைக்கிறயா?"

இவ்வளவு விரசமான ஒரு சம்பாஷணையைத் தொடரும் மனப்போக்கு அவளுக்குச் சிறிதும் இல்லை. இதைப்பற்றிப் பேசுவதே ஒரு பாப காரி யத்தைச் செய்வதாகும். மிகவும் கீழே இறங்கி விட்ட ஹீனமான, ஒளியிலே புலப்படாத, எங்கோ ஓர் இருள் மூலையிலே நடக்கும் ஒரு கீழ்த்தர வாழ்க்கை! அருவருப்பானது!

மீனு பேச்சை மடக்கினாள்: "இன்பம், துன்பம்! கண்டார்கள், காணவில்லை. அசங்கியமான பேச்சை விட்டுத் தள்ளுங்கள். கதை எழுத வராவிட்டால் இதை எல்லாம் போய்த் தூண்டிக் கொண்டு. எனக்குக் காரியம் கிடக்கிறது. போகிறேன். டிபன் ஆறிவிடப் போகிறது போங்கள்" என்று எச்சரித்துவிட்டுப் புறப்பட்டுவிட்டாள்.

நாலு எட்டுப் போனவள் திரும்பிவந்து, "பூக்காரன் போனால் கூப்பிடுங்கள்; ஞாபகப் பிசகாக இருந்துவிடாதீர்கள்" என்று சொல்லிச் சென்றாள்.

அடிப்படையிலேயே பொருத்தம் சிறிதும் ஏற்படாத ஒரு சம்பாஷணை முடிந்துவிட்டது. என் அனுதாப வார்த்தைகளை அடித்துத் தள்ளி, 'கொழுப்பு, திமிர்' என்ற இரண்டே வார்த்தைகளில் மீனு ஓர் உண்மையைச் சொல்லிப் போய்விட்டாள். கை டிபனை உள்ளே தள்ளிக்கொண்டிருக்கையிலேயே மனம் மட்டும் இதையே தொடர்ந்துகொண்டிருந்தது.

கதை எழுதவேண்டும் என்ற பாவனைகூடச் செய்யவில்லை கையும் மனமும். கண்கள் மனத்தைத் தொடர்ந்து எதிர் வரிசைக்கே திரும்பின. இன்னும் அதே நிலையில்தான் நின்றுகொண்டிருந்தார்கள் அவர்கள்! என் கண்களைத் தீட்டிக் கொண்டேன்.

தங்கள் தொழிலுக்குப் பூர்ணமாகத் தயார் செய்துகொண்டுவந்து நின்றிருந்தார்கள் அந்தப் பெண்கள் - குட்டிகள்! பெண்கள் என்ற பதத்தின் பவித்திரத்தன்மை குறையாதிருக்க அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பெயர் அது. குச்சுக்காரிகள் என்ற தனி ஜாதியாக அவர்களைப் பிரித்து வைத்திருக்கிறது.

அந்தக் குட்டிகளிடம் அழகு இல்லை. ஆனால் அதைவிடச் சிறந்த சாதனம் ஒன்று அவர்களிடம் பூர்ணமாக அமைந்திருந்தது. ஓர் ஆணின் கண்களைக் கவர்வதற்கான, மிருக இச்சையைத் தூண்டி விடுவதற்கான, சதைக் கொழுப்பு அவர்களிடம் இருந்தது. அவர்களுடைய அங்க அசைவுகளில் ஒவ்வொன்றிலும் காமத்தை வெளிக்கிளப்பி விடும் சக்தி இருப்பது தெரிந்தது. ஒரே யந்திரத்தில் வார்க்கப்பட்ட பொம்மைகளைப் போல இருந்தார்கள் அவர்கள். சர்வ சாதாரணமான ஒரு கரை போட்ட வெள்ளைப் புடைவை, மிகப் பழைய வரியில் அல்லது மல் ரவிக்கை, அதற்கு ஜம்பர் வெட்டு வேறு, கண்ணுடித் தண்டுகள்போல் மின்னும் இரண்டொரு கல் நகைகள், நிஜ நிறத்தை அரையும் குறையுமாக மறைக்கும் ஒரு வெள்ளைப் பவுடர் பூச்சு, இவை அடங்கிய சிங்காரங்கள், அவர்கள் உடல்; அது ஒன்றில் தான் அவர்கள் கவனம் முழுவதும்.

இப்படியே என் நினைப்பை ஓடவிட்டுக்கொண்டிருக்கும் போதே, தெருவின் நடுவில் தோன்றிய ஒரு தோற்றம் என்னைக் கவர்ந்தது. சற்று மூளையைச் செலுத்தினேன். எனக்குப் புரிந்துவிட்டது.

அந்த அழைப்புக்குப் பதில் கிடைக்க ஆரம்பித்துவிட்டது. இரண்டு மூன்று தடவை இப்படியும் அப்படியும் வட்டம் போட்டுக்கொண்டிருந்த ஒருவன் விறுட்டெனக் குறுக்கே பாய்ந்து குச்சு வீட்டுப் படி ஏறினான். நிலையில் நின்றிருந்தவள் பின்னகர்ந்து அவனுக்கு வழி விட்டாள். நிலையின் கதவு ஒருக்களித்த அவர்களைத் தெருப் பார்வையினின்று மறைத்தும் மறைக்காமலும் இருந்தது. கண்களை அப்படியே அடுத்த மாடி அறைக்குத் திருப்பினேன். அவளுக்குப் பதில் இன்னும் வரவில்லை.

அப்போது தெருவில், "மல்லிகைப் பூ, கதம்பம்!" என்று ஒருவன் கத்தினான். மீனு கூறினது ஞாபகம் வர, அறையிலிருந்து வெளியே வந்து கூப்பிடப் போனேன்.

வேறு ஒரு குரல் முந்திக்கொண்டுவிட்டது. "ஏ பூக்காரா, கதம்பம் இருக்கா? இங்கே கொண்டா!" மாடிவீட்டு அறையிலிருந்து வந்தது அந்தக் குரல்.

"இருக்கு அம்மா, கொண்டு வறேன்" என்று பதில் கொடுத்துக்கொண்டே பூக்காரன் இடது கையில் இருந்த தென்னோலைக் குடலையிலிருந்து கதம்பப் பந்தலிருந்து தொடரை இழுத்துக் கொண்டே அந்த வீட்டுப் படி ஏறினான்.

நான் நின்று பார்த்துக்கொண்டிருந்தேன். அவள் வேகமாக மாடியிலிருந்து இறங்கிவந்து ஒரு முழம் கதம்பத்தை வாங்கிச் சில்லறை கொடுத்து அனுப்பினாள். வாங்கின கதம்பத்தை அந்த நிலையடியிலேயே நின்று இரண்டாக மடித்தாள். மடித்து இரு கைகளையும் உயர்த்தி, எடுத்துக்கட்டியிருந்த தன் பின்னலுக்கு மேலாக வளைத்து வைத்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருந்தாள்.

பூக்காரன் மறுபடியும் நடுத்தெருவிற்கு வந்து கூவினதுதான் எனக்கு ஞாபகம் வந்தது. நான் அவனைக் கூப்பிட வாயெடுத்தேன். ஆனால் திடீரென என் மனத்தில் விவரமில்லாத ஒரு குழப்பம் ஏற்பட்டது. என் தொண்டையைத் தடை செய்து, "அவன் போகட்டும்; வேறொருவன் வருவான்" என்று சொன்னதுபோல் இருந்தது. பூக்காரன் என் பக்கம் பார்த்துக்கொண்டே மறுபடியும் கத்தினான். நான் அவனைக் கூப்பிடவில்லை. போக விட்டுவிட்டேன்.

எதிரே தூலியில் வைத்துக்கொண்டிருந்த கதம்பத்தைச் சரிப்படுத்திக்கொண்டிருந்தாள் அவள். பூக்காரன் குடலையில் உள்ள கதம்பத்தின் ஒரு தொடர் அவள் கூந்தலை அலங்கரித்துக் கொண்டிருந்தது.

என் தயக்கத்தைக் கண்டுகொண்டாரோ அல்லது நான் கூப்பிட மாட்டேன் என்று எதிர்பார்த்தோ மறுபடியும் பலமாகவே, "மல்லி

கைப் பூ, கதம்பம்" என்று தொண்டை கிழியக் கத்தினான் பூக்காரன்.

கூடத்திலிருந்து வரும் வேகமான எட்டுக்கள் காதில் விழுந்தன. மீனு அவசரமாக வந்தாள்.

"பூக்காரன் அதோ போகிறான். பேசாமல் நிற்கிறீர்களே" என்று சற்று அதட்டின குரலில் கேட்டாள்.

"ஏன், நீதான் வந்துவிட்டாயே; கூப்பிடேன்."

"ரொம்ப அழகு! வாசலில் வந்து கத்துகிறேன், ஒரு பெண் மானம் லஜ்ஜையை விட்டுட்டு...கூப்பிடுங்களேன்."

"அவன் போகட்டும்; வேறொருவன் வருவான்; கூப்பிடுகிறேன்" என்றேன்.

"ஏன், இவனுக்கு என்ன? யாரிடம் வாங்கினால் என்ன? அப்புறம் ஒருத்தனும் வராவிட்டால்... இவனையே கூப்பிடுங்கள். போய்விடப் போகிறான், சீக்கிரம்" என்று மீனு அவசரப்படுத்தினாள்.

ஆனால் நான் சாந்தமாகப் பதில் சொன்னேன்: "கூப்பிட ஆக்ஷேபம் இல்லை. ஆனால் ஒரு விஷயம். அந்த அவலக்ஷணம் பிடித்த வீதிகளுக்கெல்லாம் போய்ப் புஷ்பம் கொடுத்துவிட்டு வருகிறான் அவன்." இதைச் சொல்லிவிட்டு அவள் முகத் தோற்றத்தைக் கவனித்தேன்.

மீனு புருவத்தைச் சுளுக்கிக் கொண்டாள். "என்ன உளறல்? பூக்காரன் எங்கே போய்விட்டு வந்தால் என்ன? நேர் வார்த்தையே கிடையாது. ஐயோ, கூப்பிடுங்களேன் சீக்கிரம்."

"இல்லை. சற்று முன்பு நீ என்ன எல்லாமோ சொன்னயே என்பதற்காகச் சொல்ல வந்தேன்."

"நான் சொன்னதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? எப்போதும் புரியாத பேச்சுத்தான் உங்களுக்கு?"

"சம்பந்தம் இல்லையா?" என்று எனக்குள் கேட்டுக்கொண்டேன். ஆனால் வேறு பதில் சொல்ல நாவசைப்பதற்கு முன்பே மீனு தொடர்ந்தாள்.

"சரி, கூப்பிடாவிட்டால் போங்கள். ஒரு முழம் புஷ்பம் வாங்கிக்கொடுக்க..."

மீனு கோபித்துக்கொண்டுவிட்டாள். விறுட்டென்று திரும்பி வீட்டின் உட்புறம் நாலு எட்டு எடுத்துவைத்துவிட்டாள். அவள் வார்த்தைகளின் அர்த்தத்தையே அவளுக்கு உணர்த்தும் முயற்சியில் நான் வெற்றி பெறவில்லை. பேச்சு எங்கேயோ திரும்பிக்கொண்டிருந்தது. அதற்கு மேல் நான் வியவகாரம் செய்ய முயல்வது வீண்.

"மீனு, வா வா. இதோ..."

அதேத விநாடி என் பலத்த குரலைக் கேட்டுப் பூக்காரன் திரும்பிக்கொண்டிருந்தான். மீனுவும் வாசலுக்குத் திரும்பினாள். எங்கள் கண்கள் சந்தித்தன. நான் லேசாகச் சிரித்தேன். "இதற்கா, இவ்வளவு பிரமாதம்? அடேயப்பா!"

"உங்களுக்கு என் வரையைப் பெருக்கிக் கொண்டே இருக்கவேண்டும்." சதா இதைக் கேட்கும்போது இன்பமாக இருந்தது.

"நான் பேசுகிறதைத்தான் ஐயா பார்த்துக் கொண்டே நின்றாரே" என்று அவனை ஒரு கடை நடக்க வைத்ததற்குக் குற்றம் சாட்டுவது போல் பேசினான், அப்போது வந்து சேர்ந்த பூக்காரன்: "மல்லிகைப் பூ வேணுமா, கதம்பம் வேணுமா?"

எனக்கு என்னவோ சட்டென முங்கிக் கொள்ளத் தோன்றியது. "மல்லிகைப் பூதான் கொடேன்" என்றேன். ஆமோதிப்பை எதிர் பார்த்து மீனுவின் முகத்தைப் பார்த்தேன்.

"இல்லை, கதம்பமே இருக்கட்டும்."

"கதம்பமா?" என் முகச் சுளிப்பை மீனு கவனித்துவிட்டாள். "என், கதம்பம் உங்களுக்குப் பிடிக்கவில்லையா?" என்று கேட்டாள்.

அதே சமயம் பூக்காரன் கதம்பப் பந்தை எடுத்து அதைப் பிரித்துக்கொண்டே, "எத்தனை முழம் வேண்டும்?" என்றான்.

நான் அந்தக் கதம்பத் தொடரையே உற்றுப் பார்த்தேன். அது அவள் வாங்கினது. அதைப் பார்க்க எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. மீனுவின் கேள்விக்குப் பதில் சொன்னேன்: "பிடிக்கிறது..."

"அப்போ?"

"ஒன்றுமில்லை..." நான் பேச்சை இழுத்தேன். பூக்காரன் அங்கே இருந்தான். என் வியாக்கியானத்தை அவள் கேட்க நான் விரும்பவில்லை; ஆகவேதான் மறுபடியும் சொன்னேன்: "என், மல்லிகைப் பூவையே வாங்கிக் கொள்ளேன்!"

எங்கள் தர்க்கப் பேச்சை விரும்பாதவன் போல, பூக்காரன் அவசரப்படுத்தினான். "கதம்பம் வேண்டுமா, மல்லிகைப் பூ வேண்டுமா? சீக்கிரம் சொல்லுங்கள்" என்றான்.

மீனு என்னை ஒரு கணம் கூர்ந்து பார்த்தாள். பிறகு ஏதோ முடிவிற்கு வந்தவள் போல, "இல்லை, கதம்பமே இருக்கட்டுமே. ரோஜா இருக்கிறது. ஒரு முழம் கொடு" என்றாள். என் சம்மதத்தை எதிர்பார்ப்பவள் போல், "இரண்டு முழம் எடுத்துக்கொள்ளட்டுமா?" என்றாள்.

அவள் முடிவாகக் கதம்பமே வாங்கத் தீர்மானித்துவிட்ட பிறகு நான் தடுக்க விரும்பவில்லை. பூக்காரன் கையில் அளக்கப்படும் கதம்பத் தொடரைப் பார்த்துக்கொண்டே, "வேண்டியதை வாங்கிக்கொள்ளேன்" என்றேன்.

கதம்பத்துக்கான சில்லறையைக் கொடுத்து விட்டு, பூக்காரனை அனுப்பிவிட்டு, என் அறைக்குத் திரும்பினேன். கதம்பத் தொடரை இரண்டாக மடித்துக்கொண்டே மீனுவும் பின் தொடர்ந்தாள்.

"என் கதம்பம் வேண்டாம் என்றீர்கள்?" என்று கேட்டாள்.

"வெறுமனேதான். காரணம் ஒன்றும் இல்லே" என்று மறைத்துப் பேசினேன். என் எண்ணத்தை வெளியிட விரும்பவில்லே. ஜன்னலுக்கு வெளியே ஒரு தரம் பார்த்துவிட்டு மறுபடியும் மீனு பக்கம் திரும்பினேன்.

மீனு வழக்கம்போல் தன்னைச் சிங்காரித்துக் கொண்டிருந்தாள். மேகவர்ணப் புடைவையைத் தழையத் தழைய அழகாகக் கட்டியிருந்தாள். சேர்வகிட்டை எடுப்பாக எடுத்துவிட்டுச் சுருள் படிந்த கூந்தலே நெற்றியில் சரிந்துவிழத் தழைய விட்டு வாரிச் சுருட்டி னவீனமாக முடித்திருந்தாள். முகம் கழுவிச் சிறிதாக ஒரு சாந்துப் பொட்டிட்டு, கரதகளிலும் மூக்கிலும் இருந்த வைரங்கள் பளீரிட, புருபுருப்பும் வசீகரமுமான அழகுடன் அவள் எதிரில் நின்றாள். அவள் தோற்றம் ஆகர்ஷிப்பதாக இருந்தது. நான் சற்காலியில் சாய்ந்திகொண்டு அவள் செய்கையைக் கவனித்தேன். கையில் இருந்த இரண்டாக மடித்த கதம்பத் தொடரை இரு கைகளேயும் உயர்த்தி எடுத்துக்கட்டியிருந்த தன் பின்னலுக்கு மேலாக வளேத்து வைத்துக்கொண்டாள்.

எனக்குச் சுருக்கென்றது. என்னே அறியாமல் ஜன்னலுக்கு வெளியே பார்த்தேன். எதிரே அவள் - கதம்பம் வாங்கினவள் - நிலேப்படியில் நின்றுகொண்டிருந்தாள். ஒரு கணம் பார்வையை மீனுமீது திருப்பினேன்.

அதே சமயம் மீனு கதம்பத்தைச் சரிப்படுத்திக் கொண்டு, "சரியாக இருக்கிறதா? பாருங்கள்" என்றாள்.

நான் அவளேயே வெறித்துப் பார்த்தேன். என் வெறித்த பார்வைக்கு அந்த உருவத்தில் இன்னும் வேறு என்ன தோன்றியது?

"கேட்டது காதில் விழவில்லேயா? என் இப் படிப் பார்க்கிறீர்கள்?" மீனு குரலே உயர்த்திக் கேட்டாள்.

"ஹூம்! என்ன கேட்டாய்? ஆமாம், அழகாக இருக்கிறாய்?" அப்போதுதான் விழித்துக் கொண்டவன்போல் பதில் சொன்னேன். மீனு சூள் கொட்டிக்கொண்டாள்.

"நீங்கள் இங்கேதான் இருக்கிறீர்களா? என் அழகு இருக்கட்டும். கதம்பம் சரியாக இருக்கா என்றுதான் கேட்டேன். அதற்குப் பதில் சொல்லுங்கள்" என்று குறும்பாகச் சிரித்தாள்.

நான் அங்கே அப்போது இல்லேதான். அவள் கதம்பத்தைப் பற்றிய கேள்வி என் காதில் விழாதிருக்கலாம். ஏனென்றால் அந்தக் கதம்பம், சுருள் படிந்த கூந்தல், பளீரிடும் வைரங்கள், மேகவர்ணப்புடைவை, என் அந்த அழகுத் தோற்றத்திற்கும் அப்பால் இருக்கும் ஏதோ ஒன்றை அவ்விடம் தேடிக்கொண்டிருந்தேன். மீனு மறுபடி கேட்டதும் சாந்தப்படுத்திக்கொண்டேன். மீனுவின் கூந்தலே அலங்கரித்து நின்ற அந்தக் கதம்ப வளேவைக் கூர்ந்து பார்த்தேன்.

"அதுவா? சரி. என் பதில் இரண்டுக்கும் தான்" என்றேன்.

மீனு முகத்தில் லேசான சிரிப்பு ரேகை ஓடியது. கண்களில் பிரியம் ததும்ப என்னேப் பார்த்தாள். நிலேயிலிருந்து நகர்ந்து வந்து என் ஈசற் காலி விளிம்பில் சாய்ந்துகொண்டே, "உங்கள் கேள்வி பதில்கள் அநேகம் எனக்குப் புரிகிறதில்லே" என்றாள்.

"எனக்குந்தான்" என்று சொல்லிக் கொண்டே மீனுவின் கையைப் பிடித்து இழுத்து என் கைகளில் நெருக்கிக்கொண்டேன். குளுமையாக இருந்தது.

"ஷ்வ்ஷ்...வீதிப்பக்கம்!" மீனு கையை இழுத்துக்கொண்டாள்.

வீதிப் பக்கம் பார்த்தேன். கதம்பமும் தலேயுமாக எதிரே அவள்! மீனு பக்கம் திரும்பினேன். மீனுவும் கதம்பமும்!

இரண்டு கதம்பத் தொடர்களுக்கும் உள்ள சம்பந்தம்? ஒரே கதம்பத் தொடரிலிருந்து விடப்பட்ட இரண்டு தொடர்களில் ஒன்று மீனுவின் கூந்தலே அலங்கரித்தது. இன்னொன்று அவள் தலேயில் படிந்திருந்தது. அழகு ஊட்டும் சாதனமாகத்தான் ஒன்றுக்கொன்று போட்டியிட்டன.

ஆஞல்—

நான் மீனுவையே உற்றுப் பார்த்தேன்.

எனக்குள் ஏதோ ஒன்று சொன்னது. கதம்பம்! அதுவரைதான் இரண்டிற்கும் உள்ள சம்பந்தம். வெளி அழகிற்கு இடப்படும் மெருகு. அதற்கு மேல்? மீனுவிடம் இல்லாதது ஒன்று - காணுத ஒரு குறை - அவளிடம், இல்லே, அவளிடம் காணமுடியாத ஒரு மேன்மை - புனிதம் மீனுவிடம்! அதுதான் ஆத்மா!

எதிரே நிற்கும் அவளிடம் இந்த ஆத்மா இல்லே. அவள் வாழ்க்கையில் அதற்கு இடம் கிடையாது. வெறும் சதையைப் பணயமாக வைத்து ஆடும் வீளே யாட்டாக அவளுடைய வாழ்க்கை நின்றுவிடுகிறது. அதையும் மீறி ஏழும் - உண்மை, புனிதம், கட்டுப்பாடு இத்தனேயும் கலந்து விளம்பும் ஒரு வாழ்க்கை - அதுதான் மணம் - அதன் பகைப் புலத்தில் பரவி நிற்கும் ஓர் உணர்ச்சி, ஆத்மாவின் அந்தரங்கக் குரலான காதல்...தெய்விகம், மீனுவின் முகத்தில் பிரதிபலித்தது. சட்டெனக் கவனத்தைத் தெருவுக்குத் திருப்பினேன்.

இது வரையில் சிந்தனேச் சுழலிடையே தூய மாக விழாத தெருக்காட்சி இப்போது கண்களில் விழ ஆரம்பித்தது. சாயங்காலம் மங்கி இருட்டு வெளியேறிக்கொண்டு இருந்தது. மாலேகளில் மேய்ந்துவிட்டு மாடுகள் மந்தைமந்தையாகத் திரும்பிக்கொண்டிருந்தன. பச்சை வயிற்றில் அமிதமாக ஏறி இருந்த வேகத்தில் ஒன்றோடொன்று கொம்பு கொடுத்து, பாணத்தடி வீசிப் பாய்ந்து கொண்டிருந்தன.



படகோட்டி

சுத்தானந்த பாரதியார்

[காதலி-ஜீவாத்மா ; காதலன்-பரமாத்மா.]

காதலி

படகோட்டுங் காதலனே - என்
பயமோட்ட மாட்டாயோ ?
இடரோட்டத் தப்பிவந்தோம் - இந்த
இருள்வெள்ளந் தாண்டுவமோ ?

போர்வீசும் இக்கரையில் - கொடும்
புயல்வீசும் வெள்ளத்திலே
பார்வீசுந் துன்பமெல்லாம் - சிறு
படகாலே தாண்டிடுமோ ?

படகோட்டி

அஞ்சாதே கண்மணியே - என்
ஆருயிர்ப் பஞ்சரமே !
வெஞ்சினங் கொண்டடிக்கும் - புயல்
வீரியாட்டை வென்றிடுவோம்.

போராடும் வெள்ளத்திலும் - ஒரு
புதுப்பாட்டு வீறிடுமே
காரார் முரசடிக்க - அங்கே
கம்பிமின்னல் ஆடிடுமே !

என்னுள்ளே நீயிருக்க - உன்னை
எமனும் தொடுவானே !
பொன்னில் மணியெனவே - உள்ளம்
பொருந்தினுல் அச்சமுண்டோ ?

காதலி

பக்கத்தில் நீயிருக்க - இனிப்
பயமொன்றும் இல்லைஅத்தான் !
அக்கரை சேர்ந்ததுவும் - நம்
அல்லல் ஒழிந்திடுமோ ?

படகோட்டி

இருளுங் கரைந்ததுபார் - ஞான
இரவி எழுந்ததுபார் !
அருளின் அழகினைப்போல் - அதோ
அக்கரை மின்னுதுபார் !

துன்பம் வெடித்தெழுந்த - நல்ல
சுகத்தை அனுபவிப்போம் !
அன்புக் கனிகளுண்போம் - வாழ்வை
ஆனந்த மாக்கிடுவோம்.

கவியும் கனவுமென - நாம்
கட்டற்றுச் சுற்றிடுவோம்
புவியில்விண் இன்பமெல்லாம் - வரும்
பூங்கா வனமிதுவே !



கரி யந்திரம்

எஸ். என். ராமஸ்வாமி

1936-ஆம் வருஷம் மோட்டார் கரியில் ஓடுகிறது என்றால், "ஜலத்தி லும் ஓடும்" என்று பரிகசித்தவர் பெரும்பா லோர். யுத்தம் துவங்கிற்று. கல்லெண் ணெய் (Petrol) இறக்குமதி குன்றியது. கவலை அதிகரித்தது. வேறு சாதனத்தில் பஸ் ஓட்ட ஆராய்ச்சியில் முனைந்தார்கள். விவாதத்தை விலக்கி, முடியும் என்ற முழு நம்பிக்கையுடன் சிப்பந்தி கூட்டி வேலை ஆரம்பித்துத் தேர்ச்சி அளித்து ஊக்கம் ஊட்டிக் கரி யந்திரம் ஸ்தாபித்த தனிப் பெருமை ஒரு தமிழரைச் சாரும். "போதும்" என்று தற்பெருமை அடையா மல், அவ்வப்போது ஊன்றி ஆராய்ந்து கோளாறுகளைச் சீராக்கி வசதிகளை அதி கரித்து, முன்னேற்ற வழிகளைத் தேடினர். ஓய்வும் சலிப்பும் இல்லாமல், இந்த 'யுத்தக் குழந்தை'யைப் பிறப்பித்துப் போஷித்து வளர்த்தார். விஞ்ஞான ரஸாயன முறைகள் கையாளப்பட்டன. இதன் விளைவு, ஜனங் கள் போக்கு வரவு வசதிக்கு அவ்வளவு கஷ்டப்படாமல் இருப்பதுதான். கிராமங் களில் கரி உற்பத்தி அதிகரித்தது. செல்வம் நிறைந்தது. வெளி நாட்டின் உதவியை எதிர் பார்க்கும் சங்கடம் தீர்ந்தது.

வீடுகளில் கரி அடுப்பைப் பார்க்கிறோம். அடுப்பு மூட்டியவுடன், ரெயில் எஞ்சின் புகைபோல் கறுத்த புகை வெளியாகிறது. காற்று வீச வீச, தழல் கொழுந்துவிட்டு எரிகிறது. ஜ்வாலையை உற்று நோக்கினால் பல்வேறு நிறங்கள் தெரியும். இவற்றின் மத்தியில் நீல நிற ஜ்வாலை ஒன்று சிறப்பா கத் தோன்றுகிறது. இதுதான் கரிவாயு (Co) எரியும் இடம். இந்த வாயுதான் கரி யந்திரத்தில் உற்பத்தியாகி, மோட்டாரில் கல்லெண்ணெய்க்குப் பதிலாக வேலையைச் செய்கிறது. இதை உண்டாக்கி வடி கட் டித் தருவதுதான் கரி யந்திரம்.

யந்திரத்தின் முக்கிய பாகம் அடுப்பு (Hopper). உறுதியுள்ள எஃகுத் தகட்டினால் (வீச அங்குல கனம்) $5\frac{1}{2}$ அடி உயரமும், உட் புறம் 18 அங்குல விட்டமும் கொண்ட உருளை வடிவானது. இதில் 120-180 பவுண்டு (5–$7\frac{1}{2}$ மணங்கு) கரி போடலாம். இவ்வளவு கரியைக்கொண்டு ஒரு பஸ் 100-140 மைல் செல்லும். ஹாப்பரின் அடிப்பாகத்தில் அடுப்பு மூட்டி எரிகிறது. மேற்பாகம் தகடு மட்டுந்தான். மேலே கொட்டின கரி, தன் கனத்தால் கீழ் இறங்கி, அடுப்பு ஜ்வாலையை அடக்கி, அது கொழுந்து விட்டு எரிந்து, முழு $5\frac{1}{2}$ அடி உயரத்தையும் உஷ்ணப்படுத் தாமல் தடுக்கிறது. கரி எரிய எரியக் கீழ் அடுப்பு உஷ்ணம் அதிகரிக்கிறது.

கரி யந்திரம் பிறந்த பொழுது, இந்த உஷ்ணம் தாங்காமல், மேல் அடுப்பு இரும்பு, காய்ச்சின இரும்பு கருமானிடம் துவளுவது போல் துவண்டு பாழாயிற்று. பஸ்ஸுக்கும் நாசம் விளைவிக்கப் பயம் அளித்தது. இந்தச் சங்கடம் பல விதங்களில் தவிர்க்கப் பட்டது. இதில் சிறந்த முறை, கீழ் அடுப் பிற்கு, அடுப்புக் கல் (Fire Bricks) உட் புறம் கட்டி, ஜ்வாலையின் உஷ்ணத்தையும் வேகத்தையும் அடக்குவது. சாதனம் விலை குறைவு. உழைப்பில் நீடித்தது. எளிதில் மாற்றக்கூடியது.

இதில் உபயோகப்படும் கரி சிறியதாக இருக்கக்கூடாது. உமியில் எளிதில் நெருப் புப் பரவுவது போல், சிறிய கரித்தூள் $5\frac{1}{2}$ அடி உயரம் முழுதும் பற்றி எரியுமே ஒழிய, வாயு உற்பத்திக்கு உதவாது. அடுப்பைப் பாழாக்கும். குறைந்தது $1\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$ சதுரம் கரித்துண்டுகள் வேண்டும். எரியாத கட் டைகளை விலக்கிச் சலித்தால், இவ்விதக் கரி சுலபமாய்க் கிடைக்கும். நீக்கப்பட்ட துண்டுகள் காளவாய்களுக்கு உதவும்.

அடுப்பில் உற்பத்தியாகும் வாயு ஏறக் குறைய 850 டிக்ரி உஷ்ணம். 1250 டிக்ரியில் இரும்பு உருகுகிறது என்றால், இந்த உஷ் ணத்தின் வீர்யம் எவ்வளவு என்று ஊகிக்க லாம். இந்த நிலையில் வாயு எஞ்சினில் நேரே புகுந்தால், எஞ்சின் சில நாழிகைகூடத் தாங்காது. ஆகையால் முதலில் வாயுவைக் குளிர வைக்கவேண்டும். 6 அடி நீளம், $2\frac{1}{2}$ அங்குலம் கனமான ஐந்து இரும்புக் குழாய்

கள் மூலம் அதாவது மொத்தம் 30 அடி நீளமுள்ள குளிர்ந்த ஒரு பாதை வழியாக வாயு செல்வதால், உஷ்ணம் பாதி அளவு குறைகிறது.

இதற்கு முன் ஒரு பிரச்னை இருக்கிறது. அடுப்பிலிருந்து எந்த முகமாக வாயுவை வெளி இழுத்து எஞ்சினுக்கு உபயோகிப்பது என்பதில் மூன்று வழிகள் தோன்றின.

(1) அடுப்பு நேராக (Cross draught) ஜவாலிக்கு நேர்கோணமாகப் பக்கத்திலிருந்து.

(2) அடுப்பு மேலாக (Up draught) ஜவாலிக்கு நேர்கோணமாக மேலிருந்து.

(3) அடுப்புக்குக் கீழாக (Down draught) ஜவாலிக்கு நேர்கோணமாகக் கீழாக.

இந்த வடிகால் விவாதம் சிக்கலானது. எதுதான் சிறந்தது என்று முடிவாக நிரூபிக்க முடியாது. ஒவ்வொன்றிற்கும் தனிச் சிறப்பு உண்டு. ஒன்று வண்டி வேகமாகச் செல்ல உதவும். மற்றொன்று கரிவாயு உற்பத்தியை மிகுதிப்படுத்தும். மூன்றாவது, வழியில் உற்பத்தி அளவு குறைந்தாலும், தூய கரிவாயு வெளியாகிறது.

நேர்முக இழுப்பில் கரிவாயு சுவு அதிகம். வெளியேறும் வேகம் (Speed) அதிகம். ஆனல் தூரித உஷ்ண ஏற்றத்தால், அடுப்பு, அடிப்பின் வடிகால் குழாய்கள், உஷ்ணம் தாளாமல் கெட்டுவிடுகின்றன; மேல் நோக்கிய வடிகால் அமைப்பில், கரிவாயு மேல் நோக்கி, எரியாத கரியில் குளிர்ந்து, கரிப் பொடி மஷ்டுக்களைக் கீழே தள்ளித் தன் கனத்தில் கரியுடன் சேர்ந்து கரிவாயு ஆகி வெளிவருகிறது.

கீழ் வடிகால் அநுபவத்தில் சிறந்து உழைக்கின்றது. எந்த வாயுவும் மேல் நோக்கித்தான் படரும். கீழ் நோக்கி இழுத்தால், தானாக ஒரு சிறிதளவு குளிர்கிறது. வாயுவின் இயற்கை ஏற்பாட்டை, எதிர்த்து உபயோகிப்பதால் அதன் வேகத்தில், மஷ்டு, கரித்தூள், கீழே தள்ளப்பட்டு அடுப்பின்கீழ் உள்ள சாம்பல் பெட்டியில் விழுகின்றன.

மூன்றாவது ஏற்பாட்டில்தான், தூய பரிசுத்த வாயுக்கள் வெளிவருவதாக டெல்லி ஆராய்ச்சியினல் வெளியாயிருக்கிறது. ரஸாயன முறையில், மஷ்டு, கசடு இவைகளுக்கு வாயுவைப் பரிசோதித்தபோது, மூன்றாம் முறை வடிகால் வாயு 1000 பங்கிற்கு 2 பங்கு மஷ்டுதான் கொண்டதாகக் காணப்பட்டது. இதுவே எல்லா முறைகளிலும் மிகக் குறைவான கசடுள்ளதாய் இருந்தது.

கசடு குறைவாக இருப்பதால், எஞ்சின் வேலை சுலபம். பிஸ்டன் தேய்தல் குறைவு. வழுக்கு எண்ணெய்ச் செலவு அதிகப்படுவதில்லை. கல்லெண்ணெய் ஓட்டத்தில், செலவாகும் பணத்தைவிடத் தூய கரிவாயு உபயோகத்தில் செலவும் தேய்வும் குறைவு.

கரிவாயு ஐந்து 6" குழாய் மூலம் ஓடி, உஷ்ணம் தணிந்து வெளிவருகிறது. பிறகு 2' உயரம் 10½" விட்டமுள்ள இரண்டு



'வடிகட்டும்' சட்டிகள் மூலம் பார்க்கிறது. மூன்று வடிகட்டியர, இரண்டு வடிகட்டியர வேண்டும் என்ற பிரச்னை அர்த்தமற்றது. வடிகட்டும் திறன் வடிகட்டியின் எண்களைப் பொறுத்ததல்ல. சட்டிக்குள்ளே இருக்கும் வடிகட்டும் சாதனத்தைப் பொறுத்தது. உள் சாதனம் நெருங்கி, சல்லடைக் கண்களோ போன்ற கண்கள் பொருத்தியதா யிருந்தால் சலித்த மாவுபோல் வாயு தீவிர வடிகட்டலுக்கு உட்படுகிறது.

நூல் மில்களில் கழிக்கப்பட்ட பஞ்சு நூல் சிதர்கள் (Cotton yard waste) முதல் சட்டியில் அழுத்திக் கிடிக்கப்பட்டிருக்கின்றன. குளிர் குழாய் மூலம் வெளியேறி வாயு இந்தச் சட்டியில் பாய்கிறது. தூரித மாக வடிகட்டப்படவே, அநேகமாக முழுக்கசடும் நூலில் சேர்ந்துவிடுகிறது.

இரண்டாவது வடி சட்டியில் ஓர் எட்டு மூலைச் சட்டமும், அதைச் சுற்றிலும் கனத்த துணி உறையும் உண்டு. தலையணை உறை போல் அந்த உறையைப் போட்டுக் கழற்றலாம். முதல் சட்டியிலிருந்து, இரண்டாவதில் வாயு நுழைந்து, வெளியேறும் போது எஞ்சியிருக்கும் மஷ்டும் விலக்கப்படும்.

இவ்விரு சட்டியின் வேலைப்பாடு சிறந்தது என்பதற்கு டெல்லி ரஸாயன ஆராய்ச்சி முடிவு சிறந்த ஆதரவு. 1000 எடையில் 2 எடைதான் மஷ்டு என்பது அந்த முடிவு.

வடிகட்டிய பிறகு, கரிவாயு நேரே எஞ்சினுக்குச் சென்று கல்லெண்ணெய் செய்யும் வேலையைச் செய்து உழைக்கிறது.

ஆனல் பெட்ரோல் ஓட்டம்போல் எளிதல்ல. கரிவண்டி ஓட்ட அனுஷ்டான அநுபவம் வேண்டும். எளிதில் கற்றுக்கொள்ளலாம். முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையவில்லை, சோர்வும் ஏற்படாது.

கல்லெண்ணெய் எஞ்சினுக்குக் கார்புரேடர் (Carburetor) மூலம் வருகிறது. காற்றுடன் - நம்மைச் சுற்றியிருக்கும் காற்றுத் தான் ! - கலந்து தீ வைக்கப்பட்டு எஞ்சின் வேலை செய்கிறது. காற்று, பெட்ரோல் சேரும் பாகுபாடு தானுக இயற்கையில் கார்புரேடர் சரிசெய்து கொள்ளுகிறது, வேண்டிய அளவு கலக்கிறது. கரிவாயு உபயோகத்தில் காற்றுக் கலப்பு, சமயம்போல் ஏற்பாடு ஆகவேண்டும். கரிவாயு அவ்வளவு சீக்கிரத்தில் எரியாது - பெட்ரோல் போல். இதைச் சோக் ஏற்பாடு (Choke adjustment) என் பார்கள். காற்று உள் இழுக்கும் ஈவு சரிப் படுத்தச் சுலப விசை உண்டு. தண்ணீர்க் குழாயை மூடித் திறப்பது போலத்தான். ஆனவது கடினம் அன்று. எவ்வளவு பாகம் காற்றுத் திறந்துவைக்க வேண்டுமோ அந்த நிதானம் டிரைவர்களுக்கு அநுபவத்தில் பழக்கமாகிவிடும். எஞ்சின் ஓடத் தொடங்கும் சப்தத்திலிருந்தே சிலர் சீர் செய்கிறார்கள் ! பழக்கந்தான் காரணம். தீவிர ஆராய்ச்சி வேண்டாம். பல பஸ்கள் கரி வாயுவிலேயே ஓடுவது இதற்கு நிதர்சனம். வேறு அத்தாட்சி வேண்டாம் !

கல்லெண்ணெய், காற்றுக் கலந்து பிளக் (Plug) மூலம் தீ மூட்டப்பட்டு, வாயுநிலை அடைந்து, எஞ்சின் சுழலுகிறது. தீமூட்டும் மின்சாரத்திற்கு ஆறு வோல்ட் பாட்டரி அடிப்படை. இந்த மின்சார சக்திகுமுந்தைகை கூடப் பாதிக்காது. பாட்டரியிலிருந்து மின்சாரக் கயிற்று மூலம் சென்று, வீட்டில் எரியும் விளக்கு மின்சார சக்தியை அடைகிறது. அது 220 வோல்டு அளவினது. இதுதான் தீ மூட்டுகிற அபாயமான மின்சார நிலை. மின்சார விநியோகம் அடுத்து அடுத்தாற்போலிருப்பதால் எஞ்சின் சுழலுகிறது.

ஆனல் கரிவாயு கலந்த காற்றைத் தீ மூட்டுவதில் ஒரு சிறிய மாறுதல். கரிவாயு பெட்ரோல்போல் அவ்வளவு எளிதில் தீப்பிடிக்காது. தீ மூட்டும் ப்ளக் சற்று அதிக நேரம் தீ மூட்டவேண்டும்.

'ப்ளக்' மூலம் சற்று நீண்டகாலம் பொரி மூட்டுவதைத்தான், அட்வான்ஸ் (Advance) செய்வது என்கிறார்கள். அங்குலக் கோட்டில் உள்ள முள் சற்று அரை அங்குலம் தள்ளிவைப்பதுதான். வேண்டிய அளவு தள்ளி, உள் இழுப்பதற்குக் கம்பியும் பிடியும் இருக்கின்றன. எஞ்சின் அமைப்பு, உழைப்பில் வேறு எந்த மாறுதலும் இல்லை.

பஸ் நிற்கும் போதும், ஓடும் போதும், எஞ்சினுக்கு வேண்டிய காற்று ஈவு வித்தியாசம் உண்டு. பாகுபாடு படுத்த அடுப்பின் கீழ் 6 அங்குல நீளக் குழாயும், அதனுள் உருண்டு தட்டையான தகடும் உண்டு. இந்தத் தகடு தன் சக்தியினுலே திறந்து மூடிக்கொள்ளுகிறது. இதற்கு, ஆடோமேடிக் ஸக்ஷன் (Automatic Suction) என்று பெயர். பஸ் நின்றதும், இந்தத் தட்டு வேலை செய்வதில் இனிய த்வனி கேட்பதால், இதற்குச் சிலர் 'ஜலதரங்கம்' என்று புனை பெயரிட்டார்கள்.

படத்தில் ஒவ்வோர் அங்கமும் பெயருடன் காணப்படுகிறது. சீர்பாடாக உற்பத்தியாகி, எந்தப் பாகம் சீர்கெட்டாலும், உடனே வேறு அதே பாகம் பூட்டி ஓட்டலாம். இதை (Easy Spare parts Availability) "பாகங்கள் சுலப ஈத்தல்" எனலாம். யந்திரத்தில் 75 பாகங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் வேண்டும்போது, தனித்தனியாகக் கிடைக்கும்.

சொந்த மோட்டார்காருக்குக் கரி யந்திர அமைப்பு ஊகித்தார்கள். பஸ் அடுப்பு, வைத்தால் விகாரம்.

காருக்குத் தகுந்தபடி அடுப்பு, அமைப்பு, அளவு, நீளம், உயரம் இவற்றை மாற்றிய பெருமை இரண்டாவது தமிழனைச் சாரும். அழகை அந்தஸ்துப் படுத்தினர் இவர். அமைப்பு அளவைத் தவிர இதற்கும் பஸ் யந்திரத்திற்கும் வேறு வித்தியாசம் இல்லை.

வேலை செய்யும் விதம்

அடுப்பில் கரி நிரப்பி, குத்திவிட்டு மூடியைச் சுற்றியுள்ள கயிறு பதியவைத்து மூட வேண்டும். குளிர் குழாய் மூடியைத் திறந்து, சுழல் காற்றுடி (Blower) உதவியால், கரு மான் தருத்தி உபயோகப் படுத்துவது போல் தீ எழுப்பவேண்டும். குளிர் குழாய் மூலம் 3 நிமிஷங்களுக்குக் கரிப்புகை வரும். பிறகு நிறமற்ற புகை வரும். கைதாங்கும் உஷ்ணத்துடன் இருக்கும். 5 நிமிஷம் கழித்து, உஷ்ணம் அதிகரித்தவுடன் (கை தாங்காது), குளிர் குழாயை மூடி, இன்னும் 2 நிமிஷம் காற்றுடி வேலை செய்து, சாதாரணமாக 'ஸ்டார்ட்' செய்வதுபோல் எஞ்சின் 'ஸ்டார்ட்' செய்யவேண்டும். காற்று உள் இழுப்பு விசை (Choke) சரியான இடத்தில் உபயோகப்படுவது வழக்க முறையில் புலப்படும்.

பிறகு அடுப்பைக் கவனித்து, கரித்தூள் கீழே விழக் கைப்பிடியைத் திருக வேண்டும். அநேக டிரைவர்கள், கரிவாயுவின் வாசனையிலிருந்தே, நிலைமை அறிந்து ஓட்டத் தொடங்குகிறார்கள்.

பார்வை இடுதல்

தினம் எல்லா மூடிகளும் செவ்வனே பதிந்து இருக்கவேண்டும்.

குளிர் குழாய்களை, மூடிக் கழற்றி, தூரிக் கோல் (Brush) போட்டு இழுத்துச் சுத்தம் செய்யவேண்டும்.

1000 மைலுக்கு ஒரு முறை, இரண்டாவது குளிர் சட்டி நூலை வெளியில் எடுத்து, பஞ்சு தட்டுவதுபோல் தட்டி, மறுபடி உபயோகிக்கலாம். 5000 மைலுக்கு ஒரு முறை நூல் புதுப்பிக்கவேண்டும்.

வெகு நேரம் எஞ்சின் சுழன்றாலும், கரி சிறியதாக இருந்தாலும், கரியில் உள்ள மஷ்டு, தூள், அசுத்தம் 850 டிகிரி உஷ்ணத்தில் உருகி 'பாகு' போல் ஓடும். அடுப்பிலிருந்து வெளியேற்றப் படாவிட்டால், குளிரக் குளிர, 'பாகு' உறையும். உறைந்து கெட்டியான பிறகு, சம்மட்டியால் அடித்தாலும் உடையாது. இதை அவ்வப்போது சாம்பல் பெட்டி மூலம் கீழே தள்ளவேண்டும். இதைச் சிறந்த உரம் ஆக உபயோகிக்கலாம். இதைக் கிட்டான் (Clinker) என்பர். வெள்ளை நிறம்.

வாரம் ஒரு முறை அடுப்புப் பூராவும் கரியைக் கீழ்தள்ளிப் புதுக் கரி நிரப்பவேண்டும்.

மாதம் ஒரு முறை சட்டியை மூடி, வலைவு களிலுள்ள நூல் (இவை நூல் சிமிட்டிக் கலந்து நெருப்புப் பிடிக்காதவை) புதுப்பிக்க வேண்டும்.

ஆறு மாதத்திற்கு ஒரு முறை எல்லாக் குழாய்களும் சுத்தம் செய்யப்படவேண்டும். யந்திரத்தின் நீடித்த உழைப்பும், சொல்லச் செலவும், தினசரி பாதுகாப்பைப் பொறுத்தவை.

பிரதிகூலம்

அடுப்பிலிருந்து வெளியாகும் வாயு 100-ல் 30 மட்டும் நமக்கு வேண்டிய கரிவாயு. மற்றவை நைட்ரஜன். இவை உற்பத்தியாகியும் பயன்படவில்லை; வீணுகின்றன. இதை ரளாயன முறையில் எஞ்சின் உட்புகுவதற்கு முன்னால் தடுக்கலாம். ஆனாலும் மேலும் யந்திரம் சிக்கலாக முடியுமோ என்ற பயத்தாலோ, வேறு எந்தக் காரணத்தாலோ, உற்பத்தியாளர் முயற்சி செய்யவில்லை; வழியும் தேடவில்லை; கவர்மெண்ட் ஒத்துழைப்பும் தென்படவில்லை.

கரிவாயுமூலம் மணிக்கு உயர்ந்தது 40 மைல் வேகத்தான் போக முடியும். அவ் வேகம் பஸ், லாரிக்குப் போதும். கார்களுக்கும் போதும். 30 மைல் வேகம் ஓட்டக்கூட இப்போது நம் மாகாண ரோட் வசதி உகந்தது அல்ல!

கரி உபயோகத்தால் எஞ்சின் உழைப்புத் தளரவில்லை. கீடிப்புக் குன்றவில்லை. தேய்மானம் அதிகரிக்கவில்லை. வழுக்கு எண்ணெய்ச் செலவு கைதூக்கவில்லை. எஞ்சின் அங்கங்களைச் சீர் கெடுக்கவில்லை. பளு இழுப்புக் குறையவில்லை. ஜனங்களின் வசதி அதிகரிக்கிறது.

இதே கரிவாயு 700 பவுண்ட் (கார் யந்திரம் 400 பவுண்ட்) நிறையுள்ள யந்திர மூலம் உற்பத்தியாகாமல், சோடா பாக்டரி காஸ் (Gas) சப்ளை செய்வதுபோல், கனத்த குழாய்களிலோ அல்லது இங்கிலாந்தில் இருப்பதுபோல் தோல் பைகளிலோ விநியோகிக்கப்பட்டால், தூய கரிவாயு கிடைத்து, தினசரி பாதுகாப்புக் கவலை நீங்கினால், யுத்தத்திற்குப் பிறகுகூடக் கரிவாயுவைக் கொண்டு பஸ், கார், லாரி எல்லாம் ஓடும்.

இங்கே கவர்மெண்ட் ஆதரவு அளித்து, 'கரி பஸ்' மேல் வரி சுமத்தாமல் இருக்கவேண்டும். 'எண்ணெய் முதலாளிகள்' இந்த யுத்தக் குழந்தையை வேருடன் பிடுங்காமல் இருக்கவேண்டும்.

யுத்தத்திற்குப் பின் 'கரி பஸ்' ஓட்டத் தயார் என்று ஒரு பஸ் பிரமுகர் தைரியம் கூறுகிறார். அவர் 'பகல் கனவு' காணவில்லை.

"தலைதூக்கிச் சிறந்த யுத்த சேவை" யாராவது செய்திருந்தால், அவர்தாம் கரி யந்திர உற்பத்தியாளரும், ஸ்ரீமான் கரியும். இதற்குப் பொதுஜனக் கைம்மாறு என்ன? கரியைக் கல்லெண்ணெய் விழுங்கும் 'யுத்தி காண்ட'த்தில் பொதுஜனங்கள் கரிப் பக்கம் சேர்ந்து, சண்டையிட்டு வெற்றி அடைவார்களா?

யுத்த முடிவுதான் இதை முடிவு செய்யும். அதுவரையில் கரி தன் உழைப்பைச் செவ்வனே செய்துவரும்.

புதுமைப் பெண்

ஸ்ரீமதி லோகஸுந்தரி ராமன்

['பல காலமாக உள்ள நம்பிக்கை; இதைத் தகர்க்கக்கூடாது' என்று எண்ணுபவர் விஞ்ஞானி ஆகமுடியாது. தம்முடைய ஆராய்ச்சியால் புலப்படுவதைத் தயை தாக்ஷிண்யமின்றி வெளிப்படுத்துவது அவர் கடமை. உலகம் புகழும் விஞ்ஞானியாகிய ஸர் ஸி. வி. ராமனுடைய வாழ்க்கைத் துணைவியார் பெண்ணுலகத்தின் பழைய நிலையை ஒரு விஞ்ஞானியைப் போலவே ஆராய்ச்சி செய்கிறார். பழம் புலவர்களிடத்தும் புதுப் பெரியோரிடத்துங்கூடப் பெண் உலகத்தைப் புறக்கணித்த குறை உண்டென்கிறார். 'கண்ணுல் அளக்க முடியாது, கருத்தால்தான் அவளை அறியலாம்' என்பது அவர் விரும்பும் புதுமைப் பெண்ணின் இலக்கணம்.

— ப - ர்.]

"இதுவும் பெண்ணு!" என்ற சத்தம் கேட்டுக் கண் திறந்து உலகத்தைப் பார்த்த ஞாபகம். போன ஜன்மத்தில் அல்ல. இதே இருபதாவது நூற்றாண்டில் தான். இந்த நூற்றாண்டின் அதிசயமும் மாறுட்டமும் எந்தக் காலச் சரித்திரத்திலும் இல்லை. மனுஷ்யவேகத்திலும் பன்மடங்கு அதிகமாகக் காலம் மாறிக்கொண்டிருக்கிறது. — கஷ்டங்கள் மாத்திரமல்ல, எல்லா அதிசயங்களையும் இப்பொழுது தான் பார்க்கிறோம்.

ஆண் பெண் என்ற இரு பிரிவுடன், இயற்கையிலேயே ஆண்மை பெண்மை என்ற பிரிவும் கூடவே அமைந்திருக்கிறது. இதில் அதிசயம் என்னவென்றால், புத்திக்கு எட்டின வரையில் பெண்மையைப் பற்றிப் புருஷர்களே எழுதியிருக்கிறார்கள். பெண்கள் வாழ்க்கையில் நடந்து காட்டியிருக்கிறார்களே தவிர, தங்களைப் பற்றிப் பேசியோ எழுதியோ கருத்துக்களை விளம்பரப்படுத்தியதில்லை. தான் இல்லை என்றால் பெண்கள் ஆண்மையைப் பற்றியாவது எழுதியிருக்கிறார்களா? அதுவும் இல்லை. ஆனால், "சாண் பிள்ளையானாலும் நீ ஆண் பிள்ளை" என்று அடிக்கடி சொல்லி அவர்களுக்குப் பெண்கள் ஞாபக மூட்டிக் கொண்டே இருந்து அவர்கள் ஆண்மையையும் காப்பாற்றியிருக்கிறார்கள்.

பெண்களே பெண்களைப் பற்றி எழுத வேண்டுமானால் அதுவும் ஒரு புது உலகத்திட்டந்தான். மேடைமீது நடித்தவர்களின் கோளாறுகளைச் சொல்வது எளிது. கண் முன் வராதவர்களைப்பற்றிக் கற்பனைதான் செய்யவேண்டும். நமக்குத் தெரிந்தவரையில் பழைய நூல்களிலுள்ள பெண்மணிகளைப் பார்ப்போம்.

ராமாயணத்தில் வரும் சீதாதேவியைக் கடவுளாகக் கொண்டாடுகிறோம். அந்தக் கடவுளுக்கு உத்தரகாண்டத்தில் வரும் கதி என்ன? திருவள்ளுவர் குறளில் பெண்களின் பெருமையை வியக்கிறார். பெண்களின் ஆற்றலையும் வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் பாடிய தனிப்பாடல் ஒன்றில், "அடி வருடிப் பின் தூங்கி முன் எழுஉம் பாவையே" என்று வருகிறது. ஒவ்வொரு நாளும் வாசுகி அம்மையை இப்படியா இரக்க மில்லாமல் வள்ளுவர் நடத்தினார் என்று எண்ணத் தோன்றுகிறது. பல வருஷங்களுக்கு முன் வந்த வேதநாயகம் பிள்ளையின் நூல்களைப் பார்ப்போம். நல்ல பெண், கெட்ட பெண்களின் லக்ஷணங்களை அவர் வர்ணித்திருக்கிறார். நல்ல பெண் தன் புருஷன் அடித்தால், "உங்களுக்குக் கை வலிக்குமே" என்று இரங்குகிறாளாம். அவள் என்ன பெண் அல்லவா? கற்சிலையா? பெண்களுக்குக் கல்வி வேண்டும் என்று அவர் வற்புறுத்துகிறார். அது நியாயந்தான். எல்லாவற்றையும் விடப் பாரதியாரின் பெண்ணுலகந்தான் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

வருங்காலப் பெண் எப்படி இருக்க வேண்டுமென்று பார்ப்போம். புதுமைப் பெண்ணின் காலத்தில் ஆணுலகம் மேன்மை உடையது, பெண்ணுலகம் தாழ்மையுடையது என்கிற எண்ணமே அங்கு இருக்கக் கூடாது. கல்யாண சமயத்தில் நுகத்தடியைக் காட்டி, ஒரு வண்டியிலுள்ள இரண்டு மாடுகள் போல் ஒற்றுமையாய்

நடந்து இல்லறம் நடத்தவேண்டுமென்று கற்பிக்கிறார்கள். நல்லது; ஒரு மாடு பெரிய தாகவும் புஷ்டியாயும் இருந்து, மற்றொன்று மெலிந்து சிறுத்திருந்தால், வண்டியின் நடையும் ஆட்டமும் எப்படி இருக்கும்! யோசித்துப் பாருங்கள். இதனால் ஆணும் பெண்ணும் வளர்ச்சியிலும் சரியாக இருக்க வேண்டும் என்று தெரிகிறது.

"பெண் என்ன, ஏணியைப் போல் உயர்ந்திருக்கிறாளே!", "பெண்ணைப் பெற்றவர்கள் எப்பொழுதும் தாழ்ந்துதான் போக வேண்டும்" என்பனபோன்ற வசவுகளை நம் நாட்டில் அடிக்கடி கேட்கிறோம். தாய்க்கு என்ன, பெண் குழந்தையைப் பெறுவதிலும், வளர்ப்பதிலும் உண்டாகும் சிரமத்தில் ஏதாவது குறைவா? தொன்று தொட்டு வரும் பழக்க வழக்கங்களினால் அவள் மனம் குழந்தைகளின் விஷயத்தில் மாறுதல் அடைகிறது. பெண் குழந்தைக்கு வியாதியானால், "சாதாரண மருந்து கொடு" என்றும், ஆண் குழந்தையானால், "நல்ல வைத்தியனிடம் சிகிச்சைகளுப் போ" என்றும் சொல்வதைக் கேட்டிருக்கிறோம்.

இம்மாதிரி லக்ஷ்யக் குறைவு ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? ஒன்று, பெண்களின் எண்ணிக்கை தேவைக்கு மேல்பட்டதாக இருந்திருக்கவேண்டும்; அல்லது பெண்ணினம் சமூகத்திற்கு அதிகத் தொந்தரவை உண்டாக்கியிருந்திருக்க வேண்டும். இவற்றை எல்லாம் யார் நம்புவர்! ஒரு பக்ஷமாய்ச் செய்த வேலைதான். பெண்கள் எவ்விதத்தில் தாழ்ந்தவர் ஆவார்கள்? அளவு கடந்த தியாகம் செய்து செய்து அடிமையாகிவிட்டார்கள். அவர்களின் தியாகத்தை எண்ணத்திலும் எழுத்திலும் அடக்க முடியாது. நேற்று இறந்த கஸ்தூரிபாவைப் பாருங்கள். அவர் மோக்ஷ லோகத்தில் இருக்கிறார் என்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். நாலுக்கும் சித்திரத்தில் அவர் காந்திஜியின் காலைப் பிடித்துக்கொண்டு தான் இருக்கிறார்.

இந்தச் சமயத்தில் ஒளவையாரை நினைக்கிறேன். அந்த அம்மையார் இப்பொழுது இங்கு இருப்பாரானால் பெண்ணுலகத்தின் வன்மையினுலே ஆணுலகத்தை நசுக்கி விடுவார். யாரும் அவர்முன் பெண்மையைப் பற்றிப் பேச அஞ்சியிருப்பார்கள்.

இதெல்லாம் பழைய காலம்.

இனி, தாய்தந்தையர் ஆண் குழந்தைகளும் பெண்குழந்தைகளும் சமம். இரண்டு கண்கள் போன்றவர்கள் என்று எண்ணி வளர்க்கத் தொடங்கலாம். உணவு உடை விளையாட்டு எல்லாவற்றிலும் சரியாகப் பழக்கவேண்டும். பையனுக்கு ஓடியாடி விளையாடக் கூடிய வண்டி குதிரை முதலிய விளையாட்டுச் சாமான்களைக் கொடுத்து, பெண்ணிற்கு மரச்செப்புகளைக் கொடுத்து உட்கார வைக்கக்கூடாது. "அண்ணன் பந்தடிப்பான்; நீ பார்த்துக்கொண்டிரு" என்று தங்கைக்கு ஏன் நாம் சொல்ல வேண்டும்? இவைகளெல்லாம் நாளாக நாளாக அவர்களுக்குப் பலஹீனத்தையும் பயத்தையும் உண்டாக்குகின்றன. பத்து அல்லது பன்னிரண்டு வயசு வரையில் இரு பாலரும் சேர்ந்து படித்து விளையாடினால் உடல் வளர்ச்சியும் மனோபலமும் விருத்தியாகலாம். பிறகு அவரவர்களுக்கு வேண்டிய தொழிற் கல்வியோ சாஸ்திரக் கல்வியோ படிக்க வழி காட்டலாம். புது உலக சிருஷ்டியில் இரு பாலருக்கும் சிரத்தை உண்டு. பெண்கள் கட்டாயம் படிக்கவேண்டும். கல்யாணத்தைக் கட்டாயச் சடங்காய் வைத்துக்கொள்வதிலும், பெண் தன்னைத் தான் காப்பாற்றிக் கொள்ள வழி ஏற்படுத்தலாம்.

இப்பொழுது பெண்கள் கஷ்டமே உருவெடுத்தாற்போல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய சரியான வழியில் கல்வி, தொழில், சொத்து இவ்வளவும் ஏற்பட்டால் புதுப் பெண்தான். — அப்பொழுது பாருங்கள்.

அழகான வளர்ந்த உருவமும், அழுத்தமான மனமும், கம்பீரமான நடையும், தைரியமான செயலும் பொருந்தி இருப்பாள். எளிமை எளிமை என்று சொல்லித்தான் பெண்கள் எளியவர்களாகி மெலிந்தவர்களும் ஆனார்கள். கலாசாலையில் பல பெண்கள் படிக்கிறார்கள். அதிக உழைப்பினாலோ என்னவோ உடல் வலி குன்றியிருக்கிறார்கள்.

பழைய வீட்டுவேலை செய்தவர்களின் தேகக் கட்டு நன்றாக இருந்தது. அதாவது, தண்ணீர் இறைத்தும், எந்திரம் சுற்றியும், இவைபோன்ற வேறு வேலைசெய்தும் வந்தவர்கள் சரீரம் நல்ல ஆரோக்கியமாக இருந்தது. பழைய உடம்பும் புதுப் படிப்பும் சேர்ந்தமாதிரி புதுமைப் பெண் இருக்க வேண்டும். அவர்களும் தேகப் பயிற்சி செய்துவரலாம்.

ருஷ்யாவில் புருஷர்களின் நிழலில் பெண்கள் வாழவில்லை. கணவன் ஓர் உத்தியோகம் செய்கிறான், மனைவி வேறு உத்தியோகத்தில் இருக்கிறாள். வெளியுலகத்தில் எங்கேயோ இருக்கிறார்கள். இதனால் அவர்கள் இல்லறம் வேறுபாட்டின்றிச் செவ்வனே நடப்பதாகத்தான் கேள்விப்படுகிறோம்.

பட்டத்திற்கும் போட்டிக்கும் படிக்காமல் தன் நன்மைக்கும் தேசத்தொண்டு புரிவதற்குமே படிக்கவேண்டும். ஆண் பெண் இருவரும் தராசின் இரு தட்டுப் போல் காட்சி அளிக்கவேண்டும். புதுமைப் பெண் தன்னம்பிக்கையுடன் நிமிர்ந்து நடப்பாள். கண்ணுல் அவளை அளக்க முடியாது; கருத்தால்தான் அவளை அறியலாம்.

ஆயிர ரூபாய்

இப்போது தமிழில் நாவல்கள் அதிகமாக இல்லை என்ற குறை இருந்துவருகிறது. எழுத்தாளர்களுக்கு உத்ளாகத்தை ஊட்டும் பொருட்டு ஒரு பரிசு வழங்க எண்ணியிருக்கிறோம். கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு எங்களுக்கு அனுப்பப் பெறும் நாவல்களைப் பரிசீலனை செய்து சிறந்ததாக உள்ளதற்கு ரூபாய் ஆயிரம் பரிசு வழங்கப்படும்.

1. நாவல் இதுகாறும் வெளியிடாததாக இருக்கவேண்டும்.

2. மொழிபெயர்ப்பாகவோ தழுவலாகவோ இராமல் சொந்தமாய் எழுதியதாக இருக்கவேண்டும்.

3. 1945-ஆம் வருஷம் நவம்பர் மாதம் 30-ஆம் தேதிக்குள் வரும் நாவல்களே பரிசீலனைக்கு உரியவை.

4. பரிசுக்குரிய நாவலைத் தேர்ந்தெடுக்க ஒரு குழுவினர் நியமிக்கப்படுவார்கள். அவர்களில் பெரும்பாலோருடைய தீர்ப்பே முடிவானது.

5. பரிசு பெறும் நாவலைக் கலைமகளில் தொடர்கதையாக வெளியிடும் உரிமை எங்களுக்கு உண்டு. கலைமகளில் 120 முதல் 150 பக்கங்கள் வரையில் வரக்கூடிய தொடர்கதையாக இருக்கவேண்டும்.

6. கலைமகளில் வெளிவந்தபிறகு அதைத் தனியே புஸ்தகமாக வெளியிடும் முதல் உரிமை கலைமகள் காரியாலயத்தாருக்கு உண்டு. காரியாலயத்தார் நடைமுதலில் மேற்கொண்டுள்ள வழக்கப்படி அதற்குத் தனியே ஸம்மானம் வழங்கப்படும்.

7. எந்த நாவலும் பரிசுக்கு உரியதன்று என்று பரிசீலனை செய்பவர்கள் எண்ணினால் வந்தவற்றுள் சிறந்தவற்றுக்கு உசிதம் போல் ஸம்மானம் அளிக்கப்படும்.

8. எந்த விஷயத்தில் சந்தேகம் எழுமானாலும் ஆசிரியருடைய தீர்ப்பே முடிவானது. விதிகளை மாற்றவும் திருத்தவும் அவருக்கு உரிமை உண்டு.

நாவல் அனுப்புகிறவர்களைத் தயைசெய்து தெளிவாகக் கூட்டெழுத்து இல்லாமல் எழுதி அனுப்பும்படி வேண்டுகிறோம். பரிசீலனை செய்பவர்கள் பெயர் பிறகு வெளியிடப் பெறும்.

புதுமைப் பெண்: புதுமைப் பெண்களைப் பற்றிய கட்டுரைகளைக் கலைமகள் அன்பர்கள் ஊக்கத்துடன் கவனித்துவருகிறார்கள். இந்த மாதம் ஸ்ரீமதி லோகசுந்தரி ராமன் அவர்களுடைய இனிய கட்டுரை வருகிறது. இனி வரும் பெண்ணுலகத்துக்கு எது வேண்டும், எது வேண்டாம் என்று குறிப்பிட்ட துறைகளைப்பற்றி ஆராயும் கட்டுரைகள் இனி வரும். சில அன்பர்கள் 'புதுமைப் பெண் எப்படி இருக்கவேண்டும்?' என் பதைப்பற்றித் தங்கள் கருத்தை எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அவற்றைத் தக்க சந்தர்ப்பத்தில் உபயோகப்படுத்திக்கொள்வோம். இப்படிப் பலவகையிலும் தங்கள் ஊக்கத்தை வெளியிட்டுவரும் அன்பர்களுக்கு எங்கள் நன்றி உரியது.

கம்பர் விழா: கம்பன் திருவிழா தமிழ் நாட்டிலும் தமிழர் வாழும் மற்ற மாகாணங்களிலும் சிறப்பாக நடைபெற்றது தெரிந்து தமிழர் பெருமைப்பட வேண்டியதுதான். தமிழன்பர்களில் ஒரு சாராருக்குத் திடீரென்று கம்பராமாயணத்தின் மேல் வந்த கோபம் தமிழர்களுடைய முயற்சிக்குத் தூபம் போட்டுவிட்டது. அதனால் மூலை முடுக்குகளிலெல்லாம் கம்பர் திருநாள் கொண்டாட்டம் நடைபெறத் தொடங்கியது. சென்னைக் கம்பர் கழகம் இவ்வாண்டு திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் தலைமையில் கம்பர் திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. கம்பராமாயணத்தை ஒரு சிறந்த இலக்கியமாகப் பாவித்து இலக்கியக் கண் கொண்டு படித்து இன்புற வேண்டுமென்பதை அன்பர்கள் வற்புறுத்தினார்கள்.

கம்பர், சான்றோர் செய்யுட்களைப் புவியினுக்கு அணியென்று சொல்லுகிறார். கம்பராமாயணம் தமிழ் நாட்டுக்குச் சிறந்த பேரணிகலம். அதனைப் பழங் காலத்தில் மக்கள் எப்படிப் போற்றி வந்தார்களென் பதைக் கிராமத்துத் திண்ணைகள் சொல்லும்; பஜனைமடங்கள் சொல்லும்; ஒரு செய்தி மனித சமுதாயத்தில் படிந்து ஆழ்ந்தால் அது பழமொழியாகப் பரிணமிக்கும். பழமொழியால் ஒன்றைக் குறிப்பிட்டால் அங்ஙனம் குறிப்பிக்கப்பட்ட பொருள் தமிழர் உள்ளத்தே இடம் கொண்டது என்று சொல்லலாம். கம்பர் ஒரு சிறந்த கவிஞர் என்பதும், பெரிய கல்விச் செல்வர் என்பதும் பழமொழியாகிவிட்டன, "கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்", "கல்வியிற் பெரியன் கம்பன்" என்றல்லவா தமிழர் பேசுகின்றனர்? தமிழர் கம்பர்பால் கொண்ட பேரன்பை இவை புலப்படுத்துகின்றன.

கம்பரது காவியம், இன்று மேனாட்டாருடைய கூட்டுறவால் பெற்ற உரைகல்லில் உரைத்துப் பார்க்கும்போது பின்னும் மாற்று உயர்ந்து காணப்படுகிறது. அன்றும் அதன் பெருமை இணையற்றது. இன்றும் அப்படியே. இத்தகைய காவியத்தைப் பெற்ற தமிழர் அதிருஷ்டம் பாராட்டற்குரியது. கம்பர் திருவிழா கம்பராமாயணச் சுவையைத் தமிழர் பின்னும் நன்றாக அறிவதற்குரிய தூண்டுகோலாக இருக்குமென்று நம்புகிறோம்.

ஆசிரியர்

மழைக் கஞ்சி எடுக்கல்

பெ. தூரன்

மழையின் அவசியத்தை எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். அது உயிர்களைக் காக்கும் வானமுது. மழை இல்லாவிட்டால் வீளைவு இல்லை; அறுவடை இல்லை. உணவு இல்லை. மக்கள் பஞ்சப்பிணியால் வாடி மடிய வேண்டியதுதான். மழையே வாழ்விற்குப் பிரதானம் என்பதை நிலத்தை உழுது, தாரும் உண்டு, உலகத்திற்கும் உணவளிக்கும் குடியானவர்களே மிகவும் உணர்வார்கள்.

பருவத்தில் மாரி பெய்யாது போனால் நிலம் வறண்டுவிடுகிறது. பசும்புல் அற்றுப் போய் விடுகிறது. கால்நடைகள் வாடுகின்றன. மக்கள் வயிறு காய்கின்றது. உழவன் இதைக் கண்டு வருந்துகிறான்; உழத்தி சோர்வடைகின்றாள்.

மழை பெய்யுமா, நாடு செழிக்குமா என்று ஆவலோடு குறி கேட்கிறார்கள். மழைப்பாட்டுப் பாடிக்கொண்டு யாராவது வருகிறார்களா என்று பார்க்கிறார்கள். அவர்கள் ஒருவரை யொருவர் சந்திக்கும் போதெல்லாம் மழையைப் பற்றியே பேசிக்கொள்ளுகிறார்கள். வேற்றூர்களிலிருந்து யாராவது வந்தால் அவரிடம் மழை வளத்தைப் பற்றித்தான் விசாரணை.

சில சமயங்களில் பருவம் கடந்தாவது வானம் பெய்துவிடும். சில சமயங்களில் அதுவும் இல்லாது போய்விடும். கொங்கு நாட்டில் சில பகுதிகளில் இப்படி ஏற்படுவது சகஜம். குடிக்கக் கஞ்சி இராது. அதோடு தண்ணீரும் சில ஊர்களில் அற்றுப் போய்விடும். கிணறுகளெல்லாம் வறண்டு கிடக்கும்.

இப்படிப் பெரிய நெருக்கடி ஏற்படும் காலத்தில்தான் மழைக் கஞ்சி எடுக்க வேண்டும் என்று ஊர்மக்கள் முடிவு கட்டுகிறார்கள். ஊரிலுள்ள பெண்களெல்லாம் சேர்ந்துகொண்டு ஒவ்வொரு வீடாகச் சென்று பிச்சை எடுப்பார்கள். அரிசி, ராகி, சோளம், கம்பு என்று இப்படி எல்லாத் தானியங்களும் கிடைக்கும். அவற்றை எல்லாம் ஒன்றுசேர்த்து அரைத்து மாவாக்கி ஊர்ப் பொதுஇடத்தில் ஒரு பெரிய பானையில் இட்டுக் கஞ்சி காய்ச்சுவார்கள்.

உப்பு இல்லாத கஞ்சி அது. ஆண் பெண் அனைவருக்கும் வழங்கப்படும். எல்லோரும் அதை அங்கேயே குடித்தானவுடன், பெண்கள் தங்கள் குழந்தைகளை எடுத்துக்கொண்டு பரதேசம் போகப் புறப்படுவார்கள்.

இத்தச் சமயத்தில் அவர்கள் மழையில்லாது படும் கஷ்டங்களெல்லாம் ஒரு பாட்டாக வெளி வரும்.

வருண தேவனைக் குறித்து அந்தப் பெண்கள் புலம்புகிறார்கள். வருணன்தானே மழைக்குக் காரணம்? அதனால் அவனை அடிக்கடி, 'ஐயோ வருணதேவா' என்று கூப்பிட்டுத் தங்கள் முறை மீட்டைத் தெரிவிக்கின்றார்கள். 'பூமி எங்களும் செழித்திருந்த உணவளிக்கும் என்று நம்பி அல்லவா நாங்கள் குழந்தைகளைப் பெற்றெடுத்தோம்? இப்பொழுது மழையில்லாமையால் பூமி செழிக்க வில்லையே, அதனால் எங்கள் மக்கள் வயிறு வாடுகின்றதே' என்று அவர்கள் நெஞ்சம் குமுறுகிறார்கள்.

பூமியை நம்பியல்லோ -
ஐயோ வருண தேவா
புள்ளைகளைப் பெத்துவிட்டோம் -
ஐயோ வருண தேவா
பூமி செழிக்கவில்லை -
ஐயோ வருண தேவா
புள்ளை வயிறு வாடறதே -
ஐயோ வருண தேவா.
மானத்தை நம்பியல்லோ -
ஐயோ வருண தேவா
மக்களையும் பெத்துவிட்டோம் -
ஐயோ வருண தேவா
மானஞ் செழிக்கவில்லை -
ஐயோ வருண தேவா
மக்கள் வயிறு வாடறதே -
ஐயோ வருண தேவா

உயிர்களை எல்லாம் காப்பாற்றும் உழவன் இன்று முகம் சோர்ந்து நிற்கிறான். உழத்தியர்கள் உணவுக்காக வேலியில் வறண்டு போகாத தப்பி

இருக்கும் ஒன்றிரண்டு தழைகளைப் பறித்து விரலெல்லாம் கொப்புளித்துப் போய்விட்டார்கள். வருணதேவனுக்கு இன்னும் கருணை இல்லையா?

மோழி பிடிக்குங் கை
ழகஞ் சோர்ந்து நிற்கிறதே
கலப்பை பிடிக்குங் கை
கை சோர்ந்து நிற்கிறதே
வேலித் தழைபறித்து
விரலெல்லாம் கோப்புளமே
காட்டுத் தழைபறித்துக்
கையெல்லாம் கோப்புளமே

"கையலம்பத் தண்ணீர் இல்லையே; குழந்தை குளிப்பதற்குத் தண்ணீர் இல்லையே. இப்படி எத்தனை நாட்களுக்கு நாங்கள் இங்கு இருந்து கொண்டு பரிதவிப்பது?" என்று மேலும் அவர்கள் கூவுகின்றார்கள்.

கலியாண வாசலிலே
கையலம்பத் தண்ணியில்லே
பிள்ளை பெத்த வாசலிலே
பிள்ளையலம்பத் தண்ணியில்லே

இதை விடக் கஷ்டம் வேறு என்ன வேண்டும்? ஆதலினாலே இவற்றை எல்லாம் தாங்க முடியாமல் நாங்கள் ஊரை விட்டுப் போகிறோம் என்று சொல்லி அழுதுகொண்டு பெண்கள் புறப்படுவார்கள்.

அவர்களுடைய பாட்டிலே உண்மையான சோகம் தொனிக்கிறது. அந்தப் பாட்டை முழுதும் கேளுங்கள்:

பூமியை நம்பியல்லோ -
ஐயோ வருண தேவா
புள்ளைகளைப் பெத்துவிட்டோம் -
ஐயோ வருண தேவா
பூமி செழிக்கவில்லை -
ஐயோ வருண தேவா
புள்ளை வயிறு வாடறதே -
ஐயோ வருண தேவா
மானத்தை நம்பியல்லோ -
ஐயோ வருண தேவா
மக்களையும் பெத்துவிட்டோம் -
ஐயோ வருண தேவா
மானஞ் செழிக்கவில்லை -
ஐயோ வருண தேவா
மக்கள் வயிறு வாடறதே
ஐயோ வருண தேவா
மோழி பிடிக்குங் கை -
ழகஞ் சோர்ந்து நிற்கிறதே
கலப்பை பிடிக்குங்கை -
கை சோர்ந்து நிற்கிறதே
வேலித் தழை பறித்து -
விரலெல்லாம் கோப்புளமே
காட்டுத் தழை பறித்துக் -
கையெல்லாம் கோப்புளமே
கலியாண வாசலிலே -
ஐயோ வருண தேவா
கையலம்பத் தண்ணியில்லே -
ஐயோ வருண தேவா
பிள்ளை பெத்த வாசலிலே -
ஐயோ வருண தேவா
பிள்ளையலம்பத் தண்ணியில்லே -
ஐயோ வருண தேவா

இப்படி அவர்கள் பாடிக்கொண்டு புறப்படும் தருணத்தில் அவ்வூரிலுள்ள பெரிய தனவந்தர்கள் அவர்களைத் தடுத்து, "நீங்கள் ஊரை விட்டுப் போக வேண்டாம்; சீக்கிரம் மழை பெய்து நாடு செழித்திடும். பயப்படாதீர்கள். அதுவரை வேண்டுமானால் நாங்கள் சேமித்து வைத்துள்ள தானியங்களை உங்களுக்குக் கொடுக்கிறோம். சேரைப் பிரித்துத் தாராளமாகத் தானியம் வழங்குகிறோம். ஊரை விட்டுப் போகாதீர்கள்" என்று நல்ல வார்த்தை சொல்லுவதுபோலப் பின்வரும் பாடலைப் பாடுவார்கள்:

சேரைப் பிரிச்சுத்தாரேன்
சீராட்டுப் போவாதீங்கோ
குத்தாரி பிரிச்சுமக்குக்
கூடைத்தவசம் நான்தாரேன்
சீமை செழித்துவிடும்
செல்லமழை பேஞ்சுவிடும்
நாடு செழித்துவிடும்
நல்ல மழை பேஞ்சுவிடும்

இப்படிப் பாடுகின்ற சமயத்திலேயே மழை பெய்துவிடுமாம். மழைக் கருஞ்சி எடுத்தால் நிச்சயம் மழை பெய்தே தீரும் என்று கிராமத்து மக்கள் சொல்லுகிறார்கள். எல்லோரும் பரிந்து கேட்கிறபோது வருண் தேவனுக்குத்தான் இரக்கம் உண்டாகாமலா போய்விடும்?

மழை பெய்வதைக் கண்டு அனைவரும் குதூகலத்துடன் பாடிக்கொண்டு வீடு திரும்புவார்கள். மழையைக் கண்ட ஆனந்தம் அவர்கள் பாட்டிலே துள்ளுகின்றது. இதோ அந்தப் பாட்டைப் பாருங்கள்:

பேப்தலம்மா பேப்தலோ
பேயா மழை பேய்தலோ
ஊசி போல மீன்னி மீன்னி
ஊரெல்லாம் பேயுது
பாசி போல மீன்னி மீன்னி
பட்டண மெல்லாம் பேயுது
ஈசுபரன் கிருபை யாலே
எங்கெங்குர் பேயுது
மாயவன் கிருபையாலே
வாழ்ந்திருப்போம் நாட்டிலே.

காக்கையும் கவிதையும்

கே.எஸ். வீரராகவையர்

மனிதனும் காக்கையும்

சிறு குழந்தைகளைத் தாய்மார்கள் மடியில் வைத்துக்கொண்டு, "காக்காய் பாப்பா கண்ணுக்கு மை கொண்டா" என்று காக்கையைக் கூப்பிட்டு அதற்கு ஓர் உருண்டை அன்னத்தைப் போட்டுவிட்டு, குழந்தையின் வாயில் பல அன்ன உருண்டைகளைப் போட்டுவிடுவார்கள். மேலும் சில பெற்றோர்கள், "காக்காய் கத்தியாகி விட்டது. பொழுது விடிந்தது" என்று அதிகாலையில் தம் குழந்தைகளை எழுப்புவார்கள். அயலூருக்குப் பையன்களை அனுப்பும்போது, "காக்காய் வலமாய்விட்டது. வண்டியை ஓட்டு" என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். சாப்பிட ஆரம்பிப்பதற்கு முன், காக்கைக்கு முற்றத்தில் அன்னமிடுவதைப் பல வீடுகளில் இன்றும் நாம் பார்க்கிறோம். உத்தியோகம் செய்யும் காலத்தில், "அவனுக்கு என்னடா, நன்றாய்க் காக்காய் பிடிக்கத் தெரிகிறது. உத்தியோகம் வளருகிறது" என்று சிலர் வம்பு பேசுவார்கள். நாம் சொத்தம் செய்யும்பொழுது வரயச பிண்டம் போடுவது சகஜமானது. கடைசியாக நமது ஆவி நீங்கி உடல் அழுகினால், அதை உகப்பது காகம் என்றார் பெரியார் ஒருவர். இப்படி நமது வாழ்வில் பல சமயங்களில் நம்முடன் உறவாடும் பகி காக்கையாகும்.

விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி

காக்கையைப் பற்றி விஞ்ஞானிகளும் புலவர்களும் பெரிதும் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஆளும் முறைகள் வெவ்வேறானவை. விஞ்ஞானிகள் காக்கையானது பக்ஷியின் எந்த இனம், அது எத்தனை வகை, அதன் உடற்கூறு எவ்வாறு உள்ளது, எலும்புக்கூடு எவ்வகைத்து, இரையை ஜீரிக்கும் விதம், பறக்கும் சாதனம், அவகின் அமைப்பு, அடங்கும் காலம், முட்டைகளின் எண் முதலிய அம்சங்களை ஸூக்ஷ்மமாய் ஆராய்ந்து வெளியிடுவார்கள். இம்மாதிரி நமது நாட்டில் பல ஆங்கிலேய அதிகாரிகள் ஆராய்ந்து பல புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். ஓ. ஓ. ஹ்யூம் என்பவர் ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர். 1872 முதல் 1898 வரை இந்தியாவில் கலெக்டராக இருந்தார். அவர் 60,000 பறவைகளின் தோல்களைச் சேகரித்து அவைகளைப் பற்றி விரிவாகப் பல புத்தகங்களை எழுதியுள்ளார். பிளான் போர்ட் என்பவர் ஜியலாஜிக்கல் டிரக்டராக இருந்தார். 1898-முதல் 1911 வரை பறவைகளின் பழக்க வழக்கங்களைக் கவனித்துப் புத்தகங்கள் எழுதியுள்ளார். ஒட்ஸ் என்பவர் பர்மாவில் மாரமத்து இலாகாவில் வேலை பார்த்தார். "பர்மாவின் பறவைகள்" என்ற இரண்டு புத்தகங்களும், "இந்தியப் பறவைகளின் கூடுகளும் முட்டைகளும்" என்று நான்கு புத்தகங்களும் எழுதினார். 50,000 முட்டைத் தொகுசுகள் சேகரித்தாராம். ஜி.சி.எஸ். பேக்கர் என்பவர் (1911-1922) இந்தியாவின் பறவைகளை ஆராய்ந்து பல புத்தகங்கள் வெளியிட்டார்.

காக்கைக்குப் பற்கள் இல்லை; உதடுகள் இல்லை. அதன் அலகு பிற பறவைகளினின்றும் வேறுபட்டது. ஆகாரத்தை மென்று தின்பதில்லை. அதற்கு இரண்டு இரைப்பைகள் உண்டு. முதல் இரைப்பையில் தானியங்களும் பிற உணவும் ஒரு ரசத்தில் நன்றாக ஊறும். பின் அவை இரண்டாம் இரைப்பைக்குள் செல்லும். அங்கு உள்ள காக்கை விழுங்கிய கற்களும் அதன் சுரசுரப்பான உள் அமைப்பும் உணவை நன்றாக அரைத்துப் பக்குவப்படுத்துகின்றன. பிறகு அது குடலுக்குச் செல்லுகிறது. எலும்புகள் குழாய் போன்றன. அவைகளில் காற்று நிறைத்திருக்கும். பாதத்தில் மூன் பக்கத்தில் மூன்று விரல்கள் உள்ளன;

பின்பக்கத்தில் ஒரு குட்டையான விரல் உண்டு. அவை தத்தித் தத்தித்தான் நடக்கும். சித்திரை வைகாசி மாதங்களில்தான் அவை அடங்கும். சிறு கம்பு கழிகளை அடுக்கிக் கூடு கட்டும். ஒரு தடவை நான்கு அல்லது ஐந்து முட்டைகள் இடும். இம்மாதிரி விஞ்ஞானிகள் ஆராய்கிறார்கள்.

புலவர்களின் ஆராய்ச்சி

ஆனால் புலவர்கள் காகங்களின் பழக்கவழக்கங்களை நன்கு கவனித்து, ஒற்றுமை வேற்றுமை வழிகளில் பிற ஜீவன்களுடன் ஒப்பிட்டு, பல பாட்டுக்களில் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஒரு புலவர் காரிய மேனியர், கூனல் உடம்பினர், ஒரு பிரபுவைப் பேட்டி கண்டு சம்மானம் பெறச் சென்றார். பிரபு, "இது யார் அண்டங்காக்கை?" என்றார். "பிரபு, அந்தப் பட்டம் தங்களுக்குத்தான் பொருந்தும். அது நான் அல்ல" என்றார் புலவர். "அது எப்படி?" என்றார் கோபத்துடன் பிரபு. "பிரபோ, அண்டம் என்றால் உலகம். காக்கை என்றால் காப்பது. உலகத்தைக் காப்பது தங்கள் தொழில். ஆகவே அந்தப் பட்டம் உங்களுக்குத்தான் தரும்" என்றார் புலவர். "மெச்தினேன் உம்மை; நன்றாய்க் காக்காய் பிடித்தீர்" என்று பிரபு சொல்லிச் சம்மானம் செய்தார். கிடைத்த சமயத்தை உசிதமாக உபயோகிக்கும் கவிகளும் உண்டு.

குணங்கள்

காக்கையின் குணங்களைச் சொல்லும் தனிப் பாடல் ஒன்று பின் வருவதாகும்:

"காலை எழுந்திருத்தல் காணும லேபுணர்தல்
மாலை குளித்து மனைபுகுதல் - சால
உற்றாரோ டுண்ணல் உறவாட லிவ்வைந்தும்
கற்றாயோ காக்கைக் குணம்."

காலையில் எழுந்து கத்தும் குணத்தை, கவி சுந்தரம் பிள்ளை தமது மனோன்மணீயத்தில் சொல்லியிருக்கிறார்:

"இருட்பகை யிரவி இருளைனத் தம்மையுமீ
கருத்திக் காய்வனே வென்றயிர்த்து இருசிறைக்
கையால் மார்பிற் புடைத்துக் கலங்கி
மெய்யாம் தம்பெயர் விளம்பி வாயசம்
பதறியெத் திசையிலும் சிதறியோ தெலும்."

உற்றாரோடு உறவு கலத்தலைப்பற்றி நன்றாகச் சில கவிகள் எழுதியிருக்கிறார்கள். திருவள்ளுவர்,

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமு
மன்னனீ ரார்க்கே யுள" என்றார். தாயுமானவர்,

"காகம் உறவு கலந்துண்ணக்
கண்டீர் அகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்குதந்தோ
இன்புற் றிடநா மினிஎடுத்த
தேகம் விழமுன் புசிப்பதற்குச்
சேர வாரும் செகத்தீரே"

என்று கதறியிருக்கிறார். மக்கள் இன்னும் இதன் உண்மையை அறிந்து நடவாமல் வீணே பெரும் போர் செய்து அழிந்து மாய்கின்றனர்!

காக்கையின் அறிவு

காக்கை ஒர் அறிவுள்ள பக்ஷி. நம் வீட்டு மரடிகளில் பண்டங்களை உலர்த்தும்போது, பக்கத்தில் ஒரு தடியோ அல்லது ஓர் உருவமோ வைப்பது வழக்கம். சிலர் ஒரு வில்லையும் வைப்பார்களாம். இவைகளின் கொடுமையை அறிந்தபடியினாலே அங்கு அது நெருங்குவதில்லை.

"நெல்லைக் கண்டு நெருங்கிய காக்கை
வில்லைக் கண்டு விலகியது போலும்."

"தீப்பால் வினையினைத் தீரவு மஞ்சாராய்க்
காப்பாரே போன்றுரைத்த போய்க்குறளை
- ஏய்ப்பார்முன்
சொல்லோ டொருப்படார் சோர்வின்றி
மாறுமே
வில்லோடு காக்கையே போன்று."

— பழமொழி.

கெடுதி வரும்போது அதைத் தவிர்க்கக் கூட்டமாய் முயலும். கல் எறி விழுந்தால் கூட்டமாய்ப் பறக்கும். இதையே தாயுமானவர்,

"காகமா னதுகோடி கூடினின் றலுமொரு
கல்லின்முன் னெதிர்நிற்குமோ?" என்றார்.

பழமொழி,

"மறுமனத்த னல்லாத மாநிலத்த வேந்தன்
உறுமனத்த னுகி யோழகிற் - செறுமனத்தார்
பாயிரங் கூறிப் படைதொக்கா லென்செய்ப
ஆயிரங் காக்கைக்கோர் கல்"

என்று சொல்லும்.

காக்கையின் கண்கள்

காக்கைக்கு இரு கண்கள் இருந்தபோதிலும் ஒரே மணிதான். இரண்டிலும் இலங்குகிறது என்பது கவிகளின் ஆராய்ச்சி. அதற்குப் புராண ஆதாரமும் இருக்கிறது. ஹனுமான் இலங்கையில் சீதையைக் கண்டு திரும்பும்போது அவள் அவனுக்குச் சொல்லிய அடையாளங்களில் இச்சம்பவம் சொல்லப்படுகிறது. காக்கை உருக்கொண்ட சயந்தன் சீதைக்கு அபகாரம் செய்தான். என்ன ஒட்டியும் அது போகவில்லை. ரத்தம் கசிந்து ராமர் மேல் விழ, அவர் உணர்ந்து ஒரு தர்ப்பையைப் பிரம்மாஸ்திரமாக உபயோகித்தார். காக்கை ஓடி அபயம் தேட, எவரும் மறுக்க, கடைசியில் ராமரையே சரண் அடைந்தது; "பரம் பொருளே, நீயே கதி" என்று கதறிக் காலில் விழுந்தது. அம்பு வீணாகாது இருக்க, காக்கையின் கண்மணி ஒன்றை ராமர் இரையாக்கினார்.

கம்பர் வெகு அழகாக இச்சம்பவத்தை 6 பாக்களில் தெரிவிக்கிறார்.

மாணிக்கவாசகரும் காக்கையின் இருகண் ஒரு மணி விசேடத்தைச் சொல்லி ஒரு தத்துவத்தை விளக்குகிறார்:

"காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலநீ
தாங்கிருவர்
ஆகத்து ளோருயிர் கண்டனம் யாமின்றி
யாவையுமாம்
ஏகத் தோரு னிரும்போழி லம்பல
வன்மலையிற்
தோகைக்குந் தோன்றற்கு மொன்றாய்
வருமின்பத் துன்பங்களே."

ராஜதந்திரத்தைப்பற்றிச் சொல்லும்போது சுக்கிரநீதி நான்காவது அத்தியாயத்தில் காக நேத்திரம் குறிப்பிடப்படுகிறது. "ஓர் அரசன் தன் படையைச் சிறுசிறு குழுவாகப் பிரித்து வைத்தலாகிய துவைத பாவத்தை மேற்கோடல், பகைவன் தன் படைச் சிறுமையை நோக்கி எளிதில் வென்றுவிடலாம் என்று கருதிப் போர்க்குரிய அவன் உபகரணங்களையும் படைகளையும் மிகுதியாக்காமை குறித்தாம். காகத்திரு கண்ணில் ஒன்றே மணி கலக்குமாதலின் அந்த மணியின் நிலை இன்ன கண்ணில் உள்ளதென்று அறியவாறு; அதுபோல அரசன் தான் உண்மையாகக் கடைப்பிடித்துள்ள காரியம் இன்னதென்று பிறர் அறியாவாறு மேற்கொள்ளவேண்டும் என்பதாம்."

காக்கையின் கண்களின் விசித்திர வரலாறும் உவமைகளும் நன்கு காட்டப்பட்டிருக்கின்றன. காக்கைக்கு இரு கண்கள் இருந்தும் பார்ப்பது ஒரு கண்ணுலேதான். அதனுலே எப்பொருளையும் பார்க்கும்போது காகமானது ஒரு பக்கம் தலையைச் சாய்த்தே பார்க்கும். ஆனலும் அந்தப் பார்வை மிகக் கூர்மையானது.

காக்கையும் கூகையும்

துரியோதனனும் அவன் தம்பிகளும் போரில் மடிந்துவிட்டார்கள். அசுவத்தாமாவும் கிருபரும் கிருதவர்மாவும் என்ன செய்வது என்று தெரியாமல் சூரிய அஸ்தமன சமயத்தில் ஒரு கோரமான காடகத்தை அடைந்தார்கள். அங்கு ஓர் ஆல மரத்தின் அடியில் தங்கினர்கள். நக்ஷத்திரங்களும் கிரகங்களும் ஒளி வீசுகின்றன. இரவில் சஞ்சரிக்கும் பிராணிகள் இஷ்டப்படி கூத்தாடின. பகலில் சஞ்சரிக்கும் பிராணிகள் நித்திரைக்கு வசப்பட்டன. கிருபரும் கிருதவர்மாவும் தூங்கி விட்டனர்; ஆனுல் அசுவத்தாமாவோ கினமும் பொறுமையும் பெருங்கினவனுப்ப் பாம்புபோலச் சீறிக்கொண்டு தூங்காமல் இருந்தான். காக்கைகள் நிரம்பித் தூங்கிக்கொண்டிருக்கும் அந்த ஆலமரத்தைப் பார்த்தான். அங்கு அவை தனித் தனி கூடு கட்டிக்கொண்டு சுகமாக உறங்குவதைக் கண்டான். ஆனல் திடீரென்று ஒரு கோட்டான் அங்கு வந்தது. அதன் தேகம் பெரியது; மரகதக் கண்களை உடையது; கீரியின் பிங்கள வர்ணமுடையது; கூர்மையான நகங்களையும் மூக்கையும் உடையது; கருடனது பறக்கும் வேகத்தை உடையது. அது பயமின்றித் தூங்கும் காக்கைகளைக் கொல்லத் தொடங்கியது; கால்களால் சிலவற்றின் சிறகுகளை முறித்தது; தலைகளை அறுத்தது; கால்களை ஒடித்தது. காக்கைப் பிணங்கள் ஆலமரத்தை மூடிவிட்டன. பிறகு பகையாளிகளைக் கொன்ற சந்தோஷத்தில் அந்தக் கோட்டான் மூழ்கியது. இவைகளை உற்று நோக்கிய அசுவத்தாமனும் கோட்டானைப் போலப் பகைவர்களைக் கூட்டமாய்க் கொல்ல வேண்டுமென்று நினைத்தான். அந்தப் பக்ஷி யுத்த விஷயத்தில் தனக்கு உபதேசம் செய்தது என்று நினைத்தான். அன்றிரவே பாண்டவர்களைக் கொல்வது என்று தீர்மானித்தான். வில்லி புத்தூரார் இந்த விஷயத்தை ஒரு பாட்டில் வெகு நன்றாய் விளக்குகிறார்:

"வேலமர் தடக்கை வீரரிப் பாடி
வீடுசென் றினைதலும் புறத்தோர்
ஆலமர் சினையிற் பல்பெருங் காக
மரும்பக லழிந்தகூ கையினுற்
காலவு மிடநற் றலமரக் கண்டு
தம்மிலே முகமக நோக்கிக்
காலழ மிடனு மறிந்தமர் செதத்தல்
கடனெனக் கருதின ரன்றே."

"சிவதனுசை வளைத்தவர்க்கே சீதை உரியவள்" என்ற நிபந்தனைக்கு இணங்க, பல மன்னர்கள் இசைந்து முயல அத்தனுசை அசைக்கவும் வலியற்றிருந்தார்கள். சீதையைப் பெற முடியாத கோபத்தினுல் ஜனகமகாராசன் மேல் அவர்கள் போரிட்டனர்; ஒரு வருஷமாய் விட்டது. ஜனகர் சேனை வாவரக் குறைத்தது. கவலையுடன் இருக்கும்போது தேவர்கள் அவருக்குச் சதாங்க சேனையைக் கொடுத்தார்கள். அதைப் பார்த்து அரசர்கள், "இரவில் காக்கைகள் கோட்டானைக் கண்டு பயப்பட்டதைப் போல" அஞ்சி ஓடினர்களாம். கம்பர் சொல்லுகிறார்:

"மற்காக்கு மணிப்புயத்து
மன்னனிவன் மழவிடையோன்
விற்காக்கும் வாளமருள்
மெலிகின்ற னெனவிரங்கி
எற்காக்கு முடிவின்னோர்
படையிநீதா ரெனவேந்த
ரற்காக்கை கூகையைக்கண்
டஞ்சினவா மெனவகன்றார்."

ஆனல் சில கூகைகள் குத்தப்பட்டு வெருண்டு கிடக்கும்; அகையால் அவை இரவில் இருளில் இருந்தாலும் காக்கைக்குப் பயந்து கூகை

இருக்கும்; அது போல நல்ல அரண் வாய்ந்த கோட்டையில் அடைபட்டிருந்தாலும் வீரமில்லாதவர்கள் வெளியில் இருந்தாற்போலவே அஞ்சிப் பகைவர் கையில் அகப்படுவார்களாம். இவ்விஷயம் பழமொழியில் ஒரு பாட்டில் விளக்கப்பட்டிருக்கிறது. அது:

"இஞ்சி அடைத்துவைத் தேமாந் திருப்பினும்
அஞ்சி அகப்படுவார் ஆற்றார் - அஞ்சி
இருள்புக் கிருப்பினும் மெய்யே வெருஉம்புள்
இருளி னிருந்தும் வெளி."

இவ்விஷயங்களைச் சுருக்கமாகத் திருவள்ளுவர் காலமறிதல் என்ற அதிகாரத்தில் சொல்லியிருக்கிறார். காலம் இல்லாத இடத்தில் அரசர்க்கு வலிமையினால் பயன் இல்லை. காலமாவது வெம்மையும் குளிர்ச்சியும் சமமாய், நோய் செய்யாமல் நீரும் உணவும் பிறவும் உடைத்தாய், சேனை வருந்தாமற் செல்லும் தன்மையதாம்.

"பகல்வேல்லும் கூகையைக் காக்கை
இகல்வேல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது."

காக்கையும் மானும்

காக்கை ஊன் மிகக் கேவலமானதென்றும் மானின் ஊன் மிகவும் மேலானதென்றும் சொல்கிறார்கள். மான் ஊனைத் தின்பது அருளுடைய அறத்திற்கும், காக்கை ஊனைத் தின்பது அருளில்லாத அறத்திற்கும் உவமிக்கப் பட்டிருக்கின்றன. அருளாவது தொடர்பு பற்றுமல் இயல்பாக எல்லா உயிர்க்கும் கரட்டுவதாகிய கருணை; அதுவே செல்வத்துள் செல்வமாகும். அறத்துக்கு அருள் காரணமாகும்; அருளோடுகூடி அறம் செய்யாமல் வேறு காரணத்தால் அறம் செய்வார் அதன் பலனை அடையார். அருளோடு படாத அறம், மாணூன் இருக்கக் காக்கை ஊனைத் தின்பது போல ஆகுமாம். பழமொழி சொல்லுகிறது:

"அற்றக நோக்கி அறத்திற் கருளுடைமை
முற்ற அறிந்தார் முதலறிந்தார் - தெற்ற
முதல்விட் டஃதொழிந்தோர்
ஓம்பா வொழுக்கம்
முயல்விட்டுக் காக்கை தினல்."

இதையே அப்பரும் தமது தேவாரத்தில் சொல்லுகிறார்:

"என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்
டென்னையோர் உரு வாக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட்
டென்னுள்ளங் கோயி லாக்கி
அன்பிருத்தி அடியேனைக் கூழாட்கொண்
டருள்செய்த ஆரு ரர்தம்
முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக்
காக்கைப்பின் போன வாறே."

காக்கையின் ஊக்கம்

காக்கை ஊகமுள்ள பக்ஷி என்பதைக் காட்டச் சிறுவர்கள் தமிழ் வாசக புஸ்தகங்களில் கதைகள் காணப்படுகின்றன. ஓர் ஆலமரத்தில் ஒரு காகம் கூடுகட்டி வசித்தது. அதன் அடியிலுள்ள புற்றில் ஒரு பாம்பு வசித்தது. காகம் இட்ட முட்டைகளை அது இல்லாத சமயம் பார்த்துப் பாம்பு மரத்தில் ஏறித் தின்று வந்தது. இதைத் தயரம் பொறுக்காமல், ஆலேசனை செய்தது. ஒரு தடவை பகலில் இரை தேடச் செல்லாமல், மூட்டை மறையும் மாயத்தை மறைவாகக் கவனிக்கத் தீர்மானித்தது. பாம்பு ஏறி மூட்டையைத் தின்றது. காக்கை கா கா என்று கத்தியும், பாம்பு பயப்படவில்லை. காக்கைக்கு வேறு உதவியும் கிடைக்கவில்லை. பகைவனைக் கொல்ல யுக்தி செய்தது. சமீபத்தில் இருந்த அரண்மனையில் இருக்கும் குளத்தில் அரசன் குளிக்கும்போது, தன் மோதிரத்தைக் கழற்றிக் கரையில் வைப்பதைக் கவனித்தது. ஒரு நாள் அந்த மோதிரத்தைக் கௌவி மெதுவாகப் பறந்து புற்றில் போட்டுவிட்டது. சேவகர்கள் தொடர்ந்து வந்தார்கள்; காக்கை மோதிரத்தைப் புற்றில் போடுவதைப் பார்த்தார்கள். அவர்கள் புற்றை இடித்தார்கள். பாம்பு கீறிப் பாய்ந்தது. அதை அடித்துக் கொன்றுவிட்டு மோதிரத்தை எடுத்துச் சென்றார்கள். காக்கையின் பகைவனும் மாண்டது. அதன் தயரமும் தீர்ந்தது; அதன் யுக்தியும் பலித்தது.

மற்றொரு கதை: ஒரு நாள் ஒரு காகம் தாகத்தினால் வருந்தியது. ஒரு கூஜாவைக் கண்டு அதனுள் பார்த்தது. ஜலம் அடியில் இருந்தது. மூக்குக்கு எட்டவில்லை. வருந்தி யுக்தி கண்டுபிடித்தது. சிறு கற்கள் பலவற்றைக் கூஜாவிற்குள் போட்டது. ஜலம் சிறிது மேலே வந்தது. தன் தாகத்தைத் தீர்த்துக்கொண்டது.

காக்கையின் உபகாரம்

குயில்: காக்கை பல விதங்களில் பலருக்கு உபகாரம் செய்கிறது. காலையில் மதுரமாகக் கத்தும் குயிலுக்குத் தன் முட்டையைப் பொரிக்கும் விதம் தெரியாதாம். அதன் முட்டை காக்கையின் முட்டை போலக் கருமை கலந்த வெள்ளை நிறம் உடையது. ஆகையால் அது தன் முட்டைகளைக் காக்கை இல்லாத சமயம் பார்த்து அதன் கூட்டில் கொண்டு வைத்துவிடுமாம். காக்கையும் வித்தியாசம் தெரியாமல் எல்லா முட்டைகளையும் அடைகாத்துப் பொரித்துவிடுமாம். குயில் குஞ்சுகளும் காக்கைக் குஞ்சுகள்போல இளவயதில் இருக்குமாம். அதனால் காக்கை தான் தேடிக் கொண்டுவந்த உணவை அவைகளின் வாய்க்குள் ளும் போட்டு அவைகளையும் வளர்க்குமாம். இறகு மூளைத்துப் பெரியவையாகிக் கத்தி ஆரம்பித்த பின்தான் அவை தன் குஞ்சுகளல்ல என்பது

தெரியுமரம். உடனே அவைகளைக் கொத்தித் தூரத்திவிடும். அவைகளும் பறந்து தம் இனத் தோடு சேர்ந்துவிடும். இவ்விஷயம் நாலடியாரில் எப்படி உபயோகிக்கப் பட்டிருக்கிறது என் பதைக் கவனிப்போம்:

தலைமகன் பொருள் சம்பாதிப்பதற்காக அயல் நாட்டுக்குப் போய்விட்டான். தலைமகள் பிரிவாற் றாது காமநோயால் வருந்துகிறாள். தோழி, "மன் மதனும் குயிலும் சந்தானும் உன்னை வருத்து கிறார்களே! என்ன செய்வது?" என்று சொல்லு கிறாள். "அவர்களைப் பழிப்பதில் என்ன பயன்? அவர் போன மார்க்கந்தான் பழிக்குக் காரணம்" என்கிறாள் தலைமகள். சிவபிரான் மன்மதனை எரித்தான். அப்படியே இருந்தால் மன்மதன் இவளை வாட்ட இடமிராது; ஆனால் அவர் மறபடி யும் அவனுக்கு உருவம் கொடுத்துவிட்டார். அது னால்தான் சிவபிரானைத் தோழி பழிக்கிறாள். அது போல, குயில் முட்டையிட்டவுடனே அது னைப் பொரித்துப் பாதுகாவாமல் காக்கையின் கூட்டில் அதற்குத் தெரியாமலே இட்டுச்செல்ல, அது அம்முட்டையைத் தனதென்றே கருதிக் குஞ்சு பொரித்துச் சில நாள் சென்றவுடன், அது கூவென்ற சத்தத்தைத் தூரத்திவிடுகிறது. உடனே காக்கை கோபித்து அதைக் குத்தித் தூரத்திவிடுகிறது. ஆதலின் காக்கையைத் தோழி பழிக்கிறாள். சந்தி னை விழுங்கிய பாம்பு-மறபடியும் அதை உமிழ்ந் ததனாலே பாம்பும் தோழியால் பழிக்கப்படு கிறது. ஆகையினால்தான் அவள் வருத்தத் துக்குச் சிவபிரானும் காக்கையும் அரவும் காரணம் என்கிறாள் தோழி. நாலடியாரில் உள்ள வெண்பா இது:

"கண்ழுன்றுடையானுங் காக்கையும் பையரவு
மென்னீன்ற யாயும் பிழைத்ததேன் -
பொன்னீன்ற
கோங்கநும் பன்ன முலையாய் பொருள்வயிற்
பாங்கினர் சென்ற நெறி."

விதை பரவுதல்: காக்கை விரும்புவது வேப் பங்கனி. அதுவும் ஓர் உபகாரம். அது ஒரு மரத் திலுள்ள பழத்தைத் தூக்கித் தூர இடங்களில் சென்று சதையைத் தின்றுவிட்டுக் கொட் டையை அந்த அந்த இடங்களில் போட்டுவிடும். அவைகளும் அங்கு அங்கு மூளைத்து வேரூன்றி மரங்களாகிவிடும். இப்படி வேம்பு ஆல் முதலிய மரங்களின் விதைகள் பரவுவதற்குக் காக்கை உதவியாகிறது.

நிமித்தம்: மனிதர்கள் புறப்படும்போது காக்கை இடது பக்கமாகப் பறந்தால் கெடுதலைத் தெரிவிக்கிறது என்றும், வலது பக்கமாகப் பறந் தால் நன்மை வருவதைத் தெரிவிக்கிறது என் றும் நம்புகிறார்கள். இந்தச் சகுனம் பார்த்துச் செல்வதைக் கிராமங்களில் உள்ளவர்கள் இன்றும் பெரிதாகக் கவனிக்கிறார்கள். வலியன் இடமாதலும் வாயசம் வலமாதலும் நன்றும். வரும் விருந்துகளை அது மனிதர்களுக்கு முன்னதாகத் தன் கத்தல் மூலமாகத் தெரிவிக்கிறதாம். "காக்கை கத்துகிறது; இன்று ரெயிலில் யாரா வது உற்றார் வருவார்" என்று நம் வீட்டுப் பெண் கள் சொல்வதைக் கவனிக்கலாம். சிலர், "எங் களவராயின் இருந்து காட்டு, உங்களவராயின் ஓடிக் காட்டு" என்பார்களாம். காக்கை தன் உண வைக் கரவாது இனத்தைக் கரைந்து கூவி உண்ணும் பகுதி என்பதை இத்தப் பழமொழி குறிப்பிடுகிறது. உற்றார் வருவதைத்தூல நச் செள்ளையார் தம் குறுந்தொகையில் அழகாகச் சொல்லுகிறார்:

"திண்டேர் நள்ளி காணத் தண்டார்
பல்லா பயந்த நெய்யிற் றேண்டி
ழழதுடன் வினைந்த வெண்ணெல் வெஞ்சோ
றெருகலத் தேந்தினுஞ் சிறிதென் றேழி
பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்று
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே."

பிதருக்கள்: இந்த உற்றார் வருவதை உரைக் கும் உபகாரத்துக்காகத்தான் நம் வீடுகளிலும் கோவில்களிலும் பலியிடுகிறோம். காக்கைக்கு அன்னம் போடாமல் பல வீடுகளில் தாங்கள் சாப்பிடமாட்டார்கள். சொத்த காலத்தில் வாயச பிண்டம் போடாமல் சொத்தம் முற்றுப்பெறுது. ஐந்திரம், வாருணம், வாயவ்யம், யாம்யம் என நான்கு காகங்கள் உண்டு. இவற்றிற்குப் பலியிட் டோர் யமதண்டனையினின்றும் நீங்குவர். காணப்படாத பிதருக்கள் வாயச ரூபமடைந்த நம்மை அண்டுவதனால், நாம் அவைகளுக்குப் பலி யும் பிண்டமும் போடுகிறோம். இது ஒரு நம் பிக்கை; பரம்பரை வழக்கம்; மூடமோ என் னவோ, பகவானுக்குத்தான் தெரியும்.

காவிரி: கடைசியாகத் தென்னாட்டில் காவிரி நதி ஓடுவதற்கும் ஒரு காகமே காரணம் என்பர். எண் திசையும், எழ் உலகும், எவ்வுயிரும் நற்கதி யடைவதற்காக அகத்தியர் தமது கமண்டலத்தில் கங்கையினின்றும் காவிரி நதியைக் கொண்டு வந்தார். குடகு மலைச் சாரலில் வைத்து ஜல மல பாதை கழிக்கச் சென்றார். அப்பொழுது ஒரு காகம் வந்து அதை உருட்டிவிட்டது. உடனே பெருகியாகக் காவிரியும் பெருகிற்று. இதையே சுந்தரம் பிள்ளை, "பின்னெரு வாயசம் கவிழ்த்த போன்னி" என்கிறார்.

காக்கையின் இழிவு: காக்கை ஓர் இழிவான பக்ஷி. தெருவில் கிடக்கும் செத்த எலி, உமிழ்ந்த கோழை, மாமிசம் முதலியவைகளை அலக்ஷ்யமாகக் கொத்திக்கொண்டு போய்த் தின்று விடும். சில தமிழ்ப் பாடல்களில் இந்த இழிவைச் சிலர் உவமையாக ஆண்டிருக்கிறார்கள். அவை களில் சில பின்வருவன:

"நற்ற மரைக்கமத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற் போல்
கற்றரைக் கற்றரே காழறுவர் - கற்பிலா
ழர்க்கரை ழர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை யுகக்கும் பிணம்.

"உண்டு குணமிங் கொருவர்க் கெனினும்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே - வண்டு
சேக்கை விரும்பும் செழும்பொழில் [மலர்ச்
வாய் வேம்பன்றே
காக்கை விரும்பும் கனி." —நன்னெறி.

"பூக்கைக் கொண்டான் பொன்னடி போற்றி
நாக்கைக் கொண்டா னுமை நவில்கிலார் [லார்
ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கைக் கேயிரையாகிக் கழிவரே."

இழிவுடன் காக்கைக்குத் தற்புகழ்ச்சியும் உண்டாம். பாரதத்தில் கல்லியன் கர்ணனுக்கு, "காக்கையும் அன்னமும்" என்ற உபமானக்கதையைச் சொல்லி, கர்ணன் காக்கையைப் போல் அர்ஜுனன் கிருஷ்ணன் முதலியவர்களிடத்தில் நடந்து கொள்ளக்கூடாது என்று புத்திமதி சொல்லுகிறான்.

காக்கையின் சொல்

இவ்வளவு இழிவானதாக இருந்தாலும், அது கரைதல் மனிதரது சொல்லே ஒத்ததென்றும், அது பிரமாண வாக்கு என்றும் பழமொழி கூறும். கள்ளியில் பிறக்கும் அகில் குலத்தாலும் கலத்தாலும் இழிந்ததாயினும் பரிமளமுடையதாக இருப்பதால் அதை உபயோகிக்கிறோம். ஒழுக்கத்தில் இழிந்த காக்கையின் கரைதல் காதுக்கு இன்பமாயில்லாதபோதிலும் அது பிரமாணமாகிறது. அதுபோல, கீழாயினோர் சொல்வதும் நல்லுரையாயின் அறிவுடையோர் கேட்கவேண்டியது.

"கள்ளி யகிலுங் கருங்காக்கைச் சொல்லும் போ
லெள்ளல் கயவர்வா யின்னுரையைத் - தெள்ளிதி
னுர்க்கு மருவி மலைநாட நாய்கொண்டாற்
பார்ப்பாருந் தின்பா நடும்பு."

காக்கை வரயிற் சொல் பிரமாணமாவதைப் பெரியாழ்வார் தம் திருமொழியில் சொல்லுகிறார்:

"காக்கை வாயினுங் கட்டுரை கொள்வர்
காரணங்களு ளக்கோடி யானே."

காக்கையின் பொன்னிறம்

காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு என்பது பழமொழி. நம் குழந்தைகள் அழகாயில்லாமல் அசடாயிருந்தாலும் அவர்களை மெச்சும் பொழுது, நம் சினேகிதர்கள் இந்தப் பழமொழியைச் சொல்லி நமது நடத்தையைச் சரி என்பார்கள். ஆனால் காக்கையே கரிக்குருவிக்குப் பொன் போலத் தோற்றமாம். இந்த விஷயம் சித்தாமணியில் திருத்தக்கதேவரால் கனகமாலையாரிலம் பகத்தில் 1584-ஆம் பாட்டில் குறிப்பிடப்படுகிறது. சீவகனைக் கனகமாலையார் அன்புடன் நோக்கி அவனை இச்சிக்கிறாள். சீவகனே தன் னுடம்பின் இழிவை விளக்கி, உடல் வீழ்ந்த காலத்தில் அதை நோக்குவர் ஒருவரும் கிடையாதே என்று சொல்லுகிறான். அவள் செய்கை கரிக்குருவிக்குக் காக்கை பொன்னிறமாகத் தோற்றுவதை யொக்கும் என்று சொல்லுகிறான். பாட்டு பின்வருமாறு:

"விழக்கோடு வெண்ணஞ் சல்ல
வுகிர்மயி நுமிழ்கட் பீளை
புழப்பயில் தூம்பை போல்லாத்
தடிதடி கிடந்த போழ்தின்
விழித்தியார் நோக்கு கிற்பார்
பிள்ளையார் கண்ணுட் காக்கை
கோதிப்பரும் பொன்னிற் றோன்றும்
கோள்கைத்தாற் கொடியே யென்றான்."

மற்றோர் ஆசிரியர் காக்கை சிற்சில சமயங்களில் பொன் உருவமடையும் என்று சொல்லுகிறார். அவர் இயற்கையழகை னன்கு அநுபவித்தவர்போலும்; இயற்கையிலுல் பிறர் மாறுபடும் விதங்களைக் கவனித்தவர் போலும். யாப்பருங்கலக்காரிகை ஆசிரியரான அமிதசாகரர் தமது நூலின் அவையடக்கத்தில் தமது சொல்லில் காணும் நுண்மையுற்ற பொருளும் மேன்மையான பொருளாய்விடும், தான்தோன்றும் புலவர்கூட்டத்தின் முன்னிலையில் என்கிறார். இது எதுபோல என்றால் பனிமாலிமையப் பொருப்பஞ் சேர்ந்த பொல்லாக் கருங்காக்கையும் பொன்னிறமாயிருப்பதைப் போல என்கிறார். எப்பொழுதாவது எங்ஙனவது கருங்காக்கை பொன்னிறமாகத் தோன்றுமா என்று எவருக்கும் சந்தேகம் தோன்றலாம். இமயமலைச் சாரலில் முஸோரியில் சில வருஷம் வதிந்த விபுலானந்த சுவாமிகள் இந்த அற்புதம் எப்படக்கூடும் என்று தாம் நேரில் அனுபவித்ததாக "இமயஞ் சேர்ந்த காக்கை" என்ற கட்டுரையில் னன்றாக விளக்கியிருக்கிறார். அமிதசாகரரின் பாட்டுக்கள் வருமாறு:

"சுருக்கமில் கேள்வித் துகள்தீர்
புலவர்முன் யான்மொழிந்த
பருப்பொருள் தானும் விழப்பொரு
ளாம்பனி மாலிமயப்
பொருப்பகஞ் சேர்ந்தபோல் லாக்கருங்
காக்கையும் பொன்னிறமா
யிருக்குமேன் றிவ்வா றுரைக்குமன்
றேவீ விருநிலமே."

காக்கைத் தினுசுகள்

காக்கை என்ற அடைமொழியையுடைய பல சொற்றொடர்கள் பல விஷயங்களை உணர்த்து

கின்றன. அவற்றுள் சிலவற்றைக் கவனிப்போம்: (1) காக்காய்வலி - இது ஒரு வியாதி. கண்களை மலர மலர விழித்தல், அவ்வேளையில் மலசலம் கழுவல், இரண்டு கால்களும் விறைத்துக்கொள்ளுதல், தொண்டையும் நாவும் உலர்தல், சிலேஷ்மத்தினால் வரயிலிருந்து கோழை விழுதல் முதலிய குறிகளை உண்டாக்கும். (2) காக்காய்க் குஷ்டம் - மற்றொரு வியாதி. காக்கையின் பிறப்பைப் போல முதலிற் சிவந்து பிறகு கறுப்பாகத் தோன்றும் குஷ்டம். (3) காக்காய் மலடு - முதல் இரண்டு பிள்ளையைப் பெற்றுப் பின்னர்க் கருப்பம் இல்லாமல் இருக்கும் நிலையைக் குறிப்பது. (4) காகபுச்சம் என்பது சூலில். (5) காகவிரோதி என்பது கூகை. (6) காக்கைக் கோடியாள் - மூதேவி. (7) காக்கை வாகனன்-சனிபகவான். திருவள்ளாற்றில் சனிபகவான் விசேஷம். அவருக்கு அங்கே பெரிய காக்கை வாகனம் உள்ளது. (8) காக்காய்ப் பொன்-போலித் தங்கம். பூமியில் சில லேசான தகடுகள் கிடைக்கின்றன. அவை பொன்னிறமுடையன. ஆனால் பொன்னல்ல. அவை காக்காய்ப் பொன் ஆகும். பூமியில் மைக்கா என்ற பொருள் வெட்டி எடுக்கப்படுகிறது. அது எலெக்டிரிக் கருவிகளில் வெகு உபயோகமானது. அது ஒரு நிரச வஸ்து. அது நிறம்பற்றிப் பொன்னப்பிரகம், வெள்ளியப்பிரகம், தேனப்பிரகம், கிருட்டிணப்பிரகம், கந்தகப்பிரகம் எனப் பல வகைப்படும். அவைகளில் பொன்னப்பிரகம் காக்காய்ப் பொன் ஆகும். (9) காக்கை ழகீரர் - மூக்கின் விசேடமுடைய மனிதர்கள். (10) காக்கை பாடினியார், காக்கை பாடினி நச்செள்ளையார் என்ற பட்டப் பெயர்களுடைய தமிழ்ப் புலவர்கள் உண்டு. (11) சில வேலையாட்கள் எசமானன் போக்குப் போல "ஆமாம் சாமி" என்றே பதில் சொல்லிப் பிழைப்பார்கள். எசமான் "அதோ, வெள்ளைக் காக்காய் பறக்குது, பார்" என்றால், "ஆமாம், அதோ தெரிகிறதே" என்பார்கள். "அடே, எதடா வெள்ளைக் காக்காய்?" என்றால் "அதுதான் யோசிக்கிறேன், எசமான்" என்பார்கள். அப்படிப்பட்ட வேலைக்காரர்கள் வெள்ளைக் காக்காய்ப் பேர்வழிகள். (12) ஆங்கில பாஷையிலே "ஒரு காக்காய் பறந்த தூரம்" என்ற ஒரு சொற்றொடர் உண்டு. இரண்டு ஊர்களுக்கு நடுவே உள்ள குறுகின தூரத்தைக் குறிக்கும் போது, அத்தொடர் வழங்கப்படும். (13) காக்கைச் சோளம், காக்கைப் பூ, காச்சை மல்லி (நுணு), காக்கரிப்பான் (கரிசிலாங்கண்ணி), காகச்னி (மஞ்சள்), காகதுண்டம் (அகில்), காகநேரி (மணத்தக்காளி), காகபலம் (வேம்பு) என்ற பெயரையுடைய பண்டங்கள் பல உள்ளன. (14) காகதாலீயம் - ஒரு நியாயம். காக்காய் உட்கார்ந்ததும் பனம்பழம் விழுந்ததும் என்பது போலத் தற்செயலாய் நிகழும் விஷயத்தைச் சொல்வது. மேலும், கடலில் ஒரு படகின் பாய்மரத்தில் இருந்த ஒரு காக்கை எப்படி வேறிடம் செல்ல வழியின்றி அதனையே பற்றி நிற்குமோ, அம்மாதிரி ஈசனடியையே பற்றி நிற்கவேண்டும். எகநிஷ்டனேயான பக்தர்கள் என்று சொல்லும் ஒரு நியாயத்துக்கும் காகதாலீயம் என்று பெயர். (15) காகபாதம் - வயிரத்தின் பெருங் குற்றங்களில் ஒன்று. அவை காகபாதம், களங்கம், வித்து, ரேகை என்பன. "காகபாதம் நாகங் சொல்லும்" என்பார் அடியார்க்கு நல்லார்.

முடிவுரை

காகத்தைப் பற்றி ராமாயணகாலத்திலும் மகாபாரத காலத்திலும் சங்ககாலத்திலும் நமது காலத்திலும் கவிகளும் பாமரர்களும் என்ன எண்ணங்களை நினைத்தார்கள் என்பது ஒருவாறாக இக்கட்டுரையில் காணப்படுகிறது. சகுனியின் சகோதரி காந்தாரி உறவினர் ஒவ்வொருவரையும் போர்க்களத்தில் பார்த்துப் புலம்பி வரும்போது சகுனி உடலைப் பார்த்து, "இனி யார் எனக்குக் கார்த்திகை எண்ணெயும் கனுப் பழையதும் தருவார்கள்?" என்று அலறினாளாம். கனுப் பழையதை மஞ்சளுடன் கலந்து கனுப் பொங்கல் அன்று காக்கைக்குக் கொடுத்தல் நமது தமிழ் நாட்டில் பார்க்கும் பழக்கமாகும். ஒரு வேளை காந்தாரிதான் காக்கை ரூபத்தில் வந்து ஒருவருக்குப் பதிலாகப் பலர் தரும் கனுப் பழையதைக் கண்டு மகிழ்கிறாள் போலும்!

ஆற - ஆர

"வயிறாரச் சாப்பிட வேண்டும்", "பசியாற உண்ண வேண்டும்" - என்று சொல்லும் இரண்டு சமயங்களில் ஆர - ஆற என்ற சொற்களை உபயோகிக்கிறோம். இவை இரண்டையும் மாறிச் சிலர் எழுதுவதுண்டு. 'ஆர' என்பது நிறைய என்னும் அர்த்தமுடையது. ஆற - நீங்க அல்லது அடங்க. வயிறு நிரம்பச் சாப்பிடவேண்டும் என்ற பொருளே பொருத்தமானது; ஆகையால் "வயிறர" என்று எழுதுவதே சரி. பசி அடங்கச் சாப்பிடுவதைப் "பசியாற" என்று சொல்வதுதான் பொருத்தம்.

'கண்ணார கண்டேன்'-கண் அழகைக் கண்டு இன்பம் நிரம்பும்படியாகப் பார்த்தேன் என்பது பொருள்.

'காலார நடந்தேன்' - கால் வலி அடங்கும்படியாக நடந்தேன் என்று அர்த்தம்.

நாட்சிஸமும் பாஸிஸமும்

டி. கே. வேங்கட ராமன்

நாட்சிக் கட்சியும், பாஸிஸ்ட் கட்சியும் முற்றும் ஒரேவிதமானவை அல்ல. பாஸிஸ்ட் கட்சியும் இதாலிய அரசாங்கமும் ஒன்றுயின. ஜர்மனியில், ஜர்மன் அரசாங்கம் நாட்சிக் கட்சியினதானுலும், நாட்சிக் கட்சி தனியாக ஒரு ஸ்தாபனமாக வேலை செய்தது. ஜர்மன் அரசாங்கத்தில், இதாலியில் அதுசரிக்கும் தொழில்முறைப் பிரதிநிதித்துவம் கையாளப்படவில்லை. கட்சிகள் ஏற்பட்ட விதத்திலும் மாறுதல்கள் உண்டு. முஸோலினி தேசத்தை ஆண்டுவந்த பொழுதிலும், பெயரளவிற்கு இதாலியில் ஓர் அரசர் இருந்தார். ஜர்மனியில், ஹிட்லரே சட்டப்படி அதிகாரி. முஸோலினி ஆரம்பத்திலிருந்தே தம் கட்சிக்குத் தலைவர். ஹிட்லர் தாம் 'மைன் காம்ப்' எழுதிய பின்பே, தமது கட்சிக்குத் தலைவராக ஏகமனதுடன் ஒப்புக்கொள்ளப்பட்டார். முஸோலினி கல்ல படிப்பாளி. ஆராய்ச்சிக்காரருங்கூட. ஹிட்லருக்கும் படிப்புக்கும் வெகு தூரம். அரசியல் அமைப்பிலும் இதாலி, ஜர்மனி இவைகளின் பழைய சரித்திரத்தை ஒட்டிச் சில மாறுதல்கள் காணப்படுகின்றன.

ஆனுல், வேற்றுமைகளைக் காட்டிலும் ஒற்றுமைகளே அதிகம். இருவரும் பதவி பெற மற்றக் கட்சிகளுடன் உறவு கொண்டாடினர். ஆனுல், அக்கட்சிகளின் கொள்கைகளையும், தலைவர்களையும் மனமார வெறுத்தனர். பதவி பெற்றதும் சமயம் பார்த்து மற்றக் கட்சியினரை ஒழித்தனர். இரு தேசங்களிலும் அரசாங்கத் தலைவர் வேறு வழியின்றி அவர்களிடம் அரசை ஒப்பிக்க வேண்டியதாயிற்று. இருவரும் சட்டசபைகளிடமிருந்து முழு அதிகாரம் பெற்றார்கள். தங்களுக்குப் பிடிக்காத ராஜாங்கத் திட்டங்களை ரத்து செய்தனர். தங்கள் விரோதிகளைச் சமூக வாழ்வினின்று விலக்கினர். தங்கள் கட்சியே அரசு என்று ஏகாதிபத்திய ஆட்சி புரிந்தனர்.

கொள்கைகளிலும் விசேஷ ஒற்றுமைகளைக் கவனிக்கலாம் :

(1) இருவருக்கும் ஜனநாயக அரசியலில் நம்பிக்கை இல்லை. 1933-ஆம் வருஷம், "ஜனப் பிரதிநிதி சபை எனக்கு எப்பொழுதும் பிடித்த தல்ல" என்று முஸோலினி கர்ஜித்தார். ஹிட்லர் அதிகாரத்துவத்துக்கு இணங்குவதே மனிதர் இயல்பு என்று பறை சாற்றுகிறார். ஜனநாயகம் பயனற்றதாம். அதன் கரலம் ஆகிவிட்டதாம். ஜனநாயகம் தனிகர்கள் கைகளுக்கு ஓர் ஆயுதமாம். சர்வாதிகாரிகள் மக்களுக்குத் தாம், ஜனநாயகத்தால் செய்யமுடியாத அரிய செயல்களைச் செய்து வருவதாகச் சிலாகித்துக்கொள்கிறார்கள். இக்கூற்றில் சிறிது உண்மை இருக்கிறது என்று நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். முஸோலினியின். ஆதிக் கத்தில், இதாலியில் ஏராளமான விவசாய அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. பல வருஷங்களாகச் சதுப்பு நிலமாகக் கிடந்த பூமி பண்படுத்தப்பட்டது. பழைய ரோமாபுரி நாள் முதல் காம்பென்யா பிரதேசத்தை வாட்டிவந்த மலேரியா ஜுரம் விரட்டப்பட்டது. தெற்கு இதாலியில், வழிப்பறிக் கொள்ளைச் சங்கங்கள் கலைக்கப்பட்டன. இதாலிய அரசாங்கத்திற்கும் போப்பாண்டவருக்கும் பல வருஷங்களாக இருந்த சச்சரவும் மனக்கசப்பும் 1929-ஆம் வருஷம் ஒழிக்கப்பட்டன. போக்கு வரவு சாதனங்கள் சீரடைந்தன.

ஜர்மனியில், இரண்டு 4-வருஷ திட்டங்கள் ஆளப்பட்டு, பொருளாதார நிலைமை முன்னேற்றமடைந்தது. உருளைக்கிழங்கு, கோதுமை, பீட் சர்க்கரை இவைகளில் ஏராளமான உற்பத்தி உண்டானதால், வெளிநாட்டிலிருந்து இவைகளை இறக்குமதி செய்ய அவசியம் இல்லை. கிழக்கு மாகாணங்களில் விவசாயிகளுக்கு ஏராளமாக நிலம் கொடுக்கப்பட்டது. விவசாயம் அபிவிருத்தி அடைவதுடன் இந்த மாகாணங்களைக் காக்க இந்த ஜர்மானியர் உதவுவர் என எதிர்பார்க்கப்பட்டது. கைத்தொழில்களும் வளர்ந்தன. இரு தேசங்களிலும், தேசத்திற்கு வேண்டிய பொருள்களைத் தேசமே தயார் செய்துகொள்ளவேண்டும் (Aut-

archy) என்ற கொள்கை மேற்கொள்ளப்பட்டது. யுத்தீத்திற்குத் தயார் செய்யும் சாதனங்களில் இதுவும் ஒன்று, உதாரணமாக, யுத்த காரணமாக வெளி நாட்டிலிருந்து ரப்பர் இறக்குமதி தடைப்படலாம். இதை உத்தேசித்துச் செயற்கை ரப்பர் தயாரித்தனர். இவ்விதம் உண்டான செயற்கைப் பொருள்கள் (Ersatz) அனந்தம். ஜனநாயக நாடுகளில் காணப்படும் வேலையில்லாத் திண்டாட்டம், இம் முறைகளாலும், ஆயுத உற்பத்திச் சாலைகளின் பெருக்கத்தாலும், அரசாங்க நிர்மாணத்திட்டங்களாலும் இதாலியிலும் ஜர்மனியிலும் நீக்கப்பட்டது. ஆனால், இவ்விதம் சர்வாதிகாரிகள் சாதித்தவை ஜனநாயகத்திற்குப் பழியா குமா ? ஒரு தனிப்பட்ட மனிதனின் ஆட்சி. மற்றவர் அவன் கீழ்ப்படிந்து இயங்கும் பம்பாய்கள். யாவரும் குறிப்பிட்ட வேலையைக் கட்டாயமாகச் செய்யவேண்டும். மனிதரின் தனிச் சுதந்தரத்தையும், அரசாங்கத்தில் பல வேறுபட்ட அபிப்பிராயங்களையும் பரிபாலித்தவரும் ஜனநாயக முறை இவ்வளவு தீவிரமாக ஒருகாலும் வேலைத் திட்டத்தைக் கையாள முடியாது. தவிரவும், சர்வாதிகாரிகள் எலெக்தர்க்கொள்வதும் முற்றும் உண்மையல்ல. சர்வாதிகாரிகள் பொருளாதார ஞானமற்றவர். பொருளாதார நிபுணர்களை வைத்தே வேலை வாங்குகிறார்கள். ஆனால், அந்த நிபுணர்களின் ஆலோசனைகள் தமக்குப் பிடிக்காவிட்டால், அந்த நிபுணர்களைக் 'கல்தர்'க் கொடுக்கத் தயங்குவதில்லை. தொழிலாளிகள் நிலைமை ஜனநாயக நாடுகளைவிடக் கேவலம். வேலை நிறுத்தம் கூடாது. சர்க்காரே அவர்களின் சம்பளங்களை நிர்ணயிப்பதால், பலவந்தமாகச் சம்பளங்கள் 'தண்டு' போடப்பட்டிருக்கின்றன. அவர்களின் வேலை நேரமும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளிகளைக் கண்காணிக்க ரகசிய வேலைகாரர். மேலும், முஸோலினி இவ்வளவு செய்தும், இதாலியில் ஜனங்களின் வாழ்க்கைநிலை இன்னமும் கேவலமாக இருக்கிறது. கல்வி அபிவிருத்தியும் காணவில்லை.

(2) அரசியல் (State) தனி மனிதனுக்கு மேற்பட்டது என்பது சர்வாதிகார சித்தாந்தம். புரொபஸர் ராக்கோ என்பவர் இதாலியில் இந்த எண்ணம் 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாகிய வெல்லி என்பவர் காலம் முதல் ஏற்பட்டது என்கிறார். ஜர்மனியில் ஹேகல் முதலிய தத்துவ சாஸ்திரிகள் இந்தக் கொள்கையை உபதேசித்தனர். மனிதன் அரசியலுக்காகத்தான் வாழ்கிறான்; அரசியலுக்கு ஒரு கருவி. ஆகையால், தனி மனித சுதந்தரம் என்பது அபத்தம். 1927-ஆம் வருஷம் முஸோலினி, "அரசியலுக்குப் புறம்பாகவும் விரோதமாகவும் எதுவும் இருக்கக்கூடாது" என்று பிரகடனம் செய்தார். அரசியல் தேசத்தைப் பாதுகாப்பது; பொருளாதார நிலைமையைப் பரிபாலிப்பது. பள்ளிக்கூடம் முதல் சர்வ கலாசாலை வரை கல்வி முறைகளை நிர்ணயிக்கும். சிற்பம், சங்கீதம் முதலிய கலைகள் அதன் திட்டப்படியே வளரும். அரசியலின் இஷ்டப்படி சரித்திரம் போதிக்கவேண்டும். அதற்கு அநுசாரணையாக விஞ்ஞானம் இருக்கவேண்டும். ஜர்மனியில் யதேச்சாதிகாரத்திற்குச் சாதனமாக (Geo-politics) ஜியோ-பாலிடிக்ஸ் என்னும் கவீன பூகோளமுறை வகுக்கப்பட்டது. பேச்சுரிமை, பத்திரிகை யுரிமை யாவும் அரசியலுக்குக் கட்டுப்பட்டதே. ஆதலால், பத்திரிகைகள், ரேடியோ, சினிமா முதலியவை சர்க்கார் பிரசாரங்களாயின. இந்த அரசியலின் அதிகாரத்தைக் காப்பது பலாத்காரமே ஆகையால், பலாத்கார முறைகளை அது சரிப்படுத்தும் பொருந்தும். யதேச்சாதிகாரத்தின் இந்தக் கொள்கை, பலவேறுபட்ட அபிப்பிராயங்கள் தடையின்றி நிர்ப்பயமாய்ப் பேசப்பட்டவரும் ஜனநாயகக் கொள்கைக்கு முற்றும் மாறுபட்டது. இப்படிச் சமூகத்தைக் கட்டுப்படுத்தும் அரசியல் யாது ? ஆராயப்போனால், தனிப்பட்ட மனிதனுடைய ஒரு சர்வாதிகாரியின் சித்தமே. பொறுப்பற்ற அந்தத் தனி அதிகாரி தனக்கு விரோதமானவரை நசுக்குகிறான். எதிராளிகளிடம் பயங்கர முறைகளை அநுஷ்டிக்கிறான். இரு தேசங்களிலும், சர்வாதிகாரிகளின் அதட்டல்கள், ரத்தக் களரிகள், உளவாளிகளைக் கொண்டு சதிகள்.

(3) சர்வாதிகாரம் இனத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டது. முஸோலினி இதாலியரைப் பழைய ரோமரின் சந்ததியாராகக் கனவு கண்டார். ரோமபுரி உலகத்தை ஆண்டு மக்களுக்கு வழி காட்டியதைப்போல், கவீன இதாலியரும் செய்யவேண்டுமாம். இது அவர்கள் பிறப்புரிமை. ஜர்மனியில் இந்த இனக் கொள்கை இன்னும் அதிக தூரம் சென்றது. இதன் அஸ்திவாரம், உலக நாகரிகம் ஆரியர்களான நார்டிக் சாதியர் கையில் இருப்பதாம். இந்த நார்டிக் சாதியரில் மேலானவர் ஜர்மானியர். இவர்கள்தாம் மேல் சாதி (Herrenvolk). ஆகையால், (i) இப்படிப்பட்டவர் உலகத்தை ஆளுவது உலகத்திற்கு நல்லது. உலகங்களுக்கு வேண்டிய பூமி (Lebensraum) அவர்கள் அடைந்தாக வேண்டும். (ii) அவர்களின் இன சுத்தம் காக்கப்படவேண்டும். ஆரிய சாதி இல்லாத யூதர்கள் ஒழிக்கப்பட வேண்டும். யூதர்கள் நாசம் ஒரு முக்கியக் கடமை.

19-ஆம் நூற்றாண்டிலேயே, லாக்னர் என்னும் ஒரு ஜர்மானியப் பொருளாதார எழுத்தாளர். ஜர்மானியனின் கௌரவம், யூதர்களின் அபாயம் முதலியவைகளைப்பற்றி எழுதியிருக்கிறார். அந்த நூற்றாண்டின் கடைசியில், H. S. சாம்பர்லேன் என்பவர் ஜர்மானியரே உலகில் சிறேஷ்ட ஜாதி என்றும் அவர்களே உலகத்தை ஆளத் தகுந்தவர் என்றும் எழுதினார். 'நாட்கிள்' இந்த உபதே

சங்களை இன்னும் அதிகமாக வற்புறுத்துகிறார்கள். அறிவு வளர்ச்சி முற்றிய இந்நாளில், இந்த இனக்கொள்கை இருப்பதே பரிகாசத்திற்கு இடமாகிறது. உலகில் ஒரிடத்திலும் சுத்தமான இனம் என்பதே கிடையாது என்பதையும், "ஆரியம்" என்னும் பதம் சில பாஷைகளைக் குறிப்பதேயன்றி மக்களையல்ல என்பதையும் நன்கறிந்த விஞ்ஞானிகள் விளக்கிக் காட்டி யிருக்கிறார்கள்.

(4) இரு சர்வாதிகாரிகளும் யுத்தத்தைப் போற்றிப் பாராட்டுவர். யுத்தமே தேச கௌரவத்தைக் காக்கிறதாம். யுத்தத்தால், தைரியம் தேசபக்தி முதலிய பெளருஷமான குணங்கள் உண்டாகின்றனவாம். ஆகையால், போரே தேசத்திற்கு லபம். ஜர்மனியில் ஏற்கனவே ப்ரஷ்யாவில் இந்தக் கொள்கை இருந்தபடியால், ஹிட்லர் ஜர்மனியை ஒரு போர்க்கருவிச் சாலையாக வளர்க்க முடிந்தது. இதாலியில் முஸோலினிக்கு முன் இந்த எண்ணம் தீவிரமாக இல்லாதபடியால், ஜர்மனியைவிட இதாலி போரில் பலஹீனமானதில் அதிசயமில்லை. இருந்தாலும், போர்முறையைப் போற்றுவது சர்வாதிகாரிகளின் ஆக்கிரமிப்புகளுக்கு உகந்ததாக இருந்தது. ஆக்கிரமிப்புக்குச் சர்வாதிகாரிகள் இன்னொரு காரணமும் தேடிக்கொண்டார்கள். உலகத்தின் நாடுகள் வல்லரசுகளிடை சமமாகப் பங்கிட்பட்டவில்லையாம். இங்கிலாந்து முதலிய தேசங்கள் பெரும் பகுதியைப் பிடித்துக்கொண்டன. அவைகள் திருப்தியடைந்தமையால் மற்றத் தேசங்கள் தங்கள் முறைகளைப் பின்பற்றுவதை விரும்பவில்லை. தங்கள் பூமிகளிலும் சுங்கக் கட்டுப்பாடுகளால் பிற நாட்டு வர்த்தகத்தைத் தடுக்கின்றன. உலகமே பூமி யிருப்பவர், இல்லாதவர் (Haves and Have-nots) என்று பிரிக்கப்பட்டிவிட்டதாம். ஜர்மனியும் இதாலியும் தங்கள் தேச கௌரவப் படியும் ஆற்றலின்படியும் தங்கள் சிரேஷ்ட மக்கள் உலகத்தில் பாவுவதற்கு ஏராளமாகப் பூமியை அடையவேண்டும்.

ஹிட்லர் 'மைன் கெம்ப்'ல், "நார்டிக் சாதியைச் சேர்ந்த பிரிட்டனுடன் ஜர்மனி சச்சரவிடலாகாது. ஜர்மனியின் பழைய குடியேற்ற நாடுகள் பெரும்பாலும் பிரிட்டனிடம் இருப்பதால், ஜர்மனி இவைகளை வேண்டக்கூடாது. கீழ் ஐரோப்பாவில், ஜர்மானியருக்கு வேண்டிய நிலவளமும் நீர்வளமும் பொருந்திய பிரதேசங்கள் இருக்கின்றன. ஆகையால், கீழ் நோக்கிச் செல்வோம் (Drang derosten)" என்று எழுதினர். ஆனால், ஆக்கிரமிப்பு ஆசை வெறியால், 1936-இல் கிழக்குப் பிரதேசம் தவிர, பழைய குடியேற்ற நாடுகளும் வேண்டும் என்று கூறினர். இந்த அதிசயப் போர் முறைக் கொள்கையும் ஆக்கிரமிப்பு வெறியுமே உலகை இந்த மகாயுத்தத்தில் இழுத்து விட்டன. அதற்காகவே, முன்னேற்பாடாக ஆகாய விமானங்கள் கொண்டு தாக்குதல், யந்திர சாதனங்களின் உபயோகம், திடீர்த் தாக்குதல் பிரயோகம் முதலியவை தயார் செய்யப்பட்டன. 'ஐந்தாம் படை' வளர்க்கியும் கண்காணிக்கப்பட்டது. பின் நேர்ந்த யுத்த நிகழ்ச்சிகள், இம் முறைகளே நேசக் கட்சியினரும் உபயோகிக்கலாம் என்று நிரூபித்ததைத் தவிர, எந்தப் போரின் நாசமத்தால் சர்வாதிகாரிகள் உலகத்தை ஆக்கிரமிக்க நினைத்தனரோ அந்தப் போர்த் திட்டமே அவர்களின் அத்தத்தையும் கொண்டு வருகிறது என்று காட்டுகின்றன.

(5) இரு சர்வாதிகாரிகளும் நேர்மையான எண்ணங்களற்றவர். மனிதர்களின் நல்லதனத்தில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. நம் வாழ்க்கைக்கும் சமூகத்திற்கும் இன்றியமையாத தனி விசேஷங்களே வேண்டுமென்ற தாழ்த்துகிறார்கள். சமயம்பேல் நடத்தல், பிறரை ஏமாற்றல், வாக்கு மீறல், தந்திரம், கொரோம் முதலிய குணங்கள் ஒங்கின. ஹிட்லரே, "ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால் மக்கள் நம்புவர்" எனக் கூறியிருக்கிறார். நம் இந்தியர் குணங்களுக்குச் சிறிதும் ஒவ்வாத இவைகளைக் குறித்து அதிகம் எழுதவேண்டியதில்லை.

நீர்மட்டத்தில் ஓர் அழகான குமிழியைக் காண்கிறோம். சூரிய வெளிச்சம் பட்டு ரம்மியமான நிற பேதங்கள் இதில் பிரதிபலிக்கின்றன. குமிழ் வாவரப் பெரியதாகிறது. அந்தோ, வெடித்து மறைகிறது! யதேச்சாதிகாரம் சரசுவதமல்ல. தங்கள் வெற்றிகளாலும் பிரசார முறைகளாலும் மாந்தரைச் சில காலம் மயக்கலாம். முடிவில், மனுஷ சுபாவத்திற்கு முற்றும் விரோதமான இந்த அரசியல் முறை வீழவேண்டியதே. ஆனால், மனிதர் புத்திசாலிகளாக இருந்தால், இந்த அபாயகரமான அரசியல் முறை தோன்றக்கூடிய காரணங்கள் இல்லாமல், தங்கள் நாட்டு மக்கள் மனத்தில் சமூகத் திருப்தியும் உலக சகோதரத்துவமும் அரசியலில் சமரசமும் ஏற்படும்படி ஒற்றுமையாக வேலை செய்தால், இத்தக் கோரமான விஷப் பூண்டுகள் வளர இடமின்றி உலக சரித்திரத்திலிருந்தே மறைந்துபோகும். இந்த நல்லறிவு மாந்தரிடை எற்படுமோ?

'சீயக்காய்'

எண்ணெய் தேய்த்துக் கொள்பவர்கள் எண்ணெய் போகப் பிண்ணுக்கையும் 'சீயக்காய்'ப் பொடியையும் உபயோகப்படுத்துகிறார்கள். சீயக்காய், சீக்காய் என்று வெவ்வேறு விதமாக வழங்கும் பெயர் சிகைக்காய் என்பதிலிருந்து வந்தது. மயிரில் எண்ணெய் போக அரைத்துப் பூசுவதனால் அத்தப் பெயர் வந்தது.

நினைப்பும்

நிசமும்

'புதுமைப்பித்தன்'

"அடேடே! வி. பி. யா? வாருங்க; எது இத்தப் பக்கம் வந்து வெகு நாளாச்சே!" என உத்ஸாகத்துடன் வரவேற்றார் என். பி. ராமலிங்கம்.

மூன்று நாள் தாடியைப் புறக்கையினால் பலமாகத் தேய்த்துப் பிறகு சிக்கிப் பின்னிப் பறந்து கொண்டிருந்த சிகையைக் கோதி விட்டுவிட்டு, உள்ளே தூழைந்தார் வி. பி. அமைமணி கோத்தக்குமேல் உட்காரக்கூடாது, அவனிடம் இருக்கிறதை வாங்கிக்கொண்டு கடைசிப் பஸ் புறப்படு மூன் புறப்பட்டுவிட வேண்டும் என்ற வைராக்கியத்துடன், மனசு தனது ஸாட்டத்தின் பலன் காயா பழமா என்பது பற்றி அலமந்தது. சற்று அழுக்குப் பிடித்த நீண்ட கதர் ஜிப்பா, கரையோரத்தில் கால் பட்டுக் கிழிந்த வேஷ்டி, கீழே விழுவோமா வேண்டாமா எனத் தோளில் தொத்திக்கொண்டு தொங்கும் கதர் மேல் வேஷ்டி, அவருக்குத் தேச பக்தர் என விலாசம் ஒட்டின. குதிகால் அடியில் அர்த்தசந்திர வட்டமாகத் தேய்ந்துபோயும் விடாப்பிடியாகச் சேவை வைராக்கியத்துடன் மிளிரும் மிதியடியைத் தலைவாசலில் நிறுத்திவிட்டு, "என்ன ராமலிங்கம், எல். எஸ். பி. எங்கே?" என்று கேட்டுவிட்டு, சுற்று முற்றும் பார்த்தபடி சுவரோரத்தில் இருந்த பெஞ்சின் மேல் உட்கார்ந்தார். "எல். எஸ். பி. பிரஸ்ஸுக்குப் போயிருக்கான். குத்தெக் கழிச்சு வந்தடு வரன்" என்றார் ராமலிங்கம். பிறகு சற்றுக் கழித்து, "என்ன விசேஷம்?" என்றார்.

"விசேஷம் ஒன்னுமில்லெ; ஒரு அஞ்சு ரூபா பணம் இருந்தாத் தேவலே" என முழங்காலைத் தேய்த்தார் ஸ்ரீமான் வி. பி.

"ஏது, ரொம்ப அவசரமோ?" என்று சற்று நிதானித்தார் ராமலிங்கம்; பிறகு விவகாரத்தை விளக்குகிறவர் மாதிரி, "இன்னிக்கு மணியார்டர் எதுவுமே வரலே; ஸ்டார் புக்ஸ்டால்காரப்பயல் அடுத்த வாரம் வாடான்னுட்டான். - அதிருக்கட்டும்; நீ போன மாசம் எழுதினியே, அந்தக் கதை, அதைப்பத்தி, புரொபெஸர் சிதம்பரலிங்கம் என்ன சொன்னார் தெரியுமா? லோகத்திலேயே அந்த மாதிரிக் கதை என்று பொறுக்கி எடுத்தால் பத்துக்கூடத் தேறுதாம்; அவ்வளவு உயர்வாம்; தமிழுக்கு யோகம்னு தலைகால் தெரியாமெ கூத்தாடினார்." ராமலிங்கம் சற்று நிதானித்து வி.பி. முகத்தைப் பார்த்தார்.

"அந்தச் சிதம்பரலிங்கம், அதான் இங்கிலீஷ் புரொபெஸர், அவன்தானே? அவன் மகா கண்டெட்டானுக்கும்! எல்லாரைப் பத்தியும் அவன் அப்படித்தான் சொல்லிக்கொண்டிருப்பான். நீ அவனிடம் முகவுரை கேட்டுக் காவடி எடுத்தியா? எவண்டா வர்ரான்னு கொக்கு மாதிரி உக்காந்திருக்கிற கிழட்டுப் பொணத்துக்கு மின்னாலே நின்னு காக்கா புடிச்சா இது மட்டுமா சொல்லுவான்? இன்னும் சொல்லுவான். அவனுக்குத் தமிழைப்பத்தி என்ன தெரியும்? இங்கிலீஷைப் பத்தித்தான் என்ன தெரியும்? அவனுடைய இங்கிலீஷ் இலக்கியம், போன தலைமுறை இங்கிலீஷ்காரனுடன் போச்சே; பாடபுஸ்தக வரத்தியாருக்கு..."

"ஏன் ஸார் வி. பி. அவரை ஏன் இப்படித் திட்டுகிறீர்? அவர் உம்மைப் புகழ்ந்தானே செய்தாராம்?"

"என்னைப் புகழ அவன் யார்? அவனுடைய வறட்டு இங்கிலீஷும், விதாரணை இல்லாத தமிழும்..."

"அதிருக்கட்டும். வருணேந்திரன் இந்த மாதம் விளாசினி பத்திரிகையிலே, புதுத் தோரணையிலே..."

"புதுத் தோரணையிலே சரசுவதிக்குக் குடம் உடைச்சான்; என்னமோ தத்துப்பித்துன்னு..."

"சரி விடுங்கோ, உங்களுக்கு ஒத்தரையுமே பிடிக்காது.....ஸார், உங்களேயாவது உங்களுக்குப் பிடிக்குமோ" என்று சற்று எகத்தாளமாகக் கேட்டார் ராமலிங்கம்.

"என்னை எனக்குப் பிடிக்கிறதோ பிடிக்க லியோ அதெல்லாம் உமக்கென்ன?.....அஞ்சு ரூபாய்க்கு விதியெக் காணோம்; உமக்கு ஆராய்ச்சி, பிரசங்கம், தையரண்டி வேறு ஒரு கேடர....." என்று உறுமினார் வி. பி.

"மிஸ்டர் வி. பி., நீங்க பேயிட்டு, ஸாலுக்குக் காலையிலே வாருங்க. எல். எஸ். பி. இருப்பார்; வந்து அவரோடே பேசிக்கிங்கோ; சரி, காழி யாறது....." என்று எழுந்திருந்தார் ராமலிங்கம்.

அந்தச் சமயம் பார்த்து எல். எஸ். பி. ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டு, செருப்பை கடை வராலில் போட்டபடி, "எது, உள்ளே வி. பி. யா?" என்று குரல் கொடுத்தபடி உள்ளே நுழைந்தார்.

வி. பி. யும் ராமலிங்கமும் முகத்தில் ஈயாடாத படி நின்றிருந்ததைக் கண்டதும், நிலைமையை ஊகித்துக்கொண்டு, "ஸார் வி. பி., உங்களைச் சந்திக்கணும்னு ரொம்ப ஆசைப்பட்டுக்கொண்டிருக்கிறவர் ஒருத்தர் வந்திருக்கார்; நீங்களே இங்கே வந்துவிட்டீர்கள்; தெய்வசங்கல்பம்னு இதுதான்; அவர் யார், தெரியுமோ, - பெரிய புரொபெஸர், பழுத்த பண்டிதர், அபார ரசிகர், சிதம்பரலிங்கம்" என்று சொல்லிக்கொண்டே அடக்கினார்.

"புரொபெஸர்வாள் இப்படிக் கொஞ்சம் வரணும்; இவாள்தான் இன்னித் தேதிக்குத் தமிழிலே கதை எழுதறதுக்குன்னே பொறந்திருக்கறவர். வி. பின்னு நாங்கள் கூப்பிடுவோம். பெயர் விக்கிரமசிங்கபுரம் பலவேசம் பிள்ளே" என ஓர் ஆவர்த்தி வாசித்து நிறுத்தினார் எல். எஸ். பி.

புரொபெஸர் சிதம்பரலிங்கம் உள்ளே வந்தார். கூலியிலே பனிக்குல்லா, உடம்பிலே பிளானல் ஷர்ட்டும் கம்பளிப் போர்வையும், கண்ணில் தங்க விளிம்புக் கண்ணடி, இடுப்பில் மல் வேட்டி.

"இவாள்தான் விக்கிரமசிங்கபுரம் பலவேசம் பிள்ளேயோ? - பலே பேர்வழி ஐயா - என்னே அப்பிடியே பிரமிச்சு உக்காரும்படி பண்ணிவிட்டீரே; திருநெல்வேலிச் சைவமோ!" என்றார்.

"இல்லே, செட்டியப் பிள்ளைமார்" என்ற சுருக்கமாகச் சொல்லி நிறுத்திக்கொண்டார் வி. பி.

"ராமலிங்கம், நம்ம ராமவிலாஸ்லெ போய் காலு கப் காப்பி ஸ்டிராங்கா எடுத்தாறச் சொல்லேன்; வி. பி., டிபன் எதுவும் கொண்டாரச் சொல்லட்டா? முகம் சோர்வாக இருக்கே. ராமலிங்கம், மூறுகலா இரண்டு ஊத்தப்பமும் போட்டுக்கொண்டு வரச் சொல்லு; வெத்தலே பாக்குப் புகையிலையை மறந்துடாதே; வி. பி. இருக்கும் போது மறக்கலாமா?....."

"பத்மாசன ஐயர்வாள், எனக்கு இந்த வயசிலே, இந்த ராத்திரியிலே காபி சாப்டாத் தூக்கம் வருமா? ஒண்ணும் வாண்டாம்ஞ."

"அப்போ ஓவல்டின் கொண்டுவரச் சொல்லுகிறேனே...எதாவது கொஞ்சம்...சிரம பரிகாரமா" என்று சொல்லிக்கொண்டே மேஜையைத் தழுவினார் எல். எஸ். பி. "இதுதான் இவருடைய புஸ்தகத்தின் கடைசி பாரம். இதிலேதான் நான் சொன்னேனே, அந்தக் கதை வந்திருக்கு; இந்த மனுஷனுக்குக் ஈற்பனே எங்கிருந்துதான் வருதோ; நானும் எத்தனையோ பேரைப் பார்த்திருக்கேன்; முகத்தை முன்னாலே வச்சுச் சொல்லப்படாது: குணமும் அப்படித்தான்ஞ" என்று மேலும் தொடர்ந்து நாமாவளி நடத்தினார்.

சிதம்பரலிங்கம் சாவதானமாக சுற்காலியில் உட்கார்ந்துகொண்டு, "என் நிக்கறேள்? உட்காருங்கோ" என்று கையமர்த்திவிட்டு, "நானும் உங்களே வி. பி. ன்னே கூப்பிடத்தான் போறேன்" என்று அபூர்வ ஹாஸ்யம் பிடித்தது போலச் சிரித்தார்.

எதிரில் இருந்த இருவரும் ஒத்துச் சிரித்தனர்.

"மிஸ்டர் வி.பி., நான் சொல்லுகிறேனென்னு வருத்தப்படப்படாது; உங்களுடைய கற்பனே ரொம்ப ரா (raw : சரணே பிடிக்காதது), ரொம்ப ஒயில்ட் (wild: வளமுறை மீறிய அபூர்வ கற்பனைகளே ருசி பேதத்தைப் பாராட்டாமல் பிரயோகிப்பது). நம்ம ஜனங்கள் ரசிக்கிறதுக்குச் சித்தெ நாள் பிடிக்கும்..."

"என்னைப் படித்து ரசிக்கிறவாள் இங்கிலீஷ் ஞானம் அவ்வளவு இல்லாத நம்ம ஜனங்கள்தான்" என்றார் வி. பி.

"நீங்கள் சொல்றது வாஸ்தவந்தான். நம்ம ஜனங்களுனு நான் சொல்லவறப்போ, இங்கிலீஷ் படித்த நம்ம ஜனங்களேத்தான் சொன்னேன். அவாள் ரசித்தால்தான் உங்களுக்குப் பேர் வரும். அதற்கு நான் ஒரு வழி சொல்றேன்; உங்கள் கதைகளே இங்கிலீஷில் நான் மொழிபெயர்த்துச் சினிமைக் கம்பெனியில் பிரசுரிக்கிறேன்; அப்புறம் உங்களுக்கு உலகப் புகழ் வராத போகு....."

விவகாரம் தம் கையை விட்டுத் தாண்டி விடுமோ என்று பயந்த எல்.எஸ்.பி., "நான் இன்னென்னு உனக்குச் சொல்ல மறந்து போச்சே... இதோ காப்பி வந்துட்டுது, முதல்லெ சாப்பிடு" என்று ஸ்வரிடம் இருந்த ஓவல்டினை வாங்கி மரியாதையாக ஆற்றிப் புரொபஸரிடம் கொடுத்த

விட்டு, "கிட்டு, நம்ம ஸரிடம் முதல்லெ ஊத்தப் பத்தை எடுத்து வையடா; என்ன, முறுகலாக் கொண்டாந்தியர? காபியே அப்படியே ஆத் தாமே பெஞ்சிலே வய்யி. எங்கே ராமலிங்கம், இப்படி வெத்தலேயெ எடுத்தா" என்றார் எல். எஸ். பி.

"சீமையிலா! என் புஸ்தகமா?" என்ற பெரு மிதத்தில் எதிரில் இருந்த கண்ணாடி அலமாரியில் தோன்றிய மங்கிய பிம்பத்தைப் பார்த்துத் தலை யைக் கோதிவிட்டுக்கொண்ட வி.பி. க்கு ஊத்தப் பத்தில் வீசேஷ ருசி தென்பட்டது. புரொபெஸ ரது மேதையும் ஊத்தப்ப ருசியும் தம்முள் எது பெரியது என்பதற்காக அவரது மன அரங்கில் போட்டியிட்டன.

"நம்ம புரொபெஸர் தமிழிலே லிட்டரரி கிரிட் டிஷிஸம்ஸு என்னன்னு ஒரு புஸ்தகம் எழுதப் போறார்; அதுவும் நம்ம கம்பெனிக்கு எழுதப் போறார்; அதிலே தமிழ்ப் புது இலக்கியம் என் பது பற்றி ஒரு அதிபந்த மும் உண்டு" என்றார் எல். எஸ். பி.

"சபாஷ்! இப்பொ அதுதான் வேணும். வரிக்கிறவாள் எல்லாம், மாடு பருத்திக்கொட்டை தின்கிறமாதிரி, எதை யானலும் விதாரண இல்லாமல் வரிக்கிறா."

"மாடு பருத்திக்கொட்டை தின்கிறப்போலே,- என்ன அபூர்வமான கல்பனை!..." என்று கண்ணை மூடிக்கொண்டு அந்த 'அபூர்வ கல்பனை'யை அசை போட்டார் புரொபெஸர்.

"என்ன வி. பி., மணி பத்தரை ஆயிட்டுது. லாஸ்ட்டு பஸ் போயிடப்படாது; நீ எதுக்கு வந்தேன்னு தெரியும்; நாளைக்குப் பத்து மணிக்கு இந்தப் பக்கமா வா..." என்றார் எல். எஸ். பி.

"என்னடா எல். எஸ். பி., என்னே ஒனக்குத் தெரியாதா? நாளே இல்லாட்டா, நாளன்னிக்கே வர்றேன்; வெளியே வா ஒரு நிமிஷம்.." என்று கொண்டே எழுந்து நடையைத் தாண்டி நின்றார்.

எல். எஸ். பி. நடைவாசலில் நின்றார்.

"ஒரு எழிட் அனுஸ் இருந்தாக் குடு" என்றார் எழுத்தாளர்.

கையில் வைத்திருந்த எட்டணுவை எல். எஸ். பி. இலக்கிய சேவைக்காகச் சம்பா வனையாக அளித்து விட்டு, இருளில் மறைந்த இருவரு

வத்தைத் திரும்பிப் பாராமல் உள்ளே வந்து உட்கார்ந்தார்.

"அபூர்வ ஆசாமிதான்; ஒத்தைக் கட்டை; உக்காத்தி வச்சு எழுத வைக்கறதுதான் கஷ்டம்" என்று புரொபஸரிடம் விளக்கினார். சம்பிரதாய பூர்வமாகச் சதம்பரலிங்கம் பிள்ளை காட்டிய இங்கி லீஷ் மோகத்துக்கு வேட்டுவைப்பதாக அவர் பாவனை.

"அதென்ன அப்படி எண்ணிவிட்டீர்கள்? எனக்கு இந்த வயசுக் காலத்திலே படிக்கிறதாவது, மொழிபெயர்க்கிறதாவது!....." என்றார் சிதம்பரலிங்கம்.

"செய்யவேண்டியதுதான்; நீங்கள் செய்யாட்டா யார் செய்யறது? அதிருக்கட்டும்; உங்கள் புஸ்தகத்தை இந்த மார்ச்சில் முடித்தவிட்டால், வருகிற வருஷத்துக்குப் பாட்புஸ்தகமாக வைக்க முடியுமா? முன்னுரையும் சுருக்காக் கொடுத்து டுங்கோ. அப்புறம் வேறே என்ன?....."

ராமலிங்கம் ஒரு செக் புஸ்தகத்தை நீட்டினான். "ஏதோ ஐந்நூறு ரூபா போட்டிருக்கேன்; என் சக்திக்கு ஏற்றது" என்று செக்கில் கையெழுத் திட்டுவிட்டு மரியாதையாக இரண்டு கைகளாலும் நீட்டினான்.

"அது கெடக்கட்டும்ஞு; செக்தானு பிரமாதம்? ஈரோக்கு வந்து முன்னுரையை வாங்கிக்கொண்டு போயிடச் சொல்லிவிடுங்கோ; புஸ்தகம் ரெடியாத்தான் இருக்கு; ஒரு வாரத்திலே அனுப்பறேன்" என்று சொல்லி எழுந்தார்.

"ஈரனே கரூலையில் வருகிறேனே" என வழி அனுப்பினான் எல். எஸ். பி.

சதம்பரலிங்கக் கையெழுத்துப் பிரதி, பிரசுராலய கூேத்திராடனம் புரிந்து புண்ணியம் சம்பாதித்தது என்பதை அறியாததற்குக் காரணம், தொழிலில் அவர் புதிது என்பதுதான்.

"ராமலிங்கம், அந்தப் பித்தக்குளி கணக்கிலே ஒரு எட்ணு கைப்பத்தெழுது; பொணம் எப்பப் பத்தாலும் சமய சந்தர்ப்பம் தெரியாமெ வந்து கழுத்தை அறுக்கிறது, எதாவது தத்துப் பித்துனு....."

"எல்லாம் நீ குடுக்கற எளக்காந்தான், அந்த ஈரய் மூஞ்சிலியே வந்து நக்க வருது. இந்தப் பயகள்கிட்ட நீ பொஸ்தகத்தை வங்காதே, வங்காதே, மானம்போறதுனு ஈரன் எத்தினி ஈரள் மண்டையை உடைச்சுக்கிறது?" என்று கடிந்துகொண்டார் பங்காளி ராமலிங்கம்.

"போகட்டும் பொழைச்சுப் போறுன். அவன் கதைதானே நிறைய விக்கறது? இந்தக் கிழட்டு ராஸ்கல் பிடிச்ச பிடியில் ரூ. 500 கறந்துவிட் டானே!"

"நீ வடிகட்டின மூட்டாள்!"

"புஸ்தகம் பாட புஸ்தகமா வந்தா அப்படியார் மூட்டாளோ!"

"வரவிட்டாலோ?"

"இந்த வருஷம் இல்லே என்றால் அடுத்த வருஷம்; அது லாஸ் இல்லே (நஷ்டமில்லே)."

"இந்த எழுதுகிற பயல்கள் எல்லாருமே திருட்டுக்கூட்டம்: சொன்னுச் சொன்னபடி நடக்க மாட்டான்கள்; பொஸ்தகக்கடை வக்கிறதை விடப் பொடலங்காய் விக்கலாம்."

"புடலங்கா அழுகிப்போகுமடா மூட்டாள்!"

2

ராம பத்ர பிரசுரகர்த்தர்கள் லிமிட்டெட் என இலக்கிய சேவைக்கெனவே உதயமான கம்பெனியின் நடையை விட்டு இறங்கி, இருட்டுக்குள் தான் என்ற பேதம் அற்று லயித்துப் போன வி.பி.யை யார் என்ன சொன்னாலும் அவர் பிறவி எழுத்தாளர்தாம். இந்த இலக்கியஜகாதனம் கிடைக்கு முன்பே, தம்முடைய பெயரின் மேல் அவருக்கு வெறுப்பு உண்டு. இலக்கிய ஜகாதனம் தம்முடைய மரணவீக நிச்சயத்தைப் பொறுத்தவரையாவது கிடைத்துவிட்ட பிற்பாடு, தம்முடைய தகப்பனுர்வழிப் பாட்டன் பேரில் இந்தப் பெயரை முன்னிட்டு வெறுப்பு ஸ்திரப் பட்டது. "மாட்டுக்குப் பருத்திவிதை வச்சியா, வண்டியை இழுத்துக் குறட்டு ஓரமாக விட்டு விட்டு, போயி சுப்பையாத் தேவனைச் சத்தங் குடுத்துட்டு வா" என்று அதிகாரம் செய்வோரிடம், இடுப்பில் தண்டை வரிந்துகொண்டு கும்பிக் கொடுப்பை ஆற்றிக்கொள்ள முயலும் ஜீவன் களுக்குப் பலவேசம் என்ற பெயர் இருந்தால் முழுவதும் பொருத்தமாக இருக்கும். அன்று, சென்ற யுகம் என மனக்குறளி கால நிர்ணயம் செய்யக் கூடிய ஒரு காலத்தில், தகப்பனுருடைய சண்டு விரலைப் பிடித்துக்கொண்டு அம்பாசமுத்திரம் உயர்தரப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் முன்பு, சிவப்பு உல்லன் குல்லாவுக்கு வெளியில் நாய்வால் மாதிரி நீட்டிக்கொண்டிருந்த வரழை நார் முடிப் புச் சடையும், எண்ணெய்க் கசவெழியும் தெற்றி யில் சாந்துப்பொட்டும், காதில் தட்டும், பச்சைக் கோட்டும், பிறந்த காளுக்கு ஆச்சி வாங்கித் தந்த ஜரிகைக்கரை நீலப்பட்டுவேட்டியும் சிலேட்டும் கையுமாக நின்று ராமகள் கோட்டை வாசல் திறக்க வாய் கிடந்தபோது, "என்னடா, பேருக்கு வற்றாப்போலப் பலவேசமாக இருக்கியே; பின்னுலே புலிவேசம் போட்டுப்போறெ. கையில் என்ன இருக்கு, தெரியுமா?" என்று பிரம்பைக் காட்டி அவர் வாவேற்றது, மனசில் சிலாசாசனம் போலப் பதித்து கிடந்தது. அதிலிருந்து தொடங் கிய இந்த ராமாவளி ஆத்ம சோதனை இன்றவரை தீர்ந்த பாடில்லே. சூற்முலஜாதனை குறும்பலா ஈசனைச் சூசிப்பிக்கும்படி பலர ஈசன் என்பதன் திரிபா அல்லது திருடனிலும் தியாகியிலும் இபெத் என்ற வார்த்தையிலும் தன்னைக் காந்த சகல ரூப னுக விளக்கும் அத்தச் சாட்சாத் பரம்பொருளின்

கற்பனை இந்த இலக்கிய சோபையைப் பெற்ற போதி, ... கரலில் எதையோ சதக் என மிதித் தார். சாணிதான், வெறும் சாணி; பட்டணத்து ரோட்டில் சாணி என்பது அவருக்கு அபூர்வமாகத் தென்பட்டது; தமது ஊர் வளமைகளை நினைவுக் குக் கொண்டுவந்தது. கற்பனை இவ்வாறு பிறழ்ந்தது ஒரு விநாடிதான்; மறுபடியும் ஈசன் பல வேஷ ஞகத் தென்படுவது மாறி, பலவேசம் பிள்ளையே ராமலிங்கமும், எல்.எஸ்.பி.யும், சிதம்பாலிங்கமும், காமுமாகக் காட்சியளித்துத் தம்முள் தர்க்கம் பண்ண ஆரம்பித்துவிட்டனர்.

இருட்டோ, கல்ல நிம்மதியான இருட்டு; தேனும்பேட்டை கண்ணுயிரம்பிள்ளை தெரு, 1-27 நம்பர் மேல் மாடியில் உள்ள 'கல்கத்தா இருட்டறை'க்கு (இது சரித்திரப் புளுகு அல்ல; சாசுவத உண்மை) போன மாசத்து வாடகைப் பாக் கிக்கும் இந்த மாதத்து வாடகைக்குமாக அந்திக் கால நாமாவளி செய்ய வரும் வீட்டுக்கு உடமைஸ் தரான பட்டணத்து முதலியார், இதுவரை காத் தக்கொண்டிருக்க வயிறுதான் பசிக்காதா, அவ ருக்கு வீடு வாசல் பிள்ளை குட்டி என்ற உலக பந் தங்கள் இல்லாத தனிக்கட்டையா? நிச்சயமாகப் போயிருப்பார்; நிம்மதியாகப் போய்ப் படுத்துத் தூங்கலாம்; சிறிது விடியற்காலையிலேயே எழுந்து வெளியே புறப்பட்டுவிட்டால், இந்தக் கடன் காரப் பயலிடம் எதையாவது வாங்கி, அவர் கடை யண்டை கொண்டுபோய்க் கொடுத்துத் திருப்தி செய்துவிடலாம். இருந்தாலும் இந்த ராமலிங்கம் பயலுக்கு என்ன இவ்வளவு தடுக்கு? நான் புஸ் தகம் எழுதிக்கொடுக்காமல் போயிருந்தால் அந்தப் பயல் கதிதான் என்ன? இவன் என்ன மகா பங்கு போட்டானும்! 200 ரூபா செக், அது ரொக்கமாகிறதுக்கு மூன்னல் ஆயிரத்தெட்டுத் தடவை அமிஞ்சி செக்கென்று எல்.எஸ்.பி. வயிற் றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருந்தானுமே. சிவனேன்னு பேப்பர் வித்தவனெக் கொண்டு வந்து இந்தப் புஸ்தகக் கம்பெனிலெ மாட்டிவிட்டு விட்டான். என் புஸ்தகம் வாரதெ போனு, கடையைச் சாத்த வேண்டியிருந்திருக்கும்னு எல். எஸ். பி. தான் என்கிட்டச் சொன்னுனே. என்னு, எல்.எஸ்.பி., பேசாமெ உட்கார்ந்திருக்கே. ராமலிங்கம் என்னைப் பாத்து, அதவும் அவன் நாச மாப் போகாமல் காப்பாத்த வந்த என்னைப் பாத்து, பல்லுமேலே நாக்கைப் போட்டு, வெளியே போன்னு சொன்னுனே, அவனை என்ன பண்ணி ஞத் தேவலே? நீதான் சொல்லு! நான் எவனை யாவது என்னிக்காவது மரியாதைக் குறைவாக...

"அதை விடுங்க ஸார் வி. பி., - ராமலிங்கம் பெரிய மனுஷ்யன், அவனை இப்படிப் பிரமாதப் படுத்தினு? நீங்கதானே தன்னை என்னமோ பெரிய மனுஷன்னு அவனேயே நினைச்சுக்கும் படி செய்யறேள். போய்க் காபி வாங்கிண்டு வாடான்னு சொல்லவேண்டியவனை ஒரு பொருட் டாக மதித்துப்பேசினுல் தலைகொழுப்பு ஏறுதா? நான்தான் உங்களுக்கு மிந்தியே அவனுடைய யோக்கியதையைச் சொல்லியிருக்கிறேனே..... நான் வேணும்னு மன்னிப்புக் கேட்டுக்கிறேன்."

"என்ன எல். எஸ். பி., உங்களை எனக்குத் தெரியாதா? நீங்களாவது மன்னிப்புக் கேட்பதா வது? நீங்க அன்னிக்கு வறத்துக்குக் கொஞ்சம் லேட்டாயிருந்தா பல்லே உதித்தக் கையிலே குத்திருப்பேன்.....ரைட்டர்னு மதிப்புக் கொடுக்காத மாட்டுக்குப் புத்தி வருத்தவேண் டாம்..."

"நீங்க அவனிடம் பேச்சு எதுக்கு வச்சுக்கொள் ளுகிறீர்கள்? இனிமேல்க்கி, எதானலும் என்னி டம் சொல்லுங்கள், என்னிடம் கேளுங்கள்... கடைசி பாரம் புளுப் வந்திருக்கு; ராத்திரி கொண்டு போய்ப் பாத்துப்பிட்டுக் காத்தாலே எட்டு மணி வாக்கிலே அனுப்பிச்சுடுங்கோ...அந்தப் பாரத்தை எத்தி இறக்கிவிட்டா இந்த ராத்துக்குள்ளாறயெ புஸ்தகத்தைக் கொண்டுவந்துடலாம்..."

[அப்படி வாடா மகனே. புளுப்பா வேணும்? கொடுத்தனுப்புறேன்...வாங்கிப் போட்டு வச் சாப் போறது. மன்னிப்புக் கேக்கட்டும். என் வீட்டு நடை வாசல்லெ வந்து நிக்க வைக் கிறேன்...]

"எல். எஸ். பி., அந்தப் பாரத்தை இப்படிக் குடுங்கொ. காத்தாலெதானே வேணும்? நானும் லேபாரிக்கு வர்றேன்; அப்பொ கொண்டுவந்து போட்டுவிட்டுப் போயிடறேன்..."

"என்ன ஸார் வி. பி., என் கஷ்டம் உங்களுக் குத் தெரியமாட்டேன்கிறதே..."

"எல். எஸ். பி., உங்களைப் பற்றி எனக்கு மனஸிலே கல்மஷமே இல்லே. ராமலிங்கம் வாட்டும்; புளுப்பை வாங்கிக்கொண்டு போகட்டும் ...ஒரே பேச்சுத்தான்...ரெண்டு வார்த்தைக் காரன் நான் அல்ல."

".....ஸார்.....ஸார்....."

...யார் அது?.....

"நான்தான் ராமலிங்கம், என்ன ஸார். என் பேரெலெ பிரமாதமாகக் கேரவிச்சண்டுட்டியளாமே? அன்னிக்குப் பேப்பர்க் கம்பெனி சிவசாமி இருக் காளுல்லியோ, அவன் பில்லுலெ பேசின தக்கு மாரு, பவுண்டுக்கு ஒரு தம்பிடி ஜாஸ்தி பண்ணிக் கணக்குப் பண்ணி அனுப்பிட்டான். பாரம் கம் போஸரயி ரெடியான பிறகு பிரஸ்காரன் டலே பண்ணுவானே? சிவசாமி என்னைக் கேக்காமே, காயிதத்தைப் பிரஸ்ஸுக்கே அனுப்பிச்சிட்டான். பிரஸ்காரனும் இங்கே ஒரு வார்த்தை சொல் லாமே பாரத்தை மிஷின்லே உட்டுப்புட்டான்; அப்புறம் பில் வறது. அந்தச் சமயத்திலே மனசு எப்படி இருந்திருக்கும்! இந்தப் புஸ்தக வியா பாரமே, கேப்மாரி ஜாதிக்குத்தான் சரி...நீங்களும் வந்தியள்...நானும் என்னமோ எக்குத்தப்பா..."

"என்ன ராமலிங்கம், உன்னே எனக்குத் தெரியாதா? வா, இப்படி உட்காரு; புரூப் அன்னிக்கே ரெடியாகிவிட்டது; நீ பாரு, குழந்தைப்பிள்ளே மாதிரி இருக்கக்கூடாது; ராம பத்மா கம்பெனி பங்காளி நீ; அடுத்த தடவை நான் பார்க்கிறப்போ..."

"எக்ஸ்யூஸ் மி ஸார்" என்றான் ராமலிங்கம். எழுத்தாளர் ஸ்ரீமான் வி.பி., மன அரங்கில் ஒரு வெற்றி.

இந்த வெற்றி ஸ்ரீமான் வி.பி. அவர்களே 1/27, கண்ணுயிரம் பிள்ளே தெரு மாடியாகிய கல்கத்தா இருட்டறையின் வாசலுக்கே கொண்டுவந்து விட்டது.

பூட்டில் கையை வைத்தார். இரண்டு பூட்டு! உடம்பு ஜில்லிட்டது. வீட்டுக்காரப் பயல் எதிர்ப்பூட்டுப் போட்டுவிட்டானு?

'சட்! என்ன அசட்டுத்தனம். நேற்றுச் சாவியைத் தெரிலத்த விபரீதத்திலுல்தானே இந்த இரட்டைப்பூட்டு?'

"வெறும் கயிற்றாவு!" என்று கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று படுத்தார்.

வெற்றி நிம்மதியிலே அசதி தாலாட்ட, தம்மை மறந்தார்.

3

"ஸார்! ஸார்!"

அயர்ந்த நித்திரையில் ராமலிங்க வெற்றி நாடகத்தில் மறுபடியும் மறுபடியும் உழன்று ரவீந்தக்கொண்டிருந்த இலக்கிய மேதை வி.பி.யை இந்த விகற்ப உலகுக்குச் சடபடவென்ற சத்தமும், எழாம் கிணற்றடியிலிருந்து வரும் "ஸார்" என்ற அழைப்பும் மல்லுக் கட்டி இழுத்தவந்தன.

"எது, வீட்டுக்கார முதலி வீடியதத்துக்கு மிச்சியே மூற்றுகை போட்டுவிட்டானு?" என்ற உதைப்புடன், "என்ன முதலியார்வாளா, நேற்று வந்திருந்தீர்களோ? நான் ஒரு ஜோலியாய்ப் போனேன். வர்றத்துக்கு லேட்டாயிட்டது" என்று சமாதானம் சொல்லிக்கொண்டு கதவைத் திறந்தார்.

எதிரே ராமலிங்கம் நின்றுகொண்டிருந்தார்; நீண்ட ஜிப்பா, மொரக்கோ தோல்பை சகிதம் நின்றிருந்தார்.

"எது! ராமலிங்கமா! வாருங்க உள்ளே" என்று அழைத்துக்கொண்டு சென்று நேற்றிரவு தமக்கு ஹம்ஸதூளிகா மஞ்சமாக அசதியைப் போக்கிய ஜமுக்காளத்தின் பேரில் உட்கார வைத்துவிட்டு, காகிதப் பொட்டலத்தில் சுருட்டி வைத்திருந்த வெற்றிலே மடிப்பை எடுத்துக் கொண்டு அந்த ஜமுக்காளத்தின் வேறு ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு, கரய்த்துபோன சுண்ணும்பைச் சுர்ணமாக்கி, வெற்றிலையில் போட்டு மடக்கி வாயில் மென்று அதுக்கிக்கொண்டு, "என்ன இவ்வளவு காத்தாலேலெ?" என்றார்.

ராமலிங்கம் வாய் பேசாமல் ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுத்திருந்தார். அதில் ரொக்கமாக ஒரு பத்து ரூபாயும் ஐந்து நாட்கள் தவணை கழித்துத் தேதியிட்ட 50 ரூபாய் செக்கும் இருந்தன. "ராமலிங்கம் கைவசமுள்ள புரூப்பைப் பார்த்துக் கையோட அனுப்பிச்சுட்டா ரொம்ப ஒத்தாசையா இருக்கும்; புஸ்தகம் சீக்கிரம் வெளிவந்தால் எல்லாருக்கும் சவுகரியந்தானே?" என்று எழுதியிருந்தது.

"புரூப் எங்கே?" என்றார் வி. பி.

ராமலிங்கம் பேசாமல் எடுத்துக் கொடுத்தான்.

பேசாமல் எழுத்தெழுத்தாகப் பார்த்துத் திருத்திக் கொடுக்கலானார் எழுத்தாளர்.

மனசு ஒரு புதமானியான சுரம் பேச ஆரம்பித்தது.

'நேத்துச் சோமாறிப் பயல்மாதிரி இந்த ராமலிங்கத்துடன் மல்லுக்கு நிற்காமல் உறுதியைக் காட்டினதுதான் செக்கும் பணமும் காலையில் கிட்டாகப் பறந்து வந்திருக்கிறது. ராமலிங்கம் என்ன பெட்டிப்பாம்பாக உட்கார்ந்திருக்கிறான்! என்ன மரியாதை! தாராளமாகப் பேசக்கூடப் பயப்படுகிறானே? இதுக்குத்தான் ஆத்ம சுக்தின்னு பேரு. அறிஞ்சுதான் அஹிம்சையைப் பிடித்துக்கொண்டிருக்கிறார் மகாத்மா. எனக்கு நேத்தே இந்த மாதிரிதான் நடக்கும்னு தெரியும்.'

"என்ன ராமலிங்கம், உங்க பிரஸ்காரனுக்கு 'வக்தால்தான்' என்ற எழுதினுல் என் எத்தனே தடவை திருத்தினுலும் இரண்டு வரத்தைமாதிரி ஸ்பேஸ் போட்டுவைக்கிறான்? முதல் புரூப், இரண்டாவது புரூப், இப்போ கடைசி பரம் புரூப், எல்லாத்திலேயும் ஒரே மாரடிப்பாக இருக்கு..."

"மெட்ராஸ் பிரஸ்களில் எல்லாம் கம்பாவிட்டர்கள் அப்படித்தான் போரட்டுத் தொலேக்கிறான், - என்ன எழவைப் பண்ணுகிறது....."

"எப்படியோ பார்த்துச் செய்; இந்த வாரக் கடைசியிலே புஸ்தகம் வந்துவிடாது?" என விரல்களேச் சுடக்கு முறித்துக்கொண்டே கேட்டார்.

"ஏன், வெள்ளிக்கிழமையே வந்தும். வெள்ளிக்கிழமை ராத்திரி எட்டு மணிக்குப் புஸ்தகம் ரெடியாயிடும்..."

"ராமலிங்கம், ஒரு நிமிஷம் இரேன், காபி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்; நான் தலேயில் தண்ணியைக் கொட்டிக்கொண்டு வந்துவிடுகிறேன்."

"இல்லெ ஸார்; எனக்கு வேலே இருக்கு; மாம்பலம் போகணும்..."

"அடெ ஒரு நிமிஷம் இருடான்னு; என்னிக்கோ ஒரு நாள் நான் உன்னேக் கூப்பிடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே, வேகமாக மாடிப்படி வழியாக இறங்கினார் எழுத்தாளர்.

"நீயா கூப்பிடுகிறாய்..." என்று யாரும் இல்லாத அறையில் சிரித்துக்கொண்டான் ராம லிங்கம்.

4

வீட்டுக்கார முதலியாரவர்களுக்கு,

அநேக கோடி நமஸ்காரம். தாங்கள் நான் வீட்டில் இல்லாத சமயத்தில் இங்கு வந்து சென்றுகொண்டிருப்பது கேட்க வருத்துகிறேன். இத்துடன் ரூ. 50-க்கு ஒரு செக் வைத்து அனுப்பி வைத்திருக்கிறேன். நாளது தேதி வரையில் உள்ள பாக்கியையும் வருகிற மாத வாடகையையும் எடுத்துக் கொண்டு மீதியைத் தங்கள் வசம் வைத்திருந்தால், நான் கடைப்பக்கமாக வரும் போது பெற்றுக்கொள்ளுகிறேன்.

1/27, கண்ணுயிரம் பிள்ளை தெரு இப்படிக்கு,
தேனும்பேட்டை தங்கள்
சனிக்கிழமை. வி. பி.

ராம பத்ர பிரசாத் லிமிட்டெட்
முதலாளி ஸ்ரீ எல். எஸ். பி. அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தாங்கள் தங்களது சகபாடி ஸ்ரீ ராமலிங்கம் மூலமாக ரூ. 50 க்கு அனுப்பியிருந்த செக்கைப் பாங்கியில் எடுக்க மறுத்துவிட்டார்கள். இதன் மூலம் எனக்கு இரண்டாவது தடவை அவமானம் ஏற்படுத்திவிட்டீர்கள். எழுத்தாளன் என்றால் உங்கள் வீட்டுக் கொத்தடிமை என நினைத்துக்கொண்டீர்களோ? இது ஜனநாயக உலகம். எழுத்துக்கும் எழுதுகிறவனுக்கும் எங்கும் மதிப்பு உண்டு. ராம பத்ர பிரசுராலயம் தமிழ் இலக்கிய சரித்திரத்திலேயே தனக்கென ஒரு மாசு வீசுவித்துக்கொண்டிருப்பது கண்டு பரிதபிக்கிறேன். தங்கள் செக்குக்குக் கௌரவம் கொடுத்து, நான் வேறு ஒரு நண்பரிடம் அனுப்பியதனால் ஏற்பட்டுள்ள விபரீத பலனை, இலக்கிய நலனை முன்னிட்டாவது கூடிய சீக்கிரத்தில் சேர்படுத்த முடியும் என எதிர்பார்க்கிறேன்.

(குறிப்பு: திரும்பவும் தாங்கள் ராமலிங்கத்தை அனுப்ப வேண்டாம்.)

1/27, கண்ணுயிரம் பிள்ளை தெரு
தேனும்பேட்டை தங்கள்
புதன்கிழமை. வி. பி.

கிணற்றில் கல் போட்ட மாதிரி ராம பத்ர கம்பெனி பேசாதிருந்துவிட்டது; அதையும் குற்றம் சொல்ல முடியாது. கவனத்தை இலக்கிய சேவையில் திருப்பி இருந்ததனால் இலக்கிய ஊழியரைப் பற்றிக் கவனிப்பதற்கு அதற்குப் போதில்லை.

வி. பி. நாளுக்கு நாள் தர்வாச விகாரம் படைக்க ஆரம்பித்துவிட்டார். அந்த நாய்ப் பயலுடைய புஸ்தகக் கம்பெனிக்கே போவதில்லை என்று தீர்க்கமாக வீட்டோடு உட்கார்ந்திருந்தார். அனுப்பப் பட்டிருந்த பத்து ரூபாய் அவரது வைராக்கியத்துக்கு ஒத்தாசையாக இருந்தது.

வெள்ளிக்கிழமை மாலை நான்கு மணி இருக்கும். வீட்டுக்கார முதலியார் வக்கீல் மூலம், வீட்டை 24 மணி நேரத்துக்குள் காலி செய்யும்படி கொடுத்திருந்த நோட்டீஸ் வந்தது.

"அயோக்கிய ராஸ்கல்; இந்த கொள்ளை ரூமுக்கு நோட்டீஸ் வேறையா? கார்ப்பரேஷன் ஹெல்த் இன்ஸ்பெக்டரிடம் புகார் சொல்லி இந்தப் பயலுக்குத் தண்ணி காட்டுகிறேன்" என்று காலி அறையினிடம் கறுவிக்கொண்டிருந்தார்.

"வி. பி., கதவைத் திற. என்ன, இந்த நேரத்திலா தூங்குகிறாய்?" என்ற எல். எஸ். பி. குரல் கேட்டது.

தமது கோபத்தைத் தெரிவிக்கும் பாவனையில் பதில் பேசாமல் கதவைத் திறந்தார் வி.பி.

"என்ன சொன்னாலும் வி. பி. நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி. உன் லேலன்ஸ் பிரஸ்காரன் ஒரு தொடியிலே முடிச்சுக் குடுத்துடாரு. இந்தக் கவர் டிஸைனைப் பாரு, இங்கிலீஷ் கெட்டப் மாதிரி; யாரு இந்தக் காலத்திலே உனக்கு இந்த மாதிரி இன்டாஸ்ட் எடுத்துண்டு செய்யறா?"

"புஸ்தகம்னு இதல்லவா புஸ்தகம்? உனக்குத் தான் பொஸ்தகம் போடற விவகாரம் அத்துப் படியாயிருக்கு; உன்னைப்போல யாரிருக்கா..."

"அதிருக்கட்டும்; அன்னிக்கி என்ன அப்படி கன்னுப் பின்னுன்னு கதைசி எழுதிவிட்டே? நிதானம் வாண்டாம்? பின்னே உனக்கும் ராம லிங்கத்துக்கும் வித்தியாசம் என்ன? அதைப் பார்த்த பிற்பாடு என் மனசு கொந்தே போச்சு... உனக்கு என்ன புள்ளேயா குட்டியா?... ஏகக் கட்டை. அந்த ஒம் பணந்தான் பத்திரமா என்னிடம் இருக்கட்டுமே..."

"அது உனக்குத் தெரியாதா? வீட்டுக்காரன் நோட்டீஸ் கொடுத்துவிட்டான்; அதுதான் அவ் வளவு கோபம்; உன்னை எனக்குத் தெரியாதா?" என்றார் இரண்டாவது பிரம்மா.

"இதுதான் பிரமாதம்? நாளுக்கே இளியர் பண்ணிட்டா போச்சு. ஏன் இங்கே கெடந்து திண்டாடறே? வாடகைக்கு வாடகை மிச்சம்; குஷியாப் போது போக்கக் கம்பெனிக்குக் கம் பெனி ஆச்சு..."

"நான் வாடகை கட்டாயம் குடுக்கத்தான் செய்வேன்; அப்படியான வறேன். சும்மா வந்திருக்க முடியாது..."

"அட சட்! வாடகையா பிரமாதம்! உனக்கு எவ்வளவு எடம் வேணும்? சும்மா இருக்கிற நேரத்திலே அங்கே வருகிற புரூப்பைப் பார்த்தா கணக்கு அட்ஜஸ்ட் ஆயிடுது; நீ உன் மூட்டையை இப்பவே கட்டு. ரிக்ஷாவிலேயே போய் விடலாம்."

சிறைவாழ்க்கை விநோதங்கள்

டாக்டர் தி. சே. சௌ. ராஜன்

திருச்சி மத்திய சிறையில் தண்ணீர் குடித்துப் பழகியவர்களுக்குக் கோயம்புத்தூர் மத்திய சிறையின் கிணற்றுத் தண்ணீர் மருந்து குடிப்பதைப்போல் இருக்கும். அந்தத் தண்ணீர் குடித்துப் பழகுவதற்கு எனக்கு ஒரு வாரத்திற்குமேல் ஆயிற்று. நான் இரவில் தாகத்திற்காகக் குடிப்பதற்கு நல்ல தண்ணீரென்று எண்ணி அந்த ஜெயில் தண்ணீரை எனது அலுமினியம் கூஜாவில் நிரப்பிவைப்பது வழக்கம். பாதி ராத்திரிக்குப் பிறகு அந்தக் கூஜாச் செம்பிற்குள் வெடிக்கும் சப்தம் கேட்கும். கூஜாவை உடனே திறந்து பார்ப்பதற்கு வெளிச்சம் கிடையாது. விடியும் வரையில் பத்து நிமிஷத்திற்கு ஒரு தடவையாகச் சிறு வெடிச் சப்தம் கேட்டுக்கொண்டிருக்கும். காலையில் கூஜாவைத் திறந்து, தண்ணீரை மேலாக ஊற்றிவிட்டு, அடியில் பார்த்தால் மிகுதி இருக்கும் அடிப்பக்கம் தண்ணீர் சாம்பல் கரைத்தது போலக் காணப்பட்டது. கூஜாவின் உட்பக்கத்தில் சிறு குழிகள் உண்டாகியிருந்தன. அலுமினியம் பாத்திரமே இந்தத் தண்ணீரின் வேகத்தினால் கொப்புளித்து, வெடித்துக் குழியாகி விடுமானால் அதைக் குடிக்கும் மனிதர்களின் குடலின் கதி என்ன என்று நினைக்க மனத்திற்குச் சங்கடமாக இருந்தது. ஆனால் தினசரி இரண்டாயிரம் பேர்களுக்குக் குறைவில்லாமல் இந்தத் தண்ணீரைக் குடித்து அந்தச் சிறையில் வசித்துக்கொண்டுதானே உயிருடன் இருக்கிறார்கள்?

இந்தச் சிறையின் விநோதம் என்னவென்றால், ஒரு கைதிக்காவது மலச்சிக்கல் உபத்திரவம் இல்லை. இந்தத் தண்ணீரைக் குடித்தவுடன் புதிதாக வந்த கைதிகள் எல்லோருக்கும் இரண்டு வாரம் வரையில் பேதி ஆவது வழக்கம். தண்ணீர் பழகியவுடன் சிறிது சிறிதாகப் பேதி குறைந்துவிடும். சிறையில் இருக்கும் டாக்டர்களுக்கும் இந்தத் தண்ணீரின் குணம் நன்கு தெரியும்; ஆகையால் அதைப்பற்றி அவர்களும் கவலைப்படுவதில்லை. இந்தச் சிறையில் புகுந்து ஒரு வாரத்திற்குப் பிறகு எனக்கும் மற்றவர்களைப்போல வயிற்றுப்போக்குக் கண்டது. கஞ்சி உணவு கிடைத்தது. ஆனாலும் டாக்டர்கள் மருந்து கொடுத்தார்கள். இரண்டு வாரத்திற்கு அப்புறம் குணமாயிற்று. மறுபடியும் ஜெயில் சோறும், கிணற்றுத் தண்ணீரும் குடித்தவுடன் பேதி மறுபடியும் தொடங்கிவிட்டது. மறுபடியும் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டேன். இம்மாதிரி ஆஸ்பத்திரிக்குப் போவதும் வருவதுமாக இரண்டு மாதங்கள் கழிந்தன.

ஆஸ்பத்திரிக் கம்பவுண்டர் மருந்து கொண்டுவந்து கொடுக்கும்பொழுது தினசரி சற்றுநேரம் பேசிவிட்டு, வெளியுலகில் நடக்கும் விசேஷங்களைப் பத்திரிகை மூலமாக அறிந்து எனக்கு வந்து தெரிவிப்பார். அவருடைய தமையனார் சென்னையில் நடந்து வந்த 'ஸ்வராஜ்யா' பத்திரிகைக்குக் கோயம்புத்தூர் நிருபர். இருவரும் ஒரே குடும்பமாக வசித்துவந்தார்கள். சிறையில் இரண்டு வாரங்களாக வாந்தி பேதி (காலரா) நோய் கண்டு சிலர் இறந்துவிட்டதாகவும், யாதுகாரணத்தாலோ சிறை வைத்திய அதிகாரிகள் அது காலரா நோயல்ல என்றும், உயிற்றுக் கொதிப்புக் கோளாற்றினால் பேதி ஆகிறதென்றும் சாதித்து வருகிறார்கள் என்று தெரிந்துகொண்டேன். என் மனத்தில் இது காலரா நோய் என்பதில் சந்தேகம் இல்லை. ஆஸ்பத்திரியில் நான் இருந்ததால் அந்த நோயின் விவரமும் குணங்களும் கம்பவுண்டர் மூலமாகத் தெரிந்துகொண்டேன். அவரிடம் என் அபிப்பிராயத்தையும் தெரிவித்தேன். அவர் மூலம் அவருடைய தமையனார் தெரிந்துகொண்டு, 'ஸ்வராஜ்யா' பத்திரிகைக்குச் சங்கதி அறிவிக்கவே, பத்திரிகைக் காரர்கள் அதை விளம்பரம் செய்தார்கள். ஆனால் அந்த விளம்பரத்தைப் பற்றிச் சிறை அதிகாரிகளோ அல்லது மாகாண சர்க்காரோ கவலை கொண்டதாகத் தெரியவில்லை.

நோயின் வேகமும் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. சுமார் மூன்று வாரத்திற்குள் இருபத்தைந்து கைதிகள் இறந்துவிட்டார்கள். சிறை அதிகாரிகளும் கவலைகொண்டு, சென்னையில் கிண்டி ஆராய்ச்சிசாலைக்குத் தெரிவித்தார்கள். அவர்கள் வந்து சிறையிலுள்ள குடிதண்ணீரைப் பரீக்ஷை செய்ததில், தண்ணீர் அசுத்தமாகிக் காலராக் கிருமிகள் உண்டாகியிருப்பதாகத் தெரிவித்தார்கள். அதன் பிறகு வெகு தடபுடலாகத் தண்ணீரைச் சுத்தப்படுத்துவதிலும், வியாதியைத் தடுக்கும் முறைகளிலும் கவனம் செலுத்தப்பட்டது. பத்து நாட்களுக்குள் நோய் மறைந்துவிட்டது. சிறை அதிகாரியின் மூடத்தனத்தினால் இருபத்தைந்து கைதிகள் உயிர்விட நேரிட்டது. இந்தச் சாவிற்குச் சிறை வைத்திய அதிகாரிதான் பொறுப்பாளி. அவரை எவ்வளவு தடவை தூக்கிலிடவேண்டியது என்பதைப் பற்றிக் கோர்ட்டு நடவடிக்கைகள் நடந்து

தீர்ப்புக் கொடுக்கவில்லே. தர்ம நியாயப்படி, சிறை வைத்திய அதிகாரிகள் எல்லோரும் கொலேக் குற்றம் செய்தவர்களே.

சென்னேச் சட்டசபையில் அந்தக் காலத்தில்கூடச் சில அறிவாளிகள் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் ஒரு கேள்வி கேட்டார். "'ஸ்வராஜ்யா' பத்திரிகையில் கோயம்புத்தூர் நிருபரிடமிருந்து அவ்வூர்ச் சிறையில் காலரா நோய் கண்டு கைதிகள் இறந்துவருகிறார்கள் என்று வந்த செய்தி வெளியாகியிருக்கிறது. அது வெளியாகி ஒரு மாதத்துக்குப் பிறகுதான் காலராகோய் கண்டிருப்பதாகச் சிறை அதிகாரிகள் விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். இதன் உண்மை என்ன? ஏன் இந்தத் தொத்துநோயை இவ்வளவு காலம் கவனியாமல் அநேகர் இறக்கும்படி விட்டார்கள்?" என்பதுதான் கேள்வி.

"அதைப்பற்றி விசாரணே நடக்கும்" என்று சர்க்கார் அதிகாரி பதில் கூறினர். இதன் முடிவு என்னவென்றால் சிறையிலிருந்து இந்தத் துப்பானது பத்திரிகைக்கு எவ்விதம் போயிற்று என்றுதான் சர்க்கார் விசாரணே ஏற்பட்டது. தடுக்கக்கூடிய நோயைத் தெரியாமல் வளரவிட்டு, ஏன் கைதிகளேச் சாக அடித்தார்கள் என்பதைப் பற்றி ஒரு விசாரணேயும் இல்லே! தினந்தோறும் பத்துத் தடவை எண்ணி, அவ்வளவுதரம் பூட்டித் திறந்து பரிசோதணே செய்கிறார்கள்; ஜெயில் நேரத்தை யெல்லாம் சோதணே போடுவதிலும் எண்ணுவதிலும் போக்குகிறார்கள்; அவ்வளவு கணக்காக அதிகாரம் செலுத்தும் பெரிய கோட்டை மதில்களுக்குள் நடக்கும் விஷயம் தினசரிப் பத்திரிகைகளில் எவ்விதம் வெளிவந்தது என்பதே சிறையின் தலேமை அதிகாரிக்கு உண்டான பெரும் கவலே. யாராக இருக்கலாம் என்பது பற்றி உளவுகள் பரிசிலீன செய்யப்பட்டன. முடிவில் இந்த நோயின் தத்துவத்தை அறியக்கூடியவர் யாராக இருக்கலாமென்று பார்க்கும்பொழுது ஒருவேணே நான்தான் இதற்குக் காரணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகம் கிளம்பியது. ஆஸ்பத்திரியில் நான் நோயுற்றிருப்பதால் இதன் விவரம் என் மூலமாக வெளியாகியிருக்கலாமென எண்ணி என்னேப் பலவிதமான துன்பங்களுக்கு ஆளாக்கினார்கள்.

நான் இருந்த அறையை விட்டு ஜெயில் டாக்டர் ஆபீஸிற்கு நேர் எதிரில் இருக்கும் அறையில் என்னேக் கொண்டுவந்து அடைத்தார்கள். இரவில் ஹரிகேன் விளக்குக் கூடாது, இருட்டிலேயே இருக்கவேண்டும் என்று உத்தரவு பிறந்தது. ஆனல் ஒருவரும் என்மேல் குற்றம் சுமத்த முன்வரவில்லே. சிறை அதிகாரியின் உத்தரவுக்குரிய காரணத்தை என்னேப்போன்ற கைதிகள் கேட்கலாமா? எனக்கு இருக்கும் நோயைப்பற்றி வைத்தியன் என்ற முறையில் நான் ஏதாகிலும் சொல்ல முற்பட்டால் உடனே சிறைத் தலேமை டாக்டராக இருந்த மேஜர் பாரஸ்ட் (Forest I. M. S.) என்ற ஆங்கில அதிகாரிக்கு வெகு கோபம் வந்துவிடும். "நீ இங்கு டாக்டர் அல்ல. வெறும் கைதி. அதை மறந்துவிடாதே. வாயை மூடு" என்று சீறுவார். என்னேப் பார்க்கும்பொழுதே அவருக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வரும். தம்மால் என் சிறைவாசத்தை எவ்வளவு கடின மாக்க முடியுமோ அவ்வளவும் செய்துவந்தார். சில நாட்களுக்குப் பிறகு அவர் எனது நோயைப்பற்றி ஏதாகிலும் கேட்க வந்தால் எனக்கு உடம்பு ஒன்றுமில்லே என்றே சொல்லிவந்தேன். எனினும் கஞ்சி உணவைத்தான் கொடுக்கவேண்டும் என்று உத்தரவு போட்டார்.

என்னேப் பரிசோதணே செய்யவேண்டும் என்ற அவர் தமது அறைக்கு வருவித்தார். அங்கே சென்றதும் ஆஸ்பத்திரி வராந்தாவில் என்னே நிர்வாணமாக நிற்கவேண்டும் என்றார். நான் மறுத்தேன்.

"நீ கைதி என்பதை மறந்துவிடாதே" என்றார்.

"தங்களேப்போலத் துரை அவர்கள் இருக்கும் வரையில் மறக்க முடியாது" என்றேன். பிறகு, "உள்ளே செல்" என்றார். சென்றேன்.

பரிசோதணே செய்வதுபோல நடித்துவிட்டு, "நீ என்ன வைத்தியப் பரீக்ஷை கொடுத்திருக்கிறாய்?" என்று கேட்டதும், "நான் ஒரு கைதி" என்று பதில் சொன்னவுடன், என்னே வெறித்துப் பார்த்துவிட்டு, "நீ போகலாம்" என்று உத்தரவிட்டார். இந்தக் காட்சிக்குப் பிறகுதான் நான் தனி அறையில் அவருக்கு எதிராக அடைக்கப்பட்டேன். இந்த அடைப்புக்குப் பிறகு அன்றிரவு சிறையில் ஒரு பெரிய களேபரம் ஏற்பட்டது.

இரவில் கணக்கெண்ணிப் பூட்டி, ஜெயிலர் கையெழுத்திடும் பொழுது கணக்கில் ஒரு கைதி குறைவாக இருந்தது. ஒரு கைதி காணப்படவில்லே என்றால் அதன் அமளியை ஜெயிலில்தான் பார்க்கவேண்டும். இரவு பத்து மணி இருக்கும்: அபாயச் சங்குச் சத்தம் சிறையில் கேட்டது. எல்லா வார்டர்களும் மற்றச் சில்லறை அதிகாரிகளும் ஓடோடியும் வந்து கூடிச் சிறைக் கதவுகளே எல்லாம் நன்றாகப் பூட்டிவிட்டுப் பிறகு ஒவ்வொரு நபராக எண்ண ஆரம்பித்தார்கள். ஒரு மணிநேரம் எண்ணிய பிறகும் ஒரு கைதி குறைவாகக் கணக்கு வந்தது. அப்படித் தப்பியோடியவன் யாராக இருக்கலாம் என்று மூலே முடுக்குகளிலெல்லாம், ராந்தல் விளக்கைத் தூக்கிக்கொண்டு எல்லோரும் அலேந்துகொண்டிருந்தார்கள்.

இவர்கள் போட்ட சத்தத்தால் தூங்கிக் கொண்டிருந்த நான் விழித்துக்கொண்டேன். என் இருட்டறைக்குப் பக்கமாகப் பரபரப்புடன் ஓடிக்கொண்டிருக்கும் ஜெயி

லர் லாலிஸ்பரி துரையைக் கூப்பிட்டேன். தம்மை ஏதோ ஒரு பூதம் வந்து பயமுறுத்தி யதுபோல அவர் திடுக்கிட்டுத் திகிலடைந்து, தம்முடன்கூட இன்னும் இருவரைச் சேர்த்துக்கொண்டு என் அறைக்குச் சமீபமாக வந்தார். "இந்த ஆஸ்பத்திரி ஸ்டோர் ரூமிலிருந்து ஏதோ குரல் இருட்டிலிருந்து என்னை அழைத்தது. எல்லோரும் கதவிற்குச் சமீபமாகப் போய்ப் பார்க்கலாம்" என்று கூறி, மற்றவர்களையும் ராத்தலுடன் என் அறைக்கு வெளியே அழைத்துவந்து நின்று, "யார், யார் என்னைக் கூப்பிட்டது?" என்று கேட்டார்.

நான் உடனே பதில் சொல்லாமல் 'கலீர்' என்று சிரித்தேன். விளக்கைச் சமீபத்தில் கொண்டுவந்து, என்னைக் கண்டதும், "உன்னை இங்கே யார் அடைத்தது?" என்றார்.

"எல்லாம் பெரிய டாக்டர் துரையவர்கள் உத்தரவு" என்றேன்.

"தெய்வாதீனமாக உன்னைக் கண்டது என் வயிற்றில் பால் வார்த்ததுபோல ஆயிற்று. காணமல்போன கைதி நீதான். இதுவரையில் தேடித் திரிந்து அலுத்தும் கணக்கில் ஒன்று குறைந்திருந்த நபர் தெரியவில்லை. இனி நான் வீட்டிற்குப் போய் நிம்மதியாகத் தூங்கலாம்" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டு திரும்பினார்.

"என்னை 'ஸ்டோர்' ரூமில் இருட்டில் அடைத்ததால் வந்த கேடு இது. இனியாகிலும் என்னை இருட்டில் அடைக்கக் கூடாது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். இன்றைதினம் என்னைக் கண்டுபிடித்த வெற்றிக்குச் சின்னமாகத் தங்கள் கையில் இருக்கும் ஜெயில் ராத்தலை என் அறை வாசலில் விடியுமட்டும் விட்டுப்போங்கள்" என்றேன். அவரும் அப்படியே விட்டுப் போனார்.

ஜெயிலில் காலரா நோய் கண்டால் சிறை அதிகாரிகளில் டாக்டருடைய கவனிப்புக் குறைவுதான் காரணம் என்ற ஓர் அபிப்பிராயம் உண்டு. அதுவும் உண்மை. மாகாணச் சிறைத் தலைமை அதிகாரி நேரில் இந்தச் சம்பவத்தை விசாரணை செய்வதற்காகக் கோயம்புத்தூர் வந்து சேர்ந்தார். இந்த நோய் பரவியதன் காரணத்தைப்பற்றி என்னை விசாரித்தார். நான் நடந்தவற்றைச் சொன்னேன். என்னிடம் மிகவும் நயமாகப் பேசிவிட்டுப் போய்விட்டார். இந்த விசாரணையின் முடிவு இன்னதென்று எனக்குத் தெரியாது. அந்த அதிகாரி வந்துவிட்டுப் போன ஒரு வாரத்திற்குள் என்னைக் 'கமான்' எடுத்துவிட்டார்கள்; அதாவது எனக்குச் சிறைமாற்றம் ஏற்பட்டது. மாகாணங்களிலுள்ள சிறைகளுக்குள் மற்றக் கைதிகளோ, சில்லறைச் சிப்பந்திகளோ, எவரும் என்னைக் காண முடியாமல் இருக்கும் படியான ஒன்றைப் பொறுக்கி அவரே என்னை நடத்தும் விதத்தை விவரமாக எழுதியனுப்பி, பாளையங்கோட்டைக்கு மாற்றி விட்டார்.

கோயம்புத்தூரிலிருந்து பாளையங் கோட்டை ஓர் இரவு ஒரு பகல் பிரயாணம். திருச்சியிலிருந்து கோயம்புத்தூருக்கு வரும் பொழுது நடந்த நாடகம் ஒன்றும் இல்லை. மூன்று போலீஸ்காரர்களின் பாதுகாப்பில் நான் தப்பி ஓடாமல் இந்தப் பிரயாணத்தை முடித்தேன். பாளையங்கோட்டைச் சிறை அதிகாரி ஒரு தெலுங்குப் பிராம்மணர். சிறை நீதி வழுவாது, அதிகாரம் செலுத்துவதில் பெயர் பெற்றவர். சிறு குமாஸ்தாவிலிருந்து ஜெயில் சூப்பிரண்டெண்ட் வேலைக்கு உயர்ந்தவர். மாகாணத் தலைமை அதிகாரியின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். ஆகையால் அவருடைய பாதுகாப்பில் இளங் குற்றவாளிகள் வைக்கப்படும் இந்த 'மைனர் ஜெயில்'ல் நான் வைக்கப்பட்டேன்.

ஏற்கனவே சிறையின் சட்டங்களை அணு அளவேனும் பிறழாது நடத்துபவர் என்று பெயர் பெற்றவரிடத்தில் மாகாணச் சிறை அதிகாரியே நேரில் எழுதி, என்னை நடத்தும் முறையைப்பற்றி விளக்கி உத்தரவும் போட்டுவிட்டால், என்னை அவர் எப்படி நடத்தியிருப்பார் என்பதற்கு வேறு வியாக்கியானம் தேவை இல்லை. நான் பாளையங்கோட்டைச் சிறை சென்ற மறுநாள் காலையில் என்னைக் கண்டார். என்னிடம் சிறிது நேரம் பேசிவிட்டு, "கோயம்புத்தூரில் என்ன நடந்தது? ஏன் உன்னைத் தனிவிதமாக நடத்தும்படி உத்தரவு வந்திருக்கிறது?" என்று கேட்டார். "அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது" என்று சொன்னேன். நான் ஒரு விநோதப் பிராணி என்பதாகக் கருதினார் போலும்!

வேட்டி

வேஷ்டி என்ற சொல் தமிழில் வேட்டி என்று வந்தது. வேஷ்டனம் என்ற வட சொல்லுக்குச் சுற்றுதல் என்று பொருள். சுற்றிக் கட்டுதலால் வேஷ்டியாயிற்று. வெட்டப்படுவது வேட்டி என்று அச்சொல்லைத் தனித் தமிழாக்கிக் கொள்ளச் சிலர் விரும்புகின்றனர். கடன் வாங்கின வார்த்தையை நம்மதென்று சொல்லிக்கொள்வதில் பெருமை ஒன்றும் இல்லை.

கா. ஸ்ரீ. ஸ்ரீ.

(சென்ற இதழ் 136-ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்கதைச் சுருக்கம்

பத்மநாபன் இளமையின் உதயத்திலே, தான் சிறு வயதில் ஒரு கல்யாண வீட்டில் பார்த்துப் பழகிய தன் அத்தைபெண் பங்கஜம் தலைமாட்டிலே நின்று தன்னைக் கண்டு குனிவதாகக் கனவு காண்கிறான். பள்ளிக்கூடப் படிப்பை முடித்து அவன் வெளிவந்த அன்று, அவனுடைய தங்கை கோமளம் தன் குடும்பக் கடனுக்காக உதவி வேண்டி எழுதிய கடிதம் வருகிறது. அப்பா பணத்துக்கும் அவன் மேற்படிப் புக்கும் முன்னேற்பாடு செய்ய அவனிடம் கடிதம் கொடுத்து, அத்தை வீட்டுக்கு அனுப்புகிறார். இந்தக் காரணத்தை அறியா மலே, அத்தையிடம் பிடிப்பு இல்லாத அம்மா அவனை அங்கே அனுப்புவதைத் தடுத்துப் பார்த்தும் பயனில்லை. அவன் மறுநாள் காலை சென்னைக்குப் போகிறான். அத்தை அவனை வரவேற்று உபசரித்து, அவன் கொண்டு வந்த கடிதத்தை அத்திம்பேரிடம் கொடுக்கிறாள். அவர் அவனை மேற்படிப்புக்கு அங்கே வரச் சொல்லிவிட்டுப் பணத்தைக்கு ஏற்பாடு செய் கிறார். அப்பா தேடி வந்து அவரிடமிருந்து தொகையைப் பெற்றுக்கொண்டு, பத்மநாப னையும் அழைத்துச் செல்கிறார். கையோடு பணத்தை வாங்கிப்போக வந்த கோமளம் திருச்சிக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் இரவு, ஒரு தந்தி வருகிறது. அதைக் கண்டதும் அப்பா ஸ்தம்பித்து நிற்கிறார்.

அதற்குமேல் என்னால் பொறுத்திருக்க முடியவில்லை. அப்பாவினிடமுள்ள பயபக்தியை அந்தக் கணத்திலே மறந்தேன். துள்ளிப் பாய்ந்து தந்தியை வாங்கிக் கொள்ள முயன்றேன். அசைவற்றிருந்த அவர், அதை என் கையில் வைத்தார். ஒரே கொடியில் அதைப் படித்துவிட்டேன். "அத்திம்பேர் போய்விட்டார்!" என்று என் வாய் முணுமுணுத்தது.

* * *

டாக்ஸி கார் சென்னையை நோக்கிப் பறந்துகொண்டிருந்தது. எங்கள் மனம் வெவ்வேறு திசைகளிலே ஓடியது.

"அன்று நாங்கள் வரும்போது அவருக்கு எவ்விதமான நோயும் இருக்கவில்லை. திடீ ரென்று அவர் இறப்பதற்குக் காரணம்? யாராவது வேண்டுமென்று தந்தி அடித் திருப்பார்களோ?" என்று அப்பா சந்தேகப் பட்டார்.

"எனக்குக்கூட ஏனோ நம்பிக்கை பிறக்க வில்லை. அது பொய்த் தந்தியாக இருக் கட்டுமே" என்றாள் அம்மா.

"அவரைப்போலச் சாந்தமான குணம் யாருக்குமே இராது. அவருடைய பெருந் தன்மையை எண்ணித்தானே அம்மா, நான் இவ்வளவு தூரம் ஓடிவந்தேன்?" என்று கூறும்போது கோமளத்தின் உதடுகள் துடித்தன.

"அவள் மாத்திரம் என்ன, பணிவிலே குறைந்தவளா? இவ்வளவு பணம் இருக் கிறதே; ஆடம்பரம் என்கிறது துளி இருக் குமா? அண்ணுவைக் கண்டால் அவளுக்குப் பெருமை பிடிபடாது. தன்னை வளர்த்து, நல்ல இடமாகத் தேடிக் கொடுத்தாரே என்று எப்போதும் அவரிடத்திலே ஒரு விசுவாசம். நமக்கு அவள் அற்ப சொற்ப மாகவா உதவியிருக்கிறாள்? யார் இட்ட சாபமோ, அவள் இப்படித் திக்கற்று நிற்க நேர்ந்துவிட்டதே! தெய்வம் அவள் பொறு மையை இப்படியா சோதிக்கவேண்டும்?" என்று அம்மா அரற்றினாள்.

அப்பா மௌனமாக மன அரங்கிலே ஓடிக்கொண்டிருந்தார்.

'நான் அங்கிருந்து வந்திருக்கவே வேண் டாம். பங்கஜம் இப்போது துடியாகத் துடித்துக்கொண்டிருப்பாள். நான் அருகில் இருந்திருந்தால் அவளுக்குக் கொஞ்ச மாவது ஆறுதல் சொல்லி இருக்கலாம்' என்று நான் நினைக்கலானேன்.

அத்தை வீட்டு வாசலில் வண்டி போய் நின்ற பொழுது, இரவு இரண்டரை மணி. சத்தம் கேட்டு வேலைக்காரன் கதவைத் திறந்தான். நாங்கள் உள்ளே நுழைந்த வுடனே ஒரே அழுகை மயமாகிவிட்டது. இறந்தவரைக் கண்டதும் அது பின்னும் பீரிட்டு எழும்பியது. அப்பா ஓவென்று அழத் தொடங்கினார். "இன்னும் சிறிது முன்னுடி எனக்குத் தந்தி அடித்திருக்கக் கூடாதா?" என்ற பேச்சு பொங்கிப் பொங்கி வந்த அழுகையிடையே மிதந்தது.

அத்தைக்குச் சுய உணர்வே இல்லை. மீளாத சோகத்தில் மூழ்கியிருந்தாள். அப்பா வின் கேள்விக்குச் சமையற்கார மாமா பதில் சொன்னார்: "சாயங்காலந்தானே

இவ்வளவு அமர்க்களமும்? அதற்கு முன்னுடியே எப்படித் தந்தி அடிக்கிறது?''

''சாயங்காலந்தானு?'' என்று கேட்டுக் கொண்டே, அப்பா ஆவலோடு அவர் முகத்தைப் பார்த்தார். அவருடைய மிதமிஞ்சிய சோகத்தையும் மீறிக்கொண்டு அந்த ஆவல் வெளிவந்தது.

''ஆமாம்; சாயங்காலம் ஏழு மணி இருக்கும், ஆபீசிலிருந்து வந்தார். சட்டையைக் கழற்றி வைத்ததும், குழாயடியில் கால் அலம்பப் போனார். மடேரென்று ஓசை கேட்டது; நான் ஓடினேன். அவருக்கு உடம்பெல்லாம் ஜில்லென்று வேர்த்துக் கொட்டியது. பேச்சு மூச்சு இல்லை. நான் சட்டென்று குளிர்ந்த ஜலத்தை அவர் முகத்தில் தெளித்தேன். அப்போதும் அவருக்கு நினைவு வரவில்லை. 'டாக்டரைக் கூப்பிடச் சொல்லுவோம்' என்று வேலைக்காரனை டாக்டர் வீட்டுக்கு.....''

''சரி, டாக்டர் வந்தார்; அப்புறம்?'' என்றார் அப்பா.

''டாக்டர் வருவதற்கு முந்தியே, உள்ளே கொண்டுவிடப் போனேன். பார்த்தால், கையிலும் காலிலும் ஒரு பக்கத்தில் சுரணையே இல்லை. வாய் ஒரு பக்கமாகக் கோணிக் கொண்டிருந்தது. மெதுவாக மூன் பக்கத்து அறையில் கொண்டுவிட்டோம்...''

''அது கிடக்கட்டும்; டாக்டர் வந்தாரா இல்லையா?''

''டாக்டர் வந்தார்; வந்துதான் என்ன பிரயோஜனம்? மயக்கம் தெளியட்டும் என்று, அம்மா உள்ளேயிருந்து ஒரு தம்ளர் டானா காபி கொண்டுவந்து, இரண்டு சொட்டுக் கூட வாயிலே விடவில்லை. அதற்குள்ளே கண்ணை உள்ளே செருகிக் கொண்டு போச்சு. அவ்வளவுதான்....'' என்று இழுத்தார் சமையற்காரர்.

''டாக்டர் என்ன நோய் என்று சொன்னார்?''

''இதற்கு முன்னே ஒரு நாளும் இல்லாத படி அந்த நஷ்டம் ஒன்று வந்தது. பங்கு மார்க்கெட்டிலே இவருடைய ஊகம் தவறுகப் போய், மிகப் பெருத்த நஷ்டம். அந்தக் கவலையும் ஓயாத உழைப்புமாகச் சேர்ந்து, நெந்தனை மிதமிஞ்சிப் போச்சு; அதனாலே திடீரென்று மூளை நரம்பு தாக்குண்டதாக டாக்டர் சொன்னார். அதுதான் இப்படி முதலுக்கே மோசமா...''

''ஐயோ! அடியம்மா! உன்னை இந்தக் கோலத்திலே பார்க்கவேண்டும் என்று இப்படியெல்லாம்.....'' என்று அப்பா மறுபடி அழத் தொடங்கினர். மற்றவர்களும் அவரோடு சேர்ந்துகொண்டார்கள்.

அழுகை சற்று ஓய்ந்ததும், அப்பா மேலே நடக்க வேண்டியவற்றைக் கவனிக்கலானார். பொழுது விடியுமுன்பே வீட்டுவாசலில் பெருங்கூட்டம் கூடிவிட்டது. ருக்மிணி பாங்கின் டைரெக்டர்களில் சிலரும், காரியதரிசியும், ஏஜெண்டுகளும் இன்னும் முக்கிய அதிகாரிகளும் வந்திருந்தனர்.

''உழைப்பென்னும் சாதாரணமான உழைப்பா! இந்தப் பாங்கை இவர் ஆரம்பித்தபோது, உதவ முன் வந்தவர்கள் எத்தனையோ பேர். இன்னும் பலர், தாங்கள் உதவுவது எப்படியாவது போகிறது, தங்களுக்குச் சேர்ந்தவர்களையும் உதவவிடாமல் தடுத்தார்கள். எதையும் சட்டை செய்யாமல் சுயமாகப் பாடுபடும் இவருடைய குணத்தைக் கண்டுதான் நான் இதில் பங்கெடுத்துக்கொண்டேன்'' என்னும் ஒரு டைரெக்டர்.

''பாங்கி சம்பந்தமான விஷயங்களில் இவரைப்போல முழுத் தகவலும் தெரிந்தவர்கள் தென்னிந்தியாவில் இரண்டொருவரே இருப்பார்கள். ஐந்து வருஷங்களிலே பாங்கின் இருபது கிளைகள் ஏற்பட்டன. டிபாஸிட்டு இரண்டு கோடிக்கு மேலே போயிருக்கிறது....''

''பங்குதாரர்களுக்கு டிவிடெண்டு போக, மீதி லாபத்தைப் பொது ஜன நன்மைக்குப் பயன்படுத்த வேண்டுமென்று சமீபத்திலே இவர் ஒரு திட்டத்தை டைரெக்டர்களின் கூட்டத்தில் வெளியிட்டிருந்தார். அது அமலுக்கு வரக்கூடுமானால்,...''

''எவ்வளவோ உழைத்தார்; என்ன ஐயா பலன்? 'அபோப்ளெக்ஸி' வந்து ஆளையே கவிழ்த்து விட்டதே. கெட்டிக்காரர்கள் இந்த உலகத்திலே அதிக நாள் தக்குவதில்லை. அதிலும் இந்த நாட்டுக்கு ஏற்பட்டுள்ள ஒரு சாபத்தீடு அது. தமது உடம்பைப் பாராமல் இராப்பகல் உழைப்பவர்கள் தமக்கு மட்டுமின்றி நாட்டுக்கும் நிமையே செய்கிறார்கள்'' என்னும் காரியதரிசி.

அத்திம்பேர் எத்தனை பேருக்கு நன்மை செய்திருந்தார் என்பதை மயானத்தில் கூடியிருந்த ஜனசமூகம் நிரூபித்தது. ''பத்து, இனிமேல் நீ இங்கே இருந்து படிக்கவேண்டும்; தெரிகிறதா?'' என்று அன்போடு என்னைத் தம் வீட்டுக்கு அழைத்தவர், இன்று என் எதிரே மறைந்துகொண்டிருந்தார்.

* * *

சடங்குகள் கிரமப்படி நடந்தன. திருச்செயிலிருந்து கோமளத்தின் கணவர் வந்திருந்தார். அத்திம்பேரின் ஊராகிய புலிப்பாக்கத்திலிருந்து வந்தவர்களில் இருவர் முக்கியமானவர்கள். நிலங்களை மேற்பார்வை பார்த்து வந்த ரங்கு ஒருவர். மற்றவர் நாணுத் தாத்தா. அவரை அந்தப் பிராந்தியத்திலே எல்லோருக்கும் தெரியும். வேத வேதாந்தங்களில் வல்லவர்; அநுபவ ஞானத்திலே தலை நரைத்தவர். அவரிடம் யாருக்கும் மரியாதை. எந்தக் கோயிலில் உத்ஸவமானாலும், எந்தப் பெரிய மனுஷர் வீட்டில் விசேஷமானாலும் அவரை அங்கே காணலாம்.

பங்கஜம் நான் எதிர்பார்த்ததைவிடத் தைரியமாக இருந்தாள். அவள் கண் கலங்கும் போதெல்லாம், "சும்மா அழுது அழுது என்ன பிரயோஜனம்? உடம்பை வீணாக்கெடுத்துக்கொள்ளாதே" என்று சொல்லிக் கொண்டிருந்தேன்.

பதினேழாம் நாள் எல்லா விதிகளும் முடிந்தபின்பு, நாணுத் தாத்தாவைப் பார்த்து, ரங்கு, "ஏதோ, இத்தனை நாள் வரையில் நானே சாப்பிட்டேனே, அவர்களுக்கே கொடுத்தேனே; காலத்தைத் தள்ளிவிட்டேன். குழந்தைகுட்டிகளோடு இனி மேல் நான் என்ன செய்ய முடியும்? நீங்கள் ஒரு வார்த்தை சொன்னால், அந்த அம்மாள் கேட்பார்கள்" என்றார்.

"உமக்கு நான் இவ்வளவு உபகாரம் செய்யமாட்டேனா? சும்மா இரும்" என்று கூறிவிட்டு, நாணுத் தாத்தா உள்ளே போனார்.

அத்தையும் அப்பாவும் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். அம்மா சற்றுத் தொலைவில் நின்றிருந்தாள். உள்ளே வேகமாக வந்த தாத்தா, அப்பாவைப் பார்த்து, "என்ன ஸ்வாமி, ஏதோ நடந்தது நடந்து விட்டது. இனி எல்லாவற்றையும் கட்டிக் காப்பது உம்முடைய கடமைதான். மூத்த லிலே அங்கே பாழாகிக்கொண்டிருக்கும் கிராமத்து நிலங்களைப் பாரும். ஊரில் உமக்கு வேண்டிய எல்லாச் சௌகரியங்களையும் செய்துகொடுக்க நான் தயாராக இருக்கிறேன்" என்றார்.

"அன்றும் அண்ணாதான் காப்பாற்றினான்; இன்றும் அவன்தான். இனி எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்? தாத்தா சொல்வதைக் கேட்டு நடந்துகொள், அண்ணா!" என்றாள் அத்தை, மிகவும் பரிவோடு.

தாத்தா வெளியே சென்றதும், "நீங்கள் எதற்கும் மனம் கலங்கவேண்டாம், அக்கா! எனக்குப் பத்மம் எப்படியோ அப்படித்தான் பங்கஜமும்; இரண்டு பேரும் இரண்டு கண்கள்" என்று அம்மா அவளை ஆசுவாசப்படுத்தினாள்.

"மதனி, நான் என்ன என்ன எல்லாமோ கோட்டை கட்டியிருந்தேன். தெய்வம் இப்படிச் செய்துவிட்டது. காஞ்சிபுரத்துக்குப் போனதும், வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு அண்ணாவும் நீயும் ஊருக்குப் போய் நிலம் நீச்சைப் பார்த்துக்கொள்ளுங்கள். பத்மநாபன் இங்கேயே இருந்து படிக்கட்டும்" என்று அத்தை சொன்னதும், அம்மா சரி என்று தலையசைத்தாள்.

அப்பா அத்திம்பேரின் கணக்குவழக்குகள் யாவற்றையும் அத்தை பேருக்கு மாற்ற ஏற்பாடுகள் செய்தார். பாங்கிக்கு வேறு மானேஜிங் டைரெக்டரைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆயினும், அத்தைக்கு அந்தப் பாங்கில் மிகுந்த செல்வாக்கு இருந்தது.

வேலைகள் முடிந்ததும் நாங்கள் காஞ்சிபுரம் திரும்பினோம். அங்கே நாலைந்து நாள் தங்கிவிட்டு, கோமளம் தன் கணவரோடு திருச்சிக்குப் போனாள்.

என் பரீக்ஷை முடிவு வெளியாயிற்று. நான் ஒவ்வொரு பாடத்திலும் நிறைய மார்க்குகள் வாங்கித் தேர்ச்சி பெற்றிருந்தேன். அந்த வருஷத்துக் கோடைமலரை என் நண்பன் வெளியிட்டான். என் கண்ணுக்கு அது அத்தனை உயர்ந்ததாகப் படவில்லை. கலை என்றால் என்ன, லேசிலே ஆகிவிடுமா? எப்படியாவது போகட்டும்; இனி எனக்கும் இந்த மலருக்கும் சம்பந்தம் ஏது?

காலேஜ் திறப்பதற்கு ஒரு வாரம் முன்னாலேயே நான் சென்னைக்குப் போகவேண்டிய தாயிற்று. சிறுவயசு முதல் பழகிய ஊரை விட்டுப் போவது, வருத்தத்தை விளைவித்தது. ஏற்றம் இறைக்கும்குடியானவர்களும், அவர்களுக்கு உயிரான பரந்த பசுநிலமும், கண்ணுக்கு எட்டிய தூரத்துக்கு அப்பால் நீண்டு சென்ற தண்டவாளங்களின் இரு புறமும் புல்வெளியில் அங்கங்கே சிதறிக் கிடந்து ஒரு காலத்தில் சைவ மதம் ஓங்கி யிருந்ததைச் சுட்டிக் காட்டும் லிங்கங்களும், வானத்தை

முட்டும் கோபுரங்களும் என் நினைவுக்கு வந்தன.

"உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளடா, கண்ணு! அடிக்கடி தவறாமல் கடிதம் போடு. லீவிலே எங்களிடம் வந்து விடு" என்று அம்மா சொன்னாள். என் பிரிவினால் அவள் மனசு என்னவோ உறுத்திக்கொண்டிருந்தது.

"உனக்கு வேண்டிய வசதிகளைப் பற்றி அவ்வப்போது எழுது. சமயம் நேர்ந்த போது நானும் வந்து பார்த்துக்கொள் கிறேன்" என்றார் அப்பா.

"ஒரு கவலையும் வேண்டாம், நாலு வருஷங்களை நாலு நிமிஷமாகக் கழித்துவிட்டு வருவேன்" என்று அவர்களைத் தேற்றினேன்.

அப்பா தமது வேலையை ராஜினாமாச் செய்தார். பள்ளிக்கூடம் திறந்ததும், பிராவிடெண்ட் பண்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டபின்பு, அம்மாவோடு அவர் புலிப் பாக்கத்துக்குப் போவதாக இருந்தார். அங்கிருந்து நடுவே வந்து, சொந்த நிலங்களையும் வீட்டையும் பார்த்துப் போவதாகச் சொன்னார்.

நான் சென்னைக்கு வந்து, காலேஜில் சேர்ந்து படிக்கலானேன்.

4

உள்ளுக்குள்ளேயே கம கமவென்று மணம் நிரம்பி, மாலைக்கருக்கலிலே இதழ் விரிக்கும் மல்லிகையரும்பைப் போல, பங்கஜம் என் கண்ணுக்குத் தென்பட்டாள். அவளுடைய நெற்றியிலே அசைந்து விளையாடும் அந்தச் சுருண்டோடியக் குழலைக் கண்டு என் மனம் அலையும். அவள் அதை எத்தனை தரம் பின்னல் தள்ளிவிட்டாலும், காற்றிலே அலைப்புண்டு அத்தனை தரமும் நெற்றியில் வந்து அசையும். சில சமயம் நான் காலேஜிலிருந்து சீக்கிரம் வந்து விட்டால், மாடியிலே நின்று அவள் வருவதை எதிர்பார்த்திருப்பேன். காரிலிருந்து இறங்கியதுமே, அலாதியான ஒயிலுடன் அவள் குதித்து வருவதைக் காண எனக்கு வேடிக்கையாக இருக்கும். எனக்குப் பிடிக்காதது: அவள் சில நாளைக்குப் போட்டுக் கொள்ளும் அந்த இரட்டைப் பின்னல்!

காலையிலே எழுந்ததும் அவள் பாட்டுவாத்தியாரிடம் வீணை பயிலுவாள். என் கவனம் பாடத்திலே சென்றுலுதானே? அதற்காக நான் மாடிக்குப் போய்ப் படிப்பேன். சாப்பிடும் போதும் மாலை வேளையிலும் விடுமுறையிலுமே நாங்கள் சந்தித்துப் பேச முடியும். அவள் கான்வெண்ட் பள்ளியில் நாலாவது பாரத்தில் படித்துவந்தாள்; ஆங்கிலமும் கணக்கும் நன்றாக வரும்; தமிழில் கொஞ்சம் 'இளப்பம்' தான்.

'லயோலா'வில் படித்துவந்தமையால், நான் எலெக்டிரிக் ரெயிலைப் பிடிக்கவேண்டியிருக்கும். அவள் பள்ளிக்கூடத்துக்குக் காரிலே சென்று வருவாள். என் படிப்பு வாழ்க்கை, யந்திரம்போலச் சுழன்றுவந்தது. அப்பாவினிடமிருந்து அடிக்கடி கடிதம் வரும். அவர் இப்போது புலிப்பாக்கத்துக்கு வந்துவிட்டிருந்தார்.

பங்கஜம் விடுமுறைகளில் தன் தோழிகளுடனும் பக்கத்துவீட்டு மாமியோடும் பேசிக்கொண்டு ஊரைச் சுற்றிவிட்டு வருவாள்; அவர்களோடு சினிமாவுக்குப் போவாள்; அல்லது பார்க்கில் உலாவிவிட்டு வருவாள். எனக்கு மட்டும் எங்கே போகவும் பிடிக்காது. என் படிப்பு உண்டு, நான் உண்டு. சில சமயம் கோயிலுக்கோ அல்லது கடற்கரைக்கோ போய் வருவேன்.

ஒரு நாள் பங்கஜம் தனக்குத் தெரியாத ஆங்கிலப் பாடத்தை என்னிடம் கேட்க வந்தாள். அது அரசன் ஆர்தரைப்பற்றிய கவிதையில் ஒரு பாகம். ஐந்தாம் பாரத்தில் அதைப் படித்திருந்தேன். ஆகவே, "இந்தக் கவிதை நாலாம் பாரத்துப் பெண்ணுக்குப் புரிவது சிரமந்தான்" என்றேன்.

"சிரமமாக இருப்பதனால்தான் உன்னிடம் வந்தேன். முதலில் உனக்கு அது புரிகிறதா இல்லையா, சொல்லு" என்று என்னை மடக்க ஆரம்பித்தாள்.

"புரியாமல் என்ன? ஒரே அம்பினாலே பாதாளத்திலுள்ள தண்ணீரூற்றைப் பூமியிலே சுரக்கச் செய்யவல்ல வீராதிவீரனான ஸர் பெடிவர், இத்தனை நாளும் பழகிய ஆர்தரை விட்டுப் பிரியவேண்டுமே என்று புலம்புகிறான். பிரிவின் கொடுமையை அவனுடைய வாக்கியம் நன்கு விளக்குகிறது..."

"இந்தப் பீடிகை எல்லாம் எனக்கும் தெரியும். அந்த வாக்கியத்தின் கருத்துத் தான் எனக்குப் புரியவேண்டும்" என்று அவள் கெடுபிடி செய்தாள்.

"தைரியசாலியாகிய ஸர் பெடிவர், ஆர்தரைப் பார்த்து, 'அரசே, இனி நான் எங்கே போவேன்? உங்களை விட்டுப் புது மனிதர்களிடையே, முன்னுள் பழக்கம் இல்லாத முகங்களிடையே, பரிவில்லாத இந்த உலகத்திலே இனி எங்கே போவேன்? எங்கே போய் என் முகத்தையும் கண்களையும் புதைத்துக்கொள்வேன்?' என்று கூவிக் கதறுகிறான்."

"அத்தனை பெரிய வீரன் ஏன் அப்படிக் கதறவேண்டும்?"

"ஆர்தரிடத்திலே அவனுக்கு இருந்த அன்பு அவ்வளவு உயர்ந்தது."

"அன்பு...உயர்ந்தது..." என்று முணுமுணுத்துக்கொண்டே, தனக்குப் புரிந்தாற் போலத் தலையை ஆட்டியவாறே அவள் சென்றாள்.

அத்தை ஒரு சமயம் வழக்கப்படி 'பான்ஸி' ஸ்டோர்ஸிலிருந்து துணிகள் வர

வழைத்திருந்தாள். எனக்கு அவள் வாங்க விரும்பிய ஜரிகை வேஷ்டியைப் பார்த்ததும், "இந்த மாதிரியான ஆடம்பர வேஷ்டி எனக்கு வேண்டாம், அத்தை. ஒரு நாலு முழக்கதர்த் துண்டும், அரைக்கைச் சட்டை ஒன்றும் வாங்கினால் போதும்" என்றேன்.

"உனக்கு எது பிரியமோ, வாங்கிக் கொள்ளேன்" என்றாள் அத்தை.

"நம்ம பத்து இந்த உடுப்போடு உலகத்தையே சுற்றி வருவான்!" என்று பங்கஜம் நையாண்டி செய்தாள்.

"உலகம் முழுவதும் இல்லாவிட்டாலும், சென்னையிலிருந்து காஞ்சிபுரம் வரையில் எந்த இடத்துக்கும் எந்தச் சமயத்திலும் இந்த உடுப்போடு என்னால் பிரயாணம் செய்ய முடியும்" என்று அவளுக்குப் பெருமையாகப் பதில் சொன்னேன். என் எளிமையின் ரகசியம் அவளுக்குப் புரியவில்லை. 'ச்சூ' கொட்டிவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

நானும் எத்தனையோ நாகரிகப் பெண்களைப் பார்த்திருக்கிறேன். என், கோமளங்கூடத் தன்னை நாகரிகப் பெண் என்று தான் சொல்லிக்கொள்வாள். அவள் சிறு வயசு முதல் வாழ்க்கையின் மேடுபள்ளங்களை ஓரளவு கண்டவளாதலால், எவ்வித நிலைமையையும் சமாளிக்கும் தைரியமும் கம்பீரமும் அறிவும் அவளது சுபாவத்தில் கலந்திருந்தன. மென்மையும் அழகும் வாய்ந்த அவளுடைய கோமள இருதயத்தில் சாந்தமும் அன்பும் இரக்கமும் நிரம்பியிருந்தன. அத்தை நவநாகரிகத்தின் நடுவே வசித்து வந்தவளாயினும் பழைய தலைமுறையைச் சேர்ந்தவள். பங்கஜம் அப்படி அல்ல; தன்னை நவநாகரிகத்தின் பிரதிநிதி என்று நினைத்தாள். கோணல் வகிடு, கன்னத்துக்கு ரோஜாப் பவுடர், எப்போதும் கையில் கண்ணாடி - இவற்றில் ஒன்றும் குறை இல்லை. அவள் ஒரு நாளைக்கு ஐம்பது தடவை மாற்றி மாற்றி அலங்காரங்கள் செய்துகொள்வதையும், ஸோப்பையும் பவுடரையும், ஸ்நோவையும் கிரீமையும் முகத்திலே அப்பி அப்பித் தேய்ப்பதையும் என்னால் காணச் சகிக்கவில்லை. போதாக்குறைக்கு அவளுடைய மிதப்பான போக்கு வேறு என் மனத்தை உறுத்தியது. அவளிடம் தான் தோன்றித்தனமும், உலகத்தைக் கண்டு அலக்ஷ்யமும் நாளுக்கு நாள் வளர்ந்துவந்தன. எளிமை, தூய்மை, பண்பாடு பற்றிய என் பேச்சுக்கள் எனது அறியாமையை விளக்குவதாக அவள் எண்ணினாள்.

அன்று காலையில் தோட்டக்காரனோடு நான் நின்றிருப்பதைக் கண்டு, அவள் என்ன நினைத்தாளோ, விர்ரென்று வந்து என் அருகிலே நின்றாள். முகத்திலே கேள்வியும் ஆச்சரியக் குறிப்பும் தோன்ற என்னை உற்றுப் பார்த்தாள். "இங்கே இவனோடு என்ன செய்கிறாய்? அம்மா உன்னைச் சாப்பிடக் கூப்பிடுகிறாள். வா சீக்கிரம்" என்றாள்.

"இவன் கொத்துமல்லி விதைப்பதைப் பார்க்கிறேன். அதை அந்தத் தோலால் தேய்த்துத்தான் விதைக்க வேண்டும். மேலே கொஞ்சம் தண்ணீரைத் தெளித்து, வைக்கோலால் மூடி வைத்தால், ஒரு வாரத்துக்கெல்லாம் கொத்துமல்லி முளைக்க ஆரம்பிக்கும்" என்று பதில் சொல்விக்கொண்டே, அவளோடு நடந்தேன்.

"இதோ பார், பத்து: உனக்கு எத்தனை விஷயம் தெரியுமாட்டேனென்கிறது. தோட்டக்காரனோடு நாம் கூடிக் குலாவிக்

கொண்டிருந்தால், அவன் நம்மிடம் அடங்கி வேலை செய்வானு? நீ நடந்துகொள்வதைப் பார்த்தால், நீயே அவனுக்காகக் கொத்தி விதைப்பாய்போல இருக்கிறதே!" என் குரல். அவள் குரலில் என்னிடம் உள்ள அன்பும், என்னைச் சீர்திருத்த வேண்டும் என்ற ஆர்வமும், என் நடத்தையைக் கண்டு வருத்தமும், என் நேர்மையைக் கண்டு பரிதாபமும் கலந்திருந்தன. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பான்மை அவள் உள்ளத்தில் ஊறிக் கிடந்தது.

விஷயத்தை மாற்ற எண்ணி, "நாலு பேரோடு பழகினால்தானே அறிவு வளரும்? கொத்துமல்லி எப்படி விதைப்பது என்பது இப்போது எனக்குத் தெரியும். முதலில் அதைச் செருப்புத் தோலினுல் தேய்க்க வேண்டும்" என்றேன்.

"ஏன் அப்படிச் செய்யவேண்டும்?"

"வேதனைக்குப் பின்பே இன்பம் செழிக்கும் என்பது இயற்கை விதி. அரும்புப் பார்; மெல்லிய தென்றல் அலை அலையாக வந்து இதழ்களின் நுனியிலே மோதும்போது அது மலருகிறது. சூரியனின் கடுங் கிரணங்கள் பாய்வதனால், மலர்கள் நிறம் பெறுகின்றன. வண்டு கூரிய கால்களினால் கொட்டி மொய்க்கும்போது, மலர் தன்னுள்ளே அடங்கிக் கிடக்கும் மகரந்தத்தைச் சிதற அடிக்கிறது."

"அப்படியானால், அந்தச் செருப்புத் தோல் உனக்கு மந்தமாருதத்தைப் போலவும், சூரிய கிரணங்களைப் போலவும், மணி வண்டைப் போலவும் இனிமையான பொருள் என்று சொல்லு!"

"ஆமாம்; இனிமை பொருளிலே அத்தனை இல்லை; பார்க்கும் பார்வையிலேதான் மிகுதியாக இருக்கிறது."

என் பேச்சிலே அவளுக்கு என்ன தோன்றிற்றோ, சடக்கென்று நிமிர்ந்து பார்த்தாள். அவள் வதனத்தில் பொய்க் கோபம் தென்பட்டது. என்னை அவள் அப்படிப் பார்க்கும்போது அவளுடைய அழகிய கன்னம் சிறிது உப்பியிருந்தது. அப்போது வெடுக்கென்று அந்தக் கன்னத்தைக் கிள்ள வேண்டும் என்று என் மனம் குறுகுறுத்தது. என் பார்வையிலே விஷமத்தைக் கண்டதும், கம்மென்று மணம் வீசிய கறிவேப்பிலைப் பூவைப் பார்ப்பவள் போல், அவள் முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

முதல் வருஷப் பரீக்ஷை நெருங்கிக் கொண்டிருந்தது. படிப்பில் நான் மும்முரமாக ஈடுபட்டிருந்த சமயம் அது. பங்கஜத்தோடு எனக்குப் பேசப் பொழுது ஏது? சில சமயம் படிப்பு எனக்கு எரிச்சலாக இருக்கும். ஆயினும், 'இந்தப் பரீக்ஷைக்கு நன்றாகப் படிக்கவேண்டும்; பங்கஜம் வதனத்தில் இளமை ஓவி வீச, "பத்து, இத்தனை மார்க்குகள் வாங்கியிருக்கிறாயே நீ!" என்று ஆச்சரியமுறும்படி தேர்ச்சி பெறவேண்டும்' என்று எண்ணியபோது எனக்குப் படிப்பில் மிகவும் பிடிப்பு உண்டாயிற்று.

நான் திரிகோணமிதி படித்துக்கொண்டிருந்தபோது, அவள் வந்து, "சதா இந்தக் கணக்குப் புஸ்தகத்தை வைத்துக்கொண்டு ஏன் மல்லுக்கு நிற்கிறாய்?" என்று கேட்டாள்.

"அதை ஐயிப்பதற்குத்தான்" என்றேன்.

"இது காலேஜ் பரீக்ஷைதானே? அடுத்த வருஷப் பரீக்ஷையில் உன் சாமர்த்தியத்தைப் பார்க்கவேண்டும்!" என்று சொல்லிவிட்டு, "தீராத விளையாட்டுப் பிள்ளை" என்று ஒய்யாரமாகப் பாடிக்கொண்டே போனாள். எப்போதும் ஏதாவது பாட்டை முணு முணுப்பது அவள் வழக்கம்.

சிறிது நேரம் கணக்குப் புத்தகத்தைப் படித்ததும், காலேஜுக்கு நேரமானதால், கீழே குளிக்கப்போனேன். ஸ்நான அறைக் கதவைத் திறந்தபோது, உள்ளே பங்கஜம் குளித்துக்கொண்டு இருந்தாள். எனக்கு இருந்த கணக்குச் சிந்தனையில் அவள் முணு முணுத்துப் பாடுவது என் காதில் விழவில்லை. உடனே கதவை மூடிவிட்டுத் திரும்பினேன். அப்போது பின்பக்கம் வந்த அத்தை என்னைப் பார்த்தாள்; ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. மனத்தில் என்ன நினைத்துக்கொண்டாளோ! என்ன வேண்டுமானாலும் நினைத்துக்கொள்ளட்டுமே, எனக்கு என்ன பயம்? கதவைப் போட்டுக்கொண்டு குளிக்கவேண்டும் என்றுகூடத் தெரியாதபடி, ஒரு பெண்ணுக்குப் பாட்டிலே அத்தனை வெறி என்ன வேண்டியிருக்கிறது?

வெள்ளிக்கிழமை மாலை; ஏழு மணிக்குத்தான் காலேஜிலிருந்து திரும்பினேன். முன் ஹாலில் பிரகாசமான பெரிய விளக்கும் அதற்கு எதிரே சிறிய 'பல்பி'லிருந்து வரும் பிரகாசமும் சந்திக்கும் இடத்தில், பங்கஜம் காற்று வாங்கிக்கொண்டு ஸோபாவில் ஜோராக உட்கார்ந்து, 'லெமன் கிரஷ்'ஷை உறிஞ்சும் காட்சி தென்பட்டது. அவள் மேலாக்கிலிருந்து ஸெண்டின் தீவிர மணம் தொலைவிலே வீசியது. "இந்த வேளையில் குளிர்ந்த பானம் சாப்பிடுவது அதிசயமாகத்தான் இருக்கிறது!" என்றேன்.

அவள் உல்லாசத்தோடு கழுத்தை என் புறமாக வளைத்துக்கொண்டு, "உனக்கு நான் என்றுமே அதிசயப் பெண்ணைத் தானே தென்படுகிறேன்? — ஆமாம், இன்று துரைக்கு வருவதற்கு இத்தனை நேரம் ஆனானே?" என்று கேட்டாள்.

"காலேஜிலே எங்கள் இலக்கிய சங்கக் கூட்டம். ஸயன்ஸ் புரொபஸர் பிரசங்கம் செய்தார்....."

"விஷவாயுவைப் பற்றியா அல்லது சாகிறவனை உயிர்ப்பிப்பது பற்றியா?"

"இதோ வந்து சொல்லுகிறேன்" என்று உள்ளே போனேன். கொஞ்ச நாளாக அத்தைக்குப் பக்தி அதிகமாகியிருந்தது. அவள் பூஜையறையில் ராமாயணம் படித்துக்கொண்டிருந்தாள். நான் ஒரு தம்ளரில் காபியை எடுத்து வந்து, பங்கஜத்துக்கு எதிரே உட்கார்ந்தேன்.

"இன்று, கலெப்பண்பு என்பதைப்பற்றிப் பிரசங்கம்."

"உங்கள் புரொபஸரைக் கொண்டுபோய் உடைப்பிலே போடு. உன்னுடைய எளிமை, தூய்மை, இன்னும் உள்ள 'மை'களைப்பற்றி விளாசித் தள்ளிவிட்டாரோ?"

"நான் இத்தனை நாளும் சரி என்று நினைத்திருந்ததை அவரும் சொன்னார். எளிமையிலே தூய்மை இருக்கிறது; அந்தத் தூய்மையிலிருந்து அறிவு, உண்மை, அநுதாபம், தொண்டு, தியாகம், சிரத்தை, பக்தி முதலிய உயர்ந்த குணங்கள் வளருகின்றன."

"உன் பிரசங்கம் கிடக்கிறது. கையிலே ஆறிப்போகும் காபியை முதலில் சாப்பிடு" என்று சொல்லிக்கொண்டே, அவள் கடைசி வாயாகக் குடித்துவிட்டு, கண்ணுடித் தம்ளரைக் கீழே வைத்தாள்; "'கூல் டிரிங்'கில் இதுதான் சௌகரியம்: நிதானமாய்ப் பேசிக்கொண்டே குடிக்கலாம்" என்றாள்.

"உன்மேல் எனக்கு ரொம்ப ரொம்பக் கோபம்" என்று என் மனத்தில் குமுறிக் கிடந்த விஷயத்தை வெளியிட்டேன்.

"எதற்காக?"

"சாவிக்கொத்தை வீசி எறிந்ததற்காக."

"வீசி எறிந்தேனா! மேஜைமேல்தானே வைத்தேன்?"

"ஓ! 'திணிங்' என்று ஓசைப்படும்படி எறிந்தது மேஜைமேல் வைத்ததாக அர்த்தமோ?"

"உன்னோடு பழகுவதே மிகவும் கஷ்டமடா பத்து! நானே நேரில் வந்து பீரோவைத் திறந்து உனக்கு வேண்டிய புஸ்தகத்தை எடுத்துக் கொடுக்கவில்லை என்று உனக்குக் கோபம். அதை வெளிப்படச் சொல்வதுதானே? அப்போது எவ்வளவு முக்கியமான பாடம் படித்துக்கொண்டிருந்தேன், தெரியுமா?"

"விஷயத்தை மழுப்பிச் சமாதானப்படுத்துவதிலே நீ கெட்டிக்காரிதான்!"

"எல்லாம் சரி, உன்னுடைய இந்த எளிமையும், வைராக்கியமும், பத்தாம் பசலிக் கர்நாடகமும்..."

அவளிடம் எனக்கு இருந்த அதிருப்தியைத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவே, "உன்னுடைய இந்த ஸ்நோவும், லெண்டின் தீவிர கந்தமும், இரட்டைப் பின்னலும்..." என்று ஆரம்பித்தேன்.

"என் இரட்டைப் பின்னலுக்கு என்ன?"

"இந்த இரட்டைப் பின்னல், மூன்று பின்னல் சமாசாரமெல்லாம் என் மனத்திலே பதிகிறதில்லை. நான் கர்நாடகந்தான்; ஆனால் உன் புத்தம் புதிய நாகரிகத்தை வைத்தே சொல்கிறேன்: இதைவிட, 'பாப்' செய்து கொள்வதால் ஒன்றும் கெட்டுப் போய்விடாது!"

"சட்! இப்படி எல்லாம் பேசுவதாக இருந்தால், உன்னோடு எனக்குப் பேச்சு வார்த்தையே வேண்டாம். நான் நடந்து கொள்வது சரியா தப்பா என்பது எனக்குத் தெரியும்" என்று அவள் கோபத்தோடு சொன்னாள். அவளது உப்பிய மென்மையான கன்னத்தைக் கண்டும் எனக்குப் பழைய எண்ணம் தோன்றவில்லை. 'நல்ல பிள்ளையாக இருந்து படித்துப் போவதை விட்டு, யாரோடுதான் எதற்காக வீண் விவகாரம் செய்யவேண்டும்?" என நினைத்து, என் அறைக்குள்ளே போக எண்ணினேன்.

அப்போது, "என்ன குழந்தை, அம்மா உள்ளே இருக்கிறாளா?" என்ற முழக்கத்தைக் கேட்டு, திடுக்கிட்டுப் பார்த்தேன்.

கோயில் மூல விக்கிரகத்தைப் போலக் கன்னங்கறேலென்ற நிகுநிகுப்பான மேனியோடு ஆஜானுபாகுவான ஓர் உருவம் எங்களை நோக்கி வந்தது. அதைப் பார்த்ததும், பங்கஜம் உள்ளே ஓடினாள். 'இது யார்?' என்ற கேள்வி என் மனத்தில் எழுந்தது.

(தொடரும்)

எழுத்து மயக்கம்

உகரமும் ஒகரமும் சில சமயங்களில் ஒன்றுக்கு ஒன்று மயங்கிவருவதுண்டு. 'உன்' என்பது பேச்சு வழக்கில் 'ஒன்' என்று வழங்குவதில்லையா? குடையைக் கொடை என்று பேச்சில் வழங்குகிறோம். எழுத்திலும் அப்படியே எழுதுவது சிறப்பன்று. எழுதும்போது இந்த இரண்டு சொற்களையும் பொருள் மயங்காமல் எழுதுவதுதான் நலம். குடை - நிழலுக்குப் பிடிப்பது; கொடை - தானம். தடை - இடுப்புக்குக் கீழுள்ள பாகம்; தொடை - தொடுத்தல் அல்லது மாலை.

இப்படியே இகரமும் எகரமும் ஒன்றுக்குப் பதில் ஒன்று வரும். இலையை, பேசும் பாஷையில் எலை என்றே சொல்லுகிறோம். அது கொச்சைத் தமிழ். நான்கு நெல்லின் கனம் உள்ளதை 'நான்கு நெல்லிடை' என்று சிலர் எழுதுவதுண்டு; நெல்லிலை என்றே எழுதவேண்டும். எடுத்தலளவையாதலின் எடை ஆயிற்று. இடை என்பதோ நடுவையும் இடுப்பையும் குறித்து வரும் சொல்.

உரைகள்

ஸினிமா வந்தபின் நாடகங்கள் குறைந்து விட்டன. இலக்கார்லமாக நாடக மேடையை அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற இளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. சுகுண விலாச சபை உச்ச நீலையில் இருந்தபோது தண்டலம் டி. எஸ். நாராயண சாஸ்திரியார் "போஜன்" என்ற பெரிய நாடகம் ஒன்றை எழுதினர். அங்கங்கே ஏற்புடைய பாட்டுக்களையும் அதில் சேர்த்திருந்தார். அதை அப்படியே நடிப்ப தென்பது இயலாத காரியம். ஆகவே இப்போது அதை நாடக மேடைக்கு ஏற்ப ஸ்ரீமான் ஆர். வி. நாராயணஸ்வாமி ஐயர் சுருக்கி அமைத்திருக்கிறார். பல தடவைகளில் மேடை ஏறிக் காண்போர்க்கு இன்பம் தந்த நாடகம் இது. இந்தச் சுருக்கப் பதிப்பு (அல்லயன்ஸ் கம்பெனி, மயிலை — ரூ. 1-4-0) நடிப்பவர்களுக்கு மிகவும் பயன் தருவது.

தமிழ் எழுத்தாளர்களிற் பலர் பெரிய நாடகம் எழுதாலிட்டாலும் ஒற்றையங்க நாடகங்களே எழுத முயன்றிருக்கிறார்கள். ஸ்ரீ ந. சிதம்பர சுப்ரமண்யன் எழுதிய 12 நாடகங்கள் அடங்கிய தொகுதி ஒன்று "ஊர்வசி" என்ற பெயருடன் (ஜோதி நிலயம், திருவல்லிக்கேணி; விலை ரூ. 2-0-0) வெளியாகியிருக்கிறது. எழுத்துச் சுருக்கத்துக்கும் விதவிதமான சுவைக்கும் சிதம்பர சுப்ரமண்யனது எழுத்து உதாரணம். பாரத காலத்துக் கதையைத் தம்முடைய கற்பனைத் தேனில் ஊறவைத்துச் சுவையூட்டிய அற்புத சிருஷ்டி முதல் நாடகமான ஊர்வசி. தேவகானம் என்பது கலையின் தெய்வீகப் பெருமையைப் புலப்படுத்துகிறது. கலையின் திறத்தை மதிப்பிடும் வேறு நாடகங்களும் உண்டு. இவற்றோடு இன்றைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் 'ஸெலக்ஷன் சங்கடம்', 'குழாயடியில் குப்பு' முதலிய நாடகங்களும் இதில் இருக்கின்றன. இனிய புஸ்தகம்; எழில் மிகுந்த வெளியீடு.

தமிழர் படைத்த இலக்கியச் செல்வம் பல பல நூற்றாண்டுகளாகக் குவிந்தது. அவர் படைத்திருக்கும் சோம்பலும் இணையற்றதுதான். நில காலமாக இலக்கிய உணர்ச்சி ஓரளவு தமிழருக்கு உண்டாகியிருக்கிறது. நல்ல பதிப்பாகச் சில புஸ்தகங்கள் வருகின்றன. சென்னைச் சர்வகலாசாலையின் ஆதரவில் அந்நிலயத்து ஆராய்ச்சித் துறைத் தலைவர் ஸ்ரீ ராவ்பஹதூர் வையாபுரிப் பிள்ளை யவர்கள் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் நீரிகடுகம், சிறுபஞ்ச மூலம் என்னும் இரண்டையும் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார். (விலை ரூ: 3-4-0.) மூலம், பழையவுரை, நூற் பொருள் அகராதி, விரிவான முகவுரை என்ப வற்றோடு புஸ்தகம் வெளியாகியிருக்கிறது. முகவுரையில் தமிழ் இலக்கியத்தில் பதினெண் கீழ்க் கணக்கின் ஸ்தானம், அவற்றின் காலம், அவற்றிலுள்ள சில கருத்துக்களுக்கும் வடநூற் கருத்துக்களுக்கும் உள்ள ஒப்புமை முதலியவற்றைப் பதிப்பாசிரியர் விரிவாக ஆராய்ந்திருக்கிறார். சர்வகலாசாலையார் புஸ்தக வெளியீட்டை ஒரு தொண்டாகக் கருதி விலையைக் குறைத்து வைத்தால் ஆர்வமுள்ளவர்கள் வாங்கிப் படிக்க உதவியாக இருக்கும்.

பழைய நூல்களைப் பழைய முறையில் கற்றுத் தேர்ச்சி பெற்று இக்காலத்தார் மனங்கவரும் வண்ணம் சொல்லும் திறமை உள்ளவரைப் 'பண்டித மணி' என்று சொல்வது எவ்வளவு பொருத்தம்! ஸ்ரீ மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் அத்தகுதி உள்ளவ ரென்பதைத் தமிழ்ப் புலவர்கள் நன்கு அறிவார்கள். 'பண்டிதமணி என்ற பட்டம் இன்று புகழ் வடிவில் நிற்கும் மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களால் மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபை ஆண்டு விழாவில் அளிக்கப்பட்டது.' செட்டியாரவர்களின் இயல்புகளை விறுவிறுப்பான நடையில் ஸ்ரீ விசு. திருநாவுக்கரசு எழுதியிருக்கிறார். (தமிழன்னை நிலயம், புதுக்கோட்டை; விலை ரூ. 1-4-0.) அவருடைய புலமை நலத்தையும், பிறர் அவர்பால் வைத்துள்ள பெருமதிப்பையும், சொல்வன்மையையும் பிற இயல்புகளையும் ரஸமாகச் சொல்லும் குணசித்திரம் இது. இதில் உள்ள சில நிகழ்ச்சிகளைப் படிக்கும் போது இன்பம் உண்டாவதோடு 'இந்த ஆசிரியர் இன்னும் இவைபோன்ற பல சம்பவங்களைத் தொகுத்து ஒரு பெரிய வாழ்க்கை வரலாற்றையே எழுதலாம்' என்ற எண்ணமும் தோன்றுகிறது.

புலவர் பெருமக்களின் வரலாற்றை அறிந்து கொள்வது மிகவும் அவசியம். ஒரு மொழியின் சரித்திரத்திற்குப் புலவர் சரித்திரங்கள் உறுப்புக்களென்றே சொல்லவேண்டும். டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் இதனை நன்குணர்ந்து தாம் பதிப்பித்த நூல்களில் நூலாசிரியர் சரித்திரத்தையும் எழுதி வெளியிட்டார்கள். தனியாகவும் சில புலவர் வரலாறுகள் அவர்களால் எழுதப்பெற்றன. தம்முடைய ஆசிரியராகிய மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் சரித்திரத்தை மிக விரிவாக இரண்டு பாகங்களாக எழுதியிருக்கிறார்கள். அந்தச் சரித்திரத்தையே பெரும்பாலும் ஆதாரமாகக் கொண்டு சுருக்கமாகப் பிள்ளையவர்கள் சரித்திரத்தை யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதியிருக்கிறார். (அன்பு நிலயம், இராமச்சந்திரபுரம்; விலை 10 அணா.) பாரதியார் தம் மிடுக்கான நடையிலே தள்ளிக் குதிக்கும் அருவிப் பாய்ச்சல் போலே விஷயத்தை விளக்கிச் செல்கிறார்.

யார் பெரியவன்?

எஸ். சங்கரன்

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தான். எல்லா ராஜாக்களையும் போல அவன் எப்பொழுதும் உண்பதும், உறங்குவதும், ஆனந்தமாகக் காலங்கழிப்பதுமாக இருந்ததால் வேலே என்பதை ஆயுசில் ஒரு நாள் கூடச் செய்ததில்லே. உயர்ந்த ஆகாரவகைகள் அவனுக்கு வந்து கொண்டே இருக்கும். அந்தப் பக்கங்களிலுள்ள கெட்டிக்காரச் சமையற்காரர்களெல்லாம் அரண்மனேயில் உயர்ந்த சம்பளத்தில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

கொஞ்ச காலத்திற்குள் ராஜாவுக்கு மிதமிஞ்சி உண்டு வந்ததால் தேக ஆரோக்கியம் கெட்டு உடம்பில் அசதி ஏற்படலாயிற்று. ராஜாவுக்கு முன்போலப் பலசாலியாகவேணுமென்று கவலே தோன்றிற்று. அரண்மனே வைத்தியர்கள் தங்களாலான மருந்துகளே எல்லாம் கொடுத்துப் பார்த்தார்கள். ஒருவராலும் ராஜாவைக் குணப்படுத்த முடியவில்லே. வரவர மூன்கோபமும் எரிச்சலும் அவனுக்கு ஏற்பட்டதுதான் கண்ட பலன்.

கடைசியில் அந்த ஊருக்கு வந்த ஒரு பிரபல வைத்தியரிடம் தன் உடம்பை அவன் காண்பித்தான். வைத்தியனும் அவன் தேகத்தை நன்றாகப் பரிசோதித்து விட்டு, "மஹாராஜா! நீங்கள் புலிப்பால் சாப்பிட்டால் உடம்பு மறுபடியும் அசதி நீங்கிக் குணப்படும்" என்று கூறினன். கதைகளிலெல்லாம் ராஜகுமாரர்கள் புலிப் பால் கொண்டுவரும்படி மாற்றாந்தாய்களால் அனுப்பப்பட்டு வந்ததைப் படித்திருக்கிறோம். புலி மிருகங்களிலெல்லாம் வாய்ந்த மிருகம். அதன் பாலேச் சாப்பிடும் மிருகங்கள் அதிக சக்தி வாய்ந்தவைகளாக இருக்கின்றன. ஆனல் புலிப் பாலேப் புலிக் குட்டிகள்தாமே சாப்பிட முடியும்? மற்ற மிருகங்கள் அதன் அருகில் கூடப் போக முடியுமா? இந்த வைத்தியர் மிகவும் கெட்டிக்காரர் எனப் பெயரெடுத்தவராகையால் யாரும் அவர் சொன்னதை மறுக்கவில்லே. ஒருவரும் புலிப்பால் கொண்டுவர முன் வராமல் இருக்கவே, ராஜா வைத்தியரை நோக்கி, "வியாதிக்கு மருந்து சொன்ன உம்மால் தான் மருந்தைக் கொண்டு வரவும் முடியும். இன்னும் இருபது நாட்களுக்குள் புலிப்பால் கொண்டுவராவிட்டால் நீர் தூக்கிலிடப்படுவீர்" எனக் கட்டளே இட்டான்.

என்ன செய்வார் வைத்தியர்? அநாவசியமாக வைத்தியம் செய்ததன் பலன் என்று தம்மை நொந்துகொண்டார். பிறகு தம் மனேவி மக்களிடம் விடைபெற்றுக் கொண்டு கூட இருபது ஆடுகளேயும் தம்முடன் ஓட்டிக்கொண்டுகாட்டை நோக்கிப் போனர்.

அங்கே ஒரு குகையில் பெரிய பெண்புலி ஒன்று

தன் குட்டிகளுக்குப் பால் கொடுத்துக்கொண்டு இருந்தது. வைத்தியரைக் கண்டதும், கோபத்துடன் அவர் மேல் பாய வந்தது. சரியான சமயத்தில் அதன் மூன்பு ஓர் ஆட்டைக் கொடுத்துத் தப்பித்துக்கொண்டார். இப்படியே பத்தொன்பது நாட்கள் தினம் ஒன்றுக்கு ஓர் ஆடாகக் கொடுத்துவரவே புலி அவரை ஒன்றும் செய்யாமல் விட்டது. கடைசி நாளன்று வைத்தியர், புலி ஆட்டைத் தின்றுகொண்டிருக்கும் சமயம் தைரியமாக அதன் அருகில் சென்று பாலைக் கறந்துகொண்டு ஊரை நோக்கித் திரும்பினார்.

வரும் வழியில் அவர் அவயவங்கள் ஒன்றுக்கொன்று தான் தான் பெரியவன் எனச் சண்டை போட்டுக் கொண்டன. கால், "நான் தான் எல்லோரையும் விட முக்கியமானவன். நான் காட்டிற்கு உங்களைக் கூட்டிக்கொண்டு போகாவிட்டால் இப் பொழுது நீங்களெல்லாம் தூக்கு மரத்தில் தொங்கிக்கொண்டிருப்பீர்கள்" என்று சொல்லியது.

தலை, "என்ன இருந்தாலும் இந்த யுக்தியை நினைத்தது நான்தானே? ஆகையால் முக்கியமானவன் நான்தான்" என்று சொல்லிற்று.

நாக்கு அவைகளைப் பார்த்து, "சும்மா இருங்கள். இனிமேலும் நான் நினைத்தால்போதும். உங்களைத் தூக்கு மரத்தில் தொங்கவைக்க முடியும்" என்று கூறிற்று. மற்ற அவயவங்கள் நாக்கைப் பார்த்துக் கேலி செய்து சிரித்தன. அவைகளுக்குச் சரியான பாடம் கற்பிக்கவேண்டும் என்று நாக்குத் தீர்மானித்தது.

ராஜன் கொலுவில் அமர்ந்திருக்கும் பொழுது வைத்தியர் புலிப்பாலை அவர் மூன்பு வைத்து, "மஹாராஜாவுக்குக் குடிப்பதற்கு ஆட்டின் பாலைக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றார். தன்னை அவமதித்ததாக ராஜாவுக்குக் கோபம் வந்தது. ஆட்டுப்பாலைக் கொண்டுவர இந்த வைத்தியர் எதற்கு? உடனே அவரைத் தூக்கிலிடும்படி உத்தரவிட்டான், அவயவங்கள் நாக்கின் சக்தியை உணர்ந்தன. அதுதான் தங்களைக் காப்பாற்ற முடியும் என்று தெரிந்துகொண்டு தங்களை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டன. நாக்கு அவற்றின் மேல் இரங்கிற்று.

வைத்தியர் மறுபடியும், "அரசே, ஒரு சிறு பிழையை மன்னிக்கவேண்டும். நான் கூறவந்தது, மஹாராஜாவின் உடம்பு நன்றாவதற்காக மிகவும் கொழுத்த புலியின் பாலைக் கொண்டுவந்திருக்கிறேன் என்பதுதான். உங்களுக்காகத் தன் பால் உபயோகப்படப் போகிறது என்று தெரிந்ததும் புலி மிகவும் மரியாதையுடன் ஆட்டைப்போல அடங்கி, தன் பாலைக் கறந்து கொள்ளும்படி எனக்கு உதவிற்று" என்று கூறினார்.

ராஜா சந்தோஷத்துடன் வைத்தியருக்கு நிறையப் பரிசு அளித்தான்.

விடுகதைகளுக்கு விடை: 49. எந்திரம், 50. கத்திரிக்காய், 51. தாழம்பூ, 52. குன்றிமணி, 53. செவ்வந்திப்பூ, 54. மனித வாழ்வு, 55. பாம்பு, 56. உதடு, 57. நட்சத்திரம், 58. எறும்பு, 59. உளுந்து, 60. ஊசமுள், 61. தேங்காய், 62. உள்ளங்கை, 63. வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு, புகையிலை.

கல்யாணம்

கி. ரா.

நண்பரும் நானும் மேலவரசற்படியருகில் நின்றுகொண்டிருந்தோம். கல்ல பங்குனி மாதத்து வெயில். தெருவெல்லாம் கடைக்காரர்கள் குளிர்ந்த தண்ணீரைக் கொட்டிக் கொட்டி, இனிமையான மாலை வேளையை வரவேற்றுக்கொண்டிருந்தனர்.

பொன்னையா பிள்ளை கடையில் நாங்கள் நின்று கொண்டிருந்தோம். பொன்னையா பிள்ளையின் பால்-ஐஸ்-ஷர்பத்தும், வறவல் சீவலும் ஜகப் பிரசித்தி பெற்றவை.

அப்போதுதான், எங்களுக்குப் பின்புறமாக அவன் வந்து, பூனையைப்போல நின்றுகொண்டிருந்தான்.

வற்றி ஒட்டிய தேகம்; கூனல் முதுகு. பலிலாயிர வருஷங்களாக இந்தப் பூமியின் சுமை அவ்வளவையும் தாங்கிக்கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் ஆதிசேஷனுக்குக்கூட முதுகில் இவ்வளவு வளைவு இருந்திருக்குமா என்பது சந்தேகந்தான். அரையில் ஓர் அரை மூழக் கந்தல், கச்சமாக மூடியிருந்தது. முகத்தில் ஓர் அசட்டுச் சிரிப்பு. அவனைப் பார்த்தால் வீசேஷம் ஒன்றும் இல்லை. அவனைப்போல் எத்தனையோ பேரை நாம் கடை வீதிகளில் பார்த்திருக்கிறோம். தலையில் ஒரு கூடை, அல்லது முதுகில் ஒரு மூட்டை, அல்லது இடையில் ஒரு பெட்டி படுக்கை, இவ்வித அலங்காரங்களுடன், நம் கவனத்தைச் சிறிதும் கவராத முறையில், ரெயில்வே ஸ்டேஷன்களிலோ, சந்தைக் கூட்டங்களிலோ, நாம் பார்த்தவிட்டு உடன் மறந்து விடும். நூற்றுக்கணக்கான பிரகிருதிகளில் அவனும் ஒருவன்.

அன்று, அவனும், அப்படியேதான் பூனைப்போல் வந்ததுபோலவே என் கவனத்திலிருந்து மறைந்திருப்பான். ஆனல் பக்கத்துக் கடையில் இருந்த ஒரு பையனுடைய சேஷ்டைதான் என் கவனத்தைத் தூண்டிவிட்டது.

"கல்யாணம்!" என்றான் அந்தப் பையன். நான் அப்போதுதான் திரும்பிப் பார்த்தேன்.

அந்தக் கூனல் உருவம் இன்னும் கூனிக் குறுகிற்று. முகத்தில் வழிந்தோடிய அசட்டுச்

சிரிப்பு இன்னும் விரிந்து, உடல் முழுவதும் பரவிற்று.

அடுத்த கடையிலிருந்து இன்னொரு குரல், "கல்யாணம்!" என்றது.

அந்த உருவம் சட்டென்று ஓடிற்று. அதன் வாயிலிருந்து, "ஐயோ! போ ஐயா!" என்ற சொற்கள் உருத் தெரியாமல் உருண்டு வெளி வந்தன.

"கல்யாணம்!"
"கல்யாணம்!"
"கல்யாணம்!"

பல குரல்கள் ஒன்றன்பின் ஒன்றாய், படிப் படி ஒன்று கேட்டன. அந்த உருவம் அந்த வார்த்தையினால் அடிபட்டுத் தாக்குண்டதைப்போல ஓடிப் போய்க்கொண்டிருந்தது.

"ஐயையோ! ஐயையோ! ஐயையோ!"

அந்த உருவம் கெளிந்து கெளிந்து ஓடி மறைந்து விட்டது. நான் இந்த அதிசயத்தைப் பார்த்துக்கொண்டே நின்றேன்.

அந்த உருவம் மறைந்ததும், நான் ஒன்றும் புரியாமல் நண்பரின் முகத்தைப் பார்த்தேன்.

"பைத்தியம்" என்றார் நண்பர். உடனே என் முகத்தில் தோன்றிய சந்தேகக் குறியைக் கண்டோ என்னவோ நண்பர், "அவன் பெயர் கல்யாணம் அல்ல" என்றார்.

பின் ஏன் அவன் அப்படி ஓடவேண்டும்?

நான் கேட்குமுன்பே நண்பர் கதை சொல்லத் தொடங்கினார். அந்தச் சம்பவத்தைப் போலவே கதையும் அதிசயமானதுதான்.

* * *

அவனுடைய உண்மையான பெயர் என்ன என்பதே யாருக்கும் தெரியாது. அவன் பிறந்தது எந்த ஊர், வளர்ந்தது எங்கே என்பதும் தெரியாது. அவனைப்பற்றி ஒன்றுமே யாருக்கும் தெரியாது. ஏனெனில், அவனை எல்லோரும் "ராம சாமி" என்றே கூப்பிட்டுவந்தார்கள்.

இந்த உலகத்தில் சர்வசாமான்யமான அவனைப்பற்றி யார் அக்கறையாக விசாரிக்கப்போகிறார்கள்? அப்படியே யாராவது சிரத்தையுடன் அவனிடம் போய், "உன் பெயர் என்ன?" என்று கேட்டாலும் அவன் சொல்லமாட்டான். பேந்தப் பேந்த, ஏதோ குற்றம் செய்துவிட்ட வனைப்போல விழிப்பான். ஓர் அர்த்தமற்ற அசட்டுச் சிரிப்புத்தான் கிடைக்கும் பதில்.

அவனுடைய சொந்த கூடும லாபங்களைப் பற்றி யாரும் அக்கறை காட்டுவதில்லையானாலும் அவனுக்கு வேலை கொடுக்க எவரும் தவறுவதில்லை. எவ்வளவு பெரிய மூட்டையானாலும் முகம் கோணுமல் தூக்குவான். எவ்வளவு மைல் வேண்டுமானாலும் சுமையுடன் பதில் பேசாமல் நடந்துவருவான்.

கூலியைக்கூட அவன் வாய் திறந்து கேட்பதில்லை. எதைக் கொடுத்தாலும் பேசாமல் வாங்கிக் கொண்டு போய்விடுவான். ஒன்றும் கொடுக்காமற் போனால்கூட அவன் கேட்டிருக்கமாட்டான். ஆனால் அப்படி யாரும் இதுவரையில் செய்து பார்த்ததில்லை. பாவம், அவன் கூலி யாருக்கு வேண்டும்?

அந்த ஊரில் அவனை அறியாதவரே இருக்க முடியாது. மார்க்கெட்டிலோ மண்டிக்கடை வீதியிலோ ரயிலடியிலோ அவனுடைய முதுகுக் கூனலை உணராத மூட்டை முடிச்சுக்களே இருக்க முடியாது. பத்து வருஷங்களாக அங்கேயேதான் இருக்கிறான்.

காசிநாதச் செட்டியாரின் அரிசிக்கடை வாசலில்தான் அவன் உட்கார்ந்திருப்பான். அவன் உட்கார்ந்திருக்கும் நேரம் வெகு குறைவுதான்; என்றாலும் இந்த நேரத்தை அங்கேதான் கழிப்பான்.

சில சமயங்களில் இரவு பத்து மணி பதினொரு மணிக்குக்கூட வந்துகொண்டிருப்பான். முதுகில் ஒரு கோணிப்பை, தலையில் ஒரு கூடை, கையில் ஒரு முடிச்சுடன் மணிக் கூண்டிலிருந்து மேலேச் சிந்தாமணிக்குப் போய்க்கொண்டிருப்பான். (இன்னும் இரண்டு முதுகுகளைக் கடவுள் அவனுக்குக் கொடுத்திருந்தால்கூட அவற்றின் மேலும் ஏதாவது சவாரி செய்துகொண்டுதான் இருக்கும்!) ஆனாலும் எங்கே போனாலும், படுத்துக்கொள்ள அங்கேயேதான் திரும்பி வந்துவிடுவான்: "காளி ஜீஞ்"க்கடை.

காசிச் செட்டியார் அவனுக்கு மாதச் சம்பளம் கொடுப்பதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயந்தான். அதனால்தான், அவன் அங்கேயே, அந்தக் கடையின் குறட்டோரத்திலேயே என் பழியாய்க் கிடக்கிறான் என்பது எல்லாருக்கும் ஒரு மர்மமாகவே இருந்தது. அதாவது, அந்தச் சம்பவம் நடக்காமலே இருந்திருந்தால் கடைவரையில் அது மர்மமாகவேதான் இருந்திருக்கும்.

பத்து வருஷங்களுக்கு முன்னால் ஒரு நாள் காசிநாதச் செட்டியார் அவனைக் கூப்பிட்டார். "காளி ஜீஞ்" யாரிடமாவது வேடிக்கையாகப் பேசினார் என்றால் அதற்கு ஒரே அர்த்தந்தான் இருக்கமுடியும்: அந்த ஆசாமியால் ஏதாவது காரியம் ஆகவேண்டும் என்பதுதான் அது. ராம சாமியிடம் வேடிக்கையாகப் பேசுகிறார் என்றால் அன்று அவனுடைய தலையில் ஏற ஏராளமான சுமை காத்திருக்கிறது என்றுதான் அர்த்தம்.

"டே, ராமசாமி; உனக்கு ஒரு கல்யாணம் பண்ணி வைத்துவிட்டால் கவலை விட்டதடா. வாங்குகிற கூலி எல்லாம் தொலைச்சுவிடாதே. என்ன?" என்றார் அன்று.

அவர் கேலியாகத்தான் சொன்னார் என்றாலும், அவனுடைய மனத்தில் எங்கோ ஒரு தூதனமான விசையில் அந்தச் சொற்கள் பட்டு விட்டன. அவ்வளவுதான். அது உடனே வேலை செய்யத் தொடங்கிவிட்டது.

ராமசாமி சிந்திக்கத் தொடங்கினான்.—கல்யாணம்! அவனுக்குக் கல்யாணம்!

அதை நினைத்துப் பார்க்கவே அவன் மனம் வஞ்சையர் கூசிற்று. ஆனால் நினைக்காமல் இருக்கவும் முடியவில்லை.

'கல்யாணம்! நன்றாய்த்தான் இருக்கும்! கல்யாணம்!'

எப்போதும் இதே நினைவுதான். தலையில் மூட்டையுடன் ஒரு வீதியில் அப்படியே நின்று விடுவான். முன்னால் போகிற மூட்டையின் சொந்தக்காரர் நின்று திரும்பி, "ராமசாமி, என்னடா!" என்றதும் உதறிக்கொண்டு கிளம்பி விடுவான். ஆனால் அவன் முகத்தில் மட்டும் கொலைக்குற்றம் செய்துவிட்டதைப் போன்ற பீதி! ஒருவேளை அவருக்கு மனத்திற்குள் நினைத்தது தெரிந்து போயிருக்குமோ?...

இப்படியே அவன் சிந்தித்துச் சிந்தித்துப் பணம் சேர்க்கத் தொடங்கினான். ஒரு ரூபாய்க்கு காலணாச் சேர்ந்ததானால் அதில் மூன்று அணா அவனுடைய அரைக்குள் தெரியாமல் முடிச்சாக மாறிவிடும். அதற்குக் குறைவாகக் கிடைத்தால் அநேகமாக அவ்வளவும் முடிச்சுக்குள் போய்விடும். ஒரு ரூபாய்க்குப் பட்டினி கிடக்க முடியாதா? அப்படியே மிகவும் பசியாக இருந்தால் செட்டித் தெருக் கூடைக்காரியிடம் காலணாவுக்குச் சுண்டல் வாங்கித் தின்றால் கிடக்கிறது!

ஐம்பது ரூபாய் சேருவதற்குள் ஐந்து வருஷங்கள் ஆகிவிட்டன. அதற்குள் அவன் தூக்கிய சுமையும், நடந்த நடையும், கிடந்த பட்டினியும் கணக்கில் அடங்கா. அதை யார் கணக்குப் பார்க்கப் போகிறார்கள்? தெய்வக் கணக்கு ஞான சித்திரகுப்தன்கூட அயர்ந்து போய்க் கணக்கை விட்டிருப்பான்.

அன்று அதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று அவனுக்கு ஆசை. அதற்காக அவன் ஒரு மாதமாகப் பிரயாசைப்பட்டு வருகிறான். அவகாசம் கிடைக்கவில்லை. அவன் தனியாகப்போய் முடிச்சை அவிழ்க்கும் சமயம் சொல்லிவைத்தாற் போல யாராவது வந்துவிடுவார்கள்! உலகத்தில் உள்ள மற்றவர்களின் சுமையை எல்லாம் சுமக்கும் அவனுக்குத் தன் சொந்த விவகாரத்தை, தன் வாழ்வுக்கு முக்கியமான விஷயத்தைக் கவனிக்கப் பொழுது இல்லை.

அன்று நல்ல வேளையாக யாரும் இல்லை. இரவு பன்னிரண்டு மணி. செட்டியார் கடைத் திண்ணை காலியாக இருந்தது. எதிரில் முனிசிபல் விளக்கு வெளிச்சம் அவனுக்காகவேதான் வீசிற்று. மெதுவாக நாலு புறமும் பார்த்து முடிச்சை அவிழ்த்தான். சத்தம் செய்யாமல் நாணயங்களையும் நோட்டுக்களையும் ஒவ்வொன்றாய் எடுத்து வைத்தான். வெறும் சில்லறைகளாய் இருந்தவற்றை நோட்டுக்களாயும் ரூபாய்களாயும் மாற்ற அவன் பட்ட சிரமம் எவ்வளவு! ஒரே இடத்தில் இரண்டு தடவை கேட்கமாட்டான். கடைக்குக் கடை, மூலைக்கு மூலை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மாற்றியிருக்கிறான்.

திரும்பத் திரும்ப மூன்று தடவை எண்ணினான். ஐம்பது ரூபாய்தான். அது போதுமா? யாரைக் கேட்பது? எப்படிக் கேட்பது?..... ஐயோ!

அவன் முடிச்சைக் கட்டிவிட்டான். அப்போது கதவு திறக்கும் சத்தம் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினான். அவன் உயிரே போய்விட்டது.

செட்டியார் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தார். ஒருவேளை அவருக்குத் தெரிந்து விட்டதோ?

"என்ன ராமசாமி, தூங்கவில்லையாடா?"

அவன் என்னவோ பதில் சொன்னான். அவன் முகம் மட்டும் பயங்கரமாக இருந்தது.

அன்று செட்டியார் ஏதோ சிறு சந்தேகத்தூடனேயேதான் மீண்டும் படுக்கப் போனார். ரூபாய்களையும் பழகிப்போன அவருடைய காதுகளில் நாணயச் சத்தம் கேட்டுத்தானே எழுந்து வந்திருக்கிறார்!

நூறு ரூபாய் சேர்த்தாகிவிட்டது. அது போதாது என்றுயார் சொல்ல முடியும்? அதனால் ராமசாமி அடுத்த பிரச்னையைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான். அப்போதுதான் "கல்யாணம்" என்ற அதற்கு இன்னொரு பயர் வேண்டும் என்ற உண்மை அவனுடைய மனத்தில் தோன்றியது. அதைப்பற்றிப் பல இரவுகள் படுத்த படியே சிந்தித்தான். அதனால் அவன் தடமாடும் பெரும்பகுதியான நேரம் போகப் படுத்துக் கிடக்கும் சில மணிநேரத்துக்கும் சனியன் பிடித்தது.

எப்படியோ அந்த "இன்னொரு பயரை" அவன் மனம் கண்டுபிடித்துவிட்டது. அவள்தான் ஊமைச்சி!

ஊமைச்சி செட்டியார் வீட்டில் வரசல் கூட்டும் பெண். அவளுக்கும் பிறந்த ஊர் வளர்ந்த ஊர் தெரியாது. அவனுக்காகவேதான் அவள் வந்திருக்கிறாள்!

விடியற்காலை ஐந்து மணிக்கு அவள் வரும் போது அவனுக்கு எப்படியோ விழிப்பு வந்து விடும். அந்த மங்கிய ஒளியில் அப்படியே படுத்த படியே அவள் உருவத்தைப் பார்த்துக்கொண்டே கிடப்பான். பகல்வேளையில் அசதி மற்றியாக அவள் நிற்கும் பக்கங்கூடத் திரும்பமாட்டான். அந்த வெள்ளி மயங்கும் நேரந்தான் அவனுடைய வாழ்விலேயே பயனுள்ள நேரம்.

நாளுக்கு நாள் அவனுடைய வாழ்வு - அவன் சுமக்கும் ஒவ்வொரு சுமையும், அவன் நடக்கும் ஒவ்வோர் அடியும் - பயனுள்ளதாக, இனிய பொருள் புதைந்ததாக வளர்ந்தது.

தன் விருப்பத்தை எப்படி நிறைவேற்றுவது? அவளிடம் போய்ச் சொல்லிவிடலாமா? எப்படிச் சொல்லுவது? அதை நினைத்தாலே அவன் உடல் கூசிக் குறுகிற்று.

கடைசியில் அவனுடைய தீராத லஜ்ஜையும் மறைந்துவிட்டது. அவளிடம் சோறில் சொல்லி விடுவது என்று முடிவு கட்டிவிட்டான்.

அப்போதுதான் வைகுண்ட ஏகாதசி வந்தது. அன்று ராமசாமி ஒரு புது வேஷ்டி வாங்கினான். ஒரு நீலச் சட்டையும் வாங்கினான். இதுவரையில் தீபாவளிப் பண்டிகைக்குக்கூட அவன் புதுத் துணி வாங்கியதில்லை. அப்படி அவனுக்குத் தப்பித் தவறி ஏராவது இனம் கொடுத்தாலும் பழைய வேஷ்டியோ, கிழிந்த பனியனோதானே கொடுத்திருக்கிறார்கள்? அவனுடைய கனல் முதலு புதுச்சட்டையின் சல்லாபத்தை அன்று தான் முதல்முதலாக உணர்ந்தது.

'தீபாவளி' வருஷந்தோறும் வந்துவிடுகிறது. இந்த விசேஷம் வாழ்க்கையில் ஒரு தடவை தானே வரும்!

அரையில் பச்சைக்கரை வேஷ்டி; மேலே நீலச்சட்டை; கையில் கல்ல மூங்கிற் கம்பு. இவ்வித அலங்காரங்களுடன் அன்று ராமசாமி ஸ்ரீரங்கத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தான். அவனுடைய நடையே இன்று மாறிவிட்டது. முதுகில் மூட்டை ஏதும் இல்லாத சமயங்களில் கூடக் கூனலாகக் காட்சி அளிக்கும் அவன் உருவம் இன்று நிமிர்ந்திருப்பதாகத் தோன்றியது.

அவனுக்கு முன்னால் ஒரு பெண்கள் கூட்டம் போய்க்கொண்டிருந்தது. அந்தக் கும்பலையே ராட்டத்தில் வைத்து அவன் நடந்துகொண்டிருந்ததிலிருந்த அவனுடைய உள்ளத்தைக் கவர்ந்த ஓர் உருவம் அந்தக் கூட்டத்தினிடையே இருந்ததாகத் தெரிந்தது.

கோவில்வாசலே நெருங்க நெருங்கக் கூட்டம் பெருகிற்று. அதை அவனுடைய தாதிருஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும். எனெனில் ஊமைச்சியைக் காணவில்லை. எங்கே போய்விட்டாள்?...இந்தக் கூட்டம் ஏன் இப்படி நெருக்குகிறது? இவ்வளவு மனிதர்களும் எதற்காக இங்கே வரவேண்டும்? அவனுடைய சந்தோஷத்தைக் கெடுப்பதைத் தவிர அத்தனை பேருக்கும் வேறு நோக்கம் இல்லையா?

அன்று முழுவதும் ராமசாமி சாமியைக் கும்பிடவில்லை. கடைவீதியை எட்டிப் பார்க்கவில்லை. தம்பட்டம் கொட்டிக்கொண்டு ஊரைக் கூட்டிய "இரண்டு தலை ஆட்டுக் காட்சி"யின் அதிசயமும் அவன் கவனத்தைக் கவரவில்லை. முகத்தில் ஏமாற்றத்தடன் கூட்டத்திற்குள் இடிபட்டு இடிபட்டு ஒடிக்கொண்டிருந்தான். அவன் மனத்தில் ஒரே எண்ணம், ஒரே நோக்கம்: ஊமைச்சி.

மணி ஐந்து ஆகிவிட்டது. எக்கத்துடன் ராமசாமி வீடு திரும்பினான். வெளிக் கோபுர வாயிலைத் தாண்டி வந்திருப்பான். அப்போது தூரத்தில் மிட்டாய்க் கடைக்கு அருகில் நின்றகொண்டிருந்தாள். அவள்தான். இன்னும் சாலு பேர் கூட இருந்தனர்.

அவன் வருவதைப் பார்த்துவிட்டாள். அவனுக்கு நன்றாய்த் தெரியும். அவனைப் பார்த்து என்னவோ சொன்னாள். உடனே சிரித்தாள்.

ராமசாமி அவளிடம் போய்த் தன் நோக்கத்தை வெளியிடவில்லை. அங்கே நிற்கக்கூட இல்லை. திரும்பிப் பராமல் ஓடத் தொடங்கினான்.

செட்டியார் வீட்டுவாசலில் வந்துதான் நின்றான்.

அன்றிரவு வெகு சீக்கிரத்திலேயே அவன் படுத்துக்கொண்டுவிட்டபோதிலும் தூங்கும்போது வெகுநேரம் ஆகிவிட்டது. அவன் முகம் மலர்ந்தது. அவன் தலைக்கு அடியில் லாலாகடையில் வாங்கிய மிட்டாய்ப் பொட்டலம் இருந்தது. அவன் மனம் இன்பக் கனவு கண்டுகொண்டிருந்தது.

மறுநாள் காலையில் ராமசாமி எழுந்திருக்கையில் பொழுது விடிந்துவிட்டது. வழக்கத்தைவிட அதிகமாகத் தூங்கிவிட்டதை அவன் உணர்ந்தான்; உடனே வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்திருந்தான்.

எழுந்ததும், முதல் காரியமாகத் தினமும் செய்வதைப்போல் தன் முடிச்சை அவிழ்த்தான். அதென்ன? முடிச்சைக் காணவில்லையே! ஐயோ!

நின்று பரபரப்புடன் தேடினான். காணவில்லையே! மிட்டாய்ப் பொட்டலம் மட்டும் கிடந்தது. அதில் எறும்பு மொய்த்திருந்தது.

தொலைந்ததா! அவ்வளவுதான்! அவன் விழிகள் சுழன்றன. பேந்தப் பேந்த விழித்தான். தலையில் கையை வைத்துக்கொண்டு, "ஐயோ!" என்று ஒரு கூச்சல் போட்டான்.

சத்தம் கேட்டுக் கும்பல் கூடிற்று; செட்டியார் ஓடிவந்தார்.

அவரைக் கண்டதும் ராமசாமி "ஓ"வென்று பலமாக அழத் தொடங்கினான். அடுத்த நிமிஷமே "மட மட" என்று பேய்ச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே கூத்தாடத் தொடங்கினான்.

கடைவீதியில் கூட்டம் பெருகிவிட்டது. பைத்தியத்தை வேடிக்கை பார்க்க ஆளுக்கா பஞ்சம்!

செட்டியார் பக்கத்தில் வந்தார். "ராமசாமி, உன் பணத்தை நான்தான் எடுத்தேன்" என்று முடிச்சைக் கொண்டுவந்து நீட்டினார். அது அவன் கண்களில் படவில்லை. கீழே கிடந்த மிட்டாய்ப் பொட்டலத்தைத் தூக்கிப் பத்தாடினான்.

செட்டியார் தாம் செய்த வேடிக்கையின் வீரியத்தை உணர்ந்தார். இப்படி ஆகுமென்று அவர் எதிர்பார்க்கவில்லை. பாவம்! உடனே பின்னும் நூறு ரூபாயைக் கொண்டுவந்து அவன் எதிரில் 'கல கல' வென்று கொட்டினார். பயன் இல்லை.

"கல்யாணம்! கல்யாணம்!" என்று கத்திக் கொண்டே பைத்தியம் வெளியில் ஓடிவிட்டான். கைதட்டிச் சிரித்துக்கொண்டே கும்பலும் போயிற்று.

* * *

நண்பர் கதையை முடித்துவிட்டார். அப்போது நாங்கள் கடைவீதியைக் கடந்துகொண்டிருந்தோம். திடீரென்று எதிர்ப்புறச் சந்தில் ஒரு கூச்சல் கேட்டது. அவன்தான் எங்களை நோக்கி ஓடிவந்துகொண்டிருந்தான். ஒரு சிறுவர் கும்பல் கூடவே கற்களை வீசித் தாக்கிக்கொண்டு ஓடிவந்தது. என்னை அறியாமலே என் வாய் "கல்யாணம்!" என்ற சொல்லை முணுமுணுத்தது.

ஒலி வேகம் கொண்ட புதிய யூ. எஸ். ஜெட் பிளேன்

"பா யும் நக்ஷத்திரம்" என்ற பெயருள்ள புதிய ஜெட் போர் விமானம் மிகவும் வேகமாகச் செல்கிறது என்றும், இப்போது அத்தகைய விமானங்கள் மிகப் பெரிய அளவில் தயாரிக்கப் படுவதாகவும் அமெரிக்க ஐக்கிய மாகாண விமானப்படைத் தலைவரான ஜெனரல் ஹென்ரி எச். ஆர்னல்ட் கூறினார். ஒரு வருஷமாகப் பறக்கும் சோதனைகளில் ஈடுபட்டிருந்த, பிராட் அண்டு விட்னி P-80, இந்த உருவத்தில் செம்மைப்பட்டிருக்கிறது. சரியான வேகத்தில் இந்த ஆகாய விமானத்தை இன்னும் விட்டுப் பார்க்க வில்லை என்றாலும், ஒலியின் வேகத்துக்கு இணையாகவோ அல்லது அதற்கும் மேலாகவோ மணிக்குச் சுமார் 800 மைல் வேகத்தில் பறக்கும்படி இது அமைந்திருப்பதாக அவர் சொன்னார். கிராவின் போன்ற எரிகருவியினால் இதன் எஞ்சின் ஓடுகிறது. பொதுவாக ஒரு போர்விமானத்தின் எஞ்சினை மாற்றுவதற்கு எட்டு அல்லது ஒன்பது மணி காலம் பிடிக்கும்; ஆனால் இதன் எஞ்சினை முழுவதும் மாற்றிப் பதினைந்து நிமிஷங்களுக்குள் மற்றொரு எஞ்சினைப் பூட்டமுடியும். போர்விமானங்களுக்குள்ளேயே மிகவும் உயர்ந்ததும் லாகவமாக ஆளக் கூடியதுமான ரகம் இதுதான்.

மிகவும் விஸ்தாரமாக இதைத் தயாரிக்கும் தொழிலை நான்கு ஐக்கிய மாகாணக் கம்பெனிகளும் ஒரு வட அமெரிக்க விமானத்தொழில் கம்பெனியுமாகப் பங்கிட்டுக் கொண்டிருக்கின்றன. ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனியார் இதற்குத் தேவையான புதிய டர்போ - ஜெட் எஞ்சினைத் தயாரித்துத் தருகிறார்கள். இது உலகத்திலேயே மிகுந்த சக்தி வாய்ந்த விமான மோட்டார் என்று கருதப்படுகிறது.

மலிவான மண்ணெண்ணெய் போன்ற எரிகருவியை இதில் உபயோகிப்பதால், உக்கிரமாக வெடிக்கக்கூடிய காஸொலின் போன்றவற்றை அடக்கிப் பயன்படுத்த வேண்டிய ஆபத்து இல்லை. இதிலே பிராட் அண்டு விட்னி இல்லாதது மற்றொரு பெரிய சங்கடத்தை விலக்குகிறது.

—'உஸோவி'

வீடு கதைகள்

[கூலமகளில் விடுகதைகளை வெளியிட ஆரம்பித்தது முதல் பல அன்பர்கள் பல விடுகதைகளை அனுப்பிவருகிறார்கள். பழைய விடுகதைகளைத் தொகுத்து வெளியிட வேண்டுமென்பதே எங்கள் ஆசை. சிலர் தாமே புதிய விடுகதைகளைப் புனைந்து அனுப்பு கிறார்கள். அவற்றை இப்போது வெளியிட இயலவில்லை. ஆகவே அன்பர்களை அங் கங்கே வழங்கிவரும் பழைய விடுகதைகளைத் தொகுத்து அனுப்பும்படி வேண்டுகிறோம்.
—ப - ர்.]

49

தேர் அசைய அசைய, பூ உதிர உதிர.

50

வாலால் தண்ணீர் குடிக்கும்,
தலையால் முட்டையிடும்.

51

காசிராஜன் பெண், அவள்பேர் தில்லை
அவள் பூசுவது கந்தப்பொடி பில்லை
வயிற்றிலே ஆறுமாசம் பிள்ளை
ஒருவருடன் பேசுவதும் இல்லை.

52

காட்டிலே கருஞ் சோலையிலே புதுப்
பானையிலே கரி தீட்டியிருக்குது.

53

அறைக்கீரை சிறுபாத்தி
அழகுண்டு மணமில்லை.

54

ததக்க புதக்க நாலுகால்
தானே நடந்தால் இரண்டு கால்
முற்றிப் போனால் மூன்று கால்
முதுகொடிந்தால் பத்துக் கால்.

55

சலசலப்பான் சண்டைக்கு நிற்பான்
அவன் கிடக்கிறான் பொந்துக்குள்ளே.

56

அண்ணனுக் கெட்டும் – தம்பிக்
கெட்டாது.

57

பொரி பொரித்தேன், பெட்டியில்
வைத்தேன்
பொழுது விடிந்தால் காணும்.

58

அந்தாப் போகிறான், இந்தாப்
போகிறான்
அடியைப் பார்த்தால் தெரியவில்லை.

59

குளிப்பாட்ட இரண்டு மாடு
கூட்டிக்கொண்டு போனேன்,
கறுப்பு மாடு ஒன்று, வெள்ளை
மாடு ஒன்று;
கறுப்பு மாடு ஆற்றோடே
போய்விட்டது
வெள்ளை மாடு வீட்டுக்கு
வந்துவிட்டது.

60

எங்கள் மாட்டுக்கு மூன்று கொம்பு
அது பின்னல் பாயும்.

61

குடிக்கத் தண்ணீர் உண்டு
குளிக்கத் தண்ணீர் இல்லை.

62

ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம்.

63

பச்சை பச்சை டாக் டாக்
பால் பால் டாக் டாக்
குண்டு குண்டு டாக் டாக்
குதிரை வாலி டாக் டாக்.

[மேலுள்ள விடுகதைகளை அனுப்பியுதவிய வர்கள்: ஸ்ரீமதி கானுடுகாத்தான் கோ. மீனுகூடி, ஸ்ரீமதி கமலா பத்மநாபன், ஸ்ரீமதி ஏ. கே. செல்லம்மாள், நாகையநல்லூர் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம், ஸ்ரீ ஆர். ராமழர்த்தி ஐயர், ஸ்ரீ ராய பேத்தி ப. வேங்கடாசலம்.]

[விடைகள்: 202-ஆம் பக்கம் பார்க்க.]

கலைமகள்
ஸ்தாபிதம் – 1932.

ஞானி

ஜி. எஸ். மணி

கடையில் ஊரார் பயமுறுத்தியபடியே ஆகி விட்டது. கிருஷ்ணன் வாழ்க்கையைத் துறந்துவிட்டுப் போய்விட்டான். ஆனால் பாமா என்னவோ சற்றும் அதை எதிர்பார்க்காதவளா கவே காணப்பட்டாள். சங்கதியை அறிந்ததும் அப்படியே வெய்துயிர்த்துப் போனாள்.

ஊரார் என்ன சொல்லிக்கொண்டிருந்தார்கள்? கிருஷ்ணனை நம்பக்கூடாதென்றும், என்றைக் காவது ஒரு நாள் அவன் உலகப் பற்றுதலே உதறி எறிந்துவிட்டு சந்நியாசியாகப் போய்விடுவான் என்றும் சொல்லிக்கொண்டே இருந்தார்கள் கேலிக்காக. கடையில் ஜனங்கள் வாக்குப் பலித்தே விட்டதோ? 'வெகுஜன வாக்கு' என் பதனல்தானே?

ஆனல் கிருஷ்ணன் சந்நியாசியாகவில்லை. எந்தக் குருவினிடமிருந்தாவது அவன் 'காஷாயம்' வாங்கிக்கொண்டானு, அவனைச் சந்நியாசி என்று அழைப்பதற்கு? முதலில் ஆசாபாசங்களே விரும்பிப் பின்னர் அவற்றை வெறுத்துச் செல்ப வன் அல்லவா சந்நியாசி என்று அழைக்கப்படு வான்?

கிருஷ்ணன் சந்நியாசியே அல்ல. வாழ்க்கை யின் பல துறைகளையும் ஆராய்ந்து அவற்றில் உழன்ற பின்னர், அவற்றை வெறுத்து ஒதுக்கி னனு அவன்? இல்லையே! பின்?

அவன் ஞானி. அவன் பிறந்தபொழுதும் ஞானியாகவே பிறந்தான். வாழ்வில் நடமாடிய பொழுதும் ஞானியாகவே இருந்தான். இப் பொழுதும் அவ்விதமே போனன்.

'மழையில் நனையவும் மாட்டான்; வெயிலில் காயவும் மாட்டான்' என்பார்களே? அதைக் கிருஷ்ணன் விஷயத்தில் இன்னும் சற்று மாற்றி

அமைக்கவேண்டும். வெயில் அவனுக்கு உறைக்காது; மழை அவனை நனைக்காது. அவன் ஞானி.

ஒன்றிற்காக அவன் கவலைப்படுவதும் இல்லை. மற்றொன்றைப்பற்றி அவன் சந்தோஷித்ததும் இல்லை. உலகவிவகாரங்கள் ஒன்றிலும் அவனுக்கு அணுவளவு பற்றுதல்கூட இருந்ததில்லை. அவன் மட்டிலும், உலகமும் வாழ்க்கையும் சூன்யமே.

பிறந்தவுடன் குழந்தை பாலுக்கு குடிக்கிறதே; அது ஏன்? அது சிருஷ்டி விரோதம். அவன் வாழ்வில நடமாடியபொழுதும் விரோதமாகத்தான் நடந்துகொண்டான். குழந்தைக்காவது ஸ்ளடைவில் தாயின்மீதாவது பாசம் பிறக்கிறது. அவனுக்கு அதுவும் இல்லை; ஒன்றும் இல்லை. தாய், தகப்பன், தாரம், சுற்றம் இவை யாவும் ஒருபொழுதுமே அவனை ஆகர்ஷித்ததில்லை. அவன் யாரிடமும் ஒரே மாதிரியாகவே நடந்து கொண்டான். தன் கடமையைக் கழிக்கப் பூமியில் அவதரித்த மகானைப் போலவே வாழ்க்கை யின் எல்லைக் கோட்டிற்குள் அடங்கியவரையில் காலம் கடத்தினான். எத்தகைய விரோத சிருஷ்டி!

மற்றவர்களுக்காகவே அவன் பிறந்ததில் புகுந்துகொண்டவனைக் காணப்பட்டான். வாழ்வு நடத்தியதும் மற்றவர்களுக்காகத்தான் என்றே தோன்றியது. இல்லாவிட்டால் அவன் பணக் காரனாக இருந்தபொழுது, நிலபுலன்களுடன் குடித்தனம் துவக்கியபொழுது, ராஜா மாதிரி இருந்திருக்கவேண்டும். ஆனால் இல்லையே! அப்போதும் அவன் அரையில் சுற்றியிருந்தது அந்த ஒற்றை வேஷ்டிதான். மேலே விரிந்திருந்தது அந்த ஒற்றைத் துண்டுதான். பின்னர் அவன் வறுமையில் சிக்கிக்கொண்டபொழுதாவது மனம் சலித்திருக்க வேண்டுமே? அதுவும் இல்லை. அப்போதும் அமைதியாகவே காலம் கடத்தினான்.

அவன் பிறந்த குடும்பம் சீரும் சிறப்புமாக இருந்த போதுதான் பாமர அவனுக்கு வாழ்க்கைப் பட்டாள். இருளில் ஒளியாக அவள் அவன் வாழ்க்கையில் தோன்றினாள். எல்லோரும் அப்படித்தான் சொன்னார்கள். இனி அவன் திருந்திவிடுவான் என்று சந்தோஷித்தார்கள். அவளுக்குத் திருந்தாவிட்டாலும் பாமாவின் பொங்கி வழியும் யௌவனமும் சுடர் விடும் எழிலும் அவனைக் கட்டாயம் திருத்தியே விடும் என்றே முழு மனத்துடன் நம்பினார்கள். ஆனால் அவன் திருந்தவில்லையே! அதிசயத்தை என்ன சொல்வது?

பாமாவும் கிருஷ்ணனும் இல்லற வாழ்க்கை துவக்கினார்கள். ஆனால் குடும்பத்தின் நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் பாமாதான் ஏற்று நடத்தும்படி இருந்தது. அவளும் பொறுமையுடனேயே குடும்ப பாரத்தை நிர்வகித்துவந்தாள். அதனோடு அவனையும் உலகவழியில் கொண்டுவர என்ன எல்லாமோ முயற்சி செய்து பார்த்தாள். ஆனால் விழலுக்கு இறைத்த நீராயிற்று; பாமா வெற்றி அடையவில்லை.

அவன் தனது தனிவழியில்தான் போய்க் கொண்டிருந்தான். வேளைக்கு வந்து சாப்பிடுவது என்கிற வழக்கங்கூட அவனிடம் இல்லை; அப்படியே வந்ததாக வைத்துக்கொண்டாலும், பாமாதான் அவன் வயிறுபார்த்து அன்னம் ஊட்டவேண்டும். இல்லாவிடில் அரைவயிறு, கால் வயிறுதான். ஒருகால் தன் கணவனுக்குச் சித்த ஸ்வாதீனம் இல்லாததுதான் காரணமோ என்றுகூட ஒவ்வொரு சமயத்தில் பாமா நினைத்ததுண்டு.

இந்த லக்ஷணத்தில் தன்னிடம் கை நீட்டிய வர்களுக்கு 'இல்லை' என்னாமல் ஏராளமாகத் தர்மங்கள் கொடுக்கும் சுபாவமும் அவனிடம் இருந்தது. குடும்ப நிர்வாகத்தையும் கவனிக்காமல், இருப்பதையும் கேட்பவர்களுக்கு அள்ளி அள்ளி வழங்கிவந்தால் சேர்த்து வைத்திருக்கும் சொத்து எத்தனை காலைக்கு வரும்?

ஆனால் கிருஷ்ணன் என்னவோ ஒன்றையும் லக்ஷ்யம் செய்ததாகவே தெரியவில்லை. வீட்டில் சம்சாரத்திற்கு வேண்டிய உப்பு இருக்கிறதா, புளி இருக்கிறதா என்பதையும் அவன் காதில் போட்டுக்கொள்வதில்லை. நிச்சிந்தையாக இருந்து வந்தான். குடும்பத் தலைவனே இவ்விதம் இருந்தால் அந்தக் குடும்பம் எப்படிப் பெயர் சொல்லும்? சொத்து, கரையக் கரையச் சுற்றத்தாரும் ஒவ்வொருவராக அந்தத் தம்பதிகளைக் கைவிடத் தொடங்கினர்.

பாமா சொல்லொண்ணாத ஏமாற்றம் அடைந்தாள். அடிமேல் அடிகளிலே, அந்தப் பைத்தியத் துடன் வாழ்க்கைப் பாதையிலே அவள் இறங்கியபொழுது எத்தனையோ நம்பிக்கையுடன்தான் இருந்தாள். அவனைப் பற்றிய நம்பிக்கையைவிட அவளுக்கு அப்போது தன்னம்பிக்கையே அதிகமாக இருந்தது.

நாட்கள் செல்லச் செல்ல, பாதையின் கடினம் அதிகரித்தபொழுது, வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் பாமர ஏமாற்றத்தையே கண்டாள். கணவனின் காதலுக்காக - அவன் அன்பிற்காக - அவள் தாகம் கொண்டு தவித்தபொழுது ஒரு சமயத்தில், "என் அழகு உங்கள் உள்ளத்தில் கிளர்ச்சியை உண்டாக்கவே இல்லையா?" என்று கூட அவனிடம் பச்சையாகவே கேட்டிருக்கிறாள்.

அவன் என்ன சொன்னான்? சிரித்துவிட்டு வாய் பேசாமல் எழுந்து போனான். பாமா மனம் ஒடிந்து போனாள். 'இத்தப் பித்துடன் சேர்ந்து வாழ ஒப்பினேனே!' என்று ஏங்கி நின்றாள்.

அதேமாதிரி இல்வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் அவன் அவளுக்குத் தாங்கமுடியாத ஏமாற்றத்தையே அளித்தபோது அவள் மனம்

வெதும்பி வெறுப்புற்றாள். அன்பையும் ஆதரவையும் லவலேசமும் காண முடியாத அந்தக் குடும்பவாழ்க்கை ஆவள் உள்ளத்தைக் கனியச் செய்தது. அவன்மீது கொண்ட வெறுப்பும் கோபமும் அவளையும் பைத்தியக்காரியாக்கின. அவள காரணமின்றிச் சிடுசிடுத்தாள். அர்த்தமின்றிக் கடுகடுத்தாள். பெருமழையும் புயலும் அந்தத் தம்பதிகளிடையே பயங்கரமாகச் சுழன்று சீறத் தொடங்கின.

பாமர கிருஷ்ணனைக் கடிந்துகொள்வாள்; கொரோமாகத் தாஷிப்பாள்; ஏசுவாள்; பரிகசிப்பாள். ஆயினும் அவன் ஏதாவது பதில் சொன்னுல்தானே? அவன் சற்றுவது அசைந்து கொடுத்தால்தானே? யாவற்றையும் கூணத்திலே தூடைத்துவிட்டுப் போய்விடுவான். எப்போதாவது ஒரு சமயம் பாமாவின் பிடுங்கல் அவனுக்கே பொறுக்க முடியாமற்போய் அவளுக்காக ஆடுவதும் உண்டு.

கொடிய வறுமையின் குரூரமான இருள் வெகு சீக்கிரத்திலேயே அவர்களைக் கவ்விக்கொண்டது. பாமாவின் புக்கைச் சொத்தெல்லாம் போய், அவளுக்கே சொந்தமான, அவளது பிறந்தகச் சொத்தான நகை நட்டுகளிலும் கை வைக்கும்படியான நிலைமையும் வந்துவிட்டது. அவள் அணிந்திருந்த ஆபரணங்கள், தோடு, மூக்குப்பொட்டி, சங்கிலிகள், வளையல்கள், ஒட்டியாணம் எல்லாம் ஒவ்வொன்முகக் கரைந்துவிட்டன.

பாமர கொதித்து எழுந்தாள். கிருஷ்ணனை வாயில் வந்தபடியெல்லாம் ஏசிக்காட்டி, "ஏன் இந்த மானங்கெட்ட பிழைப்பு? நீங்கள் பெளருஷம் வாய்ந்தவரா? ஏதாவது வேலை பார்த்து என் ஒருத்தியைக்கூட வைத்துக் காப்பாற்றத் துப்பில்லை? எழுந்து போங்கள் வெளியே! பெண்டாட்டி தன் நகைநட்டை விற்றுப்போட, உங்களுக்குச் சாப்பிடுவதற்குத்தான் வெட்கமாயில்லை? போங்கள், ஏதாவது சம்பாத்தியத்திற்கு வழி தேடிக்கொண்டு வாருங்கள்" என்று அவனைத் தூரத்தினுள்.

கிருஷ்ணன் எழுந்து சென்முன். ஆனுல் போன கொஞ்ச நேரத்திற்கெல்லாமே திரும்பி விட்டான். வெறுங்கையுடன்தான் வந்திருந்தான்.

அவ்வளவு சீக்கிரத்தில் அவன் திரும்பிவிட்டதைக் காண, பாமாவுக்கே ஆச்சரியமாக இருந்தது. அவள் பரிபூர்ணமாகப் பிரகாசிக்கும் வதனத்தில் மந்தகாசம் அரும்ப, "என்ன? காயா, பழமா?" என்முள் அவனை நோக்கி.

"ஒன்றும் இல்லை" என்று அமைதியாகக் கூறி நின்முன் கிருஷ்ணன். எல்லை காண முடியாத துக்கத்தின் சாயை பாமாவின் மதிவதனத்தில் படரத் தொடங்கியது. அவள் சிறிது மௌனமாக நின்முள்.

சட்டென்று கிருஷ்ணனின் முகத்தை உறுத்து விழித்தாள். "தெரியாதா பின்னே? உங்கள் மூஞ்சிக்கும் உங்கள் யோக்கியதைக்கும் எவன் வேலையை வைத்துக்கொண்டு காத்து நிற்பான் இந்தக் காலத்திலே? பைத்தியம், பைத்தியம் என்று ஊரே சிரிக்கிறது. என் தலையெழுத்தா! நான்தான் உங்களைக் கட்டிக்கொண்டு போராட வேண்டியிருக்கிறது. உற்முர் உறவினர் எல்லோரும் கை கழுவிவிட்டார்கள். இந்தத் தரித்திர தசையில், பித்துக்கொளியுடன் அழும் என்னைப் பின் யார்தாம் லக்ஷ்யம் செய்வார்கள்? என் அப்பாவும் அம்மாவுமோ மாப்பிள்ளையின் அழகான சமர்த்தைப் பார்த்து மனமொடிந்து போய் அப்போதே செத்துத் தொலைத்துவிட்டார்கள். எனென்று கேட்க நாதி இல்லாமல் போய்விட்டது எனக்கு. தூ! என்ன ஜன்மம் என் ஜன்மம்! பாழும் ஜன்மம்! எனக்கு ஒரு சாவு வராட்டே னென்கிறதே!" என்றெல்லாம் பொங்கினுள்.

அவளுடைய கமலக்கண்கள் கலங்கி நின்றன. "எதற்காகத்தான் என்னைக் கல்யாணம் செய்து கொண்டீர்கள்? தனியாக அக்கடா என்று இருப்பதுதானே? ஒரு பெண்ணின் பாவத்தில் அநியாயமாகக் கை வைக்கவா என்னைக் கைப் பிடித்தீர்கள்? சிவனே என்று மூலையில் கிடந்த என்னை ஏன் இப்படிச் சந்தி சிரிக்க அடிக்கிறீர்கள்? யோகீசுவராரம், சந்நியாசியாம்! எல்லோரும் கேலி செய்கிறார்கள், பைத்தியமாயிருக்கிறீர்கள் என்று. தலையில் துணியை மூடிக்கொண்டு காட்டிற்குப் போய் உட்கார்ந்துகொள்ளுகிறதானே? அவமானம்! காக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம்போல இருக்கிறது எனக்கு" என்று விசும்பினுள். இன்னும் தன் உள்ளக்கிடக்கையை எல்லாம் அவன் எதிரில் அன்று கொட்டியே தீர்த்துவிட்டாள். "இப்படி மாமாகிரி வந்து நிற்கிறீர்களே! நாளைச் சாப்பாட்டுக்கு வழி என்னவாகப்போகிறது? இருந்ததை எல்லாம் விற்றுத் தொலைத்துத் தின்றுவிட்டது. இனி? இனிமேல் என்னிடம் பாக்கி நிற்பது இதுதான்" என்று சொல்லி, தான் கழுத்தில் அணிந்திருந்த தாலிச்சாட்டின் நடுவில் தொங்கிய ஒரு சிறு பொன்மணியைத் தொட்டுக் காண்பித்தாள்; "இதையும் தீர்த்துவிட்டால்... அப்புறம்.."

அந்தக் கடைசி வாக்கியத்தை அவள் முடிக்கவில்லை. கண்களிலிருந்து நீர் ஆறுகப் பெருகு, பாமா ஈனஸ்வரத்திலே விக்கிக்கொண்டு நின்முள். வாய்ப்பு கூடாத தாபத்தினுலே அவளுக்கு ஆயாசம் மிகுந்தது. பின்புறம் இருந்த சுவரிலே அப்படியே சாய்ந்துவிட்டாள். தந்தத்தில் கடைந்தெடுத்த பதுமைபோல இருந்த அவளுக்கு ஆபரணம் இல்லாதது தனிக் கவர்ச்சியை அளித்தது. கண் கலங்கிச் சுவரில் சாய்ந்திருந்த அந்தத் தோற்றமே தனியழகு படைத்ததாக இருந்தது.

கல்லாகி, மரமாகி, ஸ்தம்பமாகி அவன் இன்னும் அப்படியே வாய் திறவாத பொம்மையாக அவள் எதிரில் நின்றது, அவளுக்கு மேலும் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது. ரௌத்திராகாரமாகச் சீறி எழுந்தாள். "உணர்வற்ற ஜடமாக எதற்காக இன்னும் என் எதிரில் நிற்கிறீர்கள், பழி மாதிரி? போதும் உங்களுடன் வாழ்வு. எங்கேயாவது கண் காணாத இடமாகப் பார்த்துத் தொலையுங்கள்" என்று கொதித்தவளாய், பாமா மின்னலைப்போல் சமையலறையுள் நுழைந்து முழு ஆங்காரத்துடன் 'படார்' என்று கதவை மூடித் தாழிட்டுக்கொண்டாள்.

சில நிமிஷங்கள் கழிந்த பின்னர் அவள் கதவைத் திறந்துகொண்டு மறுபடியும் வெளி வந்து பார்த்தபோது கிருஷ்ணனை அங்கே காணவில்லை. அந்தச் சிறிய வீட்டில் அவன் எங்கும் காணப்படவில்லை.

அதன் பிறகு அன்றைத்தினம் முழுவதுமே அவன் திரும்பி வரவில்லை.

மறுநாளும் அவன் வரவில்லை. அடுத்த நாளும் அப்படியே; சுற்றுப்புறத்திலும் அவனுடைய சுவடியையே காணவில்லை. அதற்கு முன் ஒரு நாளும் அவன் அப்படி வெளியிலே சேர்ந்தாற்போல் தங்கினதில்லை? ஒரு நாளும் இல்லாமல் அவன்...இப்படி...?

அவள் தன்னம்பிக்கையை இழந்துவிட்டாள். அவள் உள்ளத்தின் ஆழத்திலே 'சொரக்' என்றது. அக்கம்பக்கத்திலே விசாரிக்கலானாள்.

கிருஷ்ணன் மாயமாக மறைந்த நான்கு நாட்களுக்கெல்லாம் விஷயம் பாமாவின் காதுகளுக்கு எட்டியது. அவன் ஊருக்கு வடக்கே மலைச்சரிவில் உள்ள பாழ் மண்டபத்தில் தனியாக உட்கார்ந்திருந்ததைச் சேர்ந்தாற்போல் இரண்டு நாள் கண்டார்களாம், மாடு மேய்க்கும் சிறுவர்கள் என்ற சங்கதி வெளியாயிற்று..

"அப்படியா?", "முற்றிப்போய்விட்டதோ?" என்றெல்லாம் பரிகாசமாகச் சொல்லிச் சிரித்தனர் சிலர்.

"பார்த்தாயா? நான் அப்போதே சொல்லவில்லையா? அவன் பெரிய ஞானி ஐயா! எனக்கு மட்டும் தெரியும்: என்றைக்காவது ஒரு நாள் நிச்சயம் இப்படியும் நடந்துவிடும் என்று. பெரிய பெரிய மகான்களெல்லாம் பார்வைக்குப் பித்துக்கொள்ளியைப் போலத்தான் இருப்பார்கள்" என்றனர் சிலர்.

"நீறு பூத்த நெருப்பு" என்று சிலேடை விட்டனர் சிலர்.

"நல்ல அசடு! அந்தப் பெண் என்ன செய்யும், பாவம்!" என்று பரிதாபப்பட்டனர் மற்றும் சிலர்.

"இனி அவள் பாடு கஷ்டம்தான்!" இது ஒரு ரகம்.

பாமாவின் உள்ளத்தைக் கத்திகொண்டு அறுப்பன போல இருந்தன இத்தகைய பேச்சுக்கள். அவள் மனம் துடித்துத் தவித்தது. 'கடைசியில் என் கதி இப்படியா முடிந்துவிட்டது? விதி எனக்கு இந்தக் கடோரமான வழியையா காண்பித்தது?' என்றெல்லாம் எங்கிப்போனாள்.

ஊருக்குப் புறம்பான இடம். பாழ் மண்டபம். ஊருக்கு வடக்கே காடாரம்பம். ஆகையினால் அந்தப் பக்கம் மனித சஞ்சாரம் என்பதே எப்போதும் இராது. பாழ் மண்டபம் இருக்கும் அந்தப் பரந்த வெளியைச் சுற்றி வானளாவிய மலைகள். நிறத்தை, காடி முதலிய காட்டுமிருகங்களின் சஞ்சாரம் அந்த மலைப்பிரதேசங்களில் அதிகம். ஓநாய், காட்டுப் பூனை முதலிய விலங்குகளின் தொந்தரவும் யதேஷ்டம். மாடு மேய்க்கும் சிறுவர்களும் அதிக தூரம் உள் நுழைய அஞ்சுவார்கள்.

அந்தச் சமவெளியில் சிறிது நேரம் மாடுகளைத் திரியவிட்டு, பொழுது சாயுமுன்னரே ஓட்டிக்கொண்டு வந்துவிடுவார்கள்.

ஒரு நாள் இரவு, பூர்ணசந்திரிகை உச்சிவானத்திலே ஊசலாடும் சமயம் ஓர் உருவம் ஊருக்கு வடக்கேயுள்ள அந்தப் பாழ் மண்டபத்தை நோக்கி அதிவிரைவாகச் சென்றுகொண்டிருந்ததை அந்த ஊரின் எந்தக் கண்களும் பார்க்கவே இல்லை.

அந்த உருவம்தான் பாமா. ஊர் மோனத்தில் ஆழ்ந்திருந்த சமயம் பயங்கரத்தை நோக்கிப் பாய்ந்து சென்றாள்.

ஒன்று அந்த மண்டபத்திலே அல்லது அதன் அருகிலே கிருஷ்ணனைக் கண்டுபிடித்து அழைத்துக்கொண்டு, மற்றவர் பார்க்குமுன் திரும்பிவிடுவது; இல்லையோ, அப்படியே அங்கு இருக்கும் சகல விதமான பயங்கரங்களுக்கும் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டுவிடுவது. 'இரண்டில் ஒன்று' என்ற திடசங்கல்பத்துடனேதான் போனாள்.

எப்படியும், அந்த இரவே அவள் தயாரங்களுக்கெல்லாம் முடிவான இரவாக இருக்கவேண்டும். பொழுது விடிந்தால்—ஆம், பொழுது விடிந்தால்? நாளைப்பொழுது பாமாவிற்கு எப்படி விடியப் போகிறதோ!

அங்கே, அந்தப் பாழ் மண்டபத்திலே, பாமா கிருஷ்ணனைக் கண்டாள். மேல்துண்டைக் கீழே விரித்துக்கொண்டு, அவன் அண்ணாந்து பார்த்தபடி படுத்துக் கிடந்தான். சகிக்க முடியாத துக்கம் நிறைந்த விம்மல் ஒன்று பாமாவின் கண்டத்திலிருந்து வெளிப்பட்டது.

சூலைச் செலவுற்றதும் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான் கிருஷ்ணன். பாமா பொழியும் நிலவினிலே தேவலோகத்து மோஹினி என நின்றாள்.

"பாமா!"

"ஆமாம், என்னைத் தனியே தவிக்க விட்டு நீங்கள் இப்படி வரலாமா? என்ன இருந்தாலும் உங்களை விட்டால் எனக்கு வேறு கதி?" என்று விம்மினாள்.

"நீ சொன்னபடிதான் செய்தேன்."

"ஆமாம். நானும் சொன்னேன், நீங்களும் சன்மாக் கேட்டீர்கள்! இப்போது செய்தது மாதிரி - இதைத் தவிர, மற்ற விஷயங்களில் என் சொற்படி கேட்க்கூடாதா? எனக்கும் அது எத்தனையோ சந்தோஷத்தைக் கொடுக்குமே?"

அவன் மௌனமாக இருந்தான்.

"வாருங்கள், போகலாம்" என்று அவன் கையைப் பிடித்தாள் பாமா.

"எங்கே?"

"வீட்டுக்கு."

"நான் வரவில்லை, பாமா. அங்கே இருப்பதை விட எனக்கு இந்த இடந்தான் மிகவும் பிடித்திருக்கிறது."

"ஐயோ, வேண்டாம்! நான் தெரியாமல் அப்படிச் சொல்லிவிட்டேன். என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். இனி நான் உங்கள் விஷயத்தில் குறுக்கிடவே மாட்டேன். எழுந்து வாருங்கள். என்னைக் கைவிடாதீர்கள். நீங்கள் இல்லாமல் நான் ஒன்றியாக எப்படிக் காலம் தள்ளுவேன்? ஐயோ! சூரிய உலகம் தன் பயங்கரச் சுழலில் என்னை இழுத்துவிடுமே! எனக்குப் பயமாயிருக்கிறது. இங்கு இருக்கவே பிடிக்கவில்லை. எழுந்து வாருங்களேன்" என்று அவனைப் பிடித்துக்கொண்டு மன்றாடினாள்.

"நான் வரவில்லை, பாமா! எனக்கு இதுதான் சன்றாயிருக்கிறது. உனக்கு இஷ்டமானால், நீயும் இங்கேயே தங்கிவிடேன்."

அவன் குரலில் தொனித்த பிடிவாதத்தை உணர்ந்த பாமா திடுக்கிட்டாள். எப்போதுமே வாயைத் திறந்து அதிகம் பேசாத அவன் இப்போது இந்த மட்டுமாவது சொன்னானே என்று உள்ளூற ஆனந்தமும் அடைந்தாள்.

இருட்டில் அமர்ந்திருந்த அவன் முகத்தை அவள் உற்று நோக்கினாள். நிலவொளியின் பிரதிபலிப்பிலே அவன் கண்கள் இரண்டும் 'பளபள' வென்று ஒளி வீசின. அவன் அவள் வதனத்தையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருப்பதை அறிந்தாள். வெட்கம் கொண்டவளாய்த் தலை குனிந்துகொண்டாள். பள்ளத்தாக்கிலிருந்து வீசிய குளிர் காற்றிலே அவள் உடம்பு நடுக்கமெடுத்தது. சிறிது நேரம் அப்படியே நின்ற பின்னர் அவனருகில் தானும் அமர்ந்தாள்.

2

கீழ்வானம் வெளுத்ததில். சூரியோதயமாகப் போகும் ஆனந்தத்தினால் புள்ளினங்கள் கீதம் இசைக்கத் தொடங்கின. உதயாசலத்தின் அந்த அபூர்வ இன்னிசையுடனே கிருஷ்ணனும் பாமாவும் துயிலெழுந்தார்கள்.

விவரிக்க முடியாத சந்தோஷத்தினால் பாமாவின் உள்ளம் துள்ளிக் குதித்தது. சுற்றிலும் எங்கு நோக்கினும் ஆகாயமளாவிய மலைகள்; மலையுச்சியில் தேங்கி நிற்கும் மேகவரிசை; பிரம்மாண்டமான புகைப்படலத்தைப்போல அந்த மேகந்தான் பார்ப்பதற்கு எத்தனை கவர்ச்சிகரமாக இருக்கிறது! கறுத்து விளங்கும் அம் மேகமண்டலத்தின் கீழே பறக்கும் அந்த நாரைக்கூட்டம்! ஆஹா! என்ன பின்னணி! எத்தனை பிரம்மாண்டமாக இருக்கிறது! கீழே பரந்து கிடக்கும் புல்வெளி; எந்தப் பக்கம் பார்த்தாலும் பசுமை!

பாமா எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே இருந்தாள். தனது உள்ளம் கவித்துவம் வாய்ந்ததாக இருக்கக்கூடாதா என்ற அடக்க முடியாத ஆசை தோன்றியது. இயற்கையின் மந்தகாசத்தினிடையே, அடி வானத்தின் வெண்மை அதிகமாகிக்கொண்டே, கடைசியில் தேஜோமயமான சூரியோதயமாயிற்று.

கால தேவனின் முதற் கிரணம் பள்ளத்தாக்கின் வழியே பாய்ந்து, பாமாவின் முகாரவிந்தத்திலே விளையாடத் தொடங்கியது.

பொங்கிவரும் உள்ளத்துடனே பாமா தன் இரு மலர்க்கரங்களையும் ஆனந்தத்தினால் ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு, "எப்போதும் இப்படியே இருக்கக்கூடாதா என்று இருக்கிறது! இல்லையா?" என்று தன் கணவனைப் பார்த்துச் சொன்னாள்.

அவனும் தனக்குள் அதை வெகுவாக ரசித்துக்கொண்டிருந்ததாகத்தான் பட்டது. புன்சிரிப்புடன் தலையசைத்தான் அவளை நோக்கி.

"என்ன ரம்யமாக இருக்கிறது!" என்று மேலும் சொன்னாள் பாமா; "அழகான இடத்தைத்தான் நீங்களும் கண்டுபிடித்துக்கொண்டு வந்திருக்கிறீர்கள். ஒரு தடவை இந்த இடத்திற்கு வந்துவிட்டால் மறுபடி இதை விட்டுப் பிரியவே மனம் இராது போலிருக்கிறதே? நீங்கள் சொன்னது போல் எக்கும் இங்கேயே, இப்படியே இருந்து விடலாம் என்றுதான் தோன்றுகிறது" என்று சிரித்தபடியே பேசினாள்.

"ஆஞல்..இன்னும் கொஞ்ச நேரம் போனால் யாராவது மாடு மேய்க்கும் சிறுவர்கள் இந்தப் பக்கம் வந்து நம்மைக் கண்டுவிட்டால்? இந்த மனிதர்கள் மூஞ்சியிலேயே மறுபடியும் விழிக்க வேண்டாமே? ஜனசஞ்சாரமற்ற ஓர் இடத்திற்கு, அவர்கள் வரவே முடியாத இடமாக எங்காவது" என்று சொல்லி ஒரு க்ஷணம் யோசித்தாள் பாமா.

பிறகு 'சடக்'கென்று தலை நிமிர்ந்து, அருகில் அமர்ந்திருந்த கிருஷ்ணனை நோக்கி, "அதோ, அந்த மலைக்குள், ரொம்ப தூரத்தில் அடர்ந்த காட்டிற்குள், மேலே போய்விடலாம். வருகிறீர்

களா?" என்று அடக்க முடியாத ஆவலுடனே வினவினாள்.

திகைப்படைந்து போனவளுக்குக் காணப்பட்ட கிருஷ்ணன் பரமாவின் முகத்தையே கூர்ந்து கவனித்தான். களங்கமற்ற அந்த அழகிய வதனத்திலே அவன் எதையோ ஆவலுடன் தேடுவதுபோல இருந்தது.

"வருகிறீர்களா, மேலே? அங்கேயுந்தான் போய்ப் பார்க்கலாமே, எப்படியிருக்கிறதென்று! வருகிறீர்களா?" என்று அவன் தோள்களைப் பிடித்து உலுக்கினாள் பாமா.

கிருஷ்ணன் வாய்திறவாமல் எழுந்து நின்றான். அவன் வலது கையில் தன் வலக்காத்தைக் கோத்து, அவனை இழுத்துக்கொண்டு முன்னே சென்றாள் பாமா.

சூரியன் மலைகளுக்கிடையில் எட்டிப் பார்த்துக் கொண்டு எழுந்தான். குளுமையான இளங்காலைக் காற்று அவர்களை மிருதுவாக ஸ்பர்சித்துச் சென்றது. அதனால் பசுமையான உள்ளங்களுடனே அவ்விருவரும் அந்த மலைப்பாதையிலே மெதுவாக முன்னேறிப் போனார்கள்.

3

முள்ளும், கல்லுமாய், காடுமேடாய் இருந்த அம்மலைகளிலே அவர்கள் வழியுண்டாக்கிக் கொண்டு போனார்கள்.

சில சமயம் ஏறிக் குதித்துப் போனார்கள்; சில சமயம் நெடுகிலும் அடர்ந்து படர்ந்திருந்த காட்டுச் செடிகொடிகளை விலக்கிக்கொண்டு போனார்கள். ஒவ்வொரு பொழுது, இண்டு இடுக்குகளிலே தரையோடு தரையாகக் குனிந்து படுத்து ஊர்ந்து தவழ்ந்து சென்றார்கள். அபாயகரமான மூலை முடுக்குகளிலே சர்வ ஜாக்கிரதையாகப் போனார்கள். திடீரென்று எதிர்ப்பட்ட பயங்கரமான திருப்பங்களிலே, உயிரை வெறுத்து மூச்சைப் பிடித்துக்கொண்டு சென்றார்கள். பேய்க்கண்டே இருந்தார்கள்; நிற்காமல் பேய்க் கொண்டிருந்தார்கள். அப்படிச் செல்லும்பொழுது, நெடுகிலும் காணப்பட்ட இயற்கையின் அதிசயிக்கத்தக்க அற்புதங்களை எல்லாம் பாமா பார்த்துக் கொண்டே போனாள். தான் பார்ப்பவற்றை ஆச்சரியம் தாங்காமல், அவனுக்கும் காண்பித்துக் கொண்டே சென்றாள்.

சில இடங்களில் இயற்கைத் தேவியின் புன் முறுவல் தவழும்; சில இடங்களில் அவள் பல்லைக் காட்டிச் சிரிப்பாள்; இன்னொரு பக்கத்திலே வெறிகொண்ட ஹாஹாகாரம்; வேறொரு மூலையில் பயங்கரத் தாண்டவம்; மற்றுமொரு திக்கில் ஆனந்த நிருத்தியம். மயிர்க் கூச்செடுக்கச் செய்யும் பயங்கரமான மலைச்சரிவுகள். அதில் இயற்கையின் மோகன உரு அத்தனையும் குடி கொண்டிருக்கும். ஓர் இடத்தில் மலை இரண்டாகப் பிளந்திருக்கும். சற்று எட்ட நின்று பார்த்தால் வெகு எளிதில் தாண்டிவிடக்கூடிய தாய்த் தோன்றும். கிட்ட நெருங்கினாலோ மலைப்புத் தட்டும்; குனிந்து பார்த்தாலோ 'கிடு கிடு' பாதாளம்; முடிவே தெரியாத இருண்ட குழி. எந்த இடத்தில் பயங்கரம் இருந்ததோ அந்த இடத்தில் அழகு காணப்பட்டது. எங்கே கோரம் கூத்தாடிற்றோ அங்கே கவர்ச்சி இருந்தது; எங்கு அபாயம் இருந்ததோ அங்கு மோகனம் தவழ்ந்தது.

நெடுவே சின்னஞ்சிறு மலையருவிகள் உருண்டோடி, அங்கங்கே ஆழம் காண முடியாத பாதாளங்களில் விழுந்து மறையும். அப்போதெல்லாம் பாமாவின் உள்ளமும், விழுந்தோடும் அருவியைப் போலவே, அடக்க முடியாத குதூகலத்தால் துள்ளியாடும். பொங்கி வழியும் ஆனந்தத்தினால் சிறு குழந்தையைப் போலவே கைகொட்டி ஆர்ப்பரிப்பாள். சலசலக்கும் தண்ணீரைக் கைகளினால் வாரி வாரி இறைப்பாள்; அள்ளி அள்ளிக் குடிப்பாள்; வந்து வந்து முகத்தில் விட்டுக்கொள்வாள். நடுநடுவே கிருஷ்ணனைப் பார்த்துச் சிரிப்பாள்.

சில சமயம் அவர்கள் சமதரையில் போவார்கள். சில சமயம் சரிவுகளில் ஏறுவார்கள்; திடீரென்று கீழே இறங்குவார்கள்; சட்டென்று குதிப்பார்கள்; மறுகணம் பெரும் பெரும் பாறைகளுக்கிடையில் தொத்திக்கொண்டு ஏறுவார்கள். மூடி வில்லாமல் போய்க்கொண்டிருந்தவர்கள் போலே காணப்பட்டார்கள்.

வழி நெடுகிலும் விதவிதமான விருக்ஷங்கள்; ரனத்தை மூட்டிநின்ற நீண்ட மரங்கள்; தரையுடன் தரையாய்த் தழைத்து நின்ற தருக்கள். அவற்றில் எல்லாம் விதவிதமான காய்களும் கனிகளும் குலைகுலையாகக் காணப்பட்டன. பக்ஷிகள் கொறித்தது போக, மிருகங்கள் தின்றது போக, ஏராளமான காய், கனி, கிழங்கு வகைகள், எனென்று கேட்பாரின்றி உதிர்ந்து கிடந்தன. அவற்றையெல்லாம் வெகு ஆசையுடனே, இதோன்றும், அதோன்றுமாக, வாயில் போட்டுக்கொண்டு சுவைத்துப் பார்ப்பாள், பாமா.

"அடே, இது என்ன பழம்! சொம்ப ருசியாக இருக்கிறதே? இந்தாருங்கள்; இதை நீங்களும் வாயில் போட்டுக்கொண்டு பாருங்கள்!" என்று இனிமையுடன் சொல்லிக் கிருஷ்ணனுக்கும் கொடுப்பாள்.

எங்கு நோக்கினும் பூத்துச் சொரிந்துகொண்டிருந்த காட்டுச் செடிகொடிகளிலிருந்து நிறநிறமான புஷ்பங்களைப் பறித்துத் தன் கூந்தலில் செருகிக்கொண்டு அவனைப் பார்த்து, "எப்படி இருக்கிறது! நன்றாக இருக்கிறேனா?" என்று இன்மொழிகளில் கொஞ்சுவாள். அவனோ மௌனியாகி மலைத்து நிற்பான்.

(தொடரும்)



ரேணுகா

விக்குவான். வி. துரைசாமி

ஆற்றில் குளித்திட்டு நாலிருந்தேன்—
ஆகாய மீதிற் றவழ்ந்து சென்றான் [அவன்
வேற்றுரு வொன்றுதண் ணீரிலே—விழ
வேட்கை யுடன்சற்றே பார்த்துவிட்டேன்.

கான மிசைத்தந்தக் கந்தருவன்—நீல
வான வெளியினில் வட்டமிட்டான்.
மோன நிலைதடு மாறிவிட்டேன்—முழு
மோசம்போ னேன்என்ன பாசமிது ?

பெண்ணைப் பிறந்து வளர்ந்திட்டநாள்—
பேதையான் இத்தகைப் பேரழகை [முதல்
கண்ணுரக் கண்டு களித்ததில்லை!—இது
கனவோஎன் றெண்ணிக் களித்துவிட்டேன்!

காட்டி லமைத்த குடிலுக்குள்ளே-என்றன்
காதல் கணவனைக் கைப்பிடித்தேன்;
கூட்டிருெருப்பிற் சமித்தினை யிட்டுக்
குழைந்திட லன்றிவே றென்றறியேன் !

நிஷ்டையில் மூழ்கி அவனிருப்பான்—யான்
கஷ்டத்தி லாழ்ந்து கரைந்திடுவேன்.
அஷ்ட திசையிலும் என்னை நிகர்த்தஓர்
ஆணங்கு மில்லை ஆ ! கொடிதே.

மணலிற் குடம் செய்து நீர்கொணர்வேன்—
மாமுனி யின்தூய நேமத்திற்கே [நிதம்
கணநேர மாயினும் காலனைப்போல்—அவன்
கண்ணை யுருட்டிச் சினந்திடுவான்.

அன்று மணல்குட மாகவில்லை—என்றன்
ஆகம் நடுங்கி யழுதுவிட்டேன்.
என்று மிலாத பழிவந்து சூழ்ந்ததை
எண்ணித் தேம்பியழு தேங்கிவிட்டேன்.

இடையிற் குடத்தினை ஏந்தவில்லை - ஆனால்
இதயத்தி லில்துயர் ஏந்திவிட்டேன் !
உடைபட்ட நெஞ்சை உணர்ந்துவிட்டான்;
ஓங்கியகோபக் கனல்சொரிந்தான்.[—முனி

மாதக் கணக்கில் சுமந்து பெற்றேன்—என்
மடியில் கிடத்திப்பா லூட்டிவிட்டேன்.
காதல் மொழிபல கொட்டி வளர்த்தஎன்
கண்மணி யேகொடுங் காலனனன்.

சிறைத் தெய்வங்களின் - - - - திருவிளையாடல்கள்

டாக்டர் தி. சே. சௌ. ராஜன்

பாளையங்கோட்டைச் சிறையில் எனக்கென்று ஒரு தனி முறை கையாளப்பட்டு வந்தது. கொலைக் குற்றம் செய்பவர்களுக்கு ஒதுக்கி வைக்கும் தக்க பாதுகாப்புள்ள ஒரு சவுக்கம் எனக்காக ஒதுக்கப்பட்டது. அதற்குள் நான்கு புறமும் அடைக்கப்பட்டுள்ள மூன்று அறைகள் கொண்ட ஒரு பெரிய சிறையில் நான் வைக்கப் பட்டேன். எந்தப் புறத்திலிருந்தும் வார்டர்களோ கைதிகளோ அணுக முடியாத சவுக்கத்தின் கதவும், நான் இருக்கும் பெரிய சிறையின் கதவும் பூட்டப்பட்டுச் சாவி ஜெயிலருடைய பாதுகாப்பில் இருந்தது. ஜெயில் தலைமை அதிகாரி, ஜெயிலர், பெரிய டாக்டர் இவர்களைத் தவிர வேறு யாரும் அணுகமுடியாமல் இருந்தது. எனக்குத் தேவையான உணவுப் பொருள்களையும், மற்ற வசதிகளையும் ஜெயிலர் நேரிலேதான் கொண்டுவந்து கொடுக்கவேண்டும். கூட்டுவது, தண்ணீர் நிரப்புவது முதலிய வேலைகளைத் தாமே நேரில் நின்று கைதிகளைக் கொண்டு முடித்தவிட்டு இரண்டு கேட்டுகளையும் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டு போய்விடுவார். பிறகு சாயங்காலம் ஒரு ராத்தலை என்னைப் பூட்டியிருக்கும் அறைக்கு முன் பாகு வைத்துப் போவார். மூன்று அறைகளில் ஒன்று நானே சமையல் செய்துகொள்வதற்காக; மற்றொன்று என் புத்தகங்கள், வேறு சாமான்கள் வைப்பதற்காக; மூன்றாவது நான் படுப்பதற்காக. ஜெயிலர் திருமுக தரிசனம் ஒரு நாளைக்கு இரண்டு வேளையும், தலைமை அதிகாரியின் தரிசனம் இரண்டு நாளைக்கு ஒரு தரமும், ஆஸ்பத்திரி பெரிய டாக்டர் தரிசனம் வாரம் இரு முறையும் எனக்குக் கிடைக்கும். மற்ற வேளைகளில் மனிதர்கள் முகம் பார்க்க முடியாது. இந்தக் காவல் தனிக்காவலா? வெறுங்காவலா? குற்ற வாளிக்குரிய கடினக்காவல் தண்டனையுடன் சேர்ந்ததா? இன்னதென்று எனக்குத் தெரியவில்லை.

என்னைத் தண்டித்த அதிகாரி எனக்கு வெறுங் காவல் தண்டனைதான் விதித்திருந்தார். எனினும் கொலைக்குற்றம் செய்தவனுக்கு விதிப்பதைக் காட்டிலும் கடினமான தனிக்காவல் எனக்குப் பாளையங்கோட்டையில் கிடைத்தது. கொலைக் குற்றம் செய்தவர்களுக்காகிலும் எப்பொழுதும் இரவு பகலாகக் காவலாளிகள் ஓயாது காவல் காத்துக்கொண்டும், அவர்களுடன் பேசிக்கொண்டும் இருப்பார்கள். எனக்கோ மனித வாசனைகூட அடிக்கவொட்டாமல் தடுக்கும் விசேஷ முறை கையாளப்பட்டது. ஜெயில் சட்டத்திலேயே இம்மாதிரி கடுத்த ஒரு விதியும் இல்லை.

"என் உனக்கு மாத்திரம் இந்த விதிகளை மாகாணச் சிறைகளின் தலைமை அதிகாரியே நேரில் எற்பாடு செய்து என்னையும் அந்த முறையிலிருந்து வழுவாமல் உன்னைக் கவனிக்கும்படி உத்தரவிட்டிருக்கிறார்? நீ கோயம்புத்தூர்ச் சிறையில் என்ன செய்தாய்?" என்று பாளையங்கோட்டைச் சிறை அதிகாரி கேட்டார்.

"நான் ஒன்றும் செய்யவில்லை. மாகாணச் சிறை அதிகாரியின் உத்தரவில்லாமல் காலரா நோய் கோயம்புத்தூர்ச் சிறையில் தாண்டவமாடியது. அந்த நோய் இல்லையென்று மறைக்க அந்தச் சிறை டாக்டர் மூன்றும் மூடியாமல் போய்விட்டது. ஜெயில் சூட்டு உடைந்துவிட்டது. இந்தச் சங்கதி வெளிவந்தது என்னால் இருக்கலாம் என்கிற சந்தேகத்தின் மேல் என்னை இந்த வீபரீதங்களுக்கு உட்படுத்தியிருக்கலாம்" என்று சொன்னேன். என்ன சொல்லி, என்ன? சுப்பிரண்டென்டு குருநாதையா தம் குருநாதனான மாகாண அதிகாரியின் உத்தரவுக்கு மாறுக உடப்பதைக் கனவிலும் நினைக்கக்கூடிய பேர்வழி அல்ல.

பாளையங்கோட்டை திருநெல்வேலி ஜில்லா 'மெடிக்கல் ஆபீஸரு'டைய தலைமை ஸ்தானம். அவரே நான் இருந்த சிறைக்கு வைத்திய அதிகாரி. அவர் டாக்டர் ஈவர்ஸ் என்ற துரை. திருச்சி ஜில்லா வைத்திய அதிகாரியாக அவர் இருந்த காலத்தில் எனக்கு நண்பரானர். அவருடைய வேண்டுகோளுக்கிணங்க நான் பன்முறை திருச்சி ஜில்லா ஆஸ்பத்திரியில் ரண சிகிச்சையில் புது முறைகளைச் செய்து காண்பித்திருக்கிறேன். அவர் மனைவியாரும் சீமையிலே படித்துத் தேர்ச்சி பெற்ற டாக்டர். அவர்கள் திருச்சியை விட்டு மாற்றலாகிப் போனபிறகு சில வருஷங்களாக நான் அவரைச் சந்திக்கவில்லை. நான் பாளையங்கோட்டைச் சிறைக்கு வந்தவுடன் டாக்டர் ஈவர்ஸ் சில காட்கள் விடுமுறை எடுத்துக்கொண்டு, ஊருக்குப்

போய்விட்டுப் பத்து நாட்களுக்குப் பிறகு வந்த வுடன் என்னைப் பார்க்க வந்தார். என்னைக் கண்ட தும், அவர் கண்ணில் தாரை தாரையாக நீர் வந்துவிட்டது. "நீ ஒரு கைதியாகவும், நான் உனக்கு டாக்டராகவுமா இவ்வளவு நாள் பொறுத் துச் சந்திக்கவேண்டும்?" என்று சொல்லி, "எவ் விதத்திலும் நீ வெளியே போய்விட வேண்டும். ஜாமீன் கொடுத்துவிட்டு இந்தக் கொடுமையி னின்றும் தப்பி என் வெளியேறக்கூடாது?" என்றார்.

"அப்படி வெளியேறுவதென்றால் இந்த நான்கு மாதங்கள் சிறையில் இருந்திருக்க வேண் டியதில்லையே. என் தகப்பனார் நான் சிறையில் இருக்கும்பொழுதே இறந்துவிட்டார். இந்த உலகத்தில் அன்பு என்று சொல்லும் பதத்தின் பொருளே நான் அறிந்திருக்கிறேன் என்றால் அவ ருடைய அளவுகடந்த பிரியத்தினால்தான். அவர் இறந்த செய்தியைக் கேரளப்புத்தூரில் எனக்குத் தெரிவிக்க வந்த ஜெயில் அதிகாரி அப்பொழுதே ஜாமீன் கொடுத்தால் என்னை விடுதலை செய்வ தாகத் தெரிவித்தார். அதற்கு நான் உடன்பட வில்லை. உங்களைப்போன்ற ஓர் அருமை நண்ப ரால் தாற்பாற்றப்படக்கூடிய நிலையில் நான் இருப்பது என் அதிருஷ்டம் என்று நினைக்கி றேன். ஆகையால் எனக்கு அவசியம் தேவை யான சில வசதிகளைத் தாங்கள் சிறை டாக்டர் என்கிற முறையில் எனக்கு அளித்தால் போது மானது" என்றேன். அன்று முதல் எனக்கு ஒரு நேரம் பாலும், காலையில் காபியும் கொடுக்கும்படி அவர் உத்தரவு செய்தார்.

குருநாதையாவுக்கு இந்தச் சிபாரிசு பிடிக்க வில்லை. எனினும் டாக்டர் எழுதிவிட்டார். என்ன செய்கிறது? "காபிபோடத் தெரிந்தவர்கள் இந்தச் சிறையில் ஒருவரும் இல்லை" என்ற ஆட்சே பத்தைக் கிளப்பினர். "பாலாயில்லை. கொட் டையாக வாங்கி எனக்குக் கொடுங்கள். நானே தயாரித்துக் கொள்ளுகிறேன்" என்றவுடன், கடையிலிருந்து மலிவான பிஞ்சுக்கொட்டை ஒரு பொட்டலம் வாங்கி எனக்கு அனுப்பப்பட்டது. அதை வறுத்தவுடன் எல்லாம் கருகிவிட்டது. காபி தயாரிக்க முடியவில்லை.

மறுவாரம் டாக்டர் வந்தபொழுது, "காபி குடிக் கிறீயா?" என்று கேட்டார். "இல்லை" என் றேன். ஏனென்று விசாரிக்க, நான் வைத்திருந்த காபித்தூளைக் காண்பித்தேன். "உங்களுக்கு இவரைத் தெரியாது. இந்தக் காபியைக் காட்டி லும் கல்ல காபி இவர் குடித்துப் பழக்கமுண்டு. ஆகையால் இவருக்கு ஒரு டின் ஸ்டெயின்ஸ் காபித்தூள் கொடுக்கவேண்டும்" என்று எழுதி விட்டார் டாக்டர். குருநாதையா எதோ தம் பிதுரார்ஜித சொத்திலிருந்து எடுத்துக் கொடுப் பதுபோலக் கஷ்டப்பட்டார். ஒருவேளை தம் குருநாதராகிய மாகாணச் சிறை அதிகாரி என்ன சொல்வாரோ என்ற பயமோ, எனக்குத் தெரியாது. இந்தத் தனிச் சிறைவாசம் சில மாதங்கள் நடந்தது. அதன் பிறகு எனது தனி மையைத் தீர்க்க ஒரு சந்தர்ப்பம் கிடைட்டது.

ஒருநாள் டாக்டர் ஈவர்ஸ் துரை என்னுடன் பேசிக்கொண்டிருக்கையில், சிறையில் கைதி களுக்கு மலத்தில் கொக்கிப் பூச்சி உபத்திரவம் அதிகமாக இருப்பதால், அதைப் பரிசீலனை செய்து ஓர் அறிக்கை தயாரித்து அனுப்பும்படியாகச் சென்னைச் சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருப்ப தாகத் தெரிவித்தார். "ஆனால் இத்தப் பரிசீலனை செய்யும் அநுபவம் எனக்கு இல்லை. ஆகையால் இந்த வேலை தெரிந்த ஒரு நிபுணரைக் கொண்டு பரிசீலனை செய்யவேண்டும் என்று பதில் எழுதி விட்டேன்" என்று சொன்னார்.

"அந்த வேலை எனக்குத் தெரியும். அதைச் செய்துகொண்டிருந்தால் எனக்கும் இத்தத் தனி மையில் பொழுதுபோக்காக இருக்கும். சர்க்கா ருக்கும் மாதம் ஒன்றுக்கு எண்ணூறு ரூபாய் மீதம் ஸ்பெஷல் ஆபீலருக்குக் கொடுக்கவேண்டிய சம்பளம் மிஞ்சுமாகும். சுமார் ஆறு மாத வேலை இருக்கலாம். மொத்தத்தில் 4800 ரூபாய் சர்க்கா ருக்கு ஆதாயம் ஏற்படும்" என்றேன்.

"நீயோ வெறும் தண்டனை பெற்றவன். மேலும் உன் விஷயத்தில் எதற்கும் மாகாணச் சிறை அதிகாரியிடமிருந்து கேட்டுக்கொண்டுதான் அவர் உத்தரவு கிடைத்ததன்பேரில் செய்ய வேண்டியிருக்கிறது. வேலை செய்ய உன்னைக் கட்டாயப்படுத்தச் சட்டம் இல்லை. வேண்டு மானால் நீ இத்தப் பரிசோதனை செய்ய இஷ்டப் படுவதாக எழுதுகிறேன். அதற்கு உனக்குத் தேவையான உதவியை ஏற்பாடு செய்வதற்கும் உத்தரவு கேட்கிறேன். சாதகமாக உத்தரவு கிடைக்குமானால் உனக்குத் தெரிவிக்கிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

சுமார் பத்து நாட்களுக்குப் பிறகு உத்தரவு வந்தது. வேலை எனது சொந்த இஷ்டத்தின் மேல் நான் செய்ய ஒப்புக்கொண்டதாகத் தெளிவுபடுத்திக்கொண்டு என்னை வேலையைத் தொடங்க உத்தரவு போட்டார். அதற்காக என் னீழ் வேலைசெய்யச் சிறையின் சிறிய வைத்திய அதிகாரியை, தினந்தோறும் குறைந்தது ஒரு மணி நேரம் எனது சிறைக்கு வரவும், பரிசோதிப்ப தற்கு அவசியமான மைக்ராஸ்கோப் (பூதக் கண் ணாடி) முதலிய கருவிகளையும், மலத்தைச் சேக ரித்துக் கொண்டுவந்து கொடுத்து உதவிசெய்ய ஒரு தோட்டிக் கைதியையும் ஏற்பாடு செய்தார். தினந்தோறும் எஞ்சிய நேரங்களில் இத்தச் சிப்பந்தி களின் உதவியோடு வேலையை இரண்டு மாதத் திற்குள் முடித்து அறிக்கையும் தயாரித்துக் கொடுத்தேன். இந்த வேலையினூடும், என்னு

டன் வைத்தியக் கல்லூரியில் படித்த சிறை உதவி வைத்திய அதிகாரியாகிய நீலகண்டையருடைய தயவினாலும், எனது தனிமைச் சிறை வாசம் சகிக்கக்கூடியதாயிற்று.

இந்த வேலை முடிந்ததும் என் இடது கையில் ஒரு சிறிய ரத்தக்கட்டி போன்ற வீக்கம் உண்டாயிற்று. அதன்மேல் காய்ச்சல் கண்டது. என் நண்பர் டாக்டர் நீலகண்டையர் வேறு வேலைக்கு மாற்றப்பட்டார். எனது சிறையிலேயே சுமார் இரு பது நாட்களுக்கு மேல் அவதிப்பட்டுக் கொண்டு கிடந்தேன். இந்தப் படுமோசமான நிலையில்கூட எனது தனிமை நீக்கப்படவில்லை. இரவில் மட்டும் ஒரு கைதியை என்னுடன் பூட்டி வைத்தார்கள். ஒருகால் நான் இறந்துபோய்விட்டால் அந்த நேரம் சிறை அதிகாரிக்குத் தகவல் கொடுப்பதற்காகவோ என்னவோ தெரியாது. சிறை டாக்டரும் தம்மால் இயன்ற அளவு எனக்குச் சிகிச்சை செய்ய அரும்பாடு பட்டார். மூன்று முறை மயக்கம் கொடுத்துக் கையில் பல இடங்களில் சத்திர சிகிச்சை செய்தார். ஒன்றும் பயன் படவில்லை. காய்ச்சல் நாளுக்கு நாள் அதிகரித்து எனது உடம்பும் மிகக் கேவலமான நிலைக்கு வந்துவிட்டது.

டாக்டர் ஈவர்ஸுக்கும் என்பொருட்டுக் கவலை அதிகமாயிற்று. "என் முன்னிலையில் நீ தினந் தோறும் நோயினல் அவதியுற, என்னல் இயன்றதைச் செய்துங்கூட உனது உடல் நிலை கேவலமாகி, உனது உயிர் ஆபத்தான நிலையில் வந்து கொண்டிருப்பதைப் பார்க்க என்னல் சகிக்க முடியவில்லை. என் பொருட்டாகவாவது நீ ஜாமீன் கொடுத்து வெளியே சென்ற தக்க வைத்திய உதவி பெறக்கூடாதா? என் பிடிவாதம் செய்கிறாய்?" என்றார். ஒரே ஒரு பதில்தான் அவருக்கு நான் சொன்னேன். "மாதம் பத்திற்கு மேலாக அளவற்ற தன்பத்திற்கும், கொடிய நடவடிக்கைக்கும் உள்ளாகிச் சிறை நீங்கும் காலம் நெருங்கும்பொழுது, ஜாமீன் கொடுத்து வெளியே போய் வாழ்ந்திருப்பதில் என்ன பயன்? இருந்தாலும் இறந்தாலும் கவலையில்லை. அவமானத்திற்குள்ளான ஒரு கொடிய உத்தரவிற்கு உடன்பட இப்பொழுதும் என் மனம் இடம் கொடுக்கவில்லை. தயவு செய்து என் நண்பர் என்கிற முறையில் என்னை மன்னிக்கவேண்டும். உங்களால் இயன்ற வரையில், அதிகாரிகள் இணங்குமட்டிலும் தாங்கள் செய்த உதவிகளுக்கு எனது நன்றி" என்றேன்.

அவரை அறியாமல் அவர் கண்களில் நீர் ததும்பியது. "என்ன வந்தாலும் சரி. உன்னை இந்தச் சிறையில் இறக்க விடமாட்டேன். இன்றே தந்தி கொடுத்து, உன்னை ஸ்ளத்தினம் பாளையங்கோட்டை ஜில்லா ஆஸ்பத்திரிக்கு எனது தினசரிப் பார்வையில் வைத்துக்கொள்ளும்படி தாற்காலிக விடுதலை கோரி ஏற்பாடு செய்கிறேன்" என்றதும் என் மனம் ஆறுதல் அடைந்தது. மறுநாள் காலையில் டாக்டர் ஈவர்ஸும் அவர் மனைவியாரும் தங்களுடைய காரில் சிறையினின்றும் என்னைப் பாளையங்கோட்டை ஜில்லா ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார்கள்.

அங்கு ஒரு வாரம் தங்கினேன். மறுபடியும் ஆபரேஷன் செய்தார்கள். பயன் இல்லை; காய்ச்சலும் அதிகப்பட்டுக்கொண்டே இருந்தது. கை முற்றும் ஒரே வீக்கமும் வலியுமாக, தோள்பட்டை வரையில் கனத்தவிட்டது. நெடுநேரம் உணர்ச்சியற்ற நிலையில் உளறிக்கொண்டு இருந்தேன். கடைசியாக எனக்கே உயிர் பிழைப்பது அரிது எனத் தோன்றியது.

பாளையங்கோட்டை ஜில்லா ஆஸ்பத்திரி சிறை ஆஸ்பத்திரியைவிடக் கேவலம். சுவர்களெல்லாம் மூட்டைப்பூச்சி. இரவில் கூரையிலிருந்து மழை பொழிவதுபோல என் கட்டிலில் மூட்டைப் பூச்சிகள் உதிரும். படுக்கை, கட்டில் எல்லாம் மோசம். இத்தக் கஷ்டத்தை ஈடு செய்தன, டாக்டரின் அநுதாபமும், அவர் மனைவியாரின் உபசரணையும். ஒரு வாரக் கடைசியில் டாக்டரிடம் முடிவாக ஒரு வார்த்தை சொன்னேன்: "நான் இறக்கும் தறுவாயில் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் உயிர் போவதற்குள் ஒருதரம் சென்னை சென்று அங்கே ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஏதாகிலும் செய்ய முடியுமா என்று பார்த்துவிட வேண்டும் என்கிற எண்ணம் இருக்கிறது. என்னை அங்கே அனுப்புங்கள். இதுதான் நீங்கள் செய்யக்கூடியது."

"உன்னைச் சென்னைக்கு அனுப்ப நான் நேற்றைத் தினமே யோசித்தேன். ஆனல் சிறை அதிகாரி குருநாதையா உன்னை அங்கே அனுப்பச் சர்க்கார் உத்தரவு வேண்டுமென்றும், உன்னை ஜில்லா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவருவதற்கு மாத்திரமே உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் சொல்லுகிறார். நான் என்ன செய்யட்டும்?" என்றார்.

"நீங்கள் உத்தரவு பெறுவதற்குள் நான் இறந்துவிடுவேன். அப்புறம் உங்கள் உத்தரவு வேண்டியதில்லை. ஏற்கனவே தாற்காலிகமாக இங்கே வரும்படியாகச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறேன். உங்கள் பாதுகாப்பில் என்னை நீங்கள் உடனே சென்னைக்கு அனுப்பி, பிறகு உத்தரவைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று நான் சொல்லியதற்கு அவர் உடன்பட்டுத் தகுந்த வைத்திய உதவியுடன் என்னுடைய செலவில் மறுநாள் காலையில் என்னைச் சென்னைக்கு அனுப்பிவிட்டார்.

ஜெனரல் ஆஸ்பத்திரியில் என்னுடன் லண்டனில் படித்தவரும் நண்பருமான டாக்டர் கோபி நாத் பண்டாரே ஸர்ஜனாக இருப்பதாகத் தெரிந்து

அவருடைய வார்டில் இருக்க அநுமதி பெற்று, முதல்தர உத்தியோகஸ்தர்கள் இருக்கக்கூடிய அறையில் வைக்கப்பட்டேன். இந்த வார்டுக்குத் தினசரிக் கட்டணம் பத்து ரூபாய். முன் பணம் கட்டி அங்கே சேர்த்ததும், எனது ஞாபகம் அசேகமாய்த் தவறிவிட்டது. பரேயங்கோட்டையிலிருந்து ரெயிலில் வந்ததும், ஆஸ்பத்திரி சேர்ந்ததும், டாக்டர் பண்டாரலேயுடன் பேசியதும் ஒரு கனவுபோல் இருந்தன. ஒன்றுமட்டும் இன்னும் நன்றாக ஞாபகம் இருக்கிறது: "எனது கை உபத்திரவம் என்னால் சகிக்க முடியவில்லை. கை பாரம் தூக்க முடியவில்லை. உடனே ஆபரேஷன் செய்யவேண்டும். நீங்கள் சொல்வதில் எனக்கு யாதோர் ஆட்சேபமும் இல்லை. அவசியமானால் அந்தக் கையைத் தோள்பட்டைவரை எடுத்துவிடுவதற்கும் எனக்குச் சம்மதம்" என்று சொன்னேன். "உனது கை உழைக்கும் ஆயுதம். அதை அவ்வளவு அவசரப்பட்டு எடுக்க எனக்கு மனம் வராது. தேவைக்குத் தகுந்தபடி செய்து காப்பாற்ற முயல்வேன்" என்றார் டாக்டர்.

ஆபரேஷன் நடந்தது. அன்று முதல் மூன்று நாட்களுக்கு எனக்கு ஞாபகமே வரவில்லை. நான் காவது தினத்தன்று கல்ல நினைவு வந்தது. கை எடுக்கப்படவில்லை. வலி குறைந்திருந்தது. அன்று டாக்டர் வந்து, "இனிக் கவலை இல்லை. உன் கை எடுபடாமலே மறுபடியும் உபயோகப் படும் நிலையில் இருக்கும்" என்றார். சிறகச் சிறக நோய் குணமடைந்து வந்தது.

என்னுடைய நிலையைப்பற்றிய விவரம் சென்னைப் பத்திரிகைகளில் வெளிவந்தது. நான் ஆஸ்பத்திரிக்கு வந்த ஆறாவது நாள், பகல் பத்து மணிக்கு மாகாணச் சிறை அதிகாரி என்னை வந்து பார்த்தார். என்மேல் பிரியத்தினாலோ அல்லது என் தேகநிலையின் கவலையினாலோ அவர் வரவில்லை என்பதை நான் சொல்லிவிடவேண்டும். காமிரான் துரை (Lt. Col. Cameron, I.M.S.) அந்தக் காலத்தில் சிறைச் சாத்திர முறையில் நிபுணர் என்ற பெயர் உண்டு. என்னை என் இவ்வளவு அவசரமாகப் பார்க்க வந்தார் என்பதிலிருந்து அவர் சிறைச் சாத்திர ஞானி என்பது தெரியவந்தது. "நீ சென்னைக்கு வந்து ஆபரேஷன் செய்துகொண்ட விவரம் தினசரிப் பத்திரிகையிலிருந்தே அறிந்துகொண்டேன். இது வரையில் நீ பரேயங்கோட்டைச் சிறையில் கைதியாக இருந்தவன், எனது தகவல் இல்லாமல் இங்கு எப்படி வந்தாய் என்பது எனக்குப் புரியவில்லை. என் உத்தரவில்லாமல் நீ எவ்விதம் இங்கு அனுப்பப்பட்டாய் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக வந்தேன். அதிகார முறைப்படி விடுதலையாகாத ஒரு கைதி இங்கே வந்து சிகிச்சை செய்துகொள்வ தென்பது மிகவும் அசிரியக்கத் தகுந்தது. உன்னை யார் அனுப்பினார்கள்? எப்படி வந்தாய்?" என்றார்.

எனது உடல் நிலை மிகவும் கேவலமானதையும், டாக்டர் அனுப்பியதையும் சொன்னேன். எனது உடல் நிலையைப்பற்றி அவர் கவலை அடைந்ததாகத் தெரியவில்லை. நான் தகுந்த வைத்திய உதவியில்லாமல் சட்டப்படி சிறையில் இறந்திருந்தால் அவர் கலக்கமடைய மாட்டார். முறை தவறாக நான் வந்ததைப்பற்றியே அவர் கவலை கொண்டார்; "அந்த டாக்டரையும் சூப்பிரண்டெண்டையும் அல்லவா விசாரிக்க வேண்டும்? நீ இங்கு ஆஸ்பத்திரியில் தங்கக்கூடாது. சென்னைச் சிறைக்குச் செல்லவேண்டும்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்.

ஒருமணி நேரம் கழித்து டாக்டர் பண்டாலே என்னைப் பார்க்க வந்தபொழுது, "நீதை அதிகாரி கர்னல் காமிரான் துரைக்கு என் உன்மேல் கோபம்? உன்னை உடனே 'பெனிடன்ஷியரி'க்குக் கொண்டுபோக வேண்டுமென்று வற்புறுத்துகிறாரே" என்றார்.

"நான் இங்கு வந்தது முறை தவறுனதாம். நான் பரேயங்கோட்டையில் முறைப்படி இறக்திருக்க வேண்டுமென்பது அவருடைய எண்ணம். தவறின முறையைத் திருத்தும் பொருட்டு என்னை மறுபடியும் சிறைக்கு அனுப்பவேண்டும் என்கிறார் போலும்!" என்று சொன்னேன்.

"எனினும் நீ இப்பொழுது சிறைக்குக் கொண்டு போகக்கூடிய நிலையில் இல்லை என்று தெளிவாகச் சொல்லிவிட்டேன். அடுத்த வாரம் வருவதாகப் போயிருக்கிறார்" என்று தெரிவித்தார் டாக்டர் பண்டாலே.

அடுத்த வாரமும் வந்தது. தவறாது மாகாணச் சிறை அதிகாரியும் தரிசனம் கொடுத்தார். சிறை புக இன்னும் தகுதியில்லை என்று டாக்டர் பண்டாலே தெரிவித்தார். நான் ஆஸ்பத்திரியில் இருப்பதால் ஆங்கில ஆட்சிக்கே குறைவு வந்துவிட்டதாக எண்ணிய இந்த அதிகாரி, ஜெனரல் ஆஸ்பத்திரிக்குத் தலைமை அதிகாரியான துரையிடம் முறையிட்டார். உடனே அவர் டாக்டர் பண்டாலேயைச் சந்தித்து, எவ்விதத்திலும் என்னை ஆஸ்பத்திரியில் வைப்பது தவறெனச் சொல்லியவுடன், ஒரு நிபந்தனையின்பேரில் என்னைச் சிறைக்குத் திரும்பக் கொண்டுபோக டாக்டர் பண்டாலே சம்மதித்தார். 'ஜெனரல் ஆஸ்பத்திரியில் எவ்விதச் சௌகரியங்களுடன் வைக்கப்பட்டிருக்கிறேனோ அந்தச் சௌகரியங்களுடன் அதற்குக் குறையாமல் சிறையில் வைக்கப்படவேண்டும். எனக்குச் சிகிச்சை ஜெனரல் ஆஸ்பத்திரியில்தான் நடக்கவேண்டும். தினந்தோறும் சிறையிலிருந்து நான் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு நடக்காமல் வண்டியில் கொண்டுவரப்படவேண்டும்.' - இந்தத் திட்டப் பிரகாரம் நான் 'பெனிடென்ஷியரி'க்குக் கொண்டு போகப்பட்டேன்.

நான் விடுதலையாகவேண்டிய காலம் ஒரு மாதத்திற்கும் குறைவாகவே இருந்தது. எனினும் தினந்தோறும் சிறையிலிருந்து ஆஸ்பத்திரிக்குப் பெரிய கோலாகலத்துடன் கொண்டுவரப்பட்டேன். எனக்கு மூன்று ஆயுதம் தாங்கிய இரண்டு போலீஸ் ரிஸர்வ் படையினர் காவல், நான் ஒரு ரிக்ஷாவில் சவாரி செய்ய, எனக்குப் பின்புறம் இரண்டு ஆயுதம் தாங்கிய ரிஸர்வ் போலீஸ் படையினர் பின்தொடர, தினம் ஒன்பது மணிக்கு இந்த ஊர்வலம் 'பெனிடன்ஷியரி'யிலிருந்து ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கிளம்பும். ஜெனரல் ஆஸ்பத்திரியில் மூன்று மணிநேரம் ஆகும். பிறகு இதே ஊர்வலம் திரும்பும். இந்த மூடக் காட்சியைக் கண்டு களிப்பதா அழுவதா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒரு விஷயத்துக்கு மாத்திரம் கர்னல் காமிரானுக்கு நான் நன்றி செலுத்தவேண்டும். தினப்படி நான் வரர்க்குக் கட்டி வந்த செலவு எனக்கு இல்லாமற் போய் விட்டது.

நான் விடுதலையாக வேண்டியதற்குப் பன்னிரண்டு நாட்கள் இருக்கும் பொழுது ஒரு நாள் எனது தினசரி ஊர்வலம் திரும்பும்பொழுது, 'பெனிடன்ஷியரி' அதிகாரி என்னைக் கேட்டில் நிறுத்திவிட்டு, சிறையினின்று என் சாமான்களை வெளியே எடுத்துக்கொண்டு வைத்து, "நீ வீட்டிற்குப் போகலாம். உன்னை விடுதலை செய்யும்படி உத்தரவு வந்துவிட்டது" என்றார். இந்தத் திடீர் விடுதலை என்? ஜெயில் சாத்திரம் இடம் கொடுத்ததா? இதெல்லாம் கர்னல் காமிரானைத்தான் கேட்கவேண்டும்.

திருச்சிக்குத் திரும்பக்கூடிய நிலையில் நான் அப்போது இல்லை. சென்னையிலேயே என் உறவினர் மூலம் ஒரு சிறிய வீடு வாடகைக்கு அமர்த்திக்கொண்டு சுமார் மூன்று மாதகாலம்வரையில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுத் திருச்சி திரும்பினேன். கையில் காலணாக் கூட இல்லை. சம்பாதித்துச் சேர்த்த பணமெல்லாம் கரைந்துபோக, திருச்சி கண்டோன்மெண்டில் ஒரு பாழடைந்த இடிந்த பங்களாவும் அதன் பேரில் பத்தாயிரம் ரூபாய் கடனும், வேலைக்கு உதவாது விறைத்திருக்கும் என் கை விரல்களுமே பாக்கி இருந்தன. இந்தக் கஷ்டங்களுக்கிடையிலும் மனத் தளர்ச்சி உண்டாகவில்லை. தேசிய உணர்ச்சி மேலும் வலியுற்றுக் கிளம்பியது. என் வாழ்நாளின் உதயம் முதல் என்னுடன் இருந்த வறுமையும், நோயினால் உடல் வலிமை குன்றிய நிலைமையும் பாக்கியிருந்தன.

இந் நிலைமையில் 1923-ஆம் வருஷம் செப்டம்பரில் எனது தொழிலைத் திரும்பவும் தொடங்கினேன்.

விடு கதைகள்

சின்னக் குட்டி சிறுக்கிக் குட்டி
சேர்த்துக் கட்டின தாலி
சிக்கில்லாமல் எடுப்பவர்க்குச்
சென்னப் பட்டணம் இனும். (64)

களத்து மேட்டானும் குளத்து மேட்டானும்
சண்டை போடக்
கூட இருந்த மூங்கில் மேட்டானும்
தேங்காய் மேட்டானும் விலக்கிவிட. (65)

இணற்றைச் சுற்றிப் புல். (66)

காடெல்லாம் சுற்றி வரும்
கண்டலப் பசு
கண்ட தண்ணீர் குடியாத
வெண்டலப் பசு. (67)

திண்டுக் கல்லை ரெண்டாக வெட்டித்
திருச்சிராப் பள்ளியை மூன்றாக மடித்து
வெள்ளைக் காரனை உள்ளே விட்டு
விசையை மூடுக்கினுல் ரத்தமாய் வடியும். (68)

கனகனத்தானைக் கடையிலே கண்டேன்
கண்டவுடன் கொண்டேன்
கொண்டவுடன் அடித்தேன்
அடித்தவுடன் சிரித்தாள்
சிரித்தவுடன் கடித்தேன். (69)

கண்டு பூப் பூக்கும்
காணமல் காய் காய்க்கும். (70)

ஊருக்கெல்லாம் ஒரே துப்பட்டி. (71)

ஓரானேர் ஏரியிலே
ஓராயிரம் தென்னமரம்
காயும் இல்லை பூவும் இல்லை.
காக்கை குந்த நிழலும் இல்லை. (72)

ஓட்டுத் திண்ணைமேலே
பட்டுப் புடவை காயுது. (73)

ஓட்டைப் பிள்ளையார் கோவிலுக்குப்
பூட்டுமில்லை, சாவியும் இல்லை. (74)

கள்ளமான் ஏரியிலே மான்வந்து நிற்கிறது
கட்டடா பிடியடா கள்ளக்கயிறு போடடா. (75)

அட்டைக்கு ஆயிரம் கண். (76)

பொழுது போனுல் பூந்தோட்டம்
விடிந்து பார்த்தால் வெறும் தோட்டம். (77)

ஆள் இறங்காக் கிணற்றுக்குள்ளே
மரம் இறங்கிக் கூத்தாடுகிறது. (78)

வெள்ளைச் சட்டைக்காரன்
வேடிக்கைக்குக் கெட்டிக்காரன். (79)

திண்டாடித் திண்டாடி வந்தாயே பெண்ணே
தீப்பிடித்து மந்தையில் வெந்தாயே பெண்ணே
பாழும் மணியிலே புகுந்தாயே பெண்ணே
பறக் கோலம் இறக் கோலம்
ஆனயே பெண்ணே. (80)

[விடைகள் : 260-ஆம் பக்கம் பார்க்க.]

கற்பனைக் காதலி

ரா.சிதம்பரசுப்ரமணியன்

ராஜத்தின் மனம் குழம்பிக்கொண்டிருந்தது. காலையில் வந்த அவனுடைய சகலை (மைத்துனியின் புருஷன்) அவனை மன அமைதி இல்லாதபடி செய்துகொண்டிருந்தான். இருவரும் ஒரே வீட்டிற்கு மாப்பிள்ளைகள். ஆனால் இருவருக்கும் எவ்வளவு தாரதம்யம்!

வந்தது முதற்கொண்டு, ராமமூர்த்தி வீட்டை ரகளைப்படுத்திக்கொண்டிருந்தான். அவன் மகா உத்ஸாகி. பொட்டலத்தைத் திறந்து, "சாரு, இந்த வாயில்துணி நன்றாயிருக்கா பார். உன் நிறத்திற்குத் தகுந்தாற்போல் பொறுக்கி வாங்கிவந்திருக்கிறேன்" என்று எடுத்துக் காட்டுவான். "இந்த லோலக் ரொம்ப 'பேஷனபிளா' இருக்கு. நீ போட்டிருக்கிறதைக் கழற்றி விட்டு, "இதைப் போட்டுக்கொள்" என்று லோலக் ஒன்றைத் தூக்கிவருவான். "அசல் 'குட்டிக்குரா' பவுடர் கிடைத்தது. உடனே வாங்கிக் கொண்டு வந்தேன்" என்று பவுடர் டப்பாவை வாங்கிவருவான்.

சாருவிற்கு வாங்கி வருவதிலும், அவளைச் சந்தோஷப்படுத்துவதிலும் அவனுக்குப் பரம திருப்தி. அவனுடைய உள்ளத்திலே, காதல், 'ஆர்டீஷியன்' ஊற்றுப்போலப் பீறிக்கொண்டு வந்தது. அந்தக் காதல் ஊற்றை வெளிக்காட்டச் சந்தர்ப்பங்கள் தேடிக்கொண்டே இருப்பான். சாருவிடம் அவனுக்குள்ள ஆசையை வெளிக்காட்டத் தவிக்கும் முயற்சிகளில் சிலவே அவன் மேற் சொன்னபடி வாங்கிக்கொண்டு வருவதும், கொஞ்சுவதும், குலாவுவதும்.

தத்துவப் புத்தகத்தைப் புரட்டிக்கொண்டு ஜன்னலோரம் உட்கார்ந்துகொண்டிருந்தான் ராஜம். மைத்துனியும் அவள் புருஷனும் செய்யும் கோலாகலங்களைக் கண்டு ரஸித்துக்கொண்டுதான் இருந்தான். அதில் ஓர் அளவு சந்தோஷம். ஒரு பக்கம் ஏக்கம். ஒருவிதத்தில் வெறுப்பு. எல்லாம் சேர்ந்து கசப்பைக் கொடுத்துக்கொண்டிருந்தன.

ராஜம் உணர்ச்சியற்ற மரப்பொம்மை அல்ல. அவன் கவியுள்ளம் படைத்தவன். எல்லாவற்றையும் காவியக் கண்ணோடு பார்ப்பவன். வாழவேண்டித் தவித்த அவன் வாழ்க்கை சூன்யமாக இருந்தது. விதிவசத்தால் இஷ்டதிற்கு விரோதமாக அவனுக்கும் கற்பகத்திற்கும் விவாகம் நடந்துவிட்டது. அதுமுதல் அவன் உள்ளப்பாங்கே மாறிவிட்டது.

ராஜத்தின் மனமோ, தான் மணந்திருக்க வேண்டிய ஏதோ ஒரு கற்பனைக் காதலியை நினைந்து ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தது. 'கற்பனைக் காதலி' இருக்கவேண்டிய ஸ்தானத்திற்குக் கற்பகம் வந்துசேர்ந்தாள். கற்பனைக் காதலியை அவன் நேருக்கு நேர் கண்டிராவிட்டாலும், கற்பகம் நிச்சயமாக அந்தக் கற்பனைக் காதலி அல்ல என்பது மட்டும் அவனுக்குத் தெரிந்திருந்தது. அன்று அவன் அடைந்த ஏமாற்றம் அவன் உள்ளத்து உணர்ச்சிகளைப் பேயைப் போலக் குடித்து விட்டது. கனவுப் பெண்ணின் ஸ்தானத்திற்கு என்று கற்பகம் வந்தாளோ, அன்றே கற்பகம் இருக்கவேண்டிய அவன் இருதய கமலத்தில் கற்பனைப் பெண் நிரந்தரமான ஸ்தானத்தைப் பெற்றுவிட்டாள்.

கற்பகம், அவன் முன்னே சதையும் உயிரும் கொண்டு, "நான் இருக்கிறேன்" என்று அறைகூவி அழைப்பது போல் நின்றாலும், அவன் உள்ளமோ, கண் காணுமல் எங்கேயோ இருந்துகொண்டு தன் அழகாலும் அறிவாலும் மோகனஸ்திரத்தை விட்டு ஆட்சி புரியும் ஒரு பொருளை நாடியிருந்தது.

அந்தக் கற்பனை மோகினியோ, தன் வீணை கானத்தாலும், மோகனச் சிரிப்பாலும், சாமர்த்தியப் பேச்சினாலும் அவனுக்கு இன்ப லாகிரியை ஊட்டத் தயாராயிருந்தாள். எங்கோ இருந்துகொண்டு மக்களை ஆட்டுவிக்கும் கடவுளைப்போல, எங்கோ இருந்துகொண்டு தன்னுள்ளே புகுந்து ஆட்டுவிக்கும் அந்தக் கற்பனைக் காதலிக்கு அவன் தவித்து நின்றான். ஆகவே, கற்பகத்துடன் அவன் வாழவேண்டிய வாழ்வில் சுவை இல்லை.

தெருவில் போகும்பொழுது, ஒரு ஸ்திரீயின் சிரிப்பு அவனுக்குக் கற்பனைக் காதலியை ஞாபகமூட்டும். ஒரு மங்கையின் குரலிலே கனவுப் பெண்ணின் எதிரொலியைக் கேட்பான். ஒரு பெண்ணின் நடையில் மோகினியின் சாயலைப் பார்ப்பான். பரம பொருளுக்கு ஏங்கித் தவிக்கும் பக்தனைப் போல, அவன் ஒவ்வொரு சமயத்தில் எதிர் பாராத இடத்தில் கற்பனைக் காதலியின் தோற்றத்தைக் காண்பான். ஆனால், பாவம்! அவன் மனைவி கற்பகம் மாத்திரம் அந்தக் கற்பனைப் பெண்ணின் ஓர் அம்சத்தையும் தாங்கி நிற்கவில்லை. அதை நினைக்குந் தோறும் அவனுக்கு அளவுகடந்த வேதனை ஏற்படும்.

ராஜம் பெருமூச்சு விட்டான். காலையிலிருந்து சகலை செய்யும் அட்டகாசம், அவனுக்குப் பொறுமையைக்கூட உண்டுபண்ணிற்று. அவன் மேல் கோபமும் வந்தது. "என்ன பைத்தியக்காரத்தனம்! கேவலம் 'டால்கம்' பவுடரையும், கண்ணாடி வளையலையும் கொடுத்தா காதலை விலைக்கு வாங்குவது? அற்பன்! இவன் உள்ளத்திலே இருக்கும் உணர்ச்சியும் இந்தக் கண்ணாடி வளைய கூப்போலவே போலிதான். அதனால்தான் தன் உணர்ச்சிகளை வளையல் மூலமும், வாயில் துண்டு மூலமும் வெளியிட முடிகிறது. பதரே! காதலும் கண்ணாடித் துண்டும் சரியாய்ப் போய்விட்டனவா?" என்று முணுமுணுத்துக்கொண்டான். கற்பனைக் காதலி மாத்திரம் ராஜத்தின் முன் வந்தால், தன் உடல், உயிர், ஏன்? ஆத்மாவையுங்கூட அவளுக்குச் சமர்ப்பித்திருக்கமாட்டானா? அப்போதும் உள்ளத்திலே தேங்கியிருக்கும் வேட்கையை வெளிக்காட்ட, இவைகளால் தாம் சாத்தியப்படுமோ என்னவோ?

தம்பதி சகிதம் போட்டோ எடுத்துக் கொள்ளப் போயிருந்த ராமமூர்த்தி திரும்பி வந்தான். ராமமூர்த்தி தம்பதிகள் போட்டோ எடுத்துக்கொள்வது இது முதல் தடவை அல்ல; முப்பதாவது தடவை. "என்ன மிஸ்டர் ராஜம், இன்று சினிமாவிற்கு நாலு ஸீட் ரிசர்வு செய்துவிட்டு வந்துவிட்டேன். நீங்களும் வரவேண்டும்" என்று அழைத்தான். இந்த அவஸ்தையை எதிர் பார்த்துத்தான் ராஜம் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தான். "என்ன சினிமா, ஒன்றுவது நன்றாயில்லை" என்று அஸ்வாரஸ்யமாகப் பதில் சொன்னான்.

"காளிதாஸ் விலே ஓடறது ரொம்ப நன்றாயிருக்கும். நீங்க வாங்கோன்னு. என்னிக்கு நம்ப 'ஜாலி'யாகச் சேர்ந்து போகப்போகிறோம்?" என்று பலவந்தப்படுத்தினான் ராமமூர்த்தி.

"இல்லை, என்னை மன்னியுங்கள். ஒரு சினேகிதனை நான் நேற்று 'எஸ்பிளனேட்'டில் பார்த்தேன். அவன் ஆறரை மணிக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறான். அவனுக்காகக் காத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது" என்று பச்சையாகப் புளுகினான், தத்துவத்தை ஆராய்ந்து கொண்டிருக்கும் ராஜம்.

"நாலு ஸீட் ரிசர்வு செய்து வந்துவிட்டேனே! அதற்காகவாவது வரக்கூடாதா? சினேகிதன் வந்தால் என்ன மோசம்? நானே வரச்சொல்லிச் சொல்லிவிட்டுப் போனால் போகிறது" என்று கெஞ்சினான் ராமமூர்த்தி.

"அவரை ஏன் தொந்தரவு பண்ணுகிறீர்? அவர் நகரவே மாட்டார். என்னைக் கூட்டிக்கொண்டு போவதென்றால், அவருக்குப் பிராணனை விடுவதுபோல் தோன்றும்" என்று சொன்னான் அதுவரையில் பேசாமல் இருந்த கற்பகம்.

"என்ன, நகரமாட்டீர்களா? இவ்வளவு தூரம் கூப்பிடறேனே. நீங்கள் இன்று வராவிட்டால் நான் உங்கள் வீட்டிற்கு இனி வரவே மாட்டேன்" என்றான் கேவிக்கோபத்துடன் ராமமூர்த்தி.

"அதுக்கும் இதுக்கும் என்ன தோது? எனக்கு வரக்கூடாது என்பதில்லை. சினேகிதன் வந்து தேடுவான். அதனால்தான் வரமுடியவில்லை" என்றான் ராஜம் அசட்டுச் சிரிப்புடன். சினிமாவிற்கு நாழிகை ஆகிக்கொண்டிருந்தது.

"நீங்கள் ஏன் இவருக்காகக் காத்துக் கொண்டிருக்கியள்? இவர் வரவேமாட்டார். நீங்கள் போவதையும் கெடுத்துக்கொள்ள வேண்டாம்" என்று முடிவைச் சொன்னாள் கற்பகம்.

கடைசி மைத்துனியையும் அடுத்தவீட்டுப் பையனையும் அழைத்துக்கொண்டு, ராமமூர்த்தி தம்பதிகள் புறப்பட்டனர். "உன் புருஷன் வராவிட்டால் போகட்டும்" என்று சொல்லும் தோரணையில், "நீயாவது வாயேன் அக்கா" என்று சாரு அநுதாபத்துடன் கற்பகத்தை அழைத்தாள். ஒன்றுக்கும் அசையாமல் பிடிவாதத்தைக் காட்டும் புருஷனைக் கண்டு பொருமிக்கொண்டிருக்கும் கற்பகத்திற்கு, இந்த வார்த்தை தூபம் போட்டது. தன்னை நியாயமாக அன்புடன் அழைத்துப் போகவேண்டிய புருஷன் அசைந்து கொடுக்காமல் உட்கார்ந்துகொண்டிருக்கிறான். தங்கை வந்து பரிந்து அழைக்கிறாள். என்ன கொடுமை! "நான் கெட்ட கேட்டிற்கு, சினிமா ஒண்ணு இல்லேன்னு

தான் அழறது" என்று சொல்லிக்கொண்டே, விருட்டு என்று உள்ளே போனாள். அவள் கொந்தளிப்பும் துக்கமும் கடையில் நர்த்தனம் செய்தன. சாருவும் ராமமூர்த்தியும் பேசாமல் போய்விட்டார்கள். ஜன்னல் கம்பியைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான் ராஜம்.

அவன் இவர்களுடன் போயிருந்தால்தான் என்ன? என்னவோ, அவனுக்குக் கொஞ்சமும் மனம் பிடிக்கவில்லை. அவனுடைய இரண்டு குழந்தைகளுக்குத் தாயான கற்பகம் அவனுக்கு என்றும் ஓர் அந்நிய ஸ்திரீயாகவே தோன்றினாள். தான் சினிமாவிற்கு அழைத்துப் போகவேண்டியவள் - தன்னைச் சந்தோஷப்படுத்த வேண்டியவள் - வேறொருத்தி இருக்கிறாள். 'அவள்' இவள் அல்ல. ஆகவே, அவனுக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. இப்படியேதான், இத்தனை நாட்களைத் தள்ளி விட்டான், இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனான பிறகும்.

புத்தகத்தைப் புரட்டினான். தத்துவ விசாரம் மனத்தின் அலைப்பை நிறுத்தவில்லை. கடற்கரைக்குப் போயாவது நிம்மதியாக இருக்கலாமென்று நினைத்துப் புத்தகத்தை மூடிவைத்துவிட்டு அங்கவஸ்திரத்தை மாட்டிக்கொண்டான். "மணிபர்ஸை எடுத்து வா" என்று கூவினான். பர்ஸை எடுத்துக் கொண்டு வந்த கற்பகத்தின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

"நீயும் ஒரு கணவனா?" என்று கேட்பதுபோல இருந்தது அவள் பார்வை. "ஜோராக் கிளம்பிவிட்டீர்களே. உங்கள் சிநேகிதர் வந்து தேடினால்?" என்ருள் குத்தலாக.

"வந்தால் நானே வரச் சொல்லு" என்று அதைப் புரிந்துகொள்ளாதவன் போலப் பதில் சொன்னான்

ராஜம். அவளுடைய வருத்தத்தையோ கேரபத்தையோ அதிகப் படுத்தாமல் தப் பித்துக்கொண்டு போய்விட்டால் தே வ லீ என்று அவனுக்குத் தோன்றியது. ஆனல் கிடைத்த சந்தர்ப்பத்தை விடுபவளாயில்லே கற்பகம்.

"சரி, போய்விட்டு வந்துவிடுகிறேன். யாராவது வந்தால் நானே வரச்சொல்லு" என்று பொய்யை ஸ்திரப்படுத்தினுள்.

"என்கிட்டச் சொல்வானேன்? நான் சமை பற்காரிதானே? சமையல் செய்வதற்காக உங்களுக்கு வாழ்க்கைப்பட்டேன். சமைத் துப் போட்டுக்கொண்டிருக்கிறேன்" என் ருள். அவள் முகம் கடுகடுத்திருந்தது. ஒன்றும் சொல்லத் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான் ராஜம். அவள் அவனு டைய கற்பணேக் காதலி அல்லாவிட்டாலும், அவனுக்கு வாழ்க்கைப்பட்டவள் அல்லவா?

"இப்பொழுது உனக்கு என்ன குறைச் சல்?" என்ருன் கம்பீரமாக.

"போதும், என்ன வேண்டியிருக்கு! பார்ப் பாரைப் பார்த்தாவது தெரிய வேண்டாமா? உங்கள் வீட்டிற்கு வந்து ஐந்து வருஷம் ஆகி றது. இரண்டு குழந்தைகள் பெற்றுகி விட்டது. காலணுவிற்கு உங்கள் கையாலே பூ வாங்கிக் கொடுத்தது கிடையாது. ஒரு ரவிக்கைத் துண்டு ஆசையோடு வாங்கித் தந்தது கிடையாது. வேலேக்காரிக்கும் கேடு கெட்டவளாகத்தானே நான் இருந்திருக்கி றேன்? எல்லாத்திற்கும் கொடுத்துவைக்க வேண்டாமா? நான் கஷ்டத்திற்காகப் பிறந்தவள்தானே?" என்று அம்புரூத்தூணி யிலிருந்து சரம் சரமாக விட்டாள்.

அந்தச் சரமாரியைத் தாங்கிக்கொண்டு, எதிரிமுன் நிராயுதபாணியாக நிற்கும் வீர ணேப்போல நின்ருன் ராஜம். அவள் சொல் வது நூற்றுக்கு நூறு உண்மையாக இருக் கும் பொழுது, அவன் என்ன சொல்லக் கிடக்கிறது? மேகலோகத்திலும் கனவுல கிலும் இருந்துகொண்டு குலுக்கி மினுக்கும் கற்பணேக் காதலிக்கு ஏங்கும் அவன், தன் சொந்த மணிவிக்கு - தனக்கு வாழ்க்கைப் பட்டவளுக்கு - தன் உள்ளத்திலே ஒரு சிறு இடத்தையாவது ஒதுக்கிவைக்க வேண்டா மா? வேண்டியதுதான். அதைப்பற்றி முய லாமலும் இல்லே. ஆனல் உள்ளே புகுந்தி ருக்கும் கனவுப் பெண்ணே அழகாலோ அறி வாலோ ஆத்ம பலத்தாலோ துரத்த வேண் டிய சக்தி மணிவியிடம் இல்லே. ஆகவே, இவன் மட்டும் அந்த முயற்சியில் ஈடுபட்டு வெற்றியைக் காண முடியவில்லே.

"ஒரு நாள் சினிமாவிற்குக் கூட்டிக் கொண்டு போனது கிடையாது. ஒரு நாள் பீச்சுக்குக் கூட்டிக்கொண்டு போனதில்லே. ஒரு வார்த்தை அன்பான வார்த்தை கிடை யாது. ஒவ்வொத்தரைப் பார்க்கிறபோது, எனக்கு நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாக லாம்போல இருக்கிறது. ராஜா மாதிரி புரு ஷன் இருந்தும் நான் கொடுத்துவைத்தது அவ்வளவுதான்!" என்ருள். துக்கம் அவள் நெஞ்சை அடைத்தது.

ராஜத்தின் மனம் இளகிற்று. அவளிடம் அவனுக்கு அநுதாபம் இல்லாமல் இல்லே. கடவுளால் அவனுடைய மணிவியாக்கப் பட்ட அவள் அவளுக்கு நியாயமாக உரிய அன் பைக் கேட்கிருள். கண் காணுத ஒரு ஸ்திரீக்கு அதை இவன் கொடுத்துவிட் டால், அது செல்லுபடியாகுமா? அவள் கண்ணீர் அவன் உள்ளத்தைக் கரைத்துக் கொண்டிருந்தது.

"இதென்ன அசட்டுத்தனம், கற்பகம்! நீயும் பச்சைக் குழந்தையா? இரண்டு குழந் தைகள் பெற்றுவிட்டாய்? சட்டைக்காரப் பயங்கள் மாதிரி 'டாம் டூம்' என்று குதித் துக்கொண்டிருந்தால்தான் பிரியம் என்று பெயரா? இந்த ஆர்ப்பாட்டங்கள் நமக்கு எதற்கு?" என்று அவள் வருத்தத்தைத் தணியவைக்கக் கெஞ்சினுன்.

"நான் அப்படித்தான் இருக்கவேணும் என்று சொல்ல வரவில்லே. சொன்னலும் நீங்கள் கேட்கப்போறியளா? அதுவும் இல்லே. அதற்கெல்லாம் நான் பாக்கியம் செய்யவில்லே. வீட்டிற்கு வந்த சமையற்கா ரின்னு நினேக்காமல், உங்களுக்கு வாழ்க் கைப்பட்டவள் என்பதை நினேத்துத்தான் சொல்லுகிறேன்" என்ருள்.

கற்பணேப் பெண்ணின் காதலுக்கு ஏங்கி நிற்கும் அவனிடம், காதலுக்கு ஏங்கி நின் ருள் கற்பகம். அந்த ஏக்கம் அவள் முகத் திலே ததும்பி நின்றது. அதைப் பார்த்து அவன் உள்ளத்திலே கருணே பெருகிற்று. 'விதி எனக்குச் செய்த கொடுமைக்கு, நான் ஏன் ஒரு ஜீவனுக்குக் கொடுமை செய்ய வேண்டும்?' என்று எண்ணியவனுய், "கற்ப கம், இனிமேல் நீ என்ன செய்யச்சொன் னலும் செய்கிறேன். பீச்சுக்கு வருகிருயா?" என்று சிரிப்பை வருவித்துக்கொண்டு சொன்னுன். அந்தக் கேள்வியே கற்பகத் தின் அத்தனே துக்கத்தையும் மறக்கச்செய் தது. 'பீச்சிற்குத்தான் வராப்பிலே இருக் கேன்!" என்று சொல்லிக்கொண்டு உள்ளே மறைந்தாள்.

"கற்பகம், இவ் வாழ்க்கையில் எனக்கு இன்பத்தைத் தரக்கூடியது ஒன்றும் இல்லே. நான் இனிச் செய்வதெல்லாம் உன்னுடைய திருப்திக்குத்தான்" என்று வாய்க்குள்ளே முணுமுணுத்துக்கொண்டான்.

தன்னுடைய வாழ்க்கையில் இன்பம் அநு பவிக்க முடியாதபடி, சதி செய்திருக்கும், காதலேப் பெருக்கும், கனவு மோகினியை யும், கருணையைப் பெருக்கும் மணிவியையும் மாறி மாறி நினேத்துக்கொண்டு பீச்சிற்குப் புறப்பட்டான் அவன்.

தூங்கினவன் கன்று கடாக்கன்று

'ஆபரணன்'

தமிழில் எத்தனையோ பழமொழிகள் உலவி வருகின்றன. அவைகளில் பலவற்றிற்குப் பொருள் தெரியாமலும் யோசிக்கிறோம். சில வற்றிற்குப் பொருள் தெரிந்த உபயோகிக்கிறோம். சில பழமொழிகளின் உண்மையான உருவம் வேறு இருக்க, நாம் வேறு விதமாக உச்சரித்து வருகிறோம். சில எழுத்துக்களைக் கூட்டிக் குறைத்துச் சிதைத்தும் வழங்கிவருகிறோம். இந்தப் பழமொழிகளை இயற்றியவர் யார், இயற்றப்பட்ட காலம் எது என்று எவராலும் சொல்ல முடியாது. ஆனால் அவை மிக மிகப் புராதனமானவை என்பதை மாத்திரம் அவற்றின் பெயரிலிருந்தே ஊகிக்கலாம்.

அவை பலரால், பல சந்தர்ப்பங்களில் உண்டு பண்ணப்பட்டிருக்கவேண்டும். நாம் அவைகளை உபயோகிக்கும்போதும் சந்தர்ப்ப நியதி ஒன்றும் வைத்துக்கொள்வதில்லை. எவ்விதச் சந்தர்ப்பத்திலும் உபயோகிப்பதற்கு வேண்டிய பழமொழிகள் நம்மிடை உலவிவருகின்றன. நாம் ஒருவரைக் கோபத்துடன் இகழ்ச்சியாக நிந்திக்கும் போதும், நாம் அவரை இருதயப்பூர்ப்புடன் வாழ்த்தும்போதும் நமக்குப் பழமொழிகள் உதவி செய்கின்றன. நாம் கோபத்திலும், ஹாஸ்யத்திலும், சோகத்திலுங்கூடப் பழமொழிகளைச் சிந்துகிறோம். பார்க்கப்போனால் 'நாம் சிந்துகிறோம்' என்று சொல்வதுகூடப் பொருத்தமில்லை. நம்முடைய பேச்சுப் பழக்கத்திலேயே அவை ஊடுருவிக் கலந்து போயிருப்பதால், 'நாம் பேசும் போது அவைகள் தாமே உதிருகின்றன' என்று சொல்வதுதான் பொருத்தமானது. இவை கர்ணபரம்பரையாக மட்டுமே நம்மால் அறியப்பட்டுவருவதால், பலவற்றின் பொருளை அறியாமலே விட்டுவிடவும் நேர்ந்தது.

கவிஞன் உவமை முதலிய அணிகளால் விஷயத்தை அழகாக வெளியாக்குவது போல ஒவ்வொருவரும் தங்கள் உள்ளக் கருத்தைத் தெளிவு செய்ய விரும்புகிறார்கள். அதற்குப் பழமொழிகளை ஆளுகிறார்கள். அவ்விதமே விரும்பிய பலனையும் அடைகிறார்கள்.

பழமொழிகளை இடையிடையே கலந்து பேசுவதனால் பேச்சை நாம் மிகவும் ரஸமாக அனுபவிக்கிறோம். அதிலே ஒரு தனிச்சுவை இருக்கிறது. பழமொழியின் பொருள் தெரிந்தால் தான், நாம் ரஸிக்க முடியும். பொருள் தெரியாமல் நம்மிடை நடமாடி வந்த ஒரு பழமொழியைப் பற்றிக் கூறுகிறேன்.

* * *

ஒரு சமயம் நான் உத்தியோக விஷயமாக ஓர் அதிகாரியைப் போய்ப் பார்த்தேன். அவருடைய காரியாலயத்தில் ஒரு ஸ்தானம் காலியாக இருக்கிறது என்பதைக் கேள்வியுற்றுத்தான் போயிருந்தேன். அவர், "நாளைக் காலையில் ஏழு மணிக்கு வந்து என்னைப் பாரும்" என்று சொன்னார். 'வேலை கிடைத்துவிடும்' என்ற எண்ணத்துடனேயே வீடு போய்ச் சேர்ந்தேன்.

அன்றிரவு படுக்கப் போகும்போது, "காலையில் சீக்கிரமாக என்னை எழுப்பிவிடுங்கள்" என்று எல்லோரிடத்திலும் வீட்டில் சொல்லிவிட்டுத்தான் படுத்தேன். ஆனால் காலையில் வீட்டிலுள்ள யாவரும் என்னை எழுப்பிவிட மறந்துவிட்டார்கள். நானுகவே எழுந்து கடிகாரத்தைப் பார்த்தேன். மணி 8-30க்கு மேல் ஆகியிருந்தது. அவசர அவசரமாகப் பல்லைத் தேய்த்துவிட்டு, கரியையும் குடித்துவிட்டு, சட்டையை மாட்டிக்கொண்டு, தலை தெறிக்க ஓட்டமும் நடையுமாக அந்த அதிகாரியின் வீட்டை அடைந்தேன். அப்பொழுது அவர், மூன் வராந்தாவில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்துகொண்டு பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். நான் போய்த் தலையைச் சொறிந்துகொண்டு நின்றேன். அவர் திரும்பிப் பார்த்துவிட்டு, "யார்?" என்று அதிகாரத்தொனியில் கேட்டார். பெரிய அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு மறதி என்பது சகஜந்தானே? நான் விஷயத்தை ஞாபகமூட்டினேன்.

"ஓஹோ அதுவா? உம்மை ஏழு மணிக்கு அல்லவா வரச்சொன்னேன்? ஒன்பது மணிக்கா வருவது?" என்றார்.

"கொஞ்சம் அசந்துட்டேன்; எழுந்ததும் ஓடி வருகிறேன்" என்ற தணிந்த குரலில் அசட்டுத்தனமாகச் சொல்லிவிட்டேன்.

"சரிதான்! தூங்கிப் போனீரா? 'தூங்கினவன் கண்ணு கடாக்கண்ணு' என்பார்களே; அது சரியாகத்தான் இருக்கிறது" என்றார்.

நான் மௌனமாக இருந்தேன். "ஏழு மணிக்கு நீர் வரவில்லை. எட்டு மணிக்கு ஒருவர் வந்தார்; அவரை நியமித்தாகிவிட்டது" என்று சொல்லி விட்டுப் பத்திரிகையில் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தார். நான் அவருக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு வெளியேறினேன். அவர் உபயோகித்த, 'தூங்கினவன் கண்ணு கடாக்கண்ணு' என்ற பழமொழி என்னைக் கவர்ந்தது. 'அதன் பொருள் என்ன?' என்று மனம் கேள்வியை விதைத்தது. யோசித்து யோசித்துப் பார்த்தேன். 'தூங்கினவன் கண்ணுக்கும், கடாக் கண்ணுக்கும் என்ன சம்பந்தம்? அதற்கும் நம் முடைய ஏமாற்றத்துக்கும் என்ன சம்பந்தம்?' என்று புரியவேயில்லை. மேலும் பலர் வாயிலாக அந்தப் பழமொழி என் காதுகளில் ஒலித்தது. அவர்களிடமெல்லாம், "இதன் பொருள் என்ன?" என்று கேட்டேன்.

"எல்லோரும் சொல்கிறார்களே என்று நானும் சொல்கிறேன்" என்றே ஒவ்வொருவரும் சொன்னார்கள். ஒருவருக்காவது அதன் பொருள் தெரியவில்லை. 'ஒரு வேளை இதற்குப் பொருள் கிடையாதோ என்னவோ? அர்த்தமற்ற உலகி வரும் மொழியாக இருக்கலாகாதா?' என்று ஓர் எண்ணம் மனத்தில் தோன்றியது. மறகணம், "அர்த்தமில்லாமல் ஒரு மொழி உலகில் நிலைத்த வழங்கி வருமா?" என்ற கேள்வி எழுந்த தும் அது அடங்கியது.



பல நாளைக்குப் பிறகு ஒரு நாள் ஒரு கண் பரைச் சந்தித்தேன். அவர் வாயிலாக இதன் அழகான பொருளை உணர்ந்தேன். அவரும் இதன் பொருளை யாரிடமிருந்தும் கேட்டறியவில்லையாம். அவருக்கும் வெகு நாள் புரியாமலே இருந்து பிறகு அவராகவே 'இப்படித்தான் இதன் பொருள் இருக்கவேண்டும்!' என்று ஊகம் செய்து ஊர் ஜிதம் செய்துகொண்டாராம். அது அவருடைய ஊகமாயிருந்தாலும், 'அப்படித்தான் அதன் உண்மைப் பொருளும் இருக்கவேண்டும்!' என்பது என் அபிப்பிராயம். அதை அவர் ஒரு கதை போலவே சொன்னார்.

* * *

புதூரில் ராக்கன் என்றும் மூக்கன் என்றும் இரு குடியானவர்கள் பக்கத்தில் பக்கத்தில் குடிசை கட்டிக்கொண்டு வாழ்ந்துவந்தார்கள். அவர்களுக்கு வயல்களைப் பயிரிடுவதும், ஆமோடுகளை வைத்துப் போஷிப்பதுமே தொழில். அவர்களிடம் எருமை மாடுகள் அதிகம் இருந்தன. பால் வியாபாரமும் செய்துவந்தார்கள். பகலெல்லாம் ஆமோடுகளை மந்தை வெளிகளில் மேய்த்துவிட்டு மாலையில்தான் வீடு திரும்புவார்கள். இருவரும் சேர்ந்தே போவார்கள், வருவார்கள்.

ஒரு சமயம் ராக்கனுடைய எருமை ஒன்றும், மூக்கனுடைய எருமை ஒன்றும் பேறுசினையாக இருந்தன. 'இன்னும் இரண்டு மூன்று தினங்களுக்குள் இவை இரண்டும் ஈனும்' என்று அவர்கள் தீர்மானித்துக்கொண்டு, இரவுகளில் மாட்டுக் கொட்டிலுக்குப் பக்கத்திலுள்ள வேப்ப மரத்தடியில் கயிற்றுக் கட்டிலைப் போட்டுக்கொண்டு படுத்துத் தூங்கினார்கள். நடு இரவில் அடிக்கடி கண் விழித்து இருவரும் மாட்டைக் கவனித்துவந்தார்கள்.

* * *

அன்று பௌர்ணமி; நிலாச் சொரிந்துகொண்டிருந்தது. மாடுகள் படுப்பதும் எழுந்திருப்பதுமாகச் சிரமப்பட்டுக்கொண்டிருந்தன. ராக்கனும் மூக்கனும் சாப்பிட்டுவிட்டு வழக்கம் போல் கயிற்றுக் கட்டிலை வேப்பமரத்தடியில் எடுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்துகொண்டார்கள். "இன்னிக்கு ராவுலே ரெண்டும் கண்டிப்பா ஈனும். நாம்ப சாக்காதையா

இருந்து கவனிச்சுக்கிடணும்; தூங்கிடப்படாது" என்றான் ராக்கன்.

"இத்தினி நாளா முளிச்சிக்கிட்டிருந்துட்டு இன்னக்கித் தூங்கிருவமா?" என்று சொன்னான் மூக்கன். 'இன்றிரவு தூங்குவதேயில்லை' என்று இருவரும் தீர்மானித்து, அடிக்கடி வெற்றிலை போட்டுக்கொண்டும் தில்லானாப் பாட்டுக்களைப் பாடிக்கொண்டும் வெகு நேரம் விழித்திருந்தனர்.

இரவு நடு ஜாமத்துக்கு மேலாகிவிட்டது. சில தினங்களாகவே சரியாகத் தூக்கமின்மையினால் ராக்கனுக்குக் கண்களைச் சுழற்றிச் சுழற்றித் தூக்கம் வர ஆரம்பித்தது. சமாளித்துப் பார்த்தான். முடியவில்லை. மூக்கா, நான் கொஞ்சம் கண்ணை மூடுறேன். நீ கொஞ்சம் கவனிச்சுக்க" என்றான்.

"நான்மட்டும் தூங்கவேண்டாமா?" என்றான் மூக்கன்.

"ரெண்டுபேரும் தூங்கிட்டாப் பயித்தியக்காரத் தனமாப் போயிரும். நான் முதல்லே கொஞ்சம் உறங்கிக்கிறேன்; புறவு நான் முளிச்சுக்கிட்டு உன்னை உறங்கவிடுறேன். ரெண்டு பேரும் இல்லாட்டி மாடுங்க கண்ணுக்குட்டியை முழிச்சுத் தள்ளினாலும் தள்ளீருமில்லே?" என்றான் ராக்கன்.

மூக்கனும் வேறு வழி இல்லாததால் 'சரி' என்று சம்மதித்தான். அதன்படி ராக்கன், தலையைச் சாய்த்ததும் தூங்கிக் குறட்டையும் விட ஆரம்பித்தான்.

கொஞ்ச நேரம் வரை மூக்கன் மாத்திரம் விழித்திருந்து பார்த்தான். 'கொட்டுக் கொட்டு' என்று தனிமையாகவே விழித்திருந்ததால் மூக்கனுடைய கண்களையும் தூக்கம் கவ்வ ஆரம்பித்தது. 'வீட்டுள்ளே சென்று தண்ணீரும் குடித்துவிட்டுத் தண்ணீரால் கண்களையும் துடைத்துக்கொண்டு வருவோம்' என்ற எண்ணி மூக்கன் சென்றான். விளக்கைத் தேடி எடுத்து ஏற்றித் தண்ணீர் குடித்துவிட்டு வர மூக்னுக்குக் கொஞ்சம் நேரமாயிற்று. வரும்போது மாட்டுக்கொட்டில் பக்கத்திலிருந்து 'சர்ர் சர்ர்' என்ற சப்தம் வருவதை அறிந்தான். உடனே மாட்டுக்கொட்டிலை அடைந்து பார்த்தான். அவன் கண்கள் மலர்ந்தன. என்ன ஆச்சரியம்! இரண்டு எருமைகளும் தாயாகித் தத்தம் கன்றை நக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தன. தான் தண்ணீர் குடிக்கப் போயிருந்தபோது ஈன்றிருக்கவேண்டும் என ஊகித்துக்கொண்டான். சந்தோஷத்துடன் தன் மாட்டுக்கன்றைப் பக்கத்தில் இழுத்துப் பார்த்தான். அது கடாக் கன்று என அறிந்ததும் அவன் முகத்தில் சந்தோஷம் குறைந்தது. ராக்கனுடைய மாட்டின் கன்றைப் பார்த்தான். அது கிடாரிக்கன்று. மூக்கனுக்குப் பொறுமையாக இருந்தது.

குடியானவர்கள் பசுவினிடம் காளைக்கன்றாக இருந்தாலும் சரி, கிடாரிக் கன்றாக இருந்தாலும் சரி, சந்தோஷமடைவார்கள். காளையாக இருந்தால் விசேஷப்பிரியம் கொள்வார்கள். ஏனென்றால் அது வண்டியில் பூட உதவும். ஆனால் எருமையினிடம் அப்படி அல்ல. எருமையில் கிடாரிக் கன்றைத்தான் விரும்புவார்கள். கிடாக்கன்றை விரும்பவே மாட்டார்கள். ஆகையால் மூக்கனுக்கு வருத்தமாகத்தானே இருக்கும்? வேப்பமரத்துப் பக்கம் திரும்பி ராக்கனைப் பார்த்தான். பகலெல்லாம் உழைத்த களைப்பினால் அவன் குறட்டையைப் பலமாக விட்டுக்கொண்டு இன்னும் தூங்கிக் கொண்டுதான் இருந்தான். 'பளிச்'சென்று அவனுடைய மூளையில் ஒரு யோசனை தோன்றியது. அந்தப்படி சுற்றுமுற்றும் ஒருதரம் பார்த்து விட்டுத் தன் கன்றை ராக்கனுடைய மாட்டிடமும், ராக்கன் கன்றைத் தன் மாட்டிடமுமாக மாற்றி இழுத்துவிட்டான். அவை எருமைகள் தாமே! மாறிப்போன கன்றுகளைத் தங்களுடையவை என்று எண்ணி நக்கிக்கொடுத்துக்கொண்டிருந்தன.

மூக்கன் பிறகு ராக்கனை எழுப்பி, "நான் தண்ணீர் குடிக்க உள்ளே போயிட்டுவந்து பார்க்கிறேன்; ரெண்டும் ஈனியிருக்கு" என்று சொன்னான்.

ராக்கனும் கண்ணைக் கசக்கிக்கொண்டு, எழுந்து வந்து பார்த்தான். மூக்கனைப் போலவே இவனும் முதலில் கன்றுக்குட்டியை ஆவலோடு பார்த்தான். அது கடாவர்கத்தினே இருக்கும்?

"ஈ, கடாக்கண்ணுதானு?" என்றான். ஆனால் அடுத்த நிமிஷம், 'இது இப்படியேதான் கன்று போட்டதா; அல்லது மூக்கனுடைய வேலைத் தனம் ஏதாவது இதில் இருக்குமோ?' என்று எண்ணமிட்டான். எண்ணி என்ன செய்ய? நிச்சயமாகத் தெரியாத அல்லவா அவனுக்கு? அப்பொழுது மனச் சந்தேகம் தீராதவனாய், 'ஸரம் தூங்கினது பிசகு; ஏமாத்தோம்' என்ற பெருள் பட, "தூங்கினவன் கன்று கடாக்கன்று" என்று முனகிக்கொண்டான். மூக்கனுடைய காதுகளிலும் இது விழாமலில்லை. இதன் கருத்தை உணர்ந்து அவன் உள்ளூரச் சிரித்துக்கொண்டான்.

அசுவகோஷர்

ஆர். கே. பார்த்தசாரதி

நாடகபாத்திரங்கள்

அசுவகோஷர் - அறிஞர். பின் பௌத்தப் போராசிரியர்.
பார்சுவநாதர் - பௌத்த மதாசாரியர்.
கனிஷ்க சக்கரவர்த்தி.
கனிஷ்கனின் பிரதம மந்திரி.
மகத மன்னன்.
மகத மன்னனின் மந்திரி.

1

இடம்: மகத ராஜ்யத்தில் ஒரு சிறு கிராமம். அதில் ஒரு மடம். மடத்து வாசலில் ஒரு பெரிய மணி.

நேரம்: காலை.

பாத்திரங்கள்: அசுவகோஷர், பார்சுவநாதர்.

பார்சுவநாதர்: சரிதான். இதுதான் அவர்கள் குறிப்பிட்ட மடம் என்று நினைக்கிறேன். ஆம். சந்தேகமில்லை. இதோ அந்தப் பெரிய மணியும் இருக்கிறதே. ஆமாம். அதன் கீழே ஏதோ எழுதியிருக்கின்றதே. வாசித்துப் பார்ப் போம்.

(வாசிக்கிறார்.)

"எனது மதத்தை எதிர்த்து வாதாடி என்னை ஜயிக்க விரும்புகிறவர்கள் இந்த மணியைப் பிடித்து இழுக்கலாம்."

சரி! மணியைப் பிடித்து இழுப்போம். (மணியைப் பிடித்து இழுக்கிறார். மணி 'டாண், டாண்' என்று ஒலிக்கிறது.)

அசுவகோஷர்: (உள்ளே இருந்தவாறே அதிகார தோரணையில்) யாரது மணியைப் பிடித்து இழுக்கிறது?

பார்சுவ: நான்தான் பார்சுவநாதன். அசுவகோஷர் இருக்கிறாரா?

அசுவ: (உள்ளேயிருந்து வந்துகொண்டே) என்? அசுவகோஷர் இருக்கிறார். அவர்தாம் நாம்.

பார்சுவ: ஓஹோ! தா-ங்-க-ள் - தாங்கள்தாம் அசுவகோஷரா?

அசுவகோஷர்: (வெளியே வந்து பார்சுவநாதரைப் பார்த்தவுடன் தமக்குள்) அட்டா! யாரோ

மஹரன் போல அல்லவா தோற்றுகிறது! (வெளிப் படையாக.) ஆம். அடியேன்தான் அசுவகோஷன்.

பார்சுவ: என் இப்பொழுது ஸ்தூயி குறைந்து விட்டது, அசுவகோஷா?

அசுவ: பெரியவரே, பிழை பொறுக்கவேண் டும். அகங்காரமாகப் பதில் சொல்லிவிட்டேன்.

பார்சுவ: மன்னிப்பு எதற்கு? உன் இயற்கை யைக் காட்டினாய். புற்றில் இருக்கும் பாம்பு வெளி வராமல் என்ன செய்யும்? ஹும்! மனம் இன்னும் பக்குவம் அடையவில்லை.

அசுவ: (இழுத்தவாறு) ஆம், ஸ்வாமி!

பார்சுவ: பக்குவம் அடையாததற்குக் காரணம் என்னவென்று அறிந்தாயா?

அசுவ: அறிய முயன்றுகொண்டிருக்கிறேன்.

பார்சுவ: ஹும்! எப்பொழுதுதான் அறியப் போகிறாயோ? புருஷ ஆயுஸே.....

அசுவ: என்? கூடிய விரைவிலேயே அறிந்து விடுவேன். அதற்காகத்தானே இதோ இந்த மணியும் அறிக்கையும்? உயர்ந்த உண்மைகளே மஹரன்களின் வாயிலாக அறிந்து மனத்தெளிவு பெறுவதற்குத்தான் இந்த உபாயம்; மாற்று வித்தை என்றுகூடச் சொல்லலாம்.

பார்சுவ: அசுவகோஷா, உன் நேர்மையான மடத்தையை மெச்சுகிறேன். உள்ளதை உள்ள வாறு கூற நீ வெட்கப்பட்டாய் இல்லை. அப்படி யானால் மனத்தெளிவு காண ஒரு சிறந்த வழி காண்பிக்கலாமா?

அசுவ: என் பாக்கியம். நான் விரும்புவது அதுதான்.

பார்சுவ: அப்படியானால் கேள். புத்தபிரான் வகுத்திருக்கும் மார்க்கத்தை நீ அறிந்திருப்பாய் அல்லவா?

அசுவ: அறிந்திருப்பதோடு அல்லாமல் அம் மார்க்கத்தைப்பற்றி நன்கு சிந்தித்தும் இருக்கின் றேன். அதன் சிறப்பை நன்கு உணர்ந்தும் இருக் கிறேன்.

பார்சுவ: அவ்விதமென்றால் என் காரியம் வெகு எளிதாகப் போய்விட்டது. அசுவகோஷா, மன்னர் யாவரும் அறம் பிறழாது அரசாட்சி செய் யவும், நாட்டில் நீர்வளமும் நிலவளமும் மக்கள் மகிழப் பொங்கவும், மனித குலமே துன்பத்தி னின்று விடுதலை பெறவும் ஒரே ஒரு மார்க்கம் தான் உண்டு. அதுதான்.....

அசுவ: புத்தபிரானின் கருணை வழி.

பார்சுவ: அறிந்தாய். முழுவதும் அறிந்தாய். இனி அம்மார்க்கத்தையே கடைப்பிடி. முதலில் இந்த மணியையும் அறிக்கையையும்.....

அசுவ: இதோ அகற்றிவிடுகிறேன்.

பார்சுவ: பிறகு...

அசுவ: ஆசாரியரின் ஆணையைத் தலைமேற் கொள்ளத் தயாராக இருக்கின்றேன்.

பார்சுவ: நல்லது. முன்னமேயே நீ புத்த மதத்தின் கொள்கைகளை நன்கு அறிந்திருக்கிறாய். சிறிது மம்தை இருந்தது. அதவும் மடிந்துவிட் டது புத்தரின் கருணையால். இப்பொழுது பாடலி புரத்திற்குச் செல். உடனே செல். மகத மன்ன னிடம் சென்று என் பெயரைச் சொல். அவன் உன்னை மத குருவாக ஏற்றுக்கொள்வான். ஒன்று மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள். புத்த மதத்தை நீயும் அரசனும் அறிந்துவிட்டால் மட்டும்.....

அசுவ: போதாது. மன்பதை முழுவதும் அறிவதற்கான முயற்சியை மேற்கொள்கிறேன்.

பார்சுவ: ஆம். அதுதான் நான் சொல்ல நினைத்ததும். மதத் தொண்டு புரிவதற்காக எங்கே செல்லவேண்டுமென்றாலும் உடனே புறப்படு. ஆக்ஷேபிக்காதே.

அசுவ: இதைச் சொல்லவும் வேண்டுமோ?

பார்சுவ: சிறந்த அறிஞனை உனக்குச் சொல்லவேண்டாம். இருந்தாலும் சொன் னேன். அசுவகோஷா, போய் வர.

(அசுவகோஷர் நமஸ்கரிக்கிறார்.)

பார்சுவ: அப்பனே, எழுந்திரு. நமஸ்கரித்தது போதும். புத்த பகவான் கிருபையால் உனக்கு எல்லா நன்மைகளும் உண்டாகட்டும்.

(இருவரும் வேறு வேறு திசையில் செல் கின்றனர்.)

2

பாத்திரங்கள்: மாளவ மன்னன் கனிஷ்கன். அவனுடைய பிரதான மந்திரி.

இடம்: அந்தரங்க ஆலோசனை சபை.

காலம்: மாலை.

கனிஷ்கன்: ஓஹோ, அப்படியா? காஷ்மீ ரத்தில் வெற்றிக்கொடி நாட்டிவிட்டு நம் சேனை திரும்பிவிட்டதா?

பி. மந்திரி: சக்கரவர்த்தி, தங்கள் படை வீரர்களின் தோள்வலியில் தங்களுக்கு என் சந்தேகம்?

கனி: மந்திரி, நானும் ஒரு மனிதன்தானே! விதி மனிதனை எவ்வெப்பொழுது எவ்வெவ்விதங் களில் ஆட்டிவைக்குமென்று எவ்விதம் அறியக் கூடும்? எனவே விதியின் வீளையாட்டுக் கருவி யாக இருக்கும் நாம் எல்லோரும் சந்தேகப்படுவது சகஜந்தானே?

பி. ம: உண்மை.

கனி: அது ஒருபுறம் இருக்கட்டும். நம்முடைய வெற்றிவீரர்களுக்கு வழக்கம்போல் உசிதமான மரியாதைகள் செய்துவிட்டீர்களா?

பி. ம: காலையிலேயே எல்லாம் செய்தாகி விட்டது.

கனி: ஆம். உங்களுக்குத் தெரியாதது ஒன் றும் இல்லை. அதிருக்கட்டும். அந்த மகத மன்ன னிடமிருந்து நாம் விடுத்த தூதுமொழிக்கு இன்ன மும் பதில் வரவில்லையே?

பி. ம: பதில் ஒன்றும் இல்லை. அவன் எங்கே பதில் அனுப்பப்போகிறான்!

கனி: அப்படியானால்.....

பி. ம: யோசிப்பது என்ன? இனிக் கடைசி உபாயத்தைக் கைக்கொள்ள வேண்டியதுதான்.

கனி: என்? வேறு வழியொன்றும் இல்லையா? தங்களுடைய நுண்ணறிவுக்கு வேறொரு மார்க்கமும் புலப்படவில்லையா?

பி. ம: புலப்படவில்லை. மேலும் இங்கே ஒன்று சொல்ல விரும்புகிறேன்: மன்னர் கோபித்துக்கொள்ளாவிடில்.....

கனி: (சிரித்துக்கொண்டே) கல்ல நிபத்தனை. மந்திரியிடம் கோபித்துக்கொண்டால் மதியுகம் எப்படி?

பி. ம: என்னை அதிகம் புகழ்கிறீர்கள். வெட்கமாக இருக்கிறது. விஷயத்தைச் சொல்லி விடுகிறேன், தங்களுடைய கருணை.....

கனி: அதனால் என்ன தவறு நேர்ந்து விட்டது?

பி. ம: மன்னிக்கவேண்டும். அதனால் பல தவறுகள் நேர்ந்துவிட்டன. சிற்றாசர்கள் கூடத் தங்களுடைய கருணையைக் காவலாக்கிக்கொண்டு கோலாகலம் புரிகின்றனர். பலருக்குத் தலைகால் புரியவில்லை.

கனி: அதனால்?

பி. ம: அன்னாரைப் பின்னால் மடக்குவது எங்ஙனம்?

கனி: ஏன்? நமது புஜபலம் எங்கே போய் விட்டது?

பி. ம: அபரத்திரத்தில் கருணை காண்பிக்காமல் இருந்தால் அடிக்கடி நமது புஜபலத்தைக் கிலே சப்படுத்திக்கொள்ளாமல் இருக்கலாம் அல்லவா?

கனி: எனவே மகத மன்னனிடம் இனிக் கருணை காட்டுவதற்கே இடமில்லை என்கிறீர்கள். அப்படித்தானே?

பி. ம: ஆம். சிறிதும் இடமில்லை. இரண்டு வருஷங்களாகக் கப்பம் கட்டாத மன்னனிடம்...

கனி: வளர்த்தவேண்டாம். உங்கள் சொற்படியே நடப்போம். மகதராட்டு மன்னனை நாளைத் தினமே தலை வணங்கச் செய்வேன்.

பி. ம: அப்படியானால் இப்போதே சேனுதிபதியை யுத்தத்திற்குத் தயாராகச் சொல்லலாமா?

கனி: வேண்டாம். காஷ்மீரத்திலிருந்து கூளத்து வந்திருப்பவர்களை மீண்டும் துன்புறுத்த வேண்டாம். நானே செல்கிறேன், ஒரு சிறு படையுடன்.

பி. ம: தாங்கள் செல்ல வேண்டாம்.

கனி: ஏனோ இப்பொழுதுமட்டும் தங்களுக்கு என் புஜபலத்தில் பலத்த அவநம்பிக்கை! (சிரிக்கிறான்.)

பி. ம: அதற்குச் சொல்லவில்லை. தாங்கள் சேரே சென்றால் அவன் மீண்டும் பிழைத்துப் போய்விடுவான்.

கனி: ஏன்?

பி. ம: தங்களுடைய கருணை.....

கனி: அதற்கென்ன செய்வது? அவனை வென்ற பின் கருணைக்கு இடமிருந்தால்.....

பி. ம: காண்பிப்பீர்கள் அல்லவா?

கனி: ஆம். இயற்கையை மாற்ற முடியுமா என்ன? சரி. நீங்கள் சென்று இதுகாறும் ஓய்வு பெற்றுள்ள வீரர்களை நாளைக் காலையில் யுத்தத்திற்குச் செல்ல ஸந்தர்ப்பராக இருக்கச் சொல்லுங்கள். சிறு படை போதுமானது. உத்தரவை உடனே நிறைவேற்றும். எனக்கும் புகழ்பெற்ற பாடலிபுரத்தைப் பார்க்க ஆசையாக இருக்கிறது.

பி. ம: தங்கள் இஷ்டம். (பிரதான மந்திரியும் அரசரும் எழுந்து செல்கின்றனர்.)

3

பாத்திரங்கள்: மகத மன்னன்
அவனுடைய மந்திரி
கனிஷ்க மன்னன்
அசுவகோஷர்

இடம்: மகத மன்னன் அந்தரங்க சபை.

காலம்: மாலை.

(மன்னனும் மந்திரியும் வீற்றிருக்கின்றனர்.]

மந்திரி: மகத மன்னரே, கலங்கவேண்டாம். கன்னத்தினின்றும் தங்கள் தாமரைக் கைகளை எடுங்கள். கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கைவைக்கலாகாது என்பர் ஆன்றோர்.

மகத மன்னன்: மந்திரி, கலங்காமல் இருப்பது எங்ஙனம்?

மந்: அரசே, மீண்டும் கூறுகிறேன்: ஜயமும் அபஜயமும் யுத்தத்தில் எப்படியது சகஜந்தானே? என் யுத்தம்? மனித வாழ்க்கையைப் பாருங்கள். காளிதாஸன் கூறியிருப்பதுபோல் இவ்வுலகில் சாகும்வரை இன்பமே எய்தியவன் எவன்? துன்பத்திலேயே ஆழ்ந்தவன்தான் எவன்?

ம. மன்: நீர் கூறுவது முற்றும் உண்மை. ஆனால் நான் மனம் கலங்குவதன் காரணம் அது அல்லவே!

மந்: பின்?

ம. மன். கேவலம் இந்தத் தொல்லைகள் நிறைந்த ராஜ்யபாரத்தை நான் 'தூ' எனத் துச்சமாகக் கருதுவது நீர் அறியாததா? மேலும் ஜயித்த நம் நாட்டைத்தான் கனிஷ்க சக்கரவர்த்தி திருப்பிக் கொடுத்துவிட்டாரே!

மந்: அதனால்தான் கூறுகிறேன், 'கலங்குவதற்கே இடமில்லை' என்று.

ம. மன்: அதனால்தான் நானும் கூறுகிறேன், 'அதைக் குறித்துக் கலங்கவில்லை' என்று.

மந்: பின்?

ம. மன்: அந்தோ! கண்ணைக் கொடுத்து விட்டுக் கண்ணெளியைக் கொள்ளுகிறாள்ள அல்லவா கனிஷ்கன் விரும்புகிறான்?

மந்: சரிதான். அசுவகோஷரைக் கனிஷ்கர் தம் நாட்டிற்கு அழைத்துச் செல்லவேண்டும் என்று கூறிய நிபந்தனையைக் குறித்தா கலங்குகிறீர்கள்?

ம. மன்: ஆம். அதுதான். அது எங்ஙனம் சாத்தியம்? பார்சுவநாதர் அளித்த அரும்பெரும் பொக்கிஷத்தையா இழப்பது? 'புத்த சரிதம்' இயற்றிய சத்தரையா ஞறையிடச் சம்மதிப்பது? 'ஸௌந்தரானந்தம்' அருளிய அறிஞரையா விட்டுப் பிரிவது? ஐயோ! அவர் எனக்கும் என் நாட்டிற்கும் மட்டுமே உரிய உத்தமரல்லவா?

மந்: மன்னவரேறே, மன்னிக்கவேண்டும். உலகம் போற்றவேண்டிய உத்தமர்கள் எல்லா நாட்டிற்குமே பொதுவான பொக்கிஷமல்லவா? அசுவகோஷரின் அருளால் நம் நாடு மட்டுந்தான் உய்யவேண்டுமா? உலகமே உய்யவேண்டாமா?

ம. மன்: நீர் சொல்வதில் உண்மை இருப்பினும் எனக்கு அவ்வளவு உதார குணம் உண்டாக வில்லையே! ஐயோ! அவரை விட்டுப் பிரியும் பொழுது என் உடலை விட்டு உயிர் பிரிவதுபோல அல்லவா இருக்கும்? என் செய்வேன்! அந்தோ! அதோ கனிஷ்கரும் விரைந்து வருகின்றாரே! என்ன பதிலளிப்பேன்!

மந்: அடடா! கனிஷ்கரின் பெருந்தன்மை தான் என்ன? பொய்க் கௌரவப்பேயை விரட்டிய மஹாநுபாவராக அல்லவோ தோற்றுகிறார்? என்ன எளிய சுபாவம்! தன்னந்தனியராகக் கால் நடையாக அன்றோ வருகிறார்?

(கனிஷ்கன் வருகிறான். இருவரும் எழுந்து நிற்கின்றனர்.)

ம. மன்: கனிஷ்க மன்னரே, வருக. இந்த ஆஸனத்தில் அமருங்கள்.

கனி: மகத மன்னரே, நிற்கவேண்டாம். நீர் முதலில் உட்காரும். (எல்லோரும் உட்காருகின்றனர்.)

கனி: மகதநாட்டு மன்னரே, நான் இன்று இரவே புறப்படவேண்டும். நான் வேண்டிய வண்ணம் அசுவகோஷபாதாரனந்தரை அழைத்துச் செல்லவே இங்கு விரைந்தோடி வந்தேன். அது மதிக்கவேண்டும்.

ம. மன்: வெற்றிவாகை சூடியுள்ள தாங்கள் தோல்வியுற்ற என்னிடம் இவ்வளவு தாழ்ந்து பேசுவது என்னை மேலும் வெட்கித் தலைகுனியச் செய்கின்றது. கனிஷ்கரே, தங்கள் பெருமையே பெருமை!

கனி: போதுமே இத்தப் புகழ்ச்சிப் படலம். நான் கேட்ட விஷயத்திற்கு வாரும்.

ம. மன்: அந்தோ! நான் எவ்விதம் தங்கள் எண்ணத்தைப் பூர்த்தி செய்வது? வகையறியாது விழிக்கிறேனே! அன்று விசுவாமித்திர முனி ராம லக்ஷ்மணர்களை யாசித்தபொழுது தசரதன் கலங்கியதுபோல அல்லவா என் மனம் கலங்கி நிலை குலைகின்றது?

கனி: உண்மை. ஆனால் ராம லக்ஷ்மணர்களை அனுப்பியதால், அன்றே உலகம் உய்ய, அசுரத் தனம் அழியத் தசரதன் அடிகோலினான் அல்லவா? எனவே தசரதனுக்கு அன்று ஏற்பட்ட பெருமையல்லவோ இன்று உம்மை வந்தடையப் போகிறது?

ம. மன்: நான் என்ன பதில் சொல்லப்போகிறேன்! ஆகா, அதோ அசுவகோஷரே வருகிறார் நம்மை நோக்கி. அவருடைய சம்மதத்தைக் கேட்போமா?

கனி: ஆம். அதுதான் சரியான யோசனை. அவருக்குச் சம்மதமில்லை எனில் நான் அவரை அழைத்துச் செல்வதுதான் எங்ஙனம்?

(அசுவகோஷர் வருகிறார். எல்லோரும் எழுந்திருக்கின்றனர்.)

அசுவ: விஜயீபவ! ஸர்வ மங்களானி பவந்து. மகத மன்னவனே, மன்னன் கனிஷ்கன் இங்கு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேனே?

கனி: பிரபோ! நான்தான் கனிஷ்கன்.

அசுவ: ஓஹோ! அப்படியா? மகத ராஜ்யத்தை வென்று மீண்டும் அதை இவனுக்கே அளித்து விட்டாய் என்று அறிந்தேன். பரம சந்தோஷம். அதுதான் உண்மையான வெற்றி.

கனி: இல்லை. நான்தான் தோற்றேன். இதோ தோற்றுக்கொண்டும் இருக்கிறேன்.

அசுவ: விஷயம் விளங்கவில்லையே!

கனி: தங்களை என் நாட்டிற்கு அழைத்துச் சென்று என்னையும் என் நாட்டையும் புனிதமாக்க முயலுகிறேன். ஆனால்.....

அசுவ: மகத மன்னன் கூடாது என்கிறானே?

ம. மன்: ஆம், பிரபோ. தங்களை நான் எவ்விதம் இழப்பேன்?

அசுவ: (சிரித்துக்கொண்டு) நன்றாக இருக்கிறது. 'ஆசையை ஒழி, அறவே ஒழி' என்று அடிக்கடி போதித்தது பயன் உனக்கு என்மேலேயே அபார ஆசை வீழ்ந்துவிட்டதோ? என் மௌனம்? மகதனே, நான் அங்கே போகத்தான் போகிறேன். இது என் குருதேவரின் கட்டளை. புத்தபெருமானின் அடியார்க்கும் அடியனைத் தொண்டு புரிய நான் எங்கே போக வேண்டுமானாலும் போகவேண்டும். ஆக்ஷேபிக்கக் கூடாது என்பது அவர் ஆஜ்ஞை. ஆகா! என்னே என் குராஜாரின் தீர்க்க தரிசனம்!

ம. மன்: அந்தோ! இனி நான் ஆக்ஷேபிப்பது எங்ஙனம்?

அசுவ: ஆக்ஷேபிக்காதே. நான் எங்கிருந்தால் என்ன? நான்தான் உன்னை மறந்துவிடப்போகிறேனா? (சிரித்தவாறு) அல்லது நீதான் என்னை மறந்துவிடுவாயா?

ம. மன்: ஐயோ! தங்கள் கருணைக்கு எவ்விதம் நான் பாத்திரமாவேன்?

அசுவ: கனிஷ்கர, என் தரமதம்? உன் இஷ்டந்தான் ஈடேறிவிட்டதே!

கனி: ஆகா! என் பாக்கியமே பாக்கியம்! மகதனே, நான் சென்றுவருகிறேன். ஸ்வாமி, பல்லக்குத் தயாராக இருக்கிறது. செல்வோமா?

அசுவ: வேண்டாம். பல்லக்கு வேண்டாம். நடந்தே வருவேன்.

கனி; அப்படியானால் நானும் தங்களைத் தொடர்ந்து நடந்து வருகிறேன்.

அசுவ: அதுவும் நல்லதுதான். போகும் பொழுதே பலதத்துவங்களை விசாரித்துக்கொண்டு செல்ல எதுவாகும். சரி, நரம் புறப்படுவோமா?

(மகத மன்னன் அசுவகோஷரின் பாதங்களைப் பிடித்துக்கொள்கின்றான். அவனுடைய கண்களினின்றும் நீர் அருவியாக ஓடுகிறது.)

அசுவ: மன்னவனே, எழுந்திரு. கவலைப்படாதே. எங்கே, கண்ணீரைத் துடைத்துக்கொள். நான் உயிருடன் இருக்கும் வரை மீண்டும் ஒரு முறை இங்கு வருவேன். (அசுவகோஷரும் கனிஷ்கனும் செல்கின்றனர்.)

ம. மன்: மந்திரி, என் மன இருளை விரட்டி ஓட்டிய ஜோதி மறைந்துவிட்டதே! இனி என் செய்வேன்! (அரசனும் மந்திரியும் பிரிகின்றனர்.)

4

பாத்திரங்கள்: கனிஷ்கன்
பிரதான மந்திரி

இடம்: அரசாங்க சபை

நேரம்: மாலை

(நாட்டியம் நடக்கின்றது. நடனமாது ஜாவளி ஒன்று பாடி அபிநயம் செய்கிறாள். சிறிது சிறிதாகச் சங்கீதம் குறைகிறது.)

கனி: மந்திரி, இப்போது நடந்து முடிந்த நாட்டியம் மகத நாட்டு வெற்றியைக் குறித்ததோ?

பி.ம: ஆம். வெ-ற்-றி-யைக் குறித்தான், சக்கரவர்த்தி.

கனி: ஏன் ஏதோ 'வெற்றி' என்று இழுத்தாற்போலச் சொல்லுகிறீர்?

பி.ம: ஒன்றும் இல்லை. அதைப் பரிபூரண வெற்றி என்று சொல்ல மனம் இடந்தரவில்லை.

கனி: ஏனோ?

பி.ம: மன்னவர் பெரும, நான் பயந்தபடியே செய்துவிட்டீர்கள்.

கனி: (சிரித்துக்கொண்டே) அப்படியா?

பி.ம: ஆமாம். இதில் சந்தேகம் என்ன? மகத மன்னன் மீண்டும் பிழைத்துப் பேரய்விட்டானே.

கனி: பிழைத்துப்போவது ஒரு பிழையா?

பி.ம: அவனைப் பற்றியவரையில் பிழை இல்லை; ஒரு பாக்கியம் என்றாலும் உங்களைப் பற்றிய மட்டிலும்.....ஹூம். தங்கள் கருணை காரியத்தைக் கெடுத்துவிட்டது.

கனி: (சிரித்துக்கொண்டு) நன்றாகச் சொன்னீர். எனது கருணை காரியத்தைக் கெடுக்கவில்லை. ஆனால் மற்றொரு பெருங்கருணையைப் பிறப்பித்தது. அப்பப்பா! அவன் கருணையின் முன் என் கருணை எம்மாத்திரம்?

பி.ம: (ஆச்சரியத்துடன்) அவன் கருணையா?

கனி: ஆம். அவன் கருணை - மகத்தான தியாகம் - ஆழியைக் காட்டிலும் அல்லவா அகன்றது, ஆழமானது?

பி.ம: புரியவில்லையே!

கனி: மகத மன்னன், மகத ராஜ்யத்தைவிட-என் இவ்வுலகத்தைவிடவே மேலான ஒரு மாணிக்கத்தை அல்லவோ எனக்கெனத் தியாகம் செய்திருக்கிறான்?

பி.ம: சரிதான். அந்தப் புத்தபிக்ஷுவைக் குறிப்பிடுகிறீர்களா?

கனி: அவ்வளவுதான் உம்முடைய மதிப்பு போலும்! அசுவகோஷரை - சகல கலா வல்லவரை - புத்தபிக்ஷு என்று சாதாரணமாக நினைத்துவிட்டீர். அவர் பெரிய மகான் என்பதை நினைவில் நிறுத்தும். எல்லாவற்றையும் கடந்த பரம்பொருள் என்று கூறக்கூட நான் தயங்க மாட்டேன்.

பி.ம: பொறுக்கவேண்டும். எவ்வளவுதான் அசுவகோஷரை நீங்கள் புகழ்ந்தாலும் மகத்தான மகத ராஜ்யம் எங்கே? ஒரு புத்தபிக்ஷு எங்கே?

கனி: (கோபமாக) அபசாரப்படாதீர், அறிவு இல்லாமல். (எள்ளலாக) ஹூம்! நீர் என்ன செய்வீர்? பரம்பரை பரம்பரையாக மன்னர்களுக்கு மண்ணாசையை மூடுக்கிவந்த மனம் பின் எவ்வாறு திருந்திக்கும்?

பி.ம: இது என்னுடைய அபிப்பிராயம் மட்டுமல்ல. நம் நாட்டுப் பிரதானிகள் குடிகள் எல்லோருடைய அபிப்பிராயமும் இதுதான்.

கனி: அதற்கு நான் என்ன செய்யக்கூடும்? உண்மையறியாத உங்களுடைய பிழை அல்லவா இது? இருக்கட்டும். எதற்கும் உங்களுடைய எதிர்ப்பை எதிர்பார்த்தே நான் ஓர் ஏற்பாடு செய்திருக்கிறேன். அதற்குப் பின் நீங்கள் அசுவகோஷரைப் பற்றிய உங்கள் அபிப்பிராயத்தைக் கட்டாயம் மாற்றுவிடில் நான் கனிஷ்கன் அல்ல. இது சத்தியம்.

பி.ம: அது என்ன ஏற்பாடு என்று தெரிவிக்கலாமா?

கனி: சொல்கிறேன். அசுவகோஷர் நாளை மாலை நம் உபாத்தியாச மண்டபத்தில் நம் மூன்று சில **அறிவுரைகள் – அறவுரைகள் - அருள்வதாக** கூறியிருக்கிறார். அவற்றைக் கேட்டுவிட்டுப்

பிறகு நீரும் உம்முடைய தோழர்களும் பேசுவீர்களாக. நீங்கள் யாவரும் நாளை அவசியம் உபந்நியாச மண்டபத்தில் கூடவேண்டும். இது என் கட்டளை. போவதற்கு முன் சேனாபதியிடம் நான் பின் வரும் மற்று கட்டளையிட்டதாகச் சொல்லிவிட்டுப்போம்: "நம் யுத்தக் குதிரைகள் எல்லாவற்றிற்கும் இன்று இரவு தீனி ஒன்றும் போடக்கூடாது. நாளைக் காலையிலும் அவ்விதமே. நாளைப் பிற்பகல் அவற்றைப் பட்டினியாகவே உபந்நியாஸ மண்டபத்தின் முன் நிறுத்தவேண்டும். அசுவகோஷர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அவைகளுக்கு முன் வழக்கம்போல் தீனியைக் கொண்டுவந்து வைக்கவேண்டும்.—தெரிந்ததா நான் கூறியதெல்லாம்? இனி நீர் போகலாம்.

பி. ம: தங்கள் ஆணை.

கனி: என்னுடைய இந்த ஏற்பாட்டைப் பிரதானிகளுக்கும் குடி மக்களுக்கும் தெரியப் படுத்தும். தாமதம் வேண்டாம். உடனே செல்லும்.

(மந்திரி செல்கிறார். பின் அரசனும் எழுந்து செல்கிறான்.)

5

பாத்திரங்கள்: கனிஷ்கன்
அசுவகோஷர்
கனிஷ்கரின் பிரதான மந்திரி

இடம்: உபந்நியாச மண்டபம்

நேரம்: மாலை

(உபந்நியாச மண்டபத்தில் கனிஷ்கர், பிரதான மந்திரி, பிரதானிகள், குடிமக்கள் எல்லோரும் உட்கார்ந்துகொண்டு இருக்கின்றனர். அசுவகோஷர் அவருடைய பிரசங்கத்தை முடிக்கும் தருணம்.)

கனி: குருவே, தாங்கள் அமர்ந்துகொண்டே பேசக்கூடாதா?

அசுவ: வேண்டாம், அடியார்களுக்கு ஆடம்பரம் எதற்கு? மேலும் என் பேச்சு முடியும் தருணம். ஸபையோர்களே! இதுகாறும் போதிஸத்வர் போதித்த சில பொன் மொழிகளை உங்களுக்குக் கூறினேன். உலகமே உய்வதற்கான அவருடைய உயரிய மார்க்கத்தின் நுகேயகமாக விளங்கும் உண்மையொன்றை மட்டும் கூறி என் புன்மைப் பேச்சை முடித்துக்கொள்வேன்.

சரீரமென்பதே துன்பங்களெல்லாவற்றிற்கும் வீளைநிலம். மேலும் அது அழியாப் பொருளன்று. இந்நிலையில் இவ்வற்ப உடலைக்கொண்டு பிறருக்கு ஓர் உபயோகம் ஏற்படுவதாயின் உடனே அவ்வுடலை நீக்கத் தயாராக வேண்டும். சிறிதும் தயங்கக்கூடாது. இதனைப்பற்றி ஆராயப் புகுந்து தயங்கி நிற்பது கீழ்மையாகும். உதவி மறுப்பதாயின் அது இணையில்லாத கொடுமையாகும்.

கனிஷ்க மன்னரே! பிரமுகர்களே! குடிஜனங்களே! புத்தபகவான் கூறிய இக் கருத்தைகளை எல்லாம் சிந்தித்துப் பாருங்கள். இன்று எனக்கு விடை கொடுங்கள். மீண்டும் உங்களை நாளைத் தினம் இங்கேயே சந்திப்பேன். உங்களெல்லோருக்கும் க்ஷேமம் உண்டாகட்டும்.

கனிஷ்கா! நான் போய் வருகிறேன். (அசுவகோஷர் செல்கிறார்.)

கனி: மந்திரி, என்ன கல்லாய்ச் சமைந்து விட்டீரே!

பி. ம: அரசே, நான் மட்டுமல்ல. இதோ பாருங்கள், இதரப் பிரதானிகளையும் குடிமக்களையும். ஆஹா! ஆஹா! என்ன உபந்நியாஸம்! கல்லையும் கரைத்துவிடக்கூடிய தன்மை வாய்ந்ததாக அன்றோ இருந்தது!

கனி: இப்பொழுது விளங்கியதா மகத மன்னனின் தியாகம்?

பி. ம: மன்னர்பிரானே! அன்று அறியாமல் ஏதேதோ பிதற்றிவிட்டேன். மன்னித்தல் வேண்டும். என்னை மட்டும் மன்னித்தால் போதாது. என்னைப் போலவே மகத மன்னனின் தியாகத்தையும், தங்கள் மனப் பக்குவத்தையும், அசுவகோஷரின் பெருமையையும் சந்தேகித்த எல்லோரையுமே மன்னிக்கவேண்டும். இன்றே எங்கள் ஸுகினம். இன்றே எங்கள் அகக்கண் திறந்தது.

கனி: அசுவகோஷரின் சொற்பொழிவு உங்களை மட்டுந்தான் கவர்ந்துவிட்டது என்று நினைக்கிறீர்களா?

பி. ம: பின்?

கனி: அப்படியானால் நீங்கள் இன்னமும் அவருடைய பெருமையின் ஆச்சரிய சக்தியை அறியவில்லை என்று ஏற்படுகிறது.

பி. ம: அந்தோ! மீண்டும் ஒரு முறையா மதி மயக்கம்?

கனி: (சிரித்துக்கொண்டு) பாவம்! நீங்கள் என்ன செய்வீர்கள்! எல்லையற்ற தன்மை பெற்றுள்ள பெருமையை எல்லைக்குட்பட்ட சிற்றறிவால் அறிவது எங்ஙனம்? சரி, இப்படி வாருங்கள். அந்த யுத்தக் குதிரைகளை எல்லாம் கூர்ந்து கவனியுங்கள். (எல்லோரும் கவனிக்கிறார்கள்.) மந்திரி, கவனித்தீர்களா?

பி. ம: ஆஹா! என்ன அதிசயம் இது! குதிரைகள் யாவும் கண்ணீர் விடுகின்றனவே!

கனி: நம்மைவிட அறிவு குறைந்த பிராணிகள் இவ்விதம் நடந்துகொள்கின்றன. அது இருக்கட்டும். மந்திரி, இனி அவற்றிற்குமுன் வைக்கப்பட்டிருக்கும் தீனியைக் கவனியுங்கள்.

பி. ம: இது என்ன மஹாராஜா! ஆச்சரியமாக அல்லவா இருக்கிறது! ஒரு கவளங்கூடத் தின்ன

வில்லையே! வைத்தது வைத்தபடியே அல்லவா இருக்கிறது?

கனி: அதுதான் அசுவகோஷரின் பெருமை. ஒரு ஈரள் முழுவதும் பட்டினியாகக் கிடந்த குதிரைகள் ஆகாரத்தையும் தொடாமல், அசுவ கோஷரின் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் உன்னதப் பேச்சில் மனம் குழைந்து கண்ணீர் விடுவதென்றால்.....

பல குரல்கள்: அச்சரியம்! எங்கும் கேட்டி ராத அதிசயம்! எங்கும் பார்த்திராத அற்புதம்!

பி. ம: மன்னர் மன்னரே! மீண்டும் கெஞ்சு கிறோம். மகான்களின் மாண்பு அறியாத மடையர்களாகிய எங்களை மன்னிக்கமாட்டீர்களா?

கனி: மன்னிப்பு அவசியம் இல்லை. ஒருவன் தான் செய்த குற்றத்திற்காகத் திரிகரண சுத்தி யாக வருந்துவானுனால் அதுவே தகுந்த பிராயச் சித்தமாகும்; மன்னிப்பாகும். இப்பொழுதேனும் அசுவகோஷரின் மகிமையை உணர்ந்தீர்களே, அதுவே போதும். உங்களெல்லோருக்கும் புத்த பகவான் அருள் பாலிப்பானாக! நீங்கள் இனிச் செல்லலாம். ஈளைத் தினம் இதே நேரத்தில் இங்கே கூடவேண்டும் என்பதை ஞாபகப்படுத்து கிறேன்.

பி. ம: தெவிட்டாத தேவாமிருதத்தைத் துய்க்க ஞாபகப்படுத்தவும் வேண்மோ? அரசே, நாங்கள் சென்று வருகிறோம்.

கனி: நல்லது. நானும் அசுவகோஷரின் இருப் பிடத்திற்குச் செல்லுகிறேன். (எல்லோரும் செல்கின்றனர். "புத்தர் வாழ்க! அசுவகோஷர் வாழ்க! எங்கள் கனிஷ்க மன்னர் வாழ்க" என்ற கோஷங்கள் ஒலிக்கின்றன.)

திரை விழுகிறது.

புடைவை

பெண்கள் அணியும் சேலைக்குத்தான் இக்காலத்தில் புடைவை என்ற பெயர் வழங்குகிறது. பழங்காலத்தில் எல்லா வகை யான துணிகளுக்கும் அது பொதுப் பெய ராய் வழங்கிவந்தது. இப்பொழுதும் யாழ்ப் பாணத்தில் புடைவை என்பது ஆடைப் பொதுப் பெயராக வழங்குகிறது. சேலை என்ற சொல்லும் துணிக்குப் பொதுவாக வழங்கிய பெயரே; இப்போது மகளிர உடுத்தும் ஆடைக்கே வழங்குகிறது.

புடைவை என்பது பக்கத்தைச் சுற்றி உடுத்தலால் வந்த தமிழ்ப்பெயர். சேலை என்பது 'சேலம்' என்ற வட சொல்லி லிருந்து வந்த வார்த்தை.

பிய்த்தல்

"குரங்கு கையில் பூமாலை அகப்பட் டால் பிய்த்துப் போட்டுவிடும்" என் கிறோம். 'பிய்த்து' என்பது 'பிச்சு' என்று திரைந்து பேச்சு வழக்கில் வழங்கு கிறது. "பிய்த்தல்" என்ற சொல்லே மூன் காலத்தில் வழங்கின வேறு சொல் லின் மாறிய உருவம். அக்காலத்தில் "புய்த்தல்" என்று வழங்கிவந்தது.

"குருகுவேண் டாளி கோடுபுய்த் துண் டென" என்பது ஒரு பழைய பாட்டு. யானையின் மத்தகத்திலே பாயும் சிங்கமா னது அதன் மத்தகத்தைப் பிளந்து தந்தத் தின் வேரைப் பறித்து அடிக் குருத்தை உண்ணுமாம். அடிக் குருத்துக்குக் குருகு என்று ஒரு பெயர் உண்டு. 'யானைக் கொம் பின் அடிக் குருத்தை விரும்பிய அளியர னது தந்தத்தைப் பிய்த்து உண்டாற்போல' என்பது அந்த அடியின் பொருள். "புய்த்து" என்ற சொல் அதில் வந்திருப்ப தைக் காணலாம்.

'கார்த்தாலே'

"காலையிலே எழுந்து கடவுளைத் தொழவேண்டும்."

"காலங்கார்த்தாலே வந்திருந்து ஸ்வா மிக்கு நமஸ்காரம் பண்ணவேணும்."

"காத்தாலே கோழி கூப்பிட வந்திரிச் சுச் சாமி கும்பிட வேணும்."

இந்த மூன்றும் ஒரே கருத்துடைய வாக் கியங்களே. ஆனுல் பின் இரண்டும் பேச்சு வழக்கில் வழங்குகின்றன. 'காலையில்' என்ற வார்த்தைதான் 'கார்த்தாலே' என்று வந்திருக்கலாம் என்று தோற்று கிறது அல்லவா? அப்படி அன்று.

எந்தக் காரியத்தையும் விடியற்காலையில் எழுந்திருந்து ஆரம்பித்தால் சுறுசுறுப்பாக வேலை நடக்கும். ஆகையால் சரியான காலத்திலே ஒரு காரியத்தை ஆரம்பிப்பது என்ற நினைத்தால் அநேகமாக அதைக் காலையிலே செய்யும்படிதான் நேரும். 'காலத்தாலே' செய்யும் காரியத்தைக் 'காலையிலே' செய்வதனுல் 'காலத் தாலே' என்ற சொல்லுக்குக் 'காலையில்' என்ற தாத்பரியம் ஏற்பட்டது. காளடை வில் 'காலத்தாலே' கார்த்தாலே ஆயிற்று; கார்த்தாலே என்றும் தேய்ந்தது. அதனு டைய பொருள் மாத்திரம் பழையபடியே இருக்கிறது.

விவாக மந்திரம்

வி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி

ஒரு பெரிய மனிதர் வீட்டில் கல்யாணம். சீமான்களும் சிமாட்டிகளும் மணப்பந்தலே அலங்கரித்தார்கள். மணமேடையின்மேல் வதுவார்கள் வைபவத்துடன் வீற்றிருந்தார்கள். மேடையைச் சுற்றி வைதிகர்களில் சிலர் மந்திரம் ஜபித்தும் சிலர் பேசியும் காலம் கழித்தார்கள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் புரோகிதர் தம் சிஷ்யனைப் பார்த்து, "எங்கேயடா? கொண்டுவா இங்கே" என்று அதட்டினார். சிஷ்யன் அதி வேகமாகச் சென்று கையில் ஒரு நகத்தடியோடு காட்சியளித்தான். புரோகிதர் அதை வாங்கி மணமகனையும் அதைப் பிடித்துக்கொள்ளச் செய்தார். பிறகு இருவரும் சேர்ந்து அதை மணமகளின் தலையில் வைத்துவிட்டார்கள். சபையோர் அனைவரும் சற்றும் பதற்றமின்றி இக்கோலத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது ஆங்கிலேயர் ஒருவர் தம் மனைவியோடு அங்கே தோன்றினர். தரை பெரிய உத்தியோகஸ்தராக இருக்கவேண்டும். கல்யாண வீட்டார் மன்னர்பிரானே தம் பிரதிநிதியை அனுப்பி இருப்பதுபோலப் பெருமிதம் கொண்டனர். அவரைக் கண்டதும் ஒரு பெரியார் - உத்தியோகத்தில் மட்டுமல்ல, வயதிலுங்கூடத்தான் - வேகமாகச் சென்று அந்தத் தம்பதிகளே வரவேற்றார். "வாருங்கள், நல்ல சமயத்தில் வந்தீர்கள்; பாருங்கள்" என்று மணமேடைக்கு அருகில் அழைத்துச் சென்றார்.

தரை மணமகளின் தலையில் நகத்தடியைச் சுமத்தியிருக்கும் பரிதாப நிலையைக் கண்டார். திகைத்தார் சற்று நேரம். இரக்கமும் ஆவலும் பொங்கி எழ, "இதென்ன?" என்று அந்தக் கிழவரைக் கேட்டார். கிழவர் ஹிந்துப் பிராம்மணர் தாம். ஆனலும் என்ன? இரண்டு நூற்றாண்டுகளாக நாம் நம் பழக்க வழக்கங்களேயும், மத ஆசாரங்களேயும் கட்டி வைத்துவிட்டோம் அல்லவா? கிழவருக்கு மட்டும் எப்படி இத்தகைய ஆசாரங்களின் கருத்து விளங்கும்? ஆனலும் தரையைப் பார்த்துக் கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல், "இது எங்கள் கல்யாணங்களில் உள்ள வழக்கம்" என்று அசட்டுச் சிரிப்புடன் பதில் அளித்தார். தரை, "அர்த்தமற்ற பழக்கம்!" என்று தமக்குள் கூறிக்கொண்டு அப்பொழுது பேசாமல் இருந்துவிட்டார்.

தரை வயசு முதிர்ந்து உதவிச் சம்பளம் பெற்றுச் சீமைக்குப் போவார். பொழுது போகாத வேளையில் இந்தியாவைப்பற்றி ஒரு புத்தகம் எழுதுவார். அப்புத்தகத்தில் நம் நாட்டுக் கல்யாணங்களுக்குத் தனியாக ஓர் அத்தியாயம் இருக்கும். அதில், "ஹிந்துக்களுடைய கல்யாணம் என்பது மதியீனமான பல நிகழ்ச்சிகள் கொண்டது. சாதாரணக் கல்யாணங்களில் பெண்ணின் தலையில் நகத் தடியைச் சுமத்துவார்கள். மதப் பற்று அதிக முடையவர்களானுல் மணமகளின் தலையில் கட்டை வண்டியையே ஏற்றுவார்கள்" என்று தமது மனோதர்மத்தையும் கலந்து எழுதி விடுவார். அத்தப் புத்தகம் நம் நாட்டில்தான் இறக்குமதியாகும். நாமே அதைப் படித்து இன் புறுவோம். இதற்கெல்லாம் மூலகாரணம் நாம் நம் பழக்க வழக்கங்களேயும் மதாசாரங்களேயும் கவனியாமல் விட்டதுதான் என்பது சொல்லா மலே விளங்கும். அது போகட்டும். திருமண வைபவத்தில் இந்த நகத்தடி நிகழ்ச்சி எதைக் குறிப்பது என்று பார்ப்போம்.

அபரலே என்பவள் ஒரு கன்னி. அவளுக்கு அறிவு தெளிந்தது முதல் 'யாகம் செய்து இந்திரனுக்குச் சோமரசம் (சோமம் என்பது ஒரு கொடி. அதைப் பிழிந்து சாறு எடுத்து வேள்வியில் தேவதைகளுக்கு ஓமம் செய்வது வழக்கம்) கொடுக்க வேண்டும். அதன் வாயிலாக இந்திரனுடைய அநுக்கிரகத்தைப் பெறவேண்டும்' என்ற விருப்பம். விவாகம் ஆனல் அல்லவோ யாகம் செய்யலாம்? தக்க வயசு வந்தும் அவளுக்கு விவாகம் ஆகவில்லே. அவள் வருத்தமுற்று எங்கினுள்.

ஒரு நாள் அவள் நதியில் நீராடச் சென்ருள். கால் தவறி ஆழத்தில் விழுந்துவிட்டாள். நதி அவளே வேகமாய் இழுத்துச் சென்றது. உயிர் துறக்கும் தருணம்; அவள் நெஞ்சம் பதைத்தது. 'பூமியில் பிறந்தேன். பிறவிக்குப் பயன் மேல் நிலேயை அடைதல். யாகம் செய்து விண்ணுலகேனே வழிபடுவதுதான் அதற்கு உபாயம். அந்த உபாயத்தைக் கைப்பற்ற என்னுல் முடியவில்லே. என்ன செய்வேன்!' என்று எக்கமுற்ருள். அப்பொழுது அவள் அருகில் நீரில் ஒரு சோமலதை மிதந்து வந்தது. அதை எடுத்துப் பல்லால் கடித்து ஒரு தளி ரசத்தை வெளிவரச் செய்தாள். மனமார இந்திரனே

வேண்டினாள். 'எனக்கு மணமாகாவிடினும், வேள்வி செய்யாவிடினும் இந்த ரகத்தை ஏற்றுக் கொண்டு என்னைப் பரிசுத்தம் செய்யவேண்டும். எனக்கு உயர்ந்த லோகம் கிடைக்கவேண்டும்' என்று மனத்தால் பணித்தாள்.

இந்திரன் தேரில் ஏறி ஆகாயத்தில் விரைந்து வந்தான். அப்பெண்ணின் பக்தியைக் கண்டு வியந்தான். அமுதத்தை அள்ளி அவள் மேல் தெளித்தான். அமுதத் துளிகள் தேரின் நுகத்தடியில் பட்டு அதில் இருக்கும் துவாரத்தின் வழியாக அந்தப் பெண்ணின்மேல் வீழுந்தன. அபாலை பரிசுத்தமானாள். கதிரவனைப் போன்ற ஒளி அவள் மேனியில் உண்டாயிற்று. அவள் உயர்ந்த கதியை அடைந்து புண்ணியலோகம் சென்றாள்.

இந்த நுகத்தடி நிகழ்ச்சி, இந்திரனுக்கு அபாலையின் சம்பவத்தை நினைப்பூட்டி, 'அபாலையைப் போல் இப் பெண்ணையும் பரிசுத்தமாக்கவேண்டும்' என்று வேண்டுவதாகும். இந்தக் கருத்து நுகத்தடியைத் தலையில் வைத்து ஜபம் செய்யும் மந்திரத்திலிருந்து வெளியாகிறது.

இக்கால மேதாவிகளுக்கு இதில் பொருள் ஒன்றும் இருப்பதாகத் தோன்றுது. பெண்ணை மணப்பதற்கு இதெல்லாம் எதற்கு? இந்த விதத்தில் மணம் செய்துகொள்ளாமல் இல்லறம் நடத்தும் இனத்தார் இவ்வுலகில் இல்லையா? - இதெல்லாம் ஸவீனர்களுடைய வாதம். இது உண்மைதான். நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் சற்று நிதானமாகப் பார்க்கவேண்டும். ஸவீனர்களுடைய குறுக்குவழி முன்னோர்களுக்கும் தெரிந்தே இருக்கும். இதை அறிய நுண்ணிய அறிவு வேண்டாம். ஆகவே முன்னோர்கள் கருத்து என்னவாக இருக்கலாம் என்றதான் இப்பொழுது ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

ஒரு பெண்ணைக் கொள்வதற்கும் மணப்பதற்கும் எவ்வளவோ வேற்றுமை உண்டு. பெண்ணைக் கொள்வதற்குச் சிற்றின்பமும் குடும்ப வாழ்க்கையுந்தான் நோக்கமாக இருக்கும். இதற்கு மனையாள் அல்லது 'பத்தினி' வேண்டியதில்லை. ஒரு பெண் அல்லது 'ஸ்த்ரீ' இருந்தாலே போதும். இதற்காக ஒரு பெண்ணை மணப்பது பயனற்றது. மதுமீனங்கூட. விலைமாதர்களிடம் பழகுவதற்கும் மற்றப் பெண்களிடம் சிற்றின்ப நோக்கத்துடன் உறவாடுவதற்கும் அதிக வேற்றுமை இல்லை.

மணம் என்பது மனையாளைக் கொள்வதற்கு ஏற்பட்டது. மனையாளை வடமொழியில் பத்னீ என் பார்கள். 'யாகத்தில் பங்கு கொண்டவளே பத்தினி யாவாள்' என்று அந்தச் சொல்லை உருவாக்கும் இலக்கணம் கூறுகிறது. யாகத்தில் பங்கு கொள்ள வேண்டுமானால் அதற்கேற்ற தாய்மை வேண்டும். அந்தத் தாய்மைக்குத் தக்க ஸம்ஸ்காரம் வேண்டும். விவாகம் அந்த ஸம்ஸ்காரத்தைச் செய்கிறது என்பது பெரியோர்கள் கருத்து. இவ்விதம் தாய்மையுள்ள மனையாளிடம் நாகரும் சிற்றின்பம் இடையே வரும் லாபம். அது இல்லாவிடினும் அவள் பத்தினியே. அதுபற்றியே முன் காலத்தில் அரசர்கள் அரசி ஒருத்தியை மணந்து பல பெண்களைப் போகத்திற்காக ஏற்றுக்கொண்டார்கள் என்று கதைகளில் காண்கிறோம்.

கட்டுப்பாட்டுடன் வாழ்வாள் நடத்துகிறவனுக்குச் சிற்றின்பம் பேரின்பம் இரண்டிற்கும் ஒரு தோணியே போதும் என்ற நோக்கத்தோடு விவாகம் என்னும் கர்மா ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இவ்வுலகில் செல்வம் செழித்துச் சந்தானம் தழைத்து வாழ்வதற்கும் இந்த மணம் உதவி செய்யவேண்டும். இல்லறத்தில் இருந்தவாறே தானும் தன் மனைவியும் ஒன்றுசேர்ந்து வேள்வி முதலிய தூய கர்மங்களால் மறுமைக்கு வேண்டிய சௌகரியங்களையும் செய்துகொள்ளவேண்டும். இவ்விதம் ஆணும் பெண்ணும் இகத்திற்கும் பரத்திற்கும் ஏற்ற செய்கைகளைச் செய்து வாழ்வாள் நடத்தவேண்டும் என்ற எண்ணத்தோடு செய்துகொள்ளும் ஒப்பந்தம்தான் விவாகம் என்று கூறலாம்.

மேலும் இந்த விவாக ஸம்ஸ்காரங்கள் தம்பதிகளை ஒன்றுக்கிவிடுகின்றன. அவர்களிடையே பிரிக்க முடியாத ஒரு கட்டைக் கட்டிவிடுவதாக விவாக மந்திரங்கள் கூறுகின்றன. 'மனையாள் மனுஷனுடைய பகுதி' என்று ஒரு வேதவாக்கியம் சொல்லுகிறது. ஆகவே விவாகமாகிவிட்டால் தம்பதிகள் உயிர் ஒன்றும் உடல் இரண்டுமாக வாழ்கிறார்கள் என்பதில் வியப்பிற்கு இடமில்லை. இவ்விதம் ஒன்று சேர்ந்தவர்களுக்குத் தனத்திலும் தானியத்திலும், பிள்ளையிலும் பந்துவிலும், ஆரோக்கியத்திலும் ஆயுளிலும் குறைவு ஏற்படா வண்ணம் மந்திரங்கள் அமைந்திருக்கின்றன. அந்த மந்திரங்களைப் பக்தியோடும் சிரத்தையோடும் உரைப்போருக்கு அதில் கூறிய பயன் உண்டாகும் என்பது நம் முன்னோர்களின் நம்பிக்கை. இனி விவாகத்தை ஒட்டிய சில நிகழ்ச்சிகளையும், அவற்றில் உள்ள சில மந்திரங்களையும் கவனிப்போம்.

துருவனைப் பார்ப்பது கல்யாணத்தில் முதல் நாள் இரவு ஒரு முக்கியமான நிகழ்ச்சி. கொண்டாட்டமான தருணம். பெண்களுக்கு அன்றிரவு உத்ஸாகமூட்டும் கட்டமும் இதுவே. "துருவனைப் பார்த்தீரா?" என்று மணப்பெண் மாப்பிள்ளையைக் கேட்பாள். பதிலுக்கு, "அருந்ததியைப் பார்த்தாயா?" என்று மணமகன் அவளைக் கேட்பான். இவ்விரண்டு கேள்விகளும் அவ்விரவுருக்குங்கூடக் காதில் விழாவண்ணம் சுற்றிக் குவித்திருக்கும் பெண்களிடையே ஒரு கோலாகலம் கிளம்பிவிடும். இது வெறும் வேடிக்கையான நிகழ்ச்சியல்ல. இதற்கு மந்திரமும் உண்டு. அதன் பொருளைக் கவனிப்போம்:

"துருவா, நீ அழிவற்ற நிலையில் இருக்கிறாய். நிலைத்த நிலைக்கு நீ ஓர் உறைவிடம் போன்றவன். நக்ஷத்திரக் கூட்டங்களாகும் சக்கரத்திற்கு நீ அச்சுக்கட்டை. உன்னைப் பற்றிக்கொண்டுதான் இந்த நக்ஷத்திர சக்கரம் சுற்றுகிறது. நானும் உன்னைப்போல் அழிவற்றிருக்க வேண்டும். இந்த உலக சக்கரத்திற்கு நான் அச்சுக்கட்டை போல முக்கியமாக வேண்டும். உலகம் என்னையே ஆதாரமாகக் கொண்டு சுற்றவேண்டும்" என்று மணமகன் தனக்காகத் துருவனை நோக்கிப் பிரார்த்திக்கிறான்.

இரண்டாவது மந்திரம் மனைவிக்காகவும் தனக்காகவும் மணமகன் வேண்டுவதாக அமைந்திருக்கிறது:

"ஸப்த ரிஷிகளுக்குக் கிருத்திகை என்ற ஆறு மனைவிகள் இருக்கிறார்கள். அருந்ததி, நீயே அவர்களில் சிறந்தவள். உன்னுடைய தூய கடத்தையால் நீ சிறப்புற்றாய். கிருத்திகைகளும் உன் சிறப்பை ஏற்று உனக்குப் பணிந்திருக்கிறார்கள். என் மனைவி உங்களில் எட்டாவதாக இருக்கவேண்டும். நானும் தவம் செய்து அதன் பெருமையால் அவ்வேழு ரிஷிகளில் எட்டாவது ரிஷியாகவேண்டும்."—இது வரன் அருந்ததியைப் பார்த்துச் செய்யும் பிரார்த்தனை.

"துருவனைப் பார்த்தீரா? அருந்ததியைக் கண்டாயா?" என்று கேட்பதெல்லாம் வீளையாட்டை முன்னிட்டு ஏற்பட்டது. துருவனையும் அருந்ததியையும் பார்த்து முன்சொன்னபடி பிரார்த்திப்பதுதான் வேதத்தில் உள்ளது.

விவாகத்தில் 'ஸப்தபதி' என்பது மற்றொரு முக்கியமான சம்பவம். தாலி கட்டுவதைவிட ஸப்தபதியையே பெரியோர்கள் முக்கியமாகச் சொல்லுகிறார்கள். வரனைப் பின்பற்றிப் பெண் ஏழு அடிகள் நடப்பதுதான் ஸப்தபதி. இது ஒரு சாதாரணச் செய்கையே. இதை என் இவ்வளவு முக்கியமாகக் கருதவேண்டும் என்று நினைக்கலாம். ஆனால் கவிஞர்கள்கூட சட்பிற்கு ஸப்தபதியை அறிகுறியாகக் கூறுகிறார்கள். நண்பர்களிடையே மனக்கசப்பு உண்டாகாமலிருக்க ஒருவருக்கொருவர் பின்பற்றுதல் முதற் காரணமாகும். பத்தினி பர்த்தாவையோ, பர்த்தா பத்தினியையோ பின்பற்றும் குடும்பங்களில் சச்சரவு கோராமல் இருப்பதை நாம் இன்றும் காண்கிறோம். அவ்விதம் தம்பதிகள் குன்றாத சட்போடு வாழ்வதற்கு முக்கிய காரணமாகிய அநுஸரணத்தை மந்திரம் தட்பமாகப் போதிக்கிறது என்று நாம் எண்ண இடம் உண்டு. நம்முடைய ஊகம் ஒருபுறம் இருக்கட்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் உள்ள மந்திரம் தம்பதிகளைப் பிரிக்க முடியாத நிலையில் சேர்த்துவைக்கும் அழகைப் பார்ப்போம்:

"பெண்ணே, ஏழு அடிகள் என்னைப் பின்பற்றிய நீ எனக்குத் தோழியாகிவிட்டாய். நான் உனக்குத் தோழன் ஆகிவிட்டேன். நாம் இருவரும் தோழர்களாக வாழ்வோம். உன் சட்பிலிருந்து என்னை அகற்றாதே. நானும் உன்னை விலக்க வேண்டாம். நாம் இருவரும் ஒன்று சேருவோம். நம் கடமைகளைத் தீர்மானம் செய்வோம். தீர்மானத்தை வழுவாமல் நடத்துவோம். ஒருவர்க்கொருவர் கவர்ச்சியோடு களிப்புற்று வாழ்வோம்." இது ஸப்தபதி மந்திரத்தின் முதற் பகுதி. இரண்டாவது பகுதி பின்னும் ரசமானது:

"நீ பாட்டு, நான் ராகம்; நீ பூமி, நான் ஆகாயம்; நீ வார்த்தை, நான் மனம். ஆகவே பாட்டு ராகத்தை விட்டு விலகாமல் தழுவி இருப்பது போலவும், பூமி ஆகாயத்தை ஆதாரமாகக் கொண்டு ஆகாயத்திலேயே நிலைபெற்று இருப்பது போலவும் மனம் நினைத்ததையே வார்த்தை சொல்வது போலவும் ஒன்றுபட்டுப் பிரியாமல் ஒற்றுமையுடன் வாழ்வோம். ஆண் மகவை ஈன்றெடுப்போம்" என்பது இரண்டாவது மந்திர பாகத்தின் கருத்து.

இதில் புதைந்து கிடக்கும் கவிதா ரசத்தையும், மனிவிக்கும் மணாளனுக்குமுள்ள தத்துவத்தையும் அறிந்து அநுபவிப்பதற்கே மனத்திற்குத் தூய்மையும் நேர்மையும் வேண்டும். கவி பாரதியார் காதல் உணர்ச்சியோடு கண்ணனே வழிபட்டுப் பாடியது தமிழுலகம் அறிந்த விஷயம். அதில், "பண்ணுஞ் சுருதி நீ எனக்கு-பாட்டின் இனிமை நானுனக்கு" என்ற ரசம் பொங்கும் வரி ஒன்றைக் காணலாம். அந்த வரியில் ததும்பி நிற்கும் கவிதா ரசத்திற்கும், ஆழ்ந்த நிலைத்திருக்கும் காதலின் தத்துவத்திற்குமாகவே அந்த வரியைக் கொண்டாடுகிறோம். வேதத்தைக் கற்றுணர்ந்த பாரதியாருக்கு இந்த மந்திரமே இத்தகைய காதல் கீதம் பாடுவதற்குத் தூண்டுகோலாக இருந்திருக்கலாம்.

மணமகன் மணமகளை அம்மி மிதிக்கச்செய்வதும், அவள் உடனே இறங்கிப் பொரியை அஞ்சலியில் அள்ளி அக்கினியில் இடுவதும் விவாகத்தில் கவனிக்கத்தக்க சம்பவமாகும். வதூவரர்கள் உள்ளத்தில் அமிழ்ந்த கிடக்கும் பரஸ்பர கல்வுணர்ச்சியை வெளிக்காட்டுகிறது இந்த நிகழ்ச்சி. வரன் பெண்ணை அம்மியில் ஏற்றி நிறுத்தி, "பெண்ணே, நீ இந்தக் கல்லில் ஏறு. இக்கல்லைப் போல் நீ நேரயற்று நீடூழி வாழவேண்டும். உன் சத்துருக்களை நீ ஜயிக்கவேண்டும்" என்று தன் மனைவியைப் பற்றிய கோரிக்கையை வெளியிடுகிறான்.

மணப் பெண்ணும் கல்லிலிருந்து இறங்கி அக்கினியை வலம் வந்து அஞ்சலியில் பொரியை அள்ளிக்கொண்டு, "என் கணவன் நெடுகாள் வாழவேண்டும்" என்று அக்கினியில் ஓமம் செய்கிறாள்.

இப்படிக் கல்யாணத்தில் உள்ள எல்லா மந்திரங்களும் வதூவரர்கள் ஒருவருக்கொருவர் கன்

மையைப் பிரார்த்திப்பதாகவே அமைந்திருக்கின்றன. பெண் மணமகன் வீட்டிற்கு வண்டியில் ஏறிப் போகிறாள். "அவள் போகும் வண்டியும், அதை இழுக்கும் குதிரை அல்லது காளை இவைகளும் க்ஷேமமாகப் போய்ச் சேரவேண்டும். மணப் பெண்ணின் சீர்களையும் பணத்தையும் வழிமறித்துத் திருடர்கள் பறித்துக்கொள்ளாமல் இருக்க வேண்டும். வரன் வீட்டில் அவள் வலது காலை முதலில் வைத்து நுழையவேண்டும்" என்றெல்லாம் மந்திரம் வேண்டுகோளோடு உபதேசத்தையும் செய்கிறது. இதைப் பார்த்தால் வேதத்திற்கு நம்மிடம் இருக்கும் அன்பும் ஆதரவும் நமக்குப் புலப்படும். அவ்வன்பை அறிய அறிய நமக்கு வியப்பே உண்டாகும்.

"இந்தப் பெண்ணினிடத்தில் பர்த்தாவைக் கொல்லக்கூடிய தர்லக்ஷணம் இருந்தால் அதை அவளுடைய கற்பை அழிப்பவனே நாசம் செய்வதாக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டு வரன் அக்கினியில் ஓமம் செய்வதாக ஒரு கட்டம் உண்டு. இது எவ்வளவு முக்கியமானது என்று நாமே அறிந்துகொள்ளலாம்.

இன்னும் விவாகத்தைத் தழுவிய மற்ற மந்திரங்களைப் பார்த்தால் பர்த்தாவின் வாழ்வு முழுவதும் பத்தினியின் ஒழுக்கத்தில் அடங்கியிருப்பதாகத் தெரியும். ஒழுக்க வாழ்வைப் பின்பற்றி, சாவித்திரி சத்தியவானை உயிர்ப்பித்தாள். நளாயனி பர்த்தாவை முனிவரின் கொடிய சாபத்திலிருந்து மீட்டாள். இந்தக் கதைகளை யாவரும் அறிவார்கள். பெண்ணின் ஒழுக்கத்தால் பர்த்தாவிற்படைவதைக் காளிதாஸன் ரகுவம்சத்தில் அழகாக ஓர் இடத்தில் கூறுகிறான். அது இந்தச் சந்தர்ப்பத்திற்குத் தக்க உதாரணமாகும்.

ராவணனை வென்று, ராமன் லக்ஷ்மணனுடனும் சீதையுடனும் அயோத்திக்கு வந்தான். அரண்மனைக்குச் சென்று தாய்மாரை வணங்கினான். கௌசல்யை எல்லோரையும் ஆசீர்வதித்தாள். பிறகு கன்றியோடு சீதாதேவியைப் பார்த்து, "அம்மா, உன்னுடைய நல்ல ஒழுக்கத்தாலேயே என் மகன் உயிர்தரித்து, வெற்றியுடன் திரும்பிவந்தான்" என்று பரிவுடன் கூறினாள்.

இவ்விதம் ஒன்றுக்கொன்று பிணைத்து வைப்பது விவாகம். இப்பிணைப்பு, பிரிக்க முடியாமல் இறுகுவதற்கு அன்பு முக்கிய காரணமானது. இந்த அன்பை வளர்க்கவே மந்திரங்களோ ஏதுகிறோம். அன்பை வளர்க்க மந்திரங்களோடு வதுவரர்களின் வயசும் ஒரு முக்கிய காரணமாகும். அதைப்பற்றி வேதங்களும் ஸ்மிருதிகளும் விஸ்தாரமாய் விளக்கிக் கூறுகின்றன. உள்ளத்தில் அன்பு மூளுக்கும்பொழுதே அதற்கு லக்ஷ்யம் ஏற்படவேண்டும். லக்ஷ்யம் ஒன்று கிட்டிவிட்டால் அது மற்றொன்றைத் தேடாது. அந்த அன்புக்கு நோக்கம் ஒன்றுகிவிடும். பல முகமாய் வளர்ந்த அன்பை ஒருமுகப்படுத்துவது முடியாத காரியம். பலமுகப்பட்ட மனத்தோடு கணவனுடன் ஒத்து வாழ்வதும் கஷ்டம். ஒற்றுமைக்கே இடம் இராது என்றுகூடச் சொல்லலாம். அரசுடன் வேம்பை வைத்துப் பயிர் செய்வதுண்டு. இரண்டையும் இளம் பருவத்தில் சேர்த்து வைத்து வளர்த்தால் இரண்டும் ஒரு மரம்போலப் பிணைத்து பிரிக்கமுடியாத நிலையில் வளரும். அரசும் வேம்பும் மனமான பிறகு எவ்வளவு நெருக்கி வைத்தாலும், தனிமையை நாடியே அவை நிற்பதைக் காணலாம். பெரியோர் கூறியதற்குக் காரணம் இல்லாமற் போகாது.

கழற்றுதல்

"திருகு கடுக்கனிலிருந்து கழன்று போச்சு" என்று பையன் ஓடிவந்து சொல்கிறான். கழன்ற திருகைக் காட்டுகிறான். "அது தானாகக் கழன்றதா? நீ கழற்றினாயா?" என்று தாய் கேட்கிறாள்.

"இல்லே அம்மா; கிருஷ்ணனே வேண்டுமானால் கூப்பிட்டுக் கேள். நான் விளையாடிக்கொண்டே இருந்தேன். காதிலிருந்து கடுக்கன் நழுவுவது தெரிந்தது. திருகும் கழன்று வந்துகொண்டிருந்தது" என்று விவரிக்கிறான் பையன்.

திருகு தானே கழலும்; பையன் குறும்புத்தனமாக அதைக் கழற்றவும் கழற்றுவான்.

இந்தச் சம்பாஷணையில் 'கழன்ற' என்றும், 'கழற்றினான்' என்றும் வரும் வார்த்தைகளுக்கு மூலம் கழல் என்பது. 'திருகு கழல, கடுக்கன் கீழே விழுந்தது', 'திருகு கழன்று விழுந்தது', 'திருகு கழலுவதை அவன் பார்க்கவில்லை' - என்பனபோலப் பல வார்த்தைகள் அதனடியாகப் பிறக்கின்றன.

கழலும்படி செய்வதைக் 'கழற்றுதல்' என்று சொல்லவேண்டும். கழல் என்பதிலிருந்து கழற்று என்பது பிறந்தது. அதிலிருந்து கழற்ற, கழற்றி, கழற்றுதல், கழற்றினான் - என்பன போலப் பல சொற்கள் உண்டாகும். 'கழட்டுதல்', 'கழட்டினான்' என்று சிலர் எழுதுவதுண்டு. அது பிழை. கொச்சையாகப் பேசும் போது வழங்கும் உருவம் அது.



கோ. பழனி. ஸ்ரீ.

(சென்ற இதழ் 199-ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ ★ ★

முன்கதைச் சுருக்கம்

பத்மநாபன் பள்ளிக்கூடப் படிப்பை முடித்து வெளிவந்த அன்றைக்கு அவனுடைய தங்கை **கோமளம்** தன் குடும்பக் கடனுக்காக உதவி வேண்டி எழுதிய கடிதம் வருகிறது. அப்போது, **அப்பா** தான் வளர்த்துக் கல்யாணம் செய்வித்த தங்கையிடம் உதவி கேட்டு, அவனைச் சென்னைக்கு அனுப்ப, அவன் அங்கே போகிறான். **அத்தை** அவனிடம் பிரியமாக இருப்பதோடு, ருக்மிணி பாங்கின் மானேஜரு டைரெக்டராகிய **அத்திம்பேர்** அவனை மேற்படிப்புக்கு அங்கே வரச்சொல்லிப் பணத்துக்கு ஏற்பாடு செய்கிறார். அப்பா கோரில் வந்து பணம் பெற்றுப் பத்மநாபனோடு காஞ்சீபுரம் திரும்பியதும் அங்கே கோமளம் வந்திருக்கிறாள். அவள் திருச்சிக்குத் திரும்புவதற்கு மூதல் நாள் இரவு அத்திம்பேர் இறக்கப் போன தந்தி வரவே எல்லோரும் சென்னைக்குப் போகிறார்கள். பத்மநாபனை மூன்பு அங்கே படிப்புக்கு விட விரும்பாமல் தடுக்க முயன்ற **அம்மா** இப்போது அதற்குச் சம்மதிக்கிறாள். அவனது காலேஜ் படிப்பு ஆரம்பமாகிறது. அப்பா தமது வேலையை ராஜீனாமாச் செய்துவிட்டுத் தங்கையின் நிலங்களை மேற்பார்வை செய்கிறார். பத்மநாபனும் அவனுடைய அத்தைபெண் **பங்கஜமும்** பழகுகிறார்கள். ஒரு நாள் அவர்கள் இருவரும் வாக்குவாதம் செய்த சமயத்தில், ஒரு மனிதர் அந்த வீட்டில் நுழைகிறார்.

★ ★ ★

5

"வாருங்கள், ஊரில் எல்லாரும் சௌக்கியந்தானே?" என்று அத்தை உள்ளேயிருந்து வந்து, அந்த மனிதரை வரவேற்றாள். அவளுடைய கேள்வியிலிருந்து அவர் புலிப்பாக்கத்திலிருந்து வந்திருப்பவர் என்பது தெரிந்தது. அவரை முன்பு பார்த்திருந்த நினைவும் லேசாக வந்தது.

"உன் அண்ணி, மதனி எல்லாரும் சௌக்கியமாக இருக்கிறார்கள். இப்போது ஊரே பச்சென்று இருக்கிறது" என்றார் அவர்.

"என்ன, திடீரென்று இப்படி உங்கள் உருவே மாறியிருக்கிறதே?" என்று அத்தை கேட்டாள்.

"நாலைந்து மாசத்துக்கு முன்னால் பாரிச வாயுவினால் படுத்த படுக்கையாக இருந்தேன். காஞ்சீபுரத்து டாக்டர்கள் கைவிட்டு விட்டார்கள். செலவான செலவு! ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. கடைசியில் நம்ம காவித்தண்டலம் வைத்தியர் சிகிச்சை செய்ததில் உடம்பு தேறிற்று. இப்போதுதான் பத்துப் பதினைந்து நாளாக நடமாடுகிறேன்."

"உங்களுக்குத் தகவல் வந்துகூட யாரும் பார்த்ததில்லையே! உங்களுக்கு நோய் வந்தது என்னால் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது."

"என்ன அம்மா செய்வது? எல்லாவற்றையும் சேர்த்துவைத்து இந்த வியாதி என்னை ஒரேயடியாகத் தாக்கிவிட்டது. இவ்வளவு குணமானது அபூர்வம்தான். வீட்டிலோ இரண்டு பெண் குழந்தைகள் கல்யாணத்துக்கு நிற்கிறார்கள். மூத்த பையன் இங்கே வேலையில் இருப்பவன் என்னை ஏனென்றுகூடக் கேட்பதில்லை. அவன் விஷயத்தில் நான் பட்ட சிரமம்..... ?"

"எனக்குத் தெரியாதா, தாத்தா? அவன் படிப்புக்காக ஊருராக அலைந்து பணவுதவி வேண்டியதும், அவன் நோய்களுக்காக நூறு நூறுகச் செலவழித்ததும் எல்லாம் எனக்குத் தெரியும். வளர்த்துப் பெரியவனாக்கிவிட்டால் அப்புறம் இப்படித்தான். பறவை பறக்க ஆரம்பித்துவிட்டால் அப்புறம் தாய்ப் பறவையை அது லக்ஷ்யம் செய்கிறதா?"

"தாய் என்று சொல்லவே ஞாபகம் வருகிறது. வீட்டிலே அவள் அவனுக்காக உசிரை விடுகிறாள். எனக்காக இல்லாவிட்டாலும் அவளுக்காகவாவது அவன் ஊர்ப்பக்கம் வரலாமோ இல்லையோ? போன தடவை உன் அண்ணி இங்கே வந்திருந்த போது அவனை நேரில் பார்த்து என் நிலைமை களைச் சொன்னாராம். அதற்கு, 'எனக்கு மட்டும் வரவேண்டாமென்று இருக்கிறதா, மாமா? இங்கே என் வேலை மணையை உடைத்துக்கொண்டு போகிறது; ஓய்ச்சல் ஒழிவு இல்லை. போதாக்குறைக்குக் குடும்பத் தொல்லை வேறு' என்று பதில் சொன்னானும். இவன்தான் உலகில் அதிசயமான வேலை பார்க்கிறான்! ஒரு குழந்தையை வைத்துக்கொண்டு வளர்ப்பதற்கே இவனுக்குக் குடும்பத் தொல்லை பொறுக்கவில்லையாம்! இரண்டு பெண்களைக் குதிரை குதிரையாக இந்த வயசிலே வைத்துக்கொண்டு எனக்கு எப்படி இருக்கும்?"

"வீணைக் கவலைப்படாதீர்கள், தாத்தா! கடவுள் உங்களுக்கு ஒரு குறையும் வைக்க மாட்டார். வாருங்கள், சாப்பிடப் போகலாம்" என்றாள் அத்தை.

பேச்சிலிருந்தும் ஜாடையிலிருந்தும் இவ்வளவு நேரத்துக்குப் பின்பு நான் அவரைத் தெரிந்துகொண்டேன். "என்னடா, நன்றாகப் படிக்கிறாயா?" என்று நாணுத் தாத்தா

என்னை விசாரித்தார். ஏழெட்டு மாதங்களாகப் படிப்பில் மூழ்கியிருந்ததில் நான் அவரை மறந்தே போயிருந்தேன்.

சாப்பிடும்போது அவர் ஒரேயடியாக அப்பாவை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தார். "உன் அண்ணாவின் உதவி இல்லாவிட்டால் இத்தனை நாளைக்கு நான் இருக்கும் இடமே தெரியாமற் போயிருக்கும். வீட்டுக்குச் சாமான்கள் வாங்கிவருவதென்ன, வைத்தியரைக் கூப்பிட ஆள் அனுப்புவது என்ன - கூடப்பிறந்த தம்பிகூட அத்தனை உதவி செய்யமாட்டான். வயிற்றில் பிறந்தவனைத் தான் பார்த்துக்கொண்டே இருக்கிறேனே!" என்று அத்தையிடம் சொல்லிக்கொண்டே, அவர் தம் மூத்த மகனை, 'நன்றி கெட்டவன்', 'அறிவு இல்லாதவன்', 'பெண்வாய்ச் சாமி' என்று கண்டபடி தூஷிக்கலானார்.

"ஊரில் நம்முடைய பயிர் பச்சை எப்படி இருக்கிறது?" என்று அத்தை கேட்டான்.

"பயிருக்குக் கேட்கவேண்டுமா? என்ன இருந்தாலும் சொந்த மனுஷ்யர்கள் என்றால் அவர்களுக்கு இருக்கும் அக்கறையே வேறு தான். ரங்குவும் இத்தனை நாள் பார்த்துக் கொண்டிருந்தானே, என்ன பிரயோஜனம்? இவர் தங்கமான மனிதர், உலக விவகாரம் அறிந்தவர். கொஞ்ச நாளில் நம் ஊரைத் தேவலோகமாக்கிவிடுவார் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை."

காலியில் ஊருக்குப் புறப்படும்போது தாத்தா வந்த நோக்கம் தெரிந்தது. "குடும்ப சிரமத்துக்கு ஏதாவது வழி செய்தாக வேண்டும். முன்போல வெளியூர்களுக்கும் கோயில் குளங்களுக்கும் என்னால் போக முடிகிறதில்லை. இரண்டு பெண்களையும் ஏதோ கொஞ்சம் கூம்கஞ்சி இருக்கும் இடமாகப் பார்த்துக் 'கோப்பிய'மாகக் கல்யாணம் செய்து கொடுத்துவிடவேண்டும். ஊரிலே உன் அண்ணாவுக்கு உதவியாக இருக்கலாமென்று பார்க்கிறேன். தனியாக அவராலும் எல்லாவற்றையும் சமாளிக்க முடியாது" என்று அவர் மெதுவாக அத்தையிடம் பேச்சைத் துவக்கினார்.

"அண்ணாவிடம் நீங்களே சொல்வது தானே? நான் எல்லாவற்றையும் அவனிடத்தில் ஒப்பித்துவிட்டேன். அவன் எது செய்தாலும் சரிதான்" என்றாள் அத்தை.

"அவரிடம் சொல்லாமலா இங்கே வருவேன்? இன்னும் ஒரு வாரத்தில் அவர் இங்கே வரப்போவதாகச் சொன்னார். நீங்கள் இருவருமாக யோசனை செய்து எனக்கு அரை வயிற்றுக்காவது ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும்."

"ஆகட்டும், அண்ணா வரும்போது சொல்கிறேன்" என்று அத்தை பதில் சொன்னதும் அவர் விடைபெற்றுக்கொண்டு போனார். "அப்பாவுக்கு என்னடா செய்தி சொல்கிறாய்?" என்று என்னைக் கேட்டார். "அவர் தாம் ஒரு வாரத்தில் இங்கே வரப்போகிறாரே தாத்தா?" என்றேன். என் பதில் ஒருவேளை அவருக்கு அதிகப் பிரசங்கித்தனமாகப் பட்டிருக்கலாம்.

அவர் மறைந்ததும், "ஏன் அத்தை, இந்தத் தள்ளாத வயசிலா இவருக்கு இரண்டு பெண்கள் கல்யாணத்துக்கு இருக்கிறார்கள்?" என்று கேட்டேன்.

"தள்ளாத வயசு என்று அவர் எதிரிலே சொன்னால் அவருக்கு எவ்வளவு கோபம் வரும் தெரியுமா? இந்த இரண்டு பெண்களும் வெகு நாள் கழித்துப் பிறந்தவர்கள். மூத்த பிள்ளைக்கும் அவருக்கும் சரிப்பட்டு வருவதில்லை. கிழவர் பாவம்! மிகவும் கஷ்டப்படுகிறார்" என்று அத்தை அவரிடம் இரக்கத்தோடு பேசினாள்.

அப்பா இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சென்னைக்கு வந்து குடும்ப க்ஷேமங்களை விசாரித்துவிட்டு அத்தையிடம் கணக்குத் தகவல்களைச் சொல்லிப்போவார். இந்தத் தடவை அவர் வந்திருந்தபோது, அத்தை அவரிடம், "நாணுத் தாத்தா ரொம்பவும் சிரமப்படுவதாகத் தெரிகிறது, அண்ணா! அவரை எப்படியாவது நீ உபயோகப்படுத்திக்கொள்ள முடியுமானால் பாரேன்" என்றாள்.

அப்பா மூட்டையைக் கட்டிக்கொண்டே, "மற்றொருவரைக் கூட வைத்துக்கொள்ளும்படியாக அங்கே அவ்வளவு வேலை என்ன இருக்கிறது?" என்றார். கிழவரைப் பற்றி அவள் சொல்லியது அவருக்குப் பிடிக்கவில்லை என்று தோற்றியது. அப்பாவின் கண்டிப்பான சுபாவத்தை அறிந்தவளாதலால், கிழவரிடம் அநுதாபம் கொண்டிருந்தும், அவள் மேலே ஒன்றும் பேசவில்லை. அப்பாவின் பதில் எனக்குக்கூட உசிதமாகப் படவில்லை. அத்தையின் பேச்சுக்கு மதிப்பு இல்லை என்றுதானே நாணுத் தாத்தா நினைக்கக்கூடும்?

அப்பா ஊருக்குப் போனதும், அன்றெல்லாம் எதிலும் என் மனம் ஓடவில்லை. அத்தையின் ஸ்தானத்தில் என்னை வைத்துக் கொண்டு, என்னை நானே அலட்டிக்கொண்டிருந்தேன். என்னிடம் தாயன்பு கொண்டுள்ள அத்தையின் சங்கடமான நிலைமை எனக்கு வருத்தத்தைத் தந்தது. நேராக அவளிடம் சென்று, "நீ ஒன்றுக்கும் கவலைப் படாதே, அத்தை. இந்தப் படிப்பு முடிந்தும் பார்: நீ எது சொன்னாலும் நான் அதன்படியே நடப்பேன். தீயில் குதிக்கச் சொன்னாலும் குதிப்பேன். இந்த அப்பாவுக்கு ஒன்றுமே தெரியவில்லை" என்று சொல்லி அவளைச் சமாதானப் படுத்தவேண்டும் என்று எண்ணினேன். இந்த எண்ணத்தோடு நான் மாலையில் உள்ளே போனபோது அவள் உருக்கமாக ராமாயணம் பாராயணம் செய்துகொண்டிருந்தாள். அவளுடைய அமைதியைக் கலைக்க நான் விரும்பவில்லை.

என் அறைக்குத் திரும்பிப் பரீக்ஷைப் பாடத்தைப் படிக்க உட்கார்ந்தேன். பேர் பாதி பாடத்திலும் பேர்பாதி கலவரத்திலுமாக என் உள்ளம் அலைந்துகொண்டு இருந்தது. அந்தச் சமயத்தில் பங்கஜம் என் அறைக்குள்ளே வந்து, "இவர் யார்? சொல் பார்க்கலாம்" என்று கூறி, தான் எழுதிய ஒரு படத்தை என் முன்பு வைத்தாள்.

அவளுக்கு என்மீது தீர்க்கமான கோபம் எப்போதும் இருந்ததில்லை. மனத்திலே தோன்றுவதைச் சொல்ல அவளுக்கு ஓர் ஆள் தேவையாக இருந்தது. ஒருவேளை அவளுக்கு அண்ணனே தம்பியோ இருந்திருப்பானால், அவள் இவ்விதம் என்னைப் பழகியிருக்கமாட்டாளோ என்னவோ?

அந்தப் படத்தைப் பார்த்து எனக்குச் சிரிப்பாக வந்தது. படமா அது? மேலே ஓர் உருளைக்கிழங்கு; கீழே ஒரு வண்ணான் சால். இதைக் கொண்டு நான் அதை யாரென்று சொல்வது?

"எனக்குத் தெரியவில்லை" என்றேன்.

"போடா மண்டு; இவர்தாம் அன்று வந்தாரே, அந்தத் தாத்தா!"

"ஐயோ பாவம்! அவர் கஷ்டத்தை நினைத்துக்கொண்டால் எனக்கு அழுகை வருகிறது" என்றேன்.

"அழுகையா? நீ ஒரு விசித்திர ஆசாமி. அவர் சொரூபத்தைப் பார்த்தால் எனக்கு இம்மாதிரியான படம் போடத் தோன்றுகிறது."

நான் மறுபடி பாடத்தில் கவனத்தைச் செலுத்தினேன். "இவ்வளவு ஜோரான படத்தை உனக்கு ரசிக்கத் தெரியவில்லை. நீ தவறிப்போய் மனுஷனுப் பிறந்தாய்!" என்று குறிப்பாகச் சொல்லிவிட்டு, அவள் அங்கிருந்து அகன்றாள்.

நானுத் தாத்தாவின் கஷ்ட நிலையைக் கண்டும் அப்பாவுக்கு இரக்கம் தோன்றவில்லை; பங்கஜத்துக்கோ அவரைப் படம் போடத் தோன்றுகிறது. ஒருவர் அநுபவம் நிறைந்த வயசான மனிதர்; இன்னொருத்தி வாழ்வின் சூதுவாதுகளை அறியாத உல்லாசப் பெண். இருவருக்கும் அவரைப் பற்றிக் கவலை இல்லை.

அந்த வருஷத்துப் பரீக்ஷை முடிந்தது. விடுமுறையில் நான் ஊருக்குப் போனேன்.

அம்மாவுக்கு இப்போது எவ்வித நோயும் இல்லை. கிராமத்துக் காற்றிலும் அதிகார தோரணையிலும் வாழ்ந்து வந்தமையால் அவள் உடம்பு சற்றுப் பருத்துக்கூட இருந்தது. முகத்தில் இருந்த சுருக்கங்கள் சிறிது நீங்கி, ஒரு புதிய காந்தி உண்டாகியிருந்தது.

அப்பா தெம்பாக இருந்தார். அவருடைய வேலை முறை மிகவும் ஒழுங்காக இருந்தது. காஞ்சிபுரத்திலுள்ள வீடு வாசலை வருஷத்துக்கு இரண்டு தடவை போய்ப் பார்க்கக்கூட அவருக்கு ஓய்வு இல்லை. கிராமத்தினர் அப்பாவின் நேர்மையையும், உறவினர் என்ற முறையில் அவருக்கு இருந்த அக்கறையையும் கண்டு அன்போடு பழகினார்கள். பல ஊழல்களை அவர் நீக்கவேண்டியிருந்தது. படியாட்களுக்கு நெல் கடன் கொடுத்து வருஷக்கணக்காக அது வசூலிக்கப்படாமல் இருந்தது. சில சோம்பேறி ஆட்கள் வேலை செய்யாமலே மேற்போக்கிலே மிரட்டிக்கொண்டு காலம் கழித்துவந்தார்கள். அப்பா அவர்களுக்கெல்லாம் சீட்டுக் கொடுத்துவிட்டுச் சுறுசுறுப்பான ஆட்களை மட்டுமே வைத்துக்கொண்டார். நல்ல எருக்களை வரவழைத்து நிலங்களை மேன்மேலும் பண்படுத்தினார். அதனால் விளைச்சல் அதிகமாயிற்று. படியாட்களுக்கும் லாபம் உண்டாயிற்று. அவர்கள் கருத்தோடு பாடுபட்டனர். அப்பாவின் உழைப்பைக் கண்டு ஊராருக்கும் ஊக்கம் பிறந்தது; அவருடைய முயற்சியினால் அந்தக் கிராமம் முன்னேறியது. யாவரும் அவரிடம் மிகுந்த மரியாதையோடு நடந்து கொண்டனர். ஒழிந்த நேரங்களில் அவர் கிராமத்துப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிவந்தார்.

ஒன்றுமில்லாததற்கெல்லாம் ஊரில் சிலர் விவாதம் செய்வார்கள். "ராமாயணத்தில் இந்திரஜித்தின் மனைவி பெயர் என்ன தெரியுமா?" என்று ஒருவர் பிரச்னையைக் கிளப்புவார். அதன் பதில் அவருக்கே தெரியாது.

"அவள் பெயர்தான் நிகும்பிலை" என்று இன்னொருவர் பதில் சொல்வார்.

"ஏன் ஐயா, நீர் ராமாயணத்தை உம்முடைய ஜன்மத்தில் படித்திருக்கிறீரா?" என்று சவால் விடுவார் மற்றொருவர்.

"நீர்தாம் சொல்லுமே, உமக்குத் தெரியும் என்றால்?" என்று முதல்வர் எதிர்வேட்டுப் போடுவார்.

"அவள் பெயர் பிரமீளை."

"இது என்ன ஸ்வாமி! காதிலே கேட்காத பெயராகச் சொல்லி ஏமாற்றுகிறீர்?"

விவாதம் சச்சரவாகி, சச்சரவு சண்டையாக மாறும் சமயத்தில் அவர்கள் அப்பாவிடம் தீர்ப்புக்கு வருவார்கள்.

கோயிலில் உத்ஸவம் வந்தால் அப்பாவுக்குத்தான் முதல் மாலை. பொதுக் கொண்டாட்டங்களில் முதல் தாம்பூலம் அவருடையது. குடியானவர்கள் அவரைப் 'பெரிய ஐயா' என்று அழைத்துவந்தார்கள். இவற்றை எல்லாம் கண்டு அம்மாவுக்கும் எனக்கும் பெருமையாக இருந்தது.

அப்பா இதுவரை நிலத்தின் வருமானத்திலிருந்து ஒன்றுமே எடுத்துக்கொள்ளவில்லை. அத்தை அதைப்பற்றி என்னிடம் வற்புறுத்திச் சொன்னதோடு அப்பாவுக்குக் கடிதமும் கொடுத்திருந்தாள். வீட்டுச் செலவுக்கு போக, வருஷத்துக்கு எட்டு வண்டி நெல் எடுத்துக்கொள்ள வேண்டியது என்று எழுதியிருந்தாள். நேரில் சொல்லக் கூச்ச

மாக இருந்ததால், எழுதிக்கொடுத்திருப் பாள் என்று நினைத்தேன்.

நான் சென்னைக்குத் திரும்பிப் போக வேண்டும் என்று சொன்னபோது, "என்ன இதற்குள்ளே அவசரம்? லீவு முழுவதும் இங்கே இருந்துவிட்டுப் போயேன்" என்றாள் அம்மா.

"இல்லை அம்மா, அங்கே இருந்தால் லீவில் நிறையப் படித்து வைத்துக்கொள்ளலாம்" என்றேன்.

"அந்தப் படிப்பை இங்கே யார் படிக்க வேண்டாம் என்று தடுக்கிறார்கள்?"

"அதற்கு இல்லை, அம்மா! முதலாவது, கிராமத்தில் படிப்பு ஓடாது. இரண்டாவது, வேண்டிய புத்தகங்களை அங்கே வாங்கிக் கொள்ள முடியும்."

அப்பாவும் தங்குமாறு வற்புறுத்தினர்; ஆயினும் நான் திரும்பிப் போகத் தீர்மானித்து விட்டேன்.

"அவன் அங்கே போய் லீவில் ஏதோ படிக்க வேண்டுமாம். அவனுடைய படிப்பை நாம் தடுப்பானேன்?" என்று அம்மா அவரிடம் சொன்னாள். பிறகு என்னைப் பார்த்து, "நிஜமாக நீ படிப்பதாக இருந்தால் சரிதான். சும்மா அங்கே இருந்து கொண்டு அந்தப் பெண்ணைச் சுற்றி வளையவந்து கொண்டிராதே" என்று சொல்லியபோது, அவள் முகத்தில் மெல்லிய முறுவல் மலர்ந்தது.



"அத்தையிடம் சொல்லு, பத்து: இன்னும் ஒரு வருஷத்துக்குள் வேலைகள் அநேகமாக அதிகப்படும். அப்பொழுது நாணுத் தாத்தாவை என்னிடம் வைத்துக்கொள்கிறேன்" என்று அப்பா நான் சென்னைக்குப் புறப்படும்போது சொன்னார். அதைப்பற்றிய கவனம் அவருக்கு இருப்பதை நினைந்து எனக்குச் சிறிது ஆறுதல் உண்டாயிற்று.

6

"ஐயத்தை உனக்குத் தெரியுமோ இல்லையோ?" என்று பங்கஜம் என்னைக் கேட்டாள்.

"எந்த ஐயம்?" ஒருவேளை காலேஜில் என் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த ஐயத்தை அவள் குறிப்பிடுகிறாளோ என்று நினைத்தேன்.

"ஐயத்தைத் தெரியாதா உனக்கு? மூன்பு உனக்குப் பறக்க விடுவதற்குக் காற்றாடியைக் கொடுத்திருந்தாளே" என்றாள்.

"ஓ, அவளா? அதற்கு என்ன இப்பொழுது?"

"அவள் இப்போது திருவல்லிக்கேணியில் இருக்கிறாள். நீ இன்று சாயங்காலம் யூனிவர்ஸிடி லைப்ரரிக்குப் போவதாகச் சொல்லியிருந்தாயே. அப்படியே, என் சிநேகிதியிடம் ஒரு புத்தகம் கொடுத்திருக்கிறேன்; அதை அவசரமாகத் திருப்பி வாங்கிவரவேண்டும். அவள் விலாசம் கொடுக்கிறேன்."

நான் லைப்ரரிக்குப் போவதாகச் சொல்லியிருந்தது உண்மை. காலேஜ் திறந்து நான் மேல் வகுப்புக்குப் போய், பாடங்கள் ஆரம்பமாகியிருந்தன. பங்கஜம் ஐந்தாம் பாரத்தில் இருந்தாள்.

"ஆமாம், உன் சிநேகிதிக்கும் ஐயத்துக்கும் என்ன சம்பந்தம்?"

"ஐயம் என் சிநேகிதிக்கு மதனியாக வந்திருக்கிறாள். அவள் கணவனுக்கு எடுத்ததற்கெல்லாம் சந்தேகம் வரும். மிகவும் சிடுசிடுப்புக்காரன். நீ போய் அவளிடம் பழைய ஞாபகமாக ஏதாவது பேசப்போகிறாயே என்பதற்காக எச்சரிக்கிறேன்."

பங்கஜம் தன் சிநேகிதிக்கு ஒரு துண்டுக் கடிதம் கொடுத்திருந்தாள். மாலையில் என் வேலை முடிந்ததும், சிறிது நேரம் கடற்கரையில் உலாவினேன். பிறகு அந்தச் சிநேகிதியின் வீட்டுக்குப் போனேன். அவள், பங்கஜத்தின் கடிதத்தைக் கையில் வாங்கிக்கொண்டு, "அந்தப் புத்தகமா! இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லி உள்ளே போனாள்.

நான் காத்துக் கொண்டு இருந்தேன். அவள் பிறகு வெளியே வரவே இல்லை. வாசலிலேயே உட்கார்ந்தேன். சுமார் ஒன்பது மணிக்கு, "பத்மநாபன், நீங்களா இங்கே உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்ற கேள்வியைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். ஐயம் என் பின்னல் நின்றுகொண்டிருந்தாள். அப்போதுதான் வெளியிலிருந்து ஓர் இளைஞன் வந்துகொண்டிருந்தான். அவனைப் பார்த்தவுடனே, "ஐயோ அம்மா!" என்று அமுங்கிய குரலில் கூவிக்கொண்டு ஐயம் உள்ளே ஓடினாள்.

"யார் நீ? இங்கே என்ன செய்கிறாய்?" என்று வந்தவன் அதட்டிக் கேட்டான்.

"பங்கஜம் தன் சிநேகிதியிடம் இரவல் கொடுத்த புத்தகத்தை வாங்கிவரச் சொன்னாள்" என்றேன்.

"யாரது பங்கஜம்? அவள் நேரே வருவதற்கு என்ன?" என்று கேட்டுக்கொண்டே அவன் உள்ளே போனான்.

இரண்டு நிமிஷத்தில் அந்தப் பெண் மறுபடி அவசர அவசரமாக வெளியே வந்து, "என்னை மன்னிக்கவேண்டும். வேறு வேலையாக இருந்தவள் இதை மறந்துபோய்விட்டேன். இனிமேல் பங்கஜத்தை நேரில் வரச் சொல்லுங்கள்" என்று சொல்லிப் புத்தகத்தை என்னிடம் தந்தாள்.

நான் அங்கே வரக்கூடாது என்பதானே அவள் சொல்லியதற்கு அர்த்தம்? ஜயம் என்னிடம் பேசியதை அவள் கணவன் பார்த்திருப்பானா? அதனால் அவளுக்கு என்ன தண்டனை கிடைக்குமோ? சிறுவயசில் வக்கீலாவதற்கு மனக்கோட்டை கட்டிய அவளுடைய மண வாழ்க்கையின் ஆரம்பம் இப்படியா இருக்கவேண்டும்?

அன்று நான் வீட்டுக்கு வரும்போது இரவு பத்து மணி. "இவ்வளவு நேரம் என்ன?" என்று அத்தை கேட்டாள்.

"அவள் உடனே புத்தகத்தைக் கொடுக்கவில்லையோ?" என்று பங்கஜம் சந்தேகத்தோடு கேட்டாள்.

"இல்லையே, என் சிநேகிதன் வீட்டுக்குப் போயிருந்தேன். நேரமாகிவிட்டது; அங்கேயே சாப்பிட்டேன்."

"உனக்காக அம்மா இன்னும் சாப்பிடாமல் காத்திருக்கிறாள்" என்றாள் பங்கஜம்.

"இன்னொரு தரம் வேண்டுமானால் சாப்பிடட்டுமா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டேன்.

அத்தை சாப்பிடப் போனாள். எனக்கு உண்மையில் பசி இல்லை. ஜயத்தின் மனத்துன்பத்தையும், புலியிடம் சிக்கிய ஆட்டைப் போன்ற அவள் விழிகளையும் நினைத்துப் பார்த்தபோது எனக்கு ஒன்றுமே வேண்டியிருக்கவில்லை.

நாலைந்து நாளைக்கெல்லாம் என் வண்டவாளம் வெளியாயிற்று. பங்கஜம் சாயந்தரம் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும், "அன்று ராத்திரி சாப்பிட்டாயிற்று என்று ஏன் பொய் சொன்னாய்?" என்று கேட்டாள்.

"இல்லையே! என் நண்பன் வீட்டில் சாப்பிட்டேன்."

"எனக்குத் தெரியும் நீ சாப்பிட்டது. 'எவனே வாசலில் வந்தால் அவனோடு உனக்குப் பேச்சு என்ன?' என்று ஜயாவின் கணவன் அவளை அடியான அடி அடித்தானாம்; கண் முகமெல்லாம் வீங்கியிருக்கிறதாம். என் சிநேகிதி உன்னை அனுப்பியதற்காக என்னிடம் கோபமாக இருக்கிறாள். அது கிடக்கட்டும். அன்று நீ ஏன் பட்டினியாக இருந்தாய்?"

அவளுக்கு நான் என்ன பதில் சொல்வது? என் மனத்தில் கொதித்துக்கொண்டிருந்த ஆத்திரம் அவளுக்கு எப்படித் தெரியும்? ஆயினும் நான் சாப்பிடாமல் இருந்ததற்கு வேறு காரணமும் இருந்தது.

"உனக்காக அவ்வளவுகூடச் செய்யக் கூடாதா? அன்று சாயந்தரம் நான் நிரம்பச் சாப்பிட்டிருந்தேன். வாஸ்தவத்தில் எனக்குப் பசியே இருக்கவில்லை" என்றேன்.

"அவள் நேரமாக்கினாளே; நீ உடனே திரும்புவதற்கு என்ன?"

"புத்தகம் அவசரமாக வேண்டும் என்று நீ சொல்லியிருந்தாயே?"

"இருக்கட்டுமே. அதற்காக, ஒருத்தர் பொருட்டு மற்றவர் பசியைக்கூட மறப்பது உண்டா என்ன?" என்று அவள் அன்போடு கடிந்துகொண்டாள்.

அப்பா நாணுத் தாத்தாவின் விஷயமாகச் சொன்னதை அத்தைக்குத் தெரிவித்திருந்தேன். "சரி, பார்க்கலாம்" என்றாள்.

இரண்டு மூன்று மாதங்களுக்கெல்லாம் நாணுத் தாத்தா நேரில் அவளிடம் வந்து மறுபடி தம் குறைகளை முறையிட்டார். "நான் என்ன செய்வது தாத்தா? அங்கே மற்றொருவருக்குக் கொடுக்கக்கூடிய வேலை இல்லை என்கிறான் அண்ணா. உங்கள் கஷ்டத்தைப் பார்த்தால் என்னால் சகிக்க முடியவில்லை. நான் வேண்டுமானால் என் சொந்தச் செலவிலிருந்து இப்போதைக்கு மாசம் ஐந்து ரூபாய் கொடுக்கிறேன். ஊரில் வேலைகள் அதிகமானதும் பார்க்கலாம்" என்று அத்தை கூறினாள்.

"என் குடும்பத்துக்கு இது எப்படிப் போதும், அம்மா? இருந்தாலும் ஏதோ இவ்வளவாவது செய்கிறீர்களே" என்று தாத்தா அரைமனத்துடன் திரும்பினார். அத்தை அவருக்கு உதவியது எனக்கும் சந்தோஷமாக இருந்தது. பிறகு அவர் அடிக்கடி சென்னைக்கு வருவதும் போவதுமாக இருந்தார்.

அந்த வருஷக் கடைசியில் பரீக்ஷை முடிந்ததும் நான் ஊருக்குப் போகவேண்டாம் என்று இருந்தேன். ஆனால், திருச்சியிலிருந்து கோமளம் வந்திருப்பதால் நான் கட்டாயம் வரவேண்டும் என்று அப்பா எழுதியிருந்தார். நான் போகவேண்டியதாயிற்று.

கோமளத்தைப் பார்க்க எனக்கு ஆவலாக இருந்தது. என்னைக் கண்டதும், "என்ன அண்ணா, நீ இப்போது இவ்வளவு பெரியவனாகப் போய்விட்டாயே!" என்று அவள் ஆச்சரியப்பட்டாள். "பின்னே! பெரிய படிப்புப் படிக்கும்போது பெரியவனாகாமலா இருப்பேன்?" என்றேன். அம்மாவுக்கு மட்டும் ஒரு குறை. 'என் கோமளத்தின் வயிற்றில் ஒரு குழந்தை பிறக்கவில்லை

யே!' என்ற விசாரத்தோடு, அவள் தெய்வங்களிடம் பேரம் செய்துகொண்டிருந்தாள்.

நான் வந்து பத்துப் பதினேந்து நாட்கள் ஆகியிருந்தன. ஊரில் அப்பாவைப் பிடிக்காத கட்சி ஒன்று இருந்ததாகத் தெரிந்தது. ஒரு நாள் நான் குளத்தங்கரையில் பல் தேய்த்துக் கொண்டிருந்தபொழுது, வேறு படித்துறையில் சிலர் பேசிக்கொண்டு இருந்தார்கள்.

"வழியிலே போகிறவனெல்லாம் பிறத்தியார் சொத்தை வாங்கி வைத்துக்கொண்டு நம்மூரிலே வந்து என்ன அதிகாரம் செலுத்துகிறான், பார்த்தாயா?" என்றார் ஒருவர்.

"ஏண்டா, வசனம் கேட்டதில்லையா, அற்பனுக்கு வாழ்வு வந்தால்..... என்று? எங்கேயோ 'வாத்தியாராகக் கிடந்தவனிக்கொண்டு பெரிய ஜமீன்தாராக ஆக்கினால் பின்னே எப்படிடா இருப்பான்?"

"அந்த அம்மாளே நாணுத் தாத்தாவிடம் சொல்லியிருக்கிறாளாமே, 'கொஞ்ச நாள் பொறும். உங்களுக்கு வேலை கொடுக்கிறேன்' என்று?"

"அவள் அண்ணனைக் கேட்காமல் ஒன்றும் செய்யமாட்டாள், ஐயா!"

"அந்தக் கால மெல்லாம் மலையேறி விட்டது."

"உமக்கு விஷயம் தெரியாது. இல்லாவிட்டால் இந்தக் காலத்தில், அண்ணன் தன்னை வளர்த்தான் என்பதற்காக, அவன் பெண்ணின் வீட்டுக் கடனுக்குக் கேட்ட வுடனே யார் பணம் கொடுப்பார்கள்? எல்லாருமே அண்ணன் தங்கைகள் ஆகிவிடுவார்களா? அவர்களைப்போல இருப்பவர் நூற்றில் ஒருவர்தாம்!"

"எப்போதும் ஏழையின் வார்த்தை அம்பலந்தான். போகப் போக நீரே சொல்வீர், பாரும்."

எங்கள் குடும்பத்தைப்பற்றி இம்மாதிரியான வம்பளப்புகளைக் கேட்க எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்பாவுக்கு இவை எல்லாம் தெரியாமலா இருக்கும்? தெரியாமல் இருந்தால் நான் சொல்வது உசிதமா? எனக்கு இந்தக் குப்பைக் காட்டில் ஒரு நாள் தள்ளுவது ஒரு யுகமாக இருக்கிறதே; அவர் எப்படித்தான் இங்கே நிம்மதியாக வாழ்கிறாரோ?

அப்பாவுக்கு முதலில் வேண்டிய உதவிகள் செய்தவர் நாணுத் தாத்தா. பார்வைக்கு அவர் நல்லவராகத் தோன்றிய போதிலும் அவருடைய நேர்மையில் எனக்கு நம்பிக்கை இல்லை. அப்பா அவருக்கு நேரடியாக வேலை கொடுக்காவிட்டாலும் அவ்வப்போது உதவிகள் செய்துவந்தார். அவரும் அப்பாவிடம் பிரியமாக இருப்பதாகவே தெரிந்தது. ஆகவே ஊரில் சிலர் இவ்விதம் சொல்லிக் கொண்டதற்கு நான் அவரைக் காரணமாகச் சொல்ல முடியாது. உலகத்தில் ஒவ்வொருவனும் 'அசல் வாழ்ந்தால் அஞ்சு பட்டினி' இருப்பவன்தான். எவனையும் குற்றம் சாட்டுவதில் பயன் இல்லை. அந்த ஊரில் அந்தச் சூழ்நிலையில் வாசம் செய்ய எனக்கு எப்படியும் இஷ்டமில்லை. "எப்போது வந்தாலும் இப்படிப் பறக்கிறாயே?" என்று அம்மா சொல்லியுங்கூட, லீவு முடியுமுன்பே நான் சென்னைக்குத் திரும்ப விரும்பினேன். "வீட்டில் யாரும் புருஷத்துணை இல்லாததால் அத்தை என்னைச் சீக்கிரமே வந்துவிடச் சொன்னாள்" என்று ஒரு போடு போட்டேன்.

கோமளத்துக்கு நான் விடுமுறை முழுவதும் அவளோடு தங்கியிருக்கவேண்டும் என்று எண்ணம். "நான் புக்ககத்துக்குப் போகும்போது அன்று அழுதாயே, ஞாபகம் இருக்கிறதா அண்ணா?" என்று கேட்டாள்.

"ஞாபகம் இல்லாமல் என்ன?"

"அந்த ஞாபகமெல்லாம் இனிமேல் உனக்கு இருக்குமா? இனிமேல் உனக்குக் கண்ணெல்லாம் அங்கேதான் இருக்கும்!" என்று அவள் குறும்புச் சிரிப்போடு சொன்னாள்.

நான் புறப்படுமுன்பு, 'உனக்குக் கண்ணெல்லாம் இனி அங்கேதான் இருக்கும்' என்று அவள் சொன்னதை நினைக்கும்போதெல்லாம் என் மனத்தில் ஓர் இனிய குளுகுளுப்பு உண்டாகும். நான் வந்த சில நாளுக்கப்புறம் அவள் திருச்சிக்குப் போய்விட்டதாகத் தெரிந்தது.

7

"சேர இருந்தால் செடியும் பீசை" என்ற பழமொழியை முதல் முதலில் எந்த நாடோடி தோற்றுவித்திருந்தாலும் சரிதான், அவன் மிகப் பெரிய அநுபவஞானி என்பதில் மட்டும் சந்தேகம் இல்லை. முன்பெல்லாம் அம்மா ஏதாவது வித்தியாசமாக நேரிலே சொன்னால்கூடக் காதில் போட்டுக் கொள்ளாமல் இருந்த அத்தை இப்போது என்னிடமே அவளைப்பற்றி என் குறை சொல்கிறாள் என்பது எனக்குப் புரியவில்லை. இந்த மாறுதல் எத்தகையது, இதன் ரகசியம் என்ன என்பதை நான் அப்போது அறியவில்லை.

"'காஞ்சீபுரத்தில் எங்கள் நிலங்களைக் கூடக் கவனியாமல் இங்கே அயலாருக்கு உழைக்கிறோம். என்ன உழைத்தும் என்ன? எங்களுக்குக் கிடைப்பது அவச்சொல்தான்' என்று உங்கள் அம்மா ஊரெல்லாம் சொல்லிக் கொள்கிறாளாமே?" என்று அத்தை ஒரு நாள் என்னைக் கேட்டாள்.

"எனக்குத் தெரிந்தவரையில் அந்த மாதிரி ஒன்றும் இல்லை" என்றேன்.

மற்றொரு நாள், "அண்ணா காஞ்சீபுரத்தில் நிலங்கள் வாங்கியிருக்கிறானாமே. அவன் குழந்தைகள் நன்றாக இருந்தால் எனக்கும் சந்தோஷந்தானே? பைத்தியம்! இதை



எல்லாம் அவன் என்னிடம் மறைத்து வைப்பானேன் ?" என்று கேட்டாள்.

"என்னிடங்கூட அவர் அதெல்லாம் சொல்லவில்லையே !" என்றேன்.

நான் எதையாவது மறைக்கிறேனே என்று பார்ப்பவள் போல அவள் ஒரு கணம் நின்றாள். பிறகு என் களங்கமற்ற கண்களைக் கண்டு என்ன நினைத்தாளோ, உள்ளே போய்விட்டாள்.

இண்டரில் நான் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற ஆனந்தத்தில் பங்கஜம் தன் இரட்டைப் பின்னலே விட்டுவிட்டாள். தியாகத்தில் இன்பம் இருப்பதை அவள் தானே உணர்ந்தாள் போலும் !

நாட்கள் விமானவேகத்தில் ஓடின. ஆறு மாசப் பரீக்ஷைக்கு முன்புதான் என்று நினைக்கிறேன் : ஒரு நாள் பங்கஜம் என்னிடம் வந்து, "இந்த வாக்கியத்துக்கு என்ன அர்த்தம் ?" என்று கேட்டாள். கேட்டு விட்டாளே தவிர, புத்தகத்தை என்னிடம் கொடுக்கும் தைரியம் அவளுக்கு இல்லை. நானே அதை வாங்கி, அவள் கை வைத்திருந்த இடத்தைப் படித்தேன்.

"என்னைப் பரிகாசம் செய்யவேண்டும் என்ற எண்ணமா ?" என்று கேட்டேன்.

"உண்மையில் ஒரு பதம் எனக்குப் புரியவில்லை" என்று அவள் சொல்லியபோது, என் பதில் அறியவேண்டும் என்ற துடிப்பும் ஆவலும் அவள் முகத்தில் போட்டியிடுவதைக் கண்டேன்.

"உவகை என்பதா புரியவில்லை ?" என்று நான் கேட்டபோது, அவள் களுக்கென்று சிரித்து நாணத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

'காதலி அவனை உவகையுடன் பார்த்தாள்' என்பது அந்த வாக்கியம். நான் வெடுக்கென்று பூவைப் பறிப்பதுபோல அவள் கன்னத்தைக் கிள்ளிக்கொண்டே, "இதுதான் அதற்கு அர்த்தம்" என்றேன்.

"நன்றாக இருக்கிறது, பாடம் படிக்கிற லக்ஷணம் ! ஒரு படிப்பு இல்லை, வீட்டுவேலை இல்லை. வயசான பெண்ணைவே தோன்றவில்லை !" என்று சொல்லிக்கொண்டே அத்தை அறைக்கு வெளியில் நின்றிருந்தாள். கடைசி வாக்கியத்தை அவள் உச்சரித்த விதத்தில் ஓர் உள்ளர்த்தம் தொனித்தது.

பங்கஜம் வேகமாக வெளியே போனாள். அத்தையும் மெதுவாக அங்கிருந்து அசைந்து நடந்தாள். அவளுடைய அந்தத் திடீர் மாறுதலுக்குக் காரணம் எனக்குப் புலப்படவில்லை. நானும் பங்கஜமும் அன்றுதானா முதலில் பழகுகிறோம் ?

அன்று என் மனம் என்னிடத்திலே இல்லை. பாடத்தில் கவனம் செல்லவில்லை. சாயங்தரம் காலேஜிலிருந்து வந்ததும், "அம்மா சொன்னதற்காகவா நீ இப்படி முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டிருக்கிறாய் ? பெரியவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். நீ வா ; இன்று நாம் பீச்சுக்குப் போய்வருவோம்" என்றாள் பங்கஜம்.

"அத்தையோடு கூடத்தானே ?"

"இன்று ராமர் கோவிலில் பிரசங்கமாம். அவள் அங்கே போயிருக்கிறாள்."

"நான் வரவில்லை பீச்சுக்கு. நீ வேண்டுமானால் போய் வா" என்றேன்.

"என்மேல் உனக்குக் கோபம் இல்லை என்றால் கட்டாயம் என்னோடு வரத்தான் வேண்டும். டிரைவர்கூட இன்று வரவில்லை. காரை நீதான் ஓட்டவேண்டும்" என்றாள்.

கார் சொந்தக்காரி என்ற முறையில் அத்தை எனக்கு அநுமதி தந்திருந்ததால்

இரண்டு வருஷங்களுக்கு முன்பே நான் கார் லைஸென்ஸ் வாங்கி வண்டியோட்டக் கற்றிருந்தேன்.

நாங்கள் புறப்பட்டோம். பீச் ரோட்டில் வண்டி ஓடிக்கொண்டிருக்கையில், "நான் கொஞ்சம் ஓட்டிப் பார்க்கிறேனே!" என்ருள் பங்கஜம்.

"உன்னல் முடியாது" என்று சொல்லியும் அவள் கேட்கவில்லே. பிடிவாதத்தோடு என் அருகில் நெருங்கி உட்கார்ந்தாள். என் உடலில் புல்லரித்தது. அவள் கையைப் பிடித்துக் காரை ஓட்டக் கற்றுக்கொடுத்தவாறே நான் மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொண்டிருந்தேன்.

சுமார் ஐம்பதடி தூரத்தில் ஒரு குடும்பம் சாலேயைக் கடந்துகொண்டிருந்தது. ஒரு குழந்தை மட்டும் பின் தங்கியதை முன்னே சென்றவர்கள் கவனிக்கவில்லே. குழந்தைக்குப் பத்தடி தூரத்தில் கார் வந்துவிட்டது. பங்கஜத்துக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லே. நான் சட்டென்று வண்டியைச் சிறிது திருப்பி, பிரேக்கைப் போட்டு நிறுத்தினேன். குழந்தை தப்பித்துக்கொண்டது.

பங்கஜம் அப்போதும் வெளிறிய முகத்தோடு பரக்கப் பரக்க விழித்தாள். என்னேப் பார்த்து, "குழந்தை பிழைத்துவிட்டதா?" என்று ஆவேசத்தோடு கேட்டாள்.

"ஆமாம்" என்றேன்.

"இரண்டு குற்றங்களிலிருந்து நீ இன்று என்னேத் தப்புவித்தாய், பத்து. ஒன்று, லைஸென்ஸ் இல்லாமல் கார் ஓட்டுவது; மற்றொன்று, அந்த அழகிய குழந்தை..." என்று அவள் குழறினுள்.

பின்பு அவள் வெகு நாட்கள்வரையில் நடுத் தூக்கத்தில், "குழந்தை பிழைத்துவிட்டதா?" என்று பிதற்றுவதாக அத்தை சொல்லிக்கொண்டிருந்தாள்.

நாங்கள் தனியே உலாவப் போனதற்காக அத்தை கோபித்துக்கொண்டாள். நானும் பங்கஜமும் இப்போது அதிகமாய்ப் பழகுவதில்லே. என் படிப்பு உண்டு, நான் உண்டு.

"ஏழைமையில் வாழ்ந்தவளே வலுவிலே கூப்பிட்டு ராஜாத்தி ஆக்கினுல் பின்னே எப்படி இருக்கும்?" என்று நாணுத் தாத்தா ஒரு சமயம் வந்தபோது அத்தை சொன்னது என் காதில் விழுந்தது. இம்மாதிரியான நிகழ்ச்சிகள் என் மனத்தைக் கலக்கின. நான் உள்ளுக்குள்ளேயே மறுகிக் கொண்டிருந்தேன். ஏதோ ஒருவிதமாக இருந்து, அந்த வருஷத்துப் பரீக்ஷையை எழுதி முடித்தேன்.

ஒரு நாள் அத்தை என்னேத் தனியே கூப்பிட்டு, "இதோ பார் பத்து: நீ இப்போதே பெரியவனுகி எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ள மாட்டாயா என்று இருக்கிறது எனக்கு. அண்ணு ஓயாமல் வேலே செய்து மண்ணே வெட்டி மேலே சாய்த்துக்கொள்வது சரியல்ல. மனித உடம்பு; அதிலும் வயசாகிக் கொண்டிருக்கிறது. இந்த வயசிலே அவன் கிருஷ்ணு ராமா என்று காஞ்சீபுரத்திலே இருந்து ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டு, நல்ல வழியில் காலம் கழிப்பதுதான் நல்லது. அவனிடம் இனிமேல் நான் வேலே வாங்குவது மகாபாவம்!" என்ருள்.

அவள் எந்த நோக்கத்தோடு இதைச் சொன்னுள் என்பது எனக்குப் புரியவில்லே. ஆயினும், "நீ எப்படிச் சொல்கிறுயோ, செய்கிறேன் அத்தை" என்றேன்.

பரீக்ஷையானதும் நான் ஊருக்குப் புறப்படுகையில், "அப்பாவிடம் சொல்லு. நானும் அவனுக்கு எழுதியிருக்கிறேன். நீங்கள் இரண்டு பேரும் வீட்டில் தாராளமாய்ப் பழகிக்கொண்டிருக்கிறீர்கள். கூடிய சீக்கிரத்தில் கல்யாணம் ஆகிவிட்டால் எனக்கு மனசுக்கு நிம்மதியாக இருக்கும்" என்ருள்.

கல்யாண விஷயமாக நான் இதுவரையில் ஏதும் சிந்தித்ததே இல்லே. "ஆகட்டும் அத்தை, ஊருக்குப் போனதும் அப்பாவிடம் சொல்லிக் கடிதம் போடச் சொல்கிறேன்" என்று அவளிடம் பதில் சொன்னேன்.

ஆனுல் என் உள்ளத்தில் உறுத்திய விஷயம் வேறு. அப்பாவிடம் வேலே வாங்குவது அநீதி என்று நினைத்த அத்தை அவர் செய்துள்ள உதவிகளேயும் கூடவே பாராட்டியிருக்கலாமே! ஆயுசில் பெரும் பகுதியைப் பள்ளிக்கூடத்திலே கழித்துக் கடுமையாக உழைத்து, அப்பா என்ன சுகத்தைக் கண்டார்? ஊரிலே போய் 'நிலங்களேச் சீர்படுத்தி இராப்பகலாக உழைத்து, உண்மையாகப் பாடுபட்டு அவர் என்ன பெயரை வாரிக் கட்டிக்கொண்டார்? 'எங்கள் குடும்பத்தில் பற்றுக் குறைத்தவள் போலத் தென்படும் அத்தை என்னே மட்டும் விரும்பித் தன் பெண்ணே எனக்குக் கல்யாணம் செய்விக்க விரும்புவானேன்? என்னவோ, அவள் போக்கே தெளிவுபடாத விசித்திரமாக இருந்தது.

"உன் பாடு, அப்பா பாடு" என்று நான் பதில் சொல்லியிருப்பேன். ஆனுல் வேறு விதமாகச் சொன்ன பதில் அத்தைக்காக அல்ல; வாசற் கதவின் புறத்திலே ஒதுங்கி என்னே அரைக்கண்ணேடு பார்த்துக்கொண்டிருந்த பங்கஜத்துக்காகச் சொன்ன பதில் அது. அவர்கள் இருவரும் அதைக் கேட்டனர். இருவர் முகத்திலும் சமாதானம் நிலவியது.

கல்யாண நினேவோடு ஊருக்குப் புறப்பட்டேன். "உடற் கூறுகளே நன்முகப் பயின்று, ஒரு பெண்ணின் பிணத்தையாவது கிழித்துப் பார்த்தாலொழிய எந்த ஆடவனும் எப்போதும் விவாகம் செய்துகொள்ளலாகாது" என்று நான் எங்கோ படித்திருந்தது அப்போது எனக்கு ஞாபகம் வந்தது.

(தொடரும்)



யுத்த சிங்கங்கள்

'சுக்கிராசாரி'

1

யுத்தத்தின் விளைவாக எழுந்த பிரச்னைகளை ஐரோப்பிய ராஜதந்திரம் சமத்காரமாக "யுத்த சிங்கங்கள்" என்ற பெயரிட்டு அழைக்கும். யுத்த தேவதை விட்டுப்போகும் சம்பத்துக்கள் யாவும் கருத்துக்களின் ரூபமாகவோ அல்லது பூப்பரப்பாகவோ, அல்லது சமுதாயச் சுமையாகவோ லபித்துவிடுகின்றன.

உலக வியாபக யுத்தம் என்ற இந்த யுத்தமும் முடிவடையும் கட்டத்தை எட்டிவிட்டது. ஐரோப்பிய ராஜ தந்திரிகள் ஸ்திரமான ஓர் அடிப்படையின் பேரில் சமாதானத்தை வகுப்பதற்காக யோசனைகள் பலவற்றைச் சமர்ப்பிக்கிறார்கள். இனிமேல் யுத்தமே உலகத்தில் தோன்றுதபடி செய்துவிட, சர்வதேசப் பாதுகாப்புக் கவுன்ஸில் ஒன்று ஏற்படுத்தவேண்டும் என்கிறார்கள். இந்தக் கௌன்ஸிலின் ஆதிக்கம் உலக முழுவதும் வியாபகமாக இருக்கவேண்டுமென்பது சிலர் கொள்கை. இந்த யுத்தத்தில் பிரதானப் பொறுப்பைத் தாங்கிக்கொண்ட பிரிட்டன், அமெரிக்கா, ஸோவியத் ரஷ்யா ஆகிய நாடுகளின் மூலம் வட்டாரக் கவுன்ஸில்கள் ஏற்படுத்திப் போர்க்குமிழி தோன்றுதபடி தடுக்கவேண்டும் என்பது சிலர் கருத்து. ஐக்கிய நாடுகளின் அணியில் உள்ள சகல நாடுகளும் சுய அந்தஸ்துப் பெற்றவையாகப் பாவிக்கப்படவேண்டும்; பெரியது சின்னது என்ற பேதம் இருக்கலாகாது; பேத மனப்பான்மைதான் சங்கடங்களுக்கு எல்லாம் காரணம் என்பதும் ஒரு யோசனை.

இது தவிர, இந்த யுத்தத்தைத் தூண்டினவை, யுத்தத்துக்கு ஜவாப்தாரியானவை எனக் கருதப்படும் நாடுகளை எப்படி நடத்துவது? அவற்றை அடியோடு நிதைத்துத் தலைதூக்க விடாமல் செய்துவிடுவதா அல்லது அவற்றை வேறு எந்த மாதிரி நடத்துவது? - இது ஒரு கேள்வி.

கடையொரு வருவது காலனிகளின் விஷயம்: பெரிய வல்லரசுகள் சந்தர்ப்ப வசதியினாலே பெரும் பெரும் பிராந்தியங்களைத் தம் அதீனத்தின் கீழ்க் கொண்டுவந்து ஆண்டு அநுபவித்துவருகின்றன. தமக்கும் காலனி வசதிகள் பெறுவதற்குச் சந்தர்ப்பம் தேடிக் காத்திருக்கும் நாடுகள் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ தயார்செய்துகொண்டு வந்து இடம் பிடிக்க மூனைகின்றன. இவை யுத்தகளத்தக்குப் பழைய புள்ளிகளையும் புதுப் புள்ளிகளையும் அழைத்துச் செல்லுகின்றன. ஒவ்வோர் இனமும் தன் தன் சௌகரியத்துக்குத் தகுந்தபடி புது உலக அமைப்பு எனவே, ஸ்திர சமாதானம், நான்கு சுதந்தர நிர்த்தாரணம் எனவோ சொல்லிக் கொண்டு போரில் மூனைந்து தீர்க்கமான முடிவு காண முற்படுகின்றது. இன்று பெரிய அளவில் உலக முழுவதும் வியாபித்திருக்கும் முதலாளித்துவப் பொருளாதாரத் கட்டுக்கோப்புக்கு ராஜீய நீதியில் காலனி வியாபகம், ஆதிக்கம் ஆகியவை அத்தியாவசியமான தீனைச் சாதனங்களாகும். அடிமைப்பட்ட மக்களை விடுவிப்பதற்காகவும், ஜனநாயக ஆட்சி முறையை ஸ்திரப்படுத்துவதற்காகவும் கடைபெறும் இந்த யுத்தம் கூடிய சீக்கிரத்தில் நின்றுவிடும், அதை எதிர்பார்த்து ஐக்கிய நாடுகள் யாவும் ஸான்பிரான்ஸிஸ்கோவில் கூடியிருக்கின்றன. நியாயான அடிப்படையின்மேல் சமாதானத்தை வகுக்கவும் அதைப் பாதுகாக்கவும் வகைசெய்வதே ஸான்பிரான்ஸிஸ்கோவில் கூடும் பிரமுகர்களின் நோக்கம்.

இதற்குமுன் டம்பர்ட்டன் ஓக்ஸ் என்ற இடத்தில் ஐக்கிய நாட்டுத் தலைவர்கள் கூடிச் சில சமரசான யோசனைகளை வகுத்தார்கள். அவை என்ன என்பதைச் சற்றுச் சுருக்கமாகக் கவனிப்போம்.

இப்பொழுது இருந்தவரும் ஐக்கிய நாடுகளின் யுத்தகாலக் கூட்டுறவை ஒரு ஸ்திரமான சர்வதேச ஏற்பாடாக அமைக்கவேண்டும் என்று டம்பர்ட்டன் ஓக்ஸ் மகாநாட்டு அறிக்கை பிரசுரஞ் செய்கிறது. இந்தச் சர்வதேச ஏற்பாட்டுக்கு மூன்று ஸ்தாபனங்கள் அத்தியாவசியமானவை: ஒன்று பூர்வாங்கமான ஸ்தாபனம்; மற்றவை இரண்டும் தாற்காலிகமான ஸ்தாபனங்கள். சகல தேசங்களுக்கும் இடையே சட்டபூர்வமாக முன்னேற்றத்தையும் சமாதானத்தையும் வளர்ப்பதற்காகச் சட்டத்தின் அடிப்படையின் பேரில் ஸ்தாபனங்களோ அல்லது தமது கருத்துக்களை நடத்திவைக்கும் ஏஜென்ஸிகளோ அமைப்பதைக் கடமையும் உரிமையுமாகக் கொண்டுள்ள மகாமன்றம் ஒன்றை ஏற்பாடு செய்யவேண்டும். இது பூர்வாங்கம்.

இது தவிர வேறு இரண்டு தாற்காலிக ஸ்தாபனங்கள் தேவை எனச் சொன்னேன். அச்சு எதிரிகளான ஜெர்மனியையும் ஜப்பானையும் 'பங்கிடு' செய்துவைப்பதற்காக வெற்றி பெற்ற ஐக்கிய நாடுகள் ஏற்படுத்த வேண்டிய ஸ்தாபனம் அவற்றில் ஒன்று. மூன்றாவது, பாதுகாப்புக் கௌன்வில். இதன் பிரதான நோக்கம் வருங்காலத்தில் சமுதாயத்தின் பெரு வியாதி எனச் சொல்லப்படும் யுத்தமே நிகழாமல் தடைசெய்வதற்குத் தகுந்த நடவடிக்கையைத் தீர்க்கமாகவும் உடனடியாகவும் எடுத்துக்கொள்ளுவதற்குத் தெம்பும் தகுதியும் வாய்ந்த சாதனங்களை அமைத்தல். யுத்தத்தில் ஜயித்தவர்கள், தோற்றவர்கள், நடு நிலைமை வகித்து ஒதுங்கி நின்றவர்கள் என்ற பேதம் இன்றி இதில் எல்லாத் தேசங்களும் கலந்துகொள்ளுதல் அவசியமாகும். இப்பொழுது இருந்துவரும் பாதுகாப்புக் கௌன்வில் இம்மாதிரி விஸ்தரிக்கப்படவேண்டியது படிப்படியாக நடைபெறவேண்டிய காரியம். அஃதல் தற்போது யுத்தகாலத்தில் நிலைமை வகித்த மூவல்லரசுகளும் யுத்தம் முடிவடைந்து பரிபூர்ண சமாதான காலம் எனச் சொல்லத்தகுந்த ஒரு கட்டம் வரும் வரையில் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்பது அத்தியாவசியம் ஆகும் எனக் கருதுகிறார்கள். இனி ஏற்பட இருக்கும் அந்தப் பரிபூர்ண சமாதான காலத்தில், ஆதிக்க வசதியும் ஆயுதபல வசதியும் காரியார்த்தத்தில் பெற்றுள்ள பெரு வல்லரசுகள், விசேஷ அளவில் மட்டும் தனிநாடாக இருக்கும் சிறு தேசங்களுடன் சமத்துவம் பாவித்துத் தினகரண சுத்தியாகச் செயலிலும் அவ்வாறு நடந்து கொள்ள முடியுமா?

இன்று பிரதான வல்லரசுகளாக இருப்பவை பிரிட்டன், அமெரிக்கா, ஸோவியத் ரஷ்யா. இம் மூன்றும் மூன்று விதத்தில் செல்வாக்கும் பலமும் கொண்டவை. பிரிட்டன் இன்று எரளமான நிலப்பரப்பை கொதிபத்தியம் என்ற விலாசத்தில் தன் ஆதிக்கத்தின்கீழ் ராஜவ பலத்தினாலும் ராஜதந்திர சாதுரியத்தினாலும் வைத்திருக்கிறது. ஏறக்குறைய ஐரோப்பா அளவுக்கு விஸ்தீர்ணமுள்ள தொடர்ச்சியான நிலப்பரப்பைத் தன் வசம் கொண்டு இந்த யுத்தம் முழுவதற்குமே வேண்டிய பெரியதோர் ஆயுத தளவாட உற்பத்தி சாலையை நிருமித்த அமெரிக்கா, பெரிய தொரு வர்த்தகச் சாம்ராஜ்யமாக மாறுவது நிச்சயம். தவிரவும் யுத்தத்தில் கலந்துகொண்டுள்ள ஐக்கிய நாடுகள் முழுவதற்குமே இரவல் குத்தகை ஏற்பாட்டின்பேரில் தளவாடங்கள், கப்பல்கள், தளங்கள் முதலியவற்றை அமெரிக்கா கொடுத்திருக்கிறது. எவ்வளவுதான் லக்ஷ்யவாதம் பேசினாலும் அமெரிக்கா இத்தனையையும் வெறும் யுத்தத் தியாகம் என்று கருதி மனத்திருப்தி அடைந்துவிடுமா? மூன்றாவது ரஷ்யா. பொதுவுடைமைக் கட்டுக்கோப்பின் கீழ், தனி மனித முதலாளித்துவத்தை அடியோடு ஒழித்துவிட்ட ஸோவியத் ரஷ்யா தனது கிழக்குப் பிராந்தியங்களில் ஸ்தாபித்துள்ள பெரும்பான விவசாயங்களில் வருங்காலத்தில் பேசாதிருந்துவிடுமோ? வடக்கு ஈரானிலும் போலந்திலும் இருந்துவரும் நிலைமை அதன் வருங்கால நினைப்புக்களுக்குச் சிறு அறிகுறி. மற்ற வல்லரசுகளும் இதே நீதியில் தத்தம் பலத்தையும் நலத்தையும் முன்னிட்டு உள்ளூர ஆசைகள் வைத்துக்கொண்டிருக்கும்பொழுது ரஷ்யாவின் போக்கைக் கண்டு பிரமிப்பது விவேகமல்ல.

இந்த யுத்தம் அடிமைப்பட்ட மக்கள் விடுதலை அடைவதற்காக என்று நேசநாட்டுத் தலைவர்கள் கூறினார்கள். யுத்தத்தின் காரணமாக அல்லாமல், அதற்கு முன்பே, வெகு காலத்துக்கு முன்பே, அடிமைப்பட்டுக் கிடக்கும் மக்களிடையே இந்தக் கூற்றைக் கேட்டு அளவற்ற ஓர் உத்ஸாகம் தோன்றிவிடவே, அதை வளரவிடாமல் தடுத்தவிடும் பொருட்டு, அச்சு நாடுகளால் அடிமைப்பட்ட மக்களின் விடுதலைக்காக நடைபெறும் போராட்டம் இது என விவகாரம் தெளிவுபடுத்தப்பட்டது. பிரிட்டிஷ் கொதிபத்தியத்துக்கு உட்பட்டிருந்த பர்மா, மலேயாப் பிராந்தியங்கள் ஜப்பான் வசம் கைமாறிய பிற்பாடும் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் அந்தப் பகுதிகளை அச்சு அடிமைத்தனத்தினின்றும் விடுவிப்பதுமட்டுந்தான் தம் நோக்கம் என்பதையும், அவற்றை மீட்ட பிற்பாடு, அவற்றில் சுயராட்சி வேரூன்றுவதற்குத் தகுந்தபடி அவற்றைத் தம் ஆதிக்கத்தின் கீழ் முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வதே தமது நோக்கம் என்பதையும் தெரிவித்து விட்டபடியால், பிரிட்டன் வசம் மீளக்கூடிய நாடுகளைப் பற்றிய வரையில் சந்தேகம் இல்லை. மற்ற வல்லரசுகள் எப்படி நடந்து கொள்ளும்? அச்சுடன் சேர்ந்த விச்சி பிரான்வின் வசமிருந்த ஸிரியா, பெலுன் பகுதிகளுக்கு நேசக்கட்சியின் சார்பாக நின்ற பிரெஞ்சுக் கோஷ்டியாகிய டிகால் கட்சி, ஜெனரல் காட்ரு மூலம் அவற்றிற்குச் சுதந்தர உரிமை வழங்குவதாகச் சொல்லியது. அதன் வாக்குறுதியை நிறைவேற்றி வைப்பதாகப் பிரிட்டன் ஜாமீன் நின்றது. இப்பொழுது டிகால் சர்க்கார் ஸிரியாவுக்குப் "பெப்பெப்பே" என்று சொல்லி விட்டது. ஜாமீனாக நின்ற பிரிட்டன் பேசாமல் வாய்மூடி மௌனம் சாதிக்கிறது. இது தவிர இந்தோ சீனாவுக்கு டிகால் சர்க்கார் இப்போது பெடரல் அரசாட்சிமுறை ஒன்றைச் சீர்திருத்தம் என்ற விலாசத்தோடு வழங்கியிருக்கிறது. அதில் முடிவான அதிகாரம் பிரான்ஸுக்கு ஜவாப்தாரியாக உள்ள கவர்னர் ஜெனரல் வசமே இருக்கும். அச்சுநாடுகளிடமிருந்து மீட்கப்பட்ட காலனிகளுக்குக் கிடைத்துள்ள சம்பாவனை இது. மூன்று சுதந்தரமாக இருந்து, பிறகு அச்சு நாடுகள் வசம்

சிக்கி, " நேச தேசங்களின் வீரப்படையால் மீண்டும் சுதந்திர நாடுகளாக ஸ்தாபிக்கப்பட்டவற்றின் கதி எப்படி இருக்கிறது என்பதற்குக் கிரீவீல் பிரிட்டன் நடத்துகொண்ட மாதிரியும், போலந்தில் ரஷ்யா நடத்தகொண்டுள்ள மாதிரியும் சாட்சி; வரப்போகும் சாமதான (!) லீயூகத்துக்கு இவை சூசனைகளாகும்.

நிற்க, காலனிகளில் ஆதிக்கம் வகிக்கும் நாடுகள் யாவுமே மேல்நாட்டு வல்லரசுகள். அவை தம் காலனிகளின் நலங்கள் எனக் குறிப்பிடும்போது பொதுவாக அவ்வக் காலனிகளில் வசிக்கும் தம் நாட்டு (மூக்கியமாக வெள்ளை) மக்களின் நலங்களையே அவ்வாறு குறிப்பிட்டுச் சொல்லுகின்றன. அந்தக் காலனிகளில் வெள்ளையரைத் தவிர வேற்று நிற மக்கள் பெரும்பாலோராக இருந்து வருகின்றனர். அவர்களின் கதி மோகூத்தைப் பற்றி இவர்களுக்கு அக்கறை இல்லை. பிற்போக்கான மனித வம்சத்தினராகிய அவர்களுக்கு நாகரிகத்தையும் ஜனநாயகத்தையும் சுயராட்சி மகத்துவத்தையும் கிரமமாகப் போதித்தருவதே முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளின் கடமை என்று வாசாமகோசரமாகப் பேசுவதுடன் அப்பிரச்னை தீர்த்துக் கட்டப்படுகிறது. இவர்களுடைய நலங்கள் உதாசீனம் செய்யப்பட்டால், ஸ்மனர் வெல்ஸ் சமீபத்தில் சொன்னமாதிரி, மூன்றாவது யுத்தத்துக்கு அடிகோலியாகிவிட்டது என்பது நிச்சயம்.

நிற்க, கோடியாக யுத்தத்துக்கு ஜவாப்தாரியாக இருந்த ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகியவற்றை எவ்வாறு நடத்தவது? யுத்தத்துக்குக் காரணபூதர்களான ஹிட்லர், முஸோலினி, ஜப்பானிய ராணுவத் தலைவர்கள் - ஜப்பானிய மன்னர் உட்பட - யாவரையும் யுத்தக் குற்றவாளிகளாக அறிவித்துத் தண்டிக்கவேண்டும் என்பது ஒரு முடிவு. தவிர ஜெர்மனியும் ஜப்பானும் மீண்டும் உலக வியாபக ஆதிக்க வேட்கைகொண்டு தலைதூக்குவதற்கு முடியாதபடி அவற்றை ஒடித்துப் போடவேண்டும் என்பது வேறு ஒரு கருத்து. ஜெர்மனியில் ராணுவத்தைக் கலைத்து, ஆயுத தளவாட உற்பத்திச் சாலைகள் முதலியவற்றை அழித்து, மீண்டும் ஆயுத உற்பத்தி செய்வதற்கு வகையற்றபடியாக்கி, ஜெர்மன் மக்களை நிராயுதபாணிகளாக்க வேண்டும் என்றும், ஜெர்மன்மீது நேச ராணுவ ஆட்சியும், ராணுவக் காவலும் அமைத்து, யுத்த நஷ்டஈடு வசூலிக்க வேண்டும் என்றும் வற்புறுத்துகின்றனர். தவிரவும் ஜெர்மனியிடமிருந்து சில பகுதிகளைப் பிரித்துச் சொற்பத்தைப் போலந்திடமும் இன்னும் சில வற்றைப் பிரான்ஸ் வசமும் ஒப்படைக்கவும் ஏற்பாடாகி இருக்கிறது. ஜெர்மனியை வெறும் லிவ சராய நாடாகவே கட்டிப் போட்டிருக்க வேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். ஜப்பானுக்கும் இதே மாதிரியான திட்டம் ஒன்று உத்தேசத்தில் இருந்துவருகிறது.

இந்த நிலையில் சற்றுப் பழங் கணக்கைப் புரட்டிப் பார்த்தால், வரப்போகும் ஸ்திர சமாதான நம்பிக்கைகளுக்கும் பழைய "யுத்தப் பிற்கால" அபிலாஷைகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைத் தெரிந்துகொள்ளுவது சுலபமாக இருக்கும்.

2

சென்ற மகாயுத்த முடிவில் ஏற்பட்ட வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையைச் சற்றுக் கவனிப்போம். 1919-ஆம் வருஷம் ஜூன் 28-ஆம் தேதி நேச நாடுகளும் அவற்றின் துணை வல்லரசுகளுமாகச் சேர்ந்து அன்று தோல்வியுற்ற ஜெர்மனியுடன் செய்துகொண்ட அந்த உடன்படிக்கை இரண்டு பாகங்கள் கொண்டது. முதற் பாகம் சர்வதேச சங்கம் நிறுவுவதைப் பற்றியது. இரண்டாவது பாகம் ஜெர்மன்மீது சுமத்தப்பட்ட பொறுப்புக்கள். அவை வருமாறு: அல்ஸாஸ் லொரெய்னைப் பிரான்ஸுக்கும், யூப்பன் மால்மடியைப் பெல்ஜியத்துக்கும், போஸ்னேயும் போலந்துக்கடற் பாதையை (காரிடோரை) யும் போலந்துக்கும், மெமேல் லிதுவேனியாவுக்கும் சர்வஜன வோட்டு எடுத்து வடக்கு ஷில்வீகை டென்மார்க்குக்கும், வடகிழக்கு ஸைலீஷியாவைச் சர்வஜன வோட்டுக்குப் பிறகு போலந்துக்கும், ஹால்ஸ்டீனை செக்கொஸ்லாவாகியாவுக்கும் கொடுத்திட வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது. டான்ஸீக் துறைமுக நகரமிதி தனக்குள்ள ஆதிபத்திய உரிமையை ஜெர்மனி கைவிட்டுவிடவேண்டும். ஆஸ்திரியாவுடன் உறவு வைக்கக்கூடாது. யுரேனியம் ராணுவத்தில் சேர்த்துக்கொள்ளுவதற்கு ஜெர்மன் சர்க்கார் விதித்துவரும் உரிமையைக் கைவிட வேண்டும். சுமார் ஒரு லக்ஷத்துக்குமேல் ராணுவ பலம் இருக்கக்கூடாது என்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. இவை தவிர, சொற்பமான கடற்படையும் அதமதிக்கப்பட்டது. ஸப்மரைன், ராணுவ விமானங்கள், பெரிய பீரங்கிகள், டாங்கிகள் முதலியன வைத்திருக்கக்கூடாது. தனது ஆயுத தளவாட உற்பத்தித் தொழிலை ஜெர்மனி அழித்து விட வேண்டும் என்றும் விதிக்கப்பட்டது.

இவற்றோடு 15 வருஷங்களுக்கு நேச நாடுகள் வசம் ரைன்லாந்து இருக்கவேண்டும் எனவும், ஸார் பிராந்தியம் சர்வதேசப் பிராந்தியமாக்கப்பட்டு 1935-ஆம் வருஷ சர்வஜன வோட்டின் பிரகாரம் அதன் வருங்காலம் நிர்ணயிக்கப்பட வேண்டும் எனவும் முடிவுகட்டப்பட்டது. ஜெர்மன் நதிகள் யாவும் சர்வதேசமயமாக்கப் படவேண்டும் (அதாவது ஜெர்மன் நதிகளில் எந்தத் தேசக் கப்பல்களும் போக்கு வரவு நடத்தவும், மற்றப்படி உபயோகிக்கவும் உரிமை) எனவும், ஜெர்மன்

கர்மனிகள் யாவும் சர்வதேச சங்கத்தின் ஆக்ஞைப் பிரகாரம் நேசநாடுகளிடையே பங்கு போடப்படவேண்டும் எனவும் முடிவாயிற்று. இது தவிர ஜெர்மனிதான் யுத்தம் தொடுத்த குற்றத்துக்கு முழு ஜவாப்தாரி என முடிவு கட்டப்பட்டு நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என வும் விதிக்கப்பட்டது. இவைதாம் ஜெர்மனி மீது போடப்பட்ட விலங்குகள்.

3

இனி வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையின் லக்ஷ யப் பகுதியான முதற் பாகத்தைக் கவனிப்போம். இதில் 26 ஷரத்துக்கள் கொண்ட 'கவனன்ட்' ஒன்று உண்டு. அதன் பிரகாரம் சர்வதேச சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அமெரிக்கத் தலைவரான வில்ஸன் வெளியிட்டுள்ள 14 யோசனை களில் ஒன்று, இந்தச் சர்வதேச சங்கக் கருத்து. அந்தப் பதினான்கு யோசனைகளில் இந்த ஒன்றைத் தான் நேசநாடுகள் ஏற்றுக்கொண்டன. சர்வதேச சங்கம் 1920-ஆம் வருஷம் உருவாயிற்று. அதன் தலைமைக் காரியாலயம் ஜெனிவாவில் இருப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. சர்வதேச சங்கத் தில் சேரும் அங்கத்தினர்கள் பாஸ்பர பிராந்தீய ஏகத் தன்மையை மதிப்பதற்கும், ஆக்கிரமிப்பி லிருந்து பாதுகாத்துக் கொள்ளுவதற்கும் உத்தர வாதம் அளிக்கும்படி கவனன்ட் (பிரதிக்ஞை) அவர்களைப் பந்தப்படுத்துகிறது. சர்வதேச சங்கத் தின் மந்திரியஸ்தத்துக்குச் சமர்ப்பிக்காமல் எந்தத் தகராறையும் தீர்த்துக்கொள்ள ராணுவ பலத்தை உபயோகிக்கக் கூடாது. சர்வதேச மந்தி ரியஸ்தர்கள் ஆறுமாத காலத்துக்குள் அந்தப் பிரச்னைசம்பந்தமாக ஏகோபித்த முடிவுக்கு வராத பக்ஷத்தில் அதன் பிறகு மூன்றுமாத வாய்தாக் கழிந்த பிற்பாடு போர் தொடுக்க வேண்டும். 'கவ னன்ட்' உத்தரவாதத்துக்கு விரோதமாக ஆக்கிர மிப்பில் பிரவேசிக்கும் நாடுகளின் மேல் நிர்ப்பந் தங்கள் பிரயோகிக்கலாம் என்பதும் ஒரு ஷரத்து. ஆயுதபலத்தைக் குறைத்துக்கொள்ளுவது, உடன் படிக்கைகளை மீட்டும் பரிசீலனை செய்துகொள்ளு வது ஆகியவற்றிற்கும் வசதிகள் செய்யப்பட் டிருந்தன.

சர்வதேச சங்கக் கூட்டம் வருஷத்துக்கு ஒரு தடவை ஜெனிவாவில் கூடும். அங்கம் பெற்ற தேசம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வோட்டு உண்டு. சர்வதேச சங்கக் கௌன்ஸில் ஒன்று உண்டு. அது வருஷத்தில் மூன்று தடவை கூடும். பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகியவை மூன்றும் கௌன்ஸிலில் நிரந்தர அங்கத்தினர்கள். இது தவிர இன்னும் 12 அங்கத்தினர்கள் தாற் காலிகமாகத் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். சர்வ தேச சங்கத்தின் கிளையாகச் சர்வதேசத் தொழில் ஸ்தாபனம், சர்வதேச நீதிமன்றம் ஆகியவையும் உண்டு.

சர்வதேச லக்ஷ்ய ஏற்பாடுகளும், ஜெர்மனி மீது விதிக்கப்பட்ட விலக்குகளும் என்ன என்ன வீனை வுகளை உண்டாக்கின என்பது சமீப காலத்திய சரித்திரம்.

சர்வதேச சங்கம் ஆரம்பத்திலேயே தூரதி ருஷ்ட தசையில் பிறந்தது. ஆரம்பத்திலேயே அமெரிக்க சர்க்கார் வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை யை அங்கீகரிக்க மறுத்ததுடன் சர்வதேச சங்கத் திலும் சேர முடியாது என்று கூறிவிட்டது. ஆரம் பத்தில் சிற்சில அற்பமான பிரச்னைகளில் சர்வ தேச சங்கம் வெற்றி பெற்றிருந்தாலும் ஜப்பான் மஞ்சூரியாவுக்குள் பிரவேசித்தபோதும், எதியோ பியாமீது மூஸோலினி படை எடுத்தபோதும் காரியசித்தியில் தமோறிவிட்டது. நிர்ப்பந்தங்கள் பிரயோகிக்கப்படவேண்டும் என்று சொன்ன தைக் கேட்பார் எவரும் இல்லை. கூட்டுப் பாது காப்புக்கு என வகுக்கப்பட்ட சர்வதேச சங்கம் முடிவில் பெரிய வல்லரசுகளிடையே பரஸ்பர சுயநல அபிவிருத்தி அணிவகுப்பாகவே மாறிச் செயல் தெம்பு அற்று இந்த யுத்தத்தின் பூர்வ கட்டத்தில் மாண்டது.

வரப்போகும் சர்வதேச ஏற்பாடு மீண்டும் சுய நல அணிவகுப்பாகவே மாறி அடுத்த யுத்தத்துக்கு வித்தையிடுமா, அல்லது வேறுவிதமாக நடந்து கொள்ளுமா என்பதை ஸான்பிரான்ஸிஸ்கோ நகரில் ஏற்படப்போகும் முடிவினால் அறிந்து கொள்ளக்கூடுமோ, இல்லையோ; விரைவில் தெரிந்துவிடும்.

பீரிடுதல்

'ரத்தம் பீரிட்டு அடித்தது' என்பது போன்ற வாக்கியங்களில் 'பீரிட்டு' என் பது சரியா, 'பீறிட்டு' என்று எழுதுவது சரியா என்ற சந்தேகம் வருவதுண்டு. பரலின் தாரையைப் பீர் என்று சொல் வது வழக்கம். "பீரம் பேணில் பாரம் தாங்கும்" என்பதில் பீர் என்பதே பீரம் என்று வந்தது. நீரோ, வேறு திரவ பதார்த்தமோ தாரையாக வேகத்தோடு எழும்போது 'பீரிடுதல்' என்று சொல் கிறோம்.

பீறுதல் என்ற சொல் வேறு. அதை நினைத்து 'பீறிடுதல்' என்று எழுதுவது தவறு. பீறுதல் - மிருதியினால் கிழிதல். பீற்றல் - கிழிந்த போதல். கர்வத்தினால் பருத்தப் பீறமளவுக்கு வருபவர்களைப் பீற்றிக்கொள்கிறார்கள் என்கிறோம்.

எஸ். அம்புஜம்மாள்

[அரசியல் தொண்டில் ஈடுபட்டுச் சிறை சென்ற புகழுக்கு உரியவர் ஸ்ரீமதி அம்புஜம்மாள். பெண்ணுலகம் நம் தாய்நாட்டுத் திருப்பணியில் எங்ஙனம் ஈடுபடலாம் என்ற விஷயத்தில் அவருக்குத் திட்டமான எண்ணம் இருப்பது இயல்பே. ஆதலின் "சமூகச் சீர்திருத்தத் துறையில் மாதர்களின் தொண்டு" இப்படி இருக்கலாம் என்பதைத் தெரிவித்துதவ வேண்டிக்கொண்டோம். ஸ்ரீமதி அவர்கள் பழமைப் பெண்களின் உயர்வையும், அவர்கள் எப்படி இருந்தார்கள் என்பதையும் சொல்லிவிட்டுப் புதுமைப் பெண் சமூக சேவையில் அவசியம் புக வேண்டுமென்பதை வற்புறுத்துகிறார். இந்தக் கட்டுரையில் தேசபக்திக் கனலும் வீரமும் செறிந்திருக்கின்றன என்பதை அன்பர்கள் உணரலாம். ப - ர.]

1

"புதுமைப் பெண் எப்படி இருக்கவேணும்?" என்பதை ஆலோசிப்பதற்கு முன், "பழமைப் பெண் எப்படி இருந்தாள்?" என்பதைப் பார்க்கலாம். "மூக்குக் கண்ணுடியும் மூகப் பவுடரும், சோடும் சொக்காயும், ரிப்பனும் லோப்புள் அறியாதவர்கள் பழமைப் பெண்கள்" என்று சடக்கென்று சிலர் ஹாஸ்யமாக விடை கூறிவிடலாம். அல்லது இப்படிப் பரிகசிக்கலாம்: "உங்களைப் போல, 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வும் இந்த நாட்டிலே!' என்று தெருவில் வந்து கூத்தடிக்கவில்லை, சீதையும் சாவித்திரியும்! 'ஓட்' என்றும் 'உரிமை' என்றும் மேடை ஏறிச் சட்டம் பேசவும் இல்லை!"

'அப்படி இல்லை, இப்படி இல்லை' என்று சொல்வது ஒருபுறம் இருக்க, "உண்மையில் எப்படி இருந்தாள் பழமைப் பெண்?" என்பது அல்லவா கேள்வி? சூரியனுக்கும் முகம் கரட்டாமல், சுத்த ஆகாயமும் உடம்பில் படாமல், 'விலகி வீட்டில் ஓர் பொந்தில்' புதைந்து கிடந்தாளா? அடுப்பூதும் கலையும், கரண்டி பிடிக்கும் தொழிலும் தவிர வேறு அலுவல்களே அறியாளா? எழுதுகோலையும் புஸ்தகத்தையும் பற்றி அவள் என்ன அறிவாள்? 'மூட்டை தைக்கும் கோணி ஊசியோ? கறுப்புப் புள்ளியிட்ட வெள்ளைத்தாள் தற்றையோ?' என்றுதான் நினைக்கக்கூடியவளா? அப்படியும் ஒரு காலம் நம் நாட்டில் இருந்தது! என்ன ஆச்சரியம்! வேறுவிதமாகவும் ஒரு காலம் உண்டு.

வேத மந்திரங்களிலும் சில மந்திரங்கள் பெண்கள் பாடியனவாம். உபநிஷதக் காலத்தில், மைத்திரேயி போன்ற பெண்கள் ஆத்ம விசாரம் செய்தனராம். சந்தி, ஜபதப ஹோமங்கள் கூடச் செய்துவந்தனராம். எனினும், 'பெண்கள் வேதம் ஓதுதல் கூடாது; சம்ஸ்கிருதம் தேவபாஷை, அதைப் பேசுதலும் கூடாது!' என்றெல்லாம் கட்டளையிடப்பட்டுள்ளனர் பிற்காலத்திலே.

புராண இதிகாசங்களைப் புரட்டிப் பார்ப்போமா? தேசத்தை உத்தாரணம் செய்யப் பிறந்த வீரப் பெண்மணிகள் எத்தனை பேர்? பாஞ்சாலி இல்லை என்றால் பாரதப்போர் இல்லையே? வீமன் கதையும், விஜயன் காண்டீவமும் தூருப்பிடித்துத் தானே போயிருக்கும்?

அரிச்ச மாளிகையும் ஹம்ஸதூளிகா மஞ்சமும் துறந்து 'சரிநிகர் சமானமாக' ராமருடன் சீதை நடந்து வனம் சென்றிராவிட்டால் ராவண வதம் உண்டா? ரிஷிகளின் தவத்தான், ஞானத்தான், நீலபெற்றிருக்குமா?

கண்வரைக் கேட்காமல் தவஸ்யத்தனைக் காதல் மணம் புரிந்தாள் சகுந்தலை. 'சிங்கக் குட்டியுடன் விளையாடிய சிங்கக்குட்டி' என்று சொல்லும் படியான திறமை வாய்ந்த பரத சக்கரவர்த்தியை

ஈன்றாள். இன்று அத்தப் பரதன் பெயரைச் சொல்லி வாழ்கிறோம் பாரத மக்களாகிய நாம், பாரதகாட்டிலே.

தமிழ் நூல்களைப் புரட்டுவோமா? தமிழ்ப் பாட்டியான ஔவையார் - ஆஹா, என்ன வீரம்! என்ன புலமை! ஆண்களுக்குச் சரிசமமாக முன்னணியிலே நின்ற எத்தனை வீரத் தாய்மார்கள்!—பக்தமணிகள்! கரைக்கால் அம்மையார், ஆண்டாள் இவர்களின் தெய்வ பக்திக்கும், தெய்வப் புலமைக்கும் மேலான பக்தியும் புலமையும் உண்டா?

கணவனுடன் பீம்நகைச் சிறைமீட்டு வந்தனளாம் வீரரங்கனே பத்மினி. வெல்லற்கரிய மூன்று சத்துருவசக் கோட்டைகளைப் பணயமாக வைத்துப் பகடையாடும்படி தூண்டினளாம் வீரத் தாய் ஜீஜாபாய், மகாராஷ்டிர வீர சிங்கமான சிவாஜியை. இவர்கள் இல்லை என்றால் தென்குமரி வரை எட்டிய ராஜபுத்திரரின் கியாதியும் மகாராஷ்டிர ஸாம்ராஜ்யத்தின் கீர்த்தியும் எங்கே?

இத்தப் பரம்பரையில் வந்தவர்கள்தாமே அன்னை கஸ்தூரி பா, ஸ்ரீமதி சரோஜினி தேவி, விஜயலக்ஷ்மி பண்டிட் போன்ற புதுமைப் பெண்களும்?

2

சரி; இந்த விவகாரங்கள் எல்லாம் எதற்கு? இப்பொழுது கலைமகள் ஆசிரியர் தெரிந்துகொள்ள விரும்புவது வருங்காலப் பெண்களைப் பற்றியே. அதிலும் எனக்குக் கொடுத்திருக்கும் விஷயமோ, ''சமூகச் சீர்திருத்தத்தில் எந்த எந்தத் துறையில் மாதர்களின் தோண்டு நல்ல பயனைத் தரும்?'' என்பதுதான்.

சீர்திருத்தம் அவஸியந்தானு? பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் கீழ் இந்து சமூகம் இப்பொழுது இருக்கும் நிலை என்ன?

நமக்கென்று ஏதாவதொன்றை ஒருமுகமாய்ச் சாதித்துக்கொள்ளத் தெரியுமா? அற்ப சொற்பத் திற்கெல்லாம் நமக்குள்ளே பகிரங்கமாய்ச் சண்டையிடத்தானே தெரியும்? நமது லக்ஷ்யம் மறந்தே போய்விடும் அந்த அமளியில்.

பண்டைப் பண்பு, பிறப்புரிமை என்று பெருமை பேசுவோரும். ''ஆப்பிரிக்காவில் நம்மைக் கறுப்பர் என்று ஒதுக்கிவைத்திருக்கிறார்களே!'' என்று ரத்தக் கொதிப்புக் கொண்டு மேடைப் பிரசங்கமும் செய்வோரும். ஆனால் நம்மில் ஒரு வகுப்பாரைத் 'தாழ்ந்தவர்' என்றும், 'தீண்டத் தகாதவர்' என்றும், தாய்மைப்படுத்தும் கடவுளின் தரிசனங்கூடக் கிட்டாதபடி விலக்கிவைப்போம்.

சங்கரர், ராமானுஜர், காந்தி போன்ற மகாத்மாக்களைப் படைத்திருந்தும் என்ன பயன்? சமயச் சண்டை, ஜாதிப் பூசல், இனவேற்றுமை, வகுப்புப் பிணக்கு இவற்றைக் கிளப்புவதில் நம்மைவிடக் கெட்டிக்காரர் உண்டா?

'பொன் விளையும் புண்ணியபூமி' என்றும், 'அன்னலக்ஷ்மியின் பிறப்பகம்' என்றும் பேர் பெற்ற தேசம் இது; எனினும் இன்று ஏழைமை தாண்டவமாடும் ஸ்தலமாக இருக்கிறது. கலைமகள் நடனமாடிய பூமி இன்று அறியாமையின் நிலைக்களம் போல் இருக்கிறது!

கிராமங்களிலே மக்கள் நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்தும், வயிறு நிரம்பச் சோறும் நீரும் காணுது தோலாய் ஒட்டிப்போகிறார்கள். நகரங்களிலோ, தெருவுக்கு ஒரு சினிமாக் காட்சி, சங்கீதசரஸ்வதி, காபிக் கிளப்பு!

புறத்தூய்மை, அகத்தூய்மை; சுத்தமான ஊண், உடை, உடல்நலம் இவைகளைப்பற்றி நம்மில் சில பண்டிதர்களுக்குத் தெரிந்த அளவு பிற நாட்டுச் சாஸ்திரிகளுக்குங்கூடத் தெரியாத தனலாம். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதையும் உணர்ந்ததான் இருக்கிறோம். ஆனால் நோயுற்ற வாழ்தல் - இல்லை! வாழ்கிறோம் என்பதுதான் எப்படி? - நோயுற்றுத் தாழ்தல் - நம் நாட்டில்தான் அதிகமாக இருக்கிறது. சிசு மரணம் நம் நாட்டிற்போல எங்கேயாவது உண்டா? என்ன காரணம்? நம்மில் பெரும்பாலோருக்குச் 'சுத்தம்' என்ற உணர்ச்சி, 'சுகாதார மனப்பான்மை' இல்லை. அதற்கான வசதியும் இல்லை.

பெண்களைத் தெய்வம் என்கிறார்கள். 'ஸஹதர்மிணி', 'கிருஹலக்ஷ்மி', 'ஸகி', 'சக்தி' என்றெல்லாம் கொண்டாடுகிறார்கள். கலைக்கும் அதிதேவதை, செல்வத்திற்கும் அதிதேவதை பெண் தெய்வங்களே. ஆனாலும் என்ன? ''பெண்களுக்கு அதிகப் படிப்பு அவசியமில்லை; ஆட்சி, அதிகாரம் தேவையில்லை; சொத்து, சுதந்தரம் வேண்டவே வேண்டாம்!'' என்று சொல்லும் புருஷர்களின் தொகை கொஞ்சமா?

''வேணுமானால் படிக்கட்டும்; பி. ஏ., எம். ஏ. என்று படித்துப் பட்டம் பெற்றுக்கொள்ளட்டும். ஆனால் படித்த படிப்பை யெல்லாம் மூட்டை கட்டி வைத்தவிட்டு, வீட்டையும் குழந்தையையும் பார்த்துக்கொண்டு வீட்டிலேயே இருப்பதுதான் பெண்களுக்கு ஏற்கும்'' என்று சொல்லும் பேர்வழிகள் இல்லையா? பெண்களின் மூதற் கடமை இது ஆயினும், பெண்களும் தேசத்திற்கும் சமூகத்திற்கும் சேவைசெய்யக் கடமைப் பட்டவர்களே என்பதை நம் நாட்டில் எத்தனை பேர் உணர்ந்துள்ளனர்?

ஒரு காலத்தில் சுதந்தரலக்ஷ்மியும் விஜயலக்ஷ்மியும் லாஸ்வதியோடு ஒத்து வாழ்ந்த இந்நாடு, அடிமை மனப்பான்மையையும் விலக்கக்கூட வகையறியாத மக்களைப் படைத்துள்ளது இப் பொழுது. ''வீர மைந்த! நாட்டைக் காக்க நீ போருக்குச் செல்'' என்று தரையே போர்க்கோலம் செய்து விட்ட நாட்டில் இன்று, ''மகாத்மாவைப்

பின்பற்றி அஹிம்ஸர் தர்மப்போரின் முன்னணியிலே சென்று நிற்பாய்'' என்ற வீரமொழிகளைச் சொல்லக்கூடிய தாய்மார்கள் எங்கே?

'மழையிலே போகாதே. ஜலதோஷம் பிடிக்கும்!', 'வீதியிலே இறங்காதே, மோட்டாரில் அகப்படுவாய்!', 'அந்தக் காங்கிரஸ் கூட்டத்திற்கு போகிறாய்? வீணுக்குக் கல்லடி பெறுவாய்!', 'ஹிந்து முஸ்லிம் ரகளையா? அந்தத் தெருப்பக்கம் காலெடுத்து வைக்காதே! நமக்கென்ன? யார் மண்டை எப்படி உடைந்தால் என்ன?' என்றெல்லாம் உபதேசம் செய்யத்தான் தெரிகிறது, பல தாய்மார்களுக்கு.

கோழைத்தனம் என்ற குட்டையிலே எவ்வளவு தூரம் இறங்க முடியுமோ அவ்வளவு தூரம்

ஆனால்

இறங்கிச் சேரும்போலும் சுக வாழ்வையுமே இன்று நம் சமூகம் பெரியனவாகப் பாராட்டுகிறது. இந்த நிலையில் சமூகச் சீர்திருத்தம் அரசாங்கியமாகுமா?

சீர்திருத்தம் அவசியந்தான் என்றால் அதை ஆண்மக்கள் மட்டும் செய்துவந்தால் போதுமா? காரியம் இனிது நிறைவேறுமா? ''பெண்களும் சரிநிகர் சமானமாகத் தொண்டாற்றுவது அவசியம்'' என்றுதான் நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

''எந்தத் துறையில்? அரசியல் துறையிலும் கூடவா?'' என்று பலர் திடுக்கிட்டுக் கேட்கக் கூடும்? ''என் கூடாது? வீரமங்கை விஜயலக்ஷ்மியைப் பாருங்கள்!'' என்பேன். அரசியல் துறையில் அவருக்குள்ளது போன்ற அறிவாற்றல் படைத்த பெண்கள் நூறு பேர் இருந்தாலும், இந்தியா இப்போதுள்ள அடிமை நிலையில் இருக்குமா? நூறு சரோஜினிகள் மட்டும் இருந்திருந்தால் இன்று ஹிந்துமுஸ்லிம் பிணக்குகள் தோன்றியிருக்குமா, நமது அரசியல் வானத்திலே?

ஒரு வீட்டில் இரண்டு மைத்தர்கள் சண்டையிட்டுக்கொள்கின்றனர். ஒரே ரகளைதான். வீட்டின் எஜமானன் - தந்தை - வருகிறான். கலகவிசாரணை நடக்கிறது. இருவரையும் கோபக்கனல் பூத்த கண்கொண்டு பார்க்கிறான். ஒருவனுக்கு ஒரு பூசை, ஒருவனுக்கு ஒரு குட்டு - என்ற விகிதப்படி மாறி மாறி விழுகின்றன. மறுபடியும் ரகளைதான். ஆனல் அடுக்களையிலிருந்து அன்னை வருகிறாள். இளைத்தவனை எடுத்து அணைக்கிறது ஒரு கரம். பெரியவனுக்குப் பக்ஷணம் வழங்க நீளுகிறது மற்றொரு கரம். உடனே அண்ணன் தம்பிகளுக்கிடையே சமாதானம் நிலவுகிறது.

தேச மக்களின் ஒற்றுமையை நிலை நாட்ட எவருடைய தொண்டு நல்ல பயன் அளிக்கக் கூடியது? ஆண்களின் பணியா? பெண்களின் பணியா? — இப்போது சொல்லுங்கள்.

திருக்கச்சி நம்பி பிராம்மணரல்லாதவர். அவரை ராமாநுஜர் தம் ஆசிரியர்களில் ஒருவராகக் கொண்டார். அந்தப் பெரியாருக்கு அன்னமிட்டு உபசரிக்க விரும்பினர். ஆனல் மனைவிக்கு அது பிடித்தால்தானே? எனவே வீட்டையும் மனைவியையும் துறந்தார் ராமாநுஜர். தற்காலத் தமிழ் நாட்டிலே வகுப்புப் பிணக்கு மறைவதற்கு ஸ்திரீகளின் பணி எவ்வளவு பயன் அளிக்கத் தக்கது? இன்று மகாத்மாவின் ஹரிஜன இயக்கந்தான் பூர்ண வெற்றி பெற்றிருக்கிறதா? இல்லை என்றால் அதற்கு நம் நாட்டுப் பெண்கள்தாம் முக்கிய காரணமாவர்.

பெண்களின் அறியாமையும், சீர்திருத்த இயக்கங்களில் பெண்கள் கலந்துகொள்ளாமல் இருப்பதும், நம்மைப் பிரித்தாள விரும்பும் சூழ்ச்சிக் காரர்களின் கோரிக்கைகளேத்தான் நிறைவேற்றி வைக்கின்றன.

சமூகத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சரிப்படுத்துவது பெண்களின் முக்கியமான கடமை அல்லவா? ஒரு மகன் நல்ல படிப்பாளியாக, திறமையுள்ளவனுக இருக்கலாம். இன்னொரு மகன் மூர்க்கனும், திறமையற்றவனும், தடிப்னும் இருக்கக்கூடும். தாயுள்ளம் இருவரையும் ஒரே கண்கொண்டுதான் பார்க்கும். பின்னும் சொல்லப் போனால், திறமையற்ற குழந்தைக்கே இரங்கிப் பரிதவிக்கும். எனவே, இருபாலரில் எவருக்கு ஏற்றது, தாழ்ந்தவர்களே உயர்த்தும் தேசப் பணி?

ஆண்மக்கள் கருத்தெல்லாம் பணம் ஈட்டுவதிலே செல்ல, பெண்களிடம் சேமித்துவைக்கும் குணம் செழிக்கிறது. தேசச் செல்வம் வெளி நாடுகளுக்குச் செல்லாமல் காப்பதும் பெண்கள் செய்யக்கூடிய தொண்டுதான்.

"ஹோட்டலிலே சென்று கண்ட எண்ணெய்களிலே செய்த பண்டங்களைத் தின்ன வேண்டாம். வீணுகப் பணவிரயம் மட்டுமின்றி உடம்பிற்கும் கேடு தேடிக்கொள்வதாகும்" என்று செல்வமாய்க் கடிந்துகொள்ளும் சுபாவம் படைத்த மங்கையரே சுதேசியத்தின் உட்கருத்தையும் நன்முக உணரக்கூடியவர்கள். குடிசைத் தொழில் அபிவிருத்திக்கும், நாட்டுக் கைத்தொழிலைப் பாதுகாப்பதற்கும் இவர்களைப்போல் உண்மையான ஆற்றலுடன் தொண்டாற்றக்கூடியவர் வேறு யார்?

கல்வி கற்பித்தல், ஒழுக்க முறை போதித்தல் இவை பிரம்பின் ஆட்சிக்கீழ் நடக்கக்கூடிய வையா? திருடனையும் சூது பேசுகிறவனையும் தண்டனை மூலம் ஒரு கால அளவிற்குத்தான் கட்டுப் படுத்த முடியும். திருட்டுக் குணம் அடியோடு அற்றுப்போகவோ, பொய்ம்மை நீங்கவோ, தண்டனை கருவியாகாது. அன்பின் ஆட்சியிலேதான் அந்தக் காரியத்தைச் சாதிக்க முடியும். அன்புருவாக, பொறுமையின் புகலிடமாக, இருப்பவர்கள் பெண்கள் அல்லவா?

'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பார்கள். குழந்தைப் பருவம் முதல் காளைப்பருவம் வரை மைந்தர்களின் அறிவைப் பண்படுத்துவதற்குத் தாய்மார்களே ஏற்றவர். ஆண்மக்களை வீரப் பிரஜைகளாக்கவும், பெண்களைக் கற்புத் தெய்வங்களாக்கவும் பெண்கள் தேசக் கல்வித்துறையில் இறங்கித் தொண்டாற்றுவது அவசியம்.

3

போரில் சமர்த்தர் ஆண்களே; பெரிய பெரிய ராஜ்யங்களைச் சண்டையிட்டு ஜயித்து ஆட்சி புரியக்கூடியவர்கள்தாம். ஆனால் போர்த் தொழிலில் ஏற்படும் உயிர்ப் பலி, உடல் நோய் முதலியன கொஞ்சமா? உடல் நோய்களைக் கொஞ்சமாவது குறைத்து ரணங்களை ஆற்றி, தேசத்திற்காகவும் குடும்பத்திற்காகவும் பாடுபட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் சேவை செய்யும் வகையை அறியாத காலமும் இருந்தது.

ஒரு ரணகளத்தை அடுத்த கூடாரம்: மரண வேதனைப்படும் மக்கள் பலர் வைக்கோற் படுக்கையிலே கிடந்து புரள்கின்றனர். ரணகளத்திலே சூரர்கள், எதிரியின் முன் நின்று போராடிய தீரர்கள்தாம். எனினும், கொடிய ரணவேதனையைச் சகிக்க முடியவில்லை. எல்லோரும் பீஷ்மராக முடியுமா? கள்ளிரவில் வெள்ளைத் துகில் தரித்த ஒரு பெண் தெய்வம், மெள்ள நடந்து வருகிறது, கையில் ஒரு சிறு தீபம் கொண்டு. நம்பிக்கையின் சுடரொளியோல, அவர்கள் மத்தியிலே செல்லுகிறது. பல நாளாக வறண்டுகிடந்த தொண்டைக்குக் குளிர்ந்த நன்னீர் கிடைக்கிறது. எரியும் புண்ணிலே ஜில்லென்ற தைலம். ஒழுகும் சீழும் துர்க்கந்தமும் போன இடம் தெரியவில்லை. வலிக்கும் உடம்புக்கு என்ன இதமான ஒத்தடம்! கொதிக்கும் தலைக்குப் பனிக்கட்டிப் பை! என்ன என்ன விதமான சிகித்சை? சேவையின் அதி தேவதை தாரேஸ்? கருணையின் மூர்த்தியோ? கை படவும் வேதனை குறைந்து, வலி மறைந்து, வாய் குளிர்ந்து, கண் திறந்து பார்க்கவும் செய்தனளே, அநாதையாக அங்கே கிடந்த அந்த ஏழைப் பேர்வீரர்களே! ஒரு புன்னகை; ஓர் இன்சொல்; தித்தம் நாட்டையும், சுற்றம், பெண்டு பிள்ளைகளையும் பிரிந்து எங்கிக் கிடந்த அம்மனிதர்களுக்கு எவ்வளவு ஆறுதல்! அவள்தான் உலக முதல் **ஸேவிகை நர்ஸ் ப்ளாரென்ஸ் நைடிங்கேல்.**

இன்று ஐரோப்பிய நாடுகளில் அவளைப் பின்பற்றும் நாதர்களுக்குக் கணக்கில்லை. ஆனால் இந்தியப் பெண்களில், 'நர்ஸ்'களாக இருந்து சமூகத் தொண்டாற்றும் சகோதரிகள் எத்தனை பேர்? அத்தகைய ஸேவை ஒரு தெய்விகப்பணி என்றும், தொழில் முறையில் செய்வதாயினும் பணியின் உயர்விற்குப் பங்கமில்லை என்றும் அறிந்துள்ள இந்தியப் பெண்களின் தொகை கொஞ்சமே. ஆண் பெண் என்ற வித்தியாசம் பாராது பிறருக்குத் தாய்மார்கள் ஆற்றவேண்டிய தொண்டு இது என்று நம் நாட்டினர் அறியும் நாள் என்று வருமோ?

சுத்தம், சுகாதாரம் என்ற சொற்களில் அடங்கியுள்ள உட்கருத்தை, சுகவாழ்வின் ரகசியத்தை, அறியாத நம் கிராம ஜனங்களுக்கு அதைப் போதிப்பதைக் காட்டிலும் மேலான தொண்டு ஒன்றும் உண்டோ? அன்புத் தெய்வங்களாகிய அன்னையரைக் காட்டிலும் தகுந்தவர்களும் உண்டோ இப்பணிக்கு?

மகாத்மா காந்தி வழிகாட்டியுள்ளார், ஹிந்துப் பெண்கள் செய்யவேண்டிய சீர்திருத்தத் தொண்டிற்கு. அன்னை கஸ்தூரி பாவைப் போன்ற ஆயிரமாயிரம் அன்னைகளைப் பயில்வித்துக் கிராமந்தோறும் அனுப்பவேண்டும் என்பது அவருடைய ஆத்ம தாகம். இதைப் பூர்த்திசெய்து வைப்பது தான் ஹிந்துப் பெண்கள் இன்று செய்யக்கூடிய சிறந்த சமூகத் தொண்டாகும். காலம், களம், பாத்திரம், தேவை இவற்றிற்குத் தகுந்தபடி ஆற்றும் பணியே நல்ல பணி, நல்ல பயனை அளிக்கத்தக்கது.

பூசாரி

ப. ஸ்ரீநிவாசன்

பொழுது சாயும் வேளை. மாடுகள் மந்தையிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தன. சூரியன் சிவப்புத் துணியைப் போர்த்துக்கொண்டு மேற்கு வானத்தில் பதுங்கிக்கொண்டிருந்தான்.

சிவன் கோயில் பட்டர் கைலாசமையர் சாயங்கால பூஜைக்காக வழக்கம் போல் கிளம்பினார். கையில் ஒரு கரி வெண்கலப் பாத்திரத்தை ஏந்தியிருந்தார். அதற்குள் இருந்த ஆழாக்கு அரிசியை ஒரு கரித்துணி மூடியிருந்தது. அவர் அரையில் கட்டியிருந்த கச்சைத்துணி தயிர் கலவாத புழுங்கலரிசிப் பழையதைப்போல் பழுப்பு நிறத்தில் இருந்தது. அதில் பூரான் மாதிரி ஏராளமான கைத் தையல்கள். அந்தத் துணியும் தானம் வாங்கியதுதான். துண்டு என்ற ரூபத்தில் இருந்த பழைய கம்பல் வேஷ்டியின் பகுதியை இடுப்பில் எவ்வளவுதான் இறுக்கிக் கட்டியிருந்தாலும் அவர் வயிறு எக்கியே இருந்தது. பொன்னிற மேனியுடன் அவர் பார்ப்பதற்குப் புத்த விக்கிரகம் போல் இருந்தார். அவருடைய முகத்தில் வறுமையின் பொறுமையும் ஊமைச் சோகமும் படிந்திருந்தன. அவருக்கு வயசு நாற்பதுதான்; எனினும் தொண்டு கிழத்தைப்போல் தொங்கிப் போயிருந்தார்.

கைலாசமையர் தெருவில் இறங்கினார். இடுப்பில் ஒட்டுக் குழந்தையுடன் பின்னால் வந்த மகனை மீனாக்ஷி அம்மாள், "வாசலிலே எங்கேயாவது சின்ன அம்பி நின்னுண்டிருந்தால் நாலு குட்டுக் குட்டி வீட்டுக்கு அனுப்பிச்சுட்டுப் போங்கோ. சவம், யாரோடே யாவது சண்டை இழுத்துண்டு வரப் போறது!" என்று கணவரிடம் கூறினர்.

"சனியன்கள்.....ஹ்ம், ஆட்டும்!" என்று சொல்லிவிட்டு, வட்டசிை நோக்கிப் பிரயாணமானார் கைலாசமையர்.

அவர் சிறிது தூரம் செல்லும்வரை நின்று பார்த்துக்கொண்டிருந்துவிட்டு வீட்டிற்குள் திரும்பிய மீனாட்சி அம்மாள் நடை உத்திரத்தில் பரந்து வியாபித்திருந்த கறையான் பிரதேசத்தைப் பார்த்தாள். குழந்தையைக் கீழே விட்டுவிட்டுத் துடைப்பத்தால் கறையானை அடித்துப் பெருக்கினாள். தள்ளாத மீனாக்ஷி அம்மாளுக்கு மெழுகிப் பெருக்கும் தொந்தரவை அதிகம் கொடுக்கக்கூடாது என்று அந்த வீடு முக்கால் பாகத்தை உதிர்த்துவிட்டது.

போகும் பொழுது கைலாசமையர் தம் முடைய பிள்ளைகளின் துஷ்டத்தனத்தைப் பற்றி நினைத்துக்கொண்டே சென்றார். கிராமத்திலேயே எளியவரான அவர் சந்தான பாக்கியத்தில் குசேலருடன் போட்டி போட்டு வந்தார். மீனாக்ஷி அம்மாள் ஓய்வு ஒழிவு இல்லாமல் குஞ்சும் குளுவானுமாக ஒன்பது குழந்தைகளை அடுக்கடுக்காய்ப் பெற்றிருந்தாள். அவர்களில் மூத்த பெண் கோமதிதான் கொஞ்சம் விஷத் தெரிந்தவள். பதினைந்து வயசாகியும் கல்யாணம் ஆகாத அவளை ஊரார் பரிகாசம் செய்துவந்தனர். அந்தக் குழந்தைகள் எல்லோரையும் சுருக்கமாகச் செல்லமாகப் "பன்றிக்குட்டிகள்" என்று வகைப்படுத்தியிருந்தனர் அல்லசல்காரர்கள். கிராமத்தின் எந்தப் பகுதியிலும் வாய்க்கால் கரை, பனங்குடல், வயல், திரடு, மாட்டுமந்தை, மரக்கிளை - எங்கானாலும் கைலாசமையரின் புத்திரபாக்கியம், ஒரு கொள்ளித்தலைக் கோவணண்டி, நின்று கொண்டிருக்கும். கைலாசமையரின் மாதச் சம்பளமாகிய கால் கோட்டை நெல் இந்தப் பட்டாளத்திற்கு எங்கிருந்து பற்றும்? மோரிலும் நீரிலும் தினம் இரு முறை கரைத்துக் குடித்த கஞ்சி அவர்களின் பசியைக் கிள்ளி விட்டுவிட்டுப் போகும். இதனால் வீட்டில் அடிக்கடி உணவுத் தகராறுகள் ஏற்படுவது சர்வ சாதாரணம். தம்பியின் சோற்றை அண்ணன் பறிக்கும் தடித்தனம் அங்கே தலைவிரித்தாடும். அதோடு, ஊர்க் குழந்தைகள் ஒன்றுவது வழிப்பறிப் பயமீன்றிக் கையில் பகூணத்துடன் வெளியே நடமாட முடியாது. கைலாசமையரின் கால் முளைத்த குழந்தைகள் ஒவ்வொரு சமயத்தில் தேங்காய், மாங்காய், புளியம்பழம் முதலிய விருந்துகளையும் சம்பாதித்துக்கொள்வார்கள்.

நிதானமாய் நடந்துவந்த கைலாசமையர் தெருவின் மத்தியில் இருந்த முடுக்கை அடைந்ததும், அங்கு ஏழெட்டுப் பையன்கள் கூச்சல் போடுவதைக் கண்டு ஏறிட்டுப் பார்த்தார். கோபாலையரின் பிள்ளையோடு தம் மூன்றாவது பையன் சின்ன அம்பி

குஸ்தி போடுவதைக் கண்டார். அந்தச் சின்ன அம்பி அன்று செய்த அட்டூழியங்களுக்கு அளவே இல்லை. பிள்ளை பெற்றுத் தளர்ந்திருந்த தாயின் பங்குச் சோற்றை அவன் பலாத்காரமாய்ப் பிடுங்கி விழுங்கி விட்டான். அதோடு, வீட்டிலுள்ள குழந்தைகளை எல்லாம் சீண்டிக்காமல் அடித்துக் 'கோரஸ்' பாடச் செய்தான். இன்னும் எத்தனையோ வம்புகள்.

கைலாசமையர் அசாத்தியக் கோபத்தோடு விர்ரென்று சென்று கையிலிருந்த வெண்கலப் பாளையால் அவன் மண்டையில் இரண்டு இறுக்கு இறுக்கினார். சின்ன அம்பி தப்பி ஓடி, சிறிது தூரத்தில் நின்று கொண்டு தன் தகப்பனாரைப் 'பயல் பறட்டை' என்று ஏச ஆரம்பித்தான். கைலாசமையர் வெண்கலப் பாளையை நங்கென்று கீழே வைத்துவிட்டு, இரண்டு கையாலும் தலையில் அடித்துக்கொண்டார். பிறகு பாளையை மறுபடியும் எடுத்துக் கொண்டு திரும்பிப் பார்க்காமலே நடந்தார். ஒரு மட்டுக்கு அவர் ஊரின் வடக்கே இருந்த கோயிலை அடைந்தார்.

கிழக்கே பார்த்திருந்த அந்தக் கோயிலைச் சுற்றி அலங்கோலமான ஒரு நந்தவனம். நாலு நந்தியாவட்டைச் செடிகளும் பத்துப் பதினைந்து அரளிச் செடிகளும் காட்டுப் போக்கில் வளர்ந்திருந்தன. அர்ச்சனைக்கு உதவ ஒரு வயசான வில்வமரமும் இருந்தது. ஐந்து கிழட்டுத் தென்னை மரங்கள் காய்ப்பு ஓய்ந்து, காய்ந்த ஓலைகளை உதிர்த்துக் கொண்டு இருந்தன. மடைப் பள்ளி அருகே நாணிக்கோணி வளர்ந்திருந்த நாரத்தை மரத்தில் காய்களைவிடக் குருவிகளே அதிகம். அதுவாகக் கூடிக் காய்த்தாலும், காய்கள் தர்மகர்த்தா சங்கரையர் வீட்டு ஊறுகாய்ப் பரணியில் போய்ப் பூப்போல விழுந்து விடும். இரவு நேரத்தில் நந்தவனத்து 'நல்லவர்கள்' பொந்துகளிலிருந்து வெளிப்பட்டுச் சிவபெருமான்மீது தவழ்ந்து விளையாடுவார்கள்.

சந்நிதிக்கு அடுத்தாற்போல் வலது புறம் மடைப்பள்ளி தனியாக அமைந்திருந்தது. மூலக்கிரகத்தின் பின் சுவர், மடைப்பள்ளியின் மேற்சுவர் முதலியவை இடிந்திருந்தன. மற்றப் பாகங்கள் இடிந்து கொண்டிருந்தன.

கோயிலின் தோற்றத்திலிருந்தே சுவாமியின் தரித்திரத்தைத் தெரிந்துகொள்ளலாம். நடமாடும் கோலத்திலிருந்த செம்பு நடராஜ மூர்த்தியின் மீதுள்ள நீலநிற எச்சங்கள், அவருடைய கண்டத்திலிருந்த ஆலகால விஷம் பாதாதி கேசம் வரை பரவிவிட்டது போலத் தோன்றின. அவர் பார்ப்பதற்கே அசங்கியமாய்ச் சீக்காளியாகிவிட்டார். இந்தக் கோலத்தோடு தேர் திருநாளென்று அவர் வெளியே போவதே இல்லை. கடைசி முறையாக அவருக்குத் திருக்கல்யாணம் நடந்து பதினைந்து வருஷங்கள் ஆகிவிட்டன. எண்ணெய் சொட்டும் ஒரு கிழிசல் பரிவட்டத்தோடு அவர் திருப்தி கொள்ளவேண்டியிருந்தது. ஏதோ அவர் செய்த புண்ணிய வசத்தால், கைலாசமையர் உதயமும் சாயந்தரமும் மணி அடித்து வந்தார். அம்பாளும், செல்லரித்துப்போன சிவப்பு அல்வான் துணியைக் கட்டிக் கொண்டு, மான ஜீவனம் பண்ணிவந்தாள்.

லிங்க ரூபத்திலிருந்த மூலவர், உள்ளத்தையும் கல்லாக்கிக்கொண்டு ஒதுங்கி வாழ்ந்து

வந்தார். பிள்ளையார் முதலிய சுற்றுத் தெய்வங்கள் வெறும் அநாமதேயங்கள் ஆகிவிட்டனர். அவர்களின் இருப்பிடத்தை விளக்கேற்றித்தான் பார்க்கவேண்டும். ஆனால் விளக்குக்கு எண்ணெய் வசதி இல்லை.

நாலு கடலைச் சுண்டலாவது கொடுக்காத கோயிலைக் குழந்தைகள்கூட எட்டிப்பார்ப்பதில்லை. ஆண்டு கூடி, தர்மகர்த்தா ஐயர், பண்ணை முதலியார் முதலியவர்கள் இரண்டோர் அர்ச்சனைகள் நடத்துவார்கள். மற்றப்படி, ஊர்க்காரர்கள் சிவன்கோயிலைச் சிந்தையை விட்டே அகற்றிவிட்டார்கள்.

தம்முடைய கேவலமான நிலையை எண்ணி நடராஜருக்குக் கோபம்தான். அபார பக்தி இல்லாவிட்டாலும் வாங்கும் சம்பளத்திற்குத் துரோகம் இல்லாமல் இரண்டு வேளையும் பூசை செய்யும் கைலாசமையர்மீது அவருக்கு அன்பு பெருகிவந்தது.

கைலாசமையர் வெண்கலப் பாணியை மடைப்பள்ளி வாசற்படியில் வைத்துவிட்டு, ஒரு முறை கோயிலை ஏறிட்டுப் பார்த்தார். பிறகு பெருமூச்சுடன், கதவுக்குச் சேதம் ஏற்படாமல், நீண்ட நிறவுகோலால் மடைப்பள்ளிப் பூட்டை லாகவமாய்த் திறந்தார். கதவைத் திறந்ததும் உள்ளேயிருந்து கப்கப் என்று வந்த வெளவால் புழுக்கை நாற்றம் நாசியில் அடித்து வயிற்றைக் குழப்பியது. இருட்டில் இலக்காக அடுப்பின் மீது வெண்கலப் பாணியை வைத்துவிட்டு, அவர் குடத்தை எடுத்துக்கொண்டு பின்புறத்தில் இருந்த வாய்க்காலுக்குச் சென்றார். குடத்து ஜலத்தில் வெண்கலப் பாணியில் கொஞ்சம் ஊற்றினார். முக்கால் முனகலோடு இரும்பு ஆல்சட்டி விளக்கைப் பொருத்தி அடுப்பையும் பற்றவைத்தார்.

"இன்னிக்குச் சிக்கிரம் பூஜையை முடிச்சுட்டுப் போகணும். மீனாக்ஷி பசித்துப் பறந்துகொண்டிருப்பாள். இந்தப் பயல்கள் பிள்ளை பெத்தாளுக்கு இல்லாமல் அவ்வளவு சாதத்தையும் தின்றுவிடறதுகளே! சை, மூதேவிகள்! ஹூம், அதுகளும் என்ன செய்யும்! தரித்திர தோஷம், தணியாத பசி!" என்று மடைப்பள்ளியின் கரி படர்ந்த சுவர்களிடம் ஆவலாதி சொல்லிவிட்டு, தண்ணீர்க் குடத்துடன் வெளியே வந்தார்.

"அப்பா நடராஜா! எனக்கு ஏனப்பா இத்தனை குட்டிகள்? நானும் எத்தனையோ வருஷமாய் உன் காலில் மோதிண்டும் கிருபை செய்ய மாட்டேங்கறயே! ஹூம், உன்னைச் சொல்ல என்ன குத்தம்! நீயும் என்னைப் போல கொறுங்கிப் போயிட்டாய். என்னவோ நான் உள்ள மட்டும் உனக்கு இந்த அவிசைக் கையைக் காட்டறேன். அப்புறம் நீயும் எப்படியேனும் போ! என் குடும்பமும் எப்படியேனும் நாசமாய்ப் போகட்டும்!" என்று ஆத்திரத்துடனும் வருத்தத்தோடும் சொல்லிக்கொண்டு சந்நிதியை நோக்கி வந்தார் பட்டர்.

அப்பொழுது சந்நிதியின் உள்ளே தடபுடா என்று சப்தம் கேட்டது.

பட்டர் சந்நிதியின் உள்ளே சென்று தெய்வங்களைக் குளிப்பாட்டி, ஆடைகளை உடுத்துவிட்டு, ஒவ்வோர் அரளிமாலையையும் கழுத்தில் போட்டு, அவைகளைச் சாப்பாட்டுக்கு ஆயத்தப்படுத்தினர்.

பிறகு மடைப்பள்ளிக்குச் சென்று ஒரு விதமாய் வெந்திருந்த அவிசை எடுத்துக் கொண்டு வந்தார். நடராஜரின் முன் நைவேத்தியத்தை வைக்கும் பொழுது அவர் மேலெல்லாம் புல்லரித்தது.

இடது கை மணியை 'கிணங் கிணங்' என்று அடிக்க, கர்ப்பூரத்தைக் கொளுத்திச் சிறிது காட்டினர். நைவேத்தியம் பண்ணுவதற்காக அவர் வெண்கலப் பாணியை மூடியிருந்த கரித் துணியைச் சற்றே விலக்கினர்.

அப்பொழுது அவரது விலாப் பக்கத்தில் ஓர் ஆள் நிற்பதைக் கண்டார். அவருக்கு ஒன்றும் ஓடவில்லை. சர்வாங்கமும் பதறி, மேலெல்லாம் வேர்த்துக் கொட்டியது. யாராவது தரிசனம் பண்ண வந்திருக்கலாமோ என்று எண்ணி, அவர் சிறிது தைரியத்துடன் வந்தவரை நிமிர்ந்து பார்த்தார்.

ஆனால் வந்தவர் அந்த ஊர்க்காரரே அல்ல. அவர் செங்கழுநீர் நிறத்தில் ஒரு நீண்ட அங்கியை அணிந்திருந்தார். நந்தியா வட்டைப் பூவைப் போல் குளிர்ந்த ஒளி வீசியது அவர் முகம். வெண்ணிறமான நீண்ட தாடி அலை காற்றில் மோதியது. அவருடைய நேத்திர மலர்களில் அருள் தேன் சொட்டியது. அவர் கம்பீரமாய் நிமிர்ந்து நின்றுகொண்டிருந்தார். ஆணிமுத்துப் போன்ற அவருடைய பற்கள் மலரும் முறுவலில் எட்டிப் பார்த்தன. அவர் வேறு யாரும் அல்ல; பக்தனைச் சோதித்து அருள் புரிய வந்த சிவபெருமானே!

"என்ன கைலாசமையரே, சௌக்கியக் தானே?" என்று புன்னகையோடு கேட்டார் வந்தவர்.

"ஹ் ஹ் ஹ், ஹ், ஆமாம்!" என்று குழறினர் கைலாசமையர்.

நடராஜர் கொஞ்சம் முன்னால் நகர்ந்து வந்தார்.

கைலாசமையர் சோற்றுப் பாணியை நகர்த்தி வைத்தார்.

நடராஜர் இன்னும் நெருங்கிவந்து, குனிந்து ஆவலோடு சோற்றுப் பாணியைப் பார்த்தார்.

கைலாசமையர் பாணியைக் கரித்துணியால் இழுத்து மூடிவிட்டு, "ஹ் ஹ், நீங்கள் யாரோ?" என்று கேட்டார்.

"அது இருக்கட்டும். வெண்கலப் பாணியிலே என்னது? சாதந்தானே? ஹ¨ம், எனக்குத்தானே? ஏன் ஓய், என் சாதத்தைத் தாருமே? மாட்டீரா?" என்று கெஞ்சிக் கொண்டே சிவபெருமான் சோற்றுப் பாணிக்குள் கையைப் போட்டார்.

படபடப்புடன் கைலாசமையர் வெண்கலப் பாணியைப் பிடுங்கிக்கொண்டு, "சேச் சே, அதுதானே உதவாது!" என்று கூவிக்கொண்டே வெளியே பாய்ந்தார்.

"ஹ ஹ் ஹா! என்ன சொன்னாய்?" என்று அதட்டினார் நடராஜர்.

"அது நடவாதையோ!" என்று கத்திக் கொண்டு ஓடினார் பட்டர்.

சிவபெருமானுக்கு ஆத்திரம் பொங்கியது. இமைப்பொழுதில் அவர் கோர சொரூபம் கொண்டார். அரையில் மாமிச வாடைவீசும் தோல், அங்கமெல்லாம் பாம்புகள்! கண்களில் குப்பென்று பற்றியது கோபத்தீ! அவர் ஆத்திரத்தோடு திங்கு திங்கு என்று பூமியதிரக் குதித்தார். அவர் அருகே தலை விரிகோலமாய், கோரப் பற்களுடன் காளியும் குதித்தாள். நல்ல பாம்புகள் சீறிச் சீறிப் பாய்ந்தன. கோடிக்கணக்கான பேய்களின் அலறல். சூறாவளிக் காற்று கோயிலைத் தகர்த்தெறிந்துவிடுவது போல் விசையுடன் மோதியது. பேரிடிகள் முழங்கின.

மூவா கலங்கிய கைலாசமையர் வெண்கலப் பாணியைத் தளர்ந்த கையில் பிடித்துக்கொண்டே வாசற் படியில் காலை வைத்து இறங்கினர்.

எடுத்த படத்துடன் எதிரேயிருந்து பறந்து வந்த ஒரு நாக சர்ப்பம் 'ஸீத்' என்று அவர் பாதத்தில் ஓங்கி அடித்துக் கொத்தியது.

அவர் நுரை கக்கிக்கொண்டு கீழே சாய்ந்தார்.

சுற்றிலும் திடீரென்று மரண அமைதி குடிகொண்டது.

மலரை இழந்த அரளிச் செடிகள் விதவையைப்போலச் சோபையற்றுக் குனிந்த தலையுடன் நின்றுகொண்டிருந்தன.

வீரிடுதல்

"குழந்தை வீரிட்டுக் கத்தியது" என்று எழுதும்போது சிலர் 'வீறிட்டு' என்று எழுதுகிறார்கள். அது பிழை. 'வீர்' என்று கத்துதல்' என்பது அதன் பொருள். 'வீல்', 'வீர்' என்பன ஓசையைக் குறிக்கும் சொற்கள்; அவற்றை அநுகரணம் என்று வடமொழியிலும், ஒலிக்குறிப்பு என்று தமிழிலும் சொல்வார்கள்.

நாவல் பரிசு

தமிழ் நாவல்கள் அதிகமாக எழுத வேண்டுமென்ற ஊக்கம் தமிழ் நாட்டில் உண்டாகியிருக்கிறது. எழுத்தாளர்களுக்கு இவ் விஷயத்தில் உத்ஸாகம் உண்டாக்குவதற்காக ஆயிர ரூபாய்ப் பரிசு ஒன்று சிறந்த நாவல் ஒன்றுக்கு அளிக்க எண்ணியிருக்கிறோம். நாவல்கள் அனுப்புபவர்கள் கவனிக்க வேண்டிய நிபந்தனைகள் வருமாறு:

1. நாவல் இதுகாறும் வெளியிடாததாக இருக்கவேண்டும்.

2. மொழிபெயர்ப்பாகவோ தழுவலாகவோ இராமல் சொந்தமாய் எழுதியதாக இருக்கவேண்டும்.

3. 1945-ஆம் வருஷம் நவம்பர் மாதம் 30-ஆம் தேதிக்குள் வரும் நாவல்களே பரிசீலனைக்கு உரியவை.

4. பரிசுக்குரிய நாவலைத் தேர்ந்தெடுக்க ஒரு குழுவினர் நியமிக்கப்படுவார்கள். அவர்களில் பெரும்பாலோருடைய தீர்ப்பே முடிவானது.

5. பரிசு பெறும் நாவலைக் கலைமகளில் தொடர் கதையாக வெளியிடும் உரிமை எங்களுக்கு உண்டு. கலைமகளில் 120 முதல் 150 பக்கங்கள் வரையில் வரக்கூடிய தொடர் கதையாக இருக்கவேண்டும்.

6. கலைமகளில் வெளிவந்தபிறகு அதைத் தனியே புஸ்தகமாக வெளியிடும் முதல் உரிமை கலைமகள் காரியாலயத்தாருக்கு உண்டு. காரியாலயத்தார் நடைமுறையில் மேற்கொண்டுள்ள வழக்கப்படி அதற்குத் தனியே ஸம்மானம் வழங்கப்படும்.

7. எந்த நாவலும் பரிசுக்கு உரியதன்று என்று பரிசீலனை செய்பவர்கள் எண்ணினால் வந்தவற்றுள் சிறந்தவற்றுக்கு உசிதம்போல் ஸம்மானம் அளிக்கப்படும்.

8. எந்த விஷயத்தில் சந்தேகம் எழுமானாலும் ஆசிரியருடைய தீர்ப்பே முடிவானது. விதிகளை மாற்றவும் திருத்தவும் அவருக்கு உரிமை உண்டு.

நாவல் அனுப்புகிறவர்களைத் தயை செய்து தெளிவாகக் கூட்டெழுத்து இல்லாமல் எழுதி அனுப்பும்படி வேண்டுகிறோம். பரிசீலனை செய்பவர்கள் பெயர் பிறகு வெளியிடப் பெறும்.

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர்.

குற்றமுள்ள நெஞ்சு

விஜயா

ஓர் அரசனுக்குத் தேங்காய் என்றால் மிகவும் பிரியம். அவனைப் பார்க்க வருகிறவர்கள் கூடப் பழங்களுக்குப் பதிலாகத் தேங்காய்களும் இளநீரும் கொண்டு வருவது வழக்கமாக இருந்தது.

ஒரு நாள் அரசன் வேட்டையாடப் போயிருந்தான். வேட்டையாடித் திரும்பி வரும்போது காற்று, பலமாக அடித்தது. மரங்களெல்லாம் ஆடின. தென்னை மரங்களிலிருந்து மட்டைகளும் தேங்காய்களும் விழுந்துகொண்டிருந்தன.

அரசனுக்கு ஒரு தேங்காயையாவது உடைத்துச் சாப்பிட வேண்டும் என்று ஆசை. ஆனால் பிரதானிகள் சுற்றிலும் இருக்கும்போது அரசன் சாதாரண மனிதனைப்போலத் தன் ஆசையை வெளிக் காட்டுவது சரியாக இருக்குமா? ஆகவே அவன் தன் குதிரையைக் காட்டுப் பாதையில் வேறு புறமாகத் தட்டிவிட்டான்.

ஒரு நிமிஷத்தில் குதிரை வேகமாக ஓடிக் கூட்டத்திலிருந்து மறைந்தது. அரசன் வழி தவறிப் போனதாக எண்ணிப் பிரதானிகள் அவனைத் தேடலானார்கள்.

தனிவழியே போன அரசன் ஒரு தேங்காயை எடுத்து மட்டையை உரித்துத் தூர எறிந்தான். பிறகு தேங்காயை உடைத்து இளநீரைப் பருகினான். அதைப் பருகும்போது அவனுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. பிரதானிகளை ஏமாற்றித் தனியே வந்து அதைப் பருகியதில் அவனுடைய ஆனந்தம் பின்னும் அதிகமாயிற்று.

ஆனால் அந்த ஆனந்தம் வெகு நேரம் நிலைத்திருக்கவில்லை. மந்திரியும் சேனைத் தலைவர்களும் சீக்கிரம் தன்னைத் தேடிக் கொண்டு வந்து விடுவார்கள் என்று அரசனுக்குத் தோன்றியது. அவன் அவசர அவசரமாகத் தேங்காய்க்குள் இருந்த வழுக்கையைச் சாப்பிட ஆரம்பித்தான். தான் தேங்காய் சாப்பிடுவதை அவர்கள் பார்க்கக் கூடாது என்று அவன் நினைத்தான்.

அவன் தேங்காயில் மூக்கால் பாகத்தைத் தின்றிருப்பான்; அதற்குள் யாரோ வரும் காலடிச் சப்தம் கேட்டது. தேங்காயை உடனே வீசி எறிந்துவிட்டு அரசன் திரும்பிப் பார்த்தான். அரண்மனைப் பாட்டு வித்துவான் அரசனைத் தேடிக் கொண்டு அந்தப் பக்கமாக வந்தார்.

தான் தேங்காய் சாப்பிட்டுக்கொண்டிருந்ததை அவர் பார்த்துவிட்டாரோ என்று அரசனுக்குச் சந்தேகம். யாரிடமாவது சொல்லிவிடப் போகிறாரே என்ற பயம் வேறு. அதனால் அவரிடம் ஓடிப் போய், "பாகவதரே, இன்று சாயங்காலம் அரண்மனையில் நீங்கள் கச்சேரி செய்ய வேண்டும். வழக்கமாக உங்களுக்குக் கொடுக்கும் நூறு பொன்னுக்குப் பதிலாக ஆயிரம் பொன் தருவேன்" என்று சொன்னான்.

இதைக் கேட்டதும் பாகவதருக்கு உச்சி குளிர்ந்து போயிற்று. மகிழ்ச்சி பிடிபடவில்லை. அரசன் தேங்காய் தின்றதை அவர் பார்க்கவே இல்லை. உண்மையில் அரசனுக்குத் தம்மிடம் மதிப்பு ஏற்பட்டதாகவே அவர் எண்ணினார்.

வீடு சென்றதும் பாகவதர் தம் மனைவியிடம் இதை மிகவும்

பெருமையாகச் சொல்லிக்கொண்டார். தம் நண்பர்களிடத்தில், "இன்று ராஜா எனக்கு ஆயிரம் பொன் தரப்போகிறார்" என்று பீற்றிக் கொண்டார். அவருக்குக் கர்வம் தலைக்கு ஏறியது. தலை கழுத்தில் நிற்கவில்லை.

மாலையில் பாட்டுக் கச்சேரி ஆரம்ப மாயிற்று. அரசன் கவலையோடு உட்கார்ந் திருந்தான். எங்கே தனக்குத் தெரியாமல் பாகவதர் தேங்காயைப் பற்றிச் சொல்லி விடுகிறாரோ என்று அவனுக்குத் திகில்.

பாகவதர் பாட ஆரம்பித்ததும் அவனுக் குக் கொஞ்சம் நம்மதி உண்டாயிற்று. சபையில் எள்ளுப் போட இடம் இல்லை; அவ்வளவு கூட்டம். பாகவதர், "தன் னெம் தென்னனனெம் ஹாம்ன் ஞய்னய் னன்னெம்" என்று ராக ஆலாபனம் செய்யத் தொடங்கினர்.



தான் தென்னை மரத்தடியில் நின்றதைத் தான் பாகவதர் தெரிவிப்பதாக அரசன் நினைத்தான். அவர் வேகமாகத் தலையை ஆட்டியபோது, காற்று பலமாக அடித்த தைச் சொல்கிறார் என்று எண்ணினான். கையை மேலும் கீழும் உயர்த்தித் தாழ்த் திய போது மரத்திலிருந்து தேங்காய் விழுந்ததைச் சொல்கிறார் என்று தோன் றியது.

"சபாஷ்! பேஷான பாட்டு!" என்று அரசன் சொன்னதும், பாகவதருக்குக் குஷி பிறந்தது. கையை வாயினருகில் எடுத்துப் போய்த் தானம் பாட ஆரம்பித் தார். தான் தேங்காய் தின்றதைத்தான் அவர் குறிப்பிடுகிறார் என்று எண்ணிய போது அரசனுக்குக் கோபம் பொங் கியது.

பாகவதர் பிடில் வித்துவானைச் சிறிது நேரம் பாடச் சொல்லிவிட்டு, ஒரு இண் ணம் தண்ணீர் குடித்து இளைப்பாற்றிக் கொண்டார். அவர் தண்ணீர் குடித்ததைக் கண்டதும் அரசனுக்குப் பொறுக்கவில்லை. 'நான் இளநீர் குடித்ததை இவர் இப் படியா தம்பட்டம் அடிப்பது?' என்று நினைத்துக்கொண்டான்.

மறுபடி பாகவதர் பாட ஆரம்பித்தார். அப்போது அரசன், "போதும் ஐயா, நிறுத்தும் உம்முடைய பாட்டை. நான் தேங்காய் தின்றதைச் சொல்வதற்குத் தானே இப்படித் தவிக்கிறீர்? ஆமாம், நான் வேட்டையாடி வந்த போது ஒரு தேங்காயை உடைத்துத் தின்றேன். அதற் கென்ன இப்பொழுது?" என்று அடங் காக் கோபத்துடன் சொன்னான்.

இதைக் கேட்டதும் பாகவதருக் குத் தூக்கி வாரிப் போட்டது. பாட்டை நிறுத்தச் சொன்னது அவ ருக்குப் பின்னும் ஆச்சரியமாக இருந்தது. அவர் பாட வந்தபோது இருந்த தலைக் கிறுக்கு என்ன, இப்போது நடப்பது என்ன! அவ ருக்கு ஒரு பொன்கூடக் கிடைக்க வில்லை. அரசன் அவரைக் கழுத் தைப் பிடித்து வெளியே தள்ள உத்தரவிட்டான்.

கூட்டத்தில் இருந்தவர்கள், "ராஜாவுக்குக் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்றது போல் இருக் கிறது. பைத்தியத்தைப் போல நடந்துகொண்டிருக்கிறாரே. இந்தப் பாகவதரின் ஜம்பத்துக்கு இதுவும் வேண் டும்; இன்னமும் வேண்டும்!" என்று சிரித்துப் பேசிக்கொண்டே வீடு திரும்பி னர்கள்.

220-ஆம் பக்கத்திலுள்ள விடுகதைகளுக்கு விடை:

64. குருவிக் கூடு, 65. சாதமும் அகப்பையும். 66. இமை, 67. செருப்பு, 68. தாம்பூலம், 69. தேங்காய், 70. வேர்க்கடலை, 71. வானம், 72. துடைப்பம், 73. மூக்குத் திருகு, 74. அடுப்பு, 75. கப்பல், 76. சல்லடை, 77. வானம், 78. மத்து, 79. கண்ணாடி, 80. சட்டியானை.



எப்போதும் முடிவிலே இன்பம்

புதுமைப்பித்தன்

அது மிகவும் ஆசாரமான முயல். நாலு வேதம், ஆறு சாஸ்திரம், மற்றும் தர்க்கம் வ்யாகரணம் எல்லாம் படித்திருந்தது. திரிகரணசுத்தியாகத் தெய்வத்தின் மீது பாரத்தைப் போட்டு, வாழ்வின் சுகங்கள் எல்லாம் ஒன்று பாக்கிவிடாமல், அநுபவித்துவந்தது.

அந்த முயல் எலியட்ஸ் ரோடில் உள்ள ஒரு கலெக்டர் பங்களாவில் வசித்துவந்தது. வெகு காலமாகத் தான் வசிக்கும் இடம் ஒரு கலெக்டரின் பங்களா என்பது அதற்குத் தெரியாது. அதைத் தெரிந்துகொண்ட பிற்பாடு அதற்குப் பெருமை சொல்லிமுடியாது. வனராஜனை சாக்ஷாத் மிருகேந்திரனே போல அதன் நடையில் மிடுக்கு ஏற்பட்டது. உலகத்தில் தன்னை ஏறெடுத்துப் பார்க்க யாருக்கும் அருகதை இல்லை என நினைக்கவும் ஆரம்பித்துவிட்டது அந்த முயல்.

தான் வசிப்பது கலெக்டர் வீடு என்பதை அது அறிந்துகொண்ட வரலாற்றை ஒரு ரசமான இதிகாசம் என்று சொல்லவேண்டும். கலெக்டர் யுகத்தில் இதிகாச கர்த்தர்களுக்கு இடம் இல்லாமல் போனது இந்த இதிகாச கர்த்தர்களின் துரதிருஷ்டமே தவிர முயலின் துரதிருஷ்டம் என்று அதன் மேல் பழி சாற்ற முடியாது. ஏனெனில் ஜோதிஷர்கள் சொல்லக்கூடிய மிக மிகச் சிறந்த க்ஷேத்திரத்தில், அதற்கு மேலான சிறந்த லக்கினத்தில் பிறந்த முயல் அது. அதன் ஜன்ம லக்கினத்தைப் பற்றியோ, அதன் அதிருஷ்டத்தைப் பற்றியோ, சகதேகப்படும் மனப்பாங்கு படைத்தவர்கள் ஜோதிஷ

சாஸ்திரத்தையே அறியாதவர்கள் என்று தான் சொல்லவேண்டும்.

நாலு வேதமும் ஆறு சாஸ்திரமும் படித்திருந்தால்தான் என்ன? முயல் முயல்தானே? அதன் குணம் போய்விடுமா? சமண சந்நியாசிகள் பாறைகளில் குடைந்த நிலவறைகள் மாதிரி தோட்டம் முழுவதிலும் குடைந்து வளை போட்டுவிட்டது. முன் 'கேட்' அருகில் உள்ள ரோஜாப் புதரின் பக்கத்தில் உள்ள வளையில் குதித்து மறைந்தது என்ருல், புழைக்கடையில் சுற்றிச் சுவர் ஓரத்தில் உள்ள கறிவேப்பிலைச் செடிக்கு அருகில் உள்ள குண்டுக்கல்லுக்குக் கீழிருந்து அது வெளியே வரும். இது தவிர அதன் நிலவறைகள் தரையில் இக்குக்கு ஒரு மாதிரியாகச் சென்று மழைக் காலத்தில் மனிதர் காலடித் தடம் பட்டதும் பொதுக்கென்று உள்வாங்கி விடும். மாலை நேரத்தில் கலெக்டர் துரை பங்களாவின் சுற்றுப் புறத்தில் உலாவுவார். ஒரு தடவை அவருடைய காலும் சொதக் என்று உள்வாங்கிக் கணுக்கால் சுளுக்கிக்கொள்ள, மாலியைக் கூப்பிட்டுத் திட்டினார். முயலை விரட்டு என்று உத்தரவு போட்டுவிட்டார். காங்கிரஸ்காரர்கள் என்ருல் தண்டோராப் போட்டோ வெளியேற்ற உத்தரவு பிறப்பித்தோ துரத்திவிடலாம். கலெக்டரின் உத்தரவு அமலுக்கு வருவதற்குச் சிறிது காலம் பிடித்தது. மாலி மிகவும் கிழவன். சமயங்களில் தூரத்தில் முயல் மாதிரி எதுவும் தென்படுமாகில் எக்ஸ்-பி என்ஜின் புறப்படுகிறமாதிரி "சூ" வென்று சத்தம் போட்டுக்கொண்டு ஓடிவருவான். காகதாலீய நியாயத்தை நிர்த்தாரணம் செய்வதுபோல முயல் தன் வாகில் ஆட்டிவிட்டு, அருகில் உள்ள வளைக்குள் சரேலென்று அந்தர்த்தானம் ஆகிவிடும்.

ஓடி ஓடிச் சலித்துப்போன கிழட்டு மாலிக்கு ஒரு யுக்தி தோன்றியது. ஒரு கறுப்பு நாயை இந்த உத்தியோகத்துக்கு அமர்த்தினுன். நிலக்காலங்களில் தவிர மற்ற நாட்களில் இருட்டோடு இருட்டாக உலாவலாமாகையால், அதற்கு அந்த உத்தியோகம் ஏற்றது என்று நினைத்தான். அதற்குத் தினசரி கால் வீசை மாமிசமும், இரண்டு எலும்புத் துண்டுகளும், சில சமயங்களில் கலெக்டர் போட்ட மிச்சத் தீனி என்ற போனஸும் உண்டு. முதலில் பறை நாய்க்கு இந்த உத்தியோகம் மிகவும் சௌகரியமாக இருந்தது. பகல் முழுவதுமாக ஒரு மரத்தடியிலோ சுவர் ஓரத்திலோ பொழுதைக் கழிப்பது, ராத்திரி வேளைகளில் ரோந்து சுற்றி வருவது: இம்மாதிரி ஏற்பாடு அதற்குப் பரமபதமாக இருந்தது.

இந்தக் கறுப்புக் குட்டி பறை நாய்; அதிலும் பட்டணத்துப் பறை நாய். அதற்கு முயல் என்ருல் எப்படி இருக்கும் என்று கூடத் தெரியாது. மேலும் அது எழுத்தாளர் அல்ல; சொந்த மனசினுலோ, இரவல் விவகாரத்தினுலோ கற்பனை பண்ணிக்கொள்ளுவதற்கு அதற்குச் சக்தி இல்லை.

மூன்று நான்கு நாட்கள் உத்தியோகம் பார்த்தும் முயலைப் பார்க்காததற்கு முக்கியமான காரணமும் ஒன்று உண்டு. அந்த நாய்க்கு வாக்கிலே சனி. தூரத்தில் எதுவும் கறுப்பாகத் தெரிந்தால் வள் என்று குரைக்கும். சற்று நேரம் அந்தத் திசையையே பார்த்துக்கொண்டு நின்றுவிட்டுப் பிறகு பாய்ந்து ஓடும். கறுப்பு நாயின் இந்த ஏற்பாடு முயலுக்குச் சௌகரியமாக இருந்தது. அபாயச் சங்கின் சப்தம் கேட்டதும், டபக் என்று நிலவறைகளுக்குள் புகுந்துகொள்ள வேண்டும் என்ற உத்தரவைப் படித்துத் தெளிந்ததுபோல, அது வளைக்குள் சென்று ஒளிந்து கொள்ளும். இந்தப் புதிய குரல் எங்கிருந்து வருகிறது, எதனுடைய குரல் என்பதெல்லாம் அதற்குத் தெரியாது. உயிர்ப் பிண்டங்கள் எல்லாவற்றிற்குமே ஊறிப்போயுள்ள ஒரு குணம், அதைக் குலை நடுக்கமெடுத்து அவ்வாறு ஓடும்படி தூண்டியது.

முயல் தர்க்கசாஸ்திரம் படித்த பிராணியாகையினுலே, இரண்டு மூன்று தடவை ஓடின பிற்பாடு, இம்மாதிரி ஓடி ஒளிவது அதற்குப் பிடிக்கவில்லை. வளைக்குள் பதைக்கப் பதைக்க ஓடி, இண்டில் உட்கார்ந்து கொண்டு ஆசு ஊசென்று வரும் இரைப்பும் சுவாசமும் நிதானப்பட்டு, படக்குப் படக்கு என்று அடித்துக்கொள்ளும் நெஞ்சு ஒருவிதமாகச் சுமாரானவுடன், நீற்க்கண்டவாறு யோசனை செய்யும்: "கயிற்றரவு என்று சொல்லுவார்களே, ஒருவித மயக்கில், அதைப்பற்றிப் படித்தவனுக்கு நான் இப்படி ஓடிவருவது? எதற்கும் அந்தச் சத்தம் என்ன என்று பார்த்தே தீரவேண்டும். இல்லாவிட்டால் நான் படித்துப் பாழாய்ப் போய் என்ன பலன்?" என்று நினைத்தபின் மெதுவாக ஊர்ந்து வந்து வந்து வளைக்கு வெளியே கண்களை மட்டும் வைத்துக் கவனித்துக்கொண்டிருந்தது.

குரைத்த பிற்பாடு கூர்ந்து கவனித்துவிட்டுக் கறுப்பு நாய் பாய்ந்து ஓடிவருவதற்கும், முயல் தீர்க்காலோசனை செய்துவிட்டுத் திரும்பி எட்டிப் பார்ப்பதற்கும் சமயம் ஒத்திருந்ததனுல், தர்க்க சாஸ்திர பண்டிதர் கண்ணில் ஏதோ பிரம்மாண்டமான ஒன்று நாலுகால் பாய்ச்சலில் ஓடுவது தென்பட்டது. ராமநாமத்தைச் சொல்லி மனசைத் திடப்படுத்திக்கொண்டு, குரலையும் திடப்படுத்திக் கொண்டு, "அது யார்?" என்று இலக்கணப் பிழை இல்லாமல் கேட்டது முயல்.

"அதாரது?" என்று கொச்சையாகத் தனது உத்தியோகக் கடமைக் காலம் வீணுகிறதே என்ற எரிச்சலுடன் பறை நாய் திருப்பிக் கேட்டது.

நாயின் கொச்சைக் குரலைக் கேட்டுப் பயம் தெளிந்த முயல், மீண்டும் அதிகாரத்துடன், "அது யார் அது?" என்று அழுத்தம் திருத்தமாகக் கேட்டது.

"நானு, நான்தான் கலெக்டர் பங்களாவின் காவல் உத்தியோகஸ்தர்; முயல் என்று ஒன்று இருக்கிறதாம்; அதை வேட்டையாடி வெளியே துரத்துவதற்கு நியமிக்கப்பட்ட ஸ்பெஷல் உத்தியோகஸ்தர் நான்" என்றது கறுப்பு நாய்.

"அப்படியா, முயலைத் துரத்துவதற்காக நியமிக்கப்பட்டவரா? ஏதோ இருட்டில் நன்முகத் தெரியவில்லை. இப்படிக் கொஞ்சம் வாரும், பார்ப்போம்" என்றது முயல்.

சுற்றுமுற்றும் பார்த்து எதுவும் தென்படாமல், "எங்கே இருக்கிறீர்? நீர் யார்?" என்று கொஞ்சம் மரியாதையாகக் கேட்டது ஸ்பெஷல் ரோந்து உத்தியோகஸ்தர்.

"இதோ இப்படி இந்த வளையண்டை வாரும். நான்தான் முயல். நீர் விரட்டுவதற்காக இங்கே வெகு காலமாக இருந்துவருகிறவன். எலக்கு நாலு வேதம், ஆறு சாஸ்திரம், தர்க்கம், வியாகரணம் எல்லாம் தளபாடம்" என்றது முயல், வளைக்குள் இருந்து கொண்டே.

"ஐயா முயலாரே, முயலாரே. கொஞ்சம் வெளியே வாரும்; எனக்காகச் சற்று வெளியே வாரும். உமக்குக் கோடிப் புண்ணியம் உண்டு. எனக்கு உத்தியோகம் போய் விடக்கூடாது; தயவு செய்து வெளியே வாரும்" என்று கூத்தாடியது; கெஞ்சியது. முயலின் குரலைத்தான் கேட்டிருந்ததே ஒழிய அது எப்படி இருக்கும் என்று கறுப்பு நாய்க்குத் தெரியாது.

"நான் வெளியில் வருவது இருக்கட்டும். உமக்குத் தர்க்க சாஸ்திரம் தெரியுமா? அதைக் கற்றுக்கொள்ளாமல் என்னிடம் வாதம் பண்ண வருகிறீரே" என்றது முயல்.

"எனக்குத் தர்க்கமும் தெரியாது; படிப்பும் கிடையாது. நான் பறை நாய். உமக்குக் கோடிப் புண்ணியம் உண்டு. நீர் இந்தப் பங்களாவை விட்டு வெளியே போய்விடும்; இல்லாவிட்டால் எனக்கு வேலை போய்விடும்" என்று அழுதது கறுப்பு நாய்.

"உம்முடைய நிலையைப் பார்த்தால் பரிதாபமாகத்தான் இருக்கிறது. நான் இந்தப் பங்களாவை விட்டுப் போய்விடுவது என்முல் அதனால் உமக்குத்தானே நஷ்டம் என்று எனக்குக் கஷ்டமாக இருக்கிறது" என்றது முயல்.

"அது எப்படி?" என்றது கறுப்பு நாய்.

"நான் போகாவிட்டால் உமக்கு வேலை போய்விடும் என்று நீர் பயப்படுகிறீர்; நான் போய்விட்டால் பிறகு உமக்கு இங்கே வேலை ஏது? யாராவது ஒருவரைச் சும்மா வைத்துச் சம்பளம் கொடுத்துக் கொண்டிருப்பார்களா? நான் போய்விட்டாலும் உமக்கு வேலை போவது நிச்சயந்தானே?" என்றது முயல்.

கறுப்பு நாய் இவ்வளவு தூரம் எட்டியோசிக்கத் திராணி இல்லாததனால், மருண்டு ஓவென்று பிலாக்கணம் வைக்க ஆரம்பித்து விட்டது. அதற்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

"ஓய், என் வீட்டுவாசலில் உட்கார்ந்து கொண்டு பிலாக்கணம் வைக்காதேயும். உமக்கு வேலை போகக்கூடாது; அவ்வளவு தானே உம்முடைய கவலை? நான் சொல்லுகிறபடி சத்தியம் செய்து கொடுப்பீரா?" என்று கேட்டது முயல்.

"ஆகட்டும், ஆகட்டும்" என்றது நாய்.

"அதிருக்கட்டும், நீர் சுத்த சைவந்தானே?" என்று கேட்டது முயல்.

"அப்படி என்றால்?"

"நீர் மாமிசம், எலும்பு, அணில்.....பிறகு .....பிறகு..நான்...முதலிய மிருக ராசி களைச் சாப்பிடுகிறவரா?"

"ஆமாம்; ஆமாம். சாப்பிடுகிறவன்.. சுத்த சைவம்" என்றது நாய். மத்தியான்னம் கிடைத்த கறித்துண்டு ஞாபகத்துக்கு வரவே நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டது.

"அப்படிச் சாப்பிடாதவர்கள்தாம் சைவம். உமக்கும் நமக்கும் எப்படி ஒத்து வரும்?" என்றது முயல். "உமக்கு அந்தப் பழக்கத்தை விட்டுவிட முடியுமா?" என்று கேட்டது மீண்டும்.

"எப்படி முடியும்? ஒரு இருத் துண்டோ எலும்புத்துண்டோ இல்லாதுபோனால், என் உடம்புக்கு ஒத்துவராதே!" என்றது நாய்.

"கீரை, கிழங்கு தினுசுகளைச் சாப்பிட்டுப் பாருமே. உடம்புக்கும் நல்லது; நான் உம்மிடம் தயக்கமில்லாமல் நெருங்கியும் பழக முடியும்" என்றது முயல்.

"நான் செத்துப் போவேனே!" என்று ஏங்கிய துறப்பு நாய்.

"அப்படியானால் உமக்கும் நமக்கும் ஒத்து வராது; எனக்குத் தூக்கம் வருகிறது" என்று சொல்லிவிட்டு வளைக்குள் சென்று விட்டது வேதம் படித்த முயல்.

கறுப்பு நாய்க்கு மிகவும் வருத்தம். இவ்வளவு கெட்டிக்கார, தர்க்கம் படித்த முயலைப் பார்க்க முடியாமல் போயிற்றே என்று வேதனை.

எப்படியானாலும் மீண்டும் ஒரு தடவை அதைப் பார்க்கப் பிரயாசைப்படுவது, இல்லாவிட்டால் தெய்வம் விட்ட வழி என்று நினைத்துக்கொண்டு தான் வழக்கமாகப் போய்ப் படுத்துக்கொள்ளும் கறிவேப்பிலைப் புதரடிக்குச் சென்றுவிட்டது.

2

மறுநாள் அதிகாலையில் எழுந்து, முயல் காயத்திரி ஜபித்துக் கொண்டிருந்தது. சூரிய கிரணங்கள் மூடிய இலை வழியாக அதன் கண்ணுக்குள் இந்திர ஜாலங்களைக்

காட்டிக்கொண்டிருந்தன. கீரைப் பச்சை யும் டொமாட்டோச் சிவப்பும் அடிக்கடி தோன்றி, கலெக்டர் பங்களாக் காய்கறித் தோட்டத்துக்கு அதன் மனசை இழுத்துச் சென்றன.

நேற்றுப் பார்த்த இடத்தில் முயல் அகப் படுமா, அதை மறுபடியும் பார்க்க முடியுமா என்று கவலைப்பட்டுக்கொண்டு கறுப்பு நாய் அந்தப் பக்கமாக மோப்பம் பிடித்துக் கொண்டு வந்தது.

எதிரே காயத்திரி பண்ணிக்கொண்டிருக் கும் ஐந்துதான் நேற்று ராத்திரி பேசிய முயல் என்று அதற்குத் தெரியாது.

நாயைக் கண்டவுடனேயே, ஜபதபங் களைச் சீக்கிரமாக முடித்துக்கொண்டு, "நாயாரே, சௌக்கியந்தானா?" என்று கேட்டது முயல்.

சத்தம் வந்த திக்கைத் திரும்பிப் பார்த்து நாய் திடுக்கிட்டுப் போயிற்று. இத்தனை சின்னச் சாதியா நேற்று ராத்திரி அத்தனை பெரிய பேச்சுப் பேசியது என்று அதிசயப் பட்டுக்கொண்டு அதனிடம் நெருங்கியது.

"காலியில் ஆகாரம் பண்ணியாச்சா?" என்று கேட்டுக்கொண்டே வளைக்குள் சென்று உட்கார்ந்துகொண்டது முயல்.

"எனக்கு இத்தனை காலியிலேயே கொடுப்பதற்கு யார் இருக்கிறார்கள்? இன் னும் கலெக்டரே சாப்பிட்டாகலியே" என்றது நாய்.

"நீர் வருகிற வேகத்தைப் பார்த்ததும் அப்படித்தான் நினைத்தேன்" என்றது முயல்.

"நேற்று ராத்திரி என் வேலைக்கு ஆபத்து வராமல் ஒரு வழி பண்ணித்தருவதாகச் சொன்னீரே, அதைப்பற்றி விசாரித்துக் கொண்டு போகலாம் என்று வந்தேன்" என்றது நாய்.

"உமக்கும் நமக்கும் ஒத்துவராதே; நான் எப்படி வழி சொலலுகிறது? நீரோ மாம்ச பட்சணி; நானோ சாத்விக உணவுக்காரன். எண்ணெய்க்கும் தண்ணீருக்கும் சரிப்பட்டு வருமா? உறவு என்றால் தண்ணீரில் பால் கலப்பது மாதிரி இருக்கவேண்டும் என்பது ஆன்றோர் வாக்கு" என்றது முயல்.

"நீர் எனது வேலையைக் காப்பாற்றிக் கொடுக்கிறதானால் என்ன செய்யவேண்டு மானாலும் செய்கிறேன். இதோ இப் போதே சத்தியம் பண்ணித் தரட்டுமா?" என்ற ஆவலுடன் கேட்டது நாய்.

"நீர் உம்முடைய மாம்ச உணவை விட்டு விடுவீரா?" என்று கேட்டது முயல்.

"அதுதான் என்னால் முடியாது என்று அப்போதே சொன்னேனே; நான் செத்துப் போன பிற்பாடு எனக்கு வேலை இருந்து என்ன, போய் என்ன? கலெக்டர்கூட என்னைப்போலத்தானே சாப்பிடுகிறார்?" என்றது நாய்.

"நீரோ மாமிசத்தை விட முடியாது என் கிறீர்; என்னைத் தின்னமாட்டேன் என்ற வது சத்தியம் செய்து கொடுப்பீரா?" என்று கேட்டது முயல்.

"இந்த லோகத்திலே, யாராவது குரு வைத் தின்பார்களா? உமக்கு ஏன் இந்தச் சந்தேகம்?" என்றது நாய்.

"லோகத்திலேதான் சில பேர், தம் வயிற்றுக்குள்ளே குரு போய்விட்டால், தாமே குருவாகி விட்டதாக நினைத்துக் கொள்ளுகிறார்கள். அது உமக்குத் தெரி யாதுபோல இருக்கிறது" என்று சொல்லி யது முயல்.

"உமக்கு அந்தச் சந்தேகம் வேண்டாம். நான் உம்மைத் தின்பதே இல்லை என்று சத்தியமாக, ஆணையாகச் சொல்லுகிறேன். இன்னும் வேறு என்ன வேண்டும்?" என்றது நாய்.

"நான் சொல்லுகிறபடியெல்லாம் கேட்க வேண்டும்; நான் சொல்லுகிற வேலை எல் லாம் செய்யவேண்டும்" என்றது முயல்.

"ஆகட்டும்" என்றது நாய்.

"அப்படியானால் பக்கத்துத் தோட்டத் தில் முயலினி என்று ஒரு யுவதி இருக் கிறாள். அவளிடம் போய் அவளுடைய கோத்திரம் என்ன ஏன்று கேட்டுக் கொண்டு வாரும்" என்றது முயல்.

"எனக்குத் தந்திரம்.....?" என்றது நாய்.

"நீர் போய் விசாரித்துக்கொண்டு வாரும். அதற்குள் ஒரு நல்ல யுக்திபாக யோசித்து வைக்கிறேன்" என்றது முயல்.

நாய் அகன்றதும், காய்கறித் தோட்டத்துக் குள் புகுந்து இரண்டு இணுக்குக் கீரையும் நல்ல டொமாட்டோப் பழமாக இரண்டும் சாப்பிட்டு ஏப்பமிட்டுக்கொண்டு, கீரைப் பாத்திக்கு அருகில் இருந்த வளைவழியாக ஓடி மறைந்தது முயல்.

பக்கத்துப் பங்களா. ஒரு ஜமீன்தாருடை யது. பறை நாயை உள்ளே வரும்படி விடுவார்களா? நாலைந்து வேலைக்காரப் பையன்களும் ஒரு கோம்பை நாயுமாகச் சேர்ந்து விரட்ட, வாலைக் காலிடையில் பதுக் கிகொண்டு அழுதுகொண்டே ஓடி வந்து விட்டது கறுப்பு நாய்.

முயல் சொல்லி அனுப்பின காரியத்தைக் கேட்டு வருவதற்குக்கூட முடியவில்லையே, அதன் முகத்தில் எப்படி விழிப்பது என்று குன்றிப்போய், பங்களாவுக்குள் நுழைந்த சமயத்தில், பட்டப்பகலாகிவிட்டது. சாப் பாட்டுக்காக, தோட்டக்காரன் குடிசைப் பக்கமாகப் போயிற்று. சாப்பிடும் தட்டை மோந்து பார்த்தது. வெறும் தட்டுத்தான் கிடந்தது. தனக்கு வேலைதான் போய் விட்டதோ என்று பதறியது. அதற்குப் போட்டிருந்த தினையை நரி ஒன்று தின்று நடந்துவிட்டது அதற்கு எப்படித் தெரிய முடியும்?

3

அன்று இரவு நல்ல நிலா. சற்றுச் சுகமாக உலாவி வருவோமே என்று நீண்டத்து வேதவித்தான முயல் வெளியே புறப்பட்டது. மனசுக்கு இன்பமாக இருக்கவும் சாந்தம் ஏற்படவும் சாமகானம் பாடிக்கொண்டு எங்கெங்கோ நடந்தது. சிறிது நேரம் கழித்து எவ்வளவு தூரம் நடந்துவிட்டோம் என்று சுற்று மூற்றும் பார்க்க, தூரத்தில் முயலினி ஓர் இலையைக் கறித்துக்கொண்டிருப்பதைப்பார்த்து,"என்ன லாவண்யம்! என்ன அழகு!" என்று அப்படியே சொக்கிப்போய் நின்றது. பிறகு குண்டே குண்டென்று ஓடி அதனிடம் நெருங்கி, "முயலினி, உன் கோத்திரம் என்ன?" என்று கேட்டது.

"உங்கள் கோத்திரந்தான்" என்று சொல்லிவிட்டு வேறு ஓர் இலைக்குப் போயிற்று முயலினி.

"இத்தனை பிரயாசைப்பட்டும் என் ஆசை எல்லாம் பாழாய்ப் போயிற்றே!" என்று பெருமூச்சு விட்டது முயல்.

"இல்லை, விளையாட்டுக்குச் சொன்னேன்; உங்கள் கோத்திரம் இல்லை" என்று கண்ணை ஒரு வீசு வீசிவிட்டு வேறு ஒரு தளிரை மென்றது முயலினி.

"என் கோத்திரம் உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டது முயல்.

"காதலுக்குக் கண் இல்லை என்று எங்கே படித்தீர்கள்?" என்று புன்சிரிப்புச் சிரித்தது மூயலினி.

"இன்னிக்கு ஒரு ஆளை உன்னிடம் அனுப்பினேனே, வந்து விசாரித்தானு?" என்று கேட்டது முயல்.

"ஓ, அதுவா! பகல்லெயாரோ என் அந்தப்புரத்தில் நுழைந்தார் என்று, ஜமீன்தார் வீட்டு வேலைக்காரர்களும் கோம்பையும் போய் விரட்டினார்கள்" என்றது மூயலினி.

"நம்முடைய பங்களாவுக்கு வாயேன்" என்றது முயல்.

"என்ன, நாள் நக்ஷத்திரம் பார்க்காமலா? வேதசாஸ்திரம் படித்த தாங்களா இப்படிச் சொல்லுவது?" என்றது மூயலினி.

4

சேதி கேட்டு வருவதாகப் போன நாய் திரும்பியே வரவில்லையே என்று கவலைப் பட்டுக்கொண்டிருந்தது முயல். காலையில் அனுஷ்டானுதிகள் நடத்தும்பொழுது மனசு அதற்குக் காயத்திரியில் லயிக்கவே இல்லை. கறுப்பு நாய்க்கு என்ன துன்பமோ, வேலை தான் ஒருவேளை போய்விட்டதோ என்று மனசை வாட்டிக்கொண்டது முயல்.

பகல் சுமார் பத்து மணிப் போதுக்கு முயலினி இரண்டு டொமாட்டோப் பழத்தையும் ஓர் இணுக்கு முள்ளு முருங்கை இலையையும் ஸ்திரீதனமாக எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தது.

முயலினியைக் கண்டதும் தன் வேதனையை மறந்து உல்லாசமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கும் போது, வக்கீலுக்கு வெளியே இரைச்சலும் சந்தடியுமாகக் கேட்க, முயல் வாசலருகில் வந்து, "அங்கே யார் அது, கூச்சல் போடுகிறது? இது கல்யாண வீடு என்று தெரியவில்லையா?" என்று உள்ளிருந்தபடி அதட்டியது.

"ஐயா முயலாரே, நான்தான் கறுப்பு நாய். ஒரு வழக்கு. தீர்த்துவைக்கவேண்டும்" என்றது.

"போதும். இதுதான் பிழைப்பாகப் போச்சு; நேற்றுப் போனவன் ஒரேயடியாக எங்கே தொலைந்துபோனாய்? என்ன, வேலையைப் போக்கடித்துக் கொண்டாயா?" என்றது முயல்.

"அங்கேபோய்ப் பட்டபாட்டைச் சொல்லுவதென்றால் நான்கு நாட்கள் கூடப் போதா. இந்த வழக்கை மட்டும் தீர்த்து வைத்துவிடும்" என்று கெஞ்சியது நாய்.

"என்ன சண்டையாம்? பிரதிவாதி யார்?" என்று கேட்டது முயல்.

"நான்தான் நரி" என்றது நரி

"நரியா? இந்த வட்டாரத்திலே ஏது நரி? நமக்கு இப்பொழுது சமயம் இல்லை" என்றது முயல்.

"ஐயா, முயலாரே, முயலாரே" என்று வாலை ஆட்டிக்கொண்டு கெஞ்ச ஆரம்பித்து விட்டது நாய்.

"போடா போ, உனக்குப் புத்தி கித்தி இல்லை! காரியமா அனுப்பினால் தும்பியே தலைகாட்டுகிறதில்லை. வழக்குக் கொண்டுவந்தாட்டான் வழக்கு எனக்குக் கல்யாணமாகி இன்னும் அரை மணிப்பொழுதுகூட ஆகியில்லை. அதற்குள் இந்த நரியோடே ஏண்டா சண்டை போட்டுக்கொண்டாய்?" என்று அதட்டியது முயல்.

"ஓய் முயலாரே, உம்முடைய உயிருக்காகப் பயப்படவேண்டாம். இன்னும் சுமார் ஒரு மண்டலத்துக்கு முயல்கறி சாப்பிடக் கூடாது என்று எங்கள் ஜாதி வைத்தியர் எனக்குக் கட்டளை இட்டிருக்கிறார். இப்பொழுது சும்மா தாராளமாக வெளியே வந்து பாருமே" என்றது நரி.

"சம்சாரம் வீட்டில்தானே?" என்று வலைக்குள் குனிந்து பார்க்க முயன்றது நரி.

"ஓய், நீர் தூரத்திலேயே நின்று பேசும்; எனக்கு நன்முகக் காது கேட்கிறது" என்று கீச்சிட்டது முயல்.

"அப்படியா! வழக்கு ஒன்றும் பிரமாதம் அல்ல. தினசரி அவருக்குத் தட்டில் வைக்கிற சாப்பாட்டை நான் இரண்டு நாட்களாகத் தின்றுவிடுகிறேன். அதுதான் பந்தியம் என்று சொன்னது உமக்கு ஞாபகம் இருக்கிறதா? அதைக் கண்டு பயந்து, தம் வேலைக்கு ஆபத்தோ என்று கவலைப்படு

கிறது நாய். எப்படி இருந்தாலும் ஜாதிக் குணம் போகுமா? மேலும் என்னைப்போல அர்த்த சாஸ்திரம், தண்ட நீதி எல்லாம் அது படித்திருக்கிறதா? சுத்தப் பட்டிக்காடு" என்றது நரி.

"உமக்கு அர்த்த சாஸ்திரத்தில் நல்ல பரிசயமோ?" என்றது மூயல்.

"என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்? கர தலப் பாடம்" என்றது நரி.

"ரொம்ப நாளாக எனக்கும் அது படிக்க வேண்டும் என்று ஆசை" என்றது மூயல்.

"அப்பியசித்தால் போகிறது. நானேயி லிருந்தே பாடம் கேட்க வருகிறீரா?" என்றது நரி.

"வருகிற தக்ஷிணையனத்தின்போது பாடம் ஆரம்பிக்கலாம்; நீர் என்ன சொல்ல வந்தீர்?" என்றது மூயல்.

"நாய் எதற்காகச் சம்பளத்துக்கு உழைக்க வேண்டும்? கௌரவமாகப் பிழைக்க வழி இல்லையா? ஏன், கலெக்டரையே விரட்டி விட்டால் போகிறது" என்றது நரி.

"கலெக்டரையா! விரட்டுகிறதா!" என்று பிரமித்துப் போயிற்று நாய்.

"கலெக்டரை விரட்டி, இந்தப் பங்களா வுக்கு உம்மையே ராஜாவாகப் பண்ணு கிறேன். ஆமை புகுந்த வீடும், அமீனு புகுந்த வீடும் உருப்படாது என்று ஜனங் கள் நினைக்கிறது உமக்குத் தெரியுமா? மூயலைக் கேட்டுப் பாரும். ஆமாம் என்று சொல்லும். எனக்கு ஒரு சிநேகிதன் ஆமை இருக்கிறது. அதை அழைத்துக்கொண்டு விடியற்காலையிலே வருகிறேன். மூயலாரே, நீர் பயப்படாமல் சும்மா வெளியே வந்து நடமாடும்" என்று சொல்லிவிட்டுப் புறப் பட்டது.

"நான் இப்பொழுதிருந்தே ராஜாவா?" என்று பல்லை இளித்துக்கொண்டு கேட்டது நாய்.

"ஆமாம் மகாராஜா; நானோ மாலே பங்களாவில் கிருகப்பிரவேசம்" என்று சிரித்துக் கொண்டு சென்றது நரி.

"வடிகட்டின அசடே, இந்தத் துரோகியை இங்கே ஏன் கூட்டிக்கொண்டு வந்தாய்?" என்று அதட்டியது மூயல்.

"நான் மகாராஜாவாக்கும்! என்னை முன் போல வா போன்னு பேசப்படாது" என்றது நாய்.

"சீ, முட்டாள், வாயை மூடிக்கொண்டு சற்றுக் கேளு. நரிக்கு முன்னால்தான் நீ ராஜா. நரி இல்லாவிட்டால், நீ என் சேவ கன். அதைத் தூரத்தில் பார்த்தாலும் எனக்கு எச்சரிக்கை கொடுக்கவேண்டும். நான் காயத்திரி பண்ணும்போது நீ என் பக் கத்தில் காவலுக்கு உட்கார்ந்திருக்க வேண் டும். மூயலினி எங்காவது போனால் துணைக்கு நீயும் போகவேண்டும்" என்றது மூயல்.

"அப்படியே ஆகட்டும், எஜமான்" என் றது நாய்.

"ஜாக்கிரதை. தந்திரத்தைத் தந்திரத் தால்தான் ஜயிக்கவேண்டும். அவன் கலெக் டரை ஒழிச்சதும் நாம் அவனை ஒழிக்க வேணும். ஜாக்கிரதை" என்றது மூயல்.

"ஜாக்கிரதை" என்று சொல்லிவிட்டுப் பக்கத்திலேயே படுத்துக்கொண்டு தூங்கிப் போய்விட்டது நாய்.

"அர்த்த தாமமாய்விட்டது; மூயலினியும் தூங்கியிருப்பாள்; நாமும் தூங்கவேண் டியதுதான்" என்று கொட்டாவி விட்டது மூயல்.

"தூங்கல்லே" என்ற கீச்சுக் குரல் வீட்டுக்குள்ளிருந்து கேட்டது.

5

அதிகாலையிலே எழுந்திருந்து மூயல் சூரிய நமஸ்காரம் பண்ணிக்கொண்டிருந்தது. அந் தச் சமயத்திலே நரி குலைதெறிக்க ஓடிவந் தது. மூயல் வெகு வேகமாக வீட்டுக்குள் சென்று உட்கார்ந்துகொண்டு தலையை மட் டிலும் வாசல் பக்கம் வைத்துக்கொண்டது.

"என்ன, உமக்கு என்மேல் இன்னும் சந்தேகமா?" என்று கேட்டுவிட்டு, "மகா ராஜா" என்று நாயின் முன்னால் தண்டம் சமர்ப்பித்து நின்றது.

"எல்லாம் இருக்கிற இடத்தில் இருந் தால் சந்தேகம் என்ன? சண்டை என்ன?" என்றது மூயல்.

"மகாராஜா, என் வாக்குப் பொய்யா குமா? ஆமை என்று சொன்னவுடனேயே ஆட்கள் எல்லாம் ஓட்டம் பிடிக்கிறார்கள். வீட்டுவாசலில் வண்டி வந்துநிற்கிறது. காலே யிலேயே போய் ஆமையை வரும்படி சொல்லிவிட்டு வந்தேன். அதற்குள் தங் களுக்கு வெற்றி" என்றது நரி.

"அப்படியா, எங்கே நான் பார்க்கவேண் டுமே" என்று சொல்லிக்கொண்டு ஓடியது நாய்.

"மகாராஜா, மகாராஜா, மந்திரி பரிவா ரம் இல்லாமல் தங்கள் தனியாக ஓட லாமா?" என்று சொல்லிக்கொண்டே பின் தொடர்ந்தது நரி.

சுமார் ஒரு மணி நேரம் கழித்து வேர்க்க விறுவிறுக்கத் திரும்பி ஓடிவந்தது.

"என்ன அவசரம்? மகாராஜா எங்கே?" என்று கேட்டது மூயல்.

"நாய்க்கு எப்பொழுதாவது ஜாதிப் புத்தி போகுமா? அதை மகாராஜா ஆக்கினதே பிசகு. தாங்களே மகாராஜா" என்று பல் இளித்தது நரி.

"என்ன ராஜத் துரோகம் பேசுகிறாய்? அர்த்த சாஸ்திரம் படித்த உனக்கு அடுக் குமா?" என்று கோபப்பட்டது மூயல்.

"இனிமேல் தாங்களே எனக்கு மகா ராஜா. எப்படியும் நாய், நாய்தான். ஓடிப் போய்த் தோட்டக்காரனிடம் வாலைக் குழைத்துக்கொண்டு நிற்குமா? அவன் அதன் கழுத்தில் கயிற்றைக் கட்டிப் போகிற

வண்டியுடன் இழுத்துச் சென்றுவிட்டான்" என்றது நரி.

"மகாராஜாவைச் சிறைப்பிடித்துக் கொண்டு போய்விட்டார்களாம்" என்று முயலினியிடம் தெரிவித்து வருத்தப்பட்டது முயல்.

"மகாராஜா, வருத்தப்பட்டு ஆகிற காரியம் எதுவும் இல்லே. இனிமேல் தாங்களே ராஜ்யபாரத்தை ஏற்று நடத்தவேண்டும்" என்றது நரி.

"அதற்கென்ன, செய்தால் போகிறது. ஆனல் ஒரு நிபந்தனே. பகலில் நீ இங்கே தலேகாட்டக் கூடாது" என்றது நரி.

'அதுவும் அப்படியா? அதற்கு ஒரு வழி பண்ணுகிறேன்' என்று எண்ணமிட்டு, "ஆகட்டும் மகராஜ்" என்றது.

அன்று ராத்திரி நல்ல நிலா. கலெக்டர் ஓடிப் போகவில்லே. கிழட்டுத் தோட்டக்காரனேயும் கறுப்பு நாயையும் வேலேக்கு லாயக்கில்லே என்று விரட்டிவிட்டுத் துப்பாக்கியும் கையுமாக நின்றிருந்தார். கலெக்டர் பங்களாக் கோழிகளே ஜபித்துக் கொண்டு மந்திரி உத்தியோகம் பார்க்க வந்த நரி, அவருடைய துப்பாக்கிக் குண்டுக்கு இலக்காகி உயிரை விட்டது.

லதாக்ருஹத்தில் முயலினியுடன் சல்லாபித்துக்கொண்டிருந்த முயல், வெடிச் சத்தம் கேட்டு, "இந்தப் பிரதேசமே ஆபத்துப் போல இருக்கே" என்று நடுநடுங்கியது.

"இதற்குமுன் பஞ்சவடிமாதிரி இருந்த இடம்; குட்டிச் சுவராகப் போச்சு" என்றது முயலினி.

"என்ன என்று பார்த்து வரட்டுமா?" என்றது முயல்.

"அது எதற்குப் பீடை? கூப்பிடு தூரத்திலே சர்க்கார் தோட்டம் இருக்கிறது. நாளேக்கு அங்கே போய்விடுவோம், உங்கள் ஜபதபங்களுக்குச் சௌகரியமாகக் குளம் ஒன்று உண்டு" என்றது முயலினி.



முயல்கள் கண்ணுக்குத் தென்படாததைக் கண்டு கலெக்டர் அதிசயப்படவில்லே. தமக்கு எதிராகப் பெரிய சதி நடந்தும் அவருக்குத் தெரியாது.

அல்பப் பிராணி

ஆ! எத்தனே அழகு! மேனி முழுதும் கண் கொள்ளா வனப்புப் பொலிய ஒவ்வோர் அங்கமும் வளப்பமும் இளமையும் பொருந்தி விளங்கத் தேவ ரம்பையைப் போல அவள் வீற்றிருக்கிறுள். தாள் முதல் தலே வரையில் எழிலுருவாக விளங்கும் அவளுடைய அங்கங்களின் இனிமையைக் கண்டு காதலன் களிக்கிறுன். அவன் உள்ளத்திலே இன்பம் பொங்குகிறது.

அதோ ஒரு கவிஞன், அவளேச் சென்சொற் பாமாலேயால் வருணிக்க முடியுமா என்று பார்க்கிறுன்.

ஓவியப் புலவன் ஒருவன் அவளுடைய அங்கலாவண்யத்தை வண்ணத்தினுல் கோலஞ் செய்ய எண்ணி விழித்த கண் இமையாமல் நோக்குகிறுன்.

அந்தச் சிற்பியோ, வண்ணமும் உருட்சியும் திரட்சியும் பொலிவு முடைய பிம்பம் ஒன்றை அமைக்க நாடுகிறுன்.

இதோ இந்த ஞானி அந்த அங்கனமணியின் அழகிலே தெய்விகத்தைக் கண்டு தெய்வத்திருக்கரத்தின் ஆற்றலே வியக்கின்றுன்.

இவர்கள் கலேஞர்கள் - பெரியவர்கள்.

இதைப் பார். இந்த ஈ - சின்னஞ்சிறிய பிராணி - இதுகூட அவள் மேனியை அளவிடுகிறது. சுற்றிச் சுற்றி அவளே வட்டமிடுகிறது; மேலும் கீழும் பறந்து அணுகுகிறது. எதற்காக? அதுவும் ஒரு கலேஞனு?

இல்லே; இல்லே! 'இந்த உடம்பில் எங்காவது புண் இருக்கிறதா, மொய்க்கலாம்' என்று அது தேடுகிறது. சீ! அல்பப் பிராணி!



வேலியிற் பூத்தது!

'துறைவன்'

காட்டுக் கொடிவழி வேலியிலே—கரம்
காட்டி அழைத்ததோர் வாசமலர்.
நீட்டிய மின்னல் நிலத்ததென—ஒளிர்
நின்மலப் புன்னகை கண்டுநின்றேன்.

வேலியிற் பூத்த இரண்டுமலர்—கண்டு
விம்மி அவிழ்ந்ததென் உள்ளமலர்.
மூல மிரண்டு மிணைந்துனதே—அன்பு
மூட்டிய சக்தியைக் கண்டுநின்றேன்!

காடு கழனியில் தாம்பிறந்து—வயற்
காட்டு வரப்பில் நடைபயின்று
கூடு கடந்தறி யாதவிரண்—டிளங்
கோதைய ருள்ளெழும் புன்னகையோ?

சாலை நொடியினில் பேச்சுமிழ்ந்து—தனிச்
சஞ்சலம் பூண்டுயிர் வாழ்க்கையெலாம்
பாலை வனமென்று பேசிவரும்—இந்த
மாந்தரைக் கண்டு நகைத்ததுவோ?

முள்ளுப் புதரினில் வாழ்ந்திடினும்—குல
மோகனம் சற்றும் மறந்திடுமோ?
தள்ளி அலைத்தது காற்றெனினும்—துயர்
தாங்கி நகைத்திடக் கற்றதுவோ?

தொட்டுப் பறித்ததன் தாய்மையினைச்—சிறு
தும்புதும் பாக்கிடக் கூசியுள்ளம்
பட்டுக் கவத்தது போதுமென்றே—எட்டிப்
பார்த்தவண் ணம்நடை கட்டிவிட்டேன்.

தொழிலில் ஊக்கம்

டாக்டர் தி. சே. சௌ. ராஜன்

முதல் சிறைவாசத்தின் பயனுகத் தேசிய லக்ஷியங்களுக்கென அல்லும் பகலும் விடாது உழைத்து வந்த மனப்பான்மை மாறி விட்டது. கடன் தொல்லை அதிகரித்துவிட்டது. தொழில் ஈடுத்தாமல் இருந்தால் தினசரி வாழ்க் கைக்கு வருவாயில்லை. அரசியலில் ஈடுபடுவதற் குக் கதர் இயக்கத்தைத் தவிர வேறு துறைகளில் உழைப்பதற்கு இடம் இல்லை. எனவே மீண்டும் தொழிலை மேற்கொண்டேன். நான் சிறை சென்றதன் பயனே அல்லது உண்மையில் தொழிலில் எனக்குத் திறமைதான் இருந் ததோ அதை நான் சொல்ல முடியாது. ஆனல் ஒன்று நிச்சயம். தொழில் தொடங்கி இரண்டு மாதத்திற்குள் எனக்குத் தேவையானதற்கு மேல் வருவாய் கிடைக்க ஆரம்பித்துவிட்டது.

நான் சிறை நீங்கி வெளிவந்து இரண்டு மாதங் களுக்கெல்லாம், காலஞ் சென்ற தேச பக்தரும், தியாகியும், கொடைவள்ளலுமான லேட் ஜம்னு லால் பஜாஜ் திருச்சிக்கு வந்தார். எனது யோக க்ஷேமத்தை விசாரித்தார். கடன் பொறுப்பையும் பங்களாவையும் தாம் எடுத்துக்கொண்டு, மாதம் தோறும் எனக்கு நூற்றைப்பது ரூபாய் கொடுத் தால் நான் கதர் வேலையில் ஈடுபடமுடியுமா என்று கேட்டார். "கதர் வேலையை யாரும் சற்றுப் பழகிவிட்டால் செய்ய முடியும். ஆனல் வைத்தியத் தொழிலை அப்படிக் கற்றுக்கொண்டு வேலை செய்ய முடியாது" என்று சொல்லி விட்டேன். எனக்கு ஓய்வு நேரம் இருக்கும் பொழுது மட்டிலும், தேசிய வேலை செய்து கொண்டு மற்ற நேரங்களில் எனது தொழிலை நடத்த முடிவு செய்தேன். எனது தொழில் மறுபடியும் வளர்ந்து வந்து கொண்டிருந்த முறையே இந்த முடிவிற்கு வரக் காரணமாக இருந்தது. என் சிறந்த நண்பர் ராஜகோபாலா சாரியார் தம் வக்கீல் தொழிலைத் திரும்ப நடத்த வில்லை. என்னைக் காட்டிலும், எவ்வளவோ கேவல நிலையில் அவர் இருந்தும் கூட, அவர் தொழிலைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. என்னை மட்டிலும் திரும்பவும் தொழில் தொடங்க வற்புறுத்தினர். திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தைத் தொடங்கித் தொண்டர்களைச் சேர்த்துக் காங்கிரஸ் ஆக்க வேலையில் ஈடுபட்டார். தியாகத்தின் அறிகுறியான அந்த ஸ்தாபனம், இன்னும் திறம்பட ராஜாஜியுடன் உழைத்த தொண்டர்களால் நடைபெற்று வருகிறது.

மனிதன் செய்யக் கூடிய தொண்டில் சுயநல மற்ற சேவை மகோன்னதமானது. ஆசையை அடக்கி, தேவையை எவ்வளவு குறைக்க முடி யுமோ அவ்வளவு குறைத்து, எளிய வாழ்க்கை யில் ஈடுபட்டு, சேவை செய்வதில் ஊக்கமும் உத்ஸாகமும் பெற்று மன அமைதியுடன் மனிதன் உழைப்பில் ஈடுபடுவது தூர்லபம். எனினும் அடி மைப்பட்ட நாடு முன்னேறுவதற்கு வேறு வழி இல்லை. அதிலும் ஆயிரக்கணக்காக வருவாயுள்ள தொழிலை நிறுத்தி, இல்லற வாழ்வில் துறவற மனப்பான்மை கொள்வது கடினம். இருந்தபோதி லும் இதைத்தான் ராஜாஜி செய்துவந்தார். பொது ஜன சேவை செய்பவர்களுடைய மேன் மையை நாம் சரிவர உணர்வதில்லை. பணம் பெற்றுக்கொண்டு அரசியல் ஊழியம் செய்வதில் என்ன கேவலம் என்பது எனக்குப் புரியவில்லை. உழைப்பவன் சாப்பாடு, அவனைச் சார்ந்தவர் களின் சம்ரக்ஷணை, அவர்களின் நன்மைதீமை முத லியவைகளுக்குக் குறைந்தபக்ஷம் வருவாய் இல்லா மல் அவன் என்ன செய்ய முடியும்? மற்ற வேலை களில் அவன் ஈடுபட்டிருந்தால் அதனின்றும் கிடைக்கக் கூடிய ஊதியத்தைப்போல் ஒரு வரு வாயை அவன் பெற வேண்டுமா, வேண்டாமா? அதில் இழிவு என்ன இருக்கிறது? நம்மிடத் தில் ஊதியத்தை எதிர்பார்த்துப் பொதுஜன சேவை செய்வதில் இகழ்ச்சிக்கு உரியது என்ன என்று எனக்குப் புலப்படவதில்லை. பிறரு டைய உழைப்பால் உண்டான பொருளை விற்று வியாபாரம் செய்து, அதனின்று லக்ஷக்கணக் காகக் கொள்ளை லாபம் சம்பாதிக்கும் ஒருவனை நாம் கண்ணியமாகக் கொண்டாடுகிறோம். அற்ப ஊதியத்தைப் பெற்றுத் தன்னலமற்ற பொது ஜன சேவை செய்பவனை, ஊதியம் பெறுகிறவன் என்று மரியாதைக் குறைவாக எண்ணுகிறோம். அரசியல் தொண்டு மற்ற உழைப்பைக் காட்டி லும் மேன்மையானது, கஷ்டமானது; கொள்ளை லாபத்திற்கு இடமில்லாதது; தன்னலமற்றது. நாடு முன்னேற்றம் அடைவது, இந்த ஒப்பற்ற சேவையால். இதைக்கொண்டு நமக்கு இருக்கும் தேச பக்தியை அளந்துவிடலாம்.

என்னுடைய நண்பர்களில் பெரிய மனிதர் களென்று எண்ணப்படும் பலர், நான் வைத்தியத் தொழிலில் திரும்பவும் ஈடுபட்டதை வரவேற்றார் கள். "உன்னைப் போலத் தொழில் திறமை வாய்ந்தவர்கள், தொழிலை விட்டுவிட்டுச் சிறை

செல்வதில் காட்டிற்கு என்ன லாபம்? நீ அளிக்கும் வைத்திய உதவியால் நோயுற்றவர்களுக்கு எவ்வளவு சுகம் கிடைக்கிறது! இதுவும் பொது ஜன ஊழியந்தானே? உன்னைப் போலக் கியாதி பெற்ற வைத்தியர்கள் நம் காட்டில் இல்லையே. ஏராளமாகச் சம்பாதித்து அரசியல் வேலைக்கு அதை உபயோகப்படுத்துவதுதான் உன்போன்ற வர்கள் செய்யக்கூடிய சேவை" என்று உபதேசம் செய்தார்கள். எனினும் என் மனம் தேச சேவையையே நாடி நின்றது. கடனும், சோற்றுக் கஷ்டமும், என்னை நம்பியிருந்தவர்களைக் கடவுளை நம்பிக் கைவிடத் தைரியமில்லாமையுமே என் மனத்தைத் தொழில் செய்வதிலும், பணம் சம்பாதிப்பதிலும் ஈடுபடுத்தின.

ஏழைகளுக்கு இலவச வைத்தியம் செய்தால் அது நல்ல சேவையாகாதா என்று சில நண்பர்கள் எடுத்துரைத்தார்கள். அதைப்பற்றி அன்று நான் செய்த முடிவு இன்றுங்கூடப் பிசகான தாகத் தெரியவில்லை. செய்யும் தொழிலில் ஊதியம் பெற்று அதைக் கொண்டு தொழில் நடத்த வேண்டிய முறைகளுக்கு அவசியமான செலவு, அதற்கேற்ற சாதனங்கள், வசதிகள் எல்லாம் உரிய முறையாகச் செய்வதற்கு வேண்டிய பணம் சம்பாதித்துத்தான் ஆகவேண்டும். பிறகு தான் வயிறு வளர்க்கும் நிந்தனை. அதன்பிறகு ஈட்டிய பொருளில் மூலதனம் சம்பாதிப்பது. இம் முறைகளில் வைத்தியம் செய்யவேண்டிய அவசியத்தினால் மாதம் குறைந்த பக்ஷம் எனக்கு ஆயிரம் ரூபாய் முதல் இரண்டாயிரம் ரூபாய் வரை செலவு செய்ய வேண்டியிருந்தது. பெரிய ஆஸ்பத்திரி, உதவி வைத்தியர்கள், நர்ஸுகள், பிற சிப்பந்திகள், மருந்துச் செலவுகள், ஆயுதங்கள், உயிர்க்ரண சிகிச்சைக்கான எண்ணற்ற பல சாதனங்கள் எல்லாம் வைத்துக்கொண்டு என் வேலையைத் தொடங்க வேண்டியிருந்ததால் செலவு அதிகமாயிற்று. ஆகையால், இன்னுரிடம் இவ்வளவு பணம் கேட்டு வாங்கி வைத்தியம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்கு ஆளாகிவிட்டேன். இலவச வைத்தியம் என்பது என்னைப் போன்ற தனி மனிதனுல் தேவையான வசதிகளுடன் செய்ய முடியாது. எனினும் தொழிலில் கருணை காட்டுவதற்கு, நானே முடிவான அதிகாரியாகி எனது உணர்ச்சியைத்தொட்டி யார் யார் என்ன என்ன முறையில் இலவசமாகவோ அல்லது குறைந்த செலவிலோ, சிகிச்சை பெறவேண்டுமென நானே தீர்ப்புக் கொடுக்கும்படி நேர்ந்தது. எனது அநுபவத்தில், பணம் கொடுக்க முடியாதவர்களும், கொஞ்சம் கொடுக்கக் கூடியவர்களுமே, தங்களது சக்திக்கு மீறிக் கொடுத்து வந்தார்கள். செல்வம் படைத்தவர்கள் தங்கள் நிலைமைக்கு ஏற்றவாறு, ஏழைகளைப் போலக் கொடுக்கவில்லை. இருந்தபோதிலும் பெருந்தொகைகள் பணக்காரரிடமிருந்தான் பெற்றேன். அதனுல் நான் கண்டிப்பாகப் பணம் பெற்று வைத்தியம் செய்பவன் என்ற பழிச் சொல்லிற்கும் ஆளானேன். எனது மனம் சாந்தி அடையும் பொருட்டு இன்ன இன்ன விதமாகக் கருணை காட்டினேன் என்று இங்கு விளம்பரப்படுத்த வேண்டியதில்லை. நான் செய்திருக்கும் உபகாரத்திற்குப் பன்மடங்கு அதிகமாகவே எனது வருவாய் இருந்தது.

1923-ஆம் வருஷம் முதல் 1930-ஆம் வருஷம் வரை ஏழு வருஷ காலங்கள் நான் எனது தொழிலைச் செய்தவன்தேன். காகப்பூர் தேசீயக் கொடி சத்தியாக்கிரகம், சட்ட சபைப் பிரவேசம், பஹிஷ்காரம் என்ற கட்சி பேதங்கள், இவை போன்ற கிளர்ச்சிகளில் நான் சேரவில்லை. கதர் நிதி திரட்டியது, காந்திஜியுடன் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தது போன்ற சில முயற்சிகளில் நடு நடுவே ஒவ்வொரு மாதம் வேலையை விட்டு விட்டு அலைந்தேன்.

இந்த ஏழு வருஷங்களில் எனது ஆஸ்பத்திரி பெரியதாகக் கட்டி முடிந்தது. 1927-ஆம் வருஷத்தில் "எக்ஸ்-ரே" முதலிய வைத்திய முறைக்கான வசதிகள் செய்து, அந்த வைபவங்களை ஆரம்பித்து வைக்க வேண்டுமென்று காந்தியடிகளைக் கேட்டுக் கொண்டேன். அப்பொழுது காந்திஜி தமிழ் நாட்டிற்கு மூன்றாம் முறையாக விஜயம் செய்து நிதி திரட்டிவந்தார். அவரும் என் வேண்டுகோளுக்கு இணங்கி எனது புதிய "எக்ஸ்-ரே" அமைப்பைத் திறந்து வைக்க இணங்கினர். திருச்சிக்கு ஸெப்டம்பர் மாதத்தில் ஒரு நாள் இரவு வந்தார். வழக்கப்போல என் வீட்டிலேயே நான்கு நாட்கள் தங்கி ஓய்வு எடுத்துக் கொள்ள ஏற்பாடாகியிருந்தது. வந்து இறங்கின மறுநாள் "எக்ஸ்-ரே" திறப்பு விழா. அன்றிரவு காந்திஜியின் சீடர்களில் முதன்மையான ஒருவர் ஓர் ஆட்சேபத்தைக் கிளப்பினர். "டாக்டர் ராஜன் தேச சேவை செய்து நிறை சென்றிருப்பதெல்லாம் நமக்குத் தெரியும். எனினும் தம் தொழிலை நடத்துவதற்காகப் பணம் வாங்கி வைத்தியம் செய்யும் ஒரு சிகிச்சை சாலையைக் காந்திஜி திறந்து வைப்பது நியாயமல்ல. ஒரு வியாபார முறைக்குத் தம் பெயரைக் கொடுத்து உதவியதாகும். ஆகையால் இந்த நிகழ்ச்சியில் காந்திஜி பங்கெடுத்துக் கொள்ளக் கூடாது" என்று வற்புறுத்தினர்.

காந்திஜி தாம் முன்னதாகவே இந்த வைபவத்தில் கலந்து கொள்ள வாக்களித்து விட்ட படியால் அதினின்றும் எக்காரணத்தைக் கொண்டும் பின்வாங்க முடியாதென்று சொல்லிவிட்டார். "ஒரு சமயம் டாக்டர் ராஜன் தாமாகவே என்னை எனது ஒப்பந்தத்தினின்று விடுதலை செய்து விட்டால், நான் விலகிவிடுகிறேன்" என்றும் கூறினர். ராஜாஜி இந்த வாக்கின் நியாயத்தை எனக்கு எடுத்துரைத்து, காந்திஜியை இந்த வாக்குறுதியினின்று நானே தவிர்த்து, ஸ்ரீமதி

கஸ்தூரிபாவைக் கொண்டு திறப்பு விழாவை நடத்தலாமென யோசனை கூறினார். ஆனால் அதற்கு நான் இணங்கவில்லை. அதன் பேரில் காந்திஜி தாம் திறப்பு விழாவை நடத்துவதாக வும், ஆனால் அப்பொழுது பிரசங்கம் ஒன்றும் நிகழ்த்துவதில்லை எனவும் முடிவு செய்தார். அவர் செய்ய வேண்டிய ஒரு சிறு சொற் பொழிவை ஒரு காகிதத்தில் எழுதி, விழாவின் பொழுது தம் முன்னிலையில் படிக்கும்படி ஏற் பாடு செய்துவிட்டார்.

மறுநாள் காலையில் நான் திறப்பு விழாவிற்குச் செய்திருந்த ஏற்பாடுகள் எல்லாம் சரிவர நடத்தப்பட்டன. என் ஆஸ்பத்திரியில் போட்டிருந்த பெரிய பந்தலில் ஏராளமான கூட்டம் கூடியது. காந்திஜி திறப்பு விழாவை நான் கோரியபடி நடத்திவைத்த பிறகு கூட்டத்திற்குத் தலைமை வகித்துளைனம் கொண்டார். ராஜாஜி அவருடைய சொற்பொழி வைப் படித்தார். அதன் கருத்து இன்றும் என் மனம் விட்டு அகலவில்லை.

"டில்லியில் ஹகீம் அஜ்மல்கானுடைய யுனானி ஆஸ்பத்திரியைத் திறந்து வைத்த நான் டாக்டர் ராஜனுடைய ஆஸ்பத்திரியைத் திறந்து வைக்க மறுக்க முடியவில்லை. இந்த ஸ்தா பனத்தில் ஏழைகளுக்கும் தொண்டு புரிய டாக்டர் ராஜன் மறுக்க மாட்டார். ஆதலால் தான் அவரை நன்கு அறிந்த நான் அவர் வேண்டு கோளை நிராகரிக்காமல், நண்பர்கள் வற்புறுத்தியும் கூடத் கட்டுப்படாத இன்று இந்த வைபவத்தில் கலந்து கொண்டேன். மேல் நாட்டு முறையில் நடைபெறும் வைத்தியத்தில் நானும் ஈடுபட்டு, என் நண்பர்களையும் அதில் ஈடுபட வற்புறுத்தும் வரையில், இந்த வைத்திய ஸ்தாபனங்களில் நான் கலந்துகொள்ள மறுக்க முடியாது" என்று காந்தியடிகள் சொல்லியது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. வைபவம் இனிது நிறை வேறியது. சிட்டத்தட்டப் பதினெட்டு வருஷங் கள் கடந்தும் இன்று நான் தொழில் செய்வதை நிறுத்தி, கிராம சேவையில் ஈடுபட்டுக்கூட அந்த ஸ்தாபனம் உழைத்தவருகிறது. எந்த முறை யில் தொடங்கப் பெற்றதோ அந்த நோக்கத்தக்கு இணங்கவே நடந்து வருகிறதென்ன நான் நினைக் கிறேன். அந்த ஸ்தாபனத்திற்குப் பொறுப்பாளி யாக நான் இல்லாவிடினும், இனி உலகச் சண்டை முடிந்து வேலைக்கான சாதனங்கள் கிடைக்கக் கூடிய காலம் வரும் பொழுது, அந்த ஸ்தாப னத்தை நடத்துபவர்கள் என் எண்ணத்தை நிறைவேற்றுவிப்பார்களென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

தொழில் முறையின் நிர்ப்பந்தங்களால் அரசி யல் போராட்டங்களில் ஈடுபட எனக்கு அவகாசம் இல்லை. தொழிலையும் வருவாயையும் தியாகம் செய்துவிட்டு, அரசியலில் முழு நேரத்தையும் செலவிடவோ மனம் இல்லை. மேலும் அரசியல் போராட்டமென்பது, அவரவர் தங்கள் கட்சி களுக்குப் பலம் தேடுவதும், ஆள் கூட்டம் சேர்ப் பதமாக முனைந்திருந்தது. இதில் ஸ்தானங்களைக் கைப்பற்றுவது, தலைமை பெறுவது, மகாராடு களுக்குத் தலைமை வகிக்க முயலுவது, அதற் காகப் பணம் செலவழிப்பது முதலிய விஷயங் களில் ஊக்கம் காட்டினார்கள். தலைமை வகிக்க விரும்புவோர்களுக்குள் பொறாமை, குறைகூறல் முதலிய கேவல எண்ணங்கள் வளர்ந்து போட்டி யும், வசைச் சொற்களும் வளர்ந்தவந்தன. கதர் இயக்கம் தனி ஸ்தாபனமாக வளர்ந்து, மூழுநேரம் உழைக்கும் ஊழியர்களால் வியாபார ஒழுங்கிற்கு உட்பட்டு நடக்க ஆரம்பித்தவிட்டது. அதிகார வர்க்கத்தோடு போர் புரியாமல் இருக்கும்பொழுது, தலைவர்களுக்குள்ளும் குட்டித் தலைவர்களுக்குள் ளும் நடத்தவந்த முறைகளைக் கவனிக்கும் பொழுது, காங்கிரஸ் இயக்கத்தில் சேரவே மன மில்லாமல் போய்விட்டது. காங்கிரஸில் நான்கு அணு அங்கத்தினரைத் தவிர வேறு பதவியோ பொறுப்போ ஏற்க முடியவில்லை. தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டித் தலைமைக் காரியாலயம் திருச்சியைவிட்டுச் சென்னைக்கு மாறிவிட்டது. என்னைப்பற்றிய மட்டில் எனது அரசியல் வாழ்வு முடிவுற்றது என்றே சொல்லலாம். எனது வறுமை நீங்கி, அரசியல் வாழ்வில் எற்படக்கூடிய இடுக்கண்களிலிருந்து பிறர் உதவி இன்றி என்னைக் காப்பாற்றிக்கொள்ளச் சக்தி பிறந்தது.

ஆனல் தேசத் தொண்டைப் புறக்கணித்து நிற்பது ஓர் உயர்ந்த நிலை என்பதாக நினைத்து ஆனந்தப் படுவதற்கில்லை. பிறருக்கு வழிகாட்டும் முறையில் பெருமைப் படக்கூடிய தும் அல்ல. பிறந்தது முதலாக, உழைத்துத் தேறமையாக வாழ்வு நடத்தி, பொருள் ஈட்டி, சுகமுற இருக்கவேண்டும் என்பதே எல்லோரு டைய விருப்பமும். 'சிறைக்குச் செல், பணம் சம்பாதியாதே, வறுமையை அணிகலமாகக் கொள், மக்கள் பெண்டிர்களுடைய கஷ்டங்களைக் கவனி யாதே. உன் நாட்டின் விடுதலையொன்றையே உனது உயிர் நாடியாகக் கொண்டு அதற்கான வேலையை அல்லும் பகலும் ஓயாது, உழைத்துத் தியாகமூர்த்தியாக விளங்கு' என்றதான் என் மனச்சாட்சி சொல்லியது. 'ஆனல் அதற்கேற்ற திடசித்தம் வேண்டாமா? எவ்வளவு தடவை தான் வறுமையை வரவேற்பது? வறுமையால் சிறுமைப் படவேண்டிய காலமும் சேர்ந்ததே. பிறர் கை யை எதிர்பார்ப்பதில் உள்ள ஏளனம் கண்ணியமா கப் பொருள் ஈட்டுவதில் இல்லையே! பிறர் சுகிக்கக் கண்டு, அவ்விதம் நானும் இருக்கச் சக்தி இருந்தும் அவதிப்படுவானேன்?' என்ற பலஹீனமான எண் ணம் என் மனத்தில் உதித்தது.

ஆகையால் இன்னல் நிறைந்த அரசியல் வாழ்வை மறந்து தொழிலில் முழு மனத்துடன்

உழைத்தேன். வருஷந்தோறும் கடைபெறும் காங்கிரஸ் மகாநாட்டிற்குக்கூடப் போவதில்லை. ஆனலும் அரசியல் போராட்டத்தின் போக்கு, கட்சிப் பிளவுகள், ஹிந்து முஸ்லீம் பிரச்னைகள், வட்ட மேஜை மகாநாடுகள் ஆகிய எல்லாவற்றையும் ஊன்றிக் கவனித்துவந்தேன்.

காந்தியடிகளின் உப்புச் சத்யாக்கிரகமும், தண்டி யாத்திரையும் ஆரம்பிக்கும் பொழுது என் மனம் கலக்கமுற்றது. என் உள்ளே அமுங்கிக் கிடந்த தேசிய உணர்ச்சி கனலத் தொடங்கியது. மனம் தொழிலில் ஈடுபடும் ஊக்கத்தைக் கொள்ளவில்லை. சென்னை மாகாணக் காங்கிரஸ் கமிட்டி ராஜீநாமாச் செய்துவிட்டது. காங்கிரஸ் நிர்வாகிகள் ஒட்டம் பிடித்துவிட்டார்கள்.

அதசமயம் ராஜாஜி சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளி வந்து சேர்ந்தார். "காந்திஜி சத்யாக்கிரகம் செய்யத் தொடங்கிவிட்டார். அவர் கூறும் முறை எவ்வளவு விநோதமாக இருப்பினும் அதன் உட்கருத்தைப் பற்றி நாம் ஒருவரும் ஆட்சேபிக்க முடியாது. ஈடு விடுதலே அடைய வேண்டும். அதுவும் அஹிம்சா முறையில் வெற்றி பெறவேண்டும். சென்னையில் தலைவர்கள் முன்வர மறுத்துவிட்டார்கள். நாம் வாளா இருக்க முடியாது. காந்தியடிகளைப் பின்பற்றி நாமும் இயக்கத்திலே ஈடுபட்டு வேலை தொடங்க வேண்டியதுதான்" என்று சொல்லியவுடன் மாகாணக் கமிட்டியின் பெயரால், காந்திஜியின் சத்யாக்கிரக முறையைப் பின்பற்றக் கூடிய அங்கத்தினர்களைக் கொண்டு திருச்செயில் வேலைசெய்ய முற்பட்டோம்.

காங்கிரஸ் கமிட்டியில் அப்போது ஒரு பைசாக்கூடச் செலவிற்குக் கிடையாது. உட்னே சத்யாக்கிரக நிதி ஒன்றைத் திரட்டினேம். நான் கமிட்டியின் காரியதரிசியாகவும், ராஜாஜி தலைவராகவும் இருந்து வேலை தொடங்கினேம். தென்னாட்டில் உப்புச் சத்யாக்கிரகம் எங்கு ஆரம்பிப்பது எனப் பரிசீலனை செய்து, சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களின் யோசனையின் பேரில் வேதாரண்யம் உப்பளங்களில், சர்க்கார் உத்தரவை மீறி உப்பு அள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

என் உப்பு எடுக்க வேண்டும்? எதற்காக அப்படிச் செய்யவேண்டும்? உப்புக்கும் சுதந்தரத்திற்கும் என்ன சம்பந்தம்?—இவையெல்லாம் பொது மக்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆகையால் அதற்கென்று பிரசாரம் செய்வதை முன்னிட்டு, எப்படிக் காந்திஜி தாண்டிக்கு யாத்திரை புறப்பட்டாரோ அவ்விதமே ராஜாஜியின் தலைமையின் கீழ்த் திருச்சியிலிருந்து வேதாரண்யம் வரையில் ஒரு யாத்திரை ஏற்பாடு செய்தோம். மிகுந்த உத்ஸாகத்துடன் என் பங்களாவிலிருந்து ஒருநாள் விடியற்காலையில் ஐம்பது சத்தியாக்கிரகிகள் கொண்ட ஒரு படை கால்கடையாக யாத்திரை புறப்பட்டது.

விடு கதைகள்

கோணக் கோணப் புளியங்காய்
கொங்கு நாட்டுப் புளியங்காய்
உங்கள் நாட்டில் இருந்து
எங்கள் நாட்டுக்கு வருவது. (81)

ஓகோ மரமே உயர்ந்த மரமே
ஒருபிடி இலைக்குக் கதியற்ற மரமே. (82)

— என். ஜயபாலன்

மண்ணுக்குள் இருக்கிற மாயாண்டி
உரிக்க உரிக்கத் தோலாண்டி. (83)

ஓரகப்பை மாவு; ஊருக்கெல்லாம் தோசை. 84

— புத்தனேரி ரா. சுப்பிரமணியன்

தகதக தங்கம் போலே
தாமரை மொட்டுப் போலே
இந்திரன் எழுத்துப் போலே
ராவணன் சாட்டை போலே (85)
வண்ணன் வெளுக்காத வெள்ளை
மழை பெய்யாத தண்ணீர்
குயவன் பண்ணுத பாண்டம். (86)

— ஆனந்தா, பவானிப்பூர்

வெள்ளி ரூபா துள்ளி விழும். (87)
மலைமேலே ஏறினேன், மடிபழம் பறிச்சேன்
ஒருபழம் தின்றேன் திக்குமுக்கல் ஆடுது. (88)

— கா. தே. சங்கரன்

தாய் தெருவிலே, மகள் குகையிலே. (89)
கடித்தால் கடிபடாது, பிடித்தால்
பிடிபடாது. (90)

— எல். இராமநாதன்

டேரா கிழிந்து போனால் தைக்கமுடியாது
ராஜாத்தி ஓடிப்போனால் பிடிக்கமுடியாது
ரோஜாப்பூ உதிர்ந்துபோனால் பொறுக்க
முடியாது. (91)

தச்சன் செதுக்காத மரம் என்ன மரம்? (92)

— ஐ. பி. பத்மநாபன், ஈரோடு

சிமிழும் சிமிழும் சேர்ந்தாற் போல்
சிறுபெண் கொண்டை முடித்தாற் போல்
மேலே மஞ்சள் குளித்தாற் போல்
உள்ளே முத்துப் புதைத்தாற் போல். (93)
குத்துக் குருவிக்கு முழம் வால். (94)

—நா. வேங்கடன், ச. கேசவன்

ஆடு மேயுது, தோல் காயுது. (95)
அத்துவான ஆலங் காட்டிலே
வித்துவான் குடை பிடிக்கிறான். (96)

— ஆர். ரகுநாதன்

தட்டை தின்னும் தாள் தின்னும்
என் செவலைக் காளை
தண்ணீர் பட்டால் இறந்துவிடும்
என் செவலைக் காளை. (97)

சுத்துவானும் பயல் செடியைச்
சுடானும் பயல் பூவைத்
தின்பானும் பயல் காயைத்
தின்டானும் பயல் பழத்தை. (98)

— எஸ். ஜகந்நாதன்

[விடைகள் : 304-ஆம் பக்கம் பார்க்க.]

ஆண்டாள்

எம். ராதாகிருஷ்ண பிள்ளை (சென்னை மேயர்)

1

நம் பரதகண்டத்து நாச்சியார் பெருமாட்டிகளுள் ஆண்டாள் கவியரசியாகவும், கடவுளன் புடையளாகவும் ஒப்புயர்வற்று விளங்கினுள். இறைவனிடம் அன்பு பூண்டொழுகி அவன் திருவடிகளே அடைந்த பெருமாட்டிகள் பலரே எனினும் அவருள சிலரே ஆண்டாள் போன்று தம் ஆனந்த பரவச உணர்ச்சியைக் கேட்டார் உள்ளத்தை அள்ளிக்கொள்ளும் செறிவு மிக்க இனிய பாசுரங்களில் பாடி வைத்தவர். என்றும் அழிவிலதாய் நிலவும் திருப்பாவை ஆண்டாள் பாடியது. தான் அநுபவித்ததை எங்ஙனம் இனிமையாகவும் தெளிவாகவும் உணர்த்த வல்லவள் ஆண்டாள் என்பதை உணர விரும்பும் ஒருவர், அந்தத் திருப்பாவையைத் தாமாகப் படித்துப் பார்த்தல் வேண்டும். திருப்பாவை, முப்பது பாசுரங்களாலாகிய ஒரு பாமாலை. அஃது உபநிஷத்துக்களால் அறியக் கிடக்கும் உயர்ந்த உண்மைகளையும், சமயங்கள் எல்லாவற்றிலுமுள்ள அரிய முடிபையும் தன்னகத்தே பொதிந்து வைத்துத் திகழ்கின்றது.

பெரியாழ்வார் என்று பிரசித்தி பெற்று விளங்கும் ஸ்ரீ விஷ்ணுசித்தரே ஆண்டாளுடைய தந்தையார். 'இறைவனுக்கும் வாழ்த்துக் கூறுவதாகிய மங்களாசாசனம் செய்யும் தகுதியைக் கடவுளன்பு நிறைந்த ஒருவர் அடைகிறார்' என்ற வழக்கினை, இறைவனுக்குப் பல்லாண்டு பாடி நிறுவிய பெரியார் பெரியாழ்வார். ஒரு நன்னாள் காலையில் பெரியாழ்வார் தம் பூந்தோட்டத்தில் பூப் பறித்துக்கொண்டிருந்தார். அதுபோழ்து ஆண்டிருந்ததொரு துளசி வனத்தில் ஒரு குழந்தை தென்பட்டது. ஆழ்வார் உடனே அதனைப் பரிந்தெடுத்துக் கொண்டு வீடு சென்று, அதற்குக் கோதை என்னும் பெயர் சூட்டினர். அழகே திரண்டு ஒருருவெடுத்து வந்தாலொத்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த கோதை, இறைவனிடம் ஆழ்ந்த அன்பு பூண்டொழுகினுள். பெரியாழ்வார் இறைவனுக்கு மாலை தொடுத்துத் தருவது வழக்கம். அந்தப் பணியில் கோதையும் தந்தையோடு ஈடுபட்டாள். தன் உரிமைத் தலைவனுகிய அகிலலோக நாயகனுக்கு மாலைகள் பொருத்தமாக இருக்கின்றனவா என்பதை அறிய விரும்பும் கோதை, அவற்றை இறைவனுக்குச் சூட்டத் தந்தை எடுத்துச் செல்வதற்கு முன், தான் சூடிக் கொண்டு அழகு பார்ப்பது வழக்கம். ஒரு நாள் பெரியாழ்வார் இறைவனுக்குரிய மாலைகளைக் கோதை அணிந்து மகிழ்ந்ததைப் பார்த்தார். பார்த்ததும், அந்தச் செயல் பக்தி சாரமாயிற்றே என்று கருதினர், குணமென்றும் குன்றேறி நின்ற பெரியாழ்வார்; கோதையைச் சிறிதே கடிந்துரைத்து அம் மாலைகளை விடுத்துப் புது மாலைகளைத் தொடுத்துக்கொண்டு கோயிலுக்குச் சென்றார். சர்வேசுவரன் அன்று சந்தோஷமாகவும் அழகாகவும் தோன்றினனில்லை. அன்றிரவு எம்பெருமான் ஆழ்வார் கனவில் எழுந்தருளிக் கோதை சூடிய மாலைகளே தனக்கு மிக விருப்பமானவை என்றும், அதுமுதல் அவள் சூடிக்கொடுத்த மாலைகளையே தனக்குக் கொண்டுவந்து சூட்டவேண்டும் என்றும் பணித்தருளினன். கோதை, அதன் பிறகு, சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்று வழங்கப் பெற்றாள். சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாள் மிக உரிமையோடு மாலைகளை முதலில் தான் அணிந்து அழகு பார்த்து மகிழ்ந்து பின்னர் இறைவனுக்குச் சூட்டி மகிழ்வுற்றுவந்தாள்.

கோதை மனிதருள் எவரையும் மணப்பதில்லை என்று தீர்மானித்தாள். இறைவனுக்கே தான் நாயகியாக வேண்டுமென விரும்பினாள்:

"அவரைப்பிராயம் தொடங்கி என்றும்
ஆதரித் தெழுந்தளன் தடமுலைகள்
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்
தொழுது வைத்தேன்"

என்பது கோதை வாக்கு.

கோதை கொண்ட நீர்மானம் ஆழ்வாரைத் திகைக்கச் செய்தது. இன்னது செய்வதென்று அவருக்குத் தோன்றவில்லை. ஆனால் சின்னஞ்சிறுகளுக்குள் ஆண்டாளைத் தனக்கு மணம் செய்து தருமாறு ஆழ்வார் இசைவு கேட்டு வரும்படி திருவரங்கத்தே கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருவரங்கநாதப் பெருமான், பெரியோர் சிலரைத் தூதாக அனுப்பினான். கோதை மணக்கோலத்தோடு கோயிலை அடைந்தாள். அரங்கநாதன் சந்நிதியில் நின்று அவனழகிலும் குணத்திலும் கண்ணும் கருத்தும் ஒன்றுபட்டுச் சற்று நேரத்திற்குள் அவள் மாய மாய் மறைந்து போனாள். அது கண்டவரும் அவள் இறைவனோடு இரண்டறக் கலந்தாள் என்று கருதினர்.

2

திருப்பாவை மிகச் சிறந்ததோர் இன்னிசைப் பாமாலை. தமிழ் நூல்களுள் அஃது ஒப்புயர்வற்ற நூலாக மதிக்கப்படுகிறது. அதிலுள்ள ஒவ்வொரு பாசுரமும் 'எம்பாவாய்' என்றமுடிவதால், திருப்பாவை என்ற காரணப் பெயரை அது பெற்றுள்ளது. மணமாகாத நங்கையர்களால் கோற்கப்பட்டு வந்த காத்தியாயினி விரதமென்ற அதனால் விளங்குகின்றது. மணமாகாத நங்கையர்கள் வைகறையில் எழுந்து ஆற்றுக்குச் சென்று நீராடுவார்கள்; நீராடி முடிந்தும் களிமண்ணால் காத்தியாயினி உருவம் ஒன்று செய்து, நீர்த்துறையில் வைத்து, அலங்காரம் முதலியன செய்து போற்றுவார்கள். இந்த நோன்பு கோற்பதனால் நங்கைமார் தாங்கள் விரும்பும் நம்பிமாரையே நாயகர்களாகப் பெற, அம்பிகை துணை புரிவாள் என்று கருதினார்கள். தான் ஸ்ரீ கிருஷ்ணனையே மணவாளனாகப் பெற வேண்டும் என்ற கருத்தோடு கோதை இந்த நோன்பு நோற்றாள்; அவ்வாறு நோற்கையில் தான் முன்னைய யுகமாய துவாபர யுகத்தில் வாழ்வதாகப் பாவனை கொண்டாள். அதற்கேற்ப ஸ்ரீவில்லிபுத்தூர் கோகுலமாயிற்று. ஆலிலையில் பள்ளி கொண்டோன் கோயில், நந்தகோபன் வீடாகக் காட்சி அளித்தது. ஆலிலையில் துயின்றோன் ஸ்ரீ கிருஷ்ணனாக விளங்கினான். ஆண்டாளும் ஒரு கோபிகையாக விளங்கினாள்.

திருப்பாவை முழுவதும் உள்ளுறை பொருள் நிறைந்தது என்பர் அறிவுடையோர். 'மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாட் காலையில் நீராடப் போதும் நேரிழையீர், நீங்கள் உங்கள் துயில் நீத்து எழுந்து வாருங்கள்' என்று ஆண்டாள் நங்கையர்களை விளிக்கும் கூற்றுடன் திருப்பாவை தொடங்குகின்றது. 'அறியாமையாகிய துயிலில் ஆழ்ந்து கிடக்கும் உலகோரை ஆண்டாள் எழுப்புகிறாள்' என்று உள்ளுறை கூறுவர் ஆன்றோர். அடுத்த பாசுரத்தில் நோன்புக்குரிய பலவகையான கிரியைகளை ஆண்டாள் விளக்கிக் கூறுகிறாள்; நங்கையர் ஞாயிறு எழுவதற்கு முன்னராகவே அதிகாலையில் எழவேண்டும். எழுந்தவுடன் பாற்கடலுள் பள்ளிகொள்ளும் பரமனுடைய நாராயணனுடைய அடிகளைப் புகழ்ந்து பாடுதல் வேண்டும். நடையுடை பாவனைகளில் உறுதியும் ஒழுங்கும் கடைப்பிடித்தல் வேண்டும். நெய், பால் முதலிய கொழுவிய உணவுகளை உண்ணுதல் கூடாது. கண்ணிற்கு மையெழுதுதல் முதலிய அலங்காரங்களை நீக்குதல் வேண்டும். கூந்தலில் பூச்சூட்டுதலும் ஆகாது. மேலோர், செய்யத் தகாதன எனக் கூறி நீக்கிய அமங்கலமான செயல்களை விடுதல் வேண்டும், குறளை, பொய், இன்னுரை, கடுஞ்சொல் பேசுதல் ஆகாது. தக்கார்க்கு தானமும், வறியார்க்குப் பிச்சையும் வாரி வாரி வழங்குதல் வேண்டும். 'இந்தக் கிரியைகளை எல்லாம் மேற்கொண்டு நோன்பு நோற்றால் மாதம் மும்மாரி பெய்யும்; குறைவிலாத நிறைவுடைய நல்விளைவு உண்டாகும்; பசுக்கள் குடம் குடமாகப் பால் தரும்; நாட்டில் பழி பாவங்களாகிய தீமைகளெல்லாம் தீயிலிட்ட பஞ்சுபோல் அடியோடு கெட்டொழியும்' என்று ஆண்டாள் அடுத்து வரும் பாசுரங்களில் நன்கு புலப்படுத்துகின்றாள்.

நோன்பு நோற்றலால் உண்டாகும் பல வகைப் பயன்களையும் புலப்படுத்தியபின்னர், வீடு வீடாகச் சென்று கதவைத் தட்டி நங்கையர்களைத் துயில் உணர்த்தி, நீர்த்துறைக்கு வருமாறு ஆண்டாள் அழைக்கிறாள். சோம்பித் துயில்கொண்டிருப்போரைப் பார்த்து, விரைந்தெழுந்து வாராமை எவ்வளவு தவறு என்று பல வழிகளால் அவள் எடுத்துக் காட்டுகிறாள். கிழக்கு வெளுத்தது. கோழிகள் கூவின. மற்றப் பறவைகளும் பாடிக் களிக்கின்றன. பறவைகளுக்கு அரசனுகிய கருடன் கோயிலில் வெண்சங்கு முழங்கி, யாவரையும் அழைக்கின்றது. எம்பெருமானை உள்ளத்து வைத்துத் துயின்ற முனிவர்களும் யோகிகளும் அவன் அசையாதபடி மெள்ள எழுந்து 'ஹரி ஹரி' என்று துதிக்கும் பேரொலி எங்கும் எதிரொலி செய்கிறது. ஆய்ச்சியர்கள் மத்தினால் வெண்ணெய் எடுத்தற் பொருட்டுத் தயிர் கடைய, அவர்கள் தங்கள் கைகளில் அணிந்துள்ள வளையல்களும், கழுத்தில் அணிந்துள்ள அச்சுத் தாலியாகிய காசும், ஆமைத் தாலியாகிய பிறப்பும் கலகல வென்று சப்தித்து இனிய ஓசையை எழுப்புகின்றன. எருமைகள் மேய்தற்பொருட்டுப் புல் நிறைந்த தோட்டங்களுள் சென்று புகுகின்றன. இவற்றை யெல்லாம் நங்கையர்களுக்குக் கூறி ஆண்டாள் அவர்களை நீராடுதற்கு விரைந்து வருமாறு கூவி அழைக்கிறாள்.

சில பெண்கள் கதவுகளையும் பலகணிகளையும் இறுக மூடிக்கொண்டு உறங்குகின்றனர். அதிகாலையில் எழுந்திருக்க அவர்களுக்கு மனம் வரவில்லை. அவர்களை நோக்கி, "நங்கைகீர், எங்கள் தலையில் பனிவீழ, எங்கள் உடம்பின் மீது சில்லென்று காற்று வீச, நாங்கள் எல்லோரும் உங்கள் வாயிலில் வந்து நின்று எம்பெருமானைப் பாடவும், இரக்கம் சிறிதுமில்லாமல் உறங்கிக் கொண்டிருக்கின்றீர்களே? இது தருமமா குமா? தயை கூர்ந்து எழுந்து வாருங்கள்" என்று வேடிக்கை காட்டி அவர்களுடைய இரக்க உணர்ச்சியைத் தூண்டி, எழுந்து வருமாறு ஆண்டாள் அந் நங்கையரை எழுப்பும் திறம் மிகவும் பாராட்டற்குரியது.

நகைச் சுவைக்குப் பிறப்பிடமான ஓர் இடம் திருப்பாவையில் மிக்க வியப்பை உண்டுபண்ணுகிறது. ஒருத்தி ஆழ்ந்த தூக்கத்தில் அமுந்திக் கிடக்கிறாள். எழுப்புகிற ஒலி கேட்டும் எழுந்துவர அவளுக்கு மனம் வரவில்லை. அவளை நோக்கி, "நோன்பு நோற்று அரிதிற் பெற்ற தூக்கம் என்னும் பிரம்மானந்தத்தில் ஆழ்ந்து கிடக்கும் நங்காய், முன் ஒரு காலத்தில் தூக்கத்தில் தனக்கு இணையில்லை என்று செருக்குக் கொண்டிருந்த கும்பகர்ணனும் உன்னிடம் தோல்வியடைந்து உனக்குத் தன் தூக்கத்தைத் திறையாகக் கொடுத்துச் சூற்றத்தின் வாயில்பட்டு ஒழிந்து போனானே?" என்று ஆண்டாள் கூறுகிறாள். அடுத்து வரும் சில பாசுரங்களில் ஆண்டாள் தன் ஆயத்தோடு நந்தகோபன் மாளிகைக்குப் போவதும், கண்ணனையும் நப்பின்னைப் பிராட்டியையும் எழுப்புவதும் குறிக்கப் பெறுகின்றன. நப்பின்னையைக் கூவிக் கண்ணனை எழுப்புமாறு ஆண்டாள் இரந்து வேண்டுகிறாள். பின்னர்க் கண்ணனையே கூவி நீராட வருமாறு துயில் உணர்த்துகின்றாள்.

ஆண்டாள் இறைவனோடு இரண்டறக் கலத்தலைத் தெரிவித்தலோடு திருப்பாவை முடிவு பெறுகிறது.

3

திருப்பாவையில் குறித்த காத்தியாயினி நோன்பு போன்று, காமதேவனைக் குறித்து நோற்கும் நோன்பொன்றை நாச்சியார் திருமொழி முதற் பதிகத்தில் ஆண்டாள் கூறுகின்றாள். மணமாகாத இளமங்கையர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்றவர்களைத் தங்களுக்கு மணவாளர்களாக அருள்புரிதல் வேண்டுமென்று தை மாதத்தில் காமதேவனைக் குறித்து நோன்பு நோற்பது வழக்கம். இந்த நோன்பு அதிகாலையில் நோற்கப்படுவதென்பது, "வெள் வரைப்பதன் முன்னந் துறை படிந்து" என்ற ஆண்டாள் அருள் வாக்கால் விளங்கும். 'வரை வெளுப்பதன் முன் துறைபடிந்து' என்று மாற்றி உதயகிரி ஞாயிறு உதயமாவதால் வெளுப்பதற்கு முன் நீர்த்துறையில் மூழ்கி என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். எறும்பு முதலியனவே அன்றி முள்ளும் இல்லாத சுள்ளிகளை நெருப்பிலிட்டுக் காமதேவனது நோன்பு நோற்றல் வழக்கம். வீடுகளெல்லாம் முதல் முதல் கழுவி மெழுகித் தூயனவாக்கப்படும். தரை கோலங்களால் அழகு செய்யப்படும். அறைகளெல்லாம் தோரணங்கள் முதலியவற்றால் அலங்காரம் பெறும். ஓம விறகுகளால் ஓமத்தீ ஓங்கி எரியும். நங்கையர்கள் தாங்கள் விரும்பும் காதலர்கள் பெயரை ஓலித் துணுக்குக்களில் எழுதித் தேவன் முன் வைத்துப் பிரார்த்தனை செய்வார்கள். இறைவனை அன்றி மற்ற எவரையும் தான் மணம் செய்துகொள்ள முடியாது என்று ஆண்டாள் மன்மதனிடம் முறையிடுகிறாள்.

"ஊனிடை ஆழிசங் குத்தமற் கென்று
உன்னித் தெழுந்த என் தடமுலைகள்
மானிட வர்க்கென்று பேச்சுப் படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே"

என்பது நாச்சியார் திருமொழி.

ஆண்டாள் இறைவனோடு ஒன்றுபட்டதாகத் தான் கண்ட கனவொன்றை விவரிக்கின்றாள்.

"மைத்துனன் நம்பி
மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக்
கனாக்கண்டேன் தோழி நான்!"

என்பது நாச்சியார் திருமொழி. மண விழாவிற்கு வந்திருந்த பெருங் கூட்டத்தினர்க்கு முன்னால், நாராயணன், முத்துமாலை வரிசை தாழ்ந்த பந்தற்கீழ் வந்து, தன் கையைப் பற்றிக்கொண்டு தீயை வலம் செய்ததாக ஆண்டாள் கனவு கண்டு கூறுகின்றாள். மேலும், 'அந்தரி' என்கிற நாத்தானார் (நாத்தனார்) வந்து தனக்குக் கோடி உடுத்தல், பார்ப்பனர் வேத மந்திரங்கள் ஓதிக் காப்பு நாண் கட்டுவித்தல், நம்பி வந்து தன் கைத்தலம் பற்றல், தீ வலம் செயல், அம்மி மிதித்தல், பொரி முகந்து அட்டல், மஞ்சனம் ஆடல் முதலிய மணச்சடங்குகளெல்லாம் கனவில் கண்டதாக ஆண்டாள் குறிப்பிடுகின்றாள். பின்னர், ஆண்டாள் அரங்கநாதப் பெருமானோடு இரண்டறக் கலந்ததை நோக்குமிடத்து அவள் கண்ட கனவு உண்மையாயிற்று என்று விளங்குகிறது.

மற்றொரு பதிகத்தில் ஆண்டாள் இறைவன் ஏந்தியுள்ள பாஞ்சசன்னியம் என்னும் வெண் சங்கை நோக்கி, அவ்விறைவனுடைய வாயூறலின் சுவையும், அவ்வாய் வழியே சங்கு ஊதுங்கால் வரும் சுவாசத்தின் நறுமணமும் யாங்ஙனம் இருக்கும் என்பதை அறிய விரும்புவாளாய்,

"கருப்பூரம் நாறுமோ?
கமலப் பூ நாறுமோ?

திருப்பவளச் செவ்வாய்தான்
தித்தித் திருக்குமோ?"

என்று கேட்கின்றாள்.

இறைவனுடைய கல்யாண குணங்களில் ஆழ்ந்த அன்புடையளா யிருந்ததோடு கவி யரசியாகவும் ஆண்டாள் இருந்தபடியால் அவளுடைய காதற் பெருக்கை அவள் தான் இயற்றிய நூல்களில் நன்கு விளங்குமாறு வெளிப்படுத்தி யுள்ளாள். ஆழ்வார்களுள் பலர் இறைவனிடம் தாங்கள் கொண்டுள்ள அன்பைக் காட்டுவதற்குத் தங்களை நாயகி யர்களாகப் பாவிக்கவேண்டி இருக்க, ஆண் டாளோ தான் செய்த தவத்தின் பயனால் சிறந்த பெண் பிறப்புப் பெற்றமையால் அவ்வாறு பாவனை செய்ய வேண்டாது இயற்கையாகவே நாயகியாக நின்று தன் காதலை மிக எளிதாகக் காட்டிவிட்டாள். தன்னை யொத்த ஒருத்தியின் இயற்கை அமைதித் தன்மைக்கு மாறலேறுதல் முரண னது என்பதை உணர்ந்த ஆண்டாள், மாற லேறுவதாகச் சொல்லவில்லை. தமிழ் இலக் கியங்கள் பெண்டிர் மாறலேறுதலையே அது மதிக்கவில்லை. இறைவனிடத்தில் ஆண் டாள் கொண்ட ஈடுபாடு இத்தகையது என்று அறுதியிட்டுக் கூறும் இயல்பினது அன்று. எனவே, பிற்காலத்து நுண்ணுணர் வுடையாரெல்லாம் அவளை, "ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சும் தன்மையாள்" எனக் கூறுவாராயினர்.

விண்ணில் முகில்கள் போவதை ஆண் டாள் உற்று நோக்குகிறாள். அவை, தான் இறைவனிடம் தூது அனுப்பு தற்கு உதவியாகும் என்று அவள் நினைக்கி றாள். அவற்றை விரைந்து சென்று திரு வேங்கட மலையில் கோயில் கொண்டெழுந் தருளியுள்ள இறைவனிடம், தான் அவனை நினைந்து உருகுமாற்றைத் தெரிவிக்குமாறு வேண்டுகின்றாள். ஒரு குயிலைப் பார்க்கின் றாள். குயில் இனிமையாகப் பாடிக்கொண் டிருக்கிறது. அதை நோக்கித் தன்னிடம் இரக்கங்கொண்டு தான் இருக்கும் இடத் திற்கு இறைவன் வருமாறு கூவுவது அதற் குத் தருமமாகும் என்று அவள் சொல்லி வேண்டுகின்றாள்.

ஆண்டாள் பாசுரங்கள் கடவுட் காதல் நிலைந்து பொலிகின்றன. இறைவனோடு ஒன்றுபடுதற்கு ஒருயிர் எங்ஙனம் பிரிவு கொள்ளும் என்பதை அந்தப் பாசுரங்கள் உள்ளங்கை நெல்லிக்கனி எனக் காட்டுகின் றன. ஆண்டாள்களாகவோ ஆழ்வார்க ளாகவோ ஆவது நம்மனோரால் முடியாத செயல். ஆனால் கோடிக் கணக்கான மக்க ளின் உள்ளத்தைக் கவரும் இந்தக் கடவுட் காதலுடையவர்களின் தூய வாழ்க்கையி லிருந்து ஒரு பகுதியை நாம் கடைப்பிடிக்க லாம். ஆண்டாள் வழியை மீராபாய் பின் பற்றினாள். கோதையே போல் மீராபாயும் கண்ணனைக் காதலித்தாள். மீராபாயினை வட இந்திய ஆண்டாள் என வழங்கலாம்.

சூரியனது பெருமை

"பெரிது பெரிது புவனம் பெரிது" என்று ஔவைப் பாட்டி பாடியதா கக் கதை சொல்வார்கள். இந்தப் பூமியின் விட்ட அளவு 7,920 மைல் கள். இந்தப் பூமியைக் காட்டிலும் நூறு மடங்குக்கு மேல் பெரியது சூரியனுடைய விட்ட அளவு. பிரம்ம தேவன் புதியதாக எல்லாச் சிருஷ்டி களையும் செய்கிறானென்று வைத்துக் கொள்வோம். இந்தப் பூவுலகத்தை உருட்டித் திரட்ட அவனுக்கு ஒரு மணி ஆகிறதாக நினைத்துக்கொள் வோம். அவ்வளவு சக்தியுடைய நான் முகன் சூரியனை அதே திறமையுடன் படைத்தால் - தினம் 24 மணி நேர மும் உண்ணமல் உறங்காமல் படைத் தால் - 150 வருஷங்களுக்கு மேல் ஆகும்! பூமியைவிடச் சூரியன் 332,000 மடங்கு பெரியது.

சூரியன் அளிக்கும் ஒளியும் அதன் உஷ்ணமும் மிகவும் அதிகமானவை. அதன் உஷ்ணத்தை ஏதோ ஒருவித மாகக் கணக்கெடுத்துப் பார்த்தால் 12,000 டிகிரி வரும் என்று விஞ்ஞா னிகள் சொல்லுகிறார்கள். பூமியி லிருந்து சூரியன் வரைக்கும் பனிக் கட்டி உறைந்து கிடக்கிறதாக இருந்து, 2½ மைல் தூரம் விட்ட அள வுள்ள பரப்பில் உறைந்திருந்தது. சூரியனுடைய உஷ்ணம் அவ்வளவை யும் அதன்மேல் பிரயோகம் செய்ய முடியுமானால் 93,000,000 மைல் உயரத்துக்கு மேல் உறைந்து கிடக் கும் அந்தப் பனிக்கட்டி ஒரு ஸெகண் டில் - ஆம், நாம் இமைகொட்டி விழிப் பதற்குள் உருகிவிடும். இன்னும் எட்டு ஸெகண்டுகள் பொறுத்திரு தால் அத்தனையும் ஆவியாக மாறி விடும்! சூரியன் எவ்வளவு பெரிய வன்! எவ்வளவு சக்தி உடையவன்!

நிலவு

ஜே.எஸ்.மணி

(சென்ற இதழ் 214-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆள் அரவமும், இதற்கு முன் கேட்காத பேச்சுக்குரலும் கேட்டு, அருகில் இருக்கும் புதர்களிலிருந்து சின்னஞ் சிறு மூயற் குட்டிகளும், காட்டுப்பூனைகளும் அவ்வப்போது குறுக்கும் நெடுக்குமாகப் பயந்துகொண்டு ஓடும். எப்போதாவது மருண்டு போன புள்ளிமான் ஒன்று, குறுக்கே பாய்ந்து, காற்றெனக் கடுகி ஓடி, புதர் இடுக்கில் பதுங்கி மறையும். அடர்ந்திருக்கும் புதர்கள் அடிக்கடி அசங்கி ஆடிச் சலசலத்து நிற்கும். காய்ந்து உதிர்ந்து கிடந்த சருகுகளின் சலசலப்பு அடிக்கடி கேட்டுக்கொண்டே இருக்கும். நடுநடுவே திடுக் திடுக் என்று அணில்கள் குறுக்கே குதித்தோடும். சரசரவென்று சர்ப்பங்கள் நகர்ந்து கூணநேரத்தில் மின்னென மறையும்.

இருந்தாற்போலிருந்து 'வீர், வீர்' என்று விருகுகளுக்கு மேலே பறவைக் கூட்ட மொன்று ஒரே சமயத்தில் பறந்து அமரும்; அவற்றிடமிருந்து ஏககாலத்தில் ஒரே அமர்க்கள மான் கூச்சல் கிளம்பி ஓயும். அப்போதெல் லாம் திடுக்கிட்டுப் பேய் ஓடிச் சென்று, சிறிது பின்னல் வரும் கிருஷ்ணனைப் பயந்தபடி கட்டிக் கொள்வாள். பயம் தெளிந்த பின்னர் யதாப்பிர காரமே ஓடி விளையாடுவாள். வழியில் கிடக்கும் கிழங்கு பழவகைகளை அவ்வப்போது தின்றுகொண்டே அவர்கள் வெகுதூரம் போய் விட்டனர். அந்த வனப்பிரதேசம் வரவர இன்னும் அடர்த்தியாகி, மேலும் மேலும் இருண்டு கொண்டே வரத் தொடங்கியது.

சூரியன் உச்சிப்பொழுதை அடைந்தவிட்ட போதிலும், அப்போது அவர்கள் போய்க்கொண் டிருந்த பிரதேசம், அதிக வெளிச்சம் இல்லா மல் இருள் அடைந்து காணப்பட்டது. மாலை நேரத்தின் மங்கிய ஒளியே எங்கும் பாவிக் கிடந்தது.

சுற்றிலும் காலுபுறமும் நிலவியிருந்த பயங்கர மான அமைதியினூடே, சிறிது நேரமாக, விடாத பேரிரைச்சல் ஒன்று, ஹோவென்று கேட்டுக் கொண்டே இருப்பதைக் கவனித்தாள் பரமா. அவர்கள் முன் செல்லச் செல்ல, அவ்வொலி பேரொலியாக மாறி வருவதையும் கவனித்த வளாய், பயத்துடன் திரும்பிக் கணவனை நோக் கினாள்.

கிருஷ்ணன் வாய் திறவாமல் சிரித்துவிட்டு, அவளை முன்னேகிச் செல்லும்படியாக ஜாடை செய்தான். அவளும் தொடர்ந்தாள். இருவரும் போனார்கள். சிறிது தூரத்திலே நீர்வீழ்ச்சி ஒன்று தென்பட்டது. சுமார் பத்து அடி உயரத்தி லிருந்து, கீழே ஒரு பெரும் குட்டைபோல இருந்த பெரிய பள்ளத்தில் விழுந்து, அதிலிருந்து பொங்கி வழிந்து, பாறைகளின் மேலும் கீழும், இண்டி லும் இடுக்கிலுமாக உருண்டு ஓடிக்கொண்டிருந் தது.

எந்த இடத்திலிருந்து, அது எவ்விதம் வருகிற தென்பதைக் கண்டுபிடிக்கமுடியாமல் இருந்தது. செங்குத்தாக நின்ற ஒரு பெரும்பாறையிலிருந்து, அது வேகமாக வழிந்தோடி வீழ்ந்துகொண்டிருந் தது. பாறைக்கு அப்பால் குகைத் துவாரம் போன்ற ஓர் இருளடைந்த இடுக்கைத் தவிர வேறொன்றும் காணப்படவில்லை. ஒருகால் அவ் விடுக்கினூடேதான் வருகிறதோ? அப்பால்.. அப்பால்...அப்பாலிருந்து?....

அந்த இடத்தில் சூரிய வெளிச்சம் நன்றாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. மேலே விரிந்து கிடந்த வானவெளியைப் பார்க்க முடிந்தது. பரமா புதிதாக உலகத்தைப் பார்க்கும் சிறு குழந் தையைப் போலே, குதூகலத்தால் குதித் தாள். இங்கும் அங்கும், நாலு புறமும் ஓடி ஓடிப் பார்த்தாள். கைகள் இரண்டையும் வேடிக்கையா கக் கொட்டிச் சிரித்தாள். மானைப்போலத் துள்ளி விளையாடினாள். நீர்வீழ்ச்சி மறபடியும் அருவி யாக மாறி ஓடும் இடத்திற்குச் சென்று, அருகில் இருந்த பாறை ஒன்றின்மீது அமர்ந்துகொண்டு ஜலத்தில் கால்களை விட்டு ஆனந்தமாகத் தழுவி னாள். மறபடியும் எழுந்து இங்குமங்கும் ஓடி வேடிக்கை பார்த்தாள்.

திடீரென்று ஓர் இடத்தில் நின்று, ஆச்சரியத் தினால், "அடே! இதென்ன!" என்று கூவினாள். அவள் நின்ற இடத்திலே, தலைக்கு மேல்ராக ஒரு பெரும் பாறை முன்புறமாக நீண்டு குடை போல வளைந்திருந்தது. கீழே, வேண்டுமென்றே குடையப்பட்டது போலே, மேல உட் புறம் கொஞ்ச தூரத்திற்கு உள்ளடங்கி நின்றது. இரு புறமும் சுவர்போல் முன்னே தூருத்திக்கொண் டிருந்த பாறைகள் இரு பக்கங்களுக்கும் அணை

வரக நின்றதுடன், பிலத்வாரத்தைப் போலே, உள் நுழைய வாசலேயும் இயற்கையாக அமைத்துக் கொடுத்திருந்தன. பொதுவாக, அது குகையைப்போலுமல்லாமல் பர்ணசாலையென்றைப் போலுமல்லாமல் இரண்டுங்கெட்டானதொரு நடு நிலைமை வகித்து நின்றது. இடிந்து போன ஒரு சிறிய கோவிலின் வரசற்படியை ஒத்திருந்தது அந்த இடம். மற்ற இடங்களைவிடச் சிறிது மேட்டுப்பாங்கான ஸ்தானமாக இருந்தது. காற்றுக்கும் வெயிலுக்கும் மழைக்கும் அணைவான இடமாக இருந்தது. உட்புறம் இரண்டு பேர் தாராளமாகப் புழங்கக் கூடியதாக இருந்தது.

"இதுவும் தெய்வாதீனகூடன்தான்! நாம் இதில் தங்கலாம்போல இருக்கிறதே, இங்கு இருக்கும் வரையில்!" என்றாள் பாமா, கிருஷ்ணனை நோக்கிச் சிரித்தபடி. இரும்புவும் சுற்று முற்றும் பார்த்தவளாய், "என், நாம் இங்கேயே தங்கிவிடலாம் என்றுதான் தோன்றுகிறது. நல்ல காற்றோட்டமாயும் வெளிச்சமாயும் இருக்கிறது. அதோ, அதுதான் ஸ்நான கட்டம்!" என்றாள் சிரித்தபடியே.

மறுபடியும் கிருஷ்ணன் நின்ற பக்கம் தன் பார்வையைச் சுழற்றியபடியே, கயல்விழிகளில் குறும்பும் போக்கிரித்தனமும் கூத்தாட, "அதுவும் உங்களைப்போல ஞானியாக விரும்புகிறவர்களுக்கு ஏற்ற ஏகாந்தமான இடந்தான் இது. இதையெல்லாம் பார்த்தால் எனக்குக் கூட ஞானியாகி, ஞானவாழ்க்கை நடத்தலாமா என்கிற ஆசை உண்டாகிறது" என்றாள் முல்லை நகையுடன்.

திரும்பவும் தனக்கு எதிரில் நின்ற அந்தச் சிறிய வீட்டை ஒரு முறை மேலெழுந்தவாரியாகப் பார்வையிட்டுக்கொண்டே, "இந்த வாசலை வேண்டும்போது அடைக்கவும், மறுபடியும் திறக்கவும் ஒரு கதவு மட்டும் இருந்துவிட்டால்...இதைப் போன்ற சுகமான வாசஸ்தலம் இந்த ஈரேழு லோகங்களில் தேடினாலும் கிடைக்காது" என்றாள்.

அப்படிச் சொல்லிவிட்டுச் சில நிமிஷங்கள் மௌனமாக யோசனையில் ஆழ்ந்தவள், மீண்டும் கிருஷ்ணனை நோக்கினாள். "இயற்கை நமக்கென்றுதான் இத்தனை தூரம் இவ்வளவும் அமைத்துக் கொடுத்திருக்கிறதே? இதற்கு ஒரு கதவை மட்டும் நாமே செய்துகொண்டால்?...வாருங்கள், கிடைக்கும் தழை, சருகு, நார், குச்சிகள் இவற்றை வைத்துக்கொண்டு நாமே ஒரு சிறிய கதவு.... வாருங்களேன்?" என்று இறங்கி அழைத்தாள்.

இருவரும் சேர்ந்துகொண்டு வெகு சீக்கிரத்திலேயே கூட்டுச் சாக்குகளை வைத்துக்கொண்டு ஒரு சிறிய அழகான கதவைச் செய்து முடித்தார்கள். அதுவும் அந்த வாசஸ்தலத்திற்கு ஏற்ற சரியான கதவாகவே அமைந்துவிட்டது.

பிறகு கிடைத்தமட்டிலும் ஏராளமான கனி வர்க்கங்களையும் கிழங்கு வகைகளையும் சேகரம் செய்து வைத்துக்கொண்டார்கள். பின்னர் ஒடையிலே ஆனந்தமாக ஸ்நானம் செய்தார்கள். பாமா மனங்கொண்டமட்டிலும் நீரில் நீந்தித் விளையாடினாள். அப்புறம் ஆகாரமும் முடிந்தது.

பொழுது சாய்ந்தது. நன்றாக இருட்டிவிட்டால், விளக்கு?

பாமா, மூன்று யோசனையுடன் தயாராய்த் தேடிக் கொண்டுவந்திருந்த சிக்கிமுக்கிக் கற்களினால் சுள்ளி, சருகு, சத்தை இவற்றின் உதவியைக் கொண்டு, வாசஸ்தலத்தின் முன்பாகச் சிறு நெருப்பை மூட்டினாள்.

சருகுகளையும், சுள்ளிகளையும், சிறிய விறகுக் குச்சிகளையும் போடப் போட அச்சிறு நெருப்பு நாலுபுறமும் ஜ்வாலை விட்டு எரியத் தொடங்கியது. அன்றைத்தினம் அந்தி நேரத்திலே பாமாவினால் மூட்டப்பட்ட அந்த அக்கினி, பின்னர் வெகு நாட்கள் வரையில், அதே இடத்தில் அணையாமல் எரிந்துகொண்டே இருந்தது.

"முன் காலத்திலே ரிஷிகளும் ரிஷிபத்தினிகளும் இப்படித்தான் வனந்தரங்களில் ஆஸ்ரமவாயிலில், அக்கினி எழச்செய்து அதில் இந்திராதிதேவர்களுக்கு ஹவிர்ப் பாகத்தை ஆஹுதி செய்துவந்தார்கள், இல்லையா?" என்று வியாபாட்டாகக் கிருஷ்ணனைப் பார்த்து வினவியபடியே எரியும் அக்கினியின் முன் அமர்ந்தாள் பாமா.

"நீங்களும் இப்படி என் அருகில் உட்காருங்களேன்" என்று அன்புடன் கொஞ்சி அவனையும் உட்காரவைத்தாள்.

"இப்போது நீங்கள்தாம் ரிஷி; நான் ரிஷிபத்தினி. இனி நாம் முறையிலிருந்து வழுவாமல் இருக்க எந்தத் தர்மத்தைப் பின்பற்ற வேண்டும்? சொல்லுங்கள், பார்க்கலாம்: உங்களுக்கும் தெரியுமோ என்று?" என்று வேடிக்கையாகப் பேசினாள்.

பேசிக்கொண்டிருக்கும்போதே பாமாவுக்குக் கொட்டாவியாய் வந்தது. வெகு தூரம் நடந்து வந்த அதிர்ச்சியால் எல்லையற்ற சோர்வும் களைப்பும் ஆயாசமும் அடைந்திருந்தாள். அதுவரையில் தெரியாமல், சற்று உட்கார்ந்தவுடன், எல்லாமாகச் சேர்ந்துகொண்டு அவளுடைய மென்மையான சரீரத்திலே தாங்கமுடியாத தளர்ச்சியை ஏற்படுத்திவிட்டது. மீண்டும் கொட்டாவி விட்டுக் கொண்டே, "எனக்குத் தூக்கம் கண்ணைச் சுற்றுகிறது. கொஞ்சம் இப்படியே உங்கள் மடியில் தலையைச் சாய்க்கட்டுமோ?" என்று அவனைக் கடைவிழிகளால் நோக்கியபடியே தலைகுனிந்து வினவினாள். அவன் சம்மதத்தையும் எதிர்பார்க்காமல் உடனே அவன் மடியில் தலைவைத்துப் படுத்துவிட்டாள் பாமா.

கிருஷ்ணன் பிரமையடைந்துபோய் உட்கார்ந்திருப்பவனைப்போலே காணப்பட்டான். 'ஊரை

விட்டு, உறவினரை விட்டு, தெரிந்தவரை விட்டு, இந்த நடுக்காட்டிலே என்னையே நம்பி என்னுடன் தனிமையில் வந்திருக்க இவளுக்கு..' என்ற என்னவெல்லாமோ புரியாத எண்ணங்களெல்லாம் அவனுள்ளத்தின் ஆழத்திலே அலை மோதிக்கொண்டிருந்தனவோ?.....

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் எதிரில் இருந்த அக்கினி அடங்கிவிட்டது. தேய்பிறைச் சந்திரனின் முதல் வட்டம் கீழ் வானத்தில் மெள்ள எட்டிப் பார்த்தது. வெகு தூரத்திலே நரிகள் ஏகமாகச் சேர்ந்து கொண்டு உச்சஸ்தாயியில் ஊளையிடத் தொடங்கின.

குனிந்து பாமாவின் மதிவதனத்தைக் கூர்ந்து நோக்கினான் கிருஷ்ணன். "பாமா, உனக்குப் பயமாயில்லையா?" என்று மெல்லிய குரலில் ஏக்கத்துடன் வினவினான்.

பாமா கண்களை மூடியபடியே, "எனக்கு என்ன பயம்? நீங்கள் பக்கத்தில்..." என்று தூக்கத்தில் குழறினாள்.

இன்னும் சற்றுக் கழித்து, "பாமா, தூங்கிப் போய்விட்டாயா?" என்று மறுபடி கேட்டான்.

பாமா இந்தத் தடவை பதில் சொல்லவில்லை. அவள் ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள்.

4

அவ்விளந்தம்பதிகள், அந்தப் 'புது உலக'த்திலே தங்கள் 'புது வாழ்க்கை'யை இனிது தொடங்கிய பின்னர் நாட்களும் யுகதொருவித மானை மாறுதலும் இல்லாமலே, ஒவ்வொன்றாக வந்து போய்க்கொண்டே இருந்தன.

அதிகாலையிலேயே, சுக்கிரோதயத்திற்கு முன்னரே கண் விழித்து, அருவியில் ஸ்நானத்தை முடித்துவிட்டு வருவாள் பாமா.

ஈரப்புடவையின் மேலே தோன்றும் பாமாவின் அதிஸௌந்தர்ய உருவத்தின், லாவண்யம் மிகுந்த எல்லைக்கோடுகளைக் கண் இமைக்காமல் பார்த்தபடி சற்றுத் தூரத்தில் அமர்ந்திருப்பான், கிருஷ்ணன்.

அப்புறம் சுற்றிலும் தவழும் இயற்கையின் மனோகரத்தை மனங்கொண்டமட்டில் அநுபவிக்கச் சென்றுவிடுவாள் பாமா. திரும்பிவரும் போது அன்றை மாலை அக்கினிக்கு வேண்டிய சமித்துக்களையும் விறகுகளையும் சேகரித்து வருவாள். காய், கனி வர்க்கங்களும் அவற்றுடன் இருக்கும்.

பின்னர் மத்தியான்ன ஆகாரம்.

"இங்கு வந்ததில் எனக்கு ஏற்பட்ட முதல் ஸௌகர்யம், 'சமையல் கவலை' இல்லாததுதான். 'சாப்பாட்டிற்கு அரிசி இல்லையே', 'காய் இல்லையே', 'கறி இல்லையே', 'உப்பு இல்லையே'- இந்தத் தொல்லைகளெல்லாம் தொலைந்தன இப்போது. 'அக்கடா' என்று இருக்கிறேன். இல்லையா?" என்றாள் ஒரு நாள், புன்சிரிப்புடனே.

மற்றொரு நாள், "இந்த 'ஏகாந்த வாழ்க்கை' எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. என் மனசிற்கு எவ்வளவோ விச்ராந்தியாக இருக்கிறது. உங்களுக்கு?" என்றாள்.

பொதுவாக அதிகப் பேச்சோ, விரஸமான ஸ்ரஸ ஸல்லாபங்களோ இல்லாமல் அவர்கள் வாழ்க்கை, முனிபுங்கவர்களின் ஆசிரம வாழ்க்கையைப் போலவே அமைதியாகச் சென்று கொண்டிருந்தது.

அதுவும், பாமாவின் உடைந்த உள்ளத்திற்கு எவ்வளவோ ஆறுதலை அளிக்கும் 'ஆத்மார்த்த வாழ்வா'க இருந்தது அது. பழைய 'உலக'த்தை அவள் அறவே மறந்துவிட்டாள்! பழைய வேதனைகளும், குடும்பத் தொல்லைகளும், இன்ப துன்பங்களும், வெறுப்பும், கோபதாபங்களும் அவள் நெஞ்சை விட்டுப் பறந்தோடிவிட்டன. புது உலகத்துடன் அவள் தன் மனமார அந்தப் புது வாழ்வை ஏற்றுக்கொண்டாள்.

அந்த மலைச்சாரலும், எங்கும் தவழ்ந்த இயற்கையின் மோன நிலையும், வெளியுலகத் தொடர்பு இல்லாத தன்மையும், இனிமையான 'ஏகாந்த'மும் பாமாவின் இளம் உள்ளத்திற்கு அருமருந்தாகி அவளையும் 'ஞான வாழ்வு' நடத்தத் தூண்டின. 'சரியான பாதை'யில் போக அவனுக்குக் காதோடு உபதேசித்தன. மோகஸுவாதனத்திற்கு அவளைத் திருத்தின.

அதே சமயம் கிருஷ்ணனுக்கு? காட்டுப் புஷ்பங்களின் மணத்துடன் சலசலக்கும் மெல்லிய காற்றும், வனமூலிகைகளின் சுகந்தமும், தெள்ளிய நீர் அருவியும், நாலுபுறமும் பரவிநின்ற பசுமையும் அவன் உள்ளத்திலே என்ன உணர்ச்சிகளை ஊட்டின? என்ன இளர்ச்சிகளை உண்டாக்கின? எத்தகைய மனோபாவம் அவனிடம் ஏற்பட்டது?

அவனது 'உள்ளத் தெளிவை'ப் பற்றித் தெரிந்துகொள்ள அடக்க முடியாத ஆசையுற்றவள் போலே பேசினாள் பாமா. "இந்தக் காட்சி என் உள்ளத்திலே இத்தகைய நினைவை உண்டாக்குகிறது", "இந்த இடம் என் மனசை இவ்விதம் செய்யத் தூண்டுகிறது; உங்களுக்கு எப்படி?" என்று ஒவ்வொரு தடவையும் தான் சொல்லும் போதெல்லாம் அவன் அபிப்பிராயத்தையும் அறிய முயல்பவளாகத் தோற்றியது.

அப்பொழுதெல்லாம் கிருஷ்ணன் அநேகமாக வாய் மூடி மௌனியாகிச் சிரிக்கத்தான் சிரிப்பான். எப்போதாவது 'உம்' கொட்டுவதோடு நின்றுவிடும். நாற்குக்கு ஒரு தடவை அப்படியே அவன் வாய் திறந்து பேசினாலும், அது பாமாவுக்குப் புரியாத பதிலாக இருக்கும்.

அன்றைத்தினம் அந்தி மயங்கும் தறுவாயிலே அவர்கள் மலையுச்சிக்கு அருகில் நீண்டிருந்த ஒரு

பாறையிலே, சேர்ந்தாற் போல அமர்ந்திருந்தார் கள். அஸ்தமன சூரியனின் கடைசிக் கதிர் மறைந்து வெகு நேரமாகிவிட்டது. மலைகளுக்கு அப்பால், அடிவானத்திற்கு அப்பால், பள்ளத் தாக்கின் இடைவழியே அந்தக் காலதேவன் பாதா ளத்தில் விழுந்து மறையுமுன், அளித்த கடைசி வந்தனோபசாரத்தையும் ஏற்றபடி அதையும் பார்த்துக் களித்துக்கொண்டுதான் இருந்தார்கள்.

மேல்வானத்தின் செந்நிறம் மறைந்து சுந்தியர தேவியின் அருள் ஒளி பொழியத் தொடங்கியது. வானத்தின் கருமை அந்திமயக்கத்திலே ஒன்றி நின்றது. அடிவாரத்திலே வெகு தூரத்திற்குப் பார்த்து கிடந்த புல் வெளியைப் பார்த்தாள் பாமா. மரகதப் பச்சைப் பாய் விரித்ததுபோல, கண்க ளுக்குக் குளிர்ச்சியை ஊட்டியது அந்தக் காட்சி.

"அன்றொரு நாள் இரவு, பொழி யும் நிலவிலே அந்தப் பார்த்த வெளி யில்தான் நம் 'புது வாழ்வு' ஆரம்ப மாயிற்று. நம் தற்போதைய நிலை யின் முதல் படி 'அதுவே' அல்லவா? ஆனால் மறந்துபோன பழைய வாழ்வின் 'கடைப் படி'யும் 'அது வே' ஆகும்" என்று கீழே நோக்கிய படியே கூறினாள் பாமா. ஆழ்ந்த தொரு பெருமூச்சு அவள் உள்ளத் தின் அடியிலிருந்து மெதுவாக வெளியேறியது. அவள் விச்ராந்தி யின் எல்லையை அடைந்தவள் போலே காணப்பட்டாள்.

"'இன்ப வீடு, இன்பவீடு' என்று சொல்வார்களே? அந்த 'இன்ப வீட்டி'ன் ஞாபகம் எனக்கு இப் போது எற்படுகிறது. இப்போது நாம் இருப்பது அந்த - அதே 'இன்ப நிலை' தானே! 'மோக்ஷம்' என்பது வேறு எப்படித்தான் இருக்கும்?" என்று மெதுவாக முனகினாள் பாமா.

அவள் பேச்சு கிருஷ்ணனுக்குப் புரிந்ததோ என்னவோ? ஆனால், அவனும், "என் மனசிலும் இப் போது இன்ப நினைவுகளே எழும்பித் தலைதூக்கி நிற்கின்றன!" என்று வாய்விட்டுக் கூறி நீண்ட பெருமூச் செறிந்தான்.

"விட்டுப்போன இன்ப நினைவு கள்!" என்று அவனுள்ளம் தனக் குள்ளாகவே முணுமுணுத்துக் கொண்டது.

சிறிது நேரத்திற்குப் பிறகு அவர் களுடைய வாசஸ்தலத்திற்கு எதிரே அக்கினி கொழுந்துவிட்டு ஜ்வலித் துக்கொண்டிருந்தது. அதற்கு எதி ரில் அவ்விருவரும் மௌனமாகச் சிலைகளென அசையாது அமர்ந்திருந்தனர்.

சுற்றிலும் சூழ்ந்திருந்த தெய்வீக அமைதியை, தெருப்பில் 'பட்' 'டட்' என்று தெறிக்கும் காய்ந்த சுள்ளிகளின் வெடிப்பு, பின்னும் மிகைப்படுத்தி எடுத்துக்காட்டியது.

வெகு தூரத்திலிருந்து அடிக்கொரு தரம், காற் றில் மிதந்துவரும், காட்டுப்பூனையின் அலறலோ, ஓநாயின் உறுமலோ, நரியின் ஓலமோ, இரவின் பயங்கரத்தைப் பின்னும் எடுத்தோதியது.

5

மழைக்காலம் வந்தது. கறுத்துத் திரண்ட மேகங்களுடனும், பயங்கரமான இடி முழக்கங்க

ளுடனும், கூணத்தில் கண்ணேப் பறித்து மறையும் மின் வெட்டுக்களுடனும் வெகு ஆடம்பரமாக மழைக்காலம் வந்தது. அதனுடன் நீர்வீழ்ச்சியின் வேகமும் சேர்ந்து கொண்டு நின்றது. கர்வம் தலைக்கேறிப் பூமிக்குப் புறப்பட்ட ஆகாச கங்கையின் குமுறலுடனே, இடி இடிப்பதை யொத்த பேரொலியுடன், அது கோரமாகத் தலை விரித்தாடிக்கொண்டு, தலை குப்புற வீழ்ந்து கொண்டிருந்தது. அடியில் இருக்கும் குளம் பயங்கரமாகச் சுழன்று, கொந்தளித்துவழிந்தது. அருவியாக, பரம ரௌத்ரவைப்போல், வளைந்து வளைந்து வீளையாடிக்கொண்டிருந்தது, பிரவாகமாகப் பெருக்கெடுத்துக் குமிழியிட்டுப் பொங்கி அறுத்துக்கொண்டு ஓடியது. நுரை கக்கியபடி ஓடிய அந்தச் செந்நீரிலே, ரத்தக் குழம்பெனக் காணப்பட்ட அந்தத் தண்ணீர்ப் பிரவாகத்திலே, ஆயிரக் கணக்காக, லக்ஷக்கணக்காக, கோடிக்கணக்காக மேலெழுந்து, எதிர்த்து நீந்தி விளையாடும் மீனினம்! அவற்றின் பற்பல வித வர்ணஜாலத்தை நாள் தோறும் அலுக்காமல் பார்த்து மகிழ்ந்து கொண்டே இருப்பாள் பாமா. என்ன நீச்சு! என்ன வித்தை! என்ன போட்டி! என்ன சண்டை! என்ன வீளையாட்டு! எப்பேர்ப்பட்ட விசித்திர விசித்திரமான வர்ணவேடிக்கைகள்! பெரியனவும், சிறியனவுமாக எவ்வளவு தினுசு மீன்கள்! கண் இமைக்கும் நேரத்தில் அவை தம் வாலேச் சுழற்றித் திரும்பும் ஜாலம்! எத்தகைய சிருஷ்டி விநோதம்! பொங்கிவரும் உள்ளத்துடனே பாமா மௌனமாகப் பார்த்துக்கொண்டே இருப்பாள்.

தலேக்கு மேலே உயரத்தில், வரிசை வரிசையாகக் கருமேகங்கள் கர்ஜித்துக் கொண்டு நிற்கும். கூற்றுவன் மஹாப் பிரளயத்திற்காக ஏவி விட்டிருக்கும் பயங்கரமான மஹாரதிகளென அவை அணிவகுத்து நிற்கும். அப்போது, மாலே நேரத்திலே, அத்தக் கருமேகங்களின் மீழே பறந்துபோகும் கொக்குக்கூட்டம். கண் குளிரக் காண்பதற்கு அதுதான் எப்படிப்பட்ட காட்சி! என்ன இன்பம்! என்ன ஆனந்தம்! என்ன மாயை!

'ஆழம் அறிய முடியாத ஆகாயத்திலே அவை எங்கே அப்படிப் பறந்து போகின்றன?' என்று தனக்குள்ளாகவே எண்ணி வியப்படைவாள் பாமா. பிரசண்ட வேகத்துடனே பெருமழை பொழியும். அந்த ஆனந்தத்திலே, 'மோனநிலையை அடைந்து, விருக்ஷங்களெல்லாம் மயங்கி நிற்பதாக நினேப்பாள். மழை நிற்கும். ஆனல் மீண்டும் திரள்திரளாகப் புகைப்படலங்கள் எங்கிருந்தோ வந்து கவிந்துகொள்ளும். குளிர்ந்த காற்று குலே நடுங்கச்செய்யும். 'இந்திரன் வீளையாடுகிறன்' என்று நினேப்பாள். 'மேகத்தைத் தோகையும்,

மின்னொளியைக் குதிரையாகவும், இடிமுழக்கத்தைக் குதிரையோட்டும் சாட்டையாகவும் கொண்டு, தேவர்கோன் வானவீதியிலே விளையாடுகிறான்! தேர்ச் சக்கரங்கள் உருளும் வேகத்தில் கிளம்பும் புழுதிச் சுழலே மழை!' என்று அவள் எண்ணமிடுவாள். 'ஒவ்வொரு மழைக் கம்பியும், ஒவ்வொரு வெள்ளிக்கம்பியாக அல்லவா வந்து விழுகிறது!' என்று ஆச்சரியப்படுவாள். 'தானும் ஒரு தேவ கன்னிகையாக இருக்கக்கூடாதா?' என்ற ஆசை தோன்றும். உணர்ச்சிமேலீட்டால் ஹிருதயம் பொங்கித் தொண்டையை அடைக்கும்.

மழைக்காலம் போய், பனிக்காலம் வந்தது. புகைப் போர்வையைப் போர்த்துக்கொண்டு பனிக்காலம் 'வெட வெட' என்று நடுங்கிக் கொண்டே வந்தது. காலுபுறமும், எங்கு நோக்கினும் ஒரே பனித்திரைகள்; அல்ல, புகைத்திரைகள் - கண் பார்வையை மறைத்துநின்ற பனிப்படலங்கள்.

அதிகாலையில் துயில் விழித்து எழுந்த பார்த்தால், மரங்களின் இலை நுனிகளிலிருந்து 'பொட்டுப் பொட்'டென்று நீர்த்துளிகள் விழுந்து கொண்டே இருக்கும். அவை மரங்கள் விடுக்கும் ஆனந்தக் கண்ணீரா? சோகக் கண்ணீரா? ஆனந்தக் கண்ணீர் என்றால் என்ன ஆனந்தம்? சோகம் என்றால் என் சோகம்? 'மூங்கில் இலை மீது கண்வளரும் பனிநீர்'—அதேபோல் 'புல்லின் தலைமீது ஜ்வலிக்கும் முத்து! பரிதியின் முதல் ரேகை பட்டு அம்முத்துக்கள் தரம் எப்படிச் சுடர்விட்டு ஜ்வலிக்கின்றன! யாரோ வெறியனல் வாரி இறைக்கப்பட்ட வைரங்கள் போல! பனிக்காலம் முழுவதுமே அவர்கள் இருவரும் வெளிச் சஞ்சாரத்தைக் கூடியமட்டிலும் சுருக்கிக்கொண்டனர்.

தமது வாசஸ்தலத்திற்குள்ளாகவே அப்போதெல்லாம் நெருப்பை வைத்துக்கொண்டு, அந்தக் கணப்பின் எதிரிலே, மணிக்கணக்காக மௌனமாக உட்கார்ந்துகொண்டு குளிர் காய்வார்கள். 'சட பட' சப்தத்துடன் ஒங்கி எரியும் அக்கினியின் முன்பாக இரண்டு பிம்பங்கள்.

பனிக்காலம் போய் வஸந்தம் வந்தது. காதலர்கள் விரும்பும் ரம்யமான வஸந்தகாலம் மணக்க மணக்க வந்தது. காட்டுச்செடி கொடிகளெல்லாம் மூறுவல் பூத்து அசைந்தாடி அதை வரவேற்றன. கொத்துக் கொத்தாகப் பலநிறம் கொண்ட புஷ்பங்களைத் தலையில் சுமந்து நாணிக் குனிந்தன.

மிருதுவான இளந்தென்றல் அவற்றை வருடிய வாசனையுடன் உல்லாஸமாக உலாவிச் சென்றது.

நீர்வீழ்ச்சியின் பேய்ச்சிரிப்பு யுவதியின் சிறு கையாக மாறியது. அருவியின் பிரவாகம் மீண்டும், பருவமறிந்த பெண்ணின் நாணம் செறிந்த அடக்கமாக ஒடுங்கி, மெல்லொலியுடன் கீதம் இசைக்கத் தொடங்கியது. விருக்ஷங்கள் கைகளில் பூலைகளை ஏந்தியபடி 'வா, வர' என்று மெதுவாகத் தலையசைத்து நின்றன. அவற்றின் உச்சாணிக் கிளையில் உட்கார்ந்துகொண்டு பக்ஷிகள் வஸந்த கீதம் பாடிக்கொண்டிருந்தன. மலைச் சரிவுகளில் மான்கள் வயிறார புல்லை மேய்ந்து விட்டுத் துள்ளி விளையாடி எக்களி கொட்டிக் கொண்டிருந்தன. எங்கும் ஒரு புதுமை, இளமை.

இரவு வேளைகளிலே வானத்தில் மிதக்கும் கோடிக்கணக்கான தாரகைகளை விழித்தது விழித்தபடி பார்த்துக்கொண்டு மோனத்தில் ஆழ்ந்து கிடப்பாள் பரமா. கீழ் வானத்திலே தன் குளிர்ந்த கதிர்களை மெல்ல மெல்லப் பாப்பியபடியே, நீலக்கடலின் ஆழத்திலிருந்து கிளம்பிய அமிருத கலசத்தைப் போலே, மெதுவாக மூளைக்கும் பூர்ண சந்திரோதயத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி கலையாத மௌனத்தில் லயித்துவிடுவாள். உயர்ந்த விருக்ஷத்தின் உச்சாணிக் கிளையிலே ஊஞ்சலாடியபடி, விதவிதமான ஸ்வர ஜாலங்களை எழுப்பி, அனந்தமாகக் கீதமிசைக்கும் பறவையின் மனத்தோடு தானும் ஒன்றியவளாய் அப்படியே நிலையாக நின்றுவிடுவாள். காட்டுப்பூக்களின் ஸுகந்தத்துடன் நம்ய மாக வீசும் இளந்தென்றலின் மெல்லொலியிலே மனத்தைப் பறிகொடுத்திருப்பாள். யாரும் அறிய முடியாத தேவபாஷையில் அது அவளிடம் காதோடு கொஞ்சுவதிலே மதிமயங்கி நின்றிடுவாள். அருவியருகே நடக்கும் அணில்களின் அந்தரங்கத்திலே அவள் தன்னையும் மறந்து விடுவாள். அவள் தன்னை மறந்தேவிட்டாள். அவள் 'ஞானி'யாகிவிட்டாள். ஆம் - பரமா சுயப்பிரக்ஞை இல்லாதவள் மாதிரியே நடந்து வந்தாள்.

அப்போதெல்லாம், மறைவில் இருந்தபடியே அவளைப் பார்த்துப் பார்த்து, ஓர் உருவம் நெடுமூச்செறியும். அதுதான் கிருஷ்ணன்.

(அடுத்த இதழில் முடிவுறும்)

நாட்டுப் பெண்

மருமகளை மாட்டுப் பெண் என்று சொல்லுகிறோம். சிலர் அதைத் திருத்தமாக உச்சரிப்பதாக எண்ணி நாட்டுப் பெண் என்று சொல்வதுண்டு. எழுதும்போது 'இலக்கண சுத்தமானது' என்று எண்ணி நாட்டுப் பெண் என்றே பெரும்பாலோர் எழுதத் தொடங்கிவிட்டார்கள். ஒரு சகோதரி 'மாற்றுப் பெண்' என்பது அப்படியாகியிருக்கலாம் என்று எழுதியிருக்கிறார். மணப்பெண் என்பதே மாட்டுப் பெண் என்று வந்ததாகக் கொள்வது பொருத்தம். 'மாட்டுப் பெண்' என்று எழுதுவதில் தவறு இல்லை. அது ஸரஸ மொழி என்று கொள்ளலாம்.

சுறுசுறுப்புள்ள எறும்பு

லக்ஷ்மி



எறும்புதான் ; ஆனாலும் அதைப்பற்றிச் சிந்தித்தால் ஒரு பெரிய பிரபஞ்சமாக விரியும் இந்தச் சிந்தனைக் கட்டுரையை எழுதியவர் தமிழ் நாட்டுத் தலைவர் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் அருமைப் புதல்வி.

"சின்னச்சின்ன சிற்றெறும்பே
சிங்காரச் சிற்றெறும்பே
உன்னைப்போல நானுமே
உழைத்திட வேணுமே"

என்று பாடிச் சிறுவர்களுக்கு எறும்பையும் தேனீயையும் சுறுசுறுப்பின் உதாரணங்களாகக் காட்டுகிறோம். தினசரி வாழ்க்கையில் நாம் எறும்பைத்தான் அதிகமாகச் சந்திக்கிறோம். அதனிடம் எனக்குப் பிரேமை இல்லாவிடிலும், மதிப்பு உண்டு. எறும்பின் வேலை செய்யும் சக்தியைக் கண்டு ஆச்சரியப் படாமல் இருக்க முடியாது. பையில், "சோம்பேறி மானிடனே, எறும்பினிடம் படி" என்று கூறுகிறது. அதனிடம் கற்கச் சொன்னதனாலே ஏற்படும் இயற்கையான உணர்ச்சியோ என்னவோ, மனிதன் எறும்பை வெறுக்கவே வெறுக்கிறான். அதன் சுறுசுறுப்புத்தனத்திடம் இருக்கும் மதிப்பு கூட நம்மை எறும்பின் வாயிலிருந்து ஆகாரத்தைப் பிடுங்கிப் பத்திரமாக டப்பாக்களிலும் அலமாரியிலும் வைப்பதிலிருந்து தடுப்பதில்லை. நான் ஓர் எறும்பாயும், வேதாந்தியாயும் இருந்தால், 'அஞ்ஞானிகள் ஞானிகளைச் சகிப்பதில்லை' என்ற நீதியைத்தான் இதிலிருந்து அறிவேன்.

கட்டுப் பெட்டிகளுக்கு லவலேசங்கூடச் சகிப்புத்தன்மையே இல்லை என்கிறார்கள். அப்படியானால் அது தவறு இழைக்கிறவர்களிடந்தான் அதிகம் இருக்குமோ? அசல் சோம்பேறியான மனிதன், எறும்புக்கு எதிராகத் தன் உக்கிராண உள்ளின் கதவை மாத்திரம் சாத்தித் தாழிட்டால் இவ்வளவு ஆத்திரமூட்டாது. இதோடு விடாமல் இன்னுமொரு படி மேலே போகிறான். எறும்பின் பிரதான நற்குணமான சுறுசுறுப்புத் தன்மையையே எதிர்த்துச் சோம்பேறித்தனத்தைச் சிலாகிக்கிறான். அப்போது எறும்பாகிய வேதாந்தி என்ன நினைக்கிறதோ என்று வியக்கிறேன்.

"நாகரிகம் (Culture) ஒழிவு நேரத்தின் விளைவே" என்பது சீன எழுத்தாளர் லின் யுடாங்கின் (Lin Yutang) கருத்து. "உண்மையில் நாகரிகம் அடைந்தவன் ஒருவித்தில் சோம்பேறியே" என அவர் மேலும் கூறுகிறார். இந்தத் தத்துவம் என்னை ஆகர்ஷிக்கிறது. மனச் சாட்சிக்கும், சோம்பேறித்தனத்துக்கும் இடையே உள்ள சண்டை, நமக்கு ஓயாமல் தொல்லை அளிக்கிறது. ஆனால் இப்பொழுது சாதாரியமாகத் தர்க்கித்து, சோம்பேறித்தனம் நாகரிகத்தின் உயர்ந்த சின்னங்களில் ஒன்று என வியாதிக்கிறார்கள். நீங்கள் டாக்டர் லின்னின் கருத்தை ஆமோதித்தால், எறும்புப் புற்றின் நாகரிகத்தை எதிர்ப்பீர்கள். ஆனால் அதன் வழியில் எறும்புப் புற்றும் ஓர் அற்புதமான உலகமே. அங்கு நம்மிடையே காணும் வீண் முயற்சியும், சச்சரவும் இல்லை.

எறும்பினிடம் நாம் முதலில் கவனிப்பது, அது வெகு அவசரமாகக் குறுக்கே யும் நெடுக்கேயும் ஓடுவதைத்தான். நாம் பார்க்கும் எறும்புகளெல்லாம் சதா நடமாடிக்கொண்டே இருக்கின்றன. ஒன்றின் பின் ஒன்றாக அணிவகுத்துச் செல்கின்றன. இந்த எறும்பு வரிசை இவ்வளவு காரியமாக எங்கே போகிறது? உணவோ அல்லது தங்களுக்குத் தேவையான பொருள்களோ சேகரித்துப் புற்றுக்குக் கொண்டு போவதில்தான் இது ஈடுபட்டிருக்கிறது. உணவு சேகரிப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கும் எறும்புகள் மனிதனின் சாமர்த்தியமான எதிரிகளாகின்றன. பிரேஸில் (Brazil) தேசத்தில் ஒரு வகை எறும்புகள், ஓர் இலை இல்லாமல் தோட்டங்களை அழித்து விடுகின்றன. ஏன், நம்

எல்லோர் வீட்டிலும் எறும்பு ஓயாமல் ஒழியாமல் கொள்ளையிடுவதுதான் சகஜமாக இருக்கிறதே.

ஆங்கில ஆசிரியர் ஒருவர், "எறும்பு உண்மையில் சுறுசுறுப்புள்ள பிராணியே அல்ல" என்கிறார். "அது அர்த்தம் இல்லாமல் அங்கும் இங்கும் ஓடி நேரம் போக்கும். மேலும் தனக்குத் தேவையில்லாதவையும், அதிகக் கனமுமான பொருள்களை வீணே இழுக்கும். வெட்டிக் காரியங்கள் செய்து சுறுசுறுப்புப்போல வேஷம் போடும்" என்று சிலர் எறும்பைப்பற்றி எண்ணுகிறார்கள். தற்காலத்தில் குறைந்த வேலையில் அதிகப் பலனடைவதே சாமர்த்தியம். எறும்போ அதிக வேலை செய்தே அதிகப் பலனை அடைய விரும்புவதுபோல் இருக்கிறது. எறும்புத் தொழிலாளிக்கு வாரத்தில் நாற்பது மணி நேர வேலையும், சம்பளத்துடன் 'ரஜா'வும் இல்லை. அதனால்தான் மனித 'ஸோஷலிஸ்ட்' எறும்பு 'ஸோஷலிஸ்டை' அலக்ஷ்யம் செய்கிறான் போலும்!

எறும்பு இழுக்கும் கனம் அசாதாரணமானது. மனிதன் தன் எடையுள்ள பொருளைத்தான் தூக்க முடியும். எறும்போ தன்னைப்போல் மூன்று மடங்கு கனமுள்ளதைச் சுவரின்மேல் செங்குத்தாகத் தூக்கிச் செல்கிறது! எறும்பிற்கு ஸ்பர்சிக்கவும் ருசிக்கவும் முடியும். அதற்கு நிற வித்தியாசம் தெரிவதில்லை. ஆனால், நமக்குப் புலப்படாத புற ஊதாக் கிரணங்கள் (ultra-violet rays) அதற்குத் தெரியும். வலி உணர்ச்சி அவைகளுக்கு மிகக் குறைவு.

எறும்பு தன் புற்றில் ஓயாமல் வேலை செய்வது ஒரே நோக்கத்துடன்தான். குழந்தை எறும்புகளைப் பாதுகாத்துச் சமூகத்தை அபிவிருத்தி செய்வதே அதன் லக்ஷ்யம். எறும்புகளின் ராணி, ஆணுடன் கூடியிருக்கும் கண நேரத்தைத் தவிர மற்ற எல்லாச் சமயங்களிலும் ஒரு மூட்டையிடும் யந்திரமே. பருவம் வந்த ஆண் எறும்புகள் ராணிகளுடன் கூடிய பின் ஜீவிப்பதே இல்லை. அவற்றின் கடமை அதனுடன் முடிந்துவிட்டது. இந்த எறும்புகளுக்குச் 'சொந்த' வாழ்க்கை இல்லை. முழு வளர்ச்சி இல்லாத பெண் எறும்புகளே பணியாட்கள். சிறு எறும்புகளுக்கு ஆகாரம் கொடுத்து ரக்ஷிப்பதே இவைகளின் வாழ்க்கை லக்ஷ்யம்.

சில எறும்புகளுக்கு இரண்டு வயிறு உண்டு. சமூகத்திற்காக இருக்கும் வயிற்றைச் 'சொந்த' வயிற்றை நிரப்புவதற்கு முன்பே நிரப்பிவிடுகின்றன. சமூக வயிற்றில் இருக்கும் ஆகாரத்தால் குழந்தைகளுக்கு உணவளிக்கின்றன. உண்மையில், 'ஸோஷலிஸ'த்திற்கு இதைவிட உன்னதமான உதாரணம் வேறு உண்டா?

எறும்பு உலகத்தில் சில விசித்திரங்கள் உண்டு. சில ஜாதி எறும்புகளில் தற்பாது காப்புக்காக, ஆயுத பாணிகளான வீரர்கள் காணப்படுகின்றன. கறையான்களுடைய சிப்பாய்களிடத்தில் எதிரிமீது பிரயோகத்திற்காகத் தண்ணீர்போலுள்ள ஒரு விஷம் இருக்கிறது. யுத்த தந்திரங்களில் எறும்பு, மனிதனுக்குச் சற்றும் சளைத்ததாக இல்லை. இன்றும் சில ஜாதி எறும்புகளில் விருந்தாளிகளைக் காணலாம். இவ்விருந்தாளிகளை உபசரிப்பது, அந்தப் பூச்சிகளின்மேல் கசியும் ருசியான ஒரு ரஸத்திற்காகவே. இந்த ரஸம் போதை அளிக்க வல்லது என்றுகூடச் சொல்கிறார்கள்.

திருப்பித் திருப்பி எறும்பைப்பற்றி எவ்வளவு சொன்னாலும், கடைசியில் எறும்புகளுக்கு இருப்பது 'ஒரு விபரீதமான வேலை செய்யும் உணர்ச்சி' என்று ஜூலியன் ஹக்ஸ்லி (Julian Huxley) சொல்லும் முடிவுக்கே வருகிறோம். மனிதனுக்குச் சுவாசம் விடுவது அநாயாசமாகவும் சொந்தமாகவும் இருப்பதுபோல, எறும்புக்கு உழைப்பு இருக்கிறது. ஆனால் எறும்பின் உழைப்பு மிதமீறிவிடுவதால், அது செயற்கையாகவும் போலியாகவும் மாறிவிடுகிறது. மேலும் அதன் உழைப்பெல்லாம் 'விழலுக்கிரைத்த நீர்தான்.' ஏன்? எறும்பு பாடுபடுவதெல்லாம் இன்னுமொரு தலைமுறை உழைத்து உழலுவதற்குத்தானே? எறும்புச் சமூகத்தில் யாவரும் தொழிலாளிகளே. அங்கு உழைப்பின் பலனை அநுபவிக்க யாரும் இல்லை. எறும்பு ராஜ்யம் அதிகாரிகளே இல்லாத ஓர் அடிமைச் சமூகம். ஆனால் இந்தக் கருத்து மனிதனுடையது. பலன் அடையாமல் வேலை செய்வதில் எறும்புக்கு ஆனந்தம் இல்லை என நாம் சொல்ல முடியுமா? என்ன இருந்தாலும் நாம் அதைப்போல உழைக்க வேண்டியதில்லை. ஆனால் எறும்பின் ஒய்ச்சலில்லா உழைப்பு நம்மைப் பிரமிக்கச் செய்கிறது. நாம் அதைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்ற விட்டாலும், அதைச் சதா எதிர்த்துப் போராடினாலும், அதன் சலியா உழைப்பைப் போற்றவேண்டும்.

சட்டத்துக்கு மிஞ்சி

சி. சு. செல்லப்பா

நான் என் சாக்குப் படுக்கையில் எழுந்து உட்கார்ந்துகொண்டு, குளிர் தாங்காமல் எனக்குக் கொடுக்கப்பட்டிருந்த கம்பளியைப் போர்த்துக்கொண்டதால் ஏற்பட்ட கடி உபத்திரவத்தில் அதைப் பக்கத்தில் தள்ளி எறிந்துவிட்டு உடம்பைப் போட்டுப் பிய்த்துப் பிடுங்கிக்கொண்டிருந்தேன். இதுமாதிரி எத்தனையோ தினங்கள் ஆகி இருந்தபோதிலும் அன்றைய தடுமாற்றுக்கு மேல் என் தூக்கம் கெட்டுவிட்டது. படுக்கையில் உட்கார்ந்து, 'மனிதனது பிறப்புரிமை' என்று சொல்லப்படும் ஒரு லக்ஷ்யத்தை அடையச் செய்த முயற்சியில் நான் அங்கே வந்திருக்கும் பிரமேயம், அங்கே வருவதற்குத் தடையாகக் குறுக்கே மூளைத்து எழுந்த எத்தனை சிக்கல்களை நான் விடாப்பிடியாக எதிர்த்து முண்டி அடித்து வர வேண்டியிருந்தது என்ற விஷயம், அந்த ஒரு கூண பலஹீனம் எங்காவது ஒரு மூலையில் தோன்றியிருந்தால் நிலைமை வேறு எவ்விதமாக மாறியிருக்கும் என்பது எல்லாம் தூக்கம் கெட்ட நினைவுக்கு முன் கொணர்ந்துகொண்டிருந்தேன். கழிந்துபோன அந்தச் சந்தர்ப்பங்களை நினைத்துப் பார்த்துக்கொள்வதிலேயே மனத்துக்கு ஓர் ஆனந்தம் ஏற்பட்டது.

இந்த ஆனந்தத்தின் நடுவேயும், அந்த இடத்தில் என் அன்றாட வாழ்க்கை, இதுவரையில் குறுக்கே வந்திராத ஒரு கட்டுப்பாட்டு முறை, மனித தேகத்துக்கு கூணந்தோறும் தனக்குத் தெரிந்து ஏற்பட்டுக்கொண்டிருக்கும் ஓர் அவஸ்தை, இவைகளையும் நினைத்துப் பார்த்துக் கொள்ளாமல் இல்லை.

இந்த வேதனைக்கும் மீறின ஒரு திடம், பெரிய தொரு சாதனைக்காக அங்கே கங்கணம் கட்டிக் கொண்டு வந்திருக்கும் நினைப்பு எழுந்து, அவர் களைத் தடையின்றி நிம்மதியாகக் குறட்டைவிடச் செய்துகொண்டிருந்தது.

அந்தப் 'பிளாக்' ஒரே சுவராக அடைபடாமல், சுவரும் கம்பி அடைப்புமாக மாறி மாறி எழுப்பப் பட்டிருந்ததால், குளிர் காலத்தில் இரக்காற்று திறந்த வெளியிலிருந்து பாவலாக வீசியடித்து, ஏற்கனவே போஷணைக் குறைவினால் ரத்தம் செத்துக்கிடந்த உடல்களில் ஜிலுஜிலுப்பேற்றிக் கூதல் கொள்ளச் செய்துகொண்டிருந்தது. ஒவ் வொருவரும் கைகால்களை மூடக்கிக்கொண்டு ஒடுங்கிப்போய்ப் படுத்துக்கொண்டிருந்தார்.

வெளியே வானத்தில் அரை நிலா, தொலைவிலே தெரியும் ஒரு பெரிய காட்டின் விளிம்போடு ஒட்டிக்கொண்டு, பிணத்தின் விழித்த கண் மாதிரி அசைவற்றுக் கிடந்தது. அந்த அரை நிலவின் மங் கின ஒளியிலே அதன் கீழே தரையில் கிடப்பவை யெல்லாம் அசடு வழிந்தன. தூரத்துப் பச்சைகள் வெளுத்துத் தெரிந்தன. எதிரே தோன்றிய சாலைத்தரை சம்பல் நிறமாகத் தோற்றியது. இயற்கையே ஓர் அழிந்த சித்திரம்போல் சோபை யற்று இருந்தது.

எனக்கு நேர் எதிரிலிருந்து சற்று வலது புறமாகத் தள்ளிச் சில நூறு கஜ இடைவெளிக்கு அப் பால் இன்னொரு 'பிளாக்' இருந்தது. அதை சமீபத் தில்தான் விஸ்தரிக்கப்பட்டிருந்தது. புதிதாக வரு பவர்கள் அதில் சேர்க்கப்பட்டுக்கொண்டிருந்தார் கள். மங்கின நிலா வெளிச்சத்தில் அதன் தண்டு வெள்ளைச் சுவர்கள் உட்புற இருட்டை எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தன.

அந்தப் பிளாக்கையும் சுற்றிக்கொண்டு பாரா வர்டர் வந்து கொண்டிருந்தான். அவன் தன்

கையில் ஒரு விளக்கைப் பிடித்துக்கொண்டு குளிர் தாங்காமல் தன் நீலத் தொப்பிக்கு அடியில் ஒரு மப்ளரைக் கண் மட்டும் பார்வைக்காகத் தெரியும்படியாக விட்டு, கன்னங்களோடு மூக்கும் தெரியாமல் மறைத்துக் கட்டியிருந்தான். கைத்தடியை அக்குளில் இடுக்கின வண்ணம் வளைய வளைய நடந்துகொண்டே இருந்ததால் அலுத்துப் போனவன் போல் அயர்ந்த நடை போட்டு லேசாகச் சீட்டி அடித்தபடி போய்க்கொண்டிருந்தான்.

இதை யெல்லாம் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் தூங்குவதற்கான முஸ்தீப்புகள் செய்ய ஆரம்பித்தேன். கைகளை வீசி விறைப்பேற்றிக்கொண்டு, உடம்பின் பல பாகங்களையும் ஒரு தரம் தேய்த்துக் கொடுத்துச் சூடு உண்டாக்கிக் கொண்டு மறுபடியும் படுக்கையில் படுத்துக் கண்களை மூடி இருப்பேன்.

'சரக் சரக்' என்ற சப்தம் கேட்டுப் படுத்தவாறே சப்தம் வரும் பக்கமாக முகத்தைத் திருப்பிப் பார்த்தேன். பிளாக்கின் உட்புறம் ஒரே இருட்டாக இருந்தது. இங்கொன்றும் அங்கொன்றுமாக அந்தப் பெரிய பிளாக் முழுவதற்கும் ஏற்றிவைத்திருந்த மூன்று விளக்குகளில் இரண்டு, ஏற்றிவைத்த சிறிது நேரத்திற்கெல்லாம் திரி எரிந்து, சிம்னிகளைப் புகையடையப்பி அணைத்து போய்விட்டவே ஒன்ற மட்டும் பிளாக்கின் ஒரு கோடியில் சமயத்தக்கு உதவுவதற்காக ஜாக்கிரதையுடன் சிறிதாக்கி வைக்கப்பட்டிருந்தது.

சப்தம் வந்த திசையைக் கூர்ந்து கவனித்த போது இரண்டொரு நீப்பொறிகள் மினுக்குமினுக்கெனத் தோன்றி அவிந்துகொண்டிருந்தன. வார்டரின் தயவால் கிடைத்த ஏதோ ஒரு பீடியைப் பற்றவைக்க யாரோ 'சக்கி' அடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அடித்தவருக்குத் திறமைக் குறைவோ அல்லது காற்று மிகவும் குளிர்ந்து சூடேறத் தக்க சூழ்நிலை இல்லாத தாலோ போதிய பொறி கிளம்பவே இல்லை. நான் பார்த்துக்கொண்டே இருந்தேன்.

"சனியன், பத்திக்க மாட்டேங்கிறது" என்று அந்தக் குரல் அலுத்து முணுமுணுத்துக்கொண்டது என் காதில் விழுந்தது. உடனே அதைத் தொடர்ந்து நடந்து போகும் சப்தம் கேட்டது. மூலையில் இருந்த ஹரிக்கேன் விளக்கு பொிதாக்கப் பட்டதும், நான் ஊகித்துக்கொண்டு, "விளக்கை அணைத்துவிடாமல் ஜாக்கிரதையாகப் பற்றவை யுங்கள்" என்று என் இடத்திலிருந்தே உஷார் படுத்தினேன்.

என் எச்சரிக்கை பலிக்கவில்லை. அந்த உருவம் விளக்கைப் பொிதாக்கி, பீடியை வாயில் இடுக்கிக் கொண்டு, விளக்கின் சிம்னியைத் தூக்கிவிட்டு, அதன் இடுக்கின் வழியாகப் பீடியை உட்புறம் நுழைத்துத் திரியோடு ஒட்டி இரண்டு தரம் காற்றை இழுத்துப் பற்றவைத்ததும் குப்பென்று இரண்டு மூன்று தரம் வீசிப் படர்ந்து எறிய ஆரம்பித்தது. அந்த உருவம் அதைச் சிறிதாக்கித் தந்திரமெல்லாம் பண்ணிப் பார்த்தும் முடியவில்லை. அவியப்போகும் உயிரின் மரணசேஷ்டைகளை - துடிதுடிப்பை - ப் போல் சில விநாடிகள் படபடக்கென்று அடித்துக்கொண்டு இருந்து விட்டுக் கடைசி மூச்சு வெளியேறுவது போலக் குப்பென்று மீதி எறிதலிட்டு ஒய்ந்தது.

இதைப்பற்றிய சிந்தனை ஏதும் இல்லாமல் அந்த உருவம், பீடியை இழுத்துக்கொண்டு தன் இடத்துக்குப் போகும் சப்தமும் காதில் விழுந்தது. எங்கும் ஒரே அமைதியாக இருந்தது. எனக்குத் தூக்கம் வரவில்லை. கொஞ்ச நேரம் கழித்து வார்டரின் பூட்ஸ் சப்தம் மட்டும் அந்தச் சீனைத் தையில் பரவி வருவதால் 'சரக் சரக்' என்று சேட்க ஆரம்பித்தது. எங்களுக்கு முன் இருக்கும் பிளாக்கைச் சுற்றிவிட்டு எங்கள் பிளாக்கைச் சுற்றிப் போக வந்துகொண்டிருந்தான் அவன். நான் எழுந்து உட்கார்ந்து, போகும் அவனையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

எதிரே சற்றுத் தூரத்தில் இன்னொரு ஹரிக்கேன் வெளிச்சம் தெரிந்தது. எங்களுக்குப் பின்னால் இருக்கும் இன்னொரு பிளாக்கைச் சுற்றிக் கொண்டு எதிர் திசையிலிருந்து வந்துகொண்டிருந்தான் மற்றொரு பாரா வார்டர். மூன்று பிளாக்குகளையும் உள்ளடக்கின வெலியேராமாகச் சுற்றிவரும் பாதையில் அவர்கள் இருவரும் நேராக எதிர் எதிரே வந்துகொண்டிருந்தார்கள். எங்கள் பிளாக்குக்கு மத்தியில் வந்து சில நிமிஷங்கள் சந்திக்க இருந்தார்கள்.

முதல் வார்டர் சற்றுக் கிட்ட வரவும் அவனைக் கூப்பிட்டு, "வார்டர், இந்த விளக்கு அணஞ்சு போச்சு. அதை எத்திக் கொடுத்துவிட்டுப் போ" என்று அழைத்தேன். போகும் வழியை மடக்க இஷ்டமில்லாமலோ, அல்லது அலக்ஷ்யமாகவோ அவன், "அணஞ்சு போச்சா? இருட்டிலே கிடங்க" என்று முதலில் சொன்னவன் பிறகு வேண்டா வெறுப்பாக இளக்கம் காட்டுவது போல், "வறேன், வறேன்" என்று இழுத்துச் சொல்லிக்கொண்டே மேலே நடந்தான்.

அவன் 'இருட்டில் கிடங்க' என்று பொருத்தமாகத்தான் சொன்னான். வெளி உலகம் தெரியாமல்தானே எங்களை அங்கே இருட்டடித்து வைத்திருந்தார்கள்? எப்படியும் அவன் வருவான் என்ற நம்பிக்கையுடன் நான் எழுந்து இருட்டில் ஒரு குறிப்பாகத் தடம் பார்த்துப் போய் ஹரிக்கேன் விளக்கை எடுத்துக்கொண்டு கம்பிக்கிராதியின் ஓரத்தில் வந்து நின்றுகொண்டிருந்தேன். அந்த இரண்டாவது வார்டரும் அந்த இடத்தை நெருங்கிவிட்டான். அவன் நடை சற்று வேகமாக இருந்தது.

சில எட்டுக்கள் தள்ளி வரும்போதே அவன், "என்ப்பா, எதுக்கு அவுங்க கத்தறாங்க?" என்று

முந்தினவனைக் கேட்டான். வார்டர்கள் கருத்தில் ஒரு கைதி பேசுவதும் கேட்பதும் கத்தல்தான்.

"விளக்கு அணஞ்சு போயிருச்சாம்; எத்திக் குடுக்கணுமாம்! குளிர் விறைக்குது. ஒரு பீடி இருந்தாக் குடு அண்ணே!" என்றான் அவன்.

மற்றவன் ஒரு பீடியை எடுத்து அவன் கையில் திணித்துக்கொண்டே, "சரி, நீ சுத்துக்கிட்டுப் போ. நான் ஆபீசுக்குப் போய் டெபுடி ஜெயிலர் கிட்டத் தகவல் சொல்லிட்டு வர்றேன்" என்றான்.

"எதுக்கப்பா இங்நேரத்திலே? என்ன விசேஷம்?" என்று கேட்டான் அவன்.

"முதல் பிளாக்கிலே ஒரு கைதி இறந்துபோய் விட்டாரு" என்று அவன் சாவதானமாக இழுத்துச் சொன்னான்.

நான் திடுக்கிட்டுப் போனேன்.

"என்ன, செத்தா போயிட்டார்!" என்று கத்திக் கேட்டேன்.

"ஆமாங்க, வந்திரிச்சு வந்திருக்காரு. மயக்கம் போட்டு விழுந்துட்டாராம்.....சரி, நீ போய்வா. நான் போறேன்" என்று சொல்லிக்கொண்டே முன்னுக்கு நடந்தான்.

"எந்நேரம் அப்பா இருக்கும் அவர் இறந்தது?" என்று பதற்றத்துடன் கேட்டேன்.

"ஒரு நாழிக்கு முந்தி" என்று சொல்லிய வாறே அவன் போய்க்கொண்டிருந்தான்.

அப்போது எனக்குச் சட்டென ஞாபகம் வந்தது. எறக்குறைய அதே சமயத்தில்தான் விளக்கு அணைந்தது. அதே சமயம் எனக்குப் பக்கத்தில் ஆரம்பித்த ஒரு பரபரப்பு, பிளாக்கு முழுவதும் ஒரு விகாடியில் பரவியது. அசைவும் குரலும் களேபரமாகக் கிளம்பிச் சலசலப்பு ஏற்பட்டது. அரையும் குறையுமாக விஷயம் காதில் பட்டவர்கள் பதறி எழுந்து அந்த இடத்திற்கு ஓடி வந்துகொண்டிருந்தார்கள்.

"என்னப்பா விஷயம், யாரது?" என்று தலைவன் குரல் எல்லோருக்கும் மேலாகக் கேட்டது.

"மனிசன் எங்கிருந்தோ இங்கே வந்து உசிரை விட்டாரு, வீட்டிலே சாகாரோ" என்ற சொல்லிக் கொண்டே முதல் வார்டர் எங்கள் பக்கமாக வந்து கொண்டிருந்தான்.

செத்துப் போய்விட்டார் எங்களில் ஒருவர்; வார்டர் சொன்னபடி எங்கிருந்தோ வந்து இங்கே ஓர் அனாதையாக! சிறைக்குள் நாற்றுக் கணக்கானவர்கள் நுழைந்திருக்கிற இந்த நரலோந்து மாதங்களில் இன்றுதான் சாவு நுழைந்திருக்கிறது, சிறை அதிகாரிகளுக்குத் தெரியாமல், அவர்கள் அநுமதி பெறாமல்!

"யாரப்பா அது? அவர் பேரு தெரியுமா?" என்று வார்டரிடம் விளக்கை எற்றிக் கொடுக்கக் கம்பி ஓரம் அதை வைத்துக்கொண்டே கேட்டேன்.

வார்டர் ஒரு நீக்குச்சியைக் கிழித்து, வெளியே இருந்து கம்பி இடுக்குகளின் வழியாக விரல்களை நுழைத்து விளக்கை எற்றிக்கொண்டே, "யாரு கண்டாங்க? ஊர் பேரைக் கவனிச்சுவச்சுக்கிடறது தானு எங்க வேலை? என்னவோ ஒண்ணு குறைஞ்சுது" என்று சர்வசாதாரணமான குரலில் ஒரு விதக்கிளர்ச்சியும் காட்டாமல் ஒரு சாவைப்பற்றிப் பேசினான். வஸ்தவம், ஒரு கைதியைப் பற்றி அவனுக்கு இதற்குமேல் என்ன சிரத்தை இருக்க முடியும்?

தலைவன் உட்பட எல்லோரும் அந்த இடத்திற்கு வந்து கூடிவிட்டார்கள். தலைவன் குரலைக் கேட்டதும் வார்டர் எங்களிடம் காட்டிய அந்த அலக்ஷ்யத்தைக் கொஞ்சம் தளர்த்திக் கொண்டு, அடுத்த கதவை சுற்றிக்கொண்டு வரும்பொழுது விவரம் அறிந்து வருவதாகச் சொல்லிவிட்டுப் பாராவைத் தொடர்ந்தான்.

அவன் பூட்ஸ்களின் சப்தம் குறைந்து விளக்கு வெளிச்சமும் மறைந்துவிட்டது.

அங்கிருந்த எல்லோருடைய முகங்களும் அழுத்த திக்கக்குறிப்பைக் காட்டின. ஒரு சந்தோஷமான குடும்பமாக இருந்த அவர்களிடையே ஒரு பெரும் தல் ஏற்பட்டுவிட்டது. இம்மாதிரியான சம்பவங் களுக்கும், சந்தர்ப்பங்களுக்கும் அங்கிருந்த யாவரும் தயாராக வந்திருந்தார்கள் என்றாலும், திடீரென நடுசிரியில் தூக்கத்தின் நடுவில் ஒரு மரணம் ஏற்பட்டுவிடும் என்பதை யாரும் ஊகிக்க வில்லை. தலைவன் மிகவும் சாந்தமாக, உள்ளக் கிளர்ச்சியை மூற்றும் அடக்கிக் காட்டிய ஒரு குரலில், "இன்னும் எத்தனை இப்படி எற்பட இருக்கிறதோ? யாருக்குத் தெரியும், கடவுளின் மனசு!" என்று சொல்லி ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டு இருப்புக் கம்பிகளில் முகத்தைப் பதித் துக்கொண்டு வார்டரின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தான். மற்றவர்கள் அவரவருக்குத் தோன்றியபடி பேசிக்கொண்டிருந்தனர். விவரம் அறிய எல்லோரும் துடித்துக்கொண்டிருந்தனர்.

அடுத்த சுற்றின்போது பாரா வார்டர் சில தக வல்களைச் சொன்னான். அவர் மாரடைப்பினால் இறந்து போனதாகத் தெரிந்தது. அவர் யார் என்பதையும் எங்களில் சிலர் அறிந்திருந்தோம். அவருக்கு மயக்கம் எற்பட்டதும், அங் கிருந்த நண்பர்கள் உடனே ஏதோ சிகிச்சை செய்து பார்த்தார்கள். சிறை டாக்டரை வர வழைக்கப் பிளாக் வார்டர் மூலமாக ஏற்பாடு செய் தார்கள். ஆனால் சிறை விதிப்படி, தக்க மூகாந் தரம் காட்டி அசாதாரணமான ஒரு சந்தர்ப்பத்தில், பூட்டிய சிறைக் கதவைத் திறப்பதற்கு அதிகாரி பெற்றுவைத்திய உதவி வருவதற்குள் அவருடைய கடைசி மூச்சு நின்றுவிட்டதாம்.

வார்டர்கள் மறுபடியும் பாராவுக்குப் போய் விட்டார்கள்.

நாங்கள் எல்லோரும் பிளாக்கின் நடுமத்திக்கு வந்து சேர்ந்தோம். தீவிர யோசனையில் ஆழ்ந் திருந்த தலைவன், "சரி, அந்த ஆத்மா சாந்தி

அடைய...” என்று இழுத்து, “ஒரு நிமிஷம் மௌனமாகப் பிரார்த்தனை செய்வோம்” என்றான். மௌனப் பிரார்த்தனை முடிந்து அவரவர் இடத்திற்குப் போய்விட்டோம்.

நான் என் படுக்கையில் உட்கார்ந்துகொண்டேன். தூக்கம் சுத்தமாகக் கலைந்துபோய்விட்டது. ஒரு பிணத்தோடு வீட்டில் இரவைக் கழிக்க வேண்டியிருந்த இரண்டொரு சந்தர்ப்பங்கள் எனக்கு அப்போது ஞாபகத்துக்கு வந்தன. தேகம் அயர்ந்தேனும், ஒருவிநாடி கண்கள் தூக்க நினைவுக்குப் போனதாக ஞாபகம் இல்லை. இன்றைய அப்படித்தான் இருந்தது.

இப்போது பிணமாகிவிட்ட அந்த உருவத்தை எனக்கு நன்றாகத் தெரியும். நான் ஒரு ஜில்லாவிலிருந்து என்று அந்தச் சிறைக்கு ‘எஸ்கார்ட்’ செய்யப்பட்டு வந்து, அந்தச் சிறையில் என் கம்பம் பதிவு செய்யப்பட்டதோ, அதே தினத்தில்தான் அவரும் இன்னொரு ஜில்லாவிலிருந்து ‘எஸ் கார்ட்’ ஆகி வந்தார். எனக்கு மூன்றினை எண் உள்ளவர் அவர். சிறைக்குள் அவர் முன்னும் நான் பின்னுமாகக் காலடி எடுத்துவைத்தோம்.

அவர் இறந்துவிட்டார். தேசத்திற்காக எத்தகைய தியாகத்தையும் செய்யக் கூடியவர், தேச கௌரவத்திற்காகப் போர்முனைக்குப் போகிறவர் என்ற அவரை மதிப்பிட்டு, “உங்கள் காரியத்தில் வெற்றி பெற்று ஜயத்துடன் திரும்ப வாருங்கள்” என்றுதான் அன்று அவரை ஆசீர்வதித்து அனுப்பி இருப்பார்கள். அந்த ஆசீர்வாதம் பலிக்காமற் போய்விட்டது.

அவரது குடும்பம் அவரை எப்படி அனுப்பி வைத்திருக்கும்? சௌசரத்தியமான ஒரு வாழ்க்கையில் தங்கள் ரத்த சம்பந்தமுள்ளவர் ஒருவர் ஈடுபடப்போவதை எண்ணி எவ்வளவு வேதனையுடன் அனுப்பிவைத்திருப்பார்கள்? அனுப்பிவிட்ட பிறகு அவர் திரும்ப வரும் நாளை எவ்வளவு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள்? அந்த ஆசை நிறைவேறுவதற்கு இல்லை.

மாதம் ஒரு முறை அவரிடமிருந்து வந்து கொண்டிருந்த கடிதத்தைக் கொண்டு ஓரளவுக்குத் திருப்திப்பட்டுக்கொண்டிருந்த அவருடைய இளம் மனைவி என்ன என்ன கனவுகள் கண்டு கொண்டிருந்திருப்பாளோ! தன் கணவன் உடல் நலம் எவ்வளவு குன்றி வந்து சேருவான் என்பதை நினைத்துக் கழியும் பொழுதுகளை எவ்வளவு வேதனையுடன் கழித்துக்கொண்டிருப்பாள்? இந்தச் செய்தி அவளுக்கு எட்டும்போது.....

தன் ஒன்றரை வயசுக் குழந்தைக்கு ‘தாயஞ’ வைப்பற்றி என்னவெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பாள்? இதைக் கேட்டதும் அவள்.....

என் நினைவை இப்படி எல்லாம் ஓடவிட்டுக் கொண்டே படுக்கையில் சாய்ந்துகொண்டிருந்தேன். மேற்கூரைக்கு மேல் வெகுதூரம் தாண்டிப் போய் விடியற்காலம் வந்துகொண்டிருந்தது. காற்று மிகவும் குளிர்ந்துபோய்ப் பற்கள் கிட்டும் படியாக உடலை நடுக்கிக்கொண்டிருந்தது. எதிரே காட்டிற்கு மேலே ஒட்டிக்கிடந்த அரைகிலோ வரனத்திலிருந்து உதிர்ந்து எங்கோ விழுந்து விட்டது. இருள் விலகி வைகறை ஆரம்பமாவதற்கு அறிகுறியான ஒரு கும்மிருட்டுக் கவிந்திருந்தது. காலைக் கஞ்சியைத் தயாரிக்கும் வேலையில் கைதிகள் ஈடுபடும் சப்தம் சற்றுத் தள்ளி இருக்கும் சமையலறையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தது. ஜலம் தேக்கி வைக்கப்படும் தொட்டிகளில் குழாய் ஜலம் சரிரென்று பீச்சி அடிக்கும் சப்தம் காதுகளில் விழுந்துகொண்டிருந்தது.

திடீரென்று எல்லாவற்றிற்கும் மேலாகச் சிறைச் சங்கின் சப்தம் வீரிட்டு எழுந்து அன்றைய வேலைமுறை ஆரம்பத்தைத் தெரிவித்தது. இன்னும் அரைமணி நேரத்தில் இன்னொரு தரம் சங்கு ஊதினதும் எங்களைக் கணக்குப் பார்த்துச் சிறைப் பிளாக்கின் தாழ்ப்பாளை விலக்குவார்கள். நாங்கள் ஓடிச்சென்று அத்தத் தியாக உருவத்தைக் கடைசி முறையாக ஒரு தரம் பார்த்து எங்கள் மரியாதையை அதற்குச் செலுத்துவோம்.

வானம் நன்றாக வெளுத்துவிட்டது.

சிறைச் சங்கு தொடர்ந்து சில விநாடிகளுக்கு அலறி ஓய்ந்தது. தினம் போலத்தான் அது ஊதியது. என்றாலும் அன்று என்னவோ அந்தச் சப்தம் வெகு கோரமாகக் காதில் விழுந்தது. ஒருவரை ஒருவர் பிரார்த்தனைக்குக் கூப்பிட்டுக் கொண்டே சுருட்டி மடக்கி எழுந்தோம். விழிப்பின் அறிகுறியாக வழக்கப்படியுள்ள ஆர்ப்பாட்டம் ஒன்றும் அன்று காணவில்லை. கனவில் நடப்பவர்களைப்போல எழுந்து வந்து, பிரார்த்தனை வரிசையில் நின்றுகொண்டார்கள். சாவைப்பற்றிய நினைவில் ஒவ்வோர் இருதயமும் கனத்துப்போய் இருந்தது.

பிரார்த்தனையும் ஹீன ஸ்வரத்தில் உருக்கமாக ஆரம்பித்து முடிந்துவிட்டது. ‘பைலி’ல் உட்கார்ந்து கொண்டோம். நான்கு நான்கு பேர்களாக உட்கார்ந்து, இரவில் முன்தினம் மாலை எண்ணி அடைக்கப்பட்ட தொகை சரிபார்க்கப் படுவதற்காக எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தோம். ஒவ்வொருவருடைய நினைவும் அன்று அந்த உருவத்தைப் பற்றியே இருந்தது.

பிளாக்கின் கதவு திறந்தது. ஜெயிலரும், சம்பந்தப்பட்ட வார்டர்களும் உள்ளே நுழைந்து நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்துகொண்டிருந்தார்கள். முதல் வரிசையில் முதலில் தலைவன் நின்றுகொண்டிருந்தான். அவனுக்கு அடுத்த வரிசையில் நான் நின்றுகொண்டிருந்தேன்.

வார்டர்கள் எண்ணுவதற்காகச் சுற்றிப் போய் விட்டார்கள். தலைவனுக்கு நேராக வந்ததும் ஜெயிலர் சட்டென நின்றான். பெயரைக் கூப்பிட்டு அழைத்தான். தலையை நேராக்கி முகத்தைத்

திருப்பி யிருந்த தலைவன் அப்போதுதான் கவனம் இழுக்கப்பட்டு ஜெயிலரைப் பார்த்தான்.

வழக்கம்போல ஜெயிலர் தன்னிடம் ஏதாவது விஷயம் தெரிவிக்கப்போகிறான் என்று தலைவன் பேச்சுக்குத் தயாரானான்.

ஆனால் ஜெயிலர் எடுத்ததும் மெதுவாகச் சொன்னான்: "இன்று உங்களுக்கு ஓர் அசுபமான நாள். நம் கைதிகளில் ஒருவர் திடீரென இறந்துவிட்டதற்கு சொம்பவும் வருத்தப்படுகிறேன்." அவன் குரலில் மனப்பூர்வமான அநுதாபம் ஒலித்தது. ஒரு கைதியின் மரணத்துக்குச் சிறை அதிகாரிகளின் அநுதாபம் கிடைப்பதைப்பற்றி அங்கு இருந்தோர் பலர் குறிப்பான பார்வை ஒன்றைப் பரிமாறிக்கொண்டார்கள்.

அந்த அநுதாப வார்த்தைகளை ஏற்றுக்கொண்ட தலைவன் ஜெயிலரிடம் சிறை எல்லையை விட்டு வெளியேற்றுவதற்கு முன் அந்தத் தியாக உலுக்குத் தங்கள் மரியாதையைச் செலுத்துவதற்கு அநுமதி கேட்டான்.

ஜெயிலர் ஒரு கணம் யோசித்தான். "சரி, உங்களுக்குள் கட்டுப்பாடாக மட்டும் சற்று நடந்து கொள்ளுங்கூடுமானால் எனக்கு ஆக்ஷேபம் இல்லை" என்றான். நாங்கள் வாக்களித்தோம்.

இதற்குள் வார்டர்கள் எண்ணிக்கொண்டே அந்த இடத்திற்கு வந்துவிட்டார்கள். ஜெயிலரின் கவனம் சற்று அதன் பக்கமாகத் திரும்பியது. கணக்குச் சரியாக இருந்தது. ஜெயிலர் அதை ஒப்புக்கொண்டுவிட்டுக் கையில் இடுக்கிக்கொண்டிருந்த தொப்பியை அணிந்துகொண்டு வெளியே போகத் திரும்பிச் சில அடிகள் நடந்ததும் சட்டென்று நின்றான். எதையோ நினைத்துக்கொண்டவன் மாதிரி பட்டது. விருட்டென்று திரும்பித் தலைவன் பக்கமாக வந்தான்.

"நான் ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். இப்போதுதான் ஞாபகத்துக்கு வந்தது" என்று ஆரம்பித்து லேசாக ஒரு பெருமூச்சு விட்டான்; கம்மின குரலில் சொல்லலானான்:

"...நேற்றிரவு மரணமடைந்த அந்தக் கைதியை 'ஏ' வகுப்புக்கு மாற்றச் சர்க்கார் சிபாரிசு செய்து சிறைச் சூப்ரெண்டுக்கு ஓர் உத்தரவு நேற்றுத் தபாலில் வந்திருக்கிறது...."

அதற்குமேல் அவன் சொன்ன ஒன்றிரண்டு வார்த்தைகள் கூட்டத்திலிருந்து எழுந்த பலவித ஆச்சரியக் குறி காட்டும் ஒலியிடையே கலந்தன.

ஆனால் தலைவன் குரல்மட்டும் அழுத்தமாக ஒரு வறண்ட சிரிப்பினிடையே காதில் விழுத்தது: "ஆனால், மனிதனும் சட்டமும் பார்த்துக் கொடுக்க முடியாத ஒரு வகுப்புத்தான் அவருக்குக் கிடைத்துவிட்டதே!"

ஒரே சிரிப்பு; பிளரக் எதிரொலி கிளப்பியது.

சிறைச் சங்கு அலற ஆரம்பித்தது.

செவ்வாயில் அதிசயம்

செவ்வாய்க்குக் குஜன் என்று வட மொழியில் பெயர். அதன் பொருள் பூமியின் பிள்ளை என்பது. பூமிக்கு எப்படிக் குழந்தை பிறந்தது, எப்போது பிறந்தது என்ற ஆராய்ச்சிக்குள் புகாமல், இக் காலத்து விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியை வைத்துக்கொண்டு பார்த்தால் ஒரு விதத்தில் செவ்வாய்க் கிரகத்தைப் பூமியைப் போன்றது என்று சொல்லலாம். இந்தப் பூமியில் நாம் வாழ்கிறோம்; செவ்வாயிலும் சிலர் வாழ்கிறார்கள். அவர்கள் எப்படி இருப்பார்கள் என்று சொல்வதற்கு முடியவில்லை. ஆனாலும் அங்குள்ள ஜீவர்கள் பயிர் பண்ணிச் சாப்பிடுவார்கள் என்று சொல்லலாம். பயிர் பண்ணுவதற்கு ஏற்ற விசாலமான கால்வாய்கள் செவ்வாய்க்கிரகத்தில் இருக்கின்றனவாம்.

செவ்வாய்க் கிரகத்தின் விட்டம் ஏறத்தாழ 4,230 மைல்கள். பூமியின் விட்டம் 8,000 மைல். சூரியனுக்கும் செவ்வாய்க்கும் உள்ள தூரம் கிட்டத்தட்டப் பதினான்கு கோடியே பத்து லக்ஷம் மைல் (141,000,000). செவ்வாய்க் கிரகத்தில் இருப்பவர்களுக்கு ஒரு வருஷத்திற்கு 687 நாட்கள்.

செவ்வாயிலே பெரிய அதிசயம் என்னவென்றால் அங்கே மலைகளே இல்லை; எல்லாம் சமவெளி. மேகம் இல்லை; அதனால் மழை இல்லை. இடையிலே பாலைவனத்தைப்போன்ற வெளிகள் மிகுதியாக இருக்கின்றன. 'அப்படியானால் அங்கே எப்படி ஜீவர்கள் இருக்க முடியும்?' என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? செவ்வாயின் இரண்டு தருவங்களிலும் பனிக்கட்டிகள் நிரம்பின பிரதேசங்கள் இருக்கின்றன. தூரதிருஷ்டிக் கண்ணுடியில் அவை வெளுப்பாகத் தெரிகின்றன. அங்கே உருகி நிற்கும் ஜலத்தைக் கால்வாய் வழியாக அந்த வெளிகளுக்குக் கொண்டுவந்து பயிரிடுகிறார்கள். சில பருவகாலங்களில் சாகுபடி செய்வதில்லை. அப்பொழுது தூரதிருஷ்டிக் கண்ணுடியில் பார்த்தால் கால்வாய்கள் தெரிவதில்லை.

செவ்வாயிலுள்ள கறுப்பு அடையாளங்கள் அங்குள்ள கால்வாய்கள் என்று விஞ்ஞானிகளில் சிலர் சொல்கின்றனர். சிலர் அதை மறுக்கிறார்கள். 3000 அல்லது 4000 மைல் தூரம் அக்கால்வாய்கள் இருக்கின்றனவாம்.

மானிடவாழ்வுக்கு எல்லை உண்டா?*

காட்டன் என். சேஷாத்திரிநாதன்

[“நெடுநாள் இருந்த பேரும் நிலையாகவே இன்னும் காயகற்பம் தேடி நெஞ்சு புண்ணுவர்” என்று தாயுமானவர் பாடினார். நெடுங்காலம் வாழ வேண்டுமென்றே ஒவ்வொரு மனிதனும் விரும்புகிறான். அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகப் பல பல ஆண்டுகளாக மனித ஜாதியினர் எத்தனையோ ஆராய்ச்சிகள் செய்துவருகிறார்கள். மணி மந்திர ஔஷதப் பிரயோகம் செய்கிறார்கள். ஆனலும் மரணத்தை மீறுவதற்கு யாராலும் முடிகிறதில்லை. தேவர்கள்கூடச் சாவா மருந்தாகிய அமுதத்தை உண்டார்கள். ஆனலும் அவர்கள் நித்தியமாக இருக்கிறார்களா? அவர்களுக்குக்கூட மரணம் உண்டு என்றுதான் நூல்கள் சொல்கின்றன. “தேவர் அமுதுண்டுஞ் சாவ ’ என்று சிலப்பதிகாரம் சொல்கிறது. மரணத்தினின்றும் தப்புவது இருக்கட்டும்; மனிதன் “வேதநூற் பிராயம் நூறும்” வாழ வகை செய்ய முடியுமா? முடியும் என்றே எழுதிவைத்திருக்கிறார்கள், விஞ்ஞானிகள் பலர் அந்தத் துறையில் தங்கள் ஜீவனையே கொடுத்து உழைத்திருக்கிறார்கள். அவர்கள் உழைத்த கதையைச் சொல்லுகிறது இந்தக் கட்டுரை. —ப - ர்.]

வாழ்வுக்கு முடிவு இருக்கலாம். ஆனல், ஆயுள் நூறுதானு? அல்லது அதற்கும் மேல் நீண்ட காலம் வாழ முடியுமா என்று கேட்டால், திட்டமாகச் சொல்ல முடியாது. நூற்றிருபது வயசு இருந்தவர்களைச் சிலரைக் குறிப்பிடலாம். அதற்கும் அதிக வயசாகும் மட்டும் இருக்க முடியுமா என்று கேட்டால் அதுவும் முடியலாம் என்றுதான் சொல்லவேண்டும். நூற்றிருபது வயசையே எல்லையாக வைத்துக்கொள்வோம். இந்த எல்லையை ஒவ்வொருவரும் ஏன் அடையக்கூடாது?

இந்த வயசு மட்டுமல்ல, இறப்பற்ற வாழ்வு வேண்டும் என்ற விருப்பம் மனிதனுக்கு ஆதிகாலிலிருந்தே உண்டு. “என்றும் பதினறு வயசாகவே இரு” என்று அதுக்கிரகிப்பர் பெரியோர். அதாவது, மனிதன் இறப்பில்லாமலே வாழ்ந்தால் மட்டும் போதாது; என்றும் யௌவனத்தோடு வாழவேண்டும் என்ற எண்ணமும் உண்டு. யௌவனத்துடன் வாழ்ந்தால் போதுமா? சகல பாக்கியத்துடன் வாழ வேண்டாமா? இப்படிப்பட்ட வாழ்வைத் தேடுவன இரண்டு சாஸ்திரங்கள்: ஆயுர் வேதம், ரஸாயன சாஸ்திரம் என்பன. ஆயுர் வேதம் அமிருத ஸஞ்சீவியைத் தேட முயன்றது. ரஸாயன சாஸ்திரம் எதையும் தங்கமாக்க முயன்றது. ஆயுர்வேதம் தேடிய அமிருத ஸஞ்சீவியும், எதையும் பொன்னாக்கும் பரிசு வேதியும் மனிதனுக்கு அகப்பட்டுவிட்டால் மனிதன் என்றென்றைக்கும் யௌவனத்தோடு பொன்னல் பெறக்கூடிய சகல பாக்கியங்களும் பெற்று வாழ்வதில் யாதொரு குறையும் இருந்திராது. ஆயுர் வேதம் அமிருத ஸஞ்சீவியைத் தேடிக் கண்டடையாவிட்டாலும், யமதூதர்களுடைய வரவை ஒத்திவைத்து வாழத் தகுந்த எத்தனையோ சாதனங்களைத் தேடிக் கொடுத்தது.

ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் (Oliver Wendell Holmes) என்ற ஆங்கில ஆசிரியர் வைத்தியராக இருந்தபடியால், அவரை ஒருவர், “ஐயா டாக்டரே, ஆயுசை எப்படி நீட்டித்துக்கொள்வது?” என்று கேட்டார். அதற்கு ஹோம்ஸ், “பிறப்பதற்குக் கொஞ்ச வருஷங்களுக்கு முன்பாகவே, ‘நீடித்த ஆயுசை உடைய தாய் தந்தை வேண்டும்’ என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்ய வேண்டும். அதுதான் முதலாவது செய்ய வேண்டியது” என்றார். நீடித்த வாழ் நாட்களை அடையத் தாய் தந்தையர்கள் நீடித்த ஆயுசு உள்ளவர்களாக இருக்கவேண்டும்.

நான் ஒரு நாள் ரயில் பிரயாணம் செய்துகொண்டிருக்கையில் கூட இருந்தவர்களில் லௌகிக சந்நியாசி ஒருவர்: அவர் தலையிலே ஒரு நரைகூடக் காணவில்லை; உறுதியான முத்து வெண்பற்கள் அவர் சிரித்த போதெல்லாம் தோன்றின. பேச்சும் வெகு கம்பீரமாகவே இருந்தது. அவர் பேச்சுக்களில் தற்புகழ்ச்சியே அதிகமாகத் தொனித்தது. யாருமே அவரை ஐம்பதுக்கு மேல் மதிக்கமாட்டார்கள். முகத்தில் திரை

---

* ஸ்ரீமான் கரப்டன் அவர்கள் வெளியிட்ட கருத்துக்களை அவருடைய மனைவியார் தொகுத்து எழுதியது இது.

ஒன்றேனும் காணப்படவில்லை. நான் அவரோடு சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், அவர் பேச்சுக்கிடையே, "உங்களைப் பார்த்தால் டாக்டர்போல் இருக்கிறதே? என் வயசைத் தங்களால் மதிப்பிட முடியுமா?" என்று கேட்டார். அதற்கு நான், "சுமார் அறுபது இருக்கலாம்" என்றேன். அதைக் கேட்டதும் அவர், 'ஹா! ஹா!' என்று சிரித்து, "எனக்கு வயசு எண்பது ஆயிற்று" என்றார். ஆறடி உயரம்; ஒல்லியான உருவம்; இறுகின தசைகள்; ஒரு பல்லேனும் அசையவில்லை; அவரை எண்பது வயசு என்றவரா கவே மதிக்க முடியவில்லை. அவர், திகைத்துப் பார்த்துக்கொண்டிருந்த என்னிடம், "நான் அதிகாலையில் எழுந்துவிடுவேன். ஐந்து மைலுக்குக் குறையாமல் நடப்பேன். வேளை தோறும் கணக்கறிந்து சாப்பிடுகிறேன். இதுமட்டும் எந்த விதமான மருந்தும் சாப்பிட்டு அறியேன். என் தம்பி ஒருவன் இலங்கையில் இருக்கிறான். அவனுக்கு இன்னும் ஐம்பத்தைந்து வயசு ஆகவில்லை. அவனைப் பார்த்தால் என் தமையன் என்றுதான் சொல்வீர்கள். இதற்கெல்லாம் என்ன காரணம் ஐயா? என் நற்பழக்கங்கள் அல்லவா? என் சிஷ்யன் இதோ இருக்கிறான். நன்றாய்ப் பாடுவான்; இவனுக்கும் இந்த உபதேசத்தைத்தான் சொல்லுகிறேன். இவனுக்குக் கேட்க மனம் இல்லை ....." என்றெல்லாம் தம் இயம நியமப் பிரபாவங்களை அடுக்கிக்கொண்டே வந்தார்.

மூடிவிலே நான் அவரிடம் ஒரு கேள்வி கேட்டேன்: "ஆமாம், தங்கள் தகப்பனாரும் பாட்டனாரும் எத்தனை வயசு வரையில் இருந்தார்கள்?" அதற்கு அந்தச் சந்நியாசி, "தொண்ணூற்றுநாலு வயசுவரையில் இருந்தார்கள்" என்றார். என்னிடம் பேசிய சந்நியாசிக்கு இருந்த திட சரீரமும் நீடித்த ஆயுசும் தலைமுறை தலைமுறையாக வந்தவை. ஆனால் சந்நியாசியாக இருந்தமையாலும், ஒழுங்காக இயம நியமக் கிரமங்கள் தவறாமல் வாழ்ந்தமையாலும் பாரம்பரியமாகப் பெற்றிருந்த குணத்தைக் காப்பாற்றிக்கொண்டார். அவருக்கு ஆயுசு தொண்ணூற்றுநாலுக்கு மேலும் சொல்லலாம். பாரம்பரியமாக நாம் பெறும் வாழ்நாட்களைச் சரியான முறையில் நடத்த வேண்டும், இந்த ஆயுசு எல்லையைத் தாண்ட வேண்டும் என்று பலவித உபாயங்களை மனிதர்கள் தேடுகிறார்கள்.

வாலிபர்களுடைய ரத்தத்தை, ரத்தக் குழாய் வழியாக வயோதிகர்களுடைய உடலுக்குள் செலுத்தினால் அவர்களுக்கு யௌவனம் ஏற்பட முடியும் என்று ஒரு கொள்கை இருந்தது. இதைத் தவறு என்று சொல்ல முடியாது. விஞ்ஞானிகள், உடலிலிருந்து சில ஜீவாணுக்களைப் பிரித்து வெகு நாட்கள் மட்டும் பெருகச் செய்து வளர்த்துப் பல்கச் செய்கிறார்கள். இப்படி வளர்க்க யௌவன தசையில் இருக்கும் மிருகங்களுடைய ரத்தம் வெகு உதவியாக இருக்கிறது. ஆனால், முதுமையை அடைந்த உடலின் ஜீவாணுக்கள் இளமைப் பருவத்தில் உள்ள ஜீவாணுக்களை விட அதிகமான மாறுபாடுகள் அடைந்திருக்கலாம். அப்படி மாறுபாடுகள் அடைந்திருப்பதனாலே, அவை திரும்ப யௌவன தசையை அடையுமா என்பது சந்தேகந்தான். இளமை நிலையில் இருக்கும் ஜீவாணுக்கள் நீர் நிறைந்தவையாக இருக்கும். ஜீவாணுக்கள் முதுமை அடையும்போது அவற்றில் அடங்கியிருக்கும் நீர் குறைந்துபோகும். அவற்றில் அடங்கிய நீர் குறையுந்தோறும் அவற்றின் பெருகிவளரும் சக்தியும் குறைவுபடும். அதோடு அவற்றிற்கு நீரை ஏற்றுக் கொள்ளும் சக்தியும் குறைந்துபோகிறது. அணுஜீவன்களில் உள்ள நீர் குறைந்துவிட்டால், ஜீவாணுக்களுக்குப் பெருகி வளரும் சக்தி மிகவும் குறைவாகிவிடுகிறது. இயற்கை விதிப்படி அணுஜீவன்களுக்கு இறப்பு இல்லாமைக்குக் காரணம், அவை முதுமை அடையாமையே. அவை முதுமை அடையும் முன்னரே, பிரிவுபடுதல் என்ற முறைப்படி இரண்டு தனித்தனி அணுஜீவன்களாகப் பிரிந்து தனித்தனியே வாழத் தலைப்படுகின்றன. ஆனால் மனித சரீரத்தை ஆக்கி அமைக்கின்ற ஜீவாணுக்களோ, முதுமை அடைவதற்கு முந்தியே பிரிந்து தனித்தனி அணுஜீவன்களாகி யௌவனத்தோடு வாழும் தன்மையை இழந்துவிட்டன. இருந்தபோதிலும், மானிட சரீரத்தில் வம்சவிருத்திக்காக ஒவ்வொரு சரீரத்திற்குள்ளும் தயாராகவரும் அணுஜீவன்களில், முதுமை அடையாமல் பிரிவுபட்டு யௌவனத்தைக் காக்கும் குணம் குன்றாமல் இருப்பதைக் காண்கிறோம். ஆண்பெண்களின் சம்போகம் ஏற்பட்டு இருபால் சந்தான அணுகம் ஏற்பட்டு இருபால் சந்தான அணுஜீவன்களும் ஒன்று சேர்ந்து இரட்டை மடங்குகளாகப் பெருகிப் பலவித அவயவங்களுக்கு ஏற்ற மாறுபாடுகள் அடைந்து மானிடக் குழந்தையாகப் பரிணமிக்கின்றன.

இப்படி மாறுபாடு அடைந்த அவயவங்களாய் இருக்கும் ஜீவாணுக்களின் உணவுக்கும் உணர்ச்சிக்கும் மற்றும் பல ஜீவ உழைப்புக்களுக்கும் உடலிலுள்ள மற்ற அணுக்களை எதிர்பார்க்க வேண்டியிருப்பதால் முதுமை ஏற்பட்டுவிடுகிறது. உடலில் இருக்கும் அவயவங்களை ஒத்துழைக்கச் செய்ய, உடலில் 'ரசாயன சாலைகள்' பல உண்டு. இவைகளை ஆங்கிலத்தில் "டக்ட்லெஸ் க்லாண்ட்ஸ்" (Ductless Glands) என்பார்கள். இவைகளை ரஸாயன சாலைகள் என்றே சொல்லவேண்டும். ஏனெனில், இவை விசேஷமான சில ரசாயன சாதனங்களை ரத்தத்தில் செலுத்தி எல்லா அவயவங்களையும் ஒழுங்குபடுத்தி ஒத்துழைக்கச்

செய்கின்றன. இந்த ரசாயன சாகஸங்களின் உழைப்புக்குக் கேடு வந்தால் உடல் வளர்ச்சிக்குக் குறைகள் ஏற்படும். சிறு பிராயத்திலேயே முதுமை ஏற்படலாம்.

ஆகவே, ஒரு காலத்தில் 'தைராய்டு' (Thyroid) என்ற ரசாயன சாகஸியாகிய அவயவத்திலிருந்து சாரத்தை உட்செலுத்தி 'ஆயுசை நீடித்துக்கொள்ளலாமோ?' யௌவனத்தைத் திரும்பவும் பெறலாமோ?' என்று மேதாவியான வைத்தியர்கள் சிந்திக்கலானார்கள். ஆனால் அது நிறைவேறவில்லை. ப்ரௌன் ஸிக்குவார்ட் (Brown Sequard) என்ற விஞ்ஞானி ஒருவர் தமக்கு முதுமை ஏற்பட்டதால், முன் இருந்த ஆற்றலுடன் வேலை செய்ய முடியவில்லை என்ற கண்டபோது, தமது ஜனன அவயவத்திலிருந்து (Testes) சாரத்தை உடலில் செலுத்திக்கொண்டார். இந்தப் பிரயோகத்தினால் தமக்கு வலிமை வந்ததாக அவருக்குத் தோன்றியது.

இதை உணர்ந்து ஸ்டெய்னாக் (Steinach) என்ற ஒரு ஸர்ஜன், ஜனன அவயவ சாரத்தை அதிகமாக்கும்பொருட்டு பீஜங்களில் இருந்துவரும் குழாயாகிய வாஸ் என்னும் உறுப்பைக் கட்டிவிடும் உபாயத்தைக் கையாண்டார். முதுமை அடைந்த பல ஆடவர்கள் இந்தச் சிகிச்சையைச் செய்துகொள்ளத் தொடங்கினர்கள். இவர்களுக்கு இருந்த நம்பிக்கையினால் ஏதோ யௌவனம் சித்தித்து விட்டதுபோலத் தோன்றியது. ஆனால் உண்மையில் எவ்வித நன்மையும் ஏற்பட்டதாகத் தோன்றவில்லை. இதன் பிறகு வாரனாப் என்ற ஒரு ஸர்ஜன், சிம்பான்ஸி என்ற உயர்தரக் குரங்கின் பீஜங்களை முதுமை அடைந்தவர்களுக்கு அடிவயிற்றில் ஒட்டவைத்து வளரச்செய்தார். அவை அதிக நாட்கள் வளரவில்லை. அவை சீக்கிரமாகவே பயனற்றுப் போயின. கடந்துபோன யௌவனத்தை, இப்படிச் சிகிச்சை பண்ணிக்கொண்டவர்களில் எவரேனும் பெற்றதாகத் தெரியவில்லை. கடந்த 25 வருஷங்களாக இந்தச் சஸ்திரசிகிச்சை செய்து கொண்டவர்கள் பயன் ஒன்றும் பெறுமல் சடலத்தைப் போட்டு மண்ணுலகை விட்டு அகன்றார்கள்.

சமீபகாலத்தில் டெஸ்டோஸ்டிரான் (Testosterone) என்ற ஒரு வகையான மருந்தை இன்ஜெக்ஷன் முறையில் தயாரித்து வருகிறார்கள். இதைப் பீஜசாரம் என்று கூறலாம். இந்த மருந்தைப் பரீக்ஷை பார்க்கத் தொடங்கினவர்கள், இனிமேல் வாரனாப் பின் சிகிச்சைக்கு எவரும் ஆளாக வேண்டியதில்லை என்று எண்ணத் தொடங்கியிருக்கிறார்கள். மேலை நாடுகளில் இந்த மருந்தைப் பரீக்ஷை பார்க்கிற வைத்தியர்கள் டெஸ்டோஸ்டிரான் மருந்தை இன்ஜெக்ஷன் மூலமாகவும், உள்ளுக்குக் கொடுக்கும் மருந்தாகவும் கையாண்டு பீஜக் குறைவினால் உண்டாகும் பலவிதமான சுகக் கேடுகளைச் சொஸ்தப்படுத்திவருகிறார்கள். இந்த மருந்துப் பிரயோகத்தினால் சிலருக்குத் தாது புஷ்டி ஏற்பட்டிருக்கலாம். இருந்தபோதிலும், இந்த மருந்தினால் ஆயுசை நீட்டித்துக் கொண்டார்கள் என்று நாம் இதுவரையும் கேள்விப்பட்டதில்லை. இந்த மருந்தினால் தாது விருத்தி ஏற்படக்கூடுமாயினும் இருதயம், ரத்தக் குழாய்கள் முதலிய அவயவங்களுக்கு ஏற்படும் நீமைகளைத் தடுக்க முடியும் என்று எப்படிச் சொல்ல முடியும்? பீஜசாரம் எல்லா அவயவங்களுக்கும் ஒன்றுபோலவே சக்தியைப் புனருத்தாரணம் செய்யுமா என்பது சந்தேகந்தான். கான்ஸருக்குக் காரணமாகக் கூடிய சாதனங்களைத் தயாரித்துக் கொடுக்கும் அதே சரக்குகளால் இந்தப் பீஜசாரமும் அமைந்திருப்பதால், இந்த மருந்தினால் தாது விருத்தியைத் தேடும்போது, ஒருவேளை கான்ஸருக்கும் காரணமாகலாம். அப்படி ஆகாது என்று உறுதியாக யாரால் சொல்ல முடியும்? சிலருக்கு இந்த மருந்து தாது விருத்தி மருந்தாகப் பலித்தபோதிலும், இது ஒருபோதும் ஆயுசை நீடிக்கச் செய்யும் மருந்தாகாது.

(அடுத்த இதழில் முடிவுறும்.)

"எல்லாவற்றிற்கும் மேலாக"

திருவாவடுதுறை மடத்தில் 14-ஆம் பட்டத்தில் மடாதிபதியாக இருந்த கீழ்வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகர் என்பவர் சிறந்த தமிழ்ப் புலமை படைத்தவர்.

ஒரு நாள் திருவனந்தபுரத்திலிருந்து ஒரு பெரிய வடமொழி வித்துவான் வந்திருந்தார். அவர் அந்த ஸம்ஸ்தானத்து வித்துவான். வேறு பல ராஜாகாங்களிலும் மடங்களிலும் பல பரிசுகள் பெற்றவர்.

தேசிகர் அவரோடு அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தார். வித்துவான் விடைபெற்றுக்கொண்டபோது மடாதிபதி ஒரு சிறந்த சால்வையை அவருக்குப் போர்த்தச் செய்தார். அப்போது, "நீங்கள் எவ்வளவோ இடங்களில் பல வகையான ஸம்மானங்களைப் பெற்றிருப்பீர்கள். இது அவற்றிற் கெல்லாம் மேலாக இருக்கத்தக்கது" என்று சொன்னார். வித்துவான், 'என்ன, இவர் இப்படித் தாம் அளித்ததைத் தாமே புகழ்கிறாரே!' என்று யோசித்தார்.

"தாங்கள் வாங்கின ஸம்மானங்களையெல்லாம் வைத்துக் கட்ட இது உபயோகப்படும். அப்போது இதைவிட மேலே தெரியும்?" என்று தேசிகர் விளக்கியபோது வித்துவான் அவருடைய சாதுரியத்தைக் கண்டு வியக்காமல் இருக்க முடியுமா?

பாழும் வயிறு

கௌரி

"வந்துட்டாரா இவர் கடன் கழிக்க! மொதல் தேதி பொறந்ததுத்தேன்னே? கடன் தண்ட வந்துட்டாராக்கும்! அப்பா! கறிகாய் வாங்கப் போ; மோசம்! பால் வாங்கப் போ; மோசம்! கடையர, கண்ணியர, எங்கே போனாலும் ஒரே மோசம்! இந்த மனுஷாளுக்குத்தான் ஒரு வியவஸ்தை கிடையாதா? ஆசைக்கோ ஓர் அளவே கிடையாது. எதை எடு, தில்லுமில்லு, சூது. கேட்கப்போனால் ஒரே பாட்டு: பிழைப்பு! வயிறு! கல்ல வயிறு! பாழும் வயிறு! உலகத்தில் பிறந்தால் எல்லோருக்குந்தான் வயிறு இருக்கு. வளத்தத்தான் ஆகவேணும். இப்படியா? பெரய்யும் புளுகும் சொல்லி மத்தவர் காசைப் பிடுங்குவா? கல்ல பிழைப்பு! காசுன்னால் கொங்கு மட்டில் கொல்லியிலா வீளுகிறது? சொல்லப்போனால் அடிக்க வந்துடறார் இவர் ஒத்தர். இன்னும் ரெண்டு வருஷம் போனால் தானே தெரிகிறது. எனக்கு என்ன?" என்று முணுமுணுத்துக்கொண்டே உள்ளே வந்தாள் மங்களம்.

அந்தக் குடும்பம் பால்ய சம்சாரம்: அவள் புருஷன் அம்பி, அவள், மூன்று குழந்தைகள். சிற்றூர் ஒரு சிறிய பையன். இவ்வளவுதான் வீட்டில். ஒரு பெண்ணுக்குப் பன்னிரண்டு வயசு, மற்றொன்றுக்குப் பத்து வயசு. பையன் சின்னவன். அம்பியின் வேலையைப் பற்றியோ வருமானத்தைப் பற்றியோ ஒன்றும் கவலை இல்லை. அவனுக்குச் சரியான உத்தியோகம்; குடும்பத்திற்குத் தகுந்த வருமானம். குழந்தைகளுக்குத் தகுந்த படிப்போ பாட்டோ ஒன்றும் குறைவில்லை. மங்களம் குறைபடுவதற்கும் சொல்லுவதற்கும் ஒன்றும் இல்லை என்றாலும், காலமோ எதற்கு எடுத்தாலும் 'ரேஷன்.' எவ்வளவு வந்தால்தான் என்ன? அதற்குத் தகுந்த செலவு. பாழும் வயிறு இதையெல்லாம் தெரிந்துகொள்ளுகிறதா?

ஷரமகாலம்: காசை எறிந்தாலும் பண்டம் கிடைக்கவில்லை. ஜோடியாய் இரண்டு பெண்கள் கல்யாணத்திற்கு நிற்கின்றன. இப்பொழுது இரண்டு காசு சேர்த்தால்தானே உண்டு? மங்களத்திற்கு இதுவே கவலை. ஒரு தூளி வீணாகக் கூடாது, பார்த்துச் செலவு செய்ய வேண்டும் என்று பையனுடன் மன்றாடி மன்றாடி அவளுக்கு உட்கார அரை நாழிகைகூடக் கிடைக்காது.

அவள் கணவன் அம்பி ஒரு தனிப் பிரகிருதி. வீட்டில் புருஷன் என்று இருந்தால், எது வேண்டும் எது வேண்டாம் என்று பார்த்துக் கேட்டால் தானே செய்பவர்களுக்கும் சற்று எளிது? அம்பியிடம் இதெல்லாம் கிடையாது. சர்க்கரை வாங்க வேணுமா, பருப்பு வாங்க வேணுமா, நெய் வாங்க வேணுமா - எல்லாவற்றிற்கும் மங்களந்தான் ஓட வேண்டும். "ஏன் பையன் இருக்கிறானே. வாங்கிக்கொண்டு வரச்சொல்வதுதானே?" என்றால், "ஊருக்கு ஒரு தேவடியாள்; யாருக்கென்று ஆடுவாள்?" என்பதுபோல யார் சொல்வதற்கு ஆடுவான் அவன்? குழந்தைக்குச் சாமான் வேணுமா, அவன்தான் போகவேண்டும். வீட்டுக்கு வேண்டுமா, அவன்தான். வெளியில் அனுப்பி விட்டார்களோ பிறகு ஆளைக் கண்டு பிடிப்பது பிரம்மப் பிரயத்தனம்.

சங்கீதம் என்றால் அம்பிக்கு ஓர் அபிமானம். அவனுக்குப் பாடத் தெரியாது. விஷயமும் தெரியாது. பாடினால் கேட்கப் பிடிக்கும். வீட்டில் பெண்ணைப் பிறந்தவை இரண்டு இருக்கின்றன. கல்ல சம்பளம் கொடுத்துப் பாட்டு வாத்தியார் வைத்திருந்தான். பாட்டு வாத்தியாரை வைத்து விட்டால் ஆகிவிட்டதா? "பாடம் பண்ணு, பாடம் பண்ணு" என்று அவர்களுடன் கத்தபவர் யார்? வீட்டுப்பாடும் இதுவும் மங்களத்துக்குச் சரியாக இருந்தன.

புது மணி ஏழரை ஆகிவிட்டது. பால் காணோம் காணவில்லை. விடியற்காலையிலிருந்து 'காபித் தண்ணி'யைப் போட்டு வைத்துக் கொண்டிருக்கிறாள். குழந்தைகளோ, "அம்மா, காபி இன்னும் ஆகலியா?" என்று பிடுங்கித் தின்கின்றன. ஏதோ ஓர் அடுப்பு இல்லாவிட்டால் இன்னோர் அடுப்பை மூட்டிக்கொள்வோம் என்பதற்கு வீறகு தாராளமாய் இருக்கிறதா?

"வேறு ஏதாவது பாலே வாங்கித் தொலேப் போம்" என்று நினைத்துக்கொண்டு வருவதற்குள் பால்காரன் வந்தான். பாலாவது பால்; ஒரே பச்சைத் தண்ணீர்! படி ஒரு ரூபாயும் கொட்டிக்

கொடுத்துவிட்டுக் குழந்தைகளின் உடம்பில் ஒட்ட வேண்டாமோ? மங்களத்துக்கு வந்த கோபம் கணக்கு வழக்கு இல்லை. "என்னடா இது? இப்படிப் பச்சை ஜலத்தைக் கொண்டு வரத்துக்கா இவ்வளவு காழி? ஒனக்கு ஏதாவது கேழ்வி முறை

இருந்தாத்தானே பயம் இருக்கப்போறது, உடம் பிலே? காசையும் குடுத்துட்டு இப்படியா பச்சைத் தண்ணியை வாங்கணும்?" என்று அவளிடம் ஒரு பாட்டம் கத்திவிட்டுச் சந்தடி சாக்கில் காதில் தான் படட்டுமே என்று ஒரு சத்தம் போட்டாள்.

"என்ன இப்படி ஒக்காந்து இருக்கேளே? அவனைக் கொஞ்சம் கண்டிச்சுங்கண்டிச்சுஞ்சொல்லுங்கோ. கொஞ்சம் பயம் இருக்காதா? ஒண்ணும் சொல்லாதே இப்படி வாயை மூடிண்டு ஒக்காந்து இருந்தாக்கே, அம்மாதானே கத்தறா, நன்னாக் கத்தட்டும்னு அவனும் தளுத்துப் போய்டறான். பார்க்கப்படாதா சித்தே? நான்தானே கத்தணும் எல்லாத்தக்கும்?" என்றாள் அம்பியிடம்.

"ஆமாம்! நீதான் மூணு ஊர் காது கேட்கும் படி கத்தறயே? நானும் வேறே கத்தணுமோ? எல்லாருக்கும் அப்படிக்கான் கொடுக்கறான். உனக்குத்தான் தண்ணியைக் கொண்டு வந்து கொடுக்கறனே வேணும்னு? ஊரிலேயே பாலுக்குப் பறக்கறது. அவனிடம் போயக் கரச்சு கரச்சுன்னு கத்திலை நாளைக்கு நின்னுட்டும். இதவும் இல்லாமல் பறக்கலாம் கிடந்து" என்று அவனும் கத்தினான்.

"ஆமாம்; அவன் இல்லாட்டா ஊரே அஸ்த மிச்சுப் போச்சு. 'ஏண்டா இப்படிப் பண்றே?'ன்னு அவனை ஒரு வார்த்தை கேக்கலே. 'மாள், மாள்'ன்னு என்னேடே வரங்கோ சண்டைக்கு. காட்டற அதிகாரத்தை எல்லாம் என்னிடந்தானே காட்டலாம்? நன்னு இன்னும் ஒரு படி பச்சைத் தண்ணியைக் கொட்டிண்டு வரச் சொல்லி அம்பதும் நூறுமாய்ப் பணத்தைத் தூக்கி முதலே கொடுங்களேன். எனக்கா நஷ்டம்? நானும் இறுக வாயை மூடிண்டு இருத்துட்டுப் போறேன்" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றாள்.

சில விஷயங்களில் மங்களம் கூறுவதை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். வெளியில் வரசலில் போகிறவர்கள் பார்த்துக் கேட்டு ஏதாவது வாங்கிக்கொண்டுவரும் வழக்கம் இல்லையா? சம்பாதித்துப் போட வேண்டியதுதான் புருஷனுக்கு, மற்றது எல்லாம் பெண்டுகள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லி இருக்கிறதா என்ன?

காலம் எப்பொழுதும் போல் இருந்தால் தேவலை. காலமோ கலி காலத்தோடு இல்லை. எதை எடு, சோஷன்! காசைக் கொடுத்தாலும் சாமான் இல்லை. இதில் வீட்டில் எல்லோரும் பார்த்துக் கேட்டுச் செய்தால்தானே ஏதோ இரண்டு காசு கூடி வரும்? 'மகராஜன்' கொடுக்கிறானே; அதை அப்படியே அவனுக்கும் இவனுக்கும் கொட்டிக் கொடுத்துவிட்டு என்ன செய்கிறது? பாழும் வயிற்றுக்குக் கொட்டிக் கொண்டால் எல்லாம் ஆகிவிட்டதா? இதை எல்லாம் நினைக்க நினைக்க மங்களத்திற்குக் கோபம் எறிந்தே ஒழிய இறங்கவில்லை. 'இவரெல்லாம் வாயை மூடிண்டு இருக்கச்சே நான் மட்டும் லோ லோன்னு கத்தவானேன்? நன்னுப் போகட்டும். வழியிலே போறவனுக்கு வேணுமட்டும் அள்ளிக் குடுக்கட்டுமே. எனக்கா மோசம்?' என்று எண்ணிக்கொண்டவள் பிறகு பேசவே இல்லை. அம்பியும் ஒன்றும் பேசவில்லை. சாப்பிட்டுவிட்டு ஆபீசுக்குப் போனான்.

மாலை, குழந்தைகள் எல்லோரும் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தபின் அவர்களுக்குக் காபியோ பக்ஷணமோ கொடுத்தாள். அதற்குள் அம்பியும் திரும்பி வந்தான். கோபமோ தாபமோ, அதற்காக எது நிற்கும்? எல்லாவற்றையும் ஒரு பக்கத்தில் மூட்டை கட்டி வைத்துவிட்டுக் காபியைக் கலந்து கொண்டு போய் வைத்தாள் மங்களம். விளக்கு வைக்க இன்னும் அரை நாழிகை போகலாம். அப்பொழுதுதான் பாட்டு வாத்தியார் உள்ளே நுழைந்தார்.

வாத்தியார் சாதாரணமாய் எல்லோர் வீட்டிற்குந்தான் வருகிறார். வருவார்; பாடம் சொல்விக் கொடுப்பார்; போவார். இங்கே அப்படி இல்லை. வாத்தியார் வந்தால் அவருடைய யோக க்ஷேமங்களை விசாரித்தாக வேண்டும். வீட்டில் எது உண்டோ, பக்ஷணமோ பாடியோ, கறியோ காயோ எல்லாம் ஒரு என்ற முறையில் சமர்ப்பிக்க வேண்டும். அதவும், அம்பிக்குப் பாட்டு வாத்தியார் என்றால் தேவதா விசுவாசம். என்ன வேலை தலை போகட்டும், அவருடன் அரை நாழிகை ரவது பேசாலிட்டால் முடியாது. மங்களமும் பேசுவது உண்டு. யோக க்ஷேமம் விசாரிப்பது உண்டு. ஆனால் சும்மா, 'தொண தொண' என்று என்ன பேச்சு?

படம் சொல்லிக் கொடுப்பதில் கவனம் கிடையாது. ஆடியில் ஒரு நாள் அமாவாசையில் ஒரு நாள் வருவது. இவ்வப்படி ஆட்டம் போடுவது.

அதற்குத் தகுந்தாற் போலக் குழந்தைகள். கருத்தர, மண்ணு? வருஷம் இரண்டாகின்றன. உருப்படி வந்திருப்பது பத்து. போதுமா? 'சரி, வந்தாரா? பாட்டைச் சொல்லிக் கொடுத்துத் தொலைக்கட்டும்' என்று நினைத்துக்கொண்டு, "அடி கப்பு, பாப்பா! போங்கோ, வாத்தியார் வந்திருக்கார். வீணையடினேளேயானுல் தெரியுமா?" என்ருள் அவள். அதற்குள் எல்லாம் பத்து நிமிஷங்கள் ஓடின.

"அம்மா, வாத்தியார் போயிட்டாராம். அப்பா சொன்னு" என்ருள் கப்பு.

"என் பாடம் சொல்லிக் கொடுக்காமே போயிட்டார்? கேளேன், நீ போய் அப்பாவை" என்ருள் மங்களம் மறுபடியும்.

இதை எல்லாமா குழந்தைகள் காதில் வாங்கிக் கொள்ளும்? வாத்தியார் போனது அவைகளுக்குக் கொண்டாட்டம்.

"எப்படியானும் போகட்டும். கேட்டு என்ன ஆகவேணும்?" என்று மங்களம் நிறுத்த நேரம் பேசாமல் இருந்துவிட்டாள். இருந்தாலும் கொஞ்ச நேரந்தான் இருக்கலாம். ஒரு சமாசாரத்தைத் தெரிந்துகொண்டால் ஒழியப் பாட்டில் போடுமா? 'எதுக்கு வரவேணும் அங்கிருந்து? சொல்லிக் கொடுக்காமல் போவானேன்? ரெண்டு நாள் வந்துட்டுப் பணத்தை மட்டும் விள்ளாமே வாங்கிண்டு போய் இருப்பார். இப்படியா போகணும் நம்ம காசு? இவரும் அவரைக் கண்டதும் காணுததும் ரூபாயை எடுத்துக் கொடுத்து இருப்பாரே? இப்படி ஓர் அநியாயம் உண்டா எங்கேயானும்?' என்று ஒவ்வொன்ருய் நினைக்கும் பொழுது அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

"எங்கே வந்துட்டுப் போருர்? பாடத்தைச் சொல்லிக் குடுக்காமே போருரே?" என்ருள் அம்பியிடம் வந்து.

"அவர் பாடம் சொல்ல வரல்லே" என்ருன் அம்பி, சாந்தமாய்ப் புத்தகமும் கையுமாய்.

"பின்னே எதுக்கு வந்தார்? சம்பளம் வாங்க வந்தாரோ?"

"ஆமாம்."

"என்ன? ஆமாங்கறேளே! இந்த மாசம் ரெண்டு நாளாவது வரல்லே. சம்பளமாவது சம்பளம்! புள்ளே இல்லாத சொத்துக் கொள்ளே போறதுன்னு நினைச்சுண்டு இருக்காரோ? குடுத்துட்டேளோன்னே தூக்கி?"

"மனுஷனுக்குக் கஷ்டம்னு, கொடுக்காமே என்ன செய்யறது? அவர் குழந்தைக்கு ஒடம்பு சரி இல்லேயாம்."

"அதுக்கு?"

"ஒரு மாசச் சம்பளம் மூன் பணமாய் வேணும்னு கேட்டார்."

"கொடுத்துட்டேளோன்னே தூக்கி ஒடனே? அப்பவே நினைச்சுண்டேன்!"

"ஆமாம். கொடுத்தேன். கஷ்டம்னு நாம கொடுக்காமெ யார் கொடுப்பா? இந்த நாலு வீட்டை வச்சுண்டுதானே அவரும் வயிறு வளர்க்கறார்? குழந்தைக்கு என்னமோ பெரிய கட்டியமாம். ஆஸ்பத்திரியிலே போட்டுட்டு அலையறூன் பிராம்மணன். வயத்துப் பொழைப்பு எதை விட முடியறது? என்னமோ கஷ்டப்படறார் பாவம்!"

"சம்சாரம்னு ஆயிரந்தான் இருக்கும். அதுக்காக இப்படியா படுமோசம் பண்ணுவா? நாளைக்கு அந்தக் குழந்தைக்குத் தாவளை ஆறதன்னு என்ன நிச்சயம்? முதுகிலே கட்டிகறார். அம்பது ரூபாயும் வாங்கிக் கொட்டிண்டு நித்தியம் ஒரு சாக்குச் சொல்லிண்டு இருக்கட்டும். எல்லாம் அவரும் நன்னுக் கண்டுண்டார்" என்று மங்களம் பேச்சை முடிப்பதற்குள் அம்பிக்குப் பிரமாதமான கோபம் வந்துவிட்டது.



"ஆனல் கொழந்தை செத்துப் போனல்கூட ஒங்க பாடத்தை விடப்படாது போலிருக்கு! ரொம்ப அழகாய் இருக்கு, பேசறது!" என்று கத்த ஆரம்பித்தான்.

மங்களத்திற்கு மட்டில் என்ன? புகைந்து கொண்டிருந்த கோபம் தலைக்கு ஏறிவிட்டது.

"சரவணேன் கொழந்தை? கன்னு இருக்கட்டும்; கான் சாகச் சொல்லலே. நித்தியம் ஒண்ணு சொல்லட்டும். பாவம். பாவம்னு தூக்கித் தலேயிலே வச்சுக்கோங்கோ! வயத்தெரிச்சல்தான் பொறுக்கப்படலே" என்று கத்திவிட்டுப் போய் விட்டாள்.

மறுநாள் பொழுது விடிந்ததும் விடியாததுமாய், "நல்ல வாக்குச் சொல்லுடி, பகவதீன்னு பலுக்கினுயோன்னே பலுக்கல்? பலிச்சுடுத்து! வாத்தியார் கொழந்தையின் காரியம் மூடிஞ்சுடுத்தாம்; போருமா?" என்றுன் அம்பி.

ஏற்கனவே மங்களத்திற்குக் கேட்கவேண்டாம்: சிறுகச் சிறுகச் சண்டை முற்றி இருவருக்கும் பேச்சு வார்த்தையே இல்லாமல் போய்விட்டது.

குழந்தைகளிடம் சொல்லி அனுப்புவதும் பையனிடம் சொல்லி அனுப்புவதுமாகப் பொழுதைத் தள்ளுவதே மங்களத்திற்குச் சங்கடமாய்ப் போய்விட்டது. என்ன இருந்தாலும் அம்பியுடன் தானுகப் பேச அவளுக்குப் பிடிக்க வில்லே.

ஒரு நாளுமே கவலே இல்லாதவனுக்கு இப் பொழுது என்ன வந்துவிடப் போகிறது? பேச்சில்லே. வார்த்தை இல்லே. அம்பிக்கு இன்னும் கல்லுதாய்ப் போய்விட்டது. புத்தகத்திலேயே புதைந்து போய்விட்டான்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. குழந்தைகள் எல்லோரும் விளேயாடிக்கொண்டிருந்தனர். வழக்கம் போல் மங்களம் வீட்டு வேலேகளேப் பார்த்துக் கொண்டு குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்க்க எண்ணெயும் கையுமாய் நின்றுகொண்டு இருந்தாள்.

"அடி கப்பு, வாத்தியார் வந்திருக்கார். வாங்கோ" என்று குழந்தைகளேக் கூப்பிட்டுக் கொண்டு அம்பி உள்ளே வந்தான். எண்ணெய் தேய்த்தக்கொள்ள உட்கார்ந்த குழந்தைகளே எழுப்பியாகிவிட்டது.

"வாத்தியார் வந்திருக்கார்" என்றவுடன் மங்களத்திற்குச் 'சரூ' என்றது. 'கொழந்தையைப் பறி கொடுத்து மூழுசா மூணு நாள் ஆகலே; அவசர வந்திருக்கார்! வேறே எந்த வாத்தியார் வரப் போருர்?' என்று நினேத்துக் கொண்டவள், அம்பியை ஒன்றும் கேட்கப் பிடிக்கவில்லே, வாசலுக்கு வந்தாள். அவர் தாம்; பாட்டி வாத்தியார்! விட்ட காதும் விரித்த கூலேயுமாய் உட்கார்ந்திருந்தார். ஓர் அசட்டுச் சிரிப்பு அவர் முகத்தில் வழிந்து மறைந்தது. மங்களத்திற்கு ஒன்றும் புரியவில்லே. அவரைப் பார்த்தவுடனே வயிற்றை ஒரு கலக்குக் கலக்கி விட்டது. என்ன பேசவதென்றே தோன்றவில்லே. கஷ்டம் எல்லோருக்கும் பொதுத்தானே? பாட்டர வேண்டியிருக்கும் இப்போது? கல்லாய் இருந்த மங்களத்தின் உள்ளம் மெழுகாய்க் கரைந்தது. பறியும் கொடுத்துவிட்டுத் தனியாய் வீட்டில், அவள் என்ன செய்வாள் பாவம்!

"இப்பே என்ன பாடத்துக்கு அவசரம்? அப்பறம் மெதுவாப் பாத்துண்டாப் போச்சு. நீங்க எதுக்கு இப்போ வந்தேள்?" என்றாள்.

"என்னம்மா பண்றது? வீட்டிலே ஒக்காத்து இருந்தா பொழைப்புப் போயிடாதா? போறவர போயிடறு. இருக்கிறவா என்ன பண்றது? வயிறு ஒண்ணு இருக்கோ இல்லேயோ? வீட்டில் ஒக்காத்துதான் என்ன பண்றது? வந்த வழியைப் பாத்துண்டு அது போயிடுத்து. அது பட்டிருந்த கடன்" என்றார் வாத்தியார். அவர் கண்களிலிருந்து கண்ணீர் பலபலவென்று உதிர்ந்தது. மங்களத்தால் ஒன்றும் பேச முடியவில்லே. கண்ணீருடன் உள்ளே சென்றுவிட்டாள்.

அன்று அவள் செவிகளில் விழுந்தது பாட்டர அல்லது பாழும் வயிற்றுப் பாட்டர என்று அவளால் சொல்லவே முடியவில்லே. 'பட்ட கடனைத் தீர்க்க வந்திருக்கிறர்' என்று நினேக்க நினேக்க அவள் மார்பும் நெஞ்சும் படபடவென்று அடித்துக்கொண்டன.

ஜனத்தொகையும் பத்திரிகைகளும்

ஒரு நாட்டின் அரசியல் எழுச்சிக்கும் சமுதாய முற்போக்குக்கும் முக்கியமான கருவிகளாக இருப்பவை பத்திரிகைகளே. எந்த நாடு இந்த இரண்டிலும் பிற்பட்டு நிற்கிறதோ அங்கே பத்திரிகைகளின் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கும். இந்தியாவிலுள்ள பத்திரிகைகளின் எண்ணிக்கையை மற்ற நாட்டுப் பத்திரிகைகளின் தொகையோடு ஒப்பிட்டுப் பார்த்தாலே இந்நாட்டு நிலேயை ஒரு வாறு தெரிந்துகொள்ளலாம். இந்தியா தான் எல்லா வகையிலும் 'தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலே தவறிக் கெட்டு' நிற்கிறதென்பதற்கு இந்தக் கணக்கும் சாக்ஷி சொல்லும்.

ஐக்கிய அமெரிக்காவின் ஜனத்தொகை பன்னிரண்டு கோடியே எழுபத்தைந்து லக்ஷம்; அங்கே இருபதினுயிரத்து ஐந்நூற்று இருபத்து நாலு (20,524) பத்திரிகைகள் இருக்கின்றன.

பிரிட்டிஷ் நாடுகளின் ஜனத்தொகை 4½ கோடி. அங்கே 5000க்கு மேல் பத்திரிகைகள் உள்ளன.

ஜப்பானின் ஜனத்தொகை எட்டுக் கோடி. அங்கே 4592 பத்திரிகைகள் இருக்கின்றன.

நம்முடைய இந்தியாவின் ஜனத்தொகை 40 கோடி. இங்குள்ள பத்திரிகைகளின் மொத்த எண்ணிக்கை என்ன தெரியுமா? 2,992 - தான்!

புதுமைப் பெண்

சகோதரி ஆர். எஸ். சுபலக்ஷ்மி அம்மாள்

[இன்று, விதியின் கொடுமையால், கணவனை இழந்து ஆதரவற்று, உயிரோடு வாழ்வதே பெரும் பாரமென்று எண்ணிய பல பெண்மணிகளுக்குக் கல்வி யென்னும் தாரக மந்திரத்தைக் காட்டி வாழச்செய்த பெரியார் இக்கட்டுரை எழுதியிருக்கிறார். 'தவமுது மகள்' என்று பழைய காவியங்களில் சிலரைப் புலவர்கள் வருணித்திருக்கிறார்கள். ஸ்ரீ சுபலக்ஷ்மி அவர்களும் ஒரு 'தவமுது மகள்.' அவருடைய வாழ்நாள் முழுதும் பெண்மணிகளின் கல்வி முன்னேற்றத்தில் நல்ல பயனை விளைக்கும் முறையில் அமைந்தது. தம்முடைய அநுபவத்தால் அறிந்த பல உண்மைகளை இக்கட்டுரையில் சகோதரியார் விளக்கியிருக்கிறார்.

பெண்களுக்கு அடிப்படைக் கல்வி எப்படி இருக்கவேண்டும், உயர்தரக் கல்வி எப்படி அமையவேண்டும், சமூகத் தொண்டிற்குப் பயன்படும்படி பெண்மணிகளே தெரிந்துகொள்ள வேண்டிய சிறப்பான கல்விமுறை யாது - என்ற விஷயங்களை மிகவும் தெளிவாக அவர் விளக்கியிருக்கிறார்.

புதுமைப் பெண்ணுலகத்தில் இந்த யோசனைகளின்படி வகுக்கும் திட்டங்கள் அமைந்தால் இந்த நாட்டில் கிருதயுகத்தைக் காணலாம். ப - ர்.]

"அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு?" என்னும் காலம் போய் இப்போது பெண்கள் படிக்க வேண்டியது அவசியம்தான் என்பதை அநேகர் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் 'ஆண் பெண் இரு பாலாருக்கும் ஒரேவிதக் கல்வி வேண்டுமா? அல்லது அதில் வேற்றுமை இருக்க வேண்டுமா?' என்பதைப் பற்றி அநேக அறிவாளிகள் ஆராய்ச்சி செய்கின்றனர். இயற்கையில் ஆணும் பெண்ணும் வெவ்வேறு இயல்புகளை உடையவர்கள். ஆகவே கல்வித் துறையிலும் வேற்றுமை வேண்டும் என்பது பலருடைய அபிப்பிராயம். இதைப்பற்றி இந்தக் கட்டுரையில் ஆராய்வோம்.

மனிதரிடம் உடல், அறிவு, ஆன்மா இம்மூன்றும் வளர்ச்சியடைய வேண்டும். சரீர சக்தி, அறிவு அல்லது மனோசக்தி, ஆன்ம சக்தி இம்மூன்றுமே முக்கியமானவை. இம்மூன்றில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உடலமைப்பில் மாத்திரந்தான் வேற்றுமை உண்டேயன்றி மனஸ்தத்துவத்திலும், ஆன்ம தத்துவத்திலும் பேதமே இல்லை என்பதை யாவரும் ஒப்புக் கொள்வார்கள். கல்வி ஞானிகளுடைய (Scientists) ஆராய்ச்சியின் பிரகாரம், ஆண்களை விடப் பெண்களுக்குத்தான் அறிவுச்சக்தி அதிகம். டார்வின் (Darwin) என்பவரின் "உயிர்வர்க்கங்களின் பரிணமம்" (Evolution theory) என்பதை ஆழ்ந்து கவனித்தால் இது புலப்படும். மிருகங்களுக்குள் உயர்ந்தவன் மனிதன். கீழினத்திலிருந்து மேலினம் வரைக்கும் படிப்படியாய்ப் பரிணமித்துள்ள மிருகங்களைக் கவனித்தால் சரீர பலம் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டும், மூளையின் பலம் விருத்தியாகியும் இருக்கிறது. முதலில் சிருஷ்டிக்கப்பட்ட மிருகங்களை விடப் பின்னால் உண்டான மிருகங்களுக்குச் சரீர அளவும் பலமும் வர வர குறைந்துகொண்டும் மனோபலம் அதிகமாகிக்கொண்டும் வருவதைக் காணலாம். சரீர வலுவுள்ள யானை, குதிரை, நாய் முதலியன, பிறகு குரங்குகள், பிறகு மனிதக் குரங்குகள் அல்லது குரங்கு மனிதன், பிறகு காட்டு மூரண்டன், பிறகு கிரமமாக மனிதன் - இப்படியாகப் பரிணமம் நடந்து வருகிறது. ஆதிகாலம் தொடங்கி மனிதனுடைய வளர்ச்சியை மாத்திரமே பார்த்தாலும் அவனது சரீரம் மிகுந்த பலத்துடன்

மாமிசத்தைச் சாப்பிடுவதற்கு வேண்டிய கோரப் பற்கள், குளிர் வெயில்வத் தாங்கு வதற்கு ரோமம் செறிந்த உடல் முதலியவற் றுடன் ஆரம்பத்தில் இருந்தது. பிறகு வர வர மென்மையான சரீரமாகப் பரிணமித் துள்ளது. சரீர வலு குறைந்துகொண்டே வரவர மூளை மிகவும் நுட்பமாயும், அதன் அலுவல்களாகிய மனோசக்திகள், அறிவு ஆற்றல்கள், உணர்ச்சிகள் யாவும் மேன் மேலும் அபிவிருத்தியாகியும் வந்துள்ளன.

இப்போது பெண்களை எடுத்துக் கொள் வோம். சிருஷ்டிக் கிரமத்தில், புருஷனுக்குப் பிறகே ஸ்திரீயைக் கடவுள் சிருஷ்டித்ததாக எல்லா மதங்களும் கூறுகின்றன. ஆகவே சிருஷ்டிக் கிரமத்தில் மிருகங்களுக்குள் உயர்ந்தவன் மனிதன்; மனிதருள் புருஷனை விட உயர்ந்தவள் ஸ்திரீ. மனித வர்க்கத்தின் பரிணமத்தை மாத்திரம் எடுத்துக் கொண் டாலும் புருஷனைவிட ஸ்திரீயின் சரீரம் அதிக அழகும், மென்மைத் தன்மையும், சௌந்தரி யமும் உடையது. முன்னுள்ள மிருகங்களை விடப் பின்வந்த மிருகங்களுக்குவரவர சரீர பலம் குறைந்து கொண்டும் அறிவுப் பலம் அதிகரித்துக் கொண்டும் வருகின்றன என்னும் பரிணம தத்துவத்தின்படி புருஷ னுக்குப் பின் வந்த ஸ்திரீக்குப் புருஷனைவிட உடல் பலம் குறைவானதும், புத்தி பலம் அதிகம் என்பது நிதரிசனம. ஸ்தூலமான பரு உடல் சம்பந்தமான சக்திகளைக் காட்டி லும் ஸூக்ஷ்மமான மனோ சக்திகளாகிய அறிவாற்றல்கள், உணர்ச்சிகளாகிய சுகதுக் கம், பொறுமை, திடசித்தம் முதலி யவை பெண்களிடத்தில் அதி நுட்ப மாயும், மிகுதியாயும் பரிணமித்துள்ளன. இயற்கை அறிவும், பொது அறிவும் பெண் மக்களுக்கே அதிகம். ஐக்கிய குடும்பங்களில் பாடசாலைப் படிப்பே இல்லாத மூதாட்டி மார் எத்தனையோ குடும்ப விவகாரங்களை மிகவும் சாமர்த்தியத்துடனும், பொறுமை யுடனும் நடத்திக்கொண்டு போவதை நாம் பார்க்கின்றோம்.

பெண் மக்களின் கல்வி எவ்விதம் இருக்க வேண்டும் என்பதல்லவா இக் கட்டுரையின் விஷயம்? புனலில் பெண்களுக்காகத் தனி யாகக் காலேஜ் இருக்கிறது. பெண்மக்கள் மென்மையானவர்கள், அவர்களது மூளையும் மென்மையானது, புருஷர்களைப் போல அவர்களால் படிக்க முடியாது. ஆகவே கணக்கு முதலிய பாடங்கள் அவர்களுக்குச் சற்றுக் குறைவாகவே இருக்க வேண்டும் என்று திட்டம் போட்டு அதன்படி அங்கே ஸ்திரீகளுக்கு எப். ஏ., பி. ஏ., பரீக்ஷை எல் லாம் தனியாகவே நடக்கின்றன. அப்படித் தான் காசி யூனிவர்ஸிடியிலும். நம்முடைய சென்னை யூனிவர்ஸிடியார் மாத்திரம் அவர் களை ஏன் பின்பற்றவில்லையோ தெரிய வில்லை.

கல்வி என்பது பலவகைப்படும்: வீட்டுக் கல்வி, பாடசாலைக் கல்வி, உயர்தரக் கல்வி, வாழ்க்கையநுபவக் கல்வி, பொதுக் கல்வி, தொழிற் கல்வி என்று. பதினைந்து வயசு வரைக்கும் ஆண் பெண் இரு பாலாருக்கும் வேண்டியது கவனம், ஞாபகம், கற்பனை, பாவனை, நியாயம், பகுத்தறிவு முதலிய பொதுவான மனோசக்திகளை அபிவிருத்தி செய்து, கூர்மையாக்கும் பொதுக் கல்வியே. இது இரு பாலாருக்கும் பொது. தமிழில் எண், எழுத்து எனபது ஆங்கிலத்தில் (4 Rs அதாவது Reading, Writing, Arithmetic, Reasoning) நான்கு ஆர் என்னும் எழுத்துக்கள் என்பது. எண் எழுத்தில் இந்த நான்கும் அடங்கிவிடும். ஆகவே எஸ். எஸ். எல். ஸி. வரைக்கும் உள்ள பாடங் களாகிய உலக சரித்திரம், பூகோளம், ஸயன்ஸ் என்னும் பொது விஞ்ஞானம், கணி தம், தாய்ப்பாஷை, தற்காலத்துக்கு அவசிய மான ஆங்கிலம் இவை இருபாலாருக்கும் மிகவும் அவசியமானவையே. பெற்றோர்கள் தங்கள் பெண்களையும் பதினைந்து பதினாறு வயசு வரைக்கும் கட்டாயமாக எஸ். எஸ். எல். ஸி. வரைக்கும் படிப்பிக்கவேண்டும். கட்டாயக் கல்வி ஐந்தாவது வகுப்புடன் நின்றுவிடக் கூடாது. அரசாங்கத்தாரே இன்னும் பல இடங்களில் பெண்களுக்காக ஹைஸ்கூல்கள் ஆரம்பித்து எஸ்.எஸ்.எல்.ஸி. வரைக்கும் கட்டாயக் கல்வியை ஏற்படுத்த வேண்டும். இதன் பிறகுதான் பெண்களை விவாகம் செய்து கொடுக்கவேண்டும்.

தற்காலம் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள கல்வி முறை அவர்களுக்குத் தகுந்ததாக இல்லை என்று வாதமிடும் பெரியார்கள் இந்தக் கல்வித் திட்டத்தில் தையல், சமை யல், குழந்தை வளர்ப்பு முதலியன இல்லை என்கிறார்கள். இவையெல்லாம் பொதுக் கல்வியில் சேராமல் எஸ். எஸ். எல். ஸி. படிப் பை முடித்த பிறகு படிக்கவேண்டிய பிரத்தி யேகமான தொழிற் கல்வியை (Vocational Subjects)ச் சேர்ந்தவை. ஆண் மக்கள் எப்படிப் பொதுக் கல்வி முடிந்தபிறகு போலீஸ், டாக்டர், வக்கீல், உபாத்தியாயர் என்று ஏதேனும் ஒரு தொழிலுக்கு வேண் டிய பிரத்தியேகக் கல்வி பயிலுகின்றார் களோ அவ்விதமே பெண்களும் பயில வேண்டும். பதினைந்து வயசுக்குட்பட்ட ஹைஸ்கூல் மாணவிகளுக்கு இல்லற தர்மங் களைப் பற்றியும் குழந்தை வளர்ப்பைப் பற்றியும் சொன்னால் அவர்களுக்கு ஏதோ தமாஷாக இருக்குமேயன்றித் தெளிவாக விளங்காது. மேலும் இந்த விஷயங்கள் அநுபவத்தில் தெரிந்து கொள்ளவேண்டிய வைகள். தையல்வேலை பாடசாலைகளில் கற்பிக்கப்படுகிறது. அதை வீட்டில் பிற் காலத்தில் அபிவிருத்திசெய்துகொள்ளலாம்.

சமையல் வேலை முதலிய வீட்டு வேலை களைக் கற்பிப்பதற்குத் தகுந்த உபாத்தினி

கள், தாய்மார்களும் மற்றும் வீட்டிலுள்ள பெரியோர்களும் ஆவார்கள். ஓய்வு நாட்களில் பெரியோர்களின் மேற்பார்வையில் பெண்கள் தங்கள் வீடுகளில் சமையல் செய்து பழகவேண்டும். "ஐயோ பாவம்! குழந்தை படிக்கிறாள், அவள் எதற்காகச் சமையல் செய்து பழகவேண்டும்? அவள் எதற்காகச் சமையலறையில் சென்று வேலை செய்யவேண்டும்? அம்மா, நீ சும்மா படி. நான் எல்லாம் பார்த்துக்கொள்கிறேன்" என்று சொல்லும் தாய்மார்களே இந்தக் காலத்தில் அதிகம். மேலும், சமையல் வேலை இழிவானது, சமையல் செய்வது ஒரு சீமாட்டியின் அந்தஸ்துக்கும் கௌரவத்துக்கும் குறைவு என்னும் மனோபாவம் தற்காலத்துப் பெண்மக்களுக்கு நிரம்ப இருக்கிறது. "எனக்குச் சமைக்கவே தெரியாது. என் தாய் என்னை அத்தனை செல்லமாக வளர்த்துவிட்டாள்" என்று பெருமையாகச் சொல்லிக்கொள்ளும் பெண்கள் எத்தனையோ பேர்.

ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த புருஷனை இழந்த, பதினைந்து வயசுப் பெண் ஒரு சமயம் படிக்கவேண்டும் என்று என்னிடம் ஒரு கோடை விடுமுறை ஆரம்பத்தில் வந்தாள். வித்தியாலயத்தில் பத்துப் பேர் மாத்திரம் இருந்தமையால் சமையல் ஆளின்றி அவர்களே வேலைக்கு இருவராகச் சமையல் செய்ய ஏற்பாடு செய்தேன். மேற்கூறிய ஏழைப் பெண் சமையல் செய்யக் கட்டாயமாக மறுத்துவிட்டாள். 'சமையல் வேலையும் ஒரு வித்தைதானே? அதையும் தெரிந்துகொள்வது அவசியம் அல்லவா?' என்பதை எத்தனை விதத்தில் அவளுக்கு எடுத்துச் சொல்லியும் அவள் கண்டிப்பாக, "சமையல் வேலை செய்யமாட்டேன். கட்டாயப்படுத்தினால் நான் வீட்டுக்குப் போய்விடுகிறேன்" என்றே பிடிவாதம் செய்தாள். இவ்விதமனோபாவத்துடன் கூடிய பெண்கள் இக்காலத்தில் பலர்.

இந்தக் குற்றம் யாருடையது? பெற்றோர்களுடையது. பாடசாலை உபாத்தியார்களுடையதல்ல. எனக்குத் தெரிந்த சில செல்வமான குடும்பங்களில் சமையலுக்கு ஆள் இருந்தும் வீட்டு எஜமானிகள் தங்கள் பெண்களை அநாயாசமாக வீட்டு வேலைகளை எல்லாம் செய்யும்படி பழக்கியிருக்கிறார்கள். சிறு வயசிலிருந்தே தாய்மார்கள் தங்கள் பெண்களுக்குச் சமையல் வேலைகளைச் செய்யும் பழகத்தை உண்டாக்கவேண்டும். சுகாதாரம், குழந்தை வளர்ப்பு, காயம் பட்டவர்களுக்கு முதலுதவி, ஊறுகாய்கள், பக்ஷணங்கள், வடகம், வற்றல்கள் முதலியன செய்தல், தையல் வேலை இவையெல்லாம் பாடசாலைப் பொதுக் கல்வியில் சேரா. பதினைந்து வயசுக்கு மேற்பட்ட பெண்களுக்குப் பிரத்தியேக வகுப்புக்கள் ஏற்படுத்தி வாரம் ஒரு முறை இரு முறை ஒன்றிரண்டு மணி நேரம் வீட்டுவேலை போக ஓழிந்த நேரமாகிய, சுமார் பிற்பகல் இரண்டு மணி முதல் நான்கு மணி வரைக்கும் இந்த விஷயங்களைக் கற்பிக்கவேண்டும். பல இடங்களில் 'லேடீஸ் கிளப்' ஏற்படுத்திச் சில விளையாட்டுக்கள் மாத்திரம் விளையாடிவிட்டு வேறு என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கின்றனர். இந்தக் கிளப்புகளில் (Adult Classes) 'யுவதிகள் வகுப்புக்கள்' ஏற்படுத்தி, தெரிந்த வர்களைக் கொண்டு மேற் சொன்ன விஷயங்களைப்பற்றி உபந்நியாசங்கள் செய்யும்படி ஏற்படுத்தலாம். விவாகம் ஆகி, புத்தகாக குடித்தனம் செய்ய ஆரம்பித்துள்ள யுவதிகளுக்குத்தான் இந்தவிஷயங்களைத் தெரிந்து கொண்டு தங்கள் இல்லங்களில் இவற்றைச் செய்து பார்க்க ஆவல் ஏற்படும். இந்தப் பிரத்தியேக 'யுவதி வகுப்பு'களில் திருக்குறள், பகவத்கீதை, ராமாயணம், பாரதம் இவற்றைக்கூடப் படிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். இங்கே கொஞ்சம், அங்கே கொஞ்சமாகத்தான் பாடசாலைகளில் நடக்கும். இந்நூல்களைப் பூர்த்தியாகத் தெரிந்துகொள்ளும் ஆவலையும், வசதிகளையும் 'யுவதி வகுப்பு'க்களில் உண்டாக்கலாம்.

ஆகவே பதினைந்து வயசு வரைக்கும் ஆண் பெண் இருபாலாருக்கும் எஸ். எஸ். எல். ஸி. வரைக்கும் ஒரேவிதமான பொதுக்கல்வியும் அதன் பிறகு வெவ்வேறு விதமான பிரத்தியேகக் கல்வியும் ஏற்படவேண்டும்.

பெண்களுக்கு உயர்தரக் கல்வி வேண்டுமா என்பது அடுத்த கேள்வி. அதுவும் இருபாலாருக்கும் ஒரே விதமாக இருக்க வேண்டுமா?

உயர்தரக் கல்விக்கு வேண்டிய வசதிகளும், அவகாசமும், செலவுக்கு வேண்டிய செல்வமும் சிலருக்குத்தான் இருக்கும். சாதாரணமாகப் பெண்களுக்கு எஸ். எஸ். எல். ஸி. வரைக்குமே படிப்புப் போதுமானது. அதன் பிறகு மேற்கூறியபடி வீட்டுப் படிப்பும் பிரத்தியேக விஷயப் படிப்பும் அவசியமானவை. ஆனால் நல்ல அறிவும், வசதிகளுமுள்ள பெண்கள் சிலர் உயர்தரக் கல்வி பெறலாம். புருஷனை இழந்த சிறு வயசுப் பெண்கள் உயர்தரக் கல்வியை அடைந்து தற்காலம் ஜனசமூகத்துக்கு அவசியமாக வேண்டியிருக்கின்ற உபாத்தினிகளாகவும், டாக்டர்களாகவும், நர்ஸுகளாகவும் பயிற்சி பெறலாம்.

இன்னும் ஒரு முக்கிய விஷயம்: தற்கால ஜனசமூக நிலையில் பழைய காலத்து ஒற்றுமையான கூட்டுறவுக் குடும்பங்கள் சாத்தியம் இல்லை. ஏழைமை மிகுதியாகிவருகின்றது. சம்பாதிக்கும் ஒரு மனிதனைச் சம்பாத்தியமில்லாத அநேகர் சார்ந்திருப்பது முடியாத காரியம். "எனக்கு ரூபாய் அறுபது சம்பளம். வயசான பெற்றோர்கள், மனைவி, இரண்டு குழந்தைகள், தங்கை தம்பிகள்

இருக்கிறார்கள். தம்பிகள் படிக்கின்றனர். தங்கைகளுக்கு விவாகம் ஆகவேண்டும். ஒரு தங்கை விதவையாகி இரண்டு குழந்தைகளுடன் வீட்டுக்கு வந்துவிட்டாள். அவளை உங்களிடம் படிக்க அனுப்ப வேண்டும்." இவ்வித வேண்டுகோள் கடிதங்கள் பல எனக்கு வருவது உண்டு. நமது ஜனசமூகத்தில் தற்காலம் இது ஸர்வ சாதாரணம். ஒரு மனிதன் சம்பாதிப்பதும் மற்றவர்கள் செய்வது அறியாமல் உட்கார்ந்து கொண்டு சாப்பாட்டுக்கே கஷ்டப்படுவதுமான பரிதாப நிலைமை இது. சென்ற வருஷம் இரு நூறு ரூபாய் சம்பாதித்துக்கொண்டிருந்த ஒரு புருஷன் இறந்துபோய் அவன் மனைவி ஆறு குழந்தைகளுடன் நிர்க்கதியாய் இரங்கத்தக்க நிலைமையில் என்னிடம் வந்து சேர்ந்தாள். இந்த அம்மாள் எஸ். எஸ். எல். ஸி. வரைக்குமாவது படித்திருந்தால் நான்கு குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து ஜீவிக்கலாம் அல்லவா? குழந்தைகளுடன் அவர்கள் படும்பாடு பரிதாபமானது. ஆனல் நாற்றுக்குத் தொண்ணூற்றிருன்பது குடும்பத்துப் பெண்கள் படிப்பில்லாதவர்கள். இவர்களை வைத்து ஸம்ரக்ஷிப்பதற்குப் பந்துக்கள் ஒப்புவதில்லை. அந்நிய வீடுகளில் சென்று சமையல் வேலை செய்து பிழைப்பதைத் தவிர இவர்களுக்கு வேறு வழி யாது? ஆகவே தற்காலம் ஏழைமை நிறைந்த ஜனசமூகத்தில் ஆண்பெண் இருபாலாரும் மானத்துடன் ஜீவனம் செய்வதற்கு வேண்டிய கல்வியும் தொழிலும் கற்றிருக்க வேண்டியது அவசியம்.

கடைசியாக, ஆங்கில நாகரிகத்தில் ஏற்பட்டுள்ள ஆங்கில உயர்தரக் கல்வி நம் பெண்களுக்கு உகந்ததா என்று சிலர் கேட்கின்றனர். பெண்களுக்கு உகந்ததா என்னும் கேள்வியை ஆண்கள் விஷயத்திலும் கேட்கவேண்டும். தற்கால ஆங்கிலக் கல்வி, முக்கியமாக உத்தியோகத்துக்கு என ஏற்பட்டதுதான். இதில் மதபோதனை, நீதி போதனை, தேச பக்தி, மனப் பண்பு (Culture) இவற்றிற்கு வேண்டிய விஷயங்கள் யாவும் குறைவே. ஆகவே தற்கால ஆங்கிலக் கல்வி ஆண் பெண் இருபாலாருக்குமே பூர்த்தியான கல்வியல்ல. அரசாங்க முறையுடன் கலந்த ஒரு பெரிய கேள்வி இது. தேசீயக் கல்வி ஏற்படும்போது வேண்டிய அநுகூலமான மாறுதல்களை எதிர் பார்க்கலாம். அதுவரைக்கும் அபிப்பிராய பேதமின்றி நன்முக வாழவேண்டிய ஆண் பெண்களுக்கு ஒரேவிதக் கல்வி இருக்க வேண்டியதுதான். அதிலுள்ள குறைகளை வீட்டில் பெற்றோர்கள் நீக்கவேண்டும். நீதியான மார்க்கத்தில் மதப்பற்று, தேசப்பற்றுடன் குழந்தைகளை வளர்க்க வேண்டியது பெற்றோர்களின் கடமை. பெரியவர்கள் பக்தி சிலத்துடனும் ஒற்றுமையுடனும் நடந்துகாட்டிக் குடும்பச் சுற்றுவட்டத்தைப் பரிசுத்தமாக வைத்துக்கொண்டு, அந்தச் சுற்றுவட்டத்தில் குழந்தைகளை க்கவனமாக வளர்த்து, குழந்தைகள் எப்படி இருக்க வேண்டுமென்று விரும்புகின்றார்களோ அப்படித் தாங்கள் உதாரணமாய் இருந்து நடந்து காண்பித்துவந்தால் அந்தக் குழந்தைகள் உத்தமமான சத்புத்திரர்களாயும் சத்புத்திரிகளாயும் இருப்பார்கள். வருங்கால உலகத்து ஜனசமூகம் இவ்வித ஆண் பெண் மக்களை உடையதாயிருக்க வேண்டும் என்பதே அறிவாளிகளின் அவா.

பாடசாலைக் கல்வியும் உத்தியோகத்துக்கு வேண்டிய உயர்தரக் கல்வியும் முடிந்து குடும்பத்தை நடத்தும் ஆண் பெண்கள் பிரதிதினமும் ஒன்றிரண்டு மணி நேரமாவது சிறந்த பக்தியையும் நீதியையும் புகட்டும் நூல்களைப் படித்து இன்புறும் பழக்கத்தைக் கொண்டு, கற்றபடி நிற்கப் பழகி, குழந்தைகளையும் நல்வழியில் பழக்கும்படியான அறிவையும் ஆற்றலையும் நம் மக்களுக்கு ஆண்டவன் அருளுவாராக.

'மெனக்கெட்டு'

"வேலை மெனக்கெட்டு இவ்வளவு நாழிகை காத்திருந்தேன். நீ கோவிலுக்கு வரப்போறே, வரப்போறேன்னு நெனச்சேன். இப்ப, நீ வர மாட்டேன்கிறாய்" என்று கமலா கூறுகிறாள். அவள் வேறு பெரிய வேலைகளையெல்லாம் விட்டுவிட்டுத் தன் தோழிக்காகக் காத்துக்கொண்டிருப்பதாகச் சொல்கிறாள். 'வேலை மெனக்கெட்டு' என்று அவள் பேச்சில் வரும் தொடர் அக்கருத்தை வெளிப்படுத்துகிறது. 'வீணை கெட்டு' என்பது மாறி 'வேணை கெட்டு' என்று ஆகி அது பிறகு 'மெனக்கெட்டு', 'மெனக்கட்டு' என்றெல்லாம் உரு மாறிவிட்டது.

ஆங்கிலப் பதங்கள்

ஆங்கிலத்திலிருந்து தமிழில் உருத் தெரியாது வழங்கும் வார்த்தைகள் பல. வழக்கு விசாரணையை 'ஹியரிங்' என்று சொல்கிறார்கள். அது கேட்டல் என்னும் பொருளுடைய 'ஹியரிங்' (Hearing) என்ற சொல்லின் வேறு உருவம். 'லாந்தல்' என்று கிராமத்து ஜனங்கள்கூட வழங்குகிறார்கள். 'லாண்ட்டர்ன்' (Lantern) என்ற ஆங்கிலச் சொல் அப்படி ஆகி விட்டது.

ஆசிரியர் குறிப்பு

பாரதியார் ஞாபகச்சின்ன மண்டபம்

ஜூன் மாதம் 3-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை எட்டையபுரத்தில் பாரதியார் ஞாபகச் சின்ன மண்டபத்திற்குக் கால்கோள்விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. ராஜாஜி அவர்கள் அஸ்திவாரக் கல் நாட்டினார்கள். இனி மண்டபம் எழும்பித் தமிழ் நாட்டார் பாரதியாரிடத்துக் கொண்ட அன்பின் உருவமாக விளங்கும். மண்டபத்தை எல்லா வகையாலும் பாரதியாருடைய நினைவைத் தூண்டும் நிலையமாக்கும் துறையில் தமிழர் ஈடுபடவேண்டும். இந்தத் தொண்டில் தமிழர் பணம் பயனுறும்படியாகச் செய்வதற்குக் காரணமாக இருந்த 'கல்கி' ஆசிரியர் தமிழர் அனைவருடைய பாராட்டிற்கும் உரியவர்.

கவி பாரதிதாசன் நிதி: பாரதியாரை அவர் வாழ்நாளிலே அருமை தெரிந்து போற்றவில்லை என்ற இழிசொல் தமிழர்களுக்கு இருக்கிறது. இப்போது பாரதியார் மீட்டும் பிறந்தால் தமிழர் அதற்கேற்ற பிராயச்சித்தம் செய்துகொள்ள மூன்வருவார்கள். ஆனல் அது நடைபெறக் கூடியதா? ஆயினும் பாரதியாரின் கவிபரம்பரையிலே தமிழ் நாட்டில் இருக்கும் கவிஞர்களைத் தக்கபடி போற்றி உபசரித்தால் அந்த இழிசொல்லைப் போக்கிக்கொள்ளலாம். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையவர்கள் நிதி வரவரப் பெருகிவருவதைக்கண்டு மகிழ்ச்சி அடைகிறோம்.

பாரதியாருடைய மாணக்கராகிய கவி பாரதிதாசனுக்கு உதவும்பொருட்டுச் சில அன்பர்கள் நிதி திரட்ட முன்வந்திருக்கிறார்கள். பாரதிதாசனுடைய வாக்கில் பாரதியின் மணம் விரவி நிற்கிறது. தெள்ளத் தெளிந்த ஓட்டம், ஈட்டி பாய்வது போன்ற பயமற்ற போக்கு, புதிய துறையில் துணிவாகப் புகும் வேகம்— இவை பாரதிதாசன் கவிதைப் பண்புகள். நிதி பெருகும்படி செய்வது தமிழர் கடமை. பணம் அனுப்ப விரும்புவோர் **ஸ்ரீ எஸ். எ. ராமநாதன், 'லிபரேடர்', 2/11, மவுண்ட் ரோடு, சென்னை** என்னும் விலாசத்திற் காவது, **ஸ்ரீ என். கிருஷ்ணராஜ் ரெட்டியார், நாமக்கல்** என்னும் விலாசத்திற்காவது அனுப்பலாம்.

நாவல் பரிசு

தமிழ் நாவல்கள் அதிகமாக எழுத வேண்டுமென்ற கிளர்ச்சி தமிழ் நாட்டில் உண்டாகியிருக்கிறது. எழுத்தாளர்களுக்கு இவ் விஷயத்தில் உத்ஸாகம் உண்டாக்குவதற்காக **ஆயிர** ரூபாய்ப் பரிசு ஒன்று சிறந்த நாவல் ஒன்றுக்கு அளிக்க எண்ணியிருக்கிறோம். நாவல்கள் அனுப்புபவர்கள் கவனிக்க வேண்டிய நிபந்தனைகள் வருமாறு :

1. நாவல் இதுகாறும் வெளியிடாததாக இருக்கவேண்டும்.
2. மொழிபெயர்ப்பாகவோ தழுவலாகவோ இராமல் சொந்தமாய் எழுதியதாக இருக்கவேண்டும்.
3. 1945-ஆம் வருஷம் நவம்பர் மாதம் 30-ஆம் தேதிக்குள் வரும் நாவல்களே பரிசீலனைக்கு உரியவை.
4. பரிசுக்குரிய நாவலைத் தேர்ந்தெடுக்க ஒரு குழுவினர் நியமிக்கப்படுவார்கள். அவர்களில் பெரும்பாலோருடைய தீர்ப்பே முடிவானது.
5. பரிசு பெறும் நாவலைக் கலிமகளில் தொடர் கதையாக வெளியிடும் உரிமை எங்களுக்கு உண்டு. கலிமகளில் 120 முதல் 150 பக்கங்கள் வரையில் வரக்கூடிய தொடர் கதையாக இருக்கவேண்டும்.
6. கலிமகளில் வெளிவந்தபிறகு அதைத் தனியே புஸ்தகமாக வெளியிடும் முதல் உரிமை கலிமகள் காரியாலயத்தாருக்கு உண்டு. காரியாலயத்தார் நடைமுதலில் மேற்கொண்டுள்ள வழக்கப்படி அதற்குத் தனியே ஸம்மானம் வழங்கப்படும்.
7. எந்த நாவலும் பரிசுக்கு உரியதன்று என்று பரிசீலனை செய்பவர்கள் எண்ணினால் வந்தவற்றுள் சிறந்தவற்றுக்கு உசிதம்போல் ஸம்மானம் அளிக்கப்படும்.
8. எந்த விஷயத்தில் சந்தேகம் எழுமானலும் ஆசிரியருடைய தீர்ப்பே முடிவானது. விதிகளை மாற்றவும் திருத்தவும் அவருக்கு உரிமை உண்டு.

நாவல் அனுப்புகிறவர்களைத் தயை செய்து தெளிவாகக் கூட்டெழுத்து இல்லாமல் எழுதி அனுப்பும்படி வேண்டுகிறோம். பரிசீலனை செய்பவர்கள் பெயர் பிறகு வெளியிடப் பெறும்.

கலிமகள் காரியாலயம், மயிலாப்பூர்.

பொக்கிஷச் சாவி



எஸ். சங்கரன்

முன் ஒரு காலத்தில் பூபாலன் என்ரொரு பணக்காரன இருந்தான். அவன் மிகவும் கருமி. ஏழை எளியவர்களுக்குக் காலணக்கூடக் கொடுக்க மாட்டான். தன் திரண்ட செல்வத்தை இரும்புப் பெட்டிகளில் வைத்துப் பூட்டி எப் பொழுதும் அந்த நினைவாகவே இருப்பான். அவன் பணம் அவனுக்கோ அல்லது அவன் சுற்றத்தார்களுக்கோ, ஒருவருக்கும் உபயோகப்படவில்லை. எல்லாரும் பூபாலனை வெறுத்துவந்தார்கள். ஆனால் தன்னையிலிருந்து யாதொரு செலவு மின்றித் தன்னால் ஏதாவது உபகாரம் செய்ய முடியுமென்றால் அதற்கு அவன் தயங்க மாட்டான். யார் வந்து அழைத்தாலும் கூடச் சென்று வேண்டிய உதவியைச் செய்துவிட்டு வருவான்.

ஒரு நாள் இரண்டு குதிரைகள் பூட்டிய வண்டி ஒன்று பூபாலன் வீட்டின் முன்னால் வந்து நின்றது. அதிலிருந்து ஒருவன் இறங்கி வந்து பூபாலனிடம், "என் மனைவி இப்பொழுதுதான் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். ஒருவரும் உதவிக்கு இல்லை. தயவுசெய்து கூட வந்து உபகாரம் செய்ய முடியுமா?" என்று கேட்டான். பூபாலன் வருவதாக வாக்களித்தான். பிறகு தன் நிலவறைக்குச் சென்று பெட்டிகள் பத்திரமாகப் பூட்டப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்துவிட்டு வெளியே வந்தான்.

இருவரும் வண்டியில் ஏறிக்கொண்டனர். குதிரைகள் வரவர மிகவும் வேகமாக ஓட ஆரம்பித்தன. பூபாலன் இதுவரையில் பார்த்திராத சாலைகள் வழியாக வண்டி சென்றது. வெளியே ஓர் ஈ, காக்காய் கூடத் தென்படவில்லை. பகல் கழிந்து இரவும் வந்தது. வண்டி போய்க்கொண்டே இருந்தது. நிர்மலமான ஆகாயத்தில் சந்திரன் உதயமானன். அந்த நிலா வெளிச்சத்தில் குதிரைகளின் நிழல் பூமியில் படவில்லை. பூபாலனுக்குப் பயம் தோன்றலாயிற்று.

"இந்த இடங்களை நான் பார்த்ததே இல்லையே! என்னை எங்கே கூட்டிக் கொண்டு போகிறாய்?" என்று கேட்டான்.

"கொஞ்சம் பொறு. என் வீடு வந்தாயிற்று" என்று பதிலளித்தான் அன்னியன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வண்டி ஒரு கிராமத்தை அடைந்து ஒரு வீட்டின் முன்னால் நின்றது. வாசலில் பெரிய கூட்டம் கூடியிருந்தது. அன்னியன் பூபாலனை வீட்டிற்குள் அழைத்துச் சென்றான். எங்கே பார்த்தாலும் தங்கமும், வெள்ளியும், ரத்தினங்களும், விலையுயர்ந்த மாணிக்கங்களும் சிதறிக் கிடந்தன. அவைகளை யாராவது எடுத்துச் செல்வார்களே என்று ஒருவரும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. மரங்களில் தங்கத்தால் செய்த உருவங்களைப் பதித்திருந்தார்கள். கதவில் ஆணிகளும் பூட்டுகளும் தங்கத்தினால் செய்யப்பட்டிருந்தன.

இவைகளைப் பூபாலன் கண்டு அதிசயித்துக்கொண்டே விசாலமான ஓர் அறைக்குள் நுழைந்தான். அதன் நடுவில் தந்தக் கட்டிலொன்றில் மிக அழகான ஒரு ஸ்திரீ படுத்துக்கொண்டிருந்தாள். அருகில் ஒரு குழந்தை தூங்கிக்கொண்டு இருந்தது. அவள் பூபாலனைத் தன்னிடம் அழைத்து, "நீ எங்கே வந்திருக்கிறாய் என்று உனக்குத் தெரியாது. இங்கே காணப்படுபவர்கள் மனிதர் அல்ல. உன்னை அழைத்து வந்த என் கணவர் கூட மனிதர் அல்ல; எல்லோரும் பூதங்கள். நீ காணும் விலையுயர்ந்த இச்செல்வங்கள் யாவும் உண்மை அல்ல. சாயங்காலம் காணப்படும் நிழலைப் போல் மறைந்து விடக்கூடியவை. உன்னைப் போலத்தான் நானும் சிறு வயதில் இங்கே அகப்பட்டுக்கொண்டேன். என்னால் இனிமேல் தப்பிப் போக முடியாது. ஆனால் என்னை உனக்கும் வரக்கூடாது. அதனால்தான் இந்த விவரத்தை உனக்குக் கூறுகிறேன்" என்றாள்.

பூபாலனது மனத்தில் பயம் பலமாகப் பிடித்துக் கொண்டது. "உயிர் தப்பிப் போவதற்கு ஏதாவது வழி உண்டா?" என்று நடுங்கிக்கொண்டே கேட்டான்.

"உண்டு; இவர்கள் கொடுக்கும் வஸ்துக்களை, எவ்வளவு விலை உயர்ந்தவையாயினும் சரி, வாங்கிக்கொள்ளக் கூடாது. ஒரு விதமான ஆகாரமும் உண்ணக்கூடாது. அப்பொழுது உனக்குத் துன்பம் ஏற்படாது" என்றாள் அவள்.

பூபாலன் அவளுக்கு வந்தனம் அளித்து விட்டுத் தன்னைக் காப்பாற்றும்படி கடவுளிடம் முறையிட்டுக் கொண்டான். தான் கஷ்டப்பட்டுச் சேர்த்து வைத்திருந்த செல்வங்களைக் கண்ணுல்கூடப் பார்க்க முடியாது என்று நினைத்ததும், அவன் துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டது.

அன்னியன் தன் சுற்றத்தாருடன் வந்து பூபாலனை விருந்துண்ண அழைத்தான். அதற்கு அவன், தனக்கு ஏகாதசி விரதம் என்று கூறி மறுத்துவிட்டான். குழந்தைக்கு நாமகரணம் முதலிய சடங்குகள் நிறைவேறின. பூபாலன் உயிரைக் கொங்கியில் வைத்துக்கொண்டு கடவுளிடம் மனம் உருகிப் பிரார்த்தனை செய்தான். எவ்வளவு வருந்தி அழைத்தும் அவன் களியாட்டத்திலோ விருந்துகளிலோ கலந்து கொள்ளவில்லை. ஒவ்வொரு வினாடியும் அவன் மனம் பக் பக்கென்று அடித்துக்கொண்டது. இடைவிடாமல் பகவானை வேண்டிக் கொண்டு இருந்தான்.

கடைசியில் அன்னியன் பூபாலனிடம் வந்து, "நான் கூப்பிட்ட தும் உடனே வந்து எனக்கு உதவி செய்த உனக்குத் தகுந்த விதத்தில் பரிசளிக்க விரும்புகிறேன். இங்கே காணப்படும் பொருள்களில் நீ எதை விரும்பினாலும் தாராளமாக எடுத்துக் கொள்ளலாம்" என்றான். தங்கக் கட்

டிகளின் பிரகாசம் பூபாலனைக் குருடாக்கி விடுப்போல இருந்தது. அவன் மனத்தில் அன்னியன் மனைவி கூறிய வார்த்தைகள் ஞாபகத்திற்கு வந்தன. "எனக்குப் பரிசு ஒன்றும் தேவையில்லை. என் வீட்டில் இருக்கும் செல்வமே எனக்குப் போதும்" என்றான்.

"இந்த வைரக் கற்களையாவது எடுத்துக் கொள். ஒவ்வொன்றும் கோடி ரூபாய் பெறும்" என வேண்டினான் அன்னியன். ஒரே பிடிவாதமாகப் பூபாலன் ஒன்றும் வேண்டாம் என மறுத்துவிட்டான்.

கடைசியில் வேறோர் அறைக்கு அவனை அழைத்துக் கொண்டு போனான் அன்னியன். அங்கே தங்கம் வெள்ளிக் கட்டிகளுக்குப் பதிலாகச் சிறியனவும் பெரியனவுமாக ஏராளமான சாவிக் கொத்துகள் குவித்துவைத்திருந்தன. சுவர்களிலெல்லாம் சாவிகள் தொங்கிக்கொண்டிருந்தன. உலகத்தில் எத்தனை விதமான சாவிகள் உண்டோ அத்தனையும் அந்த அறையில் காணப்பட்டன. அவைகளில் ஒரு சாவியைப் பார்த்ததும் பூபாலனின் முகம் வெளுத்தது. பயத்தினால் அவன் உடம்பு நடுங்கியது. ஒரே நிலையாக அதையே பார்த்துக்கொண்டிருந்தான். அன்னியன், "என்ன? விலையுயர்ந்த என் பரிசுகளை எல்லாம் வாங்க மறுத்த நீ, கேவலம் இந்த இரும்புச் சாவியில் மனத்தைப் பறி கொடுத்துவிட்டாயே!" என்று கேட்டான்.

"ஆமாம். ஆனால் இதுதான் என் நிலவறைப் பொக்கிஷப் பெட்டிகளின் சாவி. உன்னிடம் புறப்படுவதற்கு முன்னால் என் கையாலேயே அவைகளைப் பூட்டிவிட்டு வந்தேன்" என்றான் பூபாலன்.

அன்னியன் லேசாகச் சிரித்துக்கொண்டு, "பூபாலா, இதில் அதிசயம் ஒன்றும் இல்லை. நீ கருமியானாலும் எனக்கு உதவி செய்ய வந்தாய். உண்மையைக் கூறுகிறேன், கேள். நீ நினைக்கிறபடி நானும் என் உறவினர்களும் மனிதஜாதியைச் சேர்ந்தவர்கள் அல்ல. தானும் அநுபவியாமல் பிறருக்கும் கொடாமல் பணத்தைச் சேர்த்து வைக்கும் கருமிகளின் பொக்கிஷங்களின் சொந்தக்காரர்களான பூதங்கள் நாங்கள். பணத்தைச் சேர்ப்பதுதான் உங்கள் வேலை. அவைகளின் வாஸ்தவமான எஜமானர்கள் நீங்கள் அல்ல; நாங்கள். எவ்வளவு பணம் சேர்த்தாலும் எவ்வளவு நாள் வாழ்ந்தாலும் தருப்தி என்பது உங்களுக்கு ஏற்படாது. ஆனால் இன்று உன் பொக்கிஷத்தின் சாவியை உனக்கே கொடுக்கிறேன். இனிமேல் அவைகளுக்கு நீயே சொந்தக்காரன்" என்றான்.

நடுங்கும் கைகளுடன் பூபாலன் தன் பொக்கிஷச் சாவியை வாங்கிக் கொண்டான். வாசலில் ஒரு குதிரை வண்டி வந்து அவனை மறுபடியும் அவன் வீட்டில் விட்டு மாயமாக மறைந்து போயிற்று.

பூபாலன் ஏராளத் தன் நிலவறைக்குச் சென்று தன் செல்வங்கள் அவ்வளவையும் வெளியே கொண்டுவந்தான். அவைகளைத் தான தர்மங்களில் செலவழித்தான்; கேட்டவர்களுக்கு இல்லை என்று கூறாமல் வாரி வாரிக் கொடுத்தான். அவனிடம் ஒரு புது மாறுதல் காணப்பட்டது. ஜனங்கள் தர்மவான் என்று அவனைக் கொண்டாடினார்கள். அவன் செல்வம் மேலும் மேலும் வளர்ந்துகொண்டே வந்தது.

விடைகள்: 81. ரோடு. 82. சப்பாத்தி. 83. வெங்காயம். 84. நீலா, 85. பாம்பு. 86. தேங்காய். 87. மீன். 88. மிளகாய். 89. நெய். 90. தண்ணீர். 91. வானம், சந்திரன், நக்ஷத்திரம். 92. வாழை மரம். 93. மாதுளங்காய். 94. அகப்பை. 95. பாம்பு. 96. நாய்க்குடை. 97. நெருப்பு. 98. சுரைக்காய்.

'அரிக்கன்' விளக்கு

ஒரு பண்டிதர் ஸ்டேஷனரைப் பேசுவதில் வல்லவர். "எங்கள் வீட்டில் இரவில் அருக்கன் விளக்கு வெளிச்சம் தருகிறது. பகலில் கூட அருக்களுடைய விளக்குத்தான் ஒளி வீசுகிறது" என்று வேடிக்கையாக அவர் சொன்னார். அரிக்கன் விளக்கு என்பது ஒரு வகை விளக்கின் பெயர். அருக்கன் என்பது சூரியனுக்குப் பெயர். 'அரிக்கன்' என்ற சொல்லைச் ஸ்டேஷனர்காரர்கள் மாற்றிவிட்டார்.

அரிக்கன் விளக்கு என்பதுகூட மாறின உருவந்தான். முதல் முதலாக வந்த வண்டிக்காரன் விளக்கை உற்பத்தி செய்தவர்கள் புயல் காற்றிலும் அது எதிர் நின்று எரியும் என்ற குறிப்பை நினைத்து அதற்கு ஆங்கிலத்தில் 'ஹர்ரிகேன்' விளக்கு (Hurricane Lamp) என்று பெயர் வைத்தார்கள். 'ஹர்ரிகேன்' என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் புயல் என்ற பொருள். அச்சொல் தமிழில் ஹரிகேன் ஆகி, அரிக்கன் என்று வந்து, பண்டிதருடைய ஸ்டேஷனரியில் 'அருக்கன்' ஆகிவிட்டது.



90 - நாட்களில்!

[இந்த இரண்டாவது உலக மகாயுத்தத்தில் விஞ்ஞானத்தால் விளைந்த அதிசயங்கள் கணக்கில் அடங்கா. எத்தனை விதமான ஆயுதங்கள்! எத்தனை விமானங்கள்! யந்திரங்களே போர் செய்யும் இந்த யுகத்தில் மனிதருடைய ஜீவசக்தி படைத்த கைகளும் வேலை செய்வது அவசியமாகத் தான் இருந்தன. இரு விரல்கள் சேர்ந்து ஒரு முறுக்காணியைத் திருகினால் தான் பிரம்மாண்டமான யந்திரம் இயங்கும். நேரடியாக யந்திரங்களே இயக்குவது கிடக்கட்டும். விமானங்களுக்கு நிற்க இடம், புறப்பட இடம், ஓடும்போது இடையிலே அசை போட இடம் வேண்டுமே; அவற்றை மனித யந்திரந்தான் அமைக்கவேண்டும். அப்படி ஜீவனுள்ள யந்திரங்கள் சமைத்த அற்புதமான சிருஷ்டிகள் பல உண்டு. இதோ ஐந்து லக்ஷம் பேர்கள் சேர்ந்து ராக்ஷஸ விமானங்களுக்குத் தங்கும் இடம் அமைத்த அதிசயக் கதை இருக்கிறது. தொண்ணூறே நாட்களில இந்த விமானச்சாலை உருவெடுத்தது. இது இல்லாவிட்டால் விமானங்கள் ஆகாசத்திலே அலைந்து திரிய வேண்டியதுதான். அப்படி அவைகளே அலையவிடாமல் காப்பாற்றிய தொழிலாளிகள், நிஜத்தால் இந்த உலகத்தில் சுவர்க்கத்தையே நிருமித்து விடலாம்போல் இருக்கிறது. —ப - ர்.]

தூரவில் வளைந்தோடும் யாங்க்ட்ஸி ஆற்றின் உபநதி ஒன்றில், இமயமலையிலிருந்து வரும் மெல்லிய தென்றற் காற்று வீச, படகுகள் மெதுவாக அசைந்து சென்றன. அதற்கு அப்பால், ஒரு பிரம்மாண்டமான கட்டிடத்தை எழுப்பும் வேலையில் பத்து லக்ஷம் கைகள் முனைந்திருந்தன.

தலைமுறை தலைமுறையாகப் பயிர் வேலை செய்து கரடுத்தப்போன கைகள் இன்று வேறு வேலையில் அழ்ந்திருந்தன. அந்த ஐந்து லக்ஷம் தொழிலாளிகள் வயல்களுக்குச் செல்லும் வரப்புக் கால்களை அழித்துக் கலங்கல் நீரை வடியவிட்டுப் பிறகு மிருதுவான செந்நிறக் களிமண்ணைத் தோண்டியெடுத்தனர். 8700 அடி நீளமும் 200 அடி அகலமுமுள்ள விமானச் சாலைகளை அவர்கள் கட்டவேண்டியிருந்தது. ஜப்பானியரை எதிர்ப்பதற்குப் புதிய யுத்தக் கருவி ஒன்றைக் கண்டு பிடித்திருந்தனர். இதுவரை அத்தனை பெரிதும் பயங்கரமுமான பறக்கும் ஆயுதத்தை யாரும் கண்டதில்லை. பி-29 (B-29) என்னும் பெரிய பறக்கும் விமானக்கோட்டை தங்குவதற்குத்தான் அந்தச் சாலைகள். செழிப்பான வளைவுகள் சூழ்ந்திருந்த அந்தச் சிவப்பும் மஞ்சளுமான பீடபூமியிலிருந்து, டன்கள் கணக்கில் பயங்கரவெடி குண்டுகள் நிரம்பிய பி-29 'பாம்பர்' விமானங்களின் பெருஞ் சைனியம் ஒன்று புறப்படுவதாக இருந்தது.

ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் ஓர் ஒழுங்கில்லாமல் அங்கும் இங்குமாகச் சிதறிக் கிடப்பதாகத்தான் பார்ப்பவர்களுக்குத் தோன்றும். ஆனால் வாஸ்தவத்தில், கன்கு ஒழுங்குபடுத்திய பிரிவுகளாக, சரியான மேற்பார்வையில் அவர்கள் வேலை செய்துவந்தனர்.

விமான நிலையத்துக்குள்ளே வெவ்வேறு பகுதிகளை அமைத்துக் கொடுப்பதாக ஏற்றுக்கொண்ட சீனக்கண்டிராக்டர்கள், சுமார் 1,40,000 தொழி

லாளிகளிடம் வேலை வாங்கிவந்தனர். அமெரிக்கப் பள்ளிக்கூடங்களில் படித்துத் தேர்ச்சி பெற்ற எஞ்சினீயர்கள் வகுத்த திட்டங்களுக்கு ஏற்ப இவர்கள் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டிருந்தனர். இத்த எஞ்சினீயர்களுக்கு மேல் ஒரு நிர்வாக எஞ்சினீயரும், எல்லாருக்கும் மேலாக அமெரிக்க விமான எஞ்சினீயர்களும் இருந்தார்கள். விமானங்களுக்கு அவர்கள் அமைத்த கட்டுக்கோப்பின் விவரங்களையும் அவற்றின் உள் விவரங்களையும் அவ்வப்போது தம் கீழுள்ள எஞ்சினீயர்களுக்கு அனுப்பிவந்தனர்.

மேற்பார்வை பார்த்துவந்த அமெரிக்க அதிகாரிகள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும், வெவ்வேறு இடங்களில் பரவி, அங்கங்கே நடக்கும் வேலைகளைத் திறமையாகக் கவனித்து வந்தனர். ஒரு நிலையத்திலே இரண்டு அதிகாரிகளும் மூன்று எஞ்சினீயர்களும் இருந்து 72,000 தொழிலாளிகளிடம் வேலை வாங்க நேர்ந்தது. வேலை முறையில் எத்தனையோ சிக்கல்கள்; ஆரம்ப நிலையில் அங்கேயே சின்னஞ் சிறு குடிசைகளில்தான் படுக்கை; இப்படி எத்தனையோ கஷ்டங்கள்.

கூலியாட்களும் தொழிலாளிகளும் ஒன்று சேர்ந்து யந்திரம்போல வேலை செய்யத் தொடங்கியவுடனே, அஸ்திவாரமும் மேல் கட்டிடமும் வேகமாக எழும்பலாயின. விமானச் சாலையில் பாறைகள் படை படையாக இருந்தன. அடியில் இருந்த பாறைப்பரப்பு, சுமார் 8-அங்குலம் கனமுள்ளதாக இருந்தது. பெரிய பெரிய பாறைகளைக் கையால் பொருத்தி யிருந்தனர். அடிப் படையிலும் கூடிய வரையில் பாறைகள் நெருக்கமாக இருந்தன. வியெண்ணெக்குப் பதிலாகச் சேற்றையும் தண்ணீரையும் கலந்து இவற்றினிடையே பூசினார்கள். அருகிலுள்ள குட்டைகளில் இந்தச் சேறும் தண்ணீரும் சரியான அளவில் கலந்து மொத்தையாகும் வரையில் சிறுவர்கள் குதித்துக்கொண்டே உற்சாகத்தோடு மிதித்தார்கள்.

ஆற்றிலிருந்து பக்கெட்டுகளில் கூலியாட்கள் தண்ணீர் எடுத்து வந்தார்கள். சில இடங்களில் ஆற்றிலிருந்து விமானச் சாலைவரையில் படிப்படியாக ஒன்றைவிட ஒன்று உயரமுள்ள கிடங்குகளை வெட்டினார்கள். ஒரு கிடங்கிலிருந்து மேல் இருந்த கிடங்கிற்கு ஒருவகை ராட்டினத்தால் ஜலத்தைப் பாய்ச்சினார்கள். ஒவ்வொரு ராட்டினத்திலும் நான்கு கூலியாட்கள் வேலை செய்தனர். இப்படிக் கீழிருந்து படிப்படியாகத் தண்ணீர் மேலே எறி விமானச் சாலையை அடைந்தது.

பாறைகளுக்கிடையே பூச்சு வேலை ஆனதும், பத்து டன் எடையுள்ள, கையால் இழுக்கும் ரோலரைக் கொண்டு இந்தப் பாறைத் தளவரிசையை அழுத்தினார்கள். ரோலரில் இரு முனைகளில் கட்டிய இரண்டு வடங்களை நூற்றுக்கணக்கான கூலிகள் சிரமப்பட்டுப் பெருமூச்சு விட்டுக்கொண்டு மெதுவாக இழுத்தார்கள். அடுத்த படையில் ஆறு அங்குலம் கனத்துக்கு ஓரங்களில் கற்களை வைத்து, பாறைகளை அடுக்கிப் பூச்சுவேலை செய்து, ரோலரினால் அழுத்தினார்கள். அப்பொழுது ஓரங்களிலுள்ள கற்கள் பெரிய பாறைகளின் நடுவே போய் அழுந்தின. இவ்விதமே மூன்றாவது நான்காவது படைகள் எழும்பின. கடைசியாக ஜல்லிக் கற்களைக் கொட்டி, மேலே பூசி ரோலரை ஓட்டினார்கள். பூர்த்தியடைந்த சாலை, பாறையும் சேறும் சேர்ந்து 20-அங்குலம் கனமுள்ளதாக இருந்தது.

காற்றும் மழையும் படும்படியாக இருந்த அந்த மேற் பரப்பில், தூசு விழுந்து கெடாமல் இருக்க, எஞ்சினீயர்கள் ஒரு மெல்லிய பாதுகாப்புப் பூச்சைப் பூசினார்கள். அவர்கள் மழை வரும் என்று பயப்படவில்லை; வறண்ட காற்று மேற்பரப்பைச் சிறிது சிறிதாக அரித்துவிடுமோ என்று பயந்தனர். ஒரு விமானச் சாலையில் அவர்கள் பூசிய திரவம், சீஜனில் ஏராளமாக விளையும் ஒருவித்தைக் கொட்டைகளிலிருந்து இறக்கிய கனமான கறப்பு நிற எண்ணெய்தான். சாலைகளில் வெகு தூரம் வரையில் பூசுவதற்கு இது மிகவும் ஏற்றதாக இருந்தது.

மேலதிகாரிகளான எஞ்சினீயர்களுக்கு இது வரையில் நடந்த வேலை பெரிதாகவே தோற்றவில்லை. 6000-அடி அகலமும் 9000-அடி நீளமும் உள்ள ஓர் இடத்தில் 72,000-தொழிலாளிகள் வேலை செய்தனர். மற்றோர் இடத்தில் கட்டிட வேலை ஒழுங்காக நடக்கவில்லை என்று தோற்றியபோது, ஒரு லக்ஷத்துக்கு மேற்பட்ட தொழிலாளிகளைக்கொண்டு முடுக்கினர். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பிரம்மாண்டமான சீனச் சுவர் கட்டினார்களே, அதற்கு அப்புறம் இத்தனை பெரிய தொழிலாளிகள் கூட்டம் வேலை செய்ததில்லை.

செப்பிடு வித்தைதானே! இருபத்தேழே நாட்கள்! அதற்குள், நெல் விளையும் அந்தப் பிரதேசத்தை, போக்குவரவுச் சாமான்கள் எடுத்துச் செல்லும் விமானம் தங்கக்கூடிய சாலையாக மாற்றி விட்டார்கள். பொறுமையுடனும், சலிப்பில்லாமலும், சிரித்த முகத்தோடும் வேலை செய்த அந்தத் தொழிலாளிகளை எஞ்சினீயர்கள் அபார

மாகப் பாரசூட்டினர்கள். அந்தத் தொழிலாளிகள் குறிப்பிட்ட மணி நேரங்களில் வேலை செய்யவில்லை. அவர்களுக்குக் கூலிப்பத் தோன்றி னால் வயல் அருகிலுள்ள கூரைக் குடிசைகளுக்குப் போவார்கள். சற்றுக் கூலிப்புத் தீர்ந்தவுடனே மறுபடியும் வேலையைத் தொடங்கு வார்கள்.

பாறைகளை உடைக்கும் யந்திரங் கள் ஆகாய மார்க்கமாக வந்தன. அதற்கு முன்பு, மெல்லிய மேற்பரப்புப் படைக்கு வேண்டிய சிறு கற்களைக் கையாலேயே உடைத்தார்கள். பாறை களின் அடுக்கின்மேல் உட்கார்ந்துகொண்டிருக் கும் தொழிலாளிப்பெண்கள், வைக்கோற்புரி சுற்றி கோரக நிற்கும் பாறையை அது தூளாக்குகளாகும் வரையில் செதுக்கிக்கொண்டே இருப்பார்கள்.

சாப்பாட்டுக் கூடங்களும், வாசஸ்தலங்களும் மற்றக் கட்டிடங்களும் கட்டும்போது கிடைத்த உள்ளூர்க் கருவிகள் விநோதமானவை. தின் னஞ்சிறு சம்மட்டிகள், பழங்காலத்துத் தாப் பணங்கள், கர்நாடகமான ரம்பங்கள்! ஆணிகளை இடைப்பதாக இல்லை; அவற்றிற்குப் பதிலாக ஆப்புகளை அறைந்தனர். மரத்தாலான மூளை களிலே கதவுகளைப் பொருத்தினர்கள். 16-அடி மரங்களிலிருந்து பலகைகளை அறுப்பதற்கு ரம்பங் களை உபயோகித்தனர். எதிரெதிராக நின்று இரண்டிரண்டு தொழிலாளிகள் இந்த ஓரத்தி லிருந்தும், அந்த ஓரத்திலிருந்தும் மரத்தை அறுப் பார்கள். பலகைகளை அறுத்துக்கொண்டு கடைப் பாகத்திற்கு வரும்போது, அது எப்படித்தான் அவர்களுக்குத் தெரியுமோ, அவை சிறிதும் கோணைல் சரியான கோட்டிலே வந்து நிற்கும்.

சுதறுநீர் ஸ்நானத்துக்கென்று தட்டம் போட்ட அறைகளும் (Shower - rooms) தயாராகிவிட் டன. சாதாரணமான அறைகள். அவற்றில் தண் ணீரை எப்படிக் கொண்டுவருவது, நீர் சிதறும் யந்திரம் எப்படி வரும் என்பதுதான் தெரிய வில்லை. ஆனால் அந்தத் தச்சர்கள் இதற்கெல்லாம் அசந்துபோய்விடவில்லை. தம்முடைய துரப்பணத் தைக் கொண்டே அற்புதம் செய்து காட்டினர் கள். மரத் தொட்டிக்கு அடியிலே ஒரு மர யந் திரத்தைத் தூளைகளோடு வைத்து, நீர் சிதறும்படி யாக ஏற்பாடு செய்தார்கள். ஆகாயவிமானிகள் சிதற நீர் ஸ்நானம் செய்யலானார்கள். ஒரு வேலையாள் மரத்தொட்டியில் குளிர்ந்த நீரையோ அல்லது வெந்நீரையோ நிரப்பி, அதைத் தாம்புக் கயிற்றால் ராட்டினத்தின்மேல் இழுப்பான். பிறகு நீர் சிதறும்யந்திரத்தைத் திறந்துவிடுவான்.

மேற்பார்வை பார்த்த எஞ்சினீயர்களின் ஊக் கமும் விடாமுயற்சியும் சொல்லத் தரமல்ல. அவசரமான சந்தர்ப்பங்களில் அவர்கள் 24-மணி முதல் 36-மணிநேரம் வரையில் இடைவிடாமல் வேலை செய்தார்கள். அவசரவேலை என்று வந்தபோ தெல்லாம் மணி வரையறை என்ற பேச்சே எழ வில்லை. அவர்கள் போகும் இடங் களில் சில சமயம் அக்கம்பக்கத் துக் குடியானவர்கள் அளித்த உண வையே உண்ணவேண்டியிருந்தது. அவர்கள் தங்கள் வேலைக்குத் திட் டம் வகுத்துக்கொள்ள வேண்டும்; காண்டிராக்டர்களைக் கவனிக்க வேண்டும்; வேலையாட்களுக்குச் சரியான முறை களைச் சொல்ல வேண்டும்; மேலதிகாரிகளுக்கு அறிக்கைகளும் குறிப்புக்களும் அனுப்பவேண் டும்; எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அதற்குள் வேலையைப் பூர்த்தி செய்வதில் கருத்தைச் செலுத்தவேண்டும்.

விமானங்கள் ஓடும் சாலைகள், 'டாக்வி'கள் ஓடும் சாலைகள், எண்ணெய்க் கிணறுகள், குடி யிருக்க வீடுகள், சாப்பாட்டுக் கூடங்கள் முதலிய விமான நிலையத்துக்கு ஏற்ற சாமக்கிரிகள் மெல்ல மெல்ல உருவெடுக்க ஆரம்பித்தன. விமா னக்கோட்டைகளும் அவற்றின் சைனியங்களும் தங்குவதற்குக் கட்டவேண்டியிருந்த பெரிய கட் டிடத்துக்கு இவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வோர் அங்கமாக இருந்தது.

பி-29 விமானங்கள் ஓவதற்குச் சாலைகள் வேண்டுமே என்பது முக்கியமான பிரச்னை. கடை சியில், பாறைகளில் சேற்றை அறைந்து, கையால் செய்த, இந்த நிலையங்களைப் பரீக்ஷிக்கும் தருணம் நெருங்கியது. சாலைகள் பூர்த்தியாகி, மற்றக் கட்டி டங்கள் முக்கால்வாசி முடிந்திருந்த சமயத்தில், இந்த நிலையங்களைப் பரீக்ஷை பார்க்கலாம் என்ற செய்தி பறந்தது. விமான எஞ்சினியர்கள் ஓயாமல் உழைத்ததெல்லாம் அந்தத் தருணத்தை எதிர் பார்த்துத்தான். அந்தக் குறித்த நிமிஷத்திலே ஓர் அற்புதம் நடப்பதற்கு இருந்தது. அது உண் மையாகவே நடக்கலாம்; அல்லது நடக்காமலும் போகலாம்.

இந்தச் சோதனைத் தினத்துக்குக் காரணமாக இருந்தது ஒரு சுவதேன்: பி - 29 என்னும் ராக்ஷஸ விமானத்தின் ஆறு தடங்களின் சுவடு. இறங்கும்போது உபயோகிக்கும் இரண்டு கருவி களிலும், முன்பக்கத்தக் கருவியிலும், ஒவ் வொன்றுக்கும் இரண்டு பிரம்மாண்டமான சக்கரங் கள் - ஆக மொத்தம் 6-சக்கரங்கள். ஓடும் சாலை யில் தங்கும் முக்கியமான சக்கரங்களில் ஒவ் வொன்றுக்கும் சுமார் 400 - சதுர அங்குலம் இடம் வேண்டும். இந்த 'டயர்கள்' இடையே சில அங்குல தூரம் தள்ளி இரட்டையாகவே இருந்ததால், ஒரு சதுர கஜம் அளவுக்குச் சிறிது குறைவான பரப்புள்ள பூமி, அந்த அமுத்தம் சக்தியைத் தாங்கவேண்டியிருந்தது.



பெரிய விமானங்கள் சாதாரண மாக இறங்கும்பொழுது அவற்றின் அழுத்தும் சக்தி அதிகப் பலமாத லால், அதற்கு வேண்டிய அளவு இடம் கொடுத்தபின்பு, விமான எஞ்னீயர்கள் அந்தச் சாலைகளில் எந்த இடமும் 100,000-பவுண்டு எடைக்கு மேற்பட்ட அழுத்தத் தைத் தாங்காது, நொறுங்கிப் போகும் என்று சொன்னார்கள். 20-அங்குலம் கனத்துக்குப் பாறைகளாலும் சேற்றினாலும் ஆன இந்தச் சாலையில் தங்கப் போகும் அந்தப் பெரும்படைதான் ஜப் தீவுகளில் அக்கினிமழையை வர்ஷிக்க வேண்டும். இந்தச் சாலை அதைத் தாங்காமற் போயிற்றே, அவ்வளவு தான்! எல்லாவற்றையும் கூலைத்து, மறுபடி மாதக்கணக்கில் புதிதாகக் கட்டவேண்டிவரும்.

சீனாவில் ஓர் இடத்திலே அன்று அந்த ராக்ஷஸ விமானம் புதிதாக மூளைதெழுந்த விமான நிலை யத்துக்கு மேலே ஆகாயவீதியில் வட்டமிட்டது. எத்தனையோ விமானங்கள் சாலையில் சுமார் பாதிப் பாகத்தை ஏற்கனவே உபயோகித்திருந்தன. ஆனால் பி-29 விமானத்தைத் தவிர வேறு எதற்கும், ஆகாயத்திலிருந்து இறங்கவோ அல்லது பூமியிலிருந்து மேலே பறக்கவோ 8000-அடி வீச்சுத் தேவையில்லை. அந்த விமா னம் கீழே இறங்கத் தொடங்கும் போது ஆயிரமாயிரம் கண்கள் இமையாமல், பதறும் உள்ளத் தோடு அதைப் பார்த்துக்கொண்டி ருந்தன. விமானம் இறங்கியது. அதன் சக்கரங்கள் சாலையை நெருங்கின. லக்ஷக் கணக்கான கைகளால் நெருஷ்டியான அந்தச் செங் நிறச்சாலை அந்த அசுரவிமானத்தின் பளுவையும் அழுத்தத்தையும் தாங்கிக்கொண்டது!

வேலை ஆரம்பித்ததிலிருந்து சுமார் மூன்று மாதங்களில், இந்தப் பரீக்ஷை வெற்றியடைந்தது. அந்த விமான நிலையத்தின் ஒரு பாகத்தை 90-நாளைய ஒய உழைப்பினால் கட்டி முடித்ததுமே, முதல் பி-29 விமானம் அதன் சாலையில் இறங் கியது.

[‘உலோவி’யில் மேஜர் பேர்னர்ட் டபிள்யு. கிராண்டேல் எழுதியதிலிருந்து.]

மரணவஸ்தையிலும் சிலேடை

எட்டையபுரத்தில் கடிகை முத்துப் புலவர் என்ற வித்துவான் நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் இருந்தார். அவர் பல பிரபந் தங்களை இயற்றியிருக்கிறார். எட்டையபுரம் ஸம்ஸ்தான வித்துவானாக இருந்து சிறப்புப் பெற்றார். அவர் சிலேடையாகப் பேசுவதில் வல்லவர். மரணவஸ்தையில் அவர் இருந்த போது கூடச் சிலேடையாகப் பேசும் சாமர்த்தியத்தில் அவர் சோர்வு அடையவில்லை.

அவருடைய பிள்ளைகள் அவரை அணுகி, “உங்களுக்குப் பிறகு எங்களைப் பாதுகாப்பதற்கு யார் இருக்கிறார்கள்?” என்று சொல்லிப் புலம்பினார்களாம். அப்பொழுது புலவர், “ஓர் அப்பன் போனால் எட்டப்பன் இருக்கிறான்” என்று சாதுரியமாகப் பதில் சொன்னாராம். எட்டப்பன் என்பது எட்டையபுரம் ஜமீன்தார்களின் பொதுப்பெயர்.

உணவு இறங்காமல் துணியில் தோய்த்துப் பாலை வாயில் விடும் நிலையில் புலவர் இருந்தார். அப்போது அருகில் உள்ளவர்கள் அவ ருக்கு ஞாபகம் இருக்கிறதா, தெளிவான அறிவு இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்பி அவரைப் பார்த்து, “பால் கசக்கிறதா?” என்று கேட்டார்களாம்.

உடனே புலவர், “பாலும் கசக்கவில்லை; அதை விடும் துணியும் கசக்கவில்லை” என்றாராம். அப்போதுதான் உடன் இருந்தவர்களுக்குப் பாலில் தோய்க்கும் துணி அழுக்காக இருப்பது புலப்பட்டதாம்.

காற்றடி

கா. பூ. பூ.



★ ★ ★

முன்கதைச் சுருக்கம்

பத்மநாபன் தன் அத்தை வீட்டில் தங்கி யிருந்து, சென்னையில் கலாசாலையில் படித்துக்கொண்டிருக்கிறான். அவனுடைய **அப்பா** பள்ளிக்கூட உபாத்தியாயராக இருந்தவர், திருச்சியில் வசித்த தம் பெண் **கோமளத்தின்** குடும்பக் கடனைத் தீர்க்கத் தங்கையிடமிருந்து உதவி பெறுகிறார். **அத்திம்பேர்** இறந்ததும், தமது வேலையை ராஜினாமாச் செய்துவிட்டுத் தங்கையின் நிலங்களே மேற்பார்வை செய்கிறார். முத லில் நாத்தனாரிடம் மகனை விட விரும்பாத **அம்மா** இப்போது அதற்குச் சம்மதிக் கிறாள். பத்மநாபன் சென்னையில் மூன்று வருஷங்கள் அத்தையின் பெண்ணை **பங்கஜத்தோடு** சகஜமாகப் பழகுகிறான். இதற்கிடையே ஊரிலிருந்து பல தடவை **நாணுத் தாத்தா** அத்தை வீட்டுக்கு வந்து போகிறார். அண்ணனின் குடும்பத்தில் அவளுக்குப் பற்றுக் குறைகிறது. ஆயினும், மூன்றும் வருஷப் படிப்பு முடிந்து பத்மநாபன் ஊருக்குப் போகப் புறப்படும் பொழுது **அத்தை** அவனுடைய தந்தையிடம் கல்யாண விஷயத்தை ஞாபகப்படுத்தச் சொல்கிறாள்.

★ ★ ★

(சென்ற இதழ் 246-ஆம் பக்கத் தொடர்ச்சி)

8

சூரியோதயமாகிச் சற்று நேரத்துக்கெல் லாம், பாலாற்றைக் கடந்துகொண் டிருந்தேன். இதற்கு முன் நான் எத்தனை தடவை இங்கே வந்திருக்கிறேன்! ஆயினும் தொலைவில் அடர்ந்த மாஞ்சோலைகளுக்கும், ஆகாயத்தை நோக்கிக் கவரி வீசிய தென்னை மரங்களுக்கும் நடுவே தலை நீட்டும் அந்தக் கோயில் பொற்கலசத்தை இங்கிருந்து பார்த்ததில்லை. ஒவ்வொரு கணமும் புதிய காவியமாகத் தோற்றிய அந்தக் காலையிலே, கீழே மென்மையான மணல் வெளியும் மேலே நீல வானமும் அகண்டமாகப் பரந் திருக்க, ஒரு மோகன உலகில் மெதுவாக நடந்தேன்.

"யார் என்ன சொன்னாலும், நீ அந்த கொண்டிப் பையனைக் கல்யாணம் செய்து கொள்ளாதே."

"நான் என்னடி செய்வது? எங்கள் அம் மாவுக்கு ஆயில்யம். அதனாலேதான் அப்பா அவள் பேச்சைக் கேட்பதே இல்லையாம்! காலிலே கொஞ்சம் 'ஒச்சம்' இருந்ததனால் என்ன முழுகிப்போயிற்று என்கிறார்."

இந்தப் பேச்சைக் கேட்டு அந்தப் பக்க மாக என் முகம் தானே திரும்பியது. அந்த மடமங்கையின் கண்கள் கலங்கி, வாய் துடிதுடித்துக்கொண்டிருந்தது.

"சே! இவ்வளவு பயங்கொள்ளியா நீ! எங்கே, உன் கையைப் பார்ப்போம். உனக்கு ராஜகுமாரன் மாதிரி அகமுடையான் வரப்

போகிறான், பார்!" என்று அவள் தோழி அவளுடைய மலர்ந்த கரத்தைப் பார்த்து ஜோஸ்யம் சொன்னாள். மங்கையின் முகம் ஞாணங் கலந்த ஆனந்தத்தால் பூரித்தது.

'இந்தப் பெண்களுக்குத்தான் எவ்வளவு பேராசை? ராஜகுமாரனை மனசுக்குள்ளே விரும்பும் இந்தப் பெண்ணுக்கு ஒரு நொண்டி முடிச்சுப் போடப்போகிறான். அழகிலே, உயர்ந்த பொருளிலே, எல்லாருக்கும் ஆசைதான். ஆனால், லக்ஷ்யம் பெரிதானால், சூழ்நிலையை அதற்கு ஏற்றபடி மாற்றிக்கொள்ள வேண்டுமே. அந்தச் சக்தி இவளிடம் இருக்கிறதா?' என்று சிந்தித்த வண்ணம், ஊரை நோக்கி நடந்தேன்.

* * *

அப்பா பொதுவாக அத்தையைப் பற்றி விசாரித்தாரே தவிர, அவள் கடிதத்தில் வேறு ஏதும் எழுதியதாகக் குறிப்பிடவில்லை. அம்மாவும் அதைப் பற்றிப் பேசவில்லை.

"உங்கள் அத்தை எப்படி இருக்கிறாள் உன்னிடம்?" என்று அம்மா அன்று மத்தியான்னம் பேச்சுவாக்கிலே கேட்டாள். அந்தக் கேள்வியிலே விசித்திரமான தொனி இருந்தது.

"ஏன்? சகஜமாகத்தான் இருக்கிறாள்' என்றேன்.

"ஊஹூம்!" என்று கூறி, அவள் என்னை வியப்போடு பார்த்தாள்.

ஏதோ விஷயம் இருக்கிறது; ஆனால் அது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. அத்தையைப் பற்றி நான் சொல்வதற்கு முன்னமே, 'இங்கே சில சம்பவங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும்' என்பதைத் தெரிந்துகொண்டேன். "அத்தையைப் பற்றி நீ இப்படி நினைப்பது சுத்தத் தப்பு" என்று அம்மாவிடம் முன்பு சொன்னேன்; அவ்விதம் இப்போது சொல்ல என் மனச்சாட்சி இடங் கொடுக்கவில்லை.

நான் சும்மா இருப்பதைக் கண்டு, "உங்கள் அப்பா ஆஸ்பத்திரியில் கிடந்திருக்க வேண்டியவர், பத்து. ஏதோ பெரியவர்கள் செய்த புண்ணியம், தப்பித்துக்கொண்டார்" என்று கூறிப் பெருமூச்சுவிட்டாள்.

"என்ன, என்ன நடந்தது?" என்று ஆத்திரத்துடன் கேட்டேன். ஆனால் அம்மாவின் பார்வையிலே, என் ஆத்திரம் அமிழ்ந்து அடங்கியது. நான் தெரிந்துகொண்டு ஒளிப்பதுபோல, அந்தப் பார்வையின் கருத்து இருந்தது. 'நிஜமாகவே உனக்குத் தெரியாதா?' என்று அது குத்திக் கேட்டது.

என் உள்ளத்திலிருந்து பதில் வந்தது: "நான் உன்னுடைய அந்தப் பழைய பத்துதான், அம்மா! என்னிடத்தில் எவ்வித மாறுதலும் இல்லை. உன் மனக் குறையைப் போக்க என்ன வேண்டுமானாலும் செய்கிறேன்" என்று உருக்கமாகச் சொன்னேன்.

"பத்து, உன்னை எப்படி எப்படியெல்லாம் வளர்த்திருக்கிறோமடா? இப்போது அசலார் கைப்பிள்ளையாகக் கொடுத்துவிட்டுத் தவிக்கிறேனே!" என்று சொல்லி, அவள் கண்ணீர் வடிக்கலானாள்.

அம்மா சொன்னது எனக்கு ஓரளவு புரியாமல் இல்லை. ஆயினும் உத்வேகத்தை அடக்கிக்கொண்டு, "என்ன அம்மா நடந்தது? சொல்லேன்" என்றேன்.

"இந்த ஊரில் இவரைப் பிடிக்காதவர்கள் சிலர் இருக்கிறார்கள். போன மாசம் கோவில் உத்ஸவத்தின்போது பெரிய ரகளை. ஒரு நாள் ராத்திரி, கர்ப்பூர ஆரத்தி ஆகி இவருக்கு மாலை போடும் சமயத்தில், 'நிறுத்தும் ஐயா, வெளியூரிலிருந்து வந்தவனுக்கெல்லாம் இந்த ஊரில் என்ன மரியாதை வேண்டிக் கிடக்கிறது? தலைமுறை தலைமுறையாக ஊருக்கு உழைத்தவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பெரியவர் பாவம்! நாணுத் தாத்தா இருக்கும் இடம் தெரியாமல் பதுங்கிக்கிடக்கிறார்' என்று கூச்சல் போட்டுக்கொண்டே அந்தக் கோடிவீட்டு வாசுதேவன் திமுதிமுவென்று வந்து இவர் மார்பில் கையை வைத்தானும். இவர் உடனே கையை ஓங்கிக் கொண்டு சண்டைக்குப் போனாராம். இவருக்குத்தான் கோபம் வந்துவிட்டால் கண்மண் தெரியாதே!"

"அப்புறம்?"

"இவர் பக்கத்திலே இருந்த ராமசாமி சட்டென்று ஓடிப்போய், பலிபீடத்துக்கு அப்பால் நின்றிருந்த குடியானவர்களிடம் தகவல் சொன்னாராம். அவர்கள் கும்பலாகக் குவிந்துவந்தார்கள். நாட்டாண்மைக்காரன் கோவிந்தன், 'எங்க பெரிய ஐயாமேலே கை வெச்சிங்களோ, பத்திரம்! ஒங்களுக்கு நெஞ்சிலே தெகிரியம் இருந்தா இப்படி வாங்க. இங்கே எத்தனை பொணம் பொரட்டிப்புடுறேன், பாருங்க' என்று கூச்சல் போட்டதும், எல்லாரும் அசந்துவிட்டார்களாம். 'பெரிய ஜமீன்தாருடா அவன்! அவனிடம் நீங்கள் எத்தனை நாளைக்குக் குப்பை கொட்டுகிறீர்களோ அதையுந்தான் பார்ப்போமே!', 'அவ்வளவு சாந்தமான அந்தக் கிழவருக்குக்கூட ஆத்திரம் வரும்படியாக நடந்துகொள்ளுறானே, அந்த மனுஷன்!' என்று தலைக்கு ஒருவராகப் பேசிக்கொண்டே ஏழெட்டுப் பேர் வெளியே போனார்களாம். மாலை போட்டானதும், 'நீங்க என்னோடெ வாங்க, சாமி. வூட்டிலெ வுட்டுட்டுப் போறேன். உங்க நிழல்லேயே பொளைச்சிக்கிட்டு, வேரெக் கல்லுருங்களே, பாவிங்க!' என்று சொல்லி, அவன் இவரை வீடுமட்டும் கொண்டுவிட்டான். ராமசாமியும் கூட வந்தார். அவர்கள் பின்னல் ஊர்க் குடியானவர் தெரு முழுவதும் புரண்டு வந்தது."

"இதை அப்பா ஏன் எனக்குத் தெரிவிக்கவில்லை?"

"தெரிவித்து என்ன பிரயோஜனம்? எல்லாம் அந்த ஜாலக்காரி - உன் அத்தை - செய்கிற வேலைதானே?"

"அத்தையா? அவளா இவர்களைக் கிளப்பி விட்டிருக்கிறாள்?" என்றேன்.

"கிளப்பிவிடுவதென்றால் இன்னும் என்ன செய்யவேண்டும்? அந்தக் கிழவன் மகாசுதுவாதுக்காரன். அவனுக்கு வேலை கொடுக்கச் சொன்னாள். வேலையைக் குடடிச் சுவராக்கத்தான் அது வழி. அதற்கு இவர் இணங்காமற் போகவே, அவனே வேறு விதமாகத் தூண்டிவிடுகிறாள்."

"அத்தைக்கு இங்கே இப்படி நடந்தது தெரிந்திராது. தெரிந்தால் என்னிடம் சொல்லாமல் இருப்பாளா?"

"இது இருக்கட்டும். அந்தக் கிழவர் வந்த போது ஒரு நாள் அந்தச் சிறுக்கி பங்கஜம் உன்னுடு கண்ணாடி போட்டு, உன் கண்ணடித் தம்பரை உன்மேல் வீசி எறிந்தாளா இல்லையா? என்னிடம் உள்ளதைச் சொல்ல வேண்டும்."

"அப்படி ஏதும் நடக்கவில்லையே, அம்மா! அவர் வந்த பொழுது நாங்கள் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தது உண்மை. ஆனால்—"

"ஓஹோ! இதற்குப் பெயர் வாக்குவாதமோ? ஏதோ, நல்லபடி இவ் வளவாவது வந்து சேர்ந்தாயே. இங்கே இவரோ ஒண்டி சண்டியராக வெளியே போகிறதில்லை. கோவிந்தனுடைய ஆள் ஒருத்தன் எப்போதும் காவல்."

அந்த மன நிலையில் அம்மாவிடம் பேசிப் பயன் இல்லை என்று கருதி, உள்ளே போய்ச் சிறிது நேரம் படுத்துக் கொண்டேன். அத்தைக்கும் எங்கள் குடும்பத்துக்கும் இடையே நிகழும் கலவரங்களின் ரகசியம் என்ன என்று ஆராயலானேன். அன்று என் கையும் பங்கஜத்தையும் பார்த்த கிழவர் ஏதோ கதை கட்டி விட்டிருக்கிறார்.

அன்றிரவு அப்பா சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், "கேட்டீர்களா சமாசாரத்தை? இங்கே நடந்ததெல்லாம் பத்துவுக்கு அடியோடு தெரியாதாம்!" என்றாள் அம்மா.

"அவனுக்கு எப்படித் தெரிய முடியும்? இதை அவனிடம் சொல்ல அங்கே யாருக்கு அக்கறை?"

"உங்கள் தங்கைக்குக்கூடத் தெரியாது என்று சாதிக்கிறானே இவன்?"

"இவனுக்கு அந்தச் சூதுவாது ஒன்றும் தெரியாது. நான்கூட அயலார் பேச்சை இது வரையில் நம்பாமல்தானே இருந்தேன்? ஆனால் அந்தக் கடிதம் வந்தபின்புதான்—"

"எந்தக் கடிதம்? என்னிடம் நீங்கள் சொல்லவே இல்லையே?"

அப்பா ஏதோ இசைவு பிசகாக மாட்டிக் கொண்டவர் போலத் தோற்றினார். அவர் அதுவரையிலும் மறைக்க முயன்றிருந்த விஷயம், அவர் சுபாவத்துக்கும் மாறுக, வெளிவந்திருந்தது. "ஏதோ கடிதம்; அதைப் பற்றி அப்புறம் சொல்கிறேன்" என்று அவர் தட்டிக் கழித்தார். அந்தக் கடிதத்தில்தான் என் விவாக விஷயமும் இருக்கும் என்று நினைத்தேன்.

அம்மா மனக்கொதிப்பில் பின்னும் சிறிது அதிகமாக மோரை ஊற்றிவிட்டு, "அடி நாள் முதல் ஒவ்வொன்றையும் இப்படித்தான் மறைத்து வந்திருக்கிறீர்கள். இல்லாவிட்டால் இந்தக் குடும்பம் ஏன் இப்படி ஆகிறது? நான் ஒன்றும் சிறு குழந்தை அல்ல. எனக்கும் கொஞ்சம் தெரியும்" என்று சொல்லிக்கொண்டே விர்ரென்று போனாள்.

"உனக்குத் தெரிந்ததைச் சொல்; கேட்கிறேன்" என்று அப்பா புன்னகையோடு அவளைத் திரும்ப அழைத்தார்.

"எல்லாம் உங்களுக்கு என்ன, பரிகாசமும் பரிகாசமும்? உங்கள் அழகான தங்கை அந்தக் கிழவரிடம், நாம் அவள் சொத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு போகிறோம், கணக்கே அனுப்புவதில்லை என்று சொன்னாளாம். இது ஊர் முழுவதும் அடிபடும் ரகசியம். பதினைந்து நாளைக்கு முன்பே இது எனக்குத் தெரியும்" என்றாள் அம்மா.

"ஏழெட்டு நாளைக்கு முந்தித்தான் அந்தக் கடிதம் வந்தது. அதற்கு முன்பே அவள் அதைக் கிழவரிடம் சொல்லிவிட்டாளா?"

"சொல்லாமல்தான் பரவுமோ? போகட்டும்; இப்போதாவது உங்களுக்குத் தெரிந்ததே!"

அப்பா சாதத்தை மெதுவாக உள்ளே விழுங்கிக்கொண்டு வெறுப்போடு, "எனக்குத் தெரியாமல் என்ன?" என்றார்.

"தெரிந்துதானுக்கும் மேன்மேலும் ஓடி ஓடிப் பாடுபடுகிறீர்கள்? வளர்த்துக் கல்யா

ணம் செய்வித்தீர்களே, அதற்குப் பலன் இது. சொத்தைப் பார்க்கவில்லை சொத்தை! உடனே புறப்படுங்கள். காஞ்சீபுரம் போய், நமக்கு இருப்பது கூழோ கஞ்சியோ குடித்துக்கொண்டு காலத்தைக் கடத்துவோம். நாம் ஒன்றும் கதி கெட்டுக் கிடக்கவில்லை."

"என் இப்படிப் பதறுகிறாய்? பொறு; நமக்குச் சரியான சமயம் வரும்."

"பொறுத்துத்தான் இந்தச் சமயம் வந்திருக்கிறதே. சமயம்! நான் அன்றைக்கே முட்டிக்கொண்டேன்; லபோ லபோ என்று அடித்துக்கொண்டேன்: பையனை வைத்துக்கொண்டு பட்டணத்தில் தனியாக இருப்போம் என்று. அதற்குள் அந்த ஆசாமி செத்துக் கிடந்தார்.—இவர் காதில் நான் சொல்வது என்றைக்காவது ஏறினால்தானே? என்னைக் கண்டால் மூக்குக்கு மேல் கோபந்தான் வரும். தங்கையோ தங்கையோ என்று அலைந்தார், இப்படிப்பட்ட தங்கைக்காக! இப்போது அவள் என்ன சொல்லுகிறாளோ, எல்லாவற்றையும் மூட்டை கட்டிக்கொள்ளட்டும்...."

அவளுடைய மீதிப் பேச்சை அப்பா கேட்கவில்லை. சாப்பாடு ஆனதும் அவர் வெளியே போனார். அத்தையின் அந்தக் கடிதத்திலே என்ன இருக்கும் என்ற எண்ணத்தோடு நான் அதை அப்பாவின் அறையில் தேடலானேன். அம்மாவுக்கு அது எப்படித்தான் தெரிந்ததோ! என் பின்னாலேயே வந்தாள். "என்ன தேடுகிறாய்? அந்தக் கடிதாசியா?" என்று கேட்டாள்.

"ஆமாம்."

"உன்னை அதைத் திரும்பக் கொண்டு வரச் சொல்லியிருக்கிறாளோ, நாளைக்கு நம் முடைய உறவாடல் நின்று போகுமே என்று?"

அம்மா விஷமமாகக் கேட்ட இந்தக் கேள்விக்கு நான் என்ன பதில் சொல்வது! சொன்னாலும் அவள் அதை நம்புவாளா? இந்தச் சங்கடத்தில் அகப்பட்டுக்கொள்ளவா இங்கே வந்தேன்?

୨

நான் வந்து ஒரு வாரம் ஆகியிருக்கும். ஆற்றங்கரையிலே நான் அன்று பார்த்த அந்தப் பெண் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்துபோய்க்கொண்டிருந்தாள். அவள் அம்மாவுக்கு வேண்டிய உதவிகள் செய்வாள். ஆற்றிலிருந்து தண்ணீர் மொண்டுவந்து கொடுப்பாள்; இலைகள் தைத்துக் கொடுப்பாள். அம்மா சொல்வதைச் செய்வாள். கிராமாந்தரங்களில் இவை சாதாரணமாக நடப்பவைகளே.

அன்று அவளைத் தொலைவிலிருந்து பார்த்தவன், இப்பொழுது சமீபத்திலிருந்து பார்க்கையில், அவளுடைய பேராவல் சரியானதே என்று தோற்றியது. ஒரு ராஜகுமாரனுக்கு ஏற்றவள் என்றே அவளைச் சொல்லலாம். உருண்டு கடைந்தெடுத்தாற் போன்ற முகம்; அதிலே, பார்ப்பவரைச் சொக்கச் செய்யும் இரண்டு சுழல் விழிகள்; அங்கவஸ்திரங்களில் ஒரு சஞ்சலம்; ஒரே கடைக்கண் நோக்கினால் உலகை அளந்துவிடும் சாமர்த்தியம் - அவளிடம் என் கண்ணுக்கு என்ன என்னவோ தோற்றின. மொத்தத்தில் அவள் ஒரு நொண்டியை மணப்பது அநியாயம் என்பதில் சந்தேகம் வேறு?

இரண்டு மூன்று நாட்களாக அவள் ஏனோ இந்தப் பக்கம் வருவதில்லை. ஒரு வேளை அந்த நொண்டியை அவள் தலையிலே கட்ட ஏற்பாடு நடக்கிறதோ? அவள் யார், அவள் தலை விதி என்ன? - இவற்றோடு எனக்கு என்ன தொடர்பு? அம்மாவை அவள் யார் என்று எப்படிக் கேட்பது? நான் கடிதத்தைத் தேடுவதை மோப்பம் பிடித்தவள் இந்தப் பெண் இன்னுள் என்பதையாவது என்னிடம் சொல்லலாமே! என் மனசு ஏன் அலை பாய்கிறது? அன்று இந்தப் பெண்ணோடு வந்தவள் இவளுடைய தாய் என்று தோன்றுகிறது. "என்னவோ அம்மா, இந்த மாதக் கடைசிக்குள் கல்யாணம் ஆகிவிட்டால் நல்லது. வளர்ந்த பெண்ணை வைத்துக்கொண்டு ஊரார் வாய்க்குப் பயப்பட வேண்டியிருக்கிறது" என்று அவள் அம்மாவிடம் சொன்னாள். அதனால்தானோ இந்த இரக்கம்?

அத்தை சொன்னதை நானுகப்பாவிடம் தெரிவிக்க வேண்டுமா? அவளே இன்னொரு கடிதம் எழுதுவதற்கு என்ன?

மாலையில் விளக்கு ஏற்றியதும், அம்மா என்னிடம் வந்து உட்கார்ந்து, "பத்து, உன் வயசிலே அவனவன் கல்யாணம் செய்துகொண்டு குடியும் குடித்தனமுமாக இருக்கிறான். ஏதோ படமாடிக்கொண்டிருக்கிறேனே தவிர, என் உடம்பில் வலுவில்லை. உன்னைப் பூவும் மாலையுமாகப் பார்த்துவிட வேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது" என்று ஆரம்பித்தாள்.

"இப்போது என்ன அம்மா, கல்யாணத்துக்கு அவசரம்? இன்னும் ஒரு வருஷத்தில் படிப்பு முடியட்டுமே"

"படிப்புக்கும் இதற்கும் என்ன?" என்று கேட்டுக் கொண்டே அவள் என் மனத்தைக் கூர்ந்து ஆராய்ந்தாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் அப்பா வந்தும், "அந்தப் பெண்ணின் ஜாதகத்தைக் கொடுத்தார்களே; பொருத்தம் பார்த்தீர்களோ?" என்று கேட்டாள்.

"பொருத்தம் சரியாகத்தான் இருக்கிறது. இருந்தாலும், பட்டணத்துக்குப் போய் அவனை ஒரு தடவை கேட்டுவரவேண்டும்" என்று சொல்லியவாறே அவர் தொழுவத்தின் பக்கமாகப் போனார்.

"இவர் புத்தி என்றைக்குத்தான் திருந்தப் போகிறதோ!" என்று கூறி மோவாய்க் கட்டையை ஆட்டிக்கொண்டே அம்மாவும் அவரைத் தொடர்ந்தாள். பிறகு இருவரும் வாக்குவாதம் செய்த வண்ணம் திரும்பினர்கள். "அவள் நம்மிடம் என்ன மரியாதை வைத்துக்கொண்டிருக்கிறாள், நாம் அவளுக்குத் தெரிவித்துச் செய்யும் படி?" என்று அம்மாவின் குரல் கேட்டது. "பத்து என்ன சொல்லுகிறானு கேட்க வேண்டாமா?"

"அவன் சொல்வதென்ன? நான் என்ன செய்தாலும் சரி என்பான். அவ்வளவேன்? - ஏண்டா பத்து, நான் ஒரு பெண்ணைச் சொன்னால், உனக்குக் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதந்தானே?" என்று அம்மா கேட்டாள்.

நான் பேச்சை வளர்த்த விரும்பவில்லை. "நாம் வேண்டுமானால் இந்த ஊரை விட்டுக் காஞ்சிபுரம் போவதில் எனக்குத் தடை இல்லை. ஆனால் பங்கஜத்தை -" என்று இழுத்தேன்.

"பைத்தியமா உனக்கு? இனி அந்த இடத்துக்கும் உனக்கும் சரிப்படாது என்பதை முடிபோட்டு வைத்துக்கொள். நீ அத்தையின் ஜாலத்திலே மயங்கியிருக்கிறாய். அந்த ராங்கிக்காரியின் பெண்ணுக்கும் உனக்கும் - !"

அப்பா இடைமறித்தார்; "பெற்றவர்கள் எந்தப் பெண்ணைச் சொன்னாலும் சரி என்று நாங்கள் தலையாட்டினோமே, அந்தக் காலம் அல்ல இது. இப்போது யாரும் மனசில் இருப்பதை ஸ்பஷ்டமாகச் சொல்ல வெட்கப்படுவதில்லை" என்றார்.

"என்னைக் கல்யாணம் செய்துகொண்டதற்கு என்னவாம் இப்போது?" என்று அம்மா கோபப்பட்டாள்.

"அத்தைக்கு நான் பரியவில்லை, அம்மா. இருந்தாலும் அந்தப் பெண் என்ன குற்றம் செய்தாள்?" – என்னையும் மீறிய இந்தக் கேள்வி அம்மாவின் முகத்தில் போய்ப் பதிந்தது.

அவள் என்னை ரோஷத்தோடு பார்த்து, "எனக்கும் உலகம் தெரியும், பத்து! நானாக்கு அந்தப் பெண் என் கைக்கு அடங்கியிருப்பாளா என்ன? அவளுக்கு நான் எந்த மூலைக்கு? நான் என்ன, உன் அத்தையைப் போலப் படித்திருக்கிறேனா? இல்லை, உன் அத்தை பெண்ணைப் போலப் பாஸ் செய்திருக்கிறேனா? இன்று சொல்கிறேன் என்று பார்: இன்னும் ஐம்பது வருஷம் பழகினாலும் அந்தப் பெண்ணை நீ தெரிந்துகொள்ளப் போவதில்லை. நீ ஒன்றும் சொல்லாவிட்டாலும் எனக்குத் தெரியாதா என்ன? ஏனோதானோ, பத்து! பணம் அலலவா அதன் தலையில் நின்று கூத்தாடுகிறது?" என்று கழுத்தை நீட்டிக்கொண்டே சொன்னாள்.

"எனக்குப் பசிக்கிறது. காலை முதல் இன்று வேலை ஓயவே இல்லை. முதலில் சாப்பாட்டைப் போட்டுவிட்டு அப்புறம் உன் பிரசங்கத்தை வைத்துக்கொள்" என்று அப்பா அவளை அதட்டினார்.

இரண்டு மூன்று நாள் கழித்து வாய்க்காலுக்கு ஸ்நானம் செய்யப் போய்க்கொண்டிருந்தேன். ஆற்றங் கரை சிறிது தள்ளியிருந்ததால், பாலாற்றிலிருந்து வரும் இந்த வாய்க்காலுக்கே பெரும்பாலானவர்கள் தண்ணீர் கொணரப்போவது வழக்கம். என் எதிரே நாலைந்து பெண்மணிகள் இடுப்பில் நிரம்பிய குடத்தோடு போனார்கள். அவர்களைக் கடந்து சென்றேன்.

அதோ அந்தத் தோப்பின் மூலையில் குடமும் கையுமாக வருகிறாளே, அவள் அந்த நொண்டிக்கு வாழ்க்கைப் படப் போகும் பெண் போல இருக்கிறதே! உருவம் வரவர நெருங்கியது. நடையைப் பார்த்தால் அவள் போலத்தான் இருக்கிறது. என் உள்ளத்தில் வெம்மை ஏறுகிறது. வேகமாக நடக்கிறேன். இவள் அவள் அல்ல. சே! அவள் இப்போது என் எதிரே வந்தால் எப்படி இருக்கும்! ஒரு தடவையாவது அவளை நேருக்கு நேராகப் பார்க்கலாம். ஆமாம், எனக்கு ஏன் இந்த எண்ணம் தோன்றுகிறது?

இதே சிந்தனையில் நான் போகையில், எதிரே நீர் துளும்பும் குடத்தோடு வந்து கொண்டிருந்த ஒரு பெண் வரப்பை விட்டு வயலிலே இறங்கினாள். அப்போதுதான் அவளைப் பார்த்தேன். அவளுடைய கடைக் கண்ணும் என்னைப் பார்த்தது. சற்று முன்னாலேயே அவள் வருவதைப் பார்த்திருந்தால் வரப்பிலிருந்து இறங்கி வழி விட்டிருப்பேனே! அகக்ம பக்கத்தில் யாரும் இல்லை. தலை குனிந்து கொண்டே அவள் போனாள். அவள் தேகத்தில் பளபளத்த லாவண்யம் என் கண்ணை மயக்கியது. இரண்டொரு தரம் கண்ணை மூடித் திறந்து கொண்டேன். பின்னால் திரும்பி, அவள் போவதை ஒரு தடவை பார்த்தேன். ஏனோ அந்த மோகம்!

இரண்டு நாளைக்கெல்லாம் அம்மா மறுபடியும், "அடே என் ராஜா, நான் சொல்வதைக் கேள். கோகிலத்தைப் போன்ற நல்ல மனுஷியை நான் பார்த்ததில்லை. ராமசாமியும் ரொம்ப நல்லவர். அவர்கள் பெண் தங்கம் என்றால் தங்கம். 'வீடு கொண்ட வேலை' செய்வாள். உன்னைப் பற்றிக் கேட்டது முதல் உனக்காகத் தவம் கிடக்கிறாள். நான் உன்னைக் கட்டாயப் படுத்தவில்லை. பெண்ணை நீயே உன் கண்ணால் நன்றாகப் பார்த்துக்கொள்" என்றாள்.

"அப்பா சொல்வதையும் கேட்கத்தானே வேண்டும்?" என்று கிளப்பினேன்.

"அவர் எப்போதுமே இடக்குக்காரர் என்பது தெரிந்ததுதானே? உன் அபிப்பிராயத்தைச் சொல்லேன்."

"யோசித்துத்தான் சொல்ல வேண்டும்."

மாலை வேளை. இளநங்கைகளின் நெற்றியில் துளித்த வேர்வை முத்துக்களையும் தோட்டத்திலுள்ள மலர்களின் வாசனையையும் பறித்துக் கொண்டு மந்தமாருதம் வீசியது. நான் ஸ்வாரஸ்யமாக ஒரு சிறுகதை எழுதிக்கொண்டு இருந்தேன். மனோவியின வற்புறுத்தலினால் கதாநாயகன் சமூகத் தொண்டிலே ஈடுபடுகிறான். "நான் இல்லாமல் காற்றிலே மோதுண்டு அலையும் காற்றுடியைப் போல நான் இதுவரையில் மிதப்பான வாழ்க்கையில் தான்தோன்றியாகத் திரிந்துவந்தேன். இப்போது நீ அந்தக் காற்றுடியின் நூலைப் பிடித்து என்னைச் சரியான வழியில் செலுத்துகிறாய்" என்கிறான்.

அந்தச் சமயத்திலே ஒரு புதிய சுகந்தத்தை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தேன். என் முன்னால் அவன்தான் நின்றிருந்தாள்! வேறு புறமாகத் தலையைத் திருப்பிக் கொண்டே தன் கண்களிலுள்ள மாயசக்தி முழுவதையும் திரட்டி விழிக்கோணத்தின் வழியே என்மீது செலுத்தினாள். மேகவர்ணப் பாவாடையும் கடல்நீலம் போன்ற ஜாக்கெட்டும் அணிந்திருந்த அவளைக்கண்டு, 'இவள்தான் ஒருவேளை அந்தக் கனவுப் பெண்ணோ?' என்று கொடிப்பொழுது மயங்கினேன். 'உனக்கு வரன் வேண்டுமானால் அவனை வசப்படுத்து' என்று ஏவப்பட்டவள் போல அவள் அங்கே நின்றாள். அவள் அந்தப் பரீக்ஷையில் தவறினால் ஒரு கொண்டியை மணப்பதுதான் அவள் விதி! என் கண்கள் அவளைப் பார்த்தன; ஆனால் பங்கஜத்தின் நினைவிலே என் சிந்தனை சென்றது.

அம்மா உக்கிராண அறையிலிருந்து வந்து கொண்டே, "என்னடி சம்பகம், நமஸ்காரம் செய்என்றால் இப்படி நிற்கிறாயே?" என்றாள். அந்தப் பெண் மருண்டு நின்றவள் குபுக்கென்று ஒரு குதி குதித்து வாசற் பக்கம் ஓடி மறைந்தாள். அப்போது அவள் பின்னால் நிகழ்ந்ததென்ன நீண்டு தொங்கிய பின்னல் என்னை என்னவோ செய்தது.

"பெண்ணைப் பார்த்தாயா, பத்து? நன்றாக யோசித்துச் சொல். ஒன்றும் அவசரம் இல்லை. இன்னும் எத்தனை தரம் வேண்டுமோ பார்த்துக்கொள். அப்புறம் என்மேல் பழி சொல்லாதே" என்றாள் என் முகத்தைப் பார்த்த அம்மா.

கண்டபேருண்டம் என்ற இரட்டைத் தலைக் கழுகைப் பற்றிப் புராணங்களில் சொல்வது உண்டு. நான் அந்தச் சமயத்தில் ஒரு முகத்தால் பங்கஜத்தையும் மற்றொன்றால் சம்பகத்தையும் பார்ப்பதை அம்மா கவனித்தாள். என் சிந்தனை உண்மையில் முடமாகி இருந்தது. அன்றிரவு எனக்குச் சாப்பாடு வேண்டியிருக்கவில்லை. தூக்கமே இல்லை. அதற்கு முன் இல்லாத ஏதோ வேதனை உள்ளதைக் கிளறியது.

மறுநாள் காலையில் கோகிலம் எங்கள் வீட்டுக்கு வந்து அம்மாவிடம், "அவர் என்ன சொன்னாலும், பசுங்கிளியைக் கொண்டு போய் அந்த நொண்டிக்குக் கொடுப்பார்களா! ஏதோ ஈசுவரன் ஒன்றும் குறை வைக்கவில்லை. எங்களுக்கு இருப்பவள் அந்த ஒரு பெண். உங்களிடம் பவ்யமாய் நடந்துகொள்வோம்" என்றாள்.

"நான் என்ன செய்வது? பையன் ஒப்புக் கொண்டாலும் அவர் சம்மதம் வேண்டுமே! என்னால் முடிந்த வரையில் பார்க்கிறேன்" என்றாள் அம்மா.

அப்பா வயலுக்குப் புறப்படும் சமயம்: "அந்த அம்மாள் மறுபடி வந்திருக்கிறாளே. பதில் சொல்ல வேண்டாமா?" என்று அவரை வினவினாள்.

"என்னை என்ன சொல்லச் சொல்லுகிறாய்? ராமசாமி கூட இன்று காலையில் என்னிடம் வந்திருந்தார்."

"என்னை 'ராஜாத்தி' ஆக்கினவளைக் கேட்டுத்தான் பதில் சொல்ல வேண்டுமாக்கும்!" அப்பா பேசாமல் நடந்தார்.

ஆற்றங்கரையை நோக்கிப் புறப்பட்ட போது, சென்னைக்கே பேசாமல் திரும்பிவிடலாமா என்று நினைத்தேன். 'ராஜாத்தி ஆக்கினால்' என்று அதை சொன்னது அம்மாவுக்கும் தெரிந்திருந்தது. என்னை அது முன்னமே புண்படுத்தியிருந்தது. பங்கஜத்தை எனக்கு மணம் செய்வித்து என்னை அடிமைத் தளையில் பிணைக்க அவள் முயலுவதாக அம்மா நினைப்பது ஒருவேளை சரியாக இருக்குமோ? 'கல்யாணம் ஆகிவிட்டால் என் மனசுக்கு நிம்மதியாக இருக்கும்' என்று அவள் சொன்னதற்கு அர்த்தம் என்ன? என்னைப் பேருக்கு வீட்டிலே வைத்துக்கொண்டு தன் இஷ்டப்படி ஆட்டி வைக்கலாம் என்பதுதானே?

பாலாற்றின் தெள்ளிய நீரில் நான் துழாவிக்கொண்டு இருந்தேன். அப்போது என் உள்ளத்தில் புதிய சிந்தனை சுரந்தது: என் பாதை வேறு, பங்கஜத்தின் பாதை வேறு. நான் இந்த ஆற்றங்கரை நாகரிகத்தில் பிறந்து வளர்ந்தவன். அவள் சென்னைக் குழாயடி நாகரிகத்தில் வளர்ந்தவள். நாட்டுப்புறத்துப் பண்பிலே பக்குவமான எனக்கும் நகரத்துப் புரட்டிலே பருவமெய்திய அவளுக்கும் எப்படி ஒத்து வரும்? யாருக்கும் தொந்தரவு ஏதும் இல்லாமல் மைல் கணக்காக நடந்து போக என்னால் முடியும். அவளோ, எதிரே வரும் பொருள்களைத் தள்ளி விழிக்கோணத்தைக் கொண்டு கடுகி ஓடும் மோட்டார்காரில் பவனி வருகிறவள். நடந்து செல்லும்போது

நான் குடியானவர்களோடு கலந்து பழகுவேன். ரத்தம் சுண்ட உழைத்து வறண்டு, அவளுடைய காருக்குப் போக வழி விட்டு, அவளுடைய தன்னலத்தையும் செல்வத்தையும் வளர்க்கிறார்களே, கோடிக்கணக்கான ஏழைகள், அவர்களைக் கண்டு, முகத்தைக் கோணிக்கொண்டு, வைரங்கள் ஜகஜக வென்று மினுமினுக்க, 'ச்சீ! தரித்திரம்!' என்று இழிவாகப் பேசத்தான் அவளுக்குத் தெரியும். ஆகவே, எத்தனை தலைமுறைகள் பழகினாலும், என்னதான் உறவினர்களானாலும், அன்புப் பிணைப்பு எவ்வளவுதான் உறுதியாக இருந்தாலும், பணக்காரன் ஏழை என்ற வகுப்பு வேற்றுமை இருக்கும் வரையில் நாங்கள் ஒன்று சேர இந்தச் சமூகம் பொறுக்காது.

சம்பகம் என்னைப் போலவே நாட்டு மண்ணில் வளர்ந்தவள்; அடக்கம் உள்ளவள்; பகட்டான அலங்காரங்களை வெறுப்பவள்; எளிமையையும் நேர்மையையும் விரும்புகிறவள். பங்கஜம் என் லக்ஷ்யத்துக்கு உகந்த தெய்வமாக இருக்கக்கூடும்; ஆனால் என் அன்றாட வாழ்க்கையில் பங்கு கொள்ள முடியாது.

என்னுடைய இந்தக் காரணங்களுக்கு உள்ளம் இணங்கியது. 'பங்கஜத்துக்கு உன்னிடந்தான் அசையாத அன்பு இருக்க வேண்டும் என்பதென்ன? உன்னைவிட மேலான கணவன் அவளுக்குக் கிடைக்கலாம்' என்றது என் உள்மனம்.

சம்பகத்தை நான் முதலில் இந்த ஆற்றங்கரையில் தற்செயலாகப் பார்த்தேன். பிறகு அடிக்கடி சந்தித்தேன். கண்களால் பேசினேன். உள்ளத்தில் இன்பவேதனை நிரம்பியது. அவளை நான் தேர்ந்தெடுத்தேன். மணந்துகொள்ள எண்ணினேன்; தீர்மானித்தேன்; முடிவு செய்தேன்.

ஆற்றங்கரையிலிருந்து வீடு வந்ததும் என்னைப் பார்த்த அப்பா, "என்னவோபோல இருக்கிறாயே, ஏன்?" என்று கேட்டார்.

"அவனுக்கு உள்ளூறக் கவலை. நீங்கள் இந்த வேலையை விட்டுத் தொலைத்து நம் ஊருக்குப் போனால்தான் அவன் முகத்தில் பழைய களை வரும்" என்றாள் அம்மா.

"நான் நிச்சயித்துவிட்டேன்..... சம்பகத்தைத்தான்-"

அப்பா பிரமித்து நின்றார். என் நிச்சயம், அத்தையிடம் அவருக்கு இருந்த அவநம்பிக்கையைப் பலப்படுத்தியது போலும்!

"அங்கே என்னதான் நடந்தது? சொல்லேன்" என்றார்.

"ஏதுக்கு அவன் மனசைக் கலக்குகிறீர்கள்? அவன்தான் ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட்டானே!" என்று அம்மா அவரை மேலே பேசவிடாமல் தடுத்தாள்.

முகூர்த்தப்பத்திரிகையைக் கண்டபோது என் முகத்தில் பூத்த முறுவல், அப்பாவுக்கு அத்தையிடம் வெறுப்பை வளர்க்கக் காரணமாயிற்று. "அவள் வருகிறாளோ இல்லையோ! எதற்கும் பத்திரிகை அனுப்புவோம்" என்று தம் கடமையை நிறைவேற்றுபவர் போலச் சொன்னார். 'அப்பாவிடம் சொல்லிக் கடிதம் போடச் சொல்கிறேன்' என்று நான் சொல்லிவந்தபடி அவளுக்கு இந்தப் பத்திரிகை போயிற்று.

கோமளமும் அவள் கணவரும் கல்யாணத்துக்கு வந்திருந்தனர். விவாகத்துக்கு முதல் நாள் காலை நான் வெளியே சுற்றிவிட்டு வரும்போது வாசலில் நின்றிருந்த கோமளம் என்னைத் தனியே கூப்பிட்டு, "பட்டணத்திலிருந்து அத்தை வந்திருக்கிறாள், அண்ணா! இந்தக் கல்யாணத்தை ரத்து செய்துவிட்டு மறுவேலை பார். அவள் நேரே வந்தபிறகு நம் உறவு விட்டுப் போகாது. கன்னியூஞ்சல் ஆடும்போதுகூட எத்தனையோ கல்யாணங்கள் நின்றிருக்கின்றன" என்றாள்.

நாங்கள் உள்ளே போனோம். கூடத்தில் அத்தையும் அப்பாவும் பேசிக்கொண்டிருந்தனர். அம்மா கம்பத்தைச் சார்ந்து நின்றிருந்தாள்.

கோமளத்துக்கு அம்மாவின் மேல் கோபம். "எதுக்கு அம்மா இந்த வீண் சச்சரவு? நமகை ஒருத்தருக்கு ஒருத்தர் வேறு யார் இருக்கிறார்கள்? இந்தக் கல்யாணத்தை நிறுத்தத்தான் வேண்டும்" என்று அவளிடம் ஆத்திரத்தோடு சொன்னாள்.

"உனக்கு இதெல்லாம்என்னடி தெரியும்? நீ சிறு பெண்; நேற்றுத்தான் திருச்சியிலிருந்து வந்தவள். பேசாமல் இரு. அவர்கள் கடன் கொடுத்தால், அதை நாம் திருப்பிக் கொடுக்கவில்லையோ? இந்தக் கல்யாணத்தைத் திரிமூர்த்திகள் வந்தாலும் இனிமேல் நிறுத்த முடியாது" என்று அம்மா அவளை அடக்கினாள்.

"நீ எழுதிய அந்தக் கடிதந்தான்..." என்றார் அப்பா.

"ஐந்தாறு மாதங்களாகக் கணக்குச் சரியாக வரவில்லையே என்று எழுதினேன். அதற்கு இதுவரை பதில் இல்லை. உனக்கு இங்கே ஒழிவு இல்லை என்று எழுதியிருந்தால்,..." என்று அத்தை முடிப்பதற்குள், அம்மா இடைமறித்து, "உங்கள் பணத்தையோ நிலத்தையோ வைத்துக்கொண்டு நாங்கள் கூடகோபுரம் கட்டிவிடவில்லை, அக்கா! இராப்பகல் ஓயாமல் உழைத்து அவருடைய ரத்தத்தை அந்த நிலத்தில் கொட்டியிருக்கிறார். நீங்கள் சொன்னதற்கு மேல் ஒரு காசுகூட நாங்கள் எடுத்துக்கொண்டதில்லை. இனிமேல் இந்த நிலமோ நீச்சோ உங்கள் பாடு" என்றாள்.

"போனதெல்லாம் போகட்டும், அண்ணா! இப்போது இதற்கு என்ன சொல்லுகிறாய்?" என்று அத்தை அப்பாவைக் கேட்டாள்.

"நான் என்ன சொல்வது?"

"என் விஷயத்தை விட்டுவிடு.—நான் எவ்வளவு சொல்லியும் குழந்தை இவனைத்தான் கல்யாணம் செய்துகொள்வேன் என்று பிடிவாதமாக இருக்கிறாள். அவளைத் தவிர எனக்கு வேறு என்ன செல்வம் இருக்கிறது? அந்தக் குழந்தையைப் பார்த்துப் பதில் சொல், அண்ணு!" என்று விநயமாகப் பேசினாள்.

அப்பா அசையாமல் நின்றார். "உங்கள் பெண்ணுக்கு என்ன, அக்கா? அவள் பணக்காரி. நாலாயிரம் பையன்கள் நாளைக்கு உங்கள் பங்களாவின் தலைவாசலிலே நின்று அவளுக்குத் தாலி கட்டப் போட்டி போடுவார்கள். அவளுடைய பிடிவாதமா! இப்படி எத்தனையோ பிடிவாதக்காரிகளைப் பார்த்தாயிற்று. கண்ணுக்கு அழகான பணக்காரப் பையன் கிடைத்தவுடனே இந்தப் பிடிவாதம் காற்றுப்போய்விடும். ஏழைக்கு ஏற்ற ஒரு மோசை எங்களுக்குப் போதும்" என்று அம்மா பதில் சொன்னாள்.

"நீ என்ன சொல்கிறாய் அண்ணு?" என்று அத்தை மறுபடி அவரைக் கேட்டாள்.

அவர் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு நின்றார்.

பிறகு அவள் என்னிடம் வந்து, "பத்து, நீ சொல்லிவிடு: 'மனப்பூர்வமாகப் பங்கஜத்தைக் கல்யாணம் செய்துகொள்ள எனக்கு இஷ்டமில்லை' என்று. நான் போய்விடுகிறேன்" என்றாள்.

என் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. 'பங்கஜம் இப்படிப் பிடிவாதமாக இருப்பாள் என்ற ஒரு மாதிரியாக எனக்கு முன்னமே தெரியும். ஆனால் என்ன? என் எண்ணத்தை நான் மாற்றிக்கொண்டது போல, அவளுடைய தீர்மானம் நாளைக்கு மாறமுடியாதா?' என்று நினைக்கலானேன். அத்தை தன்னைப் பிரித்துக்கொண்டு பேசுவதும் எனக்குப் பிடிக்கவில்லை. ஒன்றும் பதில் சொல்லத் தோன்றாமல் நின்றேன்.

தர்மசங்கடமான என் நிலையைக் கண்டு அம்மா முன் வந்தாள். "என்ன அக்கா, அந்த அறியாத பையனிடம் போய்க் கோர்ட்டில் கேள்வி கேட்பதுபோலக் கேட்டு மிரட்டுகிறீர்களே! அவனுக்குப் பாவம், உடம்பெல்லாம் நடுங்குகிறது. எதற்காக அவனை இப்படி வேதனைப்படுத்துகிறீர்கள்?" என்றாள்.

அத்தைக்குப் பொறுக்கவில்லை; "நீ ஏன் மதனி, அடிக்கடி குறுக்கிடுகிறாய்?" என்றாள்.

"இது என்னுடைய குடும்ப விஷயம், அக்கா! நான் இதுவரை எதிலும் குறுக்கிடாமல் இருந்ததற்குப் பலன்தான் இவ்வளவு தூரம் வந்திருக்கிறது. இன்றைக்கும் நான் குறுக்கிடாவிட்டால் இந்தப் பையன் உங்கள் அடிமையாகிக் கிடப்பான். இவன் படிப்புக்கும் சாப்பாட்டுக்கும் என்ன செலவழிந்ததோ அதை வாங்கிக்கொள்ளுங்கள். பணத்தோடு உறவாடினது எனக்குப் போதும். உழைக்கவும் உழைத்துவிட்டு அபவாதத்தை வாங்கிக் கட்டிக் கொண்டேனே, அதுவே எனக்குப் போதும்!" என்று அம்மா ஆவேசத்தோடு கத்தினாள். அப்பா அவளைச் சும்மா இருக்கும்படி சமிக்ஞை செய்யாதிருந்தால் அவள் கோபம் இன்னும் உச்சநிலையை அடைந்திருக்கும்.

"நீ என்ன சொல்கிறாய், பத்து?" என்று அத்தை என்னை நிதானமாகக் கேட்டாள். அவள் குரலில் துயரம் கொந்தளித்தது.

"இத்தனை ஏற்பாடுகள் ஆனபின்பு நான் என்ன செய்வது, அத்தை?" என்றேன்.

'நான்தான் சொன்னேனே, அம்மா: 'நீ இங்கே வருவது உசிதமல்ல' என்று. எதற்காக அவர்களிடம் கெஞ்சுகிறாய்?" என்று ஒரு நிமிஷம் முன்பு அங்கே வந்து நின்ற நாணுத் தாத்தா சொன்னார்.

அத்தை ஜிவ்வென்று போய்விட்டாள். அந்தக் கிழவர் அவள் பின்னால் சென்றார். கோமளம் உதடுகளில் வெறுப்புத் தோன்ற எங்களைப் பார்த்துவிட்டு அவளைத் தொடர்ந்தாள். அப்பா மௌனமாக நின்றிருந்தார்.

அத்தை சிறிது நேரம் கழித்து வண்டி வைத்துக்கொண்டு சென்னைக்குப் புறப்படும் வரையில் கோமளம் அவளுடனே இருந்தாள். கல்யாணத்துக்கு இருந்துபோகுமாறு எவ்வளவு சமாதானப் படுத்தி வேண்டியும் அத்தை கேட்கவில்லையாம். இந்த நிலைமையில் யார்தாம் இருப்பார்கள்? கோமளத்துக்கு ஏனோ என்னிடம் இத்தனை வெறுப்பு! முகங்கொடுத்துப் பேசுவதுகூட இல்லை. அப்பா எப்போதும்போலவே விருப்பு வெறுப்பற்றவராக இருந்தார்.

சம்பகம் என்னுடைய மனையில் உட்கார்ந்ததுமுதல் எனக்கு இறக்கை முளைத்தாற்போல இருந்தது. கல்யாணம் என்றால் வேடிக்கையும் விளையாட்டுந்தான். அவற்றின் உருவம்போன்ற பெண்மணிகள் எங்களைச் சூழ்ந்திருந்தனர். மறுபுறத்தில் வைதிகர்கள். நாகஸ்வரத்தின் இன்னிசையோடு சம்பகத்தின் கழுத்தில் தாலியின் முடிச்சு ஏறியது.

"மாங்கல்யதாரண முஹூர்த்தஸ் ஸுமுஹூர்த்தோஸ்து..." என்று புரோகிதர் சொல்லிக்கொண்டிருந்ததை நான் கவனிக்கும் தருணத்தில், எங்கோ வெகு தூரத்திலிருந்து, "அரசே, இனி நான் எங்கே போவேன்? உங்களை விட்டுப் புது மனிதர்களிடையே, முன்னுள் பழக்கம் இல்லாத முகங்களிடையே, பரிவில்லாத இந்த உலகத்தில் இனி எங்கே போவேன்? எங்கே போய் என் முகத்தையும் கண்களையும் புதைத்துக்கொள்வேன்?" என்று யாரோ கேள்விகளை அடுக்குவது என் காதில் விழுந்தது. அதில்தான் எத்தனை உருக்கம்!

(தொடரும்)